கம்பராமாயணம்

(இராமாவதாரம்)

மூலமும் உரையும்

கிஷ்கிந்தா காண்டம்



உரை நூல் ஆசிரியர்

பள்ளத்தூர் பழ. பழனியப்பன்

கம்ப இராமாயணம்

[இராமாவதாரம்]

கிட்கிந்தா காண்டம்

மூலமும் உரையும்

உரை ஆசிரியர்

பள்ளத்தூர் பழ. பழனியப்பன்

(முன்னாள் முதுநிலை மேலாளர், பரோடா வங்கி)

சாந்த மங்கை பதிப்பகம்

16, சுந்தரர் தெரு, ராம் நகர்,

அம்பத்தூர், சென்னை-600053

☎: 26581517, Cell: 9840868543

முதற் பதிப்பு: பிப்ரவரி, 2006

KAMBA RAMAYANAM - KISHKINDA KANDAM

PL.Palaniappan

First Edition: Februrary, 2007

No. of Pages: 696 + XXXII = 728

Size: Demy

Paper used: 70 G.S.M. Maplitho

விலை ரூ. 345/–

வெளியீடு:
சாந்த மங்கை பதிப்பகம்
16, சுந்தரர் தெரு, ராம் நகர்,
அம்பத்தூர்,சென்னை-600053
☎: 26581517, Cell: 9840868543

நூல்கள் கிடைக்குமிடம்:
THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 65413222

Printed at : Gem Offsets, Chennai - 14. Ph : 28416838

18-2



காணிக்கை

என்னை ஈன்றெடுத்து,
எனக்கும் ஓர் வாழ்வளித்து
தன்னைப் பேணிடாமல்,
தளிர்களையே காத்து நின்ற
அன்னை **மீனாட்சித் தாய்க்கு**
ஆயிரம் வணக்கம் கூறி,
இன்னமும் அருள் கூர்ந்து என்னை
இயக்கிட இறைஞ்சுவனே!

பொருளடக்கம்

அணிந்துரை

முனைவர் தெ. ஞானசுந்தரம்
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 30.

இராமகாதை இந்தியநாட்டின் தனிச்செல்வம். இராமன் திருக்கதை யினை அறியாதார் இந்திய நாட்டில் எவரும் இல்லை. இராமன் இந்துசமயத்தவரால் கடவுளாக வழிபடப் பெறுகிறான். திருக் கோயில்களில் சீதை இலக்குவன் ஆகியவரோடு கூடிய இராமனுக்குத் திருமுற்றங்கள் உண்டாயின. இராமன் திருத்தொண்டில் முனைந்து நின்ற அனுமன் பெருஞ்சிறப்புக்கு உரியவனாகப் போற்றப் படுகிறான். நாமக்கல், சுசீந்தரம் போன்ற இடங்களில் அனுமனுக்குக் கோயில்கள் உள்ளன. இராமன், சீதை, இலக்குவன், பரதன், சத்துருக்கனன், தசரதன், கோசலை. சுமித்திரை போன்ற இராமாயனப் பெயர்களைத் தங்களுக்குப் பெயராகக் கொண்டவர்கள் இந்திய நாட்டில் எல்லாப் பகுதியிலும் காணப்படுகின்றார்கள். இந்தியர் குடியேறிய நாடுகளிலும் இராமகாதை பரவியது. அதன் கதை அந்த இடத்திற்கும் மக்களின் கற்பனைக்கும் ஏற்றவாறு சிறு சிறு மாற்றங்களோடு வழங்கி வருகிறது.

இராமன் திருக்கதையினை முதன்முதலில் காப்பியப்படுத்தியவர் வான்மீகிமுனிவர். அவர் ஆதிகவி என்னும் சிறப்புக்குரியவர். வான்மீகி ராமாயணம் இந்திய மொழிகலில் முதலில் தமிழில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. அதனைச் செய்த பெருமைக்கு உரியவர் கல்வியில் பெரியராகிய கம்பர் ஆவர். பிற இந்திய மொழிகளில் நெடுங் காலத்திற்குப் பின்னரே இராமாயணம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கம்பர் தேர்ந்த புலமையும் விரிந்து ஆழ்ந்த கல்வியும் நிறைந்தவர். அவர் தம் காலத்திற்கு முன்பு தோன்றிய தமிழ், வடமொழி நூல்களில்

பெரும்பாலானவற்றைக் கற்றுத் துறைபோகியவர். அவர் கவிதைகள் கற்பாரைப் பெரிதும் கவரவல்லன. அவர் கவிதை சில இடங்களில் எளிமையாகவும் சில இடங்களில் அரிய கருத்துக்களை உள்ளடக்கிய தாகவும் அமைந்துள்ளது.

மொழி காலத்துக்குக்காலம் வளருகிறது. அவ்வளர்ச்சியில் சிற்சில சொற்களும் வழக்காறுகளும் மறைகின்றன; சிற்சில புதியனவாகப் புகுகின்றன. சிற்சில மாற்றம் பெறுகின்றன. இவ்வியல்பினை எல்லா மொழிகளிலும் காணலாம். பழைய ஆங்கிலத்தைப் படித்துணர் வதற்குத் தனி அகராதியே தேவைப்படுகிறது. தமிழில் சங்க காலத்தில் வழங்கிய தமிழின் அடிப்படை அமைப்பு. இன்றும் மாறவில்லை என்றாலும் பல சொற்கள் பொருள் உணர்வதற்கு அரியனவாக அமைந்துள்ளன. உரையின் உதவியின்றிச் சங்க நூல்களைக் கற்றறிவது அரிய முயற்சியாகவே அமைந்துள்ளது. அதனால் உரை தேவைப்படுகிறது. எந்த இலக்கியமும் அது தோன்றிய காலத்தில் உரையின்றி உணரக்கூடியதாகவே அமைந்திருக்கும். ஆனால் காலம் செல்லச் செல்ல உரையில்லாமல் அறிந்துகொள்ள முடியாத நிலை உருவாகிறது. இந்த விதிக்குக் கம்பராமாயணமும் விலக்கானதன்று. அதனால்தான் கம்பராமாயணத்திற்கும் உரை தேவைப்படுகிறது.

கம்பராமாயணம் முழுவதற்கும் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் என்னும் பெருந்தகை அரிதின் முயன்று உரை வரைந்து தமிழ் மக்களுக்குப் பேருதவி புரிந்தார். அவருக்கு முன்னேயும் இராமாயணத்தின் சிற்சில பகுதி களுக்கு வேறு சிலர் உரை கண்டுள்ளனர். ஆனால் வை.மு.கோவின் உரை தன் செல்வாக்கால் அவ்வுரைகளை யெல்லாம் 'இரவி என்பான் தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல்' ஒளி யிழக்கச் செய்துவிட்டது. அவ்வுரைக்குப் பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அறிஞர்கள் பலரைக் கொண்டு இராமாயணச் சுவடிகளை ஒப்புநோக்கி நல்ல பாடங்களைக் கண்டு மூலத்தைச் செப்பம் செய்து உரை வரைந்து வெளியிட்டுக் கம்பராமாயணத் திற்குப் பெருந்தொண்டு புரிந்தது உ.வே. சாமிநாத ஐயர் நூல்நிலையம், ஐயரவர்கள் எழுதிவைத்திருந்த சில குறிப்புகளின் துணையோடு இராமாயணம் முழுவதையும் உரையோடு வெளியிட்டது. மூலத்தை

மட்டும் சுவடிகளை ஆராய்ந்து செப்பஞ் செய்து பொருள் விளங்கும் வகையில் பிரித்து, மர்ரே பதிப்பகம் நல்ல பதிப்பு ஒன்றினைக் கொண்டு வந்தது. இப்பதிப்புகள் கிடைக்காத நிலையில், சென்னைக் கம்பன் கழகம் பன்மொழிப்புலவர் தெ.பொ.மீ. அவர்களை முதன்மை யாகக் கொண்ட அறிஞர் குழு ஒன்றைக்கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் பிற்சேர்க்கையாக இடம் பெற்றுள்ள பாடவேறுபாடுகளில் மிகுதியாக உள்ள பாடம் எது என்பதனை விருப்பு வெறுப்பின்றித் தேர்வு செய்து, மூலத்தை அடிக்குறிப்புடன் வெளி யிட்டது. இதனால் சில நல்ல பாடங்கள் கிடைத்தன.

அதனைத் தொடர்ந்து கங்கைப் பதிப்பகம் மூலத்தை அடிக்குறிப்பு களுடன் வெளியிட்டது. கோவைக் கம்பன் கழகம் அறிஞர் அ.ச.ஞா அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு அறிஞர்கள் சிலரை உரை வரையச் செய்து அதனை மிகக் குறைந்த விலைக்கு வெளியிட்டுக் கம்பராமாயணம் பலரையும் அடையுமாறு அரும்பணி புரிந்தது.

இந்நிலையில் அறிஞர் பழ.பழனியப்பன் தாம் ஒருவராகவே இராமாயணத்திற்கு உரை வரையும் முயற்சியில் ஈடுபட்டுச் சில ஆண்டுகள் உழைத்து அரிய உரையினை வெளிக்கொண்டு வருகிறார். இவர் வங்கியில் மேலாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தமிழ்ப் பற்றினால் கம்பராமாயணத்தைப் பலகால் கற்றுத் தேர்ந்து உரை வரைந்துள்ளார். இவரது முயற்சி பெரும் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியது.

ஒவ்வொரு உரையிலும் நிறையும் உண்டு. குறையும் உண்டு. வை.மு.கோ. பதிப்பு, சாமிநாத ஐயர் நூல்நிலையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவை வெளியிட்ட பதிப்புகள் எல்லாம் சிறப்பாக அமைந்திருந்த போதிலும் அவற்றில் வான்மீகத்தையொட்டி உரை வரைந்துள்ளதால் சில இடங்களில் கம்பர் செய்துள்ள மாற்றங் களையொட்டி உரை அமையாமல் மாறாக அமைந்து பொருந்தாமல் உள்ளது. மேலும் புலமையுடையார்க்கே பெருவிருந்தாக அமைவன. அடிகுறிப்புடன் வந்துள்ள உரைகள் ஓரளவு கற்றவர்களுக்கே பயன்படுவனவாக அமைந்துள்ளன. கோவைப் பதிப்பு நல்ல முயற்சி

எனினும் அது பலரது முயற்சியாக அமைந்தமையால் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான அணுகுமுறையில்லை. ஆனால் இவை யெல்லாம் கம்பராமாயணத்தைப் பரப்பும் முயற்சியில் மைல்கற்களாக அமைந்தன. என்பதனை நன்றியோடு நாம் போற்றுதல் வேண்டும். இந்நிலையில் அறிஞர் பழ. பழனியப்பன் அவர்களின் கம்பராமாயண உரை வெளிவருகிறது. இவ்வுரையின் நோக்கம் ஓரளவு தமிழ் உணர்ந்தவர்களும் கம்பரைக் கற்று மகிழவேண்டும் என்பதுதான்.

இவ்வுரை பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை என்னும் மரபில் அமைந்த உரை அன்று. இவ்வுரையில் பெரும்பாலான பாடல்களுக்குப் பொருத்தமான தலைப்புத் தரப்பட்டுள்ளது. அது பாட்டின் கருத்தினைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அடுத்து, பாடல்கள் சந்தி பிரிக்கப்பட்டுப் பொருள் விளங்கும் வகையில் தரப் பட்டுள்ளன. அதன்பின் அருஞ்சொற்களுக்குப் பொருள்தரப்பட் டுள்ளது. இறுதியில் பாட்டின் கருத்து விளக்கப்படுகிறது. இப்பகுதியில் பாட்டில் காணப்படும் சிறப்பு. அக்கருத்தினை விளக்கும் வகையில் அமைந்த பிற நூல்களின் பகுதிகள் முதலிய இடம் பெற்றுள்ளன. இப்பகுதியே இவ்வுரையின் உயிரான பகுதி எனலாம்.

இதில் உரையாசிரியர் உரையினைப் படிப்பவரோடு நேரில் உரையோடுவதுபோல் நடை அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது. நூலாசிரியரின் விரிந்த புலமையினையும் கூர்த்த நுண்ணறிவினையும் இப்பகுதியில் காணலாம். சங்க இலக்கியம், திருக்குறள் தொடங்கி வாலியின் அவதாரபுருஷன் வரை அனைத்து நூல்களிலிருந்தும் மேற்கொள் காட்டியுள்ளார். பிரபுலிங்கலீலை. இறையனார் களவியல் உரை, தாயுமானவர். திருவருட்பா, சேனாவரையம் முதலிய அதிகம் மேற்கொள் காட்டப்படாத நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டி யிருத்தல் நூலாசிரியரின் விரிந்த புலமைக்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. சான்றாக ஒரு பாடலைக் காணலாம்.

‘கல்லிடைப் பிறந்து போந்து’ என்பது ஆற்றுப்படலத்தின் பத்தொன்பதாவது பாடல் இப்பாடலின் விளக்கத்தில் ‘‘இந்தப் பாடல் கம்பனுடைய சமயச்சார்பின்மையைத் தெரிவிக்கும் ஒரு முக்கியமான பாடலாகும். இந்த வெள்ளப்பெருக்கையும் நதியையும், சமயத்தையும்

இணைத்து அண்மைக்கால ஞானிகள்கூடப் பாடியிருக்கிறார்கள். 'பொங்கு பல சமயம் எனும் நதிகளெல்லாம் புகுந்து கலந்திட, நிறைவாய்ப் பொங்கி ஓங்கும் கங்குகரை காணாத கடலே'' என்று இராமலிங்கவள்ளலார் பரம்பொருளைப் பற்றிப் பாடுகிறார். ''வேறுபடு சமயம் எல்லாம் புகுந்து பார்க்கின், விளங்கு பரம்பொருளே! நின் விளையாட்டல்லால், மாறுபடும் கருத்தில்லை. என்பார் தாயுமானவர். ஒரு வேறுபாடு புரிகிறதா? பல ஆறுகள்தானே ஒரு கடலில் சென்று சேர்கின்றன. பல சமயங்களால் பல பெயர்களால் வழங்கப்படும் பரம்பொருள். ஒன்றுதானே? ஆனால் கம்பன் இங்கு என்ன கூறுகிறான். ஓர் ஆறு பல கால்வாய்களாகப் பிரிந்து பரந்து செல்கிறது என்றும். ஒரு பரம்பொருள் பல சமயத்தாராலும் பல தெய்வங்களாக வழங்கப்படுகிறது என்றும் கூறுகிறாரே? அதுதான் கம்பனுடைய காவியத் தனிச்சிறப்பு'' என்று எழுதியுள்ளார்.

இதில் இப்பாட்டைப் பற்றி ஒரு மதிப்பீடு; பிறர் கருத்தோடு ஒப்பீடு. கம்பர் சொல்லும் முறையில் காணும் தனித்தன்மை எல்லாம் காணப் படுகின்றன. இவ்வாறே இப்படலத்தின் இருபதாம் பாட்டின் விளக்கத்தில் கம்பர் சரயுவாற்றின் வெள்ளப்பெருக்கினை விளக்கப் பயன்படுத்தியுள்ள உவமைகள் எல்லாவற்றையும் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. இது கற்பாருக்குக் கம்பரின் ஆற்றுவருணனையைத் தொகுத்துக் காண உதவியாய் அமைந்துள்ளது.

இவரது ஆழ்ந்து பொருள்காணும் திறத்திற்குப் 'பொருந்திய மகளிர்' என்னும் நாட்டுப்படலம் பதினைந்தாம் ஆம் பாடல் தொடருக்கு எழுதியுள்ள உரையினைக் குறிப்பிடலாம். 'பொருந்திய' என்பதற்குத் தொல்காப்பியர் கூறும் பத்துப்பொருத்தங்களைக் கூறுவதோடு சோதிடம் கூறும் பொருத்தங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கங்கே வான்மீகத்தோடும் பிற இராமயணங்களோடும் ஒப்பிட்டு உரை வரைந்துள்ளார். இராமனுக்கும் மற்றப் பிள்ளை களுக்கும் வசிட்டர் பெயர் சூட்டிய நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் பாடல்களுக்கு உரை வரைந்த பின் இறுதியில் [திருவவதாரப் படலம் 125ஆம் பாடல்] விளக்கத்தில். ''நான்கு குழந்தைகளுக்கும் வசிட்டர் பெயர் சூட்டியதாக வான்மீகம் கூறவில்லை. இது கம்பனின் கை

வண்ணம். வசிட்டர் முக்காலமும் உணர்ந்தவர். ஆதலால் அவர்கள் பின்னர் ஆற்றப் போகும் செயல்களை முன்னரே உணர்ந்து அதற்கு ஏற்றாற்போல நாமகரணம் செய்திருக்கிறார் என்பதாம்'' என்று குறித்துள்ளார். விராதன் துதியினை விளக்குமிடத்து [2662] ''விராதன் துதி இவ்வளவு விரிவாக வான்மீகத்தில் பேசப்படவில்லை என்பது நோக்கத்தக்கது'' என்று குறித்துள்ளார். கரன் வதை முடித்த பின் திரும்பிய இராமனை இலக்குவனும் சீதையும் கண்ணீரால் அவன் திருவடிகளைக் கழுவினார்கள் என்கிறார் கம்பர் [3163]. வான் மீகத்தில் சீதை இராமனை இறுகத் தழுவிக்கொண்டாள் என்றும் பாராட்டினாள் என்றும் வருகிறது. இவ்வேறுபாட்டினை ஆசிரியர் குறிக்கத் தவறவில்லை. ''அப்பாட்டின் இறுதியில் ''இங்கே சீதை இராமனை வெகுவாகப் பாராட்டி சத்திரிய உபசாரங்கள் செய்தாள் என்று மிக விரிவாக வான்மீகி கூறியிருப்பது நோக்கத்தக்கது'' என்று குறித்துள்ளார். 'இல்லாத உலகத்து எங்கும்' என்னும் பாட்டில் [3872] இராமன் தன்னுடன் உரையாடிய அனுமனை இலக்குவனிடம் சொல்லின் செல்வன் என்று பாராட்டிப் பேசுகிறான். இப்பாட்டின் உரையின் இறுதியில் ''இந்த இடத்தில் அனுமனைப் பற்றி இராமன் இலக்குவனிடத்துப் புகழ்ந்து கூறியதை 10 ஸ்லோகங்களில் கூறி யிருக்கிறது வான்மீகம்'' என்று சுட்டுகிறார். சுக்கிரீவனை நம்புதல் கூடாது என்ற இலக்குவனுக்கு இராமன் ஒழுக்கம் போன்ற நடை முறையை நாம் மனவுணர்வில்லாத குரங்குகளிடம் எதிர்பார்த்தல் கூடாது என்று விடை தருகிறான். இவ்விடத்தில் [4082] ''இவ்வாறு இலக்குவன் மறுப்புக் கூறுதலும். இராமன் இதற்கு மறுமொழி கூறுதலும் வான்மீகத்திலோ. அத்யாத்ம ராமாயணத்திலோ காணப்பட வில்லை என்று குறித்துள்ளார். இவ்வாறு வாலி தன் தவற்றினை உணர்ந்து இராமனிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டும் 'தாய் என உயிர்க்கு நல்கி' என்னும் பாட்டின் விளக்கத்தின் இறுதியில் ''இவ்வாறு ஞானம் பெற்ற வாலிக்குத் திரும்பவும் உயிரையும் உடலையும் அளிப்பதாக இராமன் தெரிவித்தாகவும். வாலி அதை மறுத்து இராமபிரானின் முன்னர் இறந்து போவதையே தான் விரும்புவதாகவும் அதுவே பெருமை தரும் என்று கூறியதாகவும் துளசிதாசர் எழுதிய ''ராமசரிதம் தெரிவிக்கிறது'' என்று தெரிவித்துள்ளார்.

அகத்தியப்படலத்தில் [2769-92] அகத்தியரைக் குறித்து வரும் புராணச் செய்திகளையெல்லாம் விளக்கமாகத் தந்துள்ளார். இஃது உரையாசிரியரின் விரிந்த புலமைக்கும் உழைப்புக்கும் சான்றாக அமைந்துல்ளது. அங்கங்கே இப்படித் தேவையான விளக்கங்களைத் தந்து உரையினை முழுமையுடையதாக ஆக்கியுள்ளார்.


இந்நூலில் உரையின் வாயிலாகச் சில இடங்களுக்குத் தெளிவு கிடைக்கிறது என்பதற்கு பதச்சோறாக ஒரு பாடலில் அமைந்துள்ள உரையினைச் சுட்டலாம். தூதுவர்கள் இராமன் வில் முறித்த செய்தியினைத் தெரிவித்தற்கு மிதிலையிலிருந்து அயோத்திக்குச் சென்றனர். அதனைக் கம்பர். ''கடுகிய தூதரும் காலின்காலின் சென்று'' [819] என்று குறித்துள்ளார். இதற்கு வை.மு.கோ. அவர்கள் காலால் நடந்து சென்றனர் என்று உரை வரைந்துள்ளார். இது பொருத்தமாக அமையவில்லை. அரச தூதர்கள் காலால் நடந்து சென்றார்கள் என்பது சிறப்பாக இல்லை. அவர்கள் விரைந்து சென்று செய்தியைத் தெரிவிக்கும் ஊக்கம் உடையவர்கள். அதனால் தேரில்தான் சென்றிருப்பார்கள். அதுவே பொருத்தமாக அமையும். அறிஞர் பழ. பழனியப்பன் அவர்கள் தூதர்கள் தங்கள் வாகனங்கலில் காற்றைவிட வேகமாகச் சென்றனர் என்று எழுதியுள்ள உரை அவருக்கு ஒரு 'சபாஷ்' போட வைக்கிறது.

ஓரிரு இடங்களில் முன்னைய உரையினையே ஒட்டி விளக்கம் தரப்பட்டுள்ளது. 'செவ்வழி உருட்டிய' [2248] என்னும் பாடலுக்கு முன்னையோர் எழுதிய போக்கிலேயே இவரும் உரை கண்டுள்ளார். 'இன்மை நண்பினோர்' என்பதற்கு மாறாக 'இனிய நண்பினோர்' என்னும் வேறொரு பாடத்தைக் கொண்டுள்ளார். அதனால் உரை மனங்கொள்ளத்தக்க வகையில் அமையவில்லை. அதற்குக் காரணம் அப்பாடலில் வரும் உலகினில் என்பதனைப் பிரிப்பதில் உள்ள இடர்ப்பாடாகும். உலகினில் என்பதில் இல் என்பது எழாம் வேற்றுமை உருபு அன்று. அப்படி எல்லாரும் கொண்டதால் பாட்டிற்குப் பொருள் காண்பதில் இடர் ஏற்பட்டுள்ளது. அதில் இல் என்பது வினைமுற்று. இல்லை அதனால் வறியவர்கள் மேலுலகத்தில் இருக்கிறார்கள் என்று கருதி அவர்களைத் தேடி அங்குச் சென்றாயோ?'' என்று பரதன்

ஆற்றாது புலம்புவதாகப் பொருள் காண்பதே இயல்பாகவும் பொருத்த மாகவும் அமையும்.

இதுபோலவே இராமனும் இலக்குவனும் குரக்குச்சேனையினை இருபது நாள்கள் கண்டனர் என்றும் அப்படிக் கண்டும் அதன் நடுப் பகுதி வரை கூடக் காண முடியவில்லை என்றும் கம்பர் தெளிவாகத் தெரிவித்துள்ளார். 'பத்து இரட்டி நன்பகல் இரவு ஒருவலர் பார்ப்பார். எத்திறத்தினும் நடுவு கண்டிலர் முடிவு எவனோ?'' என்பது கம்பர் பாடல்; இதன் விளக்கத்தில் 'பத்து இரட்டி' என்பதற்கு இருபது நாட்கள் என்பது நேர்பொருள் அல்ல. பல நாட்கள் என்பது மறை பொருள். படையின் அளவின்மையைச் சிறப்பித்துக் கூறினார் என்க'' என்று கூறியுள்ளார். பாடலில் தெளிவாக இருபது நாள்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் இதனையும் மீளச் சிந்தித்தல் வேண்டும். ஒருவரால் எல்லாச் சிக்கல் களுக்கும் தீர்வு காண இயலாது என்பதனை மனங்கொள வேண்டும். இவை இன்னும் கம்பராமாயணத்தில் தெளிவு பெறுவதற்குரிய பகுதிகள் உள்ளன என்பதற்காக எடுதததுக்காட்டப்படுகின்றன. இவ் வாசிரியரின் முயற்சியால் எவ்வளவோ விளக்கங்களும் தெளிவுகளும் கிட்டியுள்ளன. சராசரி தமிழறிவு உள்ளவர்களும் எளிதில் கம்ப ராமாயணத்தைப் பொருளுணர்ந்து படித்துச் சுவைக்க ஒளிவிளக்காக இவ்வுரை அமைந்துள்ளது. அறிஞர் திரு. பழ. பழனியப்பன் முயற்சி யைப் பாராட்டி எஞ்சிய சுந்தர காண்டம் முதலான பகுதிகளுக்கும் இவரது உரை விரைவில் வருதல் வேண்டும் என்றும் அதற்குத் தமிழ் மக்கள் ஆதரவும், இறையருளும் துணைநிற்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன். உரையாசிரியருக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டு தல்கள். வாழ்க அவரது தமிழ்த்தொண்டு.

அன்பன்



சென்னை-600 101

4-3-2007.

ஆய்வுரை

கம்பனின் காப்பியம் கல்விப் பெருங்காப்பியம். எல்லா வகையானும் கம்ப இராமாயணம் ஒரு பெருநூல். தொடர் பழகுடைய, கதையோட்டமுடைய, கருத்தோட்டமுடைய, தமிழ்ப் பண்பாடு காட்டும் பரந்த நூல். அதன் காப்பிய மாந்தர்கள் செந்தமிழ் நிலம் சாரார் எனச் சொல்லி முழுப் பார்வை காணும் கண்ணோட்டம் பெறாச் சிலர் உண்டென்றாலும், கற்றுணர்ந்தோர் போற்றும் பெருங்காப்பியம் கம்ப இராமாயணம். அளவால், அச்சால் இந்த மிகுபெரும் படைப்பு 'கல்வியில் பெரியவன் கம்பன்' எனும் பெருமை சேர்த்தது. ''ஒரு மொழிக்கு நிலக் காப்பியங்களே தோன்ற முடியுமா? மொழியின் பரந்த வளர்ச்சிக்குத் தழுவலும் வேண்டும். ஆனால் அத்தழுவல் தழுவலாகத் தெரியாது. நிலத்தோடும் நிலமக்கள் மரபோடும் ஒட்ட வேண்டும். மொழிபெயர்ப்பு இதுவென எவ்விடத்தும் தோன்றாதிருக்க வேண்டும். 'மொழிபெயர்த்த அதற்பட யாத்தல்' என்பார் தொல்காப்பியர்'' என மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் கம்பனின் காப்பியப் பெருமைக்கும் தமிழ் உணர்விற்கும் விளக்கஞ் சொல்வர். மொழி வளர்ச்சிக்குக் கம்ப இராமாயணம் ஒரு வழிகாட்டி. இராமாயணப் பாத்திரங்களைத் தமிழ் மொழிமை குன்றாது செய்யுட் படுத்தியவன் கம்பன். சொல்லாற்றல் வேண்டுவோர்க்கு அருமருந்து, பெருவிருந்து கம்ப காதை. 'கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!' என முழங்குவார் கம்பன் அடிப்பொடியார்.

இராமகாதை பட்டி தொட்டியெல்லாம் ஊடுருவிய காதை. கம்பனின் நோக்கு தமிழ்நோக்கு. தன் தமிழ்நோக்குக்குக் கருவியாகச் சூழ்திறனோடு இராமகாதையைத் தழுவினான் கம்பன். அவன் மொழி பெயர்த்தானல்லன். தமிழ் வளர்த்தானாவான். தமிழ் மக்களின் அக வழக்கங்கள், புறப்பழக்கங்கள் இடம்பெற்று அவன் படைப்புக்கு முன்னர்த் தோன்றிய திருக்குறள், சீவக சிந்தாமணி, தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலான நூல்கள் இராமவதாரக் காப்பியத்தை இயக்கின. சொல்லாலும் பொருளாலும் கம்பன் 'தமிழ் இயக்குநர்'

ஆனான். அவன் இயக்கிய 'இராமாவதாரம்', 'கம்ப இராமாயணம்' எனக் கம்பன் பெயரினை முன்னிறுத்தியது. கம்பனின் கவியொளி ஈடற்றது. அவன்தம் கவிஒளிக் கதிர்கள் பரவுமிடமெல்லாம் கவி பிறக்கும். 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பர். அவன் கவிதையின் சக்தி அவனைக் **'கவிச் சக்கரவர்த்தி'** ஆக்கிற்று. 'கம்ப நாடன்' எனப் போற்றிற்று.

தமிழில் பெருநூல்கள் பல கம்பனுக்கு முன்பே தோன்றினாலும், பாடல் எண்ணளவில் பத்தாயிரத்தை மிஞ்சும் பாடற் காப்பியம் நமக்குக் கிடைத்துள்ள கம்ப இராமாயணமே. கம்பனை அறியாத் தமிழர் இல்லை. அவனைத் தெரிவோர், அறிவோர், ஆராய்ந்தோர் பல வகை யாளராவார். கடல் போலும் அவன் கவிதைப் பெருக்கில் அலைகடல் இன்பம் பெறுவோர் ஒரு சாரார்; ஆழ்கடல் இன்பம் பெறுவோர் இன்னொரு சாரார். அலைகடற் காற்றை வேண்டுவோர் சிலர். ஆழ்கடல் முத்தையும் வேண்டுவோர் இன்னும் சிலர். கம்பனில் தோய்வோரின் காப்பியப் பார்வைகள் வேறுபடும். பாட பேதங்கள், மிகைப்பாடல்கள், உரை நூல்கள், உரை வேற்றுமைகள் எல்லாம் கற்றுணர்ந்தோரின் சிந்தனைக் களத்தில் 'கலிங்கத்துப் பரணி'யாகும். 'சொலல் வல்லோர்' பலரை உருவாக்கும் சொற்போர்க் கருத்துக்கள் பொதிந்த நூல் கம்ப காவியம். கவியரங்குகள், பட்டி மன்றங்கள், வழக்காடு மேடைகள் எனக் கம்பனை மையப்படுத்தி வளரும் சொற்களங்களே இதன் சான்று. கம்பனைக் கேட்போர், கற்போர், ஆராய்வோர் என அவன்பால் ஈடுபடுவோரை மூன்று நிலைப் பிரிவினராகக் கொள்ளலாம். கம்பனை ஒரு முறை கேட்போர் மேலும் கேட்க விரும்புவர். பலமுறை கேட்டோர் அவனைக் கற்க விரும்புவர். அவ்விருப்புக் கூடி வர உரைநூல் தேடுவர். கற்றோரோ மேலும் தமிழ் பருக வேண்டி ஆய்வு மேற்கொள்வர். ஈத்துவக்கும் இன்பம் இன்னும் பெரிதென உணர்ந்து கம்பனைப் பரப்பிக் கன்னித் தமிழ் வளர்ப்பர். இவையெல்லாம் கம்பனை முழுப்பார்வை காணும் நோக்குடை யோரின் வரிசைப்படிகள்.

இந்த வரிசைப் படிகளில் ஒவ்வொரு படியாக ஏறி வந்தவர் இந்த நூலின் உரைநூலாசிரியர் திரு. பழ. பழனியப்பன் அவர்கள். அவர்பால் 25 ஆண்டுகட்கும் மேல் நட்புடையோன் நான். அவரை வங்கி அலுவலராக, மேலாளராக, முதுநிலைத் தலைவராக அவர் துறை சார்ந்த காலத்திலும், பொதுவாழ்வில் அரிமா சங்கத் தலைவராக அவர் செய்த நலம் சார் ஒப்புரவிலும், தமிழ்ப் பொழிவுகள் எங்கு நடப்பினும்

துணை சேரும் தமிழ் உணர்விலும் அவரைக் கண்டவன் நான். கம்ப காதையில் அவருக்கிருந்த தனி ஈடுபாட்டையும் நான் அறிந்திருந் தேன். 12 ஆண்டுகளுக்கு முன் அவர் நாமக்கல் வங்கிக் கிளைக்கு மாறியபோது கம்பன் கழக மூல நூலைக் கேட்டார். அந்த நூல் மிக மெல்லிய தாளில், 6 காண்டங்களையும் அடக்கிய ஒரே நூலாக மிக நேர்த்தியாகக் கம்பன் கழகம் வெளியிட்ட பாராட்டுக்குரிய பதிப்பாகும். இப்பதிப்பு ஏனோ எளிதில் அதன்பின் கிடைக்கவில்லை. கழிவு போக உரூபா. தொண்ணூறு அடக்க விலையில் வாங்கிப் பாதுகாத்த அந்த நூலைத் தயங்கித்தான் திரு. பழனியப்பனிடம் கொடுத்தேன். பொதுவாக நூல் இரவல் பெறுவோர் தாமாகத் திருப்பித் தருவதில்லை. தந்தாலும் படித்திருக்க மாட்டார்கள் என்பது என்னைப் போல் பலருக்கும் அனுபவம் இருக்கும். மாறாக, பழனியப்பன் அதனைத் திருப்பிக் கொடுத்தபோது அந்த நூலின் பயன்பாடு எனக்கு வியப்பைத் தந்தது. பக்கங்கள் முழுவதிலும், பாடல்கள் பலவினும் வரைகோலால் [பென்சில்] பல குறிப்புகள் எழுதியிருந்தார். அவ் வரைகோல் குறிப்புக்கள் பின்னர் உரைநூலாய் உருப்பெறும், வளரும் கருத் தோற்றமென் அன்று நான் அறியவில்லை. அவரின் அக வேட்கை, தொடர்ந்து கொழுந்துவிட்டு எரிந்து அணையா விளக்காகப் பன்னிரு ஆண்டுகள் கரு வளர்த்து உருவமைந்த ஓர் அரிய எளிய உரைநூலைப் பெற்றுத் தந்துள்ளது. பழனியப்பன் அவர்கள் முறையான தமிழ்க்கல்வி கல்லூரியில் பயின்று புலமை பெற்றவரல்லர்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்ற தமிழுணர்வுடன், கம்பனின் ஆசைப் பாடலான பூசைப் பாடலை நினைவு கூர்ந்தார். பாற்கடலை நக்கியே முழுதும் குடிக்கும் ஆசை, பூசைக்குப் பேராசைதான். ஆனால் அரவம் கேட்டு ஓடித் தன்னை ஒளிக்கும் இயல்பான பூசையல்ல இப்பூசை. இப்பூசை, 'துன்பம் உறவரினும் துணிந்து செயலாற்றி இன்பம் பயக்கும் வினை' செய்யும் பூசையென வேறுபட்டு நின்று திருவருள் துணையாய்ச் செயற்கரிய செய்த சாதனைப் பெரியவர் இந்நூலாசிரியர்.

இந்நூல் தமிழாய்ந்த புலமைசால் அறிஞர் பெருமக்களைக் குறிகொண்டு எழுதிய உரையல்ல. புலவரல்லாதோரும் கம்பச் சுவை பருக வேண்டின், ஒரு குடைக்கீழ், பொருளறிய வேண்டிய பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை அனைத்தையும் தந்துள்ள உரைநூல். ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் முன்னுரையாக, கதை

யோட்டம், காரண காரியங்கள் என்னென்ன அவற்றுள் அடங்குமெனத் தொடர்பழகுடனே, படிப்போரின் பசியோட்டம் தூண்டுமாகத் தரப் பட்டுள்ளது. தமிழறிந்த எவரும் கம்பனைப் படிக்க முடியும், வேண்டும் என்னும் நோக்கே, உரைநோக்கு என நூலாசிரியர் தெளிவு காட்டி யுள்ளார். படிப்பவர் மனதில் படிக்குங்காலை என்னென்ன கேள்விகள் வரக்கூடுமென, அனுபவப்பூர்வமாகத் தனக்குள்ளே வினவி, விளக்கங்களைத் தந்துள்ளார் ஆசிரியர். அவ்வாறுள்ள விளக்கங்களில் அவர் காட்டும் மேற்கோள்கள், ஒத்த கருத்துக்கள் சங்க நூல்களி லிருந்து மட்டுமன்றித் தற்கால நூல்களிலும், தற்கால நூலாசிரியர் களிடமிருந்தும் பல இடங்களில் கையாண்டமை, தேடும் சிரமம் இல்லாத செய்தித் தொகுப்பாகப் பெறப்பட்டுள்ளது. கம்பனை மட்டு மன்றி திருக்குறள், புறநானூறு, கலித்தொகை முதல் நளவெண்பா, திருமுறைகள், கவிஞர் வாலியின் பாடல்கள் வரை சுவைத்துப் பார்க்கும் வாய்ப்பாகவும் படிப்போர், விருந்தாகவும் அமைந்துள்ளது.

கோசல நாட்டின் செழிப்பையும் சிறப்பையும் கூறும் நாட்டுப் படலத்தில் கோசல மாதரின் கற்பென்னும் திண்மைகள், வழுவாத நெறியால், மாரியும் வழுவாது பெய்து நாடு செழிப்புற்றது எனப்பாடும் 'கற்பின் நின்ற கால மாரியே' எனும் கம்ப வரிகளை விளக்கு முகத்தான், பெண்ணின் கற்புக்கும் மழைக்கும் உள்ள தொடர்பை ஆசிரியர் காட்டும் மேற்கோள்கள் பல. 'கொழுநன் தொழு தொழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' [55]யெனத் திருக்குறளிலும், 'மழை வேண்டில் தருகிற்கும் தன்மையனே' எனக் கலித்தொகையிலும், 'வானம் பொய்யாது; வளம் பிழைப்பு அறியாது; நீள்நில வேந்தன் கொற்றம் சிதையாது, பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு' எனச் சிலப் பதிகாரத்திலும் அவர் காட்டும் தொடர்புடைக் கருத்தோடும் மேற் கோள்கள் படிப்போர் மனத்தில் பரந்த தமிழ் இலக்கியப் பார்வையைப் பதிக்கின்றன.

அயோத்தியா காண்டம் மந்திரப் படலப் பாடலில் கம்பன் வள்ளுவனைக் கையாளும் திறனை வியந்த உரையாசிரியர் கம்பனின் ஒவ்வொரு அடியும் ஒரு குறட்பாவை உள்ளடக்கிய நயத்தை விளக்கு கிறார். ''ஊருணி நீர் நிறையவும், பயன் மரம் பழுத்தது ஆகவும் கார் மழை பொழியவும் கழனிபாய் நதி வார்புனல் பெருகவும், மறுக்கின்றார் யார்?'' என இராமன் உலகவாம் பேரறிவாளன், நயனுடையான், பெருந்தகையான், ஒப்புரவாளன் முடி சூடுவதால் மக்களும் உலகும் பயன் எய்துவரென மூன்று குறட்பாக்களை ஒரு

பாடற் சாறாகக் கவி படைத்த கம்பனை நம்முன் நிறுத்துகிறார், நூலாசிரியர்.

பிறரை வைவதில் இருவகையுண்டு. பேரொலி செய்து வைதல் ஒருவகை. மனத்துள்ளேயே ஒலி சுருக்கி வைவது இன்னொரு முறை. கைகேயியாம் மாகயத்தியை இருவகைப் பறவைகள் வைதன. கோழி கூவியது பேரொலி எழுப்பி வைதலை ஒத்திருந்தது. பிற பறவைகளின் மெல்லொலி மனதுள்ளே வைதலை ஒத்திருந்தது எனக் கைகேயி சூழ்வினைப் பாடலை விளக்கும் உரையாசிரியர் தன் எளியமுறை விளக்கத்தால் நம் மனம் பதிகிறார்.

கம்பனின் வேறுபட்ட உவமை நயங்கள் உரையாசிரியரின் பார்வையில் படுகின்றன. உருமாறிய சூர்ப்பணகை வரும் மெல்லோசைச் சந்தப் பாடலில், 'அஞ்சொல் இளமஞ்ஞை என' என்னும் வரிகளில் மயில் இனிய சொல்லுக்கு உவமித்துள்ள வேறுபாட்டைக் காணலுற்ற ஆசிரியர், பொதுவான உவமை மயிலை மகளிரின் சாயலாக உவமிப்பார்கள். என விட்டு விடாமல், 'மயில் கண்டன்ன மடநடை மகளிர்' என்னும் திருமுருகாற்றுப்படையையும் மேற்கோளிட்டு அதில் மயில் மகளிர் நடைக்கும் கூட உவமையாகிறது என்னும் செய்தியைத் தருகிறார்.

கிட்கிந்தா காண்டம் வாலி வதைப் படலத்திலே 'காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான் பாலின் ஆற்றிய பத்தி பயத்தலால், மாலினால் தரு வன்பெரும் பூதங்கள்' என்னும் வரிகளில், 'மாலினால் தரு' எனும் கவி வரிக்கு இந்நூலாசிரியர் கூறும் விளக்கம் சைவ வைணவச் சமத்து வத்தைப் பிரதிபலிக்கிறது. பல உரையாசிரியர்களின் 'திருமாலால் படைக்கப்பட்ட' என்னும் உரையில் வேறுபட்டு 'மால்' எனும் சொல்லுக்கு 'அன்பு' எனும் அழகிய பொருளும் உண்டாதலால் சைவ சமய உரையாசிரியர்கள் கூறும் பொருளும் ஏற்புடைத்து என்கிறார் பழனியப்பன் அவர்கள்.

ஆசிரியர் உரை யாத்துள்ள 4845 பாடல்களை உள்ளடக்கிய 4 காண்டங்களிலும் எளிய, புதிய, தொகுத்த பல நயமான விளக்கங்கள் விரவிக் கிடப்பதைக் காணலாம். கம்ப காதைக்கு எளிதில் கிடைக்கும் மூலமும் உரைகளும் இல்லையென்றே சொல்லவேண்டும். ஒருமுறை போட்ட பதிப்புகள் மறுபதிப்புக்கு அதிகம் வரவில்லை. இது தமிழர்களின் தவக்குறைவே.

இதைப் பெருமளவு நிறை செய்யும் நோக்கிலே, இந்நூலாசிரியரின் இப்பெரும்பணி பயன்படுமென்பது தெளிவு. சிறப்புடைய இவ்வுரை நூல் மேலும் சிறக்க எனக்குப் புலப்பட்ட இருகருத்துக்களை ஆசிரியர்க்கு அறிவுரையாக அல்ல, ஆலோசனையாக வைக்க விரும்புவன். பல இடங்களில் வடமொழிச் சொற்கள் பொதிந்துள்ளன. பதவுரையிலும், விளக்கவுரையிலும் இவற்றை வரும் பதிப்புக்களிலும், எஞ்சிய காண்டங்களிலும் திருத்தம் செய்தல் தமிழ் நலம் கூட்டும். கம்பனே, வடமொழிப் பெயர்களைக் கூடத் தமிழ் இலக்கண மொழிமை குன்றாமல் எழுதியோனல்லவா? அவன் வழியில் சிந்திப்பது இவ்வுரைக்கு மேலும் வலிமை சேர்க்கும் என்பது ஒரு கருத்து. ஆசிரியர் பாடல்களைச் சொற்பிரித்துப் போட்டிருப்பது எளிதில் படிக்கவும், புரியவும் கூடும் எனும் பன்னோக்காகும். அது தவறல்ல. ஆனால் இன்றைய மாணவர்களுக்கு அதிலும் இளஞ்சிறார்களுக்குக் கவிதைகள் மனனம் செய்யும் பயிற்சி குறைவே. ஓசையும் தொடையும் படச் சேர்ந்து படிக்கும் முறையில் பாடல்கள் மனம் பதியும் என்பது உண்மை. என் சொந்த அனுபவம்கூட. இதைச் சிந்தித்து உரிய வகையில் மூலம் வெளிப்படச் செய்வது இன்னொரு கருத்து.

இவ்வுரை நூல் நூலாசிரியரின் முதல் முயற்சி. மிகவும் போற்றுதற்குரிய பெரு முயற்சி. பன்னிரு ஆண்டுகளுக்கு மேல் குறிக்கோள் திண்மையுடன் செய்துள்ள சாதனை. மேலும் உள்ள சுந்தரகாண்டம், யுத்த காண்டம் இரண்டையும் தொடர்ந்து அவர் முடிக்கத் திருவருள் துணை செய்யும். இந்நூல் உருவாக, நூலாசிரியர்க்குத் துணை நிற்கும் கம்பன் கழகத்தாரும், திருமகள் பதிப்பகத்தாரும், பிறரும் தமிழ்த் தொண்டாற்றிய பாராட்டுக்குரியவர்கள்.

அன்பன்.

வ.சுப.மா.தொல்காப்பியன்

வாழ்த்துரை

கலைமாமணி முனைவர் ஆறு. அழகப்பன்
மேனாள் தமிழ் துறைத்தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கல்வியில் பெரியவன் கம்பன்; தமிழிற்கு இருவர் 'கதி' [கம்பர், திருவள்ளுவர்] யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல என்ற வரிகளை கம்பராமாயணச் சிறப்புகளை எழுதுபவர்கள், மேடைகளில் உரையாற்றுகிறவர்கள் கூறாமல் இருப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட இலக்கியத்திற்காக கழகங்களும், அதிகமான பேச்சாளர்களும், தாசகர் களும் தோன்றினர் என்றால் அப்பெருமை கம்பராமாயணத்தையே சாரும்.

கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம் என்று உரத்த குரலில் தொடங்கி மாநாடுகளை நடத்தி இலக்கியச் சுவைஞர்களை அதிகமாக உண்டாக்கிய பெருமை கம்பராமாயணத்திற்கு உண்டு. பகுத்தறிவுக்கு ஒவ்வாத இலக்கியமென்று திட்டவும், எரிக்கவும் விரும்பிய எதிர்பாளர்களை கம்பராமாயண தாசர்களைவிட அதிகமாக படிக்க வைத்து பல பாடல்களைப் பரப்பவைத்த தனிப்பெரும் சிறப்பு கம்பராமாயணத்திற்கு உண்டு.

ஓர் இலக்கியம் தோன்றியவுடன் தொடர்ந்து அவ்விலக்கியம் மக்களைச் சென்றடைய அவ்விலக்கியத்தை மேடையில் உரையாற்றுதல் என்ற நிலையைத் தாண்டி நிரந்தரமாக பாடல்களுக்கு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, நயவுரை என்றெல்லாம் கற்றுத்துறைபோகிய அறிஞர்கள் உரைகள் எழுதத் தொடங்கினர். இக்கருத்திற்கு விரிவாக விளக்கம் தேவையில்லை என்பதை தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இரண்டு நூல்களுக்கும்

அறிஞர்கள் பலர் எழுதிய உரைகள் எடுத்துக்காட்டுகள். ஈராயிரம் ஆண்டுகள் முதுமைபெற்ற இவ்விரண்டு நூல்களுக்கும் இன்னும் தொடர்ந்து உரைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. இச்சிறப்புகளை வேறு உலக இலக்கியங்கள் பெற்றிருக்கின்றன என்று கூறமுடியாது.

இவ்விரு நூல்களையும் போல கம்பன் காவியமும் மேடைகளில் கூறப்பட்ட உரைகளையும் எழுத்துவழி எழுதப்பட்ட பெருமை களையும் உடையதாக விளங்குகிறது. கம்பராமாயணத்திற்கு உரையெழுதிய உரைவிற்பன்னர்களில் திரு.வை.மு.கோ. உரை வடமொழி கலந்த எளிமைச் சிறப்புக்கொண்டதாக விளங்க இவ்வுரை பல உரையாசிரியர்களை தோற்றுவித்தது.

அண்ணாமலை பல்கலைக்கழக கம்பராமாயண செம்பதிப்பில் உரைகள் எழுதப்படும்பொழுது சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை தலைமையில் தமிழக அறிஞர் குழு உரை எழுதிய பாங்கினையும் சிறப்பினையும் உலகறியும். இக்காலக்கட்டங்களில் மக்கள் இலக்கியமாக கம்பராமாயணத்தை டி.கே.சி., ராஜாஜி ஆகியோர்கள் தம் உரைகளால் எடுத்துச் சென்றனர்.

கம்பராமாயண உரையாசிரியர் வரிசையில் பரோடா வங்கியில் பணியாற்றி ஓய்வுபெற்ற பழ. பழனியப்பன் அவர்கள் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம் ஆகிய காண்டங்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். உரையாசிரியர் பழ. பழனியப்பன் தம் முன்னுரையில் கம்பராமாயணத்தில் தமக்கு ஏற்பட்ட ஈடுபாட்டை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாமக்கல் கிளையில் பணியாற்றிய பொழுது அனுமன் வழிபாடு ஓர் உந்துதலாக அமைய அதுபோது வ.சுப.மா. தொல்காப்பியம் வழி மூல நூல் மட்டும் கிடைக்க ஈர்ப்பு ஏற்பட தமிழிற்கு இன்று அது வரவாகிவிட்டது.

உரையாசிரியர் தம்முன்னுரையில் கம்பராமாயணமும் மூலமும் என்ற பகுதியில் கம்பராமாயண உரைகள் இதுகாறும் வந்தவைகளை தெளிவாக பட்டியலிட்டுள்ளார். இவர் எழுதிய உரையின் நெறிகளை இவரே பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது கம்பன் பாடல்களுக்கு விளக்கவுரை. முதலில் பாடல்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் சந்தி பிரித்துத் தரப்பட்டிருக்கிறது,

பின்னர் பாடலில் பயின்று வந்திருக்கின்ற அருஞ்சொற்களுக்கு எல்லோருக்கும் புரிவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன, பின்னர் பாடலுக்குரிய பொழிப்புரை தரப்பட்டிருக்கிறது, அதன் பின்னர் அப்பாடலில் உள்ள சொற்களின் சிறப்பு நயம் விளக்கப்பட்டிருக்கிறது, ஆங்காங்கே தொடர்புடைய மேற்கோள்களும் தரப் பெற்றிருக்கின்றன, என்னுடைய நோக்கமே. இது மிக எளிதாக எல்லோருக்கும் புரியவேண்டும் என்பதே, கம்பன் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் சொந்தமானவனல்லன், அவனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில். வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் புரியவைத்திருக்கிறேன், இன்றைய இளம் தலைமுறையினருக்கும். மாணவ. மாணவியர்க்கும் இது பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

இவ்வுண்மையை நாம் காண்டங்களை படிக்கத் தொடங்கும்போது விரும்பப்பட்ட பாடல்களை புரட்டும் போதும் காண்கிறோம். பெரிய புராணத்தில் இயற்பகை நாயனார் புராணம் விவாதத்திற்கு உள்ளது போல கம்பராமாயணத்தில் வாலி வதைப்படலம் விவாதத்திற்கு உரியது. இவ்வுரையாசிரியர் எழுதும் உரைகளைப் பார்க்கும் பொழுது இவர் உரைத்திறன் பளிச்சென வெளிப்படுகிறது. கம்பரையும், அவர் காவியத்தையும் முற்றிலும் உணரவேண்டுமா? யாருடைய உதவியுமில்லாமல் இவர் உரையை வைத்து கம்பராமாயணத்தை தனியாக ஒருவர் படித்து கம்பராமாயணச்சுவையை உணரலாம். நாமக்கல் கவிஞர் கம்பரைப் புகழும் போது ''எண்ணி எண்ணி, எப்படித்தான் எழுதினானோ, எண்ணாமல் எங்கிருந்து கொட்டினானோ'' என்று பாடுவர். அவ்வரிகளுக்கு ஏற்ப உரையாசிரியர் பழனியப்பன் தமிழைப் படித்து தமிழ் பேராசிரியராக பணியாற்றும் வாய்ப்பினை பெறாத இவர் இவ்வாற்றலை எவ்விதம் பெற்றாரோ என்று நினைக்கும் போது. மனித உறவுக்கு உரைகல்லாக அவதாரம் எடுத்த இராமர் தான் இவருக்குப் பின்புலமாக விளங்கி யிருக்கிறார் என்பது தெரிகிறது.

தமிழகம் திருவாசகத்திற்கு பண்டிதமணியையும், குறுந் தொகைக்கு இராகவையங்காரையும், நற்றிணைக்கு பின்னத்தூர் நாராயணசாமி ஐயரையும், புறநானூற்றுக்கு ஔவைதுரைச்சாமி பிள்ளையையும், சிலப்பதிகாரத்திற்கு ந.மு.வேங்கடசாமி

நாட்டாரையும் பெற்றிருக்கிறது. இவ்வரிசையில் கம்ப ராமாயணத்துக்கு அனைவருக்கும் நீர் உதவுவது போல நீரான உரையை பழனியப்பன் தமிழகத்திற்கு தந்துள்ளார். படிப்பவர் தமிழ் அறிவோடு இராமாயணச் சிறப்பை இவர் உரையால் அடையலாம். இலக்கிய வரலாற்று ஓட்டத்தில் நின்று நிலைபேறு உடையவர்களாக இடம்பெறும் வாய்ப்பு எல்லோருக்கும் கிட்டாது. சிலர் தோன்றியதும் விரைவில் எட்டாது போய்விடுவர். ஆனால் அவ்வகையில் எட்டாத தூரத்தில் உரையாசிரியர் சென்று விடாமல் நின்று நிலைக்கும் பெருமையைப் பெற்றுவிட்டார்.

உரையைப்படிக்கும் போது உரையாசிரியர் பக்கத்தில் இருப்பது போலவே உணர்வு ஏற்படுகிறது. பணியாற்றிய வங்கியிலும் அப்பழுக்கற்ற பணியாளராக விளங்கிய பள்ளத்தூர் பழ. பழனியப்பன் கம்பராமாயண உரையால் அவர் ஊரையும் பெயரையும் தமிழ் உலகம் என்றும் உச்சரிக்கும் வகையில் அருந்தமிழ் பணியாற்றியுள்ளார். பிறவிப்பயன் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தம் உரைத்தொண்டால் மெய்ப்பித் திருக்கிறார்.

ஈரமான அவர் சிந்தனை மேலும் ஊற்றாக சுனையாக வளர்ந்திட தமிழன்னை அருள்பாலிப்பாள்.

அன்பன்

ஆறு. அழகப்பன்

பதிப்புரை

திரு. பழ. பழனியப்பன் அவர்களை நீண்ட பல ஆண்டுகளாக நாங்கள் அறிவோம். அவர் இந்நகரில் வங்கியில் பணியாற்றிய போதே தமிழ் ஆர்வலர் என்பதைப் புரிந்து கொண்டோம். இந்தப்பகுதியில் எங்கே இலக்கிய, ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தாலும் அங்கே சென்று குறிப்பு எடுத்து வந்து சேமித்து வைத்துக் கொள்வது அவர் பழக்கம். பின்னாளில் அவர் அலுவலகத் தொடர்பாக வெளிமாநிலங்களிலும் வெளியூர்களிலும் பணி யாற்றியதால் அவருடன் எங்கள் தொடர்பு சற்று விலகியிருந்தது.

மீண்டும் இதே நகரின் வங்கிக் கிளைக்கு மேலாளராக மாற்றலாகி வந்ததிலிருந்து அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பும், உரையாடும் நேரமும் கிடைத்தது. அப்பொழுது அவர் கம்பராமாயணத்திற்கு ஒரு உரை எழுதவேண்டும் என்பது தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை எங்களிடம் கூறினார். ஆனால் மறுபடியும் அவருக்கு வெளியூர்களுக்கு மாற்றல்கள் வந்தன.

இறுதியாக நாமக்கல்லில் இருந்து ஓய்வுபெற்று வந்த போது 1998-ம் ஆண்டு தன் இலக்கில் தான் உறுதியாக இருப்பதாகவும் உரை எழுதத்தொடங்கப்போவதாகவும் அறிவித்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடலானார். இச்சமயத்தில் அன்றாடம் தான் எழுதிய உரைகளையும் எங்களிடம் தந்துவந்தார். 2001-ம் ஆண்டு, தான் முதல் நான்கு காண்டங்களுக்கும் உரை எழுதி முடித்து விட்டதாகவும் அதை நாங்கள் பதிப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 2001-ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டுவரை தன் நண்பர் ஒருவரின் அலுவலில் அவர் வேண்டுகோளுக் கிணங்க ஆலோசராகப் பணியாற்றி வந்தார். மீண்டும் 2006ம் ஆண்டு முடிவில் மிகத் தீவிரமாக இதில் இறங்கி, எங்களுடன் கூடவே இருந்து, இப்பொழுது 2007ம் ஆண்டு அது சீரிய முறையில் வெளியிடுவதற்கு இறைவன் வாய்ப்பளித்திருக்கிறான்.

திரு. பழனியப்பன் அவர்களின் அயராத உழைப்பாலும், விடாத முயற்சியாலும் தான் நாங்கள் இந்தப்பதிப்பை வெளிக்கொணர முடிந்தது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

எஞ்சிய சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் முதலிய பகுதிகளையும் விரைவிலேயே எழுதித் தந்தால், அவற்றையும் வெளியிட நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்பதையும் இதன் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறோம். அதற்கு இறைவன் திருவருளும், குருவருளும் அவர்க்கும் எங்களுக்கும் துணை புரிய வேண்டிக்கொண்டு தமிழ்மக்களுக்கு இந்த எளிய, சிறந்த உரையை வெளியிடுகிறோம். மிக்க மகிழ்ச்சி மிக்க நன்றி.

– சாந்தமங்கை பதிப்பகத்தார்

முன்னுரை

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா,
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே.

உலகம் யாவையும் பரந்து புகழ்ந்து பேசப்பட்டு வரும் ஒரு நூல் இராமாயணம்; இதனை 'ஆதிகாவியம்' எனவும், இந்நூலை ஆக்கிய வான்மீகி முனிவர் 'ஆதிகவி' என்றும் அழைக்கப்படுகிறார்.

இதன்பின்னர் இந்த வரலாறு உலகில் - இந்தியாவில் - எல்லா இடங்களிலும் பக்தியினை வெளிப்படுத்துகின்ற நூல்களாகப் பெரும் அளவில் கையாளப்பட்டிருக்கின்றன.

வடமொழியைத்தவிர இருபதுக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலும் இந்தி, அஸ்ஸாம், வங்காளம் ஒரிஸ்ஸா, மராட்டி முதலிய மொழிகளிலும் இராமகாதை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உள்ள சங்ககாலப் பாடல்களான அகநானூறு, புறநானூறு போன்ற இலக்கியங்களில் ராமாயண நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இதனைத் தொடர்ந்து வந்த சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற ஐம்பெருங்காவியங்களிலும், 6-7ம் நூற்றாண்டில் இயங்கி வந்த பக்தி இலக்கியங்களான நாயன்மார்களின் திருமுறைகளிலும், ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங் களிலும், ஏனைய இறைவழிபாட்டு நூல்களிலும் இராமகாதை, பெருமளவில் பேசப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

கம்பனின் இராமாவதாரம் :

பின்னர் தோன்றிய கவிச்சக்ரவர்த்தி கம்பன் வான்மீகியின் ஆதிகாவிய மாகிய இராமாயணத்தைத் தமிழில் வழி நூலாக ஆக்கித் தந்திருக்கிறான். கம்பன் தன்னுடைய வழி நூலுக்கு 'இராமாவதாரம்'என்றே பெயர் சூட்டியிருக்கிறான். கம்பனது கவித்திறனையும், ஆழ்ந்த ராமபக்தியையும் உணர்ந்து, தமிழ் மக்கள் அதனைக் 'கம்ப இராமாயணம்' என்றே போற்றி

புகழ்ந்து பாராட்டி வந்திருக்கின்றனர். இன்றும் 'இராமாவதாரம்' என்ற பெயரைக் காட்டிலும் 'கம்ப இராமாயணம்' வழக்கில் இருந்து வருகிறது.

கம்பன் தனது பெருநூலுக்கு வான்மீகியைக் கருவாகக் கொண்டு பாடினானே அன்றி வேறன்று. கம்பன் கூறும் கதையும், கதை நிகழ்ச்சியும், கதாபாத்திரங்களும், பிறவும் எல்லாம் அவனது உள்ளத்தின் அடித்தளத்தினின்றும் உதயமானவையே. தான் வாழ்ந்த காலத்திற்கேற்ப ஒரு புது சிருஷ்டியாகவே தனது பெருங்காப்பியத்தை கம்பன் ஆக்கித் தமிழ் உலகிற்குத் தந்துள்ளான். கம்ப இராமாயணம் வெறும் நீதி நூலன்று.

கம்பராமாயண மூலமும் உரையும் :

கி.பி. 1840ல் திரு. வெங்கடாசல முதலியார் அவர்களாலும், 100 ஆண்டுகளுக்குப் பின்னர் 1924ல் மதுரை கோபால கிருஷ்ணக் கோன் கம்பெனியாராலும், மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 1957-58ல் சென்னை மர்ரே அண்ட் கம்பெனி, ராஜம் அவர்களாலும், 1976ல் சென்னை கம்பன் கழகத்தாராலும் மூலம் மட்டும் வெளிவந்திருக்கின்றன. கற்றறிந்த சான்றோர்களுக்கு மட்டுமே மூலப் பாடல்கள் பயனளிக்கும். இந்த இரண்டு பதிப்புக்களிலும் இடைச் செருகல் என்று கருதப்பட்ட - வெள்ளியம்பலத்தம்பிரான் - வாணிதாதன் முதலானோர் இயற்றி அமைக்கப்பட்டன என்று கருதப்பட்ட, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் மிகைப்பாடல்கள் என்று தலைப் பிட்டு அந்தந்தப் படலங்களின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரு பதிப்புகளையும் முறையே கம்பனடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் தலைமையிலும், நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையிலும் அமைந்த இரு பதிப்பாசிரியர்கள் குழுக்கள் செப்ப னிட்டுத் திருத்தி வெளியிட்டிருக்கின்றன. விபரங்கள் அருகில் உள்ள அட்டவணையில் தரப்பட்டிருக்கின்றன.

பொதுவாகத் தமிழ் இலக்கியத்தில், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், திருக்குறள், திருமுருகாற்றுப்படை போன்ற பெருங் காப்பியங்களுக்கு உரைகள் வரையப்பட்டுள்ளன. அதுபோன்றே தமிழில் மற்றொரு இலக்கியமானகம்பராமாயணத்திற்கும் பல உரைகள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. நமக்குத் தெரிந் திருக்கும் கம்பராமாயண முழு உரை அதாவது 6 காண்டங்களுக்கு மான முழு உரை திரு. வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவர்களால் 1929-ம் ஆண்டுமுதல் பதிப்பிக்கப் பட்டு 7-8 பதிப்புக்கள் 1967 வரை வெளிவந்திருக்கின்றன. ஆயினும் இவற்றில் எவையும் இன்று கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ, அரசு நூலகங்களிலோ கிடைக்கப் பெறுவதில்லை. இதனைத் தொடர்ந்து 1956-57ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சென்னை திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகமும் தனித்தனியே உரை எழுதி வெளியிட்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டுக்கு ஒரு காண்டம் என்ற

கணக்குப்படி 1972 வரை முறையே 16 தொகுதிகளாகவும், 8 தொகுதிகளாகவும் வெளியிட்டு இருக்கின்றனர். இரண்டு பதிப்புக்களுக்கும் அரசு மானியமும், சில அறக்கட்டளைகளும் உதவி செய்து இருக்கின்றன. என்றாலும் இவற்றில் எதுவும் இரண்டாவது பதிப்பாக வெளிவர வில்லை. முதற்பதிப்பு இப்பொழுது கிடைப்பது மிக அரிதாக இருக்கின்றது.

இதனை நன்கு உணர்ந்த கோவை கம்பன் அறநிலை, சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின் 1992 முதல் 1998 வரை 6 ஆண்டுகளில், எட்டுத் தொகுதிகளாக பேராசிரியர் திரு. அ.ச. ஞானசம்பந்தம் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டும், 15 உரை ஆசிரியர்களைக் கொண்டும் ஒரு உரை வெளியிட்டிருக்கிறது. இது மிகக் குறைந்த அளவில் பிரதிகள் வெளியிட்டதனாலும், அன்பளிப்புப் பிரதிகளாக அதிகம் கொடுபட்டு விட்டதாலும் இந்தப் பிரதிகளும் இப்பொழுது எங்கும் கிடைப்பதில்லை. இவற்றைத்தவிரவர்த்தமானன்பதிப்பகமும், திருமகள் நிலையமும், ஏறத்தாழ ஒரே நேரத்தில் 1997-1999ல் உரைகள் வெளி யிட்டிருக்கின்றனர். திருமகள் நிலையத்தார் திரு. நாராயண வேலுப்பிள்ளை முதலிய 3 ஆசிரியர்களைக் கொண்டு வெளியிட்டுள்ள விளக்கவுரை பெரும் பாலோருக்குப் பயன்படும் முறையில் வெளியிடப் பட்டிருக்கிறது.

எனக்குள் எழுந்த ஆர்வம்:

இந்த நிலையில்தான் எனக்குள் ஒரு அடங்காத ஆசை - கம்பனை முழுதும் படிக்கவேண்டும் என்ற ஆசை - எழுந்தது. இது தெய்வ சங்கல்பம் என்றே எண்ணுகிறேன். நான் பணியாற்றும் வங்கியின் நாமக்கல் கிளைக்கு 1995ல் மாற்றப்பட்டேன். நாமக்கல் என்ற உடனேயே எல்லோருக்கும் 18 அடி ஆஞ்சநேயர் திருவுருவ ஆலயம் தான் நினைவுக்கு வரும். நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்றுவரும் போது என்னுள் இந்த மிகப்பெரிய ஆசை வித்தூன்றிச் செழித்து வளர்ந்தது. நண்பர் வ.சுப.மா. தொல்காப்பியன் அவர்கள் சென்னை கம்பன் கழகம் (1976) பதிப்பு - கம்பராமாயணம் மூலம் மட்டும் தந்து உதவி, ஊக்கம் அளித்தார்கள். நான் நாமக்கல்லில் இருந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு மூன்றுமுறை திருப்பித் திருப்பி மூலத்தை மட்டுமே, நேரம் கிடைக்கும்போதெல்லாம் படித்து வரலானேன். சில பாடல்கள் புதியதாகவே இருந்துவந்தன. அதற்கு ஒரு குரு - ஆசிரியன் தேவைப்பட்டான். அது அங்கே கிடைப்பது அரிதாக இருந்தது. எனவே இதற்குரிய உரைகளைத் தேடும் பணியில் ஈடுபட்டேன். கம்பன், கம்பராமாயணம் தொடர்புள்ள நூல்கள் எங்கெங்கே கிடைக் கின்றனவோ அவற்றையெல்லாம் வாங்க ஆரம்பித்தேன். முதலில் வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரி அவர்கள் உரையைப் பார்க்கலானேன். அவர்களது தமிழ் மிக உயரிய, வடமொழி கலந்த தமிழாக இருந்தது. அது

எனக்குச் சரியாக அமையவில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது எனக்குக் கோவைக்கு மாற்றலாகியது. கோவை அரசு நூலகம் மிக அருமையாகப் பணியாற்றுகிறது. பணியாளர்கள் மிக அன்புடன் வருபவர்களுக்கு உதவி செய்கிறார்கள். அங்கே எனக்கு, சென்னை பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட திரு. கோ. வில்வபதி அவர்களின் பாலகாண்ட உரை மட்டிலும் கிடைத்தது. இப்போதைக்கு இதுவே போதும் என்று அதைப் படித்துக் குறிப்பு எடுக்கலானேன். இரண்டு முறை படித்திருப்பேன் - ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. அதற்குள் எனக்கு மீண்டும் சென்னைக்கு மாற்றலாகி விட்டது. சென்னையில் ஒரு நூல் நிலையத்திலும் கம்பனது உரையே கிடைக்கவில்லை. ஒரு இரண்டு மாதம் இந்தத் துறையில் கருத்தைச் செலுத்தாது இருக்க நேரிட்டது.

1998ம் ஆண்டு ஜூன் 24ம் நாள் சென்னையை அடுத்த திருமுல்லை வாயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவியின் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ளநூல்நிலையத்தைப் பார்த்தேன். என்னஆச்சர்யம்! அங்கு இதுவரை வெளிவந்துள்ள கம்பராமாயண உரைகள் அனைத்தும் - வை.மு.கோ. உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக உரை, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலைய உரை - எல்லாம் இருக்கக் கண்டேன். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு எப்படிச் செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். பிறகு வைஷ்ணவி ஆலய நிர்வாகத்தாரை அணுகினேன். எனக்கு 6 மாதத்திற்கு நூல் நிலையப் புத்தகங்களை எடுத்துப் படிப்பதற்கு அனுமதிப்பதோடு அங்கேயே தங்கும் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அங்கே அந்த வசதி இருப்பதால் உடனேயே எனக்கு அனுமதி அளித்தது மட்டுமின்றி உணவுக்கும் ஏற்பாடு செய்து தந்தார்கள். அவர்களுடைய அன்பும், கருணையும், தாராள மனப்பான்மையும் என்றும் என்னால் மறக்க ஒண்ணாதது. பிறகு விரைவாகப் படிக்க ஆரம்பித்தேன். குறிப்புக்கள் எடுக்க முனைந்தேன்.

கம்பனைப் படிக்க படிக்க - உரைகளுடன் பொருள் உணர்ந்து படிக்க - சான்றோர்களின் பலவகையான கருத்துக்களையும் படிக்கப்படிக்க எனக்குள் ஒரு தன்னம்பிக்கையும், மன தைரியமும் வளர்ந்து விட்டன. ஒவ்வொரு உரையையும் பலமுறை படித்தேன். தொட்டுவிடத் தொட்டு விடத் தொடருகின்ற காதல் எனக்குக் கம்பனிடம் உண்டாகியது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போலப் படிக்கப் படிக்கப் பொருள்கள் தெரிய வரலாயின. புணரும் தோறும் போகம், பின்னும் புதிதாய் வளர்கின்றது என்று திருக்கோவையார் சொல்லியது போல, மனம் கம்பனில் முழுக்கத் தோய்ந்தது.

இது கம்பன் பாடல்களுக்கு விளக்கவுரை. முதலில் பாடல்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் சந்தி பிரித்துத் தரப்பட்டிருக்கிறது,

பின்னர் பாடலில் பயின்று வந்திருக்கின்ற அருஞ்சொற்களுக்கு எல்லோருக்கும் புரிவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன, பின்னர் பாடலுக்குரிய பொழிப்புரைதரப்பட்டிருக் கிறது, அதன் பின்னர் அப்பாடலில் உள்ள சொற்களின் சிறப்பு நயம் விளக்கப்பட்டிருக்கிறது, ஆங்காங்கே தொடர்புடைய மேற்கோள்களும் தரப் பெற்றிருக்கின்றன, என்னுடைய நோக்கமே. இது மிக எளிதாக எல்லோருக்கும் புரியவேண்டும் என்பதே, கம்பன் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் சொந்தமானவனல்லன், அவனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில். வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் புரியவைத்திருக்கிறேன், இன்றைய இளம் தலைமுறை யினருக்கும். மாணவ. மாணவியர்க்கும் இது பெரிதும் உதவும் என நம்புகிறேன்,

உற்றுழி உதவியோர்:

இக்காப்பியத்தைக் கம்பன் எழுதுவதற்குக் காரணமாயிருந்த சடையப்ப வள்ளலைப் போல, இந்த உரையை நான் எழுதுவதற்கு முழுமுதற் காரணமாக இருந்து, உள்ளத்தாலும், பொருளாலும் பேருதவி புரிந்தவரும் ஒரு இராமர்தான். வெற்றி பொருந்திய இராமர் - ஜெயராமர் (Jai Expo) இவர் எடுத்த காரியங்கள் அனைத்தும் தடையின்றி நிறைவேறும். தொடுத்த செயல்கள் அனைத்தும் துலங்கும். இராமாயணம் படிப் போரையும், கேட்போரையும் அவர்களது இருபத்தி ஒரு தலைமுறையினர் வாழ்த்துவர் என்று சான்றோர் கூறுவர். அத்தகைய பெரும் பயனை எனக்கு அளித்த அரிமா. திரு.B.ஜெயராமன் அவர்களுக்கும், அவர் தம் குடும்பத் தாருக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன். அவர்கள் அலுவலகத் தில் உள்ள நண்பர்களுக்கும் நன்றி. அச்சுப் படிகளைக் கூர்ந்து நோக்கித் திருத்தி உதவிய பேராசிரியர் திரு.ந.சுப்புரெட்டியார் அவர்களுக்கு எவ்வளவு முறை நன்றி சொல்வது என்று புலப்படாமல் தவிக்கிறேன்.

என்னுடைய கையெழுத்தையும் படித்துப் புரிந்து கொண்டு கணினியில் தட்டச்சு செய்து தந்த செல்வி பவானிக்கும், திருமதி. சித்ரா பத்மனாபனுக்கும், இதனைப் புத்தக வடிவில் ஆக்கித் தந்த சிவா கிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும், என் உள்ளத்தில் கருவாகி உருவாகிய காட்சியை நான் விளக்கியபோது, அதனைத் தன் உள்ளத்தில் வாங்கிக் கொண்டு, அதற்கு ஓவிய வடிவு கொடுத்த அட்டைப்பட ஓவியர் திரு.ஷ்யாம் அவர் களுக்கும், இதனை ஆர்வமுடன் பதிப்பித்து வெளியிட்ட சாந்தமங்கை பதிப்பகத்தார்க்கும் என் நன்றி.

நான் நான்கு ஆண்டுகளுக்கு முன் முதன்முதலில் இந்த உரை எழுத வேண்டும் என்ற ஆர்வத்தைக் கூறியபோது, ''நன்றாகப் போடலாம்'', எழுதிக் கொண்டு வாருங்கள் என்று கூறி என்னை ஊக்குவித்து, இந்நூல் இன்று வெளிவரும் வரை தொடர்ந்து எனக்கு உதவி செய்து, என்னையும்

ஒரு நூலாசிரியன் ஆக்கிய பெருமை திருமகள் நிலையத்தாரையே சேரும். அவர்களுக்கு என் சிரந்தாழ்ந்த நன்றி உரியதாகும்.

புத்தகப் பிரதிகளைக் கூர்ந்து படித்து அணிந்துரை வழங்கிய முனைவர் பேராசிரியர் திரு.தெ.ஞானசுந்தரம் அவர்களுக்கும், திரு. சிலம்பொலி செல்லப்பன் அவர்களுக்கும், நுட்பமாகப் படித்து நிறை குறைகளை எடுத்து ஆய்வுரை மூலம் கூறி எனக்கு ஊக்கமளித்த நண்பர் திரு.வ.சுப.மா.தொல்காப்பியன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் முனைவர் திரு.ஆறு.அழகப்பன் அவர்களுக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன்.

இத்தகைய ஒரு பெருங்காப்பியத்திற்குத், தனிஒருவனாகவே, ஏனைய உரை நூல்களில் ஆழங்கால்பட்டு, இவ்வுரையினை எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருவருளால் எழுத முயன்றிருக்கிறேன். இதில் குற்றம், குறைகள் இருக்கக் கூடும். இது என் முதல் முயற்சி. குற்றங்களை அன்பு கூர்ந்து சுட்டிக்காட்டி ஊக்குவித்தால், மிக்க நன்றி உடையவனாய் இருப்பேன்.

குற்றம் களைந்து, குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனன்றோ!

3, வாசுகி தெரு, கிருஷ்ணா புரம்,
அம்பத்தூர், சென்னை-600 053.
செல்: 9840868543

அன்பன்
பள்ளத்தூர் பழ.பழநியப்பன்

4. கிட்கிந்தா காண்டம்

கிட்கிந்தா காண்டம் கம்பராமாயணத்துள் நான்காவது பெரும் பகுதி. இது 17 படலங்களில் 1051 பாடல்களைக் கொண்டது. கிட்கிந்தை என்பது ஒரு மலை. அதிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் நடந்த நிகழ்வுகளை விரிவாகக் கூறும் பிரிவு என விரியும். இதில் வரும் கதை உறுப்பினர்கள், இராம இலக்குவருடன், சுக்கிரீவன், அனுமன், வாலி, அங்கதன், தாரை, சம்பாதி, சுயம்பிரபை, துமிரன் ஆகியோர் ஆவர். இக்காண்டத்தில் கதைப் பகுதி மிகவும் குறைவு. இயற்கை வருணனையும், கிளைக் கதைகளும் நிறையக் காணப்படுகின்றன.

இக்காண்டத்துள், இராம இலக்குவர் மதங்கரது ஆசிரமத்திலிருந்து வந்தது முதல், இரலைக் குன்றத்தில் சுக்கீரிவனோடு நட்புக் கொண்டு, அவனது படைகள் சீதையைத் தேடி இலங்கை சென்று, முடிவில் மகேந்திர மலையை அடைதல் வரை விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இராமனுடன் சீதாதேவி இல்லாதிருப்பது இக்காண்டத்தில் முக்கியச் செய்தி. இக்காண்டத்துள் கம்பனின் சந்தம் நிறைந்த பாடல்களும், கருத்துச் செறிவுள்ள சொற்றொடர்களும் மிகுதியாகக் கையாளப்பட்டிருப்பதைக் கண்டு மகிழலாம். படலச் சுருக்கத்தில் எல்லா நிகழ்வுகளும் விரிவாகக் கூறப்பட்டிருப்பதால் காண்டச் சுருக்கத்தில் நிகழ்வுகள் விரிவாகக் கூறப்படவில்லை.

கடவுள் வாழ்த்து

மூன்றுஉரு என, குணம் மும்மையாம் முதல்,
தோன்றுஉரு எவையும் அம்முதலைச் சொல்லுதற்கு
ஏன்றஉரு அமைந்தவும், இடையில் நின்றவும்
ஊன்றுஉரு உணர்வினுக்கு உணர்வும் ஆயினான். (3812)

(தோன்றும் - காணப்படும்; ஏன்ற - ஏற்றனவான; ஊன்று நிலைத்த; முதல் - காரணம் \ பரம்பொருள் \ தலைமை; உரு - உடம்பு \ வடிவம்; சொல்லுதல் - போற்றுதல்) பிரமன், திருமால், சிவபெருமான் என்ற மூன்று வடிவங்களாகவும் சாத்விகம், ராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களாகவும் விளங்கும் மூலமுதல்வனாகிய பரம்பொருள், தோற்றுவித்த அசையும், அசையாப் பொருட்கள் அனைத்தும் அவனையே மூலகாரணமாகக் கொண்டன அவனே புகழ்தற்குரிய வடிவம் கொண்டுள்ளவனும், அதனை இடையில் தாங்கி நிற்பவனும் நன்கு நிலைக்கச் செய்பவனுமாவான். அவனே உலக உயிர்களின் உணர்வுகளுக்கு எல்லாம், உணர்வு போன்றவன் ஆவான்.

காப்பியத் தொடக்கத்தில் மட்டுமல்லாது, பெரும்பிரிவுகளாகிய காண்டங்களின் தொடக்கத்திலும் கடவுள் வாழ்த்துப் பாடுதல் முன்னோர் வழக்கு. எனவே கம்பனும் இக்காண்டத்தின் முதலில் கடவுள் வாழ்த்துப் பாடினான் என்க. "மூன்று அவன் குணங்கள்; செய்கை மூன்று அவன் உருவம் மூன்று" என்று பின்னர் பிரகலாதன் வாயிலாகக் கம்பரே கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. "மூவகை உலகுமாய், குணங்கள் மூன்றுமாய்" என்று பின்னர் கூறுவதையும் ஒப்பிடுக. "தானும், சிவனும், பிரமனுமாகி, பணைத்த தனி முதல்" என்பது திருவாய்மொழி;

குணங்களை நிறம் என்றும் கூறுவர். என்றால் மூன்று நிறங்களாவன வெண்மை, கருமை, செம்மை என்பதாம். வெண்மை புகழையும், கருமை மேனி நிறத்தையும், செம்மை கோபத்தையும் குறிக்கும். பிரமன் வெண்மை நிறத்தவன், திருமால் கருமை நிறத்தவன், சிவன் செம்மை நிறத்தவன் என்று கூறலும் பொருந்தும். இறைவன் தன்னை உணரவல்ல அடியார்க்கு உணரப்படும் பொருள் ஆவான் என்பது இறுதி அடியின் கருத்து. "என் ஊனில், உயிரில் உணர்வினில் நிற்போன்" என்பது திருவாய்மொழி. இறைவனின் திருஉருவை, அருவம், உருவம், அருவுருவம் என்று மூன்று வகையாகவும் கூறுதல் இங்கு நோக்கத்தக்கது.

1. பம்பைப்படலம் (42 பாடல்கள்)

பம்பை என்பது மனிதர்கள் ஆக்காது, இயற்கையாய் அமைந்த ஒரு பொய்கை; ஒரு தெளிந்த நீர்நிலை, இது இரலைக் குன்றின் கீழ் அமைந்துள்ளது. மதங்க ஆசிரமத்திலிருந்து இராம இலக்குவர் இப்பொய்கை வந்தடைந்ததும், அங்குள்ள காட்சிகளைக் கண்டு இராமபிரான் வருந்தியதும், இலக்குவன் அவனைத் தேற்றும் செய்திகளையும் கூறும் படலம் என விரியும். இது 42 பாடல்களைக் கொண்டது. இது சில சுவடிகளில் "பம்பை வாவிப் படலம்" எனவும் "பம்பா நதிப் படலம்" எனவும் "பம்பைப் பொய்கைப் படலம்" எனவும் குறிக்கப் பெற்றிருக்கிறது.

இப்படலத்துள், பம்பைப் பொய்கையின் தோற்றம், பொய்கையில் நிகழும் செயல்கள், அக்காட்சிகளைக் கண்டதும் சீதையின் நினைவு வரவே, இராமன் புலம்புதல், இராமன் நீராடி ஒரு சோலையில் தங்குதல்; சந்திரன் தோன்றுதல்; எல்லோரும் எல்லாமும் தூங்க, இராமன் மட்டும் உறங்காது இரவைக் கழித்தல்; பொழுது புலர்ந்ததும் சீதையைத் தேடி இருவரும் மேலும் பயணம் மேற்கொள்ளுதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. பம்பைப் பொய்கையின் தோற்றம் (21 பாடல்கள்)

தேன்படி மலரது; செங்கண், வெம்கைம்மாத்
தான் படிகின்றது; தெளிவு சான்றது;

மீன்படி மேகமும் படிந்து, விங்கும் நீர்
வான்படிந்து, உலகிடைக் கிடந்த மாண்பது. (3813)

(படிதல் - பொருந்துதல் \ முழுகித் திளைத்தல் \ தாங்குதல்; மா - விலங்கு \ யானைகள்; சால - மிக்க; சான்றது - மிக்கது; மீன் - நட்சத்திரங்கள்; உலகு - நிலம்; விங்குதல் - விரிதல்; நீர் - நீர்மை \ தன்மை \ இயல்பு; தேன் - வண்டு களுமாம்; வெம் - அச்சத்தைத் தருவன; கைம்மா - யானை)

அப்பொய்கை, வண்டுகள் தங்குகின்ற மலர்களை உடையது; சிவந்த கண்களும், அச்சமூட்டும் கைகளும் உடைய யானைகள் மூழ்கித் திளைப்பது; தெளிவு மிக்கது. நட்சத்திரங்கள் தங்கி இருக்கிற மேகத்துடன் கூட, விரியும் இயல்புடைய ஆகாயமும் இந்நிலத்தில் வந்து படிந்து இருப்பது போன்ற சிறப்புடையது.

அந்தப் பம்பைப் பொய்கை சோலைகள் நிறைந்தது, அப்பொய்கை, யானைகள் நீராடினாலும், மாசற்றதாகத் தெளிவாகவே விளங்கும். அத்தகைய ஆழமுடையது. ஆகாயத்திலுள்ள மேகமே நிலத்தில் வந்து படிந்திருப்பது போன்ற தோற்றம் கொண்டது என்பதாம். கைம்மா என்பது யானையைக் குறிக்கும். யானை நீரில் மூழ்கித் திளைக்கும் போது கண்கள் சிவந்து போதலும், துதிக்கைகள், வெப்பமுறுதலும் இயல்பு. அவைகள் நீரில் மூழ்கிக் கலக்கினாலும், கலங்காது தெளிவுடைய நீர் நிலை என்று அதன் ஆழம் சிறப்பிக்கப்பட்டது. பொய்கை விரிந்து, பரந்து, தெளிந்தது என்பதால் அப்பொய்கைக்கு வானமும், அங்கே மலர்ந்திருக்கின்ற மலர்களுக்கு விண்ணிலே பூத்திருக்கின்ற நட்சத்திரங்களும், அப்பொய்கையில் நீராடித் திளைக்கும் கரிய யானைகளுக்குக் கரிய மேகமும் உவமைகள்.

2. ஈர்ந்த நுண் பளிங்கு எனத் தெளிந்த ஈர்ம்புனல்,
பேர்ந்து, ஒளிர் நவமணி படர்ந்த பித்திகைச்
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்,
ஓர்ந்து உணர்வில்லவர் உள்ளம் ஒப்பது. (3814)

(ஈர்தல் - அறுத்தல்; நுண் - நுண்ணிய \ மெல்லிய; ஈர்ம்புனல் - குளிர்ந்த நீர்; பேர்ந்து - இடைவிட்டு; பித்திகை - சுவர் \ கரை \ படித்துறை; ஓர்தல் - ஆராய்தல்; உணர்வு - அறிவு; பளிங்கு - படிக்கல் \ ஸ்படிகம்)

ஆயுதத்தால் அறுத்துச் செம்மையாக்கப்பட்ட மெல்லிய பளிங்குக் கற்களைப் போலத் தெளிவாகவும், குளிர்ச்சி பொருந்தியதாகவும் விளங்கும் அப்பொய்கையின் நீர், அலைமோதுவதால், விட்டு விட்டுப் பிரகாசிக்கும் ஒன்பது வகை இரத்தினங்களும் பதிக்கப் பெற்ற அதன் மதில் சுவரின் மீது போய்ச் சேரும் பொழுதெல்லாம், அந்தந்த இரத்தினக்கற்களின் நிறத்தைப் பெற்று விடுகிறது. இச்செய்கையை, எவ்வளவு படித்திருந்தும், ஆராய்ந்து தெளிகின்ற அறிவில்லாதவர்களின் மாறுபட்ட உள்ளத்திற்கு உவமைப்படுத்துகிறான் கவிஞன்.

பளிங்கு என்பது தனக்கென்று ஒரு தனி நிறம் பெற்ற பொருளல்ல, அதனைச் சார்ந்த பொருள், என்ன நிறம் கொண்டிருக்கிறதோ அதனையே தானும் சார்ந்து பிரதிபலிக்கும். இது இயற்கை. "அடுத்தது காட்டும் பளிங்கு" என்பது குறள் 706. இங்கே இப்பொய்கை நவஇரத்தினங்களாலான படித்துறைகளையும், மதில்கரைகளையும் உடையது. ஒவ்வொரு முறை இக்குளிர்ந்த நீர் அதன் கரையைச் சேரும் பொழுதெல்லாம் அவ்வவ்விடங்களிலுள்ள இரத்தினக் கற்களின் நிறத்தைப் பிரதிபலிக்கிறது என்பதாம். எவ்வளவு அறிவு பெற்றவராயிருந்தாலும், தனக்கென ஒரு கொள்கையில்லாது, மற்றவர் கூறுவதையும் நல்லது இது, தீது இது என ஆராய்ந்து உணர்ந்து, கொள்ளும் பகுத்தறிவில்லாத கீழ் மக்களின் உள்ளத்தைப் போன்றிருந்தது அந்நீர் என்பதாம். "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பது மற்றொரு குறள் (423). ஈர்தல் என்பது ஒரு கருவியைக் கொண்டு செம்மையாக அறுத்தலைக் குறிக்கும். பளிங்குக்கு அப்பொய்கை யின் தெளிவான நீர் உவமை. பித்திகை என்ற சொல் பித்திகா என்னும் வடசொல்லின் திரிபு. தானே தேர்ந்து தெளியும் பகுத்தறிவில்லாதவன் மற்றவர் சொல்லுவனவற்றைக் கேட்டு, அடிக்கடி தன் கொள்கைகளை மாற்றிக் கொள்வது போல, அந்தத் தெளிந்த தண்ணீரும் அங்கங்கு இருக்கும் நவ இரத்தினங்களின் நிறத்தைத் தன் பால் மேற்கொண்டது என்பதாம். நவமணிகள், கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் என்பன.

3. குவால் மணித்தடம் தொறும், பவளக்கோல் இவர்
கவான் அரசன்னமும் பெடையும் காண்டலின்,
தவாநெடு வானகம் தயங்கும் மீனொடும்
உவாமதி, உலப்பில உதித்தது ஒப்பது. (3815)

(குவால் - கூட்டம்; கோல் - காம்பு; இவர்தல் - ஒத்திருத்தல்; கவான் - கால் \ தொடை; தவா - கெடாத \ அறியாத; தயங்கும் - விளங்கும்; மீன் - நட்சத்திரங்கள்; உலப்புஇல - அளவற்ற; உவாமதி - நிறைமதி \ பூரண சந்திரன்; தடம் - இடம்)

கூட்டமாக இருக்கின்ற நவரத்தினங்கள் பதிந்து இருக்கும் இடத்திலெல்லாம், பவளத்தின் காம்பு போன்ற சிவந்த கால்களை உடைய அரசு அன்னமும், அதன் பெண் அன்னமும் அலைந்து திரிவதைக் காண்பது, என்றும் அழியாத நீண்ட ஆகாயத்தில் விளங்குகின்ற பூரண சந்திரன் நட்சத்திரங்களோடு, கணக்கற்றவையாகத் தோன்றியதை ஒத்திருந்தது.

அன்னங்களின் கால்கள் சிவந்திருப்பதால் அவற்றை "பவளக் கோல் இவர் கவான்" என்றார். அன்னங்களில் சிறந்தது அரச அன்னம். நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகியவை ஊழிக்காலத்தில் அழியும். ஆகாயம் மட்டும் அழியாமல் இருப்பதால், அது "தவா நெடுவானகம்" எனப்பட்டது. ஆகாயத்தில் உள்ள 27 நட்சத்திரங்களும் தக்கனின் புதல்வியர் என்பதும் இவர்கள் சந்திரனின்

மனைவியர் என்பதும் ஒரு புராணக் குறிப்பு. உவா என்ற சொல் "பூரணம்" என்ற பொருளில் வரும். இங்கே உவா மதி என்பது பூரண சந்திரனை - முழு நிலவை, பௌர்ணமியைக் குறிக்கும். இதே சொல் அமாவாசையையும் குறிக்கும் என்க. ஆகாயம் பொய்கைக்கும், அங்கிருக்கும் நட்சத்திரங்கள் அன்னப்பறவை களுக்கும் உவமைகள். அன்னங்கள் ஒன்றுக்கு மேற்பட்டுக் காணப்படுவதால், சந்திரனும் ஒன்றுக்கு மேற்பட்ட தாக - "உலப்புஇல உவாமதி" எனச் சொல்ல வேண்டுவதாயிற்று என்க.

4. ஓத நீர் உலகமும், உயிர்கள் யாவையும்,
வேத பாரகரையும் விதிக்க வேட்ட நாள்,
சீதம் விங்கு உவரியைச் செருக்குமாறு, ஒரு
காதி காதலன் தரு கடலின் அன்னது. (3816)

(ஒரு - ஒப்பற்ற; காதி - விசுவாமித்திரனின் தந்தை; காதி காதலன் - விசுவாமித்திரன்; சீதம் - குளிர்ச்சி; உவரி - கடல்; ஓதம் - குளிர்ச்சி; வேத பாரகர் - வேதங்களில் கரை கண்டவர்கள்; விதிக்க - படைக்க \ தோற்றுவிக்க; வேட்ட - விரும்பிய; நாள் - காலம் \ பொழுது; செருத்தல் - வெல்லுதல்; தரு - தோற்றுவித்த \ படைத்த; பாரம் - கரை)

ஒப்பற்ற காதி என்னும் அரசனது புதல்வனாகிய விசுவாமித்திர முனிவன், திரிசங்கு என்னும் சண்டாளனைக் சுவர்க்கத்திற்கு அனுப்புவதற்காக, குளிர்ந்த நீரையுடைய கடலால் சூழப்பெற்ற இவ்வுலகத்தையும், அவற்றில் வாழ்வதற்காக உயிரினங்கள் எல்லாவற்றையும், வேத நூல்களை ஐயம் திரிபறக் கற்று அதில் கரைகண்டவர்களையும், அதைப் பிறருக்கு ஓதுவிக்கும் ஆற்றல் பெற்றவர்களையும், தன் தவவலிமையால் வேறாகப் படைத்தற்கு முற்பட்ட நாளில், குளிர்ச்சி பொருந்திய உப்புக் கடலை வெல்லுமாறு, அவர் படைத்த நன்னீர்க் கடலை ஒத்திருந்தது அந்தப் பொய்கை.

பம்பைப் பொய்கைக்கு, விசுவாமித்திரர் படைக்கத் தொடங்கிய நன்னீர்ப் பொய்கை உவமை. விசுவாமித்திரர் வசிஷ்டரோடு மாறுபட்டு, திரிசங்கு என்னும் சண்டாளனுக்கு அதே உடலோடு அவனைச் சுவர்க்கத்திற்கு அனுப்புவதற்காகத் தன் தவவலிமையால் தனியாக ஒரு உலகம் படைக்கத் தொடங்கினார் என்பது முன்பே பாலகாண்டத்தில் கூறப்பட்ட செய்தி. அதனை இங்கு நினைவு கூர்க. பிரமனால் படைக்கப்பட்ட கடல், உவர்க்கடல் என்பதும், அதனை வெல்லுமாறு விசுவாமித்திரரால் உருவாக்கப்பட்ட கடல், நன்னீர்க் கடல் என்பதும் இங்கு அறியப்பட வேண்டுவது.

5. எற்படர் நாகர்தம் இருக்கை ஈதுஎனக்
கிற்பது ஓர் காட்சியது எனினும், கீழ்உறக்
கற்பகம் அனைய அக்கவிஞர் நாட்டிய
சொற்பொருளாம் எனத் தோன்றல் சான்றது. (3817)

(எல் - ஒளி; கிற்பது - சுட்டிக் காட்டுவது; காட்சி - தோற்றம்; நாட்டிய - நிலை நிறுத்திய; கீழ் - அடிப்பரப்பு)

ஒளி பரந்து கிடக்கும் நாகர்களின் இருப்பிடமான பாதாளம் இதுதான் என்று சுட்டிக் காட்டும் ஒரு தோற்றத்தை உடையதுதான் அந்தப் பொய்கை. என்றாலும் வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும் தேவலோகத்துக் கற்பக மரம் போலவும், அந்தக் கவிஞர்கள் நிலைநிறுத்திய சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்த கவிதை போலவும், பம்பையின் அடிப்பகுதி தெளிவும், அதன் நீர் மிக்க சுவையும் உடையது என்பதாம்.

கற்பகமரம் வேண்டுவார்க்கு வேண்டுவன நல்குவது. அதுபோலக் கற்றறிந்த கவிஞர்கள் இயற்றிய கவிதைகளும் அதனைக் கற்போர் விரும்புகின்ற சொற்சுவையும், பொருட்சுவையும் அளிக்கவல்லன என்பதாம். பம்பையின் அடிப்பரப்பும் கலங்கல் இல்லாது தெளிவானது என்பதாம். நாகலோகம் தான் பாதாளம் எனப்பட்டது. இரத்தினங்களின் மிகுதியால் அது எப்போதும் ஒளி விசிக் கொண்டிருக்கும் என்பதை “எற்படர் நாகர் தம் இருக்கை” என்றார். அப்பொய்கை நாகலோகம் வரை ஆழ்ந்திருப்பது என்பதோடு கவிஞர்கள் கவிதை போலத் தூய்மையும், தெளிவும் இனிமையும் உடையது என்பது கருத்து. கவிஞர்கள் இனிய ஆழ்ந்த சொற்களுக்குக் கற்பகத்தை உவமை கூறுவதை மற்றோர் இடத்திலும் காணலாம். “குன்றாத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போல், மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்” என்பது இறையனார் அருளிய திருவள்ளுவமாலை. கம்பனும் முன்பு கோதாவரியைப் பற்றிக் கூறும் இடத்தில் “சான்றோர் கவி எனக் கிடந்த கோதாவரி” என்றதும் இங்கு நினைவு கூர்க. கவிஞர்கள் கவிதையிலே உள்ள தெளிவும் கருத்திலே உள்ள ஆழமும் உடையது போல விளங்கியது பம்பைப் பொய்கை என்பதாம்.

6. **களம் நவில் அன்னமே முதல, கண்அகல்**
தள மலர்ப் புள்ஒலி தழங்க, இன்னதோர்
கிளவி என்று அறிவரும் கிளர்ச்சித்து; ஆதலின்
வளநகர்க் கூலமே போலும் மாண்பது. **(3818)**

கண்ணகல் - இடம் அகன்ற; தளம் - இதழ்கள்; தழங்குதல் - எழுதல்; கிளவி - பேச்சு \ மொழி; அறிவரும் - அறிதற்கரிய; கிளர்ச்சி - மிகுதி; கூலம் - கடைத் தெரு; மாண்பு - சிறப்பு; களம் - கண்டம்; நவில்தல் - ஒலித்தல்; புள் - பறவை)

கண்டத்திலிருந்து எழும் இனிய ஓசையையுடைய அன்னப்பறவை முதலான, இடம் அகன்ற இதழ்களையுடைய தாமரை மலரில் வசிக்கும் ஏனைய பறவைகள் எல்லாம் எழுப்பும் ஒலி, அந்தப் பொய்கையில் மிகுந்து விளங்கும், இவை இன்னவற்றைத் தான் பேசுகின்றன என்று அறிய இயலாத ஓசை மிகுந்திருக்கும். எனவே, செல்வச் செழிப்புடைய ஒரு நகரத்தின் கடைத்தெருவை ஒத்த சிறப்பை உடையது இந்தப் பொய்கை.

பொய்கைக்கு நகரத்தின் கடைத் தெருவும், அங்கு எழுகின்ற மக்களின் இரைச்சலும் உவமைகள். இதுபோன்ற ஒப்புமை சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் காணக் கிடைக்கிறது.

7. அரிமலர்ப் பங்கயத்து அன்னம், எங்கணும்,
"புரிகுழல் புக்கிடம் புகல்கிலாத யாம்,
திருமுகம் நோக்கலம், இறந்து தீர்தும்" என்று
எரிபுகுவன எனத் தோன்றும் ஈட்டது. (3819)

(அரி - வண்டுகள்; புரி - சுருண்ட \ கடைகுழன்ற; தீர்தல் - நீங்குதல்; எரி - தீ \ நெருப்பு; ஈடு - தன்மை; பங்கயம் - தாமரை \ பங்கஜம்)

வண்டுகள் ரீங்காரமிடும் தாமரை மலரின் எல்லாப் பக்கங்களிலும் வாழும் அன்னப்பறவைகள், "சுருண்ட, கட்டிமுடிக்கப்பட்ட கூந்தலையுடைய சீதாதேவி, எங்கே சென்றிருக்கிறாள் என்று கண்டறிந்து வந்து, இராமபிரானிடம் சொல்ல இயலாத நாங்கள், அவனது அழகிய முகத்தைப் பார்க்கவே வெட்கப்படுகிறோம். எனவே இப்பொழுது இறந்து படுவோம்" என்று தீர்மானம் செய்து, நெருப்பிற்குள் புகுவன போலத் தோன்றுகின்ற தன்மையையுடையது அப்பொய்கை.

அன்னப் புள்ளும், சீதாதேவியாகிய இலக்குமியும் செந்தாமரை மலரில் வாழ்பவர்கள். எனவே தங்களுடன் உறையும் சீதாதேவியை இப்பொழுது காணவில்லை. எனவே அவளைத் தேடிக் கண்டுபிடித்து அவள் கணவனிடம் ஒப்படைக்கும் பணி அந்த அன்னப்பறவைகளைச் சார்ந்தது. அவளைத் தேடிக் கண்டு பிடித்து அவள் இன்ன இடத்தில்தான் இருக்கிறாள் என்று சொல்ல முடியாத - ஆற்றல் இல்லாத அவைகள், இராமபிரானது திருமுகத்தைக் காண்பதற்கே வெட்கப்பட்டுக் கொண்டு வருந்தி, அப்பொய்கையில் நெருப்பில் புகுவது என்று தீர்மானித்தன. செந்தாமரை மலரில் அன்னம் புகுவது செந்தீக்குள் அவை இறப்பதற்காகப் புகுவது போலத் தோன்றுகிறது என்று கவிஞன் தன் எண்ணத்தை அவற்றின்மேல் ஏற்றிப் பாடுவது ஒரு நயம். பங்கயம் என்பது பங்கஜம் என்ற வடசொல்லின் திரிபு. சேற்றில் முளைப்பது என்பது பொருள். மலர்ந்த சிவந்த தாமரை மலருக்கு, எரியும் நெருப்பு உவமை. "சேறுஆர் சுனைத் தாமரை, செந்தீ மலரும்" என்பது திருவாய்மொழி. "புண்டரீகம் தீ எரிவது போல விரிய" என்பது நளவெண்பா.

8. காசுஅடை விளங்கிய காட்சித்து ஆயினும்,
மாசுஅடை பேதைமை இடை மயக்கலால்,
ஆசுஅடை நல்லுணர்வு அனையதாம் எனப்
பாசுஅடை வயின்தொறும் பரந்த பண்பது. (3820)

(அடை - அடியில்; காட்சி - தோற்றம்; மாசு - குற்றம்; பேதைமை - அவிச்சை \ அஞ்ஞானம் \ அறியாமை; ஆசுஅடை - குற்றமற்ற; பாசுஅடை - பசிய இலை \ பாசி; வயின்தோறும் - இடந்தோறும்; பண்பு - தன்மை; காசு - இரத்தினங்கள்; மயக்கல் - பேதிக்கச் செய்தல்; நல்லுணர்வு - மெய்யறிவு)

அந்தப் பொய்கையின் நீர், அதன் அடியில் கிடக்கும் இரத்தினங்கள் கூட நன்றாகத் தெரியும்படி தூய்மையான, தெளிவு பெற்றதான தோற்றத்தைத் தருவது என்றாலும் அதன் இடையே சில இடங்களில் பாசி போல படிந்திருக்கும்

தாமரை முதலிய இலைகள் அவ்விரத்தினங்கள்மேல் பரந்து மறைக்கின்றன. இது எப்படி இருக்கிறது? நல்ல மெய்யுணர்வுடையவர்கள் சில சமயங்களில் மும்மலங்களுக்கும் உட்பட்டு அறியாமையில் சென்று சேரும் நல்லுணர்வு அற்றவர்களின் உள்ளத்தைப் போன்ற தன்மையுடையதாக இருக்கின்றது.

பொய்கையின் தெளிவான தன்மைக்கு மெய்யுணர்வுடைய நல்லறிவாளா களின் உள்ளம் உவமை. பாசியும் தாமரைக் கொடியும்அவ்விரத்தினங்களை மறைப்பது, மெய்யறிவுடையவர்கள் சில சமயங்களில் அஞ்ஞானத்திற்கு ஆட்பட்டுத் தடுமாறி நல்லுணர்வை மறந்து போதல் உவமை. பொருள் புரிந்து கொள்ளச் சற்றுக் கடுமையான பாடல். “பாசி களைந்து நன்னீர் காணும் நல்லோர், சொல் உணரின், ஞானம் வந்து தோன்றும் பராபரமே” என்பது தாயுமானவரின் பராபரக்கண்ணி. பேதைமை என்பது உண்மை இல்லாததை உண்மை எனக்கருதி மயங்கும் நிலையேயாகும். மெய்யறிவு என்பது விடுபேறு பற்றி ஐயம் திரிபுஅறத் தெளியும் அறிவாகும்.

9. “களிப்படா மனத்தவன் காணின், கற்பு எனும்
கிளிப்படா மொழியவள் விழியின்கேள் எனத்
துளிப்படா நயனங்கள் துளிப்பச் சோரும்” என்று
ஒளிப்படாது ஆயிடை ஒளிக்கும் மீனது. (3821)

(அடா - தோன்றாத; படா - அமையாத; கேள் - ஒப்பு; சோர்தல் - தளர்தல்; ஒளிப்படாது - தோன்றாமல்; ஆயிடை - அங்கு; ஒளித்தல் - மறைதல்; நயனம் - கண்; துளி - கண்ணீர்)

சீதையின் பிரிவால் இன்பமே தோன்றாது, துன்பம் உற்றிருக்கின்ற மனத்தை உடையவனான இராமபிரான் தங்களைக் கண்டால், கற்பு என்னும் உருக்கொண்டவளும், கிளியைக் காட்டிலும் மேம்பட்ட இனிமையான சொற்களையுடையவளும், தங்களைப் போன்ற பிறழும் விழிகளுக்கு ஒப்பானவளுமான சீதையின் நினைவு வயப்பட்டு, இதுகாறும் கண்ணீர்த்துளிகளையே கண்டறியாத அவனது கண்கள், இப்போது கண்ணீர் சொரிந்து சோர்வடையும் என்று கருதி, தாங்கள் தண்ணீருக்கு மேலே வந்து தோற்றம் தராமல், அப்பொய்கைக்குள்ளே, தண்ணீருக்குள்ளேயே புகுந்து தங்களை ஒளித்துக் கொள்ளும் இயல்புடைய மீன்களை உடையது அந்தப் பொய்கை.

அந்தப் பொய்கையில் உயிர் வாழும் மீன்கள் தண்ணீரின் மேற்பரப்புக்கு வாராது, தங்களைத் தண்ணீருக்குள்ளேயே மறைத்துக் கொள்ளுமாம். காரணம் என்ன தெரியுமா? தங்களது கண்களைப் பார்த்தால், இராமபிரானுக்குச் சீதாதேவியின் கண்கள் நினைவுக்கு வந்து அழுது விடுவானாம். அத்தகைய துயரத்தை அவனுக்குத் தரக்கூடாது என்று கருதித் தங்களைத் தாங்களே மறைத்துக் கொள்ளும் இயல்புடைய மீன்கள் கொண்டது பம்பைப் பொய்கை என்பது இப்பாடலின் திரண்ட கருத்து.

சீதையைப் பிரிந்திருத்தலால் "களிப்படா மனத்தவன்", என்றார் பொதுவாகப் பெண்களின் இனிய சொல்லுக்குக் கிளியின் சொல்லை உவமை கூறுவது மரபு. ஆனால் சீதாதேவியின் சொல் இனிமை கிளியின் சொல்லினிமையை விஞ்சியதாம். எனவே "கிளிப்படா மொழியவள்" என்றார். இதுகாறும் துன்பம் என்பதையே அறியாத உள்ளமும், கண்ணீர் என்பதையே அறியாத கண்களும் உடையவன் இராமன். இப்போது இந்த மீன்களைக் கண்டால், இவற்றின் கண்கள் சீதையின் கண்களுக்கு ஒப்பாகுமே என்று நினைத்துத் தளர்ந்து கண்ணீர் விடுவான். எனவே "துளிப்படா நயனங்கள் துளிப்பச் சோரும்" என்றார் "ஒளிப்படாது" என்ற சொல் வெளியில் தோற்றம் தராது என்ற பொருளைக் குறிக்கும். இயல்பாகவே தண்ணீருக்குள் சென்று மறையும் இயல்புடைய மீன்களின் செய்கையை, இராமன் வருந்துவான் என்று கருதி அவனைத் தவிர்ப்பதற்காகத் தான் மறைத்துக் கொண்டு உள்ளே புகுகின்றன என்று கூறியது ஒரு நயம்.

**10. கழைபடு முத்தமும், கலுழிக் கார்மத
மழைபடு தரளமும், மணியும், வாரி, நேர்
இழை படர்ந்தனைய நீர்அருவி எய்தலால்
குழைபடு முகத்தியர் கோலம் ஒப்பது. (3822)**

(கழை - மூங்கில்; படு - தோன்றிய; கார் - கரிய; கலுழி - வெள்ளப் பெருக்கு \ கலங்கிய நீருமாம்; தரளம் - முத்து; நேர் - நுண்ணிய; இழை - நூல்; எய்தல் - கலத்தல்; குழை - காதணி \ குண்டலம்; கோலம் - ஒப்பனை \ அழகு; மழை - மேகம் \ கரிய யானை; இழை - ஆபரணங்கள்)

மூங்கிலிலிருந்து தோன்றும் முத்துக்களையும், கலங்கிய கரிய மதநீரைப் பெருக்குகின்ற மேகம் போன்ற கரிய யானையின் தந்தத்திலிருந்து தோன்றும் முத்துக்களையும் மற்றும் நவரத்தினங்களையும் வாரியடித்துக் கொண்டு, சிறந்த ஆபரணங்களையணிந்து பரவி வருவது போல வரும் அருவி நீர்; அந்தப் பொய்கையை அடைவதால், அப்பொய்கை, காதணிகள் அணிந்து அலங்காரம் செய்து கொண்டுள்ள முகத்தையுடைய மகளிரைப் போன்று இருக்கிறது.

யானையின் தந்தமும், மூங்கிலும் முத்துப் பிறக்கும் இடங்கள் என்பது அறிக.

**11. பொங்கு வெம்கடகரி பொதுவின் ஆடலின்,
கங்குலின் எதிர்பொரு கலவிப் பூசலின்,
அங்கம் நொந்து அலசிய விலையின், ஆய்வளை
மங்கையர் வடிவு என, வருந்தும் மெய்யது. (3823)**

(பொங்கு - மிக்க; வெம் - கொடிய \ வெப்பமுள்ள; கடம் - மதம்; ஆடல் - நீரில் மூழ்கித் திளைத்தல்; கங்குல் - இரவு; பொருதல் - போரிடுதல்; பூசல் - போர்; அலசுதல் - வருந்துதல்; ஆய் - சிறந்த; விலையின் மங்கையர் - விலை மாதர் \ பொதுப் பெண்டிர்; மெய் - உடல்; கலவி - புணர்ச்சி; வடிவு - உருவம்)

வெப்பமுள்ள கொடிய மதப்பெருக்குப் பொங்கி வழிகின்ற யானைகள், பொதுவாக அப்பொய்கையில் மூழ்கித் திளைத்தலால் கலங்கிப்

போயிருக்கின்ற அப்பொய்கை, இரவு நேரத்தில், தன்னை அடைந்த ஆடவர்களுடன் புணர்ச்சிப் போரில் ஈடுபட்டு உடல் உறுப்புக்களெல்லாம் நொந்து போய் வருந்திய, தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த வளையல்களை அணிந்த விலை மாதரின் வருந்துகின்ற உடலைப் போன்ற வடிவமுடைய தாயிற்று.

மத யானைகள் புகுந்து கலக்கியதால் கலங்கிய நிலையில் இருந்த பொய்கைக்கு, இரவில் ஆடவருடன் புணர்ச்சிப் போரில் ஈடுபட்டுக் கலங்கிய உடலுடன் இருக்கும் விலை மகளிர் உவமை. யானை ஆடவர்களுக்கும், பொய்கை விலை மகளிர்க்கும் உவமை.

12. விண்தொடர் நெடுவரைத் தேனும், வேழத்தின்
வண்டு உளர் நறுமத மழையும் மண்டலால்,
உண்டவர் பெருங்களி உறலின், ஓதியர்
தொண்டைஅம் கனி இதழ், தோன்றல் சான்றது. (3824)

(விண் தொடர் - வானளாவிய; வரை - மலை; உளர்தல் - குடைதல்; வேழம் - யானை; மண்டுதல் - மிக்கு நிறைதல்; ஓதி - கூந்தல்; அம் - அழகிய; தொண்டைக் கனி - கொவ்வைப் பழம்; இதழ் - அதரம்; சான்றது - மேம்பட்டது)

வானளாவிய நீண்ட மலைகளிலிருந்து பெருகிவரும் தேனும், வண்டுகள் குடைகின்றதும், நறுமணம் மிக்கதுமான யானைகளின் மத நீர்ப் பெருக்கும், அப்பொய்கையில் நிறைவதால், அந்நீரைப் பருகுபவர்கள் பெரு மகிழ்ச்சி அடைகின்றனர். எனவே அது அழகிய கூந்தலையுடைய, கொவ்வைக் கனி போன்ற அழகிய சிவந்த உதடுகளில் ஊறும் அதரபானத்தைப் போன்று சிறந்து தோன்றுகிறது. மகளிர் இதழுக்குத் தொண்டைக்கனி உவமை. மகளிர் இதழ்களில் ஊறும் அதரபானத்திற்கு அப்பொய்கை நீர் உவமை.

13. ஆரியம் முதலிய பதினெண் பாடையில்
பூரியர் ஒருவழிப் புகுந்ததாம் என,
ஓர்வுஇல கிளவிகள் ஒன்றோடு ஒப்புஇல,
சோர்வுஇல, விளம்பு புள் துவன்றுகின்றது. (3825)

(பாடை - பாஷை \ மொழி; பூரியர் - புல்லறிவாளர் \ புலமையற்றோர்; ஓர்தல் - ஆராய்ந்து அறிதல்; ஒப்பு - தொடர்பு; கிளவி - ஒலி \ சொல் \ பேச்சு; புள் - பறவைகள்; துவன்றது - கலந்து நிறைந்தது; ஆரியம் - வடமொழி \ சமஸ்கிருதம்)

வடமொழி முதலிய பதினெட்டு மொழிகளில் போதிய புலமை இல்லாத புல்லறிவாளர்கள் ஓரிடத்தில் ஒருங்கே சேர்ந்து ஆரவாரிப்பது போல், ஆராய்ந்தறிய இயலாததும் ஒன்றோடு ஒன்று தொடர்பு இல்லாததுமான ஒலிகளை எழுப்பும் பறவைகள், தளர்ச்சியில்லாது கலந்து நிறைந்து விளங்குவது அப்பொய்கை.

அப்பொய்கையில் பலவகைப்பட்ட பறவைகள் ஒருங்கு கூடித் தமக்குள் ஒன்றும் புரியாத மொழியில் ஓய்வில்லாது ஒலி எழுப்பிக் கூச்சலிடுகின்றன. இதற்குப் பதினெட்டு மொழிகளிலும் வல்லமையற்ற புல்லறிவாளர்களும் வெவ்வேறு நாட்டினரும் வெவ்வேறு மொழி பேசுபவரும் ஓரிடத்தில் ஒன்று கூடி நின்று எவர்க்கும் புரியாத வகையில் ஆரவாரிப்பதை உவமை கூறுகிறான் கவிஞன்.

பதினெட்டு மொழிகள். ஆரியம், சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், கருங்குசலம் என்பவையாம். பூரியர் என்ற சொல்லுக்குத் தம்மைப் பெரியவராய்க் கருதிக் கொள்ளும் அற்பர் என்பது சரியான பொருள்.

14. தான்உயிர் உறத் தனி தழுவும் பேடையை
ஊன்உயிர் பிரிந்தெனப் பிரிந்த ஓதிமம்
வான் அரமகளிர்தம் வயங்கு நூபுரத்
தேன்உகு மழலையைச் செவியின் ஓர்ப்பது. (3826)

(உற - ஒன்றுபடுமாறு; தனி - சிறப்பாக் தழுவுதல் - அணைத்தல்; ஊன் - உடல்; ஓதிமம் - ஆண்; அன்னம் \ சேவல்; வான் - தேவருலகு; அரமகளிர் - அரம்பையர் \ தேவமாதர்; வயங்கு - விளங்குகின்ற; நூபுரம் - சிலம்பு; தேன் - இனிமை; மழலை - மெல்லிய ஓசை; ஓர்ப்பது - கேட்பது; உகுதல் - சிந்துதல்)

தன்னுடைய உயிர் ஒன்றுபடுமாறு சிறப்பாகத் தழுவிக் கொள்ளும் தன்னுடைய பெண் அன்னத்தை, உடலை விட்டு உயிர் பிரிந்து சென்றாற் போலப் பிரிந்து வருந்துகிற ஆண் அன்னம், அந்தப் பொய்கையில் நீராட வந்திருக்கும் தேவ மாதர்களின் விளக்கம் பெறுகின்ற சிலம்பின் ஓசையைக் கேட்டு, தன் பெடையின் தேன் போன்ற, கிளியையும் விஞ்சுகின்ற மெல்லிய ஓசை உடைய குரல் என்று கருதி மயங்கி, செவியினால் கூர்ந்து கேட்பதை ஒத்திருந்தது.

அன்பு காட்டுவதில் சிறந்தவை அன்னப் பறைவைகள். எனவே "உயிர் உறத் தனி தழுவும் பேடை" என்றும், "ஊன் உயிர் பிரிந்த எனப் பிரிந்த ஓதிமம்", என்றும் அடைமொழிகள் கொடுத்துக் கூறினார் என்க. தேவமகளிரின் சிலம்பொலிக்கு அன்னத்தின் குரலோசை உவமை. பம்பைப் பொய்கையில் தேவமகளிரும் வந்து நீராடுவர் என்பது பெறப்பட்டது.

15. ஈறிடல் அரிய மால்வரை நின்று ஈர்த்து இழி
ஆறுஇடு விரைஅகில் ஆரம் ஆதிய
ஊறிட, ஒண்நகர் உரைத்த ஒண்தளச்
சேறிடு பரணியின் திகழும் தேசது. (3827)

(ஈறிடல் அரிய - எல்லையைக் கடப்பதற்கரிய; ஈர்த்து - இழுத்துக்கொண்டு; இழிதல் - இறங்கி வருதல்; விரை - நறுமணம்; ஆரம் - சந்தனக் கட்டைகள்;

ஒண் - சிறந்த; உரைத்தல் - அரைத்தல்; தளம் - கற்பூரம்; சேறு - குழம்பு \ சந்தனக்குழம்பு; தேசு - ஒளி \ அழகு; ஆதிய - முதலிய; பரணி - கிண்ணம் \ ஜாடி \ செப்பு \ பாத்திரம்; ஆறு - அருவிகளுமாம்)

உயரத்தின் எல்லையை அளவிட்டுக் கூற இயலாத பெரிய மலையினின்றும் இறங்கி வருகின்ற அருவிகளும் ஆறுகளும் இழுத்துக் கொண்டு வந்து இட்டு நிரப்புகின்ற, நறுமணம் மிக்க அகில், சந்தனம் ஆகிய கட்டைகள் அப்பொய்கையின் நீரில் ஊறித் தோய்தலால், அந்தச் செல்வச் செழிப்பு மிக்க நகரமாந்தர் அரைத்த சிறந்த கற்பூரம் சேர்ந்த சந்தனக் குழம்பை வைத்திருக்கும் கிண்ணம் போலத் திகழ்கின்ற ஒளிமிக்கது அந்தப் பொய்கை.

ஆறுகளால் இழுத்து வரப்பட்ட சந்தனக் கட்டை, அகில்கட்டை ஆகியவை ஊறித் தோய்தலால் அந்தப் பொய்கை நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. அது அந்த நகர மக்கள் கற்பூரம் சேர்த்து அரைத்து வைத்த சந்தனக் கிண்ணம் போன்று ஒளி விசித் திகழ்ந்தது என்பதாம். தளம் என்பது சீதளம் என்று குறித்துப் பச்சைக் கற்பூரம் என்ற பொருள் தந்து நின்றது. பொய்கைக்குச் சந்தனக் கிண்ணமும், சந்தனக் கட்டையால் குழம்பி நறுமணம் விசும் நீருக்குக் கற்பூரம் கலந்த சந்தனக் குழம்பும் உவமைகள்.

16. நவ்வி நோக்கியர் இதழ்நிகர் குமுதத்து நறுந்தேன்
வவ்வி, மாந்தரின் களி மயக்கு உறுவன மகரம்;
எவ்வம் ஓங்கிய இறப்பொடு பிறப்பு இவை என்னக்
கவ்வும் மீனொடு முழுகின, எழுவன கரண்டம். (3828)

(நவ்வி - மான்; வவ்வி - கவர்ந்து; மகரம் - மீன்கள்\ முதலையுமாம்; கரண்டம் - நீர்க் காக்கைகள்; எவ்வம் - துன்பம்; குமுதம் - செவ்வல்லி மலர்; ஓங்கிய - மேம்பட்ட)

அப்பொய்கையிலுள்ள மீன்கள், மான் போன்ற மருண்ட பார்வையையுடைய மகளிரின் இதழ்களை ஒத்த செவ்வல்லி மலரில் துளிர்க்கின்ற நறுமணமுள்ள தேனைக் கவர்ந்து உட்கொண்டு, ஆடவர் பெண்களின் அதரபானத்தை உட்கொண்டது போல, களிப்பும் மயக்கமும் அடைகின்றன. அதிலுள்ள நீர்க் காக்கைகளோ, துன்பம் மிக்க இறப்பும், பிறப்பும், இப்படித்தான் என்று நமக்குச் சுட்டிக் காட்டுவது போல, தன் அலகில் கவ்விக் கொண்டிருக்கும் மீன்களோடு அப்பொய்கையில் அடிக்கடி முழுகியும், மீண்டும் எழுந்தும் மாறி மாறித் திரியும் இயல்புடையன.

பெண்களின் பார்வைக்கு மானின் மருண்ட பார்வை ஒப்பு; அவர்களின் இதழுக்குக் குமுத மலர் ஒப்பு; மீன்கள் குமுத மலரின் நறுந்தேனை உட்கொள்ளுவதற்கு, ஆடவர்கள் மகளிரின் அதரபானம் அருந்துவது ஒப்பு; நீர்க் காக்கைகள் நீரில் மூழ்கி எழுவதற்கு மானிடரின் பிறப்பும் இறப்பும் ஒப்பு. பிறப்பும் இறப்பும் துன்பம் தருவனவே என்பதை "பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்" எனக் கூறும் மணிமேகலை. "ஆதலும், அழிவும் எல்லாம் அவை பொருட்கு இயல்பு கண்டாய்" என்பது சீவகசிந்தாமணி.

17. "கவள யானை அன்னாற்கு, அந்தக் கடிநறும் கமலத்து
அவளை ஈகிலம்; ஆவது செய்தும்" என்று அருளால்,
திவள அன்னங்கள் திருநடை காட்டுவ; செங்கண்
குவளை காட்டுவ; துவர் இதழ் காட்டுவ குமுதம். (3829)

(கவளம் - சோற்று உருண்டை; ஆவது - இயன்றது; அருள்தல் - இரக்கமுடையதாதல்; திவள - விளங்க; துவர் - சிவந்த நிறம்; கடி - சிறந்த; குவளை - நீலோற்பல மலர்கள்; குமுதம் - செவ்வல்லி மலர்கள்)

கவளமாகச் சோற்றுத் திரளை உண்ணும் யானை போன்றவனான இராமபிரானுக்கு, அவனுடைய சிறந்த நறுமணம் பொருந்திய தாமரைமலரில் வசிக்கும் திருமகளான சீதாதேவியைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டுவந்து சேர்க்கும் ஆற்றல் உடையவர் அல்லோம் என்றாலும், எங்களால் இயன்ற உதவி எதையாவது செய்வோம் என்று கருதி, இரக்கப்பட்டு, அப்பொய்கையில் வாழும் அன்னங்கள், தங்களுடைய நடையில் சீதாதேவியின் அழகிய அன்ன நடையைக் காட்டின; அங்கே மலர்ந்திருந்த நீலோற்பல மலர்கள் சீதாதேவியின் சிவந்த ரேகை படிந்த கண்களைக் காட்டின; செவ்வாம்பல் மலர்கள் அவளுடைய சிவந்த இதழ்களைக் காட்டுவனவாயின.

யானை சோற்றுத் திரளைக் கவளமாக - பெரிய உருண்டையாக உட்கொள்ளும் இயல்பினது. சீதையின் நடைக்கு அன்னமும், கண்களுக்குக் குவளை மலரும், சிவந்த இதழ்களுக்குச் செவ்வாம்பல் மலர்களும் உவமைகள். "கொங்கை கோங்கு அவை காட்ட, வாய் குமுதங்கள் காட்ட, மா பதுமங்கள் மங்கைமார் முகம் காட்டும்" என்பது பெரியதிருமொழி.

18. பெய்கலன்களின் இலங்கு ஒளி, மருங்கொடு பிறழ,
வைகலும் புனல் குடைபவர் வான் அரமகளிர்;
செய்கை அன்னங்கள் ஏந்திய சேடியர் என்னப்
பொய்கை அன்னங்கள் ஏந்திய பூங்கொம்பர் பொலிவ. (3830)

(வான்அர மகளிர் - தேவ மாதர்; பெய் - அணிந்து கொண்ட; இலங்கு - விளங்குகின்ற; மருங்கு - வடிவு \ பக்கம்; பிறழ - மாறுபட்டு விளங்க; வைகலும் - நாள்தோறும்; குடைதல் - நீராடுதல் \ முழுகுதல்; ஏந்திய - தாங்கிய; செய்கை - செயற்கை; கலன்கள் - அணிகலன்கள்; சேடியர் - பணிப் பெண்டிர்)

தாம் அணிந்திருந்த அணிகலன்களில் விளங்குகின்ற ஒளி எல்லாப் பக்கங்களிலும் மாறுபட்டு விச, நாள்தோறும் அப்பொய்கையில் நீராடி மகிழ்வர் தேவமாதர்கள். அவ்வாறு அவர்கள் நீராடும்போது அங்கே வாழும் அன்னப் பறவைகள் அஞ்சி, கரையில் நின்றிருக்கும் பூங்கொடிகளில் போய்ச் சிறிது நேரம் தங்கிக் கொள்ளும். இது எப்படி இருக்கிறது என்றால், அந்தத் தேவ மகளிருடன் கூட வந்த பூங்கொம்பு போன்ற பணிப் பெண்கள், தங்கள் கைகளில் செயற்கையாகச் செய்யப்பட்ட அன்னப் பறவையின் பதுமைகளை ஏந்திக் கொண்டிருப்பதைப் போன்றிருந்தது.

19. **ஏலும் நீர் நிழல் இடையிடை எறித்தலின், படிகம்**
போலும் வார்புனல் புகுந்துளவாம் எனப் பொங்கி,
ஆலும் மீன்கணம் அஞ்சின அலமர, வஞ்சிக்
கூலமாமரத்து இருஞ்சிறை புலர்த்துவ குரண்டம். (3831)

(குரண்டம் - கொக்குகள்; ஏலும் - மிகுந்த; எறித்தல் - விளங்குதல்; வார் - நிறைந்த; ஆலும் - அசையும்; கணம் - கூட்டம்; அலமரல் - தடுமாறுதல் ; இருஞ்சிறை - பெரிய சிறகுகள்; கூலம் - கரை; வஞ்சி - ஒருமரவகை; புலர்த்தல் - உலர்த்துதல்)

அப்பொய்கையின் கரையில் உள்ள சிறந்த வஞ்சி மரத்தின் கிளைகளில் அமர்ந்து கொக்குகள் தங்களது பெரிய சிறகுகளை உலர்த்திக் கொண்டிருக்கும். அப்பொய்கையில் நிறைந்த நீரானது பளிங்கு போல் தெளிவாக இருப்பதால், இக்கொக்குகளின் சிறகுகளின் நிழல் அந்நீரில் படிந்து இடையிடையே பிரதிபலிக்கின்றன. இதனைக் கண்ணுற்ற, அங்கு சுற்றி மகிழ்ந்து திரியும் மீனின் கூட்டங்கள், அந்தக் கொக்குகள் தம்மைப் பிடித்துத் தின்னத்தான் நீருள் புகுந்து விட்டன என்று அஞ்சி, திகைப்புற்று, நிலை தடுமாறும் நிலையை அடைந்தன.

வஞ்சி என்பது மருத நிலத்திற்குரிய மரவகைகளுள் ஒன்று.

20. **அங்கு ஓர் பாகத்தில், அஞ்சன மணி நிழல் அடைய,**
பங்குபெற்று, ஒளிர் பதுமராகத்து ஒளிபாய,
கங்குலும் பகலும் எனப் பொலிவன கமலம்;
மங்கைமார் தடமுலை எனப் பொலிவன வாளம். (3832)

(பாகம் - பக்கம்; அஞ்சனம் - கருமை \ நீலம்; நிழல் - ஒளி; அடைய - தவழ; பதுமராகம் - செம்மணி; கங்குல் - இரவு; வாளம் - சக்கரவாளப் பறவைகள்; பங்கு - பகுதி)

அந்தப் பொய்கையின் ஒரு பகுதியில் கருமையான நீலமணியின் ஒளி தவழ்ந்தது; மற்றொரு பகுதியில் பதுமராகம் என்னும் இரத்தினத்தின் செவ்வொளி பாய்ந்தது. எனவே அப்பொய்கையில் இரவும் பகலும் ஓரே சமயத்தில் நிகழ்வன போலத் தோற்றின. எனவே அங்கே வாழும் சக்கரவாளப் பறவைகள், இதைப் பகல் என்று கருத முடியாமலும் இரவென்று கருதமுடியாமலும், ஒன்றைவிட்டு மற்றொன்று பிரியாமலும் தம்முள் இணையாமலும் மகளிரின் இரு கொங்கைகள் போல் திகழ்வதாயின.

சக்கரவாளப் பறவையை மங்கையரின் பெருமுலைகளுக்கு உவமை கூறுவது கவிமரபு. இப்பறவைகள் பகலில் ஒன்று கூடியும், இரவில் இரை தேடப் பிரிந்தும் வாழும் என்பர். அஞ்சன மணி இரவுக்கும், பதுமராகம் பகலுக்கும் உவமையாயின. அப்பொய்கையில் ஒரு பக்கம் இரவு போலவும், மறுபக்கம் பகல் போலவும் காணப்பட்டதால், அப்பொய்கையில் ஒருபக்கம் தாமரை மலர்ந்தும், மறுபக்கம் கூம்பியும் இருந்தது என்றும் பொருள் கூறுவர். இது இரவா பகலா என்பதறியாத சக்கரவாளப் பறவைகள் இரவென்று கருதி அப்பக்கத்தில்

தன் துணையைப் பிரிந்தும், பகலென்று கருதி இப்பக்கத்தில் துணையோடு கூடியும் திகழ்வன ஆயின என்றும் பொருள் உரைப்பதுண்டு. சக்கரவாளப் பறவையை நேமிப்புள் என்றும் அழைப்பர்.

21. வலி நடத்திய வாள்என வாளைகள் பாய,
ஒலி நடத்திய திரைதொறும் உகள்வன நீர்நாய்;
கலி நடக் கழைக் கண்ணுளர் என நடம் கவினப்
"பொலிவு உடைத்து" எனத் தேரைகள் புகழ்வன போலும். (3833)

(வலி - ஆற்றல்; நடத்திய - செலுத்திய \ உண்டாக்கிய; உகள்தல் - பிறழ்தல்; கலி - ஆரவாரம்; நடம் - கூத்து; கழைக் கண்ணுளர் - கழைக் கூத்தாடிகள்; திரை - அலை; தேரை - தவளை; கவின் - அழகு; பொலிவு - சிறப்பு)

ஆற்றலுடன் செலுத்திய வாட்படை போல வாளை மீன்கள் அப்பொய்கை நீரில் பாயவும், ஒலி உண்டாகும் அலைகளிலெல்லாம் நீர் நாய்கள் உருண்டு ஓடவும், ஆரவாரம் எழுப்பிக் கொண்டு கழைக் கூத்தாடிகள் நடனம் ஆடவும், அந்த அழகினைக் கண்ணுற்று, தவளைகள் "உங்கள் ஆட்டம் சிறப்பாய் இருக்கிறது" என்று பாராட்டுவது போலவும் அப்பொய்கை தோற்றமளித்தது.

வாளை மீன்கள் தண்ணீரில் பாய்வது, விரன் செலுத்தும் வாளுக்கு உவமை. வாளை மீன்கள் நீரில் பாய்வதும், நீர் நாய்கள் நீரில் உருண்டு செல்வதும் தவளைகள் ஒலி செய்வதும் இயல்பான நிகழ்ச்சிகள். இதைக் கண்ட தவளைகள், அவை கழைக் கூத்தாடிகள் நடனமிடுவது போலச் சிறப்பாக இருக்கிறது என்று பாராட்டுவதாகக் கூறுவது கம்பனின் கற்பனைத் திறன்.

22. இராமன் சீதையின் நினைவால் புலம்புதல் (12 பாடல்கள்)

அன்னதாகிய அகன்புனல் பொய்கையை அணுகி,
கன்னி அன்னமும், கமலமும் முதலிய கண்டான்;
தன்னின் நீங்கிய தளிர் இயற்கு உருகினன் தளர்வான்,
உன்னும் நல்லுணர்வு ஒடுங்கிடப் புலம்புதல் உற்றான். (3834)

(அகன் - பெரிய; கன்னி - இளமை; இயல் - தன்மை; உருகுதல் - மனம் அழிதல்; உன்னுதல் - நினைத்தல்; உணர்வு - அறிவு; ஒடுங்கிட - குறைந்துபோக)

அத்தகைய பரந்த நீர்ப்பரப்பை உடைய பம்பைப் பொய்கையை நெருங்கி, இள அன்னம், தாமரை மலர் முதலியவற்றைக் கண்ட இராமன், தன்னிடமிருந்து பிரிந்து சென்ற தளிர்போன்ற மெல்லியலாளான சீதையை நினைத்து மனமழிந்து, சோர்வுற்றான்; ஆராய்ந்து தெளிதற்குரிய நல்லறிவும் குறைந்து போகும்படி, புலம்பலானான்.

அன்னத்திடம் சீதையின் நடையையும், தாமரை மலரிடம் அவளுடைய மாசற்ற முகத்தையும் கண்டான் இராமன் என்பதாம். முதலிய என்றது, மற்றவைகளான குவளை, கொடி போன்றவைகளும் அவளது ஏனைய

உறுப்புகளை நினைவு படுத்தின என்பதாம். இராமபிரான் திருமாலின் திரு அவதாரம்தான் என்றாலும், மானிடனாக உருவமேற்று வந்ததனால், மானிடனுக்குரிய பிரிவுத்துயர் இவனையும் வாட்டிற்று. எனவே மானிடன் போலப் புலம்பலுற்றான் என்க.

23. "வரிஆர் மணிக்கால் வாளமே!
மடஅன்னங்காள்! எனை நீங்கத்
தரியாள், நடந்தாள்; இல்லளேல்,
தளர்ந்தபோதும் தகைவேயோ?
எரியாநின்ற ஆருயிர்க்கு இரங்கினால்,
ஈது இசையன்றோ?
பிரியாது இருந்தேற்கு ஒரு மாற்றம்
பேசில், பூசல் பெரிதாமோ?" (3835)

(வரி - கீற்று \ கோடுகள் \ இரேகைகள்; மணி - அழகிய; வாளம் - சக்கர வாளப்பறவை; மடமை - இளமை; தரியாள் - ஆற்றாதவள்; நடத்தல் - நீங்குதல்; தகைவு - தடை; எரியா - எரியும் \ வெதும்பும்; இசை - புகழ்; மாற்றம் - வார்த்தை; பூசல் - வருத்தம்)

"இரேகைகள் பொருந்திய அழகிய கால்களை உடைய சக்கர வாளப்பறவைகளே! இளமையான அழகிய அன்னப் பறவைகளே! என்னை விட்டுப் பிரிந்து போக ஆற்றாதவளாகிய சீதை, இப்போது என்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டாள்; அவள் இப்போது இங்கு இல்லை; அதை எண்ணி நான் வாடி வருந்தும்போதும் நீங்கள் எனக்கு இரங்காமல் இருப்பதும் தகுதி தானோ? அவளைப் பிரிந்து வெதும்பி நிற்கும் இந்த அரிய உயிர்க்கு இரக்கம் காட்டினால் அது உங்களுக்கும் புகழையல்லவா தரும்? இதுவரை அவளை விட்டுப் பிரியாது இருந்து, இப்போது பிரிந்து அல்லலுறும் எனக்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூறினால், உங்களுக்கு அது பெரிய தீமையாகி விடுமோ?" என்று இராமன் சக்கர வாளப்பறவைகளையும், அன்னப் பறவைகளையும் நோக்கிப் பிரிவாற்றாமையால் புலம்பினான்.

சீதை தம் அருகில் இருந்தால்தான் சக்கர வாளப் பறவைகளும், அன்னப் பறவைகளும் அவள் உறுப்புகட்குத் தோற்று நாணி ஒதுங்கி நிற்கலாம். ஆனால் இப்போதுதான் சீதை அருகில் இல்லையே, எனவே, அவை நேரில் தோன்றி எனக்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூறலாமல்லவா? அதனால் அவைகளுக்குப் புகழ்தான் பெருகுமே தவிர, ஒரு பொல்லாங்கு ஏற்பட்டு விடுமோ? என்று இராமன் புலம்புகிறான் என்பதாம்.

24. "வண்ணநறும் தாமரை மலரும்,
வாசக்குவளை நாள் மலரும்,
புண்ணின் எரியும் ஒரு நெஞ்சம்
பொதியும் மருந்தின் தரும் பொய்காய்!

கண்ணும் முகமும் காட்டுவாய்;
வடிவும் ஒருகால் காட்டாயோ?
ஒண்ணும் என்னின், அஃது
உதவாது உலோவினாரும் உயர்ந்தாரோ?" (3836)

(எரிதல் - காந்துதல் \ பொசுங்குதல்; பொதிதல் - வைத்துக் கட்டுதல்; வண்ணம் - அழகு; நாள் - புதிய \ அன்றலர்ந்த; ஒண்ணுதல் - இயலுதல் \ முடிதல்; உலோவினோர் - கஞ்சர்; குவளை - நீலோற்பலம்; வடிவு - முழு உருவம்)

"அழகிய சிவந்த நிறமுடையதும் நறுமணம் மிக்கதுமான தாமரை மலரும், நல்ல நறுமணம் பொருந்திய அன்றலர்ந்த புதிய நீலோற்பல மலரும், சீதையின் பிரிவால் புண்ணுற்று வெதும்பும் என் நெஞ்சத்திற்கு, வைத்துக் கட்டும் மருந்துபோலத் தோற்றி, சிறிது துன்பம் ஆற்றிய பம்பைப் பொய்கையே! இத்தாமரை மலரினாலும், நீலோற்பல மலரினாலும் என்னுடைய சீதையின் கண்களையும் முகத்தையும் பிரதிபலித்துக் காட்டுகின்றாய்; ஆனால் அவளுடைய முழு உருவத்தையும் ஒரு முறையேனும் காட்ட மாட்டேன் என்கிறாயே? இது தகுமா? ஒருவரால் ஒன்றைக் கொடுக்க முடியும் என்றால், அதைக் கொடுக்காது, கஞ்சத்தனம் காண்பித்தால், அவரை உயர்ந்தவர் என்று கூறமுடியுமோ? முடியாதல்லவா?" என்றான் இராமன்.

தாமரை மலர் சீதையின் முகத்திற்கும், குவளைமலர் அவள் கண்களுக்கும் உவமை. பிரிவு எனும் புண்ணுற்றிருக்கின்ற இராமனுக்கு, இவ்விரண்டு மலர்களினாலும், சீதையின் முகத்தையும், கண்ணையும் காட்டியதால் இந்தப் பொய்கை உயர்ந்த மனம் படைத்ததே! என்றாலும் சீதையின் முழு உருவத்தையும் காட்டாது, கஞ்சத்தனம் செய்வதால் அது உயர்ந்தது என்று கூற மனம் வர வில்லை. சிறுமையுற்றது என்று குறிக்கிறான் என்பதாம். உலோபம் செய்பவர்கள் உயர்ந்தோராகார்; நற்கதியடையமாட்டார் என்ற செய்தியையும் புலப்படுத்துதல் காண்க.

25. விரிந்த குவளை, சேதாம்பல்,
விரைமென்கமலம், கொடிவள்ளை,
தரங்கம், கெண்டை, வரால், ஆமை
என்று இத்தகைய தமைநோக்கி,
"மருந்தின் அனையாள் அவயவங்கள்
அவை நிற் கண்டேன்; வல்லரக்கன்
அருந்தி அகல்வான் சிந்தினவோ?
ஆவி! உரைத்தியாம் அன்றே!" (3837)

(விரிந்த - மலர்ந்த; சே - செவ்விய; விரை - நறுமணம்; மருந்து - அமுது; அவயவங்கள் - உடல் உறுப்புக்கள்; அருந்தி - உண்டு; வரால் - ஒருவகை மீன்; தரங்கம் - அலை; ஆவி - வாவி \ பொய்கை \ தடாகம்)

"பொய்கையே! மலர்ந்த நீலோற்பல மலர், சிவந்த செவ்வல்லி மலர், நறுமணம் பொருந்திய மென்மையான தாமரை மலர், வள்ளைக் கொடி,

அலைகள், கெண்டை மீன்கள், வரால் மீன்கள் ஆமைகள் என்று இத்தகைய பொருட்களை நோக்கி, "அமிழ்தம் போன்ற எனது சீதா தேவியின் உடல் உறுப்புக்களுக்கு அவையனைத்தும் ஒப்பாவதை உன்னிடத்தில் கண்டேன். இவையெல்லாமும் இந்தக் கொடிய அரக்கனான இராவணன் சீதையைக் கொண்டு செல்லும்போது, வழியில் கீழே சிந்தப் பெற்றனவோ? அதை எனக்கு விளக்கமாகக் கூறுவாயாக!" என்று பொய்கையை நோக்கிக் கேட்டான் இராமன்.

சீதையின் கண்களுக்குக் குவளை மலரும், வாய்க்குச் செவ்வாம்பல் மலரும்; முகத்துக்குத் தாமரை மலரும், காதுகளுக்கு வள்ளை இலையும், வயிற்றின் மடிப்புக்கு அலைகளும், கண்களுக்குக் கெண்டை மீன்களும், கணைக்காலுக்கு விரால் மீன்களும், புற அடிக்கு ஆமையும் உவமைகள்.

26. "ஓடா நின்ற களிமயிலே! சாயற்கு
ஒதுங்கி, உள் அழிந்து,
கூடாதாரில் திரிகின்ற நீயும்,
ஆகம் குளிர்ந்தாயோ?
தேடா நின்ற என் உயிரைத் தெரியக்
கண்டாய்; சிந்தை உவந்து
ஆடா நின்றாய்; ஆயிரம் கண் உடையாய்க்கு,
ஒளிக்கும் ஆறு உண்டோ?" (3838)

(ஓடாநின்ற - ஓடுகின்ற; களி - செருக்கு \ மகிழ்ச்சி; உள் - மனம்; கூடாதார் - பகைவர்; தேடாநின்ற - தேடுகின்ற; உயிர் - இங்கே சீதை; தெரியா - தெரிந்து; ஆடா நிற்றல் - ஆடுதல்; ஒளித்தல் - மறைத்தல்; ஆறு - வழி; ஒதுங்குதல் - தோல்வி அடைதல்; கண் - பீலிக்குஞ்சம்)

"ஓடி விளையாடி மகிழ்ந்து திரிகின்ற மயிலே! சீதையின் சாயலுக்கு, நாம் ஒப்பாக மாட்டோம் என்று கருதி அதற்குத் தோல்வியுற்று, மனம் அழியப் பெற்று, பகைவரைப் போல சஞ்சரிக்கின்ற நீ கூட, அவள் இப்போது இங்கு உன் எதிரில் இல்லை என்பது கண்டு உள்ளம் குளிர்ந்து மகிழ்ச்சியாக ஆடுகின்றாயோ? நான் தேடிக் கொண்டிருக்கின்ற என்னுடைய அரிய உயிர் போன்ற சீதையை நீ நன்கு பார்த்திருக்கிறாய்; மனம் மகிழ்ந்து இப்போது நடனம் ஆடுகின்றாய்; ஆனால் ஆயிரம் கண்களை உடைய உனக்குத் தெரியாமல் போகக் கூடிய வழி வேறு ஏதேனும் இருக்கிறதா? இல்லையல்லவா?; என்று மயிலை நோக்கிக் கேட்டுப் புலம்புகிறான் இராமன்.

ஆயிரம் என்பது இங்கே பல என்ற பொருளைத் தந்து எண்ணுப் பொருளில் வந்தது. கண் என்பது மயிற் பீலிக்கண்களை \ புள்ளிகளை உணர்த்துவது.

27. "அடையீர் எனினும், ஒருமாற்றம்
அறிந்தது உரையீர்! அன்னத்தின்
பெடையீர்! ஒன்றும் பேசீரோ?
பிழையாதேற்குப் பிழைத்தீரோ?

நடைநீர் அழியச் செய்தாரே,
நடுஇலாதார்; நனி அவரோடு
உடையீர் பகைதான், உமைநோக்கி
உவக்கின்றேனை முனிவிரோ?" (3839)

(அடைதல் - வந்து சேருதல்; மாற்றம் - சொல் \ வார்த்தை; பிழைத்தல் - தவறிழைத்தல்; நடு - இடை; அழிதல் - தோல்வியுறுதல்; நனி - மிக்க; முனிதல் - வெறுத்தல்; நடை - நடையழகு)

"பெட்டை அன்னப்பறவைகளே! நீங்கள் என் அருகில் வரமாட்டீர்கள் என்றாலும், என்னுடைய சீதையைப் பற்றி நீங்கள் அறிந்தது எதையாவது மட்டும் சொல்லுங்களேன்; ஒன்றும்பேச மாட்டீர்களோ? நான் உங்களிடத்தில் எந்தத் தவறும் செய்ய வில்லையே? என்னிடம் நீங்கள் தவறிழைப்பீர்களோ? இடையே இல்லாத சீதைதான் உங்கள் நடையழகைத் தோற்கும்படிச் செய்தாள். அவளோடுதான் உங்களுக்குப் பகை இருக்கிறது. உங்கள் நடை அவள் நடையழகுக்கு ஒப்பாகும் என்று எண்ணி மகிழ்கின்றவனாகிய என்னை நீங்கள் வெறுப்பீர்களோ?" என்று அன்னப் பேடுகளை நோக்கிப் புலம்புகிறான் இராமன்.

"உங்கள் நடையைத் தன் நடையழகால் தோற்கச் செய்தவள் சீதை; எனவே அவள் மீது நீங்கள் பகைமை கொள்ளுதல் ஓரளவிற்கு முறையாகும்; ஆனால் நான் உங்கள் நடையழகு கண்டு மகிழ்ந்திருக்கிறேனே? என்னிடம் ஏன் வரமாட்டேன் என்கிறீர்கள்? என்னிடம் ஏன் பேச மாட்டேன் என்கிறீர்கள்? என்னிடம் ஏன் கோபம் கொண்டிருக்கின்றீர்கள்?" என்று கேட்டான் என்பது கருத்து.

28. "பொன்பால் பொருவும் விரை அல்லி புல்லிப்
பொலிந்த பொலம்தாது
தன்பால் தழுவும் குழல் வண்டு
தமிழ்ப்பாட்டு இசைக்கும் தாமரையே!
என்பால் இல்லை; அப்பாலோ
இருப்பார் அல்லர்; விருப்புடைய
உன்பால் இல்லை என்றபோது,
ஒளிப்பாரோடும் உறவு உண்டோ?" (3840)

(பொருவுதல் - ஒத்திருத்தல்; விரை - நறுமணம்; அல்லி - அகஇதழ்; தாது - மகரந்தம்; தமிழ் - இனிமை; அப்பால் - வேறிடம்; பொலம் - அழகு \ பொன்னிறம்; பால் - பான்மை \ தன்மை; குழல் - இசை; புல்லி - சார்ந்து)

"பொன் போன்ற இயல்பும் நிறமும், நறுமணமும் கொண்ட அக இதழ்கள் பொலியப் பெற்ற பொன் நிறமான மகரந்தப் பொடிகளைத் தன்னகத்தே கொண்ட, குழல் போலும் இசைபாடும் வண்டுகள், இனிமையாகப் பாடித் தங்கியிருக்கும் தாமரை மலரே! சீதையோ இப்பொழுது என்னிடத்தில் இல்லை; அவள் வேற்றிடத்தில் எங்கும் தங்கும் இயல்புள்ளவள் அல்லள்; எனவே தானே விரும்பித் தங்கும் தன் பிறந்த இடமாகிய உன்னிடத்திலும் இல்லை என்றுநீ

சொல்லுகிற போது, ஒன்றைத் தன்பால் மறைத்துக் கொண்டு பொய்யுரைப்பவா களோடு நட்புச் செய்து கொள்வது முறையாகுமோ?" என்று தாமரையை நோக்கிப் புலம்புகிறான் இராமன்.

தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருளில் வந்துள்ளது காண்க. "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்பது பிங்கல நிகண்டு. சீதை கற்பிற் சிறந்தவள். ஒன்று அவள் என்னிடம் இருக்க வேண்டும். அவள் இப்போது என்னிடம் இல்லை. அவள் உத்தமி ஆதலால் வேற்றிடத்தில் தங்குவாள் என்பதும் இயலாதது. எனவே பிறந்த விடாகிய உன்னிடத்தில் தான் வந்திருக்க வேண்டும். அவளை உன்னிடத்தில் ஒளித்து வைத்துக் கொண்டு என்னிடம் பொய் கூறுகிறாய். எனவே நான் உன்னிடம் நட்புக் கொண்டிருத்தல் முறையாகாது என்பதாம். திருமகளுக்கு பத்மா, பத்மாஜனி, பத்மோத்பவா என்ற பெயர்களும் வடமொழியில் வழங்குவது காண்க.

29. "ஒரு வாசகத்தை வாய்திறந்திங்கு
உதவாய் பொய்கை குவிந்து ஒடுங்கும்
திருவாய் அனைய சேதாம்பற்கு
அயலே கிடந்த செங்கிடையே!
வெருவாது எதிர்நின்று அமுது உயிர்க்கும்
விழிச் செவ்விக் கொழுங்கனிவாய்
தருவாய்; அவ்வாய் இன்னமுதும்
தண்ணென் மொழியும் தாராயோ?" (3841)

(சேதாம்பல் - செவ்வல்லி மலர்; அயல் - பக்கம்; செங்கிடை - நெட்டி; வெருவாது - அஞ்சாது; தண் - குளிர்ந்த; வாசகம் - சொல்; உயிர்த்தல் - சுரத்தல்; விழி - விழுதிப்பழம்)

"ஒரு சொல்லைக்கூட வாயைத் திறந்து சொல்லி உதவாது, பொய்கையில் உள்ளே குவிந்து கிடக்கும், சீதையின் வாயினைப் போன்ற செவ்வாம்பல் மலருக்கு அருகில் மிதந்து கொண்டிருக்கின்ற சிவந்த நெட்டியே! சீதையைப் பிரிந்து நிற்கும் என்னைக் கண்டு அஞ்சாது, என் எதிரிலே தோன்றி தேவாமிர்தத்தைச் சொரிகின்ற விழிப்பழம் போன்ற செழுமை மிகுந்த சீதையின் வாயினை அன்பு கூர்ந்து எனக்குக் காட்டுவிக்கின்றாய். ஆனால் இது மட்டும் போதாது. அவள் வாயில் ஊறும் இனிய அமிழ்தமாகிய பானத்தையும், குளிர்ச்சி பொருந்திய சொற்களையும்கூட எனக்குக் காட்டுவிக்க மாட்டாயோ?" என்று நெட்டியைப் பார்த்துப் புலம்புகிறான் இராமன்.

முன்பு சீதையின் வாயழகிற்குத் தோற்று மறைந்திருந்த சிவந்த நெட்டி, இப்போது சீதை அங்கே இல்லாமையால் அஞ்சாது எதிரில் தோன்றி நீரின் மேல் மிதக்கிறது என்பதை, "வெருவாது எதிர்நின்று" என்ற சொற்றொடரால் குறித்தார் என்க. விழிப்பழமும், நெட்டியும் மகளிர் இதழுக்கு வடிவால் உவமை. விழிப்பழம் ஒரு வகை மருந்துச் செடி; இது விழுதி எனவும் வழங்கப்பெறும். திருவிழிமிழலை என்ற ஓர் ஊர் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. அங்கே

விழிக்கனிகள் அடர்ந்திருப்பதால் தான் இவ்வூருக்கு இப்பெயர் வந்ததென்று கூறுவர்.

30. "அலக்கண் உற்றேற்கு, உற்று உதவற்கு
அடைவு உண்டன்றோ? கொடிவள்ளாய்!
மலர்க் கொம்பனைய மடச் சீதை
காதே; மற்றொன்று அல்லையால்;
பொலக் குண்டலமும், கொடுங்குழையும்
புனைதாழ் முத்தின் பொன் தோடும்,
விலக்கி வந்தாய்; காட்டாயோ?
இன்னும் பூசல் விரும்புதியோ?" (3842)

(அலக்கண் - துன்பம்; அடைவு - இயைபு \ பொருத்தம்; கொடு - வளைந்த; குழை - காதணி; பொலம் - பொன் \ அழகு; புனை - அழகிய; பூசல் - பகை; தாழ் - தாழ்ந்து தொங்கும்)

"வள்ளைக்கொடியே! மலர்கள் நிறைந்த பூங்கொம்பு போன்ற, இளமையும் அழகுமுடைய சீதையின் காதாகத்தான் நீ எனக்குத் தோற்றமளிக்கிறாய்; அதைத் தவிர வேறொன்று இல்லை; அவ்வாறிருக்கச் சீதையைப் பிரிந்து துன்பம் உற்றிருக்கும் எனக்கு உதவுவதற்கு உனக்கு ஒரு பொருத்தம் இருக்கிறது அல்லவா? பொன்னாலாகிய அழகிய குண்டலம் என்னும் காதணியையும், வளைந்த குழை என்ற காதணியையும், அலங்கரிக்கப்பட்டு, தாழ்ந்து தொங்குகின்ற முத்தினாலும் பொன்னாலும் ஆன தொங்கட்டான் என்றும் தோடு என்றும் அழைக்கப்படும் காதணிகளையும் நீக்கி விட்டு வந்து என்முன் தோன்றுகின்றாய். சீதையை, அவள் சென்ற வழியை எனக்குக் காட்ட மாட்டாயோ? இன்னமும் பழைய பகைமையையே விரும்புகின்றாயோ?" என்று இராமன் வள்ளைக் கொடியை நோக்கிப் புலம்பினான்.

குண்டலம், குழை, தோடு என்பனவெல்லாம் மகளிர் அணியும் காதணிகள். குழை என்பது ஓலைச் சுருள் வடிவமான காதணி; மலர்க்கொம்பு சீதையின் மேனிக்கு உவமை; மடமை என்பது எல்லாம் அறிந்தும் அறியாதது போலிருக்கும் தன்மை என்க.

31. "பஞ்சு பூத்த விரல்; பதுமம் பவளம் பூத்த அடியாள்; என்
நெஞ்சு பூத்த தாமரையின் நிலையம் பூத்தாள்; நிறம்பூத்த,
மஞ்சு பூத்த, மலர் பூத்த குழலாள்; கண்போல் மணிக்குவளாய்!
நஞ்சு பூத்ததாம் அன்ன நகையால், என்னை நலிவாயோ? (3843)

(பஞ்சு - செம்பஞ்சுக்குழம்பு; பூத்தல் - பொலிவுறுதல் \ விளங்குதல் \ மலர்தல் \ தோற்றுவித்தல்; பதுமம் - தாமரை; மஞ்சு - மேகம்; குழல் - கூந்தல்; மணி - அழகிய; குவளாய் - குவளைமலரே \ நீலோற்பல மலரே; நலிதல் - வருத்துதல்; நிலையம் - இருப்பிடம்)

"செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப் பெற்ற விரல்களையும், தாமரை மலரில் பவழம் பொருந்தியது போன்ற பாதங்களையும் உடையவளும், என் நெஞ்சம் என்னும்

இதயத் தாமரையையே தன் வாழ்விடமாகக் கொண்டு விளங்குபவளும், கரியமேகம் போன்ற கூந்தலில் அழகிய வண்ணமிகு மலர்களைச் சூடியவளும், என் கண் போன்றவளுமாகிய சீதையைப் போன்று அழகாக விளங்கும் நீலோற்பல மலரே! நஞ்சை உள்கொண்டது போன்ற ஏளனச் சிரிப்பால் என்னை நீ வருத்துவாயோ?" என்று நீலோற்பல மலரை நோக்கிப் புலம்பினான் இராமன்.

32. கவிக் கூற்று

என்று அயாவுயிர்க்கின்றவன், ஏடு அவிழ்
கொன்றை ஆவிப்புறத்து இவை கூறி, "யான்
பொன்ற, யாதும் புகல்கிலை போலுமால்;
வன் தயாஇலி" என்று வருந்தினான். (3844)

(அயா உயிர்த்தல் - நீண்ட பெரு மூச்சு விடுதல்; ஏடு - இதழ்கள்; அவிழ்தல் - விரிதல்; ஆவி - வாவி \ பொய்கை; புறம் - பக்கம் \ கரை; பொன்றுதல் - இறந்து போதல்; வன் - வலிய; தயா - தயவு; தயை \ அருள்; இலி - இல்லாதவள்)

என்று, சீதையைப் பிரிந்த துயரத்தால் பெருமூச்சு விடுபவனாகிய இராமன் அப்பொய்கையின் கரையில் நிறைந்துள்ள இதழ்கள் பிரிந்த கொன்றை மரங்களை நோக்கி, "நான் இறந்து போகும் நிலையில் இருந்தும் எனக்கு ஆறுதல் மொழி ஒன்றும் கூறாமல் நிற்கின்றாயே! நீ வலிய, அருள் இல்லாத கொடியவள்" என்று கூறி ஏங்கினான்.

ஒருவரையொருவர் பிரிந்த தலைவன் தலைவியர் கொன்றை மரத்தை நோக்கி ஏங்கிக் கூறுவது என்பது நூல்மரபு. கொன்றை கார்காலத்தில் மலரும். இதன் மலர்கள் பொன் நிறைமுடையதாய் இருக்கும். இந்தத் தோற்றம் அம்மரங்கள் மிக்க மகிழ்ச்சியாக இருப்பது போன்று, பிரிந்தவர்களுக்குத் தோற்றுவதால், அதனைக் கண்டு சினந்து பேசுவர் என்க.

33. வார் அளித்தழை மாம்பிடி வாயிடைக்
கார் அளிக்கலுழிக் கருங் கைம்மலை
நீர் அளிப்பது நோக்கினன், நின்றனன்
பேர் அளிக்குப் பிறந்தஇல் ஆயினான். (3845)

(அளி - கருணை \ குளிர்ச்சி \ வண்டுகள்; கலுழி - மதப்பெருக்கு; கரும் - பெரிய; கைம்மலை - ஆண்யானை; வார் - நீண்ட; தழை - குழை; மா - பெரிய; பிடி - பெண் யானை; பிறந்தஇல் - பிறப்பிடம்)

மிக்க கருணைக்குப் பிறப்பிடமான இராமபிரான், கரிய வண்டுகள் மொய்க்கப்பெற்ற மதப்பெருக்கை உடைய, பெரிய துதிக் கையையுடைய ஆண்யானைகள், நீண்ட குளிர்ச்சி பொருந்திய தழைகளை உண்ணுகின்ற சிறந்த பெண் யானைகளின் வாயில், அப்பொய்கையிலிருந்து தண்ணீரை மொண்டு ஊட்டுவதைக் கண்டு, தன்னால் அவ்வாறு தன் மனைவிக்கு ஊட்ட முடியவில்லையே என்று எண்ணி வருந்தி நின்றான்.

இராமபிரான் கருணையின் பிறப்பிடம். "கருணாகரன்" என்பது இராமனின் மற்றொரு பெயர். எனவே "பேர் அளிக்குப் பிறந்த இல் ஆயினான்" என்றார் என்க. மதமயக்கமுடைய யானையே, தன்னுடைய பெண்யானைக்குத் தண்ணீர் ஊட்டி மகிழும் போது, அறிவும், ஆற்றலும் ஆண்மையும் உடைய தன்னால், தன் மனைவியாகிய சீதைக்கு இவ்வாறு ஊட்டி, அவளைக் காப்பாற்ற முடியவில்லையே என்று, தன் இயலாமையை நோக்கி வருந்தி நின்றான் என்பதாம்.

இது போன்றதொரு நிலை, தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் பேசப்பட்டிருக்கிறது. "அம்பலத்தான், சேய் கண்டனையன், சென்று, ஆங்கு ஓர் அலவன் தன் சீர்ப்பெடையின் வாய், வண்டனையதோர் நாவற்கனி நனி நல்கக் கண்டு, பேய் கண்டனையது ஒன்றாகி, நின்றான் அப்பெருந்தகையே" என்பது திருக்கோவையார்; (அலவன் - நண்டு) "துடியடிக்கயம் தலை கலக்கிய சின் நீரைப் பிடியூட்டிப் பின் உண்ணும் களிறு எனவும் உரைத்தனரே" என்பது கலித்தொகை. "புன்னை நறுந்தாது கோதி பொறி வண்டு, கன்னிப் பெடை உண்ணக் காத்திருக்கும்" என்பது நளவெண்பா. "தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்தாங்கு, அயர்வுறு மடந்தை அருந்துயர் தீர்த்து" என்பது சிலப்பதிகாரம்.

34. இலக்குவன் இராமனை நீராடச் சொல்லுதல்

> **ஆண்டு அவ்வள்ளலை அன்பு எனும் ஆர் அணி**
> **பூண்ட தம்பி, பொழுது கழிந்ததால்;**
> **ஈண்டு இரும்புனல் தோய்ந்து, உன் இசைஎன**
> **நீண்டவன் கழல்தாழ் நெடியோய்!" என்றான். (3846)**

(ஆர் - நிறந்த; பூண்ட - அணிந்த \ தரித்த; நெடியோய் - பெரியோய்; இரும் - பெரிய \ நிறைந்த; தோய்தல் - மூழ்குதல் \ நீராடுதல்; இசை - புகழ்; நீண்டவன் - நெடியவன் \ திருமால்; தாழ்தல் - வணங்குதல்; அணி - ஆபரணம்; கழல் - திருவடிகள்)

இவ்வாறு வருந்தி நின்ற இராமபிரானை நோக்கி, அன்பு என்னும் அரிய அணிகலனை அணிந்துள்ள தம்பியாகிய இலக்குவன், "பெரியோய்! இப்பொழுது பகற்பொழுது கழிந்து விட்டது. எனவே இந்த நிறைந்த பம்பைப் பொய்கையில் நீராடி, உன் புகழ் போல உலகமெங்கும் வியாபித்திருக்கும் உலகளந்தவனாகிய திருமாலின் திருவடிகளை வணங்கித் துதிப்பாயாக" என்று கூறினான்.

ஏனைய அணிகலன்களெல்லாம் உடலுக்கு அணி செய்யவும், அன்பு என்னும் அணிகலன் உயிருக்கு அழகு செய்வது என்று கூறிய கம்பனின் கவித்திறம் காண்க. இராமன் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது என்பதை, திரிவிக்கிரம அவதாரத்தில் நீண்டு உலகளந்தவனாகிய திருமாலின் உருவத்திற்கு உவமித்தது ஒரு நயம்.

இங்கே ஒரு கருத்து. இராமபிரான் திருமாலின் அவதாரம்தான் என்றாலும், இங்கே அவன் கொண்ட மானிடத் தன்மைக் கேற்ப, அவன் தன்னைத் தானே

வணங்கிக் கொண்டான் என்பது கருதத்தக்கது. இது போன்ற சூழ்நிலை பல இடங்களில் வருவதைக் காப்பியத்தின் போக்கில் காணலாம். இலக்குவன் இராமனிடம் பொழுது கழிந்து போனதை நினைவூட்ட வேண்டியதாயிற்று. காரணம், இராமன் சீதையின் பிரிவால் ஆற்றொணாத் துயரம் கொண்டு, காலம் கழிவதும் தெரியாது, அதிலேயே மூழ்கியிருந்தான் என்பதாம்.

35. இராமன் நீராடச் செல்லுதல்

அரைசும் அவ்வழி நின்று, அரிது எய்தி, அத்
திரை செய் தீர்த்தமும், முன்செய்தவம் உண்மையால்
வரைசெய் மாமத வாரணம் நாண்உற,
விரைசெய் பூம்புனல் ஆடலை மேயினான். (3847)

(அரைசு - அரசு \ அரசன் \ இராமன்; திரை - அலை; வரை - மலை; வாரணம் - யானை; விரை - நறுமணம்; மேயினான் - மேற்கொள்ளுதல்; தீர்த்தம் - நீர் \ நீர்நிலை \ பம்பை; வழி - இடம்)

அரசுக்குரிமையுடையவனான இராமனும், அந்த இடத்திலிருந்து மிக்க வருத்தத்துடன் நீங்கிச் சென்று, அந்த அலைகள் மோதுகின்ற புண்ணிய தீர்த்தமாகிய பம்பைப் பொய்கையில், முன்தான் தவம் செய்திருக்கின்ற காரணத்தால், மலை போன்றதும், மதங்கொண்டதுமான சிறந்த யானையே வெட்கமுறும்படி, நறுமணம் மிக்கதும், பூக்கள் நிறைந்ததுமான அப்பொய்கை நீரில், நீராடலை மேற்கொண்டான்.

"தீர்த்தம்" என்ற சொல் பொதுவாகத் தூய, புண்ணிய நீரைக் குறிக்கும். எப்படிக் கங்கைத் தீர்த்தம் தன்னை நாடி வந்து முழுகியவர்களின் பாவத்தைப் போக்குவதால் புண்ணிய கங்கை என்று பெயர் பெற்றதோ அவ்வாறு, இங்கே பம்பைப் பொய்கையும் திருமாலின் அவதாரமாகிய இராமபிரான் நீராடும் பேறு பெற்றதால் அது முற்பிறப்பில் புண்ணியம் செய்தது என்பது புலப்படுத்தப்பட்டது. இப்பொய்கையும் கங்கையைப் போல் தானும் தூயதாய்த் தன்னை வந்தடைந்தோர்க்கும் பாவங்களைப் போக்கித் தூய்மையுடையதாய்ச் செய்யும் தன்மை வாய்ந்தது என்பதாம். இராமன் பொய்கையில் நீராடியதற்கு, மதம் கொண்ட யானை நீராடியது ஒப்பு; பூம்புனல் என்ற சொல்லாட்சியும் கவனிக்கத்தக்கது. பூ என்ற சொல்லுக்கு மலர்கள் என்று பொருள் கொண்டாலும், "மென்மையான, மனத்திற்கு இதம் அளிக்கக்கூடிய" என்ற பொருளே பொருத்தமாதல் காண்க. பூம்பட்டு என்பதைப் போலவும், பூஞ்சோலை என்பதைப் போலவும், பூந்துகில் என்பதைப் போலவும், பூம்புனல் என்ற சொல்லைக் கையாண்டுள்ள அருமை நோக்குக.

36. இராமன் நீராடியதால் அப்பொய்கை நீர் அடைந்த மாற்றம்

நீத்த நீரில் நெடியவன் மூழ்கலும்,
தீத்த காமத்தெறு கதிர்த் தீயினால்

காய்த்து இரும்பைக் கருமகக் கம்மியன்
தோய்த்த தண்புனல் ஒத்தது அத்தோயமே. (3848)

(நீத்தம் - வெள்ளம் \ பிரவாகம்; தீத்த - வெதுப்பிய \ தகித்த; தெறுதல் - எதிர்த்து அழித்தல்; கருமகன் - கருமான் \ கொல்லன்; தண் - குளிர்ந்த; தோயம் - பொய்கை; கம்மியன் - தொழிலாளி)

அந்தப் பொய்கை வெள்ளத்தில் பெரியோனாகிய இராமன் மூழ்கிய அளவில், அவனை அதுகாறும் வெதுப்பிக் கொண்டிருந்த காமம் என்னும் சுடர்மிகுந்த நெருப்பும் அந்நீரில் தோய்ந்ததால் அந்நீரும் சூடேறிற்று. இது எப்படி இருக்கிறது என்றால், கொல்லன் ஒருவன் பழுக்கக் காய்ச்சிய இரும்பை, அருகில் உள்ள குளிர்ச்சி பொருந்திய தண்ணீரில் தோய்க்கும் பொழுது, அந்தக் குளிர்ந்த நீரும் எப்படிச் சூடேறுமோ அவ்வாறு சூடேறியது என்கிறான் கவிஞன்.

இது ஒரு யதார்த்தமான கற்பனை. கொல்லன், காய்ச்சிய இரும்பைக் குளிர்ந்த தண்ணீரில் தோய்ப்பதும் அது அதனால் சூடேறுவதும், காமவெப்பம் கொண்ட இராமன் குளிர்ந்த பம்பைப் பொய்கையில் நீராடியதற்கும், அதனால் அந்நீர் சூடேறியதற்கும் ஒப்பு. காமமும், கனலும் தன்னைச் சார்ந்தவைகளைச் சுட்டெரிக்கும் என்பது புலப்படுத்தப்பட்டது.

37. இராமன் திருமாலை வணங்குதல்

ஆடினான் அன்னமாய் அருமறைகள் பாடினான்,
நீடுநீர்; முன்னை நூல்நெறி முறையின், நேமிதாள்
சூடினான்; முனிவர்தம் தொகுதிசேர் சோலைவாய்,
மாடுதான் வைகினான்; எரிகதிரும் வைகினான். (3849)

(பாடுதல் - வெளியிட்டு அருளுதல்; முன்னை - பழமையான; நேமி - திருமால்; மாடு - பக்கம்; எரிகதிர் - சூரியன்; வைகுதல் - தங்குதல் \ அஸ்தமித்தல்)

அன்னப்பறவை உருவெடுத்து, அறிவதற்கரியதான வேதங்களை ஸ்வரத்தோடு பிரமனுக்கு உபதேசித்த திருமாலின் அவதாரமாகிய இராமபிரான், அப்பொய்கையின் மிக்க நீரில் நீராடினான்; பழைமையான வேதசாத்திர நூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி, சக்கராயுதத்தை ஏந்திய திருவடிகளைத் தலைமேற்கொண்டு தொழுதான். பின்னர் முனிவர்களின் கூட்டம் சேர்ந்து தங்கியிருக்கின்ற ஒரு சோலையினிடத்திற் சென்று அங்கு ஒரு பக்கத்தில் தங்கலானான். அப்பொழுது வெப்பமாகச் சுட்டெரிக்கும் கதிர்களை உடைய சூரியனும் தன் இருப்பிடத்திற்குச் சென்று மறைந்தான்.

"அன்னமாய் அருமறைகள் பாடினான்" என்பது முன்பே விளக்கப்பட்டிருக்கிறது. மது, கைடபர் என்ற இரு அசுரர்கள் பிரமனிடமிருந்து வேதங்களைப் பறித்துக் கொண்டு கடலில் உட்புகுந்து மறைந்து கொண்டனர். தேவர்கள் முறையிடத் திருமால் கடலுக்குள் சென்று அவர்களைக் கொன்று அவ்வேதங்களை மீட்டு வந்து மீண்டும் தான் அன்னப்பறவையாக அவதாரம் கொண்டு, பிரமனுக்கு அவ்வேதங்களை இசையுடன் அறிவுறுத்தினான் என்பது

புராணக்குறிப்பு. "எரிகதிரும் வைகினான்" என்பது சூரியனும் அஸ்தமித்தான் என்பதைக் குறிக்கும். மறை என்பது வேதத்தைக் குறிக்கும். இரகசியமான தத்துவப் பொருள்களைத் தன்னிடத்தில் மறைத்துவைத்திருப்பது என்றும் பொருள் கூறுவர். இராமபிரான் இவ்வாறு சோலையில் தங்கி நித்தியகர்மாக்களைச் செய்து கொண்டிருந்தபோது, அங்கு நாரத முனிவர் வந்து, பல அரிய தத்துவங்களை இராமபிரானிடமிருந்து உபதேசம் பெற்றுச் சென்றார் என்று துளசிராமாயணம் கூறும்.

38. சந்திரன் தோன்றுதல்

அந்தியாள் வந்து தான் அணுகவே, அவ்வயின்
சந்தவார் கொங்கையாள் தனிமைதான் நாயகன்
சிந்தியா, நொந்து தேய்பொழுது, தெறுசீத நீர்
இந்து வான் உந்துவான், எரிகதிரினான் என. (3850)

(அந்தி - மாலைக் காலம்; சந்தம் - பேரழகு; நாயகன் - தலைவன் \ இராமன்; தேய்தல் - மெலிதல்; தெறுதல் - வருத்துதல்; சீதம் - குளிர்ச்சி; நீர் - நீர்மை \ தன்மை; இந்து - சந்திரன்; எரிகதிர் - சூரியன்; உந்துதல் - எழுதல் \ தோன்றுதல்; சிந்தியா - சிந்தித்து; அவ்வயின் - அப்போது; வார் - கச்சு)

மாலைக்காலம் என்னும் பெண் வந்து சேர்ந்த சமயத்தில், அழகிய கச்சணிந்த கொங்கைகளையுடைய சீதையின் தனிமையை எண்ணி வருந்தி இராமன் உடல் மெலிகின்ற பொழுது, பிரிந்தவரை வருத்துகின்ற, குளிர்ச்சி பொருந்திய தன்மையை உடைய சந்திரன், இப்போது எரிக்கின்ற வெப்பமுடைய கதிர்களை உடைய சூரியனைப் போல, வானத்தில் தோன்றினான்.

மாலையும் இரவும் சந்திக்கும் சந்தியாகாலம் அந்தி எனப்படும். இதைப் பெண்ணாக வருணிப்பது கவிமரபு. எனவே "அந்தியாள்" என்றார், "அந்தி என்னும் பசலை மெய்யாட்டி" என்பது மணிமேகலை, பிரிவுத் துயரில் வருந்துபவர்களுக்குக் குளிர்ச்சியான பொருள்களும் வெம்மையாகத் தோன்றும். எனவே குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன்கூட, வெப்பக்கதிர்களை உடைய சூரியன் போல இராமனுக்குத் தோற்றினான் என்றார்.

39. இரவில் எல்லா உயிரினங்களும் துயிலுதல்

பூ ஒடுங்கின; விரவு புள் ஒடுங்கின; பொழில்கள்
மா ஒடுங்கின; மரனும் இலை ஒடுங்கின; கிளிகள்
நா ஒடுங்கின; மயில்கள் நடம் ஒடுங்கின; குயில்கள்
கூ ஒடுங்கின; பிளிறு குரல் ஒடுங்கின களிறு. (3851)

(ஒடுங்குதல் - குவிதல் \ அவிதல் \ துயிலுதல் \ அடங்குதல் \ ஒழிதல்; பொழில் - சோலை; விரவுதல் - கலத்தல்; மா - விலங்கு; நா - பேச்சு \ நாக்கு;

நடம் - நடனம் \ ஆட்டம்; கூ - கூவுதல்; பிளிறுதல் - முழங்குதல்; புள் - பறவைகள்)

இரவு வந்து சேர்ந்ததும், பகலில் மலர்ந்திருந்த பூக்கள் குவியலாயின; சோலைகளில் வந்து கலந்திருந்த பறவைகளெல்லாம் தத்தம் கூடுகளில் சென்று உறங்கலாயின; விலங்குகள் எல்லாம் அடங்கியிருந்தன; மரங்களில் உள்ள இலைகள் கூடத் தூங்குவதைப் போல முடிக் கொண்டிருந்தன; கிளிகள் இனிமையான பேச்சை மறந்து பேச்சற்றிருந்தன; மயில்கள் குதூகலமாக நடனமாடுவதை ஒழித்திருந்தன; குயில்கள் இனிமையாகக் கூவுவதைத் தவிர்த்திருந்தன. ஆண்யானைகள் பிளிற்றி முழக்கம் செய்யாது உறங்கிக் கிடந்தன.

ஒடுங்குதல் என்ற சொல் உறங்கியதையும் அவைகள் தத்தமக்குரிய செயல்களைச் செய்யாது ஓய்ந்திருந்ததையும் குறிக்கும். யானையின் முழக்கம் பிளிற்றுதல் எனப்படும்.

40. இராமன் கண் துயிலாமை

மண் துயின்றன; நிலைய மலை துயின்றன; மறுஇல்
பண் துயின்றன; விரவு பணி துயின்றன; பகரும்
விண் துயின்றன; கழுதும் விழி துயின்றன; பழுதுஇல்
கண் துயின்றில, நெடிய கடல் துயின்றன களிறு. (3852)

(மண் - நிலம் \ மக்கள்; நிலைய - நிலைபெற்ற \ அசையாத; மறு - குற்றம்; பண் - இசைப் பாடல்கள் \ நீர்நிலைகளுமாம்; விரவு - செறிந்த; பணி - பாம்புகள்; பகரும் - கூறப்படும்; விண் - வானம்; கழுது - பேய்; பழுது - குற்றம்; களிறு - யானை \ இராமன்)

அப்பொழுது, இந்திலத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் துயின்றன; அசையாது நிலை பெற்றிருக்கும் மலையில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் தூங்கின. குற்றமில்லாத நீர் நிலைகளும் உறக்கம் கொள்வனவாயின; நாகலோகத்தில் வதியும் பாம்புகளும் சிறிது கண்ணயர்ந்தன; பெருமையாகச் சொல்லப்படும் ஆகாயத்தில் உலாவும் உயிரினங்களனைத்தும் தூங்கின; எப்பொழுதும் விழித்திருக்கக்கூடிய பேய்கள்கூடச் சிறிதுநேரம் கண்ணுறங்கின; ஆனால் நீண்ட திருப்பாற்கடலில் பள்ளி கொண்டு அறிதுயிலில் இருக்கும் ஒப்பற்ற யானை போன்ற இராமனின் குற்றமற்ற கண்கள் மட்டும் உறக்கமே பிடிக்காமல் விழித்திருந்தன.

மண், மலை, விண் என்பன அங்கு வாழும் உயிரினங்களைக் குறித்தன; பண் என்பதற்கு இசைப்பாடல்கள் என்று பொருள் கொண்டு, மண்ணிலும் மலையிலும் வாழும் குற்றமற்ற உயிரினங்கள் பாடல்களை ஒலிப்பதை மறந்து துயின்றன என்று பொருள் கொள்வாரும் உளர். பொதுவாகப் பேய்கள் இரவில் தூங்காது அலைந்து திரியும் என்பது வழக்கு. ஆனால் நடு இரவில் சற்று நேரம் பேய்களும் தூங்கும் என்பது இயற்கை. “பேயும் துயின்றதாம் பேர்யாமம்”

என்பது நளவெண்பா. அதுபோலவே கடலில் அலைகள் ஓயாது அடித்துக் கொண்டிருக்கும், தூங்காது என்பது வழக்கம். ஆனால் கடலும் ஒரு முகூர்த்த நேரம் ஓய்வெடுக்கும் என்கிறது சாத்திர நூல்கள். எப்பொழுதும் திருப்பாற்கடலில் அறிதுயில் கொண்டிருக்கும் திருமாலின் அம்சமாகிய இராமபிரான் கண்கள் தூங்கவில்லை என்று கூறுவது ஒரு நயம். இராமன் தூங்காதது கூறப்பட்டதால் இலக்குவனும் தூங்கவில்லை என்பது பெறப்பட்டது.

41. சூரியன் உதித்தல்

பொங்கி முற்றிய உணர்வு புணர்தலும், புகையினொடு
பங்கம் உற்று அனைய வினை பரிவு உறும்படி, முடிவுஇல்
கங்குல் இற்றது; கமலம் முகம் எடுத்தன; கடலில்
வெங்கதிர்க் கடவுள் எழ, விமலன் வெம்துயரின் எழ. (3853)

(விமலன் - குற்றமற்றவன்; மலம் - குற்றம்; முற்றிய - முதிர்ந்த; உணர்வு - மெய்யறிவு \ ஞானம்; பங்கம் - கேடு; பங்கமுற்று - கெட்டு; முடிவு - எல்லை; கங்குல் - இரவுப் பொழுது; இற்றது - கழிந்தது; முகம் எடுத்தல் - மலர்தல்; பொங்குதல் - மிகுதல்; புணர்தல் - கூடுதல்; பரிவுறுதல் - நலிதல் \ கெட்டு ஒழிதல்; எழுதல் - தோன்றுதல் \ உதித்தல் \ நீங்குதல்; புகை - அஞ்ஞானம்)

குற்றமற்றவனாகிய இராமன், தான் சீதையைப் பிரிந்திருக்கும் ஆறாத்துயரத்தினின்றும் சற்று மீண்டு வரும்படி கிழக்குக்கடலில் வெய்ய கதிர்களை உடைய சூரியன் உதித்தான். மிக்கு எழுந்து முதிர்ந்த மெஞ்ஞானம் வந்து சேரும் போது, புகையுடன் கூடிய சேறு போன்ற தீ வினைகள் எல்லாம் நலிந்து அழிந்து போகும்படி, முடிவே இல்லாது நீண்டு கொண்டே சென்ற இரவுப் பொழுதானது கழிந்து போயிற்று. அப்போது தாமரை மலர்கள் மலரலாயின.

இருளோடு கூடிய இரவுப் பொழுதிற்கு, அஞ்ஞானத்தோடு கூடிய தீவினை உவமை; கம்பனின் விசித்திரப்பாடல்களில் இதுவும் ஒன்று. நேர் பொருள் தாராது. ஞானோதயத்தால் வினைகள் அற்றுப்போவதைப் போல, சூரிய உதயத்தால், இராமபிரானது விரகதாபம் விலகியது என்பதாம். சூரிய ஒளி ஞானோதயம்; கங்குல் இருள் அஞ்ஞானத் துயர். இரவுப் பொழுதில் பெருந்துன்பம் அடையும் மனம், பகற்பொழுதில் சற்றுக் குறைவுபடுதல் இயற்கைதானே? விரகதாபத்தில் வாடுபவர்க்கு, இரவு நீட்டிப்பது போல் தோற்றமளிக்கும் என்பது நாம் முன்பு கண்டதே, எனவே “முடிவுஇல் கங்குல்” என்றார் என்க.

42. இருவரும் சீதையைத் தேடி மீண்டும் செல்லுதல்

காலையே கடிது, நெடிது ஏகினார்; கடல் கவினு
சோலைஏய் மலை தழுவு கான் நீள்நெறி தொலைய,
ஆலைஏய் துழனி, அகன்நாடர், ஆர்கலி அமிழ்து
போலவே, உரைசெய் புனமானை நாடுதல் புரிஞர். (3854)

(ஆலை - கரும்பாலைகள்; துழனி - ஒலி; அகன் - அகன்ற \ விசாலமான \ பரந்த; நாடு - நிலப்பரப்பு; ஆர்கலி - கடல்; நாடுதல் புரிஞர் - தேடுபவர்கள்; கவினுதல் - விளங்குதல்; தொலைதல் - நீங்குதல் \ முடிவுறுதல்; கடிது - விரைந்து; புனம் - காடு; நெடிது - நெடுந்தூரம்)

கரும்பாலைகளிலிருந்து எழும் ஓசையுடன் கூடிய, விசாலமான நிலப்பரப்பை உடைய கோசல நாட்டினை அரசாள்வதற்கு உரியவரான இராம இலக்குவர், திருப்பாற்கடலிலிருந்து கிடைக்கப் பெற்ற தேவாமிர்தம் போன்ற் இனிமையான சொல்வளம் உடைய, காட்டு மானைப் போன்ற மருண்ட பார்வையையுடைய சீதாதேவியைத் தேடிக் கொண்டு செல்பவர்களாய், கடல் போல விளங்கும் பரந்த சோலைகளையும், அதைத் தழுவி நிற்கும் மலைகளையும் காட்டு வழிகளையும் நீங்கி, அன்று சூரியோதய நேரத்திலேயே, விரைவாக நெடுந்தூரம் கடந்து சென்றனர்.

"ஆலை ஏய் துழனி அகன் நாடர்" என்பதால் கோசல நாட்டின் நீர், நில வளங்கள் புலப்படுத்தப்பட்டன; சீதாதேவியின் சொல்லுக்குத் தேவாமிர்தம் உவமை.

பம்பைப் படலம் நிறைவுற்றது

2. அனுமப் படலம் (35 பாடல்கள்)

அனுமன் என்ற சுக்கீரீவனின் அமைச்சன், இராமபிரானைக் காண, மாணவப் பருவம் தாங்கி வந்து அவனுடன் உரையாடி, அவன் அருளைப் பெற்று, சுக்கிரீவனை இராம இலக்குவர்களிடத்து அழைத்து வரச் செல்லும் நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி என விரியும். இது 35 பாடல்களைக் கொண்டது. இது சில சுவடிகளில் "மராமரப் படலம்" என்ற தலைப்பில் உட்பகுதியாகவும், சில சுவடிகளில் "அனுமன் வந்தனைப் படலம்" எனவும், "அனுமார் காட்சிப் படலம்" எனவும் குறிக்கப் பெற்றுள்ளது.

இப்படலத்துள், ருசியமூக மலையில் ஏறிவரும் இராம இலக்குவர் தோற்றத்தைக் கண்ட சுக்கிரீவன் அஞ்சி ஒரு குகைக்குள் ஒளிந்து கொள்ளுதல்; அவன் ஏவ, அவனுடைய அமைச்சன் அனுமன் இராம இலக்குவரைத் தூரத்திலிருந்து மறைந்திருந்து நோக்கி, அவர்கள் தன்மை பற்றிச் சிந்தித்தல்; அவன் உடலில் ஏற்பட்ட சில மாற்றங்கள்; "இவர்களே தருமம்" என்று அனுமன் துணிதல்; அனுமன் அவர்கள் எதிர் சென்று அவர்களை வரவேற்றல்; இராமன் அனுமனை நோக்கி "நீ யார்?" என வினவுதல்; அனுமனின் சொற் செட்டான மாற்றம்; அனுமன் சொல்லாற்றலை இராமன் வியந்து பாராட்டி இலக்குவனுக்கு அறிவித்தல்; சுக்கிரீவனைக் காட்டுமாறு வேண்டுதல்; அனுமன் சுக்கிரீவனே தன்னை அங்கு ஏவியதாகவும், "உங்களை யார் என்று என் தலைவனுக்குத் தெரிவிப்பது?" என்றும் கேட்டல்; இலக்குவன் தங்கள் வரலாறு கூறுதல்; அனுமன் இராமனை வணங்கவும், இராமன் "ஒரு அந்தணன் இவ்வாறு வணங்குவது தவறு" என்று கூறவும், அனுமன் மறுமொழி கூறித் தனது பேருருவைப் புலப்படுத்துதல்; அதனைக் கண்ட இராமன் மிக மகிழ்ந்து அவன் ஆற்றலை இலக்குவனிடம் மீண்டும் புகழ்ந்து பேசுதல்; அனுமன் சுக்கிரீவனை அழைத்துவர விரைந்து செல்லுதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டு இருக்கின்றன.

1. இராம இலக்குவர் வருவதைக் கண்டு, சுக்கிரீவன் ஓடி ஒளிந்து கொள்ளுதல்

எய்தினார், சவரி, நெடிது, ஏய மால் வரை எளிதின்;
நொய்தின் ஏறினர், அதனின்; நோன்மைசால் கவியரசு
செய்வது ஓர்கிலன்; "அனையர் தெவ்வராம்" என வெருவி,
"உய்தும் நாம்" என விரைவின் ஓடினான் மலைமுழையின். (3855)

(நொய்தின் - விரைவாக; நோன்மை - வலிமை; கவியரசு - குரங்கினத் தலைவன் \ சுக்கிரீவன்; தெவ்வர் - பகைவர்; வெருவி - அஞ்சி \ பயந்து; ஓர்தல் - ஆராய்ந்தறிதல்; உய்தும் - பிழைத்துப் போவோம்; முழை - குகை; ஏய - ஏவிய \ கூறிய; நெடிது - விரிவாக)

முன்பு சபரி மிக விரிவாகக் கூறியனுப்பிய ருசிய மூக மலையை அணுகி, இராமனும் இலக்குவனும் சுக்கிரீவனைக் காணப் போகும் ஆவலால் எளிதாகவும் விரைவாகவும் அதன் மீது ஏறிச் சென்றனர்; இதனைக் கண்ட வலிமை மிக்க குரங்குகளின் தலைவனான சுக்கிரீவன் இவர்கள் வாலியால் அனுப்பப்பட்ட பகைவர்கள் என்று அச்சமுற்று என்ன செய்வதென்று உணராது, இப்போதைக்கு நாம் தப்பிப் பிழைத்தால் போதும் என்று எண்ணி, அம்மலையிலிருந்த ஒரு குகைக்குள் விரைவாக ஓடி நுழைந்து தன்னை ஒளித்துக் கொண்டான்.

"சவரி நெடிது ஏய மால்வரை" என்றது; அம்மலைக்குச் செல்லும் நீண்ட வழியின் கடுமை பற்றி முன் படலத்தில் சபரி நினைந்து விரிவாகக் கூறியதைப் புலப்படுத்தியது. சபரி கூறிய அக்கடுமையான வழியை இவர்கள் எளிதாகவும், விரைவாகவும், அடைந்தனர் என்பது அவர்களது ஆற்றலையும், அவசரத்தையும் உணர்த்தியது என்க. சுக்கிரீவன் வாலிக்குப் பயந்துதான், அவன் அணுக முடியாது இந்த மலையில் ஒளிந்து கொண்டிருக்கிறான். எனவே அவனுக்குக் கண்ணில்படுவோர் எல்லோரும் பகைவர்களாகவும், வாலியால் அனுப்பப்பட்டவர்களாகவுமே தெரிகிறார்கள் என்பதை உள்ளடக்கியது தெவ்வராம் இவர்கள் என்ற சொற்றொடர். "உய்தும் நாம்" என்பது, தனது ஏனைய அமைச்சர்களையும், உளப்படுத்திக் கூறியதாம். விரைவில் ஓடினான் என்பது அவனது அச்சத்தை மீண்டும் குறிக்க என்க.

2. அமைச்சர்களும் அனுமனை ஏவிய பின் குகைக்குள் ஒளியச் செல்லுதல்

"காலின் மா மதலை! இவர் காண்மினோ! கறுவுடைய
வாலி ஏவலின் வரவினார்கள் தாம்; வரிசிலையர்;
நீலமால்வரை அனையர்; நீதியா நினைதி" என,
மூலம் ஓர்கிலர்; மறுகி ஓடினார், முழை அதனின். (3856)

(மூலம் - காரணம்; ஓர்தல் - உணர்தல்; கால் - காற்று \ வாயுதேவன்; மா - பெருமை \ சிறந்த; மதலை - புதல்வன்; கறு - பகைமை \ ஆழ்ந்த வஞ்சினம் \ வன்மம்; வரி - கட்டமைந்த; சிலை - வில்; மால் - பெரிய; வரை - மலை; நீதி - முறைமை; நினைதல் - ஆராய்தல்; மறுகி - கலங்கி; முழை - குகை)

இராம இலக்குவர் வருகின்ற காரணத்தை ஆராய்ந்து அறியத் தெரியாதவர்களாகிய சுக்கிரீவனின் ஏனைய அமைச்சர்கள், அனுமனை நோக்கி," காற்றரசனின் பெருமை பொருந்திய சிறந்த புதல்வனே! இவர்களைப் பார்; இவர்கள் நம் மீது ஆழ்ந்த பகைமை கொண்ட வாலியின் கட்டளையினால்

இங்கு வந்திருப்பவர்களாகத்தான் இருக்க வேண்டும். கையில் கட்டமைந்த வில்லினை ஏந்தியிருக்கின்றனர்; நீலநிறமுடைய பெரிய மேரு மலையை ஒத்து விளங்குகின்றனர்; முறைமையாக ஆராய்ந்து பார்" என்று கூறி மனக்கலக்கமுற்று, சுக்கிரீவன் முன்பு நுழைந்த அதே குகைக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர்.

வாயு தேவன் அருளால் அஞ்சனைக்குப் பிறந்தவன் அனுமன். எனவே "காலின் மாமதலை" என்றார். அனுமன் ஒருவன் தான் மிக்க துணிவும், ஆராயும் திறனும், நுண்ணிய அறிவும் படைத்தவன் என்பதைத் தெளிவாகச் சொல்லுகின்ற பாடல் இது. அதனால்தான் அமைச்சர்கள் எல்லோருக்கும் அந்தப் பொறுப்பு இருந்தும், அவர்கள் முடிவெடுக்காது, அனுமனை ஆராய்ந்து முடிவு எடுக்கச் சொல்லுகிறார்கள் என்பதாம். வாலிக்குச் சாபம் இருப்பதால், அவன் தானே இரலையின் குன்றம் வாராது, இவர்களை ஏவி அனுப்பியிருக்கிறான் போலும் என்று எண்ணினர் என்பதாம். "வரவினார்கள்" என்ற சொல் புதிய சொல்லாட்சி என்பதை அறிக. "ருக்ஷரஜஸ்" என்ற பெண் குரங்கின் வாலைக் கண்டு காமுற்ற இந்திரனுக்கு மகனாக வாலியும், கழுத்தைக் கண்டு காமுற்ற சூரியனுக்கு மகனாகச் சுக்கிரீவனும் பிறந்தனர் என்பது ஒரு குறிப்பு. வாலி என்பதற்கு வாலில் வலியுள்ளவன் என்றும், வாலினின்றும் பிறந்தவன் என்றும் பொருள். வடமொழியில் கிரீவம் என்றால் கழுத்து, அழகிய கழுத்தை உடையவன் சுக்கிரீவன் என்பது பொருள்.

3. அனுமன், அமைச்சர்களிடம் "அஞ்ச வேண்டாம்" என்று கூறுதல்

அவ்விடத்து அவர் மறுகி, அஞ்சி, நெஞ்சு அழி அமைதி
வெவ்விடத்தினை மறுகு தேவர், தானவர், வெருவல்
தவ்விட, தனி அருளு தாழ் சடைக் கடவுள் என,
"இவ்விடத்து இனிது இருமின்; அஞ்சல்" என்று இடை உதவி. (3857)

(மறுகுதல் - மனம் கலங்குதல்; அமைதி - சமயம்; வெவ் - கொடிய; வெருவல் - அச்சம்; தவ்வுதல் - நீங்குதல்; தாழ் - நீண்டு தொங்குகின்ற; உதவுதல் - அருள் புரிதல் \ ஆறுதல் கூறுதல்)

"அந்த மலையில் சுக்கிரீவனும் ஏனைய அமைச்சர்களும் மனம் கலங்கி, அச்சமுற்று, உள்ளம் அழிந்த சமயத்தில், பாற்கடலைக் கடைந்த போது அமிர்தத்துடன் வெளிப்பட்ட ஆலகால விஷத்தைக் கண்டு மனம் கலக்கமுற்ற தேவர்களும் அசுரர்களும் அவ்வச்சம் நீங்கும்படி, தான் ஒருவனாகவே தனித்து நின்று அவ்விஷத்தைக் தானே உண்டு அருளிய, தொங்குகின்ற நீண்ட சடை முடியை உடையவனான சிவபெருமானைப் போல, அனுமனும், "இந்த இடத்திலேயே அமைதியாக இருங்கள்; பயப்படாதீர்கள்" என்று ஆறுதல் கூறி - பாடல் தொடர்கிறது.

பாற்கடலைக் கடைந்த பொழுது வாசுகி என்னும் பாம்பின் மூலம் எழுந்த ஆலகாலத்தைக் கண்டு தேவர்களும் அசுரர்களும் அஞ்சி ஓட, அவர்களைத்

தடுத்து நிறுத்தி, தானே அக்கொடிய விஷத்தைப் பருகினான் சிவபெருமான் என்பது புராண வரலாறு. அன்று அவன் அவ்வாறு உதவியது போல, இன்று அனுமன், சுக்கிரீவன் முதலியவர்களுக்கு ஆறுதல் கூறி அருள் புரிந்தான் என்று அனுமனைச் சிவபெருமானுக்கு உவமித்தார். காரணம் அனுமன் சிவபெருமானின் அம்சம் என்பது தேவ ரகசியம். அந்த நஞ்சை உண்பதற்கு வேறு எவரும் முற்பட்டு வாராததால் சிவபெருமான் தானே உட்கொள்ள வேண்டியதாயிற்று என்பதைக் குறிக்க, "தனி அருளு தாழ்சடைக் கடவுள்" என்றார் என்க. அங்கே கரிய நிற நஞ்சினைக் கண்டு வானவர்கள் அஞ்சினார்கள். இங்கே கரிய நிற இராமபிரானைக் கண்டு வானரர்கள் அஞ்சினார்கள் என்று கூறியது ஒரு நயம். அங்கே வானவர்களை அஞ்சாதீர்கள் என்று அருள் புரிந்தது சிவபெருமான் இங்கே வானரர்களை அஞ்சாதீர்கள் என்று ஆறுதல் கூறியது அனுமன்.

4. அனுமன் மாணவ உருவம் கொண்டு செல்லுதல்

> **அஞ்சனைக்கு ஒரு சிறுவன், அஞ்சனக் கிரி அனைய**
> **மஞ்சனைக்குறுகி, ஒரு மாணவப் படிவமொடு,**
> **"வெஞ்சமத் தொழிலர், தவமெய்யர், கைச்சிலையர்" என,**
> **நெஞ்சு அயிர்த்து, அயல் மறைய நின்று, கற்பினின் நினையும். (3858)**

(ஒரு - ஒப்பற்ற; சிறுவன் - மகன்; மாணவன் - மாணாக்கன் \ பிரமச்சாரி; படிவம் - உருவம்; அஞ்சனம் - மை; குறுகி - அணுகி; சமம் - போர்; அயிர்த்தல் - ஐயம் கொள்ளுதல்; கற்பு - இங்கே உய்த்துணர்தல் \ அறிவுக் கண்; நினைதல் - சிந்தித்தல்; மஞ்சன் - மைந்தன்)

அஞ்சனை என்பாள் பெற்றெடுத்த ஒப்பற்ற மகனாகிய அனுமன், மை போன்ற கரிய நிறமுடைய மலை போன்ற தோற்றத்தவனான தசரதனின் குமாரனாகிய இராமனை அணுகி, ஒரு பிரமசாரி வேடம் கொண்டு, அருகில் மறைந்து நின்று கொண்டு, இராம இலக்குவரை நோக்கி, "இவர்கள் கையில் வில்லை ஏந்தியிருக்கின்றனர்; எனவே போர் செய்வதில் வல்லவராய் இருத்தல் வேண்டும். என்றாலும் அதற்கு மாறாக, தவவேடம் பூண்ட உடம்பை உடையவராய் இருக்கின்றனரே" என்று மனத்தில் சந்தேகம் கொண்டு, தனது கல்வியறிவினாலும் உய்த்துணரும் ஆற்றலாலும் பின்வருமாறு மேலும் சிந்திக்கலானான்.

அஞ்சனா தேவியின் மைந்தன் என்பதால் அனுமனுக்கு ஆஞ்சநேயன் என்பது தத்திதாந்தப் பெயர். அஞ்சனக்கிரி இராமபிரானுக்கு நிறத்தாலும் திறத்தாலும் உவமை. மஞ்சன் என்பது மைந்தன் என்பதன் போலி. தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தன் என்பது பொருள். மைந்து என்ற சொல்லுக்கு வலிமை என்பதும் பொருள். எனவே வல்லமையுடையவன் என்ற பொருளும் தந்து நின்றது. அனுமன் இராமனைக் காண ஒரு பிரமசாரி வடிவம் கொண்டே சென்றான். மாறுவேடம் கொள்வது ஒற்றர்களுக்கு இயல்பு. இப்பொழுது

அனுமன், சுக்ரீவன் வேண்டுகோளுக்கு இணங்கி, "இவர்கள் யார் பகைவரோ?" என்று ஒற்றறியவே வந்து இருக்கிறான் என்பதனால் மாறுவேடத்தில் வந்தான் என்க. இவர்களுடைய தோற்றத்திற்கும் செயல்பாட்டிற்கும் வேறுபாடு தெரிந்ததால் ஐயம் கொண்டான் என்க. நேருக்கு நேர் செல்லாது முதலில் மறைந்து நின்று நிலைமையைத் தெரிந்து கொண்ட பின், எதிரில் செல்லுதல் ஒற்றர்களுக்கு உரிய தகுதிகளில் ஒன்று. எனவே மறைந்து நின்று நோக்கினான் என்க. கற்பு என்பது கல் என்ற உரிச்சொல்லின் அடியில் பிறந்தது. கற்கப்படுவது கற்பு. எனவே தன் கல்வியறிவினால் சிந்தித்தான் என்பதாம். கல்வியறிவு, உய்த்துணரும் திறமையையும் உள்ளடக்கியது என்பதை உணர்க. தவவேடம் கொண்டு வில் தாங்கியவராய் இருத்தலின் இவர்கள் முனிவரோ அல்லது அரசரோ என்று ஐயம் கொண்டான் என்பதாம். இதேபோல, முன்பு சடாயுவும் இவர்கள் தோற்றத்தைக் கண்டு ஐயுற்றதை நினைவு கூர்க. "வினையறு நோன்பினர் அல்லர்; வில்லினர்; புனைசடை முடியினர்; புலவரோ?" என்பது பாடல் பகுதி. அனுமன் வேறு வடிவத்தில் வந்து இராமனைக் கண்டதாகவும் இந்த வேடத்தில் போகும்படி சுக்கிரீவனே ஏவியதாகவும் வான்மீகம் கூறும்.

5. அவர்கள் இருவரும் யார் என, அனுமன் ஆராய்தல்

"தேவருக்கு ஒரு தலைவராம் முதல் தேவர் எனின்,
மூவர்; மற்று இவர் இருவர்; மூரிவில்கரர்; இவரை
யாவர் ஒப்பவர் உலகில்? யாது இவர்க்கு அரிய பொருள்?
கேவலத்து இவர் நிலைமை தேர்வது எக்கிழமை கொடு?" (3859)

(ஒரு - ஒப்பற்ற; மூரி - வலிய; கரர் - கரத்தவர்; கிழமை - தகுதி \ உரிமை \ தொடர்பு; கேவலம் - எளிது \ எளிமை \ தனி \ உயர்வுமாம்; பொருள் - செயல்; தேர்வது - தெளிவது)

"தேவர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவர்களாகிய முதல் தேவர்கள் என்று எண்ணுவோம் என்றால் அவர்களோ பிரமன், விஷ்ணு, சிவன் என்ற மூன்று பேர்கள். இவர்களோ இருவராய் இருக்கிறார்கள். அவர்கள், சூலம், திகிரி, வேதம் ஆகியவற்றைத் தாங்கி இருப்பார்கள். ஆனால் இவர்களோ வலிய வில்லைத் தாங்கி இருக்கின்றார்கள். இவருக்கு நிகராவார் இவ்வுலகில் யார் இருக்கிறார்கள்? இவர்களுக்குச் செய்தற்கரிய செயல் யாது இருக்கிறது? இவர்களின் தன்மையை எதை அளவு கோலாகக் கொண்டு எளிதாகத் தெளிவது?" என்று கருதலானான் அனுமன்.

இவர்கள் மூவராயில்லாமல் இருவராய் இருப்பதாலும், இவர்கள் சூலம், திகிரி, வேதம் முதலியன கைக்கொள்ளாமல் வலிய வில்லை ஏந்தியிருப்பதாலும், இவர்கள் முத்தேவர் அல்லர் என்று தெளிந்தான் அனுமன். "இவர்கள் முத்தேவர் இல்லையென்றாலும், இவர்களுக்கு ஒப்பானவர் யாரும் இவ்வுலகில் இருப்பார்களா? இவர்களால் செய்ய முடியாத காரியம் ஏதேனும் இருக்குமா? இவர்களை எவ்வாறு அறிந்து கொள்ளுவது?" என்று

தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான் அனுமன். இவர்களது தன்மையை அறியும் தகுதி தனக்கு உள்ளதா என்றும் எண்ணத் தொடங்கினான் என்க. கேவலம் என்ற சொல் எளிமை என்ற பொருளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டாலும், இங்கே இணையற்ற உயர்வு என்ற பொருளிலே அனுமனால் பயன்படுத்தப்பட்டமையை உணர்க. எனவே இராம இலக்குவர் தமக்கு வேறு உவமையில்லாதவர்கள் என்பதும், செயற்கரும் செயல்புரிபவர் என்பதும், அவர் தன்மையை யாராலும் உணர முடியாது என்பதும் பெறப்பட்டது.

6. அனுமன் ஊகித்தல்

சிந்தையில் சிறிது துயர் சேர்வுற, தெருமரலின்
நொந்து அயர்த்தவர் அனையர்; நோவுறச் சிறியர் அலர்;
அந்தரத்து அமரர் அலர்; மானிடப் படிவர்; மயர்
சிந்தனைக்கு உரிய பொருள் தேடுதற்கு உறும் நிலையர்; (3860)

(அந்தரம் - விண்ணுலகு; அமரர் - தேவர்; படிவர் - வடிவமுடையவர்; அயர்த்தல் - இளைத்தல்; நோ - துன்பம்; சிறியர் - சிறுமையுடையவர்; மயர் - மயங்கத்தக்க; தெருமரல் - குழப்பம் \ திகைப்பு)

"இவர்கள் கண் இமைத்தலாலும், கால்கள் நிலத்தில் தோய்தலாலும் விண்ணுலகத்துத் தேவர்கள் அல்லர்; மானிட வடிவமே கொண்டுள்ளனர்; இவர்கள் சிந்தையில் சிறிது துயரம் சேர்ந்திருப்பதனால், அக்குழப்பத்தினால் வருந்திச் சோர்வுற்றிருப்பதைப் போன்று காணப்படுகின்றனரே தவிர இயற்கையில் இவர்கள் சிறிய துன்பத்திற்காக வருந்தும் இயல்புடைய எளியவர்கள் அல்லர். இவர்கள் இவ்வாறு திகைத்து மயங்கத்தக்க ஒரு பொருளைத் தொலைத்து விட்டு அதைத் தேடிப் பெறும் நிலையில் உள்ளவர் போலத் தெரிகிறது" என்று அனுமன் அவர்கள் தோற்றத்தையும் முகக்குறிப்பினையும் கொண்டு ஒரு முடிவுக்கு வந்தான்.

"நோவுறச் சிறியர் அல்லர்" என்றதனால், இவர்கள் தொலைத்து விட்ட பொருள் சிறியது அல்ல. மிக்க துன்பம் தரக்கூடிய பெரிய பொருள் என்பது பெறலாயிற்று. "மானிடர்" என்பது, காசிப முனிவரின் மனைவியருள் ஒருத்தியான மனு என்பாளிடம் தோன்றியவர் என்று பொருள்படும்.

7. தருமமும், தகவும் இவர்தனம் எனும் தகையர்; இவர்,
கருமமும் பிறது ஓர்பொருள் கருதியன்று; அது கருதின்,
அருமருந்து அனையது, இடை அழிவு வந்துளது; அதனை,
இரு மருங்கினும், நெடிது துருவுகின்றனர், இவர்கள். (3861)

(தகவு - பெருந்தகைமை; தனம் - செல்வம்; தகை - இயல்பு; கருமம் - முயற்சி; மருந்து - அமிர்தம்; மருங்கு - பக்கம்; துருவுதல் - ஊடுருவித் தேடுதல்)

"இவர்கள் அறத்தையும், நல்லொழுக்கமாகிய பெருங்குணத்தையுமே செல்வமாகக் கருதும் இயல்புடையவர்கள் எனத் தோன்றுகிறது. இவர்கள் தேடி வந்த பொருளும் எளியது அன்று. அவ்வாறு கருதினால், இவர்கள் பெறுதற்கரிய

தேவாமிர்தம் போன்ற ஒரு பொருளை வழி நடுவில் தவறவிட்டதுபோலவும் தெரிகிறது. அப்பொருளை இங்கே இருபக்கங்களிலும் நெடுக, நெடிதாகப் பார்வையைச் செலுத்தித் தேடுகின்றனர்" என்று ஊகித்துக் கூறினான் அனுமன்.

"அருமருந்து" என்பது பாற்கடலில் தோன்றிய தேவாமிர்தத்தோடு உடன் தோன்றிய இலக்குமியின் அம்சமான சீதையைக் குறிப்பால் உணர்த்தியது என்க. அனுமன் சூரியனிடம் இருந்து ஒன்பது வகையான இலக்கண நூல்களையும், மற்ற சாஸ்திரங்களையும் கற்றறிந்த "நவவியாக்ரணப் பண்டிதன்". எனவே இவர்களின் முகக்குறிப்பைக் கொண்டே, இவர்கள் பெறுதற்கரிய ஒரு பொருளை நடுவழியில் தொலைத்துவிட்டு, அதை இப்பொழுது தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை உய்த்துணர்ந்து கூற முடிந்தது என்க.

8. "கதம் எனும் பொருண்மை இலர்; கருணையின் கடல் அனையர்;
இதம் எனும் பொருள் அலது, ஓர் இயல்பு உணர்ந்திலர் இவர்கள்;
சதமன் அஞ்சுறு நிலையர்; தருமன் அஞ்சுறு சரிதர்;
மதனன் அஞ்சுறு வடிவர்; மறலி அஞ்சுறு விறலர்;" (3862)

(கதம் - கோபம்; பொருண்மை - பொருளின் தன்மை; இதம் - நன்மை; சதமன் - சதம்; நூறு - மகம் \ யாகம் - சதமகன் \ இந்திரன்; நிலை - தோற்றம்; தருமன் - தரும தேவதை \ அறக்கடவுள்; சரிதர் - சரிதம் - ஒழுகலாறு \ ஒழுக்க முடையவர்கள்; மதனன் - மன்மதன் \ மதன் \ களிப்பை உண்டாக்குபவன்; மறலி - இயமன்; விறல் - ஆற்றல் \ வலிமை \ வீரப்பெருமிதம்)

"கோபம் என்னும் ஒரு தன்மையே இல்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். அத்துடனன்றி அதற்கு மாறான கருணையைக் கடல் போலப் பெரிதும் கொண்டவர்கள் போல் தோன்றுகின்றனர். நன்மை என்னும் ஒரு பொருளையல்லாது, அதற்கு மாறான தீமை என்னும் ஒன்றையே அறியாதவர்கள் போலவும் தோன்றுகின்றனர். இந்திரனே அச்சம் கொள்ளும்படியான தோற்றப் பொலிவையும், அறக்கடவுளே அஞ்சும்படியான ஒழுக்கத்தையும், மன்மதனே வெள்கும்படியான அழகிய வடிவத்தையும், கொடுமையான இயமனே அஞ்சும்படியான வல்லமையையும் பெற்றவர்களாகத் தோன்றுகின்றனர்" என்று அனுமானிக்கிறான் அனுமன்.

கோபம் இல்லாதது மட்டுமல்ல அதற்குரிய தன்மையே அவர்களிடம் காணப்படவில்லை. அதற்கு மாறாகக் கருணையின் கடலாகத் தென்படு கின்றனர். அவர்கள் தீமையின் சுவடே இல்லாத நன்மை பயப்பவர்களாகத் தெரிகிறார்கள்; என்பதாம். சதமகன் என்பது நூறு யாகங்களைச் செய்து முடித்து இந்திர பதவி பெற்று விளங்கும் தேவேந்திரனைக் குறிப்பது. இராம இலக்குவர், நல்லொழுக்கம், நல்ல தோற்றப் பொலிவு, வடிவழகு, ஆற்றல் எல்லாவற்றிலும் மேம்பட்டு விளங்குபவர் என்பதை உய்த்துணர்ந்தான் அனுமன் என்பதாம். தருமத்தைப் பரிபாலிக்கும் தேவன் தருமன் - தருமராஜன். இயமன் என்பவன் தருமராஜனின்றும் வேறானவன்.

9. அனுமன் தன் நிலை மறந்து நிற்றல்

என்பன பலவும் எண்ணி, இருவரை எய்த நோக்கி,
அன்பினில் உருகுகின்ற உள்ளத்தன்; ஆர்வத்தோரை
முன்பிரிந்து அனையர்தம்மை முன்னினான் என்ன நின்றான்;
தன் பெரும் குணத்தால் தன்னைத் தான்அலது ஒப்பு இலாதான். (3863)

(எய்த - ஊன்றி \ உற்று; ஆர்வத்தோர் - அன்புடையோர்; முன்னுதல் - எதிர்ப்படுதல்)

தன்னுடைய சிறந்த நற்குணங்களால் தன்னைக் காட்டிலும் மேம்பட்டோ, தனக்கு ஒப்பாகவோ வேறு ஒருவர் இல்லாதவனான அனுமன், மேற்கண்டவாறு பலவகையாகவும் எண்ணி, இராம இலக்குவரை உற்றுப் பார்த்து, அவர்கள் மீது கொண்ட அன்பினால் உருகுகின்ற நெஞ்சத்தை உடையவனாகி, தம்மிடம் மிகுந்த அன்பு கொண்டவர்களை முன்பு ஒரு முறை பிரிந்து, பின்னர் அவர்களை இப்பொழுது எதிர்ப்பட்டுப் பார்த்தவர் போலத் தன் நிலை மறந்து நின்றான் அனுமன்.

தனக்குவமை யில்லாதவன் அனுமன் என்பதாம். இது போல இராமனையும் கவிஞர் காவியப் போக்கில் பல இடங்களில் கூறியிருப்பதையும் உன்னுக. இராம இலக்குவரைக் கண்டதும், அனுமன் ஏதோ இவர்களை முன்பே நன்கு அறிந்து பழகியவன் போலவும், நடுவில் அவர்களைப் பிரிந்து இப்பொழுது மீண்டும் அவர்களைப் பார்ப்பது போலவும் ஒரு நிலை எய்தினான் என்பதாம். "பிரிந்தவர் கூடினால் பேசலும் வேண்டுமோ" என்பதை இங்கு நினைவு கூர்க. இவ்வாறே வீடணனும் இராமனை முதன் முதலாகக் கண்ட போதும், "முன்புறக் கண்டிலேன்; கேள்வி முன்பிலேன்; அன்புறக் காரணம் அறியகிற்றிலேன்; என்புறக்குளிரும்; நெஞ்சு உருகும்" என்று பின்னால் கூறப்போவதும் இங்கு ஒப்பு நோக்கத் தகும்.

10. விலங்கினங்களும் அவர்கள் மீது அன்பு செலுத்துதல்

"தன் கன்று கண்ட அன்ன தன்மைய, தறுகண் பேழ்வாய்
மின் கன்றும் எயிற்றுக் கோள்மா, வேங்கை என்று இனையவேயும்,
பின் சென்று, காதல்கூர, பேழ்கணித்து இரங்குகின்ற;
என் கன்றுகின்றது, எண்ணிப் பற்பல இவரை அம்மா? (3864)

(தறு - கொடிய; பேழ் - பிளந்த; கன்றுதல் - ஒத்திருத்தல்; எயிறு - பல்; கோள்மா - சிங்கம்; காதல் - அன்பு; கூர் - மிக; பேழ்கணித்தல் - மருண்டு விழித்தல் \ கண்முடி இருத்தலுமாம்; இரங்குதல் - உருகுதல்; கன்றுதல் - வருந்துதல்)

"கொடிய கண்களையும், அஞ்சாமையையும், பிளந்த வாயையும், மின்னலைப் போன்று ஒளிவீசும் பற்களையும் உடைய வலிமையான சிங்கம், வேங்கைப்புலி இன்னும் மற்ற கொடியவிலங்குகளும் கூட, இவ்விருவரையும்,

தத்தம் கன்றுகளைப் பார்ப்பது போல அன்பு கொண்டு பார்க்கும் தன்மையுடையனவாகி, அவர்கள் பின் சென்று, அவர்கள் மீது அன்பு மிகுதலால், மருண்டு விழித்து நின்று நெஞ்சம் உருகிப்போய் நிற்கின்றன. என்றால், சுக்கிரீவன் முதலான வானர வீரர்கள் இவர்களை என்ன வென்று எண்ணி இவ்வாறு அஞ்சி வருந்துகிறார்கள்?" என்று அனுமன் கருதலானான்.

விலங்குகளுள் மிக்க வலிமையுடையது சிங்கம். எனவே கோள்மா எனப்பட்டது. வேங்கைப்புலி என்பது பதினாறு அடி நீளமுள்ளதாய்ச் சிங்கம் போன்ற வலிமை உடைய மற்றொரு விலங்கு. இத்தகைய கொடிய விலங்குகளும் தத்தம் கன்றுகளைக் கண்டவிடத்து அன்பு மீதூர அவர்களைப் பாதுகாக்கும் என்பது புலப்படுத்தப்பட்டது. "காக்கைக்குத் தன் குஞ்சும் பொன் குஞ்சே" என்ற பழமொழியை நினைவு கூர்க. பொதுவாகக் கொடிய விலங்குகள் தத்தம் கன்றுகளைத் தவிர ஏனைய பிராணிகள், உயிரினங்கள் எல்லாவற்றையும் தம் பகையாகக் கருதிக் கொன்று தின்னவே முற்படும். ஆயின் இங்கே இராம இலக்குவரைக் கண்ட அக்கொடிய விலங்குகள் பகை கொள்ளாதது மட்டுமின்றி, தத்தம் கன்றுகளைக் கண்டது போல மகிழ்ந்து நெஞ்சம் உருகுகின்றன என்றது இராம இலக்குவரின் உயர்வைச் சிறப்பிக்கவே என்க. முன்பு இராமபிரான் வீதியில் வருதலைக் கண்ட அயோத்தி மக்களும் இதே நிலை அடைந்தனர் என்று கூறியதை இங்கு நினைவு படுத்திப்பார்க்க. "தன் பொருஇல் கன்று, தனிதாவி வரல்கண்டு, ஆங்கு அன்புருகு சிந்தையொடு, மா உருகுமா போல், என்புருக நெஞ்சுருக, யார் உருக கில்லார்" என்பது பாடல்பகுதி. எனவே சுக்கிரீவனும் மற்ற வானர வீரர்களும் இவர்களைப் பகைவராய்க் கருதி அஞ்சுவது தேவையற்றது என்பது அனுமனின் துணிபு.

11. பறவைகளும், மேகமும் உதவுதல்

மயில் முதல் பறவை எல்லாம், மணி நிறத்து இவர்கள் மேனி
வெயில் உறற்கு இரங்கி மீதா, விரிசிறைப் பந்தர் வீசி
எயில் வகுத்து எய்துகின்ற; விண்முகில் கணங்கள் எங்கும்
பயில்வுற, திவலை சிந்தி, பயப்பயத் தழுவும் பாங்கர். (3865)

(உறுதல் - படுதல்; மீதா - மீது \ மேல்; சிறை - சிறகுகள்; எயில் - அரண் \ மதில் \ பாதுகாப்பு; கணங்கள் - கூட்டங்கள்; பயில்வுறுதல் - பொருந்துதல்; திவலை - நீர்த்துளி; பயப்பய - மெல்லமெல்ல; பாங்கர் - பக்கம்; தழுவுதல் - சார்தல்; மணி - அழகிய \ நவ இரத்தினங்கள்; இரங்கி - வருந்தி; எய்துதல் - தொடர்ந்து செல்லுதல்)

மயில் முதலான பறவைகள் எல்லாம், அழகிய, இரத்தினம் போல் ஒளிவீசும் நிறத்தையுடைய இராம இலக்குவரின் மேனியில் வெயில் படுவதற்காக வருத்த முற்று, அவர்களின்மீது வெயிலின் தாக்கம் தெரியாதிருப்பதற்காகத் தங்களுடைய அகன்ற சிறகுகளைப் பந்தல் போல விரித்தும், அரண்போலச் சுற்றி வளைத்தும், அவர்கள் பின்னேயே தொடர்ந்து செல்கின்றன; ஆகாயத்திலுள்ள

மேகக் கூட்டங்களும் அவர்கள் போகும் இடங்கள் எங்கும் உடன் சென்று, நீர்த்துளிகளைச் சிதறி, மெல்ல மெல்ல அவர்கள் பக்கம் போய்த்தழுவிச் செல்கின்றன.

இவர்கள் போகும் வழியெங்கும் இவர்கள் மேல் வெயில் படாதிருப்பதற்காக, மயில் போன்ற பறவைகளெல்லாம் நிழல் தந்தும், மேகக் கூட்டங்கள் தம் நீர்த் துளிகளைச் சிந்தி, குளிர்ச்சி தந்தும், உடன் சென்றன என்பதாம். மணி என்பதற்குப் பொதுவாக நவரத்தினங்கள் போன்ற நிறமுடைய மேனி என்று பொருள் கூறினாலும் இராமன் மேனிக்குக் கருநீல மணியும் இலக்குவன் மேனிக்கு மாணிக்க மணியும் உவமையாகக் கொள்ளுதல் பொருந்தும். இதே போலப் பறவைகள் சிறகு விரித்துக் காக்கும் செய்தியை சூடிக் கொடுத்த சுடர்க் கொடி ஆண்டாளின் நாச்சியார் திருமொழியிலும் காணலாம். “மேலால் பரந்த வெயில் காப்பான்; வினதை சிறுவன் சிறகென்னும் மேலால் பின் கீழ்வருவானை விருந்தாவனத்தே கண்டோமே” என்பது பாடல் பகுதி.

12. புல்லும் கல்லும் கூட உதவுதல்

காய்எரி கனலும் கற்கள், கள்ளுடை மலர்களே போல்,
தூய செங்கமலப்பாதம் தோய்தொறும் குழைந்து தோன்றும்;
போயின திசைகள் தோறும், மரனொடு புல்லும் எல்லாம்,
சாய்வுறும் தொழுவபோல்; இங்கு இவர்களோ தருமம் ஆவார்? (3866)

(காய்தல் - சுடுதல்; எரி - நெருப்பு; கனலுதல் - வெதுப்புதல்; தோய்தல் - பதிதல்; கள் - தேன்; மரன் - மரம்; தருமம் - தரும தேவதை \ அறக்கடவுள்; கற்கள் - பருக்கைக் கற்கள்; குழைந்து - நெகிழ்ந்து \ மென்மையாக; தொழுதல் - வணங்குதல்)

“சுட்டுப் பொசுக்குகின்ற நெருப்பைப் போல் வெதுப்பும் பருக்கைக் கற்கள் எல்லாம், இவர்களுடைய தூய்மையான, சிவந்த, தாமரை மலர் போன்ற திருவடிகள் பதியும் போதெல்லாம், தேனையுடைய அன்றலர்ந்த மலர்கள் போல மென்மையானதாகி நெகிழ்ந்து தோன்றுகின்றன. இவர்கள் போகும் வழியெல்லாம் இருக்கும் ஓரறிவுடைய மரங்களும், மற்றும் புல் முதலானவைகளும் இவர்களைக் கண்டு வணங்குவது போலச் சாய்ந்து நிற்கின்றன. என்றால் இவர்கள்தாம் தருமம் என்று கூறக்கூடிய தரும தேவதைகளோ?” என்று அனுமன் தனக்குள் நினைத்துக் கொள்கிறான்.

இதுபோல மரங்களும், மலர்களும் வணங்கிய செய்தி ஒன்று பெரியாழ்வார் திருமொழியில் காணக் கிடைக்கிறது. “ஆயர் பெருமான் அவனொருவன் குழல் ஊதின போது, மரங்கள் நின்று மதுத் தாரைகள் பாயும், மலர்கள் வீழும், வளர் கொம்புகள் தாழும், இரங்கும், கூம்பும், திருமால் நின்ற பக்கம் நோக்கி, அவை செய்யும் குணமே” என்பது பாடல் பகுதி. இராம இலக்குவரிடம் உள்ள தெய்வீகத் தன்மையால்தான் இவ்வாறு புல்லும் கல்லும், மரங்களும் கூட இவர்களுக்கு உதவி புரிகின்றன என்று அனுமன் உய்த்துணர்கிறான் என்பதாம்.

13. அனுமன் தன் நிலை மறத்தல்

"துன்பினைத் துடைத்து, மாயத் தொல் வினைதன்னை நீக்கி,
தென்புலத்து அன்றி, மீளா நெறி உய்க்கும் தேவரோதாம்?
என்பு நெக்கு உருகுகின்றது; இவர்கின்றது அளவுஇல் காதல்;
அன்பினுக்கு அவதிஇல்லை; அடைவு என்கொல்? அறிதல் தேற்றேன்."(3867)

(துன்பு - துன்பம் \ பிறவித் துன்பம்; துடைத்தல் - அழித்தல்; மாயம் - மயக்கம்; தொல் - பழமையான; தென்புலம் - தென்திசை \ எமலோகம்; மீளா - மீண்டுவருதல் இல்லாத; நெறி - முக்தி நெறி; மோட்ச பதவி; உய்த்தல் - செலுத்துதல்; என்பு - எலும்பு; நெக்கு - நெகிழ்ந்து; இவர்தல் - வளர்தல்; அவதி - எல்லை; அடைவு - தொடர்பு \ இயைபு \ நலம் \ காரணம்; தேற்றல் - இயலுதல், தெளிதல்; தேவர் - கடவுள்)

"பிறவிப் பிணியாகிய துன்பத்தை ஒழித்து, அதற்குக் காரணமாகிய மாயை மிக்கதான, பழமையான நல்வினை தீவினைகளையும் நீக்கி, தென் திசையிலுள்ள இயமனின் லோகத்துள் செலுத்தாமல், சென்றவர் மீண்டும் பிறப்புறாத முக்தி நெறியாகிய பரமபதத்துள் செலுத்தும் ஆற்றல் பெற்ற கடவுளர்களே இவ்வாறு தவவேடத்தில் வந்துள்ளார்களோ? இவர்களைக் காணும்போது எனக்கு எலும்பெல்லாம் நெகிழ்ந்து உருகிப் போகின்றது; இவர்களைக் காணும் போதெல்லாம் நான் இவர்கள் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பு மேலும் மேலும் வளர்கின்றது. இவர்களிடம் நான் கொள்ளுகின்ற அன்பினுக்கு ஒரு எல்லையே இல்லை போலத் தோற்றுகின்றது. இதற்கு என்ன காரணம்? இவர்களுக்கும் எனக்கும் என்ன தொடர்பு? என்னால் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லையே?" என்று அனுமன் செயல் மறந்து நிற்கின்றான்.

பிறவித் துன்பங்கள் என்பன மூன்று வகைப்படும். அவை தன்னைப் பற்றி மட்டும் வருவது; அது ஆதியாத்மிகம்; பிற உயிர்களால் வருவது ஆதிபௌதிகம்; எனப்படும்; தெய்வத்தால் நிகழ்வது ஆதி தெய்வீகம் எனப்படும். இவை முறையே ஆகாமியம், சஞ்சிதம், ப்ராரப்தம் என்றும் வழங்கப்பெறும். "தொல்வினை" என்பது வினைகள் அனாதி என்பதைக் குறித்தது. "மீளா நெறி" என்பது மீண்டும் பிறப்பு வாராத பரமபத நெறி என்பதைக் குறிக்கும். இராமன் இத்தகைய ஆற்றல் பெற்றவன் என்பதைச் சரபங்கன் பிறப்பு நீங்கு படலத்திலும், சபரி பிறப்பு நீங்கு படலத்திலும் கண்டமையை இங்கு நினைவு கூர்க. பொதுவாக இறைவனைக் கண்டால் தெய்வப் பற்றுடையார்க்கு என்பு உருகும் என்பதைத் திருவாசக வரிகளால் உணரலாம். "நினைத்தொறும், காண்தொறும், பேசும்தொறும், எப்போதும் அனைத்து எலும்பும் உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையான்" என்பார் மணிவாசகர்; "இரும்பு தரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என்பு உருக்கி" என்பதும் திருவாசகம். கம்பர், அனுமன் இவ்வாறு மறைந்து நின்று தனக்குள் சிந்தித்துக் கொண்டு பின்னர் அவர்கள்

முன் செல்கிறான் என்பார். ஆனால் வான்மீகி, அனுமன் வந்த உடனேயே, நேரடியாகவே இராம இலக்குவரைக் கண்டு பேசினான் என்பார்.

14. அனுமன், அவர்கள் முன் சென்று வரவேற்றல்

இவ்வழி எண்ணி, ஆண்டு, அவ்விருவரும் எய்தலோடும்,
செவ்வழி உள்ளத்தானும், தெரிவுற, எதிர்சென்று எய்தி,
"கவ்வை இன்று ஆக நுங்கள் வரவு" என, கருணையோனும்,
"எவ்வழி நீங்கியோய்? நீ யார்?" என, விளம்பல் உற்றான். (3868)

(செவ்வழி - செம்மையான வழி \ சிறந்த வழி; தெரிவுற - தெரியுமாறு; கவ்வை - துன்பம்; நீங்குதல் - வருதல்)

இவ்வாறு மறைந்து நின்று பலவாறாக எண்ணிக் கொண்டிருந்த போது, தான் இருக்கும் இடத்திற்கு அருகில் இராம இலக்குவர் வந்து சேர்ந்த அளவில், சிறந்த நெறிகளையுடைய உள்ளத்தையுடைய அனுமனும், தன்னை அவர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம், அவர்கள் எதிரில் சென்று நின்று அவர்களை நோக்கி, "வாருங்கள்; உங்கள் வரவு துன்பம் இல்லாத நல்வரவு ஆகுக!" என்று கூறி வரவேற்க, கருணைக் கடலான இராமபிரானும் அனுமனை நோக்கி, "நீ எங்கிருந்து வருகிறாய்? நீ யார்?" என வினவ, அனுமனும் அதற்கு மாற்றம் கூறத் தொடங்கினான்.

சுக்கீரிவன் முதலான வானர வீரர்கள், இராம இலக்குவர் அங்கு வருவதைக் கண்டு, "இவர்கள் வாலியால் ஏவப்பட்டவர்களாக இருக்கலாம், இவர்களால் நமக்குத் தீங்கு நேரிடலாம் என்னவென்று அறிந்து வா" என்று கூறி அனுமனை அனுப்பினர். எனவே அவர்களை மனத்தில் கொண்டு, "கவ்வை இன்றாக நுங்கள் வரவு" என்றான் என்க. அனுமன் முக்காலமும் உணர்ந்தவன், எனவே இப்பொழுது இராம இலக்குவர் படுகின்ற துன்பம் இல்லாது போகட்டும் என்று தான் கருதி, "கவ்வை இன்றாக நுங்கள் வரவு" என்று கூறினான் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்துவதைக் காண்க. அது மலைப் பிரதேசம். அருகில் எந்த வழியையும் இராமன் காணவில்லை. எனவே அனுமன் எந்த வழியாக வந்தான் என்பதை அறிய முடியவில்லை. எனவே "எவ்வழி நீங்கியோய்" எனக் கேட்டான் என்க.

15. அனுமன் மறுமொழி

"மஞ்சு எனத்திரண்ட கோல மேனிய! மகளிர்க்கெல்லாம்
நஞ்சு எனத் தகையவாகி, நளிர் இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அனுமன் என்பேன்." (3869)

(மஞ்சு - மேகம்; கோல - அழகிய; நளிர் - குளிர்ச்சி; தேம்பா - வாடாத; கஞ்சம் - செந்தாமரை மலர்; செய்ய - சிவந்த; காற்றின் வேந்தன் - வாயுதேவன்; நாமம்

- பெயர்; அனு - கன்னம்; அனுமன் - கன்னம் சிதைந்தவன்; தகைமை - தன்மை; இரும் - பெரிய; கம் - நீர்; கஞ்சம் - நீரில் பிறப்பது)

"மேகம் போலத் திரண்ட அழகிய நீல நிற மேனியை உடையவனே!" உன்னைக் காணும் பெண்களுக்கெல்லாம், விஷம் என்று கூறும்படியான தன்மையுடையதும், குளிர்ச்சி பொருந்திய பெரிய பனிக்குக் கூட வாட்டமுற்றுக் கூம்பாத செந்தாமரை மலர் போன்று மலர்ந்து சிவந்த கண்களையும் உடையவனே! நான் காற்றின் அரசனாகிய வாயுதேவனுக்கு அஞ்சனையின் வயிற்றில் மகனாகப் பிறந்தேன். என்னுடைய பெயரும் அனுமன் என்பேன்" என்றான் அனுமன்

மனைவியைப் பிரிந்திருந்தாலும், வாடாத மலரைப் போன்று ஒளி குன்றாத கண்கள் என்று இராமபிரானின் கண்ணழகில் ஈடுபட்டான் அனுமன் என்பதாம். அவனைக் கண்ட பெண்களுக்கு எல்லாம் காதல் நோயை உண்டாக்கி வருத்தம் செய்விக்கின்ற கண்கள் என்பதனால் அதை "நஞ்செனத் தகையவாகிய கண்" என்றான் என்க. "ஏழையர் கூவி உண்ணும் இணை கூற்றம் கொலோ? அறியேன்; ஆழிஅம் கண்ணபிரான் திருக்கண்கள் கொலோ? அறியேன்" என்பது திருவாய்மொழி. அஞ்சனை என்பவள் புஞ்சகஸ்தலை என்னும் தேவமாதின் சாபத்தால் குரங்காகிப் போனாள்; பின்னர் கேசரி என்னும் ஒரு ஆண் குரங்கை மணந்து கொண்டாள். இவளை வாயுதேவன் விரும்பிக் காதலித்தான். அவர்களிருவருக்கும் பிறந்தவன்அனுமன். இச்செய்திகள் உத்தரகாண்டத்தில் காணப்படுகின்றன. இவனுக்கு இயற்பெயர் சுவர்ணமேரு என்பது; சுவர்ணம் என்றால் பொன் என்பது பொருள். பொன் போன்ற நிறமுடையவனாதலாலும், மேரு மலை போன்ற பேருருவம் கொண்டவனாதலாலும் இப்பெயர் பெற்றிருக்க வேண்டும்.

இவன் பிறந்தவுடன் வானத்தில் தோன்றிய சிவந்த சூரியனைக் கண்டு, அது ஓர் பழம் எனக் கருதி, அதைப் பிடிப்பதற்காகத் தாவும் பொழுது, அதைக் கண்ணுற்ற இந்திரன் தனது வச்சிரப்படையால் அவனைத் தாக்கினான். அதனால் அனுமனின் வாய்ப்பூட்டு நழுவிக் கன்னம் சற்றுத் தாழ்ந்து சிதைந்து போயிற்று. எனவே அனுமன் எனப்பட்டான். அனு என்ற சொல் கன்னத்தைக் குறிக்கும் அனுமன் என்பது நீண்ட அல்லது தாழ்ந்த கன்னங்களையுடையவன் என்று பொருள் தரும்.

16. "இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன்; தேவ! நும்வரவு நோக்கி
விம்மல் உற்று அனையன் ஏவ, வினவிய வந்தேன்",என்றான்
எம்மலைக் குலமும் தாழ, இசை சுமந்து, எழுந்த தோளான். (3870)

(பரிதி - சூரியன்; செல்வன் - மகன்; ஏவல் - பணி; விம்மல் - துன்பம் \ கலக்கம்; ஏவ - அனுப்ப; வினவிய - கேட்டு அறியும் பொருட்டு; இசை - புகழ்; எழுந்த - உயர்ந்த; செம்மல் - தலைவன் \ அரசன்; தேவன் - இறைவன் \ கடவுள்)

புகழைச் சுமத்தலால், எந்த மலைக் கூட்டமும் தாழ்ந்து போகும்படி, உயர்ந்த தோள்களை உடையவனான அனுமன், இராமனை நோக்கி, "தேவனே! இந்த மலையில் தங்கி இருந்து வாழ்ந்து வருகின்ற, சுட்டெரிக்கும் கிரணங்களையுடைய சூரியனுடைய புதல்வனும், எங்களுக்குத் தலைவனுமாகிய சுக்ரீவன் என்பவனுக்கு அடிமைத் தொழில் செய்பவன் நான்; நீங்கள் வருவதைக் கண்டு, மனம் பூரித்து, உங்கள் வரவின் காரணம் பற்றி உங்களைக் கேட்டு வருமாறு அவன் பணித்து என்னை அனுப்பியிருக்கிறான். எனவே தங்களிடம் அதனைக் கேட்டு அறிந்து போவதற்காக வந்துள்ளேன்" என்றான் அனுமன்.

"இம்மலை" என்று அனுமன் கூறியதால், இப்பொழுது அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் இடமே ருசிய மூகமலை - இரலைக் குன்றம் - என்பது பெறப்படுகிறது. "இருந்து வாழும்" என்றதனால், அவன் இப்போது இங்கே தங்கியிருந்து வருகிறான். இவனுக்கு உரிமையுடைய இடம் வேறு இருக்கிறது என்னும் பொருளையும் தருதல் காண்க. தன் தலைவனைச் செம்மல் என்று புகழ்ந்து, தன்னை ஏவல் செய்பவன் என்று கூறிக் கொள்வதிலிருந்து அனுமனின் அடக்க உணர்வு புலனாவதை உணர்க. அனுமன் இராமனை, முன் பாடலில் "மீளா நெறி உய்க்கும் தேவர்தாமோ?" என்று எண்ணியபடியே, இப்பாடலில் இராமனைத் "தேவ" என்று அழைத்து, மேலே கூறும் பாங்கினையும் கருதுக. விம்மல் என்ற சொல் கலக்கம், பூரிப்பு என்ற இருபொருளையும் தரும் ஒரு அற்புதமான சொல். உண்மையிலேயே சுக்கீரிவனும், வானரர்களும் கலக்கம் அடைந்திருக்கிறார்கள் என்பதை, தான் அறிந்திருந்தாலும், அவர்கள் உங்கள் வரவால் பூரித்துப் போய் என்னை இங்கு அனுப்பியிருக்கிறார்கள் என்ற பொருள்படும்படி கூறும் அனுமனின் கூரிய சொல் வன்மையும், கம்பனின் கவித்திறமும் வியந்து போற்றுதற்குரியது.

17. இராமன் அனுமனைப் பாராட்டத் தொடங்குதல்

மாற்றம் அ∴து உரைத்தலோடும், வரிசிலைக் குரிசில் மைந்தன்
தேற்றம் உற்று, இவனின் ஊங்கு செவ்வியோர் இன்மை தேறி,
"ஆற்றலும், நிறையும், கல்வி அமைதியும், அறிவும் என்னும்
வேற்றுமை இவனோடு இல்லையாம்" என, விளம்பலுற்றான். (3871)

(மாற்றம் - மறுமொழி \ விடை; வரி - கட்டமைந்த; சிலை - வில்; குரிசில் - தசரதச்சக்கரவர்த்தி; தேற்றம் - தெளிவு; ஊங்கு - காட்டிலும்; செவ்வியோர் - செம்மைக் குணம் உடையோர்; தேறி - தெளிந்து; நிறை - மன அடக்கம்; அறிவு - இயற்கையறிவு; கல்வி - செயற்கை அறிவு \ கற்கப்படுவது)

அவ்வாறு அனுமன் மறுமொழி கூறியதும், கட்டமைந்த வில்லையுடைய தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வனாகிய இராமன், அனுமனைப் பற்றி ஒருவாறு தெளிவுற்று, இவனை விடச் சிறந்த நற்குணங்கள் வாய்க்கப் பெற்றோர் வேறு இலர் என்பதை நன்கு தெரிந்து கொண்டு, "திறமையும், வலிமையும் நிறைந்த நற்குணங்களும், கல்வியறிவினால் பெற்ற மன அடக்கமும், ஞானம் என்று

சொல்லப்படுகின்றவை அனைத்தும் இவனோடு வேறுபட்டவை அல்ல. இவனோடு ஒன்றிப் போனவையாம்" என்று அருகிலிருந்த இலக்குவனிடம், அனுமனைப் பற்றிப் பாராட்டத் தொடங்கினான்.

நிறை என்பது ஆடவர்க்குரிய அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடித்தல் என்றவற்றுள் ஒன்று. நிறைவு என்று கொண்டு சிறந்த நற்குணங்கள் என்னலும் ஒன்றும். இந்தக் குணங்களெல்லாம் இவனோடு வேறுபட்டன அல்ல இவனோடு ஒன்றுபட்டன என்பதால், அனுமன் திறமையின் வடிவம், குணங்களின் உரு. அமைதியின் உருவம்; அறிவின் தோற்றம் என்று இராமன் கருதினான் என்பதாம். இராமன் அனுமனை நன்கு தெளிந்து கொண்டான் என்பதாம். "புலம்மிக்கவரைப் புலமை தெரிதல் புலம்மிக்கவர்க்கே புலனாம்" என்பது பழமொழி 7.

18. இராமன் இலக்குவனிடம் அனுமனைப் பாராட்டுதல்

"இல்லாத உலகத்து எங்கும் ஈங்கு இவன் இசைகள் கூர,
கல்லாத கலையும், வேதக்கடலுமே என்னும் காட்சி,
சொல்லாலே தோன்றிற்று அன்றே? யார்கொல் இச்சொல்லின் செல்வன்?
வில்ஆர்தோள் இளைய வீர! விரிஞ்சனோ? விடைவலானோ?" (3872)

(ஆர் - அமைந்த; இசைகள் - புகழ்; கூர - மிகுமாறு; காட்சி - தெளிவு; விரிஞ்சன் - பிரமன்; விடை - எருது; வலான் - செலுத்துவதில் வல்லவன்; விடைவலான் - சிவபெருமான்)

"வில் அமைந்த தோளை உடைய இளைய வீரனே! இலக்குவனே! இங்கு நிற்கின்ற அனுமன் அவனது புகழ் மிகும்படி, அவன் கற்றறியாத கலைகளோ, அல்லது கடல் போன்ற வேத சாத்திரங்களோ, இவ்வுலகத்தில் வேறு எங்கும் இல்லாதனவே என்னும் தெளிவு, இவன் இப்போது பேசிய சொற்களிலிருந்தே தெரியவருகின்றதல்லவா? இவ்வளவு இனிமையாகப் பேசும் சொற்செல்வத்தை உடைய இவன் யாராய் இருக்க முடியும்? பிரமதேவனோ? அல்லது இடபவாகனத்தைச் செலுத்தி ஊர்ந்து செல்லும் ஆற்றல் கொண்ட சிவபெருமானோ?" என்று இலக்குவனிடம் இராமன் அனுமனைப் புகழ்ந்து பேசினான்.

"இவன் எல்லாக் கலைகளையும் வேதங்களையும் முற்ற முழுக்கக் கற்றவன். இவன் கற்காதவை இந்த உலகத்திலேயே இல்லாதவையாகத்தான் இருக்க வேண்டும். இது அவன் சொற்களிலேயே வெளிப்பட்டதல்லவா? இவ்வாறு பேசும்வன்மை, பிரமதேவன், சிவபெருமான் ஆகியோரைத் தவிர வேறு யாருக்கும் அமைவது இயலாதது. எனவே இவ்விருவருள் யாரின் அம்சமாக இவன் இங்கு தோன்றியிருக்கிறான்?" என்று இராமன் இலக்குவனைக் கேட்டான் என்பதாம்.

கற்ற கல்வியின் மேன்மையை அவரவர் சொற்களே புலப்படுத்தும். அனுமன் தன் பிறப்பைப் பற்றிக் கூறும் பொழுது சந்தேகம் கொள்ளாத இராமன், அவன் பேச்சின் சிறப்பைக் கேட்ட பொழுது அவன் யாருடைய அம்சம் என்று

சந்தேகப்படலானான் என்று கவிஞர் நம்மைச் சிந்திக்க வைக்கும் திறன் நோக்குக. தான் திருமாலின் அவதாரம் என்பதை உணர்ந்தே, தன்னை விடுத்து மும்மூர்த்திகளில் மற்ற இருவருள்ளும் யாருடைய கூறு என்று கேட்டான் என்பதாம். பின்னர் அனுமனை முதன் முதல் கண்ட இராவணனும் அவன் போர்த் திறமையைக் கண்டு, "நேமியோ? குலிசியோ? நெடுங்கணிச்சியோ? தாமரைக் கிழவனோ? தறுகண் பூமி தாங்கு ஒருவனோ?" என்று கேட்பதையும் இங்கு ஒப்பிட்டு நோக்குக. இந்த இடத்தில் அனுமனைப் பற்றி இராமன் இலக்குவனிடத்துப் புகழ்ந்து கூறியதை 10 ஸ்லோகங்களில் கூறியிருக்கிறது வான்மீகம். காட்சி என்பது பிரத்தியட்சப்பிரமாணத்தைக் குறிக்கும்.

19. "மாணியாம் படிவம் அன்று மற்று இவன் வடிவம்; மைந்த!
ஆணி இவ்வுலகுக்கெல்லாம் என்னலாம் ஆற்றற்கு ஏற்ற
சேண் உயர் பெருமை தன்னைச் சிக்கு அறத்தெளிந்தேன்; பின்னர்க்
காணுதி மெய்ம்மை" என்று தம்பிக்குக் கழறி, கண்ணன். (3873)

(மாணி - பிரமசாரி; ஆணி - அச்சாணி; சேண் - மிகவும்; சிக்கு - ஐயம் \ குற்றம்; கழறி - கூறி; கண்ணன் - இராமன்; வடிவம் - உருவம்) (குளகப்பாடல்)

"வலிமையுள்ள இளையவனே! இலக்குவ! நம்முன்னால் நிற்கும் இவ்வனுமனின் சாதாரண பிரமசாரி உருவம் இவனுடைய உண்மையான உருவம் அல்ல; இவன் இவ்வுலக இயக்கத்திற்கே அச்சாணி போல்பவன் என்று சொல்லத்தக்க ஆற்றல் படைத்தவன். இவனுக்குரிய மிகவும் உயர்ந்த சிறப்புக்களை நான் சிறிதும் ஐயமின்றித் தெரிந்து கொண்டேன். நீயும் அதனைப் பின்னால் உண்மை என்று உன் கண்களால் காணப்போகிறாய்" என்று தம்பிக்குக் கூறி, இராமன் - பாடல் தொடர்கிறது.

முன்பு மாணவப்படிவம் என்று கூறப்பட்டது இங்கு மாணி எனக் கூறப்பட்டது. இரண்டும் ஒரே பொருள் தருவன என்பதை உணர்க. ஆணி என்பது அச்சாணி, உரையாணி என்ற பொருள் தந்து ஒன்றின் இயக்கத்திற்கு இன்றியமையாதது என்ற விரிந்த கருத்தைக் தரும். இவனுடைய இந்த உருவத்திற்கும் இவனுடைய ஆற்றலுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. "உருவுகண்டு எள்ளாமை வேண்டும்;" "உருள் பெரும்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" என்பது குறள் 667. கண்ணன் என்ற சொல்லுக்குக் கண்ணழகுடையவன், எல்லோர் கண்ணிலும் இருப்பவன், கண்ணோட்டம் உடையவன், கருநிறமுறையவன் என்று பல பொருள்கள் உண்டு. கம்பர் இராமனைக் கண்ணன் என்றே காப்பியத்தில் பல இடங்களிலும் குறிப்பிட்டு வருவதையும் மனத்திற் கொள்க.

20. இராமன் சுக்கிரீவனைக் காட்ட வேண்டுதல்

"எவ்வழி இருந்தான் சொன்ன கவிக்குலத்து அரசன்? யாங்கள்
அவ்வழி அவனைக் காணும் அருத்தியால் அணுக வந்தேம்;

இவ்வழி நின்னை உற்ற எமக்கு, நீ இன்று சொன்ன
செவ்வழி உள்ளத்தோனைக் காட்டுதி தெரிய" என்றான். (3874)

(அருத்தி - ஆசை; கவிக்குலம் - குரங்கினம்; வழி - இடம்; செவ்வழி - செம்மையான நெறி; தெரிய - தெரிந்து கொள்ளுமாறு)

இராமன் அனுமனை நோக்கி, "நீ இப்பொழுது சொன்ன குரக்கினத்து அரசனான சுக்கிரீவன் எங்கே இருக்கிறான்? நாங்கள் அங்கு சென்று அவனைக் காண்கின்ற ஆசையோடுதான் இங்கு வந்தோம்; வந்த வழியில் அவனுக்குத் துணைவனான உன்னைக் கண்ட எங்களுக்கு, செம்மைக் குணமுள்ள உள்ளத்தைக் கொண்டவனான சுக்கிரீவனை நாங்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் காட்டுவாயாக" என்றான்.

அனுமன் சுக்கிரீவனை, "எரிகதிர்ப் பரிதிச் செல்வன் செம்மல்" என்று தான் கூறினான்; ஆனால் இராமன் சுக்கிரீவனைக் காணாத பொழுதே அவனைக் "கவிக் குலத்து அரசன்" என்று கூறியிருப்பதை உணர்க; பின்னால் நிகழப் போவதை மனத்துள் கொண்டு இவ்வாறு கூறினான் என்க. அரசனைத் தவசியர் அவன் இருக்கும் இடம் சென்று காண்பதே முறை என்பதால் அவன் இருக்கும் இடத்திற்குத் தங்களை அழைத்துச் சென்று அவனைக் காட்டுமாறு வேண்டினான் என்பதாம். முன்பு அனுமன் "செவ்வழி உள்ளத்தானும் தெரிவுற எதிர்சென்று எய்தி" என்று கூறியதையும், இப்போது இராமன் சுக்கிரீவனைக் குறித்து, "செவ்வழி உள்ளத்தோனைக் காட்டுதி" என்று கூறியிருப்பதையும் ஒப்பிட்டு நோக்குக.

21. அனுமன் இராம இலக்குவரைப் பாராட்டுதல்

"மாதிரப் பொருப்போடு ஓங்கு வரம்புஇலா உலகில், மற்று,
பூதரப் புயத்து வீரர் நும்ஒக்கும் புனிதர் யாரே?
ஆதரித்து அவனைக் காண்டற்கு, அணுகினீர் என்னின், அன்னான்,
தீது அவித்து அமையச்செய்த செய்தவச்செல்வம் நன்றே!" (3875)

(மாதிரம் - திசைகள்; பொருப்பு - மலை \ சக்கரவாளகிரி; பூதரம் - மலை; புனிதர் - தூயவர்; ஆதரித்து - ஆசைப்பட்டு; அவித்து - அடக்கி; செல்வம் - பேறு \ பாக்கியம்; நன்று - சிறப்புடையது \ நன்மை பயப்பது)

"திக்குகளின் எல்லையில் விளங்கும் சக்கரவாள கிரியைப் போன்று, உயர்ந்த, எல்லையில்லா இந்த உலகத்தில், மலையைப் போன்ற வலிமை யுடைய தோள்களை உடைய வீரர்களாகிய உங்களை ஒத்த தூய மனம் படைத்தவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? நீங்களே விருப்பப்பட்டு, சுக்கிரீவனைக் காண்பதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்றால், அவன் தன் ஐம்புலன்களையும் அடக்கிப் பொருத்தமாகச் செய்த செய்தற்கரிய தவத்தின் பயன் மிக்கச் சிறப்பானதே" என்றான் அனுமன்.

சுக்கிரீவன் இவர்களைப் பார்த்து அஞ்சியது தவறானதாகும். அவனுக்கு உதவவே இந்தத் தூயவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள் என்பதை நன்றாக

உணர்ந்து கொண்டு விட்டான் அனுமன் என்பதாம். எனவேதான் இவர்களைக் காணுதற்கு சுக்கிரீவன் பெரும் பேறு பெற்றிருக்க வேண்டும் என்கிறான். சக்கரவாளகிரி திசைகளின் எல்லையில் இருப்பதால் "மாதிரப் பொருப்பு" எனப்பட்டது. அதுபோலவே பூமியைத் தாங்கும் ஆற்றல் பெற்றதால் மலை, பூதரம் எனப்பட்டது. தீது என்றது ஐம்புல நுகர்ச்சிகளை என்க.

22. அனுமன் இராமனுக்குச் சுக்கிரீவன் பற்றிக் கூறுதல்

"இரவிதன் புதல்வன் தன்னை, இந்திரன் புதல்வன் என்னும்
பரிவுஇலன் சீற, போந்து, பருவரற்கு ஒருவனாகி,
அருவிஅம் குன்றில், என்னோடு இருந்தனன்; அவன்பால் செல்வம்
வருவதுஓர் அமைவின் வந்தீர்; வரையினும் வளர்ந்ததோளீர்!" (3876)

(வரை - மலை; இரவி - சூரியன்; பரிவு - இரக்கம்; சீறுதல் - கோபித்தல்; பருவரல் - துன்பம்; அமைவு - தன்மை; போந்து - வந்து)

"மலையைக் காட்டிலும் உயர்ந்த தோள்களை உடையவர்களே! சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவனை, இந்திரனின் புதல்வன் என்று கூறப்படும் வாலி என்பவன், இரக்கமற்ற முறையில் பெருஞ்சினம் கொண்டு கோபித்து, இவனைத் துரத்திவிட, இவன் அத்துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள அவன் துணைவி கூட அருகில் இல்லாதபடி தனி ஒருவனாகவே இங்கே வந்து, அருவிகள் நிறைந்த அழகிய இந்த ருசியமூகம் என்னும் மலையில், என்னோடு தங்கியிருக்கிறான். இப்பொழுது அவனிடம் செல்வம் வந்து சேர்வது போன்ற தன்மையில் நீங்கள் அவனைக் காண வந்திருக்கிறீர்கள்" என்றான் அனுமன்.

வாலியும் சுக்கிரீவனும் அண்ணன் தம்பிகள்; ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்று கூறாது மறைத்து விடுகிறான் அனுமன். மேலும்,தான் அவனுக்கு அமைச்சன் என்பதையும் மறைத்து, சுக்கிரீவன் இவனோடு வாழ்வதாகக் கூறியிருக்கும் திறம் நோக்குக. முதலில் சுக்கிரீவன் சூரியன் மகன் என்றது, இராமன் சூரியகுல மரபினன் என்பதை மனத்துட் கொண்டே என்க. இவன் துரத்தியடிக்கப்பட்ட போது இவன் மனைவியையும் வாலி கவர்ந்து கொண்டதால் இவனுடன் இணைந்து இவன் துன்பத்தைப் பகிர்ந்துகொள்ள இவன் மனைவியும் கூட இல்லை என்பதை "பருவரற்கு ஒருவனாகி", என்று, குறிப்பால் உணர்த்தியதும் காண்க. இவர்கள் வரவால் அவன் மிகுந்த செல்வம் பெறப் போகிறான் என்பது அனுமன் கருத்து. அதனைத் தவறாமல் குறிப்பாக எடுத்துக் கூறிய நயமும் நோக்குக. சுக்கிரீவனைக் காணும் முன்பே, இராமன் அவன்மேல் பற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும், அவன் இழந்த அரசச் செல்வம் கிடைக்க இவர்கள் துணைபுரிய வேண்டும் என்பதையும் குறிப்பால் உணர்த்தியதையும் உணர்க.

23. "ஒடுங்கல்இல் உலகம் யாவும் உவந்தன உதவி, வேள்வி
தொடங்கின, மற்றும் முற்ற, தொல்அறம் துணிவர் அன்றே!
கொடுங்குலப் பகைஞன் ஆகி, கொல்லிய வந்த கூற்றை,
நடுங்கினர்க்கு அபயம் நல்கும் அதனினும் நல்லது உண்டோ? (3877)

(ஒடுங்கல் - சுருங்குதல்; உவந்தன - விரும்பின; தொல் - பழமையான; கூற்று - இயமன்; அபயம் - பயம் இல்லாது செய்தல்; உதவி - அளித்து; முற்ற - முடிக்க \ நிறைவேற்ற; கொல்லிய - கொல்லும் பொருட்டு)

"சுருங்குதல் இல்லாத விரிந்த, பரந்த, இவ்வுலகத்தில் உள்ளவர்கள் எல்லோரும் விரும்பியவற்றை விரும்பியவாறே கொடுத்து, இயற்றத் தொடங்கிய வேள்வியையும், மற்ற அறச்செயல்களையும் நல்ல முறையில், பழைய அறநூல்கள் கூறியவகையில் நிறைவேற்றுவதற்கே சான்றோர்கள் முயலுவர் அல்லவா? என்றாலும் அத்தகைய அறச்செயல்களுக்குள்ளேயே, தன் குலத்திற்கே கொடிய பகையாக ஆகி, ஒருவனைக் கொல்லுவதற்காக வரும் இயமன் போன்ற பகைவனைக் கண்டு அஞ்சி நடுங்கித் தன்னைச் சரண் அடைந்தவர்களுக்கு, அடைக்கலம் தந்து அவர்களை ஆதரித்தல் என்பது, அந்த வேள்வி, அறச்செயல்கள் ஆகிய எல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்டது அல்லவா?" என்றான் அனுமன்.

சுக்கிரீவன் வாலிக்கு அஞ்சி இராமனிடம் சரண் அடைந்தால் இராமன் சுக்கிரீவனுக்கு அடைக்கலம் தந்து காப்பாற்ற வேண்டும் என்று குறிப்பால் உணர்த்தினான் அனுமன் என்க. வேள்வி செய்தல் ஈகை என்ற அறச்செயல்களைக் காட்டிலும், தன்னையே நம்பி வந்து தன்னைச் சரணடைந்தார்க்கு அடைக்கலம் அளித்துக் காப்பதே மேம்பட்ட அறம் என்பதை நிறுவுகிறான் அனுமன். உடலினின்றும் உயிரைக் கூறுபடுத்துபவன் கூற்றுவன்.

24. "எம்மையே காத்திர்" என்றல் எளிது அரோ!இமைப்பிலாதோர்
தம்மையே முதலிட்டு, ஆன்ற சராசரம் அமைத்த ஆற்றல்
மும்மை ஏழ் உலகும் காக்கும் முதல்வர் நீர்; முருகற் செவ்வி
உம்மையே புகல் புக்கேமுக்கு, இதின்வரும் உறுதி உண்டோ? (3878)

(முதலிட்டு - முதலாக அமைந்த; சரம் - நிற்பன; அசரம் - இயங்குவன; செவ்வி - தகுதி; மும்மை - மூன்று; முருகு - அழகு \ இளமை \ தெய்வத்தன்மை; புகல் புகுதல் - சரணடைதல்; உறுதி - நன்மை; ஆன்ற - உயர்ந்த \ சிறந்த; முதல்வர் - தலைவர்)

"கண் இமைத்தல் செய்யாத தேவர்கள் முதற்கொண்டு, உயர்ந்த நிலைத்திணைப் பொருள்களையும், இயங்கு திணைப் பொருள்களையும் படைக்கும் ஆற்றல் கொண்டு, மண், விண், பாதளம் என்ற மூன்று வகைப்பட்ட ஏழு உலகங்களையும் காப்பாற்றும் தலைவர் நீர்; உங்களிடம் வந்து "எங்களை மட்டும் காப்பாற்றுங்கள்" என்று கேட்பது உங்கள் பெருமைக்கு ஏற்றதல்ல. மிக எளிமையானது; இளமையும், அழகும், தெய்வத்தன்மையும் பொருந்திய முருகனைப் போன்ற உங்களையே சரண் புகுந்திருக்கின்ற எங்களுக்கு, இதனைக் காட்டிலும் மேன்மை தரும் செயல் வேறு ஏதேனும் உண்டோ? என்றான் அனுமன்.

மூன்று வகைப்பட்ட பதினான்கு உலகங்களையும் படைத்துக் காத்தருளும் உங்களிடம் வந்து, எங்களை மட்டும் காப்பாற்றுங்கள் என்று வேண்டுவது

உங்களுக்குப் புகழ் தருவதாக ஆகாது. மூவேழுலகங்களையும் காக்கும் முதல்வன் தான் தவவேடம் தாங்கி வந்திருக்கிறான் என்பதை உய்த்துணர்ந்த அனுமனின் கூற்று இது என்பதை அறிக. ஏழு வகைப்பட்ட உயிரினங்கள் : தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர்கள், தேவர்கள் என்பனவாம். மூவுலகம் மண்ணுலகு, விண்ணுலகு, பாதாளம் அல்லது நாகர் உலகு என்பனவாம். பதினான்கு உலகங்கள் - பூலோகம், புவர் லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம், அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதலம் என்பனவாம்.

௨௫. இலக்குவன், நிகழ்ந்தவை பற்றிக் கூறத் தொடங்குதல்.

"யார் என விளம்புகேன் நான், எம்குலத்தலைவர்க்கு, உம்மை?
வீரர் நீர் பணித்திர்!" என்றான் மெய்ம்மையின் வேலி போல்வான்;
வார்கழல் இளைய வீரன், மரபுளி, வாய்மை யாதும்
சோர்வுஇலன், நிலைமை எல்லாம், தெரிவுறச் சொல்லலுற்றான். (3879)

(பணித்தல் - சொல்லுதல்; வார் - நீண்ட; மரபுளி - முறைப்படி; சோர்வு - மறதியுமாம்; தெரிவுற - விளங்கிக் கொள்ளும்படி; விளம்புதல் - கூறுதல்)

வாய்மையைப் பாதுகாக்கும் வேலிபோல்பவனாகிய அனுமன், இராம இலக்குவர்களை நோக்கி, "வீரர்களே! என்னுடைய கவிக்குலத்துத் தலைவனாகிய சுக்கிரீவனுக்கு, உங்களை யார் என்று எடுத்துக் கூறுவேன்?" என்று கேட்டான்; அதற்கு மறுமொழியாக நீண்ட வீரக்கழல்களையணிந்த இளைய வீரனான இலக்குவன், முறைப்படி, எல்லா உண்மைகளையும், எதையும் மறக்காமலும், மறைக்காமலும், தவறில்லாமலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒன்றுவிடாது, அனுமன் விளங்கிக் கொள்ளும் வண்ணம் சொல்லத் தொடங்கினான்.

"நீங்கள் யார்?" என்று பெரியவர்களை நோக்கி நேராகக் கேட்பது பண்புடைய செயலன்று. நாகரீகமும் அன்று. எனவே அனுமன் "உங்களை யார் என்று எங்கள் தலைவனுக்குக் கூறுவேன்?" என்று நயமாகக் கேட்டது அவனது அடக்கத்தையும், நுண்ணிய அறிவையும், பெரியோர்பால் பேச வேண்டிய சீலத்தையும் வெளிப்படுத்தியதாகியது. இவர்களிடம் கேட்டறியாது தானே உணர்ந்த வண்ணம், தன் தலைவனிடம் சென்று கூறியிருக்கலாம். என்றாலும் அவர்கள் மூலமாக அறிந்தவற்றைக் கூறுவதே முறை என்று கருதி அவர்களை வினவிய அனுமனின் சொல் வன்மையைச் சிறப்பிக்கத்தான் கவிஞர் அனுமனை, "மெய்ம்மையின் வேலி போல்வான்" என்றார் என்க. முன்பு குகனிடமும், பின்னர் சடாயுவிடமும் கூட, இவர்கள் வரலாற்றினை இலக்குவனே கூறினான் என்பதையும் கருதுக. பிறரிடம் சொல்லக் கூசுவதற்குரிய, வருத்தத்திற்குரிய நிகழ்ச்சிகளாகிய தங்களுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்படாததையும், நாடு கடத்தப்பட்டதையும், சீதையைப் பகைவன்

அபகரித்துக் கொண்டு சென்றதையும் மறந்துவிடாமல், மறைத்துவிடாமல், ஒன்று விடாமல் எல்லாவற்றையும் கூறினான் இலக்குவன் என்பதை, "மரபுளி, வாய்மை யாதும் சோர்விலன், நிலைமையெல்லாம் தெரிவுறச் சொல்லலுற்றான்" என்றார். சில நுணுக்கமான அரசியல் நிகழ்ச்சிகளும் இதில் இருப்பதால், அனுமன் புரிந்து கொள்ளுமாறு இலக்குவன் விளக்கிக் கூறினான் என்பதாம்.

26. இலக்குவன், தங்கள் வரலாறு கூறுதல்

சூரியன் மரபில் தோன்றி, சுடர்நெடு நேமி ஆண்ட,
ஆரியன்; அமரர்க்கு ஆகி, அசுரரை ஆவி உண்ட
வீரியன்; வேள்வி செய்து, விண்ணுலகோடும் ஆண்ட,
காரியன்; கருணை அன்ன கண்ணன், அக்கவிகை மன்னன். (3880)

(மரபு - குலம்; சுடர் - ஒளிமிக்க; நேமி - ஆணைச்சக்கரம்; ஆரியன் - தலைமை உடையவன்; அமரர் - தேவர்; வீரியன் - வீரமுடையவன்; காரியன் - செயல் திறமுடையவன்; கண்ணன் - கண்ணோட்டம் உடையவன்; கவிகை - வெண்கொற்றக்குடை; உண்ட - கொன்ற) (குளகப்பாடல்)

சூரிய குலத்தில் உதித்து, ஒளி வீசும் நெடிய ஆணைச் சக்கரத்தைக் கொண்டு, இவ்வுலகை ஆண்டு வந்த தலைமையையும் மேன்மையையும் உடையவன்; தேவர்களுக்காக, சம்பராசுரன் போன்ற அசுரர்களுடன் போர் புரிந்து அவர்களை வென்று, கொன்று அவர்கள் உயிரைப் போக்கிய வீரம் உடையவன்; க்ஷத்திரியர்களுக்குரிய எண்ணற்ற வேள்விகளை முற்றுறச் செய்து முடித்து, விண்ணுலகத்தோடு, இம்மண்ணுலகத்தையும் ஆண்டு வந்த செயல் திறம் மிக்கவன், கருணையே வடிவுகொண்ட கண்ணோட்டம் மிக்கவன்; வெண்கொற்றக் குடையை உடைய அம்மன்னன் - தசரதன் என்று அடுத்த பாடலில் முடிவு கொள்ளும்.

இந்தப் பாடலும் அடுத்த பாடலும் தசரதன் புகழ்கூறும் பாடல்கள்; தசரதனை வெறுத்து வந்த இலக்குவனைக் கொண்டே, தசரதன் புகழ்பாடச் செய்த இராமனின் திறம் நோக்குக. சம்பராசுரப் போர் பற்றி முன்பு பாலகாண்டத்தில் கூறப்பெற்றதையும் இங்கு நினைவு கூர்க. அமரர் என்பது அமிழ்தம் உண்டதால் மரணமற்றவர் என்று பொருள் தரும் சொல். கவிந்து நிழல் பரப்பிக் குடிகளைக் காப்பதால் கவிகை என்பது வெண்கொற்றக் குடைக்குக் காரணப்பெயர்.

27. புயல்தரும் மதத்திண் கோட்டுப் புகர்மலைக்கு இறையை ஊர்ந்து,
மயல்தரும் அவுணர்யாரும் மடிதர, வரிவில் கொண்ட,
இயல்தரும் புலமைச் செங்கோல் மனுமுதல் யாரும் ஒவ்வாத்
தயரதன்; கனக மாடத் தடமதில் அயோத்தி வேந்தன். (3881)

(புயல் - மேகம்; கோடு - கொம்பு; புகர் - புள்ளி; இறை - தலைவன்; மயல் - மதமயக்கம்; மடிதர - அழியும்படி; வரி - கட்டமைந்த; புலமை - அறிவு; ஒவ்வா - ஒப்பாகமாட்டாத; கனகம் - பொன்; மாடம் - மாளிகை; தட - பெரிய; அவுணர் - அசுரர்)

மேகத்தைப் போன்று நீர் சொரிகின்றதும், வலிமையான தந்தங்களையுடையதும், நல்ல ஐராவதத்திற்குத் தலைவனாகிய இந்திரனைத் தன் வாகனமாகக் கொண்டு செலுத்தி, மத மயக்கம் மிக்க அசுரர்கள் அனைவரும் அழிந்து போகும்படி போர் செய்கின்ற கட்டமைந்த வில்லை ஏந்தியவனும், இயல்பாகவே நல்லறிவு மிக்கவனும், நல்லாட்சி செய்யும் செங்கோலைக் கொண்டவனுமான, மனு முதலாக உள்ள எந்த அரசரும் ஒப்பாகாத புகழ் பெற்ற தசரதன் என்பவன், பொன்னால் ஆன மாளிகைகளையும், பெரிய மதிலையும் கொண்ட அயோத்தி நகரைத் தலைநகராகக் கொண்ட கோசல நாட்டு அரசன் - பாடல் தொடர்கிறது.

முகத்தில் செம்புள்ளிகள் இருப்பது நல்ல யானைக்குரிய இலக்கணம் என்பர். சூரிய குல மன்னர்களில் ஒருவனான ககுத்தன் என்பவன் ஐராவதத்தை ஊர்தியாகக் கொண்ட இந்திரனையே வாகனமாகக் கொண்டு போர் செய்து அசுரர்களை வென்று; இந்திரலோகத்தை இந்திரனுக்குத் திருப்பியளித்தான். அந்த வரலாறு இங்கே கூறப்பட்டதென்க. மனுமுதல் என்பது, மாந்தாதா, ககுத்தன், சகரன், பகீரதன் முதலிய பல சூரிய குலத்து மன்னர்களைக் குறிக்கும் எனக் கொள்க. இவர்கள் எல்லோரையும்விட மேம்பட்ட சிறப்புக்கள் உடையவன் தசரதன் என்பதாம். தசரதன் என்ற சொல்லுக்குப் பத்துத் திசைகளிலிருந்தும் வரும் தேர்களை வென்றவன் என்பது பொருள். "வெஞ்சினத்து அவுணர் தேர்பத்தும் வென்றுள்ளவன்" என்பது பாடல் பகுதி. அயோத்தி என்பது யுத்தமே இல்லாத ஊர் என்றும், யுத்தம் செய்து வென்று கைக்கொள்ள முடியாத ஊர் என்றும் பொருள் தரும்சொல். "போர் முற்று ஒன்று அறியாத புரிசை சூழ் புனல் ஊரன்" என்பது கலித்தொகை. இது மதுரை நகருக்குக் கூறப்பட்டாலும், அயோத்திக்கும் பொருந்துவது காண்க.

ககுத்தன் மனுவின் குலத்தில் வந்தவன் என்பதனால், ககுத்தன் என்று கூறாது குல முதல்வனாகிய மனுவின் பெயரையே குறித்தான் என்க. சூரிய குலத்தில் தோன்றிய அரசர்களில் தலை சிறந்தவன் தசரதனே என்று கூறுவதாகக் கொள்ள வேண்டும்.

28. "அன்னவன் சிறுவனாம் இவ்வாண்தகை அன்னைஏவ,
தன்னுடைய உரிமைச் செல்வம் தம்பிக்குத் தகவின் நல்கி,
நன்னெடுங்கானம் சேர்ந்தான்; நாமமும் "இராமன்" என்பான்
இந்நெடுஞ்சிலை வலானுக்கு ஏவல் செய் அடியன் யானே. (3882)

(ஆண்தகை - ஆண்மையிற் சிறந்தவன் \ புருஷோத்தமன்; தகவு - பெருந்தன்மை; சிறுவன் - புதல்வன்)

"அத்தகைய சிறப்பு மிக்க தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வன் இவ்வாண்மையிற் சிறந்த புருஷோத்தமன்; இவனது சிற்றன்னையாகிய கைகேயி கட்டளையிட, மூத்த பிள்ளைக்கு உரித்து அரசு என்ற மரபுப்படி, தனக்கு உரிமையுடையதான அரசச் செல்வத்தைத் தன் தம்பியும், கைகேயியின் புதல்வனுமான பரதனுக்கு மிகப்பெருந்தன்மையுடன் தந்து விட்டு,

நல்ல முனிவர்கள் வாழும் கடத்தற்கரிய இக்காட்டினை அடைந்திருக்கிறான். இவன் பெயர் இராமன் என்பது. இந்தப் பெரிய வில்லில் வல்லமையுடையவனுக்குக் குற்றேவல் செய்யும் பணியாளன் நான்" என்று கூறினான் இலக்குவன்.

தாம் காட்டிற்கு வந்தது தம் தந்தையின் கட்டளையால் அன்று. தங்கள் சிற்றன்னையின் ஏவலால் என்பதை உறுதிப்படுத்த, "அன்னைஏவ" என்கிறான் இலக்குவன். இது போலவே முன்பு இராமனும் சூர்ப்பணகையிடம் "தாய் சொல் தாங்கி, விரையளித்த கான் புகுந்தேம்" என்று கூறியதையும் ஒப்பு நோக்குக. மூத்தவனுக்கே உரித்து அரசு என்பது மனுநீதி. குலமுறை, அதை உறுதிப்படுத்தவே, "தன்னுடைய உரிமைச் செல்வம்" என்றான். சிற்றன்னையின் புதல்வன் பரதனுக்கு என்று கூறாது, "தம்பிக்கு" என்று கூறியதில் இராமன் பரதன்பால் எவ்வளவு அன்பு பூண்டிருந்தான் என்பதை இலக்குவன் கூற்றாகவே கூறியிருப்பது, கம்பனின் கவித்திறமைக்கு மற்றொரு சான்று. அன்னை சொன்னாளே என்ற கடமையால் உந்தப்பட்டு அரசச் செல்வத்தைப் பரதனுக்கு அளிக்கவில்லை. மனம் உவந்து, பெருந்தன்மையுடன், "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" எ ன்று கூறிக் கொடுத்தான் என்பது இங்கு சிறப்புக் குறிப்பு; நல்ல முனிவர்கள் தவம் செய்து கொண்டிருப்பதால் "நற்கானம்" என்றும், கடத்தற்கரிய பெருவழி என்பதால் "நெடுங்கானம்" என்றும் கூறினான் என்க. இராமன் என்ற சொல்லுக்குத் தன் பேரழகால் மற்றவர்களை ரமிக்கச் செய்பவன் என்பது பொருள். இலக்குவன் தன்னை இராமனின் தம்பி என்று கூறிக் கொள்ளாது இராமனின் குற்றேவல் செய்யும் அடியவன் என்று கூறிக் கொண்டது, இலக்குவன் கானகம் புக விடைபெறும் போது அவன் தாய் சுமித்திரை, "இவன் பின்செல்; தம்பி எனும்படி அன்று; அடியாரின் ஏவல் செய்தி" என்று கூறியிருப்பதை நினைவிற் கொண்டு கூறியது என்க.

29. அனுமன் இராமனைத் தொழுதல்

என்று, அவன் தோற்றம் ஆதி இராவணன் இழைத்த மாயப்
புன்தொழில் இறுதியாகப் புகுந்துஉள பொருள்கள் எல்லாம்
ஒன்றும் ஆண்டு ஒழிவுறாமல், உணர்த்தினன்; உணர்த்தக் கேட்டு,
நின்ற அக்காலின் மைந்தன், நெடிது உவந்து, அடியில் தாழ்ந்தான்.(3883)

(தோற்றம் - பிறப்பு; மாயம் - வஞ்சனை; புன் - அற்பமான \ கீழ்த்தரமான; புகுந்துள - நிகழ்ந்த; பொருள்கள் - நிகழ்ச்சிகள்; ஒழிவுறாமல் - தவறவிடாது \ மறைக்காது; கால் - காற்று; நெடிது - பெரிதும்; தாழ்தல் - விழுந்து வணங்குதல்; உணர்த்தல் - சொல்லுதல்)

இவ்வாறு இராமனின் பிறப்பு முதல், இராவணன் செய்த வஞ்சனை நிறைந்த கீழ்த்தரமான செய்கையாகிய, சீதையை அபகரித்துக் கொண்டு சென்றது வரை, நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும், ஒன்று விடாமல் அப்போது இலக்குவன் கூறி முடித்தான். அதைக் கேட்டுக் கொண்டு தன்னை மறந்து

நின்ற காற்றின் மைந்தனான அனுமனும், இராமன் வணங்கத்தக்க குணங்களையுடையவன் என்பதை உணர்ந்து மகிழ்ந்து அவனது திருவடிகளில் விழுந்து வணங்கினான்.

இராவணன் செய்த கீழ்த்தரமான செய்கையைக் கவிஞன் தன் கூற்றாகக் கூற விழையாது பொதுவாக "மாயப்புன் தொழில்" என்று மட்டும் கூறியதை நோக்குக. காலின் மைந்தன் என்பது "வாயு புத்திரன்" என்பதன் தமிழாக்கம்; இராம இலக்குவர்களைக் கண்டவுடனேயே அனுமன் அவர்களை விழுந்து வணங்கிய பின்னரே பேசத் தொடங்கினான் என்று வான்மீகம் கூறும்.

30. அனுமன் தானும் குரங்கினத்தவனே என்று கூறுதல்

தாழ்தலும், "தகாத செய்தது என்னை நீ? தருமம் அன்றால்;
கேள்வி நூல் மறைவலாள!" என்றனன்; என்னக்கேட்ட
பாழிஅம் தடந்தோள் வென்றி மாருதி, "பதுமச் செங்கண்
ஆழியாய்! அடியேன் தானும் அரிக்குலத்து ஒருவன்" என்றான். (3884)

(மறை - வேதம்; பாழி - வலிய \ பருத்த; அம் - அழகிய; தட - பெரிய; பதுமம் - செந்தாமரை மலர்; ஆழி - சக்கரம்; ஆழியாய் - சக்கரவர்த்தி \ ஆணைச் சக்கரமுடையவன்; அரிக்குலம் - குரங்குக் குலம்; கேள்வி நூல் - வேதம் \ சுருதி)

அவ்வாறு அனுமன் இராமன் அடிகளில் விழுந்து வணங்கியதும், இராமன் திடுக்குற்று, கற்று உணர்ந்த கேள்வி நூலாகிய வேதங்களிலும், வேத சாஸ்திரங்களிலும் வல்லவனானவனே! நீ தகாத காரியத்தைச் செய்து விட்டாயே? என்ன இது? நால்வருணத்துள்ளும் உயர்ந்தோராகிய அந்தணனாகிய நீ, க்ஷத்திய குலத்தில் அரசனாக வந்தவனாகிய என்னை விழுந்து வணங்குதல் தரும முறையானதல்ல என்றான். இதனைக் கேட்ட, பருத்த, வலிய, அழகிய, பெரிய தோள்களை உடைய வெற்றியையே கொண்ட மருத்தின் மைந்தனான அனுமன், இராமனை நோக்கி, "செந்தாமரை மலர் போன்ற சிவந்த கண்களையும், ஆணைச் சக்கரத்தையும் உடைய சக்கரவர்த்தித் திருமகனே! நானும் குரங்கினத்தில் தோன்றிய ஒருவன்தான், நான் அந்தணன் இல்லை" என்று கூறினான்.

வேதம் எழுதாக்கிளவி. கேள்வி வாயிலாகத்தான் அனைவரும் அறியும் வண்ணம் உண்டாகியது. ஆசிரியனிடமிருந்து கேட்டறிதல் அன்றி, தானே உணர்ந்து கொள்ள முடியாதது என்பதாம். இதைச் "செய்யா மொழி" என்று கூறும் திருவள்ளுவமாலை. திருக்குறளின் சிறப்பை உரைக்க வந்த ஆசிரியர், திருக்குறளை வேதத்தோடு ஒப்பிட்டுள்ளார். பாடல் இது. "செய்யா மொழிக்கும், திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும், பொருள் ஒன்றே" என்பது திருவள்ளுவமாலை. அனுமன் அந்தணவேடத்தில் பிரமசாரியாய் இருந்து கொண்டு க்ஷத்திரியனான இராமன் திருவடிகளில் விழுந்து வணங்குவது நீதி நூல்களில் கூறப்படாத முறை. எனவே அது தருமம் அன்று என்று கூறினான்

என்க. மருத்துவின் புதல்வன் என்பதால் மாருதி என்பது அனுமனுக்குத் தத்திதாந்தப் பெயர். சுக்கிரீவன் மட்டும் குரக்கினத்தவன் அல்லன், நானும்தான் என்பதை வெளிப்படுத்தவே, "அடியேன் தானும் அரிக்குலத்து ஒருவன்" என்று "தானும்" என்ற சிறப்புச் சொல்லை அங்கு மொழிந்தான் என்க.

31. அனுமன் பேருருக் கொள்ளுதல்

மின்உருக் கொண்ட வில்லோர் வியப்புற, வேத நன்னூல்
பின்உருக் கொண்டதென்னும் பெருமையாம் பொருளும் தாழ,
பொன்உருக் கொண்ட மேரு, புயத்திற்கும் உவமை போதாத்
தன் உருக்கொண்டு நின்றான், தருமத்தின் தனிமை தீர்ப்பான். (3885)

(மின் - மின்னல்; பேருரு - விசுவரூபம்)

அறம் தலை நிறுத்த மானிடனாக அவதாரம் தாங்கித் தனியனாய் வந்த இராமபிரான் என்னும் தருமத்தின் உருவத்தின் தனிமையைத் தீர்ப்பதற்காகத் துணையாக வந்த அனுமன், மின்னல் போன்று ஒளி வீசும் தன்மை கொண்ட வில்லேந்திய வீரர்களான இராம இலக்குவர்கள் அதிசயிக்குமாறும், வேதம் போன்ற நல்ல சாத்திர நூல்கள் முன்பு கேள்வி வடிவாய் - உருவமற்று அருவமாய் இருந்தவை, இப்பொழுது ஒரு வடிவம் கொண்டு வந்தது என்று கூறும் பாராட்டுரையெல்லாம் வெட்கமடையும் படியும், பொன்மயமான மேனியும், மேரு மலையைப் போன்ற திண்மையும், உயர்ச்சியும் உடைய தோள்களுக்கு வேறு உவமை கூற முடியாததான, தன்னுடைய இயல்பான உண்மையான பேருருவத்தைக் காட்டி நின்றான்.

அனுமன் கொண்ட விசுவரூபத்தைக் கண்டு இராம இலக்குவர்கள் வியந்தனர். வேதம் போன்ற சாத்திர நூல்கள் தன்பாற் கொண்ட சிறப்புகளெல்லாம் நாணின. மேருமலையும் இவன் புயத்தின் உயர்ச்சிக்குத் தாம் உவமையாகோம் என்று சிறுமையடைந்தது என்பதாம். "காஞ்சனாத்ரி கமனீய விக்ரகம்" என்பது இதற்கு ஒப்பான வடமொழிச் சொற்றொடர். அனுமனுக்கு இயற்கைப் பெயரே "ஸவர்ணமேரு" என்பதுதான் என்பதையும் முன்பே கண்டோம். அனுமனை இங்கே "தருமத்தின் தனிமை தீர்ப்பான்" என்று கூறிய கவிஞன் முன்பு, "மெய்ம்மையின் வேலி போல்வான்" என்றும், பின்னர்" அறத்துக்கு ஆங்கொரு தனித்துணை நின்ற அனுமன்" எனவும்" அறப்பொருள் நிரப்பும் அண்ணல்" என சுந்தரகாண்டத்தில் கூறப்போவதும் ஒப்பு நோக்குக. இங்கே பிரமசாரியாய் சிறிய உருவம் எடுத்து வந்த அனுமன் எடுத்த விசுவருபத்திற்கு, முன்பு மாவலிபால் சென்று மூவடி மண் கேட்ட திருமாலின் திரிவிக்கிரமாவதாரத்தை ஒப்புக் கூறலாம் என்க. இந்த ஒப்புமையைப் பின்னர் சீதைக்கு உருக்காட்டுபடலத்தில் "நானுறும் உலகெலாம் அளந்த நாயகன்" என்று சீதை கூற்றாகக் கூறவைத்த கவிஞனின் நினைவுத் திறம் வியந்து பாராட்டுதற்குரியது. "தன்னுருக் கொண்டு நின்றான்" என்பதால், அனுமனின் இயற்கை உருவமே இந்தப் பேருருத்தான் என்று கொள்ளலாம். அனுமன் வேத சாத்திரங்களினும் மேம்பட்ட ஞானி என்பது புலப்படுத்தப்பட்டது.

32. அனுமன் பேருருவச் சிறப்பு

கண்டிலன், உலகம் மூன்றும் காலினால் கடந்து கொண்ட,
புண்டரீகக் கண் ஆழிப் புரவலன், பொலன் கொள்சோதிக்
குண்டல வதனம் என்றால், கூறலாம் தகைமைத்து ஒன்றோ
பண்டைநூல் கதிரோன் சொல்லப் படித்தனன் படிவம்? அம்மா! (3886)

(கடத்தல் - அளந்து தனதாக்கிக் கொள்ளுதல்; புண்டரீகம் - செந்தாமரை மலர்; ஆழி - சக்கரப்படை; புரவலன் - காத்தற்கடவுள் \ திருமால் \ இராமன்; பொலன் - பொன்; சோதி - ஒளி; குண்டலம் - காதணி; வதனம் - முகம்; நூல் - இலக்கணம் முதலிய கலைகள்; கதிரோன் - சூரியன்; தகைமை - தன்மை)

விண், மண், பாதளம் என்னும் மூன்று உலகங்களையும் தன் திருப்பாதங்களினால் அளந்து தனதாக்கிக் கொண்ட திரிவிக்கிரம அவதாரம் எடுத்தவனும் செந்தாமரைக் கண்களையும், சக்கராயுதத்தையும் கைக்கொண்டு, காத்தல் தொழில் புரிந்து வரும் பரம்பொருளாகிய திருமாலின் அவதாரமுமான இராமபிரான், அனுமன் பேருருக் கொண்டு நின்ற போது, அவனுடைய பொன் மயமானதும் ஒளிவீசுவதுமாகிய காதணியை உடைய முகத்தைக் காண இயலாது போயிற்று என்றால், பழமையான நவவியாக்ரணங்களையும், ஏனைய சாத்திரங்களையும் நூல்களையும் சூரியன் கற்பிக்க, அதை அவனுடனேயே சென்று கற்றுக் கொண்டவனாகிய அனுமனின் உருவத்தின் சிறப்பு நம்மால் கூறும் தன்மையதாகுமோ?

முன்பு திரிவிக்கிரம அவதாரம் கொண்ட திருமாலின் அவதாரமே இராமன் என்பதை, "உலகம் மூன்றும் காலினால் கடந்து கொண்ட புண்டரீகக்கண் ஆழிப்புரவலன்" என்ற மிக அருமையான சொற்களால் சித்திரம் போல் தீட்டிக் காட்டியிருக்கும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. "மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகை முடியத்தாவிய சேவடி" என்பது சிலப்பதிகாரம். அனுமன் சூரியனிடமிருந்து நவவியாக்ரணங்களையும் கற்றுத் தேர்ந்தவன் என்பது நாம் அறிந்ததே. அவன் சூரியன் செல்லுமிடமெல்லாம் தானும் அவன் கூடவே சென்று கற்கவேண்டியதாயிற்று. எனவே அவனை நெருங்கிச் சென்று கற்கும் வண்ணம், அவன் இயற்கையிலேயே பேருருக் கொண்டவன்தான் என்பது இங்கு நிறுவப் பெறுவது காண்க. இத்தகைய இராமபிரானாலேயே அனுமனது முகத்தை இப்பொழுது காணமுடியவில்லை என்றால், அவனது பேருருவத்தின் சிறப்பை எங்ஙனம் கூற இயலும்? என்பது கருத்து.

33. இராமன் இலக்குவனிடம், அனுமன பேருருவைப் புகழ்தல்

தாள்படாக் கமலம் அன்ன தடங்கணான், தம்பிக்கு, "அம்ம!
கீழ்ப்படா நின்ற நீக்கி, கிளர்படாது ஆகி, என்றும்
நாட்படா மறைகளாலும், நவைபடா ஞானத்தாலும்,
கோட்படாப் பதமே ஐய! குரக்கு உருக்கொண்டது" என்றான். (3887)

(தாள் - நாளம் \ தண்டு; படா - பொருந்தாத; கீழ்ப்படா - கீழ்ப்பட்டு \ கீழ்மை பொருந்திய; கிளர் - ஒளி; நாள் - காலவரையறை; நவை - குற்றம்; கோட்படா - கொள்ளப்படா; கோள் - கொள்ளுதல்; பதம் - பொருள் \ பரம்பொருள்; அம்ம - கேள்)

தண்டுகளுடன் பொருந்தாத தாமரை மலர் போன்ற பெரிய கண்களையுடையவனான இராமபிரான், தம்பி இலக்குவனை நோக்கி, "தம்பி கேட்பாயாக! கீழ்மை பொருந்திய குணங்களை அகற்றி ஞானஒளி கெட்டுப் போகாதவாறு கைக்கொண்டு, என்றும் அழியாது நிலைபெற்று நிற்கும் காலவரையறைக்கு உட்படாத, கால எல்லைகளுக்கு அப்பாற்பட்ட வேதங்களாலும், ஐயம், திரிபு, அறியாமை என்ற குற்றங்கள் இல்லாத தத்துவ ஞானத்தாலும், அறிந்து கொள்ளப்பட முடியாத பரம்பொருளே இந்தக் குரங்கின் வடிவம் கொண்டு வந்துள்ளது" என்று கூறினான்.

"அம்ம" என்பது வியப்புக் குறித்த இடைச்சொல் என்றாலும், இங்கே "கேட்பாயாக" என்ற பொருளில் வந்தது. "அம்ம கேட்பிக்கும்" என்பது தொல்காப்பியம்; "பதம்" என்ற சொல், இங்கே பரம்பொருளைக் குறித்தது. பரம்பொருளாகிய இராமபிரானே, இங்கே அனுமனைப் பரம்பொருளின் உருவம் என்று கூறியது ஆழ்ந்து சிந்திப்பதற்கு உரியது. "கமலம் அன்ன தடங்கணான்" என்பது "புண்டரீகாக்ஷன்" என்ற வடசொல்லின் விரிவு. வேதங்களுக்கும், தத்துவ ஞானத்திற்கும் அப்பாற்பட்டு நிற்பது பரம்பொருள் என்பதனை, "நாட்படா மறைகளாலும், நவைபடா ஞானத்தாலும் கோட்படாப் பதம்" என்றார் என்க.

34. இராமன் சுக்கிரீவனையும் புகழ்தல்

"நல்லன நிமித்தம் பெற்றேம்; நம்பியைப் பெற்றேம்; நம்பால்
இல்லையே துன்பம் ஆனது; இன்பமும் எய்திற்று; இன்னும்
வில்லினாய்! இவனைப் போலாம் கவிக்குலக் குரிசில் வீரன்
சொல்லினால் ஏவல் செய்வான்; அவன் நிலை சொல்லற்பாற்றோ?"(3888)

(நிமித்தம் - சகுனம் \ அறிகுறி; நம்பி - நற்குணங்கள் உடையவன்; குரிசில் - உபகாரி)

இராமபிரான், இலக்குவனை நோக்கி, "வில்லை உடையவனே! நாம் ருசியமுக மலைக்குப் புறப்படும் பொழுதே நல்ல சகுனங்கள் தெரியலாயின; எனவேதான் நாம் இப்பொழுது இத்தகைய நற்குணங்கள் வாய்ந்த அனுமனைக் காணப்பெற்றோம்; எனவே இனிமேல் நமக்குத் துன்பம் என்பதே வாராது; இன்பமும் நம்மை வந்தடையும்; குரக்கினத்தரசனும் உபகாரியுமான சுக்கிரீவனின் கட்டளையினால் குற்றேவல் செய்யும் அனுமனே இவ்வாறு ஆற்றல் வாய்ந்தவனாக இருப்பான் என்றால், இவனை ஏவலனாகக் கொண்ட சுக்கிரீவனின் ஆற்றல் நம்மால் கூறும் தரத்ததோ?" என்றான். இவனைக் காட்டிலும் அவன் மேம்பட்டவனாகத்தான் இருத்தல் வேண்டும் என்பது அருத்தாபத்தி.

நல்லவர் துணையைப் பெறுவதால் துன்பம் நீங்குதலும், இன்பம் வந்து அடைதலும் உறுதி என்பதைப் புலப்படுத்தினான் என்க. அனுமனைப் பெற்றதால் சீதையை மீட்டு வருதல் எளிதும், உறுதியும் என்பதைக் குறித்தே "நம்பால் இல்லையே துன்பமானது, இன்பமும் எய்திற்று" என்றான் என்க. தான் நேரில் கண்ட அனுமனின் ஆற்றலைக் கொண்டு, தான் நேரில் காணாத சுக்கிரீவனின் ஆற்றலை இராமன் ஊகித்தறிகிறான் என்பதாம்.

35. சுக்கிரீவனை அழைத்து வர அனுமன் செல்லுதல்

என்று அகம் உவந்து, கோலமுகம் மலர்ந்து, இனிதின் நின்ற
குன்று உறழ் தோளினாரைநோக்கி, அக்குரக்குச் சீயம்,
"சென்று அவன் தன்னை, இன்னே கொணர்கின்றேன்; சிறிது போது
வென்றீயீர் இருத்திர்!" என்று விடைபெற்று, விரைவில் போனான் (3889)

(அகம் - மனம்; கோல - அழகிய; உறழ் - போன்ற; சீயம் - சிங்கம்; வென்றி - வெற்றி; இன்னே - இப்பொழுதே; கொணர்தல்; அழைத்துக் கொண்டு வருதல்; விடை - உத்தரவு)

என்று இவ்வாறு கூறி மனம் மகிழ்ந்து, அதனால் தன் அழகிய முகமும் மலர்ந்து, இனிதாக நின்றிருந்த, மலைபோலும் தோள்களை உடைய, இராம இலக்குவரை நோக்கி, அந்தக் குரங்குகளில் சிங்கம் போன்ற வலிமை பெற்ற அனுமன், "நான் சென்று எங்கள் தலைவனாகிய சுக்கிரீவனை இப்பொழுதே இங்கே அழைத்துக் கொண்டு வருகிறேன். வெற்றியையுடையவர்களே! நீங்கள் சிறிது நேரம் இங்கேயே இருங்கள்" என்று கூறி, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு விரைவாகச் சுக்கிரீவன் இருக்குமிடம் நோக்கிச் சென்றான்.

ஆண்களில் மிகுந்த ஆற்றல் உடையவர்களை ஆண் சிங்கம் என்று அழைப்பதைப் போலக் கவிஞன் குரங்குகளில் வலிமை மிக்க அனுமனை குரக்குச் சீயம் என்று அழைத்த நயம் காண்க. அனுமனைக் கவிஞன் அஞ்சனைச் சிங்கம் என்று குறிப்பிடுவதையும் இங்கு நினைவு கூர்க. மேலும் சிங்கமானது தனக்கு முன்னும் பின்னும் நோக்கித் தனக்கு வரும் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவெடுப்பதைப் போல, அனுமனும் முன்பின் விளைவுகளை நோக்கி ஆராய்ந்து முடிவெடுக்கும் தன்மை உடையவன் என்பதையும் இச்சொல் குறிக்கும் என்க.

இங்கே அனுமன் விசுவரூபம் எடுத்த நிலையிலேயே, இராமனையும் இலக்குவனையும் தனது தோள்களில் ஏற்றிக் கொண்டு சுக்கிரீவனிடம் சென்றான் என்று அத்யாத்மராமாயணம் கூறும். பிக்ஷு வடிவத்தை விட்டு, தனது இயல்பான வடிவத்திலேயே அவர்களிருவரையும் தன் தோளின் மீது அமர்த்திக் கொண்டு சுக்கிரீவனை நோக்கிச் சென்றான் என்று வான்மீகம் கூறும். கம்பன் மட்டும்தான் அவன் சென்று சுக்கிரீவனை இவர்களிடத்து அழைத்து வருவதாகக் கூறுகிறான் என்பது நோக்கத்தக்கது.

அனுமப் படலம் நிறைவுற்றது

3. நட்புக்கோட் படலம் (79 பாடல்கள்)

இராமனும் சுக்கிரீவனும் ஒருவரோடொருவர் நட்புக் கொண்ட நிகழ்ச்சியைப் பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 79 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் "சுக்கிரீவன் நட்புப் படலம்" எனவும், "சுக்கிரீவன் நட்புப்புரி படலம்" எனவும், "நட்புப் படலம்" எனவும், "நட்புக் கொண்டாட்டப் படலம்" எனவும், "நட்புறு படலம்" எனவும் காணப் பெறுகின்றன. சில அச்சுப் பிரதிகளில், இப்படலம், அடுத்து வரும் மராமரப் படலத்துள்ளேயே அடங்கியும் இருக்கிறது.

இப்படலத்துள் அனுமன் சுக்கிரீவனிடம் சென்று இராமனின் பெருமைகளைக் கூறுதல்; அவனைத் தன்னுடன் இராமன் இருக்குமிடம் அழைத்துவருதல்; அங்கு வந்த சுக்கிரீவனை இராமன் வரவேற்றல்; சுக்கிரீவனும் இராமனும் ஒருங்கிருந்து உரையாடியது; இருவரும் நட்புப் பூண்டது கண்டு குரக்கினம் மகிழ்தல்; சுக்கிரீவனது இருக்கைக்கு எல்லோரும் செல்லுதல்; ஒரு புதுமலர்ச் சோலையை அடைந்து, விருந்து உண்ணல்; சுக்கிரீவனது மனைவி அங்கு இல்லாதது கண்டு இராமன் அவன் மனைவி பற்றி வினவுதல்; அனுமன் தலையிட்டு சுக்கிரீவனின் தமையனான வாலியின் பெருமைகளையும், அவன் சுக்கிரீவனோடு கொண்ட பகைமைக்குக் காரணத்தையும் கூறி அவன் மனைவி உருமையை வாலி கவர்ந்து சென்றதும் கூறுதல்; வாலிக்குப் பயந்து, வாலி புக முடியாத இம்மலையில் சுக்கிரீவன் வாழ்ந்து வருதல் பற்றிக் கூறுதல்; அதனைக் கேட்ட இராமன் சினங்கொண்டு, வாலியைக் கொன்று, சுக்கிரீவனுக்கு அவனது நாட்டையும் அவன் மனைவி உருமையையும் மீட்டுத் தருவேன் என்று உறுதி கூறுதல்; அப்பொழுது சுக்கிரீவன் "இது குறித்து நாங்கள் ஆலோசிக்க வேண்டியது உள்ளது" என்று கூறி அவன் அமைச்சர்களோடு தனியே இருந்து ஆலோசித்தல், அனுமன், "இராமன் திருமாலின் அவதாரமே" என்று உறுதியாகக் கூறுதல்; அவன் ஆற்றலை அறிய அனுமன் கூறிய உபாயம்; அதற்கு உடன்பட்டு சுக்கிரீவன் இராமனிடம் சென்று தன் எண்ணத்தைக் கூற முற்படுதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. அனுமன் மிகமகிழ்ச்சியுடன் சுக்கிரீவனை அனுகுதல்

போன மந்தர மணிப் புயநெடும் புகழினான்
ஆன, தன் பொருசினத்து அரசன்மாடு அணுகினான்;
"யானும், உன்குலமும், இவ்வுலகும் உய்ந்தனம்" எனா,
மானவன் குணமெலாம் நினையும் மா மதியினான். (3890)

(மானவன் - மனுக்குலத்தில் பிறந்தவன் \ பெருமை உடையவன்; உய்தல் - பிழைத்தல் \ ஈடேறுதல்; பொருதல் - போர் செய்தல்; மாடு - பக்கம்; மணி - அழகிய)

இராம இலக்குவரிடமிருந்து விடைபெற்று விரைந்து போனவனாகிய மந்தரமலை போன்ற அழகிய, தோள்களை யுடையவனும், நீண்ட புகழை உடையவனுமான அனுமன், மனுக்குலத்தில் தோன்றிய இராமபிரானின் நற்பண்புகளையெல்லாம் மனத்துள் சிந்தித்துக் கொண்டு "நானும், நீயும், உன் குரங்கினமும், இவ்வுலகும் இனிப் பிழைத்தோம்" என்று கூறிக் கொண்டே, போர் செய்தற்குரிய சினத்துடன் வீற்றிருக்கும் தனது அரசனாகிய சுக்கிரீவன் இருக்குமிடத்தை அடைந்தான்.

அனுமனுடைய உடலை மேரு மலைக்கும், திரண்ட தோள்களை மந்தர மலைக்கும் முன்னரும் உவமித்தது நினைக. இராமபிரானின் அன்பு, அருள், இன்சொல், அழகு, நேர்மை ஆகிய நற்பண்புகள் பலவற்றை நேரில் கண்டவன் ஆதலின், அனுமன், "குணம் எலாம்" என்றான் என்க. சுக்கிரீவன், இவ்விருவரும் பகைவரோ என்று பார்த்து வரச் சொல்லியதால், அவர்கள் பகைவர்கள் அல்லர், நண்பர்கள், அவர்களால் நமக்கும், நம் இனத்திற்கும், இவ்வுலகிற்கும் நன்மை விளையப் போகிறது என்று மிகவும் சிந்தித்துக் கூறிக் கொண்டே சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான் என்பதாம். அவர்கள் இருவரும் நட்புக் கொள்ளுவதால் சுக்கிரீவனும், இராமனும் மட்டும் நன்மையடையப் போவது இல்லை; வாலிக்குப் பயந்து வாழும் சுக்கிரீவனும், அவனது சேனைகளாகிய அவன் குரக்கினமும், அரக்கர்கள் அழியப் போவதால் இவ்வுலகமுமே பிழைக்கப் போகிறது என்று ஊகித்துக் கூறினான் என்க.

2. அனுமனின் மகிழ்ச்சிக் கூற்று

மேலவன் திருமகற்கு உரைசெய்தான், "விரை செய்தார்
வாலி என்ற அளவிலா வலியினான் உயிர்தெறக்,
காலன் வந்தனன்; இடர்க்கடல் கடந்தனெம்" எனா,
ஆலம் உண்டவனின் நின்று அருநடம் புரிகுவான். (3891)

(ஆலம் - நஞ்சு \ ஆலகால விடம்; விரை - நறுமணம்; தார் - வெற்றி மாலை; தெறுதல் - போக்குதல் \ அழித்தல் \ நீங்குதல்; காலன் - இயமன்; மேலவன் - மேலேயிருக்கும் சூரியன்)

திருப்பாற்கடலில் தோன்றிய ஆலகால விடத்தை உண்டவனான சிவபெருமானைப் போல நின்று கொண்டு அருமையான நடனம் ஆடிக் கொண்டு வந்தவனான அனுமன், "நறுமணம் வீசுகின்ற வெற்றி மாலையை அணிந்த வாலி என்று கூறப்படும் அளவற்ற வலிமையுடையவனின் உயிரினைப் போக்குதற்குத் தகுந்த இயமன் போன்று இராமபிரான் வந்திருக்கிறான்; இதனால் நாம் நமது துயரமாகிய கடலினைக் கடந்தவர்களானோம்" என்று விண்ணில் சஞ்சரிக்கும் சூரியனின் அழகிய மகனாகிய சுக்கிரீவனுக்குக் கூறினான்.

சூரியன் விண்ணில் சஞ்சரிப்பதனால் "மேலவன்" எனப்பட்டான்; "தார் வாலி" என்பது வாலியாராலும் வெல்லப்பட முடியாதவன், எப்பொழுதும் வெற்றி பெற்று, வெற்றி மாலையையே அணிபவன் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. இன்னும் ஒன்று. வாலியின் தந்தையாகிய இந்திரன், வாலி பிறந்த பொழுது அவன் கழுத்தில் தனது பொன் மாலையை இட்டு, "உன்னை எதிர்த்துப் போர் புரிபவர்களின் வலிமையில் பாதி உனக்கு வந்து சேரும்" என்று அருள் செய்து ஆசீர்வதித்து அந்த மாலையைச் சூட்டினான். அத்தகைய மாலையை அணிந்த வாலி என்பதையும் "தார் வாலி" என்ற சொல் குறிக்கும் என்க. வாலி அளவிலா வலியினன் என்பதை அனுமன் பின்னர் வரும் பதின்மூன்று பாடல்களால் தெரிவிப்பதையும் இங்கு நினைவு கூர்க. சுக்கிரீவன், தங்கள் உயிரைப் போக்க வாலி அனுப்பிய இருவர் வந்திருக்கிறார்கள் என்று அஞ்சி இங்கே ஒளிந்திருக்கவும், அனுமன் வந்து அவர்கள் வந்திருப்பது நம்மை அழிக்க அல்ல. நம் எதிரியான வாலியை அழிக்க என்று கூறியதும் ஒரு நயம். அவர்கள் அடைந்த துன்பத்தின் மிகுதியை உணர்த்த அதை "இடர்க்கடல்" என உருவகித்தார் என்க. அனுமனைப் பற்றிக் கூறும் பொழுதெல்லாம், அவன் சிவபெருமானின் கூறு என்பதனைக் கம்பர் காப்பியத்தில் எல்லா இடங்களிலும் கூறுவதை நுனித்து அறிக. "கடந்தனம்" என்று இறந்த காலத்தில் கூறியது தெளிவும் உறுதியும் பற்றி என்க.

3. இராம இலக்குவர் இயல்பை அனுமன் தெரிவித்தல்

"மண் உளார், விண் உளார், மாறு உளார், வேறு உளார்,
எண் உளார், இயல் உளார், இசை உளார், திசை உளார்,
கண் உளார் ஆயினார்; பகை உளார் கழி நெடும்
புண் உளார், ஆர்உயிர்க்கு அமிழ்தமே போல் உளார்." **(3892)**

(எண் - மனம்; இயல் - செய்கைகள்; இசை - சொல்; கழி - மிகவும்)

"இந்த இராம இலக்குவர்கள், இம்மண்ணுலகத்தில் வாழும் மானிடர்கள், விண்ணுலகத்தில் வாழும் தேவர்கள், இவ்விரண்டிற்கும் மாறுபட்ட பாதாள உலகத்தில் வாழும் நாகர்கள், மற்றும் ஏனைய வெவ்வேறு உலகங்களில் உள்ளவர்கள், எட்டுத் திசைகளிலும் உள்ளவர்களான எல்லோரின் மனத்திலும் கருத்திலும், அவர்கள் செய்கை வடிவாகவும், சொல் வடிவாகவும் அவர்களின் கண்களுக்குள்ளேயே இருப்பவர்களும், ஆவார்கள்; மிக நீண்ட பகை கொண்டவர்கள் கூட இவர்களைச் சரண் அடைந்தால், அந்தப் பகையை அழித்து, பகையால் உண்டாகிய புண்களையும் ஆற்றி அவர்களுடைய அரிய உயிருக்கு அமிழ்தம் போன்றவர்களும் ஆவார்கள்.

இப்பாடலில் இராம இலக்குவரின் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற தெய்வத்தன்மையும், அவர்களது வீரம், அன்பு, கருணை, அடைக்கலம் அடைந்தாரைக் காக்கும் பண்பு ஆகியவையும் சிறப்பாகப் பேசப்பட்டிருப்பதை உணர்க. இவர்கள் உலகில் உள்ள எல்லோரது மனம், மொழி, மெய் என்ற முக்கரணங்களிலும் நீக்கமற நிறைந்து விளங்குபவர்கள் என்பதை முதல்

இரண்டு அடிகளிலும் கூறியிருப்பது காண்க. கடவுள் கண்களுக்குள் நிறைந்திருக்கிறார் என்று திருமுறைப்பாடல்கள் எல்லாவற்றிலும் பரக்கக் காணலாம்; "கண்ணகத்தே நின்று களிதரு தேனே" என்பது திருவாசகம் "கண்ணாவான் என்றும் மண்ணோர்க்கும், விண்ணோர்க்கும்" என்பது திருவாய்மொழி \ ஆழ்வார்பாசுரம்; "அச்சமற்று அடைந்தார்க்கு அமிழ்து அன்னவன்" என்பது சிந்தாமணி. சுக்கிரீவன் இராமபிரானைச் சரணடைந்தால், வாலியை அழித்து, அவனது உயிருக்கு அமிழ்தம்போல் கருணை செய்வான் என்பது இறுதி இரண்டு அடிகளின் கருத்து, இதைக் கூற வேண்டிய இடத்தில், கூற வேண்டிய முறையில் கூறியிருக்கும் அனுமனின் சொல்வன்மை நோக்குக.

4. அனுமன் சுக்கிரீவனுக்கு, இராமன் வரலாறு கூறுதல்

சூழிமால் யானையார் தொழுகழல் தயரதன்
பாழியால், உலகெலாம் ஒரு வழிப்படர வாழ்
ஆழியான் மைந்தர்; பேர் அறிவினார்; அழகினார்;
ஊழியார்; எளிதின் நிற்கு அரசு தந்து உதவுவார். (3893)

(சூழி - முகபடாம் \ நெற்றிப் பட்டம்; பாழி - வலிமை \ தோள் வலி; ஆழியான் - சக்கரவர்த்தி \ ஆணைச் சக்கரமுடையவன் \ படர - விளங்க; ஒருவழி - ஒரு குடைக்கீழ்)

"நெற்றிப் பட்டம் கட்டப்பட்ட பெரிய மதமயக்கமுடைய யானைப் படையை உடைய சிற்றரசர்கள் வணங்கித் தொழுகின்ற வீரக்கழலணிந்தவனும், தன் தோள் ஆற்றலால் விண், மண், பாதளம் ஆகிய மூன்று உலகங்களையும் ஒரே குடைக்கீழ் விளங்கும்படி அரசாட்சி செய்து வாழ்ந்து வருகின்றவனும், ஆணைச் சக்கரத்தை உடையவனுமான தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வர்கள் இவர்கள். இவர்கள் பேரறிவும், பேரழகும் கொண்டவர்கள். இவர்கள் நெறிமுறைப்படி, எளிதாக, இனிதாக, உனக்கு உன்னுடைய நாட்டு அரசுரிமையை வாலியிடமிருந்து பெற்றுத் தந்து உதவுவார்கள்" என்றான் அனுமன்.

அனுமன் சுக்கிரீவனுக்கு இராம இலக்குவரின் தந்தையாகிய தசரதச் சக்கரவர்த்தியின் சிறப்பினை முதலில் கூறி, பின்னர் அவர்களது அறிவு, அழகு, நடுவு நிலைமை, வீரம் முதலியவற்றையும் எடுத்துக் கூறி, சுக்கிரீவன் மிகவும் விரும்பியிருக்கின்ற அரசுரிமையையும், வாலியை வென்று, பெற்றுத் தருவார்கள் என்றும் கூறுகிறான். இங்கே யானையை மட்டும் சொன்னதால் மற்ற மூன்று படைகளையும் இனத்தால் கொள்ள வேண்டும். காப்பியத்தில் இராம இலக்குவர்களை அனைவரும் பேரழகினார் என்று புகழ்வதைக் கூர்ந்து நோக்குக. அரசுரிமையின் மேலேயே பெருவிருப்பம் கொண்டிருக்கின்ற சுக்கிரீவன் குறிப்பறிந்து பேசும் அனுமனின் சொல்வன்மை காண்க.

5. "நீதியார்; கருணையின் நெறியினார்; நெறிவயின்
பேதியா நிலைமையார்; எவரினும் பெருமையார்;
போதியாது அளவிலா உணர்வினார்; புகழினார்;
காதிசேய்தரு நெடும் கடவுள் வெம்படையினார்." (3894)

(பேதித்தல் - பிறழ்தல் \ மாறுபடுதல்; உணர்வு - அறிவு; காதி சேய் - கோசிக முனிவன் \ விசுவாமித்திரன்; வெம் - கொடிய; படை - படைக்கலன்கள் \ அஸ்திரங்கள்)

"அவர்கள் நீதிநெறி அறிந்தவர்கள். கருணையும் கொண்டு ஒழுகுபவர்கள். அந்த நெறியிலிருந்து சற்றும் மாறுபடாது, உறுதியாய் நிற்கும் இயல்புடையவர்கள். எல்லோரைக் காட்டிலும் பெருமை பெற்றவர்கள்; வேறு எவராலும் கற்பிக்கப்பட வேண்டாதவாறு, தாமே, இயல்பாகவே, பூர்வ புண்ணியத்தால், அளவற்ற நல்லறிவுடையவர்கள்; மிகப்புகழ் பெற்றவர்கள்; காதி என்னும் மன்னனின் மகனாகிய விசுவாமித்திரர் அளித்த, கடல் போன்று மிகுந்த அளவிலான, தெய்வத்தன்மை பொருந்திய, கொடிய படைக்கலன்களையும், அஸ்திரங்களையும் கொண்டுள்ளவர்கள்",

இங்கே அனுமனின் சொல்வன்மையை நோக்க வேண்டும். சுக்கிரீவனது எண்ணம் முழுமையும் வாலியை வென்று அவ்வரசுரிமையைத் தான் ஏற்க வேண்டும் என்பதுதான். அதற்கு ஏற்ப அனுமன், அவ்விருவரின் ஒவ்வொரு குணங்களையும் முறைப்படுத்திக் கூறிய நயம் நோக்குக. "நீதி யார்" என்பதில் அறம் தலை நிறுத்துதற்காக அவதாரம் எடுத்தவர்கள் என்ற விரிவான பொருள் அடங்கியிருப்பது காண்க. நம் குறையை நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவதற்கு முன்பே, அவர்களே அதனை அறிந்து கொள்ளும் இயல்புடையவர் என்பதை. "போதியாது அளவிலா உணர்வினார்" என்று குறித்தான் என்க. படைக்கலன்கள் உள்ளதால் வாலியை வெல்லுதல் அவர்களுக்கு எளிது என்று அந்தப் படைக்கலன்களை, வெம்படை, கடவுள் படை என இரண்டு அடைகொடுத்துச் சிறப்பித்ததை உன்னுக. நீதி, கருணை, உறுதி, புகழ், அறிவு முதலியவற்றோடு பெரும் படையும் கொண்டவர் என்று கூறியது ஒரு நயம்.

6. வேல் இகல் சினவு தாடகை விளிந்து உருள, வில்
கோலி, அக்கொடுமையாள் புதல்வனைக் கொன்று, தன்
கால் இயல் பொடியினால், நெடிய கற்படிவமாம்
ஆலிகைக்கு, அரியபேர் உருவு அளித்து அருளினான். (3895)

(வேல் - சூலம்; இகல் - மாறுபடுதல் \ போரிடுதல்; விளிந்து - இறந்து; கோலி - வளைத்து; இயல் - பொருந்திய; பொடி - மண் துகள்; ஆலிகை - அகலிகை \ அழகின்மை இல்லாதவள் \ அழகுடையவள்; தாடகை - மலைகளில் சஞ்சரிப்பவள்)

அவ்விருவருள் மூத்தவனான இராமன், முத்தலைச் சூலாயுதத்தைக் கொண்டு கோபித்துத் தன்னுடன் போர் செய்ய வந்த தாடகை என்பாள் இறந்து தரையில் உருண்டு விழுமாறும், வில்லினில் அம்பைப் பொருத்தி வளைத்து, அந்தக் கொடியவளான தாடகையின் ஒரு புதல்வனான சுபாகு என்பவனைக் கொன்றும், தனது காலில் பொருந்திய மண் துகளின் ஆற்றலால் நீண்ட கல்லின் வடிவமாக நெடுநாள் கிடந்த அகலிகை என்பாளுக்கு, சாப நீக்கம் அளித்து,

அவள் பெறுதற்கரிய பண்டைய உரு அளித்து, அவளைக் கௌதம முனிவனுடன் மீண்டும் சேர்ந்து இல்லறம் நடத்துமாறும் அருளியவனாவான்.

தாடகைவதம், சுபாகுவைக் கொல்லுதல், அகலிகை சாப நீக்கம் ஆகிய மூன்று செயல்களும் பாலகாண்டத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இங்கே ஒன்றை நோக்க வேண்டும். தாடகையும், சுபாகுவும், இராம இலக்குவர்க்குப் பகைவர்கள் அல்லர். இவ்வதையை இராமன் செய்ததற்குக் காரணம், அவர்கள் தங்கள் குருவின் வேள்வியைக் குலைத்தனர் என்பதால்தான். அதேபோல, இப்பொழுதும் சுக்கிரீவனுக்குத் துயரம் விளைவிக்கும் வாலியையும் கொன்று அரசுரிமையைத் தருவான் என்பதும். எவ்வாறு அகலிகையைத் தூயவளாக்கித் திருப்பிக் கௌதமருடன் வாழச் செய்தானோ, அவ்வாறே சுக்கிரீவனின் மனைவி உருமையை, வாலியிடம் இருந்து மீட்டு, தூயவளாக்கி சுக்கிரீவனுடன் வாழ அருள் புரிவான் என்பதும் குறிப்பு. அனுமனின் சொல்லாற்றலுக்குச் சான்று பகரும் முத்திரைப் பாடல் இது. இது முதல் பத்துப் பாடல்களில் இராமனின் சிறப்புக்களை மட்டும் பேசுகிறான் அனுமன் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பத்துப் பாடல்களை மட்டுமே "அனும இராமாயணம்" என்று கூறுவதுண்டு.

7. "நல் உறுப்பு அமையும் நம்பியரில் முன்னவன், நயந்து
எல் உறுப்பு அரியபேர் எழுசுடர்க்கடவுள் தன்
பல் இறுத்தவன் வலிக்கு அமை "தியம்பகம்" எனும்
வில் இறுத்து அருளினான்;மிதிலைபுக்கு அனைய நாள்." (3896)

(நயந்து - விருப்பம் கொண்டு; எல் - ஒளி; சுடர்க்கடவுள் - சூரியன்; இறுத்தல் - உடைத்தல் \ முறித்தல்; அமை - ஏற்றவாறு அமைந்த; தியம்பகம் - திரியம்பகம்; அம்பகம் - கண்; திரியம்பகம் - மூன்று கண்களையுடையது; திரியம்பகன் - மூன்று கண்களையுடைய சிவபெருமான். நம்பி - ஆடவருள் சிறந்தோன்;)

அரசர்களுக்குரிய இலக்கணப்படி உடலின் எல்லா உறுப்புக்களும் அமைந்தவனும், ஆடவரில் சிறந்தோனுமாகிய, தசரதனின் நான்கு புதல்வர்களிலும், முன்னவனும் இலக்குவனின் மூத்தவனுமான இராமன், மிதிலைநகர் புகுந்த அந்த நாளில், சீதையை மணக்க விருப்பம் கொண்டு, ஒளி பொருந்திய அருமையான பெரிய ஏழு நிறங்களைக் கொண்ட சூரியனின் பல்லை உதிர்த்தவனான சிவபெருமானின் வலிமைக்கு ஏற்ப அமைந்த திரியம்பகம் என்னும் மூன்று கணுக்களையுடையவில்லை ஒடித்து, சனகனுக்கும் சீதைக்கும் அருள் செய்தவனாவான்.

சாமுத்திரிகா லக்ஷணங்கள் அனைத்தும் அமையப் பெற்றவர்கள் தசரதனின் நான்கு அரசகுமாரர்களும்; அவர்களில் மூத்தவனான இராமன் பற்றி மட்டும் இது முதல் பத்துப் பாடல்களில் கூறுகிறான் அனுமன். "அலகு அறும் இலக்கணம் அமைந்த மெய்யினர்" என்று சடாயு முன்பு கூறியதை இங்கு நினைவு கூர்க. சூரியன், பூமியைவிடப் பத்து லட்சம் மடங்கு பெரிய கோளம் என்றும் அவ்வொளி வட்டத்தில் ஏழு வண்ணங்கள் அமைந்திருக்கின்றன

என்றும் வானசாஸ்திரம் கூறும். அதனைக் குறிக்கவே "அரிய பேர்எழு சுடர்க்கடவுள்" என்று சூரியனைக் குறித்தார் என்க. தக்கன் ஒரு வேள்வி நடத்தினான் அதற்குத் தன் மருமகனாகிய சிவபெருமானை அழைக்கவில்லை. அதனால் சினம் கொண்ட சிவபெருமான் அவியுணவிற்காக அங்கு சென்றிருந்த தேவர்களை எல்லாம், வீரபத்திரர் என்ற தன் பிள்ளையை ஏவி, தண்டிக்கச் செய்தார். அப்படித் தண்டிக்கப்பட்டுப் பல்லுடைந்து போனவன் சூரியன். இப்புராண வரலாற்றை இங்கே துணைக் கொண்டு, "எழுசுடர்க் கடவுள் தன் பல்லிறுத்தவன்" என்று சிவபெருமானைக் குறிப்பிடுகிறான். "சூரியனார் தொண்டை, வாயின் பற்களை, வாரி நெரிந்தவாறு" என்பது திருவாசகம். அத்தகைய சிவபெருமானின் சிவதனுசை - திரியம்பகத்தையே, சீதையின் பொருட்டு உடைத்த வலிமை பெற்றவன் இராமன் என்று குறிப்பிடுகிறான் அனுமன். சிவபெருமானின் வில்லை ஒடித்தவனுக்கு, வாலியைக் கொல்வது ஒன்றும் அரிய செயலன்று, மிக எளிதே என்பது குறிப்பு.

**8. "உளை வயப்புரவியான் உதவ உற்று, ஒரு சொலால்,
அளவுஇல் கற்புடைய சிற்றவை பணித்து அருளலால்,
வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருஎலாம்
இளையவற்கு உதவி, இத்தலை எழுந்தருளினான்." (3897)**

(உளை - பிடரி மயிர்; வ்ய - வெற்றிமிக்க; புரவி - குதிரை; உற்று - ஏற்றுக்கொண்டு; பணித்தல் - கட்டளையிடுதல்; வளை - சங்கு; புணரி - கடல்; மகி - பூமி; தலம் - இடம்; மகிதலம் - உலகம்; இத்தலை - இவ்விடம் \ காட்டிற்கு;)

பிடரி மயிரினை உடைய குதிரைப் படையை உடைய தசரதச் சக்கரவர்த்தி, முன்பு கொடுத்து உதவிய அரசச் செல்வத்தை ஏற்றுக் கொண்டு, பின்னர் அளவற்ற கற்புடைய தன் சிறிய அன்னை கைகேயி, தன் ஒரே சொல்லால் கட்டளையிட்டு அருளியதால், சங்குகள் நிறைந்த கடல்களால் சூழப்பட்ட இவ்வுலகத்து அரசச் செல்வம் அனைத்தையும், தன் இளையவனான பரதனுக்குக் கொடுத்து விட்டு, வனவாசம் செய்வதற்காக இக்காட்டின் கண் எழுந்தருளியிருக்கிறான் இராமன்" என்றான் அனுமன்.

முன்பு யானைப் படையை மட்டும் கூறி, ஏனையப் படைகளை இனத்தால் கொள்ளக் கூறியது போல, இங்கு குதிரைப் படையை மட்டும் கூறி மற்ற படைகளை இனத்தால் பெற வைத்தார். சிற்றன்னை அவனைப் பலமுறை வேண்டிக் கேட்காமல் ஒரே சொல் - ஒரே முறை கட்டளையிட்ட அளவிலேயே தான் ஏற்கனவே பெற்றிருந்த, தனக்கு முறைப்படி உரிமையுள்ள அரசச் செல்வம் அனைத்தையும் தம்பிக்குத் தந்தவன் என்று இராமனைச் சிறப்பிக்கிறான் அனுமன்.

முன்பு தந்தை சொல்லிய ஒரே சொல்லை மறுக்காமல் அரசுரிமையை ஏற்றுக் கொண்டான். பின்னர் தாய் சொல்லிய ஒரே சொல்லால் அதனையும் மறுக்காமல் தம்பிக்கு நல்கினான் என்று கூறியது ஒரு நயம். மகி என்பது, பூமியைக் குறிக்கும். தலம் என்பது இடத்தைக் குறிக்கும் எனவே மகிதலத்திற்கு

உலகம் என்பது பொருள். பூதலம் என்பது உலகத்தைக் குறிப்பதைப் போல, மகிதலமும் உலகத்தைக் குறிக்கும். தனக்குடைமையான அரசச் செல்வத்தையே தன் தம்பிக்கு மனமுவந்து கொடுத்தவனான இராமன், வாலியை வென்று இவ்வரசுரிமையைத் தானே வைத்துக் கொண்டு விடாமல் சுக்கிரீவனுக்கே தந்தருளுவான் என்பது அனுமனின் உட்கருத்து, முன்பு கூறிய "நீதியார்" "கருணையின் நெறியினார்", "நெறிவயின் பேதியா நிலைமையார்" என்ற மூன்று பொருள் செறிந்த கூற்றுக்கள் இங்கு உண்மையாதலை உணர்க.

9. "தெவ் இராவகை நெடுஞ்சிகை விரா மழுவினான்
அவ்விராமனையும், மாவலி தொலைத்து அருளினான்,
இவ்இராகவன்; வெகுண்டு எழும் இரா அனையனாம்
அவ்விராதனை இராவகை துடைத்து அருளினான்." (3898)

(தெவ் - பகைவர்; சிகை - ஒளிக்கொழுந்து; விரா - விரவிய \ பொருந்திய; இரா - இரவு; இராவகை - இல்லாதபடி; துடைத்து - அழித்து; தொலைத்து - போக்கி; மழு - கோடாலி; விராதன் - மிகவும் கொடுமை புரிபவன்)

"தனக்குப் பகைவர்களாகிய மன்னர்கள் குலமே வேரற்றுப் போகும்படி, இருபத்து ஒரு தலைமுறை மன்னர்களை அழித்தவனும், நீண்ட ஒளிக் கொழுந்து பொருந்திய கோடாலி என்னும் ஆயுதத்தை ஏந்தியவனுமான அந்தப் பரசுராமனைக் கொல்லாது அவனது சிறந்த தவவலிமையைப் போக்கி அருள் செய்தவன் இவ்விராமன்; கோபித்து எழுந்து வரும் இரவு போன்று கரிய உருவத்தானாம் அந்தக் கொடிய விராதன் என்னும் அரக்கனையும், அவன் இவ்வுலகிலேயே இல்லாதவண்ணம் செய்து அவனை அழித்து, அவன் பண்டைய உருவாகிய காந்தர்வ உருப்பெறுமாறு அருளியவன் இவ்விராமன்" என்றான் அனுமன்.

பரசுராமன் தவவலிமையைத் தன் அம்பால் பற்றி, அவன் முனிவன் என்பதால் கொல்லாது விடுத்தது இராமனின் கருணையுள்ளத்தை எடுத்துக் காட்டவே என்க. எனவேதான் "வலி தொலைத்து அருளினான்" என்றார். பரசுராமன் தன் பகைவர்களான மன்னர் குலத்தை இருபத்தோரு தலைமுறை வேரறுத்தது பாலகாண்டத்தில் விரிவாகப் பேசப்பட்டிருப்பதை நினைவு கூர்க. ஆரணிய காண்டத்தின் முதலில் விராதன் என்னும் கொடிய அரக்கனை இராமன் அழித்ததும், அவன் கால் தீண்டப்பெற்றதால் விராதன் அவனுடைய பண்டைய உருப்பெற்று வானில் திகழ்ந்து துதித்ததும் அங்கே விரிவாகப் பேசப்பட்டிருப்பதை நினைவிற் கொள்க. விராதனின் கரிய நிறத்தை முன்பு, "கங்குல்பூசி வருகின்ற கலிகாலம் எனவே" என்று விராதன் வதைப் படலத்தில் கூறியது கொண்டு உணர்க. தெய்வ அம்சம் பெற்று மனிதனாக வந்து பரசுராமனை வலியழித்ததும், கொடிய அரக்கனாகிய விராதனை அழித்ததும் இராமனது தோளாற்றலையும், போராற்றலையும் குறிக்கும் என்பதால், அவனால் வாலியை எளிதில் வெல்ல முடியும் என்பதை உறுதிப்படுத்திக் கூறுகிறான் அனுமன். இருவரையும் வலி தொலைத்தான், துடைத்தான்

என்றாலும், "அருளினான்" என்று கவிஞர் முடிவில் கூறுவது பகைவரை அழித்தலும் மறக் கருணையின் பாற்படும் என்ற கருத்தாகலின் என்க. இராகவன் என்பது இரகு என்னும் அரச குலத்தில் தோன்றியதால் இராமனுக்குத் தத்திதாந்தப் பெயர்.

10. "கரன் முதல் கருணையற்றவர், கடற்படையோடும்
சிரம்உகக் சிலை குனித்து உதவுவான்; திசை உளார்
பரம்உகப் பகை துமித்து அருளுவான்; பரமராம்
அரன்முதல் தலைவர்க்கு அதிசயத் திறலினான்." (3899)

(உக - சிதற; குனித்தல் - வளைத்தல்; பரம் - சுமை \ பாரம்; உக - குறைய; துமித்தல் - அழித்தல்; பரமம் - மேம்பட்டவர்; தலைவர் - தேவர் \ மும் மூர்த்திகளுமாம்; அதிசயம் - வியப்பு; அரன் - சிவபெருமான்; கரன் - கடுமையுள்ளவன்)

"கரன் முதலாகிய கருணையற்றவர்களான அரக்கர்களை அவர்களது கடல் போன்ற பதினாலாயிரம் அரக்க வீரர்களோடு, அவர்கள் தலைகளெல்லாம் சிதறி விழும்படி, வில்லை வளைத்து அருள் செய்தவன்; இந்திரன் முதலாக எட்டுத் திசைகளையும் காத்து வருபவர்களாகிய திசை காப்பாளர்களின் துன்பச் சுமை குறையும் வண்ணம், யாவர்க்கும் அறத்திற்கும் பகையான அரக்கர்களைக் கொன்று அருள் செய்பவன்; மேன்மைக் குணத்தவராகிய சிவபெருமான் முதலாய முத்தேவர்களும் வியக்கும் வில்லாற்றல் கொண்டவன்" என்றான் அனுமன்.

அரக்கர்கள் கருணையற்றவர்கள் என்பதை, "இரக்கம் என்றொரு பொருள் இலாத நெஞ்சினர் அரக்கர்" என்று முன்பு கூறியுள்ளமையும் நினைவு கூர்க. கரன் முதல் என்பது அவன் தம்பியாகிய தூடணனையும், படைத்தளபதியாகிய திரிசிரனையும் உள்ளடக்கியது. இராமன், மும்மூர்த்திகளினும் மேம்பட்ட ஆற்றல் படைத்தவன் என்பது கருத்து. "சூர் அறுத்தவனும், கடர் நேமியும், ஊர் அறுத்த ஒருவனும் ஓம்பினும், வேரறுப்பென்யான், வெருவன்மின்" என்று இராமனே முன்பு கூறியிருப்பதையும் இங்கு நினைவு கூர்க. எனவே இவன் கருணையற்றவனும், அறத்திற்குப் பகைவனுமான வாலியை வெல்வதோ, கொல்வதோ, அரிய காரியமன்று, மிக எளிதானதே என்பதை மீண்டும் சுக்கிரீவனுக்கு உணர்த்துகிறான் என்பதாம்.

11. ஆய மால் நாகர் தாழ் ஆழியானே அலால்,
காய மான் ஆயினான் யாவனே? காவலா?
நீ அம் மான் நேர்தியால், நேர் இல் மாரீசனாம்
மாய மான் ஆயினான் மா யமான் ஆயினான். (3900)

(காவலன் - அரசன்; காயம் - உடம்பு; நேர்இல் - நிகரில்லாத; மாய - அழிந்தொழிய; மான் - சிங்கம்; ஆயம் - கூட்டம்; மால் - பெரிய; நாகர் - தேவர்கள்; தாழ் - தாழ்கின்ற \ வணங்குகின்ற; ஆழியான் - சக்கரப் படையை உடைய திருமால் \ கடலில் யோக நித்திரை கொள்ளும் திருமால்; மால் - திருமால் \

இராமன்; நேர்தல் - நட்புச் செய்து கொள்ளுதல்; மான் - மனிதனுமாம்; மாயம் - பொய் - வஞ்சனை; மான் - மகான்)

அனுமன் சுக்கிரீவனை நோக்கி, "மன்னனே! இந்த இராமன் உடம்பால்தான் மனிதனாகத் தோன்றுகின்றானே தவிர, இவனை வேறு யார் என்று எண்ணினாய்? இவன்தான் கூட்டமாக உள்ள பெரிய தேவர்களும் தொழுது வணங்கும் சுதர்சனம் என்னும் சக்கரப்படையை உடையவனும், திருப்பாற்கடலில் யோக நித்திரை கொள்பவனுமாகிய திருமாலாவான். நீ அந்தத் திருமாலின் அம்சமாகிய இராமபிரானுடன் நட்புக் கொள்வாயாக; நிகரில்லாத வலிமையுடைய மாரீசன் என்னும் அரக்கன் பொய்யான மான் வடிவம் தாங்கி வந்தானே? அவன் அழிந்து போகும்படி அவனுக்கு இயமனாக இருந்தவனும் இவனேதான்" என்று இராமன் திருமாலின் கூறுதான் என்பதை உறுதிப்படுத்தினான் அனுமன்.

12. "உக்க அந்தமும் உடல் பொறை துறந்த உயர்பதம்
புக்க அந்தமும், நமக்கு உரை செயும் புரையவோ?
திக்கு அவம்தர, நெடுந்திரள் கரம், சினவு தோள்,
அக் கவந்தனும் நினைந்து அமரர்தாழ் சவரி போல்" (3901)

(திக்கு \ திசை; உக்க - அழிந்து சிதறிய; அந்தம் - முடிவு; தாழ் - வணங்கத்தக்க; அந்தம் - அழகுமாம்; புரை - தரத்தது \ எளிமை \ தன்மை; அவம் தருதல் - கேடுறுதல் \ அழிதல்)

"எல்லா திசைகளிலும் உள்ளவர்களெல்லாம் கேடுற்று அழிந்து போகும்படி, நீண்ட கைகளையும், கோபம் கொப்பளிக்கின்ற திரண்ட தோள்களையுமுடைய அந்தக் கவந்தனும், இவ்விராமபிரானால் அடைந்த முடிவும்; இவ்வுடலே பெரும் சுமை என்று கருதி, அதைத் துறக்க எண்ணித் தவம் செய்து, இராமன் வரவுக்காகக் காத்திருந்த, தேவர்கள்கூட வணங்கத்தக்க சவரி என்ற தவமூதாட்டி பரமபதம் புகுந்த அழகும், நம்மைப் போன்ற குரக்கினத்தாரால் பேசப்படும் தன்மை உடையதோ?" என்றான் அனுமன்.

கவந்தன் தன் நீண்ட கைகளாலும், திரண்ட தோள்களாலும், தன் கைகளுக்கு எட்டிய வரை அகப்பட்ட உயிரினங்களையெல்லாம் தனக்கு உணவாகக் கொண்டவன். இராம இலக்குவரும் அவன் கைகளுக்குள் அகப்பட்டுக் கொண்டபோது, அவன் கைகளையும் தோள்களையும் வெட்டினர்; இராமபிரான் மேனி தீண்டப் பெற்றதால் கவந்தன் முந்தையக் கந்தருவ உருவம் பெற்று, விண்ணில் சென்று இராமபிரானைத் துதித்தான் என்பது கவந்தப் படலத்தில் பேசப்பட்ட செய்தி. அதுபோலவே சபரி என்னும் மூதாட்டி நோன்பு நோற்று, இராமன் வருகைக்காகக் காத்திருந்து, தான் தேர்ந்தெடுத்துச் சேகரித்து வைத்திருந்த காய்கனிகளை இராமபிரானுக்குத் தந்துவிட்டு தீப்புகுந்து உயிர்துறந்தாள். இங்கே ஒன்று நோக்க வேண்டும். பிறருக்கும் தனக்கும் துன்பம் இழைத்த விராதனுக்கும், தவத்திற் சிறந்தவளாகிய சபரிக்கும் ஒன்றேபோல் ஒரே உயர்பதவியை அடைய இராமபிரான் பேரருள்

புரிந்திருக்கின்றான் என்பதை வியப்பதன்றி வேறு ஒன்றும் கூற இயலாது என்பதாம். கவந்தனது நீண்ட கரத்தைப் பற்றிக் கூறும் பொழுது கவிஞன் முன்பு, "பாரிடம் வலம் வரப் பரந்த கை அது" என்று கூறியதை இங்கு நினைவு கொள்க.

13. "முனைவரும் பிறரும் மேல் முடிவு அரும்பகல் எலாம்,
இனையர் வந்து உறுவர் என்று இயல்தவம் புரிகுவார்;
வினைஎனும் சிறை துறந்து, உயர்பதம் விரவினார்
எனையர் என்று உரைசெய்கேன்? இரவிதன் சிறுவனே?!" (3902)

(இரவி - சூரியன்; இனையர் - இத்தகையவர்கள்; முனைவர் - முனிவர்கள்; பகல் - நாட்கள்; இயல் - இயன்ற வண்ணம்; சிறை - கட்டு \ விலங்கு \ பந்தம் \ தளை; விரவுதல் - அடைதல்; எனையர் - எத்துணை பேர் \ எண்ணற்றவர் \ எத்தன்மையானவர்; சிறுவன் - புதல்வன்)

"சூரியனின் புதல்வனே! சுக்கிரீவா! முனிவர்களும் மற்றும் தவம் செய்யும் ஏனையோரும் முற்காலம் தொடங்கி, எல்லையில்லாத பல காலங்கள் எல்லாம் இவ்விராம இலக்குவர் இவ்வனத்திற்கு வருவர் என்று காத்திருந்து, தத்தமக்கு இயன்ற வண்ணம் தவம் செய்து கொண்டிருந்தனர். அத்தவத்தின் பயனால் இப்போது இவர்களைக் கண்களால் கண்டவுடன், நல்வினை, தீவினை என்னும் தளையை அறுத்துக் கொண்டு உயர்ந்த பதவியாகிய பரமபதத்தை அடைந்து விட்டனர். எனவே இவ்விராம இலக்குவர் எத்தன்மையர் என்று என்னால் எப்படி எடுத்துக் கூற முடியும்?" என்றான் அனுமன்.

முனைவர் என்றது முனிவர் அல்லது முன்வைத்துக் கருதத்தக்க பெரியோர், அல்லது, கடவுள் அருள் பெற்ற முனிவர் என்று பலரையும் குறிக்கும். நல்வினையும் மறுபிறவிக்குக் காரணமாய் இருப்பதால் இங்கே வினை என்ற சொல்லுக்கு, நல், தீ வினைகள் என்று இரண்டும் குறிக்கப் பெற்றன. " இருள் சேர் இருவினையும் சேரா என்பது குறள் -5. வினை, வீடுபேற்றுக்கு ஒரு தடை என்ற கருத்தால் அதைச் சிறை என்றார் என்க. எனையர் என்ற சொல்லுக்கு எத்துணை பேர், எண்ணற்றவர் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். எனவே, இராமனோடு சுக்கிரீவன் நட்புக் கொண்டால் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு வெற்றி தேடித் தந்து அரசுரிமையை மட்டும் தருவான் என்பதல்ல; சுக்கிரீவனின் அகப் பகையாகிய பாவம் போன்ற குற்றங்களையும் களைய ஏதுவாவான் என்று அனுமன் அறிவுறுத்தினான் என்க. அனுமனின் குரு சூரியன். சூரியனின் மகன் சுக்கிரீவன். எனவே தான் கூறுவது, தன்குருவும், சுக்கிரீவனின் தந்தையும் கூறியது போலாகும் என்பது தோன்ற "இரவிதன் சிறுவனே" என்றான் என்க.

14. "மாயையால் மதியிலா நிருதர்கோன், மனைவியைத்
தீயகான் நெறியின் உய்த்தனன்; அவள் தேடுவார்
நீஐயா! தவம் இழைத்து உடைமையால், நெடுமனம்,
தூயையா உடைமையால், உறவினைத் துணிகுவார்." (3903)

(மதி - புத்தி; மாயை - வஞ்சனை; தீய - கொடிய; கான்நெறி - காட்டுவழி; நெடு - சிறந்த; துணிதல் - முற்படுதல் \ தீர்மானித்தல் \ எண்ணுதல்; உய்த்தல் - கொண்டு போதல்)

"தலைவனே! அரக்கர்க்கரசனாகிய இராவணன், புத்தியில்லாது, வஞ்சனையால், இராமபிரானின் மனைவியாகிய சீதாதேவியைக் கொடிய காட்டுவழியில் எடுத்துக் கொண்டு போய் விட்டான்; எனவே அவளைத் தேடும் பொருட்டு இக்கானகத்தை அடைந்தவர்கள், நீ முற்பிறவியில் செய்த நற்றவத்தின் புண்ணியம் இருப்பதாலும், உன்னுடைய சிறந்த மனம் தூய்மையாய் இருப்பதாலும், உன்னையும் கண்டு உன்னுடன் நட்புக் கொள்ள எண்ணியிருக்கிறார்கள்" என்றான் அனுமன்.

முன்னர் மாய மானை அனுப்பியதாலும், இப்பொழுது தவசி வேடத்தில் வந்து, சீதையை அபகரித்துக் கொண்டு சென்றதாலும், "மாயையால்" என்றார். பிறன் மனைவி விரும்புவோன் பேதையே ஆவான். "அறன்கடை நின்றாருள் எல்லாம், பிறன்கடை நின்றாரில் பேதையார் இல்" என்பது குறள்-142. எனவே, "மதியிலா அரக்கர்கோன்" என்றான், முன்பு சடாயுவும் இராவணனை, "பேதாய்! பிழை செய்தனை" என்று கூறியதும் நினைவு கூர்க. அரக்கர்களும், கொடிய மிருகங்களும் வாழும் இடம் என்பதால் "தீயகான் நெறி" எனப்பட்டது. சுக்கிரீவன் முற்பிறவியிற் செய்த தவத்தின் பயனாலும், அவன் உள்ளத் தூய்மை கொண்டிருப்பதனாலும் மட்டுமே இராமன் இக்காட்டிற்கு வந்து அவனுடன் நட்புக் கொள்ளத் தீர்மானித்தான் என்பதாம். ஏனெனில் புண்ணியம் செய்தோரும், உளத்தூய்மை உடையோரும் மட்டுமே, இராமனைக் கண்டு ஆனந்திக்கும் பேறுபெறுவர் என்பதாம். "பொய்யுடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவ" என்று வாலியும், "அடியேன் அருந்தவத்தால் அணுகுதலால்" என விராதனும், "ஆயிரம் யுகம் உள தவம் அயர்குவென் யான்" எனச் சரபங்கரும் கூறுதலால், இராமபிரானின் தரிசனம், புண்ணியம் உடையார்க்கும், அகத்தூய்மை உடையார்க்கும் மட்டுமே கிட்டும் என்பது புலப்படுத்தப்பட்டது.

15. "தந்திருந்தனர் அருள்; தகைநெடும் பகைஞனாம்
இந்திரன் சிறுவனுக்கு இறுதி, இன்று இசைதரும்;
புந்தியின் பெருமையாய்! போதரு" என்று உரைசெய்தான்,
மந்திரம் கெழுமு நூல் மரபு உணர்ந்து உதவுவான். (3904)

(மந்திரம் - ஆலோசனை; கெழுமு - பொருந்திய; புந்தி - அறிவு; தகை - தகுதி; சிறுவன் - மகன்; இறுதி - அழிவு; இன்று - இப்பொழுது; இசைதருதல் - பொருந்துதல்; போதரு - வருக)

சுக்கிரீவனுக்கு அவ்வப்போது தான் பயின்ற சிறந்த அரசியல், வேத சாத்திரங்கள் கூறும் மரபுப்படியே நன்கு உணர்ந்து ஆலோசனைகளைக் கூறி நன்னெறிப் படுத்துபவனான அனுமன், சுக்கிரீவனை நோக்கி, "அறிவில் சிறந்தவனே! நம்பால் கருணை மிகக் கொண்டவர்களான இராம இலக்குவர் அங்கே தங்கியிருக்கின்றார்கள்; தகுதியும், நம்மிடம் நீண்ட காலப் பகைமையும்

உடைய இந்திரனது மகனாகிய வாலிக்கு இன்று அழிவு நேரிடற்குள்ளது. எனவே அவர்களைச் சென்று காணலாம், புறப்பட்டு வருக!" என்று கூறினான் அனுமன்.

"தகை நெடும் பகை" என்றது வாலியின் போராற்றல் தகுதி பற்றியும், இருவருக்கும் நீண்ட காலமாக இருந்து வரும் பகைமை பற்றியும் குறித்தது என்க. இராவணனும் இராமனுடன் போரிடச் செல்லும்போது "நாசம் வந்துற்ற போது நல்லதோர் பகையைப் பெற்றேன்" என்று கூறுவது நோக்குக. சிறுவன் என்ற சொல், பொதுவாக மகன் என்னும் பொருள் தருதலும் காண்க. இந்திரன் எவ்வாறு பிறன் மனையாளான அகலிகைபால் விருப்புக் கொண்டு கவர்ந்தானோ, அதைப் போலவே அவன் மகனாகிய வாலியும், சுக்கிரீவன் மனைவியாகிய உருமை மேல் விருப்புக்கொண்டு கவர்ந்து சென்றான் என்பது அவ்விருவரது சிறுமையையும் புலப்படுத்தியது என்க. அனுமன் கூறும் ஆலோசனைகள் அரசியல் மரபுக்கேற்பவே அமைந்திருக்கும் என்பது உறுதி என்று குறிக்கவே "மந்திரம் கெழுமு நூல் மரபுணர்ந்து உதவுவான்" என்று அனுமனின் அமைச்சர் திறத்தைச் சிறப்பித்தார் என்க.

16. சுக்கிரீவன் அனுமனோடு இராமனிடம் வருதல்

> அன்னவாம் உரையெலாம் அறிவினால் உணர்குவான்,
> "உன்னையே உடைய எற்கு, அரியது எப்பொருள் அரோ?
> பொன்னையே பொருவுவாய்! போது" என, போதுவான்
> தன்னையே அனையவன் சரணம் வந்து அணுகினான். (3905)

(அன்ன - அத்தன்மையவான; உரை - சொல்; பொன் - வியாழன் \ பிரஹஸ்பதி; எற்கு - எனக்கு; பொருவுதல் - ஒத்திருத்தல்; சரணம் - திருவடிகள்; போதல் - புறப்படுதல்; அரியது - கடினமானது \ கைகூட இயலாதது)

அவ்வாறு அனுமன் கூறிய அரசியல் ஆலோசனைகளைக் கேட்ட, அறிவிற் சிறந்தவனாகிய சுக்கிரீவன், அவற்றின் விளைவுகளை நன்கு உணர்ந்து அதற்கு உடன்பட்டு, "அறிவிற் சிறந்தவனாகிய உன்னையே என் அமைச்சனாகப் பெற்ற எனக்கு எந்தப் பொருள்தான் எளிதில் கிடைக்காது? எந்தச் செயல்தான் எளிதில் கைகூடாது? எல்லாம் எளியவேயாகும்; பொன்போன்ற இந்திரனின் தேவகுருவாகிய பிரஹஸ்பதியை நிகர்த்தவனே! இராம் இலக்குவரைக் கண்டு வரலாம், புறப்படு" என்று கூறி, புறப்பட்டு வந்து, தனக்கு நிகர் வேறு ஒருவரில்லாத, தனக்குத் தானே ஒப்பானவனான இராமபிரானின் திருவடிகளை அடைந்தான்.

"அறிவினால் உணர்குவான்" என்பது அனுமன் கூறிய ஆலோசனைகளில் தனக்கு ஏற்படப் போகும் நன்மைகளை நன்கு மனத்தில் உள்வாங்கிக் கொண்டவன் என்று சுக்கிரீவனைக் குறிக்கும். பொதுவாக எந்தப் பொருளிலும் சிறந்ததாக, உயர்ந்ததாகக் கருதப்படும் பொருளுக்குப் பொன்னை உவமிப்பது மரபு. அதுபோல, இங்கே அறிவிற் சிறந்தோனாகிய அனுமனைப் பொன்னிற்கு

உவமித்தான் எனவும் கொள்ளலாம். பொன் போன்ற மேனியை உடைட அனுமன் என்றும் பொருள்படும். "சுவர்ணமேரு" என்பதுதான் அனுமனின் இயற்பெயர். இவையெல்லாவற்றிலும் பிரஹஸ்பதியை ஒப்புக் கூறுவது மிகவும் பொருத்தமாகத் தோன்றியதால் உரையில் அவ்வாறே கூறப்பட்டது. இந்திரனுக்கு வியாழன், குருவும் அமைச்சனுமாய் அமைந்தது போல எனக்கு நீ அமைந்துள்ளாய் என்று சுக்கிரீவன் அனுமனைச் சிறப்பித்தான் என்பதாம். சரணம் என்ற சொல் திருவடிகள் என்ற பொருளையும், சரணடைதல் என்ற பொருளையும் தருவதை உணர்க. "எற்கு அரியது எப்பொருள்" என்பது எல்லாப் பொருளும் எனக்கு எளிதே என்பதைக் குறித்தது. "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது குறள். எனவே, அறிவு சான்ற அனுமனை அமைச்சனாகப் பெற்றிருக்கின்ற சுக்கிரீவன் எல்லாம் உடையவன் என்பது பெறப்பட்டது. "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தாற் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்பது குறள். இப்போது சுக்கிரீவன், தனக்குவமையில்லாதவனாகிய இராமபிரான் தாள் சேர்ந்திருக்கின்றான். எனவே, அவன் மனக்கவலை மாற்றல் எளிது என்பது போதரும். முன்பு அனுமன், சுக்கிரீவனை இராமபிரான்பால் அழைத்துவருவதாகக் கூறிப்போனான். இப்பொழுது சுக்கிரீவன், அனுமனை அழைத்துக் கொண்டு இராம இலக்குவரை அடைந்தான் என்று கூறிய நயம் நோக்குக.

17. கண்டனன் என்ப மன்னோ, கதிரவன் சிறுவன், காமர்க்
குண்டலம் துறந்த கோலவதனமும், குளிர்க்கும் கண்ணும்,
புண்டரீகங்கள் பூத்துப் புயல் தழீஇப் பொலிந்த திங்கள்
மண்டலம் உதயம் செய்த, மரகதக்கிரி அனானை. (3906)

(புயல் - மேகம்; திங்கள் - சந்திரன்; காமர் - அழகிய; கோல - அழகிய; குளிர்க்கும் - குளிரச் செய்யும்)

அனுமனோடு சென்ற சூரியன் மகனான சுக்கிரீவன், "தாமரை மலர்கள் மலரப்பெற்று, மேகத்தால் தழுவப்பெற்று, விளங்குகின்ற சந்திர மண்டலம் உதயம் செய்கின்ற, பச்சைநிறமுள்ள, அழகிய குண்டலங்களை நீத்த பிறகும், அழகு குறையாத முகத்தையும், காண்போரைக் குளிரச் செய்யும் குளிர்ச்சி பொருந்திய கண்களையும், மரகதமலை போன்ற மேனியழகையும் கொண்ட இராமபிரானைக் கண்டான்".

நாடு விட்டுக் காடு புகுந்து தவக்கோலம் கொண்டதால் குண்டலம் போன்ற காதணிகளை அணியாது இருந்தான் என்றாலும் அழகு குன்றாது நிறைவுறப் பொலிந்தான் என்ற நயம் நோக்குக. இராமனுடைய முகம், கண்கள், கைகள், கால்கள் முதலியவற்றுக்குத் தாமரை உவமை. அவனுடைய கண்கள் தாமே குளிர்ச்சி பொருந்தியன, மட்டுமல்லாது, கண்டாரையும் குளிரச் செய்வன என்று அவனுடைய கண்கள் சிறப்பிக்கப்பட்டன. அவனுடைய சடைமுடி, மேகம் போன்று கரியதாக இருந்தது என்பதைக் குறிக்க "புயல் தழீஇப் பொலிந்த" என்றான். அவன் முகத்திற்குச் சந்திரனும், மேனியொளிக்கு மரகத மலையும்

உவமைகள். "திருவடியும், கையும், திருவாயும் செய்ய, கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே" என்பது சிலப்பதிகாரம். "பச்சைமாமலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்" என்பது தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரம்.

18. நோக்கினான்; நெடிது நின்றான்;"நொடிவுஅரும் கமலத்து அண்ணல்,
ஆக்கிய உலகமெல்லாம், அன்று தொட்டு இன்று காறும்,
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்து, இருபடிவமாகி,
மேக்கு உயர் தடந்தோள் பெற்று, வீரராய் விளைந்த" என்பான். (3907)

(நொடிவுஅரும் - அழிவில்லாத; ஆக்கிய - படைத்த; பாக்கியம் - நல்வினை \ புண்ணியம் \ பேறு; குவிந்து - சேர்ந்து \ திரண்டு \ ஒன்று கூடி; மேக்கு - மேலே; விளைந்த - தோற்றின)

இவ்வாறு கண்களையும் முகத்தையும் கண்ட சுக்கிரீவன், அவர்கள் ரூபசௌந்தர்யத்தில் மயங்கி, நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே நின்றான். "சொல்லுதற்கரிய புகழையுடையவனும், அழிவில்லாதவனுமான, செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம தேவன் படைத்தருளிய இவ்வுலகத்தில், எல்லா உயிரினங்களும், உலகப் படைப்புக்காலம் தொட்டு இன்று வரையிலும், எல்லோரும் செய்த நல்வினைப்பயனாகிய புண்ணியம் எல்லாம் ஒன்று திரண்டு, அருவ நிலை விட்டு இங்கு வந்து இராம இலக்குவர் என்று இரு உருவங்களாகி, மேலே உயர்ந்த, அகன்ற, தோள்களையும் பெற்று, வீரர்களாய்த் தோன்றினர்" என்றான்.

"நோக்கினன் நெடிது நின்றான்" என்றது, "தோள் கண்டார், தோளே கண்டார்" என்பது போல, அவர்களது முகத்தையும், கண்களையும் பார்த்தவன், பார்த்துக் கொண்டே திகைத்து நின்றான் என்பதாம். அவனது நோக்கமெல்லாம் வாலியை வீழ்த்துவதிலேயே இருந்தது ஆதலின், இராமனது அழகு, அறிவு முதலியவற்றை எண்ணாது, போராற்றலுக்குரிய தோள்களையும், அவர்களது வீரத்தினையுமே முதலில் கூறினான் என்க. படைப்புக் காலந்தொட்டு இன்று வரையிலும் பல்வேறு உலகங்களிலுமுள்ள நல்லோர்கள் செய்த நல்வினையினால் உண்டாகிய புண்ணியம்தான், இரண்டு உருவங்களாக இராம இலக்குவர்களாக நம் எதிரில் நிற்கிறது போலும் என்று கருதினான் சுக்கிரீவன் என்பதாம்.

19. "மானுடம் வென்றது" அம்மா!

"தேறினன் அமரர்க்கெல்லாம் தேவராம் தேவர் அன்றே,
மாறி, இப்பிறப்பில் வந்தார் மானுடர் ஆகி மன்னோ!
ஆறுகொள் சடிலத்தானும், அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுஉள குழுவையெல்லாம், மானுடம் வென்றது" அன்றே. (3908)

(அமரர்-தேவர்; தேவர் - கடவுள் \ திருமால்; ஆறு - கங்கை; கொள் -தங்கிய; சடிலத்தான் - சடையையுடைய சிவபெருமான்; அயன் - பிரமன்; ஆதி - முதலாக; தேறுதல் - தெளிதல்; மானுடம் - மனிதகுலம்)

"தேவர்களுக்கெல்லாம் கடவுளாகிய முதல் கடவுளான பரம்பொருளே, தன் உருவத்திலிருந்து மாறி, இந்தப் பிறப்பில் மானிடனாக அவதாரம் எடுத்து வந்திருக்கிறது; எனவே, கங்கையாற்றைத் தன் சடைமுடியில் தாங்கிய சிவபெருமானையும், பிரமதேவன், முதலாகக் கூறப்படுகின்ற வேறு உள்ள தேவர் கூட்டங்களையெல்லாம், இந்த மனிதக்குலம் வெற்றி கொண்டு விட்டது என்பதை நன்கு புரிந்து கொண்டு, தெளிவு பெற்றேன்" என்றான் சுக்கிரீவன்.

"அமரர்க்கெல்லாம் தேவராம் தேவர்" என்பது முழுமுதற்கடவுள் என்ற பொருள் தந்து, திருமாலாகிய பரம்பொருளைக் குறிக்கும் எனக் கொள்க. திருமாலே இராமனாக மானுட அவதாரம் எடுத்து வந்துள்ளார் என்பது முன்பு திருஅவதாரப்படலத்திலேயே கண்ட ஒன்றாகும். "முதலாவார், அம் மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்" என்பது பொய்கையாழ்வார் பாசுரம். திருமால் இராமனாக வடிவம் கொண்டு அவதரித்து வந்ததால் மனிதகுலத்திற்கே பெருமை உண்டாகிறது என்பது கருத்து. மனிதச்சாதி தேவசாதிகளையெல்லாம் வென்று சிறப் பெய்தியது என்பதாம்.

20. இராமன் அவர்களை வரவேற்றல்

என நினைந்து, இனைய எண்ணி, இவர்கின்ற காதல் ஓத,
கனைகடல் கரை நின்று ஏறாக் கண் இணை களிப்ப நோக்கி,
அனகனைக் குறுகினான்; அவ்வண்ணலும்,. அருத்தி கூர,
புனைமலர் தடக்கை நீட்டி, "போந்து, இனிது இருத்தி" என்றான். (3909)

(இனைய - இத்தன்மையனவான, இவர்தல் - மிக்கு வளர்கின்ற; காதல் - அன்பு; ஓதம் - அலைகள்; கனை - ஒலிக்கின்ற; இணை - இரண்டு; அனகன் - குற்றமற்றவன்; குறுகுதல் - நெருங்குதல்; அண்ணல் - பெருமையுடையோன்; அருத்தி - அன்பு \ ஆசை \ விருப்பம்; கூர - மேலிட \ மிக \ மீதுர; புனை - அழகிய; போந்து - வந்து)

என்று இவ்வாறு தன் மனத்திற்குள் எண்ணி, மேலும் மேலும் வளர்கின்ற அன்பு, கண்கள்என்கின்ற அலைகள் நிறைந்து ஒலிக்கின்ற கடலின் கரையில் நின்று வெளியேற இயலாமல், தன் இரண்டு கண்களாலும், மிக்க மகிழ்வோடு பார்த்துக் கொண்டே, குற்றமற்றவனாகிய இராமபிரானின் அருகில் சென்றான்; பெருமைஉடைய அவ்விராமபிரானும் ஆர்வம் மீதூர, அழகிய செந்தாமரை போன்ற அகன்ற கைகளை நீட்டி, இங்கு வந்து மகிழ்ச்சியுடன் அமர்வாயாக" என்று வரவேற்று இருக்கை அளித்தான்.

"இனிது இருத்தி" என்பது, அச்சமின்றி மகிழ்ச்சியோடு அமர்க என்பதைக் குறிக்கும். சுக்கிரீவன் மிக்க அன்போடு அணுகினான்; இராமன் மிக்க கருணை யோடு வரவேற்றான் என்பதாம்.

21. இருவரும் ஒன்றாய் அமர்ந்திருந்த காட்சி

தவா வலி அரக்கர் என்னும், தகா இருள் பகையைத் தள்ளி,
குவால் அறம் நிறுத்தற்கு ஏற்ற காலத்தின் கூட்டம் ஒத்தார்;

அவாமுதல் அறுத்த சிந்தை அனகனும், அரியின் வேந்தும்,
உவாஉற வந்து கூடும் உடுபதி இரவி, ஒத்தார். (3910)

(முதல் - வேர்; அனகன் - குற்றமற்றவன் \ இராமன்; அரி - குரங்கு \ குரக்கினம்; தவா - கைவிடாத; தள்ளி - அழித்து; குவால் - கூட்டம் \ குவியல்; நிறுத்தல் - நிலைபெறச்செய்தல்; கூட்டம் - கூட்டுறவு; உவா - அமாவாசை; உடுபதி - சந்திரன்; இரவி - சூரியன்)

ஆசை முதலான குற்றங்களை வேரோடு களைந்து எறிந்த சிந்தையை உடையவனும், குற்றமற்றவனுமான இராமபிரானும், குரக்கினத்தின் தலைவனாகிய சுக்கிரீவனும் ஒருங்கிருந்த காட்சி, அமாவாசை நாளில் சூரியனை வந்து சேரும் சந்திரனைப் போல இருந்தது. மேலும், கெடுதல் இல்லாத வலிமையுடைய அரக்கர்கள் என்னும், தகாத பகையாகிய இருளை அழித்து, கூட்டமாகிய அறத்தை நிலைநிறுத்துவதற்காக, அதற்குரிய காலம் வந்து சேர்ந்தது போன்றும் தோற்றமளித்தது.

அரக்கர்கள் எந்த நிலையிலும் வலிமை குன்றாதவர்கள் என்பதை "தவா வலி அரக்கர்" என்றான். அரக்கர்கள் உருவம் கருதியும், மனநிலை கருதியும் "தகா இருள்பகை" என்றான். அறங்கள் பலவகைப்பட்டதென்பதால் "குவால் அறம்" அறத்தின் கூட்டம் என்றான் "அவாமுதல் அறுத்த" என்பது ஆசை முதலாய அறுவகைக் குற்றங்களையும் வேரோடு அறுத்தவன் என்று இராமபிரானைச் சிறப்பித்ததாம். "மெய்த்திருப்பதம் மேவு என்ற போதினும், இத்திருத்துறந்து ஏகு என்ற போதினும் சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் முகத்தன்" என்று முன்பு கூறியிருத்தலால், இராமன் மண், பொன், பெண்ணாசைகளையும், அவா முதலிய குற்றங்களையும் முற்றும் களைந்த பற்றற்றவன் என்பது புலனாகும். சுக்கிரீவன் குரக்கினத்திற்குத் தலைவன்தான் என்றாலும், அவனுக்கு வரப்போகின்ற அரசுரிமையை எண்ணி, இப்போதே "அரியின் வேந்தும்" என்று கூறிய நயம் நினைக. உவா என்ற சொல்லுக்கு அமாவாசை, பௌர்ணமி என்ற இரு பொருளும் உண்டு. இங்கே, அமாவாசையைக் குறித்து நின்றது. அமாவாசை என்பது சந்திரன் வந்து சூரியனைக் கூடுதலைக் குறித்தது. "இந்துவோடு இரவி கூட்டம் அமாவாசையும் என்ப" என்பது சூடாமணி நிகண்டு; அமாவாசையன்று சூரியனைக் கூடிய சந்திரன் தனது பதினாறு கலைகளையும் இழந்து. மறுநாள் முதல் ஒவ்வொரு கலையாகப் பெற்று வளர்தல் போல் சுக்கிரீவனும் இராமபிரானைச் சேர்ந்து, ஒவ்வொரு நன்மையாகப் பெற்று இறுதியில் குரக்கினத்து அரசப் பதவியைப் பெறப் போகிறான் என்பது உட்கருத்து. உடுபதி என்பது நட்சத்திரங்களின் தலைவன் என்று பொருள் தந்து, வெண்ணிறமான சுக்கிரீவனையும், இரவி - சூரியன் என்று பொருள் தந்து, சூரியன் போன்று ஒளி உமிழும் மேனியழகு கொண்ட இராமபிரானையும் குறிக்கும் என்க. அரக்கர் என்ற பகையிருளை, அழித்தற்கு ஏற்ற காலமும், அறம் தலை நிறுத்தற்கேற்ற காலமும் ஒன்று கூடியது போல முறையே சுக்கிரீவனும், இராமனும் ஒருங்கு கூடினர் என்பதாம்.

22. கூட்டம் உற்று இருந்த வீரர், குறித்தது ஓர்பொருட்கு, முன்நாள்
ஈட்டியதவமும், பின்னர் முயற்சியும் இயைந்தது ஒத்தார்;
மீட்டும் வாள் அரக்கர் என்னும் தீவினை வேரின் வாங்கக்
கேட்டு உணர் கல்வியோடு ஞானமும் கிடைத்தது ஒத்தார். (3911)

(பொருள் - காரியம்; முன்நாள் - முற்காலத்தில்; இயைந்தது - ஒன்று சேர்ந்தது; வாள் - கொடிய; வாங்க - அழிக்க \ களைய; ஞானம் - பரஞானம்; கிடைத்தல் - வந்து கூடுதல்)

இராமனும் சுக்கிரீவனும் நட்புக் கொண்டு ஒருங்கே இருந்த காட்சி, ஒரு குறிப்பிட்ட காரியத்தில் வெற்றியடைவதற்கு, முற்பிறவியில் செய்த தவத்தால் ஏற்பட்ட புண்ணியமும், அதனை விட்டு விடாது அடைவதற்கு இப்பிறவியில் ஒருவன் செய்யும் விடா முயற்சியும் இணைந்தது போலத் தோற்றம் அளித்தது. மேலும், உயிர்களை அழிக்கின்ற கொடிய அரக்கர்கள் என்னும் தீவினையை வேரோடு அறுத்து அழிக்கும் பொருட்டு, கேள்வியறிவால் கேட்டு உணர்கின்ற கல்வியறிவோடு, வீடுபேறடைதற்குரிய பர ஞானமும் ஒன்று சேர்ந்து இருப்பதைப் போலவும் தோற்றம் அளித்தனர்.

இராமபிரானும் சுக்கிரீவனும் ஒருங்கே அமர்ந்திருந்த காட்சியை இரண்டு உவமைகளால் விளக்குகிறார். ஒன்று முன்பு செய்த தவப்பயனாகிய புண்ணியத்தோடு, இப்போது நாம் எடுக்கும் முயற்சியும் இணைந்து இருப்பதை உவமித்தார். முயற்சியில்லா வழி தவப்பயன் மட்டும் நினைத்த காரியத்தை நிறைவேற்றாது என்பது. இரண்டாவது. அரக்கர்களை அழிப்பதற்கு, நூல் கல்வியறிவோடு, (கலைஞானம்) பரஞானமும் இயைந்திருக்க வேண்டும் என்பது, இங்கே தவத்தின் பயனாகவும், பரஞானமாகவும், இராமபிரானையும், முயற்சியாகவும், கல்வியாகவும் சுக்கிரீவனையும் உவமித்தார் என்க. நல்வினையும், முயற்சியும் ஒன்று கூடினால் தான் நினைத்த காரியம் எளிதில் முடியும்; நல்வினை இல்லாத போது, முயற்சியால் மட்டும் நினைத்த காரியம் முடிந்து விடும் என்பது சொல்லுவதற்கில்லை; எனவே நல்வினை இருந்தால் முயற்சிகூட தானே வந்து சேரும் என்பது புலப்படுத்தப்பட்டது. இங்கே, சீதையும் இராமனும் மணம் செய்து கொண்ட போது, "போகமும் யோகமும் ஒத்தார்" என்று கம்பன் கூறியதை நினைவிற் கொள்க. இவர்கள் இருவரின் கூட்டாலும் அரக்கர் அழிவும், அறம் நிலை நிற்றலும் நடக்கும் என்பது உட்கருத்து.

23. சுக்கிரீவன் இராமனைப் புகழ்தல்

ஆயது ஓர் அவதியின் கண், அருக்கன் சேய், அரசை நோக்கி,
"தீவினை தீய நோற்றார் என்னின் யார் செல்வ? நின்னை
நாயகன் உலகுக்கெல்லாம் என்னலாம் நலம் மிக்கோயை
மேயினென்; விதியே நல்கின், மேவலாகாது என்?" என்றான். (3912)

(அவதி - சமயம்; அருக்கன் - சூரியன்; சேய் - மகன் \ சுக்கிரீவன்; நாயகன் தலைவன்; நலம் - நல்லிணக்கம்; ஓயை - உன்னை; மேவுதல் - அடைதல்;

தீய - அழியுமாறு; நல்குதல் - கூட்டி அருளுதல்; ஆகாது - அடைய முடியாதது; விதி - நல்வினை; செல்வன் - தலைவன்; நோற்றல் - தவம் செய்தல்)

அவ்வாறு அவர்கள் இருவரும் ஒருங்கே அமர்ந்திருந்த பொழுது, சூரியன் புதல்வனான சுக்கிரீவன், தலைவனான இராமபிரானை நோக்கி, "எல்லாச் செல்வங்களும் குறைவறப் பெற்றவனே! இந்த உலகங்கள் எல்லாவற்றிற்கும் தலைவனாக விளங்குதற்குரிய எல்லா நற்குணங்களும், இலக்கணங்களும் மிக்க அமைந்திருக்கின்ற உன்னை, நான் வந்து அடைந்தேன்; எனவே தீய வினைகள் எல்லாம் ஒழிந்துபோகுமாறு தவம் செய்தவர்கள் என்னை விட வேறுயார் இருக்கிறார்கள்? ஊழ்வினையே இவ்வாறு கொண்டு வந்து சேர்க்கும் என்றால், ஆகமுடியாத காரியம் என்று என்ன இருக்கிறது? ஒன்றும் இல்லை" என்றான்.

தான் இராமபிரானை வந்தடைவதற்குத் தான் முற்பிறப்பில் செய்த தவமும், ஊழ்வினையும்தான் காரணமே தவிர, தன் முயற்சியல்ல என்றான் சுக்கிரீவன், தன்னைப் பெருமைப் படுத்திக் கொள்வது போல, இராமபிரானின் தலைமைத் தன்மையைப் பாராட்டினான் என்பதாம். முன்பு, சடாயு, "உலகு ஒரு மூன்றும் தம் உடமை ஆக்குறும் அலகு அறும் இலக்கணம் அமைந்த மெய்யினர்" என்று கூறியதையே சுக்கிரீவனும் கூறுவதை ஒப்பிட்டு நோக்குக. தீவினை தீருமாறு தவம் செய்தவர்களைத் தவிர வேறு யாராலும் பரம் பொருளாகிய இராமபிரானை அடையமுடியாது என்றும், தான் இப்போது இராமபிரானை அடைந்திருப்பதால், தன்னைப் போல் நோன்பு நோற்றவர்கள் வேறுயாரும் இல்லை என்றும் கூறுகிறான். சுக்கிரீவன்; "புண்ணியம் பயக்கின்றுழி, அரியது எப்பொருளே?" எனக் கவந்தன் கூறியதையும் ஒப்பு நோக்குக, "முன்னவனே முன் நின்றால், முடியாத பொருள் உளதோ?" என்பது பெரிய புராணம்.

24. இராமன், தான் இங்கு வந்த காரணம் கூறுதல்

"மையறு தவத்தின் வந்த சபரி, இம்மலையில் நீ வந்து
எய்தினை இருந்த தன்மை இயம்பினள்; யாங்கள் உற்ற
கையறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தேம்;
ஐய! நின் தீரும்" என்ன, அரிக்குலத்து அரசன் சொல்வான். (3913)

(மைஅறு - குற்றமற்ற; கையறு - தீர்க்கமுடியாத; கடப்பது - போக்குவது; அரி - குரங்கு; தன்மை - நிலைமை)

இராமன் சுக்கிரீவனை நோக்கி, "ஐயனே! குற்றமற்ற தவத்தை இளமையிலிருந்தே இயற்றி. அதில் நிலைத்து நின்ற சபரி என்னும் தவ மூதாட்டி. நீ இந்த மலையை வந்தடைந்து. இங்கேயே தங்கியிருக்கின்ற நிலையை எங்களுக்கு எடுத்து உரைத்தாள், நாங்கள் அடைந்த அளவற்ற துன்பம் உன்னால்தான் போக்கப்படும் என்று கருதி இங்கே வந்தோம். அது உன்னால்தான் தீர்க்கப்பட வேண்டும்" என்று கூற. குரங்கினத் தலைவனாகிய சுக்கிரீவன் பின்வருமாறு கூறலானான்.

மையறு தவம் என்பது நிஷ்காமிய விரதம் என்பதைக் குறிக்கும். பேரின்பம் - வீடுபேறு - ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செய்யப்படும் தவம் என்பதாம். குற்றமற்ற தவம் என்பது காமம். வெகுளி. மயக்கம் முதலியன குறுக்கிடாத நீண்ட தவம் என்பதுமாம், இம்மலையில் நீ இப்போது தங்கியிருக்கிறாய் இது உனக்குச் சொந்தமான இடம் அல்ல என்பதை "நீ வந்து இம்மலையில் எய்தினை இருந்த தன்மை" என்ற சொற்றொடரால் நன்கு புரியவைத்த திறம் நோக்குக, கையறு துயரம் என்பது சீதையைப் பிரிந்த. தீர்க்க முடியாத துயரம் என்பதாம், என்றாலும் இது உன்னால்தான் தீர்க்கப்படவேண்டும் என்பதால். இராமன் சுக்ரீவன்பால் வைத்திருக்கின்ற நம்பிக்கையும். அந்த நம்பிக்கையை ஊட்டிய சபரியின் அறிவாற்றலும் புலனாகும், இங்கே ஒன்று நோக்க வேண்டும். முன்பாடலில் சுக்கிரீவன், தான் செய்த தவத்தின் பயனால் தான் அவன் இராமனை வந்தடைந்தான் என்று கூறியிருந்தான். இந்தப் பாடலில் அதை மறுத்து. இராமன் தங்கள் காரியம் நிறைவேறுவதற்காகவே சுக்கிரீவனை நாடி வந்திருக்கிறோம் என்று கூறும் பாணியும் நோக்குக.

25. சுக்கிரீவன் இராமனைச் சரணடைதல்

"முரண்உடைத் தடக்கை ஓச்சி, முன்னவன், பின்வந்தேனை,
இருள் நிலைப்புறத்தின் காறும், உலகு எங்கும் தொடர, இக்குன்று
அரண் உடைத்துஆகி, உய்ந்தேன்; ஆர்உயிர் துறக்கலாற்றேன்;
சரண் உனைப்புகுந்தேன்; என்னைத் தாங்குதல் தருமம்" என்றான். (3914)

(முரண் - வலிமை; ஓச்சி - ஓங்கிக்கொண்டு; இருள் நிலைப் புறம் - அந்தகாரம் \ இருண்ட சக்கரவாள கிரிக்கப்புறம்; \ அண்டத்தின் இறுதி; அரண் - பாதுகாப்பு; உய்த்தல் - உயிர் பிழைத்தல்; சரண் - அடைக்கலம்; தருமம் - கடமையுமாம்)

"என்னுடைய அண்ணனான வாலி. பின்பிறந்தவனாகிய என்னை. தன்னுடைய வலிமைமிக்க பெரிய கைகளை ஓங்கிக் கொண்டு. இவ்வுலக மெங்கும். உலகத்திற்கப்பாலுள்ள இருண்ட சக்கரவாளகிரிக்கு அப்பாலும், என்னைத் துரத்தித் துரத்தி அடித்தான்; இந்தக் குன்றினிடத்து வந்த எனக்கு. இதுதான் பாதுகாப்பான இடம் எனத்தோன்றிற்று, எனவே. இங்கேயே தங்கி நான் பிழைத்தவனானேன். எனவே. உன்னிடம் அடைக்கலம் புகுந்தேன். வாலியிடமிருந்து என்னைக் காப்பாற்றி. என் உயிரைக் காப்பது, இனி உன்னுடைய கடமையாகும்" என்றான்.

சுக்கிரீவன் வாலியினது முரண்பட்ட போர்முறையையும் குறிக்கிறான், நான் இளையவன், அவன் மூத்தவன் என்ற வயது வித்தியாசம் பாராது. நான் தம்பி. அவன் அண்ணன் என்ற உறவுமுறையையும் பாராது; நான் புறமுதுகு இட்டு ஓடியும் என்னைத் துரத்திவந்து அடித்ததால் போர்வீரனுக்குரிய போர்முறையையும் பாராது, அவன் வலியவன், நான் எளியவன் என்ற போர்

தருமத்தையும் பாராது என்னைத் துரத்தி அடித்தான் என்றும். நான் ஓட ஓட. இந்த உலகத்தில் மட்டும் அல்ல. அந்தகாரமாகிய கண்டத்தின் இறுதிவரை என்னைத் துரத்தி அடித்தான் என்றும் அவனுடைய அச்சமுற்ற நிலையை, கவிஞன் நம் கண்ணெதிரே காட்டுவதை உணர்க.

இந்தக் குன்றில் வாலி வந்தால் அவன் தலை சுக்குநூறாகும் என்பது மதங்க முனிவர் வாலிக்கு இட்ட சாபம்; வாலி ஒருமுறை போர் செய்து கொண்டிருக்கும் போது. துந்துபி என்ற அசுரனின் உடலைத் தன் காலால் எட்டித் தள்ளினான். அது அங்கே அருகே இருந்த ருசியமூக மலையில் தவம் செய்து கொண்டிருந்த மதங்க முனிவருக்கு அருகே விழுந்து தவத்தைக் கெடுத்தது, எனவே. சினமுற்ற மதங்கர். இதைச் செய்தவன் இவ்விடத்திற்கு வந்தால் அவன் தலை வெடித்துச் சிதறிப் போகும் என்று சாபம் இட்டார் என்பதும். இந்நிகழ்ச்சியை நாரதர் வந்து சுக்கிரீவனுக்குக்கூறி. அவனை இம்மலையிலேயே தங்கக் கூறியதாகவும் ஒரு புராணக் குறிப்புப் பேசுகிறது. எனவே இந்த இடம் அரண் உடையதாக அவன் எண்ணித் தங்கி இருந்தான் என்க, “ஆர் உயிர் துறக்கலாற்றேன்” என்றதனால். இராமன் வாலியை வதைத்து. இவன் உயிரைக் காக்கவேண்டும் என வேண்டுகிறான் என்பது புலப்படுகிறது. தாங்குதல் என்பது அஞ்சத்தக்க பெரிய இடத்திலிருந்து. மீட்டுக் காப்பாற்றுதல் என விரிந்த பொருள் தரும், “தளர்ந்தேன். எம்பிரான்! என்னைத் தாங்கிக் கொள்ளே!” என்பது திருவாசகம், இராமன் தனக்கு உதவ வேண்டும்; இத்துயரம் உன்னால் தான் தீரும் என்று சொன்னபிறகு. சுக்கிரீவன், நான் உன்னைச் சரணடைந்தேன்; என்னை நீ தாங்க வேண்டும் என்று கூறியதனால். சீதையைக் கண்டு பிடிப்பதில் சுக்கிரீவன் உதவ மாட்டானோ என்ற குறிப்புத் தோன்றுவதைக் கூர்ந்து நோக்குக,

26. இராமன் சுக்கிரீவனிடம் நட்புக் கொள்ளுதல்

என்ற அக்குரங்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி.
“உன்தனக்கு உரிய இன்ப துன்பங்கள் உள்ள, முன்நாள்
சென்றன போக. மேல் வந்து உறுவன தீர்ப்பல்; அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேர்” என மொழியும் நேரா. (3915)

(சென்றன - அனுபவித்தன; நின்றன - இனி அனுபவிக்க வேண்டியவை; நிற்கும் - நினக்கும் \ உனக்கும்; நேர் - ஒத்தன \ சமமான; நேரா - நேர்ந்து \ வாக்களித்து) (குளகப்பாடல்)

என்று கூறிய அந்தக் குரங்குகளுக்கு அரசனான சுக்கிரீவனை. இராமபிரானும் கருணையால் நோக்கி. “உனக்கு உரிய இன்பதுன்பங்கள். இதுநாள் வரை நீ அனுபவித்துக் கழித்தன போக. இனிமேல் நிகழவிருக்கின்ற - அனுபவிக்க வேண்டிய. துன்பங்களனைத்தையும் நான் தீர்த்து வைப்பேன்; அவ்வாறு இன்னும் நீ அனுபவிக்க வேண்டிய எல்லாம். இனிமேல் உனக்கும் எனக்கும் சமமாகவே இருக்கும்” என்று உறுதிமொழி கூறி - பாடல் தொடர்கிறது.

மேல் வந்து உறுவன தீர்ப்பல்" என்பது, இனி மேல் வந்து உறும் துன்பங்களை நான் நீக்குவேன் என்று பொருள் தரும், நட்பிற்குச் சிறந்த சான்று, ஒருவரின் இன்பதுன்பங்களில் சமபங்கு கொள்வதே என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது. இடுக்கண் களைவதாம் நட்பு என்பது குறள், இவ்வுறுதி மொழி கூறும்பொழுது அக்னியை சாட்சியாக வைத்துக் கொண்டு இராமபிரானும் சுக்கிரீவனும் நட்புக்கொண்டனர் என்று வான்மீகமும். அத்தியாத்ம ராமாயணமும் கூறும்.

27. "மற்று இனி உரைப்பது என்னே?
வானிடை. மண்ணில். உன்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்;
தீயரே எனினும், உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்;
உன்கிளை எனது; என் காதல்
சுற்றம் உன் சுற்றம்; நீ என்
இன்னுயிர்த் துணைவன்" என்றான். (3916)

(செற்றவர் - வருத்தியவர்; உற்றவர் - நட்புக் கொண்டவர்கள்; கிளை - உறவினர்; காதல் - அன்பு; துணைவன் - நண்பன்; சுற்றம் - உறவினர்)

"இனிநான் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? விண்ணுலகத்திலும். மண்ணுலகத்திலும் உன்னைப் பகைத்து வருத்தியவர் என்னையும் பகைத்து வருத்தியவராவார்; உன்னுடன் நட்புக் கொண்டவர்கள் தீயவர்களாகவே இருந்தாலும். இனி எனக்கும் நண்பர்களாவார்கள்; உன்னுடைய உறவினர்கள் இனி எனக்கும் உறவினர்கள், அதுபோல என்னால் அன்பு செய்யப்படும் உறவினர்கள் உன்னுடைய உறவினர், நீ என்னுடைய உயிர் போன்ற நண்பன் ஆவாய் என்றான்" இராமன்,

மண்ணுலகில் உள்ள மக்கள். விலங்கினங்கள். அரக்கர்களே அன்றி. விண்ணுலகில் உள்ள தேவர்களேயானாலும். உன்னைப் பகைத்து வருத்துவார்களேயானால் அவர்கள் என்னையும் வருத்தியவர்கள் ஆவார்கள் என்பதை "வானிடை. மண்ணில்" என்று இருஉலகத்து வாழ்பவர்களையும் தனித்தனியாகக் கூறினார்; உன்னுடைய பகைவர். உறவினர். நண்பர் எல்லோரும் என்னுடைய பகைவர். உறவினர். நண்பராவர்; என்று கூறிய இராமபிரான், என்னுடைய பகைவர் உன்னுடைய பகைவர் என்பதைச் சொல்லாது விடுத்ததை ஊன்றிக் கவனிக்க வேண்டும், சுக்கிரீவனைப் பகைத்த வாலியை இராமன் தனித்து நின்றே கொன்று தன் வாக்குறுதியைக் காப்பாற்றினான். தன்னுடைய பகைவன் இராவணனைச் சுக்கிரீவனால் தனித்து நின்று வென்று தன்னைக் காக்கமுடியாது என்பது இராமனுக்கு நன்கு தெரியும். அதனாலேயே, அதைச் சொல்லாது விடுத்தான் என்க. என்றாலும், சுக்கிரீவனிடம் நட்புக் கொண்டு. இயன்ற உதவியைப் பெறலாம் என்பதால்தான் "நீ என் இன்னுயிர்த் துணைவன்" என்றான், இங்கே அவனை உடன்பிறப்பு என்று கூறாததும் நோக்கத்தக்கது, முன்பு குகனிடம் நட்புக் கொண்டபோது. "என்

உயிர்அனையாய் நீ " என்று கூறிய பிறகு. "என் இளவல் உன் இளையான்" என்று கூறியதால் குகனை உடன் பிறப்பாக ஏற்றுக்கொண்டான் என்பது நன்கு விளங்கும். ஆனால் இங்கே "நீ என் இன்னுயிர்த் துணைவன்" என்றுமட்டும் கூறி நிறுத்தி விடுகிறான், ஆனால் பின்னர் யுத்த காண்டத்தில் விபீஷணனை மற்றொரு உடன் பிறப்பாக ஏற்றுக்கொள்ளும்போதுதான் "குன்றுசூழ்வான் மகனொடு அறுவரானோம்" என்று உடன்பிறப்பு உரிமை அளிக்கிறான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும், மற்றும் ஒன்று. தன் தந்தை தசரதன் பறவையரசனான சடாயுவுடன் நட்புக்கொண்டது போல். தசரதன் மகன் குரங்கினத்தரசனுடன் நட்புக் கொண்டான் என்று கூறுவது ஒரு நயம், இன்னொரு செய்தி, பொதுவாக சுக்கிரீவனின் உற்றார் நல்லோராகத்தான் இருத்தல் வேண்டும். இருப்பினும் அவற்றுள் தீயோர் யாரேனும் இருப்பர் என்றாலும். அவர்களை நீக்கி விட்டுத் தான் உன்னுடன் நட்புக் கொள்வேன் என்பதல்ல; அவர்கள் தீயவராகவே இருந்தாலும். அவர்களும் என்னுடைய உற்றாரேயாவர் என்று தன் நட்பின் வலிமையை எடுத்துரைத்தான் என்க. "நாடாது நட்டலில் கேடில்லை; நட்டபின். வீடில்லை நட்பாள்பவர்க்கு" என்பது குறள் 791) தன்னைச் சரணடைந்தவர்களுக்கு அபயம் அளித்து. அடைக்கலம் தந்து காப்பது என்பது. தன்னைச் சரணடைந்தாரின் பகைவர், உற்றார், நண்பர், உறவினர், ஆகியோரையும். தனது உற்றார், உறவினர், நண்பர்களைக் கொண்டு காத்தருளல் என்பது இங்கே புலப்படுத்தப்பட்டது.

28. குரங்குக் கூட்டம் மகிழ்தல்

ஆர்த்தது குரக்குச் சேனை;
அஞ்சனை சிறுவன் மேனி
போர்த்தன, பொடித்த ரோமப்
புளகங்கள்; பூவின்மாரி
தூர்த்தனர் விண்ணோர்; மேகம்
சொரிந்தன; அனகன் சொன்ன
வார்த்தை. எக்குலத்துளோர்க்கும்.
மறையினும் மெய் என்று உன்னா, (3917)

(அனகன் - குற்றமற்றவன்; மறை - வேதவாக்கு; உன்னா - உன்னி \ எண்ணி; சிறுவன் - புதல்வன்; போர்த்தல் - மறைத்தல்; பொடித்தல் - அரும்புதல்; ரோமப் புளகம் - மயிர்க் கூச்சு; தூர்த்தல் - நிரப்புதல்; மெய் - மெய்மை \ சத்தியம் \ உண்மை)

குற்றமற்றவனான இராமபிரான் கூறிய இவ்வார்த்தை எல்லாக்குலத்தில் தோன்றியவர்களுக்கும் வேதவாக்கைக் காட்டிலும் சத்தியமானது என்று கருதி. குரங்குப்படைகள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தன; அஞ்சனாதேவியின் மகனாகிய அனுமனின் மேனி மயிர்க் கூச்செறிந்து அதனால் மேனி மூடப்பட்டது. தேவர்கள் மலர்மாரி தூவி, புவியையே நிரப்பினர்; மேகம் மகிழ்ச்சியால் மழை பொழிந்தது.

இராமன் சொற்கள் வேதவாக்கைக் காட்டிலும் உண்மையானவை என்பது நிலை நிறுத்தப் பெற்றது. குரங்குப்படை ஆரவாரித்ததற்குக் காரணம், தம் அரசனுக்கும், தம் குலத்திற்கும் பகைவனான வாலி, இராமனால் நிச்சயம் அழிக்கப்படுவான் என்பதாலும், இவர்களும் ஒரே நாளில் இராமனுடைய உறவினர் ஆகிவிட்ட காரணத்ததாலும் என்க அனுமன் மகிழ்ச்சியால் உடல் புல்லரிக்கக் காரணம், தன்னால் அறிமுகம் செய்யப்பட்ட இராமனால், தன் தலைவனுக்கும், தங்கள் குலத்திற்கும் விளையப் போகும் நன்மைகளைக் கருதியும், இராமனால் வாலி வதை நிகழும் என்பதாலும், சுக்கீரிவன் நட்பால் இராமபிரான் துயர் நீங்கி, சீதையைத் தேடிக் கண்டுபிடித்து விட முடியும் என்ற நம்பிக்கையாலும் என்க. தேவர்கள் மலர் மாரி பொழிந்ததற்குக் காரணம் தங்கள் வேண்டுகோளாகிய இராவணவதம் நிறைவேறுவதற்கு இவர்கள் நட்பு ஒரு தோற்றுவாயாக அமைந்ததால் என்க. மேலும், மழை சொரிந்ததற்கு காரணம், இந்நட்பு பின்னால் விளையப்போகிற நன்மைகளுக்கு ஒரு நல்ல அறிகுறியாக என்க.

29. அனுமன் இராம இலக்குவரைச் சுக்கிரீவன் மாளிகைக்கு அழைத்தல்

ஆண்டு எழுந்து. அடியில் தாழ்ந்த அஞ்சனை சிங்கம், "வாழி
தூண்திரள் தடந்தோள் மைந்த! தோழனும் நீயும் வாழி!
ஈண்டு நும் கோயில் எய்தி, இனிதின்நும் இருக்கை காண,
"வேண்டுதும்; நும் அருள் என்?" என்றான்; வீரனும், "விழுமிது" என்றான். (3918)

(தாழ்தல் - விழுந்து வணங்குதல்; தோழன் - சுக்கிரீவன்; கோயில் - மாளிகை; அருள் - நோக்கம் \ திருவுள்ளம்; விழுமிது - நல்லது \ நன்று \ சிறந்தது \ மேன்மையானது; வேண்டுதும் - விரும்புகிறோம்)

அங்கு நின்று எழுந்து, இராமபிரானின் திருவடிகளில் விழுந்து வணங்கி, அஞ்சனை ஈன்றெடுத்த சிங்கம் போன்றவனாகிய அனுமன். இராமபிரானை நோக்கி, "தசரதச் சக்கரவர்த்தியின் திருக் குமாரர்களே! வாழ்க! தூண் போன்ற திரண்ட பருத்த தோள்களை உடையவனே! நீயும், உன் தோழனாகிய சுக்கிரீவனும் நெடிது வாழ்வீராக! இப்பொழுது, உங்கள் அரண்மனை மாளிகையை அடைந்து, அங்கு தங்கள் இருப்பிடத்தில் மகிழ்ச்சியாக இருப்பதைக் காண நாங்கள் விரும்புகிறோம்; தங்கள் கருத்து யாது?" என்று வினவ, வீரனாகிய இராமபிரானும்; "அதுவே சரி, அவ்வாறே செய்வோம்" என்று அதற்கு உடன்பட்டான்.

அனுமனைச் சிங்கம் என்று கூறியது நோக்கத்தக்கது. சிங்கம் முன்னும், பின்னும் பார்த்து அடியெடுத்து வைக்கும் இயல்பினது. அதுபோல இராமபிரானின் முன் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிந்தவனாகவும், இனிமேல் அவர்கள் வாழ்க்கையில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடக்க வேண்டும் என்பதையும், தங்கள் குரங்குக் கூட்டம் முன்பு இருந்த நிலையையும் இப்போது

இராமபிரான் நட்பிற்குப் பிறகு தனது அரசனுக்கு நிகழ இருக்கும் நிகழ்ச்சிகளையும் எண்ணிப் பார்த்துச் செயல்படும் அமைச்சன் அனுமன் என்பதைக் குறிக்க. "அஞ்சனை சிங்கம்" என்றார் என்க.

"வாழி" என்பது அரசன் முதலிய பெரியோரிடம் பேசுவதற்கு முன்பு கூறப்படும் மங்கல வாழ்த்துச் சொல். மரியாதைச் சொல்லும் ஆகும். இதை அசைச் சொல்லாகவும் கொள்ளலாம். அனுமன், இராமனின் தோளாற்றலில் மிகவும் ஈடுபட்டவன் என்பதை உறுதிப்படுத்தவே, மீண்டும் இராமனின் தோள் வலியைப் பற்றியே பேசுவதை "தூண் திரள் தடந்தோள் மைந்த" என்றதை நோக்குக. தன் தலைவன் சுக்கிரீவனும், இராமபிரானும் நீண்ட நாள் நட்புடன் திகழ வேண்டும் என்பதை அனுமன் "தோழனும் நீயும் வாழி!" என்று கூறுவதன் மூலம் வெளிப்படுத்துகிறான். "நும்கோயில்" என்று அவர்களின் நட்பைப் புலப்படுத்தி அதனால் உண்டாகும் உரிமையையும் உடன் வழங்கும் நோக்கத்தால் கூறினான் என்க. "விழுமிது" என்ற சொல் "நன்று" என்று பொருள் தந்து, உடன்படுதலையும் குறிக்கும். "கோயில்" என்ற சொல் பொதுவாக அரண்மனையையே குறிக்கும் என்றாலும், இங்கே சுக்கிரீவனது மலையில் உள்ள குகையைக் குறித்தது என்று கொள்க. இவர்கள் இப்பொழுது இருக்கின்ற இடம் ருசியமுக மலையின் அடிவாரமாகிய "மலய பருவதம்" என்னும் இடம் என்று வான்மீகம் கூறும்.

30. முதலில் ஒரு சோலைக்குச் செல்லுதல்

ஏகினர் இரவிசேயும், இருவரும், அரிகள் ஏறும்,
ஊகவெஞ் சேனை சூழ, அறம் தொடர்ந்து, உவந்து, வாழ்த்த;
நாகமும், நரந்தக் காவும், நளின வாவிகளும் நண்ணி,
போக பூமியையும் ஏசும் புதுமலர்ச் சோலை புக்கார். (3919)

(இரவிசேய் - சூரியன் மகன் \ சுக்கிரீவன்; அரி - குரங்கு; ஏறு - ஆண் சிங்கம்; அறம் - தருமதேவதை; நாகம் - சுரபுன்னை மரம் \ புன்னாகம்; நளினம் - தாமரை; வாவி - தடாகம்; போக பூமி - துறக்கம் \ சுவர்க்கம்; ஏசுதல் - இகழ்தல் \ பழித்தல்; ஊகம் - கருங்குரங்கு; நரந்தம் - நாரத்தை)

சூரியனது புதல்வனான சுக்கிரீவனும், இராம இலக்குவர் ஆகிய இருவரும், குரங்குகளில் ஆண் சிங்கம் போன்ற அனுமனும், குரங்குப் படைகள் சூழ்ந்து வர, தருமதேவதையும் இவர்களுடன் மகிழ்ச்சியுன் வாழ்த்திக் கொண்டே பின்னால் தொடர்ந்து வரவும், சுரபுன்னை, நாரத்தை மிகுந்த சோலை, தாமரை மலர்கள் நிறைந்துள்ள தடாகங்கள், முதலியவைகளை அடைந்து, இன்பம் அனுபவிக்கும் இடமாகிய சுவர்க்க லோகத்தையும் இகழும் தன்மையுடைய, அன்றலர்ந்த புது மலர்கள் பூத்துக் குலுங்கும் ஒரு சோலைக்குள் புகுந்தார்கள்.

தங்கள் நாட்டிற்கு அழைத்து வருவதால் முன்னர் நாட்டின் அரசனாகிய சுக்கிரீவன், பின்னர் விருந்தினர்களாகிய இராம இலக்குவர், அவர்களைத் தொடர்ந்து அமைச்சன் அனுமன், அவனைத் தொடர்ந்து சேனைகள்

அதனையும் தொடர்ந்து அருவமாகிய தரும தேவதை என்ற வைப்பு முறையை நோக்குக. இராம இலக்குவர் செல்லும் இடமெல்லாம் தருமதேவதையும் மகிழ்ச்சியுடன் செல்லுவாள் என்பது குறிப்பு. அனுமனை முன்பு "அஞ்சனை சிங்கம்" என்றும் "குரங்குச் சீயம்" என்றும் கூறிய கவிஞன் இங்கே "அரிகள் ஏறு" என்று கூறியதையும் நோக்குக. இவர்கள் வந்தடைந்த சோலை சுவர்க்கலோகத்தைக் காட்டிலும் இனிமை பயப்பது என்பது புலப்பட "போக பூமியையும் ஏசும் புதுமலர்ச் சோலை" என்றார் என்க.

31. சோலையின் வருணனை

ஆரமும் அகிலும் துன்றி, அவிர் பளிக்கு அறை அளாவி,
நாரம் நின்றன போல் தோன்றி, நவமணித் தடங்கள் நீடும்
பாரமும் மருங்கும் தெய்வத்தருவும், நீர்ப்பண்ணை ஆடும்
சூர் அரமகளிர் ஊசல் துவன்றிய சும்மைத்து அன்றே! (3920)

(ஆரம் - சந்தனம்; துன்றி - நெருங்கி; அவிர் - விளக்கம் மிக்க \ ஒளிவீசும்; அறை - பாறைகளுமாம்; அளாவி - கலக்கப் பெற்று \ பொருந்தி; நாரம் - தண்ணீர்; நின்றது - நிலைத்து எப்போதும் உள்ளது; நவமணி - புதிய இரத்தினங்கள்; தடங்கள் - தடாகங்கள்; பாரம் - கரை; மருங்கு - பக்கம்; தரு - மரம்; தெய்வத்தரு - தேவதாரு \ கற்பக மரம்; பண்ணை - விளையாட்டு; சூர் - கொடிய \ அச்சமுண்டாக்கும்; அர மகளிர் - தெய்வப் பெண்கள்; துவன்றுதல் - நெருங்கியிருத்தல்; சும்மை - ஆரவாரம் \ ஓசை; தோன்றுதல் - காட்சி தருதல்; நீடும் - நீண்ட; ஊசல் - ஊஞ்சல்; அகில் - மலை வேம்புமாம்;)

அந்தச் சோலை, சந்தன மரமும், அகில் மரங்களும் நெருங்கி அமையப் பெற்றது; ஒளிவீசும் பளிங்குப் பாறைகளும் இடையிடையே உள்ளன் அதன் ஒளி, அவற்றில் தண்ணீர் நிறைந்து நிற்கின்ற தன்மை போலக் காட்சியளித்தது. அங்கிருக்கின்ற புதிய இரத்தினங்கள் பதிக்கப்பெற்று விளங்குகின்ற தடாகங்களின் நீண்ட கரைகளிலும், அதன் பக்கங்களிலும் கற்பகம், தேவதாரு போன்ற மரங்களும் அடர்ந்து காணப்படுகின்றன; அங்கே அச்சமூட்டும் தோற்றம் கொண்ட தேவ மாதர்கள் நீர் விளையாட்டு விளையாடும் ஓசையும் அவர்கள் ஊஞ்சலில் நெருங்கியமர்ந்து விளையாடும் ஆரவாரமும் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

அந்தச் சோலை சந்தனம், அகில் மரங்கள், பளிங்குப் பாறைகள் நவரத்தினம் பதிந்த கரைகள் நிறைந்தன. அங்கே பக்கத்தில் கற்பகம் போன்ற தெய்வத்தன்மை வாய்ந்த மரங்கள், இவற்றில் தேவமகளிர் ஊஞ்சல் கட்டியும், நீர் விளையாட்டு விளையாடிக்கொண்டும் இருக்கிறார்கள், அதனால் வரும் ஆரவாரமும் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் தன்மையுடையது என்பதாம். அங்கே இயற்கையிலேயே தண்ணீர் நிறைந்து நிற்பது போலத் தோற்றமளித்தது என்று இங்கே குறிப்பிடுவது முன்பு பாலகாண்டத்தில் வரைக் காட்சிப் படலத்தில், கூறியதையும் நினைவு கூர்க. அகில் என்பதை ஒரு

வாசனை மரக்கட்டை என்றும், மலை வேம்பு என்றும் கூறுவர். சூர் என்ற சொல்லுக்குத் தெய்வத் தன்மை பொருந்தியது என்றும், கண்டாரை அச்சம் கொள்ள வைக்கும் வடிவழகு என்றும் பொருள் உண்டு.

32. அயர்வு இல்கேள்வி சால் அறிஞர் வேலைமுன்,
பயில்வுஇல் கல்வியார் பொலிவுஇல் பான்மை போல்,
குயிலும், மாமணிக் குழுவும், சோதியால்,
வெயிலும், வெள்ளி வெண்மதியும் மேம்படா. (3921)

(அயர்வு - தளர்ச்சி; சால் - மிக்க; வேலை - கடல் \ கூட்டம்; பொலிதல் - மேம்படுதல் \ மேன்மையுற்ற விளங்குதல்; மணி - இரத்தினங்கள்; குழுவு - திரண்ட; சோதி - ஒளி; குயிலுதல் - பதிக்கப்படுதல்; மா - சிறந்த)

தளர்ச்சியில்லாது தொடர்ந்து முயன்று கேள்வி ஞானத்தில் மிக்கு விளங்குகின்ற அறிஞர்கள் கூட்டத்தின் முன், அத்தகைய கல்வி கேள்யறி வில்லாதவர்கள் மேம்பட்டுத்திகழ முடியாத தன்மை போல, அங்கே பதிக்கப பட்டிருக்கின்ற சிறந்த நவரத்தினங்களின் கூட்டத்தின் ஒளியால், இயல்பாக எரிக்கின்ற சூரியனின் வெயிலும், குளிர்ச்சி பொருந்திய வெண்ணிற நிலவும், மேம்பட்டுத் தோன்ற முடியவில்லை.

கேள்வியறிவுற்றவர்களுக்கு நவமணிகளும், கல்வியறிவு இல்லாதவா களுக்கு சூரியனும் சந்திரனும் உவமை. அந்தச் சோலையில் வெயிலும் நிலவும் தோன்றாமல் எப்போதும் நவரத்தினங்களின் ஒளியே மேம்பட்டு விளங்கியது என்பதாம். முதல் இரண்டு அடிகளுக்கு ஒப்பான சொற்றொடர்கள் தமிழ் இலக்கியங்களில் வெகுவாகக் கையாளப்பட்டுள்ளன. "கல்லாது நீண்ட ஒருவன், உலகத்து நல்லறிவாளர் இடைப்புக்கு. மெல்ல இருப்பினும் நாய் இருந்தற்றே இராது, உரைப்பினும், நாய் குரைத்தற்றே" என்பது நாலடியார் 254. கம்பனே, முன்னர் பாலகாண்டப் பூக்கொய் படலத்தில், "வாசகம் வல்லார் முன் நின்று யாவர் வாய் திறக்க வல்லார்?" என்றதும் காண்க.

33. இருவரும் மலர் ஆசனத்தில் அமர்ந்து உரையாடுதல்

ஏய அன்னதாம் இனிய சோலைவாய்
மேயமைந்தரும், கவியின் வேந்தனும்
தூயபூ அணைப் பொலிந்து தோன்றினார்,
ஆய அன்பினோடு அளவளாவுவார். (3922)

(மேய - அடைந்த; கவி - குரங்கு; அணை - ஆசனம்; அளவளாவுதல் - கலந்து உரையாடுதல்)

இத்தகைய தன்மைவாய்ந்த அந்த இனிமையான சோலையினை வந்தடைந்த தசரதகுமாரன் இராமனும், குரங்கின் வேந்தன் சுக்கிரீவனும் தூய்மையான மலர்களால் ஆன மலர்த்தவசில் சிறந்து விளங்கித் தோன்ற, அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியால் உண்டான அன்போடு, இருவரும் மனம் கலந்து உரையாடத் தொடங்கினர்.

34. இராமன் நீராடிக் காய்கனி அருந்துதல்

கனியும், கந்தமும் காயும், தூயன
இனிய யாவையும் கொணர, யாரினும்
புனிதன், மஞ்சனத் தொழில் புரிந்து, பின்
இனிது இருந்து, நல் விருந்தும் ஆயினான். (3923)

(கந்தம் - கிழங்கு; புனிதன் - தூயோன்; மஞ்சனத் தொழில் - நீராடுதல்; விருந்து - புதுமை)

அந்தக் காட்டில் கிடைக்கின்ற தூய்மையானதும், மிக்க இனிமையானது மான, பழங்கள், கிழங்குகள், இலைகள், வேர்கள் முதலான எல்லாவற்றையும் வானரர்கள் கொண்டுவந்து தர, எல்லோரிலும் தூய்மையானவனான இராமனும், நீராடி, இறைவனைத் தியானித்துத் தொழுது, சுக்ரீவனுக்கு நல்ல விருந்தினனாகி, அவனளித்த விருந்தை உண்ணலானான்.

உண்பதற்கு முன்பு, நீராடுதலும், பின்னர் இறைவனைத் தொழுதலும் உயர்ந்தோர் பண்பு. எனவே, இங்கு "இனிது இருந்து" என்ற சொல்லுக்கு, இறைவனைத் தொழுது இனிது இருந்து என்று பொருள் கொள்ளப்பட்டது. முன்பு முனிவர்கள் தந்த விருந்தில் பங்குகொண்ட இராமன் இதுபோல நீராடி, இறைவனைத் தொழுது விருந்துண்டதை, "துறை நறும் புனலாடி சுருதியோர் உறையுள் எய்தி, இறைவனைத் தொழுது ஏத்தி எரிஓம்பிப் பின் அறிஞர் காதற்கு அமைவிருந்தாயினான்" என்றதும் காண்க. இராமன் சுக்கிரீவனுக்கு நண்பன் ஆனது மட்டுமல்லாமல் விருந்தும் ஆயினான் என்று கூறியதன் நயம் ஓர்க. "நீராடி, கால்கழுவி, வாய்பூசி, மண்டலம் செய்து உண்டாரே உண்டார் எனப்படுவார்" என்பது ஆசாரக் கோவை.

35. இராமன், சுக்கிரீவன் மனைவி குறித்து வினவுதல்.

விருந்தும் ஆகி, அம்மெய்ம்மை அன்பினோடு
இருந்து நோக்கி, நொந்து, இறைவன், சிந்தியா,
"பொருந்தும் நன்மனைக்கு உரிய பூவையைப்
பிரிந்துளாய் கொலோ நீயும் பின்?" என்றான். (3924)

(மெய்ம்மை - உண்மையான; இறைவன் - இராமன்; சிந்தியா - சிந்தித்து; பின் - பின்னவனே! தம்பியே; பூவை - மனைவி; மனை - மனையறம் \ இல்வாழ்க்கை)

இவ்வாறு சுக்கிரீவனால் அளிக்கப்பட்ட விருந்தை ஏற்றுக் கொண்டவனான இராமன், உண்மையான அன்பினோடு அவன் மனைவியைச் சுற்றும் முற்றும் பார்த்து, அவள் அங்கு இல்லாததைக் கண்டு மனம் நொந்து, மிக்க யோசனை யுடன், "நல்ல இனிய இல்வாழ்க்கைக்கு உரியவளான, நாகணவாய்ப்புள் போன்ற உன் மனைவியை நீயும் என்னைப் போல் பிரிந்து இருக்கிறாயோ?" என்று கேட்டான்.

விருந்திற்கு அழைப்போர், அவ்விருந்தினைக் கணவனும் மனைவியும் ஆகிய இருவரும் ஒருங்கிணைந்து அளிப்பதே சிறந்த விருந்தோம்பலாகும். மேலும், விருந்து உபசரித்தலே மகளிரின் முக்கிய இல்லறக் கடமையாகக் கருதப்படுவது. விருந்தினரை உபசரிக்க மனைவி இன்றியமையாதவள் என்பதையும் உணர்க. சுக்கிரீவன், தான் மட்டும் தனியே நின்று விருந்து படைப்பதைக் கண்ட இராமன், உள்ளே சுற்றும் முற்றும் நன்கு நோக்கியும் சுக்கிரீவன் மனைவியைக் காணாததால் சற்று யோசனை செய்து பின்னர்தான், "இல்லற வாழ்க்கைக்கு உரியவளான மனைவியைப் பிரிந்து என்னைப் போல் நீயும் வாழுகிறாயோ" என்று நொந்து போய்க் கேட்டான் என்பதாம். இதே நிலையை அசோகவனத்தில் சீதை சிந்தித்துப் பார்ப்பதைச் சுந்தர காண்டத்தில் காணப்போகிறோம். "விருந்து வந்த போது என் உறுமோ என்று விம்மும்" என்று சீதையின் நிலையைக் கம்பன் காட்டுகிறான். இதே போலச் சிலப்பதிகாரத்தில் கண்ணகியும், "விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை" என்று தன்னைத் தானே நொந்து கூறிக் கொள்ளுவதையும் ஒப்பு நோக்குக. இவ்வாறு சுக்கிரீவன் விருந்து படைத்ததோ, இராமன் சுக்கிரீவனின் மனைவி பிரிவு கண்டு வருந்தி வினவியதோ வான்மீகத்தில் பேசப்படவில்லை என்பது கருதத்தக்கது.

36. சுக்கிரீவன் நிலையை, அனுமன் எடுத்துரைத்தல்

என்ற வேலையில், எழுந்து மாருதி,
குன்றுபோல நின்று இருகை கூப்பினான்;
"நின்று நீதியாய்! நெடிது கேட்டியால்!
ஒன்று யான் உனக்கு உரைப்பது உண்டு" எனா. (3925)

(வேலை - சமயம்; நின்ற - நிலைபெற்ற; நெடிது - நீளமானது \ முழுவதும்) (குளகப்பாடல்)

என்று இராமன் சுக்கிரீவனைக் கேட்ட சமயம், அனுமன் தானே எழுந்து, மலைபோல் இராமன் எதிரில் நின்று, இரண்டு கைகளையும் கூப்பித் தொழுதவனாய், இராமனை நோக்கி, "நிலைபெற்ற நீதியை உடையவனே! நான் உங்களுக்குக் கூறப்போகும் வரலாறு ஒன்று உள்ளது. அது நீளமானது. எனவே, தொடக்கம் முதல் இறுதிவரை முழுவதும் நன்கு கேட்பாயாக!" என்று அனுமன். வாலி வரலாற்றைக் கூறத் தொடங்கினான்.

தன்மனைவியை இழந்த செய்தியைத் தானே கூறுதல் தகாது, நாகரீகமன்று என்பதால் சுக்கிரீவனைக் கூறவைக்காது அனுமனைக் கொண்டு கூற வைத்தான் கம்பன். எனினும் வான்மீகமும், அத்யாத்ம இராமாயணமும், சுக்கிரீவனே இவ்வரலாற்றை இராமனுக்கு எடுத்துச் சொன்னான் என்றே கூறுகின்றன.

37. வாலியின் சிறப்பியல்புகள் (17 பாடல்கள்)

"நாலு வேதமாம் நவைஇல் ஆர்கலி
வேலியன்னவன் மலையின் மேல் உளான்;

சூலிதன் அருள்துறையின் முற்றினான்;
வாலி என்று உளான், வரம்புஇல் ஆற்றலான்." **(3926)**

(நவை - குற்றம்; ஆர்கலி - கடல்; வேலி - அரண் பாதுகாப்பு; முற்றிய - முதிர்ச்சியடைந்த; வரம்பு - அளவு; (நிறைந்த ஒலியுடையது என்ற காரணத்தினால் ஆர்கலி என்பது கடலுக்குக் காரணப்பெயர்; வாலில் வலிமையுடைய காரணத்தினால் வாலி என்பது அவனுக்குக் காரணப் பெயர். சூலத்தைக் கையில் ஏந்தியிருப்பவன் ஆதலால், சூலி என்பது சிவபெருமானுக்குக் காரணப்பெயர்)

நான்கு வேதங்களையும் குற்றமற்ற கடல் சூழ்ந்த இவ்வுலகம் தனக்கு வேலியாகக் கொண்டிருப்பதைப் போல், பழமையான கைலாயம் என்னும் மலைமேல் சூலாயுதத்தைத் தன் கையில் ஏந்தியிருப்பவராகிய சிவபெருமானின் அருள் வழிபாட்டில் முதிர்ச்சியடைந்தவனும் தன்பால் எல்லையிலா வலிமை பெற்றவனுமாகிய வாலி என்பவன் ஒருவன் இருக்கிறான் - (பாடல் தொடர்கிறது).

நான்கு வேதங்களையும் அழியாமல் பாதுகாப்பவன் என்பதால் வேதக் கடலுக்கு வேலி எனப்பட்டான். வாலி சிறந்த சிவபக்தன் என்பதை, திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பல இடங்களில் பரக்கக் காணலாம். "கோலமாமலரோடு தீபமும் சாந்தமும் கொண்டு போற்றி, வாலியார் வழிபடப் பொருந்தினார்" என்பதும், "நீல மாமலை நிறத்து அரக்கனை இருபது கரத்தோடு ஒல்க. வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்" என்று குரங்காடு துறைப் பதிகத்தில் கூறியிருப்பதும் காணத்தகும். பின்னர் அனுமன், அங்கதன், தாரை முதலியோர் கூற்றாலும் அறியலாம். "வரம்பு இல் ஆற்றல்" என்பது, தான் சிவபெருமானிடத்தில் பெற்ற வரமாகிய "எதிர்ந்தாரில் பாதி வலி தான் பெறுதல் வேண்டும்". என்பதால் என்க. உலகைக் கடல்கள் சூழ்ந்திருப்பது போல், வேதங்கள் கைலாயத்தைச் சூழ்ந்திருக்கின்றன என்றும் கொள்வதுண்டு.

38. "கழறு தேவரொடு அவுணர் கண்ணில் நின்று,
உழலும் மந்தரத்து உருவுதேய, முன்
அழலும் கோள் அரா அகடு தீவிடச்
சுழலும் வேலையைக் கடையும் தோளினான்" **(3927)**

(அவுணர் - அசுரர்; உழல்தல் - சுழல்தல்; அழல்தல் - சினந்து கோபித்தல்; கோள் - வலிய; அரா - பாம்பு \ வாசுகி; அகடு - வயிறு; தீவிடுதல் - நெருப்பைக் கக்குதல்; வேலை - கடல்)

சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற வரங்களும், வலிமையும் பெற்ற தேவர்களும் அசுரர்களும் இரண்டு பக்கமும் நின்று மந்தர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கடை கயிறாகவும் கொண்டு, சுழன்று திரியும் திருப்பாற்கடலைக் கடையும் போது அம்மந்தர மலை தேய்ந்து போகவும், சினந்து கோபிக்கின்ற வலியையுடைய வாசுகிப்பாம்பின் வயிறு நெருப்பைக் கக்கவும், நொந்துபோன தேவர்களும் அசுரர்களும் வேண்ட, தான்

ஒருவனாகவே தனித்து நின்று அக்கடலைக், கடைந்த வலிமை கொண்ட தோள்களை உடையவன் இந்த வாலி".

பாற்கடலை, தேவர்களும் அசுரர்களும் கடையத் தொடங்கி நெடுங்காலமாக தேவாமிர்தம் கிடைக்கப் பெறாததால் தளர்ந்து போன சமயம், அப்பொழுது சிவபூசை செய்ய அங்கு வந்த வாலியை உதவுமாறு தேவர்கள் வேண்டிக் கேட்கவும், வாலி தன் வால் வலிமையினாலும் தோள் வலிமையினாலும் தான் ஒருவனாகவே பாற்கடலைக் கடைந்து அதனின்றும் வெளிப்போந்த தேவாமிர்தத்தைத் தேவர்களுக்கு அளித்தான் என்பதும் புராண வரலாறு. இதனைக் கம்பர் காப்பியத்தில் பல இடங்களிலும் கூறிப்போகிறார். மேலும் இவ்வரலாறு அபிஷேக நாடகத்தில் வாலியே இச்செய்தியைத் தாரைக்குக் கூறியதாகவும் உள்ளது. இதே வரலாறு காஞ்சிப் புராணத்தில் மணிகண்டேசுரப் படலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. என்றாலும் இச்செய்தி வான்மீகத்திலோ அத்யாத்ம இராமயணத்திலோ காணப்பெறவில்லை. இவ்வாறு சூரிய குலத்தரசன் பிருதுலாட்சன் என்பவனும் பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் அளித்ததாக பால காண்டம், குலமுறை கிளத்துப் படலத்தில் விசுவாமித்திரர் கூற்றாகக் கம்பன் கூறியதையும் நோக்குக. "கடல் கலக்கஎழும் இன்னமுது அதனை ஒருவன் கடவுள் வானவர் உண்ண அருள் செய்த கதையும்" என்பது கலிங்கத்துப் பரணி.

39. "நிலனும், நீருமாய் நெருப்பும், காற்றும் என்று
உலைவு இல் பூதம் நான்கும் உடைய ஆற்றலான்;
அலையின் வேலை சூழ் கிடந்த ஆழிமா
மலையின் நின்றும் இம்மலையின் வாவுவான்." (3928)

(உலைவு - அழிவு; ஆழிமா மலை - சக்கர வாள மலை; வாவுதல் - தாவுதல் \ தாண்டுதல்;)

இவ்வாறு நிலம், நீர், நெருப்பு, காற்று என்று கூறப்படும் அழிவு இல்லாத நான்கு பூதங்களின் ஆற்றலையும், இவன் ஒருவனே கொள்ளப் பெற்றவன். உலகைச் சூழ்ந்துள்ள ஏழு கடல்களுக்கும் அப்பாலுள்ள பெரிய வட்ட வடிவமான சக்கரவாள மலையிலிருந்து, இப்போது நாம் நிற்கும் இந்த மலைக்குத்தாண்டிக் குதிக்கும் ஆற்றல் பெற்றவன்.

ஐம்பூதங்களுள் நான்கைச் சொல்லி ஆகாயத்தைச் கூறாது விடுத்தது அது ஒரு எல்லையோ வடிவமோ, பரிணாமமோ இல்லாத சூன்யப்பிரதேசம் என்பதால் என்க. இந்நான்கு பூதங்களின் ஆற்றல்களையும் வாலி ஒருவனே பெற்றிருக்கிறான் என்பதால் அவனுடைய பேராற்றல் புலப்படும். அத்துடன் அண்டத்திற்கு அப்புறத்தில் உள்ள சக்கர வாள மலையிலிருந்து இங்கு இருக்கும் மலைக்குத் தாண்டும் ஆற்றல் பெற்றவன் என்பதாலும் அவனுடைய பேராற்றல் புலப்படும் என்பதாம். பூமியை ஏழுகடல்கள் சூழ்ந்துள்ளதாகவும், அது அண்டத்திற்கு வெளிப்புறத்தே உள்ளதாகவும் கூறுவது ஒரு புராணக் குறிப்பு.

40. கிட்டுவார் பொரக் கிடைக்கின், அன்னவர்
பட்ட நல்வலம் பாகம் எய்துவான்;
எட்டு மாதிரத்து இறுதி, நாளும் உற்று
அட்ட மூர்த்தி தாள் பணியும் ஆற்றலான். (3929)

(கிட்டுவார் - எதிர்வருவார்; பொர - போர்செய்ய; பட்ட - பொருந்தியுள்ள; வலம் - வலிமை; பாகம் - ஒருபாதி; மாதிரம் - திசை; அட்ட மூர்த்தி - எட்டு வடிவினன்; பணிதல் - பூசித்தல்)

இவ்வாலி தன்னை எதிர்த்துப் போர் செய்ய அணுகுபவரின் நல்ல வலிமையில் சரிபாதி பாகம் பெற்றுவிடுகின்ற வரபலம் உடையவன்; இவன் நாள்தோறும் எட்டுத்திக்குகளின் எல்லைக்கும் சென்று, எட்டுவடிவங்களாகத் திகழும் எண் குணத்தானாகிய சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது வணங்கும் ஆற்றலும் நியமமும் உடையவன்.

தன்னை எதிர்த்துப் போர் செய்யும் பகைவனின் வலிமையில் பாதி தன்னிடம் வந்துசேர வேண்டும் என்று சிவபெருமானிடம் வரம் வாங்கி வந்தவன் இந்த வாலி. இவ்வாறு கந்தபுராணத்தில் சூரபன்மனின் காவல் தெய்வமாகிய மாமரமும் சூரபன்மனை எதிர்க்கும் பகைவரின் ஆற்றலில் பாதி பெற்றிருந்தது என்பதும் இங்கு கருதத்தக்கது. ஆனால் வான்மீகத்திலோ அத்யாத்ம இராமயணத்திலோ இவ்வரம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் எட்டுத் திக்குகளின் இறுதிக்கும் நாள்தோறும் சென்று சிவபெருமானைத் துதித்து வழிபடும் நியமத்திற்கு உட்பட்டவன் என்று அவன் வழிபாடும் பக்தியும் சிறப்பித்துக் கூறப்பட்டன. அட்ட மூர்த்தி என்பது எட்டு வடிவங்களையும் எட்டு குணங்களையும் உடைய சிவபெருமானைக் குறித்தது. எட்டு வடிவங்களாவன: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களும், சூரியன் சந்திரன் என்ற இரண்டு சுடர்களும், இயமானன் என்னும் ஆன்மா என்பதும் புராணக் குறிப்பு. "இருநிலனாய் தீயாகி, நீருமாகி, இயமானனாம் நெறியும், காற்றுமாகி அருநிலையத் திங்களாய், ஞாயிறாகி, ஆகாசமாய், மூர்த்தியாகி" என்பது அப்பர் தேவாரம்.

41. "கால் செலாது அவன் முன்னர்; கந்தவேள்
வேல் செலாது அவன் மார்பில்; வென்றியான்
வால் செலாதவாய் அலது, இராவணன்
கோல் செலாது;அவன் குடை செலாது அரோ!" (3930)

(கால் - காற்று; கந்தவேள் - முருகன்; செலாது - நுழையாது; வென்றி வெற்றி; வாய் - இடம்; கோல் - செங்கோல்; குடை - வெண்கொற்றக்குடை)

இவ்வாலியின் வேகத்திற்கு முன்னால் காற்றுக்கு அதிபதியான வாயுதேவன் கூடச் செல்ல முடியாது. கிரவுஞ்ச மலையைப் பிளந்த முருகப்பெருமானின் வேற்படை கூட இவன் மார்பில் நுழைந்து துளைக்க முடியாது. எப்பொழுதும் வெற்றியையே உடைய இவ்வாலியின் வால் செல்லாத இடங்கள் அல்லாத,

அதாவது இவன் வால் சென்ற இடங்களில், இராவணனின் செங்கோல் ஆட்சி செல்லாது. அவனுடைய வெண்கொற்றக் குடையும் செல்லாது.

வேகத்திற்கும் வலிமைக்கும் எடுத்துக்காட்டாகக் கூறப்படுபவன் வாயுதேவன். அவனுடைய வேகமே வாலியின் வேகத்திற்கு இணையாகாது என்பது கருத்து. ஸ்கந்தம் என்ற வட சொல்லுக்குச் "சேர்க்கை" என்பது பொருள். அதுவே தமிழில் கந்தன் என்று வழங்கப்படுகிறது. சரவணப் பொய்கையில் ஆறு சிறு குழந்தைகளாகத் தாமரையில் தோன்றிய முருகப் பெருமானை, உமாதேவியார் அன்புடன் அணைத்து எடுத்து ஓர் உரு ஆக்கினார் என்பது புராண வரலாறு. "வேள்" என்பது வேட்கையை ஊட்டுபவன் என்று பொருள் தரும் சொல். இச்சொல்லே மன்மதனுக்கும் மாரவேள் என்ற பெயரைத் தந்தது. ஆதலின் அதனை வேறுபடுத்திக் கந்தவேள் என்றார் என்க. கிரவுஞ்ச மலையைப் பிளந்த முருகனின் வேல் கூட வாலியின் மார்பில் நுழைந்து துளைக்கமுடியாது என்று அவன் மார்பின் வன்மை சிறப்பிக்கப்பட்டது. வாலி ஒருமுறை திசை இறுதியில் சிவபெருமானைத் தொழுது இருக்கும் பொழுது, இராவணன் அவனுக்குத் துன்பம் கொடுக்க முயன்றான். இதனை அறிந்த வாலி, தான் இருந்த இடத்தை விட்டு அசையாது, தன் வாலினாலேயே இராவணனை இறுக்கக் கட்டி, தான் முடிக்க வேண்டிய எட்டுத் திசைப் பூசையையும் முடித்துக் கொண்டு, பின்னர் இராவணன் மன்னிக்குமாறு வேண்ட அதற்கு இணங்கி, கட்டை அவிழ்த்து அவனுக்கு உயிர்கொடுத்தான். அன்றிலிருந்து இராவணன் வாலியின் வாலைக் கண்டாலோ வாலியைப் பற்றிப் பேசினாலோ மிகுந்த அச்சம் கொண்டவனாகிச் சரணடைந்து விடுவான் என்பதும் ஒரு புராணக் குறிப்பு. எனவே, இங்கே வாலியின் வால் செல்லும் இடங்களில் இராவணன் அதிகாரமோ வெற்றியோ செல்லாது என்பதைச் செங்கோலின் மேலும் வெண்கொற்றக் குடையின் மேலும் ஏற்றிக் கூறினார் என்க. வாலியின் வாலுக்கே அஞ்சும் இராவணன், அவன் தோள்வலிக்கு ஆற்ற மாட்டான் என்பதும், வாலியைக் கொல்வது இராவணனைக் கொல்லுவதற்குத் தோற்றுவாய் என்பதும் குறிப்பால் கூறப்பட்டது என உணர்க.

42. "மேருவே முதல் கிரிகள், வேரோடும்
பேருமே அவன் பேருமேல்; நெடும்
காரும், வானமும், கதிரும், நாகமும்,
தூருமே அவன் பெரிய தோள்களால்". (3931)

(பேருதல் - பெயர்தல் \ இடம்பெயர்ந்து நடத்தல்; கார் - மேகம்; கதிர் - சந்திர சூரியர்; நாகம் - விண்ணுலகம்; தூரும் - மறைந்து போகும்)

இவ்வாலி தான் இருக்கும் இடத்திலிருந்து அடியெடுத்து வைத்து நடக்கத் தொடங்கினால் அந்த அதிர்ச்சியில் மேரு முதலிய பெரிய மலைகளே வேரோடு பெயர்ந்து நிலைகுலைந்து விடும். அவனுடைய பெரிய வலிமை வாய்ந்த தோள்களின் உயர்ச்சியினால் மேலேயுள்ள இருண்ட மேகமும் பரந்த ஆகாயமும், சூரிய சந்திரர்களாகிய கதிர்களும் சுவர்க்கலோகமும் கூட மறைந்து போய்விடும்.

வாலி நடக்கும் வேகத்தின் அதிர்ச்சி தாங்காது மேரு முதலான உலகில் உள்ள எல்லா மலைகளும் நிலைபெயர்ந்து குலையும் என அவன் வேகத்தின் சிறப்பும் அவன் எழுந்து நின்றால் மேலேயுள்ள மேகம், ஆகாயம், சூரியன், சந்திரன், சுவர்க்கலோகம் ஆகிய அனைத்தும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போகும் என்று அவன் தோளின் உயர்ச்சியும் பருமையும் சிறப்பித்துக் கூறப்பட்டன என்பதாம். இதேபோல யுத்த காண்டத்தில் இரணியனின் வலிமையை எடுத்துக் கூறும் போதும், "பெயருமேல் நெடும்பூதங்கள் ஐந்தொடும்பெயரும்" என்றும் கம்பன் கூறியிருப்பது ஒப்பிட்டு நோக்கத்தக்கதாகும்.

43. "பார் இடந்த வெம்பன்றி, பண்டைநாள்
நீர் கடைந்த பேர் ஆமை, நேர் உளான்:
மார்பு இடந்த மா எனினும், மற்றவன்
தார் கிடந்த தோள், தகைய வல்லதோ?" (3932)

(இடந்தது - பெயர்த்தது \ பிளந்தது; வெம் - கொடிய; பன்றி - வராகம்; ஆமை - கூர்மம்; நேர் - நிகர்; மா - சிங்கம் \ நரசிங்கம்; தார் - மாலை; கிடந்த - அணியப் பெற்ற; தகைதல் - அடக்குதல்; பார் - பூமி)

"பண்டைக் காலத்தில், பூமியைக் கடலிலிருந்தும் பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்த கொடிய பன்றியாகிய, திருமாலின் வராக அவதாரத்திற்கும், முற்காலத்தில் பாற்கடலில் தேவாமிர்தம் கிடைப்பதற்காக அதைக் கடையும் பொழுது மந்தர மலையாகிய மத்து, அழுந்திப்போகாமல் தன் உடலால் தாங்கிக்காத்த ஆமையாகிய கூர்ம அவதாரத்திற்கும், பின்பு, இரணியனின் மார்பைப் பிளந்த நரசிம்ம அவதாரத்திற்கும் நிகரான வலிமை பெற்றவன் இவ்வாலி; இம்மூவர் கூட எதிர் நின்று அவனுடைய வெற்றி மாலைகள் அணியப்பெற்ற தோள்வலியை அடக்க முடியுமோ? முடியாது".

திருமாலின் அவதாரங்களான வராகம், கூர்மம், நரசிம்மம் ஆகிய மூன்று அவதாரங்களைப்பற்றி, அந்த அவதாரங்களையே எடுத்த திருமாலின் அம்சமான இராமபிரானிடமே அனுமன் கூறும் திறம் நோக்குக. இம்மூவரின் தோள் வலிக்கு நிகரானவன் என்பது மட்டுமல்ல அந்தத் தோள் வலியை யாராலும் அடக்கவும் முடியாது என்று வாலியின் தோளாற்றலைச் சிறப்பிக்கிறான் அனுமன். இதை மெய்ப்பிப்பது போலவே இராமபிரான் பின்னர், வாலியின் எதிர்நின்று போர் செய்யக் கருதாது மறைந்து நின்று போர் செய்து அவனைக் கொன்ற தன்மையை ஈண்டு நினைவுகூர்க.

"பார்இடந்த வெம்பன்றி" என்பது வராக அவதாரக் கதை. இரணியாக்கன் என்னும் அசுரன், பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு, கடலில் மறைந்து கொண்டான். திருமால் பன்றி அவதாரம் எடுத்து, கடலுள் புகுந்து, இரணியாக்கனைக் கொன்று, தன் மூக்கில் பூமியைத் தாங்கி, பூமியை முன்பு போல் இயங்கச் செய்தார் என்பது பாகவதபுராணம். "நீர் கடைந்த பேர்" என்பது கூர்ம அவதாரக்கதை. தேவர்களும் அசுரர்களும் தேவாமிர்தம் பெறவேண்டி

திருப்பாற்கடலைக் கடைய முயன்றபோது மந்தர மலையை மத்தாகக் கொண்டனர். நெடுங்காலம் இவ்வாறு கடைந்தும் தேவாமிர்தம் கிடைக்காததால், மத்து கடலில் அழுந்திவிடக் கூடாதே என்பதற்காகத் திருமால் ஆமை அவதாரம் எடுத்து, அம்மந்தர மலையாகிய மத்தைத் தன் உடம்பில் தாங்கி தேவாமிர்தம் பெற, தேவர்களுக்கு உதவினார் என்பதும் பாகவதபுராணமே. மார்பு இடந்த மா என்பது இரணியன் மார்பைத் தன் கை நகங்களால் கீறிப் பிளந்த திருமாலின் நரசிம்ம அவதாரக்கதை. எனவே, இம்மூன்று நிகழ்வுகளாலும் வாலி, பூமியைப் பெயர்க்கும் ஆற்றலும், மலையைத் தாங்கும் ஆற்றலும் கடலைக் கலக்கும் ஆற்றலும் கொண்டவன் என்று வாலியைச் சிறப்பித்தான் அனுமன் என்க.

44. "படர்ந்த நீள்நெடும் தலை பரப்பி, மீது
அடர்ந்து பாரம்வந்து உற; அனந்தனும்
கிடந்து தாங்கும் இக்கிரியை மேயினான்,
நடந்து தாங்கும் இப்புவனம் நாள் எலாம்." (3933)

(அனந்தன் - ஆதிசேஷன்; படர்ந்த - கிளைத்துள்ள; அடர்தல் - நெருங்குதல்; புவனம் - பூமி;)

ஆயிரம் தலைகளை உடைய ஆதிசேஷனும், தன்னுடைய ஆயிரந்தலைகளையும் விரித்துப் பரப்பி வைத்திருக்க, அதன் மீது நெருங்கி வரும் பாரத்தைச் சுமக்க முடியாமல் பூமியில் படுத்து, கிடந்து தாங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தக் கிட்கிந்த மலையில் வாழ்பவனான வாலியோ, அந்தப் பூமியின் பாரத்தை நாள்தோறும், எக்காலத்தும், நடந்து கொண்டே தாங்கிச் செல்லுகின்ற வலிமைபடைத்தவன்.

ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷன் பூமியின் பாரம் தாங்க மாட்டாமல், இறைத்துப் போய், நின்று கொண்டு தாங்கும் ஆற்றல் இல்லாது, தரையில் கிடந்து கொண்டு தாங்கிக் கொண்டிருக்கிறான், என்று இயல்பான நிலையைப் பழிபோலச் சொல்லும் கவிஞனின் திறம் நோக்குக. அதுபோல வாலி, நோவாது பூமியைத்தாங்கும் ஆற்றல் கொண்டவன் என்றும், ஒரே தலையுடன் ஓரிடத்திலேயே நின்று கொண்டோ, படுத்துக் கொண்டோ அல்லது நடந்து கொண்டோ எளிதாகத் தாங்கும் ஆற்றல் பெற்றவன் என்றும், ஆதிசேஷனை விட, வாலி மிக வலிமை பெற்றவன் என்று சிறப்பித்ததையும் நோக்குக.

45. "கடல் ஒலிப்பதும், கால் சலிப்பதும்,
மிடல் அருக்கர், தேர்மீது செல்வதும்,
தொடர, மற்றவன் சுளியும் என்று அலால்
அடலின் வெற்றியாய்! அயலின் ஆவவோ?" (3934)

(அடல் - வலிமை \ போர்; கால் - காற்று; சலித்தல் - இயங்குதல்; மிடல் - வலிமை; மற்றவன் - வாலி; சுளித்தல் - வெகுள்தல் \ கோபித்தல்; அயல் - வேறு; ஆவவோ - ஆகுவதோ \ நிகழ்வதோ; தொடர - இடைவிடாது \ தொடர்ந்து; அருக்கர் - சூரியர்)

அனுமன் தொடர்ந்து, "வெற்றியும் வலிமையும் உடையவனே! கடல் இடைவிடாது கரை கடவாமல் ஒலித்துக் கொண்டிருப்பதும், காற்று இடைவிடாமல் வீசிக் கொண்டிருப்பதும், வலிமையுடைய பன்னிரண்டு சூரியர்களும் தங்கள் தேர்மீது இடைவிடாது சஞ்சரித்துக் கொண்டிருப்பதும், எதனால் என்று எண்ணுகிறாய்? இவர்கள் தத்தம் வேலையை ஒழுங்காகத் தொடர்ந்து செய்யாது நிறுத்திவிட்டால் இந்த வாலி மிக்க சினம் கொள்வானே என்ற அச்சத்தினால் அன்றி, வேறு ஒரு காரணமும் இல்லை" என்றான்.

கடல், காற்று சூரியர்கள் முதலிய இயற்கைச் சக்திகள் இடைவிடாது தத்தம் காரியங்களை ஆற்றிக் கொண்டிருப்பதற்குக் காரணம், அவை வாலியிடம் அச்சம் கொண்டிருப்பதனாலேயே. அதைத் தவிர வேறு ஒரு காரணமும் இல்லை என்பது கருத்து. இங்கே அருக்கர் என்று சூரியனைப் பன்மையில் கூறியிருப்பதை நோக்குக. சூரியர் பன்னிரண்டு பேர் என்றும், அவர்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொருவராக வந்து தோன்றிப் பகல் செய்வர் என்பதும் புராணக் குறிப்பு. எனவே, சூரியர் எனப் பன்மையில் கூறினார் என்பதாம். எனவே, வாலி இறைவனுக்கு ஒப்பானவர் என்று குறிப்பால் உணர்த்தினான் அனுமன். "நெடுங்கடல் நிற்பதும், ஞாயிறு காய்ப்பதும், நித்தமும் கால் ஒடுங்கி நடப்பதும், தண்கார் பொழிவதும், ஊழிதனில் கடும்கனல் பற்றிச் சுடாதே இருப்பதும், தும்பை புனைந்து, அடும்கனல் ஆழி அரங்கேசர் தம் திரு ஆணையினே" என்பது திருவரங்கத்து மாலை. எனவே, வாலியை இறைவனுக்கு ஒப்பிட்டான் என்க. இறைவனுக்குக் கட்டுப்படும் இயற்கைச் சக்திகள், வாலிக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றன என்பதால், வாலி இறைவனைப் போல் ஆற்றல் பெற்றவன் என்பது கருத்து.

46. "வெள்ளம் ஏழு பத்து உள்ள; மேருவைத்
தள்ளல் ஆன தோள் அரியின் தானையான்;
உள்ளம் ஒன்றி எவ்வுயிரும் வாழுமால்
வள்ளலே! அவன் வலியின் வண்மையால்." (3935)

(அரி - குரங்கு \ வானரம்; தானை - சேனை \ படை; வண்மை - வளம்; வெள்ளம் - பேரெண் குறித்த சொல்)

"வள்ளல் தன்மை உடையவனே! இவ்வாலியிடம், மேருமலையை இடித்துத்தள்ளும் தோளாற்றல் உடைய குரங்குச் சேனைகள் எழுபது வெள்ளம் இருக்கின்றன. இவனுடைய வலிமையின் வளத்தால், அவன் நாட்டில் வாழும் உயிரினங்கள் எல்லாம் தங்களுக்குள் மனம் ஒன்றியும் வாலியோடு கருத்துவேறுபாடின்றியும் அமைதியாக வாழ்ந்து வருகின்றன" என்றான் அனுமன்.

வாலியினுடைய குரங்குப் படையின் அளவும், ஆற்றலும், அவன் ஆட்சியின் சிறப்பும் இப்பாடலில் பேசப்படுகின்றன. வெள்ளம் என்பது ஒரு பேரெண்ணைக் குறிக்கும். இது பல பகுதிகளைக் கொண்டது. இது தெரிந்து கொள்ள வேண்டியது என்பதால் இங்கே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரு யானை,

ஒரு தேர், மூன்று குதிரைகள், ஐந்து காலாள் கொண்டது ஒரு பத்தி எனப்படும். இதற்குக் குறைவாக இருப்பதைச் சேனை என்று கொள்வதில்லை. இவ்வாறு மூன்று பத்தி கொண்டது ஒரு சேனாமுகம் எனப்படும். மூன்று சேனாமுகம் கொண்டது ஒரு குடமம்; மூன்று குடமம் கொண்டது ஒரு கணம்; மூன்று கணம் கொண்டது ஒரு வாகினி; மூன்று வாகினி கொண்டது ஒரு பிரதனை; மூன்று பிரதனை கொண்டது ஒரு சமூ; மூன்று சமூ கொண்டது ஒரு அனீகினி; பத்து அனீகினி கொண்டது ஒரு அக்குரோணி எனப்படும்; எட்டு அக்குரோணி கொண்டது ஒரு ஏகம்; எட்டு ஏகம் கொண்டது ஒரு கோடி; எட்டு கோடி கொண்டது ஒரு சங்கம்; எட்டுச் சங்கம் கொண்டது ஒரு விந்தம்; எட்டு விந்தம் கொண்டது ஒரு குமுதம்; எட்டுக் குமுதம் கொண்டது ஒரு பதுமம்; எட்டுப் பதுமம் கொண்டது ஒரு நாடு எனப்படும்; எட்டு நாடு கொண்டது ஒரு சமுத்திரம்; எட்டு சமுத்திரம் கொண்டது ஒரு வெள்ளம் எனப்படும். இதைப்போல எழுபது வெள்ளம் சேனை கொண்டவன் வாலி என்பதாம். இந்தக் கணக்குப்படி எழுபது வெள்ளம் என்பது, 2,05,47,39,19,79,52,000 என்ற கணக்கைக் கொண்டது. இது அளவிடற் கரியது. எனவே அவன் சேனைப் பெருக்கம் மிக்குடையவன் என்பதே போதும் என்பதாம். அதனால்தான் இராமன் சுக்கிரீவன் துணைகொண்டு இராவணனை வெல்ல முடிந்தது என்பது குறிப்பு.

47. மழை இடிப்புறா; வய, வெஞ்சீய மா
முழை இடிப்புறா; முரண் வெங்காலும், மென்
தழை துடிப்புறச் சார்வுறாது அவன்
விழைவிடத்தின் மேல், விளிவை அஞ்சலால். (3936)

(விளிவு - அழிவு; விழைவிடம் - விரும்பியிருக்குமிடம்; மழை - மேகம்; வய - வலிய \ வெற்றி மிக்க; வெம் - கொடிய; சீயம் - சிங்கம்; மா - விலங்கு; முழை - குகை; முரண் - வலிமை; கால் - காற்று; துடிப்பு - வேகம்; இடிப்பு - முழக்கம்; மேல் - மேலே \ எதிராக)

"வாலியின் சினத்தினால் தமக்கு அழிவு நேருமே என்று அஞ்சுவதால், அவன் விரும்பியிருக்கும் இடத்திற்கு எதிராக, மேகம் இடிமுழக்கம் செய்யாது; வலிய, வெற்றிபொருந்திய, கொடிய சிங்கம் போன்ற விலங்குகளும் தம் குகையிலிருந்து கர்ச்சிக்கமாட்டாது; வலிமை பொருந்திய கொடிய காற்றும், மெல்லிய தழைகள் நடுங்குமாறு மரங்களின் பக்கத்தில் சென்று வீசாது."

வாலியின் ஆற்றல் புலப்படுத்தப்பட்டது. அவன் இருக்குமிடத்தில் சிங்கம், மேகம் முதலியன தம் குரலை உயாத்திக் கர்ச்சிக்காது. அவனுக்கு அஞ்சி அடங்கி ஒடுங்கும். காற்றுக் கூட மென்மையாகத்தான் வீசும் என்பதாம். இராவணன் இருக்குமிடத்தில் கூட "கறங்குகால் புகா; கதிரவன் ஒளிபுகா; மறலி மறம் புகாது" என்று கூறப்போவதையும் இங்கு நினைக்கலாம். தொண்டைமான் இளந்திரையன் என்ற மன்னன் ஆட்சியிலும் இதுபோல, "உருமு முரறாது; அரவும் தப்பா; காட்டுமாவும் உறுகண் செய்யா" என்பது பெரும்பாணாற்றுப்படை. சீயம் என்ற சொல் சிம்ஹம் என்ற வடசொல்லின் தமிழாக்கம்.

48. மெய்க்கொள் வாலினால், மிடல் இராவணன்
தொக்க தோள் உறத் தொடர்ப்படுத்த நாள்
புக்கிலாதவும் பொழிஅரத்த நீர்
உக்கிலாத வேறு உலகம் யாவதோ? (3937)

(மெய் - உடம்பு; மிடல் - வலிமை; தொக்க - சேர்ந்த; படுத்தல் - கட்டுதல் \ பிணித்தல்; பொழி - சொரிகின்ற; அரத்த நீர் - இரத்தம்; உக்க - சிந்த; தொடர்ப்படுத்தல் - விலங்கிடுதல் \ அகப்படுத்தல்)

தனது உடம்பின் ஒரு உறுப்பாகிய வாலினால், வலிமைமிக்க இராவணனின் இருபது தோள்களையும் ஒரு சேரக் கட்டி அவனை உலகெங்கும் இழுத்துக் கொண்டு சென்ற போது, இவ்வுலகத்தில் இராவணன் செல்லாத இடமோ, அவன் இரத்தம் சிந்தாத இடமோ இல்லவே இல்லை.

வாலி சிவபூசை செய்து கொண்டிருக்கும் போது அவனை வெல்ல விரும்பிய இராவணன், வாலியறியாது பின்புறமாக வந்து அவனைத் தொட, அதை உணர்ந்த வாலி சிவபூஜைக்கு ஊறு இன்றி, தன் வாலினாலேயே இராவணனைக் கட்டுவித்து, பூசை முடியும்வரை அப்படியே இருக்க வைத்து, பின்பு பூசை முடிந்ததும், எட்டுத் திக்குகளிலுமுள்ள எல்லா உலகங்களுக்கும் இரத்தம் சிந்துமாறு இழுத்துக் கொண்டுபோய், சிவபூசை முடிந்தபின்னர், இராவணன் தன் செயலுக்கு வருந்தி மன்னிப்புக் கோர, வாலி அவனை விடுவித்தான் என்பது உத்தர காண்டத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தி. இராவணன் வாலியின் வாலில் தொங்கிய படியே இவ்வுலகைச் சுற்றி வந்தான் என்பதாம். எனினும் இச்செய்தி வான்மீகத்திலோ அத்யாத்ம இராமயணத்திலோ பேசப்படவில்லை. வாலியின் வாலுக்கு இத்தகைய ஆற்றல் இருக்குமானால் வாலி என்பவனுக்கு எவ்வளவு வலிமை இருக்கும் என்பது சொல்லாமலேயே விளங்கும் என்பது அனுமன் கருத்து.

49. "இந்திரன் தனிப்புதல்வன்; இன்அளிச்
சந்திரன் தழைத்தனைய தன்மையான்;
அந்தகன் தனக்கு அரிய ஆணையான்;
முந்தி வந்தனன் இவனின்; மொய்ம்பினோய்!" (3938)

(மொய்ம்பு - வலிமை; தனி - ஒப்பற்ற; அளி - குளிர்ச்சி \ கருணை; தழைத்தல் - வளர்ச்சி பெறுதல்; அந்தகன் - இயமன்; முந்தி - முன்னவனாக; ஆணை - ஆட்சி வலிமை)

"வலிமையுடைய இராமபிரானே! இவ்வாலி இந்திரனின் ஒப்பற்ற புதல்வன்; இனிமையும் குளிர்ச்சியும் பொருந்திய சந்திரன் தனது எல்லாக் கலைகளுடனும் வளர்ச்சியுற்று விளங்குதல் போல வெண்மை நிறத்தினன்; இயமன் கூட இவனது கட்டளைக்கு அஞ்சி ஏவல் செய்யும் ஆணையுடையவன்; இச்சுக்கிரீவனுக்குத் தமையனாக ஒரு தாய் வயிற்றில் பிறந்தவன் என்று அனுமன் கூறினான்.

வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் தாய் இருக்ஷரஜஸ் என்ற ஒரு வானரப் பெண். அவளிடம் இந்திரனுக்குப் பிறந்தவன் வாலி; சூரியனுக்குப் பிறந்தவன் சுக்கிரீவன்

என்பது வரலாறு. சுக்கிரீவன் வரலாற்றை அனுமன் கூற்றாகவும், இராமபிரான் வரலாற்றை இலக்குவன் கூற்றாகவும் பாடிய கவிஞர் திறம் நோக்குக. தனது வரலாற்றில் உள்ள பெருமைகளையோ இழிவுகளையோ தானே கூறிக்கொள்ளுதல் நாகரீகம் அன்று என்பதால் இவ்வாறு கூறவைத்தான் என்க. எனினும் வான்மீகத்தில் சுக்கிரீவனே இராமனுக்குத் தன் வரலாற்றைக் கூறியதாகவே காணப்படுகிறது.

50. வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் உண்டான பிணக்கின் காரணம் (18 பாடல்கள்)

"அன்னவன் எமக்கு அரசன் ஆகவே
இன்னவன் இளம்பதம் இயற்றும் நாள்
முன்னவன் குலப்பகைஞன் முட்டினான்
மின்எயிற்று வாள் அவுணன், வெம்மையான்." (3939)

(பதம் - பதவி; இயற்றுதல் - ஏற்றுநடத்துதல் \ ஆட்சிபுரிதல்; எயிறு - பற்கள்; அவுணன் - அசுரன்; முட்டுதல் - எதிர்த்தல் \ தாக்குதல்)

"அப்படிப்பட்டவனான வாலி, எங்களுக்கு அரசனாகவும்; இச்சுக்கிரீவன் இளவரசனாகவும் பதவியேற்று ஆட்சி புரிந்து வரும் பொழுது, வாலியிடம் ஏற்கனவே குலப்பகை கொண்டிருந்த, மின்னல் போல் ஒளிவீசும் பற்களையும் கொடிய வாளையும் ஏந்தியவனான மாயாவி என்னும் ஓர் கொடிய அசுரன், வாலியை எதிர்த்துத் தாக்கினான்".

இளம்பதம் என்பது இளவரச பதவி என்பதைக் குறிக்கும். குலப்பகைஞன் என்பது குரங்குக் குலத்திற்கே பகைவன் என்றும் பொருள் விரிவு கொள்ளும்; மாயாவி, துந்துபி என்ற அரக்கனின் மூத்த மகன். அவனுக்கும் வாலிக்கும் ஒரு பெண் காரணமாகப் போர் மூண்டது என்று வான்மீகம் கூறும். மாயாவி மயன் மகன் என்று அத்யாத்மராமாயணமும், துளசிராமாயணமும் கூறுகின்றன. மாயாவி மயன் மகன், துந்துபியின் சகோதரன், மண்டோதரியின் உடன் பிறந்தவன் என்று அபிதான சிந்தாமணி கூறுவதும் காண்க.

51. முட்டி நின்றுஅவன், முரண் உரத்தின்நேர்
ஒட்ட, அஞ்சி, நெஞ்சு உலைய ஓடினான்;
"வட்டமண் தலத்து அரிது வாழ்வு" எனா,
எட்ட அரும் பெரும் பிலனுள் எய்தினான். (3940)

(முட்டி - எதிர்த்து; முரண் - வலிமை; உலைய - நடுங்க; மண்தலம் - பூமி; எட்ட - நெருங்க; பிலன் - பிலத்துவாரம் \ குகை; ஒட்டுதல் - நெருங்கித்தாக்குதல்)

"அவ்வாறு எதிர்த்துத் தாக்கிய மாயாவி, வாலியின் வலிமை பெருகுவதையும், தன் வலிமை குறைவதையும் உணர்ந்து, நெருங்கித் தாக்க அச்சப்பட்டு, தன் உள்ளம் நடுக்கமுறப் புறமுதுகு காட்டி ஓடிப்போய், "இந்த வட்டமான பூமியில் நாம் உயிர் வாழ்தல் இனி அரிதாகும்", என்று எண்ணி,

யாராலும் நெருங்க முடியாத ஒரு அரிய பெரிய குகைக்குள் போய் ஒளிந்து கொண்டான்".

வாலியை எதிர்ப்பவரின் பாதி வலிமையை வாலி பெற்றுவிடுவான் என்பது அவன் வாங்கி வந்த வரம். "கிட்டுவார் பொரக் கிடைக்கின், அன்னவர் பட்ட நல்வலம் பாகம் எய்துவான்". எனவே, வாலியின் வலிமை பெருகிற்று, மாயாவியின் வலிமை குறைந்தது. எனவே, தான் இனி எப்படியும் வாலியால் கொல்லப்படுவோம் என்று கருதி, யாரும் அடைய முடியாத ஒரு பெரிய குகைக்குள் போய் ஒளிந்து கொண்டான் என்பதாம். பிலம் என்பது பூமிக்குள் செல்லும் சுரங்க வழி. அது இருள் நிறைந்து இருக்கும், நெடியதாகவும் இருக்கும்.

52. "எய்து காலை அப்பிலனுள் எய்தி, யான்
நொய்தின் அங்கு அவன் கொணர்வன், நோன்மையாய்!
செய்தி காவல் நீ சிறிது போழ்து" எனா,
வெய்தின் எய்தினான், வெகுளி மேயினான். (3941)

(வெகுளி - கோபம்; நோன்மை - வலிமை; வெய்தின் - விரைவாக)

அவ்வாறு அம் மாயாவி அப்பிலத்திற்குள் நுழைந்ததைக் கண்ட வாலி, மிக்க கோபம் கொண்டு, சுக்கிரீவனை நோக்கி, "வலிமையுடையவனே! நானும் அந்தக் குகைக்குள் நுழைந்து, விரைவாக அம் மாயாவியைக் கொன்று, இங்கு கொண்டு வருகிறேன். அதுவரையிலும் கொஞ்சநேரம், அவன் இந்த வழியில் புகுந்து வெளியேறிவிடாமல் காவல் புரிந்து கொண்டிருப்பாயாக!" என்று கூறிய பின் விரைவாகச் செல்லலானான்.

53. "ஏகி வாலியும், இருது ஓர் ஏழொடு ஏழ்
வேக வெம்பிலம் தடவி, வெம்மையான்
மோக வென்றி மேல் முயல்வின் வைகிட,
சோகம் எய்தினன், துணை துளங்கினான்." (3942)

(தடவி - தேடி; மோகம் - விருப்பம்; முயல்வு - போர் முயற்சி; இருது - பருவம்; துளங்குதல் - நடுங்குதல் \ கலக்கமுறுதல்; வைகிட - கழிக்க)

அவ்வாறு வாலியும் விரைந்து, அந்தக் கொடிய குகைக்குள் சென்று இருபத்து எட்டு மாதங்களாக மாயாவியைத் தேடித் தேடி, வெற்றிமேல் கொண்ட மோகத்தால், விடாது முயற்சி செய்து தேடினான். இருபத்தெட்டு மாதங்களாகியும் அண்ணன் வாலி வெளியே வராததால், துணைவனான சுக்கிரீவன் வருத்தமுற்று அண்ணனுக்கு என்ன நேர்ந்ததோ என்று கலங்கினான்.

இருது என்பது பருவத்தைக் குறிக்கும். பருவம் என்பது இரண்டு மாதங்களைக் கொண்டது. எனவே, ஒரு வருடத்திற்கு ஆறு பருவங்கள் அவை: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. வருஷருது, சரத்ருது, ஹேமந்தருது, சிசிரருது, வசந்தருது, சிரிஷ்மருது என்பர் வடநூலார்.

கார்காலம் - ஆவணி, புரட்டாசி; கூதிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை; முன்பனிக்காலம் - மார்கழி, தை; பின்பனிக்காலம் - மாசி, பங்குனி; இளவேனிற்காலம் - சித்திரை, வைகாசி; முதுவேனிற்காலம் - ஆனி, ஆடி என்பதாம். "ஏழொடுஏழ் இருது" என்பது இருபத்தெட்டு மாதங்களைக் குறிக்கும். இருபத்தெட்டு மாதங்களாகியும் வாலியைப் பற்றி ஒரு செய்தியும் தெரியாததால் சுக்கிரீவன் வாலிக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்திருக்குமோ என்று அஞ்சிக் கலங்கினான் என்பதாம். வான்மீகம் வாலி அப்பிலத்தினுட் புகுந்து போர் செய்தது ஓராண்டு காலம் என்று கூறும்.

54. "அழுது அழுங்குறும் இவனை, அன்பினில்
தொழுது இரந்து, "நின்தொழில் இது; ஆதலால்,
எழுது வென்றியாய்! அரசு செய்க", என,
"பழுது இது" என்றனன்; பரியும் நெஞ்சினான்." (3943)

(அழுங்குறுதல் - வருந்துதல்; இரந்து - வேண்டி; பரிதல் - வருந்துதல்; பழுது - குற்றம்)

இவ்வாறு வாலியைக் காணாததால் அழுது வருந்தி நின்ற சுக்கிரீவனை, நாங்கள் எல்லோரும் அன்போடு அணுகி, வணங்கி "இளவரசனாகிய நீர் ஆட்சிசெய்தல் உன்னுடைய தொழிலாகும். எனவே, எழுதத்தக்க வெற்றியும் ஆற்றலுமுடையவனே! நீயே அரசினை ஏற்று நடத்துக" என்று வேண்டிக் கொண்டோம். எனினும் தன் அண்ணன் வாலியின் மேல் கொண்ட அன்பினால், வருந்துகின்ற உள்ளத்தை உடைய சுக்கிரீவன், தான் இப்போது அரசாள்வது குற்றமுடையதாகும்" என்று மறுத்துக் கூறினான்.

"எழுது வென்றியாய்!" என்பதனை இராமனை விளித்துக் கூறியதாகக் கொள்ளவும் இடமுண்டு எனின், வெற்றித்தாள்களில் எழுதத்தக்க மெய்க்கீர்த்தி உடையவனே என்பது பொருளாகும். "பழுது இது" என்று சுக்கிரீவன் ஒரே சொல்லில் விடைகூறியமை நோக்குக. இது சுருங்கக்கூறுதல் என்ற இலக்கணத்தின் பாற்படும். இதுபோல, கவிஞன் பல இடங்களிலும் கையாண்டிருப்பதை எண்ணுக. சிலப்பதிகாரத்திலும் இத்தகைய ஒருவரி மாற்றங்கள் நிறையக் காணப்படுகின்றன என்பதும் கருதத்தக்கதாகும். இளவரசனே அரசனுக்குப் பின் அரசுக் கட்டிலில் அமரவேண்டும் என்பது முறை. அதையே இங்கு "தொழில்" என்று குறிப்பிட்டார் என்க. சுக்கிரீவன் மறுத்ததால் அவனுக்கு அரசுபுரியும் விருப்பம் இல்லாமை உணர்த்தப்பட்டது என்க.

55. "என்று, தானும் அவ்வழி இரும்பிலம்
சென்று, முன்னவன் தேடுவேன்; அவற்
கொன்றுளான் தனைக் கொல்வேன்; அன்று எனின்,
பொன்றுவேன்" எனா, புகுதல் மேயினான். (3944)

(பொன்றுதல் - இறத்தல்; இரும் - பெரிய)

என்றுகூறி, இச்சுக்கிரீவனும் அவ்வாலி சென்ற வழியே சென்று, "அந்தப் பெரிய குகைக்குள் நுழைந்து என் அண்ணனைத் தேட முற்படுவேன்; அவன்

கிடைக்கவில்லையென்றால், அவனைக் கொன்ற அந்த மாயாவியைக் கொல்வேன். அவ்வாறு அவனைக் கொல்ல முடியாவிட்டால், போர் செய்து நானும் மடிந்து போவேன் என்று கூறிக்கொண்டு அக்குகைக்குள் புக முற்பட்டான்.

சுக்கிரீவன் வாலியிடத்துக் கொண்ட அன்பின் மிகுதி சிறப்பிக்கப்பட்டது.

56. "தடுத்து வல்லவர் தணிவு செய்து, நோய்
கெடுத்து, மேலையோர் கிளத்து நீதியால்,
அடுத்த காவலும், அரிகள் ஆணையால்
கொடுத்தது உண்டு; இவன் கொண்டதில்லையால்." (3945)

(கிளத்து - கூறியுள்ள; கெடுத்து - போக்கி; காவல் - அரசுரிமை; ஆணை - விதி \ மரபு; நோய் - மனத்துன்பம்; அடுத்த - வந்துநேர்ந்துள்ள)

"அறிவின் வல்லவர்களான அமைச்சர்கள், இவன் குகைக்குள் புகுவதைத் தடுத்து, அவனுடைய கோபத்தைத் தணிவித்துச் சமாதானம் செய்து, தன் அண்ணனுக்கு உற்ற துயரை எண்ணிக் கலங்குகின்ற துயரத்தினைப் போக்கி, முன்னோர்கள் கூறியுள்ள நீதிமுறைப்படி, தனக்கு வந்து சேர்ந்திருக்கின்ற அரசுரிமையை குரங்கினத்துப் பெரியோர்கள், அமைச்சர் போன்றோர் கட்டளையிட்டு இவனுக்கு வழங்கினார்களே. அல்லாது, இவன் தானே அதனை விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை".

"நோய்" என்றது வாலி கொல்லப்பட்டிருப்பானோ என்ற ஐயத்தால் உண்டாகிய மனத்துயரத்தைக் குறித்தது. எனவே, அமைச்சர்கள் ஆணையால் இவன் மீது இளவரசப்பதவி திணிக்கப்பட்டதேயன்றி, இவனாக விரும்பி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றது சுக்கிரீவன் பால் தவறில்லை என்பதைக் குறிக்கத்தான் என்க. இங்கே ஒன்றை நோக்கவேண்டும். சுக்கிரீவன் அரசு புரிந்தானே தவிர அவன் பட்டாபிஷேகம் செய்து கொண்டான் என்று வான்மீகத்தைத் தவிர வேறு எந்த இராமாயணத்திலும் இந்த இடத்தில் கூறப்படவில்லை. பின்னர் வாலி இறந்த பின், இராமன் கட்டளையால், இலக்குவன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டுகிறான் என்றே காணப்படுகிறது.

57. "அன்னநாளில், மாயாவி, அப்பிலத்து
இன்ன வாயில் ஊடு எய்தும் என்ன யாம்
பொன்னின் மால் வரைப் பொருப்பு ஒழித்து, வேறு
உன்னு குன்றெலாம் உடன் அடுக்கினோம்." (3946)

(ஊடு - வழியாக; பொருப்பு - மலை; உன்னு - எண்ணப்படுகின்ற; ஒழித்து - தவிர்த்து)

"அவ்வாறு இவன் அரசேற்றுக் கொண்ட பொழுது, வாலியைக் கொன்ற மாயாவி, அந்தப் பிலத்திலிருந்து தப்பித்து, இந்த வாயில் வழியாகச் சுக்கிரீவனையும் கொல்லும் எண்ணத்தோடு வரலாம் என்று அஞ்சி, அவன் வாராவண்ணம் நாங்கள், பொன்மயமான பெரிய மலையாகிய மேருமலையை

மட்டும் தவிர்த்து விட்டு, மற்ற மலை என்று சொல்லப்படுகின்ற எல்லா மலைகளையும் ஒருசேரப் பெயர்த்துக் கொண்டு வந்து ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி, அப்பிலத்தின் வாயிலை மூடிவிட்டோம்."

அவர்கள் அந்தக் குகையை ஏன் அடைத்தார்கள் என்பதற்கான காரணம் இங்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

58. "சேமம் அவ்வழிச் செய்து, செங்கதிர்க்
கோமகன்தனைக் கொண்டு வந்து, யாம்
மேவு குன்றின்மேல் வைகும் வேலைவாய்,
ஆவி உண்டனன் அவனை, அன்னவன்." (3947)

(சேமம் - பாதுகாப்பு; வைகுதல் - தங்கியிருத்தல்; வேலை வாய் - சமயத்தில்; ஆவி - உயிர்; அன்னவன் - வாலி; வேலை - வேளை; அவன் - மாயாவி)

"அவ்வாறு அக்குகையின் வாயிலை மூடிப்பாதுகாப்புச் செய்து விட்டு, சிவந்த கிரணங்களையுடைய அரசனான சூரியனின் மகனான சுக்கிரீவனை அழைத்துக் கொண்டு வந்து, நாங்கள், முன்பு தங்கியிருந்த கிட்கிந்தை மலையின்மேலேயே தங்கியிருக்கும் சமயத்தில், வாலி, அந்த மாயாவியின் உயிரைப் போக்கியிருந்தான்".

இங்கே "கொண்டு வந்து" என்ற சொல்லாட்சியைக் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டும். உள்ளே சென்ற வாலி, தன்னைக் காவலுக்கு நிறுத்திப் போயிருக்கிறான். எனவே, அவன் எந்தநேரமும் திரும்பிவரலாம் என்ற நம்பிக்கையில் இருபத்தெட்டு மாதங்கள் நின்றிருந்த சுக்கிரீவனை, இந்த வானரப் பெரியோர்களும், அமைச்சர்களும்தான், வற்புறுத்தி இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகப் புரிவதை உணருங்கள். சுக்கிரீவன் அவனாகவே குகையைவிட்டு வரவில்லை. அவன் அழைத்து வரப்பட்டிருக்கிறான் என்பதை உணர்க. சேமம் என்பது க்ஷேமம் என்ற வடசொல்லின் தமிழாக்கம்.

59. "ஒளித்தவன் உயிர்க்கள்ளை உண்டு உளம்
களித்தவாலியும் கடிதின் எய்தினான்;
விளித்து நின்று, வேறு உரை பெறான்; இருந்து
அளித்தவாறு நன்று, இளவலார்!" எனா. (3948)

(ஒளித்தவன் - மாயாவி; கடிதின் - விரைவாக; விளித்து - கூவியழைத்து; உரை - எதிர் மொழி; அளித்த - காத்துநின்ற; இளவலார் - சுக்கிரீவன்) (குளகப்பாடல்)

இவ்வாறு தன்னைக் குகைக்குள் ஒளித்துக் கொண்டவனான மாயாவியின் உயிர் என்னும் கள்ளைப் பருகி, அதனால் உள்ளம் மயங்கிச் செருக்குற்ற வாலியும், விரைவில் குகைவாயிலை அடைந்தான்; அடைந்து தன் தம்பியைக் கூவி அழைத்து நீண்டநேரம் நின்றிருந்து, அதற்குரிய எதிர்மொழி ஏதும் தன் தம்பியிடமிருந்து வாராததால், தம்பி அங்கு இல்லைபோலும் என்று மனத்துட்

கருதி, நம் தம்பி காவல்காத்து நின்ற விதம் மிக நன்றாக இருக்கிறது. என்று இகழ்ச்சியாய்க் கூறி, (பாடல் தொடர்கிறது)

உயிரைக் கள்ளாக உருவகம் செய்ததனால், அக்கள் குடிப்போர்க்கு உண்டாகும் மனத்தடுமாற்றமும், மயக்கமும் வாலிக்கும் ஏற்பட்டது என்பதைக் குறிக்கவே "உயிர்க்கள்" என்றார் என்க. இக்கள்ளை உண்டதால் வாலியின் மனமும் போதை உற்றது. எனவே, அவன் தன் தம்பியின் செயலிற்குரிய உண்மைக் காரணத்தை அறியமுடியாது, மயக்கத்தால் தவறாகக் கருத நேர்ந்தது என்பதாம்.

60. "வால் விசைத்து, வான்வளி நிமிர்ந்து எனக்
கால் விசைத்து, அவன் கடிதின் எற்றலும்,
நீல் நிறத்து விண் நெடு முகட்டவும்,
வேலை புக்கவும், பெரிய வெற்பெலாம்." (3949)

(விசைத்தல் - வேகப்படுத்துதல்; வளி - காற்று; நிமிர்ந்து - உயர்ந்து; விசைத்தல் - வீசுதலுமாம்; கடிதின் - கடுமையாக; எற்றல் - உதைத்தல்; முகடு - உச்சி; வெற்பு - மலைகள்)

"வாலி தன்னுடைய வாலையும், விண்ணை நோக்கிக் காற்று ஓங்கி வீசியதுபோலத் தனது கால்களையும் வேகத்துடன் வீசிக் கடுமையாக உதைத்தவுடன், பிலத்தை அடைத்திருந்த பெரிய மலைகள் எல்லாம் நீல நிறத்து விண்ணிடத்தின் உச்சியிலும், நீல நிறத்துக் கடலிடத்து அடியிலும் சென்று மறைந்து போயின".

பொதுவாக வாலுள்ள விலங்குகள், குறிப்பாகக் குரங்குகள், வேகத்துடன் சினந்து ஒரு பொருளைத் தாக்கும் பொழுதோ, ஒன்றின் மேல் பாயும் பொழுதோ, தங்கள் வாலை வேகமாக விறைப்புடன் நிமிர்த்திக்கொள்ளும் இயல்புடையன. அதை இங்கே நுணுக்கமாகக் கவிஞன் கூறிய திறம் நோக்குக. மேல் எழுந்து சென்ற மலைகள் விண்ணின் உச்சிக்கும், கீழ் சென்ற மலைகள் கடலின் அடித்தளத்திற்கும் போய்ச் சேர்ந்தன என்றது ஒரு நயம். வாலி தன் காலை வீசியதற்கு, பெருங்காற்று வானில் ஓங்கி வீசியது ஒப்பு.

61. "ஏறினான் அவன்; எவரும் அஞ்சுறச்
சீறினான்; நெடுஞ் சிகரம் எய்தினான்;
வேறுஇல் ஆதவன் புதல்வன் மெய்ம்மையாம்
ஆறினானும் வந்து அடி வணங்கினான்." (3950)

(வேறு - மாறுபாடு; மெய்ம்மை - உண்மை \ சத்தியம்)

"குகைக்குள்ளிருந்து வெளிப்பட்ட வாலியும், கண்டவர் எல்லோரும் அஞ்சும்படியாக, மிக்கச்சினம் கொண்டு, கிட்கிந்தை மலையின் உச்சியை அடைந்தான். அன்பில் வேறுபாடில்லாத சூரியன் புதல்வனும், உண்மையான நேரிய வழியில் செல்பவனுமான சுக்கிரீவன் ஓடிவந்து, வாலியின் திருவடிகளில் விழுந்து வணங்கினான்."

பிலம் என்பது நிலத்திற்கு அடியில் இருப்பதாலும், அவன் இப்பொழுது குகையின் வாயிலில் வந்து நிற்பதாலும் "ஏறினான்" என்றார் என்க "வேறிலாத அன்பு" என்பது, தான்வேறு, தன் தமையன் வேறு என்று மனமாறுபாடு கொள்ளாத, ஒருமித்த, ஒன்றிய, தூய, உண்மையான அன்பைக் குறிக்கும்; "மெய்ம்மையால் ஆறினான்" என்பது நேரிய நெறியில் செல்பவன் என்றும்; மனத்தில் களங்கமில்லாதவன் என்றும் பொருள்படும். எனவேதான், அவனால் அண்ணனைக் கண்டதும் அடிபணியத் தோன்றியது என்பதாம்.

62. "வணங்கி, அண்ணல்! நின் வரவு இலாமையால்,
உணங்கி, உன்வழிப்படர உன்னுவேற்கு,
இணங்கர் இன்மையால், இறைவ! நும்முடைக்
கணங்கள், "காவல் உன் கடன்மை" என்றனர்". (3951)

(இறைவ - அரசே; உணங்கி - வாடி; வழிப்படர்தல் - தொடர்ந்து வருதல்; உன்னுதல் - எண்ணுதல்; கணம் - கூட்டம் \ அமைச்சர்கள்; இணங்கர் இன்மை - உடன்படாமை; காவல் - அரசுபுரிதல்)

"அங்கு வந்து சேர்ந்த வாலியைச் சுக்கிரீவன் வணங்கி, அண்ணனே! அரசனே! இருபத்தெட்டு மாதங்களாகிய இந்நீண்ட நாட்களாக நீங்கள் வாராது இருந்தமையால், நான் மிகச் சோர்ந்து போனேன்; நீங்கள் சென்ற பிலத்துக்குள் உங்களைத் தொடர்ந்து வர முற்பட்டேன்; ஆனால் உங்களது அமைச்சர் கூட்டத்தார் உடன்படாமையோடு கூட, "எங்களைக் காக்க வேண்டுவது உன்னுடைய கடமை" என்று வேறு கூறி, என்னை இங்கேயே இருக்க வைத்துவிட்டார்கள்" என்றான்.

"அண்ணா" என்றது உறவுபற்றி; "இறைவ" என்றது அவன்தான் இன்னும் இந்நாட்டிற்கு அரசன் என்பதைக் குறிக்க வேண்டி என்க; "உன்வழிப்பட" என்ற சொற்றொடருக்கு உன்பின்னால் உன்னைத் தொடர்ந்து குகைக்குள் வர என்ற ஒரு பொருளும், ஒருவேளை நீ இறந்திருந்தால், உன்னைத் தொடர்ந்து நானும் குகைக்குள் வந்து உன்னைக் கொன்ற மாயாவியைக் கொன்று, அல்லது அவனால் கொல்லப்பட்டு நீ சென்ற சுவர்க்கத்திற்கே உன்னைத் தொடர்ந்து வர என்ற வேறு ஒரு பொருளும் பொருந்துதல் காண்க. "நும்முடைக் கணங்கள்" என்பது, இவ்வரசாட்சியை நானே விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை. உன்னுடைய அமைச்சர்கள்தான் வற்புறுத்தினார்கள். உன்னுடைய அமைச்சர்கள் கூறியதை, நீ கூறியதாகவே மதித்தேன் என்று கூறும் பாங்கும் நோக்குக. "காவல்" என்பது அரசு புரிவதைக் குறிக்கும். அரசனுக்குக் காவலன் என்ற ஒரு பெயரும் இருப்பதை நினைவிற் கொள்க. கடன்மை என்பது தவறாது செய்யத்தக்கது என்று பொருள்தரும்.

63. "ஆணை அஞ்சி, இவ்வரசை எய்தி வாழ்
நாண் இலாதஎன் நவையை, நல்குவாய்;
பூண்நிலாவு தோள் இறை! பொறாய்!" எனக்
கோணினான், நெடுங் கொடுமை கூறினான். (3952)

(பூண் - அணிகலன்கள்; இறை - அரசன்; ஆணை - கட்டளை; நவை - குற்றம்; பொறாய் - பொறுப்பாயாக; கோனுதல் - மனம் மாறுபடுதல்; கொடுமை - கடுஞ்சொற்கள்; உலாவுதல் - அசைந்து விளங்குதல்)

"அணிகலன்கள் அசைந்தாடுகின்ற தோள்களை உடைய அரசனே! இந்த வானர அமைச்சர்களின் கட்டளைக்குப் பயந்து, இந்த அரசாட்சியை வெட்கமில்லாது ஏற்றுக்கொண்ட, என் குற்றத்தைப் பொறுத்தருள்வாயாக! எனக்கு மன்னிப்புத் தருவாயாக" என்று சுக்கிரீவன் கெஞ்சிக் கேட்டும் கூட, மனம் மாறுபட்டவனான வாலி, பெரிய கடுமையான சொற்களால் அவன் மீது குற்றம் சாற்றி நிந்தித்தான்".

"நாணம்" என்பது பழி பாவங்களில் மனம் பின் வாங்குதல், தகாதன செய்தற் கண் உள்ளம் ஒடுங்குதலைக் குறிக்கும். "நவை" என்பது, சிறிது காலம், தனக்குரிமையில்லாத, வாலிக்கு உரிமையான அவன் அரசை ஆட்சி செய்தது. இவை அனுமனின் கூற்று; இப்பொழுது குற்றம் வாலியுடையதே, சுக்கிரீவனுடையதன்று என்று அனுமன் நிறுவுகிறான் என்பதாம்.

64. "அடல் கடந்த தோள் அவனை அஞ்சி, வெங்
குடல் கலங்கி, எம்குலம் ஓடுங்க, முன்
கடல் கடைந்த அக் கரதலங்களால்
உடல் கடைந்தனன்; இவன் உலைந்தனன்". (3953)

(அடல் - வலிமை; கடந்த - அடங்கிய; குலம் - இனம்; வெம் - கொடிய; கடைதல் - கலக்குதல்; உலைதல் - தோற்றுப்போதல் \ வருந்துதலுமாம்)

"பகைவர்களின் வலிமையை எளிதாக வெல்லும் சிறப்பையுடைய தோள்களையுடைய வாலியைக் கண்டு பயந்து, எங்கள் குரங்கு இனம் முழுவதும் மனம் கலங்கி நின்றதோடல்லாமல் உடலுறுப்பாகிய குடலும் கலங்கிப் போய் அடங்கி ஒடுங்கி இருந்தோம். முன்பு திருப்பாற்கடலைக் கடைந்த அந்தக் கைகளால் இந்தச் சுக்கிரீவனுடைய உடலையும் கலக்கித் துன்புறுத்தினான் வாலி. எனவே இவன் மிக்க வருத்தமுற்றுத் தோற்றுப் போனான்".

"உடல் கடைதல்" என்பது உடலைத் தாக்கி, மற்ற உறுப்புக்களும் உள்ளிருக்கும் இரத்தமும் கலங்குமாறு செய்தல் என்க.

65. "பற்றி, அஞ்சலன் பழியை, வெஞ்சினம்
முற்றி நின்ற தன் முரண்வலிக்கையால்,
எற்றுவான் எடுத்து எழுதலும், பிழைத்து,
அற்றம் ஒன்றுபெற்று, இவன் அகன்றனன்." (3954)

(முரண் - வலிமை எற்றுவான் - தாக்கும் பொருட்டு; அற்றம் - இடையீடு \ மெலிந்தசமயம் \ தக்கசமயம்; எடுத்து எழுதல் - கையை உயர்த்தி நிமிர்ந்து எழுதல்; ஒன்று - சிறிது; பழி - நிந்தனை; முற்றி - முதிர்ந்து; பிழைத்தல் - தப்பித்தல்)

"வாலி தன்னினும்; தாழ்ந்த நிலையில் உள்ளவனுடன் போர் செய்கிறோமே என்ற பழிக்குக்கூட அஞ்சாது, சினம் மிகுந்து நின்று, தன் வலிமையான கைகளால் சுக்கிரீவனைப் பற்றி, தாக்குவதற்காகத் தன் கையை ஓங்கி நிமிர்த்தும் போது, அந்தச் சமயம்பார்த்து, இச்சுக்கிரீவன் தப்பித்து அவ்விடம் அகன்று ஓடிப் போனான்."

தோற்றுத் தாழ்ந்தவனை மீண்டும் பற்றித் தாக்குதல் என்பது சான்றோர்களால் பழிக்கப்படும் செயல். நல்ல போர் முறையன்று. எனினும் அந்தப் பழிக்குக் கூட வெட்கப்படாமல் வாலி சுக்கிரீவனைத் தாக்குவதற்குத் தன் கையை ஓங்கினான். அந்தச் சமயம் பார்த்து, சுக்கிரீவன் தப்பித்தால் போதும் என்று கருதி, ஓடிப்போனான் என்பது கருத்து.

66. "எந்தை! மற்று அவன் எயிறு அதுக்குமேல்,
அந்தகற்கும் ஓர் அரணம் இல்லையால்;
இந்த வெற்பின் வந்து இவன் இருந்தனன்;
முந்தை உற்றது ஓர் சாபம் உண்மையால்". (3955)

(எயிறு - பல் அதுக்குதல் கடித்தல்; அந்தகன் - இயமன்; அரணம் - அரண் \பாதுகாப்பு; உண்மையால் - உள்ளதால் \ இருப்பதால்; உயிர்களுக்கு இறுதியைச் செய்கின்றவன் என்பதால் அந்தகன் என்பது இயமனுக்குக் காரணப் பெயர்; முந்தை - முற்காலத்தில்)

"என் தந்தை போன்றவனே! மேலும் அவ்வாலி சினம் கொண்டு பல்லைக் கடிப்பானேயானால் எல்லா உயிர்களையும் கவரும் வல்லமை உள்ள இயமனுக்கும் கூடப் பாதுகாப்பான இடம் ஒன்று இல்லை. அவனும் அழிந்து படுவான். முற்காலத்தில் மதங்க முனிவர் வாலிக்கு இட்ட ஒரு சாபத்தால், அவன் வர முடியாத இந்த ருசியமூக மலையில் சுக்கிரீவன் தப்பிவந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான்" என்றான் அனுமன்.

"எயிறு அதுக்குதல்" என்பது பல்லைக் கடித்தலைக் குறிக்கும் அது வெகுளியின் மெய்ப்பாடு. இது காரியம். இதற்கு காரணம் கோபம். காரியம் காரணத்தின்மேல் ஏற்றிக் கூறப்பட்ட ஒரு அருமையான சொல்லாட்சி இது. இம்மலைக்கு வாலியால் ஏன் வரமுடியாது என்பதற்கு உரிய காரணமான, மதங்க முனிவரின் சாபம் பற்றி முன்பே கூறப்பட்டதை நினைவில் கொள்க. பின்னர் துந்துபிப் படலத்தில் இதன் விரிவை நன்கு காணலாம்.

67. "உருமை என்று இவற்கு உரிய தாரமாம்
அருமருந்தையும் அவன் விரும்பினன்;
இருமையும் துறந்து, இவன் இருந்தனன்;
கருமம் இங்கு இது; எம்கடவுள்!" என்றனன்". (3956)

(தாரம் - மனைவி; மருந்து - தேவாமிர்தம்; இருமை - இம்மையும் மறுமையும்; கருமம் - நிகழ்ந்த செய்தி!)

"எங்கள் தெய்வமே! உருமை என்று பெயர் கொண்ட, கிடைத்தற்கரிய தேவாமிர்தம் போன்ற இச்சுக்கிரீவனுக்கு உரிய மனைவியையும், வாலி விரும்பிக் கவர்ந்து கொண்டான் இச்சுக்கிரீவனோ அரசாட்சியையும் மனைவியையும் இழந்து, இங்கு வந்து வாழ்ந்து வருகிறான். இவைதான் இங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகள்" என்று கூறி முடித்தான் அனுமன்.

"ருமை" என்ற வடசொல் "உருமை" எனத் தமிழாக்கப்பட்டது. "விரும்பி னான்" என்பது நாகரீகமாக, மறைத்துக் கூறப்பட்டது. உண்மையிலேயே அவளை விரும்பி வலிதில் அபகரித்துக் கொண்டான் என்பது இச்சொல்லுக குரிய பொருள். இருமை என்பது இம்மை மறுமைப் பயன்களைக் குறிக்கும். இம்மை என்பது அவன் இப்பிறவியில் இல்லற இன்பம் பெறாது மனைவியை இழந்து துன்பப்படுதலைக் குறிக்கும், அவள் இல்லாமையால் வருவோர்க்கு விருந்து படைக்க இயலாமையால், மறுமையில் கிடைக்கும் சுவர்க்கபோகமும் கிடைக்காமல் போனதால் மறுமையும் இழந்தான் என்றார் என்க. அரசாட்சியும் மனையாட்சியும் இழந்தனன் என்பதும் பொருந்தும். உருமை சுக்கிரீவனின் மனைவி. வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் மாமன் தாரன் அவனுடைய மகள் உருமை; இந்தத் தாரன், தேவகுருவாகிய பிரஹஸ்பதிக்கு மகன்.

68. இராமன் சினம் கொள்ளுதல்

பொய் இலாதவன், வரன் முறை இம்மொழி புகல,
ஐயன், ஆயிரம் பெயருடை அமரர்க்கும் அமரன்,
வையம் நுங்கிய வாய் இதழ் துடித்தது; மலர்க்கண்
செய்யதாமரை, ஆம்பல்அம் போது எனச் சிவந்த. (3957)

(நுங்கிய - உண்ட \ விழுங்கிய; செய்ய - சிவந்த; போது - மலர்; அம் - அழகிய; இதழ் - உதடுகள்)

பொய் என்பதே என்ன என்று அறியாதவனும், எப்பொழுதும் உண்மையே பேசுபவனும், சத்திய சீலனுமான அனுமன், இவ்வாறு முறைப்படி, சுக்கிரீவனின் வரலாற்றைக் கூறக் கேட்ட தலைவன், ஆயிரம் பெயர்களை உடைய தேவர்களுக்கும் தேவன், பிரளய காலத்தில் இவ்வுலக உயிரினங்கள் எல்லாவற்றையும் தன் வயிற்றுக்குள் அடக்கிக் கொண்ட திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீ இராமபிரான் வாயிலுள்ள உதடுகள் துடிக்கலாயின; செந்தாமரை மலர் போன்ற அவனது கண்கள், இப்போது கோபத்தால் மிகச் சிவந்திருந்ததால், செவ்வாம்பல் மலர் போலச் சிவந்து விளங்கின.

"பொய் இலாதவன்" என்று அனுமன் சிறப்பிக்கப்பட்டதற்குக் காரணம், தன் தலைவனுடைய மனைவியை மற்றொருவன் அபகரித்துச் சென்று விட்டான் என்ற ஒரு பழி மிகுந்த செயலைக் கூட மறைக்காது, மறக்காது உள்ளதை எடுத்துக் கூறினமையால் என்க. "ஆயிரம் பெயருடைய அமரர்" என்பது சகஸ்ர நாமம் உடையவன் என்பதைக் குறிக்கும் என்க. "நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா" என்பது நாச்சியார் திருமொழி. "வையம் நுங்கிய வாய்" என்பது

பிரளய காலத்தில் திருமால் எந்த உயிரினத்திற்கும் அழிவு ஏற்படக்கூடாது என்பதற்காக, எல்லாவற்றையும் தன் வயிற்றுக்குள் அடக்கித் திருப்பாற்கடலில் ஓர் ஆலிலை மேல் அறிதுயில் கொண்டிருந்ததைக் குறிக்கும். இராமபிரானின் கண்கள் இயற்கையிலேயே சிவந்திருப்பன. எனவே, அவற்றைச் செந்தாமரை மலருக்கு ஒப்புக் கூறுவதைக் காப்பியத்தில் பல இடங்களில் காணலாம். இங்கே கோபத்தால் மிகச் சிவந்து காணப்பட்டன என்பதால், செந்தாமரை மலரினும் சிவந்த செவ்வாம்பல் மலருக்கு உருவகிக்கப்பட்டது என்க. "தேவதேவனைத், தென்னிலங்கை எரியெழச் செற்ற வில்லியை" என்பது நம்மாழ்வார் பாசுரம். "உலகுண்ட பெருவாயா" என்பது திருவாய்மொழி "மண்ணும், மலையும், மறிகடலும், மாருதமும், விண்ணும் விழுங்கியது மெய்யென்பர்" என்பது முதல் திருவந்தாதி. "உலகம் உண்ட ஒருவா" என்பது பெரியதிருமொழி.

69. கவிக்கூற்று

"ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன,
ஆரம் வீங்குதோள் தம்பிக்குத் தன் அரசுரிமைப்
பாரம் ஈந்தவன், "பரிவிலன் ஒருவன், தன் இளையோன்
தாரம் வவ்வினன்" என்ற சொல் தரிக்கும் ஆறு உளதோ?" (3958)

(ஈரம் - அன்பு \ இரக்கம்; சிற்றவை - சிறியதாய்; சொற்றனன் - சொன்னாள்; வீங்கு - பருத்த; பரிவு - அன்பு; ஆரம் - முத்தாரம் \ சந்தனம்)

இரக்கம் என்ற தன்மையையே விடுத்தவளான சிறிய தாயான கைகேயி சொல்லிவிட்டாள் என்பதற்காக, சந்தனமாலை அணியப்பெற்ற பருத்த தோள்களை உடைய தன் தம்பியாகிய பரதனுக்கு, தனக்கு முழு உரிமையுள்ள அரசாட்சிப் பொறுப்பைத் தந்தவனாகிய இராமபிரான், அன்பில்லாத ஒரு வாலி தன் இளையவனான சுக்கிரீவனது அரசாட்சியைப் பறித்துக் கொண்ட தோடல்லாமல், சுக்கிரீவனுடைய மனைவியையும் அபகரித்துக் கொண்டான் என்று அனுமன் சொல்லக் கேட்ட பின்னும், அதைப் பொறுத்துக்கொள்ளும் தன்மை கொள்வானோ?" என்பது கவிஞன் கூற்று.

இராமன் வாலி மேல் பகைமை கொள்வதற்குக் காரணம் அவன் தம்பி சுக்கிரீவனின் மனைவியாகிய உருமையை அபகரித்துச் சென்றதுதான் என்பதை இப்பாடலின் மூலம் கவிஞர் நிறுவுகிறார். கைகேயி இயற்கையிலேயே இராமபிரான் மீது அன்பு கொண்டவள்தான் என்பதையும், பின்பு கூனியின் சூழ்ச்சியால் மனந்திரிந்து அவ்வன்பு நீங்கப் பெற்றாள் என்பதையும், ஐயத்திற்கு இடமின்றிக் குறிக்கவே "ஈரம் நீங்கிய" என்ற சொல்லைப் பெய்தான் கவிஞன் என்க. "தன் அரசுரிமைப்பாரம்" என்பது, இராமன் மூத்தவன். மூத்தவற்கு உரித்து அரசு என்பது மனுநெறி. எனவே, அவ்வரசுக்கு முழுஉரிமை உடையவன் அவனே என்பதைக் குறிக்கவே என்க. இராமன் அவ்வரசு உரிமையை ஒருபாரமாகவே கருதினான் என்பதையும் இச்சொற்றொடர் குறிப்பது காண்க. இராமன் சினம் கொண்டது சரியே என்பது கவிஞர் கருத்து என்பதாம்.

70. இராமன் உருமையை மீட்டுத்தர உறுதிகொள்ளுதல்

“உலகம் ஏழினொடு ஏழும் வந்து, அவன் உயிர்க்கு உதவி,
விலகும் என்னினும், வில்லிடை வாளியின் வீட்டி,
தலைமையொடு, நின்தாரமும், உனக்கு இன்று தருவென்;
புலமையோய்! அவன் உறைவிடம் காட்டு” என்று புகன்றான். (3959)

(விலகும் - தடுக்கும்; வாளி - அம்பு; வீட்டி - அழித்து; தாரம் - மனைவி;புலமை - அறிவு; இன்று - இப்பொழுதே)

இராமபிரான் சுக்கிரீவனை நோக்கி, “அறிவிற் சிறந்தவனே! இந்தப் பதினான்கு உலகத்தில் உள்ளவர்களும் ஒன்று திரண்டு வந்து, அவ்வாலியின் உயிரைக் காப்பாற்ற உதவி செய்து, என்னைத் தடுத்தாலும், நான் என்னுடைய வில்லில் அம்பைத் தொடுத்து, அவனை அழித்து, உனக்கு வானர அரசாட்சியையும், உன்னுடைய மனைவியையும் இப்பொழுதே மீட்டுத்தருவேன் நீ கவலற்க! அவ்வாலி இப்போது தங்கியிருக்கும் இடத்தை எனக்குக் காட்டுவாயாக!” என்றான்.

இப்பாடலால், இராமன் வாலியைக் கொன்று விடவேண்டும் என்ற தீர்மானமான முடிவு எடுத்துவிட்டான் என்பதைக் கவிஞர் நமக்குத் தெரிவிக்கிறார் என்க. இதேபோலத்தான் முன்பும், தண்டக வனத்து முனிவர்களிடத்தும், “சூர் அறுத்தவனும் சுடர் நேமியும், ஊர் அறுத்த ஒருவனும் ஓம்பினும், ஆர் அறத்தினோடு அன்றி நின்றார், அவர் வேரறுப்பென் வெருவன்மின்நீர்” என்று கூறியதையும் ஒப்பிடுக.

71. சுக்கிரீவன் மகிழ்ச்சியும் மறுமொழியும்

எழுந்து, பேர் உவகைக் கடல் பெருந்திரை இரைப்ப,
அழுந்து துன்பினுக்கு அக்கரை கண்டனன் அனையான்,
“விழுந்ததே இனி வாலிதன் வலி” என, விரும்பா
மொழிந்த வீரர்க்கு, “யாம் எண்ணுவது உண்டு” என மொழிந்தான். (3960)

(திரை - அலைகள்; இரைப்ப - ஒலிசெய்ய; கரை - எல்லை; விழுந்தது - அழிந்தது \ ஒழிந்தது)

இவ்வாறு இராமபிரான் கூறியதைக் கேட்ட சுக்கிரீவன், மகிழ்ச்சிக்கடலில் திளைத்தான். இதுகாறும் தான் அழுந்தியிருந்த துன்பக்கடலின் எல்லையைக் கண்டு அதனின்றும் நீங்கியவன் போல் “இனிமேல் வாலியின் வலிமை அழிந்து ஒழிந்தது” என்று மகிழ்ச்சியுற்று, அவ்வாறு உறுதிமொழி கூறிய இராமபிரானை நோக்கி, “நாங்கள் ஆலோசனை செய்யவேண்டுவது ஒன்று இருக்கிறது” என்று கூறினான.

இங்கே “யாம்” என்றது அனுமன் உள்ளிட்ட அமைச்சர்களைக் குறித்தது. தான் தனியே தன் அமைச்சர்களோடு ஒரு கருத்துப்பற்றி ஆராய வேண்டியுள்ளது என்று கூறினான் என்பதாம்.

72. அமைச்சர்களோடு தனித்திருந்து ஆலோசித்தல்

அனைய ஆண்டு உரைத்து, அனுமனே முதலிய அமைச்சர்,
நினைவும், கல்வியும், நீதியும், சூழ்ச்சியும் நிறைந்தார்
எனையர், அன்னவரோடும் வேறு இருந்தனன், இரவி
தனையன்; அவ்வழிச் சமீரணன் மகன் உரை தருவான். (3961)

(இரவி - சூரியன்; தனையன் - புதல்வன்; சூழ்ச்சி - தந்திரம் \ ஆலோசனை; எனையர் - எத்துணைபேர்; வேறு - தனியாக; சமீரணன் - வாயுதேவன் \ காற்று)

அங்கு அவ்வாறு இராமனுக்கு மறுமொழி தந்த சூரியன் மைந்தனாகிய சுக்கிரீவன், நினைவாற்றல், கல்வியறிவு, நீதி விதிமுறைகளும், தந்திர ஆலோசனைகளும் ஆய்வுத்திறமும் உடையவர்களுமான அங்கிருந்த அனுமன் முதலிய எல்லா அமைச்சர்களளோடும், இராம இலக்குவரை விடுத்து, தனியே வேறாக வந்து ஆலோசனை நடத்தத் தொடங்கினான். அப்பொழுது, வாயுதேவனின் புதல்வனான அனுமன் கீழ்வருவனவற்றைக் கூறத் தொடங்கினான்.

சுக்கிரீவன் இப்போது அமைச்சர்களின் ஆலோசனையை வேண்டியது, “இராமனுக்கு வாலியை வெல்லும் ஆற்றல் இருக்குமோ?” என்ற ஐயத்தைக் கலந்து ஆலோசித்து முடிவுசெய்யத்தான் என்பதை, சுக்கிரீவனின் முகக் குறிப்பால் புரிந்துகொண்டு அனுமன், சுக்கிரீவன் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு முன்பே பேசத்தொடங்கினான் என்றதால் அனுமனின் புத்திக் கூர்மை விளக்கப்பட்டது. “ஏனையர்” என்பது அங்கே எத்தனை அமைச்சர்கள் இருந்தனரோ அத்தனை பேருடனும் என்று பொருள் கொள்ளுமாறு அமைந்தது என்க. இவ்வாறு சுக்கிரீவன் தன் அமைச்சர்களுடன் தனியே அமர்ந்து ஆலோசித்தான் என்று வான்மீகத்தில் கூறப்படவில்லை.

73. “உன்னினேன், நினது உள்ளத்தின் உள்ளதை, உரவோய்!
அன்ன வாலியைக் காலனுக்கு அளிப்பது ஓர் ஆற்றல் இன்ன
வீரர்பால் இல்லை” யென்று அயிர்த்தனை; இனி யான்
சொன்னகேட்டு, அவை கடைப்பிடிப்பாய்” எனச் சொன்னான். (3962)

(உரவு - வலிமை \ திண்மை; உன்னுதல் - உய்த்து உணர்தல்; காலன் - இயமன்; அயிர்த்தல் - ஐயமுறுதல்; கடைப்பிடித்தல் - உறுதியாகக் கொள்ளுதல்)

“வலிமையுடையவனே! உனது உள்ளத்தில் நீ கொண்டிருக்கும் எண்ணத்தை, நான் உய்த்து உணர்ந்து கொண்டேன்; எதிர்த்தார் வலியில் பாதி வலியைத் தான் பெற்றுக் கொள்ளும் சிறப்பான வீரம் படைத்த வாலியை இயமனுக்கு இரையாக்கும் பொருட்டு, கொன்று அழிப்பது என்னும் ஒப்பற்ற வலிமை, இங்கு வந்திருக்கின்ற இராம இலக்குவர்களிடம் இல்லை என்று நீ சந்தேகம் கொள்கிறாய். இனிமேல், நான் கூறுவனவற்றைக் கேட்டு, அவற்றை உறுதியாகக் கொள்வாயாக!” என்றான் அனுமன்.

"உரவோய்" என்பது உடல் வலிமையை மட்டுமின்றி உள்ளத் திண்மையையும் குறித்தது என்க. "காலனுக்கு அளிப்பது" என்பது "கொல்லுதல்" என்னும் பொருளது. "உற்றது கொண்டு, மேல் வந்து உறுபொருள் உணரும் கோளார்" என்பது நல்ல அமைச்சனுக்கு உரிய முதல் தகுதி. அதை அனுமன் பெற்றிருந்தான் என்பதுதான், "நினது உள்ளத்தில் உள்ளதை உன்னினேன்" என்று அவன் கூறும் கூற்று.

74. ''இராமன் திருமாலின் திருஅவதாரமே'' என அனுமன் கூறுதல்

"சங்கு சக்கரக்குறி உள தடக்கையில்; தாளில்;
எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை;
செங்கண், விற்கரத்து இராமன், அத்திருநெடுமாலே!
இங்கு உதித்தனன், ஈண்டு அறம் நிறுத்துதற்கு" இன்னும். (3963)

(குறி - இரேகைகள் \ அடையாளங்கள்; நிறுத்தல் - நிலை நிறுத்தல்; உதித்தல் - அவதரித்தல்) (குளகப்பாடல்)

"இராமபிரானது பெரிய கைகளிலும் திருவடிகளிலும் சங்கு, சக்கர இரேகைகள் அடையாளங்களாக உள்ளன; இத்தகைய இலக்கணம் இவ்வுலகில் எவ்விடத்தும் யாரிடத்தும் காணப்பெறுவதில்லை; எனவே சிவந்த கண்களையும், வில்லேந்திய கைகளையும் உடைய இவ்விராமபிரான், அந்தப் பரம்பொருளாகிய திருமாலே; அவன் இங்கு அறத்தை நிலை நிறுத்துவதற்காக இராமனாக அவதாரம் செய்திருக்கிறான். இன்னும் - (பாடல் தொடர்கிறது).

திருமால் கடவுளாக இருக்கும் நிலையில் சங்கையும், சக்கரத்தையும் தன் கைகளில் ஏநதியவன். எனவே இங்கே பூமியில் இராமனாக அவதாரம் எடுத்த போதும் அதற்குரிய இரேகைகளைக் கைகளிலும் தாள்களிலும் பெற்றிருக்கிறான் என்பது விளக்கம். "நெய்த்தலை நேமியும், சங்கும் நிலவிய கைத தலங்கள் வந்து காணிரே" என்பதும், "ஒரு காலில் சங்கு, ஒரு காலில் சக்கரம் உள்ளடி பொறித்து அமைந்த இருகாலும் கொண்டு, அங்கங்கு எழுதினாற்போல் இலச்சினை பட நடந்து" என்பதும் பெரியாழ்வார் பாசுரம்; "நேமியொடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை" என்பது முல்லைப்பாட்டு; "வலம்புரி பொறித்த வண்கை மதவலி" என்பது சீவசிந்தாமணி; நளனுடைய பாத அடிச்சுவட்டில் சங்கமும், பத்மமும் பதிந்திருந்தைக் கண்டு கொண்டதால்தான், தமயந்தியால் நளன் போன வழியே போக முடிந்தது என்பது நளன் வரலாறு.

75. "செறுக்கும் வன்திறல் திரிபுரம் தீஎழச் சினவி,
கறுக்கும் வெஞ்சினக் காலன்தன் காலமும், காலால்
அறுக்கும் புங்கவன் ஆண்ட, பேர்ஆடகத் தனி வில்
இறுக்கும் தன்மை, அம்மாயவற்கு அன்றியும் எளிதோ?" (3964)

(செறுக்கும் - வருத்தும்; திரிபுரம் - முப்புரம்; சினவி - கோபித்து; கறுத்தல் - கோபித்தல்; காலம் - ஆயுட்காலம்; அறுத்தல் - அழித்தல்; புங்கவன் - சிவபெரு

மான் \ தேவன்; ஆடகம் - பொன்; இறுத்தல் - ஒடித்தல்; மாயவன் - திருமால்; காலன் - இயமன்)

"வல்லமை பெற்ற முப்புரங்களும் தனது கோபச் சிரிப்பு என்னும் நெருப்பினால் அழிந்து போகும்படி செய்தவனும்; மிக்க சினம் கொண்டு இயமனின் ஆயுட்காலத்தையும், தன் காலாலேயே முடித்து வைத்தவனும், மேலோனுமான சிவபெருமான் கைக்கொண்ட பெரிய, பொன்னாலாகிய, ஒப்பற்ற திரியம்பகம் என்னும் சிவதனுசை ஒடித்து முறிக்கும் ஆற்றல், அந்தத் திருமாலைத் தவிர வேறு யாருக்கேனும் அவ்வளவு எளிதான செயலாகுமோ?" என்றான் அனுமன்.

இப்பாடலில் சிவபெருமான் ஆற்றலும், அவன் வில்லின் பெருமையும், இராமபிரானின் வலிமையும் முறையே கூறப்பட்டன. திரிபுரம் எரித்தது என்பது - முற்காலத்தில் தாரகன் என்ற அசுரனுக்கு மூன்று புதல்வர்கள். அவர்கள் கமலாட்சன், தாரகாட்சன், வித்யுத்மாலி என்பவர். இவர்கள் மூவரும் நீண்ட நெடுந்தவம் செய்து, இறைவனிடமிருந்து வரங்கள் பெற்றனர். இவர்கள் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றாலான மூன்று கோட்டைகள் அமைத்து, அவற்றில் ஆகாயத்தில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பறந்து சென்று அங்குள்ளவற்றை அழிக்கும் வலிமை பெற்றிருந்தனர். தேவர்கள் வேண்டுதலுக்கு உடன்பட்டு சிவபெருமான் இவர்களை அழிக்க முற்பட்டார். பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களைத் தேர்ச்சக்கரமாகவும், நான்கு வேதங்களையும் குதிரைகளாகவும், பிரமனைத் தேர்ச் சாரதியாகவும், மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், அக்கினியை அம்பின் முனையாகவும், விண்ணுலகையே அம்பாகவும், வாயுவை அம்பின் சிறகுகளாகவும் கொண்டு போர் செய்யத் தொடங்கினார். எனினும் சிவபெருமான் இவற்றைப் பயன்படுத்தாமலேயே, ஒரு புன்முறுவல் பூத்தார். அந்தச் சிரிப்பிலிருந்தே நெருப்புப் பொறிகள் கிளம்பி முப்புரத்திருந்த மூன்று அசுரர்களையும், அவர்கள்தம் கோட்டைகளையும் எரித்துச் சாம்பலாக்கின என்பதாம்.

காலனைக் காலால் அழித்த மார்க்கண்டேயன் வரலாறு. மிருகண்டு என்பவர் ஒரு முனிவர். இவர் மனைவி மருத்துவதி. இவர்கள் நெடுங்காலமாக மகப்பேறு அற்றிருந்தனர். காசி சென்று சிவபெருமானை நோக்கித் தவம் செய்தனர். சிவபெருமான் இரக்கம் கொண்டு அவர்களை நோக்கி, "பதினாறே ஆண்டுகள் வாழும் அறிவுடைய புதல்வன் வேண்டுமா? அல்லது தீய குணங்களும், அறிவிலியுமாகிய நூறு ஆண்டுகள் வாழும் புதல்வன் வேண்டுமா?" எனக் கேட்க, இவர்கள் "பதினாறே ஆண்டுகள் வாழும் நல்ல அறிவுள்ள புதல்வன் வேண்டும்" எனக் கேட்டு ஒரு மகனைப் பெற்றெடுத்தனர். அவனே மார்க்கண்டேயன். அவனுக்குப் பதினாறு வயது நிரம்பும் காலத்தில் பெற்றோர் வருத்தமுற, இதனை அறிந்த மார்க்கண்டேயன், எல்லா சிவத்தலங்களுக்கும் சென்று தன்னைக் காப்பாற்றும்படி வேண்ட, 108வது சிவத்தலமாகத் திருக்கடவூர் என்ற சிவத்தலத்திற்கு வந்து சிவபெருமானைப்

பூசித்துக் கொண்டிருக்கும் போது, பதினாறு வயது முடிவடைந்ததால் இயமன் வந்து பாசக்கயிற்றை வீச, சிவபெருமான் இயமனைக் காலால் உதைத்துத்தள்ளி, மார்க்கண்டேயன் என்றும் பதினாறுவயது இளமையுடனேயே இருக்கும்படி அருளினார் என்பது வரலாறு.

இத்தகைய ஆற்றலுடைய சிவபெருமான் கைக்கொண்டிருந்த பெரிய பொன்னால் ஆன ஒப்பற்ற வில்லை ஒடிக்கும் ஆற்றல், திருமாலைத் தவிர வேறு யாருக்கும் இருக்க முடியாது என்று, இங்கு வந்திருப்பவன் திருமாலின் அவதாரம்தான் என்று நிறுவுகிறான் அனுமன்.

76. "என்னை ஈன்றவன்", இவ்வுலகு யாவையும் ஈன்றான்
தன்னை ஈன்றவற்கு அடிமைசெய்; தவம் உனக்கு அதுவே;
உன்னை ஈன்ற எற்கு, உறுபதம் உளது" என உரைத்தான்;
இன்ன தோன்றலே அவன்; இதற்கு ஏது உண்டு, இறையோய்!" (3965)

(இறையோய் - தலைவனே; எற்கு - எனக்கு; பதம் - பதவி \ பரமபதம்; ஏது - காரணம்; தோன்றல் - தன்இச்சையால் தோன்றியவன்; அடிமை - பணித்தொழில்)

"தலைவனே! என்னைப் பெற்றெடுத்தவனாகிய வாயுதேவன், முன்பு "இந்த உலகத்தை எல்லாம் படைத்த பிரமதேவனைத் தன் உந்தித்தாமரையிலிருந்து தோற்றுவித்தவனான திருமாலுக்கு நீ பணித்தொழில் புரிவாயாக! உனக்குரிய தவம் அதுவேயாகும்; உன்னைப் பெற்றெடுத்த எனக்கும் அதனால் அடையக் கூடிய பரமபதமும் கிடைத்தது போலாகும்" என்று என்னிடம் கூறினான்; இப்பொழுது இங்கு வந்திருக்கின்ற சிறப்பு மிக்கவனே அந்தத் திருமால் ஆவான்; நான் இவ்வாறு கூறுவதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது" என்றான் அனுமன்.

மக்கள் செய்யும் நற்காரியங்களாலான புண்ணியம், தந்தைக்கும் சென்று சேரும் என்பது "உன்னை ஈன்ற எற்கும் உறுபதம் உளது" என்ற வாயுதேவனின் கூற்றால் அறியலாம். ஏது என்பது ஹேது என்ற வடசொல்லின் திரிபு.

77. "துன்பு தோன்றிய பொழுது, உடன்தோன்றுவன்; எவர்க்கும்
முன்பு தோன்றலை அறிதற்கு முடிவு என்?" என்று இயம்ப,
"அன்பு சான்று" என உரைத்தனன்; ஐய! என் யாக்கை
என்பு தோன்றல, உருகின எனின், பிறிது எவனோ? (3966)

(துன்பு - துன்பம்; தோன்றுதல் - அவதரித்தல்; தோன்றல் - ஆதிமுதல்வன் \ திருமால்; முடிவு - வழி \ உபாயம்; இயம்ப - வினவ; யாக்கை - உடம்பு; எவனோ - எதற்கு)

அனுமன் சுக்கிரீவனை நோக்கி, "ஐயா! அவ்வாறு கூறிய என் தந்தையைப் பார்த்து, "எல்லார்க்கும் முன்பு தோன்றியவனான திருமாலை நான் அறிந்துகொள்ளுவதற்கு உரிய உறுதியான உபாயம் என்ன?" என்று கேட்டேன்; அதற்கு அவர், "இவ்வுலகத்தில் எப்பொழுது துன்பம் உண்டானாலும், அவன்

உடனே தோன்றுவான்; அவனைக் கண்டவுடன் உனக்கு உன்னையறியாமலேயே ஒரு அன்பு பிறக்கும். அதுதான் சான்று" என்று கூறினான். "நான் முதன் முதலாக இராமபிரானைக் கண்ட பொழுது என் உடம்பில் உள்ள எலும்புகள் எல்லாம் அங்கே இல்லாதது போலவும்; உருகிப் போனது போலவும் தோன்றியது, என்றால் இதைத் தவிர வேறு ஒரு சான்றும் தேவையோ?" என்றான் அனுமன்.

உலகத்திற்குத் துன்பம் உண்டாகும் போது, அதை நீக்குவதற்காக இறைவன் அவதரிப்பான் என்றதனால், துன்பம் கொண்ட நிலையில்தான் இறைவன் திருவருள் கிட்டும் என்பது புலப்படுத்தப்பட்டதை உணர்க. கஜேந்திரன் துன்புற்று அழைத்த போதும், பாஞ்சாலி அவதிப்பட்டு அழைத்த போதும், திருவருள் புரியத் தோன்றியதை இங்கு நினைவு கூர்க. இராமனை முதலில் கண்டவுடன் அனுமன், "என்பு எனக்கு உருகுகின்றது; இவர்கின்றது அளவுஇல் காதல்; அன்பினுக்கு அவதியில்லை; என்று கூறியதும், பின்னர் வீடணன் அடைக்கலத்தின்போது "முன்பு உறக்கண்டிலேன்; கேள்வி முன்பிலேன், அன்பு உறக்காரணம் அறியகிற்றிலேன்; என்பு உறக்குளிரும்; நெஞ்சு உருகும்; மேலவன் புன் புலப்பிறவியின் பகைஞன் போலுமால்" என்றதும், இராமனைக் கண்ட அயோத்தி மக்கள் "என்பு உருகி, நெஞ்சு உருகி, யார் உருககில்லார்" எனக் கூறி உருகி நின்றதையும் நினைவு கூர்க. உள்ளம் உருகும்போது, எலும்பும் உருகுவது இயல்பு; "இரும்புதரு மனத்தேனை, ஈர்த்து, என் என்பு உருக்கி" என்பது திருவாசகம்.

78. அனுமன் கூறிய உபாயம்

"பிறிதும் அன்னவன் பெருவலி ஆற்றலை பெரியோய்!
அறிதி என்னின், உண்டு உபாயமும்;அ.்.து அருமரங்கள்
நெறியில் நின்றன ஏழில், ஒன்று உருவ, இந்நெடியோன்
பொறிகொள் வெஞ்சரம் போவது காண்!" எனப் புகன்றான். (3967)

(பிறிது - வேறுவகை; உருவ - துளைபட; பொறி - புள்ளிகள்)

அனுமன் சுக்கிரீவனை நோக்கி, "பெரியவனே! இன்னும் நீ வேறுவகையாக இவனுடைய பெரிய, வலிமை பொருந்திய ஆற்றலைச் சோதித்துப் பார்க்க விரும்புவையாயின் அதற்கும் ஒரு வழி இருக்கிறது. அது நாம் செல்லும் வழியில் வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கின்ற ஏறுதற்கரிய ஏழுமராமரங்களுள் ஒன்றினை, இப்பெரியோனது புள்ளிகள் பொருந்திய தீப்பொறியுடைய கொடிய அம்பால் துளைக்கச் செய்வதுதான்" எனக் கூறினான்.

இந்த ஏழு மராமரங்களில் ஒரு மரத்தில் இராமபிரானது அம்பு ஊடுருவிச் சென்றதென்றால், இவன் வாலியை வதைக்கும் ஆற்றல் பெற்றவன் என்பதை உறுதியாகக் கொள்ளலாம் என்பது, அனுமன் சுக்கிரீவனுக்குக் கூறிய உபாயம் என்க. இங்கே மரம் எனக் குறிப்பிட்டது மராமரங்களை என்க. இது மராமரம், ஆச்சாமரம் என்றும் சால விருட்சம் என்று வழங்கப்பெறும். இந்தக் கூற்று

அனுமனால் கூறப்பட்டதாக வான்மீகத்தில் இல்லை; சுக்கிரீவனே, இலக்குவனிடத்தில் கூறியதாக உள்ளது.

79. சுக்கிரீவன் உடன்பட்டு இராமனிடம் கூறுதல்

"நன்று நன்று எனா, நல்நெடுங் குன்றமும் நாணும்
தன் துணைத்தனி மாருதி தோள் இணை தழுவி,
சென்று, செம்மலைக் குறுகி, "யான் செப்புவது உளதால்,
ஒன்று உனக்கு" என, இராமனும், "உரைத்தி அ∴து"என்றான். (3968)

(தனி - ஒப்பற்ற; மாருதி - அனுமன்; இணை - இரண்டு; செம்மல் - தலைமைத் தன்மையுடையவன்)

அவ்வாறு அனுமன் கூறிய உபாயத்திற்கு உடன்பட்ட சுக்கிரீவன் மிக மகிழ்ந்து, "நல்லது, நல்லது" என்று அவனைப் பாராட்டி, நல்ல பெரிய மலைகள் கூட வெட்கமடையும்படியான உயர்ந்த தோள்களையுடைய தனது துணைவனும், நண்பனும் அமைச்சனுமான ஒப்பற்ற அனுமனை அவனது இரண்டு தோள்களாலும் தழுவிக்கொண்டு, அவ்விடம்விட்டு அகன்று சென்று, தலைவன் இராமபிரான் இருந்த இடத்தை அடைந்து "நான் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்தி ஒன்று உள்ளது" என்றுகூற, இராமபிரானும்", "அதனைத் தெரிவிப்பாயாக" என்றான்.

அனுமன் கூறிய உபாயத்தால் மிக்க மகிழ்ச்சியடைந்த சுக்கிரீவன், அதற்கு உடன்பட்டதோடல்லாமல், மிக்கநன்று என்று அவன் அறிவுத்திறனை வாயாரப் பாராட்டி, அனுமனைத் தழுவியும் கொண்டது சுக்கிரீவன் அனுமன்பால் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் புலப்படுத்தும் என்க. தன் மாருதி, துணைமாருதி, தனிமாருதி என்று மூன்று அடைமொழிகள் கொடுத்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. பொதுவாக வீரர்களின் தோள்களுக்கு மலையை உவமிப்பது வழக்கம், காரணம் அவை அளக்கலாகா அளவும், பொருளும் துளக்கலாகா நிலையும், தோற்றமும் உடையன என்பதால் என்க.

நட்புக் கோட்படலம் நிறைவுற்றது

4. மராமரப் படலம் (21 பாடல்கள்)

மராமரம் என்பது ஒருவகை வலிமையுடைய ஆச்சாமரத்தைக் குறிக்கும். இதனைச் "சாலவிருட்சம்" என்றும் கூறுவர். இராமனின் வலிமையின் மேல் ஐயம் கொண்ட சுக்கிரீவன், இராமனை அங்குள்ள ஏழு மரங்களில் ஒன்றினை, அவனுடைய அம்பை எய்து தொளைத்துக் காட்ட வேண்டிக்கொண்டதும், அதன்படி, அவ்வேழு மராமரங்களையும் இராமனின் ஒரே அம்பு தொளைத்து, மீண்டும் அவனது அம்பறாத் தூணியை அடைந்ததையும் பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 21 பாடல்களைக் கொண்டது. எல்லாச் சுவடிகளிலும் இந்தப் படலத்தின் பெயர் "மராமரப் படலம்" என்றே குறிக்கப்பட்டிருக்கிறது என்பது நோக்கத்தக்கது.

இந்தப்படலத்துள், சுக்கிரீவன் இராமனிடம் அங்குள்ள ஏழு மரங்களுள் ஒன்றை அவன் அம்பு கொண்டு துளைக்க வேண்டுதல்; இராமன் வில்லை நாணேற்றி மராமரங்களின் அருகில் நின்ற காட்சி; இராமன் மராமரங்களின் மேல் அம்பு எய்தல்; அதனால் உலகம் அடைந்த அதிர்ச்சி; அவ்வம்பு ஏழு மரங்களையும் துளைத்து இராமன் அம்பறாத் தூணியில் புகுந்தமை; அது கண்ட சுக்கிரீவன் வியப்புற்று இராமபிரானைப் புகழ்ந்து பாராட்டுதல்; வானர வீரர்களின் மகிழ்ச்சி, முதலிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. இராமனிடம் சுக்கிரீவன் ஒரு மராமரத்தைத் துளைக்க வேண்டுதல்

"ஏக வேண்டும் இந்நெறி" என, இனிது கொண்டு ஏகி,
"மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள்
ஆக ஐந்தினோடு இரண்டின் ஒன்று உருவ, நின்அம்பு
போகவே என்தன் மனத்து இடர் போம்" எனப் புகன்றான். (3969)

(நெறி - வழி; மாகம் - ஆகாயம்; நிமிர்ந்தன - உயர்ந்துள்ள; உருவ - தொளைபடுமாறு; இடர் - துன்பம்)

"இவ்வழியாகப் போகவேண்டும்" என்று கூறி, இராம இலக்குவர்களைச் சுக்கிரீவன் இனிமையாக அழைத்துக் கொண்டுபோய்", ஆகாயமும் குறுகித்தோன்றும் அளவிற்கு நீண்டும், உயர்ந்தும் நிற்கின்ற இவ்வேழு மாமரங்களுள் ஒன்றினையேனும் உன் அம்பு துளைத்துச் சென்றதென்றால், என் மனத்தில் உள்ள துன்பம் தீர்ந்து போகும்" என்று கூறினான் சுக்கிரீவன்.

இராமன் வலிமையுள்ளவன் என்று சுக்கிரீவன் உணர்ந்திருந்தாலும், இராமனது அம்புக்கு வாலியின் மார்பைத் துளைக்கும் ஆற்றல் இருக்கிறதா என்பதைத் தீர்மானமாகத் தெரிந்துகொள்வதற்காக இவ்வாறு செய்தான் என்க. சுக்கிரீவன் இராமனது வலிமையைத் தான் சந்தேகிப்பதாக நேரடியாகக் கூறாமல், மராமரத்தைத் துளைக்கும் ஆற்றல் உன் அம்புக்கு உள்ளதா என்பதை அறியவே நான் விரும்புகிறேன் என்று கூறும் நயம் காண்க. "மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்தன" என்பது மராமரத்தின் உயரத்தையும், பருமனையும், திண்மையையும் குறிக்கக் கூறிய சொற்றொடர்கள் என்க. ஆகாயமும் சுருங்கித் தோன்றும்படி என்று கூறுவது "படை பெருத்தலின் பார் சிறுத்ததோ?" என்ற கலிங்கத்துப் பரணியின் சொற்றொடரை நினைவு படுத்துவதை உணர்க. மாகம் என்பது மாஹம் என்ற வடசொல்லின் தமிழாக்கம். வாலி ஒரு காலத்தில் அம்மராமரங்களைத் தன் ஒரே கையினால் அசைத்து, அவற்றின் இலைகள் எல்லாம் உதிரும்படியாகவும் அவை நிலைதடுமாறுமாறும் செய்தான் என்றும், அத்தகைய ஆற்றல் இராமனின் அம்பிற்கு உண்டா என்று தெரிந்துகொள்வதற்காகவும்தான் சுக்கிரீவன் இவ்வாறு செய்தான் என்று வான்மீகமும், அத்யாத்ம இராமாயணமும் கூறும்.

2. இராமன் அதற்கு உடன்படுதல்

மறுவிலான் அது கூறலும், வானவர்க்கு இறைவன்,
முறுவல் செய்து, அவன் முன்னிய முயற்சியை உன்னி,
எறுழ்வலித் தடந்தோள்களால், சிலையை நாண் ஏற்றி,
அறிவினால் அளப்பறியவற்று, அருகு சென்று அணைந்தான். (3970)

(மறு - குற்றம் \ களங்கம்; வானவர் - தேவர்கள்; இறைவன் - தலைவன்; முன்னிய - கருதிய; உன்னி - உய்த்துணர்ந்து; எறுழ்வலி - மிக்கவலிமை; அணைதல் - சேர்தல்; முயற்சி - ஊக்கம்)

மனத்தில் களங்கமில்லாத சுக்கிரீவன் அவ்வாறு வேண்டியதும், தேவர்களுக்குத் தலைவனான இராமபிரான், சுக்கிரீவனது அறியாமையை எண்ணிப் புன்முறுவல் புரிந்து, அவன் கருதிய செயலுக்குரிய காரணத்தை உய்த்துணர்ந்து, தனது மிக்க வலிமையுடைய தோள்களால் வில்லை நாணேற்றி, அறிவினால் அளந்து கூறுதற்கரிய அம்மரங்களின் அருகில் சென்று சேர்ந்தான்.

தன் உள்ளத்திற்குத் துன்பம் தந்த செய்தியினை ஒளிவுமறைவில்லாமல் அவனிடம் நேரிலேயே கூறியதால், சுக்கிரீவன் "மறுவிலான்" என்று பாராட்டப்பட்டான் என்க. இங்கே ஒன்றை நோக்க வேண்டும். இச்சுக்கிரீவன் இராமபிரான் மேலேயே சந்தேகப்படுகிறானே என்று நமக்கு அவன் மேல் ஒரு காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதற்காகக் கவிஞன் இங்கே "மறுவிலான்" என்று சுக்கிரீவனைக் குறிப்பிடுகிறான் எனக் கொள்க. இராமபிரான் வானவர்க்கு இறைவன் என்பது, இராமபிரான் திருமாலின் அவதாரம் என்பதைக் குறிக்க. "தேவதேவனைத் தென்னிலங்கை எரியெழச் செற்ற வில்லியை" என்ற

நம்மாழ்வாரின் கூற்றாலும் அறியலாம். இம்மராமரங்களைத் துளைப்பது என்பது இராமனுக்கு எளிதான செயல் என்பதால், ஒரு புன்முறுவல் செய்தான் என்பதாம். இது எள்ளலால் உண்டானது அல்ல என்றாலும், தன் உண்மை நிலையைச் சுக்கிரீவன் இதுவரை புரிந்துகொள்ளவில்லை, இனியேனும் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் தன் மனக்கிடக்கையால் எழுந்த புன்முறுவல் என்க.

3. மராமரங்களின் பெருமையும் சிறப்பும் (9 பாடல்கள்)

"ஊழி பேரினும் பேர்வில; உலகங்கள் உலைந்து
தாழும் காலத்தும் தாழ்வில; தயங்குபேரிருள் சூழ்
ஆழி மாநிலம் தாங்கிய அருங்குலக் கிரிகள்
ஏழும், ஆண்டு சென்று ஒருவழி நின்றென, இயைந்த." (3971)

(பேர்தல் - நிலைமாறுதல் \ அசைதல் \ இடம்பெயர்தல்; உலைதல் - அழிதல்; தயங்கு - விளங்குகின்ற; ஆழி - கடல்; ஆண்டு - அங்கே \ மதங்கமலை; வழி - இடம்; தாழ்வு - குறைவு; இயைதல் - அமைந்திருத்தல்)

பிரளய காலத்திலும் இம்மராமரங்கள் தாம் நிலைபெயர்வனவல்ல; உலகங்களெல்லாம் அழிந்து வீழும் போதும் இவைகள் எந்தக் குறையும் இல்லாது நிமிர்ந்து நிற்பன. விளங்குகின்ற பெரிய இருள் சூழ்ந்த கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தைத் தாங்குகின்ற அரிய சிறந்த ஏழு மலைகளும் அவ்விடத்தில் சென்று ஒருசேர நின்றது போலப் பொருந்தியிருப்பன.

பற்பல இடங்களிலும் இருக்கின்ற ஏழுமலைகளும் ஒன்று சேர்ந்து வந்து ஒரே இடத்தில் நிற்பது போல, அவ்வேழு மராமரங்களும் மலையின் திண்மையோடு ஒரே இடத்தில் வரிசையாக நின்றன என்பதாம். மராமரங்களுக்குக் குலமலைகள் ஒப்பு. குலமலைகள் ஏழு. அவை கயிலை, இமயம், மந்தரம், நிடதம், ஏமகூடம், விந்தம், கந்தமாதனம் என்பன.

4. கலைகண்டு ஓங்கிய மதியமும், கதிரவன் தானும்,
தலைகண்டு ஓடுதற்கு அருந்தவம் தொடங்குறும்; சாரல்
மலைகண்டோம் என்பது அல்லது, மலர்மிசை அயற்கும்,
இலைகண்டோம் எனத் தெரிப்ப அரும் தரத்தன, ஏழும். (3972)

(கண்டு - தோன்றி; ஓங்கிய - நிறைந்த \ வளர்ந்த; மதியம் - சந்திரன்; தலை - உச்சி \ நிலை; அயன் - பிரமன்; தெரிப்பரும் - கூறுவதற்கரிய; தரம் - தன்மை \ சிறப்பு; கலை - சந்திரனுடைய ஒளியின் பகுதி)

பதினாறு கலைகளையும் தன்னிடம் கொண்டு நிறைந்து விளங்குகின்ற பூரண சந்திரனும், சூரியனும் கூட, அவ்வேழு மரங்களின் உச்சியைக் கண்டு ஊடுருவிச் செல்லுதற்கு அரிய தவத்தைச் செய்யத் தொடங்குவதாயின. தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனுக்குக்கூட அம்மரங்களைப் பார்க்கும் போது ஏதோ மலைச் சாரலைப் பார்ப்பது போலத்தான் தோன்றுகிறதே தவிர, அம்மரங்களின் உச்சியில் உள்ள இலைகளைப் பார்ப்பதாகத் தோன்றவில்லை,

அத்தகைய எடுத்துக் கூறமுடியாத சிறப்புத்தன்மையைப் பெற்றுள்ளன அவ்வேழு மரங்களும்.

சந்திரனும், சூரியனும் செல்லும் செலவை, அம்மரங்களின் உயர்ச்சி தடுக்கிறது. அதைக் கடந்து செல்ல சூரியனும் சந்திரனும் தவம் செய்கின்றன என்பதாம். அதுபோலவே சத்திய லோகத்தில் இருக்கும் பிரமதேவனால் அம்மரங்களின் உச்சியைப் பார்க்க முடியவில்லை. அத்தகைய உயரமுடையது என்று அம்மராமரங்களின் உயர்ச்சியின் சிறப்புத்தன்மையைத் தெரிவித்தார் என்க.

5. ஒக்க நாள் எலாம் உழல்வன; உலைவு இல ஆக,
மிக்கது ஓர் பொருள் உளது என வேறு கண்டிலமால்;
திக்கும், வானமும் செறிந்த அத்தரு நிழல் சீதம்
புக்கு நீங்கலின் தளர்வு இல, இரவி தேர்ப்புரவி. (3973)

(செறிந்த - நெருங்கிய; தரு - மரங்கள்; சீதம் - குளிர்ச்சி; நீங்குதல் - செல்லுதல் \ வெளிப்படுதல்; இரவி - சூரியன்; புரவி - குதிரை; ஒக்க - ஒரேதன்மை; உழல்வன - திரிவன; உலைவு - வருத்தம்; பொருள் - காரணம்; மிக்கது - சிறந்தது; நாள் - பகல்)

எல்லாத்திக்குகளிலும், ஆகாயத்திலும் நிறைந்து விளங்குகின்ற அம்மராமரங்களின் குளிர்ச்சி பொருந்திய நிழலுக்குள் புகுந்து வெளிப்படுவதால்தான், சூரியனுடைய ஒற்றைச் சக்கரத் தேரில் கட்டப் பெற்ற ஏழு குதிரைகளும் தளர்ச்சியில்லாது எப்போதும் ஒரே தன்மையுடன் நாளெல்லாம் அலைந்து திரிகின்றன; இதற்கு இதைத் தவிர வேறு ஒரு சிறந்த காரணம் இருப்பதாக நம்மால் கூறமுடியவில்லை.

அம்மரங்களின் உச்சி, சூரிய மண்டலத்திற்கும் மேலே இருந்தது என்பது பெறப்படுகிறது.

6. நீடு நாள்களும், கோள்களும் என்ன, மேல் நிமிர்ந்து
மாடு தோற்றுவ, மலர் எனப் பொலிகின்ற வளத்த;
ஓடு மாச்சுடர் வெண்மதிக்கு, உள் கறுப்பு, உயர்ந்த
கோடு தேய்த்தலின், களங்கம் உற்றால் எனும் குறிய. (3974)

(நீடு - நெடுநாட்களாக \ பெருகிய; நாள்கள் - நட்சத்திரங்கள்; கோள்கள் - கிரகங்கள்; வளம் - செழுமை; ஓடுதல் - செல்லுதல்; மா - சிறந்த; சுடர் - ஒளி; கறுப்பு - கறை; கோடு - கொம்புகள் \ கிளைகள்; மாடு - இடம்; குறி - உடையாளம்)

இவ்வுலகில் நெடுங்காலமாக உள்ள, பெருகிய இருபத்தேழு நட்சத்திரங்களும், ஒன்பது கிரகங்களும் அந்த உயர்ந்த மராமரத்தில், மலர்களாகப் பூத்து விளங்கிச் செழுமைத் தோற்றம் தருகின்றன. வானத்தில் சஞ்சரிக்கும் சிறந்த ஒளியுடைய வெண்மையான சந்திரனுக்கு உள்ளே இருக்கின்ற கறுப்பு நிறம் எதனால் ஏற்பட்டது தெரியுமா? இந்த உயர்ந்த மராமரங்களின் கொம்புகள் போய் அந்தச் சந்திரனில் உராய்ந்து தேய்ந்ததனால்

உண்டாகிய தழும்புதான் அச்சந்திரனுக்குக் களங்கம் என்னும் கறுப்பாக ஒரு அடையாளமாகத் தோற்றுகிறது.

வானத்திலிருக்கும் நட்சத்திரங்களும், கிரகங்களும் அம்மராமரத்தின் பூக்களாகப் பூத்துத் தொங்குகின்றன. சந்திரனிலுள்ள களங்கம் இம்மராமரங்களின் கிளைகள் போய்ச் சந்திரனில் உராய்வதால் ஏற்பட்ட தழும்புகள்தான் என்பதாம். ஒன்பது கிரகங்களாவன - சூரியன் \ ஞாயிறு), சந்திரன் (திங்கள்), அங்காரகன் (செவ்வாய்), புதன், குரு (வியாழன்), சுக்கிரன் (வெள்ளி), சனி, ராகு, கேது என்பனவாம்.

7. தீது அறும் பெரும் சாகைகள் தழைக்கின்ற செயலால்
வேதம் என்னவும் தகுவன; விசும்பினும் உயர்ந்த;
ஆதி அண்டம் முன்பு அளித்தவன் உலகின், அங்கு அவன் ஊர்
ஓதிமம் தனிப் பெடையொடும் புடை இருந்து உறைவ. (3975)

(சாகைகள் - கிளைகள்; தழைத்தல் - செழித்து வளர்தல்; விசும்பு - ஆகாயம் \ வானமண்டலம்; ஊர் - ஊர்கின்ற \ ஏறிச்செலுத்துகின்ற; ஓதிமம் - அன்னப்பறவை; புடை - பக்கம் \ இடம்; உறைதல் - தங்கி வாழுதல்; தீது - கெடுதல் \ கேடு \ அழிவுமாம்; ஆதி - பழமையான)

குற்றமும் அழிவும் இல்லாத பெரிய கிளைகள் செழித்து வளர்ந்திருப்பதால் இவை வேதம் என்றும் கூறும் தகுதி படைத்தன. வான மண்டலத்தினும் மேலே உயர்ந்தன; இவ்வுலகில் பழமையான அண்டப் பேரண்டங்களைப் படைத்த தலைவனான பிரமதேவன் தனது சத்திய உலகத்தில் ஏறிச் செலுத்துகின்ற அவனுடைய வாகனமாகிய அன்னப்பறவை தனது பெட்டை அன்னத்தோடு, இம்மரங்களின் கிளைகளின் இடத்தில் தங்கி வாழும் இயல்பு படைத்தன.

நான்கு வேதங்களும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குச் சாகைகள் என்று பெயர்; சாகை என்ற சொல்லுக்குக் கிளைகள் என்றும் பொருள் உண்டு; சாகை என்பது சாகா என்ற வடசொல்லின் திரிபு. எவ்வாறு வேதங்களின் பகுதிகள் அழியாதும், அளவற்றதாயும் திகழ்கின்றனவோ, அவ்வாறே இம்மராமரங்களின் கிளைகளும் அழியாதும் ஒரு கேடும் இல்லாதும், எண்ணிக்கையில் அளவற்றதாயும் இருப்பதால், இம்மராமரங்கள் வேதங்கள் என்று கூறும் தகுதியைப் பெறுகின்றன என்பதாம். இம்மராமரங்களின் உயர்ச்சியைக் கூறவந்த கவிஞன், பிரமன் வாழ்கின்ற சத்திய லோகத்தில் அவனது வாகனமான அன்னம் தன் பெண் அன்னத்தோடு இம்மரக்கிளைகளில் வாழும் அளவு உயர்ந்தது என்று உயர்வு நவிற்சியால் கூறினான் என்க.

8. நாற்றம் மல்கு போது, அடை, கனி, காய் முதல் நானா
வீற்று, மண்தலத்து யாவையும் வீழ்கில, யாண்டும்
காற்று அலம்பினும், கலிநெடுவானிடைக் கலந்த
ஆற்றின் வீழ்ந்து போய், அலை கடல் பாய்தரும் இயல்ப. (3976)

(அலம்புதல் - அசைத்தல்; நாற்றம் - நறுமணம்; மல்க - மிக்க; போது - மலர்கள்; அடை - இலைகள்; நானா - பலவிதமான; கலி - ஆரவாரம்; பாய்தருதல் - சேருதல்; இயல்ப - தன்மையுடையன; ஈற்று - முடிய \ முழுவதும் \ அனைத்தும்; ஆறு - ஆகாய கங்கை)

காற்று பலமாக வீசியடித்தாலும் கூட, இங்குள்ள மரங்களிலிருந்து நறுமணம் மிக்க மலர்கள், இலைகள், பழங்கள், காய்கள் முதலிய பலகைப்பட்ட அனைத்தும். பூமித்தரையில் எதுவும் விழுவதில்லை; அவையெல்லாம் ஆரவாரம் மிக்க நீண்ட வானுலகத்தில் செல்லுகின்ற ஆகாய கங்கையில் விழுந்து, அங்கிருந்து அடித்துக் கொண்டுபோய் அலைகளையுடைய கடலில் கலக்கின்ற தன்மையை உடையன.

- இம்மரங்கள் ஆகாய கங்கையினும் உயரமானவை என்பதும், இதில் பூக்கும் மலர், காய், கனி, இலைகள் முதலியன, பெருங்காற்று அடித்தாலும் உதிர்ந்து தரையில் விழாது. ஆகாய கங்கையில் தான் வீழும் அவை அடித்துக் கொண்டுபோய் கடலில் கலந்து விடும் என்பதாம்.

9. அடியினால் உலகு அளந்தவன் அண்டத்துக்கு அப்பால்,
முடியின் மேல் சென்ற முடியன, ஆதலின் முடியா
நெடிய மால் எனும் நிலையன; நீரிடைக் கிடந்த
படியின் மேல் நின்ற, மேருமால் வரையினும் பரிய. (3977)

(முடி - கிரீடம்; முடி - நுனி \ உச்சி; முடியா - அழிவில்லாத; படி - பூமி; நிலை - தோற்றம்)

முன்பு தன் திருவடிகளால் உலகை அளந்த போது திருமாலின் திருமுடி அண்டத்துக்கு அப்பாலும் போய் நின்றது போன்று, இம்மராமரங்களின் உச்சியும் அண்டத்திற்கு அப்பால் போய் நிற்கும் தன்மையன; எனவே, அழிவில்லாத பெரிய திருமாலின் தோற்றத்தை உடையன; இம்மராமரங்கள் கடல் நீரால் சூழப்பட்டுக் கிடக்கும் இப்பூமியின் மேல் நிலைத்து நிற்கின்ற பெரிய மேரு மலையைக் காட்டிலும் பழமையானதும், பருமையானதுமாகும்.

மராமரங்களின் உயரமும், பருமையும் மீண்டும் சிறப்பிக்கப்படுகிறது. திருமால் திருவிக்கிரமாவதாரம் எடுத்த பொழுது அவரது முடி அண்டமுகட்டுக்கும் அப்பால் உயர்ந்து நின்றது போல்; இம்மரங்களும் அண்டமுகட்டுக்கு அப்புறத்தே உயர்ந்து நின்றன. மேருமலை, பூமி படைக்கப்பட்டபோதே அதற்கு ஆதாரமாகப் படைக்கப்பட்டது. ஆனால் இம்மராமரங்கள் அதற்கும் முன்பிருந்தே இருக்கின்றன என்பதாம். நீரிலிருந்து தான் பூமி உண்டாயிற்று. எனவே "நீரிடைக் கிடந்த படி" என்றார்; இன்னும் ஒன்று இப்பூமி மூன்று பகுதி நீரால் சூழப்பட்டது. எனவே நீரில் கிடந்த பூமி என்றார் என்பதும் ஒன்றும். "படிவட்டத் தாமரை வண்டு உலக நீரேற்றி, அடிவட்டத்தால் அளப்ப, நீண்ட முடி வட்டம் ஆகாயம் ஊடறுத்து அண்டம் போய் நீண்டதே, மாகாயமாய் நின்ற மாற்கு" என்பது பேயாழ்வார் திருவந்தாதி.

10. வள்ளல் இந்திரன் மைந்தற்கும், தம்பிக்கும் வயிர்த்த
உள்ளமே என, ஒன்றின் ஒன்று உள் வயிர்ப்பு உடைய;
தெள்ளு நீரிடைக் கிடந்த, பார் சுமக்கின்ற சேடன்,
வெள்ளி வெண்படம் குடைந்து, கீழ்போகிய வேர. (3978)

(வள்ளல் - வரையாது கொடுப்பவன்; வயிர்த்த - பகைமை முற்றிய; வயிர்ப்பு - உறுதித்தன்மை; நீர் - கடல்; குடைதல் - கிழித்தல் \ துளைத்தல்; வேர - வேரினை உடையவை)

வள்ளல் தன்மை கொண்ட இந்திரனின் மைந்தனாகிய வாலியும், அவனுடைய தம்பியான சுக்கிரீவனும் முற்றிய பகைமை கொண்டிருக்கும் மனத்தை உடையது போல, இம்மராமரங்களும் ஒன்றிற்கொன்று உள்ளே வயிரம் பாய்ந்த தன்மையுடையனவாக உள்ளன; தெளிந்த திருப்பாற்கடலின் கீழ் இருந்து இப்பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடன் என்னும் பாம்பின் வெள்ளி போன்ற வெண்மையான படத்தையும் துளைத்துக் கொண்டு, பாதாளத்திற்கும் கீழே ஊடுருவிச் செல்லுகின்ற வேர்களை உடையவை இம்மராமரங்கள்.

அம்மராமரங்களின் வயிரம் பாய்ந்த உறுதியான தன்மைக்கு, வாலி, சுக்கிரீவனின் பகைமை முற்றிய உள்ளங்கள் உவமை; அவற்றின் வேர்களோ பாதாளத்தையும் துளைத்துச் செல்லும் தன்மை படைத்தன. சேடன் என்ற சொல், எல்லாரும் அழிந்த போதும் தான் அழியாது எஞ்சி நிற்பவன் என்ற பொருளைக் குறிக்கும்

11. சென்று திக்கினை அளந்தன பணைகளின்; தேவர்
என்றும் நிற்கும் என்று இசைப்பன; இருசுடர் திரியும்
குன்றினுக்கு உயர்ந்து அகன்றன; ஒன்றினும் குறுகா;
ஒன்றினுக்கு ஒன்றின் இடை, நெடிது யோசனை உடைய. (3979)

(பணை - கிளைகள்; இசைத்தல் - சொல்லுதல்; இருசுடர் - சூரிய சந்திரர்கள்; நெடிது - பல; திரிதல் - சுற்றிவருதல் \ சஞ்சரித்தல்; குறுகுதல் - குறைதல்)

அம்மராமரங்களின் கிளைகள் விரிந்து பரந்து எல்லாத் திக்குகளையும் அளந்தன; தேவர்கள் "இம்மராமரங்கள் என்றும் நிலைத்து நிற்கும்; அழிவில்லாதவை" என்று கூறத் தகுதி வாய்ந்தன. சூரிய, சந்திரர் உதிக்கின்ற, மறைகின்ற மேரு மலை என்னும் மலையைக் காட்டிலும் உயர்ந்தன, அகன்றன, எவற்றாலும் குறைவுபடாத தன்மையன; இவை ஒவ்வொன்றிற்கும் உள்ள இடைவெளி பல மைல்கள் தூரம் கொண்டன.

முன் பாடல்களில் உயரம், பருமை, வேரின் ஆழம் முதலியவற்றைக் கூறிய கவிஞன், இப்பாடலில் பரந்த தன்மையையும், அவை ஒவ்வொன்றிற்கும் உள்ள இடைவெளியினையும் குறிப்பிடுகிறான். அம்மரங்களின் கிளைகள் திக்குகளின் எல்லைவரை பரந்து அகன்றன என்றும் இவை நெருக்கமாக இல்லாது ஒவ்வொன்றிற்கும் உள்ள இடைவெளி பல மைல்கள் தூரம் உடையன என்றும் குறிக்கிறான். யோசனை என்பது இன்றைய நீட்டலளவைப்படி பத்து மைலைக் குறிக்கும். இதை நான்கு காத தூரம் என்றும் நான்கு குரோச தூரம் என்றும்

கூறுவர். மேருமலையைச் சூரிய சந்திரர்கள் சுற்றிவருகிறார்கள் என்பது புராண வரலாறு. இவர்கள் உதிக்கும் இடம் உதயகிரி என்றும், மறையும் இடம் அஸ்தமன கிரி என்றும் வழங்கப்படுகிறது.

12. இராமன் நாண் ஒலி எழுப்புதல்

ஆயமாமரம் அனைத்தையும் நோக்கி நின்று, அமலன்
தூய வார்கணை துரப்பது ஓர் ஆதரம் தோன்ற,
சேய வானமும், திசைகளும் செவிடுஉற, தேவர்க்கு
ஏய்வு இலாதது ஓர் பயம் வர, சிலையின் நாண் எறிந்தான். (3980)

(வார் - நீண்ட; கணை - அம்பு; ஆதரம் - விருப்பம்; சேய் - தூரத்தில் உள்ள; ஏய்வு - பொருத்தம்; எறிதல் - சுண்டுதல்; அமலன் - குற்றமற்றவன்; துரப்பது - எய்வது \ தூண்டுவது \ செலுத்துவது; ஆய - அத்தகைய; பயம் - அச்சம்)

அத்தகைய உயர்ந்த, பருத்த, நீண்ட, அகன்ற, ஆழமான, விரிந்த, சிறந்த பெரிய மராமரங்கள் ஏழையும், ஒரு சேரப்பார்த்து நின்றவனான, குற்றமற்றவனான இராமபிரான் தனது தூய்மையான நீண்ட அம்பினைச் செலுத்தும் ஒரு விருப்பம் உண்டாக, மிகவும் தூரத்திலுள்ள வானுலகத்தவரும், எட்டுத்திசைகளிலும் உள்ளவர்களுடைய காதுகளும் செவிடு ஆகும் படியும், தேவர்கள் இதுவரை அடைந்து பழக்கம் இல்லாத ஒருவகை அச்சம் அவர்களைத் தொற்றிக் கொள்ளும்படியும், வில்லை நாணேற்றி ஒலி செய்தான்.

இராமன் தனது தூய்மையான நீண்ட வில்லில் நாணை ஏற்றி ஓசையெழுப்பியது, வானுலகத்தவர்களும் எல்லாத் திக்குகளில் உள்ளனவுமாகிய எல்லா உயிரினங்களின் காதுகளையும் செவிடாக்கியது; தேவர்கள் இதுவரை இத்தகைய ஒரு ஒலியைக் கேட்டிராததால், ஒருவகை அச்சத்தையும் அவர்களுக்கு உண்டாக்கியது என்று இராமனின் நாண் ஒலியினைச் சிறப்பித்தார் என்க.

13. நாண் ஒலியின் விளைவு

ஒக்க நின்றது எவ்வுலகமும் அங்கு அங்கே ஓசை;
பக்கம் நின்றவர்க்கு உற்றது பகர்வது எப்படியோ?
திக்கயங்களும் மயங்கின; திசைகளும் திகைத்த;
புக்கு, அயன்பதி சலிப்பு உற ஒலித்தது, அப்பொரு வில். (3981)

(ஒக்க - ஒரே தன்மையாக; கயங்கள் - கஜங்கள் \ யானைகள்; திசைத்தல் - கலங்குதல்; அயன்பதி - பிரமலோகம் \ சத்திய லோகம்; சலிப்பு - அதிர்ச்சி; திக் - திக்கு)

“இராமபிரான் எழுப்பிய பொருதற்குரிய வில்லினின்று எழுந்த நாண் ஓசை, எல்லா உலகங்களிலும் சென்று ஒரே தன்மையாகப் பரவி நின்றது. எட்டுத்திசைகளையும் காவல் காத்து வரும் திக்கஜங்களும் மயக்கமடைந்தன. நான்கு திசைகளும் திகைப்புற்றன; மிகச் சேய்மையிலுள்ள பிரமலோகத்திலும்

அவ்வொலி சென்று அதிர்ச்சியடையச் செய்தது. என்றால் அருகில் நின்றிருப்பவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதை எவ்வாறு கூறுவது?"

எட்டுத்திசை யானைகள் - ஐராவதம், புண்டரீகம், வாமனம், சார்வபௌமம், சுப்ரதீபம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம்; நாண் ஒலியை வடமொழியில் "குணத்வனி" என்பர். குணம் என்பது நாண் அல்லது கயிற்றைக் குறிக்கும்; தொனி - ஓசை; எட்டுத் திசைகள் - வடக்கு, வடகிழக்கு; கிழக்கு, தென்கிழக்கு; தெற்கு, தென்மேற்கு; மேற்கு, வடமேற்கு என்பன. இவற்றைக் காத்துவரும் திக்கு பாலகர்கள். கிழக்கு - இந்திரன்; தென்கிழக்கு - அக்னி; தெற்கு - இயமன்; தென்மேற்கு - நிருதி; மேற்கு - வருணன்; வடமேற்கு - வாயு; வடக்கு - குபேரன் வடகிழக்கு - ஈசானன்.

14. அரிந்தமன் சிலை நாண் நெடிது ஆர்த்தலும், அமரர்
இரிந்து நீங்கினர்; கற்பத்தின் இறுதி என்று அயிர்த்தார்;
பரிந்த தம்பியே பாங்கு நின்றான்; மற்றைப் பல்லோர்
புரிந்த தன்மையை உரைசெயின், பழி அவர்ப் புணரும். (3982)

(அரிந்தமன் - பாவத்தைப் போக்குபவன் \ பகைவர்களை அடக்குபவன்; இரிதல் - நிலைகெட்டு ஓடுதல்; கற்பம் - யுகமுடிவு; அயிர்த்தல் - ஐயுறுதல்; பரிந்த - அன்பு கொண்ட; பாங்கு - அருகில்; பழி - இகழ்ச்சி \ இழுக்கு; புணர்தல் - வந்து சேருதல்; நெடிது - நீண்ட நேரம் \ பெரிதாக)

பகைவர்களை அடக்குபவனும், பாவங்களைப் போக்குபவனுமான இராமபிரான் எழுப்பிய நிண்ட நாண் ஒலியைக் கேட்டதும் தேவர்கள், ஊழிமுடிவுக்காலம் தான் வந்துற்றதோ என்று ஐயம் கொண்டு, தத்தம் இடங்களினின்று நிலைகெட்டு ஓடுவாராயினர். இராமபிரான் மீது பேரன்பு கொண்ட தம்பி இலக்குவன் மட்டுமே அவன் அருகில் நின்றிருந்தான்; அங்கு நின்றிருந்த மற்றவர்களான சுக்கிரீவன் முதலியோர் செய்த செயலைக் கூறத் தொடங்கினால், அது அவர்கள் புகழுக்கு இழுக்கு உண்டாக்கும். எனவே சொல்லாது விடுக்கிறோம்.

தேவர்களும், மற்றையோர்களும் ஓடி ஒளிய, இலக்குவன் மட்டும் அஞ்சாது அங்கே நின்றிருப்பதற்குக் காரணம், அவன் இதுபோல் இராமபிரான் எழுப்பிய நாண் ஒலியை முன்பும் பலமுறை கேட்டிருந்ததனால்தான் என்க. நாண் ஒலியின் சிறப்பு மிகுத்து உரைக்கப்பட்டது என்க.

15. இராமன் மராமரங்களின் மீது அம்பு எய்தல்

"எய்தல் காண்டும் கொல் இன்னம்", என்று, அரிதின் வந்து எய்தி,
பொய்இல் மாருதி முதலினோர் புகழ்வுறும் பொழுதில்,
மொய்கொள் வார் சிலை நாணினை முறை உற வாங்கி,
வெய்ய வாளியை, ஆளுடை வில்லியும் விட்டான். (3983)

(காண்டும் - பார்ப்போம்; அரிதின் - சிரமப்பட்டு; மொய் - வலிமை; வார் - நீண்ட; வாங்கி - இழுத்து; வெய்ய - கொடிய; வாளி - அம்பு; ஆளுடை - அடியவர்களாய்க் கொண்டுள்ள)

பொய்யில்லாத அனுமன் முதலியோர், சற்றுதேறி, இராமபிரானைச் சூழ்ந்து கொண்டே, "இன்னும் இவன் அம்பு தொடுத்தலையும் காண்போம்" என்று கூறிக் கொண்டே வந்த போது, வலிமை பொருந்திய நீண்ட வில்லின் நாணை முறைப்படி இழுத்து, கொடிய அம்பு ஒன்றினைத் தொடுத்தான், என்னை அடியவனாகக் கொண்டுள்ள, வில்லாற்றலில் மேம்பட்ட இராமபிரான்".

அச்சம் கொண்டு ஓடியவர்களில் அனுமன் முதலிய ஒருசிலரே, மனத்தைத் தேற்றிக் கொண்டு திரும்பி வந்தனர். எனவே "அரிதின் வந்து எய்தி" என்றார். இப்போது இராமன் மராமரத்தை நோக்கித் தொடுத்த அம்பு, அவனுக்கு அகத்தியரால் கொடுக்கப்பட்ட நெருப்பு வடிவமாகிய "பாசுபதம்" என்னும் அம்பு என்றும் கூறுவர். "ஆளுடை வில்லி" என்று இங்கே கம்பன் இராமபிரானை நோக்கிக் கூறுவது போல் காப்பியத்தில் பல இடங்களிலும், "ஆளுடை ஐயன்" "ஆளுடை நாயகன்" "ஆண்டான், ஆண்ட நாயகன்" என்றும் கூறியிருப்பதைக் காண்க. மற்ற காப்பிய கர்த்தாக்களும், "ஆளுடைபிள்ளை, ஆளுடை அரசு, ஆளுடை நம்பி, அடிகள்" எனச் சிறப்பித்திருப்பதும் நோக்கத் தகும். வில்லின் நாண் நன்கு பூட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வண்ணம், அந்த நாணைத் தட்டிப் பார்ப்பதைத்தான் நாண் ஏற்றுதல் என்று கூறுவர்.

16. அவ்வம்பு மராமரத்தைத் துளைத்தல்

ஏழு மாமரம் உருவி, கீழ் உலகம் என்று இசைக்கும்
ஏழும், ஊடுபுக்கு, உருவி, பின் உடன் அடுத்து இயன்ற
ஏழ் இலாமையால் மீண்டது, அவ்விராகவன் பகழி;
ஏழு கண்டபின் உருவுமால், ஒழிவது அன்று இன்னும். (3984)

(மாமரம் - பெரிய சிறந்த மராமரங்கள்; உருவுதல் - துளைத்தல்; அடுத்து - அப்பால்)

இராமன் ஏவிய அந்த அம்பு, ஏழு மராமரங்களையும் துளைத்துச் சென்று, பின்னர் அதற்கு அப்பால் பொருந்தியதான ஏழு என்ற எண்ணிக்கை கொண்ட வேறு ஒன்றும் இல்லாததால், அவற்றைத் துளைக்காது, இராமபிரானின் அம்பு புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்துவிட்டது. எனினும், இன்னும் கூட ஏழு என்ற எண்ணிக்கை கொண்ட வேறு எதனையாவது பார்த்தாலும் துளைத்துவிடும்; துளைக்காமல் விடாது.

கீழ் உலகங்கள் ஏழு. அதலம், விதலம், சுதலம், தராதலம், இராசாதலம், மகாதலம், பாதலம் என்பனவாம். "பாதலம் ஏழும் உடனே நெடுங்கணை பட்டு உருவ. பூதலம் ஏழும், ஏழு பாதாளங்களும் புண்பட்டவே" என்பார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்னும் மணவாளதாசர். இவ்வாறு இராமபிரான் எய்த அம்பு "சப்த ஜாதி" என்றும் கூறுவர். இங்கே ஒரு செய்தி. பொதுவாக

படைக்கலன்களை அஸ்திர சஸ்திரங்கள் என்று கூறுகிறோம். ஆனால் இரண்டிற்கும் ஒரு வேறுபாடு உண்டு. அத்திரம் என்பது, தொடுத்ததன் பின்வெளியில் நின்று தங்கிவிடுவது. சஸ்திரம் என்பது இலக்கைத் துளைத்து, மீண்டும் எய்தவனின் அம்புப் புட்டிலை அடையும் தன்மையுடையது என்றும் கூறுவர். இராமனைப் போலவே, முருகப்பெருமானின் படைக்கலன்களும் மீண்டும் புட்டிலில் புகும் ஆற்றல் படைத்தவை என்பதையும் நினைவிற் கொள்க.

17. ஏழு என்ற அளவை கொண்ட அனைத்தும் அஞ்சுதல்

ஏழு வேலையும், உலகம் மேல் உயர்ந்தன ஏழும்,
ஏழு குன்றமும், இருடிகள் எழுவரும், புரவி
ஏழும், மங்கையர் எழுவரும், நடுங்கினர் என்ப,
"ஏழு பெற்றதோ இக்கணைக்கு இலக்கம்?" என்று எண்ணி. (3985)

(வேலை - கடல்; குன்றம் - குலமலைகள்; இருடி - ரிஷி \ முனிவர்கள்; புரவி - குதிரைகள்; மங்கையர் - சப்த கன்னியர்கள்; இலக்கம் - குறி)

ஏழு கடல்கள், மேலுலகம் ஏழு, எழு குலக்கிரிகள், சப்த கன்னியர்கள், ஆகிய எல்லோரும், இவ்வம்பிற்கு இலக்கானவர். ஏழு என்ற அளவை கொண்ட எல்லாப் பொருட்களும் நடுக்கமுற்றன.

ஏழுகடல்கள் - உவர்நீர் நன்னீர்; பால், தயிர், நெய், தேன்(மது), கருப்பஞ்சாறு என்பன. மேல் உலகங்கள் ஏழு - பூலோகம், புவர்லோகம், சுவர்கலோகம், ஜனலோகம், மகாலோகம், தவலோகம், சத்திய லோகம் என்பன; ஏழு குலமலைகள் - கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்ற கந்தமாதனம் என்பன; ஏழு முனிவர்கள், சப்தரிஷிகள் - அத்திரி, பிருகு, குச்சர், வசிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கீரசர் என்பவர்; சூரியனின் ஏழு குதிரைகள் - காயத்ரி; உஷ்ணிக், அனுஷ்டுப், ப்ரஹ்தீ, பாங்க்தீ; திரிஷ்டுப், ஜகதீ என்பன. இவை வேத சந்தசுகள் எனவும் வழங்கப்பெறும்; ஏழு மங்கையர், சப்த கன்னிகைகள் - பிராஹ்மி மஹேஸ்வரி, நாராயணி, கௌமாரி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்பவர். இவற்றுடன் தொர்புடைய மற்றயை ஏழு எண்ணிக்கைகள் கொண்டவை. ஏழு தீவுகள் - நாவலந்தீவு, இறலி, குசை, கிரௌஞ்சம், புஷ்கரம், தெங்கு, கமுகு என்பன. ஏழு நதிகள் - கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, காவேரி, குமரி என்பன. ஏழு மேகங்கள் - ஆவர்த்தம், புஷ்கலாதவர்த்தம், சம்வர்த்தம், சம்கார்த்தம், காளமுகி, துரோணம், நீலவர்ணம் என்பன.

இராமபிரானின் அம்பின் ஆற்றல் முன்பு பல இடங்களிலும், பின்பு பல இடங்களிலும் சிறப்பிக்கப்படுவதைக் காப்பியப் போக்கில் காணலாம். இவ்வாறு ஒரே அம்பு கொண்டு, பலவற்றை அடித்து வீழ்த்தும் அரிய வில்லாற்றலை "வல்வில் வேட்டம்" என்பர். சங்ககாலத்தில் ஓர் அரசனுக்கு "வல்வில் ஓரி" என்ற பெயர் இருந்ததும் இங்கு நினைவு கூரத்தகும். ஓரி என்பது ஒரே சமயத்தில் பலபொருள்களை ஊடுருவிச் செல்லும் ஆற்றலுடைய வில்லை உடையவன் என்று பொருள்படும்.

18. சுக்கிரீவன் வியந்து பேசுதல்

அன்னது ஆயினும், அறத்தினுக்கு ஆருயிர்த்துணைவன்
என்னும் தன்மையை நோக்கினர் யாவரும், எவையும்;
பொன்னின் வார்கழல் புது நறும் தாமரை பூண்டு,
சென்னிமேல் கொண்ட, அருக்கன் சேய், இவை இவைசெப்பும். (3986)

(துணைவன் - பாதுகாவலன்; அருக்கன் - சூரியன்; வார் - நீண்ட; சென்னி - தலை)

இராமபிரானின் பகழி அவ்வாறு எல்லோருக்கும், யாவற்றிற்கும் அச்சம் ஊட்டுவதாக அமைந்ததாயினும், தர்மத்திற்கு அரிய உயிர் போன்ற பாதுகாவலனாகிய இராமபிரானின் இயல்பான தன்மையைக் கருதி, எல்லோரும் அச்சம் நீங்கப்பெற்றனர்; சூரியனின் புதல்வனான சுக்கிரீவன், பொன்னாலான நீண்ட வீரக்கழலணிந்த, அன்றலர்ந்த மலர்போலும், மணம்மிக்க தாமரை மலர்போன்ற இராமபிரானது திருவடிகளைத் தன் தலைமேல் ஏற்றுக்கொண்டு, பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

இராமபிரானின் அம்பு, அறம் அல்லாதனவற்றையே தாக்கும் இயல்புடையது. அறத்தின் பாற்பட்டவை எவற்றையும் ஒன்றும் செய்யாது என்று துணிந்து, “அச்சம் நீங்கினர்” எனப்பட்டது. இவ்வம்பினால் பகைவர்கள் அழிவரே அல்லாது அடியவர்கள் துன்பம் உறார் நலமே பெறுவர் என்பதாலும் அச்சம் நீங்கினர் என்றார் என்க.

19. சுக்கிரீவன் வியந்து பேசுதல்

“வையம் நீ; வானும் நீ; மற்றும் நீ; மலரின் மேல்
ஐயன் நீ; ஆழிமேல் ஆழி! வாழ் கையன் நீ!;
செய்ய தீ அனைய அத் தேவும் நீ; நாயினேன்
உய்யவந்து உதவினாய், உலகம் முந்து உதவினாய்!” (3987)

(வையம் - உலகம் \ பூமி \ நிலம்; மற்றும் - பிறவான தீ, நீர், காற்று; முதலியன ஐயன் - பிரமன் \ தலைவன்; ஆழி - திருப்பாற்கடல்; ஆழி - சக்கரப்படை; செய்யன் - செந்நிறத்தவன் \ சிவன்; தெறுதல் - அழித்தல் \ பொடிசெய்தல்; தேவு - தெய்வம்; முந்து - முன்பு; உதவுதல் - தந்தருளுதல் \ படைத்தல்; உய்ய - நற்கதி அடைய; உதவுதல் - அருள் செய்தலுமாம்)

இராமபிரான் அம்பின் ஆற்றலைக் கண்ட சுக்கிரீவன், இராமபிரானை நோக்கி, “பூமியும் நீயே! ஆகாயமும் நீயே ! பஞ்ச பூதங்களில் இவை ஒழிந்த மற்ற நீர், நெருப்பு, காற்று முதலியவையும் நீயே! தாமரைமலர் மேல் வீற்றிருக்கும் பிரமனும் நீயே! திருப்பாற்கடலில், பள்ளி கொண்டிருப்பவனும், சக்கரப்படையை ஏந்தியவனுமான திருமாலும் நீயே! சிவந்த தழல் மேனி எம்பிரான் சிவபெருமானும் நீயே! தீயவினைகளைப் போக்கும் தெய்வமாகிய பரம்பொருளும் நீயே! முன்பு உலகைப் படைத்தற்குக் காரணமானவனும் நீயே!

இப்பொழுது இந்த நாயினும் இழிந்தோனாகிய நான், நற்கதி அடையும் பொருட்டு என்னை நாடிவந்து அருள் செய்ததும் நீயே!" என்று துதித்தான் சுக்கிரீவன்.

பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய மூவருக்கும் மேலான பரம்பொருள் இராமபிரானே என்றும், ஐம்பூதங்களின் மொத்த உரு இராமபிரானே என்றும், தீவினைகளை அறுத்துப் பரமபதம் சேர்ப்பிப்பவன் இராமபிரானே என்றும் சுக்கிரீவன் துதித்தான் என்பதாம். இதுபோன்றே காப்பியத்தில், தண்டகவனத்து முனிவர்கள், விராதன், இந்திரன், கவந்தன், சபரி, வாலி முதலியவர்கள் துதித்தமையையும் நினைவிற் கொள்க. சிவபெருமானை "பவளம் போல் மேனி" என்பார் திருநாவுக்கரசர்; "பொன்னார் மேனியனே" என்பார் சுந்தரர்.

20. "என் எனக்கு அரியது, எப்பொருளும் எற்கு எளிதுஅலால்?
உன்னை இத்தலை விடுத்து உதவினார் விதியினார்;
அன்னை ஒப்புடைய உன் அடியர்க்கு அடியன் யான்.
மன்னவர்க்கு அரச!"என்று உரை செய்தான், வசையிலான். (3988)

(இத்தலை - இவ்விடம்; விதி - நல்லூழ்; வசை - பழி \ குற்றம்; எற்கு - எனக்கு)

குற்றமும் பழியும் இல்லாதவனாகிய சுக்கிரீவன், இராமபிரானை நோக்கி, "அரசர்களுக்கு எல்லாம் அரசனானவனே! நான் முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயன்தான் பரம்பொருளாகிய உன்னை இங்கு என்னிடத்தில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. எனவே, இனிமேல் என்னால் செய்ய முடியாதது என்று ஒரு காரியமும் இல்லை. எல்லாம் எளிதாகவே நடைபெறும். தாய்போன்ற அன்புடைய உன்னுடைய அடியவர்களுக்கெல்லாம் நானும் ஒரு அடியவனாக இருந்து உனக்குத் தொண்டாற்றுவேன்" என்றான் சுக்கிரீவன்.

தன் முன் வினைப்பயன் தனக்கு உதவியதால் அதனை "விதியினார்" என்று சிறப்பான மரியாதை கொடுத்து அழைத்தான் என்க.

21. ஆடினார் பாடினார் அங்கும் இங்கும் களித்து
ஓடினார்; உவகை இன்நறவை உண்டு, உணர்கிலார்;
"நேடினாம் வாலி காலனை" எனா, நெடிது நாள்
வாடினார் தோள் எலாம் வளர மற்றவர் எலாம். (3989)

(காலன் - இயமன்; நேடுதல் - தேடிப்பெறுதல்; நறவு - மது; வளர்தல் - பூரித்தல்)

வாலியின் கொடுமைகளுக்குப் பயந்து நீண்ட நாட்களாக மெலிந்து போயிருந்த மற்றக் குரங்குகள் எல்லாம், இப்போது வாலியினைக் கொல்லும் ஆற்றல் படைத்த இயமனைத் தேடிக் கண்டு பிடித்து விட்டோம் என்று மகிழ்ந்து, நலிந்து போயிருந்த தோள்கள் எல்லாம் பூரிப்படைய, மகிழ்ச்சி என்னும் மதுவை உண்டவர்களாய் உணர்வு தப்பி, மயங்கியவர்களாய் ஆடினார்கள், பாடினார்கள், அங்குமிங்கும் மகிழ்ச்சியால் ஓடித்திரிந்தார்கள்.

மராமரப்படலம் நிறைவுற்றது

5. துந்துபிப்படலம் (16 பாடல்கள்)

துந்துபி என்பவன் ஓர் அசுரன். அசுரத் தச்சன் மயனின் புதல்வன். முன்பு வாலியால் கொல்லப்பட்ட மாயாவியின் தம்பி. எருமையின் வடிவம் கொண்டவன். துந்துபியைப் போல் முழுங்கும் ஆற்றல் உடையவன். இவனது வரலாற்றையும், இவன் எலும்புக் கூட்டை இலக்குவன் எற்றியதையும் பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 16 பாடல்களைக் கொண்டது. இராமன் மராமரங்களைத் தொளைப்பதற்கு முன்பே இந்நிகழ்ச்சி நடந்ததாக வான்மீகமும், அத்யாத்மராமாயணமும் கூறும்.

இப்படலத்துள், மராமரத்தைத் துளைத்த பின்பு அவர்கள் செல்லும் வழியில் கிடந்த இந்தத் துந்துபியின் உலர்ந்து போன எலும்புக் கூடு பற்றி இராமன் சுக்கிரீவனிடம் வினவுதல்; சுக்கிரீவன் துந்துபியின் வரலாற்றைக் கூறுதல்; இராமன் இலக்குவனை ஏவுதல்; அதன்படி இலக்குவன் தன் கால் பெரு விரலால் அதனை எற்றுதல்; அது பிரமலோகம் சென்று மீண்டு வந்துவிழுதல்; இதனைக் கண்ட குரங்குக் கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. இராமன் துந்துபியின் எலும்புக் கூட்டைக் காணுதல்

அண்டமும் அகிலமும் அடைய, அன்று அனலிடைப்
பண்டு வெந்தன நெடும்பசை வறந்திடினும், வான்
மண்டலம் தொடுவது, அம்மலையின் மேல் மலை எனக்
கண்டனன், துந்துபி, கடல் அனான், உடல் அரோ! (3990)

(பசை - ஈரம்; வறழ்தல் - வற்றிக் காய்ந்து போதல்; அடைய - ஒருசேர)

மிகுந்த ஈரம் வற்றிப் போய்க் காய்ந்து கிடப்பதும், முன்பு ஊழித்தீயின் போது இவ்வண்ட கோளங்களும், உலகமும் ஒருசேர வெந்து கிடப்பது போன்று கிடப்பதுவும், வானளாவ உயர்ந்ததுவும், கடல்போலப் பரந்ததுவுமான, அந்த ருசிய மூக மலையின் மேல், மற்றொரு மலை கிடப்பது போன்ற துந்துபியின் எலும்புக் கூட்டை இராமன் பார்த்தான்.

அவன் எலும்புக்கூடு ஈரப்பசையில்லாது வெந்து கிடந்ததால், முன்பு ஊழித்தீயில் வெந்து போய்த் தோன்றிய அண்டங்களையும், உலகத்தையும் உவமித்தான். அவன் உடல் உயரம் வானைத் தொட்டதென்றும், உடல் பரப்பு, கடல் போல் பரந்தது என்றும் துந்துபியின் எலும்புக் கூட்டின் தன்மையைச் சிறப்பித்தார் என்க.

2. இராமன் வினவுதல்

"தென்புலக் கிழவன் ஊர் மயிடமோ? திசையின் வாழ்
வன்பு உலக் கரி மடிந்தது கொலோ? மகரமீன்
என்பு உலப்பு உற உலர்ந்தது கொலோ இது?" எனா.
"அன்பு உலப்பு அரிய நீ, உரை செய்வாய்!" என, அவன். (3991)

(தென்புலம் - தெற்குத்திசை; கிழவன் - தலைவன் \ உரிமையுடையவன்; ஊர்தல் - செலுத்துதல்; மயிடம் - எருமைக்கடா; வன்பு - வலிய; உலம் - கல்; என்பு - எலும்புக்கூடு; உலத்தல் - குறைதல் \ இறத்தல்; உலர்ந்தது - காய்ந்தது) (குளகப்பாடல்)

அந்த எலும்புக்கூட்டைப் பார்த்த இராமன், "இது தெற்குத்திசைக்குத் தலைவனாகிய இயமன் ஏறிச் செலுத்துகின்ற எருமைக் கடாவோ? அல்லது திக்குகளில் நின்று காவல் மேற்கொள்ளும் வலிய, திரண்ட கல்லைப் போன்ற யானை ஏதாவது இறந்து போய்விட்டதோ? அல்லது மகரம் என்றழைக்கப் படுகின்ற சுறாமீனின் எலும்புக்கூடு காய்ந்து போய்க்கிடக்கின்றதோ? என்று சுக்கிரீவனைப் பார்த்து, "அன்பில் சிறிதும் குறையாதவனே! நீ இது என்ன என்று கூறுவாயாக!" என்று கேட்டான்; அதற்குச் சுக்கிரீவன் - (பாடல் தொடர்கிறது).

மயிடம் என்பது மகிஷம் என்ற வடசொல்லின் தமிழாக்கம். மகரமீன் கடலில் செல்லும் மரக்கலத்தையும் கவிழ்க்கும் ஆற்றல் உடையது என்பர்.

3. சுக்கிரீவன் துந்துபியின் வரலாறு கூறுதல் (13 பாடல்கள்)

"துந்துபிப் பெயருடையச் சுடு சினத்து அவுணன் மீது
இந்துவைத் தொட நிமிர்ந்து எழு மருப்பு இணையினான்;
மந்தரக்கிரி எனப் பெரியவன்; மகர நீர்
சிந்திடக் கருநிறத்து அரியினைத் தேடுவான்". (3992)

(மீது - மேலே; இந்து - சந்திரன்; மருப்பு - கொம்புகள்; அவுணன் - அசுரன்; அரி - திருமால்; இணை - இரண்டு)

"மேலே ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற சந்திரனைத் தொடுமளவிற்கு உயர்ந்து வளர்ந்து இருக்கின்ற இரண்டு கொம்புகளை உடையவனும், மந்தர மலையைப் போன்று திரண்டு இருப்பவனும், தீப்போலக் கோபம் கொண்டவனும், "துந்துபி" என்னும் பெயருடையவனுமாகிய ஒரு அசுரன், சுறாமீன்கள் திரியும் கடல் நீரைக் கலக்கிச் சிதறும்படி செய்து, கரிய நிறமுடைய திருமாலைத் தேடிக் கொண்டு செல்வானாயினான்".

முன்பாடலில் மயிடமோ என இராமன் வினவியதாலும், இப்பாடலில் சுக்கிரீவன் "நிமிர்ந்து எழு மருப்பு இணையினான்" என்று கூறுவதாலும், துந்துபி எருமைக்கடா போன்ற உருவம் உடையவன் என்பது புலனாகின்றது.

4. "அங்குவந்து அரி எதிர்ந்து, அமைதி என்?" என்றலும்,
"பொங்குவெம் செருவினில் பொருதி" என்று உரைசெய,

"கங்கையின் கணவன், அக்கறைமிடற்று இறைவனே
உங்கள் வெங்கதவலிக்கு ஒருவன்", என்று உரைசெய்தான். (3993)

(அரி - திருமால்; அமைதி - அடங்குதல்; பொருதல் - சண்டையிடுதல்; மிடறு - கழுத்து; கதம் - கோபம்; கறை - விஷம்)

அப்போது அங்கே எதிரில் வந்த திருமால், துந்துபியை நோக்கி, "அமைதியாக இரு! நீ இங்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்டதும், துந்துபி "என்னோடு கிளர்ந்து எழுகின்ற கொடியதொரு போர் செய்ய வருவாயாக!" என்று உரைத்ததும்; திருமால்", "கங்கையின் கணவனாகியவனும், நஞ்சுண்ட கண்டமுடையவனுமான, நீலகண்டன் என்னும் சிவபெருமானே உங்களைப் போன்ற கொடிய சினமுடையவர்களின் வலிமைக்குத் தகுதியான ஒருவன் ஆவான்" என்று கூறினார்.

சிவபெருமானுக்குக் கங்கையும் ஒரு தேவி என்று கூறுவது மரபு.

5. "கடிது சென்று, அவனும், அக்கடவுள் தன் கயிலையைக்
கொடிய கொம்பினின் மடுத்து எழுதலும், குறுகி முன்,
"நொடிதி; நின்குறை என்?". என்றலும், நுவன்றனன் அரோ!
"முடிவுஇல் வெம்செரு எனக்கு அருள் செய்வான் முயல்க" எனா. (3994)

(கடிது - விரைந்து; மடுத்தல் - முட்டிப்பாய்தல்; குறுகி - முன்வந்து; முடிவுஇல் - தொலையாத; நுவல்தல் - கூறுதல்; நொடிதல் - சொல்லுதல்; செய்வான் - செய்யும் பொருட்டு)

"அதைக் கேட்ட அந்த துந்துபி என்னும் அவுணன், விரைந்து சென்று, அந்தச் சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாய மலையைத் தன் கொடிய கொம்பினால் முட்டி எழுந்ததும், சிவபெருமான் அவன் எதிரில் தோன்றி, "உனக்கு என்ன வேண்டும் சொல்லுவாயாக!" என்று கேட்டதும், துந்துபி, "முடிவேயில்லாத, தொடர்ந்த, போரினை எனக்குக் கிட்டும்படி செய்வாயாக" என்று வேண்டிக் கொண்டான்.

ஒரு வியப்பிற்குரிய வரம். ஒவ்வொருவரையும் வலியப் போருக்குச் சென்று அழைப்பது வியப்புத்தானே? "நான் இடைவிடாது போர் செய்து கொண்டிருக்கும்படி அருள்க" என்றான் என்பதாம்.

6. "மூலமே வீரமே மூடியானோடு போர்
ஏலுமே? தேவர்பால் ஏகு" எனா, ஏவினான்;
சாலநாள் போர் செய்வாய் ஆதியேல், சாரல்; போர்
வாலிபால் ஏகு "எனா, வானுளோர் வான் உளான்." (3995)

(மூலம் - ஆதி; ஏலுமோ - இயலுமோ; சால - மிகுந்த \ நீண்ட; சாரல் - சாராதே \ வாராதே; வானுளோர் வானுளான் - தேவதேவன் \ தேவேந்திரன்; மூடுதல் - மூழ்கிக்கிடத்தல்) (குளகப்பாடல்)

"ஆதி முதற்கொண்டு போர் செய்வதையே தொழிலாகக் கொண்டு அதிலேயே மூழ்கிக் கிடக்கும் உன்னோடு போர் செய்வது என்பது என்னால் இயலாது; எனவே நீ தேவர்களிடம் செல்வாயாக" என்று கூறி, துந்துபியை தேவர்களிடம் அனுப்பினான் சிவபெருமான். வானுலகத்திலுள்ள தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரன், "நீ மிக நீண்டநாட்களாக தொடர்ந்து போர் செய்வதை விரும்பினாயானால் இங்கே வாராதே; இது ஏற்ற இடமன்று. மண்ணுலகத்தில் போர் செய்வதற்குரிய வாலி என்பவனிடம் போய்ச் சேர்" என்று கூறி அனுப்பிவைத்தான்.

சிவபெருமான் துந்துபியை இந்திரனிடம் அனுப்ப, இந்திரன் அவனை வாலியிடம் அனுப்பி வைத்தான் என்பதாம்.

7. "அன்னவன் விட, உவந்து, அவனும் வந்து, "அரிகள்தம்
மன்னவன் வருக! போர் செய்க!" எனா, மலையினைச்
சின்ன பின்னப் படுத்திடுதலும், சினவி, என்
முன்னவன், முன்னர் வந்து, அனையவன் முனைதலும்." (3996)

(விட - அனுப்ப; அரி - குரங்குகள்; சின்னபின்னபடுத்துதல் - துண்டங்களாகத் தகர்த்தல் \ சிதைத்தல்; முன்னவன் - அண்ணன்; சினவி - கோபம்கொண்டு; முனைதல் - போர்செய்தல்) (குளகப்பாடல்)

"அவ்வாறு கூறி தேவேந்திரன் துந்துபியை அனுப்பிவிடவும், துந்துபி மகிழ்ந்து நேரே மண்ணுலகில் உள்ள கிட்கிந்தைக்கு வந்து, என் முன்னவனான வாலியை நோக்கி, "குரங்குகளின் அரசனே! வருக! என்னுடன் போர் செய்க!" என்று கூறி அம்மலையினைச் சிதைக்கத் தொடங்கியதும், வாலி மிகச் சினந்து, அவன் முன்பு வந்து அவனுடன் போர் செய்யத்தொடங்கியதும்" - பாடல் தொடர்கிறது.

சின்னபின்னம் என்பது சிறிதும் பெரிதுமான துண்டங்கள் என்று பொருள்படும். இதைக் கண்ட துண்டம் என்று கூறுவதும் வழக்கம்.

8. "இருவரும் திரிவுறும் பொழுதின், இன்னவர்கள் என்று
ஒருவரும் சிறிது உணர்ந்திலர்கள்; எவ்வுலகினும்
வெருவரும் தகைவிலர் விழுவர், நின்று எழுவரால்;
மருவ அருந்தகையர், தானவர்கள், வானவர்கள்தாம்," (3997)

(திரிவுறுதல் - சுற்றித்திரிதல்; வெருவரும் - அஞ்சும் படியான; தானவர் - அசுரர்கள்; வானவர் - தேவர்கள்; மருவ - நெருங்க; தகைமை - தன்மை)

இவ்வாறு துந்துபியும், வாலியும் இடசாரி வலசாரியாகப் போரிட்டுத் திரிந்த பொழுதில், இதில் யார் துந்துபி, யார் வாலி என்று சிறிது கூட உணர்ந்து கொள்ள முடியாத அளவு விரைந்து சுழன்று போரிட்டனர்; எல்லாஉலகத்தில் உள்ளோரும் இதனைக் கண்டு அஞ்சும் தன்மையதாய்க் கீழே விழுவார்கள், பின்னர் மீண்டும் எழுவார்கள்; எனவே அசுரர்களும், தேவர்களும் கூட அவர்கள் அருகில் செல்லும் தன்மையற்றிருந்தனர்.

ஒத்த உருவ அமைப்பும், வேகமும் கொண்டவர்கள் போர் செய்யும் போது அவர்களை இன்னின்னார் என்று பிரித்து அடையாளம் காண்பது எளிதன்று, இதுபோலவே, பின்னர் வாலியும் சுக்கிரீவனும் போரிடும்போதும், அவர்களில் யார் சுக்கிரீவன் யார் வாலி என்று பிரித்தறிய முடியாது தயங்கினான் இராமன் என்பதையும் நாம் காணப் போகிறோம்.

9. "தீ எழுந்தது விசும்புற; நெடுந்திசையெலாம்
போய் எழுந்தது முழக்கு; உடன் எழுந்தது புகை;
தோய நன் புணரியும், தொடர் தடங்கிரிகளும்,
சாய் அழிந்தன, அடித்தலம் எடுத்திடுதலால்." **(3998)**

(எடுத்து இடுதல் - தூக்கி வைத்தல்; அடித்தலம் - கால்கள்; விசும்பு - ஆகாயம்; முழக்கு - ஆரவாரம்; புணரி - கடல்; சாய் - அழகு \ ஒளி; தோயம் - நீர்நிலைகள்; தடம் - இடம் அகன்ற)

"துந்துபியும் வாலியும் உக்கிரமமாகப் போரிடும் பொழுது தம் கால்களைத் தூக்கி வைப்பதனால் தரையினின்றும் தீ எழுந்து ஆகாயமளவு உயர்ந்தது; அவர்கள் செய்த பேராரவாரம் திசைகளின் எல்லை வரை சென்று ஒலித்தது; கூடவே புகையும் எழுந்தது நீர்நிலைகளும், நன்னீர்க் கடல்களும், இடமகன்ற தொடர் மலைகள் எல்லாம் தத்தம் ஒளியையும் அழகையும் இழந்தன."

சாய் என்பது அழகு, ஒளி, நிழல், புகழ், நிறம் என்ற பலபொருள்கள் குறித்த ஒருசொல்.

10. "புயலும், வானகமும், அப்புணரியும், புணரிசூழ்
அயலும், வீழ்தூளியால், அறிவ அரும் தகையவாம்,
மயனின் மாமகனும், வாலியும், மறத்து உடலினார்
இயலும் மாமதியம் ஈர்ஆறும் வந்து எய்தவே." **(3999)**

(தூளி - துகள்; புயல் - மேகம்; ஈராறு மதியம் - பன்னிரண்டு மாதங்கள் \ ஓராண்டு; மறத்து - வலிமையோடு; உடலினார் - போர்செய்தனர்)

"அவர்கள் இருவரும் போர் செய்ததனால் எழுந்த துகள்கள், மேகத்தையும், ஆகாயத்தையும், கடலையும், கடல்சூழ்ந்த பக்கங்களையும், அறிய முடியாதபடி ஆக்கின; இவ்வாறு மயனின் சிறந்த மகனான துந்துபியும், வாலியும் வலிமையோடு போர் செய்து கொண்டிருந்தபோது ஓராண்டுக் காலம் முடிவுற்றது."

இருவரும் ஓராண்டுக் காலம் தொடர்ந்து போர் செய்தனர் என்பதாம்.

11. "அற்றதாகிய செருப் புரிவுறும் அளவினில்,
கொற்ற வாலியும், அவன் குவவுத் தோள் வலியொடும்
பற்றி, ஆசையின் நெடும்பணை மருப்பு இணை பறித்து,
எற்றினான்; அவனும் வான் இடியின் நின்று உரறினான்." **(4000)**

(அற்றது - அப்படிப்பட்டது; செரு - போர்; கொற்றம் - வெற்றி; குவவு - திரண்ட; ஆசை - திசை \ திக்கு; பணை - பருத்த; மருப்பு - கொம்புகள்; பற்றி - பிடித்து;

பறித்து - பிடுங்கி; எற்றுதல் - தாக்குதல் \ அடித்தல்; வான் - மேகம்; உரற்றுதல் - முழங்குதல்)

"அத்தன்மையதாய்ப் போர் நடந்து கொண்டிருக்கும் பொழுது, வெற்றி வீரனான வாலியும் தன்னுடைய திரண்ட தோள்களின் வலிமையால், திசைகளின் எல்லை வரை நீண்டதும், பருத்ததுமான துந்துபியினுடைய இரண்டு கொம்புகளையும் பிடித்துப் பிடுங்கி அதனைக் கொண்டே அவனைத் தாக்கினான். துந்துபியும், மேகத்திலுள்ள இடியைப் போல முழக்கமிட்டுக் கொண்டு நின்றான்."

12. "தலையின் மேல் அடிபடக் கடிது சாய் நெடிது தாள்
உலைய, வாய் முழை திறந்து, உதிர ஆறு ஒழுக, மா
மலையின் மேல் உரும் இடித்து என்ன, வான் மண்ணொடும்
குலைய மாதிசைகளும் செவிடுறக் குத்தினான்." (4001)

(கடிது - விரைந்து; நெடிது - நீண்ட; உலைதல் - ஒடிதல்; முழை - குகை; உதிரம் - குருதி \ இரத்தம்; குலைதல் - நடுங்குதல்; உரும் - இடி)

பெரிய மலையில் இடி இடித்தது போல வாலி, ஓங்கி ஒரு குத்துக் குத்தினான். அதனால் அவ்வசுரனின் தலையில் அடிபட்டது; பெரிய கால்கள் விரைவில் சாய்ந்து விழுந்தன; குகை போன்ற வாயைத்திறந்து கொண்டு இரத்த ஆறு ஓடலாயிற்று; வானுலகும் மண்ணுலகத்தோடு நிலைகுலைந்தது. பெரிய திசைகள் எல்லாம் செவிடு ஆயின."

வாலியின் ஒரு குத்தின் வலிமை புலப்படுத்தப் பட்டது. இவன் குத்தியது மலையின் உச்சியில் இடி விழுந்தது போல இருந்தது. அப்பொழுது துந்துபி தலையடிபட்டுக் கால்கள் தளரக் கீழே சாய்ந்தான்; வாயிலிருந்து இரத்தம் ஆறாகப் பெருகி ஓடிற்று; வானமும், உலகமும் நிலை தடுமாறின. திசைகளும் அதிர்ச்சியுற்றதால் செவிடாகிப் போயின என்பதாம்.

13. "கவரி இங்கு இது" எனக் கரதலம் கொடு திரித்து,
இவர்தலும், குருதிபட்டு இசைதொறும் திசைதொறும்,
துவர் அணிந்தன எனப் பொசி துதைந்தன; துணைப்
பவர் நெடும்பணை மதம் பயிலும் வன்கரிகளே." (4002)

(கரதலம் - கைகள்; கவரி - சாமரை \ எருமையுமாம்; திரித்து - சுழற்றிக் கொண்டு; இவர்தல் - உலாவுதல் \ நடத்தல்; துணை - இரண்டு; பவர் - நெருங்கிய; பணை - கொம்புகள் \ தந்தங்கள்; வன் - வலிய; துவர் - பவளம் \ சிவப்பு; பொசி - உதிரக்கசிவு; துதைதல் - அடர்ந்து படிதல்; பயிலுதல் - பெருக்குதல் \ ஒழுகுதல்)

"இது ஒரு சாமரை" என்று கண்டவர்கள் கூறும் வண்ணம் அவ்வாறு எழுந்த துந்துபியின் உடலை, வாலி தன் கைகளில் எடுத்துச் சுழற்றிக் கொண்டு உலாவி வரும்போது, அவ்வசுரனின் உடலினின்றும் தெரித்த உதிரக்கறை, திசைகள் எல்லாவற்றிலும், ஒன்றுக்கொன்று இணையான இரண்டு நெருங்கிய நீண்ட

தந்தங்களையுடையனவும், மதநீர் பெருக்குகின்றனவுமாகிய வலிய யானைகள் மேல்படிந்தது. அவ்உதிரக்கசிவினால் யானைகள் சிவப்பு ஆடைகளை அணிந்திருந்தன போல் தோற்றமளித்தன.

விழுந்து கிடந்த துந்துபியைத் தன் கைகளால் எடுத்துச் சுழற்றி உலாவினான் என்பதால் அவன் வலிமையும், துந்துபியின் இப்போதைய எளிய நிலையும் புலப்படுத்தப்பட்டது என்க. சாமரை என்பது விசிறியைக் குறிக்கும். துந்துபியின் விழுந்துபட்ட உடலைத் தனக்கு விசிறியாகப் பயன்படுத்திக் கொண்டான் என்பதால் வாலியின் வலிமை நன்கு புலனாகும்.

14. "புயல்கடந்து, இரவிதன் புகல் கடந்து, அயல் உளோர்
இயலும் மண்டிலம் இகந்து, எனையவும் தவிர, மேல்
வயிர, வன் கரதலத்து அவன் வலித்து எறிய, அன்று
உயிரும் விண்படர, இவ்வுடலும் இப்பரிசு அரோ!" (4003)

(புயல் - மேகமண்டலம்; இரவி - சூரியன்; புகல் - இருக்குமிடம்; இகந்து - தாண்டி; வயிரம் - உறுதி; வலித்து - இழுத்து; அன்று - அப்பொழுது; படர - செல்ல; பரிசு - விதம் \ தன்மை; தவிர - பிற்பட)

"வாலி தனது வயிரம் போன்ற உறுதியான கைகளால் அந்தத் துந்துபியின் உடலை இழுத்து எறிந்தான். அது மேகமண்டலத்தைக் கடந்து, சூரியனின் இடமான சூரியமண்டலத்தைக் கடந்து, அருகில் உள்ள வானவர்கள் இயங்குகின்ற வான மண்டலத்தையும் கடந்து, இவை தவிர மற்றுமுள்ள எல்லா மண்டலங்களையும் தாண்டி, அவன் உயிர் மட்டும் விண்ணுலகத்தில் சென்று தங்கிவிட, இந்த உடல் மட்டும் மண்ணில் வந்து விழுந்த தன்மை இது" என்றான் சுக்கிரீவன்.

15. "முட்டி, வான் முகடு சென்று அளவி, இம்முடை உடற்
கட்டி, மால்வரையை வந்து உறுதலும், கருணையான்
இட்ட சாபமும் எனக்கு உதவும்" என்று, இயல்பினின்
பட்டவா முழுவதும் பரிவினால் உரை செய்தான். (4004)

(முடை - நாற்றம் \ துர்க்கந்தம்; கட்டி - பிண்டம் \ மாமிசத்தொகுதி; முட்டி - தாக்கி; முகடு - உச்சி; பரிவு - அன்பு \ வருத்தமுமாம்; பட்டவா - நிகழ்ந்தது அனைத்தும்)

"இவ்வாறு வாலி வீசியெறிந்த துந்துபியின் முடைநாற்றம் வீசும் உடற் கண்டம், வானமண்டலத்தின் உச்சிவரை சென்று தாக்கிப் பின் இந்தப் பெரிய ருசிய முகமலையில் வந்து விழுந்தது. அப்பொழுது அங்கு தவம் செய்து கொண்டிருந்த, கருணையே வடிவான மதங்க முனிவர் தன் தவம் தடைப்பட்டதாலும், அவ்விடம் மாசுண்டதாலும் சினம்கொண்டு, அவ்வாலிக்கு இட்ட சாபமும் இப்பொழுது எனக்குப் பாதுகாப்பாக உதவியாக இருந்து வருகிறது" என்று, தனக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒன்று விடாது, முறையாக, முழுவதும், அன்புகலந்த வருத்தத்தோடு, இராமனுக்குக் கூறிமுடித்தான் சுக்கிரீவன்.

மதங்க முனிவர் வாலிக்கு இட்ட சாபம், அவன் இம்மலைப்பக்கமே வரக்கூடாது என்பதும், மீறிவந்தால் அவன் தலை சிதறுண்டு இறந்துபோவான் என்பதும், அவன் நண்பர்கள் யாரும் வந்தாலும் கல்லாகிப் போவர் என்பதுமாம். இதனால் தான் தான் இப்பொழுது கவலையின்றி இந்த மலையில் வாழ முடிகிறது என்றான் சுக்கிரீவன் என்க. இதனை அனுமன் கூற்றாக முன்னர்க் கவிஞன் கூறியதும் நினைவிற்கொள்க.

16. இராமன் ஏவி, இலக்குவன் அவ்வுடலை எற்றுதல்

கேட்டனன் அமலனும் கிளந்தவாறெலாம்;
வாள் தொழில் இளவலை, "இதனை மைந்த! நீ
ஓட்டு" என, அவன் கழல் விரலின் உந்தினான்;
மீட்டு அது, விரிஞ்சன் நாடு உற்று, மீண்டதே. (4005)

(கிளந்த - கூறிய; ஓட்டு - எற்றுக; உந்துதல் - எற்றுதல்; விரிஞ்சன் - பிரமன்; அமலன் - பரிசுத்தமானவன்)

குற்றமற்றவனும், பரிசுத்தமானவனுமான இராமன், சுக்கிரீவன் கூறிய வரலாற்றை எல்லாம் கேட்டபின், வாள் தொழிலில் வல்லமையுடைய தன் தம்பி இலக்குவனை நோக்கி, "வீர! இந்த எலும்புக்கூட்டை அப்புறப்படுத்து" என்று கூற, இலக்குவனும் அதனைத் தன் கால் விரலால் எற்றினான். அவ்வெலும்புக் கூடு மீண்டும் பிரமன் வாழ்கின்ற சத்தியலோகம் வரை சென்று மீண்டு வந்து கீழே விழுந்தது.

இங்கே இராமன் இலக்குவனை நோக்கி "இவ்வெலும்புக் கூட்டை அப்புறப்படுத்து" என்று கூறியதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது என்பதை அறிக. முதலில் இராமனின் ஆற்றலில் ஐயம் கொண்ட சுக்கிரீவனுக்கு, ஏழுமராமரங்களையும் ஒரே அம்பினால் தொளைத்துத் தன் ஆற்றலைப் புலப்படுத்தினான் இராமன். தன் தம்பி இலக்குவனும் தன்னாற்றலினின்றும் சிறிதும் குறைவுபடாதவன் என்பதை மாற்றார்க்குக் காட்டுவதற்காகத் தான் இவ்வாறு கூறினான் என்க. இன்னும் ஒன்று, இலக்குவன் வாலியை விடவும் ஆற்றல் வாய்ந்தவன் என்பதைப் புலப்படுத்தவாம் என்க. காரணம் வாலி கையினால் சுழற்றி எறிந்த எலும்புக் கூட்டை, இலக்குவன் தன்கால் விரலினாலேயே உந்தித் தள்ளினான் என்பதால் புரியவைத்தான் என்க. இலக்குவன் துந்துபியின் உடலை உந்தியது, இராமன் மராமரங்களைத் தொளைப்பதற்கு முன்பு என்றும், துந்துபியின் எலும்புக்கூட்டையும் இராமனே உந்தி எறிந்தான் என்றும் வான்மீகம் கூறும்.

துந்துபிப் படலம் நிறைவுற்றது

6. கலன் காண் படலம் (34 பாடல்கள்)

கலன் என்ற சொல்லுக்கு அணிகலன் என்றும் ஆபரணம் என்றும் பொருள். இது இராவணன் சீதாதேவியை அபகரித்துச் சென்ற போது வானிலிருந்து சீதாதேவி கட்டி எறிந்த அவளுடைய அணிகலன்களைச் சுக்கிரீவன் முதலியோர் எடுத்து வைத்திருந்து, இப்போது அதை இராமபிரானுக்குக் காட்டுவதும், அதை இராமபிரான் பார்த்து நெகிழ்கின்றதையும் கூறும் பகுதி என விரியும். இது 34 பாடல்களைக் கொண்டது. எல்லாப் பாடல்களும் ஒரே சந்த அமைதி கொண்டு விளங்குகிறது என்பது இப்படலத்தின் தனிச்சிறப்பு.

இப்படலத்துள், இராமன் சோலையில் அமர்ந்திருக்கும் பொழுது, சுக்கிரீவன், சீதை போட்ட அணிகலன்கள் அடங்கிய முடிப்பைக் கொண்டு வந்து காட்டுதல்; அவற்றைக் கண்ட இராமன் சீதையையே கண்டதுபோல் நெகிழ்ந்து தளர்தல்; சுக்கிரீவன் இராமனைத் தாங்கித் தேற்றுதல்; சிறிது தேறிய இராமனின் கூற்று; சுக்கிரீவன் குறையைத் தீர்த்தே பின் எக்காரியத்தையும் முடித்தல் என்று இராமன் தன் உறுதியான நிலையைத் தெரிவித்தல்; அனுமன் இராமனிடம் வாலியைக் கொன்று, சுக்கிரீவனை அரசனாக்கி, அவன் படைகளைக் கொண்டு ஒரே சமயத்தில் எல்லாப் பக்கங்களிலும் சீதையைத் தேடச் செல்லுவதே தக்கது என்று உரைத்தல்; எல்லோரும் வாலி இருக்கும் இடத்திற்குச் செல்லுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. சுக்கிரீவன், இராமனிடம் கூறுதல்

ஆயிடை, அரிக்குலம் அசனி அஞ்சுற
வாய் திறந்து ஆர்த்தது; வள்ளல், ஓங்கிய
தூய நல் சோலையில் இருந்த சூழல்வாய்,
"நாயக! உணர்த்துவது உண்டு நான்" எனா. (4006)

(ஆயிடை - அப்பொழுது; அரிக்குலம் - குரங்குக்கூட்டம்; அசனி - இடி; ஓங்கிய - உயர்ந்த; சூழல் - வேளை; நாயகன் - தலைவன்) (குளகப்பாடல்)

அப்பொழுது, அதனைக் கண்ட குரங்குக் கூட்டம் எல்லாம் மகிழ்ச்சியால், இடிமுழக்கமே அஞ்சும்படியாக வாய் திறந்து ஆர்ப்பரித்தன; இராமபிரான், உயர்ந்த, தூய்மையான அழகிய சோலையில் தங்கியிருந்த பொழுது, சுக்கிரீவன், இராமபிரானை நோக்கி, "தலைவனே! நான் தங்களுக்குக் கூறுவது ஒன்று உள்ளது என்று கீழ்வருவனவற்றைக் கூறத் தொடங்கினான்.

இராமபிரான் ஏழு மராமரங்களையும் தன் ஒரே அம்பால் தொளைத்ததும், இலக்குவன் தன் கால் பெருவிரலாலேயே துந்துபியின் எலும்புக் கூட்டை உந்தியதும் கண்ட வானரக் கூட்டம் மகிழ்ச்சியால் ஆரவாரித்தது என்க.

2. "இவ்வழியாம் இயைந்து இருந்தது ஓர் இடை
வெவ்வழி இராவணன் கொணர, மேலைநாள்
செவ்வழி நோக்கி, நின்தேவியே கொலாம்
கவ்வையின் அரற்றினள், கழிந்த சேண் உளாள். (4007)

(இயைந்து - சேர்ந்து \ கூடி; வெவ்வழி - தீநெறி; சேண் - தூரம் \ ஆகாயம், உயரம்; கவ்வை - துன்பம்; நோக்கி - நோக்குபவள் \ சீதை; இவ்வழி - இங்கு; செவ்வழி - நன்னெறி)

"இவ்வாறு நாங்கள் முன்பு ஒருமுறை எல்லோரும் கூடி அமர்ந்திருந்த சமயத்தில், கொடிய வழியில் செல்பவனாகிய அரக்கன் இராவணன், செம்மையான வழியை நோக்குபவளான ஒரு பெண்ணைத் தன்கையகப் படுத்திக்கொண்டு ஆகாயத்தில் பறந்து சென்றான். அப்பொழுது அதிலிருந்து ஒரு பெண், துன்பத்தால் அழுது அரற்றுகின்ற ஒலி எங்களுக்குக் கேட்டது. இப்பொழுது எண்ணிப் பார்க்கும் போது, அது உன் தேவி சீதாப்பிராட்டியாக இருக்குமோ? என்று ஊகிக்கிறேன்" என்றான் சுக்கிரீவன்.

இராவணனை "வெவ்வழி இராவணன்" என்றும், சீதையைச் "செவ்வழி நோக்கி" என்றும் கூறிய நயம் உணர்க. "கழிந்த சேண்" என்பது, கண்ணுக்கு எட்டாத தூரமுள்ள ஆகாயத்தில் என்று பொருள் தரும். "அவள் யார் என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையே தவிர, அழு குரலிலிருந்து அவள் ஒரு பெண்தான் என்று தீர்மானித்தோம். இப்பொழுது நீங்கள் கூறுவதைக் கொண்டு நோக்கும் போது, அது தங்கள் மனைவி சீதாதேவியாக இருக்கக்கூடுமோ என்று அஞ்சுகிறோம்". என்றான் சுக்கிரீவன் என்க.

3. "உழையரின் உணர்த்துவது உளது என்று உன்னியோ?
குழைபொரு கண்ணினாள் குறித்தது ஓர்ந்திலம்;
மழைபொரு கண்இணை வாரியோடு, தன்
இழை பொதிந்து இட்டனள்; யாங்கள் ஏற்றனம்". (4008)

(உழையர் - தூதர்கள் \ பணியாளர்கள்; உன்னுதல் - நினைத்தல்; குழை - காதணி \ குண்டலம்; ஓர்தல் - அறிதல்; இழை - அணிகலன்கள்; பொதிந்து - முடிந்து; பொரு - ஒத்த; வாரி - கண்ணீர்; ஏற்றல் - ஏந்திக்கொள்ளுதல்; இணை - இரண்டு; பொருதல் - மோதுதல்)

"காதில் அணிந்திருக்கின்ற மகர குண்டலங்கள் மோதும் அளவிற்கு நீண்டகண்களை உடைய அந்தப் பெண், என்ன நினைத்தாளோ எங்களுக்குத் தெரியவில்லை; இவ்வணிகலன்கள் தூதர்கள்போல், தன் நிலையை உனக்குத் தெரிவிக்கவேண்டும் என்று கருதினாளோ என்னவோ? தனது மேகத்தை ஒத்த இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீரை வெள்ளமாகப் பெருக்கிக்கொண்டு, தனது அணிகலன்களை ஒரு உத்தரீயத்தில் முடிந்து, கீழே வீசி எறிந்தாள்;

அது கீழே விழுவதற்கு முன் நாங்கள் கைகளில் ஏந்திக் கொண்டோம்" என்றான் சுக்கிரீவன்.

ஆபரணங்களே தன்நிலை சொல்லும் தூதுவர்களாக ஆகட்டும் என்று அவள் கருதியிருக்கலாம் என்பது சுக்கிரீவனின் அனுமானம். "குழைபொருகண்" என்பது காதளவோடிய கண்கள், உத்தமப் பெண்களுக்குரிய இலக்கணங்களுள் ஒன்று. அவள் சிந்திய கண்ணீரை "வாரி" எனக்கூறியது அவள் துன்பத்தின் மிகுதியைக் குறிக்க என்க. கம்பரும், வால்மீகியும் "இழை பொதிந்து இட்டனள்" என்று கூற, துளசிதாசர் மட்டும், ஆபரணங்களைப் போடவில்லை, உத்தரீயத்தின் ஒரு பகுதியைத்தான் கிழித்து எறிந்தாள் என்று கூறுவது நோக்கத்தக்கது.

மேலும் இந்த நிகழ்ச்சி, சங்ககால இலக்கியமான புறநானூற்றில் இடம்பெற்றிருப்பதும் ஊன்றிக் கவனிக்கத்தக்கது. பாடல் பகுதி இது. "கடுந்தெறல் இராமன், உடன்புணர் சீதையை, வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை, நிலம்சேர் மதரணி" (புறம் : 378) என்பது புறநானூறு. சுக்கிரீவனோடு இன்னும் நான்கு குரங்குகளும் நிற்பதைக் கண்ட பிறகுதான், சீதை இந்த முடிவுக்கு வந்து, ஆபரணத்தைத் துணியில் பொதிந்து எறிந்தாள் என்று வான்மீகம் கூறுகிறது. இங்கே ஒன்றை நினைவு கூரவேண்டும். கானகத்திற்குப் புறப்படும் பொழுது, அயோத்தியில், இராமன் கட்டளைக்கிணங்க, சீதாதேவி, தான் அணிந்திருந்த அணிகலன்கள் அனைத்தையும் தானம் செய்துவிட்டு மரவுரியுடன்தான் வந்தாள். என்றாலும், அத்தரி முனிவனின் ஆசிரமத்தில், முனிவனின் மனைவியாகிய அனசூயை, சீதாதேவிக்குத் தன்னுடைய ஆபரணங்களை அளித்தாள் என்பதையும், அவ்வாபரணங்கள்தான் இவை என்றும் இங்கே நினைவு கூரவேண்டும்.

4. சுக்கிரீவன் அவற்றை இராமனுக்குக் கொணர்ந்து காட்டுதல்

"வைத்தனம் இவ்வழி; வள்ளல்! நின்வயின்
"உய்த்தனம் தந்தபோது உணர்தியால்" எனா,"
கைத்தலத்து அன்னவை கொணர்ந்து காட்டினான்,
நெய்த்தலைப் பால் கலந்தனைய நேயத்தான். (4009)

(நெய் - தேன்; நேயத்தான் - நட்பினன்; கைத்தலம் - கைகள்; உய்த்தல் - கொண்டு வருதல்)

தேனில் பால் கலந்தாற்போன்றஇனிமையான நட்பினனான சுக்கிரீவன், இராமனை நோக்கி, "வள்ளலே! அந்த ஆபரணம் பொதிந்த முடிப்பை இப்பொழுது உன்னிடம் கொண்டுவந்து காண்பிக்கிறேன். அப்பொழுது அது சீதையுடைய ஆபரணமா அல்லவா என்பதை நீ உணர்ந்து கொள்வாய்" என்று கூறி, தானே தன் கைகளால் அவற்றைக் கொண்டுவந்து காட்டினான் சுக்கிரீவன்.

நெய் என்பது இங்கே தேனைக் குறித்தது. பால் ஒரு சுவையுடையது; தேன் வேறொரு சுவையுடையது. அவை இரண்டும் கலந்தால் மற்றொரு

இனிமையான சுவைதரும்! அத்தகைய இனிய நட்பினன் என்பது பொருள். "பாலும் தெளிதேனும்" என்ற பாடல் எல்லோரும் அறிந்ததே; "தேனொடு பால் கலந்தற்றே, பனி மொழி வால் எயிறு ஊறிய நீர்" என்பது குறள் 1121. "நற்கருப்பஞ்சாற்றினிலே, தேன்கலந்து பால் கலந்து" என்பது இராமலிங்கரின் திருவருட்பா, "தேனொடு பால் உணத்தருவேன்" என்பது சம்பந்தர் தேவாரம். நெய் என்பதற்கு நேர்பொருளாக நெய் என்றே கொள்வாரும் உண்டு. பாலில் நெய் மறைபொருளாக விளங்குவது யாவரும் அறிந்ததே. அதுபோல இராமனிடத்துச் சுக்கிரீவன் இரண்டறக் கலந்து, நட்பினனாயினான் என்று கூறுவதும் பொருந்தும் என்க.

5. இராமன் அணிகலன்களை நோக்குதல்

தெளிவுற நோக்கினன் தெரிவை மெய்யணி;
எரிகனல் எய்திய மெழுகின் யாக்கைபோல்
உருகினன் என்கிலம்; உயிருக்கு ஊற்றமாய்ப்
பருகினன் என்கிலம்; பகர்வது என்கொல் யாம்? (4010)

(தெரிவுற - நன்றாக ஆராய்ந்து; யாக்கை - உடம்பு; ஊற்றம் - பற்றுக்கோடு; தெரிவை - சீதை; மெய் - உடம்பு \ மேனி)

அவ்வாறு சுக்கிரீவனால் கொண்டுவரப்பட்ட, சீதை தன் உடம்பில் அணிந்து இருந்த ஆபரணங்களை இராமன் நன்றாக உற்றுப்பார்த்தான்; அதைக்கண்டதும் நெருப்பில் இட்ட மெழுகுபோல் உடல் உருகினான் என்றும் கூறமுடியவில்லை; இவற்றைக் கண்டதும் சீதையைக் கண்டது போல், தன் உயிருக்கு ஒரு பற்றுக்கோடு கிடைத்தது போல் மிக நெகிழ்ந்தான் என்றும் கூறமுடியவில்லை. அவன் அப்போதுஅடைந்த நிலையை எப்படிக் கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை என்கிறான் கவிஞன்.

இங்கே தெரிவை என்பது பொதுவாகப் பெண் என்று சீதையைக் குறித்தாலும், தெரிவை என்ற பருவத்தைக் குறித்தது என்று கூறுவதும் உண்டு. இராவணன் சீதையை அபகரித்துக் கொண்டு சென்றபோது சீதை தெரிவைப் பருவத்தில் இருந்தாள் என்பதாம். தெரிவை என்பது 21ம் வயது முதல் 31 வயது வரை உள்ள பெண்ணைக் குறிக்கும் பருவமாகும். அவ்வணிகலன்களைக் கண்ட இராமன், இனி தான் உயிர் வாழ்வதற்குரிய பற்றுக் கோடுகளே இவ்வாபரணங்கள்தான் என்று கருதினான் என்பது கருத்து.

6. இராமன் துயர நிலை

"நல்குவது என் இனி? நங்கை கொங்கையைப்
புல்கிய பூணும், அக்கொங்கை போன்றன;
அல்குலின் அணிகளும், அல்குல் ஆயின;
பல்கலன் பிறவும், அப்படிவம் ஆனவே." (4011)

(புல்கிய - அணைந்த \ தழுவிய \ சேர்ந்த; அல்குல் - இங்கே இடை; நல்குவது - உதவுவது; பூண் - அணிகலன்கள்; படிவம் - உறுப்புக்கள்)

சீதாதேவி தன் மார்பில் அணிந்திருந்த மணிமாலை போன்ற ஆபரணங்களை இராமன் காணும்போது, சீதாதேவியின் மார்பினைப் பார்ப்பது போலவும், அவள் இடையில் அணிந்திருந்த மேகலையைக் காணும்போழுது, அவள் இடையையே காண்பது போலவும் தோற்றமளித்தன. அதுபோலவே அவள் அணிந்திருந்த பிற ஆபரணங்களும், அவளின் அவ்வுறுப்புக்களையே நினைவிற் கொண்டுவந்தன. எனவே இந்த ஆபரணங்கள் இராமனுக்குச் செய்யக் கூடியது இனி என்ன இருக்கிறது?" என்கிறான் கவிஞன்.

இவ்வாறு சீதாதேவி வீசியெறிந்த ஆபரணங்களைக் குரங்குகள் தங்கள் மேனியில் அணிந்து கொண்டு அழகுபார்த்தன என்றும், இடையில் அணிய வேண்டிய ஆபரணங்களை முதுகிலும், மார்பில் அணிய வேண்டிய ஆபரணங் களைக் காலிலும் அணிந்து கொண்டு ஆடிப்பாடின என்று கூறும் ஒரு பாடல், புறநானூற்றில் கிடைக்கிறது என்பதும் இங்கு நினைவு கூரத்தகும்.

7. "விட்ட பேர் உணர்வினை விளித்த என்கெனோ?
அட்டன உயிரை அவ்வணிகள் என்கெனோ?
கொட்டின சாந்து எனக் குளிர்ந்த என்கெனோ?
சுட்டன என்கெனொ? யாது சொல்லுகேன்?" (4012)

(விளித்த - அழைத்தன \ வருவித்தன; அட்டன - போக்கின; சுடுதல் - எரிதல்; அடுதல் - கொல்லுதலுமாம்; சாந்து - சந்தனம்; உணர்வு - அறிவு)

"அந்த அணிகலன்கள், இராமபிரான் இதுகாறும் நீங்கியிருந்த அறிவைத் திரும்பப் பெறுவதற்குப் பயன்பட்டது என்று சொல்லுவேனா? அல்லது சீதையின் பிரிவுத்துயரால் உயிரையே போக்கியது என்று கூறுவேனா? இதனைக் கண்டதும், அவளைப் பார்த்தது போலவே இருந்ததால், சந்தனத்தை அவன் மேனியில் கொட்டியது போல் குளிர்ச்சியாக இருந்தது என்று சொல்லுவேனா? அல்லது அவன் உயிரையே நெருப்புப் போல் வெதுப்பி எரித்தது என்று சொல்லுவேனா? இவன் ஒருகால் துயருறுகிறான், ஒருகால் மகிழ்கிறான். எனவே இவன் படும்பாட்டை என்னவென்று உரைப்பேன்?" என்று கவிஞன் கூறுகிறான். இது கவிக்கூற்று.

ஆபரணங்களைக் கண்ட இராமன் மனம், ஒரு நிலைப்படா வழி ஒன்றுக்கொன்று மாறுபட்ட மெய்ப்பாடுகளைக் கொண்டிருந்தது என்பதாம். இதேபோல், பின்னர் இராமனின் கணையாழியைக் கண்ட போது, சீதையும் இத்தகைய உணர்வுகளையே அடைந்தாள் என்று கவிஞன் கூறப்போவதையும் இங்கே நினைவு கூர்தல் பொருத்தமாகும். ஒரே நிகழ்ச்சி, நேர் எதிரிடையான வெவ்வேறு பயன்களை ஒரே சமயத்தில் கொடுத்தது என்றது ஒரு நயம்.

8. "மோந்திட நறுமலர் ஆன; மொய்ம்பினில்
ஏந்திட உத்தரீயத்தை ஏய்ந்தன;
சாந்தமுமாய் ஒளி தழுவப் போர்த்தலால்,
பூந்துகில் ஆய; அப்பூவை பூண்களே." (4013)

(மோத்தல் - முகர்தல்; மொய்ம்பு - தோள்; உத்தரீயம் - மேலாடை; சாந்தம் - சந்தனம்; பூந்துகில் - பட்டுப்போர்வை \ சித்திர ஆடை; ஏய்ந்தன - ஒத்திருந்தன; பூவை - நாகணவாய்ப்புள்; ஏந்துதல் - தாங்குதல்; - பூண்கள் - ஆபரணங்கள்)

நாகணவாய்ப்புள் போல இனிய சொற்களைப் பேசும் சீதை அணிந்திருந்த ஆபரணங்கள், இராமபிரானால் முகர்ந்து பார்க்கப்படும் போது, நல்ல மணம் மிக்க மலர்களைப் போல இருந்தன; தன் தோள்களில் தாங்கிப் பார்க்கும்போது, அவை மேலாடையைப் போல் இருந்தன; தன் உடலில் எல்லாப் பகுதிகளிலும் வைத்துப் பார்க்கும் போது உடல் முழுதும் சந்தனம் பூசப்பட்டதுபோல குளிர்ச்சியாக இருந்தது. அந்த ஒளி, மேனி முழுதும் பரவிப் போர்த்ததனால், அழகிய சித்திர ஆடையை உடலெங்கும் போர்த்துக் கொண்டது போல் இருந்தது.

சீதையின் ஆபரணங்களை இராமன் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். மூக்கினால் முகர்ந்து பார்த்தான். தோள்களில் தாங்கிக் கொண்டான். உடலில் எல்லாம் வைத்துக் கொண்டு அழகுபார்த்தான். மகிழ்ந்தான் என்பதாம். இயற்கையிலேயே நறுமணம் கொண்ட மேனியை உடையவள் சீதாதேவி. எனவே அவள் அணிந்திருந்த ஆபரணங்களும் நறுமணம் வீசின என்பதாம்.

9. "ஈர்த்தன செங்கண் நீர் வெள்ளம் யாவையும்;
போர்த்தன மயிர்ப்புறம் புளகம்; பொங்குதோள்
வேர்த்தன என்கெனோ? வெதும்பினான் என்கோ?
தீர்த்தனை அவ்வழி யாது செப்புகேன்?" **(4014)**

(ஈர்த்தல் - இழுத்தல்; போர்த்தல் - மறைத்தல்; பொங்கு - பூரித்த; தீர்த்தன் - தூயோன்; அவ்வழி - அந்நிலையில்; புறம் - உடல்; புளகம் - மயிர்க்கூச்செறிதல்; வெதும்புதல் - வாடுதல்)

"இராமன் அப்போது பெருக்கிய கண்ணீர் வெள்ளம் அங்கிருந்த பொருள்கள் அனைத்தையும் இழுத்துக் கொண்டு சென்றது; அதனால் ஏற்பட்ட புளகாங்கிதத்தால், மயிர்க்கூச்செறிந்து உடல் முழுவதும் போர்த்துக் கொண்டன; பூரிக்கின்ற தோள்கள் வியர்த்துக் கொட்டின என்று சொல்லுவேனா? விரகதாபத்தால் உண்டான துன்பத்தால் வாடினான் என்று சொல்லுவேனா? தூய்மையானவனான இராமன் அப்பொழுது அடைந்த நிலையை என்னவென்று சொல்லுவேன்?" என்று வியக்கிறான் கவிஞன்.

வியர்த்தலும், வெதும்புதலும் துன்பத்தால் நிகழும் மெய்ப்பாடுகள்; மயிர்ப்புறம் புளகம் போர்த்தலும், தோள்கள் பூரித்தலும் இன்பத்தால் நிகழும் மெய்ப்பாடுகள். செங்கண் நீர் வெள்ளம் பெருக்குதல் துன்பத்திலும் நிகழும்; இன்பத்திலும் நிகழும். எனவே இப்பொழுது இன்பத்தில் திளைத்திருக்கிறானா, துன்பத்தில் தோய்ந்திருக்கிறானா என்பதை அறிந்து கொள்ளமுடியவில்லை என்கிறான் கவிஞன். இந்த இடத்தில் இராமன் இலக்குவனிடம், தன் வருத்தத்தைக் கூறி, அவ்வாபரணங்களைக் காட்டி விளக்கம் கேட்டான் எனவும், இலக்குவன், சிலம்பையும், தண்டைகளையும் மட்டும் தன்னால் அடையாளம்

காட்டமுடியும் என்றும், மற்ற ஆபரணங்கள் பற்றித் தெரியாது என்று கூறினான் என்றும் இலக்குவனைச் சிறப்பித்து வான்மீகம் கூறுகிறது. கம்பனில் இந்நிகழ்ச்சி பேசப்படவில்லை.

10. தளர்ந்து விழுந்த இராமனைச் சுக்கிரீவன் தாங்கிக் கொள்ளுதல்

விடம் பரந்து அனையதோர் வெம்மை மீக்கொள,
நெடும்பொழுது உணர்வினோடு உயிர்ப்பும் நீங்கிய
தடம் பெரும் கண்ணனைத் தாங்கினான்; தனது
உடம்பினில் செறி மயிர் சுறுக்கொண்டு ஏறவே. (4015)

(மீக்கொளல் - மிகுதல் \ மேலோங்கி நிற்றல்; உணர்வு - நினைவு; சுறுக்கொள்ளுதல் - தீய்ந்துபோதல் \ கருகிப்போதல்; உயிர்ப்பு - மூச்சு; செறி - அடர்ந்த)

விஷம் உடம்பெல்லாம் பரவியது போன்று விரகதாபத்தால் வெப்பம் இராமனின் உடலெங்கும் பரவியதால், நீண்டநேரம் உணர்ச்சியற்று, மூச்சுமற்று செயலற்று மயங்கி விழப்போன, நீண்ட பெரிய கண்களையுடைய கண்போன்ற இராமபிரானை, சுக்கிரீவன், தனது உடம்பில் அடர்ந்து பரவியிருக்கிற உரோமங்கள் சுருக்கென்று தைக்கும் வண்ணம் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

"இங்கே உடம்பினில் செறிமயிர் சுறுக்கென்று ஏறவே" என்ற சொற்றொடர்க்கு மற்றும் ஓர் பொருள் பொருந்துவது காண்க. பொதுவாகச் "சுறுக்கொண்டு ஏறவே" என்ற சொல் கருகிப்போதல், தீய்ந்து போதல் என்ற பொருளிலேயே பயன்படுத்தப் படுவதாகும். எனவே இங்கே, ஏற்கனவே வெப்பம் மிகக் கொண்டிருந்த இராமனின் மேனி, மயிர்கள் அடர்ந்த வானரமாகிய சுக்கிரீவனின் மேல்பட்டதும், அக்குரங்கின் மேனியிலிருந்த அடர்ந்த மயிர்க் கற்றைகள் தீய்ந்து போயின என்பதும் பொருந்துவது காண்க. "சுறு" என்பது உரோமம் தீப்படுதலால் எழும் தீ நாற்றத்தையே குறிக்கும். இந்தப் பொருளில் தான் "சுறு" என்ற சொல்லைக் கம்பன் பல இடங்களில் கையாண்டிருப்பதையும் காணமுடியும். உள்ளக் கொதிப்பால் உடல் கொதிப்புற்றது. அக்கொதிப்பு அவனைச் சார்ந்தவனையும் பற்றியது என்று கூறிய நயம் உணர்க.

11. சுக்கிரீவன் தன் செயலுக்கு வருந்துதல்

தாங்கினன் இருத்தி, அத்துயரம் தாங்கலாது
ஏங்கிய நெஞ்சினன், இரங்கி விம்முவான்,
"வீங்கிய தோளினாய்! வினையினேன், உயிர்
வாங்கினேன் இவ்வணி வருவித்தே" எனா. (4016)

(இருத்தி - அமரச்செய்து \ சாய்ந்திருக்கச்செய்து; தாங்கலாது - தாங்க இயலாது; வீங்கிய - பருத்த \ பூரித்த; ஏங்குதல் - வருந்துதல்; விம்முதல் - தேம்பியழுதல்; வாங்குதல் - போக்குதல் \ நீக்குதல்)

அவ்வாறு சாய்ந்த இராமபிரானைத் தன் தோள்களில் சாய்த்துக் கொண்டு, அவன் படுகின்ற துன்பத்தைத் தாங்க முடியாமல், இரக்கமுற்று வருந்துகின்ற மனத்தையுடைய சுக்கிரீவன், தேம்பியழுது கொண்டே இராமனை நோக்கி, "பூரித்த பருத்த தோள்களை உடையவனே! தீவினையாளனான, பாவியான நான், இவ்வாபரணங்களை இங்கே வருவித்து உன்னிடம் காட்டி, உன் உயிர் போவதற்கே காரணமாகி விட்டேன்" என்று துன்புறலானான்.

12. "அயன்உடை அண்டத்தின் அப்புறத்தையும்
மயர்வு அற நாடி, என் வலியும் காட்டி, உன்
உயர் புகழ்த்தேவியை உதவற்பாலெனால்;
துயர்உழந்து அயர்தியோ? சுருதி நூல்வலாய்?" (4017)

(சுருதி - வேதம்; மயர்வு - மயக்கம்; வலி - ஆற்றல்; பாலன் - பான்மை உடையவன் \ தன்மையன்; அயர்தல் - சோர்வடைதல்; அயன் - பிரமன்; நாடி - தேடிப்பார்த்து)

"வேத சாஸ்திரங்களில் வல்லமையுடையவனே! பிரமன் படைத்த இவ்வண்ட கோளத்தின் அப்புறத்திலும், சலிப்பில்லாது தேடிச்சென்று, என்னுடைய ஆற்றலை என்னை எதிர்ப்போர்க்கும் மற்றோர்க்கும் தெரியப்படுத்தி, உன்னுடைய உயர்ந்த புகழுக்குக் காரணமான உன் மனைவி சீதாதேவியை, உன்னிடம் மீட்டுக்கொண்டு வரக்கடவேன். அவ்வாறிருக்க, நீ இவ்வாறு துன்புற்றுத் தளர்ச்சியடையலாமோ? கூடாது" என்றான் சுக்கிரீவன்.

அண்டத்திற்கு அப்புறமும் தேடுவேன் என்றதால் இவ்வண்டத்திற்குள்ளேயே தேடுதல் சொல்லாமல் பெறப்பட்டது.

13. "திருமகள் அனைய அத்தெய்வக் கற்பினாள்,
வெருவரச் செய்துள வெய்யவன் புயம்
இருபதும், ஈரைந்து தலையும் நிற்க; உன்
ஒரு கணைக்கு ஆற்றுமோ? உலகம் ஏழுமே" (4018)

(வெருவர - அஞ்சும்படி; வெய்யவன் - கொடியவன் \ இராவணன்; நிற்க - கிடக்க; ஆற்றுதல் - எதிர்நிற்க வல்லமை படைத்தல்)

"இலக்குமி போன்ற தெய்வத் தன்மை வாய்ந்த கற்பொழுக்கமுடைய உன் மனைவி சீதா தேவி அஞ்சும்படி செய்துள்ள கொடியவனான இராவணனின் இருபது தோள்களும் பத்துத் தலைகளும் கிடக்கட்டும். உன்னுடைய ஒரு ஒப்பற்ற அம்புக்கு இந்த ஏழு உலகங்களும் எதிர்த்து நிற்கும் வல்லமை பெற்றனவோ? இல்லை அல்லவா?" என்கிறான் சுக்கிரீவன்.

முன்பாடலில் தன்னுடைய ஆற்றலைக் கூறி, இப்பாடலில் இராமபிரானுடைய பேராற்றலைக் குறிப்பிடுகிறான் சுக்கிரீவன் என்பதாம். "தெய்வக்கற்பு" என்பது தெய்வத்தன்மை பொருந்திய கற்பு என்று பொருள்படும். தெய்வக் கற்பினாள் என்றதால் சீதைக்கு எந்தத் தீங்கும் நேர்ந்துவிடாது என்று சுக்கிரீவன் ஆறுதல் கூறினான் என்க. "தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுது எழுவாள்,

பெய்யெனப் பெய்யும் மழை" என்பது குறள் 55. அத்தகைய கற்புடையவள் சீதை என்பதாம். "புத்தேளிரும் பேணப்பெறும் கற்பு" என்பது குறள் 58. "கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்" என்பது சிலப்பதிகாரம். ஏழு உலகங்களும் கூட இராமனுடைய ஒரு கணைக்கு எதிர்நிற்க முடியாது என்றால், உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் இருபது தோளும், பத்துத் தலையும் உடைய ஒரே ஒரு இராவணனால் என்ன செய்துவிட முடியும்? என்று இராமபிரானுக்கு ஊக்கமளித்துத் தேற்றுகிறான் சுக்கிரீவன் என்பதாம்.

14. "ஈண்டு நீ இருந்தருள்; ஏழொடு ஏழ் எனப்
பூண்டபேர் உலகங்கள் வலியில் புக்கு, இடை
தேண்டி, அவ்வரக்கனைத் திருகி, தேவியைக்
காண்டி, யான் இவ்வழிக் கொணர்வல், காவலோய்!" (4019)

(காவலன் - அரசன்; வலி - ஆற்றல்; தேண்டி - தேடி; திருகி -முறித்து, தலையை அறுத்து; காண்டி - காண்பாயாக; இடை - இடம்; இவ்வழி - இவ்விடம், இங்கு)

"அரசே! தாங்கள் இங்கேயே இருந்து அருளுங்கள்; பதினான்கு என்று தொகை கொண்ட பெரியவுலகங்கள் அனைத்திலும், என் ஆற்றலால் புகுந்து சென்று, எல்லா இடங்களிலும் நன்றாகத் தேடி, அந்த அரக்கனாகிய இராவணனின் தலையை அறுத்து, சீதாதேவியை நான் இங்கே கொண்டுவந்து தரப்போவதைக் காண்பீராக" என்றான் சுக்கிரீவன்.

இராவணன் போன்ற அற்பத்தனமான அரக்கனிடம், பெருந்தன்மை படைத்த இராமபிரான் செல்வது ஏற்புடைத்தாகாது என்று கருதியே, சுக்கிரீவன், இராமபிரானை அங்கேயே தங்கியிருக்கும்படி கேட்டுக் கொண்டான் என்பதாம். சீதாதேவியை அபகரித்துச் சென்றவன் இராவணன் என்று சடாயு மூலம் தெரிந்து கொண்டும், அவளை அவன் எங்கே ஒளித்துச் சிறை வைத்திருக்கிறான் என்பதை அறிய முடியாததால் சுக்கிரீவன் பதினான்கு உலகங்களிலும் தேடிப் பார்க்கிறேன் என்று கூறினான் என்க. இதே காரணத்தால்தான், பின்பும், சுக்கிரீவனின் படையினர் நான்கு புறங்களிலும் சென்று தேடிவர வேண்டியதாயிற்று எனவும் உணர்க.

15. "ஏவல் செய் துணைவரேம் யாங்கள்; ஈங்குஇவன்
தா அரும் பெருவலித்தம்பி; நம்பி! நின்
சேவகம் இது எனில், சிறுக நோக்கல் என்?
மூவகை உலகும் நின் மொழியின் முந்துமோ?" (4020)

(நம்பி - ஆண் களிற்சிறந்தவன் \ புருஷோத்தமன்; ஏவல் - பணி; துணைவர் - நண்பர்கள்; தாஅரும் - கெடாத \ குற்றமற்ற; சேவகம் - வீரம்; முந்துதல் - கடத்தல் \ மீறுதல்; சிறுக நோக்கல் - குறைவுபட மதித்தல்; மொழி - கட்டளை)

"ஆண்களிற் சிறந்தவனே! உன்னுடைய கட்டளையையேற்றுப் பணிசெய்ய வானரக் கூட்டங்களாகிய நாங்கள் இருக்கிறோம்; இங்கே உன் அருகில்,

அழிக்க இயலாத பேராற்றல் பெற்ற உன் தம்பி இலக்குவன் இருக்கிறான்; நீயோ ஒரே அம்பால் ஏழு மராமரங்களையும் துளைத்த வீரம் உடையவன்; அப்படியென்றால் உன்னை நீயே ஏன் குறைவாகக் கருதிக் கொள்ளுகிறாய்? இந்த மண், விண், பாதாளம் என்ற மூன்றுவகை உலகமும் உன் கட்டளையை மீறிச் செயல்பட்டுவிடுமோ?" செயல்படாதன்றோ?" என்று வீர உணர்ச்சியைப் புகுத்துகிறான் சுக்கிரீவன்.

தளர்ந்து நின்ற இராமனுக்குச் சுக்கிரீவன் கூறும் வீரவுரை இது என்க. தன்னைத் தானே குறைத்து மதிப்பிட்டுக் கொள்ளக் கூடாது என்பது படிப்பினை. "சிறுகநோக்கல்" என்ற சொல்லாட்சி நினைந்து நினைந்து இன்புறத்தக்கது. துணைவர்களாக நாங்களும், வலிமையுள்ளவனாக இலக்குவனும், பேராற்றல் படைத்தவனாக நீயும் இருக்கும்போது உன்னை யார் வென்று விடமுடியும்? எனக் கேட்கிறான் சுக்கிரீவன்; இங்கே "இது" என்றது ஓரம்பால் ஏழு மராமரங்களையும் துளைத்ததைக் குறிக்கும் என்க. வீரனில் சிறந்த இராமனைச் "சேவகன்" என்றே பல இடங்களிலும் கவிஞன் கூறிப்போவதை நோக்குக.

16. "பெருமையோர் ஆயினும், பெருமை பேசலார்;
கருமமே அல்லது பிறிது என் கண்டது?
தருமம் நீ அல்லது தனித்து வேறு உண்டோ?
அருமை ஏது உனக்கு? நின்று அவலம் கூர்தியோ?" (4021)

(கருமம் - கடமை \ செயல்; கண்டது - அறிந்தது; அருமை - செய்தற்கு அரியது; நின்று - தாமதித்து; அவலம் - துயரம்; கூர்தல் - அடைதல் \ மிகுதல்)

"பெரியவர்கள் தாம் எல்லா வகையானும் பெருமையுடையவர்கள் என்றாலும், தம் திறமையை வெளிப்படுத்திப் பேசமாட்டார்கள்; அவர்கள் செயலில்தான் தம் திறமையை வெளிப்படுத்துவரே அன்றி வேறு எதனாலும் அல்ல; நீ தருமத்தின் அவதாரம்; தருமம் என்பது உன்னை அன்றி வேறு எங்கு இருக்கிறது? அத்தகையவனான உனக்கு, செய்தற்கரிதான காரியம் என்று ஒன்று இருக்கிறதா? என்ன? நீ இவ்வாறு தாமதித்து, தனித்து நின்று, துயரம் மிகப் பெற்றுக் கலங்குவது கொஞ்சம்கூடப் பொருத்தமுடையது அன்று" என்கிறான் சுக்கிரீவன்.

இவ்வாறு கலங்கி நின்று காலம் தாழ்த்தினால், சீதாதேவியை மீட்கும் செயலும் தாமதப்படும். எனவே விரைந்து செயலாற்றவேண்டிய நேரம் இது என்று குறிக்கிறான் சுக்கிரீவன். கூர்தல் என்பது மிகுதியைக் குறிக்கும். "கூர்ப்பும், கழிவும் உள்ளது சிறக்கும்" என்பது தொல்காப்பியம்.

17. "முளரிமேல் வைகுவான் முருகன் தந்த அத்
தளிர்இயல் பாகத்தான், தடக்கை ஆழியான்,
அளவி ஒன்றாவரே அன்றி, ஐயம் இல்
கிளவியாய்! தனித்தனி கிடைப்பரோ துணை?" (4022)

(ஐயம்இல் - சந்தேகம் இல்லாத \ தெளிந்த; கிளவி - சொற்கள்; முளரி - தாமரை மலர்; தந்த - ஈன்றெடுத்த; பாகம் - பக்கம்; ஆழி - சக்கரப்படை; அளவி - இணைந்து; கிடைத்தல் - நிகராதல் \ பொருந்துதல்; துணை - ஒப்பு)

"சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாகப் பேசும் சொல்வன்மை படைத்தவனே! தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமனும், முருகப்பெருமானை ஈன்றெடுத்தவனும், அந்த மென்மையான தளிர்போன்ற இயல்பினைக் கொண்ட உமாதேவியைத் தன் ஒரு பாகத்தில் வைத்திருப்பவனுமாகிய சிவபெருமானும், பெரிய நீண்ட கையில் சுதர்சனம் என்னும் சக்கரப்படையை உடைய திருமாலும் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து இணைந்து நின்றால்தான் உனக்கு ஒப்பாவாரேஅல்லாமல், அவர்கள் தனித் தனியாக உனக்கு ஒப்பாவாரோ? மாட்டார்கள் அல்லவா?" என்கிறான் சுக்கிரீவன்.

முளரி என்பது, முள்ளை அடிப்பாகத்தில் கொண்டமலர் என்று பொருள் தந்து, தாமரை மலரைக் குறிக்கும். படைத்தல் பிரமன் தொழிலாகவும், காத்தல் திருமாலின் தொழிலாகவும், அழித்தல் சிவபெருமானின் தொழிலாகவும் இருக்க, இம்மூவரின் ஆற்றலையும் ஒருசேரப் பெற்றவன் இராமபிரான் என்பதைத் தெரிவிக்கும் கருத்துள்ள பாடல் இது. இராமபிரான் மும்மூர்த்திகளும் ஒருமித்த பரம்பொருள் என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது. "முப்பரம்பொருளுக்கும் முதல்வன்" என்பதும் "முப்பரம் பொருளுக்கும் முதல்" என்பதும் கம்பனின் இராம அவதாரக் கொள்கை என்பது உணர்க. இதையே விராதன், கவந்தன், இந்திரன், வாலி, அனுமன் முதலியவர்களின் கூற்றுக்களாகவும் காப்பியத்தில் ஆங்காங்கே காணலாம். திருமால், சிவபெருமானைத் தன் வலப்பக்கத்திலும், பிரமனைத் தன் உந்திக் கமலத்திலும் கொண்டுள்ளான் என்பதைக் கூறும் ஒரு ஆழ்வார்பாசுரம் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. "பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து, பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து, கறைதங்கு வேல் தடங்கண் திருவை மார்பில் கலந்தவன்" என்பது திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி.

18. "என்னுடைச் சிறுகுறை முடித்தல், ஈண்டு ஒரீஇப்
பின் உடைத்தாயினும் ஆக; பேதுறும்
மின் இடைச் சனகியை மீட்டு, மீள்துமால்
பொன்னுடைச் சிலையினாய்! விரைந்துபோய்" என்றான். (4023)

(சிலை - வில்; முடித்தல் - நிறைவேற்றுதல் \ போக்குதல்; பேதுறுதல் - மயங்குதல்; மீள்தல் - திரும்புதல்; ஈண்டு - இப்போது; ஒரீஇ - ஒருவி \ நீங்கி; சனகி - சனகன் மகள் சீதை; பொன் - அழகுமாம்; குறை - காரியம் \ இன்றியமையாச் செயல்)

"அழகிய பொன்னாலான வில்லினைத் தாங்கியவனே! என்னுடைய சிறிய காரியமாகிய வாலியைக் கொன்று என் மனைவி உருமையை மீட்டல் என்பதை நிறைவேற்றுவதை இப்பொழுது தவிர்த்துப் பின்னால் மேற்கொள்ளலாம். இப்போது, அதைவிட முக்கியமான, இராவணனிடம் துன்பப்படுகின்ற, மின்னல் போன்ற இடையை உடைய, சனகனின் மகளாகிய சீதாதேவியை விரைவில் சென்று இராவணனிடமிருந்து, மீட்டுக் கொண்டு திரும்புவோம், "வா" என்றான்.

முன்பு தனக்குப் பெரிய குறையாகப்பட்ட தன் துன்பம், அதனினும் மிக்க துன்பத்தைக் கண்டதும், சிறிதாகிப் போய்விட்டது என்கிறான் சுக்கிரீவன்.

தனக்கு நன்மை விளைவிக்கப் போகும் காரியத்தைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். இப்போது சீதையைக் காலம் தாழ்த்தாது விரைந்து போய் இராவணனிடமிருந்து மீட்டுக் கொண்டு வருவோம் புறப்படு என்றான் சுக்கிரீவன். மின்னலுக்கு ஒரு ஒளி உண்டே தவிர உருக் கிடையாது. அதுபோல சீதாதேவிக்கும் இடை என்பது மின்னல் போல ஒரு உருக் காண முடியாத நுட்பமானது என்பது கருத்து. எனவே சீதாதேவியின் இடைக்கு மின்னல் உவமை, "மின்னே புரையும் இடையாள்" என்றும் முன்னர்க் கூறியதும் நினைவுகூர்க.

19. இராமன் மறுமொழி (7 பாடல்கள்)

எரிகதிர்க் காதலன் இனைய கூறலும்,
அருவிஅம் கண்திறந்து, அன்பின் நோக்கினான்,
திருஉறை மார்பனும், தெளிவு தோன்றிட
ஒருவகை உணர்வு வந்து, உரைப்பது ஆயினான். (4024)

(எரிகதிர் - சூரியன்; காதலன் - புதல்வன்; இனைய - இத்தகைய; அம் - அழகிய; உணர்வு - நினைவு)

சுடுகின்ற விளக்கம்மிக்க கிரணங்களையுடைய சூரியனின் புதல்வனான சுக்கிரீவன் இவ்வாறு கூறியதும், இலக்குமி உறைகின்ற மார்பினை உடைய திருமாலின் அவதாரமான இராமபிரானும், மூர்ச்சையிலிருந்து விலகிச் சிறிது தெளிவுபெற்று, நினைவு திரும்ப, அருவிபோல் கண்ணீர் சொரிகின்ற அழகிய கண்களைத் திறந்து பேரன்போடு சுக்கிரீவனைப் பார்த்து, கீழ்வருமாறு உரைக்கலாயினான்.

"திருவுறைமார்பன்" என்பது "அகலகில்லேன் இறையும் என்று, அலர்மேல் மங்கை உறை மார்பா" என்ற திருவாய் மொழியின் அடியொற்றிய சொற்றொடர் என்க. முன்பும் "திருஉறையும் மணி மார்ப" என்று கூறியதும் நினைக.

20. விலங்கு எழில் தோளினாய் வினையினேனும், இவ்
இலங்குவில் கரத்தினில் இருக்கவே, அவள்
கலன் கழித்தனள்; இது கற்பு மேவிய
பொலன்குழைத் தெரிவையர் புரிந்துளோர்கள் யார்? (4025)

(விலங்கு - மலை; இலங்கு - விளங்குகின்ற; அழித்தல் - களைந்து எறிதல்; பொலன் - பொன்; தெரிவையர் - மகளிர்; கலன் - அணிகலன்கள்; குழை - குண்டலம் \ காதணி; கற்பு - மனைஅறநெறி \ இல்லற நெறி; மேவிய - மேற்கொண்ட)

இராமன் சுக்கிரீவனை நோக்கி, "மலைபோலும் அழகிய தோள்களை உடையவனே! தீயவினைகள் புரிந்தவனான நான், விளங்குகின்ற இந்த வில்லைக் கையில் ஏந்தியவனாக உயிருடன் பயனற்றவனாக நின்று கொண்டிருக்கும்போதே, சீதை, தான் அணிந்திருந்த அணிகலன்களைக் களைந்து வீசியிருக்கிறாள் என்றால், இல்லற நெறியை மேற்கொண்ட, அழகிய

காதணிகள் அணிந்த மகளிர்களில் இதைப் போலச் செய்தவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

"வினையினேன்" என்று தன்னைத் தானே நொந்து கொண்டது. இராமபிரான் தெய்வீக அவதாரம் என்றாலும், இப்போது தான் எடுத்திருக்கும் மானிடப் பிறவிக்கு ஏற்பத் தன்னைக் கருதிக் கொண்டதால் என்க. தன்னுடைய காத்தல் கருவியாகிய வில், தன் கையில் இருந்தும், தான் உயிரோடு இருந்தும், சீதாதேவி மங்கல ஆபரணங்களைக் களைந்து விட்டாளே என்ற ஆதங்கத்தால் கூறிய சொற்கள் இவை. காதணியையும் கூட மங்கல அணிகளாகக் கூறுவதுண்டு. கணவன் உயிருடன் இருக்கும்போது கற்புடை மகளிர் மங்கல அணிகளைக் களைவது செய்யார். எனவே சீதை இவ்வணிகலன்களைக் களைந்ததை ஒரு தீய நிமித்தமாகக் கருதி இவ்வாறு கேட்க நேர்ந்தது என்பதாம்.

கைகேயி கலன் அழித்த பொழுது தசரதன் இறப்பால் அது அமங்கலமாய் முடிந்தது. ஆனால் சீதாதேவி இப்போது அணிகலன்களைக் களைந்தாலும், அது மங்கலமாகவே முடிந்தது, என்பதை நினைவிற்கொள்க. இதனையே பின்பு அனுமன், "அன்று நீ இழிந்து நீத்த மற்றை நல் அணிகள் காண் உன் மங்கலம் காத்த மன்னோ!" என்று கூறுவதும் நினைவிற் கொள்ளத்தகும். இதுபோலச் சிலப்பதிகாரக் கண்ணகியும் கோவலன் உயிருடன் இருக்கும்போதே ஆடம்பர அணிகலன்களைத் துறந்தாள் என்பார் இளங்கோவடிகள். "அம் செஞ்சீரடி அணி சிலம்பு ஒழிய, மென்துகில், அல்குல் மேகலை நீங்க, கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்; மங்கல அணியின் பிறிதணி மகிழாள்; கொடுங்குழை துறந்து, வடிந்து வீழ்காதினள்; திங்கள் வாள்முகம் சிறுவியர் பிரியச் செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப, பவள வாள்நுதல் திலகம் இழப்ப, தவள வாள்நகை கோவலன் இழப்ப, மையிருங்கூந்தல் நெய்யணி மறப்ப, கையறு நெஞ்சத்துக் கண்ணகி" என்பது சிலப்பதிகாரம்.

21. "வாள் நெடுங் கண்ணி என் வரவு நோக்க, யான்
தாள் நெடும் கிரியொடும், தடங்கள் தம்மொடும்
பூணொடும் புலம்பினென், பொழுது போக்கினென்;
நாண் நெடும் சிலை சுமந்து உழல நாணலேன். (4026)

(நோக்க - எதிர்பார்த்திருக்க; தாள் - அடிவாரம்; தடங்கள் - பொய்கைகள்; பூண் - அணிகலன்கள்; உழல - திரிய)

"வாள் போன்று கூர்மையும், ஒளியும் கொண்ட நீண்ட கண்களையுடைய சீதாதேவி, நான் அவளைக் காப்பாற்ற வருவேன் என்று கருதி, எதிர் பார்த்துக் கொண்டிருப்பாள்; ஆனால், நானோ இங்கே அடிவாரம் அகன்ற மலைகளோடும், பொய்கைகளோடும், அவள் கழித்துப் போட்டுச்சென்ற அணிகலன்களோடும் புலம்பிக் கொண்டிருந்து என் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறேன். இந்த நாண்பூட்டப் பெற்ற நீண்ட பெரிய வில்லைச் சுமந்து திரிவதற்குக் கூட நான் வெட்கப்படாதவனாக ஆகிவிட்டேன்" என்று தன்னைத் தானே இகழ்ச்சியாகக் கூறிக்கொள்கிறான் இராமன்.

சீதாதேவி தன் ஒளிமிகுந்த கண்களாலேயே இராவணனை எரித்து அழித்திருக்க முடியும்; என்றாலும் அது தன் கணவனின் வில்லாற்றலுக்கு மாசு கற்பித்துவிடும் என்ற ஒரே காரணத்தால் அவள் அவ்வாறு செய்யவில்லை என்பதைக் குறிக்கவே "வாள் நெடுங்கண்ணி" என்று இங்கு குறித்தார் என்க. சீதாதேவி இவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருப்பாள் என்பதை, "சுருதி நாயகன் வரும் வரும் என்பது ஓர் துணிவால், கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்" என்று பின்பு கூறப்போவதோடு ஒப்பிட்டு நோக்குக. மலைகளோடும் பொய்கைகளோடும், இராமன் புலம்பியதை முன்னரே கண்டதை இங்கு நினைவிற்கொள்க. பூவொடு புலம்புதல் இப்படலத்துள் பேசப்படுகிறது. இந்த வில் தன்னிடம் பயனற்று இருக்கிறது. இதனால் எதிரிகளை வெல்ல முடியவில்லை என்பதைக் குறிக்க, "நாண் நெடுஞ்சிலை சுமந்து" என்றான் என்க. தாள் என்பது மலையின் அடிவாரத்தைக் குறிக்கும். இதனைப் "பாதசைலம்" என்பர் வட நூலார்.

22. "ஆறுஉடன் செல்பவர், அம் சொல்மாதரை
வேறுளார் வலி செயின், விலக்கி, வெம்சமத்து
ஊறுஉறத் தம்உயிர் உகுப்பர்; என்னையே
தேறினள் துயரம் நான் தீர்க்ககிற்றிலேன்." (4027)

(ஆறு - வழி; அம் - அழகிய; வேறுளார் - அயலார்; வெம்சமம் - கொடிய போர்; உகுத்தல் - விடுதல்; தேறுதல் - தெளிந்து கொள்ளுதல்; ஊறு - புண் \ துன்பம்)

"வழியில் தன்னுடன் வருபவர்களான அழகிய சொற்களையுடைய மகளிருக்கு, வழியில் செல்லும் வேறு யாரேனும் வலிந்துவந்து துன்புறுத்தினால் கூட, அதை விலக்கி, அதனால் ஏற்படும் கொடிய போரில் தான் காயப்பட்டு, துன்பப்பட்டு, உயிர் துறப்பதும் கூட, பொதுவாக வீரர்களின் இயல்பு. அவ்வாறிருக்க, நானோ, என்னையே நம்பி, கணவனாகத் தெளிந்து ஏற்றுக் கொண்ட சீதை, இப்பொழுது படுகின்ற துயரத்தைத் தீர்க்கும் ஆற்றல் அற்றவனாக இருக்கிறேனே" என்று தன்னையே நொந்து கொள்ளுகிறான் இராமன்.

இராவணன் சீதையைக் கவர்ந்து செல்லும் பொழுது, சிறிதும் அவளோடு தொடர்பு இல்லாதவனாகிய சடாயு, அவளைத் துன்பத்திலிருந்தும் காப்பாற்றுவதற்காகத் தான் துன்பப்பட்டு, உடலில் புண்களை ஏற்றுக் கொண்டு, இறுதியில் உயிரையும் விட்ட பெருந்தகைமை இங்கு நினைக்கற்பாலது. வீரர்கள் எனப்படுவர் தன்னோடு தொடர்பில்லாதவர்க்கே, தன் உயிரையும் விடுவர் என்றால் என்னோடு தொடர்புடைய, என்னையே ஆதரவாக நம்பி வந்துள்ள, என்னையே கணவனாகத் தெளிந்து ஏற்றுக் கொண்டுள்ள சீதை இப்பொழுது இராவணன் கையில் அகப்பட்டுக் கொண்டு துன்புறுவதைத் தடுத்து, அவளை மீட்கும் வழியறியாது திகைக்கிறேனே என்று இராமன் தன்னைத்தானே நொந்து கொண்டான் என்க. இவ்வாறு உடன்வரும் மாதரின் துன்பத்தைத் தீர்க்காதவன் நரகத்திற்குப் போவான் என்று முன்பு பரதன் கூறியவற்றையும் இங்கு நினைவு

கூர்க. "ஆறு தன்னுடன் வரும் அஞ்சொல்மாதரை ஊறு கொண்டு அலைக்கத் தன் உயிர் கொண்டு ஓடினோன்" என்பது பாடல் பகுதி.

23. "கருங்கடல் தொட்டனர்; கங்கை தந்தனர்;
பொரும்புலி மானொடு புனலும் ஊட்டினர்;
பெருந்தகை என் குலத்து அரசர்; பின் ஒரு
திருந்து இழை துயரம் நான் தீர்க்ககிற்றிலேன்." (4028)

(தொடுதல் - தோண்டுதல் \ அகழ்தல்; தருதல் - கொணர்தல்; பொரும் - தாக்குகின்ற; இழை - அணிகலன்கள்; கருமை - பெருமை)

"நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற என் குலத்து உதித்த முன்னோர்களில் சிலர், பெரிய கடலையே தோண்டி உருவாக்கினார்கள்; ஆகாயத்தில் சென்ற கங்கையை நிலவுலகத்திற்குக் கொணர்ந்தனர்; ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளும் பகைமையுடைய புலியையும் மானையும் ஒரே துறையில் நீர் உண்ணச் செய்தனர்; அத்தகையவர்களின் வழியில் வந்த நானோ, திருத்தப் பெற்ற அணிகலன்களையணிந்த என் மனைவியாகிய சீதையின் துயரத்தைத் தீர்க்கும் ஆற்றல் அற்றவனாக வறிதே அமர்ந்திருக்கிறேன்" என்று தன்னிரக்கம் கொண்டு பேசினான் இராமன்.

கருங்கடல் தொட்டவர் சகரர்; கங்கை கொணர்ந்தவர் பகீரதன்; பொரும்புலிமானோடு புனலும் ஊட்டியவர் மாந்தாதா. இவை முன்னர் குலமுறை கிளத்துப் படலத்தில் கூறப்பட்டன. அவற்றை இங்கு நினைவுகூர்க.

24. "இந்திரற்கு உரியது ஓர் இடுக்கண் தீர்த்து, இகல்
அந்தகற்கு அரிய போர் அவுணர் தேய்த்தனன்
எந்தை; மற்று அவனின் வந்து உதித்த யான், உளேன்
வெந்துயர்க் கொடும் பழி வில்லின் தாங்கினேன்." (4029)

(இடுக்கண் - துன்பம்; இகல் - வலிமை; அந்தகன் - இயமன் \ காலன் \ கண்ணில்லாதவன்; அவுணன் - அசுரன் \ சம்பரன்)

"என்னுடைய தந்தை தசரதச் சக்கரவர்த்தி, முன்பு தேவேந்திரனுக்கு நேரிட்ட ஒரு துன்பத்தைத் தீர்த்து, வலிமையுள்ள இயமனாலும் வெல்லுதற்கரிய போரில் சம்பரன் என்னும் ஒரு அசுரனை ஓடஓட விரட்டி அவனை வென்று, கொன்று, இந்திரனுக்கு உரிய இந்திர உலக அரசாட்சியை அவனக்கு மீட்டுக் கொடுத்தான். அவன் வழி வந்த நானோ, கொடுமையான துயரத்தையும், கொடுமையான பழியையும், இந்த வில்லைத் தாங்கிக் கொண்டிருப்பதைப் போலத் தாங்கிக் கொண்டிருக்கிறேனே" என்றான் இராமன்.

தசரதச் சக்கரவர்த்தி சம்பராசுரனை வென்று இந்திரப் பதவியை தேவேந்திரனுக்கு மீட்டுக் கொடுத்த நிகழ்ச்சி, முன்பு பால காண்டத்திலும், பின்பும் காப்பியத்தில் பல இடங்களிலும் விசுவாமித்திரர், இராமன், சடாயு முதலியோர் கூற்றாகவும் பயின்று வந்தமையை நினைவு கூர்க. இந்த வில் எவ்வாறு தனக்கு ஒரு சுமையாக இருக்கிறதோ அதுபோல இந்தப் பழியும்

எனக்கு ஒரு சுமையாக வந்து என்னை அடைந்தது. இந்த வில்லைத் தாங்கிக் கொண்டிருப்பது போல, இந்தப் பழியையும் தாங்கிக் கொண்டு வறிதே நின்றிருக்கிறேன் என்று தன்னைத்தானே நொந்து கொண்டான் இராமன் என்பதாம். சம்பரனுக்கு "திமித்துவசன்"இ என்று மற்றொரு பெயரும் உண்டு; இவன் தலை நகரம் தண்டகாரண்யத்திலுள்ள வைஜயா என்று வழங்கப்பெறும்.

25. "விரும்பு எழில் எந்தையார் மெய்ம்மை வீயுமேல்,
வரும்பழி என்று, யான் மகுடம் சூடலேன்;
கரும்பு அழி சொல்லியைப் பகைஞன் கைக்கொளப்
பெரும்பழி சூடினேன்; பிழைத்தது என்?" அரோ! (4030)

(மெய்ம்மை - வாய்மை; வீதல் - அழிதல்; கைக்கொள்ளுதல் - அபகரித்தல்; பிழைத்தது - தவறு செய்தது; எழில் - தோற்றப்பொலிவு)

"எல்லோராலும் விரும்பப்படுகின்ற தோற்றப் பொலிவுடைய என் தந்தை தசரதச்சக்கரவர்த்தி, தன் வாய்மையிலிருந்து தவறிவிடக் கூடாது, அவ்வாறு தவறி விட்டால், எனக்குப் பெரிய தீராப் பழி வந்து சேரும் என்று கருதியே, நான் முடிசூடிக்கொள்ளாது வனம் புகுந்தேன்; ஆனால் இங்கே வனத்தில், கரும்புகளின் சாற்றையும் தன் இனிய சொற்களால் தோற்பிக்கும் சொல்லினிமையுடையவளான என் மனைவி சீதையைப் பகைவனான இராவணன் அபகரித்துக் கொண்டு சென்றதால் ஏற்பட்ட பெரும்பழிக்கு உள்ளானேன்; நான் என்ன தவறு செய்தேன்!" என்று தன்னைத் தானே நொந்து கொண்டான் இராமன்.

"ஒரு பழி தன்னை வந்து அடையக் கூடாது என்று கருதி முடிசூடாது வனம் புகுந்த எனக்கு, வந்த இடத்தில் மற்றொரு பெரும்வழி வந்து சேர்ந்ததே, இதை எவ்வாறு நீக்குவேன்?" என்று எண்ணிக் கலங்கினான் என்பதாம். இதுவரை இராமன், சீதையைப் பிரிந்த வருத்தத்தினால் தன்னைத் தானே நொந்து கொண்டு இகழ்ச்சியாகப் பேசியவை கூறப்பட்டது.

26. மீண்டும் சுக்கிரீவன் இராமனைத் தேற்றுதல்

என்ன நொந்து, இன்னன பன்னி, ஏங்கியே
துன்ன அரும் துயரத்துச் சோர்கின்றான்தனைப்
பன்ன அரும் கதிரவன் புதல்வன், பையுள் பார்த்து,
அன்ன வெம்துயர் எனும் அளக்கர் நீக்கினான். (4031)

(நொந்து - வருந்தி; இன்னன - இத்தகைய; பன்னி - திரும்பத்திரும்பச் சொல்லி; ஏங்குதல் - மெலிதல்; துன்னுதல் - அடைதல் \ விழுங்குதல்; பையுள் - துன்பம்; பன்னரும் - சொல்லுதற்கரிய; அளக்கர் - கடல்; சோர்தல் - மனம் தளர்தல்; நீக்குதல் - கரையேற்றுதல்)

என்று இவ்வாறு மனம் வருந்தி, சீதையைக் காப்பாற்ற முடியவில்லையே என்று திரும்பத் திரும்பக் கூறி ஏங்கி, அடைதற்கரிய பெரிய துயரத்தால் மனம்

தளர்வுறுகின்ற இராமனை, சொல்லுதற்கரிய சிறப்புக்களையுடைய சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன், இராமனது துன்பத்தை நன்கு மனத்துள் வாங்கிக் கொண்டு, அத்தகைய கொடிய துயரம் என்னும் கடலிலிருந்து, கரையேற்ற முயற்சித்தான்.

அளக்க இயலாத அளவுடையது என்பதால் "அளக்கர்" என்பது கடலுக்குக் காரணப்பெயர்.

27. இராமன் தெளிந்து கூறுதல்

"ஐய! நீ ஆற்றலின், ஆறினேன்; அலது
உய்வனே! எனக்கு இதின் உறுதி வேறு உண்டோ?
வையகத்து இப்பழிதீர, மாய்வது
செய்வென்; நின்குறை முடித்தன்றிச் செய்கலேன்." (4032)

(ஐயம் - வியப்புமாம்; உய்தல் - பிழைத்திருத்தல்; உறுதி - நன்மை; மாய்தல் - இறத்தல்; ஆற்றல் - தணிவித்தல்; குறை - காரியம்)

"வியப்பிற்குரியவனே! நீ என்னுடைய துன்பத்தைத் தணிவிக்க முயன்றதால் நான் என் துன்பத்தைத் தணித்துக் கொள்ளமுடிந்தது; இல்லையெனில் நான் பிழைத்திருக்க வேறு வழியேயில்லை; நான் இறந்து போவதைக் காட்டிலும் வேறு நன்மை தரும் செயல் இப்போது ஏதும் இருக்கிறதா? உலகத்தில் எனக்கு உண்டான இப்பழியை நீக்கிக் கொள்ள வேண்டும் என்றால் நான் மடிந்து போவது ஒன்று தான் வழி; என்றாலும் உன்னுடைய காரியத்தை முடிக்காமல் இறந்து போக மாட்டேன்; கவலற்க!" என்றான் இராமன்.

"ஐய" என்ற சொல் அன்பின் மிகுதியால் இலக்குவனை அழைப்பது போலச் சுக்கிரீவனை அழைத்தான் என்க. இங்கே இராமன் இறப்பது ஒன்றுதான் வழி என்று தெரிந்தாலும், சுக்கிரீவனது குறையைத் தீர்க்காமல் இறக்கமாட்டேன் என்று கூறுவது, முன்பு சுக்கிரீவன், தன்னுடைய குறையைத் தீர்ப்பதைக் காட்டிலும், இராமனது மனைவியைத் தேடிக் கண்டு பிடிப்பதுதான் முதல் கடமை என்று கூறியதை ஒக்கின்றதை நோக்குக. எனவே இருவரின் நட்பின் ஆழமும் புலப்படுத்தப்பட்டது என்க. ஒருவருடைய குறையைத் தீர்ப்பதே மற்றொருவருக்கு முக்கியமானதாகப் படுவதே நல்ல நட்பின் இலக்கணம் ஆகும்.

28. அனுமன் இடையிட்டுக் கூறுதல்

என்றனன் இராகவன்; இனைய காலையில்,
வன்திறல் மாருதி வணங்கினான்; "நெடுங்
குன்று இவர் தோளினாய்! கூற வேண்டுவது
ஒன்று உளது, அதனை நீ உணர்ந்து கேள்" எனா. (4033)

(இனைய காலை - இப்பொழுது \ இந்தச் சமயத்தில்; வன்திறல் - மிக்க வலிமை; மாருதி - அனுமன்; குன்று - மலை; உணர்தல் - மனத்துட்கொள்ளுதல்; இவர்தல் - ஒத்திருத்தல்) (குளகப்பாடல்)

என்று இவ்வாறு இராமன் கூறிய சமயத்தில், வலிமைமிக்க, காற்றின் மைந்தனான, அனுமன் இராமனை நோக்கி, “நீண்ட மலை போன்ற தோள்களை உடையவனே! நான் கூற வேண்டுவது ஒன்று உள்ளது. அதனை நீ நன்கு மனத்துள் வாங்கிக் கொள்வாயாக!” என்றான்.

தான் சொல்ல இருப்பது மிகவும் ஊன்றிக் கவனிக்கத் தக்கது என்பதால் “உணர்ந்து கேள்” என்றான் என்க.

29. “கொடுந்தொழில் வாலியைக் கொன்று, கோமகன்
கடுங்கதிரோன் மகன் ஆக்கி, கைவளர்
நெடும்படை கூட்டினால் அன்றி, நேட அரிது
அடும்படை அரக்கர் தம் இருக்கை, ஆணையாய்.” (4034)

(ஆணை - ஆணைச்சக்கரம்; தொழில் - செயல்; கைவளர்தல் - செயல் மிகுதல் \ பழகி வளர்தல்; அடுதல் - கொல்லுதல்; இருக்கை - உறையும் இடம்; நேட - தேட)

“உலகெங்கும் ஆணைச்சக்கரத்தைச் செலுத்தும் இராமபிரானே! கொடிய செயல்களையுடைய வாலியைக் கொன்று, அதன் பின், வெய்ய கிரணங்களை யுடைய சூரியனுடைய புதல்வனான சுக்கிரீவனை வானர குலத்துக்கு மன்னன் ஆக்கி, அவன் கட்டளையால், வாலியின் பெரிய வானரப் படைகளை ஒன்று சேர்த்தால் அன்றி, கொல்லும் தன்மைவாய்ந்த படைகளையுடைய அரக்கர்களின் இருப்பிடத்தை நாம் தேடிக் கண்டு பிடிப்பது என்பது அரிய செயலாகும்” என்கிறான் அனுமன்.

30. “வானதோ? மண்ணதோ? மற்று வெற்பதோ?
ஏனை மா நாகர்தம் இருக்கைப் பாலதோ?
தேன் உலாம் தெரியலாய்! தெளிவது அன்று; நாம்
ஊனுடை மானிடம் ஆனது உண்மையால்.” (4035)

(தேன் - வண்டுகள்; உலாம் - உலவும் \ சூழும்; தெரியல் - மாலை; வெற்பு - மலை; ஏனை - மற்ற; தெளிதல் - தெரிந்து அறிதல்; ஊன் - மாமிசம் \ குறைபாடு, ஊனம்; மானிடம் - மனிதப் பிறவி)

“வண்டுகள் சூழ்ந்து மொய்க்கின்ற மலர்மாலை அணிந்தவனே! அந்த அரக்கர்கள் இருக்கின்ற இடம் வானத்தில் உள்ளதோ? இம்மண்ணுலகத்தில் உள்ளதோ? அல்லது மற்ற பெரிய நாகர்கள் வசிக்கும் பாதாளத்தில் உள்ளதோ? நாம் குறைபாடு உடைய மாமிசத்தினால் ஆன உடலைப் பெற்ற மனிதப் பிறவியர் என்ற உண்மையினால், இந்த இடம் தான் என்று தெரிந்து கொள்ள இயலாதவர்களாய் இருக்கிறோம்” என்கிறான் அனுமன்.

அரக்கர்கள் தாம் இருக்கும் இடத்திலிருந்தே உலகில் நடப்பனவற்றை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள். நினைத்த இடத்திற்கு நினைத்தவுடன் செல்லும் ஆற்றலும் உடையவர்கள். ஆனால் நாம் மானிடர்கள். எனவே அத்தகைய ஆற்றல் பெற்று இருக்கவில்லை. எனவே நாம் பல இடங்களுக்கும் வானரப் படையினை அனுப்பித்தான் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும் என்கிறான் அனுமன். மற்றும் ஒன்று. குரங்கினப் படையையும் சேர்த்து, மானுடர் என்று கூறுவதை நோக்குக. வானரரும் நரரில் ஒருவகையினரே என்க.

31. "எவ்வுலகங்களும் இமைப்பின் எய்துவர்;
வவ்வுவர் அவ்வழி மகிழ்ந்த யாவையும்;
வெவ்வினை வந்தென வருவர், மீள்வரால்;
அவ்வவர் உறைவிடம் அறியற்பாலதோ?" (4036)

(இமைப்பு - கண் இமைக்கும் நேரம் \ மாத்திரை \ நொடிப்பொழுது; வவ்வுதல் - கவர்ந்து கொள்ளுதல் \ அபகரித்தல்; மீளுதல் - திரும்பிச் செல்லுதல்; மகிழ்தல் - விரும்புதல்)

"அவ்வரக்கர்கள் கண் இமைக்கும் நொடிப்பொழுது நேரத்திற்குள் எல்லா உலகங்களையும் சென்றடையும் ஆற்றல் பெற்றவர்கள்; அவ்வாறு செல்லுமிடங்களில் தமக்கு விரும்பியவற்றைக் கவர்ந்து கொண்டு வந்து விடும் இயல்புடையவர்கள்; ஒருவன் செய்த தீயவினையின் பயன், அவனைத் தொடர்ந்து மறுபிறவியிலும் வந்து வருத்துவது போல, அரக்கர்களும் எல்லோரையும் தொடர்ந்து சென்று துன்புறுத்தித் தத்தம் இடம் அடைவர்; எனவே அவர்கள் தங்கியிருக்கும் இடம் இன்னதுதான் என்று நம்மால் உறுதிபட அறியமுடியாத தன்மையதாகும்" என்றான் அனுமன்.

ஒருவன் செய்த தீயவினையின் பயனாகிய பாவமோ, நல்ல வினையின் பயனாகிய புண்ணியமோ அவனது அடுத்தடுத்த பிறவிகளிலும் அவனைத் தொடர்ந்து வந்து, தன் செயலைச் செய்து விட்டுத்தான் போகும் என்பது, ஒரு நாலடியார் பாடலால் நன்கு விளங்கும். "பல் ஆவுள் உய்த்துவிடினும் குழக்கன்று, வல்லதாம் தாய் நாடிக் கோடலைத் தொல்லைப் பழவினையும் அன்னதகைத்தே; தற் செய்த கிழவனை நாடிக் கொளற்கு" என்பது நாலடியார் 101.

32. "ஒருமுறையே பரந்து, உலகம் யாவையும்
திருஉறை வேறு இடம் தேர வேண்டுமால்;
வரன்முறை நாடிட, வரம்பு இன்றால் உலகு;
அருமை உண்டு; அளப்பரும் ஆண்டும் வேண்டுமால்." (4037)

(வரன்முறை - வரிசையாக \ ஒன்றன் பின் ஒன்றாக; அளப்பரும் - அளவற்ற; தேர - ஆராய்ந்து அறிய; அருமை - இடர்ப்பாடு; ஒருமுறையே - ஒரே சமயத்தில்; வரம்பு - எல்லை; திரு - இலக்குமி \ சீதாதேவி; பரந்து - வியாபித்து)

"இவ்வுலகம் எல்லை இல்லாது அகன்று பரந்தது; அரக்கர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் விரைந்து செல்வதில் வல்லவர்கள். எனவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வரிசையாகச் சென்று தேடுவது என்பதில் பல இடர்ப்பாடுகள் உண்டு; அதற்கு அளவற்ற காலமும் தேவைப்படும்! எனவே, வானரப்படை எல்லாமும், ஒரே சமயத்தில் உலகம் முழுவதும் பரவலாகச் சென்று, இலக்குமி போன்ற சீதாதேவியார் தங்கியிருக்கின்ற இடத்தை ஆராய்ந்து அறிதல் வேண்டும்" என்கிறான் அனுமன்.

உலகு வரம்பு இன்று; வரன் முறை நாடிட அருமை உண்டு; அளப்பரும் ஆண்டும் வேண்டும். ஆதலால் உலகம் யாவையும் ஒரு முறையே பரந்து திருஉறை வேறு இடம் தேர வேண்டும் என்பது அனுமன் கருத்து.

33. "ஏழு பத்தாகிய வெள்ளத்து எம்படை
ஊழியிற் கடல் என உலகம் போர்க்குமால்;
ஆழியைக் குடிப்பினும், அயன் செய் அண்டத்தைக்
கீழ் மடுத்து எடுப்பினும், கிடைத்த செய்யுமால்." (4038)

(ஏழுபத்து - எழுபது; ஊழி - யுகமுடிவு; போர்த்தல் - பரவுதல் \ மூடுதல்; ஆழி - கடல்; அயன் - பிரமன்; செய் - செய்த \ படைத்த \ தோற்றுவித்த; அண்டம் - உலக உருண்டை; மடுத்து - செலுத்தி; கிடைத்தல் - எதிர்ப்படுதல்)

"எழுபது என்று கணக்கிடப் படுகின்ற எங்கள் வானரச் சேனை, பிரளய காலத்தில் பொங்குகின்ற கடல்போல, இவ்வுலகங்கள் எல்லாவற்றிலும் வியாபித்து அதைக் கவிழ்த்து மூடிக் கொள்ளும் இயல்புடையதாகும்; எனவே, இவ்வானரப்படை கடல் நீரை வற்றக் குடிப்பது என்றாலும், பிரமன் படைத்த அண்டகோளத்தைக் கையைக் கீழே செலுத்திப் பெயர்த்து எடுப்பதென்றாலும், எதுவாயிருந்தாலும், தமக்கு இடப்பட்ட பணியைச் செவ்வனே செய்து முடிக்கும் இயல்புடையனவாகும்" என்கிறான் அனுமன்.

இத்தகைய வீரச் சிறப்புக்கள் பட்டினப்பாலையிலும் கரிகாலனின் வீரச் சிறப்புக்களாகப் பேசப்பட்டிருக்கிறது; "மலை அகழ்குவனே! கடல் தூர்க்குவனே; வான் வீழ்க்குவனே; வளி மாற்றுவனே" என்பது பட்டினப்பாலை.

34. எல்லோரும் வாலியிடத்திற்குச் செல்லுதல்

"ஆதலால் அன்னதே அமைவதாம் என,
நீதியாய்! நினைந்தனென்;" என நிகழ்த்தினான்;
"சாதுவாம்" என்ற அத் தனுவின் செல்வனும்
"போதும் நாம் வாலிபால்" என்னப் போயினார். (4039)

(அமைவது - பொருந்தியது \ தக்கது; தனு - வில்; நிகழ்த்துதல் - தெரிவித்தல், கூறுதல்; சாது - நல்லது \ ஏற்றது)

"எனவே, நீதிநெறியில் சிறந்து விளங்குபவனே! வாலியைக் கொன்று வானரப் படைகளை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு, ஒரே சமயத்தில், உலகம் முழுவதும் பரவிச் சென்று, சீதாதேவியைத் தேடிக் கண்டு பிடிப்பதே இப்பொழுது செய்யத் தக்க செயலாகும் என்று நான் எண்ணுகிறேன்" என்று அனுமன் இராமனுக்குத் தெரிவித்தான். இராமன், "அதுவே சரியானது. இப்பொழுது நாம் வாலி இருக்கும் இடத்திற்குச் செல்லுவோம் வாருங்கள்" எனக்கூற, சுக்கிரீவன், அனுமன், இராம இலக்குவர், அவர்களுடன் கூட, சுக்கிரீவனின் மற்ற மூன்று அமைச்சர்களான தாரன், நளன், நீலன் ஆகியவர்களும் உடன் சென்றனர்.

அனுமனைச் "சொல்லின் செல்வன்" என்றது போல, இங்கே இராமனை "தனுவின் செல்வன்" என்று குறித்தது காண்க.

கலன்காண் படலம் நிறைவுற்றது

7. வாலி வதைப் படலம் (181 பாடல்கள்)

சுக்கிரீவனது ருசியமூக மலையில், அனுமன் கூறிய சொற்களுக்கு ஏற்ப, இராம இலக்குவர், சுக்கிரீவன், அனுமன் முதலியோருடன், கிட்கிந்தையில் உள்ள வாலியின் இடத்திற்குச் சென்று, அவனை வதைக்கின்ற செய்திகளைக் கூறும் பகுதி என விரியும். இது 181 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் "வாலி மோட்சப் படலம்" எனவும் குறிக்கப் பெற்றிருக்கிறது.

இப்படலத்துள், இராமன் முதலியோர் ருசியமூக மலையிலிருந்து கிட்கிந்தைக்குச் செல்லும் வழியின் தன்மை; வாலியின் இருப்பிடத்தை அடைந்து எல்லோரும் கலந்து ஆலோசித்தல்; இராமன் சுக்கிரீவனிடம், வாலியைப் போருக்கு அழைக்கக் கூறுதல்; அவ்வாறே சுக்கிரீவன் அழைக்கவும், வாலி வியந்து போருக்கு எழுதல்; மனைவி தாரை சுக்கிரீவனுக்குத் துணையாக இராமன் வந்துள்ளான் என்று கூறி விலக்க முற்படுதல்; வாலி இராமனின் நற்பண்புகளைத் தாரைக்கு விளக்கிக் கூறி, அவளை மறுத்துப் புறப்படுதல்; வாலி, சுக்கிரீவன் ஆகிய இருவரது தோற்றப் பொலிவையும் வியந்து இராமன் இலக்குவனுக்கு உரைத்தல்; இலக்குவன் சுக்கிரீவனின் செய்கையில் தான் ஐயம் கொள்வதாகக் கூறுதல்; இராமன் அவனுக்கு ஏற்ற மறுமொழி கூறுதல்; வாலியும் சுக்கிரீவனும் நெருங்கிப் போர் செய்தல்; வாலியால் அடிபட்ட சுக்கிரீவன் இராமனிடம் ஓடி வந்து முறையிடுதல்; இராமன் இருவருக்கும் வேற்றுமை தெரியவில்லை என்று கூறி சுக்கிரீவனுக்குக் கொடிப்பூ அணிவித்து மீண்டும் போர் செய்யச் சொல்லுதல்; வாலி மீண்டும் சுக்கிரீவனைப் பற்றித் தரையில் ஓங்கி அடிக்க முற்படும் பொழுது, இராமன் மறைவிலிருந்து தன் அம்பை வாலியை நோக்கிச் செலுத்துதல்; வாலி மண்ணில் சாய்தல்; பிடி நழுவிச் சுக்கிரீவன் விலகுதல்; தன் மீது அம்பு எய்யும் திறமை பெற்றவர் யார் என்று காண, வாலி அவ்வம்பினைத் தன் கைகளால் பற்றுதல்; அம்பை மார்பில் நின்றும் பிடுங்கியதால் இரத்த வெள்ளம் பெருகுவதைக் கண்ட சுக்கிரீவன் மயக்கமுற்று மண்ணில் வீழ்தல்; வாலி அம்பினில் இராமன் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்ணுறுதல்; வாலி இராமனைப் பலவாறாக இகழ்ந்து பேசுதல்; வாலியின் முன் இராமன் எதிர்ப்பட்டுத் தான் செய்தது சரியே என்று கூறுதல்; வாலி மீண்டும் தன் குலத்துக்குரியனவற்றையே தான் செய்ததாகவும் கூற இராமன் மறுத்தல்; வாலி தன்னை இராமன் மறைந்து நின்று கொன்றது ஏன் என்று வினவவும், இலக்குவன் மறுமொழி கூற, வாலி மன அமைதியும் மனமாற்றமும் பெற்று, இராமனை இறைஞ்சித் தொழுதல்; இராமனுக்கு அனுமனின் ஆற்றல் பற்றிக் கூறுதல்; சுக்கிரீவனை இராமனிடம்

அடைக்கலமாகத் தந்து அவனுக்கு அறிவுரை கூறுதல்; அங்கதனை அழைத்துவரச் சொல்லுதலும், அங்கதன் வாலி நிலை கண்டு வருந்திப் புலம்புதல்ம்; அவனுக்கு ஆறுதல் கூறி, அவனையும் இராமனிடம் அடைக்கலமாகத் தருதல்; அங்கதன் இராமனை வணங்க, அவனுக்குத் தன் உடைவாளைத் தந்து தழுவுதல்; வாலி பரமபதம் அடைதல்; வாலி கை நெகிழவும், இராமபாணம் மேலே சென்று பின் கடலுள் சென்று தோய்ந்து, மீண்டும் இராமபிரானின் அம்பறாத் தூணியை அடைதல், வாலி இறந்தது பற்றிக் கேள்வியுற்ற தாரை ஓடிவந்து வாலியின் மேல் வீழ்ந்து புலம்புதல்; அனுமன் தாரையைத் தேற்றி அந்தப்புரத்திற்கு அனுப்புதல்; அங்கதனைக் கொண்டு வாலிக்கு ஈமக்கடன்களை நிறைவேற்றுதல்; சூரியன் மறைதல்; இராமன் சீதையை எண்ணி வருந்தி இரவுப் பொழுதைக் கழித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. எல்லோரும் மலைச் சாரல் வழியே செல்லுதல்

வெங்கண் ஆளிஏறும், மீளிமாவும், வேகநாகமும்,
சிங்கஏறு இரண்டொடும், திரண்ட அன்ன செய்கையார்
தங்குசாலம், மூலம்ஆர் தமாலம், ஏலம், மாலைபோல்
பொங்கு நாகமும் துவன்ற, சாரல் ஊடு போயினார். (4040)

(வெம் - கொடிய \ வெம்மை மிக்க; ஆளி ஏறு - ஆண் யாளி; மீளி - வலிமை; மா - புலி; வேகம் - வெகுளி; நாகம் - யானை; சிங்க ஏறு - ஆண் சிங்கங்கள்; சாலம் - ஆச்சா மரங்கள்; தங்கு - நிலைத்த; மூலம் - ஒருவகைமரம்; தமாலம் - பச்சிலை மரங்கள்; பொங்கு - செழித்த; நாகம் - சுரபுன்னை மரம்; துவன்ற - அடர்ந்துள்ள; ஆர் - அத்தி மரம்; ஏலம் - ஏலக்காய் மரம் \ சடாமஞ்சிகை என்னும் மரமுமாம்)

அச்சம் தரக்கூடிய கொடிய கண்களையுடைய ஆண் யாளியும், வலிமை மிக்க ஆண் புலியும், விரைந்த கோபம் கொண்ட யானையும், ஆண் சிங்கங்கள் இரண்டோடும் ஒன்று கூடி வருவது போன்ற செய்கையுடைய சுக்கிரீவன் முதலியோர், அங்கே நிலை பெற்று வளர்ந்திருக்கின்ற ஆச்சா மரங்கள், மூலம் என்னும் ஒருவகை மரங்கள் ஆழமான வேரோடு ஊன்றி வளர்ந்திருக்கின்ற பச்சிலை மரங்கள், மாலையைப் போல் வரிசையாகச் செழித்த பூக்களைப் பூத்திருக்கின்ற சுரபுன்னை மரங்கள் ஆகியவை அடர்த்தியாக நிறைந்துள்ள மலைச் சாரலின் வழியே செல்லலானார்கள்.

ஆளி என்பது யாளி என்றும் வழங்கப்பெறும். இது யானை போலத் துதிக்கையும், சிங்கம் போலக் கூரிய நகங்களும், கொடிய பறவை போல அலகும், இறக்கைகளும், உள்ள ஒரு வகைக் கொடிய விலங்கு; இவற்றை நம் நாட்டுப் பழைய நூல்களிலும், சித்திரங்களிலும், பிரதிமை முதலியவற்றிலும் காணலாம். இப்பொழுது இவ்வனவிலங்கு இருப்பதாகத் தெரியவில்லை. இங்கே "வெங்கண் ஆளி" என்றது சுக்கிரீவனையும், "மீளி மா" என்றது அனுமனையும், "வேக நாகம்" என்பது தாரன், நளன், நீலன் ஆகிய மூவரையும், "சிங்க ஏறு

இரண்டு" என்பது இராம இலக்குவர்களையும் குறிக்கும் என்க. இதே போலப் பின்னர் சுந்தர காண்டத்திலும், அசோகவனத்தில் திரிசடை, தான் கண்ட கனவில் இரு சிங்க ஏற்றினைக் கண்டதாகச் சீதையிடம் கூறுவதையும் இங்கு ஒப்பிட்டு நோக்கலாம். அவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு வந்த காட்சி, யானை, புலி, சிங்கம் முதலியவை வந்தது போல் இருந்தது என்று கூறுவது அவர்களின் அச்சம் தரத்தக்க தோற்றத்தையும், விரைவையும் குறித்தது என்க. "துவன்று நிறைவாகும்" என்பது தொல்காப்பியம்.

2. மலை வழியில் உள்ள காட்சிகள் (7 பாடல்கள்)

உழைஉலாம் நெடுங்கண் மாதர் ஊசல்; ஊசல் அல்லவேல்,
தழை உலாவு சந்து அலர்ந்த சாரல்; சாரல் அல்லவேல்
மழைஉலாவு முன்றில்; அல்ல, மன்றல் நாறு சண்பகக்
குழை உலாவு சோலை; சோலை அல்ல, பொன் செய்குன்றமே.(4041)

(உழை - மான்; ஊசல் - ஊஞ்சல்; தழை - தளிர்கள்; சந்து - சந்தன மரங்கள்; அலர்ந்த - மலர்ந்து விளங்கும்; சாரல் - மலைப்பக்கங்கள் \ அடிவாரம்; மழை - முகில் \ மேகம்; உலாவுதல் - தங்குதல்; முன்றில் - மலைமுற்றங்கள்; மன்றல் - மணம்; குழைதல் - அசைதல்; குழை - தளிருமாம்; மாதர் - இங்கே வானர மகளிர்)

அவர்கள் செல்லுகின்ற வழியெங்கும், மான் போன்ற மருண்ட பார்வையும், நீண்ட கண்களுமுடைய வானர மகளிர் ஆடுகின்ற ஊஞ்சல்கள் இருந்தன; அவை இல்லாத இடங்களில் தளிர்களுடன் கூடிய சந்தன மலர்கள் பூத்துக் குலுங்கும் மலைப்பக்கங்கள் இருந்தன; அவையில்லாத இடங்களில் நறுமணம் கமழ்கின்ற தளிர்களுடன் கூடிய சண்ப மலர் நிறைந்த சோலைகள் விளங்கின; அவையும் இல்லாத இடங்களில் பொன் போன்று அழகிய குன்றுகளும் காணப்பட்டன.

அவர்கள் சென்ற வழியெல்லாம் ஊஞ்சல்கள், சந்தன மலைச்சாரல், மேகம் படியும் மனை முற்றங்கள், சண்பக மலர்ச்சோலைகள், செய்குன்றங்கள் ஆகிய இனிய விளையாட்டு இடங்கள் நிறைந்து காணப்பட்டன என்று அந்நாட்டின் வளப்பத்தையும் அந்நாட்டு மக்களின் இன்ப நிலையினையும் கூறினார் என்க.

3. அறங்கள் நாறு மேனியார், அரிக்கணங்களோடும் அங்கு
இறங்குபோதும், ஏறுபோதும், ஈறு இலாத ஓதையால்,
குறங்கு வார்கழல் கலன் கலிப்ப, முந்து கண் முகிழ்த்து,
உறங்கும் மேகம் நன்கு உணர்ந்து, மாகம் மீது உலாவுமே. (4042)

(நாறுதல் - தோன்றுதல் \ விளைதல்; அரிக்கணங்கள் - வானரக்கூட்டம்; கறங்குதல் - ஒலித்தல்; வார் - நீண்ட; கலன் அணிகலன்கள்; கலித்தல் - ஒலித்தல் \ ஆரவாரித்தல்; ஈறிலா - முடிவில்லாத; ஓதை - பேரோசை; முந்து - முற்பட்டு; முகிழ்த்து - கண் மூடுதல்; மாகம் - ஆகாயம்; உலாவும் - சஞ்சரிக்கும் \ தவழும்; உணர்தல் - விழிப்புறுதல்)

தருமமே திருமேனியாகப் பெற்று அவதாரம் எடுத்து வந்துள்ள இராமஇலக்குவர்கள், கால்களில் அணிந்திருக்கின்ற நீண்ட வீரக்கழல்கள் என்னும் அணிகலன்கள் இடைவிடாது எழுப்புகின்ற அளவற்ற பேரோசையால், அங்கே மலை மீது படிந்து கண்மூடி உறங்குகின்ற நிலையில் இருக்கும் மேகங்கள் எல்லாம், நன்கு விழிப்புற்று, ஆகாயத்தில் சஞ்சரிக்கலாயின.

இராம இலக்குவர்களின் மானிட அவதார நோக்கமே அறம் தலை நிறுத்தல் என்பது. எனவே அவர்களைக் குறிக்க “அறங்கள் நாறும் மேனியார்” என்றார் என்க. இவர்கள் வீரக்கழல்கள் எழுப்பிய பேரோசையில், கண்மூடித் தூங்கிக் கொண்டிருந்த மேகங்கள் தூக்கம் கலைந்து, விழிப்புணர்வு எய்தி, தமது இடமான ஆகாயத்தில் சென்று சஞ்சரிக்கும் வண்ணம் சிதறிப்போயின என்பதும் ஒன்று. மேகம் கண் முகிழ்த்து உறங்கும் என்று கூறுவது கவி மரபு. நறுமணம் கமழும் திருமேனி என்றும் பொருள் கொள்ளலாம். ஆண்கள் மேனி முல்லை மணமும், பெண்கள் மேனி சண்பக மலரின் மணமும் கொண்டு விளங்கும் என்று முன்பு கண்டதை இங்கு நினைவு கூர்க.

4. நீடு நாக மூடு மேகம் ஓட, நீரும் ஓட, நேர்
ஆடும் நாகம் ஓட, மானயானை ஓட, ஆளிபோம்
மாடு நாகம் நீடு சாரல், வாளைஓடும் வாவியூடு
ஓடு நாகம் ஓட, வேங்கை ஓடும்; யூகம் ஓடுவே. (4043)

(நீடு - நீண்ட; நாகம் - மலை \ பாம்பு; மான - பெருமை மிக்க; ஆளி - சிங்கம்; மாடு - பக்கம்; நாகம் - சுரபுன்னை மரங்கள்; சாரல் - மலைச்சாரல்; வாவி - குளம் \ பொய்கை; நாகம் - நீர்ப்பாம்புகளுமாம்; வேங்கை - புலி; யூகம் - கருங்குரங்குகள்; நேர் - எதிரில்)

இவர்களின் வருகையின் விரைவும் வேகமும் கண்டு, நீண்ட மலைகளின் இடையே மேகங்கள் அஞ்சி ஓடலாயின; அவை பொழிந்த மழை நீரும் பயந்து பாய்ந்து ஓடலாயின; எதிரில் படம் எடுத்தாடிய நாகப்பாம்புகளும் ஓடலாயின; மான்களும், பெருமைமிக்க யானைகளும் ஓடலாயின; சிங்கங்கள் திரிகின்ற பக்கங்களில் வளர்ந்துள்ள சுரபுன்னை மரங்களின் நீண்ட மலைச்சாரலில் உள்ள பொய்கைகளில் விளையாடும் வாளை மீன்களும், தண்ணீர்ப் பாம்புகளும் அஞ்சி ஓடலாயின; புலிகளும், கருங்குரங்குகளும் ஓடலாயின.

நாகம் என்ற ஒரே சொல் முறையே, மலை, பாம்பு; சுரபுன்னைமரம்; தண்ணீர்ப்பாம்பு, முதலியவற்றைக் குறிக்கும். இவர்கள் விரைந்து வருகின்ற வேகத்தைக் கண்டு, மேகங்கள், வெள்ளம், நாகப்பாம்பு, மான்கள், யானைகள், சிங்கங்கள், வாளை மீன்கள், தண்ணீர்ப் பாம்புகள், புலிகள், குரங்குகள் முதலிய வலிய மிருகங்களும், மெல்லிய இயல்புடைய ஊர்வனவும் கூடப் பயந்து ஒதுங்கின என்றது ஒரு நயம். யூகம் என்று கருங்குரங்கைத் தனியே கூறியதால் மற்ற வானரங்கள் எல்லாம் மானிடராகவே கருதப்பட்டன என்க.

5. மருண்ட மாமலைத் தடங்கள் செல்லல் ஆவ அல்ல; மால்
தெருண்டிலா மத்த யானை சீறி நின்று சிந்தலால்,

இருண்ட காழ் அகில் தடத்தொடு இற்று வீழ்ந்த சந்து வந்து
உருண்டபோது, அழிந்த தேன் ஒழுக்கு பேர் இழுக்கினே. (4044)

(தெருள் - தெளிதல்; மால் - மயக்கம்; மதம் - செருக்கு; சிந்துதல் - தாக்குதல்; காழ் - திண்ணிய; இற்று - ஒடிந்து; சந்து - சந்தனமரங்கள்; அழிந்த - சிதைவுற்ற; இழுக்கல் - வழுக்குதல்; தடங்கள் - வழிகள்; ஆவ - தக்கன; மருண்ட - மருட்சியை விளைவிக்கின்ற)

மத மயக்கத்தினின்றும் தெளிவுபெறாத செருக்கு மிக்க யானைகள் மிக்க சினம் கொண்டு நின்று மோதியதால், இருள் நிறம் கொண்ட கரிய, திண்ணிய, முற்றி வயிரம் பாய்ந்த அகில் மரங்கள் வழியில் ஒடிந்து விழுந்தன, சந்தன மரங்கள் வந்து வழியில் உருண்டு சென்றதால், அதனின்றும் சிந்திய தேனின் பெருக்கு பெரிதும் வழுக்கியது, எனவே கண்டவர்களை மருட்சியடையச் செய்யும் பெரிய மலைகளின் வழிகள் அவ்வளவு எளிதாகச் செல்ல இயலாதவை ஆயின.

யானைகள் மிக்க சினம் கொண்டன; அவைகள் ஒன்றுக்கொன்று மோதித் தாக்கிக் கொண்டன; மரங்கள் இற்று வீழ்ந்தன. அதிலிருந்த தேனடைகள் சிதறிச் சிந்தி ஆறாகப் பெருகியது; எனவே பாதை வழுக்கல் உடையன ஆயின; எனவே அதில் செல்லுவது என்பது அத்தனை எளிதானதாக இல்லை. என்பது கருத்து.

6. மினல் மணிக்குலம் துவன்றி, வில் அலர்ந்து, விண்குலாய்
அனல் பரப்பல் ஒப்ப, மீது இமைப்ப, வந்து அவிப்ப போல்,
புனல் பரப்பல் ஒப்பு இருந்த பொன்பரப்பும் என்பரால்;
இனைய வில் தடக்கை வீரர் ஏகுகின்ற குன்றமே. (4045)

(மினல் - மின்னல்; குலம் - குவை \ குவியல்; வில் - ஒளி; அலர்ந்து - விரிந்து பரவி; விண் - வானத்தில்; குலாய் - குலாவும் \ கலந்து விளங்கும்; பரப்பல் - அவித்தல் \ அணைத்தல்; இமைப்ப - ஒளிவிட்டு விளங்க; பொன் - ஒளி; என்ப - என்று கூறுவர்; இனைய - இத்தகைய; துவன்றி - நெருங்கி \ நிறைந்து \ அடர்ந்து, செறிந்து)

விற்களைத் தம் பெரிய நீண்ட கைகளிலே ஏந்திக் கொண்டு வீரர்களாகிய இராம இலக்குவர் ஏறிச் செல்லுகின்ற இத்தகைய மலை, மின்னலும், நவரத்தினங்களின் தொகுதிகளும் நிறைந்து ஒளிபரப்பி, ஆகாயமளாவும் பொருந்தி நெருப்பைப் பரப்பி வைத்தது போல மேலே நின்று விளங்கவும், அதனை அவிப்பதற்காக, நீரைப் பரப்புவது போல் பொன்னொளி பரவிற்று என்றும் சான்றோர் கூறுவர்.

அம்மலையின் மீதுள்ள மாணிக்கக்கற்களின் ஒளிக்கற்றை, வானளாவ வீச, அது நெருப்பைப் பரப்புவன போன்றிருந்தது. அந்நெருப்பை அவிக்கும் நீர் போல, அங்குள்ள பொன்னின் தொகுதிகளின் ஒளி விளங்கியது என்பது கருத்து. மலைவளம் சிறப்பிக்கப்பட்டது.

7. மருவி ஆடும் வாவி தோறும், வான ஆறு பாயும் வந்து;
இருவி ஆர் தடங்கள் தோறும், ஏறுபாயும் ஆறுபோல்"
அருவிபாயும்; முன்றில் ஒன்றி யானை பாயும்; ஏனலில்
குருவிபாயும்; ஓடிமந்தி கோடு பாயும் மாடெலாம். (4046)

(மாடு - பக்கம்; வாவி - தடாகங்கள்; வானயாறு - ஆகாய கங்கை; மருவி - பொருந்தி; இருவி - கதிர் அரிந்த தாள்கள்; தடங்கள் - புனல்கள்; ஏறு - எருதுகள்; முன்றில் - மலை முற்றங்கள்; ஒன்றி - பொருந்தி; பாய்தல் - விளையாடுதல்; ஏனல் - தினைக்கதிர்; மந்தி - குரங்குகள்; கோடு - மரக்கிளை \ மலைச்சிகரம்)

அம்மலைகளின் பக்கங்களெல்லாம், தாமே பொருந்தி அமைந்திருந்த பொய்கைகளிலெல்லாம் ஆகாய கங்கை வந்து பாயும்; கதிர் அரிந்த தாள்கள் நிறைந்த புனல்களிலெல்லாம் எருதுகள் புகுந்து விளையாடும்; ஆற்று வெள்ளத்தைப் போல் அருவிகள் பெருக்கெடுத்து ஓடும்; மலை முற்றங்களி லெல்லாம் யானைகள் நீரிடைப் பொருந்தி நீராடி விளையாடும்; தினைப் புனங்களில் குருவிகள் பாய்ந்து ஓசையிடும்; குரங்குகள் மரக்கிளைகளுக்குள் ஓடிச் சென்று பாய்ந்து திரியும்.

மலையின் உயர்ச்சியும், நீர்வளமும், உணவு, கனி முதலியவற்றின் மிகுதியும், பொதுவாக மலைவளமும் சிறப்பிக்கப்பட்டது. இருவி என்பது கதிர் கொய்யப்பட்ட தட்டையைக் குறிக்கும்.

8. தேன் இழுக்கு சாரல் வாரி செல்ல, மீது செல்லும் நாள்
மீன் இழுக்கும்; அன்றி, வானவில் இழுக்கும்; வெண்மதிக்
கூன் இழுக்கும்; மற்று உலாவு கோள் இழுக்கும்; என்பரால்;
வான் இழுக்கும் ஏல வாச மன்றல் நாறு குன்றமே. (4047)

(வான் - வானத்திலுள்ள தேவர்கள்; நாறுதல் - கமழுதல்; மன்றல் - நறுமணம்; இழுக்குதல் - வழுக்குதல்; வாரி - வெள்ளம் \ ஆறு; நாள் மீன் - நட்சத்திரங்கள்; கூன் - வளைந்த; வானவில் - இந்திரவில்; கோள் - கிரகங்கள்)

தன்னுடைய வாசனையால், நறுமணம் கமழும் அந்தக் குன்றம் தேவலோகத்தில் வாழும் தேவர்களையே தன்பால் இழுக்கும் ஆற்றலுடையது; தேன் சொரிந்து வழுக்குகின்ற மலைப் பக்கங்களிலெல்லாம் அவை வெள்ளம் போல் பெருகி ஓட, வானத்தின் மீது செல்லும் நட்சத்திரங்களையும், வான வில்லையும், வெள்ளிய வளைந்த பிறைச்சந்திரனையும் மற்றும் அங்கு சஞ்சரிக் கின்ற எல்லாக்கிரகங்களையும் தன்பால் இழுக்கும் என்று கூறுவர்.

கூன் என்ற சொல் வளைந்த பிறைச்சந்திரனைக் குறித்தது. வளைந்த யாக்கையை உடைய மனிதர்களைக் கூன் என்று கூறுவதையும் நினைக. மலையின் உயர்ச்சியும், நீர்ப்பெருக்கின் மிகுதியும் சிறப்பிக்கப்பட்டது.

9. எல்லோரும் கிட்கிந்தை மலையைச் சேர்தல்

அன்னது ஆய குன்றின் ஆறு சென்ற வீரர், ஐந்தொடு ஐந்து
உன்னல் ஆய யோசனைக்கும் உம்பர் ஏறி, இம்பரில்

"பொன்னின் நாடு இழிந்தது அன்ன, வாலிவாழ் பொருப்பு இடம்
துன்னினார்கள்; "செய்வது என்னை?" என்று, நின்று சொல்லுவார். (4048)

(ஆறு - வழி; உம்பர் - மேலே; பொருப்பு - மலை; பொன்னின் நாடு - வானுலகம்; இம்பர் - மண்ணுலகம்; சொல்லுதல் - பேசிக்கொள்ளுதல் \ உரையாடுதல்)

அத்தகைய மலையின் வழியில் சென்ற வீரர்களாகிய இராம இலக்குவர், ஐந்தும் ஐந்தும் என்று சொல்லப்படுகின்ற பத்து யோசனை தூரத்திற்கும் மேல் அம்மலைமீது ஏறிச் சென்று, இம்மண்ணுலகத்திற்கே, தேவர்கள் வாழும் பொன் மயமான சுவர்க்கலோகம் இறங்கி வந்து விட்டதோ என்று சொல்லும் படியாகத் திகழ்ந்த, வாலி வாழ்கின்ற மலையாகிய கிட்கிந்தை மலைக்கு வந்து சேர்ந்தார்கள். சேர்ந்து, இப்பொழுது செய்யத் தக்கது என்ன? என்று தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

தோற்றப் பொலிவினாலும், எல்லா வகையான இன்ப நுகர்ச்சிகளுக்கும் ஏற்ற இடமாகக் கிட்கிந்தை மலை இருந்ததனாலும் அது சுவர்க்கலோகத்திற்கு உவமிக்கப்பட்டது என்க.

10. வாலியைக் கொல்லும் வழிவகைகள் பற்றி ஆலோசித்தல்

அவ்விடத்து இராமன், "நீ அழைத்து, வாலி ஆனதோர்
வெவ்விடத்தின் வந்து, போர் விளைக்கும் ஏல்வை, வேறு நின்று
எவ்விடத் துணிந்து அமைந்தது; என் கருத்து இது" என்றனன்;
தெவ் அடக்கும் வென்றியானும், "நன்று இது" என்று சிந்தியா. (4049)

(வெவ்விடம் - கொடிய நஞ்சு; ஏல்வை - சமயம்; வேறு - ஒருபுறம் \ மறைவிடம்; ஏ - அம்பு; விட - செலுத்த; தெவ் - பகைவர்; சிந்தியா - சிந்தித்து; துணிந்து - நிச்சயித்து) (குளகப்பாடல்)

அப்பொழுது இராமன் சுக்கிரீவனை நோக்கி, "நீ கொடிய நஞ்சு போன்று பிறரைக் கொல்லும் தன்மை வாய்ந்த வாலியை, வலியப் போருக்கு அழை; அவ்வாறு அழைத்து, அவன் வந்து, நீங்கள் இருவரும் உக்கிரமாகப் போர்செய்து கொண்டிருக்கும் சமயத்தில், நான், யாரும் அறிய இயலாத ஒரு மறைவிடத்தில் இருந்து என்னுடைய அம்பைச் செலுத்துகிறேன்; இதுதான் நான் நிச்சயித்துச் செய்த கருத்தாகும்" என்றான்; பகைவனாகிய வாலியை அடக்கித் தான் ஆட்சிபெற வேண்டும் என்ற ஒரு வெற்றியையே குறிக்கோளாகக் கொண்ட சுக்கிரீவனும், "இது நல்ல ஆலோசனை" என்று சிந்தித்து - (பாடல் தொடர்கிறது)

வாலியை "வெவ்விடம்" என்றது அவனுடைய ஆலகால விஷம் போன்று பிறரைக் கொல்லும் தன்மையைக் குறிக்க என்க. "வேறு" என்பது ஒருபுறம் எனவும், யாரும் அறிய முடியாத மறைவிடம் எனவும் பிறர் புகுதற்கு இயலாத தனியிடம் எனவும் பொருள் தரும். அழைத்தல் என்பது, பகைவன் எதிர்பாராத சமயத்தில், தானே வலியச் சென்று போருக்கு அறைகூவி அழைத்தல் என்று பொருள் விரிவு கொள்ளும்.

11. சுக்கிரீவன் மகிழ்தல்

வார்த்தை அன்னது ஆக, வான் இயங்கு தேரினான் மகன்
நீர்த்தரங்க வேலை அஞ்ச, நீலமேகம் நாணவே,
வேர்த்து, மண்ணுளோர் இரிந்து, விண்ணுளோர்கள் விம்மி மேல்
ஆர்த்த ஓசை, ஈசன் உண்ட அண்டம் முற்றும் உண்டதே. (4050)

(தரங்கம் - அலைகள்; வேலை - கடல்; நீலமேகம் - கருமுகில்; இரிதல் - நிலைகெட்டு ஓடுதல்; உண்ட - உட்கொண்ட; முற்றும் - முழுவதையும்; உண்டது - அடக்கி மேலோங்கியது)

அவ்வாறு இராமன் கூறிய வார்த்தைகள், தன் கருத்தோடு ஒத்துப் போனதால் மிக்க மகிழ்ச்சியடைந்த, வானத்தில் தொடர்ந்து சஞ்சரிக்கின்ற ஒற்றை ஆழித் தேரையுடைய சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன், அலைகளையுடைய நீர் நிரம்பப் பெற்ற கடல் அச்சமுறும்படியும், நீரையுண்ட கரிய மேகம் வெட்கமுறும் படியும், மண்ணுலகத்துள்ள மக்கள் உடல் வியர்த்து நிலைகெட்டு ஓடும்படியும், வானிலுள்ள தேவர்கள் கலக்கமுறும்படியும் பேரோசை செய்தான்; அந்த ஓசை, முன்பு, பிரளய காலத்தில் தன்னுள் திருமால் உட்கொண்ட இந்தப் பேரண்டம் முழுவதையும் சென்று சேர்ந்தது.

இராமன், “வாலியை நீ போருக்கு அழை; நான் வேறு இருந்து அவன் மீது அம்புஎய்து அவனைக் கொன்று விடுகிறேன்” என்று கூறிய வார்த்தைகள், சுக்கிரீவன் கருதியது போலவே அமைந்ததால் அவன் மிக்க மகிழ்ந்தான். அம் மகிழ்ச்சியில் அவன் எழுப்பிய பேரோசையில் கடல் முழக்கமும், இடிமுழக்கமும் அடங்கிப் போயின; மக்களும், தேவர்களும் கலக்கமுற்றனர்; அண்ட கோளகைக்கு அப்புறம் சென்றும் அவ்வோசை கேட்கலாயிற்று என்பதாம்.

பொதுவாக “ஈசன்” என்ற சொல் சிவபெருமானையே குறிக்கும் என்றாலும், இங்கு திருமாலைக் குறித்தது என்க. காரணம் அண்டம் உண்டு ஆலிலை அமர்ந்தவன் திருமாலே என்பதால் என்க. உண்ணுதல் என்பது தனக்குள் அகப்படுத்தி, அடக்கி, அதனினும் மேலோங்கியது என்று பொருள் விரிவுகொள்ளும். உடல்வியர்த்தல், நிலைதிரிந்து ஓடுதல், விம்முதல் முதலியன அச்சத்தால் உண்டாகும் மெய்ப்பாடுகள்.

12. வாலியைப் போருக்கு அழைத்தல்

இடித்து உரப்பி, “வந்து போர் எதிர்த்தியேல் அடர்ப்பென்” என்று
அடித்தலங்கள் கொட்டி, வாய் மடித்து, அடுத்து, அலங்கு தோள்
புடைத்து நின்று, உளைத்த பூசல் புக்கது என்ப; மிக்கு இடம்
துடிப்ப, அங்கு உறங்கு வாலி திண் செவித் துளைக்கணே; (4051)

(எதிர்த்தல் - மேற்கொள்ளுதல்; அடர்த்தல் - அழித்து ஒழித்தல்; உரப்புதல் - அதட்டுதல்; அடித்தலங்கள் - கால்கள் \ தொடைகள்; வாய் - உதடு; புடைத்து - தட்டி; பூசல் - ஆரவாரம் \ போர்; திண் - வலிய; கண் - இடம்; என்ப - என்று கூறு

வார்கள்; உளைத்தல் - அழைத்தல்; அடுத்து - இரண்டுபுறமும்; துளை - துவாரம்; அலங்கு - அசைகின்ற \ விளங்குகின்ற; இடம் - இடக்கண்ணும், இடது தோளும்)

சுக்கிரீவன் கிட்கிந்தையை நெருங்கி, வாலியை அழைத்து, "நீ என்னுடன் எதிர்த்து நின்று போர் செய்வாயானால், நான் உன்னை அழித்து ஒழித்து விடுவேன் என்று இடிபோல் முழக்கமிட்டு, அதட்டிக் கொண்டே, தன் பாதங்கள் நிலத்தில் அழுந்திப் படும்படி நடந்து கொண்டும், ஓசையுண்டாகும்படி தொடைகளைத் தட்டிக் கொண்டும், மிக்க சினத்தால் வாய் உதடுகளை மடித்தும், இருபுறமும் விளங்குகின்ற தோள்களைத் தட்டிக் கொண்டும், வாலியைப் போருக்கு அழைத்தான்; அந்த ஓசை, அங்கு கிட்கிந்தையில் தூங்கிக் கொண்டிருந்த வாலியின் தோள்கள் இரண்டும் கண்கள் இரண்டும் துடிக்கும்படி அவன் செவி துவாரங்களில் சென்றடைந்தது என்று கூறுவர்.

ஆண்களுக்கு இடக்கண்ணும், தோளும் துடித்தல் தீ நிமித்தம் என்பர். வாலிக்கு இப்போது அவ்வாறு துடித்தது, அவன் அழிவைக் குறிக்கும் முன்னறிவிப்பு என்க. "இடுக்கண் தருதற்கு ஏதுவாகி, இடக்கண் ஆடலும்" என்பது பெருங்கதை. அடித்தலங்கள் என்பது பொதுவாகப் பாதங்களையே குறிக்கும் என்றாலும், இங்கு தொடைகளையும் குறித்தது எனக் கொள்க. இவன் இவ்வாறு உரப்பி அழைப்பதற்குக் காரணம், இராமன் கொடுத்த தைரியமும், அவன் பக்க துணையுமே என்பதை நினைக.

13. வாலி அவ்வோசையைக் கேட்டல்

மால்பெருங் கடகரி முழக்கம், வாள் அரி
ஏற்பது செவித் தலத்து என்ன, ஓங்கிய
ஆர்ப்பு ஒலி கேட்டனன்; அமளிமேல் ஒரு
பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான். (4052)

(அமளி - படுக்கை; கிடந்தது - படுத்திருந்தது; பான்மை - தன்மை; மால் - பெரிய; கடம் - மதம்; வாள் - வலிய \ கொடுமைமிக்க; அரி - ஆண் சிங்கம்)

ஒப்பற்ற அமைதியான ஒரு பாற்கடல் படுக்கையில் படுத்திருந்தது போன்ற தன்மையனான வாலி, மத மயக்கம் கொண்ட ஒரு பெரிய யானையின் பிளிறல் ஓசையை, கொடிய சிங்கம் ஒன்று தன் காதுகளில் கூர்ந்து கேட்பதைப் போன்று, பேரொலியுடன் சுக்கிரீவன் எழுப்பிய போர் முழக்கத்தைக் கேட்டான்.

இங்கே வாலியைச் சிங்கத்திற்கும், சுக்கிரீவனை மதம் பிடித்த யானைக்கும் ஒப்பிட்டது நோக்குக. வாலியின் வலிமை சிறப்பிக்கப்பட்டது. மேலும் வாலியை "பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான்" என்றதன் மூலம் வாலி வெண்மை நிறமுடையவன் என்பதைப் பெற வைத்ததையும் காண்க. வால் என்ற சொல்லுக்கே வெண்மை என்ற ஒரு பொருளும் உண்டு. வாலி என்பது, வெண்ணிறம் உடையவனாதலால் வாலிக்கு அது காரணப்பெயர். இங்கே வாலியை வெண்ணிற, தூய, ப்ாற்கடலுக்கு ஒப்பிட்ட கவிஞன், யுத்த காண்டத்தில், இராவணனை "மால் கருங்கடல் வதிந்ததே அனையதோர்

வனப்பினில் துயில்வான்" என்று கூறுவதையும் ஒப்பிட்டு நோக்குக. தனது குகையில் அமைதியாகப் படுத்துறங்கிய ஒரு வலிய சிங்கம், ஒரு மதயானையின் பிளிறல் முழக்கத்தைக் கேட்டு துயில் எழுந்தது போலத் தன் அரண்மனையில் அமைதியாகப் படுத்திருந்த வாலி, சுக்கிரீவனின் போர் முழக்கத்தைக் கேட்டுத் துயில் எழுந்தான் என்பது கருத்து.

14. வாலி போர்முழக்கம் கேட்டு நகைத்தல்

உருத்தனன் பொர எதிர்ந்து இளவல் உற்றமை,
"வரைத்தடந்தோளினான், மனத்தில் எண்ணினான்;
சிரித்தனன்; அவ்வொலி, திசையின் அப்புறத்து
இரித்தது, அவ்வுலகம் ஓர் ஏழொடு ஏழையும்." (4053)

(வரை - மலை; உருத்தல் - சினந்து நோக்குதல்; இளவல் - தம்பி; பொர - போர்புரிய; இரித்தது - அஞ்சி ஓடும்படி செய்தது \ ஓட்டியது)

பெரிய மலைகள் போன்ற திண்ணிய தோள்களையுடைய வாலி, தன்தம்பி சுக்கிரீவன், மிக்க சினம் கொண்டு, தன்னை எதிர்த்துப் போர்புரிய வரும்படி அழைத்த தன்மையைத் தன் உள்ளத்துள் எண்ணிக்கொண்டு இகழ்ச்சியாகச் சிரித்தான். அவ்வாறு அவன் சிரித்த பேரொலி ஈரேழு பதினான்கு உலகங்களில் உள்ளோரையும், திசைகளின் எல்லைக்கு அப்புறத்தே அஞ்சி ஓடச்செய்தது.

வாலி, சுக்கிரீவன் தன்னிடம் முன்பு பலமுறை தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடியதை இப்பொழுது மனத்தில் நினைத்துப் பார்த்தான். எனவே அவனுக்குச் சிரிப்பு வந்தது என்க. இச்சிரிப்பு எள்ளல் பற்றியது.

15. வாலி போருக்கு எழுதல்

எழுந்தனன் வல் விரைந்து, இறுதி ஊழியில்
கொழுந்திரைக் கடல் கிளர்ந்து அனைய கொள்கையான்;
அழுந்தியது அக்கிரி; அருகில் மால் வரை
விழுந்தன தோள்புடை விசித்த காற்றினே. (4054)

(கொழுந்திரை - பெரிய அலைகள்; கிளர்தல் - பொங்கி மேலெழுதல்; புடை - பக்கம்; விசித்தல் - அசைத்தல் \ வீசுதல் \ தாக்குதல்; கொள்கை - செருக்குமாம் \ தன்மை; வல் - மிகவும்; மால் - பெரிய)

ஊழி இறுதியில் பெரிய அலைகளையுடைய கடல் பொங்கி மேலெழுதல் போன்ற தன்மையும், செருக்கும் உடையவனான வாலி, படுக்கையினின்றும் மிகவும் விரைந்து எழுந்தான்; அவன் எழுந்த வேகத்தில் அவன் ஊன்றிய பாதங்களின் வலிமையால், அவன் வாழ்கின்ற கிட்கிந்தை மலையே அழுந்திப் போயிற்று; அவன் தன் இருபுறத் தோள்களைத் தட்டிய காற்றின் வேகத்தில், அருகில் இருந்த பெரிய மலைகள் எல்லாம் தளர்ந்து கீழே விழுந்தன.

வல் விரைந்து என்பது ஒரே பொருளைக் குறிக்கும் இரு சொற்கள். மிகவும் விரைந்து எனப் பொருள்படும்.

16. போய்ப் பொடித்தன மயிர்ப்புறத்த வெம்பொறி;
காய்ப்பொடு உற்று எழு வட அனலும் கண்கெடத்
தீப்பொடித்தன விழி; தேவர் நாட்டினும்
மீப்பொடித்தன புகை, உயிர்ப்பு வீங்கவே. (4055)

(மயிர்ப்புறம் - மயிர்க்கால்கள்; பொறி - தீப்பொறிகள்; பொடித்தல் - சிதறுதல், பரவுதல் \ தோன்றுதல்; வடஅனல் - தீப்பிழம்பு \ வடவைத்தீ \ வடவாமுகாக்னி; காய்த்தல் - கனன்று எழுதல்; மீ - மேலே; உயிர்ப்பு - மூச்சுக் காற்று; வீங்குதல் - மிகுதியாக வெளிப்படுதல்; கண்கெடுதல் - குருடாதல்; காய்ப்பு - கோபமுமாம்)

வாலி கோபம் கொண்டு எழுந்தபோது, அவனுடைய மயிர்க்கால் களிலெல்லாம், கொடிய தீப்பொறிகள் சென்று சிதறின; கடலில் உள்ள வடவா முகாக்னியின் கண்பார்வையும் கெட்டுக் குருடாகிப் போகும்படி, அவனுடைய விழிகள் தீப்பொறியைச் சிந்தின; அவன் விட்ட பெருமூச்சால், எழுந்த புகை, தேவர்கள் வாழ்கின்ற வானுலகத்திற்கும் மேலே சென்று படிந்தது.

வாலியின் சினம் மிகுதி குறிக்கப்பட்டது. வடஅனல் என்பது, கடலின் உள்ளே, பெண்குதிரை முகம் போன்ற அமைப்புடன் இருக்கும் ஒரு பெரிய தீப்பிழம்பைக் குறிக்கும். இது சாதாரண நாட்களில் கடல் நீர் கரைகடக்காமல் பார்த்துக் கொள்வதுடன் ஊழியிறுதிக் காலத்தில் மேலே வந்து உலகத்தை அழியச் செய்யும் இயல்பும் உடையது.

17. கைக்கொடு கைத்தலம் புடைப்ப, காவலின்
திக்கயங்களும் மதச்செருக்குச் சிந்தின;
உக்கன உரும் இனம்; உலைந்த உம்பரும்;
நெக்கன, நெரிந்தன, நின்ற குன்றமே. (4056)

(கைத்தலம் - கைகள்; புடைத்தல் - அடித்தல் \ மோதுதல் \ தாக்குதல் \ தட்டுதல்; திக்கயங்கள் - திசை யானைகள்; சிந்துதல் - நீங்குதல்; உரும் - இடி; உகுதல் - சிதறிப் போதல்; உலைதல் - நடுங்குதல்; உம்பர் - மேலுலகு; நின்ற - நிலைபெற்றுள்ள \ அசைதலில்லாத; நெகுதல் - பிளத்தல்; நெரிதல் - பொடியாய் நொறுங்கிப் போதல்)

வாலி, தன் சினம் மிகுதியால் தன் இரண்டு கைகளையும் ஒன்றுடன் ஒன்று மோதி ஓசை எழுப்பினான்; அவ்வோசையைக் கேட்டு அதிர்ந்த. இவ்வுலகத்தை எட்டுத் திசைகளினின்றும் பாதுகாத்து வருகின்ற திசையானைகள் எல்லாம், தாம் களிப்புற்றிருந்த நிலைமாறி அச்சம் கொள்ளலாயின; வானத்திலுள்ள இடியின் கூட்டமும் உதிர்ந்து விழுந்தன; வானுலகத்துத் தேவர்களும் நிலை தடுமாறினர்; அசையாது நிலை பெற்றிருக்கின்ற மலைகளும் கூட நெகிழ்ந்து பிளந்து தூள்தூளாய்ப் போயின.

வாலியின் வலிமை புலப்படுத்தப்பட்டது. இங்கே ஒரு அருமையான செய்தி. பொதுவாகப் பாறைகள் பிளப்பதில்லை. அவை பிளக்க வேண்டுமென்றால் வெடி வைத்துத் தகர்க்க வேண்டும். ஆனால் அதே பாறை, பசுமையான மரத்திற்கு மட்டும் இயல்பாகவே வழிவிட்டுப் பிளந்து காட்டுகிறதே. ஏன்?

இயற்கையின் படைப்பு விநோதங்களில் இதுவும் ஒன்று. "நெட்டிருப்புப் பாறைக்கு, நெக்கு விடாப்பாறை, பசுமரத்த வேருக்கு நெக்குவிடும்" என்பது நல்வழி 33.

18. "வந்தனென், வந்தனென்" என்ற வாசகம்,
இந்திரி முதல் திசை எட்டும் கேட்டன;
சந்திரன் முதலிய தாரகைக் குழாம்
சிந்தின, மணி முடிச்சிகரம் தீண்டவே. (4057)

(வாசகம் - சொற்கள்; இந்திரி - கீழ்த்திசை; சிகரம் - முடி \ கிரீடம் \ உச்சி; தீண்டுதல் - உராய்தல்; தாரகைக் குழாம் - நட்சத்திரக் கூட்டங்கள்; சிந்துதல் - உதிர்தல்)

"இதோ வந்தேன்; வந்துவிட்டேன்"; என்று உரக்கக் கூவிக் கொண்டு வந்த வாலியின் இந்தச் சொற்கள், இந்திரனைத் திக்குபாலகனாகக் கொண்டுள்ள கிழக்குத் திசைமுதல் உள்ள எட்டுத் திசைகளிலும் எதிரொலித்தன; அவன் எழுந்த வேகத்தில், அவனுடைய அழகிய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற முடியின் உச்சி, மேலே உள்ள சந்திரன் முதலான நட்சத்திரக் கூட்டங்களை உராயவே, அவை உதிர்ந்து கீழே விழுந்தன.

கிழக்குத் திசைக்குக் காவலன் இந்திரன்; எனவே அத்திசையையே இந்திரி என்றார் என்க. வாலியின் பேருருவமும், பெருமையும் விளக்கப்பட்டன. நட்சத் திரங்களுக்கு நாயகன் சந்திரன் என்பதால் முன்பு உடுபதி என்றார். இங்கே தாரகைகளுக்கு நாயகன் சந்திரனைத் தாரகாபதி என்கிறார் என்க.

19. வீசின காற்றின், வேர்பறிந்து வெற்பு இனம்,
ஆசையை உற்றன; அண்டப்பித்திகை
பூசின, வெண்மயிர் பொடித்த வெம்பொறி;
கூசினன் அந்தகன்; குலைந்தது உம்பரே. (4058)

(வேர் - அடி; வெற்பு இனம் - மலைக்கூட்டங்கள்; ஆசை - திசை எல்லை; பொறி - தீப்பொறி; அண்டப்பித்திகை - அண்டபரப்பின் மதில்சுவர்; பூசுதல் - தடவுதல் \ படுதல் \ மறைத்தல்; அந்தகன் - இயமன் \ கூற்றுவன்; உம்பர் - மேலுலகம்; குலைதல் - நடுங்குதல்; உயிர்களுக்கு அந்தத்தைச் செய்வதால் இயமனுக்குக் அந்தகன் காரணப்பெயர்)

அவ்வாறு சினத்துடன் எழுந்த வாலி தன்கைகள் அசைதலால் உண்டான காற்றின் வேகத்தில், மலைக்கூட்டங்களெல்லாம் வேரோடு அறுந்து, திக்குகளின் எல்லையை அடைந்தன; அவன் வெண்மையான மயிர்க்கால் களில் எழுந்த கொடுமையான தீப்பொறிகள், அண்ட கோளத்திற்குப் பாது காப்பாக அமைக்கப்பட்டிருக்கும் மதில் சுவர்களில் போய்ப்படிந்தன; வாலியினது இப்போதைய நிலையைக் காணவே இயமன் அச்சமுற்றுக் கண்கள் கூசப்பெற்றான்; வானிலுள்ள தேவர்களும் நிலை குலைந்தனர்.

வாலி புயல் போல் எழுந்து வந்த வேகம் கூறப்பட்டது.

20. கடித்த வாய் எயிறு உகு கனல்கள், கார்விசும்பு
இடித்த வாய் உகும் உரும் இனத்தின் சிந்தின;

தடித்து வீழ்வன எனத் தகர்ந்து சிந்தின;
வடித்த தோள் வலயத்தின் வயங்கு காசு அரோ! (4059)

(எயிறு - பற்கள்; கார் - கரிய \ கரிய மேகமுமாம்; இடித்தல் - ஒன்றோடொன்று மோதிக் கொள்ளுதல்; உரும் இனம் - இடியின் கூட்டங்கள்; உகும் - சிதறும்; வடித்த - அலங்கரிக்கப்பெற்ற \ சிறந்த; வயங்கு - விளங்குகின்ற; காசு - இரத்தினம் \ மாணிக்கம்; தடித்து - மின்னல்; வாய் - பொழுது \ சமயம் \ இடம்; கனல்கள் - தீப்பொறிகள்)

வாலி கோபத்தாற் சினந்து தன் வாயிலுள்ள பற்களைக் கடித்துக் கொண்டு புறப்பட்டு வரும் போது சிதறிய தீப்பொறிகள், ஆகாயத்திலுள்ள கரிய மேகங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளும்போது இடி சிதறுவது போலச் சிதறி விழுந்தன; அவன் தனது தோள்களைத் தட்டி ஆரவாரித்து எழுந்த போது, அவன் தோள்களில் நன்கு திருத்தி சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த தோள் வலயங்களில் விளங்கிய இரத்தினங்கள், மின்னல்கள் சிதறி விழுவதைப் போல உதிர்ந்து விழுந்தன.

“தடித்” என்ற வடசொல்லுக்கு மின்னல் என்பது பொருள். அச்சொல் அப்படியே இங்கே கையாளப் பெற்றிருப்பதை உணர்க. தோள் வளையம் வாகு வளையம் என்றும் வழங்கப்பெறும்.

21. ஞாலமும், நாற்றிசைப் புனலும், நாகரும்
மூலமும் முற்றிட முடிவில் தீக்கும் அக்
காலமும் ஒத்தனன்; கடலில் தான் கடை
ஆலமும் ஒத்தனன், எவரும் அஞ்சவே. (4060)

(ஞாலம் - நிலவுலகம்; புனல் - கடல் நீர்; முற்றிட - அழியும்படி, தீக்கும் - தீய்க்கும் \ எரித்து அழிக்கும்; ஆலம் - ஆலகால விஷம்; காலம் - ஊழிக்காலம், பிரளயகாலம்; நாகர் - தேவர்கள் \ பாதாளவாசிகள் \ நாகலோகத்தில் இருப்பவர்கள்; மூலம் - ஆதிகாரணம்)

இந்தப் பூவுலகமும், அதை நான்கு புறத்திலும் சூழ்ந்துள்ள கடல் நீர்ப்பரப்பும், தேவர்களும், பாதாளலோகத்தில் வாழும் நாகர்களும், இவையெல்லா வற்றிற்கும் மூலகாரணமாக விளங்கும் தத்துவங்களும் அழிந்து போகும்படி, ஊழிமுடிவில் ஏற்படும் ஊழிக்காலத்தீயைப் போல எவரும் அஞ்சும்படி இப்பொழுது தோற்றினான் வாலி; மேலும் முன்பு தான் பாற்கடலைக் கடைந்த போது அதனின்றும் தோன்றிய ஆலகால விஷத்தைப் போலவும் தோன்றினான்.

தேவரும், அசுரரும், அமிழ்தம் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்த போது ஒரு சமயத்தில் அயர்ச்சியுற்றனர்; அப்பொழுது வாலி அங்கு தோன்றி, தனி ஒருவனாகவே தனது தோளாற்றலால் அப்பாற்கடலைக் கடைந்து அமிழ்தத்தை வரவழைத்தான். எனவே, தான் கடை கடலில் என்றார் என்க. அமிழ்தத்துடன் கூட ஆலகால விஷமும் தோன்றிற்று. அதனைக் கண்டு அனைவரும் அஞ்சிஓடினர்; அதைப்போலவே இப்பொழுதும், வாலியின்

தோற்றத்தைக் கண்டு மூன்று உலகத்தில் வாழ்வோரும் அஞ்சி ஓடினர். வாலியின் தோற்றம் ஆலகால விஷத்திற்கும், ஊழிக்கால நெருப்புக்கும் உவமை.

22. வாலியைத் தாரை தடுத்தல்

ஆயிடை தாரை என்று அமிழ்தின் தோன்றிய
வேயிடைத் தோளினாள், இடை விலக்கினாள்;
வாயிடைப் புகைவர, வாலி கண் வரும்
தீயிடை, தன் நெடுங் கூந்தல் தீகின்றாள். (4061)

(ஆயிடை - அப்பொழுது; வேய் - பசிய மூங்கில் ; தீதல் - தீய்ந்துபோதல் \ காந்துதல் \ கருகிப்போதல்; இடை - நடு; விலக்குதல் - தடுத்தல்)

அப்பொழுது, தாரை என்று பெயர் கொண்டவளான வாலியின் மனைவியும், வாலி கடல் கடைந்த போது தோன்றிய ஆலகால விஷத்துடன் தோன்றிய தேவாமிர்தம் போன்ற இனியவளும், பசுமையான மூங்கிலைப் போன்ற தோள்களையுடையவளுமான தாரை, போருக்கு எழுந்த வாலியை நடுவில் புகுந்து தடுத்தாள்; அப்பொழுது வாலியின் வாயினின்றும் எழுந்த சினப்புகையினாலும், அவன் கண்களினின்றும் வெளிப்பட்ட சினத் தீயினாலும் அவளுடைய நீண்ட கூந்தலும்கூடத் தீய்ந்து போகலாயிற்று.

தாரை என்பது, அவளது பெயர்தான்; ஆனால் அவளது உண்மையான வடிவம் அமிழ்தமாகும். அமிழ்தத்திற்கும் அவளுக்கும் வேற்றுமை இல்லை என்று தாரையின் இனிய பண்புகளை உயர்த்திக் கூறினார் என்க. முன்பாடலில் வாலியை, பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்திற்கு ஒப்பிட்ட கவிஞன், இந்தப் பாடலில் வாலியின் மனைவியை, அப்பாற்கடலினின்றும் தோன்றிய அமிழ்தத்திற்கு - திருமகளுக்கு ஒப்பிட்டுக் கூறிய நயம் உணர்க. "நெடுங்கூந்தல் தீகின்றாள்" என்பது அவளுக்குப் பின்னர் ஏற்பட இருக்கும் தீங்கினை உணர்த்தும் முன்னறிவிப்பு எனக் கொள்க. மங்கல மகளிர்க்குக் கூந்தல் கருகுதல் தீ நிமித்தம் என்பதாம். நெடுங்கூந்தல் தீகின்றாள் என்பது உயர்வு நவிற்சி. வாலியின் சினத்தின் தன்மை மிகுத்துரைக்கப்பட்டது. தாரையின் தந்தை சுஷேணன் என்று வான்மீகம் கூறுகிறது. முன்பு வாலிக்கு இடதுதோளும் கண்ணும் துடித்தது என்றார்; இப்போது தாரை தடுக்கிறாள்; அவள் கூந்தல் தீகிறது. எனவே, இது இருவருக்கும் கேடு விளைவிக்கும் என்பது பெறப்படுகிறது. சப்தகன்னியருள் ஒருத்தியாகப் புராணங்களில் போற்றப்படுபவள் தாரை. இராமாயணத்தில் வரும் மற்ற மகளிர் - அகலிகை, சீதை, மண்டோதரி என்பர். பாரதத்தில் வரும் திரௌபதியும் இவருள் ஒருவராக வைத்து எண்ணப்படுபவர்.

23. வாலி அவள் தடுப்பதை விலக்குதல்

"விலக்கலை, விடு; விடு; விளித்துளான் உரம்
கலக்கி, அக்கடல் கடைந்து அமுது கண்டுஎன,

உலக்க இன்னுயிர் குடித்து, ஒல்லை மீள்குவென்,
மலைக்குல மயில்!" என, மடந்தை கூறுவாள். (4062)

(விலக்கல் - தடுத்து நிறுத்துதல்; விளித்தல் - அழைத்தல்; உரம் - நெஞ்சம்; ஒல்லை - விரைவில்; உலத்தல் - இறத்தல்; குலம் - சிறந்த \ உயர்ந்த)

"மலையில் வாழும் உயர்ந்த சிறந்த மயில் போன்ற சாயலுடையவளே! என்னைத் தடுத்து நிறுத்தாதே; என்னைப் போருக்குப் போகவிடு; அந்தப் பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் எடுத்தாற்போல வலிய வந்து அறைகூவல் விடுத்து என்னை அழைத்திருக்கின்ற அந்தச் சுக்கிரீவனின் நெஞ்சத்தைக் கலக்கமடையச் செய்து, அவன் அழிய, அவனது இனிய உயிரைப்பருகி விரைவில் திரும்பி வந்து விடுகிறேன்" என்றான்; அதைக் கேட்ட அவன் மனைவியான தாரை மேலும், கீழ்க் கண்டவாறு சொல்லலானாள்.

"விடுவிடு" என்பது விரைவும் சினமும் குறிக்கும் அடுக்குத் தொடர். கலக்குதல் என்பது நெஞ்சின் நிலைக் களமாகிய மார்பில் பொருது, உள்ளம் கலங்கச் செய்தல் என்று பொருள் விரிவு கொள்ளும். போர் செய்யப் புகுகின்ற சினங்கொண்ட நிலையிலும், தாரையை, "மலைக் குல மயில்" என்று அவன் அழைத்த நயம் நோக்குக.

24. "சுக்கிரீவனுக்குத் துணை கிடைத்திருக்கிறது" என்று தாரை கூறுதல்

"கொற்றவ! நின் பெரும் குவவுத் தோள் வலிக்கு
இற்றனன் முன்னை நாள், ஈடுஉண்டு ஏகினான்;
பெற்றிலன் பெருந்திறல்; பெயர்த்தும் போர் செயற்கு
உற்றது, நெடுந்துணை உடைமையால்" என்றாள். (4063)

(கொற்றம் - வெற்றி; குவவு - திரண்ட; இறுதல் - தோற்றோடுதல் \ வலியழிதல்; ஈடு - வருத்தம்; பெயர்த்தும் - மீண்டும்)

"எப்பொழுதும் வெற்றியே பெறும் வேந்தே! உன்னுடைய பெரிய, திரண்ட தோளின் வலிமைக்கு ஆற்றாது, முன்பு பல முறை, உன் தம்பி சுக்கிரீவன் வலியழிந்து புறமுதுகிட்டுத் தோற்று, வருத்தமுற்று ஓடி இருக்கிறான்; அவன் இப்பொழுது மீண்டும் உன்னுடன் போர் செய்வதற்கு வந்திருக்கிறான் என்றால், அவன் ஒரு பெரிய துணையைப் பெற்றிருக்கிறான் என்பதால்தான், இப்பொழுது உன்னை வலிய வந்து போருக்கு அழைக்கிறான்" என்றாள் தாரை.

"ஈடு" என்ற சொல்லுக்கு வருத்தம் என்பது பொருள். "நெடுந்துணை" என்பது - அல்லற் காலத்தும் அகலாது, நெடிது நின்று உதவும் துணை என்க. இங்கே இராமனைக் குறித்தது. இப்பொழுது, தாரை, மனைவியாக மட்டும் இருக்கவில்லை; மதியூகம் உள்ள மந்திரியாகவும் செயல்படுகிறாள் என்பதை நோக்குக. "இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன், கெடுப்பார் இலானும் கெடும்" என்பது குறள் 448.

25. வாலியின் மறுமொழி (5 பாடல்கள்)

"மூன்று என முற்றிய முடிவுஇல் பேருலகு
ஏன்று, உடன் உற்றன எனக்கு நேர் எனத்
தோன்றினும், தோற்று அவை தொலையும் என்றலின்,
சான்றுஉள; அன்னவை, தையல்! கேட்டியால்!" (4064)

(முற்றிய - உண்டாகிய \ இயற்றப் பெற்ற; முடிவுஇல் - எல்லையற்ற; ஏன்று - இயைந்து, நேர் - எதிர் \ பகை; கேட்டி - கேட்பாயாக; சான்று - சாட்சி; தையல் - பெண் \ அழகுடையவள்; தொலைதல் - அழிதல்)

"அழகிய பெண்ணே! மேல், நடு, கீழ் என்று வகுத்தமைக்கப்பட்ட மூன்று எல்லை இல்லாப் பெரிய உலகங்களில் வாழ்வோர்களும் ஒன்றாக இணைந்து எனக்குப் பகையாக என்னை எதிர்த்து வந்தாலும் அவர்கள் எல்லோரும் தோற்று, அழிந்து போவார்கள் என்று கூறுவதற்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளன; அவற்றை நீ கேட்பாயாக!" என்றான் வாலி.

இங்கு மூன்று உலகம் என்று கூறியது, கீழ் ஏழு, மேல் ஏழு, பதினான்கு உலகங்களையும் வகைப்படுத்திக் கூறியது என்க.

26. பாற்கடல் கடைந்த வரலாறு கூறுதல்

"மந்தர நெடுவரை மத்து, வாசுகி
அந்தம் இல் கடை கயிறு, அடைகல் ஆழியான்,
சந்திரன் தூண், எதிர்தருக்கின் வாங்குனர்
இந்திரன் முதலிய அமரர், ஏனையோர்." (4065)

(அந்தம் - தேய்வு \ கெடுதல் \ முடிவு; ஆழி - சக்கரப்படை; தருக்கின் - மிக வலிவுடன் \ பெருமிதத்துடன்; வாங்குதல் - இழுத்தல் \ கடைதல்; ஏனையோர் - மாறுபட்டோர் \ அசுரர்கள்; அடைகல் - பட்டடை (குளகப்பாடல்)

மந்தரமலை எனப்படும் பெரிய மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பை, முடிவில்லாத நீண்ட பெரும் கடைகின்ற கயிறாகவும், சக்கரப்படையை உடைய திருமால் ஆமைவடிவம் கொண்டு மத்தினைத் தாங்குகின்ற அடைகல்லாகவும், சந்திரன் மத்தினை அணைத்து நிறுத்துகின்ற தூணாகவும், கயிற்றின் இரண்டு பக்கங்களையும் எதிர்எதிராக நின்று பெருமிதத்துடனும் மிக்க வலிமையுடனும் கடைபவர்கள் இந்திரன் முதலிய தேவர்களாகவும், மறுபக்கத்தில் அவர்களிலும் மாறுபட்ட அசுரர்களாகவும் கொண்டு - (பாடல் தொடர்கிறது).

தேவர்களும் அசுரர்களும் அமிழ்தம் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்த காட்சியை வாலி தாரைக்கு விவரிக்கிறான். மந்தர மலை மத்து; வாசுகிகடைகயிறு; இவ்வாறு கடையும் போது, மத்து கடலிற்குள் அழுந்திவிட நேர்ந்தது. அப்பொழுது திருமால் ஆமை உரு எடுத்து (கூர்ம அவதாரம்) அம்மத்து கடலிற்குள் அழுந்திவிடாவண்ணம் மத்திற்குக் கீழ் அடைகல்லாக

நின்று தாங்கினார் என்பது புராணவரலாறு. எனவே, திருமால் அடைகல்; அடைகல் என்பது "வலிய தொழிற்கருவியின் பாரத்தையும் அது தாக்கும் வேகத்தையும் தாங்கிக் கொள்ளுதற்கேற்ற வன்மையுடையதாய், அடியில் பீடமாக அமைந்திருக்கும் ஒருவகைச் கல்". இது பட்டடை என்றும் வழங்கப்பெறும்.

27. "பெயர்வுற வலிக்கவும், மிடுக்கு இல் பெற்றியார்
அயர்வுறல் உற்றதை நோக்கி, யான், அது
தயிர் எனக் கடைந்து, அவர்க்கு அமுதம் தந்தது,
மயில் இயல் குயில் மொழி! மறக்கல் ஆவதோ?" (4066)

(இயல் - சாயல்; பெயர்வுற - நிலைபெயர; மிடுக்கு - வலிமை; பெற்றியார் - தன்மையினர்; அயர்வுறல் - தளர்ச்சியுறுதல்)

"அவ்வாறு அவர்கள் கடையும் பொழுது, மத்து நிலை தடுமாறிச் சுழலவும், அதைத் தடுக்கும் ஆற்றலற்ற தன்மையராய் அமரரும் அசுரரும் தளர்ச்சியுற்றுத் தடுமாறியது கண்டு, நான் அவற்றை அவர்களிடமிருந்து வாங்கி, தயிரைக் கடைந்து வெண்ணை எடுப்பது போல், மிகஎளிதாகப் பாற்கடலைக் கடைந்து, அதனின்றும் அமிழ்தத்தைப் பெற்று அவர்களுக்குத் தந்தேன், மயில் போன்ற சாயலும், குயில் போன்ற இனிய சொல்லும் குரல் வளமும் பெற்ற தாரையே! இவ்வருஞ்செயலை நீயோ இவ்வுலகத்தாரோ மறக்கமுடியுமோ?" என்றான் வாலி.

தாரை இச்செய்தியை முன்னரே அறிந்திருந்தாலும், இப்பொழுது வாலி அதனை அவளுக்கு நினைப்பூட்டினான் என்பதாம். எனினும் வாலி ஒருவனாகவே பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் பெற்றுத் தந்தான் என்ற இந்தச் செய்தி வான்மீகத்திலும் காணப்படவில்லை; அத்யாத்ம இராமாயணத்திலும் குறிப்பிடப்பட வில்லை என்பது கருதத்தக்கது.

28. "ஆற்றல்இல் அமரரும், அவுணர் யாவரும்
தோற்றனர்; ஏனையர் சொல்லற் பாலரோ?
கூற்றும் என்பெயர் சொலக் குலையும்; யார் இனி
மாற்றலற்கு ஆகிவந்து எதிரும் மாண்பினார்?" (4067)

(ஆற்றல் - பெருவன்மை; குலைதல் - நடுக்கமுறுதல்; மாற்றலன் - பகைவன், சுக்கிரீவன்; எதிரும் - எதிர்த்துப் போரிடும்; மாண்பு - போராண்மை \ திறமை \ பெருமை)

"பேராற்றல் படைத்த தேவர்களும், அசுரர்களும் கூட என் போராண்மைக்குத் தோற்றுப் போயினர்; மற்றவர்களைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? யாவரும் கண்டு நடுக்குறும் இயமன் கூட என் பெயரைப் பிறர் சொல்லக் கேட்டாலும், உடலும் உள்ளமும் நடுங்கி ஓடுவான்; என் பகைவனாகிய சுக்கிரீவனுடன் உடன் சேர்ந்து என்னை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் பெற்றவர் இனி யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை" என்றான் வாலி.

வாலி இனிமேல் தன்னை எதிர்க்கும் வலிமை, தேவர்களுக்கோ, அசுரர் களுக்கோ, இயமனுக்கோ இல்லை என்று தன் போராண்மை பற்றிக் கூறுகிறான். எனவே தன் பகைவனான சுக்கிரீவனுக்கு யாரும் உதவி செய்து என்னுடன் போர் செய்ய வரமாட்டார்கள் என்பது வாலியின் கருத்து.

29. "பேதையர் எதிர்குவர் எனினும், பெற்றுடை
ஊதிய வரங்களும், உரமும், உள்ளதில்
பாதியும் என்னதால்; பகைப்பது எங்ஙனம்?
நீ துயர் ஒழிக!" என, நின்று கூறினான். (4068)

(பேதையர் - அறிவிலாதார்; உரம் - உள்ளத்திண்மை \ உடல் வலிமை; துயர் - வருத்தம்; ஊதியம் - நற்பேறுகள்; வரம் - தெய்வஅருள்; நின்று - நிதானித்து)

"என் போராண்மை பற்றித் தெரிந்திருந்தும், அறிவில்லாது என்னை எதிர்த்துப் போரிட யாரேனும் வந்தாலும், அவர்கள் பெற்றுள்ள நற்பேறுகள், உடல் வலிமை, உள்ளத்திண்மை, இவற்றில் பாதி எனக்கு வந்து சேர்ந்து என் வலிமை பெருகிவிடும். அத்தகைய வரம் ஒன்றை எனக்குச் சிவபெருமான் தந்திருக் கிறான்; எனவே என்னைப் பகைப்பது என்பது முடியாதது. எனவே இது பற்றிச் சிந்தித்து நீ துயரப்படாதே கவலையை விடு" என வாலி, தான் போருக்கு வேக மாகச் சென்று கொண்டிருந்தாலும் கூட, தாரையை நோக்கி, சற்று நின்று நிதானமாக அவளுக்கு ஆறுதல் மொழி கூறினான்.

தனக்கு இயற்கையாய் அமைந்துள்ள ஆற்றலோடு, எதிர்ப்பவர்களின் ஆற்றலிலும், வரத்திலும், நற்பேறுகளிலும் சரிபாதிப்பங்கு இவனை அடைந்து விடுவதால், தன்னை எதிர்ப்பவர் யாரும் இருக்கமுடியாது. அவ்வாறு இருந்தால் அவர்கள் அறிவில்லாதவர்கள் என்றும் துணிவாகக் கூறுகிறான் வாலி. இந்த வரம் இவன் சிவபெருமானிடம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்தச் செய்தியும் வான்மீகத்தில் காணப்படவில்லை என்பது நோக்கத் தக்கது. எனினும் கம்பனில் இராவணன் கூற்றாக இதை நாம் அறியலாம் "என் வலி அவன் வயின் எய்த, வரங்கொள் வாலிபால் தோற்றனென்" என்பது இராவணன் கூற்று.

30. தாரை, "இராமன் சுக்கிரீவனுக்குத் துணை" எனல்
அன்னது கேட்டவள், "அரச! ஆயவற்கு
இன்னுயிர் நட்பு அமைந்து, இராமன் என்பவன்
உன்னுயிர் கோடற்கு உடன் வந்தான்" எனத்
துன்னிய அன்பினர் சொல்லினார்" என்றாள். (4069)

(கோடற்கு - கவர்ந்து கொள்ளுதற்கு; துன்னிய - நெருங்கிய)

அவ்வாறு வாலி கூறியதைக் கேட்ட தாரை, "தலைவனே! அந்தச் சுக்கிரீ வனுக்கு இனிய உயிர்போன்ற நண்பனாக அமைந்து, இராமன் என்பவன், அவனுடன் சேர்ந்து கொண்டு, உன் உயிரை மாய்ப்பதற்கு வந்திருக்கிறான்" என்று. நம்மிடம் நெருங்கிய அன்புடையவர்கள் கூறினார்கள்" என்றாள் தாரை.

இதிலிருந்து, தாரை தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளை உற்றார், உறவினர் மூலமோ ஒற்றர்கள் மூலமோ அறிந்து கொள்கிறாள் என்பதும், அதை அறிந்து தன் கணவனுக்குத் தக்க சமயத்தில் நல்ல ஆலோசனைகள் கூறுகிறாள் என்பதும் புலப்படுகிறது. தாரை அரசியல் அறிவும், அறிவுத்திறனும், தக்க ஆலோசனைகளும் மதியூகமும் கொண்டவள் என்பதும் தெரியவருகிறது. "உன்னுடன் பகைத்து உன்னைப் போருக்கு அழைக்கும் சுக்கிரீவன் வேண்டுமானால் வலிமையற்ற எளியவனாக இருக்கலாம், ஆனால் அவன் உடன் வந்திருக்கும் இராமனின் ஆற்றலை எண்ணிப்பார்த்துப் பின் போருக்கு எழுவது நல்லது என்று தாரை குறிப்பால் உணர்த்தினாள் என்பதாம். "துன்னிய அன்பினர்" என்பது செல்வக்காலத்திலும், அல்லல் காலத்திலும், அகலாது நெருங்கி நின்று உதவும் பேரன்புடையவர்" என்று பொருள் விரிவு கொள்ளும். இவர்களை "விருப்பு அறாச் சுற்றம்" என்கிறார் வள்ளுவர். "நல் உற்றார்" என்கிறது திவ்யப்பிரபந்தம். சுக்கிரீவன் இரண்டுமுறை போருக்கு அறைகூவல் விடுத்தான் என்றும், முதன் முறை அதைத் தாரை அறியாள் என்றும், இரண்டாவது முறைதான் அவளுக்குத் தெரியவந்தது என்றும் அப்பொழுதுதான் அவள் அவனைத் தடுக்கமுயன்றாள் என்றும் வான்மீகம் கூறுகிறது. இங்கே துன்னிய அன்பினர் மூலம் இச்செய்தி தனக்குக் கிடைத்தது என்று கூறுவதாகக் கூறுகிறான் கம்பன். வான்மீகி இச்செய்தி அங்கதன் மூலம் தாரைக்குக் கிடைத்தது என்கிறார்.

31. வாலி, இராமனின் நற்பண்புகளை எடுத்துரைத்தல்

"உழைத்த வல் இருவினைக்கு ஊறு காண்கிலாது,
அழைத்து அயர் உலகினுக்கு அறத்தின் ஆறு எலாம்,
இழைத்தவற்கு, இயல்புஅல இயம்பி, என் செய்தாய்?
பிழைத்தனை; பாவி! உன் பெண்மையால்" என்றான். (4070)

(உழைத்த - வருந்திச் செய்த; ஊறு - அழிவு \ கேடு; அழைத்தல் - கதறி அழுதல்; அயர்தல் - தளர்ந்து போதல்; ஆறு - நெறி முறைகள்; இழைத்தல் - ஒழுகுதல் \ நடத்தல்; இயல்பு - தகுதி; பாவி - தீவினை இயற்றியவள்; பிழைத்தல் - தவறிழைத்தல்)

"உலகில் மக்கள் தாம் முயன்று வருந்திப் பெற்ற கொடிய, நல்ல தீவினைகளைக் களையும் உபாயம் காண இயலாது, இறைவனைக் கூவியழைத்துத் தளர்ந்து போகும் போது, தருமத்தின் நெறிமுறைகளையெல்லாம் தன் வாழ்க்கை நெறி முறைகளாகவே நடத்திக் காட்டி வாழ்ந்தவனாகிய இராமனுக்குப் பொருந்தாத தன்மைகளைச் சொல்லி எத்தகைய பெரிய பாவத்தைச் செய்துவிட்டாய்? தீவினையாளே! உன் பெண் புத்திக்கு ஏற்ற, பேதைமைத் தனத்தால் தவறு செய்து விட்டாய்" என்று வாலி தாரையை எச்சரிக்கிறான்.

நல்வினை, தீவினை ஆகிய இரண்டுமே "வல்இருவினை" எனப்பட்டதை உணர்க. "இயல்பு அல" என்பது அவன் பண்புகளுக்குப் பொருந்தாத, அவன்

தகுதிக்கு ஏலாத என்ற பொருளைத் தரும், அறம்தலை நிறுத்த வந்த இராமனை, அவனது தகுதிக்கு ஏலாத சில வார்த்தைகளைத் தாரை கூறியது அவளுடைய தீவினையாலும், பெண் புத்தியாகிய பேதைமையாலுமே என்கிறான் வாலி என்க. இதனால், வாலி, இராமபிரானின் அவதார உண்மையை முன்பே அறிந்தவன் எனப் புலப்படுகிறது.

32. "இருமையும் நோக்குறும் இயல்பினாற்கு, இது
பெருமையோ? இங்கு இதில் பெறுவது என்கொலோ?
அருமையின் நின்று உயிர் அளிக்கும் ஆறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத்தான் அரோ?" (4071)

(இருமை - இம்மையும் மறுமையும்; அளிக்கும் - காக்கும்; ஆறு - நெறி; தவிர்த்தல் - அழித்துக் கொள்ளுதல்; நோக்குதல் - மனத்தால் உணர்தல்; தருமம் - அறக்கடவுள்)

"இவ்வுலக மக்களின் இம்மைப் பயனாகிய புகழையும், மறுமைப் பயனாகிய புண்ணியத்தையும் தன் மனத்தால் உணர்ந்து அறிந்து செயல்படும் இயல்புடைய இராமபிரானுக்கு, நீ கூறிய, சுக்கிரீவனோடு உடன் சேர்ந்து என்னை மாய்ப்பதற்கு வருகிறான் என்பது, பெருமையளிக்கக் கூடிய செயலாகுமோ? பழியுடையது அல்லவா? இந்தக் காரியத்தைச் செய்வதால் அவன் அடையப்போகும் பயனோ, நன்மையோ என்ன இருக்கிறது? பெறுதற்கரிய இவ்வுலக மக்களின் உயிர்களையெல்லாம் தானே தனித்து நின்று காத்து வரும் நெறியை உடைய அறக்கடவுள், தன்னைத் தானே அழித்துக் கொள்ள முற்படுமோ? அன்றன்றோ?" என்கிறான் வாலி.

இராமன் அறக்கடவுள்; தருமத்தின் உருவம் என்பதும், அவன் சுக்கிரீவனோடு கூட்டுச் சேர்ந்து தன்னை அழிக்க ஒரு போதும் முற்படான் என்பதும், வாலியின் துணிந்த முடிபு. மற்ற உயிர்களைத் தன் கருணையால் காக்கின்ற தொழிலையுடைய அறக்கடவுள், தன்னைத்தானே அழித்துக் கொள்ளாது என்று நிறுவுகிறான். தமையன் தம்பி ஆகிய இரண்டு பேருக்கும் இடையில் நடக்கும் போரில், தருமத்தின் உருவமான இராமன் இடைப்புகுந்து ஒருவர்க்கு உதவி செய்து மற்றொருவரைக் கொல்லுகின்ற அறமல்லாத செயலைச் செய்ய மாட்டான் என்பது வாலி கருத்து..

33. "ஏற்ற பேர்உலகெலாம் எய்தி, ஈன்றவள்
மாற்றவள் ஏவ, மற்று அவள் தன் மைந்தனுக்கு
ஆற்றஅரும் உவகையால், அளித்த ஐயனைப்
போற்றலை; இன்னன புகறல்பாலையோ?" (4072)

(மாற்றவள் - மாற்றாந்தாய் \ கைகேயி; ஆற்றஅரும் - சொல்லுதற்கரிய; ஐயன் - பெரியோன்; எய்துதல் - எளிதில் அடைதல்; ஏற்ற - உரியதாகிய)

தன் தந்தை தசரதன் ஆட்சி மேற்கொண்டிருந்த, தான் மூத்தமைந்தன் என்பதால் தனக்கு முழு உரிமையுடைய, தன்னால் ஏற்கத் தகுந்த பேருலகத்தின் அரசுரிமையை எளிதில் பெற்றவன் இராமன்; எனினும் தன்னை

ஈன்றவளான கோசலையின் மாற்றாளான கைகேயி கட்டளையிட, அவளுடைய புதல்வனான பரதனுக்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சியுடன் அவ்வரசச் செல்வத்தை நல்கிய பெரியோனைப் போற்றிப் பாராட்டாதது அல்லாமல், மாறாக அவனை இத்தகைய வார்த்தைகளால் பழிக்கவும் செய்கிறாயே?" என்று வாலி, தாரையைக் கண்டிக்கிறான்.

தன் சிற்றன்னை கூறிவிட்டாளே என்பதற்காகக் கடமைக்காகத் தராமல், மனமுவந்து, "பின்னவன் பெற்ற செல்வம். அடியனேன் பெற்றதன்றோ?" என்று கூறி நல்கியதை இங்கு, "ஆற்றஅரும் உவகையால் அளித்த ஐயன்" என்றார். "பாராளும் படர் செல்வம் பரதநம்பிக்கு அருளி" என்பது குலசேகராழ்வார் பெருமாள் திருமொழி.

34. "நின்ற பேருலகு எலாம் நெருக்கி நேரினும்
வென்றி வெஞ்சிலையலால் பிறிது வேண்டுமோ?
தன் துணை ஒருவரும் தன்னில் வேறு இலான்
புன் தொழில் குரங்கொடு புணரும் நட்பனோ?" (4073)

(நின்ற - நிலைபெற்றுள்ள; நெருக்கி - முற்பட்டு; நேர்தல் - எதிர்த்தல்; புணர்தல் - பொருந்துதல்; துணை - நிகர் \ கூட்டு; புன்தொழில் - அற்பச்செயல்)

"நிலை பெற்றுள்ள இந்தப் பெரிய உலகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து முற்பட்டுத் தன்னை எதிர்த்து வந்தாலும், அதில் வெற்றி கொள்ள, அச்சத்தைத் தரும் கொடிய தனது கோதண்டம் என்னும் வில்லையல்லாமல் மற்ற எதனையும் வேண்டாதவன் இராமன்; தனக்குநிகர் தானேயானவனும், வேறெவரும் ஒப்பு இல்லாதவனும் ஆகிய இராமன், அற்பத்தொழிலையுடைய குரங்கினத்தோடு நட்புக்கொள்ளும் தரத்தினனோ!" என்று தாரையிடம் கேட்கிறான் வாலி.

தனக்குவமையிலாதவன் இராமன் என்பதையும், கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன் இராமன் என்பதையும் குறிக்கிறான் வாலி. ஒப்பு இலி அப்பன் என்பது திருநாகேஸ்வரத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் திரு நாமம் என்பதை நினைக. "தன்னொப்பார் இல்லப்பன்" என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி.

35. "தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்
இம்பரின் இலது" என எண்ணி ஏய்ந்தவன்,
எம்பியும், யானும் உற்று எதிர்ந்த போரினில்,
அம்பு இடை தொடுக்குமோ? அருளின் ஆழியான்?" (4074)

(இம்பர் - இவ்வுலகு; ஏய்தல் - ஒன்றி வாழ்தல்; தொடுத்தல் - எய்தல் \ செலுத்துதல்; ஆழி - கடல்)

"இவ்வுலகில் தன் தம்பியர்களைத் தவிர தனக்கு வேறு உயிர் இல்லை என்று கருதி, அவர்களுடன் அன்போடு ஒன்று பட்டு வாழும் இராமன், கருணைக் கடலும், அருட்கடலுமான இராமன், நானும் என் தம்பி சுக்கிரீவனும் பிணக்கால்

எதிர்பட்டுப் புரிகின்ற போரில், நடுவில் புகுந்து எனக்கு எதிராகத் தன் அம்பினைச் செலுத்துவானோ? செலுத்த மாட்டான்" என்கிறான் வாலி.

தம்பியரையே தன் உயிராகக் கருதும் கருணைக் கடலான இராமன், உடன்பிறந்தார்களாகிய எங்கள் இருவருக்கும் நிகழும் போரில் நடுவு நிலைமை தவறி ஒருபக்கமாகச் சார்ந்து, தன்மேல் அம்பைத் தொடுக்க மாட்டான் என்பது வாலியின் நம்பிக்கை..

36. "இருத்தி நீ இறை இவண்; இமைப்பு இல் காலையில்,
உருத்தவன் உயிர்குடித்து, உடன் வந்தாரையும்
கருத்து அழித்து எய்துவென்; கலங்கல்" என்றனன்;
விரைக்குழல், பின், உரைவிளம்ப அஞ்சினாள். (4075)

(இறை - சிறிது பொழுது; இருத்தி - இருப்பாயாக; இமைப்பு - நொடிப்பொழுது; காலை - நேரம் \ பொழுது; உருத்தல் - வெகுள்தல் \ சினத்தல்; விரை - நறுமணம்; குழல் - கூந்தல்; கருத்து அழித்தல் - எண்ணம் நிறைவேறாது செய்தல்)

வாலி தாரையை நோக்கி, "நீ சற்று நேரம் இங்கேயே இரு; ஒரு நொடிப்பொழுதில், என் மீது சினந்து வெகுண்டு வந்தவனான என்தம்பி சுக்கிரீ வனின் உயிரை அழித்து; அவன் கூட வந்தவர்கள் யாராவது இருப்பின் அவர்களது எண்ணத்தையும் நிறைவேறாமல் செய்து உடனே திரும்பி வந்து விடுகிறேன். நீ என் நிலை பற்றிக் கலக்கம் கொள்ளாதே" என்று ஆறுதல் கூறினான்; இதனைக் கேட்ட தாரை, பின்னும் அவனிடம் ஏதும் பேசுவதற்கு அஞ்சிப் பேசாதிருந்துவிட்டாள்.

"இமைப்பு இல்காலை" என்பது, கண் இமைக்கும் நேரத்திற்குள் என்று விரைவுப் பொருளைக் குறித்தது. இங்கே விரைக்குழல் என்பது பெண் என்ற பொருளில் மட்டுமே பயின்று வந்தது என்பதை உணர்க. முன்பு "தீயிடைத் தன் நெடும் கூந்தல் தீகின்றாள்" என்று கூறியதால் இங்கே விரைக்குழல் என்பதற்கு நறுமணம் பொருந்திய கூந்தலையுடைய தாரை என்றுபொருள் கொள்ளுவது பொருந்தாதது உணர்க. இங்கே ஒன்று நோக்குதல் வேண்டும். "உருத்தவன் உயிர்குடித்து" என்று சுக்கிரீவனை உயிரழிப்பேன் என்று கூறிய வாலி, உடன் வந்தோரையும் அழிப்பேன் என்று கூறாது, "உடன் வந்தோரையும் கருத்து அழித்து எய்துவேன்" என்று கூறியதால், உடன்வந்தவர்கள் இராம இலக்குவர் களாய் இருந்தால், அவர்களைத் தான் அழிக்கமுடியாது என்பதையும், அவர்களாலும் தன்னை நேரிடையாக அழிக்க முடியாது என்பதையும் நன்கு உணாந்துதான் "கருத்து அழிப்பேன்" என்று கூறினான் என்க.

37. வாலி வெளிவந்து குன்றின் புறத்தே தோன்றுதல்

ஒல்லைச் செருவேட்டு உயர் வன்புய ஓங்கல் உம்பர்
எல்லைக்கும் அப்பால் இவர்கின்ற இரண்டினோடும்

மல்லல் கிரியின் தலை வந்தனன் வாலி; கீழ்பால்
தொல்லைக் கிரியின் தலை தோற்றிய ஞாயிறு என்ன; (4076)

(ஒல்லை - விரைந்து; செரு - போர்; வேட்டு - விரும்பி; உம்பர் - வானுலகு; இவர்தல் - கிளர்ந்து ஓங்குதல்; புயம் - தோள்; ஓங்கல் - மலைகள்; கீழ்பால் - கிழக்குத்திசை; தொல்லை - பழமையான; கிரி - உதயமலை; மல்லல் - வளப்பம்; தலை - மேல் \ உச்சி)

இவ்வாறு தாரையை அமர்த்திவிட்டு, போர் செய்யும் விருப்போடு விரைவாக வந்த வாலி, தனது உயர்ந்த, வானுலகத்தின் எல்லைக்கு அப்பாலும் கிளர்ந்து வளர்கின்ற தன்மையுடைய இரண்டு மலைபோன்ற தோள்களும் பூரித்து விளங்க, கீழ்த்திசையில், பழமையான உதயகிரியின் மேல் தோன்றும் சூரியன் போல, தனது வளப்பம் மிகுந்த கிட்கிந்தை மலையின் உச்சியில், ஒரு புறத்தில் தோன்றினான்.

"ஒல்லைச் செருவேட்டு உயர் வன் புய ஓங்கல்" என்பது முன்பு, "போர் என்ன வீங்கும் பொருப்பன்ன பொலன் திண் தோள்" என்பதை நினைவூட்டுவதை உணர்க. "மல்லல்கிரி" என்று கிட்கிந்தையைக் குறித்ததால், வாலியின் கிட்கிந்தையின் வளமை சிறப்பிக்கப்பட்டது. சூரியன் மகனான சுக்கிரீவன் முன்பு, வாலி சூரியன் போல் தோன்றினான் என்று கூறிய நயம் காண்க. வாலிக்குச் சூரியன் உவமை.

38. அப்போது வாலியின் தோற்றம்

நின்றான், எதிர் யாவரும் நெஞ்சு நடுங்கி அஞ்சத்
"தன் தோள்வலியால் தனி மால்வரை சாலும் வாலி,
குன்றுஊடு வந்து உற்றனன்; கோள் அவுணன் குறித்த
வன்தூணிடைத் தோன்றிய மா நரசிங்கம் என்ன. (4077)

(சாலும் - ஒக்கும்; கோள் - கொடுமை; அவுணன் - அசுரன் \ இரணியன்; வன் - வலிய; மா - பெருமைவாய்ந்த; ஊடு - வழியே \ இடையே)

தனது தோளாற்றலில் ஒப்பற்ற பெரிய மேருமலையை ஒத்த வாலி, முன்பு கொடிய அசுரனான இரணியன் குறித்துக் காட்டிய வலிய தூணில் வெளிப்பட்டுத் தோன்றிய, பெருமைபொருந்திய நரசிங்கத்தைப் போன்ற வீரப் பொலிவுடன், மலைக்குன்றின் வழியே வந்து, காண்பவர் எல்லோரும் அஞ்சி உள்ளம் நடுங்கும் வண்ணம், சுக்கிரீவனுக்கு எதிரே தோன்றினான்.

இங்கே திருமாலின் நரசிம்மாவதாரம் பேசப்படுகிறது. முன்பாடலில் வாலியைச் சூரியனுக்கு உவமித்த கவிஞன், இப்பாடலில் வாலியை, திருமாலின் நரசிம்ம அவதாரத்திற்கு ஒப்பிட்டமை காண்க. நரசிங்கம் என்பது மனித உடலும், சிங்க முகமும், கூரிய விரல் நகங்களும் உடைய ஒரு வடிவம். நரன் என்ற சொல்லுக்கு மானிடன், மனிதன் என்பது பொருள்; வாலியின் தோள்களுக்கு மேருமலை உவமை.

39. இருவரும் ஆரவாரித்தல்

ஆர்க்கின்ற பின்னோன் தன்னை நோக்கினன்; தானும் ஆர்த்தான்;
வேர்க்கின்ற வானத்து உரும்ஏறு வெறித்து வீழப்
போர்க்கின்றது எல்லா உலகும், பொதிர்வுற்ற பூசல்;
கார்க் குன்றம் அன்னான் நிலம் தாவிய கால் இது என்ன. (4078)

(ஆர்த்தல் - போர் முழக்கம் செய்தல்; பின்னோன் - தம்பி \ சுக்கிரீவன்; வானம் - மேகம்; உரும்ஏறு - பேரிடி; வெறித்து - திகைப்புற்று; கார் - மேகம்; கால் - பாதம்; பூசல் - போர்முழக்கம்; வேர்த்தல் - வியர்த்தல்; பொதிர்வுறுதல் - நிறைந்து விளங்குதல்)

அவ்வாறு வெளிப்பட்டுத் தோன்றிய வாலி, தன்தம்பி சுக்கிரீவன் செய்கின்ற போர் முழக்கத்தைக் கேட்டு, தானும் எதிர்முழக்கம் செய்தான்; அவ்வொலி கேட்டு, மேகத்தில் நீர்த்துளிகள் பரவியிருக்கும் பேரிடிகள் திகைப்பும் நடுக்கமுமுற்று இடியாய்க் கீழே விழுந்தன; கரிய மேருமலை போன்ற திருமால், முன்பு திரிவிக்கிரமனாகி மூவடிமண் வேண்டிப் பெற்று நிலத்தை அளந்த போது தாவிய அவனது சேவடிகள், இடம் போதாமையால் அண்டத்துக்கு அப்புறமும் சென்று படிந்தது போல, இப்போது வாலி செய்த இந்தப்போர் முழக்கமும், எல்லா உலகங்களையும் தன்னுள் அகப்படுத்திக் கொண்டு அண்ட கோளங்களையே சூழ்ந்து நின்று அதன் மேலும் ஒலிப்பதாயிற்று.

முன்பாடலில் திருமாலின் நரசிம்மாவதாரத்தை ஒப்பிட்ட கவிஞன், இப்பாடலில் வாலியைத் திரிவிக்ரம அவதாரத்திற்கு ஒப்பிட்டதை நோக்குக. வியர்த்தல் என்பது வாலியின் போர்முழக்கத்தால் உண்டாகிய அச்சத்தால் மேகம்கூட வியர்த்துப் போனது என்பதைக் குறித்தது என்க.

40. இராமன் அத்தோற்றத்தை இலக்குவனுக்குச் சுட்டிக்காட்டுதல்

அவ்வேலை, இராமனும், அன்புடைத் தம்பிக்கு, "ஐய!
செவ்வே செல நோக்குதி; தானவர், தேவர் நிற்க;
எவ்வேலை, எம்மேகம், எக்காலொடு, எக்காலவெந்தீ
வெவ்வேறு உலகத்து, இவன் மேனியை மானும்?" என்றான். (4079)

(செவ்வே - செவ்வனே \ நன்றாக; செல - கூர்ந்து; தானவர் - அசுரர்; வேலை - கடல்; கால் - காற்று; மானுதல் - ஒத்திருத்தல்; அவ்வேலை - அப்பொழுது)

அப்பொழுது இராமன், தன்னுடைய அன்புத்தம்பி இலக்குவனை நோக்கி, "ஐயனே! இவன் தோற்றத்தை நன்கு கூர்ந்து கவனிப்பாயாக! வலிமை மிகுந்த அசுரர்களும், தேவர்களும் ஒருபுறம் இருக்கட்டும்; எந்தக்கடல், எந்த மேகம், எந்தக்காற்று, எந்த ஊழிக்காலக் கொடிய நெருப்பு, வேறுபட்ட பல உலகங் களில், இவனுடைய மேனியின் வலிமைக்கும் தோற்றத்திற்கும் ஒப்பாகும்?" என்று கேட்டான்.

வாலியின் வெண்ணிற மேனியையும், வலிமை மிகுந்த தோற்றத்தையும் கண்ட இராமன் மிகவும் வியந்து, இவனுடைய வலிமைக்குத் தேவர்களும், அசுரர்களும் ஒப்பாக மாட்டார்கள் என்று முதலில் அவர்களை விலக்கிவிட்டான். பின்பு கடல், மேகம், காற்று, நெருப்பு முதலியவற்றின் வலிமையையும் நோக்கி, அவை ஒவ்வொன்றும் தனித் தனியாகவும் இவன் உடல் வலிமைக்கு ஒப்பாக மாட்டாது என்று வியந்து இலக்குவனுக்குச் சுட்டிக்காட்டினான் என்பதாம்.

இங்கே வெண்மையான அலைகளையுடைய கடலை அவனது வெண்மையான மேனித்தோற்றத்திற்கும், மேகத்தின் முழக்கத்தை அவனது போர் முழக்கத்திற்கும், அவன் புயல் போல் வந்த வேகத்தைக் காற்றுக்கும், சுக்கிரீவனை அழிக்கும் வெம்மைக்கு ஊழித்தீயையும் தனித்தனியாக உவமை கூறினாலும் இவை பொருந்தாது என்று கருதினான் இராமன் என்றலும் பொருந்தும். போராற்றல் மிக்க தேவர்களையும், அசுரர்களையும் முதலிலேயே விலக்கிய பாங்கை நோக்குக.

41. இலக்குவனின் மாறுபட்ட கருத்து

> **வள்ளற்கு இளையான் பகர்வான்; "இவன் தம் முன் வாழ்நாள்**
> **கொள்ளக் கொடுங் கூற்றுவனைக் கொணர்ந்தான்; குரங்கின்**
> **எள்ளற்கு உறுபோர் செய எண்ணினன் என்னும் இன்னல்**
> **உள்ளத்தில் ஊன்ற, உணர்வுற்றிலேன் ஒன்றும்" என்றான். (4080)**

(தம்முன் - தனது முன்னவன் \ தமையன் \ வாலி; கொள்ள - கவர்ந்து கொள்ள \ அழிக்க; எள்ளல் - இகழ்தல்; ஊன்ற - தைக்க \ ஆழ்ந்துபதிய; ஒன்றும் - சிறிதும்)

வள்ளலாகிய இராமபிரானுக்குத் தம்பியாகிய இலக்குவன் மறுமொழி கூறுகிறான். "இந்தச் சுக்கிரீவன் தன்னுடைய தமையன் வாலியின் வாழ்நாளைக் கவர்ந்து அவனைக் கொல்லுவதற்கென்றே, கொடிய கூற்றுவன் போன்ற தனது அண்ணன் இராமனை இங்கு அழைத்து வந்திருக்கிறான்; எல்லோராலும் இகழப்படுகின்ற குரங்குப் போர் செய்ய எண்ணம் கொண்டிருக்கிறான் என்ற இந்தத் துன்பங்கள் தான் என் மனத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. எனவே வாலியும் சுக்கிரீவனும் போர் முழக்கம் செய்து கொண்டிருப்பதையோ, அவர்கள் தோற்றத்தையோ கண்டு உணரும் நிலையில் நான் சிறிதும் இல்லை" என்கிறான்.

இங்கே இராமன் இயமனுக்கு ஒப்பாகக் கூறப்படுவதை நோக்குக. முன்பும் அனுமன் இராமனை "வாலி காலன்" என்றதையும் ஒப்பிட்டுக் காண்க. சுக்கிரீவன் இராமனை அழைத்து வந்தது இயமனையே அழைத்து வந்ததற்கு ஒப்பாகும் என்பதாம். தானும் தன் தம்பியும், தங்கள் தமையனைப் போற்றிப் பாதுகாக்கும் பாங்கையும், இந்தச் சுக்கிரீவன் அவன் தமையன் வாலியைக் கொல்ல எண்ணிச் சூழ்ச்சிமிக்க போர் புரிவதை எண்ணியும், தன் அருமையான தமையன் இந்த அறமல்லாத குரக்குப்போருக்கு உதவ வேண்டி வந்த இழிநிலையை எண்ணியும், இலக்குவன் மனத்தில் பெரும் கலக்கமுற்றான்

என்க. இந்தச் செயல்களில் அவனுக்கு உடன் பாடில்லை என்பதும், இவை அவன் உள்ளத்தை மிகவும் பாதித்துவிட்டது என்பதும் இப்பாடலிலிருந்து நன்கு புலப்படுவதை உணர்க.

42. ஆற்றாது பின்னும் பகர்வான்; "அறத்தாறு அழுங்கத்
தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்விது அன்றால்;
மாற்றான் எனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான்
வேற்றார்கள் திறத்து இவன் தஞ்சம் என்? வீர!" என்றான். (4081)

(ஆற்றாது - மனம் பொறுக்கமாட்டாமல்; அறத்தாறு - அறநெறி; அழுங்குதல் - சிதைதல்; தேறுதல் - தெளிதல் \ நம்புதல்; செவ்விது - நன்மைதருவது; மாற்றான் - பகைவன்; கொல்லிய - கொல்லும் பொருட்டு; வேற்றார் - தொடர்பில்லாத அயலார்; தஞ்சம் - துணை \ பற்றுக்கோடு)

மனம் பொறுக்காமல், இலக்குவன் மேலும் சொல்லலானான். "வீரனே! அறத்தின் வழியே நின்று செயலாற்றாது, தீய நெறிகளில் ஈடுபடுபவர்களை நம்புதல் நமக்கு நன்மை பயக்காது. அது நேர்மையானதும் அல்ல; தன் தமையனையே பகைவன் எனக் கருதி, அவனைக் கொல்லும் பொருட்டு நம்மை அழைத்து வந்திருக்கின்ற இந்தச் சுக்கிரீவன், அவனோடு தொடர்பே இல்லாத நம்மைப் போன்ற அயலாருக்குத் துணையாய் நின்று உதவிசெய்வான் என்பது என்ன நிச்சயம்?" என்றான் இலக்குவன்.

இலக்குவன், சுக்கிரீவனை முழுதும் நம்பவில்லை; இராமன் அவனுக்குத் துணைபுரிவதிலும் அவனுக்கு உடன் பாடில்லை; தன் தமையனையே சூழ்ச்சியால் கொல்லக்கருதும் ஒருவன், அறநெறியையே நிலைநிறுத்த வந்த இராமபிரானுடன் கூட்டுச் சேருவதால் ஒரு நன்மையும் விளையாது என்பது இலக்குவனின் துணிந்த கருத்து என்க.

43. இராமன் மறுமொழி

"அத்தா! இதுகேள்;" என ஆரியன் கூறுவான்; "இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசல் ஆமோ?
எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால், பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?" (4082)

(ஆரியன் - மேலோன்; அத்தா - தந்தையே \ ஐயனே; பித்து - மருள்; ஒழுக்கு - ஒழுக்கம் \ நடைமுறை; ஒத்தல் - ஒரே மாதிரியாக நடத்தல்)

மேலோனான இராமன் இலக்குவனை நோக்கி, "தந்தை போன்றவனே! நான் கூறுவதைக் கேட்பாயாக! இந்தப் பகுத்தறிவில்லாத மருள்கொண்ட விலங்கினத்தின் ஒழுக்கத்தைப் பற்றியோ, நடைமுறையைப்பற்றியோ, மனித ஒழுக்கத்துடன் ஒப்பிட்டுப்பேசுதல் தகுதியாகுமோ? விலங்கினம் இருக்கட்டும். பகுத்தறிவுள்ள மானிட இனத்திலேயே எந்தத் தாயின் வயிற்றில் பிறந்திருந் தாலும், உடன்பிறந்தார் எல்லாம், தமையனிடத்திலும், ஒருவர்க்கொருவரும்

ஒத்த அன்புடையராய், ஒரே மாதிரியாய் நடந்து கொண்டால், பரதன் மட்டும் பெரிய உத்தமன் என்று எல்லோராலும் போற்றப்படுபவன் ஆவானா? அவன் மற்ற உடன் பிறந்தவர்களைக் காட்டிலும் மேம்பட்டு நடந்து கொண்டதால் தானே எல்லோரும் அவனைப் புகழுகின்றனர்?" என்றான் இராமன்.

அத்தா என்பது, இராமன் இலக்குவனைத் தந்தையின் இடத்தில் வைத்துப் போற்றுகிறான் என்பதைக் குறிக்கும். பின்னும் "தந்தை நீயே, தாயும் நீயே, தவம் நீயே" என்று கூறுவதை யுத்த காண்டத்தில் காணப்போகிறோம். மற்றும் ஒன்று. தன்னுடனேயே இருந்து வரும் இலக்குவனிடத்திலேயே அவனை விட்டுவிட்டு இராமன், எங்கோ இருக்கின்ற பரதனைப் புகழ்ந்த திறம் நோக்குக. ஒழுக்கம் போன்ற நடைமுறையை நாம் மனஉணர்வில்லாத குரங்குகளிடம் எதிர்பார்க்கக் கூடாது என்பது இராமனின் கருத்து. இவ்வாறு இலக்குவன் மறுப்புக் கூறுதலும், இராமன் அதற்கு மறுமொழி கூறுதலும் வான்மீகத்திலோ, அத்யாத்ம ராமாயணத்திலோ காணப்படவில்லை.

44. "வில்தாங்கு, வெற்பு அன்ன, இலங்கு எழில் தோள! மெய்ம்மை
உற்றார் சிலர், அல்லவரே பலர் என்பது உண்மை;
பெற்றார் உழைப் பெற்ற பயன்பெறும் பெற்றியல்லால்,
அற்றார் நவை என்றலுக்கு, ஆகுநர் ஆர்கொல்?" என்றான். (4083)

(வெற்பு - மலை; எழில் - வனப்பு \ அழகு; மெய்ம்மை - வாய்மைப் பண்பு; உழை - இடம்; பெற்றி - தன்மை; நவை - குற்றம்; ஆகுநர் - தகுதியுடையவர்; இலங்கு - விளங்குகின்ற)

"வில்லை எப்போதும் ஏந்தி நிற்கின்ற, மலைபோன்ற, அழகு கொஞ்சுகின்ற தோள்களை உடையவனே! இலக்குவ! உலகில் உண்மை நெறியில் ஒழுகுகின்றவர்கள் ஒரு சிலரே ஆவர்; உண்மை நெறியல்லாத பிறவழிகளில் ஒழுகுபவரே மிகப்பலராவர் என்று சான்றோர்கள் கூறுவது உண்மையேயாகும்; எனவே நாம் நண்பராகப் பெற்றிருப்பவர்களிடம் உள்ள நல்ல நெறியினால் விளையும் நன்மைகளின் தன்மையைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமே அன்றி, குற்றமே இல்லாதவர் என்று கூறுவதற்குத் தகுதியுடையவர்கள் இவ்வுலகில் யார் இருக்கிறார்கள்? சொல் பார்க்கலாம்!" என்கிறான் இராமன்.

மனித இனத்திலேயே குற்றமில்லாது நேர் வழியில் ஒழுகுபவர்கள் மிகச்சிலரே. அவ்வாறு இருக்கும் போது குரக்கினத்தவராகிய இவர்களிடத்தில் நாம் முழுதும் நல்ல நெறியையே எதிர் பார்க்கக் கூடாது. அவர்களிடம் உள்ள நல்ல நெறிகளை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது இராமன் கருத்து. நற்குணங்கள் இல்லாதவர், குற்றமே உடையவர்கள் என்று கருதி அவர்களுள் சிலரிடத்து இருக்கும் நற்குணங்களின் பயனை நாம் இழந்து விடுதல் கூடாது என்கிறான் இராமன். "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்பது பழமொழி. "நல்லார் எனத்தான் நனி விரும்பிக் கொண்டாரை, அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்; நெல்லுக்கும் உமியுண்டு; நீருக்கும் நுரையுண்டு; புல்லிதழ் பூவிற்கும் உண்டு; என்பது நாலடியார் 221; "குணம் நாடிக் குற்றமும் நாடி,

அவற்றுள் மிகைநாடி, மிக்கக் கொளல்" என்பது குறள். சுக்கிரீவன் சில குற்றங்களை உடையவன் என்றாலும்; அவனிடமுள்ள நற்குணங்களினால் விளையும் நன்மையை மட்டுமே நாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறான் இராமன்.

45. வாலி சுக்கிரீவன் இருவரும் போர் புரிதல்

வீரத்திறலோர், இவை இன்ன விளம்பும் வேலை,
தேரில் திரிவான் மகன், இந்திரன் செம்மல், என்று இப்
பாரில் திரியும் பனிமால் வரை அன்ன பண்பார்,
மூரித் திசையானை இரண்டு என, முட்டினாரே. (4084)

(வேலை - வேளை \ சமயம்; செம்மல் - புதல்வன்; பண்பார் - தன்மையினர்; மூரி - பெருவன்மை; முட்டினர் - மோதிப்போர்செய்தனர்; வீரம் - உள்ளத்து வலிமை; திறல் - பேராற்றல் \ உடல்வலிமை)

உள்ளவலிமையும், உடல் வலிமையும் உள்ள பேராற்றல் படைத்த இராம இலக்குவர்கள் இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கும் போது, ஒற்றைச் சக்கரத்தேரில் வானில் சஞ்சரிக்கும் சூரியன் மகனான சுக்கிரீவனும், இந்திரன் மகனான வாலியும் என்று கூறப்படுகின்றவர்கள், இந்தப் பூமியில் திரிகின்ற பனிபடர்ந்த, வெண்மையான இருமலைகள் போன்ற தன்மையுடையவர்கள் போலவும், பெருவன்மை படைத்த திக்கு யானைகள் இரண்டும் ஒன்றோடொன்று மோதிக் கொள்வது போலவும், போர்புரியத் தொடங்கினர்.

மலையும் திசையானைகளும் வாலி, சுக்கிரீவர்க்கு வெண்ணிறத்தாலும் திண்மையாலும், தோற்றப் பொலிவாலும் உவமை.

46. குன்றோடு குன்று ஒத்தனர் கோள்அரிக் கொற்ற வல்ஏறு
ஒன்றோடு சென்று ஒன்று எதிர் உற்றனவேயும் ஒத்தார்
நின்றார், திரிந்தார் நெடுஞ்சாரி; நிலம் திரிந்த,
வன்தோள் குயவன் திரி மட்கலத்து ஆழி என்ன. (4085)

(குன்று - மலை; கோள் - கொள்ளுதல் \ வலிமையுமாம்; கொற்றம் - வெற்றி; அரிஏறு - ஆண் சிங்கம்; வல் - வலிய; குயவன் - வேட்கோவன் \ குலாலன் \ மட்பாண்டம் செய்பவன்; ஆழி - சக்கரம்; திரிதல் - சுழல்தல்; சாரி - வட்டமாய் ஓடித்திரிதல்)

ஒரு குன்று மற்றொரு குன்றுடன் போரிட்டது போன்றும், உயிரைக் கவர்ந்து கொள்ளும் தன்மையும் வலிமையும், வெற்றியும் உடைய இரண்டு ஆண் சிங்கங்கள் ஒன்றோடொன்று நேருக்குநேர் மோதிக் கொள்வதைப் போன்றும், வாலியும் சுக்கிரீவனும் போர்புரிந்தனர்; ஓரிடத்தில் நிலைபெற்று நின்றும், வலது சாரி, இடது சாரி என வட்டமாகச் சுற்றியும் நெடுநேரம் போரிட்டனர். அதனால் இந்த நிலவுலகம், வலிய தோள்களையுடைய குலாலன் மட்பாண்டங்கள் செய்வதற்காகச் சுற்றுகின்ற சக்கரத்தைப் போல, வட்டமாகச் சுழன்று நிலைகுலைந்தது.

மலையும், ஆண்சிங்கமும் வாலி, சுக்கிரீவனுக்கு உவமைகள்; சாரிதிரிதல் என்பது சாரிகை எனவும் வழங்கப்பெறும்.

47. தோளோடு தோள் தேய்த்தலின், தொல்நிலம் தாங்கலாற்றாத்
தாளோடு தாள் தேய்த்தலின், தந்த தழல் பிறங்கல்,
வாளோடு மின் ஓடுவபோல், நெடுவானில் ஓடும்
கோளோடு கோள் உற்றெனஒத்து, அடர்ந்தார், கொதித்தார் (4086)

(தொல் - பழமையான; தந்த - உண்டாக்கிய \ தோற்றுவித்த; தழல்பிறங்கல் - தீப்பிழம்பு \ தீத்திரள்; வாள் - ஒளி; அடர்தல் - நெருங்குதல்; கோள் - கிரகங்கள்)

வாலி, சுக்கிரீவன் இருவரும் ஒருவர் தோளோடு மற்றவர் தோள் உராய்ந்து போரிடுவதனாலும், இந்தப் பழமையான பூமி தாங்க முடியாதவாறு தங்கள் கால்களோடு கால்கள் உராய்ந்து போரிடுவதனாலும், தோன்றிய தீப்பிழம்புகள், ஒரு வாளோடு ஒரு வாள் மோதியதால் உண்டான மின்னல் ஓடுவது போல நீண்ட ஆகாயத்தில் ஓடியது; இவர்கள் இருவரும், கிரகங்கள் ஒன்றொடொன்று போர் செய்து கொள்ளுவது போல ஒருவரை ஒருவர் நெருங்கி உள்ளம் கொதிப்புற்றுப் போர் புரியலாயினர்.

வானத்தில் உள்ள வெள்ளி, வியாழன், சூரியன், சந்திரன் போன்ற கிரகங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வது உண்டென்றும், இதற்கு "கிரகப்போர்" " கோள்ப்போர்" என்று பெயர் என்றும் புறநானூறு கூறுகிறது. மின்னலும், கிரகங்களும், வாலி, சுக்கிரீவர்க்கு உவமைகள்.

48. தம்தோள் வலி மிக்கவர், தம் ஒருதாய் வயிற்றின்
வந்தோர், மடமங்கை பொருட்டு மலைக்கலுற்றார்;
சிந்து ஓடு அரி ஒண்கண் திலோத்தமை காதல் செற்ற
சுந்தோப சுந்தப் பெயர்த் தொல்லையினோரும் ஒத்தார். (4087)

(மடம் - மடப்பம் \ இளமை; மலைத்தல் - போர்புரிதல்; சிந்து - சிதறிய; அரி - வரி, இரேகை; ஒண் - ஒளிபொருந்திய; செற்ற கோபம்கொண்ட; தொல்லை யினோர் - பழமையானவர்கள்)

தோளாற்றல் மிக்கவர்களும், ஒரே தாயின் வயிற்றில் உதித்த உடன் பிறந்தவர்களுமான வாலியும் சுக்கிரீவனும் மடப்பம் பொருந்திய இளமையான உருமை என்னும் ஒரு பெண்ணின் பொருட்டு ஒருவர்க்கொருவர் மோதிக் கொள்ளலாயினர்; சிதறிப் பரவிய இரேகைகள் படிந்த, ஒளிபொருந்திய கண்களையுடைய திலோத்தமையின் பால் காதல் உற்றதால், கோபம் கொண்டு பொருதிய சுந்தர், உபசுந்தர் என்ற பெயரினைப் பெற்ற பழங்காலத்தில் வாழ்ந்து வந்த அசுரர்களைப் போலவும், வாலி சுக்கிரீவர் தோன்றினர்.

வாலியும் சுக்கிரீவனும் ஒத்த தோள்வலிமிக்கவர்; ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள். இவர்கள் இப்போது ஒருவர்க் கொருவர் சண்டையிட்டுக் கொள்வது சுக்கிரீவனின் மனைவியாகிய உருமையின் பொருட்டு;

இதேபோல் பண்டைக்காலத்தில் சுந்தர், உபசுந்தர் என்ற இரு அசுரர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் இரண்யகசிபுவின் வழி வந்த நிகும்பன் என்ற

அசுரனுக்கு ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள். சுந்தன் மூத்தவன், உபசுந்தன் இளையவன், இவர்கள் இருவரும் மும்மூர்த்திகளையும் எண்ணித் தவம் செய்து, பிறர் யாராலும் அழிக்கப்படாத வரத்தைப் பெற்றனர். எனவே தருக்கு மிகக் கொண்டு, தேவர்களையே அழிக்கத் தலைப்பட்டனர். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி பிரமதேவன், விசுவகர்மனை அழைத்து மூவுலகங்களிலுமுள்ள அழகிய உடம்புகளின் அழகுகளிலிருந்து எள் அளவு திரட்டி எடுத்து மிக அழகிய உருவமுடைய திலோத்தமை என்னும் பேரழகுப் பெண்ணைப் படைக்கச் செய்தான். திலோத்தமையை சுந்தன், உபசுந்தன் இருவரும் காதல் புரிந்தனர். திலோத்தமை அவர்கள் இருவருக்குள்ளும் யார் வலிமையில் மேம்பட்டுத் திகழ்கிறார்களோ அவரையே தான் மணப்பதாகக் கூறினாள். எனவே தாமே அவளை அடையும் பொருட்டு, தங்களுக்குத் தாங்களே போரிட்டுக் கொண்டு, இறுதியில் வேறொருவராலும் கொல்லப்படாமல் இருவரும் ஒருசேர அழிந்து போயினர். இது ஒரு புராண வரலாறு. இந்த வரலாறு வியாசபாரதத்திலும், வில்லிப்புத்தூரார் பாரதத்திலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. திலம் என்ற சொல்லுக்கு எள் என்பது பொருள். உலகத்திலுள்ள அழகிய பொருள்களில் இருந்தெல்லாம் எள்ளளவு எடுத்துப்படைக்கப்பட்ட அழகி இவள் எனவே திலோத்தமை எனப்பட்டாள். முதல் இரண்டு அடிகளும், வாலி சுக்கிரீவர்க்கும், சுந்தன், உபசுந்தர்க்கும் பொருந்தி வருதல் காண்க.

49. கடல் ஒன்றினோடு ஒன்று மலைக்கவும், காவல் மேருத்
திடல் ஒன்றினோடு ஒன்று அமர் செய்யவும், சீற்றம் என்பது
உடல் கொண்டு இரண்டாகி உடற்றவும், கண்டிலாதேம்;
மிடல் இங்கு இவர் வெந்தொழிற்கு ஒப்புரை வேறு காணேம். (4088)

(மலைத்தல் - போர் செய்தல்; திடல் - மேடு \ மலை; உடற்றுதல் - தாக்கி வருத்துதல்; மிடல் - பெரு வன்மை; சீற்றம் - மிக்க சினம் \ கோபம்)

இரண்டு கடல்கள் ஒன்றோடொன்று போர் புரிதல் போலவும், இவ்வுலகத்தை நிலைத்து நின்று காவல் செய்கின்ற மேரு என்னும் மலை இரண்டு உருப்பெற்று, அவை தம்மில் ஒன்றோடொன்று தாக்கி வருத்திக் கொண்டு தமக்குள் போர் செய்து கொள்ளுவது போலவும், நாம் இதுவரை கண்டதில்லை. இப்பொழுது இங்கு, வலிமை மிக்க வாலியும், சுக்கிரீவனும் செய்து கொண்டிருக்கின்ற இந்த கொடிய போர்ச் செயலுக்கு ஒப்புக்கூற எமக்கு வேறு உவமை ஏதும் தென்படவில்லை என்கிறான் கவிஞன்.

வாலி, சுக்கிரீவர் போர் புரிந்து கொண்டிருக்கும் தோற்றம், இரண்டு கடல்களும், மேரு மலை இரண்டு பாகமாகியும், சீற்றம் என்னும் குணம் இரண்டு உடல் பெற்றும் தம்முள் எதிர்த்துப் போர் புரிவதைப் போலத் தோற்றமளிக்கிறது என்பதாம். மேருமலை, இந்நில உலகு அசையாதபடி நடுவே நுழைக்கப்பெற்ற இருப்புச் சலாகை போல் ஊடுருவி நின்று, வடக்குத் தெற்காக வளர்ந்து ஓங்கி இவ்வுலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறுவது மரபு. மேருமலை, பூமிக்கு நாராசம் போலத் தென் துருவம் முதல் வடதுருவம் வரையிலும்,

உள்ளே வளர்ந்து, வடதுருவத்தில் மேலோங்கியிருக்கும் பொன்மயமான மலை என்பதும் புராண நூற்கொள்கை. கவிஞனால் வாலி சுக்கிரீவர் முதலியர்களின் தோற்றத்திற்குத்தான் உவமை கூறமுடிந்ததே தவிர, அவர்கள் செய்கின்ற போர்த் தொழிலுக்கு உவமை கூறமுடியவில்லை என்பதை அவன் கூற்றாகவே கூறுவதில் உள்ள நயம் நோக்குக.

50. போர் கண்டு தேவர்கள் மறைந்து கொள்ளுதல்

ஊகங்களின் நாயகர் வெங்கண் உமிழ்ந்த தீயால்,
மேகங்கள் கரிந்தன; வெற்பும் எரிந்த; திக்கின்
நாகங்கள் நடுங்கின; நானிலமும் குலைந்த
மாகங்களை நண்ணிய விண்ணவர், போய் மறைந்தார். (4089)

(ஊகம் - குரங்கு; நாயகர் - தலைவர்; நாகங்கள் - யானைகள்; மாகம் - ஆகாயம்)

குரங்குகளின் தலைவர்களாகிய வாலியும், சுக்கிரீவனும் கொடிய போர் செய்தலால் அவர்கள் கொடிய கண்களிலிருந்து சிதறிய தீப்பொறியினால், மேகங்கள் நீர் வற்றிக் கருகிப் போயின. மலைகளும் கொழுந்து விட்டெரியத் தொடங்கின; எட்டுத் திக்குகளையும் காவல் செய்யும் திக்கஜங்கள் நடுக்கமுற்றன; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகைப்பட்ட நிலப்பகுதிகளும் நிலைகுலையலாயின; ஆகாயத்தை அடைந்து வாழ்ந்திருந்த தேவர்களும், பாதுகாப்புக் கருதி, வேறு இடங்களுக்குச் சென்று மறைந்து கொள்வாராயினர்.

நானிலம் என்பது பொதுவாக பூமியைக் குறிக்கும் என்றாலும், இங்கே நான்கு வகைப்பட்ட நிலங்களைக் குறித்து நின்றது என்க.

51. போரின் தன்மை

விண் மேலினரோ? நெடுவெற்பின் முகட்டினரோ?
மண் மேலினரோ? புறமாதிர வீதியரோ?
கண் மேலினரோ? என யாவரும் காண நின்றார்,
புண்மேல் இரத்தம் பொடிப்பக் கடிப்பார், புடைப்பார். (4090)

(முகடு - உச்சி \ சிகரம்; மாதிரம் - திசை; வீதி - எல்லை; புடைத்தல் - அடித்தல் \ குத்துதல்; பொடித்தல் - அரும்புதல்)

அவர்கள் இருவரும் ஆகாயத்தில் இருந்து போர் புரிகின்றனரா? அல்லது நீண்ட மலையின் உச்சியில் இருந்து போர் புரிகின்றனரா? அல்லது பூமியில் நின்றுதான் சண்டை செய்கின்றனரா? அல்லது உலகின் புறத்தே உள்ள திசைகளின் எல்லையில் இருந்து போர் புரிகின்றனரா? அல்லது நம் கண் எதிரிலேயே போர் புரிகின்றனரா? என்று யாராலும் துணிந்து கூறமுடியவில்லை. என்றாலும் அவர்கள் யாவரும் காணும்படி சுற்றிச் சுழன்று போர் புரிந்தனர். எனவே அவர்கள் உடம்பில் புண் உண்டாகியது. அதனின்றும் இரத்தம்

கொட்டலாயிற்று. எனினும் தொடர்ந்து, ஒருவரையொருவர் கடித்தும் கைகளால் தாக்கிக் கொண்டும் உக்கிரமாகப் போர் செய்வாராயினர்.

52. அவர்கள் குத்திக் கொண்டதன் ஓசை

ஏழ் ஒத்து உடன்ஆம், திசை எட்டொடு இரண்டும் முட்டும்;
ஆழிக்கிளர் ஆர்கலிக்கு ஐம்மடங்கு ஆர்ப்பின் ஓசை;
பாழித்தடந் தோளினும், மார்பினும் கைகள்பாய,
ஊழிக் கிளர்கார் உரும் ஒத்தது, குத்தும் ஓதை. (4091)

(முட்டுதல் - நெருங்கிப் பரவுதல்; பாழி - வலிய; ஊழி - யுகமுடிவு; கார் - கரியமேகங்கள்; உரும் - இடி; ஆழி - பெருங்கடல்; ஆர்கலி - பேராரவாரம்; ஆர்ப்பு - கர்ஜனை)

வாலி, சுக்கிரீவன் ஆகியோர் எழுப்பிய கர்ஜனையின் ஓசை, ஏழு கடல்களும் ஒரு சேரவும், எட்டுத் திசைகளுடன், மேல் \ கீழ் என்ற இரண்டும் சேர்ந்து ஆகிய பத்துத் திசைகளிலும் நெருங்கிப் பரவி, யுகமுடிவுக் காலத்தில் கடலில் கிளர்ந்து எழுகின்ற பேரோசையைப் போல் ஐந்து மடங்கு மிக்கு ஒலித்தது. அவர்களின் வலிமையான, பெரிய தோள்களிலும், மார்பிலும் கைகள் சென்று பாயும்படி குத்திக் கொண்ட ஓசையானது, ஊழி முடிவுக் காலத்தில் கிளர்ந்து எழுகின்ற கரிய மேகங்களில் உண்டாகும் இடி முழக்கத்தைப் போன்றிருந்தது.

அவர்கள் எழுப்பிய பேராரவாரம் ஏழு கடல்களும் ஒரு சேர ஒலிக்கும் ஓசையைவிட ஐந்து மடங்கு மிக்கொலித்துப் பத்துத் திசைகளிலும் சென்று பரவியது. அவர்கள் ஒருவர்க்கொருவர் குத்திக் கொள்ளும் ஓசை, ஊழி முடிவுக் காலத்தில் எழும் இடி முழக்கத்தைப் போல் இருந்தது என்பதாம். ஐம்மடங்கு என்பது மிகுதியைக் குறித்தது என்க.

53. அவர்கள் கடித்துக் கொண்டதால் பீரிட்ட இரத்தம் மேகத்தில் படிதல்

வெவ்வாய் எயிற்றால் மிடல் வீரர் கடிப்ப, மீச்சென்று
அவ்வாய் எழு சோரி அது, ஆசைகள் தோறும் வீச,
எவ்வாயும் எழுந்த கொழுஞ்சுடர் மீன்கள் யாவும்,
செவ்வாயை நிகர்த்தன; செக்கரை ஒத்த மேகம். (4092)

(மிடல் - வன்மை; மீ - மேலே; எயிறு - பற்கள்; சோரி - இரத்தம்; ஆசைகள் - திசைகள்; வீசுதல் - தெறித்தல்; வாய் - பக்கமுமாம்; மீன்கள் - நட்சத்திரங்கள்; செக்கர் - செவ்வானம்)

வன்மையுடைய வீரர்களாகிய வாலியும் சுக்கிரீவனும், ஒருவர் மீது ஒருவர் மேலே பாய்ந்து சென்று, தங்கள் கொடிய வாயிலுள்ள பற்களால் கடிக்கவும், அந்தக் கடித்த வாயின் இடத்திலிருந்து பொங்கிய இரத்தப் பெருக்கு, திசைகள் எல்லாம் சென்று பரவித் தெறித்தது. அங்கே எல்லா இடங்களிலும் பரவியிருந்த செழுமையான ஒளி மிகுந்த வெண்மையான நட்சத்திரங்கள் எல்லாம்,

செவ்வாய் என்னும் சிவந்த கிரகத்தைப்போல, சிவப்பு நிறம் அடையலாயின; கரிய மேகம் கூடச் செவ்வானத்தைப் போலச் சிவந்து போயிற்று.

செவ்வாய் என்பது ஒன்பது கிரகங்களுள் ஒன்று. செந்நிறம் வாய்ந்தது. எனவே, செவ்வாய் என்பது அக்கிரகத்திற்குக் காரணப்பெயர். வெண்மையான ஒளி மிகுந்த நட்சத்திரங்கள் எல்லாம், தாம் ஒவ்வொன்றும், செவ்வாய் என்னும் சிவந்த கிரகத்தைப் போல் ஆயின என்பதாம்.

54. வாலியின் தோளும், சுக்கிரீவன் மார்பும் சிதைவுறுதல்

வெந்த வல் இரும்பிடை, நெடுங்கூடங்கள் வீழ்ப்பச்
சிந்தி எங்கணும் சிதறுவ போல், பொறி தெறிப்ப,
இந்திரன் மகன் புயங்களும், இரவிசேய் உரனும்,
சந்த வல் நெடுந் தடக்கைகள் தாக்கலின், தகர்வ. (4093)

(வெந்த - பழுக்கக் காய்ச்சப்பட்ட; கூடம் - சம்மட்டி; வீழ்த்தல் - அடித்தல்; இரவி - சூரியன்; உரன் - மார்பு; சந்தம் - அழகு; தகர்தல் சிதைவுறுதல்)

உலைக்களத்தில் நன்கு பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பின் மேல், பெரிய சம்மட்டிகளைக் கொண்டு அடிப்பதனால், அதனின்றும் தீப்பொறிகள் எல்லா இடத்திலும் சிதறி விழுவதைப் போல், இந்திரன் புதல்வனாகிய வாலியின் தோள்களும், சூரியன் மகனாகிய சுக்கிரீவனின் மார்பும், அழகிய வலிய பெரிய நீண்ட கைகள் தாக்குவதால் சிதைவுறுவனவாயின.

கொல்லன் உலைக்களத்தில் இரண்டு கொல்லர்கள் எதிரெதிரே நின்று கொண்டு பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பைச் சம்மட்டிகள் கொண்டு அடிப்பதும் அப்பொழுது சுற்றி எல்லா இடங்களிலும் தீப்பொறி சிதறி விழுவதும் நாம் காணும் காட்சி. அதைப் போல இங்கே வாலியும் சுக்கிரீவனும் ஒருவரை யொருவர் சம்மட்டி போன்ற தங்கள் கைகளால் அடித்துக் கொள்வதால், வாலியின் தோள்களினின்றும் சுக்கிரீவனின் மார்பிலிருந்தும் தீப்பொறிகள் சிந்திச் சிதறின என்பதாம். வாலி சுக்கிரீவனின் மார்பையும், சுக்கிரீவன் வாலியின் தோள்களையும் தாக்கினர் என்க.

55. அவர்கள் செய்த போரின் வருணனை

உரத்தினால் மடுத்து உந்துவர்; பாதம் இட்டு உதைப்பர்;
கரத்தினால் விசைத்து எற்றுவர்; கடிப்பர்; நின்று இடிப்பர்;
மரத்தினால் அடித்து உரப்புவர்; பொருப்பு இனம் வாங்கிச்
சிரத்தின் மேல் எறிந்து ஒறுக்குவர்; தெழிப்பர்; தீ விழிப்பர். (4094)

(உரம் - மார்பு; மடுத்தல் - தாங்குதல்; உந்தல் - தள்ளுதல்; எற்றுதல் - வீசியெறிதல்; இடித்தல் - மோதுதல்; உரப்புதல் - அதட்டுதல் \ அச்சுறுத்தல்; பொருப்பு - மலை; வாங்குதல் - பெயர்த்து எடுத்தல்; ஒறுக்குதல் - ஒறுத்தல் \ தண்டித்தல்; தெழித்தல் - வைதல் \ முழங்குதல்; தீவிழித்தல் - சினந்து விழித்து நோக்குதல்)

அவர்கள் இருவரும் ஒருவர் மார்பை ஒருவர் தாக்கித் தள்ளுவார்கள்; கால்களால் உதைத்துக் கொள்ளுவார்கள்; கைகளால் வேகமாகத் தாக்குவார்கள்; பற்களைக் கடித்தும், எதிரெதிரே நின்றும் மோதிக் கொள்ளுவார்கள்; மரத்தினால் அடித்து அச்சுறுத்துவார்கள்; மலைக்கூட்டங்களைப் பெயர்த்தெடுத்துத் தலையின் மேல் எறிந்து தண்டிப்பார்கள்; முழக்கமிட்டு வைது கொள்வார்கள்; தீப்பொறி பறப்பது போல் சினந்து விழித்து நோக்கிக் கொள்ளுவார்கள்.

அவர்கள் போர் புரிந்த முறை கூறப்பட்டது.

56. எடுப்பர் பற்றி; உற்று ஒருவரை ஒருவர் விட்டு எறிவர்;
கொடுப்பர் வந்து உரம்; குத்துவர் கைத்தலம் குளிப்ப;
கடுப்பினில் பெருங் கறங்கு எனச் சாரிகை பிறங்கத்
தடுப்பர்; பின்றுவர்; ஒன்றுவர்; தழுவுவர்; விழுவர். (4095)

(பற்றி - இறுகப்பிடித்து; உரம் - மார்பு; கைத்தலம் - கைகள்; குளித்தல் - உள்ளே பதித்தல்; கடுப்பு - விரைவு; கறங்கு - காற்றாடி; சாரிகை - சுழலுதல் \ வட்டமாக வளைந்து ஓடுதல்; பின்றுதல் - பின்வாங்குதல்; ஒன்றுதல் - நெருங்குதல்; எடுத்தல் - உயரத் தூக்குதல்)

ஒருவரை ஒருவர் இறுகப் பிடித்து உயரத்தூக்கி விட்டு எறிவார்கள்; எறியப்பட்டவர் திரும்பிவந்து தன் மார்பைக் காட்டுவர்; அவர் மார்பில் மற்றவர் தம் கைகள் உள்ளே பதியும்படி குத்துவார்கள்; விரைவாகப் பெரிய காற்றாடி போல் இடசாரி, வலசாரி வந்து வட்டமாக வளைந்து சுழன்று திரிவார்கள்; ஒருவர் தாக்குவதை மற்றவர் தடுப்பார்கள்; மேலும் தாக்குவதற்காகச் சற்றுப் பின் வாங்குவார்கள். பின்னர் ஒருவரை ஒருவர் நெருங்கி நிற்பார்கள்; தழுவிக் கொண்டே, கீழே விழுவார்கள்.

57. வாலினால் உரம் வரிந்தனர், நெரிந்து உக வலிப்பர்;
காலினால் நெடும் கால் பிணித்து உடற்றுவர்; கழல்வர்;
வேலினால் அற எறிந்து என, விறல் வலி உகிரால்,
தோலினால் உடல், நெடுவரை முழையெனத் தொளைப்பர். (4096)

(வரிதல் - இறுகப் பிணித்தல்; உகுதல் - சிதைதல்; வலித்தல் - இழுத்தல்; பிணித்து - சேர்த்து \ பிணைத்து; உடற்றுதல் - வருத்துதல்; கழல்தல் - வெளிப் படுதல்; விறல் - மிக்க வன்மை; உகிர் - நகம்; முழை - குகை; தொளைத்தல் - கிழித்தல் \ துளைத்தல் \ குடைதல்)

இருவரும் ஒருவர் வாலினால் மற்றவர் மார்பை இறுகப் பிணித்து மார்பு சிதைந்து போகும்படி நெரித்து இழுப்பார்கள்; ஒருவர் காலினால் மற்றொருவரின் நீண்ட கால்களைச் சேர்த்துப் பிணைத்து வருத்துவார்கள். பின்னர் அதனின்றும் விடுபட்டுத் தப்பித்துக் கொள்வார்கள்; வேற்படையினால் எறிந்தது போல, தமது வலிமை மிக்க கூரிய நகங்களால்; தோலினால் மூடப்பட்டிருக்கின்ற உடம்பினை பெரிய மலையிலுள்ள குகைபோலத் துளைத்துக் குடைவார்கள்.

58. மண்ணகத்தன மலைகளும், மரங்களும் மற்றும்
கண்ணகத்தினில் தோன்றிய யாவையும், கையால்,
எண் நகப்பறித்து எறிதலின், எற்றலின், இற்ற;
விண்ணகத்தினை மறைத்தன; மறிகடல் வீழ்ந்த; (4097)

(தோன்றிய - எதிர்ப்பட்டன; எண் - உள்ளத்திண்மை; நகுதல் - விளங்குதல்; எற்றல் - தாக்குதல்; இறுதல் - சிதைந்து அழிதல்; மறிதல் - மடங்குதல்)

பூமியிலுள்ள மலைகளையும், மரங்களையும் மற்றும் தங்கள் கண்களில் தென்பட்ட எல்லாப் பொருள்களையும், தங்கள் கைகளின் வலிமையும், உள்ளத்தின் திண்மையும் வெளிப்பட்டு விளங்கும்படி வேரோடு பெயர்த்தெடுத்து வேகமாக வீசி எறிந்ததாலும், தாக்கியதாலும், அவை. சிதைந்துபோய், ஆகாயத்தை அடைந்து அதை மறைத்தன. எஞ்சிய சில பொருள்கள், மடங்கும் அலைகளையுடைய கடலில் போய் விழுந்தன.

59. வெருவிச் சாய்ந்தனர் விண்ணவர்; வேறு என்னை விளம்பல்?
ஒருவர்க்கு ஆண்டு அமர் ஒருவரும் தோற்றிலர்; உடன்று
செருவில் தேய்த்தலின், செங்கனல் வெண் மயிர் செல்ல,
முரிபுல் கானிடை எரி பரந்தன என, முனைவார். (4098)

(அமர் - போர்; உடன்று - கோபித்து \ எதிர்த்து; செரு - போர்; செல்ல - வெளிப்பட; முரி - உலர்ந்து போன; எரி - தீ \ நெருப்பு; பரத்தல் - பற்றி எரிதல்; வெருவி - அஞ்சி; விளம்பல் - கூறத்தக்கது; சாய்தல் - தளர்ந்து போதல் \ வீழ்தலுமாம்)

அவர்கள் இருவரும் அங்கே செய்த போரில் ஒருவரும் தோற்கவில்லை; இருவரும் கோபித்து போரில் ஒருவர் உடலை மற்றவர் தேய்த்துக் கொண்டதால் எழுந்த கோபத்தீ அவர்களது வெண்மையான மயிர்க்கற்றைகள் அடங்கிய உடம்பிலிருந்து வெளிப்பட, அது, உலர்ந்து போன வெண்மையான புல் உள்ள காட்டில் நெருப்புப் பற்றி எரிந்தது போலக் காட்சி தர, போரிடுவதில் ஈடுபட்டனர்; இதனைக் கண்ட தேவர்களும் அஞ்சி, நிலைகுலைந்து தளர்ந்து கீழே விழுவாராயினர். என்றால், அவர்கள் போரின் கொடுமை பற்றிக் கூறத்தக்கது வேறு என்ன இருக்கிறது?

குரங்குகளின் வெண்மையான மயிர்க்கற்றைக்குக் காட்டிலுள்ள உலர்ந்து போன புல் உவமை.

60. வாலி சுக்கிரீவனைத் தாக்குதல்

அன்ன தன்மையர், ஆற்றலின் அமர்புரி பொழுதின்,
வல் நெடும் தடம் திரள் புயத்து, அடுதிறல் வாலி,
சொன்ன தம்பியை, தும்பியை அரி தொலைத்து என்ன,
கொல் நகங்களின், கரங்களின், குலைந்து உக, மலைந்தான். (4099)

(அமர் - போர்; அடு - கொல்லுகின்ற; தும்பி - யானை; அரி - சிங்கம்; தொலைத்து - அழித்து; மலைதல் - போரிடுதல்)

இவ்வாறு ஒருவரும் வெற்றி தோல்வி இல்லாது சமநிலையாய் மிகுந்த ஆற்றலோடு போர் செய்து கொண்டிருக்கும் போது, வலிய, நீண்ட, பெரிய, திரண்ட, பருத்த, தோள்களையுடையவனும், பகைவனைக் கொல்லும் ஆற்றல் படைத்தவனுமாகிய வாலி, முன் கூறப்பட்ட, தனக்கு அறை கூவல் விடுத்து வந்த தன் தம்பி சுக்கிரீவன், ஒரு யானையைச் சிங்கம் அழிப்பது போல, கொல்லும் தன்மையுடைய, வலிய, கூரிய நகங்களினாலும், கைகளினாலும் சுக்கிரீவன் நிலைகுலைந்து தளர்ந்து போய்க் கீழே விழும்படிப் போர் செய்தான்.

சுக்கிரீவனுக்கு யானையும், வாலிக்குச் சிங்கமும் உவமை. தும்பி என்னும் ஒரு உறுப்பைத் தன் துதிக் கையில் உடைமையால், தும்பி என்பது, யானைக்குக் காரணப் பெயர். இதனால்தான் யானையின் கையைத் தும்பிக்கை என்கிறோம் என்பதை உணர்க. இதே போன்று தும்பி என்னும் ஓர் உறுப்பை உடையதால் வண்டுகளும், தும்பி என்று அழைக்கப்படுகின்றன.

61. சுக்கிரீவன் இராமனிடம் ஓடி வருதல்

மலைந்த போது இனைந்து, இரவிசேய், ஐயன்மாட்டு அணுகி,
உலைந்த சிந்தையோடு உணங்கினன், வணங்கிட, "உள்ளம்
குலைந்திடேல்; உமை வேற்றுமை தெரிந்திலம்; கொடிப்பூ
மிலைந்து செல்க" என விடுத்தனன்; எதிர்த்தனன் மீட்டும். (4100)

(மலைதல் - போர்செய்தல்; இனைந்து - வருந்தி; இரவி - சூரியன்; மாடு - பக்கம் \ இடம்; உலைதல் - நடுங்குதல்; உணங்குதல் - வாட்டமுறுதல்; குலைதல் - நடுக்கமுற்று வருந்துதல்; மிலைந்து - சூடிக்கொண்டு)

அவ்வாறு வாலி சுக்கிரீவனைத் தாக்கிப் போர்புரிந்த பொழுது சூரியன் மகனான சுக்கிரீவன், வருத்தமுற்று, இராமபிரான் இருக்குமிடம் அடைந்து, நடுங்கிய மனத்துடனும், வாட்டத்துடனும் வணங்கி, நடந்தது கூற, இராமன் சுக்கிரீவனை நோக்கி, "உள்ளம் நிலைகுலைந்து வருந்தாதே! உங்கள் இருவருள்ளும் யார் வாலி, யார் சுக்கிரீவன் என்பது தெரியாது போயிற்று. எனவே நான் அடையாளம் கண்டுகொள்ளும் படியாக இப்பொழுது ஒரு கொடிப்பூ - அடையாள மாலையை அணிந்து செல்வாயாக!" என்று கூறி அனுப்பினான்; அவ்வாறே சுக்கிரீவனும் மீண்டும் வாலியிடம் சென்று போர் செய்து எதிர்க்கலானான்.

இங்கே கொடிப்பூ என்பது அடையாள மாலையைக் குறிக்கும். வான்மீகம் இதனை "கஜபுஷ்பி" என்று கூறுகிறது. வாலியும் சுக்கிரீவனும், நிறம், வடிவம், உடலமைப்பு, திறல் ஆகியவற்றால் ஒருவரே என்று எண்ணும்படி இருந்தனர் என்பதாம்.

62. சுக்கிரீவன் மீண்டும் வாலியைத் தாக்குதல்

தயங்கு தாரகை நிரை தொடுத்து அணிந்தன போல,
வயங்கு சென்னியன், வயப்புலி வானவல் ஏற்றோடு

உயங்கும் ஆர்ப்பினன், ஒல்லை வந்து, அடுதிறல் வாலி
பயம் கொளப் புடைத்து, எற்றினன், குத்தினன், பலகால். (4101)

(தயங்கு - விளங்குகின்ற; தாரகை - நட்சத்திரங்கள்; நிரை - வரிசை \ மாலை; வயங்கு - விளங்கும்; சென்னி - தலை; வயம் - வன்மை \ வெற்றி; வானம் - மேகம்; ஏறு - பேரிடி; உயங்குதல் - அஞ்சி வருந்துதல்; ஒல்லை - விரைந்து; அடு - அழிக்கவல்ல; புடைத்தல் - அடித்தல்; எற்றுதல் - தாக்குதல்; பலகால் - பலமுறை)

விளங்குகின்ற நட்சத்திரங்களையே மாலையாகத் தொடுத்து அணிந்திருப்பதைப் போல, கொடிப் பூமாலையை விளங்குகின்ற தலையில் அணிந்திருக்கின்ற சுக்கிரீவன், வெற்றியும் வலிமையும் பொருந்திய புலி போலவும், வானத்தில் திகழும் வலிய பேரிடி போன்றும் முழங்கிக் கொண்டு, விரைந்து வந்து, பகைவரைக் கொல்லும் ஆற்றல் படைத்த வாலியும் கூட அஞ்சி நடுங்குமாறு, அவனைப் பலமுறை அடித்தான், தாக்கினான், குத்தினான்.

அவன் அணிந்திருந்த கொடிப்பூமாலை, வானிலுள்ள விண்மீன்களையே மாலையாகத் தொடுத்து அணிந்தது போல அவ்வளவு ஒளி வீசியது என்பதாம். இராமனின் வார்த்தைகள் சுக்கிரீவனுக்கு மிகுந்த ஊக்கம் தந்ததால் இப்போது "வயப்புலி போலவும், வானவல் ஏறுபோலவும்" முழக்கிக்கொண்டு வந்தான் என்பதாம். சுக்கிரீவன், களத்தை விட்டுச் சென்றவன், இவ்வளவு விரைவில் திரும்பி வருவான் என வாலி எதிர்பார்க்கவில்லை. எனவே சற்று அச்சமுற்றான் என்பதாம்.

63. வாலி, சுக்கிரீவனின் உயிர்த்தலத்தில் அடித்தல்

அயிர்த்த சிந்தையன், அந்தகன் குலைகுலைந்து அஞ்சச்
செயிர்த்து நோக்கினன்; சினத்தொடு சிறுநகை செய்யா,
வயிர்த்த கையினும், காலினும், கதிர்மகன் மயங்க,
உயிர்த்தலம் தொறும் புடைத்தனன்;அடித்தனன்; உதைத்தான். (4102)

(அயிர்த்தல் - சந்தேகித்தல்; அந்தகன் - இயமன்; செயிர்த்து - வெகுண்டு; சிறுநகை - புன்முறுவல்; செய்யா - செய்து; உயிர்த்தலம் - உயிர்நிலை; வயிர்த்த - திண்மை மிக்க; புடைத்தல் - குத்துதலுமாம்; குலைகுலைதல் - நடுநடுங்குதல்)

தோற்றுப் போய்க் களத்தை விட்டு ஓடிய சுக்கிரீவன் மீண்டும் திரும்பி வந்து முழங்குவதைக் கண்ட வாலி, சற்று ஐயுற்ற மனத்தினனாய், இயமனே நடுநடுங்கி அஞ்சுமாறு, வெகுண்ட சுக்கிரீவனை நோக்கி, ஒரு ஏளனப் புன்னகையும் செய்து, சூரியன் மகனான சுக்கிரீவன் மயங்கி விழும்படி, தனது வயிரம் பாய்ந்த தன்மையான கைகளாலும், கால்களாலும், அவனுடைய உயிர் நிலையிருக்கும் இடங்களிலெல்லாம் குத்தினான், அடித்தான் உதைத்தான்.

வாலி சந்தேகப்பட்டதற்குரிய காரணம், தன் மனைவி தாரை கூறியதுபோல, வேறு ஏதேனும் வலியதுணை ஒன்றை உடன் அழைத்து வந்திருக்கிறானோ என்று எண்ணியதே என்க. இங்கே "சினத்தல்" என்பதும் "செயிர்த்தல்" என்பதும்

பொதுவாகக் கோபம் என்ற ஒரே பொருளைத் தரும் எனினும், சினத்தல் என்பது மனத்துள் கறுவு கொள்ளுதலையும், செயிர்த்தல் என்பது, அதை வெளிப் படுத்திக் காட்டுதலையும் குறிக்கும் என்க.

64. கலக்கமுற்ற சுக்கிரீவன் இராமனை நோக்குதல்

கக்கினான் உயிர் உயிர்ப்பொடும்; செவிகளின், கண்ணின்,
உக்கது, ஆங்கு எரிப்படலையோடு உதிரத்தின் ஓதம்;
திக்கு நோக்கினன் செங்கதிரோன் மகன்; செருக்கிப்
புக்கு, மீக்கொடு நெருக்கினன், இந்திரன் புதல்வன். (4103)

(உயிர்ப்பு - பெருமூச்சு; எரிப்படலை - தீப்படலம்; ஓதம் - வெள்ளம்; உக்கது - சிந்தியது; புக்கு - பாய்ந்து; மீக்கொள்ளுதல் பற்றித் தூக்குதல்; கக்குதல் - உமிழ்தல்)

அப்பொழுது சிவந்த கதிர்களையுடையவனான சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன், உயிர்போய் விட்டது போலப் பெருமூச்சு விட்டான்; அவன் காதுகளிலிருந்தும், கண்களிலிருந்தும் நெருப்புப்படலமும், இரத்த வெள்ளமும் சிந்தின. எனவே, அவன் தனக்குத் துணையாக வந்த இராமனது உதவியை நாடி, அவன் இருந்த திசை நோக்கித் தனது ஆற்றாமையைப் புலப்படுத்தும் வண்ணம் நோக்கினான். எனினும் இந்திரன் புதல்வனாகிய வாலி, மேலும் செருக்குற்று, அவன் மீது பாய்ந்து, அவனைப் பற்றி உயரே தூக்கி நெருக்கினான்.

65. இராமன் அம்பு செலுத்துதல்

"எடுத்துப் பாரிடை எற்றுவென் பற்றி" என்று, இளவல்
கடித்தலத்தினும், கழுத்தினும், தன் இரு கரங்கள்
மடுத்து, மீக்கொண்ட வாலி மேல், கோல் ஒன்று வாங்கித்
தொடுத்து, நாணொடு தோள் உறுத்து, இராகவன் துரந்தான். (4104)

(பார் - தரை; எற்றுதல் - மோதுதல்; இளவல் - தம்பி \ சுக்கிரீவன்; கடித்தலம் - இடை; மடுத்து - சேர்த்து \ செலுத்தி; மீக்கொள்ளுதல் - உயரத்தூக்குதல்; இராகவன் - இரகு குலத்தோன்றல் \ இராமன்; வாங்கி - எடுத்து; உறுத்தல் - பொருந்தச் செய்தல்; கோல் - அம்பு; துரத்தல் - எய்தல் \ செலுத்துதல்; தொடுத்தல் - பூட்டுதல்)

தன் தம்பி சுக்கிரீவனின் உடம்பைப் பற்றி எடுத்துத் தரையில் மோதப் போகிறேன் என்று தன் மனத்திற்குள் எண்ணிக் கொண்டு, வாலி அவனுடைய இடையில் ஒரு கையையும், கழுத்தில் ஒரு கையையும் செலுத்தி, அவனை உயரே தூக்கினான். இதைக் கண்ட இரகு குலத் தோன்றலான இராமன், தன் அம்பறாத் தூணியினின்றும் ஓர் அம்பினை எடுத்து, அதை வில்லில் பூட்டி, நாண் ஏற்றித் தன் தோள் வரை இழுத்து, வாலியின் மேல் செலுத்தினான்.

இங்கே கோல் என்பது அம்பினைக் குறிக்கும். "வேழத்தில் பட்டு உருவும் கோல், பஞ்சில் பாயாது" என்பது நல்வழி 34. இந்தக் காண்டத்திற்கே, இச்செய்யுள் ஒரு திருப்பு முனையாக அமைந்திருப்பதை நினைவில் கொள்க.

66. இராமபாணம் வாலியின் மார்பைத் துளைத்தல்

காரும் வார் சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
சேரும் ஊசியிற் சென்றது, நின்றது என் செப்ப?
நீரும், நீர்தரு நெருப்பும், வன் காற்றும், கீழ் நிவந்த
பாரும், சார்வலி படைத்தவன் உரத்தை, அப்பகழி; (4105)

(பகழி - அம்பு; தருதல் - தோற்றுவித்தல்; நிவந்த - பரவியுள்ள; பார் - நிலம்; உரம் - மார்பு; வார் - மிக்க; கதலி - வாழை; கழிதல் - ஊன்றுதல்; காருதல் - முதிர்தல்; சார் - சார்ந்த \ அடைந்த)

"இராமபிரான் எய்த அந்த அம்பு, நீரும், நீரைத் தோற்றுவித்த நெருப்பும், அந்நெருப்பைத் தோற்றுவித்த வலிய காற்றும், இவை மூன்றினுக்கும் நிலைக்களனாய் கீழே அமைந்து பரந்திருக்கும் நிலமும், ஆகிய நான்கு பூதங்களின் ஆற்றலையும் தன்னிடம் ஒருசேரப் பெற்றிருப்பவனாகிய வாலியின் மார்பில், முதிர்ந்த, மிக்க சுவையுடைய, வாழைப்பழத்தில் ஊன்றிப் பதிந்து சேரும் ஊசியைப் போன்று மிக எளிதாகச் சென்று நுழைந்தது. என்றால் அந்த அம்பினுடைய வலிமையையும், விரைவையும் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?" என்கிறான் கவிஞன்.

"வாழைப் பழத்தில் ஊசி நுழைவது போல்" என்பது பழமொழி. அவ்வாறு எளிதாகவும் எந்த முயற்சியில்லாமலும் விரைவாகவும் இராமபாணம் வாலியின் மார்பில் ஊடுருவிச் சென்றது என்று கூறும் நயம் நோக்குக. இதனைத்தான் "காரும் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச் சேரும் ஊசி" என்றார். முன்பு தாடகை வதத்தில் இராமபாணம் சென்றதை, "கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று" என்று கூறியதை இங்கு நினைவு கூர்க. ஒரே இராமபாணம் ஒருத்தியின் கல் நெஞ்சிலும், ஒருவனின் பழம் போன்ற கனிந்த நெஞ்சிலும் நுழைந்தன என்று கூறிய நயம் நினைக. வாலி, ஐம்பூதங்களில், ஆகாயம் ஒழிந்த, நான்கு பூதங்களின் ஆற்றலும் ஒருசேரப் பெற்றவன் என்பது முன்பும் கூறப்பட்டது. "நிலனும் நீருமாய், நெருப்பும் காற்றும் என்று உலைவு இல்பூதம் நான்குடைய ஆற்றலான்" என்பது பாடல் பகுதி. ஆகாயம் அருவமானதால் இங்கே கூறப்படவில்லை என்க. வானிலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றின என வேதம் கூறும்.

67. வாலி மயக்கமுற்றுத் தரையில் விழுதல்

அலங்கு தோள் வலியழிந்த தன் தம்பியை அருளான்,
வலம் கொள் பாரிடை எற்றுவான் உற்ற போர் வாலி,

கலங்கி, வல் விசைக்கால் கிளர்ந்து எறிவுறக் கடைக்கால்
விலங்கல் மேருவும் வேர் பறிந்தால் என வீழ்ந்தான். (4106)

(அலங்குதல் - விளங்குதல்; அழிதல் - குன்றுதல்; வலம் - வலிய; எற்றுவான் - மோதும் பொருட்டு; எறிவுறுதல் - வீசுதல்; கடைக்கால் - யுகமுடிவு; விலங்கல் - மலை; அருளுதல் - இரக்கம் கொள்ளுதல்)

விளங்குகின்ற தோள்களின் ஆற்றல் குறைந்து போய் அழிவுற்ற தன் தம்பியாகிய சுக்கிரீவனிடம் சிறிதும் கருணை காட்டாதவனான வாலி, வலிய இந்தப் பூமியிடத்தில் அவனை மோதித் தாக்குதற்குத் தயாராய் இருந்த, போர் புரியும் ஆற்றலுடைய வாலி, இராமன் அம்பு பட்டதனால் நிலை கலங்கி, யுகமுடிவுக் காலத்தில் கிளர்ந்து எழும் வலிய விரைந்த பெருங் காற்றினால் தாக்கப்பட்டு இந்நிலத்தைத் தாங்கும் மேருமலையும் கூட வேரோடு பெயர்ந்து வீழ்வது போலத் தரையில் விழுந்தான்.

மேருமலை வாலிக்கு உவமை. ஊழிக்காற்று இராமபாணத்துக்கு உவமை.

68. வாலியின் கை நெகிழ்தல்

சையம் வேரொடும் உரும் உறச் சாய்ந்து எனச் சாய்ந்து,
வையம் மீதிடைக் கிடந்த, போர் அடு திறல் வாலி,
வெய்யவன் தரு மதலையை, மிடல் கொடு கவரும்
கைநெகிழ்ந்தனன்; நெகிழ்ந்திலன் கடுங்கணை கவர்தல். (4107)

(உரும் - இடி; சையம் - மலை; வையம் - நிலம்; அடு - கொல்லும் தன்மை வாய்ந்த; தரு - பெற்ற; மதலை - புதல்வன் \ சுக்கிரீவன்; மிடல் - வன்மை; கவரும் - இறுகப் பற்றும்; கணை - அம்பு; வெய்யவன் - சூரியன்)

பேரிடி இடித்தலால் வேரோடும் பெயர்ந்து சாய்ந்த மலைபோலத் தரையின் மீது வீழ்ந்து கிடந்த, போர்த் தொழிலில் வல்லமையும், பகைவரை ஒழிக்கும் ஆற்றலும் படைத்த வாலி, இராமனின் இராமபாணம் தன் மார்பைத் துளைத்தவுடன், வெம்மையான கதிர்களையுடைய சூரியன் புதல்வனான சுக்கிரீவனைப் பற்றியிருந்த வலிமையான தன் கைப்பிடியை நெகிழவிட்டான்; அக் கை தானாகவே நெகிழ்ந்தது. என்றாலும், அந்நிலையிலும் கொடிய அம்பினைக் கைப் பற்றுதலை விடாதவனானான். அம்பு உள்ளே புகாதவாறு தடுத்து நிறுத்திக் கொண்டான்.

இராமபாணம் தன் மார்பைத் தாக்கியதும், வாலி அதனைத் தன் கையால் பற்றியதும், தரையில் நிலை குலைந்து விழுந்ததும், மற்றொரு கை சுக்கிரீவனை நெகிழவிட்டதும் ஒரே சமயத்தில் ஒருசேர நிகழ்ந்தன என்க. வாலி சுக்கிரீவனைக் கை நழுவ விடவில்லை என்றால் சுக்கிரீவன் உயிர் இழந்திருப்பான் என்பது குறிப்பு. வாலி கையை நெகிழவிட்டானா, கை தானாக நெகிழ்ந்ததா, சுக்கிரீவன் தன்னைத் தானே விடுவித்துக் கொண்டானா என்பதை உய்த்துணர வைத்திருக்கும் கவிஞனின் திறம் நோக்குக.

69. வாலி இராமபாணத்தைப் பற்றிக்கொள்ளுதல்

வெற்றி வீரனது அடுகணை, அவன் மிடல் உரத்தூடு
உற்றது; அப்புறத்து உறாத முன், உறுவலிக் கரத்தால்
பற்றி, வாலினும், காலினும் பிணித்து, அகப் படுத்தான்;
கொற்ற, வெங்கொடு மறலியும் சிரதலம் குலைந்தான். (4108)

(அடும் - கொல்லும் தன்மையுள்ள; மிடல் - வலிமை; உரம் - மார்பு; உற்றது - ஊன்றித் தைத்தது; உறு - மிக்க; அகப்படுத்தல் - தடுத்தல்; மறலி - இயமன் \ கூற்றுவன்; சிரதலம் - தலை; குலைதல் - நடுங்குதல்)

வெற்றிவீரனாகிய இராமனது கொல்லும் தன்மையுடைய இராமபாணம், வாலியின் வன்மையான மார்பில் ஊடுருவிப் பாய்ந்து, அப்புறத்துச் சென்று சேரா முன்னம், தனது மிக்க வலிமையான கரங்களால் அதனைப் பற்றிக் கொண்டு, தன் வாலினாலும் காலினாலும் அதனைப் பறித்துக் கைக்கொண்டான். வாலியின் ஆற்றலைக் கண்டு, வெற்றியும், கொடுமையும் கொண்ட இயமனும் தனது தலை நடுங்கப் பெற்றான்.

70. வாலி, அம்பு எய்தது யார் என ஐயுறுதல்

எழுந்து, "வான் முகடு இடித்து உகப் படுப்பல்" என்று இவரும்;
"உழுந்து பேருமுன் திசை திரிந்து இறுப்பல்" என்று உறுக்கும்;
விழுந்து, "பாரினை வேரொடும் பறிப்பல்" என்று ஓரும்;
அழுந்தும் இச்சரம் எய்தவன் ஆர்கொல்?" என்று அயிர்க்கும். (4109)

(படுப்பல் - அழிப்பேன்; இவர்தல் - ஏறுதல்; பேருதல் - உருளுதல்; இறுப்பல் - அழித்து ஒழிப்பேன்; உறுத்தல் - வெகுள்தல்; ஓர்தல் - எண்ணுதல்; சரம் - அம்பு; அயிர்த்தல் - சந்தேகப்படுதல்; (முகடு - உச்சி)

அவ்வாறு தரையில் விழுந்து கிடந்த வாலி, மெதுவாக எழுந்து,"வானத்தின் உச்சியை இடித்துச் சிதறும்படி அழிப்பேன்" என்று கூறி வானத்தின் மீது ஏற முற்படுவான்; "உழுந்து உருண்டுபோகும் கால எல்லைக்குள், எல்லாத் திசைகளிலும் சுற்றித் திரிந்து அவற்றை அழிப்பேன்" என்று வெகுள்வான்; மீண்டும் தள்ளாடிக் கீழே விழுந்து, "இந்த நிலத்தினை வேரோடும் பறித்து அழிப்பேன்" என்று கருதுவான்; "இத்தகைய, ஆழ்ந்த, ஊன்றி ஊடுருவிப்பாயக் கூடிய அம்பினை என் மேல் செலுத்தியவன் யாராக இருக்கும்?" என்று சந்தேகப்படலானான்.

தன்மீது எய்யப்பட்ட அம்பு வானத்திலிருந்து வந்ததா? மற்ற மண்ணுலகத்துத் திசைகளிலிருந்து வந்ததா? அல்லது பூமியின் கீழே பாதாளத்தில் இருந்து வந்ததா? என்று அறியாமல் கலங்கினான் வாலி. காரணம் அவன் மீது அம்பு எய்து தாக்கும் ஆற்றல் இம்மூவுலகத்தில் உள்ளவரில் எவர்க்கும் இல்லை. எனவேதான் அவ்வாறு இம்மூவுலகத்தவரில் எவரேனும் என்மீது அம்பு செலுத்தியிருந்தால் அவர்களை அழிப்பேன் என்று

வெகுண்டெழுந்தான் என்பதாம். என்றாலும் தன் மீது அம்பு எய்யப்பட்டிருக்கிறது. இது யாரால் முடியும்? ஒருவேளை தாரை கூறியது போல், சுக்கிரீவனுக்குத் துணையாக வந்த இராமபிரானே எய்திருப்பானோ? என்ற சந்தேகங்கள் வாலிக்கு வந்தன. எனவேதான் இவ்வாறு ஐயுற்றான் என்க. உழுந்து என்பது இப்பொழுது உளுந்து என்று வழங்கப்படும் ஒரு தானியம். இது இடம் விட்டு அகன்று உருண்டு ஓடுவதற்கு நொடிப்பொழுதையும், இமைப்பொழுதையும் கூறுவதைப் போல், விரைவுக்கு, மிகச் சிறிய கால அளவுக்கு எல்லையாகவும் கூறுவது கவி மரபு.

71. வாலி இராமபாணத்தைப் பற்றி எடுக்க முயலுதல்

எற்றும், கையினை நிலத்தொடும்; எரிப்பொறி பறப்பச்
சுற்றும் நோக்குறும்; சுடு சரத்தினைத் துணைக் கரத்தால்
பற்றி, வாலினும் காலினும் வலி உறப் பறிப்பான்
உற்று, உறாமையின் உலைவுறும்; மலை என உருளும். (4110)

(எற்றுதல் - அறைந்து தாக்குதல்; எரி - தீ \ நெருப்பு; துணை - இரண்டு; உலைவுறுதல் - வருந்துதல்; உருள்தல் - புரளுதல்; பறிப்பான் - பறிக்கும் பொருட்டு)

வாலி, இராமபாணம் தன் மார்பில் தைத்ததால் வலிதாங்கமாட்டாது, தன் கைகளைத் தரையில் மோதுவான்; தீப்பொறி பறக்கும்படி கண்களை விழித்து, நாற்புறமும் உற்று நோக்குவான். கொடிய அம்பினைத் தனது இரண்டு கைகளாலும் பற்றி, தன் வாலாலும், காலாலும் வலிமையாகப் பறிக்க முயலுவான்; அது இயலாததால், மிக்க வருந்துவான். வலி தாளாமல், தரையில் ஒரு மலை புரளுவது போலப் பூமியில் புரளுவான்.

அம்பு பட்டதும் வாலிபட்ட துயரம் கூறப்பட்டது. சுடுசரம் என்பது நெருப்புப்போல் உட்புகுந்து எரிக்கும் அம்பு என்றும் பொருள்தரும்.

72. தன்மீது அம்பு எய்தவர் தேவர்களோ என்று கருதுதல்

"தேவரோ?" என அயிர்க்கும்; "அத்தேவர் இச்செயலுக்கு
ஆவரோ? அவர்க்கு ஆற்றல் உண்டோ?" எனும்; "அயலோர்
யாவரோ?" எனநகை செயும்; "ஒருவனே இறைவர்
மூவரொடும் ஒப்பான் செயலாம்" என மொழியும். (4111)

(அயிர்த்தல் - சந்தேகம் கொள்ளுதல்)

தன் மீது அம்பு எய்யும் ஆற்றல் மானிடர்களுக்கோ, அரக்கர்களுக்கோ இல்லை என்பதை நன்கு தெரிந்தவன் வாலி; எனவே இது தேவர்களின் செயலாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டான்; எனினும் தான் தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் மகன் என்பதை அவர்கள் அறிவார்கள். அத்தோடு அவர்களுக்குச் சாவாமருந்தாகிய அமிழ்தத்தையும் நான்தான் கொடுத்துள் ளேன். மேலும் தேவர்க்கும் எனக்கும் எந்தப் பகையுமில்லை. அறமல்லாத

செயலைத் தேவர்கள் செய்ய மாட்டார்கள். எனவே அவர்கள் இத்தகைய செயலைச் செய்திருப்பார்களோ? அன்றியும், அவர்களுக்கு என்மீது அம்பு செலுத்தும் ஆற்றல் உண்டோ?" என்றும் பலவாறாகச் சிந்திக்கலானான்; இவர்களைத்தவிர, வேறு யாரேனும் செய்திருப்பார்களோ என்று எண்ணியதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அத்தகைய காரியத்தைச் செய்யக்கூடியவன் கடவுளராகிய மும்மூர்த்திகளுக்கும் ஒப்பான, ஒரு ஒப்பற்றவனாகத் தான் இருக்க வேண்டும் என்று தனக்குள் முடிவு செய்து கொண்டு பின்வருமாறு கூறலானான்.

மூன்று கடவுளரும் தனித் தனியாக வந்தாலும், வாலியைப் போரிட்டு வெல்ல முடியாது என்பதும், அம்மூவரும் ஓர் உருப்பெற்று வந்தவன் ஒருவனால் - பரம்பொருளால் மட்டுமே இது இயலும் என்றும் வாலி கருதினான் என்க.

73. அம்பின் தகைமை பற்றி எண்ணுதல்

"நேமிதான் கொலோ? நீலகண்டன் நெடுஞ்சூல
ஆமிது ஆம் கொலோ? அன்று எனின், குன்று உருவு அயிலும்,
நாம இந்திரன் வச்சிரப்படையும், என் நடுவண்
போம் எனும் துணை போதுமோ? யாது?," எனப் புழுங்கும். (4112)

(நேமி - சக்கரப்படை; உருவுதல் - ஊடுருவிப்பிளத்தல்; அயில் - வேற்படை; நாமம் - அச்சம்; நடுவண் - நடுஇடம் \ மார்பு; துணை - அளவு; புழுங்குதல் - வெதும்புதல்; போம் - போகும் \ நுழைந்து செல்லும்)

"என் மார்பில் பதிந்திருக்கும் இந்தப் படைக்கலன், திருமாலின் சக்கராயுதமாக இருக்குமோ? ஆலகால விஷத்தைப் பருகி, அதனால் கறுத்த கண்டத்தை உடைய சிவபெருமானின் முத்தலைச் சூலாயுதமாய் இருக்குமோ? இவைகள் அல்ல வென்றால், கிரௌஞ்ச மலையைப்பிளந்த முருகப்பெருமானின் வேற்படையும், மலைகளின் சிறகுகளை அறுத்தெறிந்த அச்சம் தரும் இந்திரனின் வச்சிராயுதமும், எனது மார்பில் ஊடுருவிப் பாயும் அளவிற்கு வன்மையுடையதோ? எதுவாக இருக்கும்?" என்று மனம் கலங்கினான்.

முன்பாடலில் தன் மீது அம்பு எய்தவர் யாராக இருக்கும் என்று சந்தேகப்பட்டுத் திணறியவன், இந்தப் பாடலில், அத்தகைய படைக்கலன் எதுவாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்கிறான். திருமாலின் சக்கராயுதம், வட்டவடிவமானது, அது எதிரே எதிர்ப்படும் எல்லாப்பொருளையும் முற்றிலும் அழிக்கக் கூடிய தன்மை வாய்ந்தது. சிவபெருமானின் சூலாயுதமோ மிக நீண்டது; கைப்பற்ற எளிதானது; முத்தலையுடையது. இவை இரண்டும் இல்லையென்றாலும் தாரகாசுரனை அழித்த, முருகப்பெருமானது வேலும், இந்திரனுடைய வச்சிரப் படையும் மலையினும் வலிய என் மார்பைத் தாக்கி அழிக்கும் வல்லமை பெற்றவை அல்ல. அப்படியென்றால் இது எதுவாக இருக்கும் என்று மயங்கினான் என்பதாம். இங்கே "நாமம்" என்ற சொல்லுக்கு அச்சம் என்று பொருள் கொண்டிருக்கிறோம். நாமம் என்ற சொல்லுக்குப் புகழ் என்ற ஒரு பொருளும் உண்டு. வாலி தன் தந்தையான இந்திரனைப்

பெருமைப்படுத்தி, புகழ்பெற்ற இந்திரனின் வச்சிராயுதமோ? என்று கூறினான் என்று கூறலும் பொருந்தும்.

74. வாலி, இறுதியில் அப்படைக்கலன் அம்புதான் எனக் கண்டறிதல்

"வில்லினால் துரப்ப அரிது அவ்வெஞ்சரம்" என வியக்கும்;
"சொல்லினால் நெடு முனிவரோ தூண்டினார்?" என்னும்;
பல்லினால் கடிப்புறும் பலகாலும்; தன் உரத்தைக்
கல்லி, ஆர்ப்பொடும் பறிக்கும் அப்பகழியைக் கண்டான். (4113)

(உரம் - மார்பு; கல்லி - தோண்டி \ அகழ்ந்து; துரத்தல் - செலுத்துதல்; நெடுமை - பெருமை \ புகழ்; சொல் - மந்திரச்சொல் நிறைமொழி)

தன் மார்பில் பாய்ந்து ஊடுருவிய அம்பைத் தன் பற்களால் கடித்து வெளியே இழுக்கப் பல முறை முயற்சித்த வாலி, தன் மார்பைத் துளைத்து, ஆரவாரம் செய்தது ஒரு அம்புதான் என்பதை உணர்ந்து கொண்டான். "இந்தக் கொடிய அம்பை ஒரு வில்லினால் தொடுத்து எய்வது என்பது முடியாதது" என்று வியப்பான்; பெருமையும் புகழும் வாய்ந்த தவமுனிவர்கள் யாரேனும் தமது நிறைமொழியால் இதனை என் மீது ஏவியிருப்பார்களோ? என்று எண்ணலானான்.

நெடுந்தூரத்திலிருந்து குறி பார்த்து எய்யப்படும் அளவுக்குச் சிறியதாக இல்லாததால், இந்த அம்பை எளிதாக, அருகிலிருந்தே செலுத்தியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் வாலி. சொல் என்பது நிறைமொழியைக் குறித்து, மந்திரச் சொல் எனப்பொருள் படும்.

75. வாலி அம்பினைப் பறித்து எடுத்தல்

"சரம் எனும்படி தெரிந்தது; பலபடச் சலித்து என்?
உரம் எனும் பதம், உயிரொடும் உருவிய ஒன்றைக்
கரம் இரண்டினும் காலினும், வாலினும், சுழற்றிப்
பரமன் அன்னவன் பெயர் அறிகுவன்" எனப் பறிப்பான். (4114)

(சலித்தல் - சந்தேகப்பட்டு வருந்துதல் \ சஞ்சலப்படுதலுமாம்; பதம் - இடம், நிலை \ உயிர்நிலை; ஒன்று - ஒப்பற்ற படைக்கலன்; கழற்றுதல் - பெயர்த்தெடுத்தல்; பரமன் - பெரியோன் \ மேலோன் \ கடவுள்)

"தன் மீது ஊடுருவியது அம்புதான் என்பது தெரிந்து விட்டது. இனி அதைப் பற்றிச் சந்தேகப்பட்டு வருந்துவதாலோ, ஆராய்ந்து அங்கலாய்ப்பதாலோ என்ன பயன் விளைந்து விடப்போகிறது? என்னுடைய மார்பு என்னும் இடத்தை மட்டும் அன்றி, என் உயிர் நிலையையும் ஊடுருவிய ஒப்பற்ற இந்த அம்பினை, என்னுடைய இரண்டு கைகளினாலும், கால்களினாலும், வாலினாலும் பெயர்த்தெடுத்து, இவ்வளவு ஆற்றலோடு என் மீது எய்தவனான அந்தக் கடவுள் போன்ற பெரியோன் யார் எனவும், அவன் பெயர் என்ன எனவும் அறிந்து கொள்வேன்" என்று கூறி, அவ்வம்பைப் பறிக்கலானான்.

"எய்தவன் இருக்க அம்பை நோவது ஏன்?" என்பது பழமொழி. எனவே தன் மீது பாய்ந்தது அம்புதான் என்பது தெரிந்த பிறகு அதைப் பற்றி ஆராய்வதில் என்ன பயன்? அதை எய்தவன் யார் என்பதை இப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலால், தன் கரங்கள், கால்கள், வாலினால் அவ்வம்பைப் பிடுங்கி எடுக்கிறான் வாலி. பெருவீரர்கள் எய்யும் அம்பில் தம் பெயர் பொறித்திருப்பது அக்காலப் போர் முறை என அறிகிறோம். என்றாலும் முன்பு தாடகையின் மேல் ஏவிய அம்பு அவள் கல்லொக்கும் மார்பை ஊடுருவி வெளிப்போந்து ஒடியதால் அது பற்றிக் கவிஞன் கூறாது விடுத்தான் போலும். இங்கே வாலியின் மார்பில் பாய்ந்த பகழி, புறம் செலாது, பறித்தற்கு ஏற்ப இருந்ததால் இங்கே பெயரைப் பார்க்கும் வாய்ப்பு உள்ளது என்பதாம். இத்தகைய அம்பினை எய்து, என் மார்பை மட்டுமன்றி, உயிரையும் நிலைகுலையச் செய்தவன், நிச்சயம் கடவுள் போன்றவனாகத்தான் இருக்க வேண்டும் என்று துணிந்ததனால்தான் "பரமன் அன்னவன்" என்றான் என்க.

76. தேவர்களும் மற்றவர்களும் வியந்து பாராட்டுதல்

ஓங்கு அரும் பெரும் திறனுடை மனத்தன், உள்ளத்தன்,
வாங்கினான் மற்று அவ்வாளியை, ஆளிபோல் வாலி;
ஆங்கு நோக்கினர் அமரரும், அவுணரும், பிறரும்,
வீங்கினார்கள் தோள்; வீரரை யார் வியவாதார்? (4115)

(ஆளி - சிங்கஏறு \ ஆண்சிங்கம்; ஓங்கு - உயர்ந்த; உள்ளம் - ஊக்கம்; வாங்குதல் - பெயர்த்தெடுத்தல் \ நீக்குதல்; அவுணர் - அசுரர்கள்; வீங்குதல் - பூரித்தல்)

"உயர்ந்த, அரிய, பெரிய ஆற்றலுடைய மனத்தை உடையவனும் அதற்கேற்ற ஊக்கத்தை உடையவனும், ஆண் சிங்கம் போன்றவனுமாகிய வாலி, அவ்வம்பைத் தன் மார்பினின்றும் பெயர்த்தெடுத்தான்; இதனை அங்கிருந்து கண்டு கொண்டிருந்தவர்களான, தேவர்கள், அசுரர்கள், மற்றும் உள்ள எல்லாத் தேவசாதியினரும் தங்கள் தோள்கள் பூரிக்கப் பெற்றார்கள்; இத்தகைய வீரச் செயலைச் செய்த வீரர்களை வியந்து பாராட்டிக் கொண்டாடாதவர்கள் உண்டோ?" என்கிறான் கவிஞன்.

இராமபாணம் உட்புகுந்து வெளிவராத மார்பு வாலியுடைய மார்பு ஒன்றுதான் என்பது நோக்கத்தக்கது. எனவேதான் இந்தச் செயலைச் செய்த வாலியைக் கவிஞன், "ஓங்குதிறல், அரும்திறல், பெரும் திறல், மனத்தன், உள்ளத்தன், ஆளிபோல்பவன்" என்று எத்தனை அடைமொழி கொடுத்துப் பாராட்டுகிறான் பாருங்கள்; தான் பாராட்டியதோடு மட்டுமல்லாது, உலகில் யார்தான் பாராட்ட மாட்டார்கள் என்று கேட்பதையும் உணருங்கள். இங்கு உள்ளம் உள்ளத்தன் என்பது உள்ளத்தின் பண்பாகிய ஊக்கத்தை எனக் கொள்க. வீரரின் செயலைத் தேவர்களேயன்றி அவர்களினின்றும் மாறுபட்டவர்களாகிய அவுணரும் பாராட்டித் தம் தோள் வீங்கப்பெற்றமையால், "வீரரை யார் வியவாதார்?" என்றார் என்க.

77. வாலியின் மார்பிலிருந்து பெருகிய இரத்த வெள்ளம்

மூடு தெண்திரை முரிதரு கடலென முழங்கி
ஈடு பேருலகு இறந்துளதாம் எனற்கு எளிதோ?
காடும், மாநெடும் விலங்கலும் கடந்தது; அக்கடலின்
ஊடு போதலுற்று, அதனை ஒத்து உயர்ந்துளது உதிரம். (4116)

(உதிரம் - இரத்த வெள்ளம்; மூடு - மறைக்கும்; தெண் - தெளிந்த; திரை - அலைகள்; முரிதருதல் - சிதறிப்பரவுதல்; இறத்தல் - கடத்தல்; விலங்கல் - மலை; ஈடு - வன்மை)

வாலியின் மார்பிலிருந்து பெருகிய இரத்த வெள்ளமானது காடுகள், பெரிய நீண்ட மலைத்தொடர்ச்சிகள் முதலிய எல்லாவற்றையும் கடந்து, நிலத்தை மூடுகின்ற தெள்ளிய அலைகளைச் சிதறிப்பரப்புகின்ற கடல் போன்று மிக்க ஆரவாரம் செய்து கொண்டு, வன்மையும் பெருமையும் உடைய இவ்வுலகத்தையும் கடந்து சென்றது என்று கூறுவதற்கும் எளியதாகுமோ? புறத்தே இருக்கும் கடல்களின் ஊடேயும் புகுந்து சென்றதை ஒத்திருந்தது அவ்விரத்தப் பெருக்கு.

78. அதனைக் கண்டு சுக்கிரீவன் மயங்கி விழுதல்

வாசத் தாரவன் மார்பு எனும் மலை வழங்கு அருவி
ஓசைச் சோரியை நோக்கினன்; உடன் பிறப்பு என்னும்
பாசத்தால் பிணிப்புண்ட அத்தம்பியும், பசுங்கண்
நேசத்தாரைகள் சொரிதர, நெடுநிலம் சேர்ந்தான். (4117)

(வாசம் - நறுமணம்; தார் - மாலை; சோரி - இரத்தப்பெருக்கு; நேசம் - அன்பு; தாரை - கண்ணீர்த்துளி; பிணிப்புண்டல் - கட்டுப்படுதல்; பாசம் - பற்று)

நறுமணம் பொருந்திய மலர் மாலைகளை அணிந்தவனான வாலியின் மார்பு என்னும் மலையினின்றும் பெருகிய அருவியாகிய இரத்த வெள்ளத்தின் பேராரவாரத்தைக் கண்ட சுக்கிரீவன், உடன் பிறப்பு என்னும் பாசத்தால் கட்டுப் பட்டு, தன் சிவந்த கண்களும் பசுமையான கண்களாக மாறிப்போய் அதனின்றும் அன்பினால் பெருகிய கண்ணீர்த் துளிகள் கீழே சிந்த, தானும் மயக்கமுற்று நீண்ட பூமியில் விழுந்தான்.

வாலி எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும், மலர் மாலை அணிந்தவனாகவும் இருப்பான் என்பதைக் குறிக்கவே அவனை இந்த இடத்திலும் "வாசத்தாரவன்" என்கிறான் கவிஞன்; மார்பு மலை என்றதனால், அங்கே பெருகும் இரத்த வெள்ளம் அருவி எனலாயிற்று; இரத்த வெள்ளம் அருவி என்றதனால் அங்கே எழுந்த பேரொலி ஓசைச்சோரி எனப்படலாயிற்று என்க. "தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்" என்பதும், "கடுத்த பகையும் கல்லறை கடவாது" என்பதும் மூதுரைகள். எனவே, "உடன் பிறப்பு என்னும் பாசத்தால் பிணிப்புண்ட அத்தம்பி" என்றார் என்க. இதனையே "புன் கணீர்" என்பார் வள்ளுவர். பகைமையால் கோபத்தாலும், வெறுப்பாலும் சிவந்திருந்த கண்கள் இப்பொழுது, இக்காட்சியைக் கண்டதும் நேசத்தால் "பசுங்கண்ணாக" மாறிய சீர்மை

நோக்குக; அவன் சொரிவது போலிக் கண்ணீர் அல்ல; மோசத்தாரை அல்ல; நேசத்தாரை என்று, இன்றைய உலக வழக்கிற்கு ஏற்பக் கவிஞன் அன்றே கூறியிருப்பதையும் உணர்ந்து மகிழ்க. இவ்வாறே இராவணன் இராமன் அம்பால் வீழ்த்தப்பட்டுப் போர்க்களத்தில் கிடந்த போது, அதனைக் கண்ட வீடணன் அடைந்த துயர நிலையை இங்கு நினைவு கூர்க. பொதுவாகப் பாசம் என்ற சொல்லுக்கே "கயிறு" என்ற ஒரு பொருளும் உண்டு; இங்கு எல்லோரையும் உறவினால் பிணிக்கும் இயல்புடையதாகிய அன்பினைக் குறித்து நின்றது.

79. வாலி அம்பினை நோக்குதல்

பறித்த வாளியைப் பருவலித் தடக்கையால் பற்றி,
"இறுப்பென்" என்று கொண்டு எழுந்தனன் மேருவை இறுப்போன்;
"முறிப்பென் என்னிலும், முறிவது அன்றாம்" என மொழியா,
பொறித்த நாமத்தை அறிகுவான் நோக்கினன் புகழோன். (4118)

(இறுத்தல் - முறித்தல்; மொழியா - மொழிந்து \ கூறி; பொறித்த - வரையப் பெற்றுள்ள \ செதுக்கப்பெற்ற; நாமம் - பெயர்; அறிகுவான் - அறிந்து கொள்ளும் பொருட்டு)

மேருமலையையே ஒடிக்கும் ஆற்றலும், புகழும் பெற்றவனாகிய வாலி, தன் மார்பிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட அம்பினைத் தனது பருத்த, வலிமையான, பெரிய கைளில் பற்றிக்கொண்டு, எழுந்து, இதனை "முறித்துப் போடுவேன் என்றாலும், இது முறியுமளவுக்கு அவ்வளவு எளிமையாக இல்லை" என்று கூறி, அதில் செதுக்கப்பெற்றிருந்த பெயரை அறிந்து கொள்ளும் பொருட்டு, அவ்வம்பை நன்கு கூர்ந்து நோக்கினான்.

மேருவையே முறிக்க வல்லவன் என்று முதலில் கூறிப் பின் இவ்வம்பை முறிக்க முயன்றாலும், முறிக்க முடியவில்லை என்று கூறுவதனால், இராம பாணத்தின் சிறப்பு மிகுத்துரைக்கப்பட்டது என்க.

80. அம்பில் இராமநாமத்தைக் காணுதல்

மும்மைசால் உலகுக்கெல்லாம், மூலமந்திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தை, தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை, "இராமன்" என்னும்
செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான். (4119)

(சால் - நிறைந்த; மூலமந்திரம் - ஆதார சுருதி \ மறைமொழி; தமர் - சுற்றத்தார் \ அடியவர்கள்; நல்குதல் - தருதல்; பதம் - மொழி; எழுமை - ஏழு பிறப்புக்கள்; தெரிய - தெளிவாக; செம்மை - பெருமை)

மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகங்களில் வாழ்பவர்களுக் கெல்லாம் ஆதார சுருதியாகவும், தாரக மந்திரமாகவும் விளங்குவதும், தன்னைத் தொழும் சுற்றத்தாராகிய தன் அடியவர்க்குத் தன்னையே முற்ற முழுவதுமாகத் தந்து விடும் ஒப்பற்ற பெரிய மொழியாக விளங்குவதும், இப்பிறப்பிலேயே, இனிவரும்

ஏழுபிறப்புக்களாகிய நோய்க்கு மருந்தாகத் திகழ்வதுமாகிய "இராமன்" என்னும் அழகிய பெருமை பொருந்திய பெயர், அவ்வம்பில் பொறிக்கப்பட்டிருப்பதை வாலி, தன் கண்களில் மிகத் தெளிவாகக் கண்டான்.

"மூலமந்திரம்" என்பது, இறைவனுக்குரிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாமங்களில் முதன்மையானதும் முக்கியமானதும், தாரக மந்திரமானதுமான இராம நாமமே என்பதைக் குறிக்கும். "தம்மையே தமர்க்கு நல்கும்" என்பது, இறைவனின் எளிவந்த தன்மையைக் குறிக்கும். "சௌலப்பியம்" என்பர் வடநூலார். பிறவியைப் பிணி என்று கூறுவது வழக்கம். அப்பிறவியினை ஒழிக்கும் அருமருந்தாக விளங்குவது இந்த "இராமன்" என்னும் மூலமந்திரம் என்பதாம். "அம்மை நோய் இம்மையே ஆசுஅறுத்தானை" என்பது தேவாரம். இராம நாமம் என்பது மூலமந்திரம், தனிப்பெரும் பதம்; பிறவிப்பிணி தீர்க்கும் மருந்து என அதன் மூன்று தன்மைகளைப் புலப்படுத்தியதை உணர்க. "ஜன்மமும் மரணமும் இன்றித் தீருமே, இம்மையே "ராம" என்ற இரண்டெழுத்தினால்" என்பது ராமாயணப் பாயிரம். "நோவினையும், நோயினையும், நோய் செய் வினை யினையும், வீ வினையினையும் தீர்த்தருளும் வேங்கடமே" என்பது திருவேங்கட மாலை ஏழ்பிறப்பு - தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, மிருகம், மனிதர், தேவர் என்பன.

81. இராமன் செயல் குறித்து வாலி நாணுதலும், வருந்துதலும்

"இல்லறம் துறந்த நம்பி, எம்மனோர்க்காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன், தோன்றலால், வேத நல்நூல்
சொல்லறம் துறந்திலாத சூரியன் மரபும், தொல்லை
நல்லறம் துறந்தது" என்னா, நகைவர நாண் உட்கொண்டான். (4120)

(நம்பி - ஆடவரில் சிறந்தவன் \ புருஷோத்தமன்; தொல்லை - தொன்று தொட்டு; துறத்தல் - நீங்குதல்)

தந்தையின் வாய்மையைக் காக்கவும், தாய் சொல்லைக் காக்கவும் தனக்குரிய இல்லறக் கடமைகளைத் துறந்து, வனம் எய்திய ஆடவரில் சிறந்தோனாகிய இராமன், எம்மைப் போன்ற எளிய குரக்கினத்திற்காக இப்பொழுது தங்களுக்குரிய விற்போரின் தருமத்தையும் துறந்துவிட்ட வீரனாகிய இராமன், அவதரித்ததால் வேதசாத்திரங்களாகிய நல்ல நூல்களில் சொல்லப் பட்டிருக்கும் தருமத்தை ஒரு போதும் கைவிடாத சூரிய குலம், இப்பொழுது அந்தப் பண்டைய, தொன்று தொட்டு வருகின்ற, நல்ல அறநெறியினின்றும் வழுவி விட்டது என்று தனக்குள் எண்ணினான் வாலி; அதனால் அவனுக்கு எள்ளல் சிரிப்பு வரலாயிற்று என்றாலும் அதற்கு வெட்கப்பட்டு வருத்தமுற்றான்.

"இல்லறம் துறத்தல்" என்பது மணமான பின் சீதையுடன் அயோத்தியி லிருந்து இல்லறத்தில் ஈடுபட்டு, அதற்குரிய தருமங்களாகிய விருந்தோம்புதல் முதலிய அரிய செயல்களைத் துறத்தலாம். அத்துடன் இல்லறத்துணைவி யாகிய சீதையைப் பிரிந்ததையும் குறிக்கும். அவற்றைக் கைவிட்டுத் தந்தையின் வாய்மையைக் காப்பாற்றவும், தாயின் சொல்லுக்கு ஏற்பவும் நாடுவிட்டுக் காடு

வந்து தவ வாழ்க்கை நடத்தியதால் இராமன் "நம்பி" எனப் புகழப்பட்டான் என்க. "வில்லறம் துறத்தல்" என்பது போர்க்குரிய முறையாகிய, தமக்கு வலிமையில் ஒத்தவனோடு நேருக்குநேர் நின்று போர்புரியாது, தனக்குச் சம்பந்தமேயில்லாத அண்ணன் தம்பி இருவர் போர் செய்து கொண்டிருக்கும் போது அம்பு செலுத்தியதும், நேருக்குநேர் அல்லாது, மறைந்திருந்து அம்பு செலுத்திப் போராண்மைக்கு மாசு விளைவித்ததுமாகும். எதற்காகவும் வேத சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கும் அறநெறியில் வழுவாத சூரிய குலம், இந்த இராமன் தோன்றியதாலும், இப்பொழுது மறைந்திருந்து அம்பு எய்ததாலும் அறநெறியினின்று பிறழ்ந்து விட்டது என்கிறான் வாலி. இத்தகைய சூரிய குலத்திற்கு ஒரு பழி சேர்த்துவிட்டானே இராமன் என்பதாலும், தான் முன்பு இராமன் பற்றித் தாரையிடம் கூறிய புகழுரைகள் அனைத்தும் பொய்யுரையாகி விட்டனவே என்பதாலும் அவன் வெட்கப்பட்டான். எனவே நகைத்தான் என்றும் கொள்க.

82. வாலி துயர நிலை

வெள்கிடும்; மகுடம் சாய்க்கும்; வெடிபடச் சிரிக்கும்; மீட்டும்
உள்கிடும்;"இதுவும் தான்ஓர் ஓங்கு அறமோ?" என்று உன்னும்;
முள்கிடும் குழியில் புக்க மூரிவெம் களிநல்யானை
தோள் கொடும் கிடந்தது என்ன, துயர் உழந்து அழிந்துசோர்வான். (4121)

(வெள்குதல் - வெட்கமுறுதல்; மகுடம் - இங்கே தலைமுடி; உள்குதல் - நினைத்தல்; முள்குதல் - அழுந்துதல் \ மூழ்குதல்; புக்க - அகப்பட்ட; மூரி - வலிமை; களி - மதச் செருக்கு; தொள்கு - புலி, யானை முதலிய விலங்குகளைப் பிடித்தற்கு விரித்த வலை \ சேறு \ சேற்றுப் பள்ளம்; உழந்து - தத்தளித்து)

இவ்வாறு நாணங்கொண்ட வாலி, இந்நிலையை எண்ணித் தனக்குள் வெட்கமுறுவான்; தன் தலை முடியைச் சாய்ப்பான்; வெடி வெடித்தது போலப் பலமாகச் சிரிப்பான்; மீண்டும், இராமனின் அறந்தவறிய செயலை எண்ணிப் பார்ப்பான்; "இதுவும் ஒருவகை தருமம் போலும்" என்று கருதுவான்; ஒரு பெரும் பள்ளச் சேற்றிலோ, வலையிலோ அகப்பட்டுக் கொண்ட வலிமையும், கொடுமையும், மதச்செருக்கும் கொண்ட ஒரு சிறந்த யானை போல அந்த இரத்தச் சேற்றில் கிடந்து, துன்புற்று, மனமழிந்து, சோர்வுற்றுத் தளர்வான் வாலி.

முன்பாடலில் "நகை" என்று புன்முறுவலை எள்ளல் சிரிப்பு எனக்கூறிய கவிஞன், இங்கே "வெடிபடச் சிரிக்கும்" என்று கூறிய நயம் நோக்குக. இது பேரொலி உண்டாகும்படி பெருகச் சிரித்தலைக் குறிக்கும்.

83. வாலியின் முன் இராமன் தோன்றுதல்

"இறை திறம்பினனால்; என்னே இழிந்துளோர் இயற்கை? என்னில்
முறை திறம்பினனால்" என்று, மொழிகின்ற முகத்தான் முன்னர்,
மறைதிறம்பாத வாய்மை மன்னர்க்கு, முன்னம் சொன்ன
துறைதிறம்பாமல் காக்கத் தோன்றினான், வந்து தோன்ற. (4122)

(இறை - தலைவன்; திறம்புதல் - மாறுபடுதல் \ பிறழ்தல்; இயற்கை - இயல்பு; முறை - நீதிநெறி; மறை - வேதநெறி; துறை - அறநெறி; தோன்றுதல் - அவதரித்தல் \ எதிர்நிற்றலுமாம்) (குளகப்பாடல்)

எல்லோர்க்கும் தலைவனாகிய இராமபிரானே நெறி பிறழ்ந்தனன் என்றால், எங்களைப் போன்ற இழிந்த வாழ்க்கையுடைய குரங்கினத்தாரின் இயல்பு என்ன ஆகும்? என் பொருட்டு இராமன் நீதிநெறியினின்றும் தவறினான் என்று கூறுகின்ற முகத்தையுடைய வாலியின் முன்னர், வேதநெறிகளில் கூறப்பட்டதிலிருந்து கிஞ்சித்தும் தவறாத வாய்மைப்பண்பு உடைய மன்னவர்களுக்கு, முன்பு சொல்லப்பட்ட அறநெறியினின்றும் திறம்பாது, அறந்தலை நிறுத்துவதற்காகவே இவ்வுலகில் அவதாரம் செய்தவனாகிய இராமபிரான், வாலியின் எதிரில் வந்து தோன்றவும் - (பாடல் தொடர்கிறது)

"முறை திறம்புதல், மறை திறம்புதல், துறை திறம்புதல்" என்ற மூன்றும் நீதிநெறி, வேதநெறி, அறநெறி என்பவற்றைக் குறிக்கும் என்க. அரசியல் நெறிமுறைகளைப் பாதுகாப்பதற்காகவும், உலகில் அறத்தை நிலை நிறுத்தவுமே இராமபிரான் அவதாரம் செய்திருக்கிறான் - அதனை வாலிக்குப் புலப்படுத்தவே இப்பொழுது இராமன் வாலியின் எதிரில் வெளிப்பட்டு தோன்றினான் என்பது இப்பாடலின் திரண்ட கருத்து. தான் வாலியைத் தண்டித்தது அரச தருமத்திற்கு உட்பட்டதே என்பதை வாலிக்குப் புலப்படுத்தவே இராமன் வாலி முன் தோன்றினான் என்க.

84. வாலி இராமனை இகழ்ந்து பேசுதல் (16 பாடல்கள்)

கண்ணுற்றான் வாலி, நீலக்கார்முகில், கமலம் பூத்து,
மண்ணுற்று, வரிவில் ஏந்தி, வருவதேபோலும் மாலை;
புண்ணுற்றது அனைய சோரிப் பொறியொடும் பொடிப்ப, நோக்கி,
"எண் உற்றாய் என்செய்தாய்?" என்று, ஏசுவான் இயம்பலுற்றான். (4123)

(வரி - கட்டமைந்த; மாலை - திருமாலை \ இராமனை; சோரி - குருதி \ இரத்தம்; பொடித்தல் - வெளிப்பட்டுச் சிதறுதல்; எண் - நினைத்தல்; ஏசுதல் - இகழ்தல்)

நீலநிறம் கொண்ட கரியமேகம் ஒன்று தன்னிடத்தில் பலவகைச் செந்தாமரை மலர்கள் பூக்கப் பெற்று, கைகளில் கட்டமைந்த வில்லையும் ஏந்திக் கொண்டு, இந்நிலவுலகில் வந்து நிற்பதைப் போன்று, தன் எதிரில் வந்து நிற்கும் திருமாலின் அவதாரமான இராமபிரானை வாலி தன் கண்களால் நன்கு உற்றுப் பார்த்தான். புண்ணினின்றும் வெளிப்படும் இரத்தம் போன்று, தீப்பொறியும் அரும்பித் திகழ, அவ்விராமனைத் தன் தலையை நிமிர்த்திப் பார்த்தான் வாலி, "எல்லோர் எண்ணங்களிலும் திகழ்பவனே! என்ன நினைத்தாய்? என்ன செய்கிறாய்?" என்று இகழ்ச்சியாகக் கேட்டுப் பின்வருவனவற்றைச் சொல்லலானான்.

"நீலக்கார்முகில், கமலம் பூத்து, மண்ணுற்று, வரிவில் ஏந்தி வருவதே போலும் மால்" என்று இங்கு இராமபிரானைக் குறித்தது, முன்பு பால

காண்டத்தில் "கருமுகில் தாமரைக் காடு பூத்து" என்று திருமாலின் தோற்றப் பொலிவைக் கூறியதற்கு ஒப்பாகும் என்க. நீலக்கார்முகில் இராமபிரானது மேனி நிறத்திற்கும், கமலம் அவனது கை, கால், முகம், கண், உந்தி முதலிய உறுப்புக்களுக்கும் உவமைகள்.

85. "வாய்மையும், மரபும் காத்து, மன்உயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே! நீ பரதன் முன் தோன்றினாயே?
தீமைதான் பிறரைக் காத்துத் தான் செய்தால் தீங்கன்று ஆமோ?
தாய்மையும் அன்றி நட்பும், தருமமும் தழுவி நின்றாய்!" (4124)

(வாய்மை - பொய்யாமை; காத்து - போற்றி; தழுவி - பற்றி; மரபு - குலம் \ குலமுறை; மன் - நிலைபெற்ற)

"பொய்யாமை என்னும் சத்தியத்தையும், குல மரபு என்னும் குலப்பெருமையையும் நன்கு போற்றுவதற்காகத் தனது நிலைபெற்ற அரிய உயிரைக் கூட இழந்தவனாகிய வள்ளல் குணம் கொண்டவனும், தூயவனு மாகிய தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வனே! இராமா! நீ உன் தம்பி பரதனுக்கு முன்னதாக அவன் தமையனாகத் தோன்றியிருக்கிறாயே? தாய்மைப் பண்பையும், அதோடு அன்றி, நட்பினையும், அறத்தினையும் தழுவி நிற்பவனே! தீமை என்பது, தான் செய்யாமல் மற்றவரை அதனின்றும் விலக்கிவிட்டு, அதே தீமையை நீ மட்டும் செய்தால், அதே தீமை, தீங்கு இல்லாது, நன்மை செய்வதாக ஆகிவிடுமா? கூறுவாயாக!" என்றான் வாலி.

தசரதச் சக்கரவர்த்தி, தான் தன் மனைவி கைகேயிக்குக் கொடுத்த இரண்டு வரங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்தாலும், தன் மூத்த மகனுக்கே அரசுப்பதவி உரிமையுடையது என்ற தன் மயில்குல மரபின் உரிமை நெறியைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்தாலும், தனது நிலைபெற்ற உயிரை விட்டு விட்டான். அவன் உயிர் துறந்ததால் வாய்மையும் மரபும் காப்பாற்றப்பட்டது. அதுபோலவே உன்னுடைய தம்பியான பரதனும், தன் தாய் பெற்ற வரத்தாலும், தந்தையால் தாய்க்குக் கொடுக்கப்பட்ட உறுதி மொழியாலும், தனக்குத் தானாகவே வந்து சேர்ந்த அரசப்பதவியை உதறி, தீவினை எனக்கருதித் தள்ளி விட்டுச் சென்றான். அவனும் வாய்மையையும், மரபையும் காத்தான். ஆனால் தசரதனுக்கு மகனாகவும், பரதனுக்குத் தமைய னாகவும் வந்து தோன்றியிருக்கிறாயே! நீ வாய்மையையும் காக்க வில்லை; மரபையும் காக்கவில்லை. ஒருவர் தீமை செய்கின்றார் என்றால், அவர்தீமை செய்யாது காத்தல் ஒரு அரசனுடைய கடமை; அல்லது அவதாரம் செய்து வந்திருக்கிற இறைவனின் கடமை. ஆனால் அவனைத் தீமை செய்யாதே என்று கூறிவிட்டு, நீயே அந்தத் தீமையைச் செய்யப் புகுந்தால், அப்பொழுது மட்டும் அந்தத் தீமை, நன்மை பயப்பதாக மாறிவிடுமோ? தீமை யார் செய்தாலும் தீமை தானே? ஒருபோதும் தீமை நன்மையாகி விடாதே என்று இகழ்கிறான் வாலி.

வாய்மை என்ற சொல் இங்கே பொய்யாமையையும், சொன்ன சொல் தவறாமையையும் குறிக்கிறது. எந்த வகையிலும் தன் வாய்மைக்கும், குலத்துக்கும் இழுக்கு நேராதபடி, தன் உயிரைத் துறந்த தசரதனை, "வள்ளல்"

என்றும், "தூயவன்" என்றும் வாலி போற்றுவதை உணர்க. "தீமைதான் பிறரைக் காத்துத் தான் செய்தால் தீங்கன்றாமோ?" என்பது "கைக்குமாம் தேவரே தின்னினும் வேம்பு" என்னும் நாலடியார் பாடலை (112) நினைவூட்டுவதை அறிக. இராமனிடம் தாய்மைத்தன்மை, நட்புக்குணம், அறநெறி இம்மூன்றும் நிறைந்துள்ளன என்பதை வாலி அறிந்தவன்தான். இருப்பினும் இம்முறை அவன் செய்தது தவறு என்று, தான் உணர்ந்ததால், இம்மூன்று குணங்களையும் சொல்லி அவனை ஏசுகிறான் என்க. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டவேண்டிய ஒருவன், தான் ஒருவனுடன் நட்புக் கொண்டான் என்ற காரணத்தால், அவனுக்கு நன்மை செய்வதாகக் கருதி, அறம்தவறி, மற்றவர்க்குத் துன்பம் விளைவிக்கலாமா? என்பது வாலியின் கேள்வி.

86. "குலம்இது; கல்வி ஈது; கொற்றம் ஈது; உற்று நின்ற
நலம் இது; புவனம் மூன்றின் நாயகம் உன்னதன்றோ?
வலம்இது; இவ்வுலகம் தாங்கும் வண்மை ஈது; என்றால், திண்மை
அலமரச் செய்யலாமோ அறிந்திருந்து அயர்ந்துளார் போல்?" (4125)

(குலம் - குடிப்பிறப்பு; கொற்றம் - வெற்றித்திறம்; நலம் - நற்பண்புகள்; புவனம் - உலகம்; நாயகம் - தலைமைத் தன்மை; வலம் - வலிமை \ ஆற்றல்; அயர்ந் துள்ளார் - அறியாதார்; திண்மை - மனஉறுதி \ நம்பிக்கை; அலமருதல் - நிலை குலைதல்; அயர்த்தல் மறத்தலுமாம்)

"நீ நற்குலத்தில் பிறந்தவன் - உன்னுடைய குடிப்பிறப்பு உயர்வானது. நீ கற்ற கல்வியோ அதனினும் மேம்பட்டது; நீ வென்று குவித்த வெற்றிகளோ ஏராளம்; உன்னை அடைந்து நிலைத்து நின்ற நற்குணங்களோ அளவில்லாதன; மேல், நடு, கீழ் என இம்மூவுலகுக்கும் தலைமையேற்கும் தலைமைப் பண்பு படைத்தவன் நீ. மூவுலக அரசாட்சியும் உன்னதே; உன்னுடைய பேராற்றல் உலகம் அறிந்தது. இவ்வுலகத்தைத் தாய் போல் தாங்கிப் பாதுகாத்து வரும் உன்னுடைய வன்மை போற்றுதற்குரியது. இத்தகைய சிறப்புக்களெல்லாம் பெற்றிருந்தாலும், அதை நீ நன்கு உணர்ந்திருந்தாலும் அதை மறந்துவிட்டவர் போல என்மேல் மறைந்திருந்து அம்பு எய்த, அறத்திற்குப்புறம்பான இச்செயலானது, நாங்கள் உன்னிடம் வைத்திருக்கும் நம்பிக்கையை, மனஉறுதியை நிலைகுலையச் செய்வதுபோல் ஆகிவிட்டதே?" என்று இரங்கிக் கூறுகிறான் வாலி.

குலம் என்பது, சூரிய குலம், இக்ஷ்வாகு குலம், இரகு குலம் என்னும் குலப்பெருமையைக் குறிக்கும். கல்வி என்பது இராமன், வசிஷ்டர், விசுவாமித்திரர் முதலிய சான்றோர்களிடம் கல்வி பயின்றவன் என்ற மேன்மையைக் குறிக்கும். கொற்றம் என்பது அவன் தனியொருவனாகவே கரதூடண ஆதியர்களை வென்றதைக் குறிக்கும்; நலம் என்பது அவனிடம் அமைந்திருக்கும் கல்யாண குணங்களைக் குறிக்கும். மறைந்து நின்று வாலிமேல் அம்பெய்த இராமனின் இந்த அறத்திற்குப் புறம்பான தீச்செயல், அவன் பிறந்த குலத்திற்கும், கற்றறிந்த கல்விக்கும், அவன் பெற்ற வெற்றிகளுக்கும், அவனுடைய நற்பண்புகளுக்கும் அவனுடைய தலைமைத் தன்மைக்கும், பேராற்றலுக்கும், உலகத்தைக்

காக்கும் வன்மைக்கும், மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கும் பொருந்தாதது என்று வன்மையாகக் கண்டிக்கிறான் வாலி என்க. எல்லாம் அறிந்தவனாகிய நீ இவ்வாறு ஒன்றும் அறியாதவர் போலவும், அறிந்திருந்தும் மதிமயங்கி மறந்தவர் போலவும், என்மீது மறைந்திருந்து அம்பு எய்தது அறமாகுமா? என்று கேட்கிறான் வாலி. 'இது' என்று இங்கு கையாண்டிருக்கும் சொல் உலகிலேயே சிறந்தது இதுதான் என்று எடுத்துக்காட்டாகக் கூறுகின்ற பெருமையுடையன என்று பொருள் விரிவு கொள்ளும்.

87. "கோஇயல் தருமம் உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்,
"ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்! உடைமை அன்றோ?
ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை, திகைத்தனை போலும் செய்கை?" (4126)

(கோ - அரசு; கோஇயல் - அரசியல் \ அரச நீதி; ஆவி - உயிர்; தேவி - மனைவி; செய்கை - அறச் செயல்கள்; ஓவியம் - சித்திரம் \ சிற்பமுமாம்; உடைமை - உரிமைப் பொருள்; வருதல் - தோன்றுதல்; திகைத்தல் - ஏமாற்றமடைதல்)

"ஓவியத்திலும், சித்திர சிற்பங்களிலும் கூட வடித்தெடுக்க முடியாத ஒப்பற்ற உருவ அமைப்புக் கொண்டவனே! அரசியல் நீதியும் அறமும். உங்கள் குலத்தில் உதித்து வந்தவர்களுக்கெல்லாம் உரிமையுடையதல்லவா? அவ்வாறிருக்க, நீ அதனை மறந்து என்னை இவ்வாறு மறைந்திருந்து தாக்கியதற்கு என்ன காரணம்? நான் கூறுகிறேன் கேள். உன்னுடைய இனிய உயிர் போன்றவளாகிய சீதையை, சனகன் கண்டெடுத்த சீதையை, அன்னம் போன்ற அழகிய நடையை உடைய சீதையை, பாற்கடல் கடையும் போது அமிழ்த்ததுடன் கூடத் தோன்றிய திருமகளாகிய சீதையை, உன் மனைவி சீதையைப் பிரிந்து விட்ட பின்பு, என்ன காரியம் செய்கிறாய் என்பது தெரியாமலேயே நீ செய்து கொண்டிருக்கிறாய். நீ மனத்தடுமாற்றம் கொண்டிருக்கிறாய் போலும்!" என்றான் வாலி.

"ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்" என்பது இராமனின் திருமேனி பேரழகு வாய்ந்தது என்பதைக் குறிப்பதாம். "எழுத அரிய பெருமான் என்று எண்ணாது, எழுதியிருந்தேனே" என்று திருவரங்கக் கலம்பத்தில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடுவது மிகவும் சுவைக்கத்தக்கது. இராமனின் குல முன்னோன் ஆன மனு என்பவன் அரசியல் அறநெறிகளை "மனுநீதி" என்று வரையறுத்து மனுதர்ம சாத்திரங்கள் என்னும் நீதி எழுதியுள்ளவன். எனவே தான் "கோஇயல் தருமம் உங்கள் குலத்துதித்தோர்கட்கெல்லாம் உடைமை அன்றோ?" என்றான் என்க. சீதை இராமனுக்கு உயிர்போன்றவள் என்பதால் "ஆவியை" என்றான். அசோகவனத்தில் அனுமன் சீதையிடம், "ஈண்டு நீ இருந்தாய்; ஆண்டு அங்கு எவ்வுயிர் விடும் இராமன்" என்பதினின்றும், இராமனது நிலை பற்றி மேலும் கூறும்போது, "இன்னுயிர் இன்றி ஏகும் இயந்திரப் படிவம் ஒப்பான்" என்று கூறுவதனின்றும் அறியலாகும்.

இங்கே ஒன்றை நோக்கவேண்டும். வாலியின் உயிரை வாங்கியவன் இராமன். எனினும் வாலி, தான் முன்பு இராமபிரானிடம் எத்தகைய மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தானோ அதனின்றும் சிறிதும் பிறழாது, அவனைக் கண்டிக்கும் பாங்கு தெளிக. வள்ளுவனின் "பகையுளும் பண்புள பாடறிவார் மாட்டு" என்ற சொற்களுக்குச் சரியான எடுத்துக் காட்டு வாலியின் இந்தச் சொற்கள். இராமன் மீது கொண்டிருந்த பேரன்பின் காரணமாக, அவன் செய்த தகாத செயலுக்குக் கூட ஒரு காரணம் கற்பிக்க முயலுகிறான் என்றால், வாலியின் சீரிய பண்பினை நன்கு உணர்தல் வேண்டும்.

88. "அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவரேல், அதற்கு வேறோர்
குரக்கினத்து அரசைக் கொல்ல, மனுநெறி கூறிற்று உண்டோ?
இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால் எப்பிழை கண்டாய்? அப்பா!
பரக்கழி இது நீபூண்டால், புகழை யார் பரிக்கற்பாலார்?" (4127)

(அழிவு - தீங்கு; கழிதல் - தப்பித்துச் செல்லுதல்; உகுத்தல் - கொட்டிக் கவிழ்த்தல்; பரக்கு - பெரியது; அழிவு - கேடு; பரக்கழிவு - பெரும் பழி \ பெருங்கேடு; பரித்தல் - பாதுகாத்தல் \ பொறுத்தல் \ தாங்குதல்)

அரக்கர் இனத்தைச் சேர்ந்த இராவணன், உன் மனைவி சீதாதேவியை அபகரித்துச் சென்று உனக்கு ஒரு கேடு விளைவித்துத் தப்பித்துச் சென்று விட்டான் என்றால், அதற்காக, அவர்களினும் மாறுபட்ட, அவர்களுடன் தொடர்பே இல்லாத வேறொரு இனமாகிய குரக்கினத்து அரசனாகிய என்னை நீ கொல்லுவது என்பது தகாதசெயல்; அவ்வாறு உங்கள் மனு தர்ம சாத்திரம் சொல்லுகிறதா? சொல்? ஒருவர் செய்த தவறுக்கு, வேறொருவருக்குத் தண்டனை தரும்படி மனுநெறி கூறுகிறதா? அவ்வாறு நீ தண்டித்தே ஆகவேண்டும் என்றால், நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்? என்னிடம் நீ என்ன குற்றத்தைக் கண்டாய்? உனக்கே இயல்பான, சிறப்பான பண்பாகிய அருள், இரக்கம் என்பவற்றையெல்லாம் எங்கே போக்கிவிட்டு வந்திருக்கிறாய்? இவ்வாறு இத்தகைய பெரிய பழியையெல்லாம் நீ விரும்பி அடைவாய் என்றால், மிக்க புகழ் என்று கூறப்படுகின்ற அணிகலன்களை அணிந்து கொண்டு அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய ஆற்றல் படைத்தவர் வேறு யார் இருக்கிறார்கள்?" என்று கேட்கிறான் வாலி.

பரித்தல் என்பது, சுமையுடையதேனும் அதைத்தாங்கிச் சுமத்தல் என்று பொருள்படும். இங்கே இரக்கம் என்று குறித்தது புறாவொன்றின் பொருட்டாகத் தன் உடலையே அரிந்து கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியையும், பசுவொன்றின் பொருட்டாகத் தன்னையே உணவாக்கிக் கொள்ளுமாறு அருளிய திலீபனையும் குறித்தது என்க. "அப்பா" என்ற சொல் அன்பு, அதிசயம், இரக்கம், துன்பம் முதலிய உணர்ச்சிகளை உணர்த்தும் அசைச் சொல் என்க.

89. "ஒலிகடல் உலகம் தன்னில், ஊர்தரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து பரந்ததோ? கருணை வள்ளால்!

மெலியவர் பாலதேயோ ஒழுக்கமும் விழுப்பம்தானும்?
வலியவர் மெலிவு செய்தால், புகழன்றி, வசையின்றாமோ?" (4128)

(கருணை - அருள்; ஊர்தருதல் - ஏறித்திரிதல் \ தாவுதல் \ ஊர்தல்; கலி - கலிகாலம்; விழுப்பம் - மேன்மைக்குணம் \ சிறப்பு; மெலிவு செய்தல் - துன்புறுத்துதல்; வசை - பழி; பரந்தது - சூழ்ந்து கொண்டது \ கலத்தல் \ விரவுதல்; ஒழுக்கம் - நன்னடத்தை)

"அருட்குணமும் வள்ளல் தன்மையும் படைத்தவனே! இராமா! ஓசைமிகுந்துள்ள கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில், மரத்திற்கு மரம் தாவித்திரியும் குரங்குகளிடத்தில் மட்டும், தீமையே ஓங்கி நிற்கின்ற கலிகாலம் வந்து சேர்ந்திருக்கிறதோ? ஒழுக்கம் என்னும் நன்னடத்தையும், அதனால் பெறப்படும் சிறப்பும் பெருமையும், ஆண்மை, அறிவு, பொருள், படை, ஆற்றல் முதலியவற்றில் குன்றியவர்களான மெலியவர்கள் மட்டுமே கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளோ? அவை வலியார்க்கும், மெலியார்க்கும் பொதுவான பண்பு நலன் அல்லவா? அவ்வாறிருக்க, வலிமையுடையவர்கள் மெலியவரைத் துன்புறுத்தினால், அதனால் வலியவர்க்குப் புகழ் மட்டுமே வந்து சேருவதன்றிப் பழி என்பது வரவே வராதா?" என்று இகழ்ச்சியாகக் கேட்கிறான் வாலி.

"ஊர்தரு குரங்கு" என்று இங்கு குறிக்கப்பட்டிருப்பது "கோடு வாழ் குரங்கு" என்று தொல்காப்பியத்தில் பேசப்படுகிறது. "கலியது காலம்" என்ற சொற்றொடர் சற்று விளக்கப்படவேண்டியது. யுகங்கள் மொத்தம் நான்கு. அவை கிருதயும், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன. கிருதயுகத்தில் தருமம் நான்கு பாதம் நிறைந்து செழித்திருக்கும், திரேதாயுகத்தில் அது மூன்று பாதமாய்க் குறைந்து போகும். துவாபரயுகத்தில் தருமம் இன்னும் மெலிவுற்று இரண்டு பாதமாய் நிலவும்; கலியுகத்தில் அதுமேலும் குறைந்து ஒரு பாதம் தான் இருக்கும். கலியுக முடிவில் தருமமே அழிந்து பாவமும், தீமையுமே நிறைந்து விளங்கும் என்பது நூற்கொள்கை. இராமாயணம் நிகழ்ந்தது திரேதாயுகத்தில். கிருஷ்ணாவதார, மகாபாரதம் நிகழ்ந்தது துவாபரயுகத்தில். இப்போது நடப்பது கலியுகம். இதன் முடிவில் தீமையே ஓங்கி நிற்கும் என்பது புராண விளக்கம். கலிகாலத்தில் நிகழ வேண்டிய தீங்கு, இந்தத் திரேதாயுகத்திலேயே நிகழ்ந்து விட்டதோ என்றும், அதுவும் குரக்கினத்தரசனாகிய தனக்கு மட்டுமே நிகழ்ந்தது ஏன்? என்றும் கேட்கிறான் வாலி.

இந்தக் கலியுகத்தில் எப்படி மக்கள் நடந்து கொள்வார்கள் என ஒரு சுவையான தனிப்பாடல் கிடைக்கிறது. கேளுங்கள் "தாலமரநிழலின் நல்லோர் அமுதம் உண்கினும், தப்பாது குடியர் என்பர்; (தாலமரம் - பனைமரம்) "தனம் மிகுந்துள பேர்கள் பித்தளை அணிந்திடினும் தங்கம் என்றே மொழிவர்; வாலிபம் தன்னிலே அதி சீலராகவே வைகினும், விடன் என்பர் (விடன் - காமுகன்) வறுமை சேர் எளியவர்கள் வயிரமது பூண்கினும், வளையல் கல் என உரைப்பர்; சீலம் புறத்தினும், அகத்தில் அக்கிரமும் செய்யும் ஈனரைப் புகழுவர்; சித்த சுத்தியதாகி, ஞான நெறிதேர்ந்திடும் திவ்யப் பெரியோரை இகழுவர்; கால கலியுக தர்மம் ஈதென உரைத்திடுவர்" என்பது கைலாச நாதர் சதகம் (28).

90. "கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ! பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து,
நாட்டு ஒரு கருமம் செய்தாய்; எம்பிக்கு இவ்வரசை நல்கி,
காட்டு ஒரு கருமம் செய்தாய்;கருமம் தான் இதன் மேல் உண்டோ?" (4129)

(கூட்டு - துணை; கொற்றவன் - வெற்றி வேந்தன்; தாதை - தந்தை; பூட்டிய - மேற்கொள்ளச் செய்த; கருமம் - ஒப்பற்றதொரு செயல் \ புதுமையான காரியமுமாம்; எம்பி - என் தம்பி \ சுக்கிரீவன்; மேல் - மேம்பட்டது; ஆங்கே - அவ்வாறே \ சிறிதும் குறையாமல் \ அப்பொழுதே; போந்து - சென்று \ வந்து)

"பகைவரை அழித்தற்கு யாருடைய துணையும் இல்லாது, தான் ஒருவனே தனியனாக நின்று பொரும் ஆற்றலும், அதனால் வெற்றியையே அடையும் இயல்புமுடைய வேந்தனே! இராமா! உன்னைப் பலகாலம் தவமிருந்து பெற்ற தந்தையான தசரதச் சக்கரவர்த்தி, உனது விருப்பமில்லாமல் உன்னை வற்புறுத்தி மேற்கொள்ளச் செய்த அயோத்தி அரசுரிமையாகிய செல்வத்தை, அந்த இடத்திலேயே அப்பொழுதே சிறிதும் குறையாமல் அவ்வாறே உன் தம்பியாகிய பரதனுக்குக் கொடுத்துவிட்டு, இந்தக் கிட்கிந்தைக் காட்டுக்கு வந்தாய்; அங்கே அயோத்தியில் உனக்குரிய அரசுரிமையை உன் தம்பிக்குக் கொடுத்தாய். சரி, அதுபோல இங்கே வந்து எனக்கு உரிமையுடைய கிட்கிந்தை அரசை, என்னைக் கொன்ற பின், என் தம்பிக்கு கொடுத்து, இங்கேயும் வழக்கத்திற்கு மாறாக புதுமையான ஒரு செயலைச் செய்திருக்கிறாய். இவ்வாறு செய்வதில் உன்னை விட மேம்பட்டவர்கள் யார் இருக்கிறார்கள்? நீ செய்த இக்காரியங்களைவிட மேலானது என்ன இருக்கிறது?" என்று பரிகாசமும், பரிதாபமும் கொண்டு இகழ்கிறான் வாலி.

"கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ!" என்றது, முன்பு இராமன், ஜனஸ்தானத்தில் கர, தூடண ஆதியர்களை யாருடைய துணையும் இல்லாமல் தனித்து நின்றே வெற்றி பெற்றதைக் குறிக்கும் என்க. இதனைத் "துணை வேண்டாச் செரு வென்றி" என்பார் தொல்காப்பியர். அசகாய சூரன் என்பர் வடநூலார். சகாயம் என்றால் துணை என்பது பொருள். அசகாயம் என்றால் துணை இல்லாத, துணை வேண்டாத வீரன் என்பது பொருள். "பூட்டிய" என்ற சொல் சிந்திக்கத்தக்கது. பூணுதல் என்பது அணிதல்; பூட்டுதல் என்பது அணிவித்தல் என்பதைக் குறிக்கும். இராமன் வேண்டிப் பெறாது, விரும்பிப் பெறாது, தந்தையின் வற்புறுத்தலினாலும், கட்டளையினாலும், தன்மீது சுமத்தப்பட்ட அரச பாரம் என்பதை இச்சொல் குறிக்கிறது எனக் கொள்ள வேண்டும். அதுபோலவே "ஆங்கே" என்ற சொல்லும் அப்பொழுதே, அந்த இடத்திலேயே, இருந்தது இருந்தபடி, அவ்வாறே என்று பொருள் விரிவு கொள்ளும்.

"நீ நாட்டில் செய்த கரியம் தன்னலமற்றது; மாண்புமிக்கது. ஆனால் நீ காட்டில் செய்ய எண்ணியிருக்கும் காரியம் முற்றிலும் தன்னலமானது. உன்னுடைய மனைவியைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக, இராவணனை அழிப்பதற்காக, என்தம்பி சுக்கிரீவனுடன் கூட்டுச் சேர்ந்து, என்னைக்

கொன்றிருக்கிறாய். இது மிகவும் இகழ்ச்சிக்குரிய செயல். எனவே, உன்னைப் போல மிகவும் புகழ்தற்குரிய செயலையும் யாராலும் செய்ய முடியாது, இவ்வாறு என்னை மறைந்திருந்து கொல்லுதலாகிய இகழ்ச்சி மிகுந்த செயலையும் யாராலும் செய்ய இயலாது. எனவே, இந்த இருசெயல்களைச் செய்வதிலும் உன்னை மிஞ்ச வேறு ஒருவருமே இல்லை" என்று இகழ்கிறான் - பழிதூற்று கிறான் வாலி. மூத்தவர் உரிமையைத் தம்பியர்க்கு அளிப்பதே உன் இயல்பு போலும். மூத்தவனாகிய நீ இருக்க அரசுரிமையை உன் தம்பி பரதனுக்குக் கொடுத்தாய்; மூத்தவனாகிய நான் இருக்க கிட்கிந்தை அரசுரிமையை என் தம்பி சுக்கிரீவனுக்குக் கொடுத்திருக்கிறாய் என்று இகழ்ந்து கூறினான் என்பதாம். மூத்தவனான இராவணன் இருக்க அவனையும் அழித்து, அவன் தம்பி வீடணனுக்கு இலங்கை அரசுரிமையைக் கொடுக்கப் போகிறாய் என்பது குறிப்பு.

91. "அறைகழல் அலங்கல் வீரர் ஆயவர் புரிவது, ஆண்மைத்
துறையெனல் ஆயிற்று அன்றே? "தொன்மையின் நன்னூற்கு எல்லாம்,
இறைவன் நீ; என்னைச் செய்தது ஈது எனில், "இலங்கை வேந்தன்
முறையல்ல செய்தான்" என்று, முனிதியோ? முனிவு இலாதாய்!" (4130)

(இறைவன் - ஆசான் \ தலைவன்; அறை - ஒலிக்கின்ற; அலங்கல் - வெற்றி மாலை; முனிதல் - வெகுளல் \ கோபித்தல்; முறை - நீதி)

"கோபம் என்பதே இல்லாதவனே! இராமா! மிகப்பழமையான நல்ல நீதி நூலாகிய வேதசாத்திரங்களுக்கெல்லாம் தலைவன் நீ! ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்தவரும், வெற்றிமாலையைச் சூடியவர்களுமாகிய வீரர்கள் அறத்தின் பாற்பட்டுச் செய்யும் எந்தச் செயலும், ஆண்மைத் துறையெனச் சிறப்பித்துப் பேசப்படுவன அல்லவோ? எனினும், நீ என் மாட்டுச் செய்த இந்த அறமல்லாத செயல் இத்தகையது என்றால், இலங்கை மன்னனான இராவணன் அறத்திற்கும் நீதிக்கும் புறம்பாக ஏதோ செய்து விட்டான் என்று அவனை நீ சினந்து அவன் மேல் கோபம் கொள்ளுகிறாயே இது எப்படிப் பொருந்தும்? நீயே அறவழியி லிருந்து மாறுபட்டு என்மேல் மறைந்திருந்து அம்பு செய்து என் உயிரைப் போக்கியபின், நீ இராவணன் அறவழியிலிருந்து மாறுபட்டு விட்டான் என்று கூறி அவன் மீது சினப்பதற்கு உனக்கு என்ன தகுதியிருக்கிறது?" என்று கடுமையாக ஏசுகிறான் வாலி.

வீரர்கள் அறநெறியின்பாற்பட்டுச் செய்யும் வீரச்செயல்களே ஆண்மை யுடையன என்று ஏற்கக்கூடும். அதுவன்றி, அவர்கள் தம் வலிமையால் தகாத செயல்களைப் புரிந்தார்கள் என்றால், அதனை ஆண்மை என்று கருதமுடியாது என்பது கருத்து. இராமன் "தொன்மையின் நன்னூற்கெல்லாம் இறைவன்" என்பது, கவந்தன் துதியாக வரும், "நின் செய்கை கண்டு நினைந்தனவோ நீள் மறைகள்? உன் செய்கை அன்னவை தான் சொன்ன ஒழுக்கினவோ?" என்ற கூற்றால் அறியப்படும், "தன் குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின் என் குற்றம் ஆகும் இறைக்கு?" என்பது குறள்-436.

92. "இருவர் போர் எதிரும் காலை, இருவரும் நல் உற்றாரே;
ஒருவர் மேல் கருணை தூண்டி, ஒருவர் மேல் ஒளித்து நின்று,
வரிசிலை குழைய வாங்கி, வாய் அம்பு மருமத்து எய்தல்,
தருமமோ? பிறிது ஒன்று ஆமோ? தக்கிலது என்னும் பக்கம்." (4131)

(நல் - சிறந்த; உற்றார் - உறவினர்; தூண்டி - செலுத்தி; குழைய - நன்கு வளைத்து; மருமம் - மார்பு \ உயிர் நிலை; பிறிது - மாறுபட்டது; தக்கிலது - நடுவுநிலையில்லாதது; பக்கம் - பகுதி)

"இரண்டு பேர் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போர் செய்து கொண்டிருக்கும் போது, அவர்களுடன் தொடர்பில்லாத, பொதுவான, மூன்றாமவர்க்கு அவர்கள் இருவரும் சிறந்த உறவினர்களைப் போன்றவர்களே; அல்லவா? அவ்வாறிருக்கும் போது, ஒருவர் மேல் அருள் கொண்டு, மற்றொருவர் மேல், யாருக்கும் தெரியாமல் மறைந்து நின்று கொண்டு, கட்டமைந்த வில்லை மிக நன்றாக வளைத்து, கூரிய முனைபொருந்திய அம்பை, ஒருவன் மார்பில் செலுத்துதல் என்பது தருமத்தின் பாற்பட்டதாகுமா? அல்லது அதனின்றும் மாறுபட்ட அதர்மத்தின் பாற்பட்டதாகுமா? என்றாலும் இது நடுவுநிலைமையற்ற தகாத செயல் என்பது மட்டும் நிச்சயம்" என்று சாடுகிறான் வாலி.

இராமன் சுக்கிரீவனிடம் கூறும்போது, தான் "வேறு நின்று" அம்பு எய்வேன் என்றான். அங்கே "வேறு" என்பதற்கு புறத்தே நின்று என்று பொருள். களத்தில் அல்லாது களத்தை விட்டுப்புறத்தே நின்று என்பது விளக்கம். இராமன் மறைந்து நின்று அம்பு எய்வேன் என்று கூறவில்லை. ஆனால் அதை வாலியின் கூற்றாக, இங்கே கம்பன் கூறிய நயம் நோக்குக. இங்கேயும் மறைந்து நின்று என்று கூறாமல், அதைவிடத் தரம் தாழ்ந்த "ஒளித்து நின்று" என்ற சொற்களைப் பயன்படுத்தியிருப்பது, வாலியின் சினம் மிகுதியைப் புலப்படுத்துகிறது. "அதர்மம்" என்ற வார்த்தையைக் கூறுவதற்கே வாலி அஞ்சுகிறான். இது அதர்மம் என்பதோடு மட்டுமல்ல இது ஒருதலைப்பட்சமானது, நடுவுநிலையற்றது, தகுதியில்லாதது என்றும் சாடுகிறான் வாலி.

இங்கே ஒரு மிகைப்பாடல் கிடைக்கிறது. மிகைப்பாடல்தான் என்றாலும் பொருள் பொதிந்தது என்பதால் பாடல் மட்டும் தரப்படுகிறது.

"ஒன்றாக நின்னோடு உறும் செற்றம் இல்லை;
உலகுக்கு நான் செய்ததோர் குற்றமில்லை;
வென்று ஆள்வதே என்னில், வேறொன்றும் இல்லை;
வீணே பிடித்து என்தன் மேல் அம்பு விட்டாய்;
தன் தாதை மாதாவுடன் கூடி உண்ண,
தண்ணீர் சுமக்கும் தவத்தோனை, எய்தான்
நின்தாதை; அன்றேயும் நீயும் பிடித்தாய்,
நெறிப்பட்டவாறு இன்று நேர் பட்டதாமே."

93. "வீரம் அன்று; விதி அன்று; மெய்ம்மையின்
வாரம் அன்று; நின் மண்ணினுக்கு என் உடல்

பாரமன்று; பகையன்று; பண்பு அழிந்து,
ஈரம் இன்றி இது என் செய்தவாறு நீ?" (4132)

(ஈரம் - அன்பு \ இரக்கம்; விதி - விதிமுறை \ ஊழ்வினை; வாரம் - கூறுபாடு \ செயல் \ எல்லை; பாரம் - பெரும் சுமை; ஒழிந்து - நீங்கி)

வாலி, இராமனை நோக்கி, "இராமா! நீ இவ்வாறு செய்த செயல்,வீரத்தின் பாற்பட்டதல்ல; ஏனெனில் நீ நேருக்கு நேர் போர் செய்யவில்லை; மறைந்து நின்று அம்பு எய்திருக்கிறாய்; இது உன் முன்னோராகிய மனு எழுதிய அறநூல்களில் கூறப்பட்டுள்ள சட்டமும் அல்ல. ஏனெனில் யாரோ இருவருக்கு இடையில் நடக்கும் போரில் மூன்றாவது மனிதனாகிய நீ தலையிட்டிருக்கிறாய்; இது உண்மையின் பாற்பட்டதுமல்ல; காரணம் நீ எந்தக் காரணமும் இல்லாமல் என்னை வதைத்திருக்கிறாய்; உங்கள் இக்ஷுவாகு குலத்தவர்க்கு உரிமையான இப்பூமிக்கு, எனது சிறிய உடல் ஒன்றும் சுமக்கமுடியாத பெரும் சுமையுமல்ல; உனக்கும் எனக்கும் முன்பகையும் அல்ல; இரக்கம் என்பது இல்லாமல் இவ்வாறு செய்திருக்கிறாயே! இது எதனால், ஏன் செய்தாய்? என்பதுதான் எனக்குப் புரியவில்லை" என்றான் வாலி.

இங்கே பண்பு என்பது "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்ற கலித்தொகையின் கருத்தைக் குறிப்பதாகும்.

94. "இருமை நோக்கி நின்று, யாவர்க்கும் ஒக்கின்ற
அருமை ஆற்றல் அன்றோ அறம் காக்கின்ற
பெருமை என்பது? இது என்? பிழை பேணல் விட்டு
ஒருமை நோக்கி, ஒருவற்கு உதவலோ?" (4133)

(இருமை - இரு பக்கத்தார் \ நன்று தீது என்ற இரண்டுமாம்; பிழை - குற்றம்; பேணல் - பொறுத்தல்; ஒருமை - ஒரு பக்கம் \ பட்சபாதம் \ ஓர வஞ்சனை; நோக்குதல் - சீர்தூக்கிப் பார்த்தல்; நின்று - நடுவுநிலையில் நிலைத்து நின்று)

"அறத்தைப் பேணிப் பாதுகாப்பது என்பது, தன்னிடம் வந்த இருவரின் நன்மை தீமைகளையும் நன்று சீர்தூக்கிப் பார்த்து, நடுவு நிலைமையில் நிலைத்து நின்று, தொடர்புடைய எல்லோர்க்கும் மகிழ்ச்சியளிக்கின்ற வகையில் நிறைவேற்றுவது அல்லவோ? அதைவிட்டு விட்டு நீ இப்பொழுது செய்திருப்பது போல், குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு, ஒருவர் பக்கம் உள்ள நிலையை மட்டுமே பார்த்து, தனக்கு விரும்பிய ஒருவருக்கு மட்டுமே உதவி செய்வது தான் அறம் காப்பது என்பதா? இது என்ன நியாயம்?" என்று வாலி இராமனைச் சாடுகிறான்.

இருபக்கமும் உள்ள குணம் குற்றங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, ஒரு பக்கம் தாழாது, நடுவுநிலையில் நின்று காரியம் நிறைவேற்றுதல் எளிதல்ல, மிகக் கடினமானது. எனவே தான் "அருமை அன்றோ அறம் காப்பது?" என்றார் என்க. "நீ இருபக்கத்தின் நியாயங்களையும் கேட்டாயில்லை; நடுவுநிலையிலும் நின்றாயில்லை; ஒரு பக்கமே சாய்ந்தாய். நீ காத்த அறம் எப்படிப் பட்டது என்பது எனக்குப் புரியவில்லை" என்றான் வாலி என்பதாம். இதே கருத்துப்பட வாலி முன்பு தாரையிடம், இராமனைப் புகழ்ந்து பேசியதையும் இங்கு நினைவுகூர்க.

"இருமையும் நோக்குறும் இயல்பினாற்கு, இது பெருமையோ?" என்பது இதே வாலியின் கூற்று.

95. "செயலைச் செற்ற பகை தெறுவான் தெரிந்து,
அயலைப் பற்றித் துணை அமைந்தாய் எனின்,
புயலைப் பற்றும் அப்பொங்கு அரி போக்கி, ஓர்
முயலைப் பற்றுவது, என்ன முயற்சியோ?." (4134)

(செயல் - காத்தல் தொழில்; செற்ற - தீமைசெய்த; தெறுவான் - அழித்தற் பொருட்டு; தெரிந்து - ஆராய்ந்து; புயல் - மேகம்; அரி - சிங்கம்; பொங்குதல் - சினத்தல்; போக்கி - விடுத்து \ விலக்கி; பற்றி - சார்ந்து \ துணைக்கொண்டு)

உன்னுடைய காவல் தொழிலுக்குத் தீமை செய்து, உன் மனைவி சீதையை அபகரித்துக் கொண்டு சென்ற உன்னுடைய பகைவனாகிய இராவணனை அழிக்க வேண்டும் என்று நன்கு ஆராய்ந்து, அதற்கு ஒரு வலிய துணையைப் பற்றுக் கோடாகக் கொள்ள வேண்டும் என்று நீ கருதியிருந்தால், மேகத்தையே தாவிப் பிடிக்கும் ஆற்றலுள்ள, சினம் மிகுந்த ஒரு ஆண் சிங்கத்துடன் கூட்டு ஏற்படுத்திக் கொள்ளாது, அதற்கு அஞ்சி நடுங்கும் ஒரு முயலைத் துணையாகக் கொண்டுள்ளாயே? இது என்ன முயற்சி? இந்த முயற்சியால் உனக்கு என்ன நன்மை விளையும்? இது ஒரு பயனற்ற முயற்சி" என்கிறான் வாலி.

"செயலைச் செற்ற பகை" என்பது, தவக்குடிலில் இருந்த சீதையை, அவளுக்கு அமைந்திருந்த கட்டுக் காவலையெல்லாம் தகர்த்தெறிந்து அவளை அபகரித்துக் கொண்டு சென்ற பகைவன் இராவணனைக் குறிக்கும். "புயல்" இங்கு மேகம் என்றும், மேகம் போன்ற கரிய யானை என்றும் பொருள்படும். யானை போன்ற வலிவுள்ள இராவணனை அழிப்பதற்குச் சிங்கம் போன்ற தன் உதவியை நாடாது, யானையைக் கண்டாலே நடுங்கும் முயலைத் துணையாகக் கொண்டிருக்கிறாயே? இது பயனற்ற முயற்சி என்கிறான் வாலி. (பகை - இராவணன்; யானை - இராவணன்; அரி - ஆண் சிங்கம்; வாலி; முயல் - சுக்கிரீவன்)

96. "கார் இயன்ற நிறத்த களங்கம் ஒன்று
ஊர்இயன்ற மதிக்கும் உளதாம் என,
சூரியன் மரபுக்கும் ஓர் தொல்மறு,
ஆரியன்! பிறந்து ஆக்கினையாம் அரோ!" (4135)

(ஊர் இயன்ற - ஊர்ந்து செல்லுகின்ற \ சஞ்சரிக்கின்ற; கார் - கருமை; இயன்ற - பொருந்திய; தொல் - தொன்மை \ பழமை; மறு - களங்கம்; ஆரியன் - மேலோன்)

"வானத்தில் ஊர்ந்து சென்று சஞ்சரிக்கும் திங்களுக்குக் கருமை நிறம் பொருந்திய களங்கம் ஒன்று இருக்கிறது என்பதால், அதைப்போல, சூரியனுக்கும் சூரிய குலத்துக்கும், ஒரு பழமையான களங்கம் இருக்க

வேண்டும் என்று கருதித்தான் பெருமை உடையோனாகிய நீ, அக்குலத்தில் பிறந்து இத்தகைய பழிதரும் செயலைச் செய்தாய் போலும்!" என்று வஞ்சகமாகப் புகழ்கிறான் வாலி.

சந்திரன், சூரியன் என்பன இரு சுடர்கள். சந்திரனுக்குக் கரிய நிறமுடைய ஒரு கறை இருக்கிறது என்று கூறுவது யாவரும் அறிந்த ஒரு புராணக் குறிப்பு. இரு சுடர்களுள் ஒன்றினுக்கு இருக்கும் களங்கம் மற்றொன்றினுக்கு இல்லையே என்று கருதித்தான், இராமன் தன் குலத்தின் முதல்வனான சூரியனுக்கு, இத்தகைய பழிச்சொல் என்னும் களங்கத்தை உண்டாக்கி விட்டான் என்பது வாலியின் குற்றச்சாட்டு. வெண்மை நிறத்தை எப்படிப் புகழுக்குக் கூறுவார்களோ, அதுபோலக் கரிய நிறத்தைக் களங்கத்திற்கும் பழிச்சொல்லுக்கும் கூறுவது கவிமரபு. சந்திர குல முதல்வனான சந்திரனுக்குக் களங்கம் இயற்கையிலேயே இருப்பது போல், சூரிய குல முதல்வனான சூரியனுக்கு, இராமன் அந்தக் குலத்தில் பிறந்து இத்தகைய ஈனச்செயல் செய்ததால் உண்டான பழியாகிய களங்கம் வந்தது என்பதாம்.

"தொல்மறு" என்ற சொல் சற்று விளக்கப்பட வேண்டிய ஒன்று. பொதுவாக ஒருவன் செய்யும் தீச்செயலால் உண்டாகும் பழி, அவன் வழி வருகின்ற பின்னவர்களைத்தான் பாதிக்கும். ஆனால் இங்கு இராமன் செய்த தீய செயலால் உண்டாகின்ற பழி, பின்வரும் வம்சத்தினரைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், இவன் குல முன்னோர்களையும் பற்றித் தொடரும் அழியாத பெரியதோர் பழிச்செயல் என்று கவிஞன் கூறுவதை மனத்தில் நிறுத்துக. இதனால் ஒருவன் செய்த குற்றமோ, நன்மையோ அவனையும், அவனைத் தொடர்ந்து வருகின்ற அவன் வம்சத்தினரையும் மட்டும் அன்று; இறந்து மறைந்து போன அவனுடைய முன்னனோர்களையும் தொடர்ந்து சென்று பற்றும் என்பது அறியப்படவேண்டுவது.

97. "மற்று ஒருத்தன் வலிந்து அறை கூவ, வந்து
உற்ற என்னை, ஒளித்து, உயிர் உண்ட நீ,
இற்றையில், பிறர்க்கும் இகல்ஏறு என
நிற்றிபோலும்? கிடந்த நிலத்து அரோ?" (4136)

(மற்று ஒருத்தன் - அயலான் \ தொடர்பில்லாதவன்; இற்றையில் - இந்நாளில், இப்பொழுது; இகல் - வலிமை; ஏறு - ஆண் சிங்கம்; அறைகூவல் - வலிய அழைத்தல்; நிலம் - தரை \ போர்க்களம்)

"உனக்குச் சற்றும் தொடர்பில்லாத, என் தம்பி சுக்கிரீவன் தானே வலிய வந்து, என்னைப் போரிட வருமாறு, வலிந்து அழைக்க, அதை ஏற்று, நான் அவனுடன் போர் செய்ய வந்த போது, நானும்,மற்று எவரும் அறியாதவாறு நீ ஒளிந்திருந்து அம்பெய்து என் உயிரைக் கவர்ந்து கொண்டாய். இது வெட்கப்பட வேண்டிய செயல். அவ்வாறு இருக்கும் போது, நான் தளர்ந்து சோர்ந்து போய்க்கிடக்கும் இந்நிலத்திலேயே, என் கண் எதிரிலேயே, ஏதோ ஒரு பெரும் வலிமைமிக்க ஆண் சிங்கம், செய்தற்கரிய செயலைச் செய்து விட்டுப்

பெருமிதத்தோடு நிற்பதுபோல நிற்கிறாயே? உனக்கு வெட்கமாக இல்லையா?" என்று கடிந்து கேட்கிறான் வாலி.

98. "நூல் இயற்கையும், நும் குலத்து உந்தையர்
போல் இயற்கையும், சீலமும் போற்றலை;
வாலியைப் படுத்தாய் அலை; மன்அற
வேலியைப் படுத்தாய், விறல் வீரனே!" (4137)

(விறல் - வெற்றி; இயற்கை - விதிமுறைகள் \ இயல்பு \ வழக்கமுமாம்; உந்தையர் - உன் தந்தையர் \ மூதாதையர்; சீலம் - ஒழுக்கம்; படுத்தல் - கொல்லுதல்; மன் - மன்னர்களுக்குரிய \ நிலைபெற்ற; போற்றுதல் - மதித்து நடத்தல்)

வெற்றி மிகுந்த வீரனே! இராமா! நீ மறைந்திருந்து அம்பு எய்து என் உயிரைக் கவர்ந்த இந்தச் செயலால், நீ மனுநெறியையோ, மற்ற சாத்திர நூல்களில் கூறியுள்ள விதிமுறைகளையோ, அல்லது உன் குலத்துதித்த உன் முன்னோர்கள் காப்பாற்றி வந்த வழக்கத்தையோ, அல்லது உன்னுடைய பெருமைக்குரிய நல்லொழுக்கத்தையோ, ஏற்று, மதித்து நடக்கவில்லை; நீ ஏதோ ஒரு தனி மனிதனான வாலி என்பவனை அழித்து விட்டதாக எண்ணி இறுமாப்புக் கொள்ளாதே! நீ அரசர்களுக்குரிய நிலைபெற்ற தரும நெறிக்குக் கட்டப்பட்டிருக்கும் வேலியையே அடியோடு அழித்து விட்டாய் என்பதை நினைவில் கொள்" என்று சாடுகிறான் வாலி.

சாதாரணமாக "வேலியே பயிரை மேய்ந்தது" என்று கூறுகிறோம் அல்லவா? வேலி என்பது என்ன? மாடு முதலியன வந்து பயிருக்குச் சேதம் விளைவிக்காதவாறு கட்டப்படும் ஒரு காவல் அமைப்பு; அதுபோல, மன்னர்களாகிய வேலிகள் என்ற அமைப்புத்தான், வையகத்து உயிரினங்கள் என்னும் பயிரைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காது, நீயே இப்பொழுது குற்றமிழைத்து விட்டாயே என இரங்கிக் கூறுகிறான் வாலி.

99. "தாரம் மற்றொருவன் கொள, தன் கையில்
பார வெஞ்சிலை வீரம் பழுதுற!
நேரும் அன்று, மறைந்து, நிராயுதன்
மார்பின் எய்யவோ வில் இகல் வல்லதே?" (4138)

(தாரம் - மனைவி; மற்றொருவன் - வேறொருவனாகிய இராவணன்; கொள - கவர்ந்து செல்ல; பாரம் - சுமை; இகல் - வலிமை \ வல்லமை; நிராயுதன் - படைக்கலமற்றவன்)

"இராமா! உன்னுடைய மனைவியான சீதையை, யாரோ ஒரு அரக்கன் வஞ்சனையால் அபகரித்துக் கொண்டு செல்ல, அவனைத் தொடர்ந்து சென்று, அவனை உன் வில்லால் அழித்து, உன் மனைவியை மீட்டுக் கொண்டுவர இயலாத நீ, உன் கையில் ஏன் கொடிய வில்லைச் சுமை போலத் தாங்கிக் கொண்டிருக்கின்றாய்? உன் வீரம் பழிப்புக்கு இடமாகும் என்பதை நீ

அறியவில்லையா? அது மட்டுமல்ல; நான் நிராயுதபாணியாக, என் கையில் எந்த வித ஆயுதமும் இல்லாது நின்றபோது என்னை நேருக்கு நேர் பொராது, மறைந்திருந்து ஒரு காரணமுமின்றி என் மார்பில் அம்பு எய்து என் உயிரைக் கவர்ந்தாயே? இந்த வில் வீரத்தைத்தான் உலகத்தார், மிகப் புகழ்கின்றார்களோ? இதுதான் உன் வில் வித்தையின் வல்லமையோ?" என்று இகழ்ந்து கூறுகிறான் வாலி.

பகைவனை அழிக்கப்பயன்படாது, கையில் தாங்கியிருக்கும் ஒரு வில், அந்த வீரனுக்கு ஒரு சுமை என்று, பல இடங்களிலும் கவிஞன் கூறியிருப்பது காண்க. நிராயுதனை ஆயுதம் கொண்டு தாக்குவது ஒரு வீரனுக்கு அழகுமல்ல; அது போர் நூல்களில் கூறிய முறையும் அல்ல, என்றான் என்க. மனைவியைக் கவர்ந்து சென்றவனைத் தொடர்ந்து சென்று கொல்லாது விடுத்தது முதற்குற்றம். நமக்குள் எந்தப் பகையும் இல்லாத போது, ஒரு காரணமுமின்றி, நேருக்குநேர் போர் செய்யாது, மறைந்து நின்று, நிராயுதபாணியாக நின்ற என்னைக் கொல்ல அம்பு எய்தது இரண்டாவது குற்றம். இது வெறும் பழி மட்டுமல்ல, பெரும் பழி. அழிக்க இயலாத பழி என்றான் என்க.

100. என்று, தானும் எயிறு பொடிபடத்
தின்று, காந்தி, விழிவழித்தீ உக,
அன்று, அவ்வாலி அனையன கூறினான்;
நின்ற வீரன் இனைய நிகழ்த்தினான். (4139)

(எயிறு - பற்கள்; காந்தி - சினந்து; உக - சிதற; அன்று - அப்பொழுது; தின்று - கடித்து)

என்று வாலி தன் பற்கள் பொடியாகிப் போகும்படி கடித்துக் கொண்டு, சினந்து, தன் கண்களில் தீப்பொறி பறக்கும்படி பார்த்து அப்போது அத்தகைய பழிமொழிகளைக் கூறினான். இவை அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த வீரனாகிய இராமன், கீழ்க்கண்டவாறு கூறத் தொடங்கினான்.

இங்கே இராமனை வீரன் என்று கூறுவதை எண்ணுக. இவ்வளவு பழிப்புரைகளையும் கேட்டுக் கொண்டு, மனம் சலியாது நிற்பதென்பது ஒரு உண்மையான வீரனால்தான் முடியும் என்பது கருத்து. எயிறுபொடிபடத் தின்றலும், காந்தலும், விழிவழித்தீ உகுதலும் வெகுளியின் மெய்ப்பாடுகள்.

101. வாலியின் பழிச்சொற்களுக்கு, இராமனின் மறுமொழி (12 பாடல்கள்)

"பிலம் புக்காய் நெடுநாள் பெயராய்" எனாப்
புலம்புற்று, உன் வழிப் போதலுற்றான்தனை,
குலம் புக்கு ஆன்ற முதியர், "குறிக்கொள் நீ
அலம் பொன் தாரவனே! அரசு" என்றலும். (4140)

(பிலம் - குகை \ பாதாளம்; பெயர்த்தல் - மீண்டு வருதல்; ஆன்ற - அறிவால் நிறைந்த; அலம்பு - அசைகின்ற; தார் - மாலை; குறிக்கொள்ளுதல் - போற்றிப்பாதுகாத்தல் \ ஊன்றிக் கேட்டல்; புக்கு - தோன்றிய) (குளகப்பாடல்)

இராமன் வாலியை நோக்கி, "நீ உன்னோடு எதிர்த்து வந்த அரக்கனாகிய மாயாவியைத் துரத்திக் கொண்டுபோய் ஒரு குகையில் புகுந்து கொண்டு போர்புரிந்தாய், நீண்ட நாட்களாக - இருபத்து எட்டு மாதங்களாக - நீ வெளியே வாராது இருந்ததனால், சுக்கிரீவன் அழுதுபுலம்பி அரற்றி, நீ சென்ற வழியிலேயே குகைக்குள் வந்து உன்னைக் காண முற்பட்டான். அப்போது அவனைத்தடுத்து உன் குலத்தில் பிறந்தவர்களும், அறிவால் நிறைந்த முதியவர்களும் சுக்கிரீவனை அழைத்து, "அசைகின்ற பொன்னாலான மாலையை அணிந்தவனே! நீயும் உன் தமையன் பின்னால் சென்று விட்டால் இவ்வரசை யார் ஆள்வது? எனவே நாங்கள் கூறுவதை நன்கு கவனமாக ஊன்றிக் கேட்பாயாக! இனிமேல் நீதான் எங்களுக்கு அரசனாக இருந்து குடிமக்கள் அனைவரையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும்" என்று கூறியதும் - பாடல் தொடர்கிறது.

சுக்கிரீவனிடம் குற்றம் ஏதும் இல்லையென்பதையும், வாலியினிடத்துக் குற்றம் உண்டு என்பதையும் சுட்டிக்காட்டத் தொடங்குகிறான் இராமன் என்பதாம்.

102. **"வானம்ஆள என் தம்முனை வைத்தவன்**
தானும் மாளக் கிளையும் இறத் தடிந்து,
யானும் மாள்வென்; இருந்து அரசு ஆள்கிலேன்;
"ஊனம் ஆன உரை பகர்ந்தீர்" என. (4141)

(தம்முன் - தமையன்; வானம் - ஆள இறந்து விண்ணுலகு எய்த; வைத்தவன் - மாயாவி; மாள - இறந்துபடும்படி; கிளை - சுற்றம்; இற - அழிய; தடிந்து - கொன்று; ஊனம் - குற்றம் \ பழி (குளகப்பாடல்)

"அதற்குச் சுக்கிரீவன் அவர்களை நோக்கி, "என்னுடைய தமையனான வாலியை விண்ணுலகிற்கு அனுப்பிய கொடியவனான மாயாவியைக் கொன்று, அவனுடைய சுற்றத்தாரையும் மாளும்படி செய்து, பின் நானும் மாண்டு போவேன்; என் அண்ணன் இல்லாத போது, நான் மட்டும் உயிருடனிருந்து இந்த அரசாட்சியை ஏற்றுக் கொள்ள மாட்டேன்; எனக்குப் பழி வந்து சேரும் குற்றமான அறிவுரையை நீங்கள் சொல்லுகிறீர்கள்" என்று கூறவும் - பாடல் தொடர்கிறது.

"வானம் ஆள" என்பது வீரசுவர்க்கம் அடைதல் என்பதைக் குறிக்கும். இறந்து போனான் என்று அமங்கலமாகச் சொல்லாமல், "வானம் ஆள" என மங்கலமாகக் கூறினான் என்க. சுக்கிரீவன் அரசுரிமையை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்பதை நன்கு புலப்படுத்துகிறது இப்பாடல்.

103. **"பற்றி, ஆன்ற படைத்தலை வீரரும்,**
முற்று உணர்ந்த முதியரும், முன்பரும்,

"இற்றது உம் அரசு எய்தலையேல்" என,
கொற்ற நன்முடி கொண்டது, இக்கோதிலான்." **(4142)**

(ஆன்ற - ஆற்றல் நிரம்பிய; இற்றது - கெட்டழிதல்; கோது - குற்றம்; முன்பர் - மற்றைய மேலோர்கள்; பற்றி - பிடித்துக்கொண்டு \ தடுத்து)

"என்று சுக்கிரீவன் அரசாட்சி செய்ய மறுத்தபோது, ஆற்றல் நிறைந்த படைத்தலைவர்களாகிய வீரர்களும், அரசியல் நெறிமுறைகளை முற்றும் நன்கு அறிந்த அமைச்சர்கள் போன்ற முதியவர்களும், மற்றும் ஊர்ப்பெரு மக்களும் அவன் உன் பின் வந்து உயிர்விடுதலைத் தடுத்து, "நீ இப்போது அரசு செய்ய ஒப்புக் கொள்ளவில்லை என்றால், இம்மாநிலம் கெட்டழிந்து போய்விடும்" என்று வற்புறுத்தியதால், இந்தக் குற்றமற்றவனான, தூய்மையான சுக்கிரீவன், வெற்றிக்கு அறிகுறியான நல்ல மகுடத்தைச் சூட்டிக்கொண்டு, அரசாட்சியை ஏற்றுக் கொண்டான்" என்று இராமன் வாலிக்கு நடந்தனவற்றைக் கூறினான்.

இராமன் மீண்டும் சுக்கிரீவனைக் "கோதிலான்" என்று கூறுவதை எண்ணுக. "நீ அரசேற்காவிட்டால் நாடு நாசமுறும்" என்று வற்புறுத்திக் கூறினர் முதியோர் என்பதை "இற்றது" என்றார் என்க. இராமன் வனம் சென்றபோது, அயோத்தி வந்த பரதனை இவ்வாறே வசிஷ்டரும், மற்றையோரும் அரசாட்சி ஏற்று நடத்த வேண்டும் என்று வற்புறுத்தியதையும் இங்கு நினைவு கூர்க. இப்பொழுதும், அரசனில்லாமல் - அரசாங்கம் இல்லாமல் நாடு ஒரு போதும் இருத்தலாகாது என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருவதையும் எண்ணிப் பார்க்க. முதியோர்களின் வற்புறுத்தலால் அவன் அரசு ஏற்க நேர்ந்ததேயன்றி, அவனே விரும்பி, வலிந்து சென்று அரசினைக் கைப்பற்றிக் கொள்ளவில்லை என்ற கருத்தில் இராமன் சுக்கிரீவனைக் "கோதிலான்" எனக் கூறினான் என்க.

104. "வந்த உன்னை வணங்கி மகிழ்ந்தனன்;
"எந்தை! என்கண், இனத்தவர் ஆற்றலால்,
தந்தது உன் அரசு," என்று, தரிக்கிலான்
முந்தை உற்றது சொல்ல, முனிந்து நீ. **(4143)**

(என்கண் - என்னிடம்; தரித்தல் - தாங்கியிருத்தல்; முந்தை - முன்பு; முனிந்து - வெகுண்டு) (குளகப்பாடல்)

"அவ்வாறு மாயாவியைக் கொன்றுவிட்டு இருபத்தெட்டு மாதங்கள் கழித்துக் குகையிலிருந்து வெளிவந்த உன்னைச் சுக்கிரீவன் வணங்கினான்; நீ வந்த செய்தி கேட்டு, உன்னைக் கண்டு மிக மகிழ்ந்தான்; "என் தந்தை போன்றவனே; நம் வானர இனத்தில் உள்ள மூத்தவர்கள், அவர்களது ஆற்றலால் என்னிடத்தில் வற்புறுத்தித் தரப்பட்டது இந்த உன்னுடைய அரசு. அதைத் தாங்கி நடத்திச் செல்ல நான் ஒருப்படவில்லை" என்று தொடங்கி, முன்பு நிகழ்ந்ததனைத் தையும் உனக்கு விளக்கிச் சொல்ல முற்பட்டான்; என்றாலும் நீ அதனை ஏற்காது, அவன் கூறுவனவற்றைக் கேட்க முயலாமல், அவனைச் சினந்து" - பாடல் தொடர்கிறது.

இவ்வரசுரிமையை நானே விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. இது என்மேல் வற்புறுத்தித் திணிக்கப்பட்டது என்று கூற முயல்கிறான் சுக்கிரீவன்; அவனே விரும்பி ஏற்றுக் கொண்டிருந்திருப்பானேயானால், அவன் வாலியைக் கண்டதும் மகிழ்ந்திருக்க மாட்டான் வணங்கியிருக்க மாட்டான்; எந்தையே என்று அன்புடன் அழைத்திருக்கமாட்டான், தன் நிலை விளக்கம் அளிக்கமுயன்றிருக்க மாட்டான் என்பது குறிப்பு.

105. "கொல்லல் உற்றனை உம்பியை; கோது அவற்கு
இல்லை என்பது உணர்ந்தும் இரங்கலை;
"அல்லல் செய்யேல்; உனக்கு அபயம்; பிழை
புல்லல்"; என்னவும், புல்லலை; பொங்கினாய்;" (4144)

(உறுதல் - முற்படுதல் \ தொடங்குதல்; கோது - குற்றம்; அபயம் - அடைக்கலம் \ தஞ்சம்; புல்லுதல் - பொருட்படுத்துதல்; பொங்குதல் - கோபம் மிகுதல்; உம்பி - உன் தம்பி; அல்லல் செய்தல் - துன்புறுத்துதல்)

"உன் தம்பியிடம் குற்றம் இல்லை என்பதை உணர்ந்த பின்னரும், அண்ணனாகிய நீ அவனிடம் இரக்கம் காட்டவில்லை; மாறாக அவனைக் கொல்ல முயற்சி செய்தாய்; அவன் உன்னைப் பணிந்து "என்னைத் துன்புறுத்தாதே; நான் உனக்குத் தஞ்சம்; என்னுடைய குற்றத்தைப் பொருட்படுத்தாதே என்று வணங்கி இரங்கிக் கேட்டபோதும், நீ அதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், அவன் மீது மேலும் சினம் கொண்டு பொங்கி எழுந்தாய்" என இராமன், வாலியின் கேள்விக்குப் பதில் உரைக்கலானான்.

தம்பியிடம் இரக்கம் காட்ட வேண்டுவது அண்ணனின் கடமை. நீ அதைச் செய்யத் தவறினாய்; அதோடு மட்டுமல்ல, அவன் உன்னைத் தஞ்சம் என்று தாள் பணிந்தான். அப்போதும் நீ அவனுக்கு அடைக்கலம் கொடுக்கத் தவறினாய்; அதோடு மட்டுமல்ல நீ அவனைக் கொல்லவும் துணிந்தாய் என்று மூன்று குற்றச்சாட்டுகளை வைக்கிறான் இராமன்.

106. "ஊற்றம் முற்று உடையான், "உனக்கு ஆர் அமர்
தோற்றும்" என்று தொழுது, உயர் கையனைக்
"கூற்றம் உண்ணக் கொடுப்பென்" என்று எண்ணினாய்;
நால் திசைக்கும் புறத்தையும் நண்ணினான்." (4145)

(ஊற்றம் - வலிமை; முற்று - முழுவதும்; நண்ணுதல் - விரைந்து அடைதல்; ஆர் அமர் - அரியபோர்; தோற்றும் - தோற்றுப் போனேன்)

"சூரியன் புதல்வனான சுக்கிரீவன், உன்னை எதிர்க்கும் ஆற்றலும் வலிமையும் முழுவதும் பெற்றுள்ளான் என்றாலும், உடன் பிறந்தானுடன் பொருந்திய போரைச் செய்தல் நன்றன்று என்று கருதி, "நானும் என்னைச் சார்ந்தவர்களும் உன்னிடம் தோற்றவர்கள் ஆனோம்" என்று கூறித் தனது கைகளை உயரத் தூக்கி உன்னைத் தொழுதான். என்றாலும் நீ அதனைக் கிஞ்சித்தும் சிந்தியாது, "அவனை இயமன் உண்ணுமாறு கொன்றுவிடுவேன்"

என்று கூறிச் செயல்படுத்த முனைந்தாய். எனவே அதற்குப் பயந்து உலகத்தின் நான்கு திசைகளின் எல்லைக்கும், அதற்கு அப்பாலும் சென்று அடைந்தான்".

"ஊற்றம் முற்று உடையான்" என்பது சுக்கிரீவன் வலிமையில் வாலிக்குச் சற்றும் குறையாதவன் என்றும், அவன் சூரியன் புதல்வன் என்றும் பலபொருட்களை உள்ளடக்கிய சொற்றொடர். "உனக்கு ஆர் அமர் தோற்றும்" என்பது, அத்தகைய வலிமையுடையவனாய் இருந்தாலும், உடன் பிறந்தானுடன் போரிடுதல் போர்முறையன்று என்று கருதியும் போரின்போது, சுக்கிரீவனின் வலிமையில் பாதி, வாலிக்குப்போய்ச் சேர்ந்துவிடும் என்பது கருதியும், போர் செய்தால், தான் எப்படியும் தோற்றுவிடுவோம் என்று கருதியும் கூறியதாகும். இவ்வாறு உள்ளம் கொண்டவர்கள் பகைவரை நோக்கிக் கைகூப்பித் தொழுது, தம் தோல்வியை ஒப்புக் கொள்ளுதலும் ஒருவகைப் போர் முறையாகும். அவ்வாறு தன்னைப் பணிந்தவர்களை ஆதரித்து உரிய இடம் கொடுத்துப் பாராட்டுதலே போர்வீரனின் பெருந்தன்மையான செயலாயிருக்க, வாலியோ, அவனைக் கொன்று கூற்றுவனுக்கு இரையாக்குவேன் என்று கூறியது வாலியின் பெருமைக்குட் பெரும் பழியையும் இழுக்கையும் சேர்த்ததாகும். வாலி சரியான போர் வீரன் அல்லன் என்பதைக் குறித்ததாகும். "நால் திசைக்கும் புறத்தையும் நண்ணினான்" என்பது, வாலி சுக்கிரீவனை எல்லாத் திசைகளிலும் ஓடஓடத் துரத்திச் சென்று போர் புரிந்தான் என்பதைக் குறிக்கும். மெலியாரை வலியார் அடித்தல் தகாது என்பது இராமன் வாலி மீது கூறும் மற்றொரு குற்றச்சாட்டு.

107. "அன்னதன்மை அறிந்தும் அருளலை;
பின்னவன் இவன் என்பதும் பேணலை,"
வன்னி தான் இடும் சாப வரம்புடைப்
பொன் மலைக்கு அவன் நண்ணலின், போகலை." (4146)

(வன்னி - பிரம்மச்சாரி \ முனிவன் \ மதங்க முனிவன்; வரம்பு - தடை; பொன் - அழகிய; பின்னவன் - தம்பி)

"அவ்வாறு உன்னிடம் தோற்றேன் என்று உன்னைப் பணிந்து திக்குகளின் எல்லை வரை ஓடிச்சென்றான் என்ற அவனது நிலையை அறிந்தும், நீ சற்றும் அவன் மீது கருணை கொள்ளவில்லை; அவன் உன்னுடன் உடன் பிறந்த தம்பி என்பதையும் கருதிப் பார்க்கவில்லை; பிரம்மச்சாரியான மதங்க முனிவரின் சாபத்தின் எல்லைக்கு உட்பட்ட அழகிய ருசியமுக பர்வதத்தை அவன் சென்று சேர்ந்ததனால், நீ அவன் பின் போய்ப் போரைத் தொடரவில்லை. எனவேதான் அவன் இன்னும் உயிர் பிழைத்திருக்கிறான்" சாகவில்லை என்றான் இராமன்.

"உனக்கு அஞ்சி, உன்னைக் கைகூப்பித் தொழுது தோல்வியை ஒப்புக் கொண்டு சரணடைந்தவர்கள்பால் கருணை கொண்டு அவர்களை மன்னித்தல் பெரும் போர்த்தன்மை. அதுவும் நீ செய்யவில்லை. அவன் உன் உடன் பிறந்தவன் என்ற பாசஉணர்வு கொண்டாவது அவனுடன் போர் செய்தலை நீ தவிர்த்திருக்க வேண்டும். அதையும் நீ செய்யவில்லை. முன்பு மதங்க முனிவர்க்கு நீ செய்த துன்பத்தால் அவர் உனக்கு இட்ட சாபத்தால், நீ அடைய முடியாத ருசியமுக பர்வதத்தை அவன் சென்று சேர்ந்ததால், நீ அங்கு போக

முடியவில்லை. எனவே தான் அவன் இன்று உயிர் பிழைத்திருக்கிறான்" என்றான் இராமன் என்பதாம்.

இங்கே "வன்னி" என்பது பிரம்மச்சரியம் என்று பொருள் தந்து, வாழ்நாள் முழுதும் பிரமச்சரியத்தைக் கடைப்பிடித்துத் தவமியற்றி வாழ்ந்த மதங்க முனிவரைக் குறித்து நின்றது. வன்னி என்பது "வர்ணி" என்ற வட சொல்லின் திரிபு. சந்நியாசி என்று பொருள். மதங்க முனிவரின் சாபம் நாம் முன்னர் அறிந்ததே. பொன்மலை என்பது அழகிய மலை என்று பொருள் தந்து, ருசியமுக பர்வதத்தைக் குறிக்கும். ருசியம் - மான் \ கலைமான்; மூகம் - முகம்; பர்வதம் - மலை; கலைமானின் முகம் போன்ற உருவத்தைக் கொண்ட மலை என்பது பொருள். "இரலையன் குன்றம்" என்பது தமிழாக்கம். இரலை - கலைமான்.

108. "ஈரம் ஆவதும், இற்பிறப்பு ஆவதும்,
வீரம் ஆவதும், கல்வியின் மெய்ந்நெறி
வாரம் ஆவதும், மற்று ஒருவன் புணர்
தாரம் ஆவதும், தாங்கும் தருக்கு அதோ!" (4147)

(ஈரம் - அன்பு; இற்பிறப்பு - நல்ல குலப்பிறப்பு; வாரம் - பகுதி \ கூறு; புணர் - மணந்த; தாரம் - மனைவி; தாங்குதல் - காப்பாற்றுதல்; தருக்கு - பேராண்மை \ செருக்குமாம்)

"பிறரிடம் அன்பு காட்டுதலும், நற்குடிப் பிறந்ததன் பயனும், வீரத்தன்மை பெற்றிருத்தலும், கற்ற கல்வியின் வழி ஒழுகி மேம்படுதலும் ஆகிய இச்செயல்கள் எல்லாவற்றிற்கும், வேறு ஒருவனின் மனையாளின் கற்புக்குப் பங்கம் வாராத வண்ணம் அவளைப் போற்றிப் பாதுகாக்கும் பேராண்மை என்பது தானே நிலைக்களன்?" என்று கேட்கிறான் இராமன்.

இது வாலிமேல் இராமன் சுமத்தும் மற்றொரு பெரும் குற்றச்சாட்டு, பிறன் மனையை ஏறெடுத்தும் பார்க்காது இருத்தலும் அவள் கற்பிற்கு ஊறு நேரும் பொழுது அவளைக் காப்பாற்ற முற்படுதலுமே பேராண்மை எனப்படும். அதுதான் அன்பு, நற்குடிப்பிறப்பு, வீரம், கல்வி, கேள்வி, ஒழுக்கம் முதலிய எல்லா நற்குணங்களுக்கும் பெருமை சேர்க்கும் பண்பு என்பதாம். முன்பு வாலி "வீரமன்று, விதியன்று, மெய்ம்மையின் வாரம் அன்று, நின் மண்ணினுக்கு என் உடல் பாரமன்று, பகையன்று" என்று கூறினான் அல்லவா? அதற்குத் தக்க பதிலை இந்தப் பாடலில் இராமன் கூறியிருப்பதை உணர்க. பிறன்மனை நோக்குதல் என்னும் ஒரு பெருங்குற்றம் மேற்சொன்ன எல்லா நற்குணங் களையும் நசிப்பிக்கும் என்பது கருத்து "பிறன் மனை நின்றாரில் பேதையார் இல்" என்பது குறள் 142. "பிறன் மனை நோக்காப் பேராண்மை" என்பதும் குறள் 148.

109. "மறம் திறம்பல் "வலியம்" எனா, மனம்
புறம் திறம்ப, எளியவர்ப் பொங்குதல்;
அறம் திறம்பல், அருங்கடி மங்கையர்
திறம் திறம்பல்; தெளிவுடையோர்க்கு எலாம்." (4148)

(மறம் - வீரம்; திறம்பல் - வழுவுதல் \ மாறுபடுதல்; வலியம் - வன்மையுடையோம்; பொங்குதல் - சினந்து துன்புறுத்துதல்; எளியவர் - மெலிந்தவர் \ சிறியோர்; கடி - காவல்; திறம்ப - முறைகேடாக நடத்தலுமாம்)

“நல்ல நூல்களைக் கற்றுத் தெளிந்த அறிவுடையோர்க்கு எல்லாம், வீரத்தினின்று வழுவுதல் என்பது, “நாம் மிகுந்த வலிமையுடையோம்” என்ற செருக்குக் கொண்டு, உள்ளம் மாறுபட்டு, தம்மைக் காட்டிலும் வலிமை குறைந்தவர்கள் மீது சினம் கொண்டு அவர்களைத் துன்புறுத்துதல் ஆகும். அறத்தினின்றும் வழுவுதல் என்பது, நிறை அல்லது கற்பு என்னும் அரிய பாதுகாவலை உடைய மகளிரிடம் முறைகேடாக நடத்தல் ஆகும்” என்றான் இராமன்.

இராமன் வாலியை, பலநூற்கள் கற்று அறிவுத் தெளிவுடையவன் என்று கருதி, அதனை அவனுக்கு நேராகவே சொல்லிப் பாராட்டும் தன்மையும் காண்க. கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் எப்போது அறத்தினின்று மாறுபடுகிறார்கள் என்பதையும், எப்போது மறத்தினின்றும் மாறுபடுகிறார்கள் என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டும் பாடல் இது, “யாம் வலியோம்” என்று செருக்குக் கொள்ளுதலும், தம்மின் மெலியாரைத் துன்புறுத்துதலும் வீரத்தினின்றும் திறம்புதலாம்; பிறன் மனைவியை முறைகேடாக நடத்துதல் அறத்தினின்றும் திறம்புதலாம். இவையிரண்டையும் நீ செய்ததால் நீ தெளிந்த அறிவினின்றும் மாறுபட்டுவிட்டாய்” என்று இராமன் வாலி மீது மற்றொரு குற்றச்சாட்டைச் சுமத்துகிறான். இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களைப் பின்வரும் பல குறைகளாகச் சொல்லுவதும் உண்டு. மகளிரிடம் முறை தவறிநடத்தல்; நாம் வலிமையுடை யோம் என்று செருக்குக் கொள்ளுதல்; வீரச் செயல் அல்லாது வஞ்சகச் செயலில் ஈடுபடுதல்; தன் மனச்சாட்சிக்கு மாறாக நடத்தல்; எளியவர் மீது வலுவில் போர்செய்தல்; தருமத்திற்கு மாறுபட்ட பாவச்செயல்கள் செய்தல் என்பனவாம். எளியவரிடம் சினம் கொள்ளாமையே உண்மையான மறம்; மகளிரிடம் தவறாக நடந்து கொள்ளாமையே உண்மையான அறம் என்பது பொதுக்கருத்து.

110. “தருமம் இன்னது எனும் தகைத் தன்மையும்
இருமையும் தெரிந்து எண்ணலை; எண்ணினால்,
அருமை உம்பி தன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை, எய்தப் பெறுதியோ?” (4149)

(இருமை - இம்மை \ மறுமை; தேவி - மனைவி; உம்பி - உன் தம்பி; தகை - சிறப்பு)

“அறம் என்பது இத்தகைய சிறப்பான மேம்பாட்டினை உடையது என்பதையும், அதனால் விளையும் இம்மை மறுமைப் பயன்களையும் நீ சிந்தித்துப் பார்க்கவில்லை; அவ்வாறு பார்த்திருந்தாயானால், பெறுதற்கரிய உன் தம்பி சுக்கிரீவனின் அரிய உயிர் போன்ற மனைவியாகிய உருமையை, உன்னுடைய பெருமைக் குணங்களெல்லாம் சிதைத்து போகும்படி வலிதில்

கவர்ந்து; அவளை உன் தாரமாக ஆக்கிக் கொண்டிருப்பாயோ?" என்று கேட்கிறான் இராமன்.

இருமை என்பது இம்மை மறுமை என்றும், இப்பிறப்பில் புகழும் மறுபிறப்பில் வீடுபேறாகிய நற்கதியும் என்றும் பொருள்தரும். இதற்கு மாறாகப் பிறன்மனைவியை விரும்பினால், இப்பிறப்பில் பழியும், மறுபிறப்பில் நரகமும் வரும் என்பதாம். இச்செயலால் அவனது பெருமைக் குணங்கள் அனைத்தும் அவனை விட்டு நீங்கிவிட்டது என்கிறான் இராமன். "அறம், புகழ், கேண்மை, பெருமை, இந்நான்கும் பிறன்தாரம் நச்சுவார்ச்சேரா; பிறன்தாரம் நச்சுவார்ச்சேரும் பகை, பழி, பாவம் பகை என்று அச்சத்தோடு இந்நாற்பொருள்" என்பது நாலடியார் 82. "பகை, பாவம், அச்சம், பழி, என நான்கும் இகவாவாம் இல்லிறப்பான் கண்" என்பது குறள் 146.

111. "ஆதலானும், அவன் எனக்கு ஆர் உயிர்க்
காதலான் எனலானும், நிற் கட்டனென்;
ஏதிலாரும், எளியர் என்றால், அவர்
தீது தீர்ப்பது, என் சிந்தைக் கருத்து அரோ!" (4150)

(காதலான் - நட்பினன்; கட்டல் - களைதல்; ஏதிலார் - அயலார்; கருத்து - குறிக்கோள் \ கொள்கை \ கோட்பாடு)

"மேற்கூறிய - குற்றங்களை நீ செய்திருப்பதாலும், உன் தம்பி சுக்கிரீவன் என்னுடைய, அருமையான உயிர்த்தோழன் போன்றவன் ஆதலாலும், உன்னைக் களை பறிப்பது போலக் கொல்லும்படி நேர்ந்தது; என்னோடு தொடர்பில்லாத அயலாராய் இருந்தாலும், அவர்கள் வலிமை குறைந்தவர்களாய் இருந்தால், அவர்கள் படும் துன்பத்தினின்றும் அவர்களைக் காப்பாற்றுவது எனது உள்ளத்தின் கொள்கை ஆகும்". என்று இராமன் கூறி முடித்தான்.

"கட்டல்" என்பது களையெடுத்தல் என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பதை அறிக. அறிநெறிக்கு, வாலி, களை போன்று ஊறு விளைவித்தான் என்பது பெறப்படுகிறது. "கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல், பைங்கூழ் களை கட்டதனோடு நேர்" என்பது குறள் 550. "ஏரினும் நன்றாம் எரு இடுதல்; இட்டபின் நீரினும் நன்று அதன் காப்பு" என்பதும் குறள் 1038. "ஏதிலாரும் எளியர் என்றால், அவர் தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்து" என்பது சுக்கிரீவன் மட்டுமல்ல, சுக்கிரீவனைப் போல வேறுயார் வந்து என்னிடம் அன்பு கொண்டு, என்னைத் தஞ்சமடைந்து, என்னுடைய உதவியைக் கேட்டிருந்தாலும் நான் இவ்வாறுதான் செய்திருப்பேன் இது எனது வாழ்க்கைக் கோட்பாடு என்கிறான் இராமன். அதுபோலவே, வாலி என்றல்ல, வாலிபோல வலிமையுடையார் வேறு யாரேனும் எளியவரைத் துன்புறுத்தியிருந்தால், வாலியை அழித்தது போலவே அவர்களையும் அழித்திருப்பேன். ஏன் எனில் எளியார் தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்து என்றான் என்பதாம். இது இராமனுடைய பேரருள் தன்மையைப் புலப்படுத்தும். மேற்கூரிய பனிரெண்டு பாடல்களும் வாலியைத் தான் கொன்றது

அறத்தின் பாற்பட்டதேயாகும் என்று இராமன் தன் கொள்கையை நிலைநிறுத்தும் வகையில் அமைந்தன என்க. "என்பால் எப்பிழை கண்டாய் அப்பா?" என்று கேட்ட வாலிக்கு இராமன் கூறிய மறுமொழி என்பதாம்.

112. வாலியின் மறுமொழி (4 பாடல்கள்)

"பிழைத்த தன்மை இது" எனப் பேர் எழில்
தழைத்த வீரன் உரைசெய, தக்கிலாது
இழைத்த வாலி, "இயல்பு அல இத்துணை;
விழைத்திறம் தொழில்", என்ன விளம்புவான். (4151)

(பிழைத்த - குற்றம் செய்த; தழைத்த - தளிர்த்து விளங்கும்; தக்கிலாது - தக்கிலது \ தகுதியற்றது; இழைத்த - செய்த \ புரிந்த; இயல்பு - பொருந்துவன; விழைத்திறம் - விரும்பியபடி நடத்தல்; தன்மை - விதம்)

"நீ புரிந்த குற்றங்களின் விதம் இதுதான்" என்று பேரழகு நிரம்பப் பெற்ற வீரனாகிய இராமன், வாலிக்கு எடுத்துரைக்க, அதைக் கேட்ட, தகாத செயல்களைச் செய்த வாலி, "நீ இவ்வளவு நேரம் எடுத்துக் கூறியவை அனைத்தும், வானர இனத்தவராகிய எங்களுக்குப் பிறப்பால் இயற்கையானதல்ல; காரணம் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதைச் செய்வோம். அதுதான் எங்கள் தொழில், எங்கள் மனம் போனபடிதான் நாங்கள் செய்வோமே அன்றி நீ கூறுவது போல் செய்வது எங்களால் ஆகாது" என்று கூறி இன்னும் அதற்கு விளக்கம் கொடுப்பது போல் மேலும் சிலவற்றைச் சொல்லலானான்.

இங்கே ஒன்று கருதவேண்டும். எடுத்த எடுப்பிலேயே வாலி, தான் இத்தகைய செயல்களைச் செய்யவில்லை என்றோ, தான் செய்திருந்தாலும் அவை தவறில்லை என்றோ மறுக்கவில்லை. "நான் செய்திருக்கலாம் தான். அது எங்கள் குலப்பிறப்பால் உள்ள இயல்பு. நாங்கள் எங்கள் மனம் போனபடிதான் வாழ்வோம்; ஒரு நியதிக்கும் கட்டுப்பட்டு வாழும் முறை எங்கள் குலத்தின் இயல்பு அல்ல" என்று தான் கூறுகிறான் என்பதை நோக்க வேண்டும். வாலி தன் மீது உள்ள குற்றத்தின் கடுமையை உணர்த்திருக்கிறான். என்றாலும் அதற்கு வேறொரு வகையால் மாற்றம் கூறித் தப்பிக்கப் பார்க்கிறான் என்ற தொனியும் அவன் மறுமொழியில் தெரிவதை உணர்க.

113. "ஐய! நுங்கள் அருங்குலக் கற்பின் அப்
பொய்இல் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சிபோல்,
செய்திலன், எமைத் தேமலர் மேலவன்
எய்தின் எய்தியது ஆக இயற்றினான்." (4152)

(தே - தெய்வத்தன்மை வாய்ந்த; தேமலர் மேலவன் - பிரமன்; செய்தல் - படைத்தல்; பொய்இல் - பொய்த்தல் இல்லாத \ வழுவாத; இயற்றுதல் - நியமித்தல்; ஏய்ந்த - பொருந்திய; புணர்ச்சி - சேர்க்கை \ திருமணம் \ இல்லறவாழ்வு)

"தலைவனே! உங்கள் அரிய மனித குலத்திற்குரிய கற்பு என்னும் பண்பினை உடைய, அறநெறியினின்றும் தவறாத மகளிர்க்குப் பொருந்திய, திருமணம் என்னும் ஆண்பெண் சேர்க்கை நியதியை தெய்வத் தன்மை வாய்ந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் எங்களுக்கு நியமிக்கவில்லை; எங்கெங்கே என்னென்ன எவ்வெவ்வாறு கிடைக்கிறதோ, அங்கங்கே, அவ்வவற்றை, அவ்வவ்வாறு நுகரும்படி தான் எங்கள் வானர குலத்திற்கு விதித்திருக்கிறான்" என்றான் வாலி.

மனித குலத்திற்கு விதித்திருப்பது போன்ற திருமண நியதி, வானர குலத்தினருக்குப் பிரமனால் விதிக்கப்படவில்லை. எனவே வானரர்களாகிய எங்களிடம், மனிதகுலத்துக்கு உரிய நியதிகளை எதிர்பார்ப்பது தவறு என்கிறான் வாலி. நாங்கள் எய்தின் எய்தியதை நுகர்வோம். எங்களுக்குள் எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்கிறான் வாலி என்பதாம். அத்தகைய சிறந்த மன உணர்வும், பகுத்தறியும் பாங்கும் அஃறிணை உயிரினங்களாகிய எங்களுக்கு நியமிக்கப்படவில்லை. எனவே பிறன் மனைவியை நயத்தல் பாவம் என்ற மனிதர்களுக்குக் கூறப்படும் நியதி, பகுத்துணரும் மனஉணர்வு இல்லாத, அஃறிணை உயிரினங்களாகிய எங்களுக்குப் பொருந்தாது என்று எடுத்துரைக்கிறான் வாலி.

114. "மணமும் இல்லை மறைநெறி வந்தன;
குணமும் இல்லை குலமுதற்கு ஒத்தன;
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கு அலால்,
நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய்!" (4153)

(நிணம் - தசை \ மாமிசம் \ கொழுப்பு; இணங்கிய - தோய்ந்த - பொருந்திக் கலந்த; நேமி - சக்கரப்படை; ஒழுக்கு - வழக்கம் \ நடவடிக்கை \ செயல்பாடு; மறை - வேதம்; குலமுதல் - நற்குடி மரபு; குணம் - நற்பண்பு; உழி - வழி; உணர்வு - மனம்)

"பகைவர்களின் இரத்தத்தில் தோய்தலால் அவற்றின் நிணமும், துருப்பிடிக்காதிருப்பதற்காக எப்பொழுதும் நெய்பூசி வைக்கப் பட்டிருக்கும் சக்கரப்படையை உடையவனே! இராமா! எங்கள் வானர குலத்திற்கு, உங்கள் வேதநெறி முறைப்படி ஆகிவந்த திருமணம் போன்ற சடங்குகளும் இல்லை; உங்கள் குலமரபுக்கேற்ற நற்குணங்களும் எங்கள் பால் இல்லை; எங்கள் உள்ளம் எவ்வழிச் செல்லுகிறதோ, அதன்படியே நாங்கள் செல்வோம். அத்தகைய செயல்பாடு உடையவர்கள் நாங்கள்" என்கிறான் வாலி.

"மானிடர்களுக்குரிய திருமணம் போன்ற சடங்குகளோ, அன்பு, பாசம் போன்ற நற்பண்புகளோ அற்ற வானரகுலத்தவர் நாங்கள். எங்கள் மனம் போன படி வாழ்வதுதான் எங்கள் ஒழுகலாறு" என்கிறான் வாலி. இங்கே "நேமியாய்" என்றது பொதுவாகப் படைக்கலன்களை உடையவனே என்ற பொருளைத் தந்தாலும்; இவ்வாலி இராமனை ஆழிப்படையுடைய திருமாலின் அம்சமாகத் தன்னையும் அறியாமல் கூறினான் எனலாம். காரணம் தன் மார்பைத்

துளைக்கவல்லதொரு அம்பை, திருமாலைத் தவிர வேறு யாராலும் செலுத்த முடியாது என்பதை அறிந்தவன் வாலி, "திருவுடை மன்னரைக் காணின், திருமாலைக் கண்டேனே" என்பது திருவாய்மொழி.

115. "பெற்றி மற்று இது; பெற்றது ஓர் பெற்றியின்
குற்றம் உற்றிலென்; நீ அது கோடியால்
வெற்றி உற்றது ஓர் வெற்றியினாய்!" எனச்
சொற்ற சொல் தகைக்கு உற்றது சொல்லுவான். (4154)

(ஓர் - ஒப்பற்ற; பெற்றி - இயல்பு \ தன்மை \ பிறப்பின் தன்மை; கோடி - கொள்வாயாக; தகை - தகுதி)

"சாதாரணமாக எவராலும் வென்று வெற்றிபெற முடியாத என்னையே வென்று ஒப்பற்ற வெற்றிபெற்றவனே! உன் முயற்சியின்றி தன் இயல்பிலேயே உன்னை வந்தடையும் வெற்றியை உடையவனே! இராமா! எங்கள் வானர குலத்தின் பிறப்பியல்பு மேலே கூறியவாறு தான் அமைந்தது; எனவே அந்தத் தன்மையில் ஒழுகிய நான் குற்றமற்றவனாவேன்; ஒரு குற்றமும் செய்யாதவனாவேன் என்பதை நீ நன்கு மனத்தில் கொள்வாயாக!" என்று சொல்லிய சொல்திறம் வாய்ந்த வாலிக்கு, இராமன் மேலும் சிலவற்றை விளக்கிக் கூறத் தொடங்கினான்.

"வெற்றியுற்றதோர் வெற்றியினான்" என்பதற்குப் பலபொருள்கள் கூறுவதுண்டு. போர்க்களத்திற்கு நேரில் சென்று போர் செய்து வெற்றிபெறாது. நீ போர்க்களத்திற்கு வருகிறாய் என்று கேள்விப்பட்டவுடனேயே, தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு, உனக்கு வெற்றியைத் தந்து பணிந்து போகின்ற பகைவர்கள் அளித்த வெற்றியை உடையவனே என்றும் வலிந்து பொருள் கூறுவதுண்டு. இங்கே "சொற்றகை" என்ற சொல் கையாளப்பட்டிருப்பதைக் காண்க. நாம் வழக்கத்தில் பெருந்தகை, நெடுந்தகை என்று கூறுவதைப் போலக் கவிஞன், வாலியைச் "சொற்றகை" என்று கூறுவதனால், வாலி தன்னினும் உயர்ந்தார், ஒத்தார், இழிந்தார், என்ற மூவரிடத்தும் நன்கு பேசும் ஆற்றல் பெற்றவன் என்பதைக் குறிக்கிறார் என்க. கவிஞரும் வாலியைக் குரங்கினத்தில் ஒருவன் எனச் சேர்த்துக் கூற விழையவில்லை என்று தெரிகிறது.

116. இராமன் மீண்டும் "வாலி குற்றம் செய்தவனே" என்று வலியுறுத்துதல் (9 பாடல்கள்)

"நலம் கொள் தேவரின் தோன்றி, நவைஅறக்
கலங்கலா, அற நல்நெறி காண்டலின்,
விலங்கு அலாமை விளங்கியது; ஆதலான்,
அலங்கலார்க்கு ஈது அடுப்பது அன்றாம் அரோ!" (4155)

(நலம் - நல்லன; கொள்ளுதல் - ஆராய்ந்து தெரிந்து கொள்ளுதல்; நவை - குற்றம்; அலங்கல் - வெற்றிமாலை; அடுப்பது - பொருந்துவது)

"நல்லது இது, தீயது இது என்று பகுத்தறியும் இயல்புடைய தேவர்களின் தலைவனாகிய இந்திரனின் புதல்வனாகப் பிறந்து, எனது அம்பால் அடிபட்டுத் தரையில் கிடக்கும் இந்நிலையிலும், சற்றும் மனக்கலக்கமடையாது, வேதசாத்திரங்கள் கூறிய நல்ல நெறிகளைக் குற்றமின்றி எடுத்துரைக்கும் உன்னுடைய இயல்பை நோக்கினாலே, நீ விலங்குகளாகிய குரங்கினத்தைச் சார்ந்தவன் அல்லன் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. எனவே வெற்றிமாலையை அணிந்த உன்னைப் போன்றவர்களுக்கு, நீ உன் பிறப்பின் தன்மையைக் காட்டிக் கூறும் சமாதானம் பொருத்தமானது ஆகாது" என்றான் இராமன்.

திருமால், அயோத்தியில் தசரதன் மகன் இராமனாக அவதாரம் எடுக்கும்போதே, இந்திரன் தனது அம்சமாக வாலி, அங்கதன் முதலியவர்களைத் தோற்றுவித்தான் என்பது இராமனுக்குத் தெரியும். இப்பொழுது நாம் அதை நினைவிற் கொண்டு இப்பாடலின் பொருளைப் பார்க்க வேண்டும். எனவே வாலி தேவேந்திரனின் கூறு - மகன் - எனவே அவன் நல்லது இது, தீயது இது என்று பகுத்துணரும் இயல்புடையவன்.

அத்தோடு மட்டுமின்றி இறக்கும் தறுவாயிலும் கூடச் சிறிதும் கலங்காது அவன் வேதசாத்திரம் முதலிய அறநூல்களில் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளைக் குற்றம் குறையின்றித் தெளிவாக எடுத்துரைப்பதாலும், அவன் விலங்கினத்தைச் சார்ந்தவன் அல்லன் என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே வாலி கூறிய சமாதானம் இராமனுக்குச் சிறிதும் ஏற்புடையதாக அமையவில்லை என்பதாம். உயிரினங்களின் உயர்வு தாழ்வுகள், பிறப்பினாலோ உருவத்தினாலோ அமைவதில்லை; அவர்களின் பண்பு நலன்கள், குணத்தினாலேயே அமையும் என்று இராமன் வற்புறுத்துகிறான்.

117. "பொறியின் யாக்கையதோ? புலன் நோக்கிய
அறிவின் மேலதன்றோ அறத்தாறு தான்?
நெறியின் நோன்மையை நேர் நின்று உணர்ந்த நீ,
பெறுதியோ பிழை உற்று உறு பெற்றிதான்?" (4156)

(அறத்தாறு - அறநெறி; நோன்மை - வலிமை; பெற்றி - தன்மை; நோக்குதல் - பகுத்தறிதல்)

"தருமத்தின் வழி என்பது, ஐம்பொறிகள் வழிச்செல்லும் உடம்பின் எல்லைக்கு உட்பட்டு அடங்குவதோ? ஐம்பொறிகளை வாயிலாகக் கொண்டு நுகர்கின்ற பகுத்தறியும் இயல்புடைய அறிவின் பாற்பட்டதன்றோ? அறநெறியின் வலிமையை நேருக்குநேர் நின்று உணர்ந்த நீ, செய்தபிழையை, பிழையன்று என்று கூறி, அதனுள்ளே அழுந்திக் கிடக்கும் தன்மையை உடையவனோ?" என்கிறான் இராமன்.

ஐம்பொறி என்பது மெய் வாய், கண், மூக்கு, செவி, என்பன ஐம்புலன்கள் என்பன இதன் வாயிலாக உணரப்படும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன. ஐம்பொறிகள் உயிரினங்கள் அனைத்திற்கும் உண்டு; ஆனால்

ஐம்புலன்கள் ஆறறிவுடைய மக்களுக்கும், அவற்றில் சிறிது தாழ்ந்த ஐயறிவு உடைய கிளி, குரங்கு போன்ற பறவை, விலங்குகளுக்கும் உண்டு. "மக்கள் தாமே ஆறறிவு உயிரே"; பிறவும் உளவும் அக்கிளைப் பிறப்பே; மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்பது தொல்காப்பியம். எனவே அறத்தின் வழிச் செல்லுவது என்பது ஆறறிவுடைய மக்களுக்கு மட்டுமன்று. ஐயறிவுடைய குரங்கினத்தில் சிலருக்கும் உண்டு. அவை உடம்பால் வருவது அன்று. உள்ளத்தாலும், அறிவாலும், உணர்வுகளாலும் வரப்பெறுவன. எனவே, அறத்தாற்றின் வலிமை அனைத்தும் உணர்ந்த வாலி, தன்னைக் குரக்கினம் என்று கூறிக் கொள்ளுவதும், அதனால், தான் செய்தது தவறு அல்ல என்று கூறுவதும் சரியல்ல என்பதும் இராமனின் கூற்று. அறிவென்பது மனத்தை அது செல்லும் வழியே செல்லவிடாது, தீயவற்றினின்றும் நீக்கி, நல்லனவற்றுள் ஆற்றுப்படுத்துவது என்க.

118. "மாடு பற்றி இடங்கர் வலித்திட,
கோடுபற்றிய கொற்றவற் கூயது ஓர்
பாடு பெற்ற உணர்வின் பயத்தினால்,
வீடு பெற்ற விலங்கும், விலங்கதோ?" (4157)

(மாடு - பக்கம்; இடங்கர் - முதலை; வலித்தல் - இழுத்தல்; கோடு - சங்கு; கொற்றவன் - வெற்றியுடையவன் \ அரசன் \ திருமால்; கூயது - கூக்குரலில் அழைத்தது; பாடு - பெருமை; பயம் - பயன்; வீடு - வீட்டுலகு \ மோட்சம்; விலங்கு - யானை \ கஜேந்திரன்; உணர்வு - அறிவு \ மெய்யறிவு)

"முதலை ஒன்று ஒருபக்கமாகத் தன் காலை இழுக்க, அதனால் அச்சமுற்ற கஜேந்திரன் என்னும் யானை, தான் முற்பிறவியில் பெற்ற மெய்யறிவின் பயனாய், உடனே பாஞ்சசன்யம் என்னும் வெற்றிச் சங்கினை ஏந்திய திருமாலை எண்ணிக் கூவியழைத்தபோது, அக்கூக்குரல் கேட்டு கருடவாகனத்தில் எழுந்தருளித் தன் வாட்படையால் அம்முதலையைக் கொன்று, யானையைக் காப்பாற்றி, அதற்கு வீடு பேறளித்த நிகழ்ச்சியைக் கொண்டு பார்க்கும்போது, அந்த வீடுபேறு பெற்ற யானையை பிறப்பையும் வடிவத்தையும் கொண்டு அது விலங்குதான் என்று கருதமுடியுமா?" என்று கேட்கிறான் இராமன்.

கஜேந்திர மோட்சம் - இந்திரத்யும்நன் என்ற ஒரு மன்னன் திருமாலிடம் மிகுந்த பக்தி கொண்டவன். ஆழ்ந்ததியானத்தில் அமர்ந்திருந்தான். அப்பொழுது அகத்திய முனிவர் அங்கு வந்தார். இதனைக் கண்ணுறவில்லை மன்னன். முனிவர் கோபம் கொண்டு யானையாகப் போகும்படி சபித்தார். யானைப் பிறவியிலும் அம்மன்னன், திருமாலை வணங்கத் தவறவில்லை கஜேந்திரன் என்று பெயர் கொண்ட அந்த யானை, தினமும் ஆயிரம் தாமரை மலர்களைப் பொய்கையில் இருந்து பறித்துச் சென்று, அர்ச்சித்து வந்தது. ஒருநாள் பொய்கையில் தாமரைமலர் பறிக்கும் போது ஒரு முதலை அதன் காலைப் பற்றி இழுத்துக் கொண்டது. யானை தன் முன்வினைப் பயனால், மெய்யறிவு பெற்றிருந்ததனால், உடனே "ஆதிமூலமே" என்று சங்குப் படை கொண்ட

திருமாலைக் கூவியழைத்தது. அக்கூக்குரல் கேட்ட திருமால் சற்றும் தாமதியாது கருடவாகனத்தில் எழுந்தருளி, முதலையைக் கொன்று, அக் கஜேந்திரனுக்கு வீடு பேறளித்தார் என்பது ஒரு புராணக் குறிப்பு. அந்தப் பொய்கையில் கிடந்ததே ஒரு முதலை. அதுவும் ஒரு முனிவரின் சாபத்தால் முதலை உருவாக மாறி வந்த ஒரு கந்தர்வன் தான். அவன் பெயர் ஹீஹீ என்பதாகும். அவனைச் சபித்த முனிவனின் பெயர் தேவலன் என்பதாகும்.

உயிர்களின் துன்பத்தைத் துடைக்கும் ஆற்றல் பெற்றவன் இறைவன் ஒருவனே என்று மெய்யறிவினால் உணர்ந்த திறத்தையே "பாடு பெற்ற உணர்வின் பயன்" என்றார் என்க. அந்தக் கஜேந்திரன் போன்று மெய்யறிவு பெற்றுள்ள வாலி, தன்னை ஒரு விலங்கினமாகக் கருதிக் கொண்டு, தான் செய்த குற்றம், குற்றமல்ல என்று கூறுவது தகாது என்கிறான் இராமன்.

119. **"சிந்தை நல்லறத்தின் வழிச் சேறலால்,**
பைந்தொடித் திருவின் பரிவு ஆற்றுவான்,
வெந்தொழில் துறை வீடு பெற்று எய்திய
எந்தையும், எருவைக்கு அரசு அல்லனோ?" **(4158)**

(சிந்தை - மனம்; பைந்தொடி - பசியவளையல்; பரிவு - துன்பம்; ஆற்றுவான் - நீக்கும் பொருட்டு; எருவை - கழுகு)

"நல்ல அறநெறியின்கண் தன் மனம் ஈடுபட்டதால், பசிய பொன்னாலான வளையல்களை அணிந்த இலக்குமி போன்ற சீதையின் துயரத்தைத் தணிப்பதற்காக, கொடிய போர்த் தொழிலை இராவணனுடன் புரிந்து, அதனால் இறந்து, வீர சுவர்க்கம் எய்திய என் தந்தையாகிய சடாயுவும், கழுகுகள் என்னும் பறவை இனத்திற்கு அரசனல்லவோ?" என்று கேட்கிறான் இராமன்.

சடாயு, தசரதன் தோழன் என்பதும், அருணனின் புதல்வன் என்பதும், சீதையைக் காப்பாற்றும் பொருட்டு இராவணனுடன் வானில் போர்புரிந்து உயிர்துறந்து மோட்சம் பெற்றான் என்பதும் முன்னர்க் கண்டோம். அத்தகைய சடாயுவும் உருவத்தாலும், பிறப்பாலும் பறவையாய் இருந்தாலும், நன்னெறியின் பால் ஈடுபட்டதால் வீடு பேறடையவில்லையா? அதனால் அதைப் பறவையினம் என்று கூறி ஒதுக்கிவிட முடியுமா? அதுபோல வாலியும், பிறப்பால், உருவத்தால் குரக்கினம் என்றாலும் மெய்யுணர்வாலும், நன்னெறியின்பால் சிந்தை செலுத்துவதாலும், விலங்கினும் மேம்பட்ட உயர்திணை மக்களாகவே கருதப்படவேண்டும் என்பதும், அவன் செய்த குற்றங்கள், மன்னிக்கப்பட முடியாதன என்பதும் இராமனது குற்றச்சாட்டு. தொடி என்பது பொதுவாக வளையலைக் குறிக்கும் என்றாலும், இங்கே கையில் பதிந்தாற் போல் மற்ற வளையல்களுக்கு முன் அணியப்பெறும் ஒரு வகைக் கைவளை என்க.

120. **"நன்று, தீது என்று, இயல்தெரி நல்லறிவு**
இன்றி வாழ்வதன்றோ; விலங்கின் இயல்?
நின்ற நல்நெறி, நீ அறியா நெறி
ஒன்றும் இன்மை, உன் வாய்மை உணர்த்துமால்." **(4159)**

(இயல் - தன்மை; நின்ற - நிலைபெற்ற; அறியா - ஆராய்ந்து உணராத; வாய்மை - வாய்ச்சொற்கள்; உணர்த்துதல் - அறிவுறுத்துதல்; நல்லறிவு - விவேகம்)

"நல்லது இது, தீயது இது என்று பகுத்துணரும் இயல்பான நல்லறிவில்லாது வாழ்க்கை நடத்துவது தானே குரங்குகளாகிய விலங்குகளின் இயல்பு? அவ்வாறிருக்க, நிலை பெற்று நிற்கின்ற நல்லநெறியில், நீ ஆராய்ந்து உணராத நெறிகளே ஒன்றும் இல்லை என்பதை, நீ இப்பொழுது பேசிய பேச்சுக்களே தெரிவித்து விட்டன; எனவே இனிமேலும், நீ தாழ்ந்த குரங்கின் பிறப்பில் வந்தவன் என்று கூறாதே. நீ பிறப்பால் விலங்காய் இருந்தாலும் உன் மெய்யறிவால் அதனினும் மேம்பட்ட ஆறறிவுடைய மனிதனாகவே கருதப்படுவாய்" என்கிறான் இராமன்.

"சென்ற இடத்தால் செலவிடாது ஓரீஇ, நன்றின் பால் உய்ப்பது அறிவு" என்பது குறள் 421. இதுதான் இங்கே "நன்று தீது என்று இயல் தெரி நல் அறிவு" எனக் கூறப்பட்டிருக்கிறது என்க. நல்லறிவின்றி வாழ்வதல்லவோ விலங்கின் இயல்பு?. ஆனால் நீயோ நிலைபெற்ற நல்லறிவுகள் எல்லாவற்றையும் ஒருங்கே உணர்ந்திருக்கிறாய் என்பது உனது பேச்சாலேயே புலப்படுகிறது என்றான் என்க. எல்லா அறநெறிகளையும் அறிந்திருந்தும், அதற்கு மாறான நெறியில் நடந்து கொண்டது மாபெரும் குற்றம் என்று கூறுகிறான் இராமன்.

121. "தக்க இன்ன, தகாதன இன்ன, என்று
ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே; மனுவின் நெறி
புக்கவேல், அவ்விலங்கும் புத்தேளிரே." (4160)

(ஒக்க - ஒருசேர \ ஒருங்கே; உன்னுதல் - எண்ணி உணர்தல்; ஒக்கல் - நின்று நடத்தல் \ ஒழுகுதல்; புத்தேளிர் - தேவர்கள்)

"ஆறறிவு படைத்த உயர்ந்த பிறப்பாகிய மனிதப்பிறவி எடுத்திருந்தாலும், உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளத் தக்கவை இன்னவை, ஏற்றுக் கொள்ளத்தகாதவை இன்னவை, இவற்றால் நன்மை விளையும், இவற்றால் தீமையே விளையும் என்று ஒருசேர எண்ணிப்பார்த்து அதன்படி நடவாராயின், அவர்கள் ஆறு அறிவற்ற இழிபிறப்பாகிய விலங்கினத்தைச் சார்ந்தவர் என்றே கொள்ளப்பட வேண்டும். அதற்கு மாறாக, ஐயறிவுடைய, இழிகுலப் பிறப்பால் வந்த விலங்குகளாயிருந்தாலும், அவை மனு தரும சாத்திரத்தில் கூறிய வண்ணம் தங்கள் வாழ்க்கையில் பிறழாது ஒழுகுவார்கள் என்றால், அவர்கள் மனிதரைக் காட்டிலும் மேலான தேவர்கள் இனத்தில் வைத்துப் போற்றப்பட வேண்டுபவர்கள் ஆவார்கள்" என்கிறான் இராமன்.

இங்கே ஒன்றை நோக்க வேண்டும். "உயர்ந்துள மக்களும் விலங்கே" என்று கூறியவன் அவ்விலங்கும் மக்களே என்று கூறாது, "அவ்விலங்கும் புத்தேளிரே" என்று ஒரு படி மேலே உயர்த்திச் சொன்ன திறம் நோக்குக. மனுநெறி என்பது இட்சுவாகு வம்சத்தில் தோன்றிய மனு என்னும் வேந்தனால் மக்கள் குலத்திற்கு

அறிவுறுத்தப்பட்ட நீதிநெறி என்க. ஒருவருடைய பிறப்பாலும், உருவத்தாலும் அவர்களுடைய பகுத்தறிவுத்திறன் அளக்கப் படுவதில்லை என்பது உட்கருத்து. பகுத்தறிவும், நீதிநெறிவழி ஒழுக்கமும் கொண்ட விலங்குகள் தேவரை நிகர்த்தவை; அவையற்ற மனிதர்கள் விலங்குகளுக்கு நிகராவர் என்பதாம்.

122. "காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்
பாலின் ஆற்றிய பத்தி பயத்தலால்,
மாலினால் தரு வன்பெரும் பூதங்கள்,
நாலின் ஆற்றலும், ஆற்றுழி நண்ணினாய்." **(4161)**

(காலன் - கூற்றுவன் \ இயமன்; கடிந்த - வென்ற; கணிச்சி - மழுப்படை \ கோடாரி; கணிச்சியான் - சிவபெருமான்; ஆற்றிய - செலுத்திய; பயத்தல் - விளைத்தல்; மால் - திருமால் \ விருப்பமுமாம்; நண்ணுதல் - அடையப் பெறுதல்; தருதல் - அருளுதல்)

"இயமனுடைய வலிமையையே அழித்தொழித்த மழுப்படை யேந்திய சிவபெருமான்பால் நீ கொண்ட அளவிட முடியாத பக்தி உனக்கு நன்மை விளை வித்ததால், திருமாலினால் படைக்கப்பட்ட வலிய பெரிய ஐம்பூதங்களுள் நான்கின் ஆற்றலையும், நீ அடையப் பெற்றாய்" என்று வாலியின் ஆற்றலைப் புகழ்கிறான் இராமன்.

உயிர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலம் வரும்வரை காத்திருந்து அந்தக் காலம் வந்தபோது, சிறிதும் காலம் தாழ்த்தாது, அந்த எல்லைப்படி உயிரை நீக்குபவன் என்பதால் காலன் என்பது இயமனுக்குக் காரணப் பெயர். "காலனும் காலம் பார்க்கும்" என்பது புறநானூறு. "மாற்றரும் கூற்றம்" என்பது தொல் காப்பியம். "காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்" என்பது, மார்க்கண்டே யனுக்காகச் சிவபெருமான் இயமனுடன் போராடி அவனுக்கு வாழ்வளித்த நிகழ்ச்சியைக் குறிக்கும். "அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத அவனைக் காப்பது, காரணமாக வந்த காலன் தன் ஆருயிர் தனை வவ்வினாய்" என்பது சுந்தரர் தேவாரம். வாலி பெரும் சிவபக்தன் என்பது முன்னர்க்கூறிய பாடல் களால் தெரியவரும்.

இங்கே வாதத்துக்குரிய ஒரு கருத்து. "மாலினால் தரு" என்று கவிஞன் கூறியிருப்பதற்கு "திருமாலால் படைக்கப்பட்ட" என்றே பல உரையாசிரியர்களும் பொருள் எழுதியிருக்கிறார்கள். திருமால் படைப்புக் கடவுள் அல்ல என்பது நாம் அனைவரும் அறிந்ததே. பிரமன் தான் படைப்புக் கடவுள் என்று அறிந்த பின்னரும், திருமாலின் உந்திக் கமலத்திலிருந்து பிரமன் படைக்கப்பட்டதால் அதைத் திருமாலுக்கு ஏற்றியே அனைவரும் பொருள் கூறியிருக்கிறார்கள். "மால்" என்ற சொல்லுக்கு அன்பு அல்லது விருப்பம் என்று ஒரு அழகிய பொருளும் உண்டு. எனவே "வாலியின் சிவபக்தியில் மயங்கிய சிவபெருமான் அவன்பால் பெருவிருப்புக் கொண்டு அவனுக்கு அருளிய" என்று பொருள் கொள்ளுதல் இங்கு சாலப் பொருத்தமாகும். "பிச்சனுக்கே மால் கொண்டாள் என்றன் மகள்; மாலும் கருங்கடலே என் நோற்றாய்" என்பது ஆழ்வார் அருளிச்செயல். வைணவ உரையாசிரியர்கள் மால் என்ற சொல்லுக்குத்

திருமால் என்று பொருள் கொண்டும், சைவ இனத்தைச் சார்ந்த உரையாசிரியர்கள் இங்கே மால் என்ற சொல்லுக்கு "விருப்பம்" என்று பொருள் கொண்டும் உரை செய்திருப்பது கருத்தில் கொள்ளத்தக்க தொன்று. வாலி பெரும் சிவபக்தன் என்பது, "கோல மாமலரோடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி, வாலியார் வழிபடப் பொருந்தினார் குரங்காடு துறை நீலமாமணி மிடற்று அடிகள்" என்பதாலும், "நீலமாமணி நிறத்து அரக்கனை இருபது கரத்தொடு ஒல்க வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில் குரங்காடுதுறையே" என்னும் ஆளுடைய பிள்ளையார் தேவாரப் பாடலினாலும் அறியலாம். "எட்டு மாதிரத்து இறுதி, நாளும் உற்று, அட்ட மூர்த்தி தாள் பணியும் ஆற்றலான்" என்பதாலும் தெரியவரும். இங்கே ஐம்பெரும் பூதங்களுள் உருவறிய ஒண்ணாத ஆகாயம் தவிர, மற்ற நான்கு பூதங்களின் ஆற்றலும் கொண்டவன் வாலி என்பது முன்பும் கூறப்பட்டது நினைவு கூர்க. எனவே, உயர்ந்த சிவபக்தனும், தேவர்களுக்கு அரிய செயலான நான்கு பூதங்களையும் அடக்கும் ஆற்றல் பெற்றவனுமான வாலி, தன்னைக் குரங்கினம் என்று கூறிக்கொண்டு, அதற்குரிய செயல்களைச் செய்தது தவறாகாது என்று கூறுவது பொருந்தாது என்பது இராமனின் வாதம்.

123. "மேவஅரும் தருமத்துறை மேவினார்,
"ஏவரும், பவத்தால் இழிந்தோர்களும்;
தாஅரும் தவரும், பலதன்மை சால்
தேவரும், உளர், தீமை திருத்தினார்." (4162)

(பவம் - பிறப்பு; தா - ஆற்றல்; வருதல் - மிகுதல்; தவர் - தவத்தவர் \ முனிவர்கள்; திருத்துதல் - செய்தல்; ஏவம் - குற்றம்; ஏவர் - குற்றத்தையே செய்பவர்கள்; மேவஅரும் - அடைவதற்கரிய)

"குற்றமே செய்பவர்களும், பிறப்பால் கீழ்மைப் பட்டவர்களும் கூட, அடைதற்கு அரிய அறநெறியின்கண் சென்று, நன்மைபல புரிந்திருக்கின்றனர்; அதற்கு மாறாக, குற்றமே இல்லாத பெரும் ஆற்றல் படைத்த தவம் செய்யும் முனிவர்களும், பல நற்குணங்கள் பொருந்திய தேவர்களும் சில தீமைகளும் செய்திருக்கிறார்கள். எனவே "ஒருவர் நன்மை செய்வதும் தீமை செய்வதும் பெரியோராவதும், இழிந்தோராவதும் அவர்களது பிறப்பாலோ, குலத்தாலோ அல்ல; அவர்களுடைய நல்ல, தீய செயல்களினால் தான்" என்று மீண்டும் கூறுகிறான் இராமன்.

எடுத்துக்காட்டாக, கண்ணப்பன் என்பவன் இழிந்த வேட்டுவக் குலத்தவன்; அவன் வீடுபேறடைய வில்லையா? அதுபோல முனிவனான விசுவாமித்திரன் மேனகையிடம் மயங்கியதும், தேவேந்திரன் அகலிகைபால் தவறிழைத்ததும் உனக்குத் தெரியாதா? என்கிறான் இராமன். பிறப்பாலும் குலத்தாலும் உயர்ந்தவர்கள் தீய காரியங்கள் செய்தலும் உண்டு; பிறப்பாலும் குலத்தாலும் இழிந்தவர்கள் பெருமைப்படத் தக்க நன்மை தரும் அறக்காரியங்கள் இயற்றுவதும் உண்டு. இது உலக இயற்கை. எனவே வாலி, தான் பிறப்பால் இழிந்தவன் என்று கூறித் தன் செயலுக்கு ஆக்கம் சேர்ப்பது முரண்பாடானது,

ஏற்கத்தக்கதன்று என்கிறான் இராமன். "மேலிருந்தும் மேலல்லர் மேலல்லவர். கீழிருந்தும் கீழல்லர் கீழல்லவர்" என்பது குறள் 973.

124. "இனையது ஆதலின், எக்குலத்து யாவர்க்கும்,
வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்;
அனைய தன்மை அறிந்தும், அழித்தனை,
மனையின் மாட்சி" என்றான் மனு நீதியான். (4163)

(மனையின் மாட்சி - கற்பு மாண்பு \ இல்லறச் சிறப்பு; மேன்மை - உயர்வு; கீழ்மை - தாழ்வு)

மனுநெறி கூறிய வழியில் ஒழுகுபவனான இராமன், வாலியை நோக்கி, "எனவே அறநூல்களில் கூறப்பட்ட இவைகள், எந்தக் குலத்தவரானாலும், யாரானாலும், அவர்கள் உயர்வு பெறுவதும் தாழ்ந்து போவதும், அவரவர்கள் செய்கின்ற காரியங்களாலே அல்லாமல், பிறப்பினாலோ, குலத்தினாலோ அமைவது அல்ல; இத்தன்மைகளை நீ நன்கு உணர்ந்தவன். என்றாலும் பிறன் மனை நயந்து, இல்லறச் சிறப்பாகிய கற்பின் பெருமையைக் கெடுத்து அழித்து விட்டாய்" என்கிறான் இராமன்.

வினை என்பது நல்வினை, தீ வினை இரண்டையும் குறிக்கும்; நல்வினையினால் மேன்மையும், தீவினையினால் கீழ்மையும் விளையும் என்பது உலக இயற்கை. இதனை நன்கு உணர்ந்து இருந்தும், நீ உருமையைக் கவர்ந்து, அவள் கற்பின் மாண்பை அழித்தது மன்னிக்க முடியாத குற்றம். எனவே நான் உன்னை அம்பு தொடுத்து உன் உயிரைப் போக்கியது தவறல்ல. இது அறநெறியின் பாற்பட்டதேயாகும். அறத்தைக் காப்பதும், அறத்திற்குப் புறம்பாக இடையில் வரும் களைகளைக் கட்டலுமே இந்த அவதாரத்தின் கொள்கை என்பதைக் குறிக்கத்தான் கவிஞன் இங்கே இராமனை "மனுநீதியான்" என்றான் என்க. "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு ஒவ்வா, செய்தொழில் வேற்றுமையான்" என்பது குறள் 972. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும், தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்பது குறள் 505. வாலி அறிந்தே தவறு செய்தான் என்பதும் அதைத் தண்டித்தல் தவறாகாது என்பதும் இராமனின் துணிபு. மாட்சி என்ற சொல் பொதுவாகப் பெருமை என்று பொருள் தந்தாலும், இங்கே மனையின் மாட்சி என்றதனால் மனைவாழ்வுக்கு - இல்லறத்திற்குரிய சிறப்புப் பெருமையாகிய கற்பு எனப் பொருள் கொள்ளப்பட்டது.

125. "மறைந்திருந்து அம்பு எய்தது ஏன்?" என வாலி வினவுதல்

அவ்வுரை அமையக் கேட்ட அரிக்குலத்து அரசும், "மாண்ட
செவ்வியோய்! அனையது ஆக; செருக்களத்து உருத்து எய்யாதே
வெவ்விய புளிஞர் என்ன, விலங்கியே மறைந்து, வில்லால்
எவ்வியது என்னை?" என்றான்; இலக்குவன் இயம்பலுற்றான். (4164)

(அமைய - கூர்ந்து \ தெளிவாக \ மனம் பொருந்த; அரிக்குலம் - குரங்கினம்; மாண்ட - மாண்பு மிக்க; செவ்வி - நடுவுநிலைமை \ நேர்மை; செருக்களம் -

போர்க்களம்; உருத்து - கோபித்து; எய்தல் - தொடுத்தல்; வெவ்விய - கொடிய; புளிஞர் - வேடர்; எவ்வியது - செலுத்தியது \ ஏவியது; விலங்கியே - விலகியே \ தள்ளி நின்றே)

இராமன் கூறிய அவ்வறவுரைகளை நன்கு மனத்தில் பதியும் படி கூர்ந்து கேட்ட, குரக்கினத்தரசனாகிய வாலி, இராமனை நோக்கி, "பெருமைக்குரிய நற்குணங்களை உடையவனே! நடுவு நிலையும் நேர்மையும் பொருந்தியவனே! சரி. நீ கூறியபடியே நான் குற்றம் செய்தவனாகவே இருக்கட்டும். என்றாலும், போர்க்களத்தில், வீரனாகிய நீ, நேருக்கு நேர் வந்து, சினந்து அம்பினைத் தொடுக்காது, கொடிய வேடர்கள் ஒதுங்கி மறைந்து அம்பு எய்து விலங்கு களைக் கொல்லுவது போல, என்மேல் நீ மறைந்திருந்து அம்பு தொடுத்ததற்கு என்ன காரணம்? இது என்ன நியாயம்?" என்று கேட்டான். அதற்கு இலக்குவன் விடைகூற முற்பட்டான்.

வாலி இராமனை, "மாண்ட செவ்வியோய்" என்று அழைத்ததிலேயே, அவன் கூறுவது அறநெறியின் பாற்பட்டது, இராமன் பேசியவை நேர்மையானவை, நடுவு நிலைமையானவை என்பதை வாலி ஒப்புக் கொண்டதாகக் கவிஞன் பெய்த சொற்களின் தன்மையை நோக்குக. அதுபோதாது என்று மீண்டும் ஒருமுறை "அனையது ஆக" என்று "சரி நான் செய்தது அவ்வாறு தவறானதாகவே - அறத்திற்கு மாறுபட்ட செயலாகவே இருக்கட்டும் நீ கூறியதே உண்மையாக இருக்கட்டும்" என்று கூறியதனால், வாலி தன் தவற்றை முற்றிலும் ஒப்புக் கொண்டான் என்பது ஆகிறது. என்றாலும் என்னை ஒரு விலங்கு போல் பாவித்துத்தானே நீ மறைந்திருந்து அம்பு எய்திருக்கிறாய்! இது என்ன காரணம் கருதி, அல்லது இது என்ன நியாயம்? என்று கேட்கிறான்.

இங்கே ஒன்றை மிக நுணுக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வளவு நேரம் ஒருவர் பெருமையுடையோராவதும், கீழ்மையுடையோராவதும் அவர்கள் பிறப்பால் அல்ல, அவர்கள் செய்கின்ற செயல்களால்தான் என்று இத்தனை பாடல்களில் கூறிய இராமன், வாலியைக் குரங்கு எனக் கருதியதால்தானே மறைந்து நின்று அம்பு எய்திருக்கிறான்? அவன் வாலியை உயர்ந்தவன் என்றோ, அவன் கூறியது போல புத்தேளிர் என்றோ எண்ணியிருந்தால் நேருக்குநேர் நின்றல்லவா போர் செய்திருக்க வேண்டும்? அதை விட்டுவிட்டு ஒரு விலங்கினை வேட்டையாடுவது போல மறைந்து நின்று தன்னைக் கொன்றது என்ன நியாயம்? என்று கேட்கிறான் வாலி. இதற்கு இராமனால் நேராக பதில் சொல்ல முடியாத காரணத்தாலோ, அல்லது, தான் செய்தது பெருமைக்குரிய காரியம், தன் பெருமையைத்தானே கூறிக் கொள்ளுதல் நாகரிகம் ஆகாது என்ற காரணத்தினாலோ, இங்கே இலக்குவனை விட்டு மறுமொழி கூறவைக்கிறான் கவிஞன். இதை மறுமொழி என்பதை விடச் செய்த செயலுக்குச் சமாதானம் கூறுகிறான் என்பதே பொருந்தும் என்க. பொதுவாகவே வேடுவர்கள் பறவைகளை, விலங்குகளை நேருக்கு நேர் நின்று அம்பெய்ய மாட்டார்கள். விலகி நின்று புதர்களில் மறைந்திருந்தே அம்பு எய்வர். "புதர் மறைந்து வேட்டுவன் புள் சிமிழ்த்தற்றே" என்பது குறள் 274.

126. இலக்குவன் மறுமொழி

"முன்பு, நின் தம்பி வந்து, சரண்புக, முறை இல்லோயைத்
தென்புலத்து உய்ப்பென் என்று செப்பினன்; செருவில் நீயும்
அன்பினை உயிருக்கு ஆகி, "அடைக்கலம் யானும்" என்றி
என்பது கருதி, அண்ணல் மறைந்து நின்று எய்தது" என்றான். (4165)

(முறையில்லோய் - நீதிநெறிஒழுகாதவன்; புலம் - திசை; உய்த்தல் - செலுத்துதல்; அண்ணல் - பெரியோன்; அன்பு - பற்று)

"நாங்கள் இருசிய மூக பர்வதம் வந்து சேர்ந்த பொழுதே, உன்னுடைய தம்பியாகிய சுக்கிரீவன் வந்து, என் அண்ணன் இராமனிடம் சரணாகதி அடைந்து தஞ்சம் புக, அப்பொழுது இராமன் சுக்கிரீவன் மனைவி உருமையை நீ உன் மனைவியாக்கிக் கொள்ளும் முறையற்ற செயலைச் செய்த உன்னை தெற்குத் திசையிலுள்ள இயமன் உலகுக்கு அனுப்புவேன் - கொல்லுவேன் - என்று உறுதி மொழி கொடுத்து விட்டான்; பின்னர் போர்க்களத்தில் நீயும் உன் உயிரின் மேல் மிகுந்த பற்றுக் கொண்டு, அவனிடம் "நானும் உன் அடைக்கலம்; என்னையும் காப்பாற்று" என்று கூறுவாயோ என்று கருதித்தான் பெரியோனாகிய இராமன், மறைந்து நின்று அம்பு தொடுத்து உன் உயிரைக் கவர்ந்தான்" என்று சமாதானம் கூறினான் இலக்குவன்.

முன்பு வந்து தஞ்சம் புகுந்தவனைக் காப்பதும், தவறு செய்பவனைத் தண்டிப்பதும் இராமனின் கோட்பாடு என்பதை முன்னரே கண்டோம். எனவே இங்கே சுக்கிரீவனை வாலியிடமிருந்து காப்பாற்றுவதும், வாலியைத் தண்டிப்பதுமே நிறைவேற்றப்பட வேண்டுவது. இதற்கு மாறாக, தன்னுடைய இயல்பான கண்ணோட்டத்தினால் இராமன் வாலிக்கும் அபயம் கொடுக்க நேர்ந்தால், முன்பு சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாய்மை தவறிப்போகும். எனவேதான் உன்னை மறைந்து நின்று கொன்றான் என்று சமாதானம் சொல்லுகிறான் இலக்குவன்.

இங்கே ஒன்று கருதப்படவேண்டும். இராமனுடைய நோக்கம் வாலியுடன் போர் செய்து, அவனை வென்று, அவனைக் கொல்ல வேண்டும் என்பதல்ல; வாலியைத் தண்டிக்க வேண்டுமென்பதே. எனவே தண்டித்தல் என்ற செயல் மறைந்திருந்து செய்யப்படலாம் என்பது இதற்குக் கூறப்படுகின்ற ஒரு சமாதானம். வாலியின் முன் வந்து இராமன் நின்றிருந்தால், வாலியும் தஞ்சம் புகுந்து தன்னைக் காப்பாற்றச் சொல்லி வேண்டியிருப்பான் என்பது இராம இலக்குவர்கள் தாங்களே நினைத்துக் கொண்டது. அது உண்மையாக இல்லாமலும் இருக்கலாமல்லவா? இராமன் முன் வந்து நின்றால், இராமனின் வலிமையில் பாதி வாலிக்குச் சென்று சேரும் என்பது, வாலி வாங்கி வந்த வரம். அதை எண்ணியும் இராமன் மறைந்திருந்து அம்பு தொடுத்திருக்கலாமல்லவா? என்றால் மற்றவர்க்குப் பொருந்துவது எல்லாம், எல்லாம்வல்ல எம்பெருமானாகிய திருமாலின் அவதாரத்திற்குப் பொருந்தாது என்ற வாதம் சரியானதாக ஆகாது. இராவணனையே தன் வாலிற் கட்டிப் பதினாலு உலகங்களும் சுற்றிய ஆற்றல் கொண்டவன் வாலி; நான்கு பூதங்களின் ஆற்றல் ஒருசேரக்

கொண்டவன் வாலி. ஏன் இராமன் நேருக்குநேர் நின்று தண்டித்திருக்கக்கூடாது? ஏன் மறைந்திருந்து தண்டிக்க வேண்டும்? தண்டனையை நேருக்குநேர் நின்று தந்திருக்கக் கூடாதா? வாலி ஒருவேளை தஞ்சமடைந்திருந்தால் அவனைக் கொல்லுதல் அறமாகாது; அதைப் போலவே பெருந்தீங்கு செய்தவனைத் தண்டிக்காது விடுதலும் அறமாகாது. எனவேதான் மறைந்திருந்து அம்பு எய்தான் இராமன் என்று கூறுகிறான் இலக்குவன்.

127. வாலியின் மனமாற்றம்

கவிக்குலத்து அரசும், அன்ன கட்டுரை கருத்தில் கொண்டான்;
அவியுறு மனத்தனாகி, "அறத்திறன் அழியச் செய்யான்,புவியுடை
அண்ணல்" என்பது எண்ணினன்; பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச் சொன்னான்.(4166)

(கவி - குரங்கு; கட்டுரை - பொருள் செறிந்த மொழி; அவியுறுதல் - அடக்கி ஒழுகுதல்; சென்னி - தலை)

குரக்கினத் தரசனாகிய வாலி, இவ்வளவு நேரம் இராமபிரானும், இப்பொழுது இலக்குவனும் கூறிய பொருள் செறிந்த மொழிகளைத் தன் மனத்துள் பதியும்படி நன்றென ஏற்று உள்வாங்கிக் கொண்டான்; பின்னர் முன்பே கேள்வி ஞானத்தால் பெற்ற கேள்விச் செல்வத்தை மனத்தில் நிறுத்தி அடங்கிப் போகுபவனாகி, "உலகம் முழுதும் போற்றப்படும் பெரியோனாகிய இராமன், அறத்திற்கு மாறுபட்ட எந்தச் செயலையும் செய்து அறத்தின் சிறப்பு அழிந்து போகும்படி செய்ய மாட்டான்" என்று உறுதியாகத் தன் மனத்துள் எண்ணி, தனது குற்றத்தை உணர்ந்து, தனது தலையினால் இராமபிரானை வணங்கிப் பின்வருவனற்றைக் கூறத் தொடங்கினான்.

"அவியுறு மனம்" என்பது, செருக்கும் அகந்தையும், தன்னலமும் மாறி, இப்போது மாறுபட்ட, அடங்கிப் போன, பக்குவப்பட்ட மனம் என்ற விரிவான பொருளைத் தரும். கேள்வியைச் செல்வம் என்றது "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்ற குறள் 411-ன் அடிப்படையில் என்க. ஒருவன் எவ்வளவு தான் உயர்ந்த நூற்கல்விச் செல்வம் பெற்றிருந்தாலும், ஒரு ஞானாசிரியனது உபதேசம் இல்லாவிட்டால், அவன் உண்மைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்பது தெளிவாக விளக்கப்பட்டதை உணர்க. இங்கே வாலிக்கு இலக்குவன் ஞானாசிரியனாக இருக்க, இராமன் பரம்பொருளே என்பதை உணரத் தொடங்குகிறான் வாலி என்பதாம். கேள்வி என்பதற்கு வேதம் என்றே பொருள் கொண்டு அதை இராமபிரானுக்கு ஏற்றிச் சொல்லுவதும் உண்டு. இங்கே "செவியுறு கேள்விச் செல்வம்" என்பது, விசுவாமித்திரர், வசிஷ்டர் முதலியவர்களிடம் செவிவழியாகவே கற்றறிந்த நிறைந்த செல்வத்தை மிகுதியாக உடைய இராமனைக் குறிக்கும் என்பாரும் உண்டு. குரங்கினம் ஆகையால், கற்றறிவதைக் காட்டிலும் கேள்வி ஞானத்தாலேயே புகழ்பெற்றுத் திகழ்பவன் என்று வாலியைக் குறிக்கும் என்று கூறுவாரும் உண்டு. இச்சொற்றொடர் இருவருக்கும் பொருந்தும் வண்ணம் அமைத்த கவிஞனின்

கவித்திறனை வியக்காதிருக்கமுடியுமோ? மற்றொன்று; இப்பொழுது வாலி தரையில் இறக்கும் தறுவாயில் கிடக்கிறான். எனவே அவனால் நிலத்தில் விழுந்து வணங்க இயலாது. எனவே "தலைதாழ்த்திச் சென்னியின் இறைஞ்சினான்" என்றார்.

128. ''வாலி தன் குற்றம் பொறுக்க வேண்டுதல்''

> **"தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும், தகவும், சால்பும்,**
> **நீஎன நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை,**
> **நாய் என நின்ற எம்பால், நவையற உணரலாமோ?**
> **தீயன பொறுத்தி" என்றான் சிறியன சிந்தியாதான். (4167)**

(நல்கி - அருளி; தகவு - தகுதி; சால்பு - நிறைவு; நம்பி - ஆடவரில் சிறந்தோன்; நவை - குற்றம்; சிந்தித்தல் - உள்ளத்துள் கருதுதல்; தீயன - நல்லவை யல்லாதன \ தீங்குகள்; சிறியன - அற்பத்தனமானவை)

அற்பத்தனமான எண்ணங்களைச் சிறிதும் உள்ளத்துள் கருதத் தெரியாதவனாகிய வாலி, இராமனை நோக்கி, "உலகில் உள்ள எல்லா உயிரினங்களுக்கும் தாய் போன்று பேரருளைத் தருபவனே! ஆடவரில் சிறந்தவனே! இராமா! மனுநெறியிலும், வேத நெறியிலும் நின்று நேர்மையுடன் நீ காணும் பார்வையை, நாய் போன்ற இழிந்த பிறவியாகிய நாங்களும் குற்றமின்றி அவ்வாறே காண்போம் என்று நீ கருதுவது நியாயமா? எனவே, நான் செய்த தீய செயல்கள் எல்லாவற்றையும் தயவுசெய்து பொறுத்தருள்வாயாக?" என்று வேண்டுகிறான் வாலி.

உயிர்களுக்கு அன்பு செய்தலில் தாயைப் போன்றவர் வேறு எவரும் இலர். எனவே தான் முன்பும் தசரதனின் அன்புப் பண்பைக் கூறவந்த கவிஞன் "தாய் ஒக்கும் அன்பில்" என்றான். இப்போது இராமபிரானைக் குறிக்கும் போதும், வாலி கூற்றாக, "தாய் என உயிர்க்கு நல்கி" என்கிறான்; தருமம், நடுவுநிலைமை; மற்ற நற்குணங்கள் எல்லாமும் ஒரு வடிவு எடுத்து வந்தது போன்று வந்தவன் இராமன் என்பதை "தருமமும், தகவும், சால்பும், நீ என நின்ற நம்பி" என்றான். தன்னை நாயினும் இழிந்த பிறவியாகக் கருதுகிறான் வாலி. இராமன் அவனை "புத்தேளிர்" என்றும் "மானிடன்" என்றும் உயர்த்திக் கூறுகிறான். உண்மையில் அவன் குரங்கு இனத்தைச் சேர்ந்தவன். இருந்தாலும் தான் செய்த தீயசெயல்களின் தன்மையை உணர்ந்து இப்போது விலங்கினும் தாழ்ந்த நாய்ப் பிறவி எனத் தன்னைத் தானே தாழ்த்திக் கூறிக் கொள்கிறான் என்க. முன்பு குகனும் "நாய்க் குகன் என்று என்னை ஏசாரோ?" என்று கூறியதும் நினைவு கூர்க. "தீயன்" என்று வாலி இங்கே குறிப்பிடுவது, தன் தம்பி சுக்கிரீவன் தன்னிடம் தஞ்சம் அடைந்த பின்பும் தான் அவனைக் காவாது, துரத்தித் துரத்தி அடித்ததாலும், அவனது மனைவியான உருமையைத் தான் கவர்ந்து சென்றதாலும் என்க. "சிறியன சிந்தியாதான்" என்பது, இதுவரை தன்னலம் கருதி, இராமபிரானை நிந்தித்ததையும், இப்போதிலிருந்து மனமாற்றம் அடைந்து பெரியனவற்றையே - நன்மை தருவனவற்றையே தெளிவாகச் சிந்திக்கத்

தொடங்கி இருப்பவன் என்றும் பொருள்படும். வாலி குற்றங்கள் நீங்கி, ஞானம் பெற்றான் என்பதாம். இவ்வாறு ஞானம் பெற்ற வாலிக்குத் திரும்பவும் உயிரையும் உடலையும் அளிப்பதாக இராமன் தெரிவித்ததாகவும், வாலி அதை மறுத்து, இராமபிரானின் முன்னர் இறந்து போவதையே தான் விரும்புவதாகவும் அதுவே பெருமைதரும் என்று கூறியதாகவும், துளசிதாசர் எழுதிய "ராம சரிதம்" தெரிவிக்கிறது.

129. வாலி இராமனைத் துதித்தல்

இரந்தனன் பின்னும்; எந்தை! யாவதும் எண்ணல் தேற்றாக்
குரங்கு எனக்கருதி, நாயேன் கூறிய, மனத்துக் கொள்ளேல்;
அரந்தை வெம்பிறவி என் நோய்க்கு, அருமருந்து அனைய ஐயா!
வரம்தரு வள்ளால்! ஒன்று கேள்" என, மறித்தும் சொல்வான். (4168)

(தேற்றா - தெளிய முடியாத; அரந்தை - துன்பம்; வெம் - கொடிய; ஐயா - தலைவனே; மறித்தும் - மீண்டும்)

பின்னும் வாலி இராமனிடம் வேண்டிக் கொண்டான்; "தந்தை போன்றவனே! உலகில் நடக்கும் எச்செயலையும், நன்று இது, தீது இது என்று பகுத்தறியும் தெளிந்த உணர்வு இல்லாத குரங்கு தான் நான் என்று கருதி, நாய் போன்ற இழிந்தவனான நான் கூறிய கடுஞ்சொற்களை உன் மனத்தில் வைத்துக் கொள்ளாதே! தயவு செய்து மறந்து விடு; துன்பத்தையை தருகின்ற இந்தக் கொடிய பிறவியாகிய என்னுடைய நோய்க்கு, கிடைத்தற்கரிய அருமையான மருந்து போன்று வந்து எனக்கு அருள் செய்தவனே! தலைவா! வேண்டுபவர்க்கு வேண்டும் வரத்தினை நல்கும் வள்ளல் தன்மை கொண்டவனே! நான் கூறுவது ஒன்று உள்ளது. அதையும் கருணை கூர்ந்து கேட்டருள்வாயாக!" என்று மீண்டும் பின்வருவனவற்றைக் கூறலானான்.

மற்ற நோய்களுக்கு எல்லாம் மருந்து உண்டு; இந்தத் தீராத பிறவி நோய்க்கு உன்னைத் தவிர பெறற்கரிய மருந்து ஏதும் இல்லை என்பதைக் குறிக்க "அரந்தை வெம்பிறவி என் நோய்க்கு, அருமருந்து அனைய ஐயா!" என்றான் என்க, "எண்ணல் தேற்றா" என்பது மனம் ஒருநிலைப்படாது, மாறி மாறி அலைக்கும் சிந்தனை கொண்ட மனம் படைத்த குரங்கினம் என்பதைக் குறிக்கும். இதுவரையிலும் இராமனை நிந்தித்த வாலி, இப்பொழுதுதான் இராமன் உண்மையிலேயே பரம்பொருள்தான் என்று சிந்திக்கத் தொடங்கியிருக் கிறான். அதனால் தான் இங்கே "வெம்பிறவி என் நோய்க்கு அருமருந்து" என்றும் "வரம்தரும் வள்ளால்" என்றும் அழைக்கிறான் என்க. இதனையே பின்னர், வீடணன் கூற்றாக "மருள் உறு பிறவி நோய்க்கு மருந்துமாம்" என்று கூறப்போவதையும் இங்கு நினைவு கூர்க.

130. "ஏவு கூர் வாளியால் எய்து, நாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய், அறிவு தந்து அருளினாய்;
மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!
பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீயே!" (4169)

(ஏவு - ஏவுதல் \ செலுத்துதல்; வாளி - அம்பு; ஆவி - உயிர்; அறிவு - மெஞ் ஞானம்; மூவர் - மும்மூர்த்திகள் \ அரி, அயன், அரன்; முதல்வன் - முழுமுதற் கடவுள் \ பரம்பொருள் \ ஆதி காரணம்; தருமம் - புண்ணியம்; வேலைவாய் - சமயத்தில்)

“அம்பினைத் தொடுத்துச் செலுத்தி என்னைத் தண்டித்தாலும் நாய் போன்ற கீழ்ப்பட்டவனான என்னுடைய உயிர் போகும் முன்னரே எனக்கு மெய்யறிவைத் தந்து அருள் செய்தாய்! உலகம் இயங்குவதற்குக் காரணமான மும்மூர்த்தி களும் நீயே! அவர்களுக்குள்ளும் முதல்வனும் மூல காரணமானவனும் நீயே! இவ்வுலகில் உள்ள சர, அசரப் பொருள்கள் அனைத்தும் நீயே! நல்வினையால் வருகின்ற புண்ணியமும் நீயே! தீவினையால் வருகின்ற பாவமும் நீயே! கண்ணால் காண முடியாத மற்றவையெல்லாம் நீயே! முதலில் பகையெனக் கருதிப் பின்னர் உறவாகக் கொள்பவனும் நீயே!” என்று வாலி இராமனைத் துதிக்கிறான்.

வாலி இங்கே எல்லாப் பாடல்களிலும் தன்னை “நாயேன்“, “நாயடியனேன்“, “நாய் என நின்ற எம்பால்“, என்று சொல்லிக் கொள்வதில் ஒருபொருள் பொதிந் திருக்கிறது. நாய், அதன் உரிமையாளன் எத்துணை முறை அடித்தாலும், தண்டித்தாலும், அது அவனை விட்டுப்போகாது. அவனைச் சுற்றிச் சுற்றியே வரும். விரட்டியடித்தாலும் மீண்டும் வந்துவிடும். அது இயற்கை; காரணம். அவனை விட்டால் அதற்குப் போக்கிடம் வேறு கிடையாது. அதுபோல் இங்கே வாலியும் தனக்கு இராமனைத் தவிர வேறு அடைக்கலம் இல்லை என்பதை நன்கு உணர்ந்து, தெளிந்து, மெய்யறிவு பெற்று, அவனையே பற்றுக் கோடாகக் கொள்ளுகிறான் என்பதை உணர்க. “எறிந்த வேல் மெய்யதா, வால் குழைக்கும் நாய்” என்பது நாலடியார் 213. தனித்து நின்று இராமபிரான் உருவத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழிலையும் செய்யும் பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மூவரையும் ஒருசேரக் கண்ட மெய்ஞ்ஞானி வாலி, இப்போது இராமனை “மூவர் நீ” என்கிறான். அம்மும் மூர்த்திகளுக்கும் ஆதிகாரணம், முதல்வன், முழுமுதற்கடவுள் என்கிறான். உலகில் உள்ள எல்லாப் பொருள் களிலும் உவந்து உறைபவன் அவன் தான் என்று கருதி “முற்றும் நீ” என்கிறான்; காணப்படாத உருவமற்ற மற்றைப் பொருள்களிலும் உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்து விளங்குபவன் நீ என்று “மற்றும் நீ” என்கிறான்; உயிர்கள் செய்த நல்வினையின் பயனாகிய புண்ணியமும், தீவினைகளின் பயனாகிய பாவமும் நீயே என்கிறான்; உயிரினங்கள் தவறு செய்யும் போது அவர்களைப் பகைவர்களாகக் கருதித் தண்டித்தும், பின்பு அவர்கள் தவறை உணர்ந்து திருந்தி வரும்போது, அவர்களுக்கு மெஞ் ஞானத்தை அளித்தும், வீடுபேற்றை நல்கியும் அவர்களுக்கு அருள்புரிவதால், “பகையும் நீ, உறவும் நீயே” என்கிறான். இதே போன்று முன்பு விராதன், கவந்தன், இந்திரன் முதலியோர் துதித்ததையும் ஒப்பிட்டு நோக்குக. “முற்றும் மற்றும்” என்றும், “பாவம் தருமம்” என்றும் “பகை உறவு” என்றும் இரண்டு முரண்பட்ட சொற்களைச் சொல்லி யாவையும் நீயே என்று சொல்லுவது, பரம்

பொருள் ஒன்றுதான் இத்தகைய பேதங்கள் எவற்றையும் சாராது, என்றும் ஒன்றேபோல் நின்று உயிரினங்களுக்கு அருள் வழங்கும் தன்மை உடையது என்பதை உணர்த்தவே என்பதை அறிக. "நல்குரவும் செலவும், நரகும் சுவர்க்கமுமாய், வெல் பகையும் நட்பும், விடமும் அமுதமுமாய், பல் வகையும் பரந்த பெருமாள்" என்பது நம்மாழ்வார் பாசுரம். இவ்வாறு ஆவி பிரியும்போது, இறைவனை எண்ணித்துதித்தல் மிகச்சிலருக்கே கிடைக்கும் வாய்ப்பாகும். அதனை வாலி நன்கு பயன்படுத்திக் கொண்டதனால்தான் அவனுக்கு வீடுபேறு கிடைத்தது என்பதை உணர்க. "வஞ்ச உருவில் நமன்தமர்கள் வலிந்து, நலிந்து என்னைப் பற்றும்போது, "அஞ்சலை" என்று என்னைக் காக்க வேண்டும், அரங்கத்து அணைப் பள்ளியானே!" என்று உயிருடன் இருக்கும் போதே பெரியாழ்வார் பாடி வைத்திருப்பதையும் இங்கு நினைவு கூர்தல் பொருந்தும்.

131. "புரமெலாம் எரி செய்தோன் முதலினோர் பொரு இலா
வரமெலாம் உருவி, என் வசையிலா வலிமை சால்
உரமெலாம் உருவி, என் உயிரெலாம் நுகரும் நின்
சரமலால், பிறிது வேறு உளதரோ தருமமே?" (4170)

(புரம் - முப்புரம் \ திரிபுரம்; பொருஇலா - ஒப்பற்ற; உருவுதல் - ஊடுருவுதல், சிதைத்தல் \ துளைத்துச்செல்லுதல்)

"முப்புரங்களையும் எரி ஊட்டி அழித்து நீராக்கிய சிவபெருமான், முதலிய கடவுளர்கள் எல்லாம் எனக்கு நல்கிய ஒப்பற்ற வரங்களையெல்லாம் பயன் இல்லாதனவாகச் செய்து, என்னுடைய உயிரையும் கவர்ந்து செல்லும் ஆற்றல், உன்னுடைய தருமமே உருவெடுத்து வந்த அறக்கடவுள் போன்ற இராமபாணம் என்ற அம்பினைத் தவிர வேறு எந்த அம்பினுக்கு உண்டு?" என்கிறான் வாலி.

வாலிக்கு, சிவபெருமானைத் தவிர இந்திரன் மற்ற கடவுளர்களும் வரம் தந்திருக்கிறார்கள் என்பது பெறப்படுகிறது. என்னுடைய வரங்களையெல்லாம் அழியச் செய்து, என்வலிமை மிக்க மார்பினைத் துளைத்து, போக்கமுடியா என் உயிரைப் போக்கியது என்றால், உன் அம்பு அறக் கடவுளே அன்றி வேறு ஒன்றும் அல்ல; இராமபாணம் தவிர வேறு எந்த அம்பினுக்கும் அத்தகைய ஆற்றல் இருக்கமுடியாது என்று இராமபிரானைத் துதிக்கிறான் வாலி.

முன்பு மாரீசன் கூறிய "மற்று ஒருவர்க்காய் மனை வாழும் தாரம் கொண்டார். தம்மை, தருமம் தான் ஈரும் கண்டாய்" என்ற கூற்றை இங்கே நினைவு படுத்திக்கொள்ளுதல் தகும். நீதிநெறியினின்றும் பிறழ்ந்தோரை அறக்கடவுள் நின்று தண்டிக்கும். இப்பொழுது என்னை உன் இராமபாணம் உயிர்கவர்ந்ததால், உன் அம்பு, அறக்கடவுள்தான் என்கிறான் வாலி. "உரம்" என்ற சொல் மார்பு என்று பொருள் தந்தாலும், உடம்பு, உயிர்நிலை முதலியவற்றையும் உட்படுத்திக் கொள்ளும். "உயிர்எலாம்" என்று உயிரைப் பன்மையில் கூறியது, உயிர் பஞ்சப்பிராணன்களால் ஆனது என்பதைக் குறிக்க என்க. சிவபிரான் திரிபுரம் எரித்தது அவர் செய்த எட்டு வீரச்செயல்களுள் ஒன்றாகும் என்க.

வலிமைக்கு வசை என்பது போரில் புறமுதுகிடுதல், தோற்றல், அடிபணிதல் முதலியவற்றைக் குறிக்கும்.

132. **"யாவரும், எவையுமாய், இருதுவும் பயனுமாய்,**
பூவும் நல்வெறியும் ஒத்து, ஒருவ அரும் பொதுமையாய்!
"யாவன் நீ யாவது? என்று அறிவினார் அருளினார்;
தா அரும் பதம் எனக்கு அருமையோ? தனிமையோய்!" **(4171)**

(தனிமையோய் - ஒப்பற்றவன் \ தனி முதல்வன்; இருது - பருவங்கள்; ஒருவஅரும் - பிரித்தறிய முடியாத; தா அரும் - கெடுதல் இல்லாத; பதம் - பரமபதம் \ வீடுபேறு \ மோட்சம்; அருமை - அரியது; வெறி - நறுமணம்; பொதுமை - பொதுத் தன்மை \ நடுவு நிலைமை \ ஒத்த தன்மை)

வாலி இராமபிரானை நோக்கி, "ஒப்பற்ற தனித்தன்மை உடையவனே! எல்லா உயர்திணைப் பொருள்களிடத்தும், அஃறிணைப் பொருள்களாகிய சர, அசரப் பொருள்களிடத்தும் ஆறு பருவங்கள் போலவும் அவற்றால் விளையும் பயன்கள் போலவும், எங்கும் நீக்கமற நிறைந்து, பிரித்தறிய முடியாத ஒத்த தன்மையுடன் விளங்குபவனே! நீயார் என்பதையும், உன்னுடைய இயல்புகள் எத்தன்மையன என்பதையும் என்னுடைய மெய்யறிவு எனக்கு இப்போது அறிவுறுத்தி அருள் செய்தது. எனவே கெடுதல் இல்லாத, கிடைத்தற்கரிய பரமபதமாகிய வீடுபேறு எனக்கு இப்பொழுது கிடைக்கும் என்பது ஒரு அரிய செயலோ? அல்லவே; அது எனக்கு மிக எளிய செயலாகும். எனக்கு வீடுபேறு கிடைப்பது உறுதியன்றோ?" என்கிறான் வாலி.

"யாவரும் எவையுமாய் "என்பது, "யாவரும் எவையும் தான் ஆகி" என்னும் திருவாய்மொழி அடி ஒற்றியது. ருது என்னும் வடமொழிச் சொல் இருது எனத் தமிழாக்கம் செய்யப்பட்டது. இது பெரும் பொழுதாகிய ஆறு பருவங்களைக் குறிக்கும். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. இவை வசந்தருது, கிரீஷ்மருது, சரத்ருது, ஏமந்தருது, சிசிரருது என வடமொழியில் வழங்கப்படுகிறது. இங்கே இருதுவும் பயனும் என்பது காரணமும் நீயே காரியமும் நீயே என்பது போலப் பொருள்படுகிறது என்பதை அறிக. பொதுமை என்பது பொதுத்தன்மை உடையவன் என்ற பொருளில், இறைவன் உயர்ந்தவர், தாழ்ந்தவர், இன்னார், இனியர் என்று வேறுபாடு கருதாது, எல்லோரிடத்தும் ஒத்த தன்மையில் நீக்கமற நிறைந்திருப்பதைக் குறிக்கும். இங்கே "அறிவினார்" என்று மரியாதைப் பன்மை கொடுத்து அறிவினைக் குறித்தது, வாலிக்கு இப்பொழுது அவன் உள்ளத்தில் எழுந்த மெய்யறிவையும், அதனால் விளைந்த மெய்யுணர்வையும், சிறப்பித்துக் குறிக்க என்க. முன்பு வாலி, "ஆவிபோம் வேலைவாய் அறிவு தந்து அருளினாய்" என்றதையும் இங்கே நினைவு கூர்க. பரம்பொருளாகிய இராமபிரானின் உண்மை நிலையை அறியப் பெற்றதனால் தனக்குப் பரமபதம் கிடைப்பது உறுதியானதும், எளிமை யானதும் ஆகும் என்று நிச்சயமாகக் கருதுகிறான் வாலி.

133. "உண்டு எனும் தருமமே உருவமாய் உடைய நிற்
கண்டு கொண்டேன்; இனிக்காண என் கடவெனோ?
பண்டொடு இன்று அளவுமே, என் பெரும் பழவினைத்
தண்டமே, அடியனேற்கு உறு பதம் தருவதே!" (4172)

(உண்டு - நிலத்து நிற்பது \ அழியாதது; உருவம் - வடிவம் \ திருமேனி; பண்டு - தொன்மை; தண்டம் - தண்டனை; உறு - மிக்க)

"என்றும் அழியாது நிலைத்து நிற்கும் அறத்தன்மை என்று அறநூல்களில் கூறப்படுகின்ற தருமமே! என் எதிரில் நிற்கின்ற உன்னை, என் கண்களாரக் கண்டு கொண்டேன். இனி நான் வேறு காண்பதற்கு என்ன இருக்கிறது! எதுவும் இல்லை; நான் தொன்மையான நாட்களில் இருந்து இன்றுவரை செய்த பெரிய பழைய வினைகள் எல்லாம், இன்று நீ கொடுத்த தண்டனையால் தீர்ந்து போயிற்று. இனிமேல் நான் பரமபதம் அடைவதற்கு இந்தத் தண்டனைதான் மிக்க உதவியாக இருக்கும்" என்றான் வாலி.

இராமபிரான் தருமத்தின் உருவம் என்றும், தருமத்தின் மூர்த்தி என்றும் முன்பு கூறியதையும் நினைவிற்கொள்க. அத்தகைய தருமத்தின் வடிவாகிய உன்னையே நான் நேரில் கண்டு களிப்புற்றதால் இனி உலகில் காணுதற்கு வேறு என்ன இருக்கிறது? வேறு ஒன்றையும் காண முற்படமாட்டேன். அது தேவையுமன்று என்கிறான் வாலி. "அண்டர் கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள், மற்றொன்றினைக் காணாவே" என்பது திருப்பாணாழ்வார் பாசுரம். "பழங்காலந்தொட்டு இன்று வரையிலும் நான் செய்த பெரிய பழைய வினைகளுக்கெல்லாம் நீ எனக்குத் தந்த தண்டனை கிடைத்தற்கரிய இந்தப் பரமபதமேயாகும்" என்கிறான் வாலி. இறைவன் மேல் மிகுந்த பற்று உள்ளவர்கள், இறைவன் தரும் தண்டனையையும் அவனுடைய அருட்செயல் என்றே கருதுவர் என்பதும் அதை அவர்கள் பெரும் பேரின்பமாய் விரும்பி ஏற்றுக் கொள்வர் என்பதும் பெறப்படுகிறது; இராமன் அளித்த தண்டனையாகிய அவன் உயிர் கவர்தலே, அவனுக்கு மெய்யறிவைத்தந்து, பரமபதத்தையும் தருகிறது என்று உறுதிபடக் கூறுகிறான் வாலி என்க.

இவ்வாறு இறைவன் பக்தனைத் தண்டிப்பதை, ஒரு தந்தை தன் மகனைக் கண்டிப்பதற்கு ஒப்பாகப் பேசுகிறது சிவஞானபோதம். இது இறைவனின் மறக்கருணை எனப்படுகிறது. எனவே தண்டிக்கப்படுபவர் வீடுபேறடைவர் என்பது உறுதி என்பதாம். பின்னர், "கழிக்க அரும் கணக்கில் தீமை வைகலும் புரிந்துளோரும், வான்உயர்நிலையை, வள்ளல், எய்தவர் பெறுவர்" எனக் கூறப்போவதும் இக்கருத்தை ஒட்டியே என நினைவிற் கொள்ளவேண்டும். இங்கே "பெரும் பழவினை" என்பது, நாம் இப்பொழுது செய்யும் தீவினைகளை மட்டுமின்றி, நம் முற்பிறவிகளில் செய்த பழைய பெரிய வினைகளையும் குறிக்கும் என்பதாம். அவை தொடர்ச்சியாகச் சேர்த்து வைக்கப்பட்ட பாவங்கள் எனவே "பழம்பெரும் வினை" என்றான் என்க. நாம் முன்பு முற்பிறவியில் அனுபவித்த வினைப்பயன் சஞ்சிதம் எனப்படும்; நாம் இப்பொழுது இப்பிறவியில் அனுபவிக்கின்ற வினைப்பயன் பிராரப்தம் அல்லது பிராப்தம் எனப்படும்; நாம்

இனிமேல் நம் பிறவிகளில் அனுபவிக்கப் போகும் வினைப்பயன் ஆகாமியம் எனப்படும்.

134. "மற்று இனி உதவி உண்டோ? வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ! நின்னை, என்னைக் கொல்லிய கொணர்ந்து, தொல்லைச்
சிற்றினக் குரங்கினோடும் தெரிவு உறச் செய்த செய்கை
வெற்றரசு எய்தி, எம்பி, வீட்டு அரசு எனக்கு விட்டான்." (4173)

(மானம் - பெருமை; கொற்றவன் - வெற்றிவேந்தன்; கொல்லிய - கொல்லும் பொருட்டு; தொல்லை - தொன்று தொட்டு; வெற்று - பெரும்பயனற்ற \ வீணான; எம்பி - என்தம்பி; விடுதல் - வழங்குதல்)

"மிகப்பெருமை பொருந்திய வானைக் காட்டிலும் மிக்க பெருமை வாய்ந்த வெற்றிவேந்தனே! இராமா! என்தம்பியாகிய சுக்கிரீவன், என்னைக் கொல்லும் பொருட்டு உன்னை இங்கே அழைத்து வந்தான். அழைத்து வந்து, தொன்று தொட்டு அற்பக்குணங்களே வாய்ந்த குரங்கு இனத்தினோடும் ஆலோசனை செய்து, தான் கிஷ்கிந்தையின் அரசுரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதி, பயனற்ற அவ்வரசின் உரிமையை அவன் ஏற்றுக் கொண்டு, யாராலும் அடைய முடியாத வீடுபேறு என்னும் பரமபதத்தை எனக்கு அளித்திருக்கிறான். இதனைவிட ஒரு தம்பி தன் அண்ணனுக்குச் செய்யும் உதவி வேறு என்ன இருக்கிறது? இதுவன்றோ பேருதவி" என்று தம்பியின் குற்றத்தையும் குணமாகக் கருதிப் போற்றுகிறான் வாலி.

வானம் மற்ற நான்கு பூதங்களைக் காட்டிலும் பழமையானது, பெருமைபெற்றது, அளவில் உயர்ந்தது, மற்ற பூதங்கள் நான்கின் ஆற்றலும் வானிடமிருந்து தோன்றின. எனவே "வானினும் உயர்ந்த மானக் கொற்றவ" என இராமனின் பெருமையை வானளாவ உயர்த்தியிருக்கிறான் வாலி என்க. குரங்குகள் அறிவற்றன; நிலையான புத்தி இல்லாதன எனவே "சிற்றினக் குரங்கு" என்றான் என்க; "வெற்றரசு" என்பது பயனற்ற, வீணான கிட்கிந்தை ராஜியபரிபாலனத்தைக் குறிக்கும். அதற்கு மாறாக, "வீட்டரசு" என்பது, பயனுள்ள, யாவரும் எளிதில் அடைதற்கரிய பேரின்ப வீடாகிய மோட்சத்தைக் குறிக்கும். இங்கே தன் தம்பி சுக்கிரீவன் தனக்குச் செய்த துரோகத்தை, குற்றத்தை மறந்து, மறைத்து, மன்னித்து அவற்றை அவன் செய்த நற்குணச்செயலாக வாலி ஏற்றிக் கூறியதை நோக்குமிடத்து அவன் தன் தம்பி சுக்கிரீவன்பால் கொண்டிருந்த அன்பும் பாசமும் தெரியவருவதோடு, அவன் மீதிருந்த பகைமை மாறிவிட்டது என்பதும் தெரியவருகிறது. அவன் சிறியன சிந்தியாதான் என்ற கவிஞரின் வாக்கையும் மெய்ப்பிப்பதை உணர்க. குற்றத்தையும் குணமாகக் கருதிப் பாராட்டும் ஒரு செயலுக்கு இப்பாடல் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. தன் தம்பி தனக்குத் தீமையே செய்யக் கருதினான் என்றாலும், அது தனக்கு அழிவில்லாத பெரும் பேரின்பமாகிய வீடுபேற்றை நல்கியது என்று தம்பியைப் புகழ்கிறான் அண்ணன் வாலி.

135. வாலி இராமபிரானிடம் வேண்டிப் பெறும் வரம்

"ஓவிய உருவ! நாயேன் உளது ஒன்று பெறுவது உன்பால்;
பூவியல் நறவம் மாந்தி, புந்தி வேறு உற்ற போழ்தில்,
தீவினை இயற்றுமேனும், எம்பிமேல் சீறி, என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல்" என்றான். (4174)

(ஓவியம் - சித்திரம்; உருவம் - திருமேனி; எம்பி - என் தம்பி; இயல் - பொருந்திய; நறவம் - கள் \ தேறல்; புந்தி - அறிவு; வேறு உறுதல் - திரிந்த நிலைமை; சீறி - சினந்து; ஏவிய - செலுத்திய; பகழி - அம்பு; கூற்று - இயமன்; ஏவல் - செலுத்தாதே; மாந்துதல் - நிறையப்பருகுதல்; இயற்றுதல் - செய்தல்)

வாலி இராமபிரானை நோக்கி, "சித்திரத்தில் வரைந்து எழுதியது போன்ற பேரழகு கொண்ட மேனி எழில் கொண்டவனே! இராமா! நாயினும் இழிந்தவனாகிய நான் உன்னிடமிருந்து வேண்டிப் பெறக் கூடிய வரம் ஒன்று உள்ளது; என் தம்பியாகிய சுக்கிரீவன் பூவில் உண்டாகும் தேனாகிய மதுவினை அளவிற்கு மீறிப்பருகும் இயல்புடையவன். அவன் அவ்வாறு தேறல் மாந்தி, புத்தி பேதலித்து, அறிவு மயங்கிய சமயத்தில் ஏதேனும் தவறு இழைத்துவிட்டான் என்றால், அதற்காக, என்மீது இப்போது சீற்றம் கொண்டு செலுத்தினாயே இராமபாணம் என்னும் இயமன், அந்த இராமபாணத்தை என்தம்பி சுக்கிரீவன் மீது செலுத்திவிடாதே! என்று இரங்கிக் கேட்கிறான் வாலி.

முன்பு "ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்" என்று அழைத்த வாலி, இப்போது "ஓவிய உருவ" என்றழைப்பதை நோக்குக. என்தம்பி இயல்பாகத் தவறு செய்யமாட்டான் எனினும் பூவியல் நறவம் மாந்தும் போது தவறு செய்யக்கூடும். என்றாலும் அத்தகைய நிலையில் அவன் தவறு செய்தாலும், நீ அவன் மீது உன் இராமபாணத்தைச் செலுத்தக் கூடாது என்று வாலி, தன் உயிர்போகும் நிலையிலும் தன் தம்பியின் நல்வாழ்வுக்காக வரம் வேண்டுகிறான் என்றால் அவனுடைய பெருந்தன்மையும், சிறியன சிந்தியாத தன்மையும் இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் அவனது சால்பும் தெரியவருகிறது என்பதாம். நறவம் என்பது, நறை, நறா, நறவு என்றும் வழங்கப்படும். கூற்றுவன் உயிரைத் தக்க சமயத்தில் தவறாது உடலினின்றும் பிரிப்பது போல, இராமபாணமும் உயிரைக் கவர்வதால் "பகழிஎன்னும் கூற்று" என்றான் என்க.

136. வாலி, மேலும் ஒரு வரம் வேண்டுதல்

"இன்னும் ஒன்று இரப்பது உண்டால்; எம்பியை உம்பிமார்கள்
"தன் முனைக் கொல்வித்தான்" என்று இகழ்வரேல், தடுத்தி, தக்கோய்!
முன்முனே மொழிந்தாய் அன்றே இவன் குறைமுடிப்பது? ஐயா!
பின் இவன் வினையின் செய்கை, அதனையும் பிழைக்கல் ஆமோ?"(4175)

(இரப்பது - வேண்டிப்பெறுவது; உம்பி மார்கள் - உன் தம்பியர்கள்; எம்பி - என் தம்பி; முனை - தமையனை \ முன்னவனை; தக்கோய் - தகுதிமிக்க

பெரியோன்; முன்முனே - முன்னரே; மொழிதல் - உறுதி கூறுதல்; பிழைத்தல் - தவற விடுதல் \ விட்டு நீங்குதலுமாம்)

வாலி இராமபிரானை நோக்கி, "மேன்மைக் குணங்கள் அனைத்தும் பொருந்திய தகவுடையவனே! தலைவனே! நான் உன்னிடம் வேண்டிப் பெறுவது இன்னும் ஒன்று உள்ளது. அது என்னவென்றால், என்னுடைய தம்பி, சுக்கிரீவனை, உன்னுடைய தம்பியர்கள், "இவன்தான் நம் தமையனைக் கொல்வித்தவன்" என்று சுக்கிரீவனைக் குறித்துப் பழித்துக் கூறுவார்களே யானால், தயவு செய்து அவர்களுக்கு அறிவுரைகூறி அவர்கள் அவ்வாறு கூறாத வண்ணம் தடுத்து விடுவாயாக! நீ சுக்கிரீவனுக்கு முன்னரே தந்த உறுதிமொழிப்படி, அவனது குறையாகிய என்னைக் கொல்வதும், கிஷ்கிந்தையின் அரசுரிமையை அவனுக்கு நல்குவதும் தான் இப்போது நிறைவேறி விட்டதல்லவா? எனவே, இனிமேல் அவன் தந்த உறுதிமொழியாகிய, "சீதையைக் கண்டுபிடிக்க நான் உதவுவேன்" என்பது குறித்து அவன் இனிமேல் செய்யவேண்டிய செய்கைகளுக்கு நாம் தடையாக இருக்கலாமா?" என்கிறான் வாலி.

இராமன்பால் அவனது தம்பியர்கள் கொண்டிருக்கும் பேரன்பும் பெருமதிப்பும் உணர்ந்தவன் வாலி. எனவே தான், அவர்கள் சுக்கிரீவனை இகழக்கூடும் என்று எதிர்பார்க்கிறான். அதைத் தடுக்கும் பொருட்டு, முன்னரே இராமபிரானிடம், தன் தம்பிக்கு அத்தகையதோர் நிலைவாராது தடுத்துவிடுவாயாக என்று வேண்டுகிறான் என்றால் அவன் தன் தம்பி மீது எத்தகையதொரு பேரன்பும் பாசமும் கொண்டிருந்தான் என்பது விளங்கும். இதேபோலப் பின்னர், கும்பகருணனும் வீடணனுக்காக வேண்டிக்கொள்ளுவதையும் இங்கு ஒப்புநோக்குதல் தகும். "பிழைக்கல்" என்ற சொல் பொதுவாகத் தவறு செய்தல் என்ற பொருளையே தரும் என்றாலும் இங்கே தவறவிடலாமா என்ற பொருளில் பயன் படுத்தப்பட்டிருப்பதை அறிக. இவ்வாறே "பிழைத்த பிடியைக் காணாது ஓடிப் பெருங்கை மத வேழம், அழைத்துத் திரிந்து அங்கு உறங்கும் சாரல் அண்ணாமலையாரே!" என்று ஆளுடைய பிள்ளையார் இதேபொருளில் தம் தேவாரத்தில் கூறுவதையும் நினைக.

137. வாலி அனுமனைப் பற்றி இராமபிரானிடம் கூறுதல்

"மற்றுஇலென் எனினும், மாய அரக்கனை வாலில் பற்றி,
கொற்றவ! நின்கண் தந்து, குரங்கு இயல் தொழிலும் காட்டப்
பெற்றிலென்; கடந்த சொல்லின் பயன் இலை; பிறிது ஒன்றேனும்
"உற்றது செய்க" என்றாலும், உரியன் இவ்வனுமன்" என்றான். (4176)

(மாயம் - வஞ்சனை; கடந்த - நிகழ்ந்தன; உற்றது - பொருந்துவது; உரியன் - தகுதியுடையவன்)

"வெற்றிவேந்தனே! உன்னுடைய காரியத்தில் உனக்கு வேறு எந்த வகையிலாவது உதவக்கூடிய பெரும்பேறு பெற்றேன் அல்லேன் என்றாலும்,

வஞ்சனைச் செயல்களில் வல்ல அரக்கனாகிய இராவணனை என் வாலினால் சுற்றி இறுக்கக்கட்டி, உன்முன் கொண்டு வந்து கொடுத்து, எங்கள் குரங்கு களுக்கு உள்ள இயல்பான செய்கைகளைக் காட்டி, உன்னை மகிழ்விக்கும் பேறு பெற்றவனாகவும், ஆகவில்லை. நடந்து போனதை இப்போது கூறி ஒன்றும் பயன்விளையப் போவதில்லை. எனவே, நீங்கள் கட்டளையிட்டால், இராவணனை வாலால் கட்டிக்கொண்டு வரும் அத்தகைய காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றலும், தகுதியும் படைத்தவன் இவ்வனுமன்" என்று அருகிலிருந்த அனுமனைச் சுட்டிக் காட்டிக் கூறினான் வாலி.

"மற்று" என்பது இராவணனை வென்று சீதையை ஒருநொடியில் அவனிடமிருந்து மீட்டுக் கொண்டு வருவதைக் குறிக்கும்; அத்தகைய செயலைச் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை என்றாலும் அந்த இராவணனை மட்டுமாவது என் வாலால் கட்டிக் கொண்டு வந்து உன்னிடம் சேர்ப்பித்திருக்க வேண்டும். அதுகூடச் செய்ய இயலாதவனாகி விட்டேனே என்று தன்னிலை விளக்கம் அளிக்கிறான் வாலி. இராவணனை வாலால் கட்டிக் கொண்டுவருவது என்பது எல்லோருக்கும் எளிதான செயலன்று. முன்பு இராவணன் திக்குவிஜயத்தின் போது, வாலி இவ்வாறு இராவணனைத் தன் வாலால் கட்டி எட்டுத் திசைகளுக்கும் இழுத்துக் கொண்டு சென்று அவனைத் துன்புறுத்தியிருக்கிறான். எனவே இச்செயல் அவனுக்கு எளிதாகப்பட்டது என்பதாம். அத்தகைய செயலைக் "குரங்கியல் தொழில்" என்று தாழ்த்திக் கூறிக்கொண்டது, இராமபிரானுடைய பேராற்றலையும் அவனது பேராற்றலுக்கு முன் தான் செய்யும் எந்தக் காரியமும் தூசுக்குச் சமானம் என்பதையும் வாலி நன்குணர்ந்திருந்ததால்தான் என்பதாம். உனது திருவுள்ளத்திற்குப் பொருந்திய எந்தச் செயலைச் செய்யச் சொன்னாலும், அதை தன் மனம், மொழி, மெய்களால் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவன் என்று, அனுமனின் ஆற்றலை யும் நன்குணர்ந்திருந்த வாலி, அதனை இராமபிரானுக்கு எடுத்துக் கூறுகிறான் என்க.

138. "அனுமன் என்பவனை, ஆழிஐய! நின் செய்ய செங்கைத்
தனுஎன நினைதி; மற்று, என் தம்பி நின் தம்பி ஆக
நினைதி; ஓர் துணைவர் இன்னோர் அனையவர் இலை;நீ ஈண்டு,அவ்
வனிதையை நாடிக் கோடி; வானினும் உயர்ந்த தோளாய் !" (4177)

(ஆழி - சக்கரம் \ ஆணைச்சக்கரம்; செய்ய - செப்பம் பொருந்திய \ அழகமைந்த; தனு - வில் \ கோதண்டம்; வனிதை - நங்கை; கோடி - கொள்ளு வாயாக; ஈண்டு - இந்நிலையில்; நாடுதல் - தேடுதல்)

வாலி இராமபிரானை நோக்கி, "ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்த தோள்களை உடையவனே! ஆணைச் சக்கரத்தை உடைய தலைவனே! இராமா! இந்த அனுமன் என்பவனை, நீ உன்னுடைய அழகமைந்த செப்பம் பொருந்திய சிவந்த கைகளில் ஏந்தியுள்ள கோதண்டம் என்னும் வில்லுக்கு ஒப்பாகவே நினைத்துக் கொள்வாயாக! மேலும் என் தம்பியாகிய சுக்கிரீவனை,

உனது தம்பியருள் ஒருவனாகவே கருதுவாயாக; உனக்கு இவர்களைப் போல ஆற்றல் மிக்க ஒப்பற்ற துணைவர்கள் வேறுயாரும் இருக்க மாட்டார்கள்; எனவே நீ, இவர்களை அடைந்த இப்பொழுது முதல், இவர்கள் உதவியுடன் உன்னுடைய மனைவியான சீதையைத் தேடிக் கண்டுபிடித்துப் பெற்றுக் கொள்வாயாக!" என்றான் வாலி.

ஆழி என்பது ஆக்ஞாச் சக்கரத்தை உடைய மன்னவன் இராமன் என்றும், ஆழிப் படையை உடைய திருமாலின் அம்சமான இராமபிரான் என்றும் பொருள்படும். வாலி அனுமனை இராமனின் கையிலுள்ள கோதண்டம் போலக் கருதுக என்று கூறியதற்கு, அக்கோதண்டம்தான் தீயோரை அழிக்கவும், நல்லோரைக் காத்து அறம் தலை நிறுத்தவும் பயன்படப்போகிறது என்பதால் என்க. அந்த வில்லைப் போலவே, அனுமனும் துஷ்ட நிக்ரகத்திற்கும், சிஷ்டபரிபாலனத்திற்கும் உனக்கு உன்னுடைய வில்லைப் போல உன்னை நீங்காது நின்று துணைபுரிவான் என்பதும், உன் அம்பு எவ்வாறு உன் குறிப்பு அறிந்து விரைந்து சென்று இலக்கினைத் தாக்கிப் பின் உன்னிடமே வந்து சேருமோ, அவ்வாறே இவ்வனுமனும் உன் குறிப்பு அறிந்து ஒழுகும் பான்மை உடையவன் என்பதும் கருத்து. இவர்கள் இருவரும் மிகுந்த ஆற்றல் பெற்றவர்கள். உனக்கு ஒப்பற்ற துணையாக விளங்குவார்கள் என்பதையும் குறிக்கவே "ஓர் துணைவர் இன்னோர் அனையவர் இல்லை" என்றான் என்க. தன்னுடைய தம்பி, தான் மாண்டு போனதால் கலக்கமுறுவான் என்று கருதி, இராமனை அவன் தம்பியருள் ஒருவனாகச் சுக்கிரீவனைக் கருதுமாறு வேண்டும் பண்பு, அவன் சுக்கிரீவன்பால் எத்தகைய பேரன்பு கொண்டிருந்தான் என்பதைப் புலப்படுத்தும். இவ்விருவரையும் நீ துணையாகக் கொண்டால் சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பது எளிதாகும் என்றான் என்பதாம்.

139. வாலி சுக்கிரீவனுக்குக் கூறிய உறுதி மொழிகள்

என்று அவற்கு இயம்பி, பின்னர், இருந்தனன் இளவல் தன்னை
வன்துணைத் தடக்கை நீட்டி வாங்கினன் தழுவி, "மைந்த!
ஒன்று உனக்கு உரைப்பது உண்டால் உறுதி;அ஛து உணர்ந்து கோடி;
குன்றினும் உயர்ந்த தோளாய்! வருந்தலை" என்று கூறும். (4178)

(இளவல் - தம்பி \ சுக்கிரீவன்; குன்று - மலை; கோடி - மேற்கொள்வாயாக; வாங்குதல் - இழுத்தல்; உறுதி - நன்மைதரும் சொற்கள்)

என்று வாலி இராமபிரானிடம் கூறி, தன் அருகில் செயலற்று நின்றிருந்த தன் தம்பியாகிய சுக்கிரீவனைத் தனது வலிய இரண்டு பெரிய கைகளை நீட்டி இழுத்து அணைத்துக்கொண்டு, "புதல்வனே! தம்பி! நான் உனக்கு நன்மை தரும் சில சொற்களைச் சொல்லவேண்டியது இருக்கிறது. அதனை நன்கு கூர்ந்து கேட்டு, உணர்ந்து, அதன்படி நடப்பாயாக! மலையினைக் காட்டிலும் உயர்ந்த தோள்களை உடையவனே! என் இறப்புக்காக நீ வருந்தாதே" என்று அவனைத் தேற்றி, மேலும் சில கூறுவானாயினான்.

"பின்னர் இருந்தனன்" என்ற சொல்லுக்கு, தன் செயலுக்காக வெட்கமுற்று, தன் தமையன் முன்வர அஞ்சிப் பின்னால் நின்று கொண்டிருந்த சுக்கிரீவன் என்றும் பொருள் கூறுவதுண்டு. சுக்கிரீவன் தன் அண்ணன் வாலி தரையில் விழுந்தது கண்டு பாசஉணர்வால் நேசத்தாரைகள் வளர்த்துச் சோர்ந்து தளர்ந்து போனான் அல்லவா? எனவே வாலி இப்பொழுது அவனுக்கு ஆறுதல் கூற வேண்டியதாயிற்று என்பதாம். தமையனும் தந்தைபோன்றவனே; தம்பியும் மைந்தன் போன்றவனே; எனவே சுக்கிரீவனை, வாலி, அன்பின் மிகுதியால் "மைந்த" என அழைத்தான் என்க.

140. ''இராமபிரான் பரம்பொருளே'' எனக் கூறுதல்

"மறைகளும் முனிவர் யாரும், மலர் மிசை அயனும், மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும் துணிபொருள், தனிவில் தாங்கி,
அறைகழல் இராமனாகி, அறநெறி நிறுத்த வந்தது;
இறை ஒரு சங்கையின்றி எண்ணுதி; எண்ணம் மிக்கோய்!" (4179)

(எண்ணம் - ஆராய்ந்து அறியும் ஆற்றல்; மிசை -மேலே; அயன் - பிரமன்; துணிவு - நிச்சயம்; பொருள் - முழுமுதற்பொருள்; அறை - ஒலிக்கின்ற; தனி - ஒப்பற்ற; இறை - சிறிதும்; சங்கை - சந்தேகம்; மறைகள் - வேதங்கள்)

வாலி சுக்கிரீவனை நோக்கி "நற்சிந்தனைகளில் சிறந்தவனே! எதையும் ஆராய்ந்து அறியும் ஆற்றல் பெற்றவனே! சுக்கிரீவா! வேதங்களும், அவற்றை இடையறாது ஓதும் முனிவர்கள் அனைவரும், தாமரைமலர் மீது வீற்றிருக்கின்ற பிரமதேவனும், இன்னும் மற்றும் உள்ள சாத்திர நூல்கள், அறிவு நூல்கள், மெய்ந்நூல்கள் முதலியவற்றின் முடிவுகளும் பாராட்டிச் சொல்லுகின்ற தெளிந்த நிச்சயமான பரம்பொருள் தான், இப்போது ஒப்பற்ற ஒரு வில்லைக் கையில் தாங்கிக் கொண்டு, ஒலிக்கின்ற வீரக்கழல்கள் அணிந்த இராமன் என்ற பெயரோடு இங்கே அறம் தலை நிறுத்த எழுந்தருளியிருக்கிறது. இதனை நீ சிறிதளவு கூடச் சந்தேகம் கொள்ளாமல் உன் மனத்தில் நிறுத்திக் கொள்வாயாக!" என்றான் வாலி.

"மற்றைத் துறைகளின்" முடிவும் என்பதற்கு வேதத்தின் அங்கங்களாகிய உபநிடதங்கள் முதலிய சாத்திர நூல்கள் என்பதும் பொருந்தும். தன்னை அழிப்பதற்குப் பரம்பொருளைக் கொணர்ந்து வந்தவனான சுக்கிரீவன், அதனை அனுமனின் ஆலோசனையின்படி செய்தான். எனவே, ஆலோசனையிற் சிறந்தவன் சுக்கிரீவன் என்பதை உணர்த்தவும், "எண்ணம் மிக்கோய்" என்று அழைத்தான் எனக் கொள்ளுவதும் பொருந்தும்.

141. "நிற்கின்ற செல்வம் வேண்டி, நெறி நின்ற பொருள்கள் எல்லாம்,
கற்கின்றது இவன் தன் நாமம்; கருதுவது இவனைக் கண்டாய்;
பொற்குன்றம் அனைய தோளாய்! பொது நின்ற தலைமை நோக்கின்,
எற்கொன்ற வலியே சாலும்; இதற்கொன்றும் ஏது வேண்டா." (4180)

(நிற்கின்ற - அழியாது நிலைத்திருக்கின்ற; வேண்டி - விரும்பி; கற்கின்றது - பயில்வது \ பாராயணம் செய்வது; நாமம் - பெயர்; கருதுவது - நெஞ்சத்தால் தியானிப்பது; கண்டாய் - அறிவாயாக; பொது - நடு; தலைமை - இறைமைத் தன்மை; சாலும் - அமையும், பொருந்தும்; ஏது - காரணம்; செல்வம் - வீடுபேறு; பொருள்கள் - உயிரினங்கள்)

வாலி சுக்கிரீவனை நோக்கி, "பொன்போன்ற மேருமலையை ஒத்த தோள்களை உடையவனே! இவ்வுலகத்தில் நன்னெறியில் நின்று உய்கின்ற உயிரினங்கள் எல்லாம், என்றும் அழியாது நிலைபெற்றிருக்கின்ற பேரின்பமாகிய வீடுபேற்றை விரும்பி, இவனுடைய திருநாமத்தைத்தான் எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டே இருக்கின்றன. இவனுடைய திருஉருவத்தைத்தான் தியானித்துக்கொண்டே இருக்கின்றன என்பதை நினைவிற்கொள்க! இவனுடைய நடு நிலைமை தவறாத தன்மையையும், இறைமைத் தன்மையையும் சீர்தூக்கிப்பார்த்தால், யாராலும் அழிக்க முடியாத என்னையே கொன்று தீர்த்த அவனுடைய வலிமையே அதற்குச் சான்றாக அமையும்; இதைத் தவிர வேறு ஏதும் காரணம் தேவையில்லை" என்றான் வாலி.

"நிற்கின்ற செல்வம்" என்பது ஒரு அரிய சொல்லாட்சி. பொதுவாகச் செல்வம் என்பது ஒரு இடத்தில் நிலைத்து நிற்காது. "செல்வம் சகடக்கால் போல் வரும்" என்பது நாலடியார் 2. அது பொருட்செல்வம். இங்கே இவன் நிற்கின்ற செல்வம் என்று குறிப்பிடுவது அருட்செல்வமாகிய, பேரின்பம் நல்கும் வீடுபேற்றை என்க. அது ஒன்றுதான் என்றும் நிலைத்து நிற்க வல்ல செல்வம் என்பதாம். அது "சிறுகா பெருகா நிலையோ திரியா, குறுகா நெடுகா; குணம் வேறுபடா" என்பார் சரபங்கர். "நெறி நின்ற பொருள்கள்" என்பது அவ்வீடுபேற்றினை அடைவதற்காகக் கையாளப்படும் நல்லொழுக்க நெறியான ஞானமார்க்கம், யோக மார்க்கம், பக்தி மார்க்கம், பிரபத்தி மார்க்கம் என்பதைக் குறிக்கும். இவற்றையே, சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும் கூறுவதுண்டு. "கற்கின்றது" என்பது இடைவிடாது பயில்தலையும் உச்சரித்துக் கொண்டிருப்பதையும் குறிக்கும்;" "கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?" என்பார் நம்மாழ்வார். கருதுவது என்பது சதாசர்வகாலமும் தியானித்துக் கொண்டிருப்பதைக் குறிக்கும். "ஆரோ ஒரு பெயர் சொல்லத் தொடங்கினும், அவ்விடத்து உன் பேரே வரும்; என்ன பேறு பெற்றேன் பெரு நான்மறையின் வேரே!" என்ற ஒரு தனிப்பாடலாலும் இராமநாமத்தின் சிறப்பினை அறியலாம்.

142. "கைதவம் இயற்றி, யாண்டும் கழிப்ப அரும் கணக்குஇல் தீமை
வைகலும் புரிந்துளாரும், வான் உயர் நிலையை, வள்ளல்
எய்தவர் பெறுவர் என்றால், இணையடி இறைஞ்சி, ஏவல்
செய்தவர் பெறுவது, ஐயா! செப்பலாம் தன்மைத்தாமோ?" (4181)

(கைதவம் - வஞ்சனை; கழிப்பரும் - போக்குதற்கரிய; கணக்குஇல் - அளவற்ற; தீமை - பாவச்செயல்கள்; வைகல் - நாள்தோறும்; வானுயர்நிலை - பரமபத வாழ்வு)

"அப்பனே! வஞ்சனை மிகுந்த செயல்களையே செய்து, எவ்விடத்திலும் தீர்த்துக் கொள்ளுதற்கு அரியதான, அளவற்ற பாவச்செயல்களையே நாள் தோறும் செய்து கொண்டிருப்பவர்கள்கூட, வள்ளல் தன்மை மிக்க இராம பிரானின் அம்புபட்டு உயிர்துறந்தால், வானுலகத்தினும் உயர்ந்ததான பரமபத வீடுபேற்றினை அடைவார்கள் என்றால், அவனுக்குக் குற்றேவல் செய்து அவன் இரண்டு திருவடிகளையும் தொழுது, அவன் இட்ட கட்டளைகளை சிரமேற்கொண்டு செய்யும் உன்னைப் போன்றவர்கள் பெற இருக்கின்ற பெரு நன்மைகள், என்னால் வார்த்தைகளால் சொல்லும் தரத்ததோ?" என்கிறான் வாலி.

"யாண்டும் கழிப்பரும் தீமை" என்பது, அவர்கள் செய்த பாவங்களுக்கு, எங்கு சென்று, எந்தப் பிராயச்சித்தம் செய்தாலும், அதைப் போக்கிக் கொள்ள முடியாத பெரும் பாவங்கள் என்பது பொருள். "வள்ளல் எய்தவர் வானுயர் நிலையைப் பெறுவர்" என்பது, நல்லோர், தீயோர் என்று பிரித்துப் பார்க்காது, தன்னை அடைந்த எல்லோரையும் வானுலகு ஏற்றும் தன்மை பற்றி இராமபிரானை வள்ளல் என்றான் என்க. அதுபோலவே அவனால் அம்பு எய்து கொல்லப்பட்ட விராதன், கவந்தன் முதலியோர் தங்கள் பண்டைய உருப்பெற்று நற்கதி அடைந்ததையும் கரண், தூடணன் முதலிய அரக்கர்களும் இவன் வாளியால் வதைக்கப்பட்டாலும் இறுதியில் உயர்கதி எனும் உயர்நிலையை அடைந்ததையும் குறிக்கும். எனவே சுக்கிரீவன், இனி இராமன் இடும் கட்டளை களைத் தலைமேற்கொண்டு செய்யப்போவதாலும், அவனுடைய திருவடிகளை நாள்தோறும் தொழும் பேறு பெற்றதாலும், அவன் வானினும் உயர்நிலை அடையப் போவது திண்ணம் என்பதால் அது "செப்பலாம் தன்மைத்தாமோ?" என்றான் என்க. எவ்வளவு பாவம் புரிந்தாலும் என்பதைக் குறிக்க எத்தனை அடைமொழிகள் தருகிறான் பாருங்கள். "யாண்டும் கழிப்ப அரும் தீமை"; "கணக்கு இல் தீமை; வைகலும் புரியும் தீமை"; "வைகலும் இயற்றும் கைதவம்"; இப்பாடல் முன்பு சரபங்கன் துதித்த போது கூறிய "அண்டமும் அகிலமும், அறிவரு நெறியால் உண்டவன் ஒரு பெயர் உணர்குனர் உறுபேறு எண்தவ! நெடிது எனின், இறுதியில் அவனைக் கண்டவர் உறுபொருள் கருதுவது எளிதோ?" என்ற பாடலை நினைவு கூர்க. தீவினை புரிந்தவர்களே, இராமனால் நற்கதிபெற்றார்கள் என்றால் அவனைத் தொழுது அவன் இடும் கட்டளைகளை நிறைவேற்றப்போகும் நீ அடையும் பேரின்ப நிலையை என்னால் கூறவும் முடியுமோ? என்பது கருத்து.

143. "அருமை என் விதியினாரே உதவுவான் அமைந்த காலை?
இருமையும் எய்தினாய்; மற்று இனிச்செயற்பாலது எண்ணின்,
திருமறுமார்பன் ஏவல் சென்னியில் சேர்த்தி, சிந்தை
ஒருமையின் நிறுவி, மும்மை உலகினும் உயர்தி அன்றே?" (4182)

(விதி - ஊழ்வினை; செயற்பாலது \ செய்யத்தக்கது; இருமை - இம்மை \ மறுமை; மறு - ஸ்ரீ வத்சம் என்னும் மச்சம்; சென்னியில் சேர்த்து - தலைமேற்

கொண்டு; நிறுவி - நிறுத்தி; ஏவல் - கட்டளை; உதவுதல் - அருள்புரிதல்; காலை - பொழுது)

"ஊழ்வினையே உனக்கு வந்து உதவிசெய்து அருளும் போது, உன்னால் அடைய முடியாதது என்ன இருக்கிறது? இப்பிறவியில் புகழும், மறுபிறவியில் புண்ணியமும் அடைவதை நீ இப்பொழுதே பெற்றாய்; இனி நீ செய்ய வேண்டியது என்ன என்று எண்ணிப் பார்த்தால், இலக்குமியையும், ஸ்ரீ வத்சம் என்னும் மச்சத்தையும் தன் மார்பில் தாங்கியுள்ள திருமாலின் அம்சமாகிய இராமபிரானின் கட்டளைகளைத் தலை மேற்கொண்டு பணிவுடன் நிறைவேற்று தலும், சிந்தனையைச் சிதறவிடாது ஒரு முகப்படுத்தி, நிலை நிறுத்தி, மண், விண், பாதாளம் ஆகிய மூன்று உலகங்களிலும் மேம்பட்ட நிலையை அடைவாயாக!" என்றான் வாலி.

இங்கே ஊழ்வினை நன்மை செய்வதற்காக வந்தது என்பதால் "விதியினார்" என்று உயர்திணையில் கூறினார் என்க. இதே கருத்தை முன்பு சுக்கிரீவனும், "விதியே நல்கின் மேவல் ஆகாது என்?" என்று கூறியதையும் நினைவு கூர்க. ஒருவன் செய்யும் முயற்சிகளில் ஊழ்வினை அருகிருந்து உதவி செய்யுமாயின், அவனால் அடைய முடியாத எல்லைகளே இல்லை என்பது ஒரு உலக நீதி. "சிந்தை ஒருமையில் நிறுவுதல்" என்பது மனத்தை ஒருவழிப்படுத்துதல் என்ற பொருளில் பயின்றுவந்தது. "ஏகாக்ர சித்தம்" என்பது வடசொல்.

144. "மதஇயல் குரக்குச் செய்கை மயர்வொடு மாற்றி, வள்ளல்
உதவியை உன்னி, ஆவி உற்றிடத்து உதவுகிற்றி;
பதவியை எவர்க்கும் நல்கும் பண்ணவன் பணித்த யாவும்,
சிதைவு இல செய்து, நொய்தின், தீர்வு அரும் பிறவி தீர்தி" (4183)

(மதம் - செருக்கு; மயர்வு - மயக்கம்; மாற்றுதல் - நீங்குதல்; உன்னி - எண்ணி; ஆவி - உயிர்; பதவி - பரமபதம் \ வீடுபேறு; பண்ணவன் - கடவுள்; சிதைவு - குறை \ குற்றம்; நொய்தின் - எளிதில் \ விரைவில்; தீர்வு அரும் - தீர்த்தற்கரிய \ நீக்கற்கரிய; தீர்தல் - நீங்குதல்; செய்கை - தொழில்)

"அறியாமையினால் விளைகின்ற செருக்கினால் செய்யும் குரங்குகளின் தொழிலையும் அதனால் உண்டாகும் மயக்கத்தையும் நீக்கிவிட்டு, வள்ளலாகிய இராமபிரான் உனக்குச் செய்த அளவிலா உதவியைச் சிந்தையில் எண்ணிப்பார்த்து, அவனுக்கு ஒரு இடர்ப்பாடு வந்தபோது, உனது உயிரையும் கொடுத்து, அவனுக்கு உதவிபுரிவாயாக! வீடுபேறு என்னும் பதவியை எல்லோர்க்கும் அளிக்கும் கடவுளாகிய இராமபிரான் ஏவிய கட்டளைகளை யெல்லாம்,குறைவற்றனவாக, நிறைவாகச் செய்துமுடித்து, எளிதிலும், விரைவாகவும், தீர்க்க முடியாத இப்பிறவிப் பிணியைத் தீர்த்துக் கொண்டு, பெருவாழ்வு பெற்று வாழ்வாயாக!" என்று வாழ்த்துகிறான் வாலி.

குரங்குச் செய்கை என்பது, ஒரு நிலையில்லாது அடிக்கடி மாறும் சபலபுத்தியையும் அறியாமையையும், சஞ்சலம் கொண்ட மனப்பான்மையையும் குறிக்கும். அது மதத்தினாலும், மயர்வினாலும் உண்டாவது என்பதாம். அதனை

அறவே நீக்கிக் கொள்ளவேண்டும் என்றும், இராமபிரானுக்கு எங்கேனும் இடையூறு ஏற்படின், அப்போது சுக்கிரீவன், தன் உயிரையும் கொடுத்து அவனைக் காப்பாற்றத் தயாராய் இருக்க வேண்டும் என்றும், இராமபிரான் இடும் குற்றேவல்களையெல்லாம் திருத்தமுறச் செய்து முடித்து, பிறவிப் பிணியிலிருந்து விடுபட்டு எளிதில் வீடுபேறடைந்து உயர்நிலை பெறவேண்டும் என்றும் வாலி, சுக்கிரீவனுக்கு அறிவுரை வழங்கினான் என்பதாம். "வள்ளல் உதவி" என்பது, தனது பகைவனான வாலியைக் கொன்று, கிட்கிந்தையின் அரசுரிமையையும், தனது மனைவியான உருமையையும் மீட்டுத்தந்ததைக் குறிக்கும் என்க. "எவர்க்கும் நல்கும்" என்பது எந்த வேறுபாடும் இன்றித் தன்னை அடைந்த எல்லோருக்கும் வீடுபேறு அருள்பவன் என்பதைக் குறிக்கும். செய்ந்நன்றி மறக்கக் கூடாது என்பது வாலியின் கருத்து.

145. "அரசியல் பாரம் பூரித்து, அயர்ந்தனை இகழாது, ஐயன்,
மரைமலர்ப்பாதம் நீங்கா வாழுதி; மன்னர் என்பார்
எரி எனற்கு உரியர் என்றே எண்ணுதி; எண்ணம் யாவும்
புரிதி; "சிற்றடிமை குற்றம் பொறுப்பர்" என்று எண்ணவேண்டா." (4184)

(பாரம் - பெருமை \ சுமை; பூரித்தல் - மிக்கக் களிப்படைதல்; அயர்த்தல் - மறத்தல்; ஐயன் - தலைவன்; மரை - தாமரை; எரி - நெருப்பு; சிற்றடிமை - குற்றவேல் புரிபவர்)

"நீ பெற்ற அரசுரிமை என்னும் பெரிய சுமையால் மனம் மிகக் களித்து, பெருமிதம் அடைந்து, இராமபிரான் உனக்குச் செய்த உதவியை மறந்து விடாதே; அவனுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை விட்டு விலகாது வாழ்வாயாக! அரசர்கள் என்பவர், பற்றி எரிகின்ற நெருப்புக்குச் சமானமாகக் கூறப்படுபவர்கள் என்றே கருதுவாயாக!; அவன் எண்ணும் கருத்துக்களைக் குறிப்பால் உணர்ந்து, அதன்படி ஏவல் செய்வாயாக! ஆனால் நாம் சிறிய குற்றேவல் செய்யும் அடிமைகள் தானே நாம் எந்த குற்றம் செய்தாலும் அரசர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என்று மட்டும் எண்ணிக்கொண்டு விடாதே" என்று வாலி சுக்கிரீவனுக்கு மேலும் கூறுகிறான்.

பூரித்தல் என்பது பெருஞ்செல்வம் பெறுவதாலும், பேரின்பம் பெறுவதாலும், பெருமிதம் அடைவதாலும் உண்டாகும் என்பர். பெரியோர், மன்னர்கள், முதலியோர், பற்றி எரியும் நெருப்பைப் போன்றவர்கள். மிக அருகில் சென்றால் சுடும்; மிக விலகி நின்றால் குளிர்போகாது எனவே ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் நின்று, சுடாமலும், குளிர்போகும் வண்ணமும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதாம். "அகலாது, அணுகாது தீக்காய்வார்போல், இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்" என்பது குறள் 691. "அணைஉறை பாம்பும், அரசும், நெருப்பும், முழை உறை சீயமும் என்றவை நான்கும், இளைய, எளிய, பயின்றன என்று எண்ணி இகழின், இழுக்கம் தரும்" என்பது ஆசாரக் கோவை 84. "பழமை கடைப்பிடியார்; கேண்மையும் பாரார்; கிழமை பிறிதொன்றும் கொள்ளார் வெகுளின் மன்" என்பது நாலடியார் 46.

146. வாலி, சுக்கிரீவனை இராமனிடம் அடைக்கலமாகத் தருதல்

என்ன, இத்தகைய ஆய, உறுதிகள் யாவும், ஏங்கும்
பின்னவற்கு இயம்பி, நின்ற பேரெழிலானை நோக்கி,
"மன்னவர்க்கு அரசன் மைந்த! மற்று இவன், சுற்றத்தோடும்
உன் அடைக்கலம்" என்று உய்த்தே, உயர்கரம் உச்சி வைத்தான். (4185)

(மன்னவர்க்கு அரசன் - சக்கரவர்த்தி \ தசரதன்; உய்த்து - செலுத்தி \ தந்து; உச்சி - தலை; அடைக்கலம் - பாதுகாக்கத்தக்க பொருள்)

இவை எல்லாவற்றிற்கும் தான் தான் காரணம் என்று எண்ணி வருத்தமுற்றுத் தளர்ந்து போய் நிற்கும் தன் தம்பியாகிய சுக்கிரீவனுக்கு, இத்தன்மையனவான நன்மைதரும் நற்செய்திகளை எல்லாம் எடுத்துக்கூறி, எதிரில் நின்ற அந்தம்இல் பேரழகனாகிய இராமபிரானை நோக்கி "வேந்தர் வேந்தன் சக்கரவர்த்தியாகிய தசரதனின் புதல்வனே! இராமா! இவனும், இவனைச் சேர்ந்த சுற்றத்தார்களும் இன்று முதல் உன்னால் பாதுகாக்கப்படவேண்டிய அடைக்கலப் பொருள்கள்" என்று அவனிடம் செலுத்தி, தனது இரு கரங்களையும் தனது தலைஉச்சியில் வைத்து வணங்கினான் வாலி.

147. அங்கதனை அழைத்து வரச்செய்தல்

வைத்தபின், உரிமைத் தம்பி மாமுகம் நோக்கி, "வல்லை
உய்த்தனை கொணர்தி, உன்தன் ஓங்கு அரும் மகனை" என்ன,
அத்தலை, அவனை ஏவி அழைத்தலின், அணைந்தான் என்ப;
கைத்தலத்து உவரி நீரைக் கலக்கினான் பயந்த காளை. (4186)

(மா - பெருமை; ஓங்கி - உயர்ந்த; வல்லை - விரைவாக; உய்தல் - சேர்த்தல்; கொணர்தல் - அழைத்துவருதல்; கைத்தலம் - கைகள்; உவரி - கடல்; கலக்குதல் - கடைதல்; பயந்த - பெற்றெடுத்த; அத்தலை - அவ்விடம்; ஏவி - போகச்செய்து)

அவ்வாறு உயர்கரம் உச்சி வைத்தபின், வாலி, தன் அன்புக்கு உரிமையுடைய ஒரே தம்பியான சுக்கிரீவனின் பெருமை மிகுந்த முகத்தை நோக்கி, "விரைவில் சென்று, உன்னுடைய உயர்ந்த, அரும்குணம் நிறைந்த மகனாகிய அங்கதனை இங்கு அழைத்துக் கொண்டு வருவாயாக" என்று கூற, அங்கதன் இருந்த இடத்திற்குச் சுக்கிரீவனை அனுப்பி அழைத்ததால், தன்னுடைய கைகளாலேயே பாற்கடலைக் கடைந்தவனான வாலி பெற்றெடுத்த, காளை போன்றவனாகிய அங்கதன் அவ்விடம் வந்து சேர்ந்தான்.

"உரிமைத் தம்பி" என்பது தனது அரசுக்கும், அன்பிற்கும் முழுஉரிமை பெற்ற ஒரே தம்பி எனச் சுக்கிரீவனைக் குறிக்கும் என்க. "மாமுகம்" என்றது, இப்போது பெரும் அரசபாரத்தைப் பெற்றிருப்பதாலும், தன் உரிமை மனைவி உருமையைத் திரும்பப் பெற்றதாலும் மகிழ்ச்சியால் பூரித்துப் பெருமிதம் அடைந்த சுக்கிரீவனின் முகம் எனப்பொருள் தரும். வாலி தன் மகன் அங்கதனை அழைத்துவரும்படி கூறாமல், "உன்தன் ஓங்கு அரும் மகனை" என்றது, இனிமேல் அங்கதனுக்குத்

தந்தை நிலையில் இருந்து அவனைப் பேணிப்பாதுகாக்கப்போகிற கடமையை உடையவன் சுக்கிரீவன் என்பதையும் கருத்தில் கொண்டு கூறிய கூற்று என்க. தனக்கும் தன்தம்பிக்கும் பகைமை மறைந்து, வேறுபாடின்றி இருக்கும் நிலையைக் குறித்தது என்பதும் பொருந்தும். உவரிநீர் என்பது பொதுவாக உப்பு நீர் நிறைந்த கடலைக் குறிக்கும் என்றாலும், இங்கே உவரி நீர் என்பது பொதுவான பொருளாகிய கடலையும், சிறப்பாக வாலிகடைந்த பாற்கடலையும் குறிக்கும் என்க. இளமையும் பெருமிதமும் உடையவனைக் காளை எனக் கூறுதல் கவிமரபு. அது இங்கே அங்கதனைக் குறித்தது.

148. அங்கதன் வந்து வாலியைக் காணுதல்

சுடருடை மதியம் என்னத் தோன்றிய தோன்றல், யாண்டும்
இடருடை உள்ளத்தோரை எண்ணினும் உணர்ந்திலாதான்,
மடலுடை நறுமென் சேக்கை மலை அன்றி, உதிரவாரிக்
கடலிடைக் கிடந்த காதல் தாதையைக் கண்ணின் கண்டான். (4187)

(சுடர் - ஒளி; தோன்றல் - ஆண்களில் சிறந்தவன்; யாண்டும் - எக்காலத்தும்; எண் - மனம்; மடல் - மலர் இதழ்; நறு - மணம்; சேக்கை - படுக்கை; உதிரம் - இரத்தம்; வாரி - வெள்ளம்; காதல் - அன்பு; தாதை - தந்தை; இடர் - துன்பம்)

துன்பம் உற்ற நிலையில் உள்ளவர்களை ஒருபொழுதும் மனத்தாலும் கற்பனை செய்து எண்ணிப்பார்க்கும் வாய்ப்பு இல்லாத அங்கதன், ஒளிநிறைந்த பூரண சந்திரன் போன்ற தோற்றப் பொலிவுடன் விளங்கிய அங்கதன், அங்குவந்து, இதழ்கள் நிறைந்த, மணம் மிகுந்த, மெல்லிய, மலர்ப்படுக்கையாகிய மலையில் அன்றி, வெள்ளம் பெருக்கெடுத்தாற் போன்ற இரத்தக் கடலில் கிடந்த தன் அன்புத் தந்தையைத் தன் கண்களால் நேரில் நன்கு கூர்ந்து நோக்கினான்.

வாலி போன்று அங்கதனும் வெண்மை நிறத்தவன் என்பதைக் குறிக்க, "சுடர் உடை மதியம் என்ன" என்றார். வாலியின் நாட்டில் யாரும் எதற்காகவும் துன்பப் பட்டது கிடையாது; அமைதியாகவே வாழ்ந்தனர்; அப்படித் துன்பமுற்றவர்கள் எவ்வாறு இருப்பர் என்பதை மனத்தாலும் நினைத்துக் கூடப்பார்க்காது, மகிழ்ச்சியோடு, செல்வச் செழிப்பிலே வளர்ந்தவன் அங்கதன் என்பதை, "யாண்டும் இடருடை உள்ளத்தோரை எண்ணினும் உணர்ந்திலாதான்" என்றான். தன்தந்தையை கிட்கிந்தையில் எப்பொழுதும் மலர்ப்படுக்கையிலேயே கண்டு களித்தவனான அங்கதன், இன்று இப்பொழுது இரத்த வெள்ளமாகிய கடலில் காணவேண்டியதாயிற்று என்பதை "மடல் உடை நறுமென் சேக்கை மலை அன்றி, உதிரவாரிக் கடலிடைக் கிடந்த காதல் தாதையைக் கண்ணின் கண்டான்" என்றான். இங்கே, மனத்தாலும் துயர் என்பது என்ன என்பதையே அறியாதவன், கண்களால் இப்போது கண்டு கொண்டான் என்பதை, "என்னினும் உணர்ந்திலாதான், கண்ணின் கண்டான்" என்று கூறியது ஒரு நயம். நறுமணம் மிக்க மலர்ப்படுக்கையாகிய இனிமையுடைய, உயர்ந்த

மலையிலேயே தன் தந்தையைக் கண்டு பழக்கப்பட்ட அங்கதன், இப்போது துயரத்துடன், இரத்த வெள்ளத்தில் தாழ்ந்த கடலில் கிடப்பதைப் பார்த்தான் என்பதை "மடலுடை நறுமென் சேக்கைமலை அன்றி, உதிரவாரிக் கடலிடைக் கிடந்த காதல் தாதையைக் கண்ணின் கண்டான்" என்றது மற்றொரு நயம். அங்கதனுக்கு முழுமதி உவமை.

149. அங்கதன் புலம்புதல் (5 பாடல்கள்)

கண்ட கண், கனலும், நீரும், குருதியும் கால, மாலைக்
"குண்டலம் அலம்புகின்ற குவவுத்தோள் குரிசில், திங்கள்
மண்டலம், உலகின் வந்து கிடந்தது; அம்மதியின் மீதா
விண்டலம் அதனின் நின்று ஓர் மீன் விழுந்தென்ன, வீழ்ந்தான்." (4188)

(குண்டலம் - காதணி; அலம்புதல் - அசைதல்; குவவு - திரண்ட; குரிசில் - ஆண்களில் சிறந்தவன்; கனல் - நெருப்பு; திங்கள் - சந்திரன்; விண்டலம் - விண்தலம்; மீன் - நட்சத்திரம்; கால - சொரிய)

காதுகளில் அணியப்பெற்ற காதணிகள் அசைந்தாடுகின்ற திரட்சியான தோள்களை உடைய மாலையணியப்பெற்ற அரசிளங்குமாரனான அங்கதன், அங்கே தரையில் வீழ்ந்து கிடந்த தன் தந்தை வாலியினைக் கண்ட கண்கள், சினத்தால் நெருப்பையும், துன்பத்தால் கண்ணீரையும், ஆற்றொணா அதிர்ச்சியால் இரத்தத்தையும் பெருக்க, சந்திர மண்டலம் ஒன்று இம்மண்ணுலகில் வந்து விழுந்து கிடப்பதைப் போல வீழ்ந்து கிடக்கின்ற தன் தந்தை வாலியின் உடலின் மீது, வானிலிருந்து ஒரு நட்சத்திரம் விழுவதைப் போல வீழ்ந்தான்.

வாலி தரையில் விழுந்து கிடந்த தோற்றம் சந்திர மண்டலமே தரையில் விழுந்து கிடந்தது போல் இருந்தது என்றதும், அவன் மீது விழுந்த அங்கதனின் தோற்றம், அந்தச் சந்திர மண்டலத்தின் மீது, வானின் நின்று ஒரு நட்சத்திரம் விழுவது போலத் தோன்றியது என்றதும் உருவகம்.

150. "எந்தையே! எந்தையே இவ்எழுதிரை வளாகத்து, யார்க்கும்
சிந்தையால், செய்கையால், ஓர் தீவினை செய்திலாதாய்!
நொந்தனை; அதுதான் நிற்க; நின்முகம் நோக்கிக் கூற்றும்
வந்தது அன்றே அஞ்சாது? ஆர் அதன் வலியைத் தீர்ப்பார்?" (4189)

(எழுதல் - பொங்குதல்; திரை - அலை; வளாகம் - சூழப்பட்டது \ பரப்பு; நோதல் - துன்புற்று வருந்துதல்)

"என் தந்தையே! என் தந்தையே! பொங்கியெழுகின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பெற்ற இவ்வுலகத்தில் யாருக்கும் மனம், மொழி, மெய் இவற்றால் ஒரு தீங்கினைக் கூடச் செய்யாதவனே! உனக்கு இத்தகைய துன்பம் வந்துற்றதே! சரி; அது கிடக்கட்டும்; உன் பெயர் சொல்லுவதற்கே அஞ்சி நடுங்கும் கூற்றுவன் கூட, இப்போது உன் முகத்தைப் பார்த்து எதிர்வந்து அஞ்சாது நிற்கிறானே? இனி அவனுடைய வலிமையை அடக்குபவர்கள் யார் இருக்கிறார்கள்?" என்று கதறுகிறான் அங்கதன்.

எந்தையே, எந்தையே என்று இருமுறை குறிப்பிட்டது அவலமிகுதி கருதி என்க. சிந்தையையும், செய்கையையும் கூறியதால், உபலட்சணத்தால் மொழியையும் கொள்ளலாயிற்று. நீ யார்க்கும் எந்தத் தீவினையும் செய்யா திருக்கவும், இவ்வாறு துன்புறுகிறாயே? ஏன்? என்று கேட்கிறான் அங்கதன். அவன் வாலி செய்த தீவினைகளாகிய, சுக்கிரீவனின் மனைவி உருமையை அபகரித்ததையும், தஞ்சம் அடைந்த சுக்கிரீவனை ஓடஓட விரட்டித்துரத்தியதை யும் அறிந்தானில்லை. எனவே தன் தந்தை யார்க்கும் எந்தத் தீங்கும் புரியவில்லை எனக்கருதியே இவ்வாறு கூறுகிறான் என்க. மற்றொன்று; இதையெல்லாம் கண்டோ, கேட்டோ, அறியாது செல்வச் செழிப்பிலேயே வளர்ந்தவன் ஆதலாலும் என்க. முன்பு வாலி கூறிய "கூற்றும் என் பெயர் சொலக் குலையும்" என்பதை நினைவிற் கொண்டு, அத்தகைய கூற்றுவனே இப்பொழுது நின் எதிரிலேயே வந்து நிற்கிறானே என்று அங்கலாய்க்கிறான் அங்கதன். வாலியைத் தவிர அதன் வலிமையை அடக்குபவர் வேறுயாரும் இலர் என்பது தோன்ற, "ஆர் அதன் வலியைத் தீர்ப்பார்?" என்கிறான். கூற்று உடம்பினின்றும் உயிரைப் பிரிக்கும் - கூறுபோடும் - இயமன்; வாலி தன்னை வலுவில் வந்து எதிர்ந்தோரையன்றித் தானே தன் வலிமைகாட்டிப் பிறருக்குத் தீங்கு செய்யாதவன்; தீங்கு நினைக்காதவன் என்பது பெறப்படுகிறது. பிறருக்குத் தீமை செய்யாவிட்டால் ஒருவன் துன்பப்படமாட்டான் என்பதும், பிறருக்குத் தீமை செய்தவன் துன்பப்பட்டே ஆகவேண்டும் என்பதும் இங்கே கிடைக்கும் நீதி.

151. "தறை அடித்தது போல் தீராத்தகைய, இத்திசைகள் தாங்கும்
கறையடிக்கு, அழிவு செய்த கண்டகன் நெஞ்சம், உன்தன்
நிறை அடிக்கோல வாலின் நிலைமையை நினையும்தோறும்,
பறை அடிக்கின்ற அந்தப்பயம் அறப் பறந்தது அன்றே?" (4190)

(தறை - தரை \ நிலம்; தீராத - இடம்பெயராத; அழிவு - தோல்வி; கண்டகன் - கொடியோன் \ அரக்கன் \ இராவணன்; கோல - அழகிய; பறை - தோற்பறை \ தாரை \ தப்பட்டை போன்ற கருவி; பறந்தது - நீங்கியது; தறையடித்தல் - ஆணி அறைதல்; கறை - உரல்; கறையடி - உரல்போன்ற கால்கள் \ யானை)

நிலத்தில் ஆணி அடித்தாற்போல, பெயர்த்தெடுக்க முடியாதபடி நிலை பெற்று நிற்கும் எட்டுத்திசைகளையும் தாங்கிநிற்கும், உரல்போன்ற கால்களை உடைய எட்டுத் திக்கஜங்களுக்கும் தீங்கு செய்து, அவற்றினை வென்ற, முள்போன்ற நெஞ்சமுடைய அரக்கனான இராவணன் உன்னுடைய நிறைந்த, பருத்த, அழகிய வாலின் சிறப்பை நினைக்கும்தோறும் அவனுடைய நெஞ்சம் பதைபதைக்கும்; பதறும்; படபட என்று அடித்துக் கொள்ளும். அவ்வாறு இருக்க, நீ இப்போது இறந்து போனமையால், அந்த அச்சமும் இராவணனுக்கு நீங்கிப் போயிருக்குமே?" என்று இரங்கிக் கூறுகிறான் அங்கதன்.

"கறையடி" என்பது உரல் போன்ற கால்களையுடைய யானைகளுக்குக் காரணப் பெயர். நிறைந்த, பருத்த, அழகிய வாலையுடையவனாதலால் தான் அவனுக்கு வாலி என்பதே பெயர். பறையடிக்கின்றது என்பது உலக வழக்கில்

"படபட என அடித்துக்கொள்ளுகிறது" என்று கூறுவதைப் போல எனக் கொள்க. வாலி இறந்ததால் இராவணன் இனிப் பயம் நீங்கித் தீமைகள்புரிய ஆரம்பித்து விடுவான் என்பது கருத்து. இராவணன் திக்குவிஜயத்தின்போது எட்டுத்திக்கஜங் களையும் பொருது அவைகளின் தந்தங்கள் தம் மார்பில் உடைந்து போய்த் தங்கும்படிச்செய்து வென்று, அடக்கியவன். எனவே அவனைத் "திசைகள் தாங்கும் கறைஅடிக்கு, அழிவுசெய்த கண்டகன்" என்றான். அத்தகைய வலிமை படைத்த இராவணனை ஒருசமயம் வாலி தன் வாலாலேயே கட்டிச் சுருட்டித் திசைகள் தோறும் சென்று துன்புறுத்தினான் என்பது உத்தர காண்டத்தில் "இராவணன் வாலி வாலால் கட்டுண்ட படலத்தில்" விரிவாய்ப் பேசப்பட்டிருக்கிறது. "நீலமாமணி நிறத்து அரக்கனை, இருபதுகரத்தொடு ஒல்க, வாலினால் கட்டிய வாலியார்" என்பது திருஞான சம்பந்தர் தேவாரம்.

152. "குலவரை, நேமிக்குன்றம் என்ற வானுயர்ந்த கோட்டின்
தலைகளும், நின்பொன் தாளின் தழும்பு இனித் தவிர்ந்த அன்றே?
மலைகொளும் அரவும், மற்றும் மதியமும் பலவும் தாங்கி,
அலைகடல் கடைய வேண்டின், ஆர் இனிக் கடைவர்? ஐயா!" (4191)

(குலவரை - எட்டுக்குல மலைகள் \ அஷ்ட குலபர்வதங்கள்; நேமி - சக்கரம்; நேமிக் குன்றம் - சக்கர வாளமலை; கோடு - மலை; தலை - சிகரம்; பொன் - அழகிய; தழும்பு - அடிச்சுவடி \ வடு; தவிர்ந்தது - நீங்கியது; அரவு - பாம்பு \ வாசுகி)

"ஐயனே! எட்டுக்குல மலைகளும், உலகின்புறத்தே அரணாக அமைந்திருக் கின்ற சக்கரவாளகிரி என்று சொல்லப்படும் வானளாவிய உயர்ந்த மலையின் சிகரங்களும், உன்னுடைய அழகிய பாதங்கள் பட்டதால் அவற்றில் உண்டாகிய தழும்பு - சுவடு - இப்போது நீ இறந்துபோனதால், இனி அவற்றை நீங்கின அல்லவா? மந்தரமலையைச் சுற்றிக் கொள்ளும் வாசுகி என்னும் பாம்புக் கயிறும், மற்றும் அடை தூணாக நிறுத்திய சந்திரன், அடைகல்லாகப் பயன்படுத் தப்பட்ட ஆமை முதலியவற்றையெல்லாம் கொண்டு, மீண்டும் அலைகள் நிறைந்த பாற்கடலைக் கடைய வேண்டும் என்று தேவர்களும் அசுரர்களும் கருதினால், இனிமேல் அவர்களுக்கு யார் பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் எடுத்துக் கொடுப்பார்கள்?" என்று இரங்கிக் கேட்கிறான் அங்கதன்.

எட்டுக்குல மலைகள் - அஷ்டகுலபர்வதங்களாவன, இமயம், மந்தரம், கயிலாயம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன. நேமிக்குன்றம் என்பது அண்ட கோளத்தின் புறத்தே மதில் சுவர் போலக் காத்து நிற்கும் சக்கரவாளகிரி என்பதாம். இவ்வுலகத்தின் எல்லைகளைச் சுற்றி வளைத்து அமைந்த மலைத்தொடர். இதுவரையிலும் அவற்றின் மேல் பட்டுப் படிந்த வாலியின் கால்களின் சுவடுகள் இனிமேல் படிய இயலாதே என்று ஏங்குகிறான் அங்கதன்; தேவர்களும் அசுரர்களும், பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் எடுக்கும் பொருட்டு, மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும், சந்திரனை அடைதூணாகவும், ஆமையை அடை கல்லாகவும் கொண்டு கடைந்தும் அவர்களால் அமிழ்தம் எடுக்க முடியாத

போது, வாலி அங்கு தோன்றி, தன் கைகளாலேயே பாற்கடலைக் கலக்கி, அமிழ்தத்தை எடுத்துத் தேவர்களுக்கு அளித்தான் என்பது ஒரு புராண வரலாறு. அது இங்கு அங்கதனால் கூறப்பெற்றது, இப்பொழுது அவர்கள் மீண்டும் அவ்வாறு கேட்டார்களானால், பாற்கடலைக் கடையும் ஆற்றல் பெற்றவர் வேறு யார் இருக்கிறார்கள்? என்று அங்கதன் இரங்கிக் கூறுகிறான். இராமபிரானின் கால் வண்ணமும் கைவண்ணமும் கூறியவாறே இங்கே வாலியின் கால் வண்ணத்தையும், கைவண்ணத்தையும் கூறிய பாங்கை நினைக.

153. "பஞ்சின் மெல் அடியாள் பங்கன் பாதுகம் அலாது, யாதும்
அஞ்சலித்து அறியாச் செங்கை, ஆணையாய்! அமரர் யாரும்
எஞ்சலர், இருந்தார் உன்னால்; இன்னமுது ஈந்த நீயோ,
துஞ்சினை; வள்ளியோர்கள் நின்னின் யார் சொல்லற்பாலார்?" (4192)

(பங்கன் - பாகத்தில் கொண்டவன்; பாதுகம் - திருவடி நிலை; அஞ்சலித்தல் - கைகூப்பி வணங்குதல்; வள்ளியோர் - வள்ளன்மை உடையோர் \ வள்ளல்கள்; சொல்லுதல் - எடுத்து உரைத்தல்)

"செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்றதும், பஞ்சை விட மிக மென்மையானதுமான திருவடிகளைக் கொண்ட உமாதேவியைத்தன் இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமானின் திருவடி நிலையைஅல்லாது, வேறு ஒன்றையும் மறந்தும் கைகூப்பி வணங்கி அறியாத சிறந்த, சிவந்த கைகளையும், ஆணைச் சக்கரத்தையும் உடைய அரசே! நீ பாற்கடலைக் கடைந்து அதினின்றும் தோன்றிய அமிழ்தத்தை நீயே உனக்கென வைத்துக் கொள்ளாது, தேவர்கள் மரணமிலாப் பெருவாழ்வு பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் அவர்களுக்கே முழுவதையும் கொடுத்துவிட்டாய். அவ்வாறு உன்னால் தேவாமிர்தம் பெற்ற தேவர்கள் எல்லோரும் தம்மில் குறைவின்றி இன்னும் உயிருடன் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்கு அதனைத் தந்த நீயோ இன்று இறந்து போய்க் கிடக்கிறாய்; உன்னைக் காட்டிலும் வள்ளல் என்று சொல்லத் தக்கவர் வேறுயார் இருக்கிறார்கள்?" என்று புலம்புகிறான் அங்கதன்.

"பஞ்சின் மெல்லடியாள் பங்க! நீயல்லால் பற்று நான் மற்றிலேன் கண்டாய்" என்பது திருவாசகம். "பஞ்சின் மெல்லடிப் பாவை ஓர் பாகமாய்" என்பது தேவாரம். "பஞ்சின் மெல்லடியாள்" என்பது மிருது பாத நாயகி" என்பதன் தமிழாக்கம். நீ பூதஉடம்பினை விட்டு மறைந்தாலும், இத்தகைய வள்ளன்மையால், நீ என்றுமழியாத புகழுடம்புடன் இவ்வுலகில் நிலைபெற்று வாழ்வாய் என்பது கருத்து. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரை "தம் குறை தீர்வுள்ளார் தளர்ந்து, பிறர்க்கு உறும் வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்" என்கிறது நன்னெறி 10. இதனோடு ஒப்பிட்டுக் கூறுவதென்றால், தனக்குக் கிடைத்த நெடிது நாள் வாழவைக்கும் அருமையான நெல்லிக் கனியைத் தான் உண்ணாது ஔவைப்பிராட்டிக்கு அளித்த அதியமான் நெடுமான் அஞ்சியின் வள்ளல் தன்மையைக் கூறலாம் என்க.

154. வாலி அங்கதனைத் தழுவிக் கொள்ளுதல்

ஆயன பலவும் பன்னி, அழுங்கினன் புழுங்கி, நோக்கித்
தீ உறு மெழுகின் சிந்தை உருகினன்; செங்கண் வாலி,
"நீ இனி அயர்வாய் அல்லை" என்று, தன் நெஞ்சில் புல்லி,
"நாயகன் இராமன் செய்த, நல்வினைப் பயன் இது" என்றான். (4193)

(பன்னி - திரும்பத் திரும்பக்கூறி; புழுங்குதல் - வெதும்புதல்; அழுங்குதல் - வருந்துதல்; அயர்தல் - தளர்ந்து வருந்துதல்; நாயகன் - தலைவர்; நல்வினைப் பயன் - புண்ணியம்; புல்லுதல் - தழுவிக் கொள்ளுதல்)

இவ்வாறாகப் பலவற்றையும் பலமுறை கூறி வருந்தி மனம் வெதும்பிய அங்கதன், தன் தந்தையின் பரிதாபமான நிலையைப் பார்த்து, அனலில் பட்ட மெழுகு போல் உள்ளம் உருகினான்; அதனைக் கண்ட சிவந்த கண்களை யுடைய வாலி, அங்கதனை அருகழைத்துத் தன் நெஞ்சில் தாங்கிக் கொண்டு, "அங்கத! இனி நீ தளர்ந்து வருந்தாதே! உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் நாயகனாகிய இராமபிரான், நான் முன்பிறவியில் செய்த நல்வினைக்காக நல்கிய புண்ணியத்தின் பயன் இதுவாகும்" என்று தேற்றினான்.

அங்கதன் உள்ளம் உருகியதற்குத் "தீஉறுமெழுகு" உவமை; இங்கே "நெஞ்சில் புல்லி" என்ற சொல்லாட்சியை நோக்க வேண்டும். முன்பெல்லாம் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டதைக் கூறிய கவிஞன் "மார்புறத் தழுவி, தோள் உறத்தழுவி," உடல் இறுகத் தழுவி" என்றுகூறி, இங்கு மட்டும் "நெஞ்சிற்புல்லி" என்று கூறிதற்குக் காரணம், வாலி மார்புறத்தழுவ முடியாத வனாய் அம்பால் அடிபட்டுத் தரையில் கிடக்கிறான் என்பதைக் குறிக்கவே என்க.

இங்கே வாலி இராமபிரானை நாயகன் என்று ஒருமுறை கூறியதை, பின்னர், அங்கதன் இராவணன் முன் இராமனின் நாயகச்சிறப்பை, "பூதநாயகன்; நீர்சூழ்ந்த புவிக்கு நாயகன்; அப்பூமேல் சீதை நாயகன்; வேறு உள்ள தெய்வ நாயகன்;" நீ செப்பும் வேத நாயகன்; மேல் நின்ற விதிக்கு நாயகன்;" என்று கூறப்போவதையும் ஒப்பிட்டு நோக்குக. தான் இவ்வாறு உயிர்பிரியும் நிலையில் அம்பு பட்டுத் தரையில் கிடப்பது தன்னுடைய பகைவனுடைய செயலன்று. இதற்குக் காரணம் தான் முன் பிறவியில் செய்த தீயவினைகள் அன்று என்பதையும் அங்கதனுக்கு நன்கு புரிய வைக்கிறான் வாலி. நெஞ்சு என்பது மார்பு, இதயம், தொண்டை,தோள் என்பனவற்றைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல்.

155. வாலி அங்கதனுக்குக் கூறிய அறிவுரைகள் (3 பாடல்கள்)

"தோன்றலும் இறத்தல்தானும், துகளறத் துணிந்து நோக்கின்,
மூன்று உலகத்தினோர்க்கும் மூலத்தே முடிந்த அன்றே?
யான்தவம் உடைமையால், இவ்இறுதி வந்து இசைந்தது; யார்க்கும்
சான்று என நின்ற வீரன், தான் வந்து வீடு தந்தான்." (4194)

(துகள்அற - குற்றம்நீங்க; துணிதல் - ஆராய்ந்து பார்த்தல்; தோன்றுதல் - பிறத்தல்; மூலத்தே - கருவிலேயே \ ஆரம்பத்திலேயே \ தொடக்கத்திலேயே; இறுதி - இறப்பு \ சாக்காடு; சான்று - சாட்சி; வீடு - மோட்சம் \ பரமபதம்; முடிந்த - நியமிக்கப்பட்டன \ வரையறுக்கப்பட்டன; இயைந்தது - பொருந்தியது)

"குற்றம் நீக்கி, நன்கு ஆராய்ந்து பார்த்தால், இவ்வுலகில் ஓர் உயிரினம் பிறப்பது என்பதும், பின்னர் இறப்பது என்பதும், மண், விண், பாதாளம் என்னும் மூன்று உலகங்களிலும் உள்ள உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் கருவிலேயே வரையறுக்கப்பட்ட, முடிந்த முடிபுகள் ஆகும் அல்லவா? எனவே, நான் முற்பிறப்புக்களில் மிகுந்த தவம் செய்திருப்பதன் பயனாய், எனக்கு இத்தகைய சிறப்பான இறப்பு வந்து பொருந்தியிருக்கிறது; உலகில் உள்ள எல்லோர்க்கும் எல்லாவற்றிற்கும் தானே சாட்சியாக நின்று உலகைக் காத்துவரும் வீரனாகிய இவ்விராமபிரான், தானே என்னைத் தேடிவந்து, எனக்கு வீட்டுலகை அளித்து, மீண்டும் பிறவாமையாகிய நற்பேற்றினை அருளி இருக்கிறான்" என்று வாலி கூறுகிறான்.

இங்கே "மூலம்" என்ற சொல் மிகுந்த பொருள் ஆழம்உடையது. ஒருவனது கருவிலேயே, அதற்கு முன்னரேயே. அவனது வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே, தொடக்கத்திலேயே அவனது இறுதி வரையறுக்கப்பட்டுவிடப்படுகிறது, நியமிக்கப்பட்டு விடப்படுகிறது என்பதும், இது தொன்றுதொட்டு மாறாது தொடர்ந்து வரும் இயல்புடையது என்பதும் கருத்து. "சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தினாகும்" என்பது சீவகசிந்தாமணி; தான் இராமன் அம்பால் அடிபட்டு மரணம் எய்தி வீடுபேறடைவதை மிகவும் பெருமையாகக் கருதுகிறான் வாலி என்பதையும், அதற்காக அவன் இராமபிரானைப் பாராட்டிப் போற்றுகிறான் என்பதையும் உணர்க. நாம் செய்கின்ற நல்ல காரியங்கள், தீயசெயல்கள் ஆகிய எல்லாவற்றையும் இறைவன் மேலிருந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான் என்று உலகவழக்கில் கூறுகிறோமல்லவா? அதைத்தான் "யார்க்கும் சான்று என நின்ற வீரன்" என வாலியின் கூற்றாகக் குறிக்கிறான் கம்பன் "எவ்வுயிர்க்கும் சான்றாம் ஒருவனை" என்பது பெரியபுராணம்; விஷ்ணு சகஸ்ரநாமத்தில் "சாக்ஷி" என்பது திருமாலின் ஒரு பெயராகக் கொள்ளப்படுவது காண்க. "தான் வந்து, வீடு தந்தான்" என்பது இறைவனின் எளிவந்த தன்மையைக் குறிக்கும், இங்கே ஒன்றை மனத்தில் நிறுத்தவேண்டும். மறுபிறவி என்பது மானிடர்களாகிய நமக்கு மட்டும் உள்ளதன்று. வானத்துறையும் தேவர்களுக்கும், பாதலத்து நாகர்களுக்கும் கூட, தன் வினைப்பயனால் மீண்டும் மீண்டும் பிறப்பும் இறப்பும் உண்டு என்பது இங்கு வலியுறுத்தப்படுவது காண்க. "உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்பது குறள் 339.

156. "பாலமை தவிர் நீ; என் சொல் பற்றுதி ஆயின், தன்னின்
மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள், வில்லும் தாங்கி,
கால்தரை தோய நின்று, கட்புலக்கு உற்றதம்மா!
மால் தரும் பிறவி நோய்க்கு மருந்து, என வணங்கு, மைந்த!" (4195)

(பாலமை - சிறுபிள்ளைத் தன்மை; தவிர்தல் - விட்டுவிடுதல்; தரை - மண்; தோய - பொருந்தும்படி \ பதியும்படி; கட்புலன் - காட்சி உணர்வு; உற்றது - எதிர்ப் பட்டது; அம்மா - வியப்பு; மால் - மயக்கம் - புலம் - அறிவு \ உணர்வு; பற்றுதல் - கடைப்பிடித்தல்)

"மைந்தனே அங்கதா! சிறுபிள்ளைத்தனமாக இப்பொழுது அழுவதை நிறுத்து; நான் கூறுவனவற்றைக் கருத்திற்கொண்டு கடைப்பிடிப்பாயாக! தனக்கு மேம்பட்ட பொருள் எங்கும் இல்லை என்று கருதப்படும் மெய்ப்பொருளாகிய பரம்பொருளே, இப்போது மானிட உருவம் கொண்டு இராமபிரானாக, கையில் ஒரு வில்லையும் ஏந்திக்கொண்டு, தன் திருவடிகள் இத்தரையில் பதியுமாறு நின்றுகொண்டு, நம் ஊனக் கண்களுக்குக் காட்சி தந்து கொண்டிருக்கிறான் என்பதை உணர்! இது எத்தகைய வியப்பிற்குரிய செயல்? இவ்விராம பிரானையே, மயக்கம் தருகின்ற பிறவி என்னும் பிணியை அகற்றுகின்ற அரிய மருந்தாகக் கருதி இறைஞ்சித் தொழுவாயாக!" என்கிறான் வாலி.

"பாலமை" என்பது பாலனாகும் தன்மை; சிறுபிள்ளைக்குரிய விளையாட்டுத் தன்மை என்று பொருள்படும். "பற்றுதல்" என்பது மேற்கொள்ளுதல் கடைப் பிடித்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "தன்னின்மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்" என்பது, "தனக்குவமை இல்லாதான்" என்று பொருள்படும். கடவுளர்களும், தேவர்களும் இமையாநாட்டமும், கால் தரை தோயாப் பண்பும் உடையவர்கள். "கால் நிலம் தோயாக்கடவுளை" என்பது நாலடியாரின் கடவுள் வாழ்த்து. "இருநிலத்தவோ நின் இணையடித் தாமரைதான்" என இந்திரன் துதியாக வருவதும் காண்க. இவர்கள் ஞானியர் களின் ஞானக்கண்களுக்கே புலப்படுவர்; அவ்வாறன்றி, மானிடர்களாகிய நம் ஊனக்கண்களுக்கும் புலப்படும்படி கால்நிலம் தோய இங்கு எழுந்தருளி யிருக்கின்ற இராமபிரானைப் பரம்பொருள் என்றும், பிறவிப் பிணிக்கு உரிய மருந்து எனவும் கருதி வணங்கி உய்திபெறுவாயாக! என்கிறான் வாலி என்பதாம்.

"வெந்திறல் அரக்கர் விடவேர் முதல் அறுப்பான் வந்தனன் மருத்துவன்" என்பது அகத்தியர் இராமபிரான் பற்றிக் கூறிய கூற்று. இராமனை மனிதன் என்ற எண்ணத்தில் நோக்காது திருமாலின் அவதாரம் இராமபிரான் என்ற பரம்பொருள் என்ற எண்ணத்தில் அவனை வணங்கிப் பிறவிப்பயன் பெறுக என்பது வாலி அங்கதனுக்குக் கூறும் அறிவுரை என்பதாம்.

157. "என்னுயிர்க்கு இறுதி செய்தான்" என்பதை இறையும் எண்ணாது,
உன் உயிர்க்கு உறுதி செய்தி; இவற்கு அமர் உற்றது உண்டேல்,
பொன் உயிர்த்து ஒளிரும் பூணாய்! பொன்றுதி; தருமம் போற்றி
மன்னுயிர்க்கு உறுதி செய்வான் மலரடி சுமந்து வாழ்தி!" (4196)

(பூண் - அணிகலன்கள்; பொன் - அழகு; இறையும் - சிறிதும்; உறுதி - ஆக்கம் \ நன்மை; அமர் - போர்; பொன்றுதல் இறந்துபடுதல்; மன் - நிலைபெற்ற; சுமந்து - தாங்கி \ சிரமேற்கொண்டு; இறுதி - மரணம் \ முடிவு; உயிர்த்தல் - தோன்றச்செய்தலுமாம்)

பொன்னால் செய்யப்பட்டு ஒளி விட்டுப் பிரகாசிக்கும் ஆபரணங்கள் அணிந்தவனே! மைந்த! அங்கதா! இவ்விராமபிரான் என்னுடைய உயிருக்கு முடிவைத் தந்து விட்டானே என்று எண்ணிச் சிறிதும் கலங்காதே! பகை உணர்வு கொள்ளாதே! நிலையான உன்னுடைய உயிருக்கு நன்மை தருவதான ஆக்கச் செயல்களில் ஈடுபடு; அது என்னவென்றால், இங்கே நிற்கின்ற இராமபிரானுக்கு அவன் எடுத்திருக்கின்ற முயற்சியில் ஏதேனும் இடையூறு வந்து, அவன் பகைவர்கள் யாருடனும் போர் செய்ய நேர்ந்தால், நீ அவனுடன் சென்று, அவன் மடிவதற்கு முன்னால் நீ மடிந்து போய்விடு; அறத்தைக் காப்பாற்றுவது ஒன்றையே தன் தொழிலாகக் கொண்டு, நிலைபெற்ற உயிர்களுக்கு அரக்கர் களிடமிருந்து, உறுதியான நன்மைகளைச் செய்வதற்காகவே வந்திருக்கின்ற இவ்விராமபிரானின் செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை சிரமேற்கொண்டு வாழ்வாயாக!" என்கிறான் வாலி.

"பொன் உயிர்த்தல்" என்பது, உயிரில்லாத பொருளாகிய பொன்னும், உயிருடையது போன்று பொலிவுற்றுத் தோன்றுதல் என்று பொருள்படும். "மன்னுயிர்" என்று பொதுவாக எல்லாக் காப்பியங்களிலும் உயிரைக் குறிப்பதுண்டு. இதற்கு, உயிருக்கு என்றும் அழிவில்லை; உயிர் நிலைபெற்றது; உடல்தான் அழியும் தன்மையது; நிலைபேறில்லாதது என்பது பொருள். இனிமேல் உனக்கு உண்மையான தந்தையும், தெய்வமும் இவ்விராமபிரானே என்று கருதி, அவன் மலரடி தொழுது வாழ்க!" என்கிறான் வாலி என்பதாம். இங்கே இவன் கூறுகின்ற "இவற்கு அமர்உற்றது உண்டேல் பொன்றுதி" என்பது முன்பு சுமித்திரை இலக்குவனுக்குக்கூறிய "மகனே இவன்பின் செல்; அடியாரின் ஏவல் செய்தி; முன்னம் முடி" என்று கூறியதை நினைப்பூட்டுதல் காண்க. இராமபிரானின் மலரடி சுமந்து வாழ்ந்தால், உன் உயிர்க்கு உறுதி செய்தவனாவாய் என்பது கருத்து.

158. அங்கதனை, வாலி, இராமனிடம் அடைக்கலமாகத் தருதல்

என்றனன் இனைய ஆய உறுதிகள் யாவும் சொல்லி,
தன்துணைத் தடக்கை ஆரத் தனையனைத் தழுவி, சாலக்
குன்றினும் உயர்ந்த திண் தோள் குரக்கினத்து அரசன், கொற்றப்
பொன்திணி வயிரப் பைம்பூண் புரவலன் தன்னை நோக்கி. (4197)

(குளகப்பாடல்) (குன்று - மலை; திண் - வலிய; துணை - இரண்டு; தனையன் - புதல்வன்; பூண் - அணிகலன்கள்; புரவலன் - காப்பவன் \ அரசன்; சால - மிகவும்; ஆர - பொருந்த \ நன்றாக; உறுதிகள் - நன்மை தரும் அறிவுரைகள்)

மலையினைக் காட்டிலும் மிக உயர்ந்த வலிய தோள்களையுடையவனும், குரக்கினத்து அரசனானவனுமான வாலி, இவ்வாறு நன்மைதரும் அறிவுரைகள் எல்லாவற்றையும் தன் புதல்வனான அங்கதனுக்குக் கூறி, அவனைத் தனது இரண்டு பெரிய கைகளால் நிறைந்த அன்புடன் தழுவிக்கொண்டு, வெற்றியை யுடைய, பொன்னால் செய்யப்பட்டதும் வயிரங்கள் பதிக்கப்பட்டதுமான பசிய

அணிகலன்களை அணிந்தவனும், இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் காத்தருள்பவனுமான இராமபிரானை நோக்கி - பாடல் தொடர்கிறது.

உறுதிகள் என்பது, அங்கதன் இராமபிரானைத் துதித்துத் தொழுவதால் உண்டாகக் கூடிய நன்மைதரும் அறிவுரைகள் என்பதாம்.

159. "நெய் அடைநெடுவேல் தானை நீலநிற நிருதர் என்னும்
துய்அடைகனலி அன்ன தோளினன்; தொழிலும் தூயன்;
பொய் அடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவ! மற்றுஉன்
கையடை ஆகும்" என்று, அவ்விராமற்குக் காட்டும் காலை. (4198)

(குளகப்பாடல்) (அடை - நிறைந்த \ பூசப்பெற்ற; தானை - சேனை \ படை; தூய் - பஞ்சு; கனலி - நெருப்பு; தொழில் - செயல்; கையடை - அடைக்கலப் பொருள்; நிருதர் - அரக்கர்; புலப்படுதல் - தோன்றுதல் - நீலம் - கருமை; புலவன் - தூய அறிவுடையவன்)

"பொய்ம்மையே நிறைந்திருக்கின்ற உள்ளத்தை உடையவர்களுக்குக் கண்ணில் புலப்படாத தூய அறிவுடையவனே! நெய்பூசப்பெற்ற நீண்ட வேற்படையை உடைய சேனைகளையுடைய, கருமை நிறம்பொருந்திய அரக்கர்கள் என்னும் பஞ்சினைக்சுட்டு எரிக்கும் நெருப்புப் போன்ற தோள்களை உடையவன் இவ்வங்கதன்; மனத்தாலும், மொழியாலும் மட்டுமின்றிச் செயலாலும் தூய்மையானவன்; எனவே இவன் இனிமேல் உன்னால் பாதுகாக்கப்படவேண்டிய அடைக்கலப் பொருள் ஆவான்" என்று வாலி, அங்கதனை, இராமபிரானிடம் ஒப்படைக்கும் சமயம் - பாடல் தொடர்கிறது.

வேற்படை துருப்பிடிக்காது இருப்பதற்காக நெய் பூசப்பட்டு வைக்கப் பட்டிருக்கும் என்பது முன்பும் கண்டது. "பொய்அடை உள்ளத்தார்க்குப் புலப்படாப்புலவ" என்பது, "மெய்யனாகும் விரும்பித் தொழுவார்க்கெல்லாம்; பொய்யனாகும் புறமே தொழுவார்க்கெல்லாம்" என்ற நம்மாழ்வார் பாசுரத்தை நினைப்பூட்டுவது உணர்க. பொய் என்பது அஞ்ஞானம்; அத்தகைய பொய்யான அஞ்ஞானம் நிறைந்தவர்க்கு இறைவன் காட்சிதந்து அருள்புரிய மாட்டான் என்பதும், மெய் என்பது மெஞ்ஞானம்; மெஞ்ஞானம் நிறைந்தவர்க்கு விழுமிய ஞானப்பொருளாய் வெளிப்பட்டு அருள்புரிவான் என்பதும் கருத்து.

160. அங்கதனை இராமன் ஏற்றலும், வாலி பரமபதம் அடைதலும்

தன் அடி தாழ்தலோடும், தாமரைத் தடங்கண்ணானும்,
பொன் உடைவாளை நீட்டி, "நீ இது பொறுத்தி" என்றான்;
என்னலும், உலகம் ஏழும் ஏத்தின; இறந்து, வாலி,
அந்நிலை துறந்து, வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான். (4199)

(தாழ்தல் - விழுந்து வணங்குதல்; பொறுத்தி - ஏற்றுக்கொள்வாயாக; ஏத்துதல் - துதித்தல்)

உடனே அங்கதன் இராமபிரானின் திருவடிகளில் விழுந்து வணங்கவும், செந்தாமரை மலர்போலும் பெரிய கண்களையுடைய இராமபிரானும்,

தன்னுடைய பொன்னால் செய்யப்பட்ட உடைவாளை அங்கதனிடம் கொடுத்து "இதனை ஏற்றுக் கொள்வாயாக!" என்றான்; என்று கூறியதும், பகைவனுக்கும் அவன் மகனுக்கும் அருள்கின்ற இராமபிரானின் திறத்தை வியந்து ஏழு உலகங்களில் உள்ளவர்களும் இராமபிரானைத் துதித்தனர்; அந்நிலையில் வாலி அவனுடைய பூத உடலோடு, காமம், வெகுளி, மயக்கம் என்னும் மும்மலங்களையும், யான், எனது என்னும் அகப்பற்றுக்களையும் விட்டொழித்து, தேவர்கள் வாழ்கின்ற வானுலகத்திற்கு அப்புறத்தாய பரமபதம் என்னும் வைகுண்டப்பதவியை அடைந்தான்.

தாமரைத்தடங்கணான் என்பது புண்டரீகாக்ஷன் என்ற வடசொல்லின் தமிழாக்கம். தன்னை நிந்தித்து அவமானப்படுத்திய வாலிக்கும் பரமபதம் அளித்தான் இராமபிரான் என்பது "வைதாரையும் வாழ்வித்து, வைகுந்தம் சேர்க்கும் பிரான்" என்ற சான்றோர் கூற்றுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். சான்றோர்கள் தன்னைச் சேர்ந்து அடைக்கலம் என்று தாழ்ந்தவர்களைத் தான் ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாகத் தன் தற்காப்புக்கு உரிய உடைவாளை அளிப்பர் என்பது பெறப்படுகிறது. இங்கே கம்பன் வான்மீகத்தினின்றும் பெரிதும் மாறுபட்டிருக்கிறான். வான்மீகத்திலும் அத்யாத்ம ராமாணயத்திலும், வாலி அங்கதனைச் சுக்கிரீவனிடம்தான் ஒப்புவித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இராமனிடம் ஒப்புவித்ததாகவோ அவன் தன் உடைவாளைத் தந்து இவனை ஏற்றுக்கொண்டதாகவோ, கூறப்படவில்லை. கம்பன் அங்கதனுக்குச் சிறப்புச் சேர்க்க வேண்டியே இராமன் தன் உடைவாளைத் தந்ததும் அல்லாது, பின்னால் முடிசூட்டும் நிகழ்ச்சியிலும் உடைவாள் ஏந்திநிற்கும் பேறு தருகிறான் என்பதையும் நோக்கவேண்டும். வாலி "வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான்" என்பது, வள்ளுவரின் "யான் எனது என்னும் செருக்கு அறுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்னும் குறள் 346ஐ நினைவுபடுத்துவதை உணர்க.

161. இராமபாணம் மீண்டும் அம்பறாத் தூணிவந்தடைதல்

கை அவண் நெகிழ்தலோடும், கடுங்கணை, காலவாலி
வெய்ய மார்பு அகத்துள் தங்காது, உருவி, மேக்கு உயர மீப்போய்,
துய்ய நீர்க்கடலுள் தோய்ந்து, தூய்மலர் அமரர் சூட்ட,
ஐயன் வெந் விடாத கொற்றத்து, ஆவம் வந்து அடைந்தது அன்றே! (4200)

(அவண் - அந்நேரத்தில்; காலன் - கூற்றுவன்; வெய்ய - வெம்மையுடைய; மேக்கு - மேற்பட்டு; மீப்போய் - மேலே சென்று; தோய்தல் - படிதல்; ஐயன் - தலைவன் \ இராமபிரான்; வெந் - வெரின் \ முதுகு; ஆவம் - அம்பறாத்தூணி \ அம்புப்புட்டில்; கடுமை - விரைவு; நெகிழ்தல் - தளர்தல்)

அவ்வாறு வாலி உயிர் நீத்த நேரத்தில், அவனுடைய கை, தான் பிடித்திருந்த அம்பின் பிடியைத் தளர்த்தியதால், அந்த விரைவு மிக்க அம்பு, கூற்றுவன் போன்ற வலிய வாலியின் வெம்மையுடைய மார்பினில் தங்காது, அதை ஊடுருவிச் சென்று, மேலே எழுந்து, உயர்ந்துபோய், தூய்மையான நன்னீர்க்

கடலுள் படிந்து, தன்னை நீராட்டித் தூய்மைப் படுத்திக் கொண்டு, தேவர்கள் தூய்மையான மலரினைத் தூவி வாழ்த்தவும், இராமபிரானின் முதுகைவிட்டு நீங்காததும், வெற்றியையே தருவதுமான அம்பினைக் கொண்டதுவுமான அம்பறாத் தூணியில் வந்து சேர்ந்தது.

இங்கே கடுமை விரைவை உணர்த்தி நின்றது. வாலிக்குக் காலன் உவமை. இங்கே வாலியின் மார்பில் தங்காது இராமபாணம் எப்படி ஊடுருவி வெளிப்போந்ததோ, அதேபோலத் தாடகை மீது ஏவிய பாணமும், இராவணன் மீது ஏவப்போகிற பாணமும் ஊடுருவி வெளிப் போந்தது என்றும் கவிஞர் கூறுவதை ஒப்பு நோக்க வேண்டும். "கல்ஒக்கும் நெஞ்சில் தங்காது, அப்புறம் கழன்று, கல்லாப்புல்லோர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப்போயிற்று அன்றே" என்பது தாடகை வதைப்படலம்; "மார்பில் புக்கு ஓடி, உயிர்பருகி, புறம் போயிற்று இராகவன் தன் புனிதவாளி" என்பது இராவணன் வதைப்படலம்.

162. வாலியின் மேனியில் தாரை வந்து விழுந்து புரளுதல்

வாலியும் ஏகினான் அவ்வரம்பிலா உலகில்; இன்பம்
பாலியா, முன்னர் நின்ற பரிதி சேய் செங்கை பற்றி,
ஆலிலைப் பள்ளியானும், அங்கதனோடும் போனான்,
வேல் விழித் தாரை கேட்டாள்; வந்து, அவன் மேனி வீழ்ந்தாள். (4201)

(வரம்பிலா - எல்லையற்ற; பள்ளி - படுக்கை; பாலியா - பாலித்து; பாலித்தல் - வழங்குதல்; பரிதிசேய் - கதிரவன் புதல்வன் \ சுக்கிரீவன்)

அவ்வாறு வாலியும், காலம், இடம் என்னும் எந்த எல்லையும் இல்லாத, எப்போதும் ஒரே தன்மையாய் விளங்கும் பரமபதம் அடைந்தான்; அவனுக்கு அத்தகைய பரமபதத்தை நல்கிய பின்னர் உலகம் முழுதும் அழியும் பிரளய காலத்திலும், தான் மட்டும் அழியாது அவ்வுலகங்களைக் காக்கும் பொருட்டு அவற்றைத் தன் வயிற்றில் அடக்கிக் கொண்டு ஒரு ஆல் இலையின் மீது பள்ளி கொண்டருளும் திருமாலின் அம்சமான இராமபிரான், அவ்வாலிக்குப் பேரின்ப வீடாகிய அப்பரமபதத்தை மகிழ்வுடன் வழங்கிய பின்னர், தன்முன் நின்ற சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவனின் சிவந்த கைகளைப் பிடித்துக் கொண்டு, வாலியின் புதல்வனாகிய அங்கதனையும் அழைத்துக் கொண்டு அவ்விடம் விட்டு அகன்று போனான்; தன் கணவன் வாலி இறந்துவிட்டான் என்பதைக் கேள்வியுற்ற, வேல் போலும் கூரிய விழிகள் படைத்த தாரை, அரற்றிக்கொண்டே அந்தப்புரத்திலிருந்து ஓடிவந்து, அவன் மேனியின் மேல் விழுந்தாள்.

"ஆலின் இலைப் பாலகனாய் அன்று உலகம் உண்டவனே! வாலியைக் கொன்று, அரசு இளைய வானரத்திற்கு அளித்தவனே!" என்பது குலசேகராழ்வார் பாசுரம்.

163. குங்குமம் கொட்டி அன்ன, குவிமுலைக் குவட்டிற்கு ஒக்கப்
பொங்கு வெங்குருதி போர்ப்ப, புரிகுழல் சிவப்ப, பொன்தோள்
அங்கு அவன் அலங்கல் மார்பில், புரண்டனள்; அகன்ற செக்கர்
வெங்கதிர் விசும்பில் தோன்றும் மின்னெனத் திகழும் மெய்யாள். (4202)

(குவடு - மலைச்சிகரம்; ஒக்க - பொருந்த; போர்ப்ப - மூட; புரி - பின்னப்பட்ட, சுருண்ட \ நெளிந்த; செக்கர் - செவ்வானம்; மெய் - மேனி \ உடம்பு; அலங்கல் - மலர்மாலை; குங்குமம் - செந்நிறக்கலவை; அகன்ற - நீங்கிய \ மறைய)

அங்கே வீழ்ந்து இறந்து கிடக்கின்ற, பொன்நிறம் வாய்ந்த தோள்களில் மாலையணிந்துள்ள வாலியின் மேல், தாரை ஓடிவந்து விழுந்து புரளுகிறாள்; அப்பொழுது அவளது குவிந்த அழகிய கொங்கை என்னும் மலைச்சிகரத்திற்குப் பொருந்தியவாறு, குங்குமக்கலவையைக் கொட்டினாற்போல, வாலியின் உடலிலிருந்து பொங்கி எழுந்த வெப்பம் மிகுந்த இரத்தப்பெருக்கு அவளை அப்படியே மூடி மறைத்தது. அவளுடைய சுருண்டு விரிந்து பின்னப்பட்ட கரிய கூந்தல் செந்நிறம் அடைந்தது. இதுஎப்படி இருக்கிறது என்றால், அப்பொழுது தான் மறைந்து போன சூரியன் திகழுகின்ற செவ்வானத்தில், வெப்பம் மிகுந்த கதிர்கள் ஆகாயத்தில் தோன்றுகின்ற மின்னலைப் போல இருந்தது.

இறந்து கிடக்கின்ற வாலியின் மார்பிலிருந்து இரத்தம் பீரிட்டுப் பொங்குகிறது. ஓடிவந்து தாரை அவன் தோள்மீதும், மார்பு மீதும் புரண்டு அழுகிறாள். அப்பொழுது குவிந்த கொங்கைகள் இரத்தப்பெருக்கால் மூடப்பெறுகின்றன; அது குங்குமக் குழம்பால் போர்த்தப்பட்டது. அவளுடைய சுருண்ட கரிய கூந்தலும் செந்நிறம் ஆகிவிடுகிறது. இதற்கு மாலையில் சூரியன் மறையும் போது காணப்படுகின்ற செவ்வானத்தை வாலியின் மேனிக்கும், அச்செவ்வானத்தில் தோன்றும் மின்னலைத் தாரைக்கும் உவமிக்கிறான் கவிஞன் என்பதாம்.

164. தாரை புலம்புதல் (14 பாடல்கள்)

வேய்ங்குழல், விளரி நல்யாழ், வீணை என்று இவையும் நாண,
ஏங்கினள் இரங்கி; விம்மி உருகினள்; இருகை கூப்பி,
தாங்கிய கலைகள் சோர்ந்து சரிதர, குழலும் தாழ,
ஓங்கிய துயராள், பன்னி, இனையன உரைக்கலுற்றாள். (4203)

(வேய்ங்குழல் - புல்லாங்குழல்; வேய் - மூங்கில்; விம்முதல் - பெருமூச்சு விடுதல்; கலை - ஆடை; சரிதரல் - சரிதல் \ நழுவுதல்; குழல் - கூந்தல்; தாழ்தல் - தொங்குதல்; பன்னி - மீண்டும் மீண்டும் \ பலமுறை; விளரி - இரங்கற்பண்; இனைய - இத்தகைய; ஏங்குதல் - அழுதல்)

மூங்கிலாலான புல்லாங்குழல்; விளரி என்னும் இரங்கற்பண் ஒலிக்கும் நல்ல யாழ், வீணை என்று கூறப்படும் இசைக்கருவிகள் எல்லாம், தாரையின் குரல் ஒலிக்கு நாணுமாறு, தாரை, வாலியின் இறந்து கிடந்து உடம்பினைக் கண்டு அழுது, ஏங்கி, பெருமூச்சுவிட்டு உள்ளம் கரைந்தாள்; தன் இரண்டு கைகளையும் தலைமேல் சேர்த்துக் கூப்பி வணங்கிக் கொண்டு, தனது உடலில் பொருந்தியுள்ள ஆடைகளெல்லாம் தளர்ந்து நெகிழவும், கூந்தல் அவிழ்ந்து தரையில் தொங்கவும், மிக்குப் பெருகிய துயரத்தை உடைய தாரை, மீண்டும் மீண்டும் கதறி அழுது கீழ்வருவனவற்றைக் கூறத் தொடங்கினாள்.

குழல் துளைக்கருவி; யாழும் வீணையும், நரம்புக் கருவிகள் யாழும் வீணையும் வேறு வேறான கருவிகள் என்றாலும் காலப்போக்கில் இரண்டும் ஒன்றே என்று கருதும்படி வழங்கலாயிற்று. யாழ், உருவில் வீணையினும் மாறுபட்டது. இவைகளெல்லாம் நாணும்படி தாரையின் குரல் இருந்தது என்பதாலும், இத்தகைய ஆற்றொணாத் துயரம் உற்றிருக்கும்போதும் கூட அவளது குரல் இவ்வளவு இனிமையாக இருந்தது என்றால், அவள் மகிழ்ச்சியாகப் பேசும் நேரங்களில் எவ்வளவு மிக்க இனிமையாக இருக்கும் என்று உய்த்துணர வைப்பதாலும், தாரையின் குரலினிமை சிறப்பிக்கப்பட்டது என்க. தன் கணவன் இறந்த நிலையில் ஒரு பெண்ணின் மெய்ப்பாடுகள் இப்பாடலில் நன்கு தெளிவாக்கப்பட்டிருப்பதை உணர்க. மகளிரின் அழுகை ஒலியை இசைக்கருவிகளின் ஒலியோடு இயைபு படுத்திக் கூறுவது கவிமரபு.

165. "வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்;
கரைசேரா இடர்வேலை காண்கிலேன்
உரைசேர் ஆர் உயிரே! என் உள்ளமே!
அரைசே! யான் இது காண அஞ்சினேன்" (4204)

(உரை - புகழ்; வரை - மலை; சேர் - ஒத்த; வைகலும் - எப்போதும்; வேலை - கடல்)

"புகழ் பொருந்தியவனே! என்உயிர் போன்றவனே! என் உள்ளத்துள் உறைபவனே! மலைபோலும் வலிய உன் இனிய தோள்களின் இடையே நாள் தோறும் வாழ்ந்தவளான நான் இப்போது, கரைகாண முடியாத இப்பெருந் துயர்க்கடலைக் காணும் ஆற்றல் பெற்றேன் அல்லேன்; என்னைக் காத்துவந்த காவலனே! மன்னனே! உன்னுடைய இந்த நிலையைக் காண, நான் மிகவும் அச்சமுறுகிறேன்" என்று புலம்புகிறாள் தாரை.

முன்பு அங்கதனும் "மலர்மென் சேக்கை மலையல்லாது, குருதிக்கடலில் காண ஒல்லேன்" என்றது போல, இங்கே தாரையும் "வரைசேர் தோளிடை வைகும் நான், கரைசேரா இடர்வேலை காண்கிலேன்" என்று இருவரையும் ஒன்றுபோலக் கூறவைத்த கவிஞனின் திறம் நோக்குக. வாலியும் தாரையும் உள்ளமும் உயிரும் போல ஒன்றெனக் கலந்து வாழ்ந்து வந்தனர் என்பதைக் குறிக்கவே என் ஆர்உயிரே என்றதன்பின், "என் உள்ளமே" என்று தனித்துக் கூறினாள் என்க.

166. "துயராலே தொலையாத என்னையும்,
பயிராயோ? பகையாத பண்பினாய்!
செயிர்தீரா விதியான தெய்வமே!
உயிர்போனால், உடல் ஆரும் உய்வாரோ? (4205)

(தொலைதல் - இறந்துவிடுதல்; பயிர்தல் - அழைத்துக்கொள்ளுதல்; செயிர் - கோபம்; தீர்தல் - நீங்குதல்; உய்தல் - பிழைத்திருத்தல்)

"யாரிடத்தும் பகைமை கொள்ளாதவனே! சிறப்பாக என்னிடத்து எந்தவித மாறுபட்ட குணமும் கொள்ளாதவனே! நீ இறந்த இந்தப் பெருந்துன்பத்தில் உழன்றும், உயிர் போகாத நிலையில் இருக்கும் என்னையும், உன் அன்பினால், உன்னுடன் அழைத்துக்கொண்டு செல்லமாட்டாயோ? குற்றமும் கோபமும் நீங்காது, ஊழ்வினை எனப்படும் தெய்வமே! ஒரு மனிதனின் உயிர் போய்விட்டால், உடல் மட்டும் தனித்து இருந்து பிழைத்துக்கொள்ளும் தன்மை எங்காவது உண்டோ?" என்று புலம்புகிறாள் தாரை.

கணவன் இறந்ததும் தானும் அவனுடன் சேர்ந்து இறந்திருக்கவேண்டும் என்பது அவள் கருத்து. உயிர்போன பிறகு உடல் மட்டும் எங்காவது பிழைத்திருக்க இயலுமா? என்கிறாள்; வாலியும், தாரையும் உடலும் உயிருமாக ஒன்றாய்க் கலந்து வாழ்ந்தனர் என்பது கருத்து. இந்தத் துன்பக் கடலுள் ஆழ்ந்து இனியும் உயிர்பிழைத்திருப்பதைக் காட்டிலும் தானும் வாலியுடன், சேர்ந்து இறந்து படுதல் நன்று என்று ஊழ்வினை என்னும் தெய்வத்திடம் வேண்டுகிறாள் என்பதாம். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் உயிரும் உடலும் போலக்கருத வேண்டும் என்பது பெறப்படுகிறது.

167. **"நறிது ஆம் நல் அமிழ்து உண்ண நல்கலின்,**
பிறியா இன்னுயிர் பெற்ற பெற்றி, தாம்
அறியாரோ நமனார்? அது அன்று எனின்,
சிறியாரோ உபகாரம் சிந்தியார்?" **(4206)**

(நமன் - இயமன் \ கூற்றுவன்; நறிது - நறுமணம் உடையது \ சுவையுமாம்; பிறியா - பிரியாத; பெற்றி - தன்மை; உபகாரம் - பேருதவி; சிறியார் - சிறுமை யுடையவர்)

"இப்போது உன்னுடைய உயிரைக் கவர்ந்து சென்ற இயமன், நீதான் பாற்கடலைக் கடைந்து மிகச்சுவையும் நறுமணமும் உள்ள தேவாமிர்தத்தைத் தேவர்களுக்கும், அத்தேவர் கூட்டத்தைச் சேர்ந்த இந்த இயமனுக்கும் உண்ணுவதற்குக் கொடுத்தாய் என்பதும் அதனால்தான் அவனும், அவர்களும் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று இருக்கிறார்கள் என்ற உண்மையும் அறியாதவனா இந்தக் கூற்றுவன்? அல்லது அவன் அவ்வாறு அதை அறிந்தவன் அல்லன் என்றால், நீ செய்த பேருதவியை மறந்து போன அற்பக்குணமுடைய சிறுமையன் ஆகிவிட்டானோ?" என்று புலம்புகிறாள் தாரை.

வாலி பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிழ்தம் அளித்ததும் முன்பே கூறப்பட்டது. அந்தத் தேவர்கூட்டத்துள் இயமனும் ஒருவனே; வாலி கொடுத்த சாவா மருந்தாகிய அமிழ்தத்தை உண்டுதான் அவனே மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றிருக்கிறான். அவனே நீ செய்த உதவியை நினையாமல், மறந்து, உன் உயிரைக் கவர்ந்து சென்றிருக்கிறான் என்றால் அவன் நன்றி கொன்ற அற்பனாகிறான். செய்நன்றி மறந்த கீழ்மகன் ஆகிறான் என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொள்ளுகிறாள் தாரை. இயமன் செய்தது அறிந்தே செய்த பிழையா, அல்லது அறியாமற் செய்த பிழையா என்பது தாரையின் கேள்வி. தேவர்க்கும் இயமனுக்கும் அமிழ்து வழங்கிய தனது

கணவனின் வள்ளன்மையையும், அதை உண்டு அவனுக்கே கேடு விளைவித்தஇயமனின் கொடுந்தன்மையினையும் மிக நாகரீகமாகக் கூறிய நயம் நோக்குக. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது குறள் 110.

168. "அணங்குஆர் பாகனை ஆசைதோறும் உற்று,
உணங்கா ஒண்மலர் கொண்டு, உள்ளன்போடும்
இணங்கா, காலம் இரண்டொடு ஒன்றினும்
வணங்காது, இத்துணை வைக வல்லையோ?" (4207)

(அணங்கு - பெண் \ உமாதேவி; ஆசை - திசைகள்; உணங்கா - வாடாத; ஒண் - ஒளி பொருந்திய; இத்துணை - இவ்வளவு நேரம்; வைகல் - தங்குதல்; இணங்கா - இணங்கி \ மனம் ஒன்றுபட்டு)

"உமாதேவியாகிய ஒருபெண்ணைத் தன் இடப்பாகத்தில் வைத்திருக்கும் சிவபெருமானை எல்லாத் திக்குகளிலும் சென்று, வாடாத, அன்றலர்ந்த ஒளிபொருந்திய மலர்களைக் கொண்டு அர்ச்சித்து, உள்ளன்போடு, ஒன்றுபட்ட மனத்தோடு, காலை, பகல், மாலை என்று மூன்று காலங்களும் வணங்காமல், இவ்வாறு இத்துணை நேரம் செயலற்றுத் தரையில் கிடக்க உன்னால் முடியுமோ?" என்று புலம்புகிறாள் தாரை.

வாலி நாள்தோறும், மூன்று வேளையும், எட்டுத்திக்குகளிலும் உள்ள மாதொரு பாகனாகிய சிவன் கோயில்களுக்குச் சென்று உள்ளன்போடு மலர்தூவி வழிபடும் வழக்கம் உள்ளவன் என்பதும், இப்போது அவனால் அவ்வாறு செய்ய முடியாது செயலற்றுக் கிடப்பது எவ்வாறு முடிகிறது என்றும் கேட்கிறாள் தாரை. உலகின் எட்டுத்திக்குகள் தவிரப் பல தலங்களுக்கும் சென்று சிவபெருமானை வழிபட்டவன் வாலி என்பது திருஞானசம்பந்தர் தேவாரத்தினாலும் தெரிய வருகிறது என்பதை முன்பும் கண்டோம்.

169. "வரை ஆர் தோள் பொடி ஆடி வைகுவாய்
தரைமேலாய்; "உறுதன்மை ஈது" எனக்
கரையாதேன் இடுபூசல் கண்டும், ஒன்று
உரையாய்; என் வயின் ஊனம் யாவதோ?" (4208)

(வரை - மலை; ஆர் - ஒத்த; பொடி - வெண்பொடி \ திருநீறு \ தூசியுமாம்; தரை - நிலம்; பூசல் - அழுகை \ ஓசை; என்வயின் - என்னிடம்; ஊனம் - குற்றம்; ஆடுதல் - பூசிக்கொள்ளுதல்; கரைதல் - புலம்பி அரற்றுதல்)

"மலைபோலும் வலிய தோள்களில் இப்போது தூசிபடியத் தரையில் கிடக்கின்றவனே! வாலி! உனக்கு ஏற்பட்ட இத்தன்மையைக் கண்டு உள்ளம் கசிந்து உருகுகின்றவளாகிய நான் எழுப்புகின்ற அழுகை ஓசையைக்கேட்டும், எனக்கு ஆறுதலாக ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டேன் என்கிறாயே? அவ்வாறு நீ என்னை வெறுத்து ஒதுக்குவதற்கு நான் செய்த குற்றம் என்ன? என்னிடம் நீ கண்ட குற்றம் என்ன?" என்று புலம்புகிறாள் தாரை.

"பொடி" என்ற சொல்லுக்குத் திருநீறு என்று பொருள் கொண்டு, "மலை போன்ற தோள்களில் எப்போதும் திருநீறு பூசிக்கொண்டு, சிவன் கோவிலிலேயே தங்கியிருப்பவனாகிய நீ இப்போது இந்தத் தரையில் கிடக்கிறாயே? என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். "கண்டும்" என்ற சொல் கேட்டும் என்ற பொருளில் பயின்று வருவது காண்க. எனினும் இப்போதைய நிலையில் வாலியால் காணவும் முடியாது, கேட்கவும் முடியாது என்றாலும், தான் அரற்றும் ஓசையைக் கேட்டும் எனக்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூற மறுக்கிறாயே ஏன்? என வாலியிடம் கேட்கிறாள் தாரை. நீ என்னிடம் பேசக் கூடாத அளவுக்கு நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன் என்கிறாள் தாரை. இதே சூழ்நிலையில் மதுரையில் கோவலன், பாண்டியன் அரசவையில் கொலைபட்டுக் கிடந்தபோது கண்ணகி அரற்றுவதையும் கேளுங்கள். "என்னுறு துயர்கண்டும் இடர்உறும் இவன் என்னீர்; பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதுவோ?" என்பது சிலப்பதிகாரம்.

170. "நையா நின்றனென், நான் இருந்து இங்ஙன்;
மெய்வானோர் திருநாடு மேவினாய்;
ஐயா! "நீ எனது ஆவி" என்றதும்,
பொய்யோ? பொய் உரையாத புண்ணியா!" (4209)

(புண்ணியம் - நல்வினைப்பேறு; இங்ஙன் - இங்கே; நைதல் - துயருறுதல்; நையா - நைந்து; மெய் - வாய்மை; ஆவி - உயிர்)

"பொய்யே பேசியறியாத நல்வினைப் பேறு பெற்றவனே! நீ உயிர் இழந்து கிடக்க, நான் மட்டும் இங்கே துயருற்று நிற்கின்றேன்; ஆனால் நீயோ வாய்மையே பேசும் தேவர்கள் வாழும் சுவர்க்கத்தினுக்கும் மேலான பரமபதம் சென்றடைந்தாய்; தலைவனே! "நீ உயிர்வாழ்ந்த காலத்தில் என்னை "நீ தான் என் உயிர்" என்று சிறப்பித்துக் கூறினாயே! அவையெல்லாம் பழங்கதையாய்ப் போயிற்றோ?" என்று புலம்புகிறாள் தாரை.

"நீ எனது ஆவி" என்று பொய் சொல்லிவிட்டு, இப்பொழுது அவன் வாய்மையே வழுவாத மெய்ம்மையே பேசும் தேவர்கள் வாழும் உலகம் சென்றடைந்தான் என்ற நயம் நோக்குக. பொய்யே பேசாத நீ என்னிடம் மட்டும் ஏன் இத்தகைய பொய்யைக் கூறினாய் என்று கேட்கிறாள் தாரை. கணவனும் மனைவியும் ஒவ்வொருவரும் தம்மை உடலாகவும், மற்றவரை உயிராகவும் கொண்டு வாழ்வது இயல்பு; கணவன் மனைவியர் மட்டும் அன்றி நண்பர்கள் கூட அவ்வாறு கொள்ளுதல் உண்டு என்பதை தசரதன் - சடாயு நட்பினாலும் அறியலாம். இயமன் உயிரைக் கைக்கொள்ளுதலும், உடல் தரையிலேயே கிடத்தலும் இயல்பு எனின் இங்கே உயிர்வாலியாகவும், உடல் தாரையாகவும் ஆயிற்று. அதேபோல் அங்கே தசரதன் உயிராகவும், சடாயு உடலாகவும் ஆகியிருக்கவேண்டும். ஆனால் அங்கே "உயிர் கிடக்க, உடலை விசும்பு ஏற்றினாரே உணர்விழந்த கூற்றினாரே" எனச் சடாயு கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

171. "செருஆர் தோள! நின் சிந்தை உளேன் எனின்,
மருவார் வெஞ்சரம் எனையும் வவ்வுமால்;
ஒருவேனுள் உளை ஆகில் உய்தியால்;
இருவேமுள் இருவேம் இருந்திலேம்." (4210)

(செரு - போர்வலி; வவ்வுதல் - கவர்தல்; உளை - உள்ளாய் \ இருக்கிறாய்; ஒருவேன் - தமியள்; உய்தல் - பிழைத்திருத்தல்; மருவார் - பகைவர்; மருவுதல் - ஒன்றுபடுதல் \ பொருந்துதல்)

"போர்த்தொழிலில் ஆற்றலுடைய தோள்களையுடையவனே! வாலி! உன் உள்ளத்தில் நான் இருக்கிறேன் என்பது உண்மையானால், பகைவர்களுடைய கொடிய அம்பு உன் உள்ளத்தில் இருக்கும் என்னையும் கவர்ந்திருக்க வேண்டும். அதனால் நானும் உயிர் துறந்திருக்க வேண்டும். தனியாக விடப்பட்ட என் உள்ளத்தில் நீ இருக்கிறாய் என்று சொன்னால், நான் இப்போது உயிருடன் இருப்பது போல் நீயும் பிழைத்து உயிருடன் இருந்திருக்க வேண்டும், இவ்விரண்டு நிகழ்ச்சிகளுமே நிகழாமையால், நாம் இருவர் உள்ளத்திலும் இருவரும் இருக்கவில்லை என்பது புலப்படுகிறது" என்கிறாள் தாரை.

"உடம்பொடு உயிர் இடை என்ன மற்றன்ன மடந்தையோடு எம்மிடை நட்பு" என்பது குறள் 1122. சீதையும் இராமனும் முன்பு "இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்" என்று கூறியதையும் இங்கு ஒப்பு நோக்குக. "உடையாள் உன்றன் நடுவிருக்கும்; உடையாள் நடுவுள் நீ இருத்தி" என்பது திருவாசகம்.

172. "எந்தாய்! நீ அமிழ்து ஈய, யாமெலாம்
உய்ந்தோம்" என்று, உபகாரம் உன்னுவார்,
நந்தாநாள் மலர்சிந்தி, நண்பொடும்
வந்தாரோ எதிர்? வானுளோர் எலாம்?" (4211)

(உபகாரம் - பேருதவி; உன்னுதல் - நினைத்தல்; எந்தாய் - எம் தலைவனே; நந்தா - வாடாத; நாள் - புதிய \ அன்றலர்ந்த; சிந்தி - தூவி; உய்தல் - பிழைத்தல்)

"என் தந்தை போன்றவனே! நீ அன்று பாற்கடலைக் கடைந்து எங்களுக்குத் தந்த அமிழ்தத்தால்தான் நாங்கள் எல்லோரும் இன்று மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்று உன் மீது நன்றி பாராட்டி, நீ செய்த பேருதவியை மறவாமல், நினைந்து, வாடாத அன்றலர்ந்த புதிய கற்பகம் போன்ற தெய்வ மலர்களையெல்லாம் தூவி அர்ச்சித்துக் கொண்டு, நட்புரிமையோடு, வானுலகத்திலுள்ள தேவர்கள் எல்லோரும், உன்னை எதிர் கொண்டு அழைக்க வந்தார்களோ?" என்று கேட்கிறாள் தாரை.

முன்பாடலில் இயமன், வாலி செய்த பேருதவியைச் சிந்தித்துப் பார்க்காதவன் என்று நிந்தித்த தாரை, இப்பொழுது தேவர்களெல்லாம் அவ்வுதவியை நினைத்துக் கொண்டு இருந்தார்களோ? என்று சற்று சந்தேகத்துடன் கேட்பதை உணர்க.

173. "ஓயாவாளி ஒளித்து நின்று எய்வான்
ஏயா வந்த இராமன் என்று உளான்,

வாயால் ஏயினன் என்னின், வாழ்வு எலாம்
ஈயாயோ? அமிழ்தேயும் ஈகுவாய்!" (4212)

(ஓயா - ஒழியாத; ஒளித்து - மறைந்து; ஏயா - இசைந்து; ஏயினன் - பணித்தான், கேட்டான்; வாளி - அம்பு)

"பாற்கடலைக் கடைந்த பொழுது கிடைத்த சாவாமருந்தாகிய அமிழ்தத்தைக் கூடத் தனக்கெனக் கொள்ளாது, தேவர்களுக்கே முற்றிலும் ஈந்த ஈகைக் குணமுடையவனே! தன்பகைவர்களை அழித்தல் என்பதில் ஒருபோதும் பின்வாங்காத, நீங்காத அம்பினைக் கொண்டு, தான் மறைந்து நின்று உன்மேல் அம்பு தொடுத்தற்கு இசைந்து வந்த இராமன் என்று சொல்லப் படுகின்ற ஒருவன், தன் வாய் வார்த்தையால் இரந்து கேட்டிருப்பானேயானால், உன்னுடைய பெருஞ்செல்வங்கள் அனைத்தையும், அரசுரிமையுடன் கூட, நீ உன்தம்பி சுக்கிரீவனுக்குக் கொடுத்திருக்க மாட்டாயோ? கொடுத்திருப்பாய் அல்லவா?" என்று கேட்கிறாள் தாரை.

இராமனது வாளி, "ஓயா வாளி" என்று சிறப்பிக்கப்பட்டது. இலக்குத் தவறாத, பகைவரையழிக்கும் இயல்பு கொண்டது என்பது பொருள்; ஏயா என்பது இயையா என்று இசைந்து, உடன்பட்டு என்று பொருள் கொண்டு சுக்கிரீவன் வேண்டுகோளுக்கு உடன்பட்டு என்ற பொருளைத் தரும். "இராமன் என்று உளான் ஒருவன்" என்பது இராமனை மிகச் சாதாரண மனிதன் போலத் தாரை கருதினாள் என்பதைக் குறிக்கும், சிறப்பில்லாத யாரோ ஒருவன் என்னும் இழிவுக்குறிப்பு; முன்பு இராமனை "நெடுந்துணை" என்றும், "ஆயவற்கு இன்னுயிர் நட்பு அமைந்து இராமன் என்பவன்" என்றும் கூறியதையும் இங்கு நினைக. தான் வாய் வார்த்தையால் இரந்து கேட்டிருந்தாலும் உன் அரசப்பெருஞ்செல்வம் அனைத்தையும் உன் தம்பி சுக்கிரீவனுக்கு விட்டுக் கொடுத்திருப்பாயே? அத்தகைய வள்ளலாயிற்றே நீ! அதை விடுத்து இராமன் ஏன் இவ்வாறு ஒளிந்து நின்று, அம்பு எய்து, உன்னைக் கொன்று, உன் செல்வத்தை உன்தம்பி சுக்கிரீவனுக்கு வாங்கித்தர முற்படவேண்டும்?" என்று கேட்கிறாள் தாரை.

வள்ளல் பாரியின் பறம்பு நிலத்தைப் போரிட்டுப்பெற முயன்ற மூவேந்தரைப் பார்த்து, "நீங்கள் ஏன் போரிடவேண்டும்? ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் அவன் முன்போய் நின்றால் அவன் நாட்டையும், மலைகளையும் செல்வ மனைத்தையும் தந்து விடுவானே? எளியவழி இருக்க, ஒவ்வாதவழியில் ஏன் செல்லுகிறீர்கள்? என்று கபிலர் கேட்டதை, இங்கு தாரை வாலியைப் பார்த்துக் கேட்டதோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். "ஆடினீர் பாடினிற் செலினே, நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே" என்பது புறநானூற்றுப் பாடல் பகுதி.

174. "சொற்றேன் முந்துற; அன்னசொல் கொளாய்;
"அற்றான், அன்னது செய்கலான்" எனா
உற்றாய் உம்பியை; ஊழிகாணும் நீ,
இற்றாய்; யான் உனை என்று காண்கெனோ?" (4213)

(சொற்றல் - சொல்லுதல்; முந்துற - முன்னரே; அற்றான் - இல்லாதவன்; உற்றாய் - அடைந்தாய்; ஊழி - யுகமுடிவு; இறுதல் - இறத்தல் \ அழிதல்)

"நீ உன் தம்பி சுக்கிரீவனுடன் போரிடக் கிளம்பும் முன்னரே, நான் உன்னிடம், உன்தம்பி சுக்கிரீவனுக்கு நெடுந்துணையாக இராமன் என்பவன் இன்னுயிர் நட்பு அமைந்து உன்னைக் கொல்லுவதற்கு உடன்பட்டு வந்திருக்கிறான் என்று கூறினேன். நீ அத்தகைய சொற்களை மனத்துள் வாங்கிக் கொள்ளவில்லை; வேண்டுதல் வேண்டாமை இலாதவனும், விருப்பு வெறுப்பு அற்றவனும், ஒப்பற்ற வனுமான அத்தகைய இராமன், அவ்வாறு நெறியிலாத செயல்களைச் செய்ய மாட்டான் என்று கூறி உன் தம்பியுடன் போர் செய்ய வந்தாய்; ஊழி இறுதிவரை உயிருடன் இருந்து, ஊழி முடிவைக்காண வேண்டிய பேராற்றல் படைத்த நீ, இப்போது இறந்து கிடக்கின்றாய், இனிமேல் நான் உன்னை எப்பொழுது, எங்கு காண்பேனோ?" என்று புலம்புகிறாள் தாரை.

இவ்வாறே மண்டோதரியும், இராவணனை நோக்கி, "ஏவர்க்கும் வலியானுக்கு என்று உண்டாம் இறுதி என ஏமாப்புற்றேன்" என்று கூறுவதையும் நோக்குக.

175. "நீறு ஆம் மேருவும், நீ நெருக்கினால்;
மாறு ஓர் வாளி, உன் மார்பை ஈர்வதோ?
தேறேன் யான்இது; தேவர் மாயமோ?
வேறு ஓர் வாலி கொலாம் விளிந்துளான்?" (4214)

(நீறு - பொடி; நெருக்குதல் - தாக்குதல்; ஈர்தல் - பிளத்தல்; தேறுதல் - தெளிதல் \ துணிதல்; விளிதல் - இறத்தல்; மாறு - எதிர்)

"நீ போரிடுதற்காக அணுகித் தாக்கினால் அந்த மேருமலை கூட ஒரு நொடியில் பொடிப் பொடியாகிப் போகும்; அத்தகைய ஆற்றலுடைய உனக்கு எதிராக ஒரு அம்பு வந்து உன் மார்பைப் பிளந்து சென்றதா? இதை என்னால் உண்மை என்று தெளிந்து துணிய முடியவில்லை. ஒருவேளை இது தேவர்கள் செய்த மாய வித்தையோ? அல்லது இங்கே இறந்து கிடப்பவன் என் கணவனல்லாத வேறு ஓர் வாலிதானோ?" என்று ஐயமுற்றுப் புலம்புகிறாள் தாரை.

மாயச் செயல் என்பது மனிதர்களால் செய்யமுடியாத - அமானுஷ்யமான - விசித்திரச்செயல்களைக் குறிக்கும். வாலியின் பேராற்றல் மீது தாரை கொண்ட பெரு நம்பிக்கை சிறப்பிக்கப்பட்டது.

176. "தகை நேர் வண்புகழ் நின்று, தம்பியார்,
பகைநேர்வார் உளரான பண்பினால்,
உக, நேர்சிந்தி உலந்து அழிந்தவால்;
மகனே! கண்டிலையோ நம்வாழ்வெலாம்?" (4215)

(தகை - தகுதிவாய்ந்த; நேருதல் - மேற்கொள்ளுதல்; உக - இறந்துவிட; உலந்து - கெட்டு)

"தாரை தன் மகன் அங்கதனை முன்னிலையாக்கி" மகனே! அங்கதா! உனது தந்தையின் தம்பியான சுக்கிரீவன், முன்பு தகுதி வாய்ந்த வள்ளண்மை யையும், புகழ்ச்சியையும் கொண்டு உன் தந்தையுடன் பொருந்தி வாழ்ந்தார். பின்பு, தனது தன்மையில் மாறுபட்டு, பகைமை உணர்ச்சி கொண்டு, இராமனை உடனழைத்துக் கொண்டுவந்து, உன் தந்தையின் இறப்புக்குக் காரணமாகி விட்டார். அதனால் நம்முடைய சிறப்பான வாழ்க்கையெல்லாம் சிதறிக் கெட்டழிந்து போயிற்றே; இதனை நீ காண வில்லையா?" என்று கதறுகிறாள்.

அங்கதன் அங்கு இல்லை என்றாலும், அவனை மனத்தில் நினைத்து இவ்வாறு கூறிப் புலம்பினாள் என்பதாம். அல்லாது, மகனே என்ற சொல்லுக்கு வீரனே என்ற ஒரு பொருளும் உண்டு. அதன்படி மகனே என்று வாலியையே அழைத்துக் கதறினாள் என்று கொள்ளுவதும் பொருந்தும்.

177. "அரு மைந்து அற்றம் அகற்றும் வில்லியார்
ஒரு மைந்தற்கும் அடாதது உன்னினார்;
தருமம் பற்றிய தக்கவர்க்கு எல்லாம்,
கருமம் கட்டளை என்றல் கட்டதோ?" (4216)

(மைந்து - வலிமை; அற்றம் - துன்பம்; அகற்றுதல் - போக்குதல்; மைந்தன் - வீரன்; அடாதது - ஒவ்வாதது \ தகாதது; தக்கவர் - சான்றோர்; கருமம் - செயல்கள்; கட்டளை - அளவுக்கருவி \ உரைகல்; கட்டு - புனைந்துரை \ பொய்யுரை \ வெற்றுரை; உன்னுதல் - நினைந்து செய்தல் \ கருதிச்செய்தல்)

"பெறுதற்கரிய வலிமையையும், தன்னையடைந்தவர்களின் துன்பத்தைப் போக்கும் பேராற்றலையும், கோதண்டம் என்னும் வில்லையும் ஏந்திய வில்லாற்றலில் வல்லவரான இராமபிரான், ஒரு சாதாரண வீரனுக்குக் கூடப் பொருந்தாத செயலைக் கருதிச் செய்துவிட்டார். மறைந்திருந்து அம்பை எய்தி என் கணவனைக் கொன்றுவிட்டார். தருமம் என்பது பற்றி எல்லாம் உணர்ந்த சான்றோர்களுக்கு எல்லாம், அவரவர்கள் செய்கின்ற நல்ல, தீய காரியங்கள் தான் அவர்களது பண்பினைப் பற்றி அறிவிக்கும் உரைகல் என்று பெரியோர்கள் கூறுவது எல்லாம் வெறும் பொய்யுரை தானோ?" என்று அங்கலாய்க்கிறாள் தாரை.

வில்லாற்றலில் வல்லவனான இராமன், ஒரு சிறுவீரன் கூடச் செய்யத் தகாத, மறைந்திருந்து பகைவன் மேல் அம்பு எய்தல் என்ற இச்சிறுமையான காரியத்தைச் செய்திருக்கிறானே என்று இராமனது செய்கையைச் சாடுகிறாள் தாரை. "கட்டளை" என்பது உரைகல் என்று பொருள்படும். உரைகல் என்பது தங்கத்தை உரசிப்பார்த்து அதன் மாற்றுப்பற்றித் தெளிவாகத் தெரிவிக்கும் ஒரு அளவு கருவி. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" என்பது குறள் 505."கட்டு" என்பது இப்போது கட்டுக்கதை எனக் கூறுவது போன்று வெற்றுரை, பொருள் இல்லாத பொய்யுரை என்பதைக் குறிக்கும். அவ்வாறு பெரியவர்கள் கூறியது எல்லாம் புனைந்துரைதானோ என்று கலங்குகிறாள் தாரை என்பதாம். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதும்,

"பெருமையும் சிறுமையும் தான் தரவருமே" என்பதும் வெற்றிவேற்கை. "அற்றம்" என்பது பொதுவாகத் துன்பம் என்றுபொருள் தருமேனும் இங்கே உயிர்போகின்ற பெருந்துன்பத்தை - ஆபத்தைக் குறித்தது என்க. இங்கே தாரை இராமனைப் பெயர்கூறாது. "வில்லியார்" என்று கூறியது, அவள் இராமனின் அடாத செயலால் எவ்வளவு நொந்து போயிருக்கிறாள் என்பதை காட்டும் என்க. "அற்றம் அகற்றும் வில்" இப்போது, துன்பதைப் போக்காது, மேலும் பெருந்துன்பத்தையல்லவா விளைவித்திருக்கிறது என்று மறைபொருளாய்த் தாரை கூறுவது ஒருநயம்.

178. என்றாள் இன்னன பன்னி, இன்னலோடு
ஒன்றானாள்; உணர்வு ஏதும் உற்றிலாள்;
நின்றாள்; அந்நிலை நோக்கி, நீதிசால்,
வன்தாள் மால்வரை அன்ன மாருதி. **(4217)**

(குளகப்பாடல்) (தாள் - முயற்சி; மாருதி - அனுமன் \ மருத்தின் புதல்வன்; மருத் - காற்று \ வாயு)

என்று இவ்வாறு திரும்பத்திரும்ப புலம்பிக் கொண்டிருந்த தாரை, துன்பத்தோடு ஒன்றிப் போனவளாகி, உள்ளத்தில் உணர்ச்சி என்பதே இல்லாத வளாகிச் செயலற்றுத் திகைத்து நின்றாள். அந்த நிலைமையை நன்கு நோக்கிய மிக்க நீதிநெறிஉடைய, வலிய முயற்சியை உடைய, பெரியமலை போன்ற தோற்றத்தையுடைய அனுமன் - பாடல் தொடர்கிறது.

தாள் என்ற சொல் முயற்சி என்ற பொருளைத் தரும். இங்கே வன் தாள் என்பது எடுத்த காரியத்தை இனிதே நிறைவேற்றும் ஆற்றல் பெற்ற அனுமனைக் குறித்தது. "மருத்" என்ற வடசொல்லிற்குக் காற்று என்பது பொருள். மருத்தின் மகன் மாருதி என்பது தத்திதாந்தநாமம். அனுமனுக்கு மேருமலை உவமை.

179. அனுமன் செய்த காரியங்கள்

மடவாரால் அம்மடந்தை முன்னர் வாழ்
இடம் மேவும்படி ஏவி, வாலிபால்
கடன் யாவும் கடைகண்டு, கண்ணனொடு
உடனாய் உற்றது எலாம் உணர்த்தினான். **(4218)**

(மடவார் - வானர மகளிர்; இடம் - அந்தப்புரம்; ஏவி - அனுப்பி; கடன் - இறுதிச் சடங்குகள்; கடைகாணுதல் - நிறைவேற்றுதல் \ முற்றச்செய்து முடித்தல்; கண்ணன் - திருமாலின் அம்சமாகிய இராமபிரான்; உற்றது - நிகழ்ந்தது)

அவ்வாறு அழுது புலம்பி நின்ற தாரையை, அவனது குரக்கினத் தோழிகளைக் கொண்டு தேற்றி, அவள் முன்பு தங்கியிருந்த கிட்கிந்தையின் அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்லுமாறு அனுப்பிவிட்டு, பின்னர் வாலிக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளை அங்கதனைக் கொண்டு முற்றவும் நிறைவாகச் செய்ய வைத்து, அதன் பின்னர், திருமாலின் அம்சமாகிய இராமபிரான் இருக்கும் இடம் சென்று, இங்கு நிகழ்ந்தவைகளையெல்லாம் விளக்கமாக எடுத்துரைத்தான் அனுமன்.

கண்ணன் என்ற சொல்லிற்கு அழகிய கண்களை உடையவன், கண்ணோட்டம் உடையவன், கரிய நிறத்தவன் என்று பலபொருள்கள் உண்டு எனினும், இங்கே திருமாலின் அவதாரமாகிய இராமபிரான் என்றே பொருள் கொள்ளப்பட்டது. கம்பன், இங்கே அங்கதன் வாலிக்கு ஆற்றிய ஈமக்கிரியைகளை மிகச் சுருக்கமாக ஒரே அடியில் கூறியிருக்க, வான்மீகி அதனை மிக விரிவாகக் கூறியிருத்தல் காணலாம். எனினும் இங்கே கம்பனுக்கும் வான்மீகிக்கும், அத்யாத்மராமாயணத்திற்கும் மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. என்றாலும் அத்யாத்மராமாயணமும், துளசிராமாயணமும் பொதுவாக ஒன்றே போல் கூறுகின்றன. மிகுந்த வேறுபாடு காணப்படமுடியவில்லை. எனினும் ஒரே ஒரு கருத்து இங்கு விளக்கப்பட வேண்டும். வாலிக்கு, முன்பு இந்திரன் ஒரு பொன்னாலான மலர்மாலை அளித்திருந்தான். அந்தப் பொன் மலர் மாலையின் சக்தியால்தான் வாலி, பகைவனின் வல்லமையிலும், வரத்திலும் பாதி தான் பெற்றவனானான். இப்போது அந்தப் பொன்மலர் மாலையைச் சுக்கிரீவனுக்கே அளித்ததாக வான்மீகம் கூறுகிறது. இந்தப் பொன்மலர்மாலை பற்றிக் கம்பனோ, அத்யாத்ம இராமாயணமோ, துளசியோ ஒன்றும் கூறாதது கருதப்படவேண்டும்.

180. சூரியன் மறைதல்

அகம்வேர் அற்று உக, மீது அருக்கனார்
புக மேலைக்கிரி, புக்க போதினில்,
நகமே ஒத்த குரக்கு நாயகன்,
முகமே ஒத்தது, மூரி மண்டிலம். (4219)

(மூரி - பெருமைவாய்ந்த; நகம் - மலை; அகம் - பூமி \ அகன்றஇடம்; ஏர் - ஏழுச்சி \ பொலிவு; அருக்கன் - சூரியன்)

அகன்ற இடமாகிய இப்பூமியின் பொலிவு சிந்திச் சிதறும்படி, வானத்தின்மீது உலவும் சூரியன் அத்தமனகிரியாகிய மேற்குக் கடலில் புகும் பொழுது தோன்றுகின்ற பெருமைவாய்ந்த செம்மையான நிறம், மலையை ஒத்த வலிமையுடைய குரக்கினத்தரசனாகிய வாலியின் இப்போது விளங்கும் முகத்தை ஒத்துச் செம்மை நிறம் பொருந்தியதாக விளங்கியது.

இறந்து கிடக்கும் வாலியின் முகஒளி, அத்தமன கிரியில் மறையப்போகும் செவ்வானத்தில் திகழும் சூரிய மண்டலத்தின் சிவந்த நிறத்திற்கு உவமை. இந்தப் பொருளைக் கொண்ட ஒருபாடல் வான்மீகத்திற் காணப்படுகிறது. எனவே தான் இதற்குப்பொருள் உரைக்கப்பெற்றது. பல ஏட்டுச்சுவடிகள் இப்பாடலை மிகைப்பாடல் என்றே கருதியிருக்கின்றன. பாடலின் சொல்லாட்சியும் அதற்குச் சான்றாகவே அமைந்திருத்தலையும் காணலாம்.

181. இராமன் இரவுப் பொழுதைக் கழித்தல்

மறைந்தான் மாலை அருக்கன்; வள்ளியோன்
உறைந்தான் மங்கை திறத்தை உன்னுவான்
குறைந்தான், நெஞ்சு குழைந்து அழுங்குவான்
நிறைந்து ஆர் கங்குலின் வேலை நீந்தினான். (4220)

(திறம் - நிலை; கங்குல் - இரவுப்பொழுது; வேலை - கடல்; நீந்துதல் - கடத்தல்)

மாலைச்சூரியன் அத்தமனகிரியில் சென்று மறைந்தான்; வண்மைக் குணமுடைய இராமபிரான் தான் தங்கியிருந்த இடத்திலிருந்து, தனது மனைவியான சீதையின் நிலையை எண்ணிப்பார்த்து, உடல் வலிமை குன்றி, உள்ளம் உருகி, வருத்தமுற்று நிறைந்த கருமையான இரவுப்பொழுது என்னும் கடலை அரிதிற் கடந்தான்.

மனைவியைப் பிரிந்தாற்கு இரவுப்பொழுது மிக்க துன்பம் தரும் என்பதும், நீட்டித்துக் கொண்டே போவது போலத் தோன்றும் என்பதும் முன்பு கண்டதே.

வாலிவதைப்படலம் நிறைவுற்றது

8. அரசியல் படலம் (33 பாடல்கள்)

வாலி வதைக்குப்பிறகு, இராமன், இலக்குவனைக் கொண்டு சுக்கிரீவனுக்கு முடி சூட்டச் செய்தலும், அப்போது இராமன் சுக்கிரீவனுக்குக் கூறிய அறஉரைகளும், சுக்கிரீவன் கிட்கிந்தையை அரசு ஓச்சிய செய்தியும் பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 33 பாடல்களைக் கொண்டது. முன்பு பால காண்டத்தில் தசரதன் கோசல நாட்டை அரசு புரிந்து வந்த செய்தியைக் கூறும் பகுதியும் இதேபோல் "அரசியல் படலம்" என்றே தலைப்புக் கொடுக்கப் பட்டிருப்பதையும் நினைவு கூர்க. சில சுவடிகளில் இப்படலம், "சுக்கிரீவன் முடிசூடு படலம்" எனவும், "சுக்கிரீவனை முடி சூட்டுபடலம்" எனவும் குறிக்கப் பெற்றிருக்கிறது.

இப்படலத்துள், இராமன் மறுநாள் காலை இலக்குவனை அழைத்து, சுக்கிரீவனுக்கு முடி சூட்டச்சொல்லுதல்; இலக்குவன் ஏவ, அனுமன், முடி சூட்டுவதற்கு வேண்டுவனவற்றைக் கொணர்தல்; இலக்குவன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டுதல்; முடிசூடிய சுக்கிரீவன் இராமனைப் பணிதல்; அவனுக்கு இராமன் அரசியல் அறவுரைகள் கூறுதல்; மாரிக்காலம் முடிந்த பின்பு தன்னை வந்து சேனைகளுடன் சந்திக்க இராமன் சுக்கிரீவனை வேண்டுதல்; சுக்கிரீவன் இராம இலக்குவரைத் தன்னுடன் வந்து அரண்மனையில் தங்குமாறு வேண்டுதல்; இராமனை மீண்டும் வணங்குதல்; அங்கதன் இராமன் தாள் பணிதல்; அங்கதனுக்கும் இராமன் அறிவுரை வழங்குதல்; அனுமன் தான் இராமனுடன் தங்க விழைதலும், அதற்கு இராமன் மறுத்து சுக்கிரீவனுக்குத் துணையாகச் செல்ல வேண்டுதல்; அனுமனும் கிட்கிந்தை செல்ல, இராம இலக்குவர்கள் அங்கேயே வேறு ஓர் மலையில் தங்குதல்; சுக்கிரீவன் இனிது அரசுசெய்து இருத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

வான்மீகத்தில் இலக்குவன் முடிசூட்டியதாகவோ, இராமன் சுக்கிரீவனுக்கு அரசியல் அறவுரைகள் கூறியதாகவோ காணப்படவில்லை. இராமஇலக்குவர் தங்கிய மலை "பிரஸ்ரவணமலை" என வான்மீகம் கூறுகிறது.

1. சூரிய உதயம்

புதல்வன் பொன் மகுடம் பொறுத்தலால்,
முதல்வன், பேர் உவகைக்கு முந்துவான்,
உதவும் பூமகள் சேர, ஒண் மலர்க்
கதவம் செய்ய கரத்தின் நீக்கினான். (4221)

(பொறுத்தல் - தரித்தல்; முதல்வன் - தந்தை \ சூரியன்; முந்துதல் - முற்படுதல்; பூமகள் - திருமகள்; ஒண் - ஒளி பொருந்திய; கதவம் - கதவு \ இதழ்கள்; செய்ய - சிவந்த; நீக்குதல் - திறந்து விடுதல்)

தன்னுடைய புதல்வனான சுக்கிரீவன், இன்று பொன் மயமான முடி சூட்டிக்கொள்ளப் போகிறான் என்பதால், அவன் தந்தையாகிய சூரியன், அக்காட்சியைக் காண்பதற்காகப் பெரிதும் மகிழ்ந்து முற்பட்டு, முந்திய இரவு இதழ் குவிந்திருந்த, ஒளி பொருந்திய, தாமரையில் வாழும் திருமகளும் இக்காட்சியைக் காணவேண்டும் என்ற எண்ணத்தால், தாமரை மலரின் இதழ்கள் என்னும் கதவுகளை, தனது சிவந்த கிரணங்கள் என்னும் கைகளால் திறந்து விட்டான்.

கம்பனின் கற்பனை நயம் மிகுந்த பாடல்களுள் இதுவும் ஒன்று. இயற்கையாகவே சூரியன் உதிக்கும் போது தாமரை மலரும் என்ற செய்தியினைத் தனது மைந்தன் பொன் முடி சூட்டிக்கொள்ளப் போவதைத் தான் பார்த்து மகிழ்வதற்காகத்தான் உதித்ததாகவும், அத்துடன் கூடத் திருமகளும் இக்காட்சியினைக் காணவேண்டும், அவனுக்கு அளவில்லாச் செல்வம் நிறையவேண்டும் என்பதற்காக அவள் மூடிய மலரிலிருந்து வெளிவருவதற்காகத் தன் கிரணங்களாகிய கைகளால் அதனைத் திறந்து விட்டான் என்று கூறுவதும் மிக நயம் மிக்க கற்பனை என்பதை உணர்க.

2 இராமன், சுக்கிரீவனுக்கு முடி சூட்டும்படி, இலக்குவனுக்குக் கட்டளையிடுதல்

அது காலத்தில், அருட்கு நாயகன்,
மதிசால் தம்பியை, வல்லை ஏவினான்,
"கதிரோன் மைந்தனை, ஐய! கைகளால்
விதியால் மௌலி மிலைச்சுவாய்" எனா. (4222)

(மதி - அறிவு; சால் - மிக்க \ நிறைந்த; வல்லை - விரைவாக; கதிரோன் - சூரியன்; விதி - முறை; மௌலி - முடி \ மகுடம் \ கிரீடம்; மிலைச்சுதல் - சூட்டுதல்; ஏவுதல் - கட்டளையிடுதல்)

அப்பொழுது, கருணை வள்ளலான இராமபிரான், அறிவு நிறைந்த தன் தம்பி இலக்குவனை நோக்கி, "ஐயனே! சூரியன் மைந்தனான சுக்கிரீவனுக்கு உன் கைகளால் அரசியல் சாத்திர முறைப்படி, விரைவாக முடி சூட்டுவாயாக!" என்று கட்டளையிட்டான்.

"வல்லை" என்பது விரைவைக்குறிக்கும். "சுபஸ்ய சீக்ரம்" என்பது வடமொழி. ஏதேனும் இடையூறு வருவதற்கு முன்பு முடிசூட்டிவிடவேண்டும் என்பது இராமனின் கருத்து என்பதாம். தானே முடி சூட்டாது, இலக்குவனைக் கொண்டு முடி சூட்டுவித்ததற்குக் காரணம், இராமன் தாய் சொற்படி பதினான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டிருக்கிறான். எனவே நகருக்குள் சென்று மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது சரியன்று என்று கருதுகிறான்

இராமன் என்பதால் என்க. அத்யாத்ம இராமாயணமும், துளசி ராமாயணமும், இலக்குவனைக் கொண்டே இராமன் முடி சூட்டுவித்தான் என்று கூறுகின்றன. இதைப்போலவே, பின்னர் வீடணனுக்கும் இலக்குவனைக் கொண்டே முடிசூட்டுவித்தான் என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. வான்மீகத்தில் அங்கதனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டப்பட்டதாகவும் பேசப்படுகிறது.

3. இலக்குவன் அனுமனிடம், விழாவிற்கு வேண்டுவன கொணரப் பணித்தல்.

அப்போதே, அருள்நின்ற அண்ணலும்,
மெய்ப்போர் மாருதி தன்னை, "வீர! நீ
இப்போதே கொணர்க, இன்ன செய்வினைக்கு
ஒப்புஆம் யாவையும்" என்று உணர்த்தலும். (4223)

(குளகப்பாடல்) (அண்ணல் - பெருமையில் சிறந்தவன்; அருள் - கட்டளையுமாம்; வினை - தொழில் \ முடிசூட்டுவிழா; கொணர்தல் - கொண்டுவருதல்; உணர்த்தல் - கூறுதல்; ஒப்புஆம் - தக்கன \ வேண்டுவன)

இராமபிரானின் கட்டளைப்படியே நின்று பணிபுரியும் பெருமை மிக்கவனான இலக்குவனும், உடனேயே, போர்நெறிப்படி அதனின்று சிறிதும் வழுவாது அறப்போர் புரியும் ஆற்றலுடைய உண்மையான போர்வீரனான அனுமனை நோக்கி, "வீரனே, நீ உடனே விரைந்து சென்று, இந்த முடிசூட்டு விழாவினுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் உடனே கொண்டு வந்து சேர்ப்பாயாக" என்று கூறியதும் - பாடல் தொடர்கிறது.

அப்பொழுதே, இப்போதே என்ற சொற்கள் விரைவைக் குறித்ததாம். முன்பு இராமன் வல்லை ஏவியதற்கு ஏற்ப, இங்கு இலக்குவனும் நிகழ்ச்சியை விரைவு படுத்துகிறான் என்பதாம்.

4. அனுமன் எல்லாமும் கொணர்தல்

மண்ணும் நீர் முதல் மங்கலங்களும்
எண்ணும் பொன்முடி ஆதி யாவையும்
நண்ணும் வேலையில், நம்பி தம்பியும்,
திண்ணம் செய்வன செய்து, செம்மலை. (4224)

(குளகப்பாடல்) (மண்ணுதல் - நீராட்டுதல்; ஆதி - முதலிய; நண்ணுதல் - அடைதல் \ வந்துசேர்தல்; நம்பி - ஆடவருள் சிறந்தோன் \ இராமன்; செம்மல் - பெருமையுடையவன் \ தலைவன்; திண்ணம் - நிச்சயம் \ இன்றியமையாத; நீர் - புண்ணியதீர்த்தம்)

நீராட்டுதற்குரிய புண்ணிய தீர்த்தங்கள் முதல், மங்கலப்பொருட்கள், எல்லோராலும் சிறப்பாகக் கருதப்படுகிற பொன்னாலான மணிமகுடம், முதலிய எல்லாமும், அனுமன் முயற்சியால் வந்துசேர்ந்த அளவில், ஆடவரிற் சிறந்தோனாகிய இராமபிரானின் தம்பியாகிய இலக்குவன், பெருமையும்

தலைமையுமுடைய சுக்கிரீவனுக்கு மணிமுடி சூட்டுவதற்கு முன்னர்ச் செய்ய வேண்டிய இன்றியமையாதன எல்லாவற்றையும் செய்து முடித்து - பாடல் தொடர்கிறது.

5. சுக்கிரீவனுக்கு இலக்குவன் முடி சூட்டுதல்

மறையோர் ஆசி வழங்க, வானுளோர்
நறைதோய் நாள் மலர் தூவ, நல்நெறிக்கு
இறையோன்தன் இளையோன், அவ் ஏந்தலைத்
துறையோர் நூல்முறை மௌலி சூட்டினான். (4225)

(மறையோர் - வேதம் ஓதுவோர் \ அந்தணர்கள்; ஆசி - வாழ்த்து; நறை - தேன் \ நறுமணம்; நாள் - புதிய \ அன்றலர்ந்த; இறையோன் - தலைவன்; ஏந்தல் - தலைமைக்குணங்கள் உடையவன்; மௌலி - முடி \ கிரீடம் \ மகுடம்)

வேதம் வல்ல அந்தணர்கள் வாழ்த்துக்கூறி ஆசீர்வாதம் செய்யவும், வானத்திலுள்ள தேவர்கள் நறுமணமும் தேனும் தோய்ந்த அன்றலர்ந்த புதிய கற்பகம் முதலிய மலர்களைச் சொரியவும், தூய நன்னடத்தையான நடையில் நின்றுயர் நாயகனாகிய இராமபிரானின் தம்பியாகிய இலக்குவன், பெருமைமிக்க அச்சுக்கிரீவனுக்கு, அரசியல் துறையில் அனுபவம் மிக்கவர்கள் கூறிய சாத்திர நூல்முறைப்படி, மணிமகுடம் சூட்டினான்.

“நல்நெறிக்கு இறையோன்” என்பது போலக் காப்பியப்போக்கில் இராமனைப் பல இடங்களிலும் கவிஞன் போற்றிப் புகழ்வதைக் காணலாம். இங்கே ஒரே பாடலில் கூறப்பட்ட முடிசூட்டுவிழா, வான்மீகத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது என்பதும் கருதத்தக்கது.

6. சுக்கிரீவன் இராமன் தாள் பணிதல்

பொன் மாமௌலி புனைந்து, பொய்இலான்,
தன் மானக்கழல் தாழும் வேலையில்,
நன் மார்பில் தழுவுற்று, நாயகன்
சொன்னான், முற்றிய சொல்லின் எல்லையான். (4226)

(மா - சிறந்த \ பெரிய; புனைதல் - தரித்தல்; மான - பெருமை பொருந்திய; வேலை - வேளை \ சமயம்; முற்றிய - முதிர்ந்த; சொல் -நூல்; தழுவுறுதல் - அணைத்துக் கொள்ளுதல்; தாழ்தல் - வீழ்ந்து வணங்குதல்)

பொன்னாலாகிய சிறந்த மணி மகுடத்தைத் தரித்துக் கொண்டவனான சுக்கிரீவன், பொய்யென்பதையே அறியாதவனும், மெய்ம்மையே பேசுபவனுமாகிய இராமபிரானுடைய பெருமை பொருந்திய வீரக்கழலணிந்த திருவடிகளில் விழுந்து வணங்கிய அளவில், அவனைத் தன்னுடைய மார்பில் இறுகத் தழுவிக் கொண்டு, எல்லோர்க்கும் தலைவனும், முதிர்ந்த சொல்லாகிய வேதத்தின் எல்லை போன்றவனுமான, இராமபிரான் கீழ்வருவனவற்றைக் கூறத் தொடங்கினான்.

பொய்யிலான் என்பதைச் சுக்கிரீவனுக்கு ஏற்றிக் கூறுதலும் பொருந்தும். எனினும் இராமன் தான்முன்பு சுக்கிரீவனுக்குத் தந்த வாக்குறுதியான, "வில்லிடை வாளியின் வீட்டித் தலைமையோடு நின்தாரமும் உனக்கு இன்று தருவென்" என்று கூறியதைச் செய்து காட்டினான். எனவே இச்சொற்றொடர் இராமபிரானுக்கே சாலப்பொருந்தும் என்பதை உணர்க; "முற்றிய சொல்லின் எல்லையான்" என்பது முதிர்ந்த நூல்களின் எல்லையைக் கண்ட இராமபிரானையும் குறிக்கும்.

7. இராமன் சுக்கிரீவனை வாழ்த்துதல்

"ஈண்டு நின்று ஏகி, நீ நின் இயல்பு அமை இருக்கை எய்தி,
வேண்டுவ மரபின் எண்ணி, விதிமுறை இயற்றி, வீர!
பூண்டபேர் அரசுக்கு ஏற்ற யாவையும் புரிந்து, போரில்
மாண்டவன் மைந்தனோடும் வாழ்தி! நல் திருவின் வைகி" (4227)

(இயல்பு - தன்மை; இருக்கை - இருப்பிடம்; மரபின் - முறைப்படி; பூண்ட - ஏற்றுக்கொண்ட; திரு - செல்வ வாழ்க்கை; வைகி - தங்கி; ஈண்டு - இவ்விடம்)

இராமன் தன்னை வணங்கிய சுக்கிரீவனிடம், வீரனே, "நீ இங்கிருந்து சென்று, உனக்கு இயல்பாக அமைந்துள்ள இருப்பிடமாகிய கிட்கிந்தையின் தலைநகர் அடைந்து, அரசாட்சிக்கு வேண்டுவன எல்லாவற்றையும் நன்கு ஆலோசித்து, அரசியல் நெறிமுறைப்படி செய்து, நீ மேற்கொண்டிருக்கின்ற பெரிய அரசாட்சிக்குத் தேவையான, தக்கனவற்றையெல்லாம் செய்து, போர்க்களத்தில் மடிந்துபோன வாலியின் மைந்தனாகிய அங்கதனோடும் இணைந்து, நல்ல செல்வ வளம் மிக்க வாழ்க்கையில் நிலைபெற்று வாழ்வாயாக!" என்று வாழ்த்தினான்.

"போரில் மாண்டவன் மைந்தனோடும் வாழ்தி" என இராமன் கூறுவதில், அங்கதனுக்கும் பேரரசின் அலுவலில், பங்குதந்து, ஆதரித்து அவனை இளவரசனாகவும் கொள்ள வேண்டும் என்ற குறிப்புத் தோன்றுவதை உணர்க. சிறந்த மன்னனின் செயல்களாக, "சூழ்வார்கண்ணாக ஒழுகி, காரியங்களை நல்லமைச்சரோடும் எண்ணித் துணிந்து, காலமறிந்து, இடமறிந்து, தெரிந்து, தெளிந்து, இயல்புளிக் கோலோச்சுதல்" என்பர் சான்றோர்.

8. இராமன் சுக்கிரீவனுக்கு அரசியல் அறவுரை கூறுதல் (10 பாடல்கள்)

"வாய்மை சால் அறிவின் வாய்த்த மந்திர மாந்தரோடும்,
தீமைதீர் ஒழுக்கின் வந்த திறத்தொழில் மறவரோடும்,
தூய்மைசால் புணர்ச்சி பேணி, துகள்அறு தொழிலை ஆகி,
சேய்மையோடு அணிமை இன்றித் தேவரின் தெரிய நிற்றி." (4228)

(மந்திர மாந்தர் - அமைச்சர்; மந்திரம் - ஆலோசனை; மறவர் - வீரர் \ படைத்தலைவர்கள்; புணர்ச்சி - கூட்டுறவு; பேணி - பாதுகாத்து; துகள்அறு -

குற்றமற்ற; தொழில் - செயல்கள்; சேய்மை - தூரம் \ விலகிநிற்றல்; அணிமை - நெருக்கம்; தெரிய - கருதும்படி \ விளக்கமுற்று)

"உண்மையே பொருந்திய அறிவுடைய சான்றோர்களான அமைச்சர், புரோகிதர் ஆகிய அறிஞர் பெருமக்களோடும், குற்றமற்ற நல்லொழுக்கமும், பகைவரை வெல்லும் ஆற்றலும் பொருந்திய வீரர்கள், படைத்தலைவர்களோடும், மாசற்ற தூய்மையான கூட்டுறவைப் பாதுகாத்து, ஒருவரோடொருவர் நன்கு கலந்து பழகி, குறைவில்லாமல் உன்னுடைய காத்தல் தொழிலைப் புரிவாயாக! மேலும் மற்றவர்கள் உன்னை விட்டு மிக விலகிச் சென்றுவிடாமலும், மிக நெருங்கி வந்து துன்புறுத்தாமலும் இருக்கும்படி செய்து, நீ அவர்களுக்கெல்லாம் ஒரு தெய்வம் போல விளக்கமுற்று நின்று அரசோச்சுவாயாக!" என்றான் இராமன்.

அமைச்சர்கள் உண்மையான தெளிந்த அறிவு பெற்றவர்களாய் இருக்க வேண்டும் என்பதும், படைத்தலைவர்கள் குற்றமற்ற நன்னடத்தை உடையவர்களாய் இருக்கவேண்டும் என்பதும், இவர்கள் இருதிறத்தாரிடமும், அரசன் என்பவன் நல்ல தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பதும், மிக விலகாமலும், மிக நெருங்காமலும் இருந்து தேவர்கள் போல அரசியல் நடத்த வேண்டும் என்பதும் இராமன் சுக்கிரீவனுக்குக் கூறிய அறிவுரை என்பதாம்.

இதுபோல முடிசூடிக் கொள்ளப்போகிறவர்களுக்கும், முடிசூட்டிக் கொண்டவர்களுக்கும் சான்றோர்கள் அரசியல் அறவுரை கூறுவது மரபு. அயோத்தியில் இராமபிரான் முடிசூடிக் கொள்ளும் முன்பு வசிட்டரும், சித்திரகூடத்தில் பரதனுக்கு இராமனும், கூறிய அறிவுரைகள் ஈண்டு கருதத்தக்கன. "சேய்மையோடு அணிமை இன்றி" என்பது முன்பு வாலியே சுக்கிரீவனுக்குக் கூறிய அறிவுரை என்பதை இங்கு நினைவு கூர்க. "மன்னர் என்பார் எரி எனற்கு உரியர் என்றே எண்ணுதி" என்பது பாடல் பகுதி. மேலும் இக்கருத்து "அகலாது அணுகாது தீக்காய்வார்போல்க, இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்" என்ற குறள் 691ன் கருத்தையும் ஒத்திருப்பதை உணர்க. அரசனை இறைவன் என்றே குறள் கூறும். "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு இறையென்று வைக்கப்படும்" என்பது குறள் 388. "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்பது திருவாய்மொழி. அதனைத்தான் இராமன், "துகளறு தொழிலை ஆகித் தேவரில் தெரிய நிற்றி" என்றான் என்க; அமைச்சர், புரோகிதர் முதலிய பேரறிஞர்கள் அரசனை விட்டு நெடுந்தொலைவில் இருப்பதையும், அவனுக்கு மிக அருகிலேயே நெருக்கமாக இருப்பதயும் தவிர்க்க வேண்டும் என்பதாம். நட்பு என்பது தகுதியுள்ளோரிடத்து நேர்மையாகக் கொள்ளும் நட்பைக் குறிக்கும். தகுதியில்லாரிடத்தும். தவறான முறையிலும் கொள்ளும் நட்பு "தூய்மைசால் புணர்ச்சி ஆகாது" என்பதாம்.

**9. "புகை உடைத்து என்னின், உண்டுபொங்கு அனல் அங்கு"என்று உன்னும்
மிகை உடைத்து உலகம்; நூலோர் வினையமும் வேண்டற்பாற்றே
பகையுடைச் சிந்தையார்க்கும், பயன்உறு பண்பின் தீரா
நகையுடை முகத்தை ஆகி, இன்னுரை நல்கு நாவால்." (4229)**

(உடைத்து - இருக்கிறது \ உண்டாயிற்று; பொங்கு - கிளர்கின்ற; அனல் - நெருப்பு; உன்னுதல் - உய்த்துணர்தல்; மிகை - சிறப்பான; அறிவு; வினையம் - சூழ்ச்சி; வேண்டற்பாற்று - விரும்பத்தக்கது; தீரா - மாறாது \ விட்டுவிடாது; நா - வாய்)

"ஓரிடத்தில் புகை தென்படுகிறது என்றால், அதற்குப் பின்னால் எங்கோ நெருப்புப் பற்றி எரிகிறது என்று ஊகித்தறியும் சிறப்பறிவு பெற்றவர்கள் இவ்வுலக மக்கள்; எனினும் அத்துடன் கூட, அறிவு சான்ற நூல் வல்லோரின் சூழ்ச்சித்திறமும் அரசர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். எனவே உன்னிடம் பகைமை கொண்ட உள்ளம் படைத்தவர்களாயிருந்தாலும், அவரவர்களின் பண்புக்கு ஏற்ப, பயன்தரும் செயல்களைச் செய்வதனின்றும் நீங்கிவிடாது, மலர்ச்சி கொண்ட முகத்துடன் இனிய சொற்களை வாயால் கூறுவாயாக! யாரிடமும் முகம் சுளித்து இனியன அல்லாதனவற்றைக் கூறிவிடாதே" என்கிறான் இராமன்.

அளவை மூன்று வகைப்படும். முதலாவது காட்சிப் பொருள் - பிரத்தியட்சம். வெளிப்படை; கண்ணால் காணப்படுவது. அதைக் கொண்டு அதன் இயல்புகளை அளந்து தெரிதல். இரண்டாவது கண்டதைக் கொண்டு காணாததைப் பற்றி அளவிடுதல் - அது அனுமானம் - ஊகித்தறிதல்; மூன்றாவது ஆகமப்பிரமாணம். நூல் அளவை; இவை உண்மையைக் காண்பதற்குரிய வழிகள் ஆகும். "நெருப்பு இல்லாமல் புகையாது" என்பது இதையொட்டி எழுந்த பழமொழியாகும். மிகை என்பது சிறப்பான யூகித்தறியும் அறிவை உணர்த்திற்று. எல்லோரிடமும் இன்முகத்தோடு இனிய சொற்களையே பேசவேண்டும் என்பது கருத்து. "பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகல்" என்பது கலித்தொகை. "யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே" என்பது திருமந்திரம்.

10. "தேவரும் வெ்.கற்கு ஒத்த செயிர்அறு செல்வம் - அ்.து உன்
காவலுக்கு உரியது என்றால், அன்னது கருதிக் காண்டி;
ஏவரும், இனிய நண்பர், அயலவர், விரவார் என்று இம்"
மூவகை இயலோர் ஆவர்; முனைவர்க்கும், உலகம் மூன்றின்." (4230)

(வெ்.குதல் - விரும்புதல்; செயிர்அறு - குற்றமில்லாத; கருதுதல் - சிந்தித்துச் செயல்படுதல்; முனைவர் - முனிவர் \ ரிஷிகள்; ஏவரும் - யாவரும் \ எல்லோரும்; அயலவர் - தெரியாதவர்; விரவார் - பகைவர்)

"விருப்பு வெறுப்பற்ற தேவர்களும் கூட விரும்பத் தக்கதான குற்றமற்ற பெருஞ்செல்வம், நீ அரசனாய் இருப்பதால், அது தானாகவே உன்னுடைய பாதுகாவலுக்கு வரும். அவ்வாறு வரும்போது, அதன் தனிச்சிறப்பைக் கருதி அதனைச் சிந்தித்துப் பாதுகாக்கக் கருத வேண்டும். காய்தல், உவத்தல் அற்ற முனிவர்களுக்கு என்றாலும், எல்லோரும் தனக்கு வேண்டிய இனிய நண்பர்கள், வேண்டாத பகைவர்கள், இவ்விருவகையும் இல்லாத அயலவர் - தெரியாதவர் - என்ற மூன்று வகையான இயல்புடையவர்கள்தான் மேல், கீழ், நடு என்ற மூன்று உலகங்களிலும் உள்ளனர். எனவே அதை மனத்தில் கொண்டு, நண்பர்,

பகைவர், நொதுமல் என்ற வேற்றுமையை உணர்ந்து அதன்படி நடக்கக் கற்றுக்கொள்வாயாக!" என்கிறான் இராமன்.

எல்லாவற்றையும் துறந்தவர்கள் தான் முனிவர்கள். எனினும் குற்றமற்ற பெரும் செல்வம் முயற்சி இன்றிக் கிடைக்கிறது என்றால், அவர்களும் அதன்மீது விருப்பம் கொள்ளத்தான் செய்வார்கள் என்பது "தேவரும் வெ∴கற்குஒத்த செயிர்அறு செல்வம்" எனக் கூறப்பட்டது என்க. செல்வம் பெற்றதும் அதை எவ்வாறு இயற்றவேண்டும், ஈட்ட வேண்டும், காக்க வேண்டும், பின்வகுக்க வேண்டும் என்பதை நன்கு சிந்தித்துச் செயல்படவேண்டும் என்பதும், இன்னார் இனியர் என்றும், நண்பர் பகைவர் என்றும் பாராது நற்காரியங்களுக்குப் பயன்படும் வகையில் அச்செல்வத்தை வகுக்க வேண்டும் என்பதும் கருத்து. எல்லாம் துறந்த பற்றற்ற முனிவர்களுக்கே நண்பர், பகைவர், அயலவர் என்ற பாகுபாடு இருக்கிறது என்றால், எல்லாச் செல்வமும் பெற்றுள்ள நீ அத்தகைய பாகுபாடுகளுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என்பது சாரம். "இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் வல்லது அரசு" என்பது குறள் 385. நண்பர் என்பதால் அளவுக்கு மிஞ்சிய ஈகையும், பகைவர் என்பதால் அளவுக்கு மிஞ்சிய இகழ்ச்சியும், அயலார் என்பதால் அளவுக்கு மீறிய கஞ்சத்தனமும் (இவறல்) கூடாது என்பது கருத்து.

11. "செய்வனசெய்தல், யாண்டும் தீயன சிந்தியாமை;
வைவன வந்த போதும், வசைஇல, இனிய கூறல்;
மெய்யன, வழங்கல், யாவும் மேவின வெ∴கல் இன்மை,
உய்வன ஆக்கித் தம்மோடு உயர்வன உவந்து செய்வாய்." (4231)

(யாண்டும் - எப்பொழுதும் \ எல்லோரிடத்தும்; வைவன - பழிச்சொற்கள்; வசை - இகழ்ச்சி \ தீங்கு; மெய் - உண்மை; வழங்கல் - ஈதல்; வெ∴கல் இன்மை - விரும்பாமை; வெ∴குதல் - விரும்புதல் \ கவர்தல்; உய்வது - நற்கதிஅடைவது; உவந்து - விரும்பி \ மகிழ்ந்து)

இராமபிரான், சுக்கரீவனை நோக்கி, "எப்போதும், எவ்விடத்தும், எல்லோரிடத்தும் வேண்டிய நன்மை தருவனவற்றையே செய்தலும், தன்னைப்பற்றி இகழ்ச்சியான பழிச்சொற்கள் தன் காதில் வந்து உற்றபோதும், அவ்வாறு சொன்னவர்களைத் தானும் திரும்பிப் பழிக்காது, இனியவற்றையே கூறுதலும், உண்மையே பேசுதலும், தன்னிடம் உள்ள பொருள்களனைத் தையும், தன்னிடம் வந்து இரந்த வறியவர்க்கு வாரி வழங்குதலும், பிறரிடம் உள்ள நல்ல பொருள்களைத்தான் அபகரித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணாமையும், ஆகிய இந்நற்குணங்கள் ஒருவனை நற்கதிக்குச் செலுத்துவதோடன்றி, தாமும் மேம்பட்டு விளங்குவன; எனவே இவற்றை நீ மனம் விரும்பி மகிழ்ச்சியுடன் செய்வாயாக!" என்றான்.

இந்தப்பாடலில், அவன், பெற்ற செல்வம் குறையாது, அழியாது பாதுகாத்துக் கொள்வதற்கு என்னென்ன நற்செயல்கள் புரியவேண்டும் என்பதைக் கூறு கிறான். இங்கே கூறியுள்ள பல கருத்துக்களும், தெய்வப் புலவர் திருவள்ளு வரின் திருக்குறளில் ஒவ்வொரு அதிகாரமாகப் பாடப்பட்டிருப்பதை எண்ணுக.

"அ்.காமை செல்வத்துக்கு யாதெனின், வெ்.காமை வேண்டும் பிறன்கைப் பொருள்" என்பது குறள் 178. அ்.காமை என்பது குறைவுபடாமையைக் குறிக்கும், "அறனறிந்து வெ்.கா அறிவுடையார்ச் சேரும் திறனறிந்து ஆங்கே திரு" என்பதும் குறள் 179. "முன்னிய பல்பொருள் வெ்.கும் சிறுமை, செல்வம் உடைக்கும் படை" என்பது திரிகடுகம் 38. "வைததனை இன்சொல்லாக் கொள்ள வேண்டும்" என்பதும் திரிகடுகம் 48.

12. **"சிறியர் என்று இகழ்ந்து, நோவுசெய்வன செய்யல்; மற்று இந்**
நெறிஇகந்து, யான்ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு,
குறியதாம் மேனி ஆய கூனியால், குவவுத்தோளாய்!
வெறியன எய்தி, நொய்தின், வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன்." (4232)

(குவவு - திரண்ட; நோவு - வருத்தம்; இகந்து - கடந்து \ கைவிட்டு \ மாறுபட்டு; உணர்ச்சி - அறிவு \ சூழ்ச்சித்திறன் \ பகையுணர்வு; நொய்தின் - எளிதில்; வெறியன - வறுமை)

"திரட்சி மிகுந்த தோள்களை உடையவனே! சுக்கிரீவா! உருவத்தால் சிறியவர்களாய் இருக்கிறார்கள் என்று நினைத்து, அவர்களை இகழ்ச்சியாகப் பேசி, அவர்கள் வருத்தம் கொள்ளும் செயல்களைச் செய்து விடாதே; அவ்வாறு நான் நன்னெறியினின்றும் மாறுபட்டு ஒரு தீங்கு செய்ததால், அவ்வஞ்ச எண்ணத்தை தன் உள்ளத்திலேயே நிலைநிறுத்திக் கொண்டு, குறுகிய உருவ முடையவளான கூனி என்பவளால், நான் வறுமைநிலையினை எளிதில் எய்தி, வெம்மையான துயரக்கடலில் வீழ்ந்து விட்டேன்" என்று இராமன் தன்னுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சியையே எடுத்துக்காட்டாகக் காட்டிச் சுக்கிரீவனுக்கு அறவுரை கூறுகிறான்.

இராமன் சிறுபிள்ளையாய் இருந்தபோது வில்லினில் உண்டையை வைத்துத் தொடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது, அது தவறுதலாக, ஆங்கே போய்க்கொண்டிருந்த கூனியின் முதுகில் பட்டுத் தெறித்து விழுந்தது. அங்கே இருந்தவர்கள் அனைவரும் அதைப்பார்த்து இகழ்ச்சியாகச் சிரிக்க, கூனி, இளவரசராயிற்றே என்று ஒன்றும் நேரில் ஏதும் கூறாது, தன்னுடைய சினத்தை மனத்திற்குள்ளேயே நீண்டகாலம் பூட்டி வைத்திருந்திருக்கிறாள். பின்னர், இராமன் முடிசூட்டுகின்ற காலத்தில் அது பழிவாங்கும் உணர்ச்சியாக வெளிப்பட்டு இராமன் தன் அரசுரிமை இழந்து, மற்ற எல்லாச் செல்வங்களையும் இழந்து வனவாசம் செய்ய வேண்டியதாயிற்று என்பது அயோத்தியா காண்டத்துக் கதைப்பகுதி. அதை இப்போது இராமன் நினைவிற்கொண்டு, சுக்கிரீவனுக்கு "சிறியோரை இகழேல்" என்று அறிவுறுத்துகிறான் என்பதாம். உருவத்தாலோ, வலிமையாலோ, அறிவாலோ, யாரையும் சிறியர் என்று இகழ்ந்து விடாதே என்பது கருத்து. "பண்டைநாள் இராகவன், பாணிவில் உமிழ் உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உன்னுவாள்" என்பது மந்தரை சூழ்ச்சிப்படலப் பாடல்; இவ்வாறு இராமன் இளமைப்பருவத்தில் செய்ததாக வான்மீகத்தில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. "உருவு கண்டு

எள்ளாமை வேண்டும்; உருள் பெருந் தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" என்பது குறள் 667.

13. "மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம்" என்றல்,
சங்கையின்று உணர்தி; வாலி செய்கையால் சாலும்; இன்னும்,
அங்குஅவர் திறத்தினானே, அல்லலும் பழியும் ஆதல்
எங்களில் காண்டி அன்றே; இதற்கு. வேறு உவமை உண்டோ?" (4233)

(சங்கை - ஐயம் \ சந்தேகம்; சாலும் - உறுதிப்படும்; திறம் - செய்கை \ காரணம்; உவமை - உபமானம் \ சான்று எடுத்துக்காட்டு \ உதாரணம்)

"பெண்கள் காரணமாகத்தான் ஆடவர்க்கு மரணம் விளையும்" என்று பெரியோர்கள் கூறுவதைச் சிறிதும் சந்தேகமின்றி உணர்ந்து கொள்வாயாக; இதற்கு வாலியின் செய்கையே தக்க சான்றாகும், மேலும் அதே பெண்களின் சூழ்ச்சித்திறன் காரணமாகவே ஆடவர்க்குத் துன்பமும், பழியும் வந்து சேரும். இதனை எங்களைக் கொண்டே அறிந்து கொள்ளலாம் அல்லவா? இதற்கு வேறு எடுத்துக்காட்டுத் தேவையா?" என்கிறான் இராமன்.

இங்கே வாலி, உருமையின்பாற் கொண்ட காதலின் காரணத்தால்தான் இறக்க நேர்ந்தது என்பதும், தசரதன் கைகேயி காரணமாகத்தான் இறக்க நேர்ந்தது என்பதும், இராமன் சீதை காரணமாகவும், கூனியின் காரணமாகவும் தான் அல்லல்பட நேர்ந்தது என்பதும், இலக்குவன் சீதை காரணமாகத் தான் பழிச்சொல்லுக்கு ஆளாக நேர்ந்தது என்பதும் புலப்படுத்தப்பட்டது.

"மாந்தர்" என்பது பொதுவாக மக்கள் எல்லோரையும் குறிக்கும் என்றாலும் இங்கே ஆடவரையே குறித்தது எனக்கொள்க. "எங்களின்" என்றது, இராமன் தன்னோடு, தன் தந்தை தசரதனையும், தன் தம்பி இலக்குவனையும் உளப்படுத்திக் கூறியது என்க. பிறன் மனை விரும்புதல், என்ற குற்றத்தால் வாலி இறக்க நேர்ந்தது. பெண்கள் பிறர்மேல் பழிசொல்லச்சிறிதும் அஞ்சாதவர்கள். சீதையின் இந்தக் குற்றத்தால் இலக்குவன் பழியேற்க நேர்ந்தது. அதுபோலவே சீதையின் சொல்லைக் கேட்டு இராமன் மாயமான் பின்னால் சென்று அல்லலுற நேர்ந்தது. கைகேயியின் சொல் கேட்டு தசரதன், இறக்க நேர்ந்தது என்பவை குறிப்பால் உணரப்படவேண்டியனவாம். "தூமகேது புவிக்கு எனத் தோன்றிய, வாமமேகலை மங்கையரால் வரும், காமம் இல்லை எனில், கடுங்கேடு எனும் நாமம் இல்லை; நரகமும் இல்லையே" என்பது வசிஷ்டரின் வாக்கு.

14. "நாயகன் அல்லன்; நம்மை நனிபயந்து எடுத்து நல்கும்
தாய்,"என, இனிது பேணித் தாங்குதி தாங்குவாரை;
ஆயது தன்மையேனும், அறவரம்பு இகவாவண்ணம்,
தீயன வந்தபோது சுடுதியால் தீமையோரை." (4234)

(நாயகன் - அரசன்; நனி - மிகவும்; பேணுதல் - போற்றுதல்; தாங்குவார் - குடிமக்கள்; தாங்குதல் - காத்தல்; தன்மை - பொதுவான இயல்பு; இகவா - கடவாத; சுடுதல் - தண்டித்தல் \ காய்த்தல்; பயத்தல் - பெற்றெடுத்தல்)

"இவன் நமக்கு அரசன் மட்டுமல்லன்; நம்மைப்பெற்றெடுத்து நமக்கு இனியனவே மிகச் செய்யும் தாய் போன்றவன்" என்று உன் குடிமக்கள் உன்னைப் போற்றும்படி அரசு செய்து, அவர்களை ஒரு துன்பமுமின்றிக் காப்பாற்றி வருவாயாக! இது பொதுவான தன்மை. இதற்கு மாறாக, "யாரேனும் நாட்டிற்கோ, குடிமக்களுக்கோ தீமை செய்வாராயின், அவர்களை இன்னார் இனியர் என்று நோக்காது, அறத்தன்மையினின்று இம்மியளவும் வழுவாது, அந்தத்தீமை செய்தவர்களைக் குற்றத்திற்கு ஏற்றபடி தண்டிப்பாயாக?" என்றும் அறவுரை கூறுகிறான் இராமன்.

தசரதன் அயோத்தியை ஆண்ட முறை பற்றிக் கூறிய கவிஞன் முன்பு "தாய் ஒக்கும் அன்பில்" என்றும், "நோய் ஒக்கும் என்றும் மருந்தொக்கும்" என்று கூறியதையே இங்கு இராமன் சுக்கிரீவனுக்குக் கூறினான் என்க. "குடிபுறம் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல், வடுவன்று; வேந்தன் தொழில்" என்பதும், "கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல், பைங்கூழ் களை கட்டதனோடு நேர்" என்பதும் குறள் 549. 550. அரசனையும், இறைவனையும் தாய் எனக் கூறுதல் கவிமரபு. "ஈன்றாளுமாய், எனக்கு அப்பனுமாய்" என்பது தேவாரம்; "அம்மையே அப்பா!" என்பது திருவாசகம்.

15. "இறத்தலும் பிறத்தல் தானும் என்பன இரண்டும், யாண்டும்
திறத்துளி நோக்கின், செய்தவினை தரத்தெரிந்த அன்றே?
புறத்துஇனி உரைப்பது என்னே?" பூவின்மேல் புனிதற்கேனும்,
அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதி; அஃது உறுதி அன்ப! (4235)

(திறம் - செம்மை \ உண்மை; உளி - வழி; யாண்டும் - எப்பொழுதும்; பூ - தாமரை மலர்; புனிதன் - பிரமன்; உறுதி - நிச்சயம்; புறத்து - வேறாக)

"உண்மை வழிநின்று ஆராய்ந்து பார்த்தால், இறப்பு \ பிறப்பு என்று கூறப்படும் இரண்டு தன்மைகளும், எப்போதும் அவரவர் செய்த நல்வினை, தீவினையின் பயனாக வருவதுதான் அல்லவா? தாமரை மலரில் வீற்றிருக்கும் தூய்மையான பிரமன் கூட, அறநெறியினின்றும் தவறுவானேயாயின் அவனுக்கும் ஆயுட்காலம் முடிவது என்பது உறுதியானதாகும்" என்று சான்றோர் கூறுவர். இதைவிடக் கூறுவதற்கு வேறு என்ன இருக்கிறது? என்று அறிவுறுத்துகிறான் இராமன்.

"சாதலும், பிறத்தல்தானும் தம்வினைப் பயத்தினாகும்" என்பது சீவகசிந்தாமணி; அறத்திற்கு மாறாக எவர் நடந்தாலும், அதன் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என்பது கருத்து.

16. "ஆக்கமும் கேடும், தாம் செய் அறத்தொடு பாவம் ஆய
போக்கி, வேறு உண்மை தேறார், பொருஅரும் புலமை நூலோர்;
தாக்கின ஒன்றோடு ஒன்று தருக்கு உறும் செருவில் தக்கோய்!
பாக்கியம் அன்றி, என்றும் பாவத்தைப் பற்றலாமோ?" (4236)

(பொருஅரும் - ஒப்பற்ற; புலமை - அறிவுடைமை; தேறுதல் - தெளிதல்; தருக்கு - செருக்கு; பற்றுதல் - சேருதல் \ மேற்கொள்ளுதல்; பாக்கியம் - அறம்

\ நல்வினை \ தருமநெறி; ஆக்கம் - நன்மை \ செல்வம்; கேடு - தீங்கு \ வறுமை; போக்கி - விடுத்து)

"தகைமை உடையவனே! ஒருவனுக்கு வரும் செல்வமோ, நன்மையோ, வறுமையோ, தீமையோ, அவன் தான் செய்த நல்வினை, தீவினையாகிய அறங்களின் பயனாகிய புண்ணியம், பாவம் என்பதைப் பொறுத்ததுதான்; என்கிற இந்த உண்மையைத்தவிர, வேறு எதனையும் இதற்குக் காரணமாகத் தெளிந்து கூறமாட்டார்கள் ஒப்பற்ற நூல் அறிவுடைய பெருமக்கள். நன்மையும் தீமையும், பாவமும் புண்ணியமும், செல்வமும் வறுமையும், தமக்குள் செருக்குக் கொண்டு ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டால், புண்ணியம் தரும் நல்வினையைத் தான் நாம் மேற்கொள்ள வேண்டுமேயன்றி, பாவத்தைத் தரும் தீவினையை மேற்கொள்ளல் தகுமோ?" என்று கூறிமுடித்தான் இராமன்.

வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் நடந்த போரில் இராமன் வாலியின் பக்கம் சாராது, சுக்கிரீவன் பக்கம் சார்ந்து உதவிசெய்த செயல் இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். ஆக்கத்திற்குக் காரணம் அறம். அதன் அழிவிற்குக் காரணம் பாவம். எனவே அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது கருத்து. "அறத்தின் ஊங்கு ஆக்கமுமில்லை; அதனை மறத்தலின் ஊங்கில்லைக் கேடு" என்பதும், "சிறப்பு ஈனும், செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு ஆக்கமும் எவனோ உயிர்க்கு?" என்பதும் குறள் 32, 31.

17. "மாரிக்காலம் முடிந்ததும் சேனையுடன் வருக" எனல்.

"இன்னது தகைமை என்ப; இயல்புளி மரபின் எண்ணி,
மன்அரசு இயற்றி, என்கண் மருவுழி, மாரிக்காலம்
பின்உற, முறையின், உன்தன் பெருங்கடல் சேனையோடும்
துன்னுதி, போதி" என்றான், சுந்தரன்; அவனும் சொல்வான். (4237)

(தகைமை - தக்கது \ தகுதியுடையது; மன் - நிலைபெற்ற; பின்உறுதல் - கழிதல்; துன்னுதல் - அடைதல் \ வருதல்; போதி - போவாயாக; சுந்தரன் - பேரழகன்)

"மேற்கூறியவைதான் ஒரு அரசனுக்குத் தகுந்தவை என்று சான்றோர்கள் கூறுவர்; நீ உன் குலவழக்கப்படி, நன்கு சிந்தித்து சிறப்பாக, நிலையான அரசாட்சி செய்து, மாரிக்காலம் முடிந்த பின், உன்னுடைய கடல் போன்ற பெரும் படையுடன் என்னிடம் வருக; இப்போது செல்வாயாக!" என்றான் பேரழகனான இராமன். அதனைக் கேட்ட சுக்கிரீவன் கீழ்வருவனவற்றைக் கூறினான்.

இத்தகைய அரசியல் அறவுரைகளை இராமன் சுக்கிரீவனுக்குக் கூறியதாக வான்மீகத்தில் காணப்படவில்லை. மாரிக்காலம் என்பது ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி என்னும் நான்கு மாதங்களாகும்.

18. தன்னுடன் தங்கும்படி சுக்கிரீவன் வேண்டுதல்

குரங்கு உறை இருக்கை என்னும் குற்றமே குற்றம் அல்லால்,
அரங்குஉறு துறக்க நாட்டுக்கு அரசு எனல் ஆயது அன்றே

மரம் கிளர் அருவிக் குன்றம்? வள்ளல்! நீ மனத்தின் எம்மை
இரங்கிய பணி யாம் செய்ய, இருந்தியால் சில்நாள் எம்பால். (4238)

(கிளர் - விளங்குகின்ற; அரங்கு - சபைகள்; துறக்கநாடு - தேவலோகம்; அரசு - முதன்மை \ மேன்மை \ தலைமை; இருக்கை - இருப்பிடம்)

"வள்ளன்மை உடையவனே! மரங்கள் அடர்ந்து விளங்குகின்றதும், அருவிகள் பாய்கின்றதுமான கிட்கிந்தை மலை,குரங்குகள் வாழுகின்ற இடம் என்ற ஒரே ஒரு குற்றம் உடையதே அன்றி, அது சபா மண்டபங்கள் நிறைந்த சுவர்க்க லோகமாகிய அமராவதிக்குச் சற்றும் குறைவின்றி, அதைவிட மேம்பட்டதாகவே இருக்கும். எனவே, நீ உன் உள்ளத்தில் விரும்பியதை, எங்களுக்கு ஆணையிட வேண்டும். நாங்கள் அதைச் செய்யவேண்டும் அத்தகைய வாய்ப்பைக் கொடுக்கும் வகையில் நீ எங்களுடன் வந்து சில நாட்கள் தங்கி இருப்பாயாக!" என்று கேட்டுக்கொண்டான் சுக்கிரீவன்.

அரங்கு என்பது சுதர்மை என்ற தேவேந்திரனின் சபா மண்டபம் போன்ற மற்ற நாட்டிய அரங்குகளையும் குறிக்கும் என்க. சுவர்க்கலோத்தில் கிடைக்கும் வசதிகளைவிட இங்கே அதிகம் கிடைக்கும் என்பது குறிப்பு.

19. "அரிந்தம! நின்னைஅண்மி, அருளுக்கும் உரியேம் ஆகிப்
பிரிந்து, வேறு எய்தும் செல்வம், வெறுமையின் பிறிது ஒன்றாமோ?
கருந்தடங் கண்ணினாளை நாடல் ஆம் காலம் காறும்,
இருந்து அருள் தருதி எம்மோடு" என்று அடிஇணையின் வீழ்ந்தான். (4239)

(அரி - பகைவர்; அரிந்தமன் - பகைவர்களை அழிப்பவன்; அண்டுதல் - நெருங்குதல் \ சரணமடைதல்; வெறுமை - வறுமை \ இல்லாமை; இணை - இரண்டு)

"பகைவர்களை அழிக்கும் வன்மை உடையவனே! நாங்கள் அனைவரும் உன்னைச் சரண்அடைந்து, உன்னுடைய கருணைக்கும் பாத்திரர் ஆனோம்; அவ்வாறு இருக்கும்போது, இப்போது, நாங்கள் உன்னைவிட்டுப் பிரிந்து போய்த் தனியாகப் பெறுகின்ற இந்த அரசச்செல்வம் என்பது, வறுமை என்பதைத் தவிர வேறு ஏதாவது ஆகுமா? எனவே கரிய பெரிய, கண்களையுடைய சீதா தேவியைத் தேடிக் கண்டுபிடிக்கும் காலம் வரையிலும், நீ எங்களோடு கிட்கிந்தையிலேயே தங்கியிருந்து எங்களுக்கு மேலும் அருள்புரிய வேண்டும்" என்று இறைஞ்சிக் கேட்டுக்கொண்டு, சுக்கிரீவன் இராமபிரானது இரண்டு திருவடிகளிலும் வீழ்ந்து வணங்கினான்.

தன்பகைவனான வாலியைக் கொன்று தனக்கு அரசுச் செல்வத்தையும், மனைவியையும் திருப்பித் தந்ததற்காக, இராமனைச் சுக்கிரீவன் "அரிந்தம" என்றான் என்பதாம். இராமன் இல்லாது தாங்கள் மட்டும் கிட்கிந்தையில் தங்கி யிருப்பது என்பது எல்லாச் செல்வமும் இருந்தும் இல்லாதது போலவேயாகும் என்பது சுக்கிரீவனின் கருத்து.

20. இராமன் தனது இயலாமையைக் கூறுதல்

ஏந்தலும் இதனைக் கேளா, இன்இள முறுவல் நாற,
"வேந்துஅமை இருக்கை, எம்போல் விரதியர் விழைதற்கு ஒவ்வா;
போந்துஅவண் இருப்பின், எம்மைப் போற்றவே பொழுது போமால்;
"தேர்ந்து இனிது இயற்றும் உன்தன் அரசியல் தருமம் தீர்தி;" (4240)

(ஏந்தல் - தலைவன் \ அரசன் \ பெருமையில் சிறந்தோன்; கேளா - கேட்டு; நாற - தோன்ற; விரதியர் - தவசிகள் \ வானப்பிரஸ்தர்; ஒவ்வா - தகாதன; போற்றுதல் - கவனித்துக் கொள்ளுதல் \ வழிபடுதல் \ உபசாரம் செய்தல்; தருமம் - அறக்கடமை; தீர்தல் - நீங்குதல் \ தவறுதல்; இருக்கை - அரண்மனை)

"பெருமையில் சிறந்த அரசனாகிய இராமபிரான், சுக்கிரீவன் கூறியதைக் கேட்டதும், இனிமையான புன்சிரிப்புத் தோன்ற, "அரசர்கள் இருக்கின்ற அரண் மனையுள் வந்து வாழ்தல் எம்மைப் போன்ற தவத்தை மேற்கொண்டிருப் பவர்கள் விரும்புவதற்குத் தக்கதன்று. மேலும், நாங்கள் அங்கே வந்து தங்கி யிருந்தோமானால், எங்களை வழிபடவும், எங்களுக்கு உபசாரம் செய்வதற்குமே உங்கள் நேரம் எல்லாம் சரியாய்ப் போய்விடும். எனவே நீ ஆராய்ந்து, சிறப்பாகச் செய்யக்கூடிய அரசியல் அறநெறியில் இருந்து தவறுதற்கு அது வாய்ப்பாகிப் போய்விடும்" என்றான்.

21. "ஏழ் இரண்டு ஆண்டு யான் போந்து, எரிவனத்து இருக்க ஏன்றேன்;
வாழியாய்! அரசர் வைகும் வளநகர் வைகல் ஒல்லேன்;
பாழிஅம் தடந்தோள் வீர! பார்த்திலை போலும் அன்றே!
யாழ் இசை மொழியோடு அன்றி, யான் உறும் இன்பம் என்னோ?" (4241)

(எரி - கொதிக்கின்ற; ஏன்றல் - ஒப்புக்கொள்ளுதல்; ஒல்லுதல் - இசைதல் \ உடன்படுதல்; பாழி - வலிமை)

"வலிய அழகிய, பெரிய தோள்களை உடைய வீரனே! சுக்கிரீவா! நான் பதினான்கு ஆண்டுகள், கதிரவன் கிரணங்களால் கொதிக்கின்ற காட்டில் வாழ்வு மேற்கொள்ளவேண்டும் என்ற என் தந்தையின் கட்டளையை ஏற்று இங்கு வந்துள்ளேன்; எனவே அரசர்கள் வாழ்கின்ற செல்வம் பொருந்திய நகருக் குள்ளும், அரண்மனையிலும் தங்குதற்கு நான் உடன்படமுடியாது. மேலும் யாழ் போன்று இசைக்கும் இனிய சொற்களையுடைய என் சீதாதேவியும் உடனன்றி நானே தனியாக அனுபவிக்கும் இன்பம் என்பது ஒன்று இருக்கிறதோ?" என்றான் இராமன்.

தன்னுடன் வந்து கிட்கிந்தையில் தங்க வேண்டும் என்று கேட்ட சுக்கிரீவனுக்கு இராமன் தன்னுடைய இயலாமையைக் கூறுகிறான் என்பதாம். வான்மீகத்தில் அனுமன்தான் இராமனைக் கிட்கிந்தைக்கு அழைத்து, சுக்கிரீவனுக்கு முடிசூட்டும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறான். சுக்கிரீவனே நேராக அழைத்ததாக வான்மீகத்தில் காணப்படவில்லை.

22. "தேவி வேறு அரக்கன் வைத்த சேமத்துள் இருப்ப, தான்தன்
ஆவிபோல் துணைவரோடும் அளவிடற்கரிய இன்பம்
மேவினான் இராமன்" என்றால், ஐய! இவ்வெய்ய மாற்றம்
மூவகை உலகம் முற்றும் காலத்தும் முற்றவற்றோ?" (4242)

(தேவி - மனைவி; சேமம் - காவல்; ஆவி - உயிர்; வெய்ய - கொடிய; மாற்றம் - சொல் \ பழிச்சொல்; முற்றும் - அழியும்; முற்றுதல் - மறைதல்; வேறு - தனித்து; மேவுதல் - விரும்புதல்)

"அரசனே சுக்கிரீவ! தன்னுடைய மனைவியான சீதை, தனியாக, அரக்கனான இராவணன் வைத்திருக்கின்ற காவலில் இருக்கவும், இராமனான இவன், தனது உயிர்போன்ற நண்பர்களான சுக்கிரீவன் முதலியோருடன் எல்லையற்ற இன்பம் துய்க்கிறான் என்று உலகத்தவர் பேசினால், இந்தக் கொடிய பழிச்சொல், மேல், கீழ், நடு என்னும் மூவகைப்பட்ட உலகங்களும் அழிகின்ற ஊழிக்காலத்திலும் கூட மறைய வல்லதோ?" என்றான் இராமன்.

சீதை தனியளாக இராவணன் காவலில் இருக்க, இராமன் அவன் நண்பர் களோடு இன்பம் துய்க்கிறான் என்று உலகத்தவர் பேசினால் இந்த ஊழிக் காலத்தில் உலகங்கள் எல்லாம் அழிந்தாலும் அத்தகைய பழிச்சொல் அழியாது நிலைபெற்றிருக்கும் என்பது இராமன் கருத்து. உலகப் பழிச்சொல்லிற்கு அஞ்சினான் இராமன் என்பதாம்.

23. "இல்லறம் துறந்திலாதோர் இயற்கையை இழந்தும், போரின்
வில்லறம் துறந்தும் வாழ்வேற்கு, இன்னன மேன்மை இல்லாச்
சில்லறம் புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு,
நல்லறம் தொடர்ந்து நோன்பின், நவையற நோற்பல் நாளும்." (4243)

(இல் - மனையற வாழ்வு; துறத்தல் - கைவிடுதல்; இழத்தல் - நீங்குதல்; சில் - அற்பம்; மேன்மை - சிறப்பு; தொடர்ந்து - மேற்கொண்ட; நோன்பு - தவவிரதம்; நவை - குற்றம்; நோற்றல் - செய்துவிடுதல் \ மேற்கொள்ளுதல்; நாளும் - தினந்தோறும்)

"இல்லறத்துறைக்கு உரிய மனைவியைக் காத்தல் என்னும் நெறியிலிருந்து பிறழ்ந்தும், போரில் வில்லிற்குரிய அறத்தையும் கைவிட்டு வாழ்பவனாகிய எனக்கு, இவ்வாறு நண்பர்களுடன் இன்பம் துய்த்தல் என்பன சிறப்பற்ற அற்பத் தனமான ஒழுக்கங்கள் ஆகும். எனவே நான் செய்த தீமைகளெல்லாம் நீங்குமாறு, நல்ல அறவொழுக்கமாகிய தவவிரதத்தைக் குற்றமற நாள்தோறும் செய்ய மேற்கொண்டிருக்கிறேன்" என்றான் இராமன்.

"இல்லறம் துறந்திலாதோர் இயற்கையை இழத்தல்" என்பது, ஒவ்வொரு தலைமகனும் தன் இல்லறத் துணைவியாகிய மனைவியை எக்காரணம் கொண்டும் இழக்கக்கூடாது என்பதும், அவ்வாறு இழக்க நேர்ந்தால் அவளை எவ்வளவு பாடுபட்டேனும் மீட்டுக் கொள்ள வேண்டும் என்பதும் இல்லறநெறி. இப்போது இது இராமன் சீதையை இராவணனிடம் பறிகொடுத்துவிட்டு ஒன்றும் செய்ய இயலாது நிற்கிறான் என்பதைக் குறிக்கும். ஆனால் "போரின் வில்லறம்

துறத்தல் என்பது, அவ்வாறு அபகரித்துக்கொண்டு சென்ற இராவணனைத் தன் வில்லாற்றல் கொண்டு போரில் எதிர்த்து, அவனை வென்று சீதையை மீட்க முடியாதிருக்கும் நிலையையும், போரில் போர்செய்யும் முறைக்கு மாறாக, நிராயுதபாணியாக வாலியை மறைந்து நின்று கொன்றதையும் வில்லறம் துறந்ததாக இராமன் கருதி வருந்தினான் என்று கூறுதலும் பொருந்தும். எனவே தான்செய்த இந்த இரு குற்றங்களும் நீங்க வேண்டுமென்றால் தான் குற்றமற்ற தவவாழ்க்கையையே மேற்கொள்ளவேண்டும் என்பது இராமன் கருத்து. அதைச் சுக்கிரீவனிடம் தெரிவிக்கிறான் என்பதாம். தனது மனைவியைப் பிறன் அபகரித்துச் சென்றது தான் இல்லறம் துறந்த தன்மை; அவ்வாறு அபகரித்தவனைக் கொன்று மனைவியை மீட்காதது வில்லறம் துறந்த தன்மை என்க.

24. "அரசியற்கு உரிய யாவும் ஆற்றுழி ஆற்றி, ஆன்ற
திரை செயற்குஉரிய சேனைக்கடலொடும், திங்கள் நான்கின்,
விரசுக என்பால்; நின்னை வேண்டினென் வீர!" என்றான்,
உரைசெயற்கு எளிதும் ஆகி, அரிதும் ஆம் ஒழுக்கில் நின்றான். (4244)

(ஆன்ற - பெரிய; விரசுதல் - விரைந்து வருதல்; திரை - அலை)

சொல்லுதற்கு எளிதாகவும், கடைப்பிடிப்பதற்குக் கடினமாகவும் உள்ள நல் ஒழுக்கத்தில் தளராது நிலைத்து நின்று ஒழுகுபவனான இராமன், சுக்கிரீவனை நோக்கி, "வீரனே! அரசாட்சி நடத்துவதற்குரிய எல்லாவற்றையும், முறைப்படி செய்து முடித்து, அலைவீசுவதற்குக் காரணமான கடல் போன்ற பெரிய படைகளுடன் நான்கு மாதங்கள் கழித்து, என்னிடம் விரைவில் தாமதிக்காமல் வந்து சேர்வாயாக; இதுதான் நான் உன்னை வேண்டுவது" என்றான் இராமன்.

"சொல்லுவது எல்லார்க்கும் சுலபமாகும் சொன்னபடி நடப்பவர்கள் மகிவும் சொற்பம்" என்பார் நாமக்கல்லார். "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்பது குறள் 664.

25. சுக்கிரீவன் மனம் கலங்கிச் செல்லுதல்

மறித்து ஒரு மாற்றம் கூறான், வான் உயர் தோற்றத்து அன்னான்
குறிப்பறிந்து ஒழுகல் மாதோ கோது இலர் ஆதல் என்னா,
நெறிப்படர் கண்கள் பொங்கி நீர்வர, நெடிது, தாழ்ந்து,
பொறிப்ப அரும் துன்பம் உன்னாக் கவிக்குலத்தரசன் போனான். (4245)

(கவி - குரங்கு; கோது - குற்றம்; மறித்து - தடுத்து; மாற்றம் - சொல்; பொறிப்பஅரும் - எழுதமுடியாத; உன்னா - உன்னி \ மனத்தில் கொண்டு; குறிப்பு - நினைவு)

குரங்குக் கூட்டத்திற்குத் தலைவனான சுக்கிரீவன், இவ்வாறு இராமன் கூறியதைக் கேட்டு, அதைத் தடுத்து, அதற்கு மாறாக வேறு ஒரு பதிலும் கூறாமல், ஆகாயம் அளவு உயர்ந்த தவவேடத்தை மேற்கொண்டுள்ள இராமபிரானின் குறிப்பை உணர்ந்து நடந்துகொள்ளுவதுதான் குற்றமில்லாத

தன்மையாகும் என்று கருதி, தன் பரந்த கண்களில் கண்ணீர் சொரிய, எட்டு உறுப்புக்களும் தலையில் படும்படி சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, எழுதமுடியாத பெருந்துன்பம் அடைந்து, கிஷ்கிந்தை நகர் நோக்கிச் சென்றான்.

குறிப்பறிதல் என்பது ஒரு பெருங்குணம். அது எல்லோர்க்கும் எளிதில் அமைந்துவிடாது. இங்கிதம் என்பர் வடநூலார். "பொறிப்ப அரும் துன்பம்" என்பது இராமபிரானைப் பிரிவதால் ஏற்பட்டது மட்டுமல்ல, மனைவியைப் பிரிந்து இராமபிரான் படும் துயரம் கண்டு ஏற்பட்டதும் என்க. "குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்" என்றார் ஔவையார்.

26. அங்கதனுக்கு இராமன் கூறிய அறிவுரை

வாலி காதலனும், ஆண்டு, மலரடி வணங்கினானை,
நீலமாமேகம் அன்ன நெடியவன், அருளின் நோக்கி,
"சீலம் நீ உடையை ஆதல், இவன் சிறுதாதை என்னா,
மூலமே தந்த நுந்தையாம் என, முறையின் நிற்றி" (4246)

(குளகப்பாடல்) (காதலன் - மகன்; சீலம் - நல்லொழுக்கம்; சிறுதாதை - சிற்றப்பன் \ சிறிய தந்தை; மூலம் - காரணம்; முறை - கட்டளை; நெடியவன் - பெருமைக்குரியவன்)

அப்பொழுது, தனது தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கின வனாகிய, வாலியின் புதல்வனான அங்கதனை, கரிய சிறந்த மேகம் போன்ற நிறமுடையவனும். பெருமைக்குரியோனுமாகிய இராமன், அருள்கூர்ந்து நோக்கி, "அங்கதா! நீ நல்லொழுக்கம் நிறைந்தவன். எனவே இங்கே நிற்கின்ற சுக்கிரீவனை உனது சிறியதந்தை என்று கருதாமல், உன் பிறப்பிற்குக் காரணமாகிய, உன்னைப் பெற்றெடுத்த தந்தையைப் போலவே எண்ணி, அவன் இடும் கட்டளைகளை ஏற்று நடப்பாயாக" என்று அறிவுறுத்தினான்.

நெடியவன் என்பதை வாமனாவதாரத்திற்குத் தொடர்புபடுத்தியும் பொருள் கூறலாம். கவிஞன் நீலமேகத்தை இராமபிரானுக்குக் காப்பியத்தில் பல இடங்களிலும் உவமித்திருப்பதை உணர்க.

27. அனுமனையும் அவன் பின் போகச் சொல்லுதல்

என்ன, மற்று இனைய கூறி, "ஏகு அவன் தொடர" என்றான்;
பொன்னடி வணங்கி, மற்று அப்புகழுடைக் குரிசில் போனான்;
பின்னர் மாருதியை நோக்கி, "பேர்எழில்வீர! நீயும்
அன்னவன் அரசுக்கு ஏற்றது ஆற்றுதி, அறிவின்" என்றான். (4247)

(குரிசில் - இளவீரன்; பொன் - அழகிய; மாருதி - அனுமன்; அறிவு - மதிநுட்பம்)

என்று இவ்வாறு இன்னும் சிலவற்றைக்கூறி, அங்கதனை நோக்கி, "நீ சுக்கிரீவனைத் தொடர்ந்து செல்வாயாக!" என்று கூறினான்; அந்தப் புகழ் மிக்க இளவீரனான அங்கதனும், இராமபிரானது அழகிய திருவடிகளை வணங்கிய பின் சென்றான். பின்னர் இராமபிரான் அனுமனை நோக்கி, "மிகுந்த அழகுடைய

வீரனே! அனும! நீயும் சுக்கிரீவன் உடன் சென்று உன்னுடைய நல்லறிவு கொண்டு, அவனது அரசியலுக்கு ஏற்ற நல்ல அறிவுரைகளைக் கூறி, அவனுக்கு உதவியாக அமைவாயாக!" என்றான்.

அனுமனுக்குச் "சுந்தரன்" என்றும் ஒருபெயர் உண்டு. எனவே இராமன் அனுமனை "பேர்எழில் வீர" என்றான். அனுமன், மேனியெழில், அறிவாற்றல், வீரத்தன்மை என்ற மூன்றும் பெற்றிருந்தான் என்பது புலப்படுகிறது.

28. அனுமன் இராமனுடனே இருக்க விழைதல்

பொய்த்தல் இல் உள்ளத்து அன்பு பொழிகின்ற புணர்ச்சியானும்
"இத்தலை இருந்து நாயேன், ஏயின, எனக்குத்தக்க,
கைத்தொழில் செய்வேன்" என்று, கழல் இணை வணங்கும் காலை,
மெய்த்தலை நின்ற வீரன், இவ்வுரை விளம்பி விட்டான். (4248)

(புணர்ச்சி - நட்பு; கை - சிறுமை; கைத்தொழில் - சிறுதொண்டுகள் \ குற்றேவல்கள்; மெய் - உண்மை; நாயேன் - நாய் போன்றவன் \ அடியேன்; இத்தலை - இவ்விடம்)

பொய்மை இல்லாத நல்ல உள்ளமும், அந்த உள்ளத்தில் பொழிகின்ற அன்பும் கொண்ட நட்பினனான அனுமன், இராமனை நோக்கி, "நாய்போன்ற அடியேனாகிய நான். இங்கேயே இருந்து. தாங்கள் கட்டளையிடுவனவும், என்னால் இயற்ற முடிந்ததுவுமான குற்றேவல்களைத் தங்களுக்கு செய்து கொண்டு இருக்கிறேனே" என்று, வீரக்கழல் அணிந்த இரண்டு திருவடிகளையும் வணங்கும் போது, சத்தியத்திலேயே ஊன்றி நிலைத்து நிற்கின்ற வீரனான இராமன், பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

"பொய்த்தல் இல் உள்ளம்" என்பது, அனுமன் பற்றிச் சாம்பவனும், சீதாதேவியும் கூறிய வாய்மொழிகளைக் குறித்தது. "நாயேன்" என்றது அவனது பணிவையும், அடக்கத்தையும் குறித்தது. கைத்தொழில் என்பது சிறுசிறு குற்றேவல்களைக் குறிக்கும். இவ்வாறே அனுமனும் பின்னர் சீதையிடம் "ஏவல் கூவல் பணி செய்வேன்" என்றதும் நோக்குக. மெய்த்தலை நின்ற வீரன் என்பது சத்தியத்தையே தொடர்ந்து கடைப்பிடித்து வந்த இராமபிரானைக் குறிக்கும்.

29. அதற்கு இராமன் உடன்படாமை

"நிரம்பினான் ஒருவன் காத்த நிறை அரசு இறுதி நின்ற
வரம்பு இலாத அதனை, மற்று ஓர், தலைமகன் வலிதின் கொண்டால்,
அரும்புவ நலனும் தீங்கும்; ஆகலின், ஐய! நின்போல்
பெரும்பொறை அறிவினோரால் நிலையினைப் பெறுவது அம்மா!" (4249)

(காத்த - ஆட்சிசெய்த; இறுதி - எல்லை; தலைமகன் - அரசன்; அரும்புவ - தோன்றுவன; நிலை - அசையாத் தன்மை)

"அனுமனே! ஒரு அரசனுக்கு வேண்டிய எல்லா நற்பண்புகளும் அமையப் பெற்ற வாலி, அரசுபுரிந்து வந்த, எல்லாச் செல்வங்களும் நிரம்பப்பெற்ற,

கிட்கிந்தை அரசு ஒரு எல்லையில்லாதது. அதனை மற்ற ஒருவனாகிய அவன் தம்பி சுக்கிரீவன் இப்பொழுது தன் வலிமையால் கைப்பற்றியிருக்கிறான். எனவே இத்தகைய ஆட்சி மாற்றங்களின் போது நல்லனவும் நிகழலாம்; தீயனவும் தோன்றலாம்; எனவே அத்தகைய நிலைமையைச் சமாளிக்க உன்னைப்போல் பெரிய பொறுமையும், நல்லறிவும் மிக்கோர்களால்தான், அவ்வரசாட்சியினை அசையாது நிலைபெறச் செய்ய இயலும்" என்றான் இராமன்.

"நிரம்பினான்" என்பது, ஒரு அரசனுக்குரிய நற்பண்புகள் என்று வள்ளுவன் கூறியனவான அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் தூங்காமை, கல்வி, துணிவுடைமை, கொடை, அளி, செங்கோல், குடிஓம்பல் ஆகிய குணங்களைக் குறிக்கும் என்க. இத்தகைய இயல்பலாத ஆட்சி மாற்றங்களின்போது குழப்பங் களும் ஏற்படக்கூடும். அவற்றைத் தவிர்த்தல் வேண்டுமென்றால் உன்னைப் போன்ற நிறைந்த பொறுமையும், நல்லறிவும் கொண்டவர்களால் தான் அது இயலும் என்று இராமன் அனுமனிடம் கூறினான். முன்னர் அவனின் "பொய்த்தல் இல் உள்ளத்து அன்பு பொழிகின்ற புணர்ச்சியைக்" கூறியவன் இப்பாடலில் பெரும்பொறையும், அறிவுடைமையும் பற்றிக்கூறி, அனுமனது இன்றியமை யாமையைக் குறித்தது நோக்குக.

30. "ஆன்றவர்க்கு உயரியதாய அரசினை நிறுவி, அப்பால்,
ஏன்று எனக்கு உரியதாய கருமமும் இயற்றற்கு ஒத்த
சான்றவர் நின்னின் இல்லை;ஆதலால், தருமம் தானே
போன்ற நீ, யானே வேண்ட, அத்தலை போதி!" என்றான். (4250)

(ஆன்றவன் - நற்குணங்கள் நிறைந்தவன்; நிறுவி - நிலைபெறச்செய்து; ஏன்று - ஏற்றுக்கொண்டு; சான்றவர் - பெரியோர்; அத்தலை - அவ்விடம்; போதி - செல்வாயாக; ஒத்த - தக்க \ தகுந்த)

"நற்குணங்கள் நிரம்பப் பெற்றவனான சுக்கிரீவனுக்கு இப்பொழுது உரிமையுடையதான கிட்கிந்தை அரசினை நன்கு நிலைபெறச் செய்து, அதற்குப் பின்னர், எனக்குச் செய்ய வேண்டியதாகிய சீதையைத் தேடுதல் என்ற காரியத்தை மேற்கொண்டு முடித்தற்குத் தகுந்த பெரியோர்கள் உன்னைப்போல் வேறு ஒருவரும் இல்லை. எனவே அறமே ஒரு வடிவெடுத்து வந்தது போன்றவனாகிய நீ, நான் கூறுவதற்கு ஏற்ப சுக்கிரீவனுடன் அவனுடைய கிட்கிந்தை நகருக்குச் செல்வாயாக!" என்றான் இராமன்.

அறத்தின் மூர்த்தியாகிய இராமபிரானே, அனுமனை நோக்கி "தருமம் தானே போன்ற நீ" என்று கூறுவதைச் சிந்தித்து உணர்க. அனுமனின் பல நற்குணங் களையும் இந்த மூன்று பாடல்களால் இராமன் கூற்றாகத் தெரிவிக்கிறான் கவிஞன்.

31. அனுமன் கிட்கிந்தை செல்லுதல்

ஆழியான் அனைய கூற, "ஆணை இது ஆகில், அஃதே
வாழி! யான் புரிவேன்" என்று, வணங்கி, மாருதியும் போனான்,

சூழிமால் யானையன்ன தம்பியும், தானும், தொல்லை
ஊழி நாயகனும், வேறு ஓர் உயர் தடம் குன்றம் உற்றார். (4251)

(ஆழி - கடல் \ சக்கரம்; தொல்லை - பழமையான; நாயகன் - தலைவன்; சூழி - ஓடை \ முகபடாம் \ நெற்றிப்பட்டம்; மால் - பெரிய)

திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவனும், சுதர்சனம் என்னும் ஆணைச் சக்கரத்தைக் கையில் ஏந்தியிருப்பவனுமாகிய திருமாலின் அவதாரமாகிய இராமபிரான் அவ்வாறு கூற, அனுமன் "தங்களது கட்டளை அதுவானால், நான் அவ்வாறே செய்வேன்" என்று அவன் திருவடிகளில் வணங்கிக் கிட்கிந்தையை நோக்கிச் செல்லலானான். பழமையான ஊழிக்காலங்களிலெல்லாம் நிலைத்து நிற்கும் தலைவனும், நெற்றிப்பட்டம் அணிந்த பெரிய நாட்டு யானையைப் போன்றவனான தன் தம்பி இலக்குவனும், தானுமாக, அருகிலுள்ள வேறு ஓர் உயர்ந்த பெரிய குன்றத்தைச் சென்று அடைந்தனர்.

"வாழி" என்பது பொதுவாகப் பெரியோரை விளிக்கும் சொல்லாகக் கொள்வதே பொருந்தும். சூழிமால் யானை என்பது காட்டில் அல்லாது நாட்டில் வளர்கின்ற யானை என்ற பொருளில் இலக்குவனைக் குறித்தது. இராமபிரான் ஏவலைக் கேட்டு நடப்பவன் இலக்குவன் என்பது குறிப்பு. இராமன் இலக்குவர் சென்று சேர்ந்தமலை "பிரஸ்ரவண கிரி" என்று வான்மீகமும், அத்யாத்ம ராமாயணமும் கூறுகின்றன.

32. சுக்கிரீவன் இனிது அரசு செய்தல்

ஆரியன் அருளின் போய், அவ் அகன்மலை அகத்தன் ஆய
சூரியன் மகனும், மானத் துணைவரும், கிளையும் சுற்ற,
தாரையை வணங்கி, அன்னாள் தாய் என, தந்தை முந்தைச்
சீரியன் சொல்லே என்ன, செவ்விதின் அரசு செய்தான். (4252)

(ஆரியன் - சிறந்தவன்; அகம் - உள்ளிடம்; மானம் - பெருமை; கிளை - உறவினர்கள்; சீரியன் - சிறப்புள்ளவன்; செவ்விது - செம்மையாக \ சிறப்பாக; சுற்ற - சூழ)

நற்குணங்களில் சிறந்தவனான இராமபிரானின் கருணையால், சூரியன் மகனாகிய சுக்கிரீவன் தன் அகன்ற இடமாகிய கிட்கிந்தை நகரத்துள் சென்று, தனது பெருமை மிக்க, ஐம்பெருங்குழு, எண்பேராயம், போன்ற மந்திரச் சுற்றத்தோடும், தனது உறவினர்கள் குழ்ந்து வரவும், தன் அண்ணன் வாலியின் மனைவியான தாரையைத் தன் அன்னை எனக்கருதி வணங்கவும், தனது முன்னவனும், சீரிய குணங்கள் படைத்தவனுமான வாலியையே தனது தந்தையாகவும் அவனது அறிவுரைகளையே வேதம் எனவும் கொண்டு, மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தான்.

வான்மீகத்துள் தாரையைச் சுக்கிரீவன் தன் மனையாளாகக் கொண்டு இன்பம் துய்த்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாகக் கம்பன் தாரையைச் சுக்கிரீவன் தன் அன்னையெனக் கருதி வணங்கினான் என்கிறான். அத்யாத்ம இராமாயணமோ இதற்கும் ஒருபடி மேலே சென்று, தாரை இராமன்

உபதேசம் பெற்று மெஞ்ஞானம் அடைந்து ஜீவன்முக்தி நிலையடைந்தாள் என்று போற்றுகிறது. தாயர் ஐவர் என்பர். அவர் அரசன் தேவி, குருவின் தேவி, அண்ணன் தேவி, தன்னை ஈன்ற தாய், தன் மனைவியை ஈன்ற தாய் எனப்படுவர். தமையன் தந்தைக்கு நிகரானவன் எனவே தமையனின் மனைவி தாய்க்கு ஒப்பானவள் என்க.

33. அங்கதன் இளவரசனாகப் பொறுப்பேற்றல்

வள அரசுஎய்தி, மற்றைவானர வீரர் யாரும்
கிளைஞரின் உதவ, ஆணை கிளர்திசை அளப்ப, கேளொடு
அளவு இலா ஆற்றல் ஆண்மை அங்கதன், அறம்கொள் செல்வத்து
இளவரசு இயற்ற ஏவி, இனிதினின் இருந்தான், இப்பால். (4253)

(கிளைஞர் - சுற்றத்தார்; அளப்ப - செலுத்த; ஆணை - அதிகாரம்; ஏவி - கட்டளையிட்டு; கேள் - உறவினர்; இப்பால் - இப்புறம் \ மறுபக்கம்)

இவ்வாறு வளப்பம் மிகுந்த அரசச்செல்வத்தை அடைந்த, சுக்கிரீவன், மற்ற வானர வீரர்கள் அனைவரும் சுற்றத்தார் போல் உதவி செய்ய, தனது ஆணைச் சக்கரம் எல்லாத்திசைகளிலும் சென்று அளாவ, சுற்றத்தாரோடு, அளவிடற்கரிய வலிமையும், ஆண்மையும் கொண்ட அங்கதனைத் தான் அறவழியில் ஈட்டிய செல்வங்களுக்கெல்லாம் இளவரசன் என்று கட்டளையிட்டு, தான் மிக இனிமையாகக் கிட்கிந்தையில் இருந்து வந்தான். இந்தப்பக்கம் - பாடல் தொடர்கிறது.

கேள் என்பது இங்கே அரசியல் சுற்றத்தாரையும், உறவின்முறைச் சுற்றத்தாரையும் குறிக்கும். சுக்கிரீவன் இனிதினின் இருந்தான் என்பதில் அவன் அரசாட்சியை முற்றிலும் இளவரசனாகிய அங்கதனிடம் ஒப்புவித்து விட்டுத் தான் காமக்களி ஆட்டங்களில் ஈடுபட்டு இனிதினின் இருந்தான் என்ற தொனியும் ஒலிக்கக் காணலாம். சுக்கிரீவன் செய்தியைக் கூறி முடித்தபின்னர், இராமன் செய்தியைக் கூறவரும் கவிஞர், "இப்பால்" என்ற தொடரைப் பயன்படுத்தி யுள்ளது காண்க. இதுபோல் ஒவ்வொரு படலம் முடிவிலும் அடுத்த படலத்தின் தோற்றுவாயாக, முற்படலத்தின் இறுதிப்பாடலையோ, இறுதிச் சொல்லையோ வைத்துக்கூறும் கவிஞனின் திறம் நோக்குக.

இதன்பின், சிலசுவடிகளில் இராமன் மதங்க முனிவனின் ஆசிரமம் இருக்கும் ருசியமுக மலையின் ஒரு பகுதியுள், இலக்குவன் அமைத்த தவச்சாலையில் தங்கியிருந்தான் என்ற கருத்தைக் கூறும் ஒரு பாடல் காணப்படுகிறது. ஆனால் பெரும்பாலான அச்சுப்பிரதிகள் இதை மிகைப்பாடலாகவே கொண்டிருக் கின்றன. பாடல் இது.

வள்ளலும் அவண் நின்றுஏகி, மதங்கனது இருக்கைஆக
வெள்ளவான் குடுமிக்குன்றத்து ஒருசிறை, மேவி, மெய்ம்மை
அள்ளூறு காதல் தம்பி, அன்பினால் அமைக்கப்பட்ட
எள்ளல்இல் சாலை எய்தி இனிதினின் இருந்தகாலை.

அரசியல் படலம் நிறைவுற்றது

9. கார்காலப் படலம் (121 பாடல்கள்)

சுக்கிரீவனுக்கு முடிசூட்டிய பின் வந்த மழைக்காலத்தைப் பற்றியும், கிட்கிந்தையை ஒட்டிய பிரசிரவண மலையில் தங்கியிருந்த இராம இலக்குவர்களின் மனநிலையைப் பற்றியும் கூறும் பகுதி என விரியும். இது 121 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் "சரற்காலப் படலம்" எனவும் குறிக்கப் பெற்றிருக்கிறது. இப்படலத்தில் கதைப்பகுதியைக் காட்டிலும், வருணனைப் பகுதியே மிகுதி என்பது குறிப்பிடத் தக்கது.

இப்படலத்துள், சூரியன் தோற்றம், மறைவு; வானத்தின் தோற்றம்; மின்னல், இடி, ஊதைக்காற்று, பருவமழை, மரம், செடி, கொடிகள் மலர்தல்; இந்திர கோபப்பூச்சிகள், மலை அருவி, செங்காந்தள் மலர், கொன்றைப்பூ முதலியவற்றின் வருணனை; காட்டாற்றின் ஒழுக்கு, குவளை, தாமரை முதலியன மலர்தல்; தேனீ, மான்கள், அன்னம், கொக்கு, மயில் முதலியவற்றின் வருணனை; கார்காலத்தைக் கண்ட இராமனின் மனநிலை; சீதையின் பிரிவால் இராமன் வருந்தி இருத்தல்; இலக்குவன் ஆறுதல் கூறுதல்; இராமன் தெளிதல்; மழைக்கால வருணனை; மழையின் பின் தோன்றிய கூதிர் காலத்து நிகழ்ச்சிகள், ஆகியவை விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. சூரியன் தென்திசை நோக்கிச் செல்லுதல்

மா இயல் வடதிசை நின்று மானவன்
ஓவியமே என ஒளிக்கவின் குலாம்,
தேவியை நாடிய, முந்தித் தென்திசைக்கு
ஏவிய தூது என, இரவி ஏகினான். (4254)

(மானவன் - பெருமை பொருந்தியவன் \ மனுக்குலத்தில் தோன்றியவன் \ இராமன்; ஓவியம் - சித்திரம்; கவின் - அழகு; குலாம் - குலவும் \ விளங்கும்; தேவி - மனைவி; நாடிய - தேடும் பொருட்டு; மா - பெருமை; இரவி - சூரியன்)

பெருமை பொருந்தியவனும், மனுக்குலத்தில் தோன்றியவனுமான இராமன், சித்திரத்தில் எழுதிய ஓவியம் எனப் பொலிவுற்று அழகாய்த் திகழும் தன் மனைவி சீதாதேவியைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொருட்டு, அனுமன் முதலிய தூதுவர்களை இராவணன் வசிக்கின்ற தெற்குத் திசைக்குத் தூதுவராக அனுப்பும் முன்பே, சூரியனானவன் இராமன் ஏவிய தூதுவன் போல, பெருமை பொருந்திய வடக்குத் திசையிலிருந்து, தெற்குத் திசைப்பக்கம் செல்லலுற்றான்.

வடதிசை குபேரனுக்குரிய திசை. எனவே அதைப் பெரியதிசை, மங்கலத்திசை, புண்ணியத்திசை என்றும் கூறுவர். இங்கே மாஇயல்- பெருமை பொருந்திய திசை என்கிறான் கவிஞன். சீதாதேவியைக் கம்பன் பல இடங்களிலும் "மதனற்கும் எழுத ஒண்ணாச் சீதை" என்பதுபோல் வருணித் திருப்பதுபோல் இங்கு, "ஓவியமே என ஒளிக்கவின் குலாம்தேவி" என்றான் என்க. முந்தி என்பது, பின்னால் தெற்குத் திசைக்கு அனுமனை அனுப்பப் போகும் முன்னால் என்பதைக் குறித்தது. சூரியனின் போக்கை தட்சிணஅயனம் என்றும் உத்திரஅயனம் என்றும் கூறுவது வழக்கு. தட்சிணாயனம் என்பது சூரியன் வடதிசையிலிருந்து தென்திசை நோக்கிச் செல்லுதலையும், உத்தராயணம் என்பது சூரியன் தெற்குத் திசையினின்றும் வடதிசை நோக்கிச் செல்லுதலையும் குறிக்கும். தட்சிணாயணம் என்பது ஆடிமாதம் முதல் மார்கழி வரையுள்ள 6 மாதங்கள், உத்திராயணம் என்பது தைமாதம் முதல் ஆனிமாதம் வரையுள்ள 6 மாதங்கள் என்க. சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக இராவணன் வாழும் தென் திசைநோக்கி அனுமனைப் பின்னர் இராமன் தன் தூதுவனாக அனுப்பப் போகிறான். ஆனால் அதற்கு முன்பாக, சூரியன் இப்பொழுது தென்திசைநோக்கி இராமன் தூதுவனைப் போலப் போவதாகத் தோன்றுகிறது என்று கவிஞன் தன் குறிப்பை, இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மேல் ஏற்றிக் கூறியிருக்கிறான் என்க.

2. கரிய மேகம் பரவி வருதல்

பை அணைப் பல்தலைப் பாந்தள் ஏந்திய
மொய்ந்நிலத் தகளியில் முழங்கும் நீர் நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப்பொன் திரி
மை எடுத்துஒத்தது, மழைத்த வானமே. (4255)

(மை - கரிய; பை - படம்; பாந்தள் - பாம்பு \ ஆதிசேஷன்; தகளி - அகல் விளக்கு; வெய்யவன் - சூரியன்; மழை - மேகம்; மொய் - வலிய)

கரிய மேகத்தால் மூடப்பட்டிருக்கின்ற வானத்தின் தோற்றம், படத்தைக் கொண்ட ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷன் என்னும் பாம்பு வலிமை யுடன் தாங்கிக் கொண்டிருக்கின்ற இந்தப் பூமியை அகல் விளக்காகவும், ஒலிக்கின்ற அலைகளையுடைய கடல் நீரினை நெய்யாகவும், சூரியனை விளக்காகவும், அழகிய பொன்நிறம் கொண்ட மேருமலையைத் திரியாகவும் கொண்டு, மகளிர் மைபூசும் தன்மையை ஒத்திருந்தது.

இந்தப்பூமியை ஆயிரம் தலைகளும் படமும் நச்சுப்பையும் கொண்ட ஆதிசேஷன் என்னும் பாம்பு தாங்கிக் கொண்டிருப்பதாகக் கூறுவது புராணக் குறிப்பு. எனவே "பை அணைப் பல்தலைப் பாந்தள் ஏந்திய மொய்ந்நிலம்" என்றார். இங்கே, இப்பூமி அகல் விளக்காகவும், கடல் நீர் நெய்யாகவும், சூரியன் விளக்காகவும், மேருமலை திரியாகவும் உருவகிக்கப்பட்டன. முற்காலத்தில் மகளிர் தம் கண்களுக்கு மை தீட்டிக் கொள்ள வேண்டுமென்றால், அகலில் நெய்யை ஊற்றி, திரிப்போட்டு விளக்கை ஏற்றி அவ்வொளியிலிருந்து எழும்

புகையை ஒரு தட்டில் படியுமாறு செய்து அதைத்தான் தம் கண்களுக்கு மையாகத் தீட்டிக் கொள்வது வழக்கம் என்று தெரிகிறது. “வையம் தகளியா, வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக” என்பது பொய்கை யாழ்வாரின் முதல் திருவந்தாதி. தட்டில் மைபடிதல் போல வானத்தில் மேகம் படிந்து பரவியது என்பது கருத்து.

3. சூரியஒளி மறைதல்

நண்ணுதல் அருங்கடல் நஞ்சம் நுங்கிய
கண்ணுதல் கண்டத்தின் காட்சியாம் என,
விண்ணகம் இருண்டது; வெயிலின் வெங்கதிர்
தண்ணிய, மெலிந்தன; தழைத்த மேகமே. (4256)

(நண்ணுதல் - நெருங்குதல்; நஞ்சம் - நஞ்சு \ விஷம்; நுங்கிய - உண்ட \ அருந்திய \ விழுங்கிய; கண்ணுதல் - நெற்றிக் கண்களையுடையவன் \ சிவபெருமான்; நுதல் - நெற்றி; கண்டம் - கழுத்து; விண்ணகம் - ஆகாயம்; தண் - குளிர்ச்சி; மெலிதல் - தேய்தல்; தழைத்தல் - பரவுதல்)

யாரும் எளிதில் நெருங்குவதற்கு அரியதான பாற்கடலைக் கடையும் போது முதலில் தோன்றிய ஆலகால விஷத்தைத் தானே அருந்தி உலகத்தைக் காத்த, நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் கழுத்தில் உள்ளது போன்ற காட்சியாகும் என்னும்படி, ஆகாயம் இருட்டிக் கொண்டது. சூரியனின் கொடுமை யான கிரணங்கள் குளிர்ச்சியடைந்தன; அதன் வலிமை குறையலாயின; எனவே மேகங்கள் பெருகிப் பரவின.

கண்ணுதல் என்பது முன்றில், கால்வாய் என்பது போல இலக்கணப்போலி; நுதல்கண் என்றும், இல்முன் என்றும், வாய்க்கால் என்றும் கூறப்படவேண்டும். சிவபெருமானின் நீலகண்டத்தின் தோற்றத்திற்கு இருண்ட ஆகாயம் உவமை. அமிழ்தம் வேண்டித் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையும் போது முதலில் விஷம் தோன்றியது. அதை அருந்த அஞ்சி எல்லோரும் ஓடி ஒளிய, சிவபெருமான் மட்டும் தானே முழு விஷத்தையும் அருந்தினார். எனவே அவருக்கு நீலகண்டன் என்ற ஒரு பெயரும் உண்டு என்பது ஒரு புராண வரலாறு.

4. கரிய வானத்தின் தன்மை

நஞ்சினின், நளிர்நெடுங்கடலின், நங்கையர்
அஞ்சன நயனத்தின், அவிழ்ந்த கூந்தலின்,
வஞ்சனை அரக்கர்தம் வடிவின், செய்கையின்,
நெஞ்சினின், இருண்டது, நீலவானமே. (4257)

(நளிர் - குளிர்ந்த; அஞ்சனம் - மை; நயனம் - கண்கள்)

இயற்கையிலேயே நீலநிறமுடைய ஆகாயம் இப்போது கரிய மேகங்கள் சூழ்ந்து கொண்டதால் கரிய வானம் ஆயிற்று. அது எவ்வெவற்றைப் போலக்

கரியதாய் இருந்தது? நஞ்சைப்போல; குளிர்ந்த பெரிய கடலைப் போல; மகளிரின் மை பூசப்பெற்ற கண்களைப் போல; அவர்களின் அவிழ்ந்து தொங்கிய கூந்தலைப் போல, வஞ்சனையும் மாயச்செயலும் உடைய அரக்கர்களின் உருவத்தைப்போல; அவர்களது கொடிய செயலைப்போல; அவர்களது இருண்ட நெஞ்சைப்போல, வானம் இருண்டிருந்தது.

நீலவானம் இருண்டிருந்தது என்பதற்கு ஏழு உவமைகள் கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக. அதுவும் இடமறிந்து கூறியதை எண்ணுக. இராமன் தனித்திருக்கும்போது இவை ஒவ்வொன்றும் சீதையின் நினைப்பை ஊட்டுவதாக அமைவதைக் காண்க. அரக்கர்கள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் கரியவர்கள் என்று கூறிய நயம் உணர்க. இதைத்தவிர இதே கருமைக்குச் சேக்கிழார் தன் பெரியபுராணத்தில் கூறும் உவமைகளையும் நோக்குக. "பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும், வஞ்சமாக்கள் வல்வினையும், பரன் அஞ் செழுத்தும் உணரா அறிவிலோர் நெஞ்சும் என்ன, இருண்டது நீண்டவான்" என்பது பாடல் பகுதி.

இவ்வாறு ஒரே பொருளுக்கோ, அல்லது நிகழ்ச்சிக்கோ பல உவமைகளை அடுக்கிக் கூறுதல் கம்பனுக்குக் கைவந்த கலை.

5. மின்னல் ஒளிர்ந்தது

நாட் களின், நளிர்கடல் நாரம் நாஉற
வேட்கையின் பருகிய மேகம், மின்னுவ,
வாட்கைகள் மயங்கிய செருவின், வார்மதப்
பூட்கைகள் நிறத்த புண்திறப்ப போன்றவே. (4258)

(நாரம் - நீர்; வேட்கை - விருப்பம்; நளிர் - குளிர்ந்த; உற - பொருந்த; மயங்குதல் - கலத்தல்; செரு - போர்; வார் - ஒழுகுகின்ற; பூட்கை - யானை)

நாட்பட்ட கள்ளை விருப்புடன் பருகுவது போல, குளிர்ந்த கடலிலுள்ள நீரைத் தம் நாக்குப் பொருந்த, விருப்பத்துடன் பருகுகின்றது மேகம். அதில் எழும் மின்னல் எப்படி இருந்தது? தம்கைகளில் வாட்படையினைத் தாங்கி ஒன்றோடோன்று தாக்கிச் செய்யும் போரில், மதம் கொண்ட யானைகள் தங்கள் உடலில் அவ்வாட் படைகளினால் ஏற்பட்ட புண்களில் இருந்து சிவந்த இரத்தம் வெளிப்பட்டுத் தோன்றுவது போன்றிருந்தன.

கரியமேகத்தில் தோன்றிய ஒளிபொருந்திய மின்னல், போரில் அடிபட்டு இரத்தம் வெளிப்பட்டுத் தோன்றும் யானையின் புண்களுக்கு உவமை - இங்கே நாட்களின் என்பதற்கு நாட்பட்ட கள் என்று கொருள் கொண்டோம். ஏனெனில் அதுதான் மிகக்கருப்பு நிறம் வாய்ந்தது. இதைப் புறநானூறு கூறுகிறது கேளுங்கள். "தேள்கடுப்பு அன்ன நாள்படு தேறல்" என்பது புறநானூறு. எனினும் நாள் என்ற சொல்லுக்குப் புதிய, அன்றைய என்ற பொருளும் உண்டு. எனவே அன்றைக்கு எடுத்த புதிய கள் என்று பொருள் கூறுவதும் உண்டு. பொதுவாக விலங்குகள்தான் நீரையோ, பாலையோ நா கொண்டு தோய்த்துக்

குடிக்கும். இங்கே மேகங்கள் நீரில் படிந்து நீர் முகப்பதை, "நளிர் கடல் நாரம் நா உற வேட்கையின் பருகிய மேகம்" என்றது காண்க. புழைக்கை என்பது துவாரம், தொளை என்று பொருள். தொளையுள்ள துதிக்கையை உடையதால் யானைக்குப் புழைக்கை என்பது காரணப்பெயர். அது இங்கே பூட்கை என எதுகை நோக்கித் திரிந்தது. கரிய மேகத்தின் இடையிடையே தோன்றும் மின்னல்கள், கரிய யானையின் உடம்பில் தோன்றிய வாள்பட்ட புண்கள் போல விளங்குகின்றன என்பதாம். மின்னல் கரிய மேகத்தைக் கிழித்துக்கொண்டு தோன்றுவது போல, இப்புண்கள், கரிய யானையின் தோலைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்டுத் தோன்றின என்பதுவுமாம்.

6. இடிமுழக்கம்

நீல்நிறப் பெருங்கரி நிரைத்த நீர்த்து என
சூல் நிற முகிற்குலம் துவன்றி, சூழ்திரை
மால்நிற நெடுங்கடல் வாரி, மூரிவான்
மேல் நிறைந்துளது என, முழக்கம் மிக்கதே. (4259)

(நிரை - வரிசை; நீர்த்து - தன்மை; சூல் - கரு; சூல் நிறம் - கரியநிறம்; துவன்றி - நெருங்கி; மூரி - வலிய \ பெரிய; குலம் - கூட்டம்; மால் - கரிய)

நீண்ட கரிய நிறமுள்ள மேகக் கூட்டங்கள் ஒன்றோடொன்று நெருங்கி முழக்கமிடுவது, கரியநிறமுடைய பெரிய யானைகள் ஆகாயத்தில் வரிசையாக நின்ற தன்மை போலவும், அலைகளையுடைய கரிய பெரிய கடல், விரிந்த ஆகாயத்தின் மேல் சென்று வரிசையாக இருந்து முழக்கம் செய்ததைப் போலவும் இருந்தது.

நீலம் கருமையுமாம்; கரிய நெருங்கிய மேகக்கூட்டங்கள், கரிய யானை களை விண்ணில் வரிசையாக நிறுத்தி வைத்தாற் போன்று காட்சியளித்தன. அம்மேகக்கூட்டங்கள் எழுப்பிய இடி முழக்கம், கடலே விண்ணில் நின்று முழங்குவது போல இருந்தது என்பதாம்.

7. மின்னல்கள்

அரிப்பெரும் பெயரவன் முதலினோர் அணி
விரிப்பவும் ஒத்தன; வெற்பு மீது தீ,
எரிப்பவும் ஒத்தன; ஏசுஇல் ஆசைகள்
சிரிப்பவும் ஒத்தன; தெரிந்த மின்எலாம். (4260)

(தெரிந்த - காணப்படுகின்ற; அரி - இந்திரனுமாம்; வெற்பு - மலை; ஏசுஇல் - குற்றமில்லாத; ஆசைகள்- திசைகள்; பெரும்பெயர் - புகழ்பெற்ற பெயர் \ பிரசித்தம் \ உயர்ந்த)

ஆகாயத்தில் காணப்பட்ட மின்னல்கள் எல்லாம், அரி என்ற உயர்ந்த புகழ்பெற்ற இந்திரன் முதலிய தேவர்கள் அணிந்திருக்கின்ற அணிகலன்கள் விரிவதனால் விட்டுவிட்டு ஒளிவீசுவன போன்று இருந்தன; ஒருமலையின் மீது,

நெருப்புப் பற்றித் தீச்சுடர் எரிவது போன்றும் இருந்தன; குற்றமற்ற திசைகள் எல்லாம் தங்களுக்குள் மகிழ்ந்து சிரிப்பதையும் ஒத்திருந்தன.

மின்னலுக்கு இந்திரன் அணிகலன்களும், மலைத்தீயும், திசைகளின் மகிழ்ச்சியும் ஒப்பு. அரி என்ற சொல்லுக்கு, திருமால், இந்திரன், அக்னி, இயமன், சந்திரன், சிவன், சூரியன் என்று பல பொருள்கள் உண்டு. இந்திரனுக்கு மேகமே வாகனம். எனவே இங்கே இந்திரன் எனக் கொள்ளப்பட்டது. மலைகளில் உள்ள மூங்கில் போன்ற மரங்கள், யாரும் தீமூட்டாமலேயே, இயல்பாகவே தங்களுக்குள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வதாலேயே, எரியும் தன்மையுடையவை என்பதை உணர்க. திசைகள் எட்டும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் இருந்தாலும் தங்களுக்குள் பகைமை பாராட்டாது மகிழ்ச்சியில் சிரித்துக்கொள்ளும் போது அவற்றின் பற்களின் ஒளிபோல் விளங்கியது மின்னல் என்பதாம். மின்னல் எதிர்எதிர்த் திசைகளில் மாறிமாறித் தோன்றும் என்பதும் குறிப்பு.

8. மாதிரக் கருமகன், மாரிக்கார் மழை
யாதினும் இருண்ட விண் இருந்தைக் குப்பையின்
கூதிர் வெங்கால் நெடுந்துருத்திக் கோள் அமைத்து,
ஊது வெங்கனல் உமிழ் உலையும் ஒத்தவே. (4261)

(மாதிரம் - திசைகள்; இருந்தை - கரி; குப்பை - குவியல்; கோள் - வலிமை; கரும்பொன் - இரும்பு ; கருமன் - கொல்லன் \ கருமான்; கூதிர் - குளிர்; உமிழ்தல் - வெளிப்படுத்துதல்)

எல்லாப் பொருள்களிலும் மிகவும் கறுத்ததான ஆகாயம், திசைகள் என்னும் கொல்லன், மழைக்காலத்து மேகத்தில் உள்ள கரியின் குவியலில், கொடிய குளிருடைய வாடைக்காற்றைப் பெரிய துருத்தியின் வலிமையினால் ஊதுகின்ற போது எழுகின்ற வெம்மையான தீச்சுடர் வெளிப்படுத்துகின்ற உலைக் களத்தைப் போன்றிருந்தது.

"கனல் உமிழ்உலை" என்பதை உலை உமிழ்கனல் எனக் கொள்ளுதல் பொருந்தும். திசைகளைக் கருமானாகவும் குளிர்காற்றைத் துருத்தியாகவும் ஆகாயத்தைக் கரிக்குவியலாகவும், தீச்சுடரை மின்னலாகவும் கூறினார் என்க. துருத்தி என்பது உலைக்களத்தில் காற்றை உண்டாக்கப் பயன்படுத்தப்படும் ஒரு தோல் கருவி.

9. சூடினமணிமுடித் துகள்இல் விஞ்சையர்
கூடுஉறை நீக்கிய குருதி வாட்களும்,
ஆடவர் பெயர்தொறும் ஆசையானையின்
ஓடைகள் ஒளி பிறழ்வனவும் ஒத்தவே. (4262)

(துகள் - குற்றம்; விஞ்சையர் - வித்தியாதாரர்கள்; கூடு - உறை; ஓடைகள் - நெற்றிப் பட்டங்கள்; பிறழ்வன - பிரள்வன \ வீசுவன; ஆசை - திசை; ஆடவர் - திசைக் காவலர் \ திக்குப் பாலகர்கள்)

இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மகுடங்களைச் சூடியவர்களும், குற்றமே இல்லாதவர்களுமான வித்தியாதரர் என்பவர்கள், போர் செய்வதன் பொருட்டுத் தங்கள் உறையினின்றும் உருவி எடுத்த, பகைவர்களின் இரத்தம் தோய்ந்த வாட்படைகள் ஒளிவீசுவதைப் போலவும், எட்டுத்திசைகளையும் காவல் புரிகின்ற திக்குப்பாலகர்கள் தம் இடத்தைவிட்டு அசையும் போது, அவர்கள் அமர்ந் திருக்கின்ற எட்டுத் திசையானைகளின் நெற்றிப்பட்டங்கள் பரப்பும் ஒளியைப் போலவும், வானத்தில் தோன்றிய மின்னல்கள் விளங்கின.

வானில் தோன்றுகின்ற மின்னலின் ஒளி விஞ்சையர்கள் வாட்கள் அசைவன போலவும், திசையானைகளின் நெற்றிப்பட்டம் அசைவன போலவும் ஒளிவிட்டுப் பிரகாசித்தன என்பதாம். விஞ்சையர் என்பவர் பதினெட்டுத் தேவ சாதியினருள் ஒருவகையினர். அவர்கள் உடம்பு ஒளியுடன் விளங்குவதால் "துகள் இல் விஞ்சையர்" என்றார். ஆடவர் என்பது திக்குபாலகர்களைக் குறிக்கும். எட்டுத்திக்குகளும் அவற்றின் காவலர்களும் அவர்கள் கொண்டுள்ள எட்டு யானைகளின் பெயர்களும் இங்கு தரப்பட்டிருக்கின்றன.

கிழக்கு - இந்திரன் - ஐராவதம்; தென்கிழக்கு - அக்கினி - புண்டரீகம்; தெற்கு - இயமன் - வாமனம்; தென்மேற்கு - நிருதி - குமுதம்; மேற்கு - வருணன் - அஞ்சனம்; வடமேற்கு - வாயு - புஷ்பதந்தம்; வடக்கு - குபேரன் - சார்வபௌமம்; வடகிழக்கு - ஈசானன் - சுப்பிரதீபம் என்பனவாம்.

10. பிரிந்து உறை மகளிரும், பிலத்த பாந்தளும்,
எரிந்து உயிர் நடுங்கிட, இரவியின் கதிர்
அரிந்தன ஆம் என, அசனி நா என,
விரிந்தன, திசைதொறும் மிசையின் மின்எலாம். (4263)

(பிலம் - பாழி \ குகை \ அணை \ புற்று; பாந்தள் - பாம்பு; மிசை - மேலே \ ஆகாயத்தில்; இரவி - சூரியன்; கதிர் - கிரணங்கள்; அசனி - இடி; அரிதல் - அறுத்தல்)

வானத்தின் மேலே தெரிகின்ற மின்னல்கள் எல்லாம், தலைவனைப் பிரிந்து வாழும் தலைவியைப் போவும், புற்றில் வாழும் பாம்பினைப் போலவும், உடம்பு வெதும்பி, உயிர்நடுங்கிடவும், சூரியனின் கிரணங்களை அறுத்து வைத்தாற் போலும், இடியின் நாக்குப் போலவும், விரிந்து, எல்லாத் திசைகளிலும் பரவி இருந்தன.

முற்காலத்தில் தலைவன் பொருள் காரணமாகவோ, போர் காரணமாகவோ, தலைவியைப் பிரிந்து போதலும், கார்காலத்தில் திரும்பி வருவேன் என்று சொல்லிச் செல்லுதலும், அவ்வாறு குறித்த காலத்தில் வாராதபோது, தலைவி துயர் உறுதலும், தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருப்பது நாம் அறிந்ததே. அப்போது அவர்கள் துயர் உற்று உடம்பு வெதும்பி உயிர்நடுங்குவதை இங்கே பாம்பின் தன்மைக்கு உவமை கூறினார் என்க.

பாம்புகள் இடியோசைக்கு நடுங்கும் என்பது நாம் அறிந்த ஒன்று. பாம்புகள் மின்னலுக்கும் நடுங்கும் என்பதாம். பொதுவாக மின்னலும் இடியும் ஏக

காலத்தில் நிகழ்வனவே. நெருப்புக்கு நாக்கு உண்டு என்பது கவிமரபு. நெருப்புக்கு "சப்தஜிஹ்வா" என்பது வடசொல். இதற்கு "எழுநா" என்பது தமிழ்ச் சொல். அதுபோலவே நெருப்புடன் தொடர்புடைய இடிக்கும் நாக்கு உண்டு என்கிறான் கவிஞன்.

11. ஊதைக்காற்று

எண்வகை நாகங்கள், திசைகள் எட்டையும்,
நண்ணின, நா வளைத்தனைய மின்நக;
கண்ணுதல் மிடறு, எனக் கருகிக் கார் விசும்பு
உள்நிறை உயிர்ப்பு என ஊதை ஊதின. (4264)

(கண்ணுதல் - நுதல் கண்ணன் \ சிவபெருமான்; நண்ணுதல் - அடைதல்; உயிர்ப்பு - மூச்சுக்காற்று; ஊதை - வாடைக்காற்று; விசும்பு - ஆகாயம் \ மேகம்)

எட்டுவகையான பாம்புகளும், தாம் இருக்கும் பாதாளத்தைவிட்டு, பூமியின்மேல் வந்து எட்டுத்திசைகளையும் அடைந்து, தம் நாக்குகளை மின்னல் ஒளிவீசினாற் போல வளைத்தன. நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின் கழுத்துப்போலக் கரியநிறம் கொண்ட மேகம், தன் உள்ளிருக்கும் மூச்சுக்காற்றைப்போல், வாடைக்காற்றை எங்கும் வீசச் செய்தது.

எட்டுவகை நாகங்களாவன - வாசுகி, அனந்தன், தட்சகன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகா பதுமன், கார்க்கோடகன் என்பன. இவை பூமியின் நடுவிலிருந்து பூமியைத் தாங்கும் ஆதிசேஷன் உடன் உறைவன. இவை காசிப முனிவரின் மனைவியான கத்துரு என்பவளிடம் இருந்து தோன்றிய தெய்வத்தன்மை மிக்க பாம்புகள் என்பர். இந்த எட்டுவகைப் பாம்புகளின் நாக்குப்போன்றும் மின்னல்கள் மின்னின; அந்த நாகங்களின் மூச்சுக் காற்றுப்போல வாடைக்காற்று வீசியது என்பதாம்.

12. தலைமையும் கீழ்மையும் தவிர்தல் இன்றியே
மலையினும் மரத்தினும் மற்றும் முற்றினும்,
விலை நினைந்து உள வழி விலங்கும் வேசையர்
உலைவுறும் மனம் என, உலாய ஊதையே. (4265)

(ஊதை - வாடைக்காற்று; தவிர்தல் - விட்டுவிடாமல்; முற்றிலும் - எல்லாவற்றிலும்; உலைவுறுதல் - சுழலுதல்; வேசையர் - பரத்தையர் \ விலைமாதர் \ பொருட்பெண்டிர் \ பொதுமகளிர் \ வரைவின் மகளிர்; விலங்குதல் - ஓடிச்செல்லுதல்; உலாவுதல் - வீசுதல்; தலைமை - உயர்ந்த இடம்; கீழ்மை - தாழ்ந்த இடம்)

அங்கு வீசிய ஊதைக்காற்று, உயர்ந்த இடம், தாழ்ந்த இடம் என்று வேறுபடுத்தி எதையும் தவிர்க்காது, எல்லா இடங்களிலும், உயர்ந்த மலையின் மீதும், தாழ்ந்த மரங்களின் மீதும், மற்றும் செடி, கொடிகள் முதலிய எல்லாவற்றின் மீதும் வீசியது. இது எதுபோல இருக்கிறது என்றால், ஒரு வேசி, தான்தரும் சுகத்திற்குத் தகுந்த பொருளை எவர் தருகின்றாரோ, அவர்

உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று கருதாது, மிகுதியான பொருள் கொடுப்பவர் எவரோ அவரை நாடி ஒடிச்செல்லுகின்ற ஒருநிலையில்லாத, சுழன்று கொண்டேயிருக்கும் மனம் படைத்த வேசியர் போல், ஊதைக்காற்று எங்கும் சுழன்று வீசியது.

மேடு, பள்ளம் என்று பார்க்காது, எல்லா இடங்களிலும் சென்று சுழன்று வீசும் ஊதைக்காற்றுக்கு, தக்கார், தகவிலர் எனக்கருதாது பொருள் மிகுதி கொடுப்போர் எல்லோரிடமும் சென்று தன் உடலை விலைக்கு விற்கும் பொதுப்பெண்டிரின் நிலையற்றுச் சுழல்கின்ற மனம் உவமை.

13. அழுங்குறு மகளிர், தம் அன்பர்த் தீர்ந்தவர்,
புழுங்குறு புணர் முலை கொதிப்பப்புக்கு உலாய்,
கொழுங் குறைத் தசை என ஈர்ந்து கொண்டு, அது
விழுங்குறு பேய்என, வாடை வீங்கிற்றே. (4266)

(தீர்தல் - பிரிதல்; அழுங்குதல் - வருந்துதல்; புழுங்குதல் - வெதும்புதல்; புணர் - நெருங்கிய; கொழும் - செழுமையான; ஈர்தல் - அரிதல்; விலங்குதல் - வளர்தல்; புக்கு - புகுந்து \ தாக்கி; உலாவுதல் - வீசுதல்; தசை - மாமிசத்துண்டு)

வாடைக்காற்றானது, தம் தலைவரைப் பிரிந்து தலைவியர் வருத்தமுற்று, வெதும்பிக் கொண்டிருக்கும்போது, அவர்களுடைய ஒன்றோடொன்று நெருங்கிய இரு கொங்கைகளுள்ளும் புகுந்து அவற்றைத் தாக்கி, அவை செழுமையான மாமிசத் துண்டங்கள் எனக் கருதி, அவற்றை அறுத்து உண்ண விழையும் பேயினைப் போன்று, ஓங்கி வளர்ந்து வீசியது.

தலைவரைப் பிரிந்த தலைவியரின் கொங்கைகள் வெம்மையுற்றிருப்பது இயல்பு. அச்சமயத்தில் இவ்வாடைக்காற்று அங்கே புகுந்து கொதிப்பை மிகுதிப் படுத்தும் என்பதும், பேய்கள் அவற்றைத் தசைத் துண்டங்கள் எனக்கருதி. அரிந்து உண்ண விழையும் என்பதுவுமாம்.

14. ஆர்த்து எழு துகள் விசும்பு அடைத்தலானும், பின்
கூர்த்து எழு வாள் எனப் பிறழும் கொட்பினும்,
தார்ப்பெரும் பணையின் விண் தழங்கு காரினும்,
போர்ப்பெரும் களம் எனப் பொலிந்தது உம்பரே. (4267)

(துகள் - புழுதி; விசும்பு - ஆகாயம்; கூர்த்து - கூர்மையாக; கொட்பு - சுழற்சி; பணை - முரசங்கள்; விண் - மேகம்; தழங்குதல் - ஒலித்தல்; தா - வலிமை; உம்பர் - ஆகாயம்; பொலிதல் - விளங்குதல்; பிறழ்தல் - புரளுதல்; கார் - மேகம்)

ஊதைக்காற்று ஓங்கிவீசுவதால் ஆரவாரித்து எழுந்த புழுதி, ஆகாயத்தைச் சென்று மூடிக்கொண்டதாலும், மின்னல்கள் கூர்மையான வாட்படை போல ஒளி விட்டுப் பிரகாசிக்கும் சுழற்சியினாலும், மாலை அணியப்பெற்ற முரசங்கள் மேகத்தில் இடி முழங்குவதைப்போல ஒலிக்கின்ற தன்மையாலும், ஆகாயம், பெரிய போர்க்களம் போலக் காணப்பட்டது.

போர்க்களத்தில் வீரர்கள் நடந்து செல்லும்போது அவர்கள் காலடித் துகள்கள் எங்கும் பரவி ஆகாயத்தை மறைக்கும். அவர்கள் தம் வாட்படையை வீசிக் கொண்டு நடக்கும் போது அவை ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காகப் போர் முரசங்கள் ஒலி எழுப்பிக் கொண்டே செல்லும். இது ஒரு போர்க்களக் காட்சி. இதுபோலவே இப்போது ஊதைக்காற்று வீசுவதால் எழுந்த புழுதி மேலெழுந்து ஆகாயத்தை மறைத்துக் கொண்டது; மின்னல்கள் விட்டுவிட்டுப் பிரகாசிப்பதால் வாட்படையின் ஒளியை ஒத்திருந்தது; இடி முழக்கம், போர்முரசங்கள் ஒலிப்பதுபோல் இருந்தது. ஊதைக்காற்றால் எழுந்த புழுதியும், மின்னலும், இடியும், போர்க்களத்தில் எழும் புழுதிக்கும் வாட்படைக்கும், முரசொலிக்கும் உவமைகள்.

15. மலைமேல் மழை பொழிதல்

இன்நகைச் சனகியைப் பிரிந்த ஏந்தல்மேல்,
மன்மதன் மலர்க்கணை வழங்கினான் எனப்
பொன் நெடுங்குன்றின் மேல் பொழிந்த தாரைகள்
மின்னொடும் துவன்றின மேக ராசியே. (4268)

(வழங்குதல் - எய்தல்; துவன்றின - நெருங்கியுள்ள; ராசி - கூட்டம்; ஏந்தல் - பெருமையில் சிறந்தவன் \ இராமன்; பொன் - அழகிய)

இனிய புன்முறுவலையுடைய சீதாதேவியைப் பிரிந்து துயருற்றிருக்கும், பெருமையில் சிறந்தவனாகிய இராமன் மேல், மன்மதன் தன் மலரம்புகளைச் செலுத்தியதுபோல, மின்னலோடு நெருங்கிய மேகக்கூட்டங்கள், இராமன் தங்கியிருந்த அழகிய பெரிய பிரசிரவண மலையின் மீது, மழைத் தாரைகளைப் பொழிந்தன.

மன்மதன் மலர்க்கணைகளுக்கு, மேகக் கூட்டத்தின் மழைத்தாரைகள் உவமை. தலைவியைப் பிரிந்த தலைவன் மீது மன்மதன் மலர்க்கணை தொடுப்பது மரபு. மன்மதனுக்கு ஐங்கணைகள் உண்டு. அவை தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பனவாம். அளக்கலாகா அளவு, பெருமை. துளக்கலாகா நிலை, தோற்றம் இவற்றால் மலை, இராமபிரானுக்கு உவமை. பொதுவாக மழை, நிலத்தைவிட, மலைகளிலேயே அதிகம் பொழிகிறது என்பது ஒரு அறிவியல் குறிப்பு. இங்கே அது சுட்டப் பெற்றிருப்பதை உணர்க.

16. கல்லிடைப்படும் துளித்திவலை, கார்இடு
வில்லிடைச் சரம் என, விசையின் வீழ்ந்தன;
செல்லிடைப் பிறந்த செங்கனல்கள் சிந்தின,
அல்லிடை மணி சிறந்து அழல் இயற்றல் போல்; (4269)

(கல் - மலை; துளி - மழைத்தாரை; திவலை - நீர்த்துளிகள்; கார் - மேகம்; சரம் - அம்பு; விசை - வேகம்; செல் - மேகம் \ இடி; அல் - இரவு; அழல் - ஒளி \ அக்கினிச் சுவாலை; இயற்றல் - வீசுதல்; வில் - இந்திரவில்; மணி - இரத்தினம், மாணிக்கம்)

அவ்வாறு அம்மலையில் பொழிந்த மழைத் தாரையின் நீர்த்துளிகள், மேகத்தில் உள்ள இந்திரவில் செலுத்துகின்ற அம்பினைப் போல, வேகமாய் விழுந்தன; மேகத்திலிருந்து தோன்றிய இடி என்னும் சிவந்த நெருப்புத் திரள்கள், இரவில் அம்மலையில் உள்ள இரத்தினங்கள் சிறந்து ஒளிவீசித் திகழ்வதுபோலச் சிந்தின.

இப்போது மேகம் மழையையும் பெய்தது, இடியாகிய நெருப்பையும் சிந்தியது என்பதால் ஒன்றுக்கொன்று முரண்பட்ட மழையும், நெருப்பும் ஏககாலத்தில் மலையின் மீது விழுந்தன என்பதாம். இங்கே ஒரு அருமையான செய்தி. நெருப்பு, புகை, நீர், காற்று ஆகிய நான்கு பொருள்களும் சேர்ந்த தொகுதியே மேகம் என்பதை நினைவிற் கொள்க. "தூமமும் எமது; பவனனும் எமது, தோழன்; அத்தோயமும் எமதே; யாமும் இங்கு இவற்றோடு ஒன்றுதல் ஒழிதும்; ஈரிரு பொருள்களும் பிரிந்தால் மாமுகில் எனும் பேர் எங்குஉளது?" என்பது வில்லிபாரதம்.

17. மள்ளர்கள், மறுபடை மான யானைமேல்
வெள்ளிவேல் எறிவன போன்ற மேகங்கள்;
தள்ளரும் துளிபடத் தகர்ந்து சாய்கிரி
புள்ளி வெங்கடகரி புரள்வ போன்றவே. (4270)

(மள்ளர்கள் - வீரர்கள்; மறுபடை - பகைவர் படை; மான - பெருமைபெற்ற; தகர்ந்து - சிதைத்து; கடம் - மதம்; கிரி - பாறைகள்)

மேகங்கள் விசையுடன் பொழிகின்ற மழைத்தாரைகள், வீரர்கள், பகைவரின் பெருமைவாய்ந்த யானைப்படையின் மேல் வெள்ளிய வேற்படையைச் செலுத்துவது போன்று இருந்தன. விலக்குதற்கரிய அம்மழைத் தாரைகள், விசையுடன் பட்டதால் அங்குள்ள சிறிய கற்பாறைகள் பிளவுபட்டுச் சாய்தலுற்றன, இது முகத்தில் செம்புள்ளிகள் உள்ள கொடிய, மதம் கொண்ட யானைகள் கீழே விழுந்து புரள்வதைப் போன்றிருக்கின்றது.

மள்ளர்கள் மேகங்களுக்கும், யானைகள் சிறுபாறைகளுக்கும், வேற்படை மழைத்தாரைக்கும் உவமை. யானையின் முகத்தில் செம்புள்ளிகள் இருப்பது உத்தம யானைக்குரிய இலக்கணம் என்க. யானைகளின் மீது வேற்படையைச் செலுத்துவது பண்டைய போர்முறை என்பது தெரியவருகிறது.

18. வான்இடு தனு, நெடுங்கருப்பு வில்; மழை
மீன்இடு கொடியவன் பகழி வீழ்துளி;
தான்நெடும் சார்துணை பிரிந்த தன்மையர்,
ஊனுடை உடம்பு எலாம் உகுத்தது ஒத்ததே. (4271)

(மழை - மேகம்; தனு - வில்; கருப்பு - கரும்பு; பகழி -மலரம்புகள்; ஊன் - தசை; உகுத்தது - எய்தது)

மீனைத் தன் கொடியாகக் கொண்ட மன்மதன், வானில் உள்ள இந்திர வில்லையே தன் நீண்ட கரும்பு வில்லாகவும், அம்மேகங்கள் பொழிகின்ற

மழைத்தாரையையே அம்பாகவும் கொண்டு, நெடுங்காலம் ஒன்றியிருந்தோர், பிரிந்த தன்மையைப் போல, உயிரற்ற வெறும் தசையோடு கூடிய உடம்பெல்லாம் எய்தது போன்று இருந்தது.

மீன்கொடியை உடைய மன்மதனின் கரும்புவில் பட்டவுடன் பிரிவுத் துயரில் இருப்பவர்கள் வருந்துவது போல், வானத்திலுள்ள மேகங்களிலிருந்து பொழிந்த மழைத்துளிகள் பட்டவுடன் நெடுநாள் இணைந்திருந்து பிரிந்தவர்கள் உயிரற்ற உடம்பு மட்டும் கொண்டவர்கள் வருந்துவதை ஒத்திருந்தது என்பதாம். மன்மதன் கரும்புக் கணைக்கு மழைத்தாரைகள் உவமை. "நெடுஞ்சார் துணை" என்பது ஏழ்பிறப்பும் தொடர்ந்து வருகின்ற உறவு பற்றிக் கூறியது என்க. "இம்மை மாறி மறுமையாயினும், நீர் ஆகியர் எம் கணவனே யான் ஆகியர் நின் நெஞ்சுநேர்பவளே" என்பது குறுந்தொகை.

19. தீர்த்தனும் கவிகளும் செறிந்து, நம்பகை
பேர்த்தனர் இனிஎனப்பேசி, வானவர்
ஆர்த்தென, ஆர்த்தன மேகம்; ஆய்மலர்
தூர்த்தன ஒத்தன துள்ளி வெள்ளமே. (4272)

(தீர்த்தன் - தூயவன்; கவி - குரங்கு; செறிதல் - நட்புப்பூணுதல்; பேர்த்தல் - ஒழித்தல்; வானவர் - தேவர்கள்; தூர்த்தல் - நிரப்புதல்; ஆய் - தெரிந்தெடுத்த \ அழகிய; துள்ளி வெள்ளம் - நீர்த்துளிகளின் பெருக்கம்)

"தூயவனான இராமனும், வானரங்களும் ஒன்றாக இணைந்து நட்புப் பூண்டதால், இனி நம் பகைவர்களான இராவணாதியர்கள் அழிந்தவரே ஆவர்" எனத் தேவர்கள் தங்களுக்குள் உரையாடிக் கொண்டு ஆரவாரித்ததைப் போல ஆரவாரித்தன மேகங்கள்; அவர்கள் அம்மகிழ்ச்சியில் தெரிந்தெடுக்கப்பட்ட அழகிய கற்பக மலர்களை இராமன் மீதும் சுக்கிரீவன் முதலிய குரங்குகளின் மீதும் நிரம்பப் பொழிந்தனர். அது மேகங்கள் பொழிந்த மழைத்தாரை போன்று இருந்தது.

20. வண்ணவில் கரதலத்து அரக்கன், மண்ணொடு
விண்ணிடைக் கடிது கொண்டு ஏகும் வேலையில்,
பெண்ணினுக்கு அருங்கலம் அனைய பெய்வளை
கண் எனப் பொழிந்தது காலமாரியே. (4273)

(வண்ண - அழகிய; கரதலம் - கை; அரக்கன் - இராவணன்; மண் - பூமி; கடிது - விரைந்து; அருங்கலம் - அரியஅணிகலன்; காலமாரி - கார்காலத்து மழை; பெய்தல் - அணிதல்; வளை - வளையல்கள்)

அழகிய விற்படையையும் வாட்படையையும் தன் கையில் ஏந்தியிருந்த அரக்கனாகிய இராவணன் பூமியோடு ஒரு யோசனை தூரம் பெயர்த்தெடுத்துக் கொண்டு ஆகாயம் மார்க்கமாக விரைவாகச் செல்லும் வேளையில், உலகிலுள்ள பெண்களுக்கெல்லாம் ஒரு அருமையான அணிகலனாக விளங்குகின்ற வளையல்கள் அணிந்த சீதாதேவியின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீரைப் போன்று, இந்தக் கார்காலத்து மழை பெய்தது.

இராவணன் வில்லைக் கைக்கொண்டிருந்தாலும், அவன் சந்திரகாசம் என்னும் வேற்படையைக் கொண்டே சடாயுவின் சிறகை அரிந்தான் என்பதாம். இங்கே வில்லை ஒரு அழகிய காட்சிப் பொருளாகவே இராவணன் கைக் கொண்டிருந்தான் என்பதை "வண்ணவில் கரதலத்து அரக்கன்" என்றான் என்க. சீதாதேவியை இராவணன் கையினால் தொட்டு எடுத்துக் கொண்டு போக வில்லை என்பதை இடம்கிடைத்த பொழுதெல்லாம் வலியுறுத்துவான் கம்பன், அதை வற்புறுத்தும் பான்மையில் தான் இங்கே "மண்ணொடு விண்ணிடை" என்றான் என்க.

இராம இலக்குவர் தன்னைப் பின்தொடர்ந்து வரக்கூடும் என இராவணன் எதிர்பார்த்தான். எனவே, "கடிது கொண்டு ஏகினான்" என்றார். சீதையைக் கம்பன் பல இடங்களிலும் "பெண்ணினுக்கு அருங்கலம்" என்ற பொருள்படப் பெருமைப் படுத்தியிருப்பதை உணர்க. பொதுவாகக் கார்கால மழையின் பெருக்கே மிகுதியாக இருக்கும். ஆனால் இங்கே கம்பன் அதைக் காட்டிலும், "பெய்வளைக் கண் எனக் காலமாரி பொழிந்தது" எனக் கூறுவது ஒரு நயம். காப்பியத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றையே உவமையாக எடுத்துக் கையாண்டிருப்பதையும் நினைவிற் கொள்க.

21. பரம் சுடர்ப் பண்ணவன், பண்டு, விண்தொடர்
புரம் சுட விடு சரம் புரையும் மின்இனம்;
அரம் சுடப்பொறி நிமிர் அயிலின், ஆடவர்
உரம் சுட உளைந்தனர், பிரிந்துளோர் எலாம். (4274)

(பரம் - மேலான; சுடர் - சோதி; பரம்சுடர் - பரஞ்சோதி; பண்ணவன் - தேவன், கடவுள் \ சிவபெருமான்; சுட - எரிப்பதற்காக; புரையும் - போன்ற; உரம் - வலிமை, திண்மை \ மார்புமாம்; சுடுதல் - அராவுதலுமாம்; பொறி - ஒளி; அயில் - வேற்படை; ஆடவர் - வீரர்கள்; உளைதல் - வருந்துதல்)

மேலான சோதி வடிவாகிய சிவபெருமான், முன்பு, விண்ணிலே இயங்கித் திரிந்த மூன்று கோட்டைகளையும் சுட்டெரிப்பதற்காகத் தான் தொடுத்து எய்த அம்பைப் போன்று மின்னல்கள் விளங்கின. அரத்தால் அராவப்பட்ட, ஒளிமிகுந்த, நிமிர்ந்த, வேற்படையால் வீரர்கள் தங்கள் மார்பும், வலிமையும் கெடுமாறு போல், தலைவியைப் பிரிந்திருந்த ஆடவர்கள் எல்லோரும் வருத்தமுற்று இருந்தனர்.

முன்பு திரிபுரம் எரிக்க, சிவபெருமான் எய்த அம்புகளின் கூர்மையான நுனிபோல ஒளிர்ந்த மின்னல்கள், அராவப்பட்ட வேற்படைபோல் தலைவர்கள் நெஞ்சத்தைச் சுட்டது என்பது கருத்து. "விண்தொடர் புரம்" என்றது முன்பு மூன்று அரக்கர்கள் மூன்று கோட்டைகளை வைத்துக் கொண்டு, விண்ணில் பறந்து திரிந்து தேவர்களுக்குத் துன்பம் விளைவித்த முப்புரத்தைக் குறிக்கும். இவ்வாறு வீரர்கள் வருந்தும் நிலையைப் "பாசறைப் புலம்பல்" என்று தொல்காப்பியம் கூறும்.

22. பொருள்தரப் போயினர்ப் பிரிந்த பொய் உடற்கு,
உருள்தரு தேர்மிசை உயிர்க்கொண்டு உய்த்தலால்,

மருள்தரு பிரிவின் நோய் மாசுணம் கெடக்
கருடனைப் பொருவின கால மாரியே. (4275)

(தருதல் - ஈட்டி வருதல்; மருள் - மயக்கம்; மாசுணம் - பெரிய பாம்பு; பொருவுதல் - ஒத்திருத்தல்; உருள் - சக்கரம்; உய்த்தல் - சேர்த்தல்)

பொருள் ஈட்டி வரும் பொருட்டு வேற்று நாடுகளுக்குச் சென்றதால், தலைவனைப் பிரிந்து உயிரற்ற உடலாய் வாழும் தலைவியர்க்கு, உருளும் தன்மையுள்ள சக்கரத்தை உடைய தேரின் மீது, தலைவன் கார்காலத்தில் திரும்பிவருவது, அவர்களுக்கு உயிரையே கொண்டு வந்தது போலாகும்; அதுபோல மயக்கம் தருகின்ற பிரிவுப் பிணியாகிய பெரிய பாம்பு அழியும்படி, வந்த கருடனைப் போன்று இருந்தது இக் கார்கால மழை.

பொருள்வயின் பிரிந்த தலைவர்கள் பொதுவாகக் கார்காலத்தில்தான் நாடு வந்து சேர்வர். எனவே கணவரைப் பிரிந்து உயிரற்ற உடலாய் இருந்த மனைவியர்க்குக் கார்காலம் என்பது அவர்கள் உயிரை அவர்களிடம் திருப்பிக் கொண்டுவந்து தருவது போன்றது ஆகும். பொதுவாக கருடனைப் பார்த்தாலே பாம்புக்குப் பயம். அது பாம்பை அழித்துவிடும் இயல்புடையது. அதுபோல பிரிவுத்துயர் என்னும் பிணியை அழிப்பதால் கார்காலம் கருடனுக்கு உவமை. பாம்பு, பிரிவுப்பிணிக்கு உவமை. "பொய்உடல்" என்றது ஒரு அரிய சொல்லாட்சி. அது உயிரற்ற, உணர்ச்சியற்ற உடலைக் குறிக்கும் என்க. "வாள்நுதல் மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" என்பது குறுந்தொகை. "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது ஔவையார் முதுமொழி; "புணரில் புணராது பொருளே; பொருள்வயின் பிரியில், புணராது புணர்வே" என்பது நற்றிணை.

23. முழங்கின முறை முறை மூரிமேகம்; நீர்
வழங்கின, மிடைவன மான யானைகள்,
தழங்கின பொழி மதத்திவலை தாழ்தரப்
புழுங்கின எதிர் எதிர் பொருவ போன்றவே. (4276)

(மூரி - வலிய \ பெரிய; மிடைதல் - நெருங்குதல்; தழங்குதல் - ஒலித்தல் \ பிளிறுதல்; திவலை - துளிகள்; தாழ்தருதல் - கீழேவிழுதல் \ சிந்துதல்; புழுங்குதல் - சினத்தல்; பொருதல் - போர்செய்தல்; முறைமுறை - மாறிமாறி; மான - பெரிய)

வலிய மேகங்கள் மாறிமாறி இடி முழக்கம் செய்து கொண்டு மழை நீரைப் பொழிவது, பெரிய யானைகள் ஒன்றையொன்று எதிர்த்துப் போரிடுவது போலவும், அப்போது அவை பிளிறிக்கொண்டு, தம் உறுப்புக்களிலிருந்து மதநீரைப் பெருக்கிச் சிந்திக் கொண்டு இருப்பதைப் போலவும் தோற்றமளித்தது.

மேகங்கள் இடிமுழக்கம் செய்யும்; யானைகள் பிளிறும்; மேகங்கள் மழைத்தாரைகளைப் பொழியும்; யானைகள் மதநீரைப் பெருக்கும்; மேகங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து நெருங்கும்; யானைகள் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செய்யும். இந்த மூன்று குணங்களாலும் மேகமும் யானையும் ஒப்பு. மேகம் யானைபோல் கருநிறத்ததாய், அவை பிளிறல்போல் இடிமுழக்கமிட்டு, அவை

மதம் சொரிவது போல் மழைபெய்து அவை சண்டையிடுவது போல்நெருங்கின என்பதாம். புழுங்குதல் என்பது உள்வேர்த்தல் என்ற பொருளில் சினத்தைக் குறித்தது.

24. விசைகொடு மாருதம் மறித்து வீசலால்,
அசைவுறு சிறுதுளி அப்பு மாரியின்,
இசையுற எய்வன இயைவவாய், இருந்
திசையோடு திசை, செருச்செய்தல் ஒத்தவே. (4277)

(மாருதம் - காற்று; விசை - வேகம்; மறித்து - மாறிமாறி; அப்பு - அம்பு; இரும் - பெரிய; செரு - போர்)

பலதிசைகளில் அடிக்கும் காற்றின் வேகத்தால், மேகம் மழைத்தாரையை எதிர்எதிரே பொழிவது, பெருந்திசைகள் தம்முள் ஒன்றுடன் ஒன்று அம்பு தொடுத்துப் போர் புரிந்து கொள்வதைப் போன்று இருந்தது.

அப்பு என்ற சொல் இங்கே நீர் என்றும், அம்பு என்றும் இருபொருள்படும். பொதுவாகத் திசை என்று சொன்னால் எட்டுத்திசையையும் குறிக்கும். பெருந்திசை என்பது முக்கிய திசைகளான கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளை மட்டுமே குறிக்கும் என்க.

25. மரங்கள் பூத்துத் தளிர்த்தல்

விழைவுறு பொருள்தரப் பிரிந்த வேந்தர் வந்து
உழைஉற, உயிர்உற உயிர்க்கும் மாதரின்
மழைஉற, மாமுகம் மலர்ந்து தோன்றின,
குழைஉறப் பொலிந்தன, உலவைக் கொம்பு எலாம். (4278)

(தர - ஈட்டிவர; வேந்தர் - தலைவர்; உழை - இடம்; உயிர்ப்பு - மூச்சு; உலவை - உலர்ந்த மரங்கள்; கொம்பு - கிளைகள்; மா - சிறந்த; முகம் - முகப்பு; குழை - காதணி \ தளிர்)

யாவராலும் விரும்பப் படுகின்ற பொருட்செல்வம் ஈட்டிவர வேண்டும் என்ற நோக்கத்தோடு வேற்று நாடுகளுக்குத் தம்மை விட்டுப்பிரிந்து சென்ற தம் கணவன்மார்கள், கார்காலம் வந்து சேர, அவர்களும் தம்மிடம் வந்து அடைவர் என்ற மகிழ்ச்சியால் முன்பு உயிரும் உணர்ச்சியுமற்ற பொய்யுடலுடன் இருந்த கற்பிற் சிறந்த மாதர், இப்பொழுது உயிரும் மூச்சும் பெற்று மகிழ்ச்சியோடு விளங்குதல்போல, மழை வந்ததும், முன்பு உலர்ந்து காய்ந்து போய் இருந்த மரக்கிளைகள் எல்லாம் தளிர்த்து, தம் முகப்பிடத்தில் மலர்களை மலரச்செய்து மகிழ்ச்சியோடு பொலிந்து விளங்கின.

முற்றும் துறந்த முனிவர்களாலும், மன்னவர்களாலும், மக்களாலும் யாராலும் வெறுக்கப்படாத, விரும்பப்படுவது பொருட்செல்வம் என்பதால் “விழைவுறு பொருள்” என்றார். “நடுவணது எய்த இருதலையும் எய்தும்” என்பது நாலடியார்; அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்கள் மூன்றனுள்

பொருள் அடையப் பெற்றால், அறமும் இன்பமும் தானே வந்து சேரும் என்பது கருத்து. குழை போன்ற காதணிகளைக் களைந்து இருந்த கற்புடைப் பெண்டிருக்கு உலவை மரங்கள் உவமையாயின. தலைவர் வந்து தம்மை அடைந்ததும், காதணிகள் அணிந்து முகம் மலர்ந்து மகிழ்ச்சியுடன் தோன்றும் பெண்டிர்போல, மழைவந்ததும், உலர்ந்த மரங்களும் தளிர்த்து, மலர்கள் என்னும் காதணிகளை அணிந்து முகம் மலரப் பொலிந்து விளங்கியது என்பதாம். "உயிரனைய கொழுநர்வர, எதிர்நோக்கி, மணித்தேரோடும் கண்டு, மனம்களி சிறப்ப, ஒளிசிறந்து மெலிவகலும் கற்பினார்போல், புண்டரீக முகம்மலர, அகம் மலர்ந்து பொலிந்தன பூம்பொய்கையெல்லாம்" என்று முன்பு பாலகாண்டம், மிதிலைக் காட்சிப் படலத்துள் கண்டது, இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

20. மகிழ்ச்சியும் துயரமும்

பாடலம் வறுமைகூர, பகலவன் பசுமை கூர,
கோடல்கள் பெருமை கூர, குவலயம் சிறுமை கூர,
ஆடின மயில்கள்; பேசாது அடங்கின குயில்கள்; அன்பர்
கேடுறத் தளர்ந்தார் போன்றும், திருஉறக் கிளர்ந்தார் போன்றும். (4279)

(பாடலம் - பாதிரிமரம்; கூர்தல் - மிகுதல்; பகலவன் - சூரியன்; பசுமை - குளிர்ச்சி; கோடல் - வெண்காந்தள் மலர்; குவலயம் - குவளை மலர்; சிறுமை - சிறுத்தல் \ குவிதல் \ வாட்டம்; கேடு - தீங்கு \ வறுமை; திரு - செல்வம்; கிளர்தல் - மகிழ்தல்; பேசாது - கூவாது)

வேனிற்காலத்தில் பூக்கும் பாதிரி மலர்கள் இப்போது பூக்காது வறுமை மிக்கன; கார்காலமாதலால் மேகங்கள் மூடிக்கொண்டிருக்க சூரியன் தன் ஒளி குறைந்து குளிர்ச்சி மிக்கவனாயினான்; வெண் காந்தள் மலர்கள், கார்கால மாதலின், நன்கு பூத்துப் பெருமையுடன் குலுங்கின; குவளைமலர், வாட்டமுற்றுக் குவிந்திருந்தன. நம்மீது அன்பு கொண்டவர்கள், ஒரு வறுமையுற்றபோது, நாமும் தளர்ந்துபோதல் போல, குயில்கள் கூவாது அடங்கிப் போயின; நமக்கு வேண்டியவர் பெருத்த செல்வம் உற்றபோது நாமும் மகிழ்ச்சியடைதல் போல, மயில்கள் மகிழ்ச்சியுடன் ஆடின.

பாடலம் என்பது பாதிரி மலரைக்குறிக்கும். இது கோடையில் மலர்வது. இதன்மலர் வெண்ணிறமும், நறுமணமும் கொண்டிருப்பதால், இதைத் தண்ணீர்ப் பானைக்குள் போட்டு வைக்கும் வழக்கத்தை இன்னும் தஞ்சாவூர் போன்ற ஊர்களில் காணலாம். கூர்தல் என்ற சொல் மிகுதல் என்ற பொருளைத் தரும். "கூர்ப்பும், கழிவும் உள்ளது சிறக்கும்" என்பது தொல்காப்பியம்; கார்கால மாதலால் மேகங்கள் சூரியனை மூடிக்கொண்டு இருப்பதால், அதன் வெப்ப மான கிரணங்கள், குளிர்ச்சியை வீசின என்பதாம். கார்காலத்தில் பூக்கும் இயல் புடைய வெண்காந்தள் மலர் நன்கு பூத்துச்செழித்தன. இதற்குக் கார்த்திகைப்பூ என்பது மற்றொரு பெயர். அதற்கு மாறாக, நீலோற்பல மலர் வாடிக் குவிந்து

காணப்பட்டது. கார்காலத்தில் மகிழ்ச்சி கொண்டு ஆடுவது மயிலின் இயல்பு. அதற்கு மாறாக, குயில்கள் கூவாது வாய்அடங்கி இருந்தன.

இங்கே ஓர் உலகியல் தத்துவத்தை உணர்த்துகிறான் கவிஞன். யாரேனும் ஒருவர் செல்வம் மிகுதியால் மகிழ்ச்சியுடன் இருப்பாரேயானால், அவரோடு தொடர்புடைய மற்ற உறவினர்களும் நண்பர்களும், மகிழ்ச்சியுடன் இருத்தல் இயல்பு; எனவே கார்காலத்தில் சூரியன் குளிர்ந்ததால் வெண்காந்தள் பூக்கள் பூத்துக் குலுங்கின; மயில்கள் தோகை விரித்து ஆடின. குயில்கள் கூவிக் கொண்டிருந்தன. அதுபோல ஒருவர் வறுமை உற்றதனால் தளர்ந்து போய் விட்டார் என்றால் அவருடன் தொடர்புடைய மற்றவர்களும் சற்றுச் சோர்ந்து போதல் இயல்பு. எனவே இங்கே வேனில்காலம் போல் சூரியன் ஒளி பரப்பாத தால், வேனிலில் பூக்கும் பாதிரி மலர் பூக்கவில்லை; குவளை மலர்கள் விரியாது குவிந்திருந்தன; குயில்கள் இனிமையாகப் பேசாது அடங்கியிருந்தன என்பதாம். இங்கே பசுமையும் வறுமையும் பெருமையும் சிறுமையும்; ஆடுவதும் அடங்குவதும்; கேடுறுதலும் திருஉறுதலும்; என்ற முரண்பட்ட சொற்களைப் பயன்படுத்தி ஒரு பெரிய உலகியல் உண்மையை அறிய வைத்த கவிஞனின் திறம் உன்னுக. இதனையே கதைப்போக்கோடு தொடர்புபடுத்தி அரசச் செல்வமும், மனைவியும் திரும்பப் பெற்ற சுக்கிரீவனுடன், சுற்றத்தாரும் மகிழ்ந் திருந்ததாகவும், சீதையைப் பறிகொடுத்த இராமனும் இலக்குவனும் தளர்ந்திருந்ததாகவும் பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

27. செங்காந்தள் மலர்கள்

நால்நிறச் சுரும்பும் வண்டும் நவமணி அணியின் சாரத்
தேன்உக மலர்ந்து அசைந்த சேயிதழ் காந்தள் செம்பூ,
"வேனிலை வென்றதம்மா கார்!" என, வியந்து நோக்கி,
மாநிலக்கிழத்தி கைகள், மறித்தன போன்ற மன்னோ! (4280)

(நால்நிறம் - நானாவிதமான வண்ணங்கள் \ பலநிற வண்ணங்கள்; சே - சிவந்த; கிழத்தி - பெண்; மறித்தல் - அசைத்தல்; சார - மொய்க்க; மா - சிறந்த, பெரிய; வேனில் - வசந்த காலம்)

பலவகையான வண்ணங்கள் கொண்ட சுரும்புகளும், வண்டுகளும், ஒன்பது வகையான இரத்தினங்களையும் பதித்த கைவளை, மோதிரம் போன்ற அணிகலன்கள் போல், தேன் சிந்தும் சிவந்த இதழ்கள் உடைய செங்காந்தள் மலரின் மீது மொய்க்க, அதனால் அம்மலர் அசைகின்ற தோற்றம், இம்மண்மகள் கார்காலத்தின் சிறப்பினைக் கண்டு, "காலங்களிலேயே சிறந்த வசந்த காலத்தை, இக்கார்காலம் வென்று விட்டதம்மா!" என்று வியப்புடன் தன் கைகளை அசைத்துக் கூறுவது போல் இருந்தது.

வண்டுகளும், சுரும்புகளும் வெவ்வேறு இனத்தவை என்பதால் தனித்தனியே கூறினார். "நால்நிறச் சுரும்பு" என்பது பொதுவாக பலவகையான நிறங்கள் கொண்ட வண்டுகள் என்றே பொருள்படும். எனினும், சுரும்பு, வண்டு,

தேனினம், ஞமிறு என்று வண்டினங்களும் நால் வகைப்படும். அவை செங்காந்தட்பூவின் மேல் மொய்த்து அமர்ந்திருக்கும் தோற்றம், அம்மலர்கள் தங்கள் கைகளில் நவமணி பதித்த மோதிரம், வளையல் முதலியவற்றை அணிந்திருப்பது போலத் தோற்றம் தருகிறது என்றும், அதனால் அது அசையும் தோற்றம், இந்நிலமகள் கார்காலத்தின் தண்மையை நோக்கி "வசந்த காலத்தை இந்தக் கார்காலச் சூழல் வென்றுவிட்டது" என்று வியந்து தன்கைகளை அசைத்துக் கூறுவதுபோலவும் அமைந்தது என்கிறான் கவிஞன்.

பொதுவாகச் செங்காந்தள் மலரை மகளிரின் கைகளுக்கு உவமையாகக் கூறுவது கவிமரபு. இங்கே நிலமகளுக்குக் கைகளாகக் கூறியிருப்பது நோக்கத் தக்கது.

28. வெண்காந்தள் மலர்கள்

வாள்எயிற்று அரவம் போல வான் தலை தோன்ற வார்ந்த
தாள் உடைக் கோடல் தம்மைத் தழீஇயன, காதல்தங்க
மீளல; அவையும் அன்ன விழைவன உணர்வு வீந்த
கோளரவு என்னப் பின்னி, அவற்றொடும் குழைந்து சாய்ந்த. (4281)

(எயிறு - பற்கள்; அரவம் - பாம்புகள்; வான் - உயர்ந்த; வார்ந்த - நீண்ட; தாள் - தண்டு; கோடல் - வெண்காந்தள் செடிகள்; தழீஇயன - தழுவின; வீந்த - இழந்த; கோள் - கொடிய)

ஒளிபொருந்திய வாட்படை போன்ற கூரிய நச்சுப்பற்களை உடைய பாம்புகள், தம்மைப் போலவே உயர்ந்த தலையை உடைய வெண்காந்தள் மலர்களின் தோற்றம் கண்டு, நீண்ட தண்டுகளை உடைய வெண்காந்தள் மலர்களைத் தம்மினத்தைச் சார்ந்த ஆண் பாம்புகள் என்று கருதி, காதல் மீதுரத் தழுவிக் கொண்டன; மீள நினைக்காது சேர்ந்தே இருந்தன; அவ்வெண்காந்தள் பூக்களும், அந்தக் காதல் மயக்கத்தை விரும்பி ஏற்றுக் கொண்டன போல, மயக்கம் உற்று, கொடிய பாம்புகளுடன் ஒன்றாக இணைந்து, பின்னிப் பிணைந்து, குழைந்து சாய்ந்து இருந்தன.

வெண்காந்தட் பூக்களின் மலர்ந்த தோற்றம் பாம்பின் படம் போலத் தோற்றும் என்பதும், தண்டுடன் கூடிய வெண்காந்தள் மலர் பாம்பைப் போலவே தோற்றும் என்பதும், இரண்டிற்கும் வேறுபாடு தோற்றாது என்பதும் பெறப்படுகிறது. எனவே வெண்காந்தட் பூவை, ஆண் பாம்புகள் தன் பெண்ணினம் என்று கருதி அவற்றின் மீது மிக்க அன்புகொண்டு தழுவிக்கொண்டு அகலாது இருந்தன. வெண்காந்தட் பூக்களும், அந்தக்காதல் உணர்வை விரும்பி வேண்டுவன போலத் தன் உணர்வழிந்து, அந்தக் கொடிய பாம்புகளுடன் பின்னிப்பிணைந்து சாய்ந்து கிடந்தன என்பதாம். பாம்புகள் ஈருடலும் ஒருடலாகக் காணுமாறு பின்னிப் புணரும் என்று கூறுவர். "தோளும், தாளும் பிணைந்து, உருவு ஒன்றெய்தி, நாளும் நாகர் நுகர்ச்சி நலத்தரோ?" என்பது சீவகசிந்தாமணி. ஓரறிவுள்ள உயிரினமாகிய செடிகளுக்கும் தொடுதல் உணர்ச்சி, ஊற்றுணர்ச்சி - உண்டு என்பதைப் புலப்படுத்தகிறான் கவிஞன்.

29. இந்திர கோபப் பூச்சிகள்

எள்இட இடனும் இன்றி எழுந்தன இலங்கு கோபம்;
தள்ளுறத் தலைவர் தம்மைப் பிரிந்தவர் தழுவிக் தூமக்
கள்ளுடை ஓதியார்தம் கலவியில், பலகால் கான்ற
வெள்ளடைத் தம்பல் குப்பை சிதர்ந்தென, விரிந்தமாதோ! (4282)

(இலங்கும் - விளங்கும்; கோபம் - தம்பலப் பூச்சிகள் \ இந்திர கோபப் பூச்சிகள்; தள்ளுறல் - தடுமாறுதல்; தூமம் - புகை; கள் - தேன்; ஓதி - கூந்தல்; வெள்ளடை - வெற்றிலை; குப்பை - சிதறல்; விரிதல் - ஊர்ந்து பரவுதல்; கான்ற - உமிழ்ந்த; தம்பலம் - எச்சில் \ உமிழ்நீர்; கலவி - புணர்ச்சி; சிதர்தல் - இறைந்து கிடத்தல்)

தானியங்களிலேயே மிகச் சிறியதான ஒரு எள்ளைப் போடக்கூட இடம் இல்லாதபடி, கார்காலத்தில் இந்திரகோபப் பூச்சிகள் நிறைந்திருந்தன. தம்தலைவர் சிறிது காலம் வேற்று நாட்டிலிருந்தவர், இப்போது கார்காலத்தில் தம்மை நோக்கி வந்து தழுவுகின்ற நிலையில், அகில் முதலான புகைகள் ஊட்டப்பெற்றதும், தேன் செறிந்த அன்றலர்ந்த மலர்களைச் சூடியுள்ள கூந்தலை உடையவருமான மகளிர், தாம் புணர்வதற்கு முன்னர், ஊடல் காலத்தில், பலமுறை உமிழ்ந்த வெற்றிலை பாக்குச்சாறு சிதறி இறைந்து கிடந்தாற் போல இப்பூச்சிகள் நிலமெங்கும் பரவிக் கிடந்தன.

கார்காலத்தில் இயல்பாகவே தோன்றும் செந்நிறமுடைய இந்திர கோபப்பூச்சிகள் நிலமெங்கும் நிறைந்து, எள்போடக்கூட இடமின்றிப் பரந்து கிடந்தன. இது எப்படி இருந்தது என்றால், பொருள்வயின் பிரிந்த தம் கணவர், கார்காலத்தில் வந்து தம்முடன் கூடும்பொழுது, மகளிர் வெற்றிலை பாக்கை மென்று துப்பிய அந்த எச்சில் சிதறலைப்போல எங்கும் பரவிக்கிடந்தன என்பதாம். இந்திர கோபப்பூச்சியின் மிகுதி சிறப்பிக்கப்பட்டது. கார்காலம் தொடங்கியவுடன் முல்லை நிலத்தில் திடுமென அளவில்லா எண்ணிக்கையில் தோன்றுவது இந்த இந்திர கோபப் பூச்சிகளின் இயல்பு; இவை தம்பலப் பூச்சிகள் என்றும் வழங்கப்படும். காரணம் இவை வெற்றிலை பாக்குமென்று உமிழும் தம்பலம் போன்று தோன்றுவதால் என்க. "பவழம் சிதறியவை போலக் கோபம் தவழும்" என்பது கார்நாற்பது 5. இடமில்லாமல் நெருக்கமாக இருப்பதற்குப் பொதுவாக "எள் இட இடமில்லாது" என்று கூறுவதையே, கவிஞன் கையாண்டிருக்கும் பான்மை நோக்குக; "எள் இருக்கும் இடமின்றி" என்று பின்னர் இராவணன் இறந்து கிடந்ததைப் பார்த்து மண்டோதரி புலம்பும்போதும் கவிஞன் பயன்படுத்தியிருப்பதை நினைவுகூர்க.

இங்கே இன்னும் ஒருசெய்தி. பிரிந்தவர் கூடியபோது கவிஞன் கூந்தலை முக்கியமாகக் கூறுவதன் காரணம் என்ன? கற்புடைப் பெண்களை "தூயஓதியர்" என்பது இலக்கிய மரபு. கணவனைத் தவிரப் பிறரால் தீண்டப்பெறாத கூந்தலையுடையவர் என்பது பொருள். கூந்தலைத் தீண்டுதல், மணந்த கணவற்கே உரியது என்பதை சங்ககாலப் பாடல்களில்

பரக்கக்காணலாம். "வெள்ளடை" என்ற சொல் வெற்றிலையைக் குறிக்கும். இதனை "வெள்ளிலை" என்றும் "மெல்லிலை" என்றும் கூறுவதுண்டு.

30. மலை அருவிகள்

தீங்கனி நாவல் ஓங்கும் சேண்உயர் குன்றின், செம்பொன்
வாங்கின கொண்டு, பாரில் மண்டும் மால்யாறு மான,
வேங்கையின் மலரும், கொன்றை விரிந்தன வீயும், ஈர்த்து
தாங்கின கலுழி, சென்று தலை மயக்குறுவ தம்மில். (4283)

(தீம் - இனிய; சேண் - வான்; வாங்குதல் - இழுத்தல்; மண்டுதல் - விரைதல்; மான - போல; வீ - பூ \ மலர்; ஈர்த்தல் - இழுத்தல்; கலுழி - அருவி \ கலங்கியநீர்; தலை மயங்கல் - கலந்தல்; விரிந்தன - மலர்ந்தன; தாங்குதல் - சுமத்தல்)

இனிய பழங்களைத்தரும் நாவல் மரங்களையும், ஓங்கிவளர்ந்ததும், ஆகாயமளாவ உயர்ந்த மேருமலையில் இருப்பதுவுமான மாற்றுக் குறையாப் பொன்னையும், இழுத்துக் கொண்டு, நிலத்திற்கு விரைந்து வரும் பெரிய சம்பூ என்னும் நதியைப்போல, கிட்கிந்தையிலுள்ள மலையிலிருந்து பெருகிவரும் அருவிகள் வேங்கை மரத்தின் வெண்ணிறமான மலர்களையும், கொன்றை மரத்தில் மலர்ந்திருக்கும் பொன்னிறமான கொன்றை மலரையும் இழுத்துக்கொண்டு சுமந்து வந்து, நிலத்தில் ஓடித் தமக்குள் ஒன்றுடன் ஒன்று கலப்பன ஆயின.

மேருமலையிலிருந்து பொன்னை அடித்துக் கொண்டுவரும் சம்பு நதிக்கு, கிட்கிந்தை மலையிலிருந்து வேங்கை மலரையும் கொன்றை மலரையும் அடித்துக்கொண்டு வரும் அருவிகள் உவமை. இங்கே ஒரு செய்தி. நாவல்கனியின் சாறு ஊறிய இடத்தில் பொன் தோன்றும். பொன் தோன்றும் இடங்களுள் நாவல்பழச்சாறு ஊறிய இடங்களும் ஒன்று என்று அறிக. அவ்வாறு தோன்றும் பொன்னுக்கு "சாம்புநதம்" என்பது பெயர். இது நால்வகைப் பொன்னுள் ஒன்று என்பதையும் அறிக. இந்த நாவல் மரம் மேருமலையின் கந்தமாதனம் என்னும் தென்பகுதியில் உள்ளது. எனவே இங்குள்ள இடம் "நாவலர் தீவு" என்பதும், இம்மரத்தின் பழங்கள் யானையின் அளவு பெரிதாய் இருக்குமென்பதும், அவ்வாறு சிதறிவிழும் பழத்தின் சாறு சம்புநதியாகப் பெருகுகிறது என்பதும், அது ஆற்றுமண்ணில் கலந்து பின்னர் சம்புநதம் என்னும் பொன்னாக மாறுகிறது என்பதும், "பட்டமா தரு மாகரி அளவு எனப்பருத்துக் கொட்டை நுண்ணிய நாவலின் கொழுங்கனிச்சாறு, பெட்ட சம்புமா நதிஎன, வலங்கொடு பெருகி, உள்தெளிந்து, பொன்மேருவைச் சுலாய் இனிது ஓடும்" "வெங்கதிர் காற்று உற உலர்ந்து, நற்சாம்பு நதம் எனும் பொன்னாம்; ஆங்குஅது அணிபுனை நலத்தோர் இதம் இல்வெம்பிணி, நரை, திரையற்று இனிது இருப்பர்" என்று பாகவதம் கூறும். அதனைச் சித்தர்கள் விரும்பி அணிவர் என்பதும் ஒரு புராணக்குறிப்பு.

அருவிகள் மலையில் பல இடங்களில் உற்பத்தியானாலும், இறுதியில் நிலத்தில் வந்து ஒன்றாய்க்கலந்து ஆறாய்ப் பெருகும் என்பது பெறப்படுகிறது. கலங்கிய நீரையுடையது என்பதால் கலுழி என்பது அருவிக்குப்பெயர்.

31. நல்நெடும் காந்தள் போதில், நறைவிரி கடுக்கை மென்பூ,
துன்னிய கோபத்தோடும், தோன்றிய தோற்றம், தும்பி
இன்னிசை முரல்வ நோக்கி, இருநிலமகள் கைஏந்தி,
பொன்னொடும் காசை நீட்டிக், கொடுப்பதே போன்றதம்மா! (4284)

(நல் - அழகு; போது - மலர் \ அரும்பு; நறை - வாசனை \ தேன்; கடுக்கை - கொன்றை; துன்னிய - நெருங்கிய; கோபம் - இந்திரகோபப்பூச்சி \ தம்பலப் பூச்சி; தோற்றம் - காட்சி; தும்பி - வண்டு; இரு - பெரிய; காசு - இரத்தினம் \ பவழம்; ஏந்தி - நீட்டி; நோக்கி - கேட்டு; முரல்தல் - இசைத்தல் \ பாடுதல்)

அழகிய நீண்ட தண்டுகளையுடைய செங்காந்தட்பூவும், தேனும், நறுமணமும் பரவிய கொன்றை மரத்தின் மெல்லிய மலர்களும், அங்கே நெருங்கி வந்து அடைந்திருக்கின்ற இந்திர கோபப்பூச்சிகளோடும் தோன்றிய காட்சி, வண்டுகளின் இனிய ரீங்கார இசையைக்கேட்டு, பெரிய நிலம் என்னும் இந்த பூமாதேவி, தன் இருகைகளையும் உயர்த்தி, பொன்னையும், இரத்தினங்களையும் தன் இருகைகளிலும் ஏந்தி, அவைகளுக்குப் பரிசில் கொடுப்பதைப் போல இருந்தது.

"நெடுங்காந்தள் போது" என்று கூறி "கடுக்கை மென்பூ" என்று கூறியதை நோக்குக. கொன்றை மரம் உயர்ந்தது. காந்தள், செடியில் மலர்வது. எனவே மேலேயிருந்து விழுகின்ற மலர் மெல்லியது. அதைத்தாங்குகின்ற வலிமை வாய்ந்தது தண்டுகளை உடைய செங்காந்தட்செடி எனக் கூறிய நயம் உணர்க. பொதுவாகத் தம்பலப்பூச்சி சிவந்த நிறமுடையதாய் இருப்பதால், அதைச் சிவந்த நிறமுடைய பவழத்திற்கே ஒப்புமைப் படுத்துவது கவிமரபு. காசு என்பது நவரத்தினங்களையும் குறிக்கும் ஒரு பொதுச்சொல். இங்கே பவழத்தைக் குறித்து நின்றது என்க. பொதுவாகச் செங்காந்தள் மலர்களைப் பெண்களின் கைகளுக்கு உவமை கூறுவது கவிமரபு. இங்கே நிலமகளின்கைகளுக்கு அதை உவமைப்படுத்தியதை உணர்க. கொன்றை மலர் பொன்னிறமானதால் அதைப் பொன்னுக்கும், தம்பலப்பூச்சி சிவப்பு நிறமானதால் அதனைப் பவழத்திற்கும் உவமித்தார் என்க. "கொன்றை கொடை வேந்தன் எனப் பொன்சொரியும் வேங்கடமே" என்பது திருவேங்கடமாலை.

வண்டுகளின் ரீங்காரத்தை இசை எனக்கொள்ள வேண்டும். வண்டுகள் இசைப்புலவர்கள். அதனைப் பாராட்டிப் பரிசு கொடுக்கும் வள்ளல், வேந்தன், நிலமகள். பரிசு பொன்னும் இரத்தினங்களும். பொன் கொன்றைப்பூ; இரத்தினம் இந்திர கோபப்பூச்சிகள். வண்டுகள் ரீங்காரமிடுதல் தமிழ்ப்பாட்டுப் போன்றது என்றார் கம்பர் முன்பும். "குழல் வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே" என்றது காண்க. "தீங்குயில் மணந்து, தேன் துஞ்ச, வண்டு பாண் செய்ய, வேங்கைநின்று பொன் உருக்கும் வெற்பு" என்பது சீவகசிந்தாமணி.

"குழல்இசை தும்பி கொளுத்திக்காட்ட, மழலை வண்டினம் நல்யாழ் செய்ய" என்பது மணிமேகலை.

32. கிளைத் துளை மழலை வண்டு கின்னரம் நிகர்த்த, மின்னும்
துளிக்குரல் மேகம் வள்வார்த் தூரியம் துவைப்ப போன்ற;
வளைக்கையர் போன்ற மஞ்ஞை; தோன்றிகள் அரங்கின் மாடே
விளக்கு இனம் ஒத்த; காண்போர் விழி ஒத்த, விளையின் மென்பூ. (4285)

(கிளை - மூங்கில்; துளை - துவாரம்; மழலை - இனிமை; கின்னரம் - யாழ்; வள் - வலிய; வார் - தோல்; தூரியம் - மத்தளம்; துவைத்தல் - ஒலித்தல்; தோன்றி - செங்காந்தள் மலர்; மாடு - பக்கம்; விளை - கடுவிளை என்னும் ஒருசெடி; மேகக்குரல் - இடிமுழக்கம்)

மூங்கில் துவாரங்களில் புகுந்து வண்டுகள் ஊதுவதால் எழும் இனிய ஓசை கின்னரம் என்ற யாழின் ஒசையை ஒத்திருந்தது; மின்னலும், மழைத்துளியும், இடிக்குரலும் கொண்ட மேகம் இடிப்பது, வலிய தோலினால் இழுத்துக்கட்டப் பட்ட மத்தளம் ஒலிப்பது போன்றிருந்தது. மயிலினங்கள் ஆடுவது, கைவளை அணிந்த மகளிர் நடனமாடுவது போன்றிருந்தது. அந்த அரங்கத்தின் பக்கத்தில் நிறைந்திருந்த செங்காந்தள் மலர்கள், விளக்கின் தொகுதி ஏற்றி வைக்கப் பட்டிருந்தது போன்றிருந்தது; கடுவிளையின் கரிய மெல்லிய மலர்கள், இந்நாட்டியத்தைக் காணும் மக்களின் கரிய விழிகளை ஒத்திருந்தன.

பொதுவாக வண்டுகள் ரீங்காரம் செய்வதே இன்னிசை எழுப்புவது போல் இருக்கும். அவை துளைக் கருவிகளின் துவாரங்களில் சென்று ஊதினால் ஏற்படும் ஓசை இன்னும் இனிமை பயப்பதாக இருக்கும் என்பதால் "மழலை வண்டு" என்றார் என்க. மழலை இங்கு இனிமையை உணர்த்திற்று. கின்னரம் என்பது ஒருவகை யாழ் என்பதை முன்னரே பாலகாண்டத்துள் அறிந்தோம். இதை வாசிப்பவர்கள் கின்னரர்கள். இவர்கள் பதினெட்டு தேவசாதியினருள் ஒருவகையினர். இங்கே "மேகக்குரல்" என்ற சொல்லாட்சி மிகவும் இனிமை பயப்பது. மேகம் செய்யும் ஓசை இடி. எனவே மேகக்குரல் என்பது இடி முழக்கத்தைக் குறிக்கக் கம்பன் கையாண்டிருக்கும் ஒரு புதுத்தமிழ்ச்சொல்; கடுவிளை என்பது கருங்காக்கணம் பூ என்று கிராமங்களில் வழங்கப்படுகிறது. இதைப் பொதுவாகக் கண்ணுக்கும், சிறப்பாக மகளிரின் கண்ணுக்கும் உவமையாக்க் கூறுவது கவிமரபு.

33. பேடையும் ஞிமிறும் பாயப் பெயர்வுறப் பிறக்கும் ஓசை,
ஊடு உறத் தாக்கும் தோறும் ஒல்ஒலி பிறப்ப, நல்லார்
ஆடுஇயல் பாணிக்கு ஒக்கும் அரிய அவ் அமிழ்தப்பாடல்
கோடியர் தாளம் கொட்டல் மலர்ந்த கூதாளம் ஒத்த. (4286)

(பேடை - பெண்வண்டு; ஞிமிறு - ஆண்வண்டு; பெயர்வுறுதல் - அசைதல்; நல்லார் - நாட்டிய மகளிர்; பாணி - கூத்து; ஊடுறல் - ஒன்றோடொன்று பொருந்துதல்; தாக்குதல் - ஒலி செய்தல்; கோடியர் - நட்டுவனார்; கூதாளம் - ஒருவகை மலர் \ தாளம் போன்ற வடிவமைப்புடையது; அமிழ்து - இனிமை)

ஆண்வண்டுகளும் பெண் வண்டுகளும் பறந்து வரும்போது எழுகின்ற ஓசையும், அவை ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் போது எழும் "ஒல்" என்ற ஓசையும், அங்கு நாட்டிய மகளிர் ஆடுகின்ற இயல்புக்கு ஏற்பத் தாளம் கொட்டுவதை ஒத்திருக்கும். அங்குள்ள கூதாள மலர்கள் மலர்ந்திருந்தவை அருமையான, இனிமையான அந்தப் பாடல்களுக்கு ஏற்ப நட்டுவனார் தாளம் கொட்டுதலை ஒத்திருக்கும்.

வண்டுகள் எழுப்பும் ஓசை கூத்திற்கு ஏற்ற தாளமாகவும், கூதாள மலர்கள் மலர்வது நட்டுவனார் அந்தப் பாடல்களுக்கு ஏற்பத் தாளம் கொட்டுவதைப் போலிருப்பதாகவும் கூறினார் என்க.

34. காட்டாறு பெருகுதலும், கொன்றை பூத்தலும்

வழைதுறு கானயாறு, மாநிலக்கிழத்தி, மக்கட்கு
உழைதுறு மலை மாக்கொங்கை கரந்த பால் ஒழுக்கை ஒத்த;
விழைவுறு வேட்கையோடும் வேண்டுநர்க்கு உதவவேண்டி,
குழைதொறும் கனகம் தூங்கும் கற்பகம் நிகர்த்த கொன்றை. (4287)

(வழை - சுரபுன்னை மரங்கள்; துறுதல் - அடர்ந்த \ நெருங்கியிருத்தல்; கிழத்தி - தாய்; ஒழுக்கு - தாரை; விழைவுறுதல் - விரும்புதல்; வேட்கை - ஆசை; கனகம் - பொன் \ பொற்காசு; தூங்குதல் - தொங்குதல்; நிகர்த்தல் - ஒத்தல்; இழை - தளிர்கள்; உழை - பக்கம்)

சுரபுன்னை மரங்கள் நெருங்கி அடர்ந்திருக்கும் காடுகளிலிருந்து பெருக்கெடுத்து ஓடிவரும் காட்டாறுகளின் தோற்றம், இந்த பூமிதேவியாகிய நிலம், தன் மக்களுக்கு அவர்கள் வாழும் பொருட்டு தன் பக்கத்திலே இருக்கும் பெரிய மலைகள் போன்ற பெரிய கொங்கைகளிலிருந்து அன்பினால் சுரக்கின்ற பால் பெருக்கை ஒத்திருந்தன; கொன்றை மரங்கள் பூத்துக் குலுங்கும் தோற்றம் தன்னை நாடிவந்து, தன் ஆசையைத் தெரிவித்துப் பொருள் வேண்டி இரப்போர்க்கெல்லாம் உதவி செய்யும் பொருட்டு, தளிர்களில் எல்லாம் பொற்காசுகளைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் கற்பகமரத்தைப் போன்று இருந்தது.

இம்மாநிலத்தை ஒரு பெண்ணாக உருவகித்தால், இங்கிருக்கும் மலைகளை அவளின் கொங்கைகளாக உருவகிப்பதும், அக் கொங்கைகளிலிருந்து அன்பினால் சுரக்கும் பால்தாரையை கற்பகமரம் தரும் பொன்னுக்கு உருவகிப்பதும் கவிமரபு. "அலை நீராடை, மலை முலை, ஆகத்து, மண்ணக மடந்தை" என்பது சிலப்பதிகாரம்;"சரயு என்பது தாய்முலை அன்னது இந்நிலத்தோங்கு உயிர்க்கெல்லாம்" என்பது பாலகாண்டச் செய்யுள். "சோதி மதி வந்து தவழ் சோலைமலையோடு இரண்டாய் மேதினியாள் கொங்கை நிகர்வேங்கடமே" என்பது திருவேங்கடமாலை.

35. மான்கள் மகிழ்ந்திருத்தல்

பூஇயல் புறவம் எங்கும் பொறிவரி வண்டு போர்ப்ப,
தீவிய களியவாகிச் செருக்கிய, காமச்செவ்வி,

ஓவல்இல் மரங்கள் தோறும் உரைத்து அறஉறிஞ்சி, ஒண்கேழ்
நாவிய செவ்வி நாறக் கலையொடும் புலந்த நவ்வி. (4288)

(புறவம் - காடு; பொறி - புள்ளிகள்; வரி - ரீங்காரம் \ இசைப்பாட்டு; போர்த்தல் - மூடுதல் \ மொய்த்தல்; தீவிய - இனிமை மிக்க; ஓவல்இல் - நீங்குதல் இல்லாத; உரைத்தல் - உராய்தல்; உறிஞ்சுதல் - தேய்த்துக் கொள்ளுதல்; ஒண் - ஒளிமிக்க; கேழ் - நிறம்; நாவி - கத்தூரி மான்; செவ்வி - நறுமணம்; நாற - வீச; புலத்தல் - பிணங்குதல் \ ஊடுதல்; நவ்வி - பெண்மான்; செருக்குதல் - களித்தல், தழைத்தல்; காமச் செவ்வி - காதல் முதிர்வு \ காதல் பக்குவம்)

மலர்கள் அடர்ந்து விளங்குகின்ற காடுகளில் எல்லாம், புள்ளிகளையும், ரீங்காரம் என்னும் இசைப்பாட்டையும் உடைய வண்டுகள், அவற்றில் மொய்த்து மூடிவிடுவதால், இனிமையாக மகிழ்ச்சி கொண்டு களித்துத் திரிந்தன. ஆண்மான்கள் தாம் கொண்ட காதல் முதிர்வால், மரங்களில் எல்லாம் தம் உடம்பு முழுவதையும் உராய்ந்து தேய்த்துக் கொண்டதால், ஒளிமிக்க நிறங்களும், பெண் மானின் கஸ்தூரி மணமும் அவற்றின் உடம்பின் மேல்வீச, அந்த ஆண் மான்கள் வேறு ஏதோ கலைமான்களுடன் தொடர்பு கொண்டு வந்திருக்கின்றன என்று தவறாகக் கருதி அவற்றுடன் ஊடல் கொண்டன.

வரி என்ற சொல் இசைப்பாட்டைக்குறிக்கும்; கானல்வரி, வேட்டுவவரி என்பன போல என்க. காதல் முதிர்வுடைய கலைமான்கள் தம் உடம்பை மரங்களில் தேய்த்துக் கொண்டமையால், அவற்றின் உடம்பில் கஸ்தூரி மானின் மணம் வீசியது. அவ்வாசனையை உணர்ந்த பெண்மான்கள், அவை கத்தூரி மான்களோடு தொடர்பு கொண்டு வந்திருக்கின்றன என்று தவறாகக் கருதிக் கொண்டு, கலைமான்களோடு ஊடல் கொண்டன என்பதாம். நாவி என்பது ஒருவகை மணம்தரும் பொருள். இது கஸ்தூரி மான்களின் கழுத்தில் இருக்கும் ஒருவகைக் கொழுப்பு என்பர்.

36. குவளை குவிதலும், முல்லை அரும்புதலும்

தேரில் நல்நெடுந்திசை செலச் செருக்கு அழிந்து ஓடுங்கும்
கூர் அயில், நெடுங்கண் எனக் குவிந்தன குவளை;
மாரன் அன்னவர் வரவு கண்டு, உவக்கின்ற மகளிர்
மூரல் மென் குறுமுறுவல் ஒத்து அரும்பின முல்லை. (4289)

(மாரன் - மன்மதன்; நெடுந்திசை - வடதிசை; செருக்கு - மதர்ப்பு; குவளை - நீலம் \ நீலோற்பலம்; மூரல் - பற்கள்)

தலைவன் தேரில் வடக்குத் திசைநோக்கிச் செல்ல, இயல்பாகக் கூர்மையுடையதும், நீண்டதும், வேற்படை போன்றதுமான தலைவியரின் கண்கள், மகிழ்ச்சியும் களிப்பும் நீங்கி, இப்போது இடுங்கியிருத்தலைப் போலக் கருங்குவளை மலர்கள் குவிந்திருந்தன; மன்மதன் போன்ற அழகுடைய தம் தலைவர் திரும்பி வருவது கண்டு மகிழ்கின்ற தலைவியரின் மகிழ்ச்சியால்

உண்டாகும் மெல்லிய இளம் புன்சிரிப்புக் காட்டும் பற்களைப்போல், முல்லை மலர்கள் அரும்பின.

மகிழ்ச்சியில் மலர்தலும், துன்பத்தில் இடுங்குதலும் மகளிர் கண்களுக்கு இயல்பானதே. அதற்குக் கார்காலத்தில் குவளை குவிந்ததையும், முல்லை அரும்பியதையும் முறையே உவமையாகக் கூறிய நயம் நோக்குக. மகளிர் கண்களுக்குக் கருங்குவளையும், அவர்கள் பற்களுக்கு முல்லை அரும்பும் உவமைகள்.

37. களிக்கும் மஞ்ஞையை கண்ணுளர் இனம்எனக் கண்ணுற்று
அளிக்கும் மன்னரின் பொன் மழை வழங்கின அருவி;
வெளிக்கண் வந்த கார் விருந்துஎன, விருந்து கண்டு உள்ளம்
களிக்கும் மங்கையர் முகம் எனப் பொலிந்தன கமலம். (4290)

(மஞ்ஞை - மயில்; கண்ணுள் - கூத்து; கண்ணுளர் - கழைக் கூத்தர் \ விறலியர்; பொலிதல் - மலர்ந்து விளங்குதல்)

மகிழ்ச்சியுடன் நடனமாடும் மயிலினங்களைப் பார்த்து, அது கழைக் கூத்தாடிகள் ஆடுவதைப் போன்று இருக்கிறதே என்று வியந்து, அவற்றிற்குப் பரிசு கொடுக்க விழையும் மன்னர்களைப்போல, மலையிலிருந்து பெருகிவரும் அருவிகள் பொன்னைக் கொண்டு வந்து கொட்டின; ஆகாயத்திலிருந்து மேகம் வெளிவருவதைக் கண்டு, நல் விருந்து எனக்கருதி, வீட்டிற்கு உள்ளே வருவதற்கு முன்பே வெளியிலேயே விருந்தினரைக்கண்டு மனம் மகிழ்ச்சி யடையும் இல்லறப் பெண்டிர்போல, தாமரை மலர்கள் மலர்ந்து பொலிவு பெற்றுத் திகழ்ந்தன.

மலையிலிருந்து ஓடி வரும் அருவிகள், அங்கிருக்கும் பொன்துகளையும் அடித்துக் கொண்டு வரும் என்று கூறுவது இலக்கிய மரபு. இங்கே விருந்தோம்பல் பற்றி ஒரு செய்தி. புதிதாக வருகின்ற விருந்தினரை வெளியில் அவர்கள் வரும்போதே இன்முகம் காட்டியும், நெருங்கி வந்த போது இன்சொல் பேசியும், உள்வந்த பின் இனிது ஓம்புதலும் வேண்டும் என்பது "மோப்பக் குழையும் அனிச்சம்; முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்னும் குறள் 90ன் உட்கருத்து என்க. விருந்தோம்புதல் பெண்டிரின் தலையாய கடமையென்று இங்கு பால காண்டத்திலும், சிலப்பதிகாரத்திலும் கூறியிருப்பவை நாம் அறிந்ததே. "பொன்மழை" என்றது பொன் துகளின் மிகுதியைக் குறித்தது என்க.

38. தேனீக்கள்

சரத நாள்மலர் யாவையும் குடைந்தன, தடவி
"சுரத நூல் தெரிவிடர் எனத் தேன் கொண்டு, தொகுப்ப,
பரத நூல்முறை நாடகம் பயன்உறப் பகுப்பான்,
இரதம் ஈட்டு உறும் கவிஞரைப் பொருவின தேனீ." (4291)

(சுரதம் - காமம்; விடர் - காமுகர்; தடவுதல் - தேடிக்கண்டு பிடித்தல்; தொகுத்தல் - சேர்த்து வைத்தல்; இரதம் - இரசம் \ ரசம் \ சுவை; ஈட்டுறுதல் - கொண்டுவந்து சேர்த்தல்; பொருவின - ஒத்தன; நாள் - புதிய \ அன்றலர்ந்த; குடைதல் - மூக்கால் துழாவுதல்; சரதம் - சரசம்)

சிற்றின்பம் தரும் காமசாத்திர நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தவரான காமுகர்கள் போல, தேனீக்கள், உறுதியாக அன்றலர்ந்த புதிய மலர்களைத் தேடிச் சென்று அவை எல்லாவற்றையும் தம் மூக்கால் துழாவிக் குடைந்தன. அத்தேனீக்கள் அவ்வாறு குடைந்த தேன் எல்லாவற்றையும் சேர்த்துவைப்பது, பரத நாட்டிய சாத்திரமும், நாடகமும் இயற்றும் ஓர் ஆசிரியன், காண்பவர் மகிழும் வண்ணம், அந்நாடகத்தில் ஒன்பான் சுவைகளையும் கொண்டுவந்து தொகுத்துத் தருவதை ஒத்து இருந்தது.

பல மலர்களைக் குடைந்து தேன் ஒன்றையே பருகும் தேனீக்களுக்குக் காமசாஸ்திரம் கற்றுப்பல மங்கையரிடம் இன்பம் ஒன்றேயே அனுபவிக்கும் காமுகர் உவமை. மாதரை மலராகவும், மைந்தரை வண்டாகவும் கூறுவது மரபு. அவ்வாறு தேடிக்கண்டு பிடித்துத் தேன் நுகர்ந்த தேனீக்கள் அவற்றைச் சேர்த்துத் தம் கூட்டில் வைக்கும் தன்மைக்கு, ஒரு நல்ல நாடக ஆசிரியன் தன் நாடகத்துள் மக்கள் விரும்பும் ஒன்பான் சுவைகளையும் பல நூல்களிலிருந்தும் கொண்டுவந்து தொகுத்துத் தரும் தன்மை உவமை என்க. இங்கே கூறப்பட்ட நாடகக் கலைஞருக்கு நாம் கம்பனையே எடுத்துக் காட்டாகக் கூறுதல் இயலும். தனக்கு முன் உள்ள இலக்கியங்களிலிருந்தெல்லாம், ஒன்பான் சுவை மிகுந்த நிகழ்ச்சிகளையும் தன் காப்பியத்தில் கையாண்டிருப்பதே அதற்குச் சான்றாகும். ஒன்பான் சுவைகள் - நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, நடுவுநிலை என்பனவாம். பரதம் என்பது பரத நாட்டியத்தைக் குறிக்கும். அது பாவம், ராகம், தாளம் முதலியவை பற்றியும் கூறுவதால் பரதநூல் எனப்பட்டது என்க. நாடகம் என்பது கதைதழுவி வரும் கூத்து என்பதாம். கவிஞர் என்பவர் நாடகக்காப்பியம் அமைப்பவருமாவார்.

39. மான்கள்

நோக்கினால் நமை நோக்குஅழி கண்ட, நுண்மருங்குல்
தாக்கு அணங்கு அரும் சீதைக்கு, தாங்கஅரும் துன்பம்
ஆக்கினான் நமது உருவின் என்று அரும்பெறல் உவகை
வாக்கினால் உரையாம் எனக் களித்தன மான்கள். (4292)

(அழிகாணுதல் - தோல்வியுறச் செய்தல்; மருங்குல் - இடை; தாக்கணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம்)

தனது கண்களின் கண்ணோட்ட அழகினால், கண்ணின் மருண்ட பார்வையுடைய, அழகையே தோற்கச் செய்து வெற்றி கண்டவளான, நுண்ணிய, கண்களுக்குப் புலனாகாத, இடையை உடைய, கண்டாரைத் தீண்டி வருத்தும் தெய்வத் தன்மை உடைய, அரிய, சீதாதேவிக்கு, அவளால் தாங்க முடியாத

அளவுக்கு மாரீசன் என்னும் அரக்கன் நமது இனத்தவர் போன்று தோற்றம் கொண்டு அவளைக் கலங்கச் செய்தான் என்று கருதி, பெறுதற்கரிய மகிழ்ச்சி அடைந்த மான்இனம், இந்த மகிழ்ச்சியைத் தம் குரலால் வெளிக்காட்ட மாட்டோம் என்று எண்ணி, மனத்துக்குள்ளேயே மகிழ்ந்து கொண்டன.

நோக்கு என்பது கண்ணோட்டம் என்றும் மானின் மருண்ட பார்வை என்றும் இருபொருள் படும்படிக் கையாளப்பட்டிருக்கும் நயம் காண்க. தாக்கணங்கு என்பது பொதுவாகத் தீண்டி வருத்தும் தெய்வம் என்றும், காமத்தை ஊட்டிவிடும் தெய்வம் என்றும்தான் எல்லா இடங்களிலும் கையாளப்பட்டிருக்கிறது. இதனை மோகினி என்றும், கொல்லிப் பாவை, என்றும் கூறுவதும் உண்டு. தம்மைத் தன் கண்ணழகால் தோற்கச்செய்த சீதைக்கு தம்மால் நேரடியாக ஒரு துன்பமும் இழைக்க முடியாவிட்டாலும், தங்கள் உருவத்தில் ஒரு அரக்கனான மாரீசன் அவளுக்குத் துன்பம் தந்ததில் மான்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி என்பது கருத்து. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொண்டாட முடியவில்லை. காரணம் ஒன்று இராமனால் மாரீசனுக்கு நேர்ந்த கதி தங்களுக்கும் ஏற்படலாம் என்ற அச்சம். இரண்டு இம்மலையில் வாழும் மதங்க முனிவரின் சாபத்திற்கு ஆளாக நேரிடும் என்ற அச்சமுமாம். அங்குள்ள எந்த உயிரினமும் சத்தம் செய்யக் கூடாது என்பது மதங்க முனிவரின் சாபம். எனவேதான் அம்மலைக்கே ருசியமூகம் என்பது பெயர். ருசியம் என்ற சொல் மானையும், மூகம் என்ற சொல் ஊமை என்ற பொருளையும் தரும்.

பொதுவாகத் தனக்குத் துயரிழைத்த ஒருவரைத் தன்னால் நேரில் துன்புறுத்த இயலாத நிலையில், மற்றொருவர் அவரைப் பழிவாங்கித் துன்புறுத்தினார் என்றால், தான் மகிழ்வது இயல்புதானே! இதற்கு ருசிய மூகமலையில் வாழும் மான்களும் விதிவிலக்கல்ல என்பதாம்.

40. அன்னங்கள்

நீடு நெஞ்சு உறு நேயத்தால் நெடிது உறப் பிரிந்து
வாடுகின்றன, மருள்உறு காதலின் மயங்கி,
கூடுநல் நதித் தடம்தொறும் குடைந்தன, படிவுற்று,
ஆடுகின்றன, கொழுநரைப் பொருவின, அன்னம். (4293)

(நீடு - நீண்ட; நேயம் - அன்பு; குடைதல் - மூழ்குதல்; மருள் - வியப்பு; கொழுநர் - கணவர் \ தலைவர்; தடம் - குளம்; படிதல் - மூழ்குதல்; பொருவின - ஒத்தன)

கோடைகாலத்தில் நீர் அற்றுப் போனதால், தான் வசித்திருந்த குளத்தைவிட்டு நீண்ட நாட்கள் பிரிந்து வாழப் போயிருந்த அன்னப்பறவைகள், இப்போது கார்காலம் வந்ததனால் அக்குளம் நல்ல நதியினின்றும் வந்த நீரால் நிரம்பப் பெற்றதால், தம் நீண்ட உள்ளங்களில் மிக்கெழுந்த, அன்புப் பாசத்தால், மீண்டும் வியக்கத்தக்க அன்பினை உடையனவாகி, அவற்றில் மயங்கி, அந்நீர் நிலையில் தோய்ந்து, மூழ்கி விளையாடத் தொடங்கின. இது எப்படி இருக்கிறது என்றால், கோடைகாலத்தில் பொருள்வயின் பிரிந்து சென்ற கணவனை நீண்ட நாட்களாய்ப் பிரிந்திருந்து வாட்டமுற்ற, தலைவியர், இப்போது கார்காலம்

வந்துற்றதனால் காதல் மிகக் கொண்டு மயங்கி, தன் ஊர் வந்துசேர்ந்து, தம் மனைவியருடன் ஊடி, கூடி, ஆடி மகிழ்ந்த தலைவர்களைப் போன்று இருந்தது.

நீண்டகாலம் பிரிந்திருத்தலும், பின் மீண்டுவந்து, கூடுவதும் தலைவர்க்கும், அன்னத்திற்கும் பொதுவான தன்மைகள். "அற்றகுளத்து அறுநீர்ப் பறவை" என்பது ஒரு சொல்லாட்சி.

41. கொக்குகள்

கார் எனும் பெயர்க் கரியவன் மார்பினில் கதிர் முத்து
ஆரமாம் எனப்பொலிந்தன, அளக்க அரும் அளக்கர்
நீர் முகந்த மாமேகத்தின் அருகுஉற நிரைத்துக்
கூரும் வெண்நிறத்திரை எனப் பறப்பன குரண்டம். (4294)

(அளக்கஅரும் - அளவிடற்கியலாத; அளக்கர் - கடல்; மா - கரிய; கதிர் - சுடர் \ ஒளி; திரை - அலை; குரண்டம் - நீர்க்காக்கை \ கொக்கு; கூர்தல் - மிகுதல்; நிரை - வரிசை)

அளவிட்டுக் கூறமுடியாத பெருமையுடைய கடலினின்றும் நீரை முகந்து செல்லுகின்ற கரிய மேகத்தின் அருகில், வரிசையாக மிகுதியாகச் செல்லும் வெண்மைநிறம் கொண்ட கடலைப் போன்ற வெண்மை நிறக்கொக்குகள் பறந்து செல்லுகின்ற தோற்றம், கார்காலம் என்னும் பெயர் கொண்ட கரிய நிறத்தவனான திருமாலின் மார்பில் திகழும் ஒளிவீசும் முத்தாரம் ஆகிய கவுஸ்துப மணியைப் போலத் திகழ்ந்தது.

42. நாரைகள்

மருவி நீங்கல் செல்லா நெடுமாலைய, வானில்
பருவ மேகத்தின் அருகு உறக் குருகினம் பறப்ப,
"திருவின் நாயகன் இவன்" எனத் தேமறை தெரிக்கும்
ஒருவன் மார்பினின் உத்தரீயத்தினை ஒத்த. (4295)

(மருவி - நெருங்கி \ இணைந்து; மாலை - வரிசை; குருகு - நாரைகள்; நாயகன் - தலைவன்; தே - தெய்வத்தன்மையுடைய, மறை - வேதங்கள்; தெரித்தல் - கூறுதல்; ஒருவன் - ஒப்பற்றவன் \ திருமால்; உத்தரீயம் - மேலாடை)

வானத்தில், நீர் பொழிய ஏற்ற தருணத்தில் இருக்கும் கரியமேகத்தின் அருகில், ஒன்றைவிட்டு மற்றொன்று விலகிச் செல்லாது, இணைந்தே, நீண்ட வரிசையாக, தொடர்ந்து இடைவெளியில்லாது, பறந்து செல்லும் நாரை யினத்தின் தோற்றம், "திருமகளின் கணவன் இவன்" என்று தெய்வத் தன்மை பொருந்திய வேதங்கள் தெளிவு படுத்துகின்ற ஒப்பற்றவனான திருமாலின் மார்பில் அணிந்திருக்கும் மேலாடையைப் போன்று இருக்கிறது.

பொதுவாக நாரையும் கொக்கும் வானில் இணைந்தே பறந்து செல்லுவதை இன்றும் நாம் காணலாம். "பருவமேகம்" என்பது கடலினின்றும் நீரை முகந்து

சென்று மழை பொழிவதற்குத் தயாராக இருக்கும் கரிய மேகத்தைக் குறிக்கும் என்க. "குருகு" என்பது பொதுவாகப் பறவையினத்தைக் குறிக்கும் என்றாலும், இங்கு சிறப்பாக நாரை இனத்தைக் குறித்தது என்க. நாரை பறந்து செல்லும் போது அவற்றின் வெள்ளைநிறம் திருமாலின் மேலாடையாகிய உத்தரீயத்தை ஒத்திருந்தது என்றதனால், அவற்றின் கால்களில் உள்ள சிகப்பு நிறம் அவ்வுத்தரீயத்தின் கரை போல இருந்தது என்க. எல்லா இலக்கியங்களிலும் கார்காலத்தின் சிறப்பைக் கூறும் பொழுது, கொக்கும் நாரையும் இணைந்தே இருக்கும் என்று பேசப்படுவதைப் பரக்கக் காணலாம். கரியமேகத்திற்குக் கரிய திருமாலும், வெண்மைநிற நாரைகளுக்கு வெண் பட்டாலாகிய உத்தரீயமும் உவமைகள்.

43. பசும்புல்

உறவெதுப்புறும் கொடுந்தொழில் வேனிலான் ஒழிய,
திறம் நினைப்பஅரும் கார் எனும் செவ்வியோன் சேர,
நிறைமனத்து உறு குளிர்ப்பினின் நெடுநில மடந்தை,
புறமயிர்த்தலம் பொடித்தன போன்றன பசும்புல். (4296)

(நினைப்ப அரும் - நினைத்தற்கரிய; குளிர்ப்பு - மகிழ்ச்சி; மயிர்த்தலம் பொடித்தல் - மயிர்க்கூச்செறிதல் \ புளகாங்கிதம் அடைதல்; உற - மிகுதி; செவ்வியோன் - நற்குணமுடையவன்)

உலகத்து மக்களை மிகவும் வெதும்பும்படி செய்கின்ற கொடிய தொழிலை உடைய கோடைகாலமாகிய முதுவேனில் என்னும் அரசன் நீங்கவும், அவ்விடத்தில் நினைத்தற்கும் அரிய நன்மைபுரியும் நற்பண்புகள் வாய்க்கப் பெற்ற கார்காலம் என்னும் அரசன் வந்து அரசேற்கவும், அது கண்ட நீண்ட நிலம் என்னும் பெண்ணாள், திருப்தியான மனத்துடன் மகிழ்ச்சியுறும் போது, அவளுடைய புறஉடலில் எங்கும் மயிர்க்கூச்செறிந்தது போன்று, நிலத்தில் மழைபெய்ததால் பசும்புற்கள் முளைத்திருந்தன.

கார்கால மழையால் நிலத்தில் பசும்புற்கள் தோன்றலாயின. அந்தத் தோற்றத்திற்குக் கவிஞன் ஒரு உவமை கூறுகிறான். கொடுமை மிகுந்த வேனிற்கால அரசன் போன பிறகு, தண்மை மிகுந்த கார்காலம் என்னும் அரசன் வந்ததால் நிலமடந்தை நிறை மனம் கொண்டு மகிழ்ச்சியடைந்தாள். அந்த மகிழ்ச்சியால் அவள் உடல் எங்கும் புளகாங்கிதம் அடைந்து புல்லரித்தது. அதைப்போல பசும்புற்கள் தரையில் முளைக்கலாயின என்கிறான் கவிஞன். வேனிலான் ஒளியால் செவ்வியனாய் இருந்தாலும், தொழிலால் கொடுமை உடையவனாய் இருப்பதும், கார்காலத்தான் ஒளியால் இருண்டு கருமையுடைய வனாய் இருந்தாலும் தொழிலால் தண்மை உடையவனாய் இருப்பதும் தெரிவிக்க "கொடுந்தொழில் வேனிலான் எனவும்", "கார் எனும் செவ்வியோன்" எனவும், கூறிய நயம் நோக்குக. கொடுமையும், செம்மையும் அவரவர் செயலாலேயே அறியப்படவேண்டும். நிறத்தாலோ, உருவத்தாலோ அல்ல

என்பதை உணர்த்தும் பாடல் இது. மகிழ்ச்சியாலும், குளிர்ச்சியாலும் உடம்பில் மயிர்க்கூச்செறிதல் நிகழ்வது இயல்பு என்பதை நினைவிற் கொள்க. காய்ந்து கிடந்த நிலத்தில் கார்கால மழை பெய்ததால், நிலம் குளிர்ந்தது. அதனால் நிலம் மயிர்க்கூச்செறிந்தது. அதன் வெளிப்பாடுதான் இந்தப் புற்கள் முளைத்தது என்று கூறியது ஒரு நயம்.

44. தேன் அவாம் மலர்த் திசைமுகன் முதலினர் தெளிந்தோர்
ஞானநாயகன் நவையுற, நோக்கின நல்கக்
கானம் யாவையும் பரப்பிய கண்ணின் அச்சனகன்
மானை நாடி நின்று அழைப்பன போன்றன மஞ்ஞை. (4297)

(தேன் - வண்டுகள்; அவாம் - அவாவும் \ விரும்பும்; திசைமுகன் - நான்முகன் \ பிரமன்; தெளிந்தோர் - முனிவர்கள் \ தீர்க்கதரிசிகள்; நவை - துன்பம்; நல்குதல் - தேடித்தருதல்; பரப்பிய - நிரம்பி இருக்கின்ற; நாடி - தேடி; அழைப்பன - கூவுதல்)

வண்டுகள் விரும்பி அமர்கின்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் நான் முகனாகிய பிரமனுக்கும், மற்றைய முனிவர்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோர்க் கெல்லாம் ஞானத் தந்தையாக விளங்குகின்ற இராமன் துன்பம் அடைந் திருப்பதைக் கண்ட, அந்தக் கார்காலத்தில் தோகை விரித்தாடிக் கூவித்திரிந்த மயில்களின் தோற்றம், அவனுக்குச் சனகன் மகளாகிய மான்போன்ற மருண்ட விழிகளைக் கொண்ட சீதாதேவியைத் தங்களது தோகைகளில் இருக்கின்ற ஆயிரம் கண்களையும் கொண்டு இக்கானம் முழுவதும் எப்படியும் தேடிக் கண்டுபிடித்துத் தருவோம் என்றும், அக்கண்களுக்குப் புலப்படாவிட்டால், தங்கள் வாயால் அகவி - கூவி - அவனிடம் கொண்டு வந்து சேர்ப்போம் என்றும் கூறுவது போலிருந்தது.

மயிலின் தோகையில் ஆயிரம் கண்கள் இருக்கின்றன என்று கூறுவது ஒரு இலக்கிய முறை. அந்தக் கண்கள் சீதையைத் தேடுவது போலவும், அவை கூவுவது, சீதையைப் பெயர் சொல்லி அழைப்பது போலவும் இருக்கிறது என்பது ஒரு மிகச்சிறந்த கற்பனை. இதைப்போலவே முன்பு இராமனும் மயில்களை நோக்கி உன்னுடைய ஆயிரம் கண்களுக்கும் தெரியாமல் சீதை எங்கே ஒளிந்து கொள்ளமுடியும்? "ஆயிரம் கண்உடையாய்க்கு ஒளிக்கும் ஆறு உண்டோ" என்று கேட்டு இரங்கியதையும் இங்கே நினைவு கூர்க. "திசைமுகன் முதலினர் தெளிந்தோர் ஞானநாயகன்" என்பது இராமன் தெய்வத்தன்மையன் என்பதைக் குறிப்பால் உணர்த்தியது என்க. "வேதம், வேதியர், விரிஞ்சன் முதலோர் தெரிகிலா ஆதியோர்" என்று முன்பு கூறியதையும் நினைக. ஞானமே வடிவமாகிய தலைவன் என்றலும் பொருந்தும்.

45. செந்தாமரையின் பொலிவு

செஞ்செவ்வேலவர், செறிசிலைக் குரிசிலர், இருண்ட
குஞ்சி சேயொளி கதுவுறப் புதுநிறம் கொடுக்கும்

பஞ்சி போர்த்த மெல்லடி எனப் பொலிந்தன பதுமம்;
வஞ்சி போலியர் மருங்கு என நுடங்கின வல்லி. (4298)

(செஞ்செவ் - செக்கச்சிவந்த; செறி - கட்டமைந்த; குரிசில் - தலைவர்; இருண்ட - கறுத்த; குஞ்சி - ஆண்களின் தலைமயிர்; சே - சிவந்த; கதுவுதல் - பதிதல் \ பற்றுதல்; பஞ்சி - செம்பஞ்சு; போர்த்த - ஊட்டிய \ மூடிய; பதுமம் - தாமரை மலர்கள்; வஞ்சி - பூங்கொடி; போலியர் - போன்றவர்; மருங்கு - இடை; நுடங்குதல் - நடுங்குதல் \ அசைதல்; வல்லி - கொடி)

பகைவர்களை அழித்தலால் எப்போதும் இரத்தம் தோய்ந்து செக்கச் செவேல் எனக் காணப்படும் நுனியையுடைய வேற்படையை ஏந்தியவர்களும், கட்டமைந்த விற்படையைத் தாங்கிய வீரர்களும் ஆகிய இவர்களின் கரிய தலைமுடி, சிவந்த ஒளி பெற்றுப் புதுநிறம் பெற்றது போலாயிற்று. எப்படி ஊடல் காலத்தில் அவ்ஊடலைத் தீர்க்கக் கருதும் தலைவர்கள், தலைவியரின் செம்பஞ்சுக்குழம்பு ஊட்டிய பாதங்களில் பணிய, அவர்கள் தம் பாதங்களால் தலைவர்கள் தலைமுடியில் உதைய, பாதங்களில் இருந்த செம்பஞ்சுக்குழம்பு, தலைமுடியின் மேற்பட்டதால் கரிய தலைமுடி செம்முடி ஆகிய ஒரு புதுநிறம் பெற்றிருக்குமோ, அதைப்போல ஒளிபெற்றுத் திகழ்ந்தன தாமரை மலர்கள். அப்போது வஞ்சிக் கொடி போன்ற அம்மகளிரின் நுண்ணிய இடை அசைவது போலப் பூங்கொடிகள் அசைந்தாடின.

முதல் அடியில் ஆடவர்களின் வீரச்சுவையையும், பின் அடிகளில் அவர்களின் இன்பச்சுவையையும் ஒருங்கே கூறிய கவிஞனின் நயம் நோக்குக. முன்பு பால காண்டத்திலேயே "மாதர் புலவிகள் திருத்திச் சேந்த குஞ்சியர்" என்றதும் நினைவுகூர்க. "மாதர் வலிய நெடும்புலவியினும் வணங்காத மகுடநிரை" என்றும், "வணங்குதல் மகளிரின் ஊடல் நாளினும் உளதோ? என்றும் இராவணனின் கூற்றாக யுத்தகாண்டத்தில் கூறப்போவதையும் இங்கு நினைவிற் கொள்க. இயற்கையிலேயே பெண்டிரின் பாதங்கள் சிவந்த நிறமுடையன; அவற்றிற்கு மேலும் செம்பஞ்சு ஊட்டினால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தன செழிப்புற்ற தாமரை மலர்கள் என்பதாம்; மாதரின் பாதங்களுக்குத் தாமரை மலரும், அவர்களின் இடைக்கு வஞ்சிக் கொடியும் உவமைகள். செவ்வேலவர் என்றாலே போதுமானது. செஞ்செவ் வேலவர் என்பது மிகுதி குறித்த சிறப்பு என்க. பொதுவாக எல்லா இலக்கியங்களிலும் செம்பஞ்சுக் குழம்பு "ஊட்டிய" என்பர்; அல்லது "பூசிய" என்பர்; அல்லது "தீட்டிய" என்பர்; கம்பன் இங்கு "போர்த்த" என்ற சொல்லைப் பெய்து, பாதங்களின் மென்மையின் மேன்மையைத் தெளிவுபடுத்தினான் என்க.

46. குயில்கள் கூவாது அடங்குதல்

"நீயிர் அன்னவள் குதலையர் ஆதலின், நேடிப்
போய் அத்தையலைத் தருதிர்" என்று, இராகவன் புகலத்
தேயம் எங்கணும் திரிந்தன போந்து இடைத்தேடிக்
கூயவாய், குரல் குறைந்த போல் குறைந்தன, குயில்கள். (4299)

(குதலை - மழலைச் சொல்; தையல் - அழகு \ சீதை; தேயம் - தேசம் \ உலகம்; கூய - கூவிஅழைத்த; நேடி - தேடி)

இராமன் குயில்களை நோக்கி, "நீங்கள் சீதாதேவியின் மழலைச்சொல் போல இனிமையாகப் பேச வல்லவர்கள், ஆதலின் என்னை விட்டுப் பிரிந்து சென்ற என் மனைவி சீதையை நீங்களே சென்று தேடி என்னிடம் கொண்டு வந்து தாருங்கள்; இதற்கு நீங்கள் தான் தக்கவர்கள்"; என்று கூற, குயில்கள் அதற்கு இசைந்து, இவ்வுலகம் எல்லாம் திரிந்து சென்று தேடிப்பார்த்து, ஒவ்வொரு இடத்திலும் நின்று உரக்கக் கூவிக் கூவி சீதையை அழைத்தன. அதனால் அவற்றின் குரல் மங்கிப்போய்க் குறைந்து போய், ஒடுங்கிப்போய், இப்பொழுது கூவமுடியாமல் போனது.

இயற்கையிலேயே கார்காலத்தில் குயில்கள் கூவித்திரியாது. அடங்கியே இருக்கும். இது இயல்பு. மயில்தான் ஆடிக்களிக்கும். இதற்குக் கவிஞன் ஒரு காரணம் கற்பிக்கிறான். தான் அக்குயில்களிடம் தன் மனைவியைத் தேடிக் கண்டுபிடித்துத் தரவேண்டிக் கேட்டதாகவும், அதற்கு அவைகள் இசைந்து உலகமெல்லாம் கூவிக் கூவித் தேடியதால் இப்பொழுது குரல் குறைந்து போய்க் கூவமுடியாமல் போனது என்றும் கூறுகிறான். என்ன கற்பனை! என்ன நயம்! இவ்வாறு பேசாத இயல்புடைய விலங்கு, பறவை போன்ற உயிரினங்கள் கூடப் பேசுவதாகக் கூறுவது கவிஞர் இயல்பு. "கேட்டுநபோலவும், கிளக்குந போலவும் அஃறிணை மருங்கினும் அறையப்படுமே" என்பது நன்னூல். குதலை என்பது குழந்தைப்பருவத்துக்கே உரிய புரியாத மொழி என்றாலும், மங்கையருக்குக் கூறும்பொழுது, அது எல்லாப்பருவத்து மங்கையர்க்கும் பொருந்தும் எனக் கொள்க.

47. பொழிந்த மாநிலம் புல்தரக் குமட்டி அப் புனிற்று ஆ
எழுந்த ஆம்பிகள் இடறின; செறிதயிர் ஏய்ந்த;
மொழிந்த தேனுடை முகிழ்முலை ஆய்ச்சியர் முழவில்
பிழிந்த பால்வழி நுரையினைப் பொருவின பிடவம். (4300)

(தர - தோற்றுவிக்க; குமட்டுதல் - தெவிட்டுதல்; புனிற்றுஆ - கன்றை அப்பொழுதான் ஈன்ற பசு; செறிதயிர் - கட்டித்தயிர்; ஏய்ந்த - ஒத்திருந்தன; முகிழ் - நீர் மொக்குள் \ அரும்பு; ஆய்ச்சியர் - இடைச்சியர்; முழவு - குடம்; பிழிந்த - கறந்த; பொருவுதல் - ஒத்திருத்தல்; தேன் - சொல் ; பிடவம் - கார்காலத்தில் பூக்கும் முல்லை நிலச் செடிவகையுள் ஒன்று; ஆம்பிகள் - காளான்கள்)

மழை மிகுதியாகப் பெய்யவும், பூமியில் எங்கும் புல் தோன்றும். அந்தப் புற்களை வயிறு நிரம்ப உண்டு தெவிட்டிய, அப்பொழுதுதான் கன்றை ஈன்ற பசு, எழுந்து தன் கால்களால் அருகிலுள்ள காளான்களைச் சிதைக்கும். தேன் போன்ற இனிய சொற்களையும், அரும்பு போன்ற கொங்கைகளையும் உடைய இடைச்சியர், குடத்தில் கறந்த பாலிலிருந்து வழியும் நுரையினைப் போல வெண்மையாகப் பிடவம் என்னும் மலர்கள் பூத்திருக்கும்.

காளான்கள் கெட்டித் தயிர் போலவும், பிடவங்கள் பூத்திருப்பது, பால், நுரைபோல வெண்மையாகவும் இருக்கும் என்பதாம். குமட்டுதல் என்ற சொல் இன்றும் இதே பொருளில் வழங்குதல் காணலாம். புனிற்று ஆ என்பது, அப்பொழுதுதான் கன்றை ஈன்ற பச்சைப் பசுவினைக் குறிக்கும். இப்பொழுது குழந்தை ஈன்றெடுத்த பெண்ணை "பச்சை உடம்புக்காரி" என்று கூறுவது போல; முகிழ் என்பது அரும்பு என்ற பொருள் தந்தாலும், நீர் மொக்குள் என்ற ஒரு பொருளும் தரும். நீர் மொக்குள் போன்ற கொங்கைகளை உடைய இடைச்சியர் என்பது பொருள். "வெண்ணெய் போன்று ஊறு இனியள்; மேம்பால் போல் தீஞ்சொல்லள்; உண்ண உருக்கிய ஆகுநெய்போல் மேனியள்" என்பது சீவகசிந்தாமணி. பசுவினால் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே, பெண்ணை வருணிக்கின்ற திருத்தக்க தேவரின் கற்பனை வளத்தை நோக்குக.

48. பலவகை மலர்களும் மலர்தல்

வேங்கை நாறின, கொடிச்சியர் வடிக்குழல், விரைவண்டு
ஏங்க; நாகமும் நாறின, நுளைச்சியர் ஐம்பால்;
ஆங்கு நாள் முல்லை நாறின, ஆய்ச்சியர் ஓதி;
ஞாங்கர் உற்பலம் உழத்தியர் பித்திகை நாற. (4301)

(உற்பலம் - நீலோற்பல மலர் \ செவ்வாம்பல் மலர்; நாறுதல் \ மணம் வீசுதல்; கொடிச்சியர் - குறக்குலப்பெண்கள்; வடிவு - அழகு; விரை - நறுமணம்; நுளைச்சியர் - செம்படவர்கள் \ வலையர் குலப்பெண்கள்; ஐம்பால் - கூந்தல்; நாகம் - சுரபுன்னை மலர்கள்; ஆய்ச்சியர் - இடைக்குலப் பெண்கள்; ஓதி - கூந்தல்; ஏங்குதல் - வருந்துதல்; வடித்தல் - அலங்கரித்தல் \ திருந்தச் செய்தல்; பித்திகை - கூந்தல்; ஞாங்கர் - பக்கம்; நாள் - அன்றலர்ந்த \ புதிய)

குறிஞ்சி நிலத்துக் குறக்குலப் பெண்களின் அழகாக அலங்கரிக்கப்பட்ட கூந்தல், அந்நிலத்திற்குரிய வேங்கை மலரின் மணம் வீசியது. முன்பு அவர்களின் இயற்கை நறுமணத்தை நுகர்ந்து கொண்டிருந்த வண்டுகள் வருத்தமுற்று இப்போது விலகிச் செல்லலாயின; நெய்தல் நிலத்துச் செம்படவப் பெண்களின் ஐந்தாகப் பகுக்கப்பட்ட கூந்தல், அந்நிலத்திற்குரிய சுரபுன்னை மலர் மணம் வீசியது. அருகிலிருந்த மருதநிலத்துப் பெண்களான உழத்தியர் களின் கூந்தல் நீலோற்பல மலரின் மணம் வீசியது.

நான்கு வகைப்பட்ட நிலங்களையும் கூறி, அங்குள்ள மக்களின் வாழ்க்கை நெறியையும் கூறி, அந்நிலத்திற்குரிய கருப்பொருளையும் கூறி, அந்தந்த மக்கள் அந்தந்த நிலத்திற்குரிய வாசனை பொருந்திய மலர்களைச் சூடியிருந்தனர் என்றும் கூறிய நயம் நோக்குக.

கிட்கிந்தை மலையில் நான்குவித நிலங்களின் மலர்களும் பூத்தன. குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்பன பண்டைத் தமிழர் வகுத்த நான்கு நிலப் பிரிவுகள். அந்நிலத்திற்குரிய மலர்கள் முறையே வேங்கை, சுரபுன்னை, முல்லை, நீலோற்பலம் என்பன அங்குவாழும் மகளிர் கொடிச்சியர்,

நுளைச்சியர், ஆய்ச்சியர், உழத்தியர் என்று வழங்கப்பெறுவர். குழல், ஐம்பால், ஓதி, பித்திகை என்பன, கூந்தல் என்னும் ஒரே பொருளைத்தரும் பல சொற்கள். ஐம்பால் என்பது ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட கூந்தலைக் குறிக்கும். அவை குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன. குழலையும் அளகத்தையும் வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும், பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும் முடிக்கப்படுவது என்பது விளக்கம். இவற்றை ஐந்து தன்மையுடைய கூந்தல் என்றும் கூறுவதுண்டு. அவை மணம், மது, மென்மை, நெய்ப்பு, கருமை, என்பனவாம். இதனை வேறு வகையாகவும் கூறுவதுண்டு. கூந்தலை உச்சியில் முடித்தல், பக்கத்தில் கொண்டை போடுதல் பின்புறம் செருகுதல், சுருட்டி முடித்தல், பின்னி விடுதல் என்பனவாம்.

49. இராமன் வருந்துதல்

தேரைக்கொண்ட பேர் அல்குலாள் திருமுகம் காணான்
ஆரைக்கண்டு உயிர் ஆற்றுவான்? நல்உணர்வு அழிந்தான்;
மாரற்கு எண்இல் பல்லாயிரம் மலர்க்கணை வகுத்த
காரைக் கண்டனன்; வெந்துயர்க்கு ஒருகரை காணான். (4302)

(திரு - அழகிய; மாரன் - மன்மதன்; எண்இல் - அளவற்ற; வகுத்த - உண்டாக்கித்தந்த; கார் - மழைக்காலம்)

தேர்த்தட்டைப் போன்ற அகன்ற அல்குலைக் கொண்ட சீதையின் அழகிய முகத்தைக் காணமுடியாதவனாகிய இராமன், இவ்வுலகில் வேறு யாரைக் கண்டு தன் உயிரைத் தாங்கிக் கொண்டிருப்பான்? மன்மதனுக்கு அளவற்ற பல்லாயிரக் கணக்கான மலர் அம்புகளைப் பூத்துத் தந்திருக்கின்ற கார்காலத்தைப் பார்த்தான். தனது நல்ல அறிவு, உணர்ச்சி முதலியவைகளை இழந்தான்; அவன் அடைந்த கொடிய துயரத்திற்கு ஒரு எல்லையே காணமுடியாதவனாகி அத்துயரிலேயே மூழ்கியிருந்தான்.

இயற்கையிலேயே கார்காலத்தில் எல்லா மரங்களும் மலர்களைப் புஷ்பிக்கும். அதனை, அவை மன்மதன் மலரம்புகளாகக் கருதி இராமனின் நல் உணர்வை அழிப்பதற்காகவே அவை புஷ்பித்தன என்று கூறிய கவிஞனின் திறம் நோக்குக. சீதையின் திருமுகத்தைக் காணாது வருந்தி உணர்வு அழிகின்ற இராமன், அதற்கு ஈடாக வேறு எந்தப் பொருளையும், ஆரையும் கண்டு உயிர் தரித்திருக்க வழியில்லை. காரணம் சீதைக்கு ஒப்பார் யாரும் இல்லை என்பதாம்.

50. அளவுஇல் கார் எனும் அப்பெரும் பருவம் வந்து அணைந்தால்,
தளர்வர் என்பது தவம் புரிவோருக்கும் தகுமால்;
கிளவி தேனினும் அமிழ்தினும் குழைத்தவள் வளைத்தோள்
வளவி உண்டவன் வருந்தும் என்றால் அது வருத்தோ? (4303)

(தகும் - பொருந்தும்; கிளவி - சொற்கள்; வளவி - கலந்து; உண்ணுதல் - துய்த்தல்)

பெருமை பொருந்திய இந்தக் கார்காலம் என்னும் பெரும்பருவம் இப்போது வந்திருக்கும் போது, முற்றும் துறந்து தவமியற்றும் முனிவர்களும் கூடத் தன் மனவுறுதியில் சற்றுத் தளர்ந்து போவர் என்பது இயற்கை. அது அவர்களுக்கும் கூடப் பொருந்துவதாகும். அவ்வாறிருக்க, தேனிலும், அமிழ்தத்திலும் குழைத்த இனிய சொற்களையுடைய, வளையல்கள் அணியப்பெற்ற தோள்களை உடைய, சீதாதேவியினிடம் ஐம்புலன் நுகர்ச்சிகளையும் கலந்து, துய்த்தவனான இராமன், அவள் பிரிவால் கார்காலத்தில் வருத்தப்படுகிறான் என்றால், அது மிக எளிமையான வருத்தம் என்று கூறும் தகுதி படைத்ததோ? அது பெருந்துன்பம் அல்லவா?

பொதுவாக ஓராண்டில் பனிரெண்டு மாதங்களையும் ஆறு பெரும் பருவங்களாகப் பிரித்திருக்கின்றனர் முன்னோர். ஒவ்வொரு பருவமும் இரண்டு மாதங்களைக் கொண்டதுதான். இங்கே கார்காலத்தோடு கூதிர் காலத்தையும் சேர்த்துக் கொண்டதால் அது நான்கு மாதங்கள் ஆகிவிட்டதால் இதை அளவில் பெரும் பருவம் என்றார் என்க. மற்றும் ஒன்று, பிரிவுத்துயரில் வாடுபவர்களுக்குச் சாதாரணமாகவே ஒருநாள் போவது ஒருயுகம் போவது போல நீண்ட பொழுதாகத் தோன்றும். அதனாலும் இவ்வாறு கூறினார் என்க. இங்கே "தவம்புரிவோர்கட்கும் தகுமால்" என்பது இப்பொழுது தவவிரதத்தில் ஈடுபட்டுக் காட்டில் வாழும் இராமனையும் உட்படுத்திக் கூறியதே என்பதையும் உணர்க. ஐம்புலன் நுகர்ச்சிகளையும் நன்கு அனுபவித்த பின், அவற்றை விட்டு விலகியிருத்தல் தணிக்கப்பட முடியாத பெருந்துன்பம் என்பதைக் குறிப்பால் உணர்த்தினார் என்பதாம். சீதையின் சொற்களின் இனிமையைக் காப்பியத்தில் பல இடத்தும் கூறியிருப்பதை நினைவு கொள்க. மற்ற இலக்கியங்களிலும் பெண்களின் சொற்கள் பற்றி இவ்வாறே கூறியிருப்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது.

51. காவியும், கருங்குவளையும், நெய்தலும், காயாம்
பூவையும், பொருவான் அவன், புலம்பினன், தளர்வான்,
"ஆவியும் சிறிது உண்டு கொலாம்" என அயர்ந்தான்,
தூவி அன்னம் அன்னாள் திறத்து இவைஇவை சொல்லும். (4304)

(பொருவுதல் - ஒத்திருத்தல்; ஆவி - உயிர்; தூவி - சிறகு; திறத்து - சார்பாக; புலம்புதல் - தனிமையில் துயருறுதல்; அயர்தல் - மூச்சற்றுக்கிடத்தல் \ சோர்தலுமாம்)

காவிமலர், கருங்குவளை மலர், நெய்தல் மலர், காயாம்பூ இவற்றை யெல்லாம் நிறத்தால் நிகர்த்த நீலமேனியனான இராமன், சீதையின் பிரிவால் தனிமைத் துயரில் புலம்பி, உடலும் உள்ளமும் தளர்பவனானான்; "இவனுக்கு ஓரளவாவது உயிர் இருக்கிறதோ?" என்று காண்பவர்கள் ஐயுறும் வண்ணம் உடல் சோர்ந்து மூச்சற்று இருந்த இராமன், சற்றுத் தெளிந்து, மெல்லிய இறகு களையுடையதும், மென்மையான நடையையுடையதுமான அன்னப்பறவை போன்றவளாகிய சீதையின் சார்பாக அவளிடம் பேசுவது போலக் கீழ்வரு வனவற்றைக் கூறலுற்றான்.

காவி, கருங்குவளை, கருநெய்தல், காயாம்பூ இவை அனைத்தம் தம்முள் சிறுசிறு வேறுபாடு உடைய ஒரே இனத்தைச் சேர்ந்த மலர் வகைகள். இவைகள் இராமனின் கரிய, நீல மேனிக்கு உவமைகள். பிரிவுத் துயர்க்குரிய அவஸ்தை களான புலம்பல், தளர்தல், அயர்தல்,மொழிபல கூறல் என்பவை இங்கு குறிக்கப பட்டன.

52. இராமன் சீதையை நினைத்துப் புலம்புதல் – (13 பாடல்கள்) மேகத்தோடு புலம்புதல்

"வார்ஏர் முலையாளை மறைக்குநர் வாழ்
ஊரே அறியேன்; உயிரோடு உழல்வேன்;
நீரே உடையாய்! அருள்நின் இலையோ?
காரே! எனது ஆவி கலக்குதியோ?" (4305)

(கார் - கரியமேகம்; வார் - கச்சு; ஏர் - அழகிய; உழல்தல் - திரிதல்; ஆவி - உயிர்)

"கார்மேகமே! கச்சையணிந்த அழகிய கொங்கைகளையுடைய சீதாதேவியை அபகரித்துக் கொண்டு சென்று மறைத்து வைத்திருப்பவர்கள் வாழ்கின்ற ஊர் இன்னது என்பது கூட அறிய முடியாமல், இன்னும் உயிரை வைத்துக்கொண்டு அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன்; நீயோ தண்ணீரை உன் உள்ளில் வைத்திருக்கிறாய்; ஆனால் தண்ணீருக்குள்ள தண்மை, குளிர்ச்சி, கருணை என்பது சற்றும் இல்லாதிருக்கிறாயே! என் உயிரை இவ்வாறு வாட்டி வதைத்துக் கலக்குகின்றாயே?" என்றான் இராமன்.

அவளை அபகரித்துக் கொண்டு சென்றவன் இராவணன் என்பது சடாயு சொல்லித் தெரியுமே தவிர, அவன் எங்கே இருக்கிறான், அவனுடைய படை வலிமை என்ன என்பதை அறியாதவனாகவும், என் மனைவியை அபகரித்துச் சென்றவனை உடனே வாளால் வெட்டிக் கொல்லாது வீணாக இன்னும் உயிர் வாழ்ந்து அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேனே என்றும் தன்னைத் தானே நொந்து கொள்ளுகிறான் என்க. கார்மேகம் என்பது, தன் இடத்தில் நீரையும் நீர்மையையும் கொண்டிருக்கவேண்டும். ஆனால் அது தன் பெயருக்கு உற்ற நீரை மட்டுமே கொண்டிருக்கிறது, நீர்மைத்தன்மையாகிய கருணையைக் கொண்டிருக்கவில்லை. எனவேதான் அது என் உயிர்போகும்படி என்னைக் கலக்கிக் கொண்டிருக்கிறது என்கிறான் இராமன்.

இங்கே ஒன்று நோக்க வேண்டும். பொதுவாகத் தலைவியையோ, தலைவனையோ, பிரிந்தவர்கள், நீண்ட சொற்களைக் கூறிப் புலம்பமாட்டார்கள். சிறுசிறு சொற்களைத் தான் கூறி அழுவார்கள் என்பது உலக இயற்கை. அதைப்போலவே இங்கே கம்பனும் இந்தக் கலிவிருத்தத்தில் புலம்பல் சந்தத்தில் சிறுசிறு சொற்களைத் தொடராக அமைத்துள்ள நயம் காண்க. ஏனைய இலக்கியங்களும் பிரிவாற்றாமையின் போது, புலம்பல் சந்தத்தைக் கலிவிருத்தத்தில் சிறுசிறு சொற்றொடர்களை வைத்தே அமைத்திருத்தலையும் காணலாம்.

53. "வெப்பு ஆர்நெடு மின்னின் எயிற்றை வெகுண்டு,
எப்பாலும் விசும்பின் இருண்டு எழுவாய்;
அப் பாதக வஞ்ச அரக்கரையே
ஒப்பாய்; உயிர் கொண்டுஅலது ஓவலையோ?" (4306)

(வெப்புஆர் - வெம்மை நிறைந்த; எயிறு - பல் \ கோரப்பல்; பாதகம் - கொடுஞ்செயல்; ஓவல் - நீங்குதல்)

"வெப்பமும் கொடுமையும் நிறைந்த மின்னல்களாகிய பற்களையுடைய கரியமேகமே! நீ சினந்து கறுத்து ஆகாயத்தின் எல்லாப் பக்கங்களிலும் நிறைந்திருக்கின்றாய்; எனவே, நீயும் அந்தக் கொடிய செயலைச் செய்யும் மாய அரக்கர்களையே ஒத்தவன் ஆவாய்; நீ என் உயிரைக் கவர்ந்து கொள்ளாது இவ்விடம் விட்டு நீங்க மாட்டாயோ?" என்று புலம்பினான் இராமன்.

வானத்தில் தோன்றும் மின்னலை, மேகத்தின் ஒளிமிக்க பல் என்றார் என்க. கருண்டு, சினத்த மேகத்தை அரக்கர்க்கு ஒப்பாகக் கூறினார். அரக்கர் சீதையைக் கவர்ந்து சென்றது போல், நீயும் எனது உயிரைக் கவர்ந்து செல்லாமல் விடமாட்டாயோ? என்று ஏங்கிப் புலம்புகிறான் என்பதாம்.

54. மயிலொடு புலம்புதல்

"அயில்ஏய் விழியார், விளை ஆர் அமிழ்தின்
குயில்ஏய் மொழியார், கொணராய்; கொடியாய்!
துயிலேன் ஒருவேன் உயிர் சோர்வு உணர்வாய்;
மயிலே! எனை நீ வலி ஆடுதியோ?" (4307)

(அயில் - வேல்; ஏய் - ஏய்ந்த \ இயைந்த \ ஒத்த; ஒருவன் - தனித்திருப்பவன்; ஆடுதல் - காட்டுதல்; விளைதல் - உண்டாதல் \ தோன்றுதல்; வலிஆடுதல் - வன்மை காட்டி வருத்தித் துன்புறுத்துதல்)

"மயிலே! வேற்படையைப் போன்று கூரிய கண்களையும், பாற்கடலில் தோன்றிய அரிய அமிழ்தத்தையும், குயிலின் மொழி போன்ற இனிமையான சொற்களையும் உடைய சீதாதேவியை என்னிடம் கொண்டு வந்து தர மாட்டாய்; நீ மிகக் கொடியவள். அத்தோடு மட்டுமல்லாமல், நான் அவளது பிரிவால் துயருற்று உறக்கம் கொள்ளாது உயிர் சோர்வுற்றுத் தளர்ந்து போயிருக்கிறேன் என்பதை நீ நன்கு அறிந்திருந்தும், உன் வலிமையைக் காட்டி என்னைத் துன்புறுத்துகின்றாயோ?" என்றான், இராமன்.

சீதையைப் பிரிந்திருப்பதால் மயிலைக் கண்டவுடன், இராமனுக்குச் சீதையின் கூந்தலும், சாயலும், அவள் இனிய மொழிகளும் நினைவிற்கு வந்து அவனை வருத்தியதாலும், தான் தனித்திருப்பதையும், உயிர்போய்ச் சோர்ந்திருப்பதையும் அறிந்த மயில், தன்னைத் தேற்றாது தோகை விரித்து ஆடியதால் தனது வலிமையைக் காட்டித் தன்னைத் துன்புறுத்துகிறதே என்று கருதியும் மயிலைக் "கொடியாய்" என்றான் என்க. "நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும், அல்லது செய்தல் ஓம்புமின்" என்பது புறநானூறு; "உபகாரம் செய்யவில்லை என்றாலும்

உபத்திரவம் செய்யாமல் இரு" என்பது உலக வழக்கு. ஒருவர் உயிர் சோர்ந்திருக்கும் போது அவர்முன் வந்து வலிமை காட்டுதல் வீரத்தின்பாற் பட்டதாகாது. எனவே "என்னை நீ வலி ஆடுதியோ?" என்றான் என்க.

55. கொடியோடு புலம்புதல்

"மழை வாடையொடு ஆடி, வலிந்து, உயிர்மேல்
நுழைவாய்; மலர்வாய் நொடியாய் - கொடியே!
இழைவாள் நுதலாள் இடைபோல், இடையே
குழைவாய்; எனது ஆவி குழைக்குதியோ?" (4308)

(வலிந்து - வலிமைபெற்று; இழை - இழைதல் \ நெருங்கிப் பழகுதல் \ கூடியிருத்தல் \ அணிகலன்; வாள் - ஒளி; நுதல் - நெற்றி; இடையே - நடுவே; குழைதல் - துவள்தல்; குழைத்தல் - வருத்துதல் \ துன்புறுத்துதல்; நொடித்தல் - கொல்லுதல்; ஆடுதல் - அசைதல்)

"பூங்கொடியே! மழைக்காலத்து வந்த மழையோடும் வாடைக்காற்றோடும் சேர்ந்து வலிமை பெற்று அசைந்து, என் உயிர்க்குள் நுழையும் ஆற்றல் பெற்றுவிட்டாய்! நீ மிக மகிழ்ந்தும் காணப்படுகின்றாய்; சுட்டி என்னும் அணிகலன் அணிந்தவளும் என்னுடன் மிக நெருங்கிப் பழகியவளும், ஒளிபொருந்திய நெற்றியை உடையவளுமான சீதையின் இடையைப் போல, நீயும் நடுவே குழைந்து துவண்டு காணப்படுகிறாய். எனது உயிரைத் துன்புறுத்தித்தான் தீருவையோ? சொல்லுவாயாக!" என்றான் இராமன்.

பொதுவாக வல்லிப் பூங்கொடி, நொந்தவரை வருத்தும் தன்மைத்து அன்று. அது இப்பொழுது பிரிந்தாரை வருத்துவதில் சிறந்த மழைக்காலத்து வாடைக்காற்றோடு சேர்ந்து கொண்டதால் வலிமை பெற்று, தனியனாக இருக்கின்ற இராமனின் உயிர் கவரும் பொருட்டு அவன் உயிருக்குள் நுழையும் ஆற்றல் பெற்று விட்டது. எனவே மலர்ந்தும் மகிழ்ச்சியுற்றும் இருக்கிறது என்பதாம். பூங்கொடி காற்றில் அசைந்தாடுவதை நோக்கிய இராமனுக்குத் தன்மனைவி சீதையின் நுண்ணிய இடை நினைவிற்கு வந்ததால், அப்பூங்கொடியை நோக்கித் தனது உயிரைத் துன்புறுத்தித்தான் செல்லுவையோ என்று கேட்கிறான் என்பதாம். தனக்குரிய இயல்பினின்றும் மாறித் தன்னைச் சார்ந்தார் இயல்பு பெறுதல் உயிரினங்களுக்கு உரிய இயல்புதான். "சான்றாண்மை தீயினம் சாரக் கெடும்" என்பது நாலடியார் 180. "தீயாரோடு இணங்கி இருப்பதுவும் தீது" என்பது மூதுரை 9. "கொடியாய் கொடியே!". "இடைபோல் இடையே" "குழைவாய் குழைக்குதியோ" என்ற சொல்லாட்சிகள் சுவைக்கத்தக்கன.

56. மானோடு புலம்புதல்

"விழையேன் விழைவானவை; மெய்ம்மையின் நின்று
இழையேன்; உணர்வேன்; நவை இன்மையினால்

பிழையேன்; உயிரோடு பிரிந்தனரால்
உழையே! அவர் எவ்வுழையார் உரையாய்?" (4309)

(உழை - மான்; வான் - சிறந்த; இழைதல் - நெகிழ்தல்; நவை - குற்றம்; பிழை - தவறு; உழை - இடம்; விழைதல் - விரும்புதல்)

"ஓடி ஒளியும் மானே! நான் எல்லோரும் விரும்புவன எவற்றையும் விரும்புபவன் அல்லன்; சத்தியத்தினின்றும் சிறிதும் நெகிழமாட்டேன்; எல்லாப் பொருள்களிலுமுள்ள நலம் தீங்குகளை நன்கு உணர்ந்தவன்; உன்னிடம் இப்போது எந்தக் குற்றமும் இல்லாததால் உன்னை நான் கொன்று வருத்த மாட்டேன்; என் ஆருயிர்ச் சானகி என் உயிரையும் கவர்ந்து பிரிந்து சென்று விட்டாள். இப்போது அவள் இருக்கும் இடத்தை எனக்குச் சொல்லமாட்டாயா?" என்கிறான் இராமன்.

முன்பு பொன்மானாக வந்த மாய மாரீசனைக் கொன்று விட்டதனால், இப்போது உண்மையான மான்கள் தன்னைக் கண்டு அஞ்சி ஓடுவதாக எண்ணி அவற்றைப் பார்த்துக் கேட்பதாக அமைந்திருக்கிறது இப்பாடல். "முன்பு நான் சீதையிடம் கொண்ட பேரன்பின் காரணமாகவும் அதன் இயல்பை அறியாது அறிவு கலங்கியும் உங்கள் இனமான ஒரு மானைக் கொன்று விட்டேன் என்று அஞ்சுகிறீர்களா? அது என்பால் பிழை செய்தது. அதனால் கொன்று வருத்தினேன். உங்களிடம்தான் எந்தக் குறையும் இல்லையே? நீங்கள் ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்கள் இனமான ஒரு மானின் காரணமாகத்தான் என் ஆருயிர்ச் சானகி என் உயிரையும் அவளோடு எடுத்துக் கொண்டுபோய் விட்டாள். எனவே இப்பொழுது நீங்கள்தான் அவள் இருக்கும் இடத்தை எனக்குச் சொல்ல வேண்டும்", என்று வேண்டுகிறான் என்பதாம்.

57. தன் உயிரோடு புலம்புதல்

"பயில் பாடக மெல்லடி பஞ்சு அனையார்
செயிர் ஏதும் இலாரோடு தீருதியோ?
அயிராது உடனே அகல்வாய் அலையோ?
உயிரே! கெடுவாய்! உறவு ஓர்கிலேயோ?" (4310)

(பயில்தல் - பொருந்த அமைத்தல்; பாடகம் - காலணி; செயிர் - குற்றம்; தீர்தல் - நீங்குதல்; அயிர்த்தல் - ஐயுறுதல் \ சந்தேகம் கொள்ளுதல்; அகல்தல் - உடன் செல்லுதல்; ஓர்தல் - உணர்தல்; கெடுதல் - அழிதல்)

"என் உயிரே! நன்றாகப் பொருந்த அமையப் பெற்ற பாடகம் என்னும் காலணி அணிந்தவளும், பஞ்சு போன்ற மென்மையான பாதங்களை உடையவளும், குற்றம் ஏதும் இல்லாதவளுமான, என் மனைவி சீதையுடன் நீயும் ஏன் என்னைவிட்டு நீங்கவில்லை; எங்கள் இருவருக்கும் உள்ள உறவின் ஆழத்தை நீ அறிந்திருக்கவில்லையோ? அப்படி அறிந்திருப்பாய் ஆயின், அவள் என்னைவிட்டுப் பிரிந்த உடனே, சிறிதும் காலந்தாழ்த்தாது, சந்தேகமே

கொள்ளாது நீயும் நீங்கியிருக்கவேண்டும் அல்லவா? எத்தகைய கெடுதலைச் செய்துவிட்டாய்?" என்று இராமன் தன் உயிரை நோக்கி வெறுத்துப் புலம்பினான்.

சீதை இல்லாது கார்காலத்தில் இவ்வளவு துன்புறுவதைவிட, அவளுடன் தன் உயிரும் சேர்ந்து போயிருக்க வேண்டும். அவ்வாறு அப்போது போகாத உயிரைப் பார்த்து இப்போது புலம்புகிறான் என்பது கருத்து. பாடகம் என்பது பெண்கள் காலில் அணியும் ஒருவகைக் காலணி. சீதையை இராவணன் கைதொட்டுத் தூக்கிச் செல்லவில்லை என்பதையும், அவள் இருந்த தவக்குடிலோடுதான் தூக்கிச் சென்றான் என்பதையும் சடாயுவின் மூலமாகக் கேள்வியுற்ற இராமன், சீதையை "செயிர் இலார்" என்றான் எனக. "தீர்தல்" என்பது விட்டு நீங்குதல் என்று பொருள்படும். "தீர்தலும் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்" என்பது தொல்காப்பியம். "பசைந்தாரில் தீர்தலில், தீப்புகுதல் நன்று" என்பது நான்மணிக்கடிகை 13. இவ்வாறே வாலி இறந்து கிடந்தபோது தாரை புலம்பியதையும் இங்கு நினைவு, கூர்க.

58. கொன்றையோடு புலம்புதல்

> "ஒன்றைப் பகராய் குழலுக்கு உடைவாய்,
> வன் தைப்புறு நீர் வயிரத்தினையோ?
> கொன்றைக் கொடியாய்! கொணர்கிற்றிலையோ?
> என்றைக்கு உறவாக இருந்தனையோ?" **(4311)**

(கொடியாய் - கொடியவளே; குழல் - கூந்தல்; உடைதல் தோற்றல்; வன் - வலிமை; தைப்புறுதல் - ஊன்றிப்பதியப்பெறுதல்; வயிரம் - நெடியபகை)

"கொன்றை மரமாகிய கொடியவளே! நீ என் சீதையின் கூந்தலுக்குத் தோற்றுப் போனவள் ஆவாய்; அதனால் உண்டான வலிமையாகப் பதிந்து போன, நெடுநாட்களாக ஊன்றிப் போன பகைமையை என்னிடமும் கொண்டுள்ளாயோ? அதனால்தான் அவளை என்னிடம் கொண்டு வந்து சேர்க்கும் ஆற்றல் அற்றவள் போல் இருக்கிறாயோ? என்னிடம் ஒன்றும் பேச மாட்டேன் என்கிறாய்?; நீ என்றைக்குத்தான் எங்களிடம் உறவாக இருந்திருக் கிறாய்? ஒருநாளும் இருந்ததில்லையே!" என்று புலம்புகிறான் இராமன்.

கொன்றை மரத்தின் காய்கள் நீண்டிருத்தலாலும், கருத்திருத்தலாலும், அதை மகளிர் கூந்தலுக்கு உவமை கூறுவது கவிமரபு. இந்தக் கொன்றைக் காயைக் காட்டிலும் நீட்சியும், கருமையும் உடையது சீதையின் கூந்தல். எனவே கொன்றைக்காய் அவளிடம் தோற்றது. அதனால் அதற்கும் சீதைக்கும் நீண்ட நாட்களாகப் பகை இருந்து வந்திருக்கிறது. எனவேதான் இப்பொழுது சீதையைத் தன்னிடத்தில் கொண்டு வந்து சேர்க்கும் ஆற்றல் அற்றதாய் உள்ளது. எனவே அது தன்னிடத்தும் பகைமை கொண்டதாக இராமன் கருது கிறான். எனவே சீதை என்னுடன் இருந்தபோதும் நீ பகைமை கொண்டிருந்தாய்; அவள் இல்லாத இப்போதும் அவளை நினைவுபடுத்தி என்னைத் துன்புறுத்தி என்னிடம் பகைமை கொண்டுள்ளாய்; எப்போதுதான் என்னிடம் நல்லுறவும்

நட்பும் கொண்டிருந்திருக்கிறாய்!? என்று கேட்கிறான் இராமன். கொன்றை மலரைப் பெண்டிர் சூடுவது வழக்கம் இல்லை. எனவே கொன்றைக்கும் சீதைக்கும் பகை என்று கூறலும் பொருந்தும். கொன்றை மலர் சிவபெருமானுக்கு உகந்தது. திருமாலுக்கு அதைப் பயன்படுத்துவதில்லை என்பதும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி.

59. முல்லையையும், இந்திர கோபத்தையும் நோக்கிப் புலம்புதல்

"குரா அரும்பு அனைய கூர்வாள் எயிற்று வெங்குருளை நாகம்,
விராவு வெங்கடுவின் கொல்லும்; மெல் இணர் முல்லை, வெய்தின்
உரா அரும் துயரம் ஊட்டி ஓய்வு அற மலைவது ஒன்றோ?
இராவண கோபம் நிற்க, இந்திர கோபம் என்னோ?" (4312)

(குருளை - குட்டி; விராவு - கலந்துள்ள; இணர் - கொத்து; வெய்து - கொடுமை; உராஅரும் - நீங்குதலில்லாத \ பொறுத்தற்கரிய; ஊட்டி - தந்து \ கொடுத்து; உலைவுறுதல் - அழிதல்; மலைதல் - போர் செய்தல்; கடு - நஞ்சு \ விஷம்; உராதல் - செல்லுதல்; ஒன்றோ - எளிதோ \ சிறிதோ; இந்திர கோபம் - தம்பலப்பூச்சி)

குராமரத்தின் அரும்பு போன்று கூர்மையானதும், வெண்மையால் ஒளிபொருந்தியதுவும் ஆன பற்களை உடைய கொடிய குட்டிப்பாம்பு, தன்னுள் கலந்திருக்கின்ற கொடிய நஞ்சினால் எல்லோரையும் கொல்லும். ஆனால் மெல்லிய கொத்துக்கள் கொண்ட முல்லை மலர், கொடுமையால், பொறுத்தற் கரிய துன்பத்தை விளைவித்து, இடைவிடாது, தொடர்ந்து என்னுடன் போர் செய்வது என்பது சாதாரணச் செயலோ? என்மேல் கோபம் கொண்ட இராவணனின் கோபம் புரிந்து கொள்ளக்கூடியது என்றாலும் இந்தத் தம்பலப் பூச்சிகளும் என்மேல் ஏன் கோபம் கொண்டுள்ளன என்று தான் எனக்குப்புரிய வில்லை. இவை எளிய செயல்களோ? இல்லை அல்லவா? பெரிய காரியங்கள் அன்றோ?" என்கிறான் இராமன்.

குரா அரும்பு பாம்பின் கூர்மையான வெண்மையான பற்களுக்கு உவமை; "நாயே, பன்றி, புலி, முயல் நான்கும் ஆயும் காலை குருளை என்ப" என்பது தொல்காப்பியம். எனவே இங்கே குருளை நாகம் என்ற சொல்லுக்குப் பாம்புக்குட்டி என்று பொருள் கொள்ளப்பட்டது. பாம்பு தன்னிடம் உள்ள கடுமையான விஷத்தாலும் வலிதான பல்லாலும்தான் ஒருவரைக் கொல்லும். ஆனால் முல்லையோ தன்னிடம் நஞ்சே இல்லாமல், மெல்லிதான தன் அரும்புகளாலேயே பிரிந்தாரைக் கொல்லும் என்று கூறியது ஒருநயம். முல்லை அரும்பு சீதையின் ஒளிபொருந்திய பற்களையும், சிவந்த தம்பலப்பூச்சிகள் சீதையின் சிவந்த இதழையும் இராமனுக்கு நினைப்பூட்டித் துன்புறுத்தின என்பதாம். "இராவண கோபம் நிற்க இந்திர கோபம் என்னோ?" என்ற சொல்லாட்சி நினைந்து சுவைக்கத்தக்கது.

60. வாடைக்காற்றை நோக்கிப் புலம்புதல்

ஓடைவாள் நுதலினாளை ஒளிக்கலாம் உபாயம் உன்னி,
நாடி, மாரீசனார் ஓர் ஆடக நவ்வி ஆனார்;
வாடையாய், கூற்றினாரும் உருவினை மாற்றிவந்தார்;
கேடு சூழ்வார்க்கும் வேண்டும் உருக்கொளக் கிடைத்த அன்றே. (4313)

(ஓடை - நெற்றிப்பட்டம் \ முகபடாம்; ஒளித்தல் - கவர்தல் \ மறைத்தல்; உபாயம் - வழி \ தந்திரம்; உன்னி - நினைத்து; நாடுதல் - ஆராய்தல்; ஆடகம் - பொன்; நவ்வி - மான்; கூற்றினார் - இயமன்; கேடு - துன்பம்; சூழ்தல் - விளைவித்தல்; உரு - வடிவம்)

"முன்பு மாரீசன், நெற்றிப்பட்டம் அணிதற்குரியதும், ஒளி பொருந்தியதுமான அழகிய நெற்றியை உடைய சீதையைக் கவர்ந்து சென்று ஒளித்து வைக்கலாம் என்று கருதி, மிக ஆராய்ந்து, முடிவில் ஒரு ஒப்பற்ற பொன்மானாக வடிவம் தாங்கி உருவம் மாற்றிக்கொண்டு வந்தார்; இப்பொழுது நான் தனித்திருக்கும் போது, வாடைக்காற்று, இயமன் உருவாகத் தன்னை மாற்றிக் கொண்டு வந்திருக்கிறது. தீங்கு புரிய நினைப்பவர்களுக்கும், தீங்கு விளைவிப்பவர்களுக்கும், தாம் வேண்டும் உருவத்தை வேண்டும் சமயத்தில் ஏற்றுக் கொள்ளும் ஆற்றல் கிடைத்திருப்பது வியப்பிற்குரியதன்றோ?" என்று புலம்புகிறான் இராமன்.

"மாரீசனார், கூற்றினார்" என்ற மரியாதைச் சொற்கள் இகழ்ச்சியாலும் சினத்தாலும் கூறப்பட்டன என்க. மாரீசன் மானாக உருமாறி வந்ததற்கு எப்படி அவனிடம் கொண்ட அச்சம் காரணமாய் அமைந்ததோ, அதைப்போலவே கூற்றுவனும் இப்போது உருமாறி வருதற்குக் காரணம், இயமன் இராமனிடம், கொண்ட அச்சமே என்பதாம். உடல் வேறு உயிர் வேறாகக் கூறுபடுத்துதலின் இயமன் கூற்றுவன் எனப்பட்டான் என்க. சீதையைப் பிரிந்து துயர் உறுதலால், வாடைக் காற்றை இயமன் என்றான் இராமன். ஒருவன் மாற்று உருக்கொள்ளும்போது, மற்றோர்க்கு நன்மை செய்வான் ஆகில் அது வேண்டப்படுவதாய்க் கருதலாம். அவனே பிறர்க்குக் கேடு சூழ்வானாகில், அத்தகைய மாற்று உருவெடுக்கும் ஆற்றல் வேண்டப்பட்டாததொன்று என்பது கருத்து. அதைத்தான் பாடலின் கடைசி வரி கூறுகிறது என்க.

61. மேகத்தோடு புலம்புதல்

"அருவினை அரக்கர் என்ன, அந்தரம் அதனில் யாரும்
வெருவர முழங்குகின்ற மேகமே! மின்னுகின்றாய்;
"தருவல்" என்று இரங்கினாயோ? தாமரை மறந்த தையல்
உருவினைக் காட்டிக் காட்டி ஒளிக்கின்றாய், ஒளிக்கின்றாயே?" (4314)

(அரு - தடுத்தற்கரிய; அந்தரம் - ஆகாயம்; வெருவர - அஞ்சுமாறு)

"யாராலும் தடுக்க முடியாததும், யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாததுமான தீய செயல்களையே புரிந்து வாழ்கின்ற அரக்கர்களைப்போல,

ஆகாயத்தில் எல்லோரும் அஞ்சும் வண்ணம் இடிமுழக்கம் செய்து ஆரவாரிக் கின்ற மேகமே! நீ அடிக்கடி மின்னுகின்றாயே! அம்மின்னலில் தனது இருப்பிட மாகிய செந்தாமரை மலரை மறந்து, அதைவிட்டு நீங்கிப் போய் இருக்கின்ற அழகிய சீதையின் உருவத்தை காட்டிக்காட்டி, என்னிடமிருந்து உடனே மறைத்துவிடுகிறாயே! என்னிடம் அவளைத் தருவேன்" என்றுகூறி இரக்கம் கொள்ளுகிறாயோ?" என்றான் இராமன்.

"தாமரை மறந்த தையல்" என்பது சீதை திருமகளின் அவதாரம் என்பதை நிறுவுவது என்க. "காட்டிக்காட்டி ஒளிக்கின்றாய் ஒளிக்கின்றாய்" என்று சொன்னதையே திரும்பத்திரும்ப இராமன் கூறுவதில் அவனுடைய உள்ளத்தின் அவலநிலை புலப்படுவதை உணர்க. பொதுவாக அடிக்கடி தோன்றி மறையும் மின்னலைப் பெண்களின் இடைக்குத்தான் உவமையாகக் கூறுவர். இங்கே கவிஞன் சீதையின் உருவத்திற்கே மின்னலை உவமை கூறியது நோக்கத் தக்கது; முன்பும் "சதகோடி மின்சேவிக்க, மின்னரசு என்னும்படி நின்றாள்" என்றதனையும் இங்கே நினைவு கூர்க.

62. மன்மதனோடு புலம்புதல்

"உள்நிறைந்து உயிர்க்கும் வெம்மை உயிர்சுட, உலைவேன் உள்ளம்
புண்உற வாளி தூர்த்தல் பழுது; இனி போதி; மார!
எண்உறு கல்வி உள்ளத்து இளையவன், இன்னே, உன்னைக்
கண்ணுறும் ஆயின், பின்னை, யார் அவன் சீற்றம் காப்பார்?"(4315)

(உயிர்த்தல் - வெளிப்படுதல்; உலைதல் - வருந்துதல்; உற - உண்டாகுமாறு; வாளி - அம்பு; தூர்த்தல் - நிரப்புதல்; பழுது - குற்றம் \ பயனற்றது; போதி - போவாயாக; எண் - மதிப்பு ; இன்னே - இப்போதே; சீற்றம் - கோபம்; காத்தல் - தணித்தல்; மாரன் - மன்மதன்)

"மன்மதா! பிரிவாற்றாமை என்னும் வெப்பம், என் உள்ளிடம் எல்லாம் நிறைந்து, அங்கே அடங்காது, வெளியிலும் வெளிப்பட்டு, வருத்தமுற்று ஏங்கியிருக்கிறேன். இப்பொழுது மேலும் அவ்வுள்ளம் புண்படுமாறு நீ உன் மலரம்புகளைச் செலுத்தி நிரப்புதல் குற்றமும், பயனில்லாததுமாகும். எனவே நீ இப்பொழுதே இங்கிருந்து அகன்று சென்று விடு; எல்லோராலும் மதிக்கத்தக்க ஞானநூல் அறிவு பெற்றுத் தெளிந்த மனத்தையுடைய என் தம்பி இலக்குவன் இப்போது இங்கே உன்னைக் கண்டு விட்டானானால், அவனுடைய கோபத்தைத் தணிப்பவர் யார் இருக்கிறார்கள்? அவனிடமிருந்து உன்னைக் காப்பாற்ற யாரால் முடியும்? ஒருவராலும் முடியாது", என்கிறான் இராமன்.

சீதையைப் பிரிந்ததால் உண்டான துக்கம், தன் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கவும், அதற்குள் அடங்காது வெளிப்பட்டும் கூடத் தோன்றியது, என்று கூறுவதன் மூலம் கவிஞன் இராமனின் உள்ளத்தில் உள்ள துக்கத்தை மிகுத்து உரைத்திருக்கிறான் என்பதை உணர்க. "இந்த நேரத்தில் வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போல் நீ வேறு உந்தன் மலர்க்கணைகளைச் செலுத்துகிறாயே. இது போர் நெறிமுறைக்கு மாறானது மட்டுமல்ல, இது

பயனற்றதுமாகும். காரணம், என் உள்ளம் என்னிடம் இல்லை. நான் வெற்றுடலுடன் நடைப்பிணம் போல் நிற்கிறேன்." என்றான் என்பதாம். தன் தம்பி இலக்குவனின் பேரறிவையும், வீரத்தன்மையையும், இராமபிரான் புகழ்ந்து பாராட்டும் பாடல்களில் இதுவும் ஒன்று. முன்பும் இதுபோல் பலவாறாகப் பாராட்டியிருப்பதை நினைவு கூர்க. "பழுது பயமின்றே" என்பது தொல்காப்பியம்; "தூர்த்தல்" என்ற சொல் நிரப்புதல் என்ற பொருளில் அம்பின் மிகுதியைக் குறித்தது. இங்கு "எண் உறுகல்வி" என்றது ஞானநூல் தெளிவு என்றும், புலனைந்தும் வென்ற கல்வி என்றும், அறுபத்து நான்கு என்று எண்ணப்படும் கல்வி என்றும் பலவாறு பொருள் தருதல் உணர்க. "அலையும் மனத்தை அகத்து அடக்கும் அவனே ஞானி, அதிசூரன்" என்பது நிஷ்டானுபூதி; இலக்குவனின் சீற்றம், தணித்தற்கு அரியது என்பதை முன்பு "மூட்டாத காலக் கடைத்தீ என மூண்டு எழுந்தான்" எனக் கூறியதனால் அறியலாம்.

63. "வில்லும் வெங்கணையும், வீரர், வெஞ்சமத்து அஞ்சினார் மேல்
புல்லுந அல்ல; ஆற்றல் போற்றலர்க் குறித்தல் போலாம்;
அல்லும், நன்பகலும் நீங்காய் அனங்க! நீ அருளில் தீர்ந்தாய்;
"செல்லும் என்று எளி வந்தோர்மேல் செலுத்தலும் சீர்மைத்து ஆமோ?" (4316)

(குறித்தல் - நோக்குதல்; சமம் - போர்; புல்லுந - பொருந்துவன \ ஏற்றன; தீர்தல் - நீங்குதல்; எளிவந்தோர் - எளிமையான இயல்புடையோர்; சீர்மை - புகழ் \ சிறப்பு; போற்றலர் - பகைவர்; அனங்கன் - அங்கம் \ உடல் இல்லாதவன் \ உருவிலி; செல்லுதல் - பலித்தல்)

"அங்கமில்லாதவனே! மன்மதா! உண்மையான வீரர் என்பவர், கொடிய போரில், வில்லையும், கொடிய அம்பையும், தம்மிடத்து அஞ்சி ஒதுங்கியவர்களின் மேல் செலுத்த மாட்டார்கள். அது தறுகண்மைக்கு ஏற்றது அல்ல; தம்மை எதிர்க்கும் பகைவரின் ஆற்றலையும் நுட்பமாக நோக்கி அறிதல் வேண்டும். உன் வலிமையை மதிக்காதவர்களிடம்தான் நீ உன் வலிமையைக் காட்டவேண்டும். அவ்வாறிருக்க, நான் உன்னை இவ்விடத்தை விட்டு அகன்றுபோ என்று கூறியும், இரவிலும் நல்ல பகல் பொழுதிலும் என்னை விட்டு நீங்காது இங்கேயே இருப்பதனால், நீ உன் அருள் திறனின்றும் நீங்கியவனாகிறாய்; இது பலிக்கும் என்று எண்ணி, என் போன்ற எளியவர்களிடத்தில் நீ உன் மலர்க்கணைகளைச் செலுத்துதல் உன்னுடைய பெருமைக்கு ஏற்றதாகுமோ?" என்று மன்மதனை நோக்கி இராமன் புலம்புகிறான்.

தம்மினும் மெலியார்மேல் படைக்கலன்கள் எய்யாதிருத்தலே போராண்மை எனப்படும். அவ்வாறிருக்க ஏற்கனவே நொந்து போய் இருக்கின்ற என்போன்ற எளியவரிடத்து உன்னுடைய ஆற்றலைக் காட்டுதல் சிறப்பாகாது; இகழ்ச்சிக்குரியதாகும் என்றான் என்க. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, முதல் நாள் போரில் தோல்வியுற்ற இராவணனை நோக்கி இராமன் "இன்றுபோய்ப் போருக்கு நாளை வா" என்று கூறி இராவணனை அனுப்பியதை ஒப்பிட்டு நோக்குக. தலைவியைப் பிரிந்த தலைவர்க்கு இரவில்தான் விரகதாபம் மிக்கிருக்கும். பகலில் அது ஓரளவு குறைந்திருக்கும். பகற்போது அதிகம்

துன்பம் தராததால் அதை "நன்பகல்" என்று கூறிய நயம் உணர்க. "காலைக்குச் செய்த நன்று என்கொல், என்கொல் யான் மாலைக்குச் செய்த பகை" என்பது குறள் 1225. இவ்வளவு பாடல்களிலும் இராமன் உயிரற்ற அஃறிணைப் பொருள்களாகிய கார்காலம், மேகம் முதலியவற்றிடத்தும், பேச இயலாத உயிரினங்களாகிய மயில், மான், கொடி, கொன்றை, முல்லை, இந்திரகோபம், வாடைக் காற்று முதலியவற்றோடும், இறுதியில் உருவமில்லாத மன்மதனோடும் தான் உரையாடியது போலக் கவிஞன் கூறி வந்தவற்றைக் கண்டோம். இவ்வாறு அஃறிணைப் பொருள்கள் கேட்பது போலப்பாடுதல் புலவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கவிமுறை. "ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே, கடலே, கானல் விலங்கே, மரனே, புலம்புறு பொழுதே, புள்ளே, நெஞ்சே, அவையல பிறவும், நுவலிய நெறியால் சொல்லுந போலவும்,கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்" என்பது தொல்காப்பியம்.

64. இலக்குவன் இராமனைத் தேற்றுதல் (6 பாடல்கள்)

என்ன, இத்தகைய பன்னி, ஈடு அழிந்து, இரங்குகின்ற
தன்னை ஒப்பானை நோக்கி, தகை அழிந்து அயர்ந்த தம்பி,
"நின்னை எத்தகையையாக நினைத்தனை? நெடியோய்?" என்ன,
சென்னியில் சுமந்த கையன் தேற்றுவான், செப்பலுற்றான். (4317)

(பன்னி - பலமுறை சொல்லி; ஈடு - பெருமை \ வலிமை; தகை - வலிமை \ தன்மை; அயர்தல் - தளர்தல்; சென்னி - தலை; தேற்றுவான் - தேற்றும் பொருட்டு; தேற்றுதல் - தெளிவித்தல்)

என்று இத்தன்மையனவான பலசொற்களையும் பலமுறை கூறித் தனது பெருமையும் சிறப்பும் நீங்கப்பெற்று, வருத்தமுறுகின்ற, தனக்கு ஒப்பானவர் வேறுஎவரும் இல்லாததால், தனக்குத் தானே ஒப்பானவனான இராமபிரானை நோக்கி, தானும் ஓரளவு உறுதிகுறைந்து வருந்துகின்ற தம்பியாகிய இலக்குவன், தனது இரண்டு கைகளையும் தலையின் மீது பொருத்தி, தன் அண்ணனைத் தேற்றும் பொருட்டு, "உயர்ந்தவனே! உன்னை நீ யாரென்று, எத்தகையவன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டு, மேலும் கீழ்வருவனவற்றைக் கூறத் தொடங்கினான்.

"ஈடு அழிதல்" என்பது, தன் நிலையை உணராது, அதனின்றும், மனவலியும், உடல்வலியும் சற்றுத் தாழ்தலைக் குறிக்கும். தன்னை ஒப்பவர் யாருமில்லாதவன் இராமன். எனவே தனக்கு உவமை இல்லாதான் என்று இராமனின் கடவுள் தன்மை தெளிவுபடுத்தப் பெற்றது. "நெடியோய்" என்று இலக்குவன் அழைத்தது, "உயர்ந்தவனே" என்று பொருள் தந்தாலும் அவனது உலகளந்த தன்மையினை அவனுக்கு இச்சமயத்தில் நினைப்பூட்டுவது தக்கது என்றது கருதி அவ்வாறு அழைத்தான் என்க. தேற்றுதல் என்பது, ஒருவர் அடைந்த மனக்கலக்கத்திலிருந்து அவரைத் தெளிவுபெறச் செய்தல் என்ற விரிந்த பொருளைத் தரும். இராமன் அஃறிணைப் பொருள்களைப் பார்த்துப் புலம்பிய தன்மை, அவனது தெய்வத் தன்மைக்குப் பொருந்தாதது என்பது இலக்குவன்

கருத்து. எனவே இராமன் மேலும் அவ்வாறு துன்புறாதிருக்க, அவனைத் தடுத்து நிறுத்த, அவனைத் தேற்றலுற்றான் என்பதாம்.

65. "காலம் நீளிது காரும்; மாரியும் வந்தது" என்ற கவற்சியோ?
நீலமேனி அரக்கர் வீரம் நினைந்து அழுங்கிய நீர்மையோ?
வாலி சேனை, மடந்தை வைகு இடம் நாட, வாரல் இலாமையோ?
"சாலநூல் உணர் கேள்வி வீர! தளர்ந்தது என்னை? தவத்தினோய்!" (4318)

(சால - மிகுதியான; நீளிது - நீடித்தது; கவற்சி - கவலை; நீலம் - கருமை; அழுங்குதல் - வருந்துதல்; நீர்மை - தன்மை; மடந்தை - சீதை; வாரல் - வருதல்)

"மிகுதியாகக் கற்றுணர்ந்த கல்வியறிவும், பிறர்பால் கேட்டுணர்ந்த கேள்வியறிவும் உடைய வீரனே! தவம் மேற்கொண்டுள்ளவனே! கார்காலம் நீட்டித்தது; மழைக் காலமும் வந்து விட்டது. அதனால் சீதையைத் தேடுதல் தடைப்படும் என்று கவலைப்படுகிறாயா? கரிய உடலமைப்புடைய அரக்கர்களின் வீரத்தை எண்ணிப் பார்த்து, அவர்களை எப்படி வெல்வது என்று வருத்த முற்ற தன்மையில் இருக்கிறாயா? வாலியால் தொகுக்கப்பட்ட எழுபது வெள்ளம் சேனைகளும், நம் சீதாதேவி இப்போது இருக்கின்ற இடத்தைத் தேடிக்கண்டு பிடிக்க இன்னும் வரவில்லையே என்று தவிக்கிறாயா? நீ இவ்வாறு தளர்ந்து போவதற்கு என்ன காரணம்?" என்று முதலில் கேட்டுத் தேற்ற முற்படுகிறான் இலக்குவன்.

தலைவியைப் பிரிந்தவர்க்குப் பொதுவாக ஒருநாள் செல்வது ஏழுநாள் போவது போலும், ஒரு யாமம் ஒரு ஆண்டு செல்வது போலும் இருக்கும் என்பர். எனவே சீதையைப் பிரிந்த இராமனுக்கு, கார்காலம் நீட்டித்துக் கொண்டே போவதைப் போல் தோன்றியிருக்கலாம் என்பதை உணர்ந்த இலக்குவன் "காலம் நீளிது காரும்" என்றான் என்க. இங்கே மாரி என்ற சொல் பொதுவாக மழைக்காலத்தைக் குறித்தது என்றாலும், கூதிர்ப்பருவத்தைக் குறித்தது எனக் கொள்ள வேண்டும். இப்பொழுது சேனைகள் சுக்கிரீவனிடம் தான் இருக்கின்றன; இலக்குவன்தான் சுக்கிரீவனுக்குத் திருமுடி சூட்டினான், என்றாலும் இங்கே சுக்கிரீவன் சேனை எனக் கூறாது, "வாலி சேனை" என்று குறிப்பிட்டதை நோக்குக. பொதுவாக வாலியால் தொகுக்கப் பெற்ற சேனை என்று பொருள் கூறினாலும், இலக்குவன் சுக்கிரீவன் மேல் கொண்டிருந்த நம்பிக்கையையும், அவனை எவ்வளவு தூரம் தன் மனத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறான் என்பதையும் குறிக்கும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். கம்பன் எல்லோர் மனத்தையும் படித்தவன்; படித்ததைப் புகைப்படம் போல் தோற்றுவிக்கவும் தெரிந்தவன். இந்த ஒரு சொல்லிலேயே அவனது கவிதையின் மேதாவிலாசம் தெரிகிறது எனலாம்.

தான் நினைத்த மூன்று காரணங்களுமோ, அல்லது இவற்றில் ஏதோ ஒன்றோ, இராமனின் தளர்ச்சிக்குக் காரணமாய் இருக்கலாம். இருந்தாலும், இச்சிறு காரணங்களுக்காக இராமன் தளர்ச்சி அடையக் கூடாது. அவன் சாதாரண மனிதனல்லன்; தெய்வ அவதாரம் என்பதை அவனுக்கு நினைப்பூட்ட

விரும்பியே, இவ்வாறு சொல்லலானான் இலக்குவன் என்க. எனவேதான், "சால நூல் உணர் கேள்வி வீர, தவத்தினோய்" என்று அடைமொழிகளைக் கொடுத்து அழைத்தான் என்க.

66. "மறை துளங்கினும், மதி துளங்கினும்,
வானும், ஆழ்கடல் வையமும்
நிறை துளங்கினும், நிலை துளங்குறு,
நிலைமை நின்வயின் நிற்குமோ?
பிறை துளங்குவ அனைய பேர் எயிறு
உடைய பேதையர் பெருமை, நின்
இறை துளங்குறு புருவமென் சிலை
இடை துளங்குற இசையுமோ?" (4319)

(மறை - வேதம் \ வேதநெறி; துளங்குதல் - பிறழ்தல் \ அசைதல் \ கலங்குதல்; நிறை - பெருமை; எயிறு - பற்கள் \ கோரப்பற்கள்; பேதையர் - அறிவிலிகள்; இறை - சிறிது; இசைதல் - எதிர் நிற்றல் \ நிலை நிற்றல்; துளங்குதல் - விளக்கமுறுதல்)

"என்றும் மாறுபட முடியாத வேதமும் வேதநெறிகளும் மாறுபட்டாலும், சந்திரன் தன் நிலையிலிருந்து பிறழ்ந்தாலும், ஆகாயமும், ஆழ்ந்த கடலால் சூழப்பெற்ற இவ்வுலகமும் தத்தம் நிலையிலிருந்து திரிந்தாலும், இயற்கைப் பண்பிலிருந்து நீங்கும் தன்மை உன்னிடத்து உண்டாக முடியுமோ? பிறைச் சந்திரன் போன்ற வளைந்த பெரிய கோரப்பற்களை உடையவர்களும் அறிவற்றவர்களும் ஆகிய அரக்கர்களின் படைவலிமை, உன்னுடைய மெல்லிய, ஒளிவிடுகின்ற, புருவம் என்கின்ற வில்லின் நடு, சிறிது அசைந்தாலும் அதற்கு எதிராக நிற்க இயலுமோ? நிற்க முடியாதன்றோ?" என்றான் இலக்குவன்.

வேதம், சந்திரன், ஆகாயம், கடல் இவைகளெல்லாம் என்றும் தம் தன்மையிலிருந்தும் மாறுபடாதன. காரணம் இவை மாறுபட்டால் யுகமுடிவு என்று பொருள். உலகம் அழியும் என்பதாம். மறை துளங்குதல் என்பது செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாதிருப்பதும் தவிர்க்க வேண்டுவனவற்றைச் செய்தலும்; மதி துளங்குதல் என்பது, சந்திரன் தன் இயற்கைத் தன்மையான குளிர்ச்சியான கிரணங்களை வீசுவதைத் தவிர்த்து வெப்பக் கதிர்களைப் பரப்புதலும், திசை மாறி உதித்தலும்; வான் துளங்குதல் என்பது, தனக்கே உரியதான ஒலியை இழத்தலும், மற்ற பூதங்களுக்கும் இடம் கொடுத்தலும்; கடல் துளங்குதல் என்பது வற்றிப்போதல் கரை கடந்து பேரழிவு செய்தல்; வானும் வையமும், துளங்குதல் என்பது உலகம் தலைகீழ் ஆதல்; வையம் துளங்குதல் என்பது மக்கள் அறநெறிகளினின்றும் விலகி நடத்தல் என்பதாம். இவையெல்லாம் இயற்கையில் நிகழாதன. அவ்வாறு இவை எல்லாம் நடந்தால் உலகம் அழிந்துவிடும் என்பதாம். இவையெல்லாம் நிகழ்ந்தாலும், இராமன் தன் நிலையினின்றும் ஒருக்காலும் மாறுபட மாட்டாத இறைமைத் தன்மை உடையவன் என்பதை இலக்குவன் இராமனுக்கு நினைப்பூட்டுகிறான்

என்க. "வேலை கரையிழந்தால், வேதநெறி பிறழ்ந்தால், ஞாலம் முழுதும் நடு இழந்தால்" என்பது நளவெண்பா; "வானம் துளங்கில்என்? மண் கம்பமாகில் என்?" என்பது தேவாரம்; "பாஅல் புளிப்பினும், பகல் இருளினும், நாஅல் வேதநெறி திரியினும், திரியா சுற்றம்" என்பது புறநானூறு. இம்மேற்கோள்கள் இங்கு நினைவுகூரத்தகும். மதி துளங்குதல் கூறியதால் அதன் இனம் பற்றி, ஞாயிறு முதலிய கோள்களையும், ஆகாயம் துளங்கியது கூறியதால், அதன் இனம் பற்றி மற்ற பூதங்களையும் உட்படுத்திக் கூறியதாகக் கொள்ள வேண்டும்.

அரக்கர்கள் உடலாலும் உள்ளத்தாலும் மதியாலும் பெருமையற்றவர் என்பதைக் குறிக்கவே, "பிறைதுளங்கு அனைய பேர் எயிறு" என்றும் "பேதையர்" என்றும் கூறினான் என்க. பிறைச்சந்திரன், அரக்கர்களின் வளைந்த கோரப்பற்களுக்கு உவமை. அவர்கள் அவ்வாறே பெருவலி பெற்றிருந்தனர் என்றாலும், இராமனுடைய புருவம் என்னும் வில்லின் நடுவின் அசைவிற்கு முன்னே அவர்கள் எதிர்த்து நிற்க முடியாது என்று, இராமனின் வல்லமையையும் இலக்குவன் இராமனுக்கு நினைப்பூட்டுகிறான் என்க. எனவே எதை எண்ணியும் இராமன் கலங்குதலும் கவலைப்படுதலும் கூடாது என்கிறான் இலக்குவன்.

67. அனுமன் என்பவன் அளவு அறிந்தனம்;
அறிஞ! அங்கதன் ஆதியோர்
எனையர் என்பது ஓர் இறுதி கண்டிலம்;
எழுபது என்று எனும் இயல்பினார்;
வினையின் வெந்துயர் விரவு திங்களும்,
விரைவு சென்றன, எளிதின்; நின்
தனு எனும் திருநுதலி வந்தனள்; சரதம்;
வன்துயர் தவிர்தியே! (4320)

(எனும் - எண்ணப்படும்; இறுதி - வரையறை \ அளவு; எனைய - எத்தகையர்; விரவுதல் - பொருந்துதல்; திங்கள் - மாதங்கள் \ கார்காலம்; தனு - வில்; சரதம் - உறுதி)

"அறிவிற் சிறந்தவனே! அனுமன் என்பவனுடைய அறிவு ஆற்றல், சொல்வன்மை, பேருருக்கொள்ளும் திறமை, வீரம் முதலியவற்றை அவனது உரையாடல் மூலமாகவும், அவன் வாலி பற்றிக்கூறிய கூற்றின் மூலமாகவும் ஓரளவு அறிந்து கொள்ள முடிந்தது; அவனுடன் சேர்ந்தவனான இளவரசன் அங்கதன் முதலாக எழுபது வெள்ளம் என்று கணக்கிட்டுச் சொல்லப்படும் வானர வீரர்கள் எத்தகைய ஆற்றல் பெற்றவர் என்பதை நம்மால் ஓர் அனுமானமாக அறியக்கூட முடியவில்லை; தீவினையால் விளைந்த, கொடுந்துயர் தந்த, ஆவணி, புரட்டாசி என்ற இரு கார்கால மாதங்களும் கூட விரைவாகச் சென்றுவிட்டன. எனவே உன்னுடைய வில் போன்ற வளைந்த அழகிய நெற்றியை உடைய சீதாதேவி வந்து சேர்ந்தவளாவாள்; இது உறுதி; எனவே நீ உன் மனத்தில் கொண்டுள்ள கொடிய துயரத்தைத் தவிர்ப்பாயாக?" என்றான் இலக்குவன்.

நாம் அனுமனை முன்னரே கண்டு உரையாடியதால் அவனுடைய வலிமையை நம்மால் ஓரளவு அறிய முடிந்தது. அவனுடைய இளவரசனான அங்கதன், மற்றும் எழுபது வெள்ளம் படையினரின் ஆற்றலை நாம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் அனுமன் போன்று வலிவுள்ளவரா, அல்லது அவனினும் மேம்பட்ட வீரர்களா? என்பதை அறியமுடியவில்லையே என்கிறான் இலக்குவன். கார்காலம் முடிந்ததும் இவர்கள் அனைவரும் சீதையைத் தேடித்தர இங்கு வருவர். இது உறுதி. எனவே நீ இப்பொழுது மனங் கலங்குதலைத் தவிர்ப்பாயாக என்கிறான் என்பதாம்.

இங்கே ஒன்று நோக்க வேண்டும், இளவரசனான அங்கதனையும், அமைச்சனான அனுமனையும், கிட்கிந்தையின் வாலி சேனை எழுபது வெள்ளத்தைப் பற்றியும் கூடக் குறிப்பிட்ட இலக்குவன், இவர்களுக்கெல்லாம் தலைவனாகிய சுக்கிரீவனைப் பற்றி ஒன்றுமே கூறாது விடுத்ததை நோக்கினால், இலக்குவன் சுக்கரீவன் மீது கொண்டிருக்கும் அவநம்பிக்கை புலனாகும் என்பதை அறிக.

68. "மறை அறிந்தவர் வரவுகண்டு, உமை
வலியும் வஞ்சகர் வழியொடும்
குறைய வென்று, இடர்களைவென் என்றனை;
குறை முடிந்தது; விதியினால்
இறைவ! அங்கு அவர் இறுதிகண்டு, இனிது
இசை புனைந்து இமையவர்கள் தாம்
உறையும் உம்பரும் உதவி நின்று அருள்;
உணர்வு அழிந்திடல் உறுதியோ?" (4321)

(மறை - வேதம்; வலியும் - துன்புறுத்தும்; வழி - குலம்; குறைதல் - அழிதல்; விதி - முறை; இறுதி - அழிவு; கண்டு - செய்து; இசை - புகழ்; புனைதல் - அணிதல்; இமையவர் - தேவர்; உணர்வு - அறிவு; உறுதி - நன்மை; உம்பர் - தேவலோகம்)

"தலைவனே! வேதங்களை முற்றும் உணர்ந்தவர்களாகிய தண்டகவனத்து முனிவர்கள் நீ அங்கு வந்திருக்கும் செய்தி கேட்டு, உன்னை வந்து சரணடைந்து தங்களை அரக்கர்களிடமிருந்து காத்தருள வேண்டும் என்று வேண்டிக் கொள்ள, "உங்களை வலியவந்து துன்புறுத்தும் வஞ்சகச் செயலை உடைய அரக்கர்களை அவர்கள் குலத்தோடும் அழித்து முடித்து, உங்கள் துயரத்தைத் தீர்ப்பேன்" என்று வாக்குறுதி அளித்தாயே! அந்தக் குறை இப்போது, அவ்வரக்கர் தலைவனாகிய இராவணன் செய்த தீவினையாகிய சீதையைக் கவர்ந்து சென்றதால் முடிந்ததாயிற்று; எனவே இனிமேல் அவர்கள் இடமாகிய இலங்கையிலேயே அவர்களுக்கு அழிவைச் செய்து, அதனால் ஏற்படுகின்ற புகழ்மாலையை அணிந்து, தேவர்களுக்கு, அவர்களுக்குரிய தேவலோகத்தை அவர்களுக்கே மீட்டுக் கொடுக்கும் செயலை அருள் கூர்ந்து செய்வதை

விட்டுவிட்டு, இவ்வாறு அறிவு கலங்கிப்போய்த் தளர்ந்து போதல் நன்மை பயக்கும் செயலாகுமா?" என்கிறான் இலக்குவன்.

முன்பு தண்டக வனத்து முனிவர்களிடம் "ஆர் அறத்தினோடு அன்றி நின்றார், அவர் வேர் அறுப்பென், வெருவன்மின்" என்ற இராமன் சூளுரையை இங்கு நினைவு கூர்க. இராம அவதாரத்தின் இருபயன்களான "துஷ்டநிக்ரகமும், சிஷ்ட பரிபாலனமும்" ஒரே காலத்தில் முடிந்து போவதுடன், முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் நீ, தந்த வாக்குறுதியையும் நிறைவேற்றியதாக ஆகும். எனவே அத்தகைய புகழுக்குரிய காரியத்தைச் செய்ய முற்படாமல் இவ்வாறு கலங்கித் தளர்வது தக்கதன்று என்று அறிவுறுத்துகிறான் இலக்குவன்.

இங்கே இலக்குவன் இராமனை "இறைவ" என்று அழைப்பதும் நோக்கத் தக்கது. காப்பியத்தில் வேறு எங்கும் இலக்குவன் இராமபிரானை "இறைவ" என்று அழைத்ததாகக் காணப்படவில்லை. இங்கே அவனுடைய அவதார நோக்கத்தை அவனுக்கு நினைப்பூட்ட வேண்டுவது இலக்குவனுக்கு இன்றி யமையாததாக ஆனது. எனவே "இறைவ" என்று அழைத்தான் என்க. தனக்குத் தீங்கு செய்யாத அரக்கரை அழிக்க, இப்பொழுது, இராவணன் சீதையை அபகரித்துக் சென்றது ஒரு நல்ல காரணமாக ஆயிற்று என்பதை, இலக்குவன் "குறைமுடிந்தது விதியினால்" என்ற சொற்களால் குறித்தான் என்பதாம்.

69. "காது கொற்றம் நினக்கு அலாது
பிறர்க்கு எவ்வாறு கலக்குமோ?
வேதனைக்கு இடமாதல் வீரதை அன்று;
பேதைமையாம் அரோ;
போது பிற்படல் உண்டு; இது ஓர் பொருள் அன்று;
நின்று புணர்த்தியேல்,
யாது உனக்கு இயலாதது? எந்தை! வருந்தல்"
என்ன இயம்பினான் (4322)

(காதுதல் - கொல்லுதல்; கலத்தல் - கிடைத்தல்; வீரதை வீரத்தன்மை; பேதைமை - அறியாமை \ பெண்தன்மை; போது - காலம்; பிற்படல் - தாழ்த்தல்; புணர்த்தல் - முயற்சி செய்தல்; கொற்றம் - வெற்றி)

"என் தந்தை போன்றவனே! பகைவர்களாகிய அரக்கர்களைக் கொல்லுவ தால் உண்டாகும் வெற்றி, உனக்கு இல்லாமல், அயலாராகிய அரக்கனை எவ்வாறு போய்ச்சேரும்?. காரணம் நீ அறத்தின் வழிநின்று போரிடு தலால் வெற்றி உனக்கு வருமே தவிர, அறத்திநின்றும் மாறுபட்ட அரக்கர் களுக்குப் போய்ச் சேராது. எனவே இந்த வெற்றி யாருக்குக் கிடைக்கும் என்று துன்பத் திற்கு இடம் கொடுத்துத் தளர்ந்திருத்தல் வீரத்தின் பாற்பட்டதன்று; அது பெண்மைத் தன்மையும், அறியாமையும் ஆகும்; போர் செய்வதற்குக் காலம் தாழ்க்கிறது என்பது வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம். ஆனால் நமக்கு இம் மழைக்காலம் ஒரு பொருட்டு அல்ல; அதைத் தடையாக நினைக்க வேண்டியதில்லை; இப்பொழுதே ஒரு உறுதிகொண்டு போர்த்திறனை

ஆராய்ந்து முனைந்து முயற்சி செய்தால், உனக்கு இயலாதது என்ன இருக்கிறது ? எனவே இதற்காக வருந்தித் தளராதே" என்றான் இலக்குவன்.

"வீரதை" என்ற புதிய சொல்லாட்சியை நோக்குக. வீரதை என்பது வீரத் தன்மை என்று பொருள்படும். "அறம் வெல்லும், பாவம் தோற்கும்" என்பதால் அறத்தின் வழிநின்று போர் செய்யும் இராமனுக்கே வெற்றி கிடைக்கும் என்பதில் இலக்குவன் உறுதியாக இருந்தான் என்பதாம்.

70. மழைக்காலம் தொடங்குதல்

சொற்ற தம்பி உரைக்கு உணர்ந்து, உயிர்
சோர்வு ஒடுங்கிய தொல்லையோன்
இற்ற இன்னல் இயக்கம் எய்திட,
வைகல் பற்பல ஏக, மேல்
உற்று நின்று வினைக் கொடும்பிணி
ஒன்றின்மேல் உடன் ஒன்று உராய்,
மற்று வெம்பிணி பற்றினால் என்ன
வந்து எதிர்ந்தது மாரியே. (4323)

(தொல்லையோன் - ஆதிப்பரம்பொருள் \ பழையோன்; சொற்ற - சொன்ன; இற்ற - நீங்கிய; இயக்கம் - நடமாட்டம்; வைகல் - நாட்கள்; பிணி - நோய்; மாரி - மழை \ மழைக்காலம் \ கூதிர்ப்பருவம்; உராய்தல் - உடன்சேர்தல்; உணர்ந்து - தெளிந்து; எதிர்ந்தது - தோன்றியது)

கார்காலம் வந்தும் சீதையை உடனே கண்டுபிடிக்க முடியாமல் போனதே என்று உயிர் சோர்வுற்று ஒடுங்கிய தன்மையனான, பழமையான ஆதிப்பரம் பொருளான இராமபிரான், தன்தம்பி இலக்குவன் கூறிய ஆறுதல் மொழிகளைக் கேட்டுச் சற்று துன்பம் நீங்கியவனாக, கிடக்கை விட்டு நடமாட்டம் கொள்ள லானான். இவ்வாறு சில நாட்கள் நகர்ந்தன. முன்பே ஒரு கொடிய நோய், பழைய தீவினையால் உடம்பில் இருக்க, மேலும் ஒரு நோய் உடன் வந்து சேர்ந்து பற்றிக் கொண்டதுபோல, முன்னமே வந்த கார்காலத்தோடு, இப்போது கூதிர்காலமும் வந்து தோன்றியது.

"தொல்லையோன்" என்ற சொல் இராமபிரானின் அவதார நோக்கத்தை மனத்துள் கொண்டு கூறிய சொல்லாகும். கார்காலம் கொடும் பிணி என்றால் கூதிர்காலம் வெம்பிணி என்று கூறிய நயம் நோக்குக. எனவே கார்காலத்தில் தான் பட்ட துன்பத்தைக் காட்டிலும், கூதிர்காலத்தில் மேலும் துன்பப்பட நேரும் என்பது குறிப்பு.

71. கூதிர்கால வருணனை - (பின் மழைக்காலம்)

நிறைந்தன நெடுங்குளம்; நெருங்கின தரங்கம்;
குறைந்தன கருங்குயில்; குளிர்ந்த உயர் குன்றம்;
மறைந்தன நெடுந்திசை; வருந்தினர் பிரிந்தார்;
உறைந்தன மகன்றிலுடன் அன்றில் உயிர் ஒன்றி. (4324)

(நெடுங்குளம் - நீண்ட ஏரிகள்; தரங்கம் - அலைகள்; ஒன்றுதல் - தழுவுதல்)

பின்மழைக்காலத்தில் பெய்த மழையால், நீண்ட ஏரிகள், குளங்கள் எல்லாம் நீரால் நிரம்பி வழியப்பெற்றன; அவற்றில் அலைகள் ஒன்றன் மேல் ஒன்றாய் நெருங்கி வீசின; கரிய குயில்கள் தம் குரல் ஒலி ஒடுங்கி, இரை தேடக் கூடப் போகாது வன்மை குறைந்து ஒடுங்கி இருந்தன; உயர்ந்த மலைகளெல்லாம் குளிர்ச்சியுற்றன; நீண்ட பெரிய திசைகளெல்லாம், கூதிர்காலக் கார்மேகத்தின் அடர்த்தியால் கண்ணுக்குத் தெளிவாகத்தெரியாது மறைந்தது போலாயிற்று; ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்த காதலர், காதலியர் பிரிவுத்துயரால் மிகவும் வருத்தமுற்றனர். மகன்றில் பறவையும், அன்றில் பறவையும் தத்தம் உயிருக் குயிரான பெடைகளோடு, உயிரோடு உயிர் ஒன்றித் தழுவிக் கொண்டிருந்தன.

மகன்றிலும் அன்றிலும் தத்தம் பெடையை எப்பொழுதும் பிரியாமல் இணைந்தே வாழும் இயல்பின; மருதநிலப் பறவையான மகன்றில் நீர்வாழ்பறவை; அன்றில் பனை மரத்தில் வாழும் பறவை; பின்மழைக் காலமாகிய ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பெரும் மழை பெய்தல் வழக்கம்.

72. பாசிழை மடந்தையர் பழிப்புஇல் அகல் அல்குல்
தூசு தொடர் ஊசல், நனி வெம்மை தொடர்வுற்றே
வீசியது வாடை எரி வெந்தவிரி புண்வீழ்
ஆசுஇல் அயில் வாளி என ஆசை புரிவார்மேல். (4325)

(பாசிழை - பசுமையான; அணிகலன்கள்; பழிப்புஇல் - குற்றமற்ற; தூசி - ஆடை \ புடவை; ஊசல் - ஊஞ்சல்; ஆசை - காதல்; எரி - நெருப்பு; ஆசுஇல் - குற்றமற்ற; அயில் - கூரிய; வாளி - அம்பு ; வீழ்தல் - தைத்தல்; தொடர்வுற்று - சார்ந்து)

பசுமையான பொன்னாலாகிய அணிகலன்களை அணிந்தவரும், குற்றமற்ற அகன்ற இடையில் புடவை அணிந்திருப்பவரும், சங்கிலியால் பிணைக்கப்பட்ட ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக்கொண்டிருப்பவருமான மகளிரின் மேல் சார்ந்து படிந்து வந்த வாடைக்காற்று, அவர்கள் மேல் காதல் கொண்டு வருந்துகின்ற ஆடவர்களின் நெருப்பில் வெந்த பெரிய புண்ணின் மேல் தைக்கின்ற குற்றமற்ற கூர்மையான அம்பு போல், வெப்பக்காற்றாய் வீசி மிகவும் வருத்தியது.

வாடைக்காற்று ஆடவரை வெப்பக்காற்றாய் வருத்தியது என்பது கருத்து. இதற்கு எடுத்துக்காட்டாக, முன்பு "வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போன்று" என்று கூறிய கவிஞன், இப்போது "எரிவெந்த விரிபுண் வீழ் ஆசுஇல் அயில் வாளி" என்று வேலுக்கு மாறாக அம்பைக் குறித்தான் என்க. முன்பே காதல் நோயால் மடந்தையரைக் கூடாது பிரிந்து இருப்பது எரிவெந்தபுண். அதில் இவ் வாடைக்காற்று வெப்பம் கொண்டு வீசுவது அப்புண்ணில் கூரிய அம்பு பாய்ந்தது போன்றிருந்தது என்றார் என்பதாம். "வெந்ததோர் புண்ணின் கண் வேல் கொண்டு நுழைப்பான் போல், காய்ந்த நோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ?" என்பது கலித்தொகை. வாடைக்காற்று நெருப்புப் போன்று வெப்பக்காற்றை வீசும் என்று கந்தர காண்டத்தில் கூறப் போவதும் இங்கு

நினைவிற்கொள்ளத் தகும். இங்கே மடந்தையர் என்பது பொதுவாகப் பெண்களைக் குறித்ததாகக் கொள்ள வேண்டும்.

73. வேலை நிறைவுற்றன; வெயில்கதிர் வெதுப்பும்
சீலம் அழிவுற்ற; புனல் உற்று உருவு செப்பின்
காலம் அறிவுற்று உணர்தல் கன்னல் அளவு அல்லால்;
மாலை பகல் உற்றது என, ஓர்வு அரிது மாதோ! (4326)

(வேலை - கடல்; கதிர் - கிரணங்கள்; சீலம் - தன்மை \ இயல்பு; கன்னல் - நாழிகை வட்டில்; ஓர்தல் - அறிதல்)

பின்மழைக்காலத்தில் பொழிந்த பெருமழையால் குளங்கள் ஆறுகள் நிரம்பியதால், கடலும் நீரால் நிறைந்து விளங்கிற்று; வெப்பமான கிரணங்களால் எல்லோரையும் வெதுப்புகின்ற சூரியனும், தன் இயல்பு அழிந்தான்; கன்னல் என்னும் நாழிகை வட்டிலைக் கொண்டுதான் இதுபகல், இது இரவு என்று காலத்தை அளவிட்டு அறிய முடிந்ததே தவிர, சூரியனின் இயக்கத்தைக் கொண்டு இதுபகல், இது இரவு என்று அறிந்து தெளிய முடியவில்லை.

இங்கே கன்னல் என்னும் நாழிகை வட்டில் என்பது எவ்வாறு இருக்கும் என்று விஷ்ணு புராணம் கூறுவதைக் கேளுங்கள். "பன்னிரண்டரைப் பலம் எடையுள்ள தாமிரத்தைக் கொண்டு மகததேசத்தில் ஒருபடி அளவாகச் செய்யப்பட்டதும், இருபது குன்றிமணி எடை உள்ள தாமிரத்தைக் கொண்டு பொன்னினால் நான்கு அங்குலம் அளவாகச் செய்த சலாகை கொள்ளும் அளவாக அடியில் துளை இடப்பெற்றதுமான ஒரு பாத்திரத்தைத் தண்ணீரில் இட, அப்பாத்திரம் எவ்வளவு நேரத்தில் தண்ணீரால் நிறையுமோ, அவ்வளவு காலம் ஒரு நாழிகை" என்று அறியப்படும்.

இவ்வாறு நாழிகையைக் கணக்கிட்டு உரைப்பவர் நாழிகைக் கணக்கர், என்றும் கணக்கர் என்றும், கடிகையர் என்றும் வழங்கப்பட்டனர். பண்டைக் காலத்தில் இத்துடன் அரும்புகளின் வளர்ச்சியாலும், பிறவற்றாலும் கூட நாழிகையைக் கணக்கிட்டு அறிந்திருக்கின்றனர் என்றும் கூறுவர்.

74. நெல்கிழிய நெற்பொதி நிரம்பின; நிரம்பாச்
சொற்கு இழிய நல்கிளிகள்; தோகையவர் தூய்மென்
பற்குஇழி மணிப்படர் திரைப் பரதர் முன்றில்,
பொற்கிழி விரித்தன, சினைப் பொதுளு புன்னை. (4327)

(தோகை - மயில்; இழிதல் - தோல்வியுறுதல்; கிழிதல் - உதிர்தல்; பொதி - போர் \ களஞ்சியம்; பற்கு - பல்லுக்கு; முன்றில் - முற்றம்; மென் - சிறிய; திரை - அலை; பரதர் - வலைஞர்; மணி - முத்து; சினை - கிளை; பொதுளுதல் - நிறைந் திருத்தல்; பொற்கிழி - பொன்னாடை \ பொன் முடிப்பு)

மயில்போலும் சாயலும் கூந்தலும் உடைய மகளிரின் பொருள் நிரம்பாக் குதலைச் சொற்களுக்குத் தோல்வியுற்று, நல்ல அழகிய கிளிகள் மழைக்கு அஞ்சி, நெற்கதிர்கள் உதிர்ந்து போகும் வண்ணம், நெற்போரில் சென்று தம்மை

ஒளித்துக் கொண்டன. அதுபோலவே, அம்மகளிரின் தூய்மையான சிறிய பற்களின் ஒளிக்கும் வரிசைக்கும் தோற்று, முத்துச் சிப்பிகள், அலைகள் நிறைந்த கடலுக்குள் சென்று மறைந்து கொண்டன. வலைஞர்களின் வீட்டு முற்றத்தில் கிளைகள் முழுதும் அரும்புகளால் நிரம்பப்பெற்ற புன்னைமரங்கள், புன்னைப் பூக்களைப் பொன்னாடை போலவும், பொன் முடிப்புப் போலவும், அழகாக விரித்து மலர்ந்தன.

நெற்பொதி என்பது நன்றாக வளர்ந்து முதிர்ந்து முற்றி நிற்கும் நெற்பயிரையும், அந்த நெல்லைக் கொட்டி வைத்திருக்கும் நெற் களஞ்சியத்தையும் குறிக்கும். இயல்பாகக் கிளிகள் தமக்கு உணவாக நெற்கதிர்களைக் கொள்ளும், அதுபோலவே முத்துச் சிப்பிகள் இயல்பாகக் கடலில் நிறைந்திருக்கும். இவற்றை மகளிரின் குதலைச் சொற்களுக்குத் தோற்றும், தூயசிறிய பற்களுக்குத் தோற்றும் தம்மை ஒளித்துக் கொண்டன என்று கூறியது ஒரு நயம். புன்னை மலர்கள் மலர்ந்திருப்பது பொன்னாடை போல் பூத்துக் குலுங்கியது என்பது பெறப்பட்டது. புன்னை அரும்பு வெள்ளிய இதழால் மூடப்பட்டு உள்ளே பொன் போன்ற மகரந்தமும் உடையதால், அது வெள்ளைத் துணியில் பொன்னை முடிந்து வைத்த பொன் முடிப்புப் போல் இருந்தது என்று கூறுவதும் பொருந்தும். நிரம்பாச் சொல் என்பது உச்சரிப்பு முற்றுப்பெறாத சொல் என்று மழலைச் சொல்லைக் குறிக்கும். "நாவொடு பயிலா நகைபடு தீஞ்சொல்" என்று அகநானூறு கூறும்.

75. நிறம்கருகு கங்குல், பகல், நின்ற நிலை நீவா
அறம் கருது சிந்தை முனி அந்தணரின், ஆலிப்
பிறங்குஅரு நெடுந்துளிபடப், பெயர்வில் குன்றின்,
உறங்கல பிறங்கல் அயல் நின்ற உயர் வேழம். (4328)

(கங்குல் - இரவு; நீவா - நீங்காது; ஆலி - ஆலங்கட்டிகள் \ மழைத்துளி; பிறங்கு - விளங்குகின்ற; துளி - தாரை; பெயர்வுஇல் - அசையாத; பிறங்கல் - மலை; அந்தணர் - அம் + தணர் \ அழகிய கருணையை உடையவர்கள்)

கறுத்த நிறமுடைய இரவுப் பொழுதிலும், பகலிலும், தாம் நின்ற தவநிலையிலிருந்து சிறிதும் நீங்காது, அறக்கடவுள் ஒன்றையே சிந்தையில் கருதி, அகப் புறப் பற்றுக்களை வெறுத்து ஒதுக்கின அழகிய கருணையை யுடைய முனிவர்களைப் போலவும், ஆலங்கட்டி போல் விளங்குகின்ற அரிய பெரிய மழைத்துளிகள் தம்மேல் பட்டுச் சிதறிய போதும், சிறிதும் அசையாது நிற்கின்ற மலையினைப் போலவும், உயர்ந்த யானைகள் தாம் உறங்காமலும், சற்றும் விலகாமலும் ஒரே நிலையில் நின்றன.

கங்குல் என்றாலே கரிய இருட்டு என்று பொருள். "நிறம்கருகு கங்குல்" என்பது கார் காலத்தில் தோன்றும் கும்மிருட்டைக் குறித்தது என்க. அசையாது உறங்காது நின்ற யானைகளுக்கு, உறங்காது இரவும் பகலும் தவமியற்றும் முனிவர்களும், ஆலங்கட்டி மழையே பெய்தாலும் அசையாது நிற்கும் மலைகளும் உவமை. மலையை அதன் அசையாத் தன்மையைக் கருதி

வடமொழியில் "அசலம்" என்று அழைக்கப்படுதலை நினைக. யானை நின்று கொண்டே உறங்கும்; அவ்வாறு உறங்கும்போது சிறிதும் அசையாது என்பது செய்திகள். பொதுவாக யானை ஏழு முழம் உயர்ந்து இருத்தல் உத்தம இலக்கணம் என்று கூறுவர். எனவே "உயர் வேழம்" என்றார் என்க. யானைகள் தவமுனிவர்கள் போன்று உறங்காமலும் மலைகள் போன்று அசையாமலும் நின்றன என்பது கருத்து.

76. சந்தின் அடையின் படலை வேதிகை தடந்தோறும்
அந்திஇடு அகில் புகை நுழைந்த, குளிர் அன்னம்;
மந்தி துயில் உற்ற, முழை; வன் கடுவன் அங்கத்து
இந்தியம் அவித்த தனி யோகியின் இருந்த. (4329)

(அடை - இலை \ தழை; படலை - இலைக்குடில் \ மேற்கூரை; வேதிகை - மேடை; தடம் - ஓமகுண்டம்; மந்தி - பெண்குரங்குகள்; முழை - மலைக்குகை; கடுவன் - ஆண்குரங்குகள்; அங்கம் - உடம்பு; இந்தியம் - ஐம்பொறிகள்; அவித்த - அடக்கிய; அந்தி - காலை மாலைச்சந்தி)

கூதிர் காலத்தில் பெய்த பெருமழையினால் குளிர்ச்சி தாங்காது அன்னங்கள் சந்தனத் தழைகளால் கூரை வேயப்பட்ட இலைக்குடிலில் அமைந்திருக்கும் மேடைகளிலும் ஓமகுண்டங்களிலும், காலை மாலைச் சந்திகளில் முனிவர்கள் எரிக்கும் அகில் புகையிலும் நுழைந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தன; பெண் குரங்குகளோ, அங்குள்ள ஒரு மலைக் குகையில் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தன; வலிமையான ஆண்குரங்குகள் அப்பெண் குரங்குகளைக் காத்து நிற்பதுபோல், உடம்பில் உள்ள ஐந்து இந்திரியங்களையும் அடக்கித் தனியாகத் தவம் செய்து நிற்கின்ற ஒப்பற்ற யோகியைப் போல் நின்று கொண்டிருந்தன.

அந்தி என்பது இங்கே இரவு பகலுடன் இணையும் மாலைச் சந்திக்கும், பகல் இரவுடன் இணையும் காலைச் சந்திக்கும் பொதுவாக நின்றது என்க. இந்தியம் என்பது ஐம்புலன்களின் வழியே செல்லும் ஐம்பொறிகளையும் குறித்தது. ஐம்புலன்கள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. குரங்கு சேஷ்டை மிக்கது. ஒரு மணித்துளி கூட அங்கத்தை சேஷ்டை செய்யாமல் வைத்திருக்க இயலாதது. அத்தகைய குரங்கு கூட "அங்கத்து இந்தியம் அவித்த தனியோகியின் இருந்த" என்பது குரங்கிற்கும் பெருமை சேர்த்தது என்க. பின்னால் இராமனுக்குத் துணைபுரியப் போகும் எழுபது வெள்ளம் குரங்குகளின் தன்மை கூறியவாறுமாம்.

இங்கே ஒரு சிறப்புச் செய்தி. யோகி என்பவர் யார்? யோகம் என்பது என்ன? பொதுவாக யோகம் என்றால் அது எட்டு அங்கங்களை உடைய அஷ்டாங்க யோகத்தையே குறிக்கும். அவை, இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனப்படும். இத்தகைய யோக நெறியில் சிறப்புற்று விளங்குபவர்கள் "அஷ்டமா சித்தி" பெற்றவராவர். அஷ்டமாசித்திகள் என்பன - அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராத்தி, பிரசாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம்.

77. ஆசுஇல் சுனை, வால் அருவி, ஆய் இழையர் ஐம்பால்
வாச மணம் நாறல் இலஆன; மணி வன்கால்
ஊசல் வறிது ஆன; இதண் ஒண் மணிகள் விண்மேல்
வீசல் இலவான; வானின் நெடுமாரி துளி வீச. (4330)

(மாரி - மேகம்; ஆசுஇல் - குற்றமற்ற; வால் - தூய்மை; ஆய் - ஆராய்ந் தெடுத்த; இழையர் - அணிகலன்களை அணிந்த பெண்டிர்; ஐம்பால் - கூந்தல்; நாறல் - வீசுதல் \ கமழுதல்; மணி - இரத்தினம் \ மாணிக்கம்; கால் - கம்பங்கள்; ஊசல் - ஊஞ்சல்; வறிது - வீண் \ பயனிலாமை; ஒண் - ஒளிவாய்ந்த; இதண் - பரண்கள்)

வானத்திலிருந்து நெடிய மேகங்கள் மழைத்துளிகளைப் பொழிய, அதனால், குற்றமற்ற மலைச்சுனைகளிலும், தூய்மையான அருவிகளிலும், ஆராய்ந் தெடுத்து அணியப்பெற்ற அணிகலன்கனை அணிந்த பெண்டிர்கள் சென்று நீராடாததனால் அவர்களின் கூந்தலுக்கு உள்ள இயற்கை மணமாகிய வாசமும், அகில், சந்தனம் ஆகிய புகைகளால் ஏற்படுத்தப்பட்டதும் வாசநெய், நறுமலர் முதலிய செயற்கையான மணமும் அங்கே கமழாது போயின; இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற வலிய கம்பங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஊஞ்சல்களில் மகளிர் அமர்ந்து ஆடாததனால் அவையும் பயனற்றனவாய் வீணாய் நின்றன; ஆயல் ஓட்டும் மகளிர் தினைப் புனம் காப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் பரண்களின் மீதமர்ந்து, பறவைகளை ஓட்டும் பொருட்டு, ஒளி பொருந்திய மாணிக்கக் கற்களை ஆகாயத்தின் மேல் எறிவதும் இல்லாது போயிற்று.

மழைக் காலத்தில் மழை இடைவிடாது பொழிந்து கொண்டிருந்ததால் மகளிர் சுனையிலும் அருவியிலும் சென்று நீராடவில்லை. எனவே அம்மகளிரின் கூந்தலின் இயற்கை மணமோ, செயற்கை மணமோ அங்கே கமழவில்லை; அவர்கள் அமர்ந்து ஆடுகின்ற ஊஞ்சலும் வீணாகக் கிடந்தன. காரணம் மழையால் அவர்கள் வெளியே வந்து ஊஞ்சல் ஆடத்துணியவில்லை; தினைப்புனம் காக்கும் பெண்டிரும் அது செய்யாததால், அவர்கள் பறவைகளை விரட்டப் பயன்படுத்தும் கவண்கற்களான மாணிக்கக் கற்களும் விண்ணின்மேல் வீசப்படாதது ஆயிற்று. குறிஞ்சி நிலத்தின் செல்வச் செழிப்பு "மணிவன்கால்" என்றும், "ஒண்மணிகள்" என்றும் சிறப்பிக்கப்பட்டதைக் காண்க. அவர்கள் அருவியில் நீராடுதல், ஊஞ்சலாடுதல், தினைப்புனம் காத்தல் ஆகியவற்றைச் செய்யாதிருந்தனர் என்பது கருத்து. ஐம்பால் என்பது, ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் பெண்களின் கூந்தலைக் குறிக்கும் என்பது முன்பு நாம் கண்டதேயாம். குற்றமில்லாத சுனை தூய அருவி என்றால் என்ன? அச்சுனை களில் சருகு ஊறிப்போய் சேறும் சகதியுமாய் இருத்தல், பாசிபடிந்திருத்தல், நோய் விளைவித்தல் முதலியன இல்லாததாகும்.

78. கருந்தகைய தண் சினைய, கைதை மடல் காதல்
தருந்தகைய போது கிளையின் புடை தயங்க,

பெருந்தகைய பொற்சிறகு ஒடுக்கி, உடல்பேராது,
இருந்த, குருகின் பெடை, பிரிந்தவர்கள் என்ன. (4331)

(தண் - குளிர்ந்த; சினை - கிளை; கைதை - தாழைமரம்; காதல் - விருப்பம்; போது - அரும்பு ; கிளை - சுற்றத்தவர்; புடை - பக்கம்; தயங்க - விளங்க; தகை - அழகு; பொன் - அழகு; பேராது - அசையாது; குருகு - கொக்கு \ நாரை; மடல் - மலர்)

கரியநிறமுள்ள, குளிர்ந்த கிளைகளையுடைய தாழை மரத்தின் மலர்கள் - தாழம்பூ காண்பார் மாட்டு விருப்பம் கொள்ளச் செய்யும் தன்மையது; அதன் அரும்புகள் சுற்றத்தார் போல அருகில் விளங்க, பெண் கொக்குகள் பெருமையும், அழகும் வாய்ந்த தம் சிறகுகளை ஒடுக்கிக் கொண்டு, உடலில் சிறிதும் அசைவில்லாது தலைவரைப் பிரிந்த தலைவியர் போல இருந்தன.

மழைக்காலத்தில் தாழம்பூ மிகுதியாகப் பூக்கும். இது காமத்தை மிகுவிக்கும் மலர்களுள் ஒன்று. தாழம்பூ யாவரையும் விருப்பம் கொள்ளச் செய்யும். இது மன்மதனின் வாளாயுதம் என்பர். “கைதைமடல் காதல் தரும் தகைய போது” என்றார். தலைவரைப் பிரிந்த தலைவியர் துன்பமுற்றுத் தனியாக வீற்றிருப்பர். அவர்களை அவர்களுடைய செவிலித்தாயரும், தோழிகளும் தேற்றுவது வழக்கம். அதுபோல இங்கே பெண்கொக்கு, தன் பெருமையும் அழகும் வாய்ந்த சிறகுகளை ஒடுக்கிக் கொண்டு, ஆடாது அசையாது இருக்க, அதைச் சுற்றிலும் தாழை மலரம்புகள் - உருவத்தால் கொக்குப் போன்றே தோற்றமளிக்கும் தாழை மடல்கள், தோழியர்போல் அருகிலிருந்து ஆறுதல் கூறின என்பதாம். “அருகுகைதை மலர, கெண்டை, குருகு என்று அஞ்சும்” என்ற பெரிய திருமொழி, தாழைமடல் குருகுபோல் தோற்றமளிக்கும் என்பதைத் தெளிவு படுத்தும்.

79. பதங்கம் முழவுஒத்த; இசை பல்ஞிமிறு பன்ன,
விதங்களின் நடித்திடும் விகற்ப வழி மேவும்
மதங்கியரை ஒத்த மயில்; வைகும் மர மூலத்து
ஒதுங்கின உழைக்குலம்; மழைக்குலம் உழக்க. (4332)

(பதங்கம் - விட்டில்பூச்சிகள் \ பறவைகள்; முழவு - மத்தளம்; ஞிமிறு - வண்டுகள்; இசை - ரீங்காரம்; விதம் - மாதிரி; விகற்பம் - வேறுபாடு; மதங்கியர் - கூத்தியர்; மூலம் - அடி; உழை - மான்; உழக்க - வருத்த)

பறவைகள் தம் சிறகை அடித்துப் பறப்பது மத்தளம் தட்டுவதைப் போன்றிருந்தது; பலவகைப்பட்ட வண்டுகள் ரீங்காரமிடுவது இசைப்பாடலைப் பாடுவது போன்றிருந்தது; பலமாதிரிகளில் நடிக்கின்ற வேறுபாடு தெரிந்த சிறந்த கூத்தியரைப் போல, மயில்கள் நாட்டியமாடின; மேகக்கூட்டத்தின் இடி முழக்கத் திற்கும், அவற்றின் அச்சுறுத்தலுக்கும் அஞ்சி, மான் கூட்டங்கள் அவை தங்கியிருக்கின்ற மரத்தின் அடியில் சென்று ஒதுங்கிக் கொண்டன.

பதங்கம் என்ற சொல், பொதுவாக விட்டில் பூச்சியையே குறிக்கும் என்றாலும் இங்கே பறவைகளுக்குப் பொதுப்பெயராகக் கொள்ளப்பட்டது.

மதங்கியர் என்பவர் நாட்டியம், நாடகம் ஆடும் விறலியரில் இளைய மங்கையரைக் குறித்தது. மயில்கள் இசையுடன் நடனமாடுவதைக் காண்பதற்காக மான்கள் அம்மரத்தினடியில் சேர்ந்தன என்றலும் பொருந்தும். பறவைகள் மத்தளம் தட்டவும், வண்டுகள் இன்னிசை பாடவும், மயில்கள் நடனக் கலையைக் கரை கண்டவர்போல பலவிதங்களில் ஆடவும், அவற்றை மான் கூட்டங்கள் ஒதுங்கியிருந்து கண்டு களித்தன என்பதும் ஒரு ரசமான கற்பனை. மயில்கள் மழையை விரும்பும் இயல்பு உடையன. எனவே அவை மகிழ்ந்து ஆடின என்பதும், மான்கள் மழையை விரும்பாது. அஞ்சும் இயல்பின, எனவே அவை அஞ்சி மரத்தினடியில் ஒதுங்கின என்பதும் ஒரு நயம். மான்கள் இந்நடனக்காட்சியைக் கண்டதால், மேகம் முழங்கும் இடிமுழக்க அச்சத்தினின்றும் விடுபட்டன என்பதாம்.

80. விளக்கு ஒளி அகில் புகை விழுங்கு அமளி, மென் கொம்பு
இளைக்கும் இடை மங்கையரும், மைந்தர்களும் ஏற,
தளத்தகும் மலர்த்தவிசு இகந்து, நகுசந்தின்
துளைத்துயில் உவந்து, துயில்வுற்ற, குளிர்தும்பி. (4333)

(அமளி - கட்டில் \ படுக்கை; தளம் - இதழ்கள்; தவிசு - படுக்கை \ ஆசனம்; இகந்து - இறங்கி \ நீங்கி; நகுதல் - மலர்தல்; சந்து - சந்தனமரம்; துளை - துவாரம் \ பொந்து; தும்பி - வண்டுகள்; விழுங்குதல் - மறைத்தல்)

மெல்லிய பூங்கொடியை விடவும் இளைத்திருப்பது போன்று தோற்றமளிக்கும் இடையையுடைய மகளிரும், ஆடவர்களும் கார்காலத்தில் வெம்மைக்காக இடப்பெற்ற அகிற்புகை, விளக்கு ஒளியை மறைக்கும் படியான கட்டிலில் ஏற விழைந்தனர். அதுபோலவே குளிர்ச்சியுள்ள வண்டுகளும், அழகிய இதழ்களையுடைய தாமரை மலராசனத்திலிருந்து நீங்கி மலர்கள் நிரம்பப் பெற்ற சந்தன மரத்தின் பொந்தில் மிக விழைந்து உறங்கலாயின.

மழைக்காலம் குளிர்ச்சியைத் தருதலால், அதைத் தணிக்க வேண்டி அகிற்புகை ஊட்டினர்; அது விளக்கின் ஒளியையும் மறைத்தது என்றதனால் வெப்பமிகுதி கூறப்பட்டது. இந்த வெப்பச் சூழ்நிலையில், மகளிரும் மைந்தரும் கட்டிலில் ஏறிப் படுக்க விழைந்தனர். அதுபோலவே அஃறிணையாகிய நான்கறிவுடைய வண்டுகளும், குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர்த் தவிசிலிருந்து நீங்கி, உயர்ந்த சந்தன மரத்துளையை விரும்பிச் சென்று உறங்குவதாயின என்பதாம். குளிரை நீக்கி வெம்மை தரவல்லது மரப்பொந்துகள். மலர்களிலேயே சிறப்பு மிக்கதாகிய தாமரைமலரில் உறங்கிப் பழகிய வண்டுகள், மரங்களிலேயே உயர்ந்ததாகிய சந்தன மரப் பொந்துகளையே விரும்பிச் சென்று துயின்றன என்றது ஒரு நயம். "நண்டும் தும்பியும் நான்கறிவினவே" என்பது தொல்காப்பியம்.

81. தாமரை மலர்த்தவிசு இகந்து, தகை அன்னம்,
மாமரன் நிரைத் தொகு பொதும்பர் உழை வைக;
தேமரம் அடுக்கு இதணிடைச் செறி குரம்பைத்
தூமருவு எயிற்றியரோடு அன்பர் துயில்வுற்றார். (4334)

(தகை - அழகு; தவிசு - இருப்பிடம்; இகந்து - நீங்கி; பொதும்பர் - சோலை; வைகுதல் - தங்குதல்; தே - நறுமணம்; இதண் - பரண்; குரம்பை - குடிசை; தூ - ஊன் \ மாமிசம்; எயிற்றியர் - வேட்டுவப் பெண்டிர்; தொகு - திரண்டுள்ள)

அழகிய அன்னப்பறவைகள், குளிர்ச்சி மிகுந்த தாமரை மலராகிய தமது இருப்பிடத்தை விட்டு நீங்கி, குறையற்ற உயர்ந்த பெரிய மரங்கள் வரிசையாகத் திரண்டு நிற்கும் சோலையினிடத்தில் சென்று தங்கலாயின; நறுமணம் மிக்க சந்தனம், தேவதாரு முதலிய மரங்களின் பலகைகள் அடுக்கப்பெற்ற பரணிடத்தில் அமைந்த குடிசையில், தூய்மையான, வெள்ளிய பற்களை உடைய வேட்டுவப் பெண்கள், புனைக்காவல் புரிய வேண்டிய அவசியம் இல்லாமையால் அவர்களது அன்பு மிகுந்த கணவன்மாரோடு உறங்கலாயினர்.

அன்னங்கள் குளிர்ந்த தாமரை மலரை விட்டு, வெப்பமுள்ள உயர்ந்த மரங்களடர்ந்த சோலைகளில் தங்கின. தரையில் படுக்கும் இயல்புள்ள வேட்டுவப் பெண்கள், உயர்ந்த பரண்களில் அமைந்த குடிசையில் தங்கள் கணவன்மாரோடு துயின்றனர் என்பதாம். இங்கே "தூமருவு எயிற்றியர்" என்பதற்கு, தூய்மையான வெள்ளிய பற்களையுடைய வேட்டுவப் பெண்கள் என்று பொருள் கொண்டோம். இந்தச் சொற்றொடர்க்கு, மாமிசத்தையே உணவாகக் கொண்டுவாழும் ஊன் கமழும் பற்களையுடைய வேட்டுவப் பெண்கள் என்றும் பொருள் கூறுவதுண்டு. எயினர் என்ற ஆண்பால் சொல்லுக்கு எயிற்றியர் என்பது பெண்பாற் சொல்.

82. வள்ளி புடை சுற்றி உயர் சிற்றிலை மரம் தோறும்
எள்ளரும் மறிக்குருளோடு அண்டர்கள் இருந்தார்;
கள்ளரின் ஒளித்து உழல் நெடுங்கழுது ஓடுங்கி,
முள் எயிறுதின்று, பசிமூழ்கிட இருந்த. (4335)

(வள்ளி - வல்லி \ கொடி; எள்ளரும் - இகழ்தலில்லாத; மறி - ஆடு; குருளை - குட்டி; மறிக்குருள் - ஆட்டுக்குட்டி; அண்டர்கள் - இடையர்கள்; உழல்தல் - திரிதல்; கழுது - பேய்கள்; முள் - கூர்மை; மூழ்குதல் - மறைதல் \ அடங்குதல்; ஒடுங்கி - தளர்ந்து)

பக்கங்களில் கொடிகளால் சூழப்பெற்ற, உயர்ந்த, சிறிய இலைகளை யுடைய மரங்களின் அடியில் எல்லாம், இகழ்தற்குரியதல்லாததும், பாது காக்கப்பட வேண்டியதுமான ஆட்டுக்குட்டிகளோடு, இடையர்கள் ஒதுங்கி யிருந்தனர். திருடர்களைப் போல ஒளிந்து திரிகின்ற பெரிய பேய்கள், மழைக்கு அஞ்சி ஒடுங்கிப் போய், பிடித்துத் தின்ன உயிரினங்கள் கிடைக்காமையால், தனது முள் போன்ற கூரிய பற்களைத் தாமே கடித்து மென்று தின்று கொண்டு, மிக்கப் பசியுடன் இருந்தன.

இங்கே "சிற்றிலை" என்ற சொல் ஊன்றி கவனிக்கத்தக்கது. பெரிய இலைகளையுடைய மரங்களைக் காட்டிலும், சிறிய இலைகள் உள்ள மரங்களின் அடியில் தங்குவதுதான் மழைக்காலத்தில் பாதுகாப்பானதாகும் என்பது குறிப்பிடப்பட்டது என்று உணர்க. அண்டர்கள் என்ற சொல், தேவர்கள்,

பகைவர்கள், இடையர்கள் என்ற மூன்று பொருளையும் தரும். இங்கே இடம் கருதி இடையர்கள் எனக் கொள்ளப்பட்டது. பேய்கள் பசித்தால் தங்கள் பற்களைத் தாங்களே மென்று கடித்துத் தின்னும் இயல்புடையன. "பசிக்கு அலைந்து பாதிநாக்கும், உதடுகளில் பாதியும், தின்று ஒருவாய் ஆனேம்" என்பது கலிங்கத்துப்பரணி.

83. சரம்பயில் நெடுந்துளி நிமிர்ந்த புயல்சார,
உரம் பெயர்வு இல் வன்கரி கரந்து உற ஒடுங்கா,
வரம்பு அகல் நறும் பிரசம் வைகல் பல வைகும்
முரம்பினில் நிரம்பல; முழைஞ்சிடை நுழைந்த. (4336)

(சரம் - அம்பு; துளி - தாரை; உரம் - வலிமை; பெயர்வுஇல் - கெடாத \ நீங்காத; கரந்து - மறைந்து; ஒடுங்கா - ஒடுங்கி \ ஒதுங்கி; முழைஞ்சு - குகை; புயல் - மேகம்; நிமிர்ந்த - உயர்ந்த; சார - தாக்க; கரி - யானை; கரத்தையுடையது கரி என்று, யானைக்குக் கரி காரணப்பெயர்)

உயர்ந்த மேகத்திலிருந்து கீழே விழுகின்ற அம்பு போன்ற பெரிய மழைத் தாரைகள், தம்மேல் தாக்க, மனவலிமையில் குன்றாத, உடல் வலிமைபெற்ற யானைகள், தாம் மறைந்து வாழ எண்ணி ஒதுங்கி நின்றிருந்தன; அளவற்றதும், நறுமணம் மிக்கதுமான தேனீக்கள், தாம் எப்பொழுதும் தங்கியிருக்கும் மேட்டு நிலங்களில் தங்கியிருக்காமல், தம்மீது மழை நீர் படாமல் இருப்பதற்காக, அருகிலுள்ள மலைக்குகைக்குள் நுழைந்து கொண்டன.

மேகத்திலிருந்து விழும் மழைத்துளிகள் அம்புபோன்று கூர்மையாய்த் தாக்கியதால், மனவலிமையிற் குன்றாத உடல் வலிமை பெற்ற யானைகளும் கூடத் தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு மறைந்து, ஒதுங்கிக் கொள்வனவாயின என்பதாம். அதேபோல் தேனீக்களும் தாம் எப்பொழுதும் வாழும் உரிமையுள்ள வெட்டவெளியில் உள்ள பாறைகளிலிருந்து நீங்கி, இப்போது பழக்கமில்லாத புதிய மலைக்குகைகளில் புகுந்து கொண்டன என்பதாம். மழைக்காலம் பெரிய யானையிலிருந்து, சிறிய தேனீக்கள் வரை எல்லா உயிரினங்களுக்கும் துன்பம் விளைவித்தது என்பது கருத்து.

84. இராமன் இலக்குவனிடம் பேசத் தொடங்குதல்

இத்தகைய மாரியிடை, துன்னி இருள்எய்த
மத்தக மணிக்குறுநகைச் சனகன் மான்மேல்
உய்த்த உணர்வத்தினன், நெருப்பிடை உயிர்ப்பான்,
வித்தகன், இலக்குவனை முன்னினன் விளம்பும். (4337)

(மாரி - கூதிர்காலம்; துன்னி - அடர்ந்து; வித்தகன் - அறிவிற் சிறந்தவன்; மத்தகமணி - சூடாமணி; உய்த்த - செலுத்திய; உணர்வு - மனம்; முன்னி - நோக்கி \ மனத்தில் நினைத்து; இடைதல் - பின்வாங்குதல் \ தோற்றல்)

இத்தன்மையான கூதிர்காலத்தில், இருள்வந்து அடர்த்தியாக அடைய - இருண்டு வர - உச்சியில் அணியும் சூடாமணியை உடையவளும், புன்சிரிப்புத்

தவழுபவளுமான, சனகன் பெற்ற, மான்போன்ற விழியை உடைய சீதையின் மேல், செலுத்திய மனத்தையுடையவனாய், அறிவிற் சிறந்தவனாகிய இராமன், நெருப்பும் தோற்றுப் போகும்படி பெருமூச்சு விட்டுக் கொண்டு, தன் தம்பி இலக்குவனை நோக்கிக் கீழ்க்கண்டவாறு கூறத் தொடங்கினான்.

இங்கே மத்தகமணி என்றது உச்சியில் அணியும் சூடாமணியைக் குறித்தது. இதைத்தான் சீதாதேவி இறுதிவரை தன்னுடன் வைத்திருந்து, அசோக வனத்திலிருந்த தன்னைக் காண வந்த அனுமனிடம் அடையாளப் பொருளாகக் கொடுத்துனுப்பினாள் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

85. இராமனின் மறுமொழி - (11 பாடல்கள்)

“மழைக்கரு மின் எயிற்று அரக்கன், வஞ்சனை
இழைப்ப, அரும் கொங்கையும் எதிர்வுற்று, இன்னலின்
உழைத்தனள், உலைந்து உயிர் உலக்கும்; ஒன்றினும்
பிழைப்ப அரிது, எனக்கும்; ஈது என்ன பெற்றியோ?” (4338)

(மழை - மேகம்; எதிர்வுறுதல் - இலக்காகுதல்; உழைத்தல் - வருந்துதல்; உலைதல் - மெலிதல்; உலத்தல் - அழிதல்; பிழைத்தல் - தப்பித்தல்; பெற்றி - தன்மை)

கரிய மேகம் போன்றவனும், மின்னல் போன்ற வளைந்த கோரப்பற்களை யுடையவனுமாகிய அரக்கனாகிய இராவணன், தான் மாயச் செயல்கள் செய்ய, அதற்கு அரிய கொங்கைகளை உடைய சீதையும் இலக்காகி, அவனிடம் சிக்கி, துன்பத்தால் வருந்தி, வாடி, மெலிந்து, உயிர் அழிவாள்; அதேபோல நானும் கரிய மேகத்தினாலும் மின்னலாலும் உண்டாகும் இக்கூதிர்காலத்தின் கொடுமைக்கு இலக்காகி, பிரிவென்னும் பிணியால் உயிரிழப்பேன் போலும், இவை எதனிடத்திருந்தும் தப்பிப் பிழைப்பதற்கு ஒரு வழியும் தெரியவில்லை; இது என்ன ஒரு தன்மையோ?” என்கிறான் இராமன்.

இன்னல் என்பது துன்பம் என்ற பொருளில் இனிமை அல்லாததைக் குறிக்கும்.

86. “தூநிறச் சுடுசரம் தூணி தூங்கிட,
வான்உறப் பிறங்கிய வயிரத் தோளொடும்,
யான் உறக் கடவதே இதுவும்? இந்நிலை
வேல் நிறத்து உற்றது ஒத்துழியும், வீகிலேன்.” (4339)

(தூ - ஊன் \ மாமிசம்; பிறங்கிய - விளங்கிய; இது - இத்தகைய இழிநிலை; உறுதல் - அனுபவித்தல்; கடவதோ - தகுமோ; நிறம் - மார்பு; வீதல் - இறத்தல்; நிறம் - நுனி \ முகப்புமாம்; தூங்குதல் - தொங்குதல் \ செயலற்றுக் கிடத்தல்)

“பகைவரின் தசை படிதலால் ஊன் தோய்ந்திருக்கின்ற நுனியையுடையதும், பகைவரைக் கொல்லும் திறம் படைத்ததுமாகிய அம்புகள், என்னுடைய அம்பறாத் தூணியில், எந்த வேலையும் இல்லாமல் பயனற்றுத் தூங்கிக்

கொண்டிருக்க, வானளாவ உயர்ந்தும், வயிரம் போல் திண்மை படைத்தும் இருப்பதாகிய தோள்கள் விளங்கப் பெற்றிருக்கின்ற நான், இத்தகைய இழிநிலை அடைந்து வருந்திக் கொண்டிருப்பது தகுமோ? இந்த நிலை, என் மார்பில் வேற்படை பாய்ந்த பொழுதும், நான் உயிர் இழக்காது இருப்பதைப்போல் இருக்கிறதே?" என்று புலம்பினான் இராமன்.

"தூ" என்ற சொல்லுக்குத் தூய்மையான என்றும், "நிறம்" என்ற சொல்லுக்கு ஒளி விளங்கும் என்றும் பொருள் கூறுவது உண்டு; தூங்குதல் என்ற சொல் தொங்குதல் என்ற பொருளிலும், செயலற்ற தன்மையாய் வீணாகக் கிடப்பதையும் குறிக்கும். தனது தோளின் சிறப்பை "வான் உறப் பிறங்கிய" உயர்ந்த தோள் என்றும், "வயிரம்" போன்று திண்மையான, உறுதிபடைத்த தோள் என்றும் கூறியதையும் நோக்குக. உயிர்நிலையான மார்பில் வேற்படை புகுந்ததென்றால் அவன் அழிவது தானே தகும்? அதை விடுத்து, நான் இன்னும் உயிரோடு இருக்கிறேனே என்று தன்னைத் தானே நொந்து கொண்டு புலம்புகிறான் இராமன். படைக்கலங்களில் பகைவரின் ஊனும் குருதியும் தோய்ந்து இருந்தது என்று கூறினால் அது படைக்கலனைக் கையாள்பவரின் வீரச்சிறப்பைப் புகழ்ந்ததாக ஆகும். இது, இந்நிலை, என்பன, தன் மனைவியை மாற்றான் கவர்ந்து சென்ற போதும், அவனைத் தண்டிக்க இயலாதவாறு, துன்பப்பட்டுக் கொண்டு வீணாய் இருக்கின்ற இப்போதைய நிலைமையைக் குறிக்கும். இந்த நிலையில், தான் உயிரோடு இருப்பதைவிட உயிர் விடுவதே சிறந்தது என்று இராமன் கருதுகிறான் என்பதை உணர்த்துகிறது இப்பாடல்.

87. "தெரிகணை மலரொடும் திறந்த நெஞ்சொடும்,
அரிய வன்துயரொடும், யானும் வைகுவேன்;
எரியும் மின்மினி மணி விளக்கின், இன்துணைக்
குரீஇ இனம், பெடையொடும் துயில்வ கூட்டினுள்." (4340)

(குரீஇ - குருவி; எரியும் - ஒளிவீசுகின்ற; மணி - அழகிய; பெடை - பெண்குருவி; தெரி - தேர்ந்தெடுத்த; திறந்த - பிளக்கப்பெற்ற)

"ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற மின்மினிப் பூச்சிகளின் அழகிய விளக்குப் போன்ற ஒளியில் தனது இனிய துணையாகிய பெண்குருவியுடன் ஆண்குருவியின் கூட்டம் தனது கூட்டில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் நானோ, மன்மதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மலர்க்கணைகள் செலுத்தப்புட்டதால் பிளவுற்ற நெஞ்சத்தோடும், பொறுத்தற்கரிய கடுமையான துயரத்தோடும் இங்கு தங்கியிருக்கிறேன்" என்று தன் நிலைகண்டு கழிவிரக்கம் கொள்ளுகிறான் இராமன்.

குருவி இனம் சாதாரணமான பறவை; இழிந்த பிறவி என்றாலும் தகும். இராமன் அரச குடும்பத்தில் பிறந்த உயர்ந்த மானிடன்; குருவி தன் பெண்குருவியோடு, ஒளிவிளக்கில், கூட்டினுள் இன்பம் துய்க்கிறது. ஆனால் இராமன் தன் மனைவி இல்லாது அவளைப் பறிகொடுத்து, துணையின்றித் தனியாக, இருளில் துன்பத்தில், காட்டில் உறங்காது விழித்திருந்து துயருற்றுக் கிடக்கிறான் என்பது விரிந்தபொருள். தன் துணையைப் பிரிந்து துன்பத்தோடு

வாழ்பவர், துணையுடன் இணைந்து இன்பமாக வாழ்பவரைக் காணும்போது பிரிவுத்துயர் மிகுந்து மனம் தளர்வடைதல் இயற்கை "மயிலும் பெடையும் உடன் திரிய, மானும் பிணையும் மருவிஉற, பயிலும் பிடியும் கடகரியும் வருவ, திரிவ, பார்க்கின்றான்; குயிலும் கரும்பும், செழுந்தேனும், குழலும், யாழும், கொழும் பாகும், அயிலும் அமுதும் சுவைதீர்த்த மொழியைப் பிரிந்தால் அழியானோ?" என்பது முன்பு ஆரண்ய காண்டத்தில் நாம் கண்டதே. மின்மினி என்பது ஒரு வகை ஈ; பறக்கும் இயல்புடைய பறவை. தன் உடம்பில் ஒருவகை ஒளியைக் கொண்டது. இது "சுடர்க்கடைப் பறவை" எனவும் வழங்கப்பெற்றது. இவற்றை விளக்கு எனக் கருதிக் குருவிகள் தங்கள் கூட்டிற்கு எடுத்துச் சென்று வைத்துக் கொள்ளும் என்று பாலகாண்டத்தில் கண்டதை இங்கு நினைவு கூர்க. தவிரவும், தமிழ் இலக்கியங்கள் பலவும் இதுபற்றிப் பேசுகின்றன.

88. வானகம் மின்னினும், மழை முழங்கினும்,
யான் அகம் மெலிகுவன், எயிற்று அரா என;
கானகம் புகுந்து யான் முடித்த காரியம்,
மேல் நகும்; கீழ் நகும்; இனி என் வேண்டுமால்? (4341)

(வானகம் - ஆகாயம்; மெலிதல் - வருந்துதல்; காரியம் - செயல்; மேல் - வானுலகம்; கீழ் - மண்ணுலகம்; நகுதல் - சிரித்தல் \ இகழ்தல்; மழை - மேகம்)

"ஆகாயத்தில் மின்னல் மின்னினாலும், மேகம் இடி முழக்கம் செய்தாலும், நச்சுப்பற்களை உடைய பாம்பு நடுங்கும்; அதுபோல நானும் உடல் தளர்ந்து போகிறேன்; காட்டில் வந்து நான் நிறைவேற்றிய காரியத்தைக் கண்டு, மேல், நடு, கீழ் எனப்படும் எல்லா உலகத்தில் வாழ்பவர்களும் எண்ணி இகழ்ந்து சிரிப்பார்கள்; இதைவிட எனக்கு ஒரு இழிவான நிலை வேறு என்ன வேண்டும்?" என்று கேட்கிறான் இராமன்.

மின்னல் அடித்தாலும், இடி இடித்தாலும் பாம்பு அஞ்சி நடுங்கும். காரணம் அது மிக மென்மையான கட்செவி உடையது. இங்கே ஒரு செய்தி. பாம்புக்கு உண்மையில் காது என்ற ஒரு உறுப்பே கிடையாது. அதற்குக் கண்களே காதாகவும் வேலை செய்கின்றன. எனவே அதற்கு "கட்செவி" என்ற ஒரு பெயரும் உண்டு. அதைப்போல இராமன், மின்னலுக்கும், இடிக்கும் அஞ்சவேண்டாத போதிலும், பிரிவாற்றாமையினால் உடல் தளர்பவனாகிறான் என்பது கருத்து. இங்கே "கானகம், புகுந்து யான் முடித்த காரியம்", என்பது, தன் உடன் வந்த துணைவியான சீதாதேவியை இராவணன் அபகரித்துச் சென்ற செயலையும் அவளை மீட்கமுடியாது தான் கையறு நிலையில் இருப்பதையும் குறித்தது என்க.

89. "மறந்து இருந்து உய்கலேன்; மாரி ஈது எனின்,
இறந்து விண்சேர்வது சரதம்; இப்பழி,
பிறந்து பின் தீர்வலோ? பின்னர், அன்னது
துறந்து சென்று உறுவலோ? துயரின் வைகுவேன்?" (4342)

(உய்தல் - உயிர் வாழ்தல் \ பிழைத்திருத்தல்; சரதம் - உறுதி; துறத்தல் - மறத்தல்)

"துயரத்திலேயே கிடந்து உழல்பவனாகிய நான், சீதையை மறந்து விட்டு உயிருடன் இருக்க இயலாதவன் ஆனேன். இவ்வாறு கூதிர்காலம் என்னைத் துன்புறுத்துமாயின் நான் இறந்து விண்ணுலகு அடைவது நிச்சயம். ஆனால் இந்தப் பழியை என்னுடைய இந்தப் பிறவியிலேயே தீர்த்துக்கொள்ளமுடியுமோ? அல்லது இன்னொரு பிறவி எடுத்து முன்பு நிகழ்ந்தவற்றை நினைவிற்கொண்டு, அவ்வரக்கனை வென்று அப்பழியைத் தீர்த்துக்கொள்வேனோ? அல்லது மற்றொரு பிறவியில் துறவு மேற்கொள்வேனோ? அவ்வாறு மேற்கொண்டால் முந்திய பிறவியில் உள்ள பழி, பாவம், பகை எல்லாம் நீங்கிவிடும் அல்லவா? எனவே அவ்வாறு நடக்குமோ?" என்று மனம் கலங்குகிறான் இராமன்.

முன்னரேயே சீதையின் பிரிவால் துயர்க்கடலில் ஆழ்ந்திருக்கின்ற இராமனுக்கு, இக்கூதிர் காலம் இன்னமும் நீடித்துத் துன்பத்தை விளைவிப்பதால், தான் இறந்து போவது நிச்சயம் என்ற முடிவுக்கு வந்து விடுகிறான் இராமன். இதேநிலை திருநாவுக்கரசருக்கும் வந்தது. இங்கே சீதையை மறந்து உயிருடன் வாழ இயலாத இராமன் போல், நாவுக்கரசர் இறைவனை மறந்து உயிருடன் வாழ முடியாது என்கிறார். தேவாரம் கேளுங்கள். "துறக்கப்படாத உடலைத் துறந்து, வெந்தூதுவரோடு இறப்பேன்; இறந்தால் இருவிசும்பு ஏறுவேன்; ஏறிவந்து பிறப்பேன்; பிறந்தால், பிறை அணிவார்சடைப் பிஞ்ஞகன் தன் பேர் மறப்பேன் கொலோ? என்று, என் உள்ளம் கிடந்து மறுக்குமே" என்பது தேவாரம். இங்கு ஒன்றை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். மேலோர் இறக்கும்போது, முதலில் விண்ணுலகு அடைவர்; அதன் பின்னர் தான் அவர்களுக்கு மறுபிறப்பு என்பது நிகழ்கிறது.

90. "ஈண்டு நின்று, அரக்கர்தம் இருக்கை, யாம் இனிக்
காண்டலின், பற்பல காலம் காண்டுமால்;
வேண்டுவது அன்று இது; வீர! "நோய்தெற
மாண்டனன்" என்றது மாட்சிப் பாலதாம்." (4343)

(நோய் - பிரிவாற்றாமை; தெற - வருத்த; மாட்சி - சிறப்பு; காண்டும் - காண்போம்)

"வீரனே! இலக்குவ! இங்கிருந்து, நாம் அரக்கர்களுடைய இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பது என்பதற்கே பற்பல காலம் - நீண்ட காலம் சென்றுவிடும். கண்டுபிடித்த பின் அவனுடன் போரிட்டு, அவனை வென்று, சீதையை மீட்டுவருதல் என்பது மிக நீண்ட காலம் பிடிக்கும் செயலாகும்; எனவே இத்தகைய செயலை நாம் மேற்கொள்வது வேண்டுவதன்று; "சீதையைப் பிரிந்ததனால், பிரிவாற்றாமையால், அந்தத் துன்பத்திலேயே இராமன் இறந்து போனான்" என்று எல்லோரும் கூறுவதே சிறப்பானதாகும்" என்கிறான் இராமன்.

இங்கு காலம் என்றது நீண்ட நெடுங்காலத்தைக் குறித்தது என்க. "முதலில் இந்தக் கூதிர்ப்பருவத்தைத் தாங்குதலே, சீதையின் பிரிவைத் தாங்கமுடியாத தன்மைக்கு மேம்பட்டதாயிருக்கிறது. அவ்வாறு நாம் இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டிருந்தாலும் அரக்கர்களின் இருக்கையைக் கண்டுபிடிக்க

வேண்டும். அதற்கு எவ்வளவு நாள் செல்லுமோ நமக்குத் தெரியாது. பின்னர் அவ்வரக்கர்களுடன் போர் செய்து, சீதையை மீட்டுக் கொண்டுவர வேண்டும். எனவே இவ்வளவு முயற்சிகளும் செய்து, இறுதியில் பலன் என்ன என்பதை இப்போது கூறமுடியாததால் அம்முயற்சியை விட்டுவிடுதல் நல்லது. இப்பொழுதே அவளின் பிரிவாற்றாமை என்னும் நோயால் இராமன் இறந்து போனான் என்று உலகோர் கூறுவது சிறப்பானதல்லவா?" என்று கேட்கிறான் இராமன். இங்கே ஒரு அரிய கருத்தை நினைக. இராமன் சீதையைப் பிரிந்து சில திங்கள்தான் ஆகின்றன. இராமன் புலம்புவதைப் பாருங்கள்; அவனுடன் கூட வந்த இலக்குவன், அவன் மனைவி ஊர்மிளையைப் பிரிந்து எத்தனை ஆண்டுகள் ஆயிற்று? எனவே தான் அவனை "வீர" என்று இராமன் அழைத்தானோ எனத் தோன்றுகிறதன்றோ?

91. "செப்பு உருக்கு அனைய இம்மாரிச் சீகரம்
வெப்பு உறப் புரம் சுட, வெந்து வீவதோ
அப்பு உருக்கொண்ட வாள் நெடுங்கண் ஆயிழை
துப்பு உருக் குமுதவாய் அமுதம் துய்த்த யான்?" (4344)

(அப்பு - அம்பு; ஆய் - ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட; துப்பு - சிவப்பு \ பவழம்; அனைய - போன்ற; சீகரம் - நீர்த்துளிகள்; புரம் - உடம்பு; வீவது - அழிவது; வெந்து - கொதித்து)

"அம்பு போன்று கூர்மையானதும், நீண்டதும் ஒளிபொருந்தியதுமான கண்களை உடையவளும், ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்தவளும், பவழம் போன்று சிவந்த செவ்வாம்பல் மலர் போன்ற வாயிதழை உடையவளுமாகிய சீதையின் வாலெயிறு ஊறிய நீரான அமிழ்தத்தைப் பருகிய நான், செம்பை உருக்கி ஊற்றினாற் போன்ற வெப்பமுடைய இக்கூதிர்கால மழைத்துளிகள் என் உடலைச் சுட்டெரிக்க, உள்ளம் கொதித்து அழிவதோ?" என்று நொந்து கொள்கிறான்.

கூதிர்காலத்துப் பெய்த மழைத்துளி, செம்பை நெருப்பில் இட்டு உருக்கி ஊற்றியது போன்ற வெப்பத்தோடு அவன் உடலைச் சுட்டெரிப்பதற்குக் காரணம் சீதையின் பிரிவாற்றாமை என்க. பொதுவாக அமிழ்தம் என்பது சாவா மருந்து. இங்கே சீதையின் வாயிதழ் அமிழ்தம் பருகிய இராமன் "செப்புருக்கனைய மாரிச் சீகரத்தால் வெந்து அழிவதோ?" என்று கூறியது ஒரு நயம்.

92. "நெய் அடைதீ எதிர்நிறுவி, "நிற்கு இவள்
கையடை" என்ற அச்சனகன் கட்டுரை
பொய் அடை ஆக்கிய பொறி இலேனோடு
மெய் அடையாது; இனி, விளிதல் நன்று அரோ!" (4345)

(அடை - பொருந்திய; நிறுவி - நிறுத்தி; நிற்கு - நினக்கு \ உனக்கு; கையடை - அடைக்கலம்; கட்டுரை - உறுதிச்சொல்; பொறி - நல்வினை; விளிதல் - இறத்தல்)

"நெய்யூற்றி வளர்க்கப்பெற்ற ஓமத்தீயின் முன்னிலையில் சீதையை நிறுத்தி, "இவள் இப்பொழுது முதல் உன் அடைக்கலப் பொருளாவாள்" என்று அந்தச் சனக மன்னன் கூறிய உறுதி மொழிகள் அனைத்தும், சீதையைப் பாதுகாவாமல் விட்டதனால், பொய்யுரையாகி விட்டன; எனவே இந்த நல்வினையற்றவனோடு இனி எந்த வாய்மையும் வந்த சேர்ந்து நிலைத்து நிற்காது; அவ்வாறு வாய்மை தவறி வாழ்தலினும் இறப்பதே மேல்" என்று இராமன் கூறுகிறான்.

"நிற்கு இவள் கையடை" என்பது முன்பு கடிமணப் படலத்தில், சனகன் சீதையை இராமனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தபோது கூறிய வார்த்தைகள் என்பதை நினைவிற் கொள்க. "ஒருமுறை உண்மையைக் காப் பாற்ற முடியாத நல்வினையற்றவனாகிய என்னோடு இனி எந்தக் காலத்திலும் வாய்மை என்பது நிலைத்து நிற்பதற்கு வழியில்லை. எனவே அவ்வாறு வாய்மை யிழந்து வாழ்தலைக் காட்டிலும், இப்பொழுதே இறந்துபோவது மேல்" என இராமன் கருதுகிறான் என்க. அடைக்கலப் பொருளைப் பாதுகாக்காது தவற விட்டுவிடுதல் பெரும் பாதகமாகும் அவர் நரகமடைவர் என்பதை முன்பு பரதன் கூறிய சூளுரை மூலமும் அறியலாம். இதேபோல் சிலப்பதிகாரத்திலும் மாதரி தன்னிடம் அடைக்கலமாகத் தந்தவரை இழந்ததனால் தீப்புகுந்தாள் என்பதும் நோக்கத்தக்கது."அடைக்கலம் இழந்தேன் இடைக்குல மாக்காள்" என்று கூறி "இடையிருள் யாமத்து எரியகம் புக்காள்" என்றதும் காண்க.

93. "தேற்றுவாய், நீ உளையாகத் தேறிநின்று
ஆற்றுவேன் நான் உளனாக, ஆய்வளை
தோற்றுவாள் அல்லள்; இத்துன்பம் ஆர் இனி
மாற்றுவார்? துயர்க்கு ஒரு வரம்பு உண்டாகுமோ?" (4346)

(உளை - இருத்தல்; ஆய் - அழகிய; வரம்பு - முடிவு)

"நீ இருந்து என்னைத் தேற்றிக் கொண்டிருக்கவும், நீ தேற்றுவதனால் நான் ஓரளவு ஆறுதல் பெற்றுக் கொண்டும் இருப்போமே அல்லாமல், அழகிய வளையல்களை அணிந்த சீதை நம் எதிரில் வந்து தோன்றப் போவதில்லை. என்னுடைய இந்தத் துயரத்தை மாற்றக்கூடிய ஆற்றல் பெற்றவர் யார் இருக்கிறார்கள்? என்னுடைய இந்தத் துன்பத்திற்கு ஒரு முடிவே இல்லாது போய்விடுமோ?" என்று இலக்குவனை நோக்கிக் கூறுகிறான் இராமன்.

இலக்குவன் இராமனைத் தேற்றும் நிகழ்ச்சி காப்பியத்தில் பல இடங்களிலும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஒருவர்க்கொருவர் தேறுதலும், ஆறுதலும் கூறிக்கொள்ளலாமேயன்றி, அவள் நம் எதிரில் தோன்றும் வரை, இந்தத்துன்பத்தை யாராலும் மாற்ற முடியாது என்பது இராமன் கருத்து.

94. "விட்டபோர் வாளிகள் விரிஞ்சன் விண்ணையும்
சுட்டபோது, இமையவர் முதல தொல்லையோர்
பட்டபோது, உலகமும் உயிரும் பற்றுஅறக்
கட்டபோது, அல்லது மயிலைக் காண்குமோ?" (4347)

(வாளி - அம்பு; விரிஞ்சன் - பிரமன்; இமையவர் - தேவர்கள்; தொல்லையோர் - பழமையானவர்கள்; கட்டல் - அழித்தல்; பற்று - வேர்; படுதல் - அழிதல்; சுடுதல் - அழிதல் \ எரித்தல்)

"மயில்போன்ற சாயலை உடைய என் சீதையை இப்பொழுது நான் காண வேண்டுமென்றால், என்னுடைய அம்புகளைத் தொடுத்துப் போர் செய்து பிரமனையும், அவனுடைய சத்திய லோகத்தையும் எரிக்க வேண்டும் போலும்! தேவர்கள் முதலிய பழமையானவர்கள் எல்லோரும் அழிய வேண்டும் போலும்! இவ்வுலகமும், உலகிலுள்ள உயிர்கள் எல்லாமும் வேரோடு அழியும் படி செய்ய வேண்டும் போலும்! இவற்றை நான் செய்யாவிட்டால் என்னுடைய சீதையைக் காணமுடியாது போய்விடுமோ?" என்று துணிகிறான் இராமன்.

இதுகாறும் தனது ஆற்றாமையையே கூறி வந்த இராமன், இப்போதுதான் சீதையைக் காண்பதற்காக இவ்வுலகை, தேவருலகை, சத்தியலோகத்தை, எல்லாவற்றையும் அழிக்கத் துணிகிறான் என்றால் அவனது உள்ள நிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதேபோன்று முன்பு, இராவணன் சீதையை அபகரித்துக் கொண்டு வான் வழியே செல்லுவதைப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்களை அழிப்பேன் என்று புறப்பட்டபோது, சடாயு ஆறுதல் கூறித் தணிவித்ததையும் ஒப்பு நோக்குக.

95. "தருமம் என்றொரு பொருள் தன்னை அஞ்சி, யான்
தெருமருகின்றது; செறுநர் தேவரோடு
ஒருமையின் வந்தனரேனும் உய்கலார்;
உரும்என ஒலிபடும் உரவிலோய்!" என்றான். (4348)

(உரும் - இடி; உரம் - வலிமை; தெருமருதல் - மனம் வருந்திக் கலங்குதல், மனச்சுழற்சி \ குழம்புதல்; செறுநர் - பகைவர்கள்; ஒருமையின் - ஒன்றுபட்டு; உய்தல் - தப்பிப் பிழைத்தல்)

"இடிமுழக்கம் போன்று நாண் ஒலி எழுப்பும் வலிய வில்லையுடையவனே! இலக்குவ! நான் உலகத்தையும் உலகத்து உயிர்களையும் அழிக்காதிருப் பதற்குக் காரணம், அறம் என்ற ஒரு சிறந்த பொருளுக்கு அச்சம் கொண்டுதான், மனக்கலக்கமடைந்து நிற்கிறேன். இல்லையெனில் நம் பகைவர்களான அரக்கர்கள், தேவர்களோடு ஒருங்கிணைந்து ஒருசேர என்னை எதிர்த்து வந்தார்கள் என்றாலும், அவர்களால் தப்பிப் பிழைத்துப்போக முடியாது" என்று, தான் அறவழி நீங்காதவன் என்பதையும், போராற்றலில் வல்லவன் என்பதையும் ஒருங்கே நிறுவுகிறான் இராமன்.

முன்பாடலில் "விரிஞ்சன் விண்ணைச் சுட்டபோதும், இமையவர் முதல தொல்லையோர் பட்டபோதும், உலகமும் உயிரும் பற்றக் கட்டபோதும்" என்று கூறிய இராமன், இப்பாடலில் அந்தச் சினம் தணிந்து, எய்த அரக்கர்கள் இருக்க, அம்பாகிய உலகத்தவரையும், தேவர்களையும், பிரமனையும் கொல்லுவது என்பது தருமத்தின் பாற்பட்டது அன்று என்று உணர்ந்து கூறுகிறான் என்பதாம். அரக்கர்கள் செய்த குற்றத்திற்கு ஒரு தவறும் செய்யாத உலகத்தவரைத்

தண்டித்தல் எவ்வாறு பொருந்தும்? அது அறத்தின் பாற்பட்டதன்று. எனவே அறம் என்ற ஒரு பொருளுக்கு அஞ்சித்தான் மனக்கலக்கமுற்றிருக்கிறேன் என்கிறான் இராமன்.

96. இலக்குவன் மீண்டும் தேற்றுதல் - (7 பாடல்கள்)

இளவலும் உரை செய்வான், "எண்ணும் நாள் இனும்
உளஅல; கூதிரும் இறுதி உற்றதால்;
களவு செய்தவன் உறை காணும் காலம் வந்து
அளவியது; அயர்வது என்? ஆணை ஆழியாய்!" (4349)

(ஆழி - சக்கரம்; களவு செய்தவன் - கவர்ந்தவன் \ அபகரித்தவன்; உறை - இருக்கும் இடம்; அளவியது - சேர்ந்தது; அயர்தல் - வருந்துதல்)

இராமன் கூறியதைக் கேட்ட தம்பி இலக்குவன், இராமபிரானை நோக்கிக் கீழ்வருமாறு உரைக்கலானான்; "ஆணைச் சக்கரத்தை உடையவனே! நாம் சீதையைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு என்று முன்பு கருதிய கார்காலமும் முடியும் நிலையில் இருக்கிறது. இன்னும் அதிக நாட்கள் இல்லை; கூதிர்காலமாகிய ஐப்பசி, கார்த்திகையும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. எனவே வஞ்சனையால் சீதையை அபகரித்துக் கொண்டு சென்றவனான இராவணன் வாழும் இருப்பிடத்தைக் காணும் நாள் வந்து விட்டது. அவ்வாறிருக்க நீ ஏன் இன்னும் வருந்திக் கொண்டிருக்கின்றாய்? வருந்தாதே?" என்று ஆறுதல் கூறினான் இலக்குவன்.

"எண்ணும் நாள்" என்பது நாம் சீதையைத் தேடுவதற்காகக் கருதிய மார்கழித் திங்களைக் குறித்தது என்றும், நாம் சீதையைத் தேடமுடியாது என்று கருதிய கார்காலமாகிய ஆவணி, புரட்டாசியும், கூதிர்காலமாகிய ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களையும் குறித்தது என்றும் இருவகை யாகவும் பொருள் கொள்ளலாம். இப்போது மார்கழி மாதம் நெருங்கிக் கொண்டிருப்பதால் இராவணனின் உறைவிடத்தைக் கண்டுபிடிப்பதன் மூலம், சீதையைக் கண்டுபிடித்து விடலாம். எனவே வருந்தாதே என்று தேற்றுவதுடன், ஊக்கமும் அளிக்கிறான் என்பதாம்.

97. "திரை செய் அத்திண் கடல், அமிழ்தம் செங்கணான்
உரை செயத் தரினும், அத்தொழில் உவந்திலன்;
வரை முதல் கலப்பைகள் மாடு நாட்டித் தன்
குரை மலர்த் தடக்கையால் கடைந்து கொண்டனன்." (4350)

(திரை - அலைகள்; செங்கணான் - திருமால்; உரை - வார்த்தை; கலப்பைகள் - கருவிகள் \ உபகரணப் பொருட்கள்; மாடு - இடம்; குரைத்தல் - ஒலித்தல்)

"அலைகளையுடைய வலிய திருப்பாற்கடலை நோக்கி, சிவந்த கண்களை உடைய திருமால் "அமிழ்தத்தை எனக்குக்கொடு" என்று ஒரு வார்த்தையைக் கட்டளையாக இட்டால் போதும். மறுபேச்சின்றி அமிழ்தத்தைத் திருமாலுக்குத்

தரவேண்டிய கடமை கொண்டது இந்தப் பாற்கடல். என்றாலும் திருமால் அவ்வாறு எளிதாக, ஆணையிட்டு அதைப் பெற்றுக் கொள்ளுவதை விரும்ப வில்லை. மந்தரமலை, வாசுகி, மேருமலை, ஆதிசேஷன் முதலிய உபகரணங் களைக் கடலினிடத்து நிறுவி தனது கடகம், வாகு வளையம் போல ஒலிக் கின்றதும் செந்தாமரை மலர்போன்றதுமான பெரிய கைகளினால் வருத்திக் கடைந்தே இறுதியில் அமிழ்தத்தைப் பெற்றான்" என்றான் இலக்குவன்.

இங்கே பாடலின் ஒரு பாதியைக் கூறி, மற்றொரு பாதியைக் கற்போரே உய்த்துணருமாறு கூறிய கவிஞனின் திறம் நோக்குக. அதுபோல, கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவனாகிய நீயும், தனித்து நின்றே, எளிதாகவே, சீதையை மீட்டுக் கொண்டுவர முடியும் என்றாலும், சுக்கிரீவன், அவனது வானரப் படை முதலிய உபகரணங்களைக் கொண்டே அமிழ்தம் என்னும் சீதையை அடைய முயற்சி செய்வாயாக" என்பது கூறப்படாத மறைபொருள். திருமால் இயல்பிலேயே சிவந்த கண்களை உடையவன் என்பதால் "செங்கணான்" எனப்பட்டான். அவனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கடலிடத்தும் கூடத் தன் ஆணையையும், வலிமையையும் காட்டாது, தானே அரிதின் முயன்று அமிழ்தம் பெற்றான். அதுபோலவே நீயும் முறைப்படி பகைவரைவென்று அரிதின் முயன்றே சீதையைப் பெறுதல் வேண்டும் என்பது குறிப்பு. எத்துணை ஆற்றல் உடையவராய் இருந்தாலும், கருவியும், காலமும் கருதிச் செய்கின்ற எந்த முயற்சியும் பலனளிக்காமல் போகாது என்பது உட்குறிப்பு. "ஞாலம் கருதினும் கை கூடும்; காலம் கருதி இடத்தாற் செயின்" என்பது குறள் 484.

98. "மனத்தினின் உலகெலாம் வகுத்து, வாய்ப்பெயும்
நினைப்பினன் ஆயினும், நேமியான், நெடும்
எனைப்பல படைக்கலம் ஏந்தி, யாரையும்
வினைப்பெரும் சூழ்ச்சியின் பொருது வெல்லுமால்." (4351)

(நேமி - சக்கரப்படை; வகுத்தல் - படைத்தல்; வாய் பெய்தல் - அழித்தல்; நினைப்பு - வலிமை; எனைப்பல - மிகப்பல; சூழ்ச்சி - உபாயம்; பொருது - போர் செய்து \ எதிர்த்து)

சக்கரப்படையை ஏந்திய திருமால், தான் நினைத்த மாத்திரத்திலேயே, இவ்வுலகத்தைப் படைக்க இயலும்; அதுபோலவே தான் படைத்த உலகத்தைத் தானே ஒரு நொடியில் அழிக்கவும் இயலும்; ஆனால் அவன் அதுபோலச் செய்வதில்லை; தன்னை எதிர்த்து வந்தவர்கள் எல்லோரையும், தன் கைகளில் பெரிய நீண்ட பலவிதமான ஆயுதங்களைக் கையில் ஏந்திக் கொண்டு, அவர்கள் இருக்கின்ற இடத்திற்கு நேரே சென்று, அங்கு நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தம் போர்த்தந்திரங்களை அமைத்துக் கொண்டு, அவர்களை எதிர்த்துப் போர் செய்து இறுதியில் வெற்றியடைவான். அதுபோல நீயும் அத்தகைய ஆற்றல் உடையை ஆயினும், வானரப் படைகளுடன் ஆயுதங்களும் கொண்டு, இராவணன் இருக்குமிடம் சென்று பெரும் போர்த்தந்திரங்களைப் பயன்படுத்தி,

அவனையும், அவனது படையினரையும் எதிர்த்துப்போர் செய்து வெற்றியடைதலே உனக்கு ஏற்றதாகும்" என்று குறிக்கிறான் இலக்குவன் என்க.

"மனத்தினின்" என்பது தான் நினைத்த மாத்திரத்திலேயே என்று பொருள் படும். போர்த்தந்திரங்கள் என்பதில் ஆள்பலம், கருவிபலம், படைபலம் என்ப தோடு சாம, பேத, தான, தண்டம் என்ற உபாயங்களும் அடங்கும்.

99. "கண்ணுடை நுதலினன், கணிச்சி வானவன்,
விண்ணிடைப் புரம் சுட வெகுண்ட மேலைநாள்,
எண்ணிய சூழ்ச்சியும், ஈட்டிக் கொண்டவும்,
அண்ணலே! ஒருவரால் அறியற் பாலதோ?" (4352)

(அண்ணல் - பெருமையிற் சிறந்தவன்; நுதல் - நெற்றி; கணிச்சி - மழுவாயுதம்; சூழ்ச்சி - ஆலோசனைகள்; ஈட்டுதல் - சேகரித்தல்; வானவன் - சிவபெருமான்; மேலைநாள் - முற்காலம்)

"பெருமையிற் சிறந்தவனே! நெற்றியில் கண்ணையுடையவனும், மழுவாயுதத்தைக் கையில் ஏந்தியவனுமாகிய சிவபெருமான், பண்டைக் காலத்தில், ஆகாயத்தில் இயங்கி வந்த மூன்று கோட்டைகளையும் எரிப்பதற் காக, சினந்து எழுந்து சென்ற அவன் அதற்காகப் பிறரிடமிருந்து பெற்ற ஆலோசனைகளும், அதற்காக அவன் சேகரித்து வைத்திருந்த ஆயுதங்களும், நம்மில் யாராவது கணக்கிட்டு அறியும் இயல்புடையனவோ? இல்லை யல்லவா?" என்றான் இலக்குவன்.

"முப்புரங்களை எரிக்கத் தனது நெற்றிக் கண்ணும், மழுவாயுதமுமே போது மானதாக இருக்க, சிவபெருமான் அதனைப் பயன்படுத்தாது, தக்கவர்களிடம் ஆலோசனை பெற்றும், தன்னால் முடிந்த ஆயுதங்களைச் சேகரித்தக் கொண்டும் போய்ப் போர் செய்து முப்புரங்களையும் எரித்தான். அதை நம்மால் கணக்கிட்டுச் சொல்ல முடியுமோ?" என்கிறான் இலக்குவன். திரிபுரங்களை எரிப்பதற்காகச் சிவபெருமான் என்ன செய்தான் என்பதை முன்னரே கூறியிருக்கி றோம். இருப்பினும் மீண்டும் நினைவு கொள்க. பூமியைத் தேராகவும், நான்கு வேதங்களையும் தேரில் பூட்டப்பெற்ற குதிரைகளாகவும், பிரமனைத் தேர்ப்பாகனாகவும், மேருமலையை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு அவற்றை அழிக்கச் சென்றான் என்பது ஒரு புராணக் குறிப்பு. எனவே, நீயும் அத்தகைய ஆற்றல் அனைத்தும் பெற்றிருக் கிறாய் என்றாலும், பிறரின் ஆலோசனைகளையும், இன்னும் சேகரிக்க வேண்டியவற்றையெல்லாம் சேகரித்துக் கொண்டு சென்று போர் புரிந்து வென்றுதான் சீதையை மீட்கவேண்டும் என்று வலியுறுத்துகிறான் இலக்குவன் என்பதாம். கணிச்சி என்பது மழு, மழுப்படை, எரியீட்டி, கோடாரி, கோடலி எனவும் வழங்கப்பெறும்.

100. "ஆகுநர் யாரையும் துணைவர் ஆக்கிப் பின்
ஏகுஉறு நாளிடை எய்தி, எண்ணுவ
சேகுஉறப் பல்முறை தெருட்டி, செய்தபின்
வாகை என்று ஒருபொருள் வழுவற்பாலதோ?" (4353)

(ஆகுநர் - தக்கவர்; எண்ணுவ - ஆலோசிக்க வேண்டுவன; சேகுஉற - உறுதியாக; சேகு - வயிரம்; தெருட்டி - தெளிவுபெற்று; வாகை - வெற்றி; வழுவுதல் - தவறுதல் \ நழுவிப் போதல்)

"நம் காரியத்திற்கு உதவக்கூடியவர் என்று நாம் நினைப்பவர்களை நமக்குத் துணையாகக் கொண்டு, சிந்தித்துச் செயலாற்ற வேண்டியவற்றைக் குற்றமில்லாதவாறும், உறுதியாகவும் பலமுறை ஆலோசித்துத் தெளிந்து, சரியான இடத்தை அடைய வேண்டிய சரியான சமயத்தில், சற்றும் தாமதிக்காது, அங்கு சென்றடைந்து, செயலைச் செய்தால், வெற்றி என்ற ஒரு பொருள் நம்மை விட்டு நழுவிப் போய்விடுமோ?" போகாது என்கிறான் இலக்குவன்.

இங்கே "ஆகுநர் யாரையும் துணைவர் ஆக்கி" என்றதனால், ஆகாதவர் எல்லோரையும் நீக்கி என்ற பொருளும் பெறப்படுதலை உணர்க. "எண்ணுவ சேகுஉறப் பல் முறை தெருட்டி" என்பது, "எண்ணித் துணிக கருமம்" என்ற குறள் 957, "வினை வலியும், தன் வலியும், மாற்றான் வலியும், துணை வலியும், தூக்கிச் செயல்" என்ற குறள் 471 இரண்டையும் நினைப்பூட்டுவதுணர்க. இங்கே அவதார நோக்கத்தை நினைவிற் கொள்ளவேண்டும். இந்திரன் இராமனுக்குத் துணைபுரிவதற்காக தன்கூறாக வாலியை அனுப்பிவைத்திருக்கிறான். ஆனால் அவன், பொதுப்பகைவனாகிய இராவணனுடன் நட்புக் கொண்டு அவதார நோக்கத்திற்கு இடையூறு செய்பவனாக மாறிப்போனான். எனவே இப்பொழுது அவன் நமக்குத் தக்கவன் அல்லன். எனவே அவனை விலக்குவது முதல் கடமை என்றதனால் தான் வாலி வதம் முன்னர் நிகழ்ந்தது என்பதை இங்கே நினைவிற்கொள்க. "தெரிந்த இனத்தோடு, தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு அரும்பொருள் யாதொன்றும் இல்" என்ற குறள் 962ன் விளக்கமே இப்பாடலாக அமைந்துள்ளதைக் காண்க. "அருவினை என்ப உளவோ? கருவியால் காலம் அறிந்து செயின்" என்ற குறள் 483ம் நினைவுகூரத் தகும். ஒரு செயல் வெற்றி பெறுவதற்குரிய வழிகள் இப்பாடலில் கூறப்பட்டுள்ளதை உணர்க.

101. "அறத்துறை திறம்பினர் அரக்கர், ஆற்றலர்;
மறத்துறை நமக்கு என வலிக்கும் வன்மையோர்;
திறத்துறை நல்நெறி திறம்பல் உண்டு எனின்,
புறத்து, இனி யார் திறம் புகழும் வாகையும்!" (4354)

(திறம்புதல் - மாறுபடுதல்; மறம் - பாவநெறிகள்; வலிக்கும் - துணிந்து செய்யும்; திறத்துறை - நிலை பெற்ற நெறி; புறம் - வேறு; திறம் - இடமுமாம்)

"அரக்கர்கள் படைபலம் வரபலம் உடல்பலம் எல்லாம் பெற்றிருக்கும் ஆற்றல் மிகுந்தவர்களே ஆயினும் தருமநெறியினின்றும் மாறுபட்டு அதர்ம நெறியே தமக்கு உரிய வழி என்று துணிந்து செய்யும் கொடியவர்கள்; எனவே நிலைபேறுள்ள நன்னெறியினின்றும் மாறுபடுவார்கள் எனின், அதைவிடுத்து, வெற்றியும் அதனால் உண்டாகும் புகழும் யாரைச் சென்று சேரும்?" என்று கேட்கிறான் இலக்குவன்.

"அறம்வெல்லும் பாவம் தோற்கும்" என்ற கருத்தில் அசையாத நம்பிக்கை கொண்ட இலக்குவன், அரக்கர்கள் எவ்வளவு ஆற்றல் படைத்தவர்களாய் இருந்தாலும் தர்மநெறியினின்றும் மாறுபட்டு அதர்மநெறியில் நிலைத்து நின்று மாயச்செயல்களால் போர்புரியும் கொடுமையானவர்கள்; எனவே அவர்கள் தோல்வியும் இகழ்ச்சியுமே அடைவார்கள்; நீயே வெற்றியும் புகழும் அடைவாய்" என்று ஊக்கமுட்டுகிறான் இலக்குவன்.

102. "பைந்தொடிக்கு இடர்களை பருவம் பையவே
வந்து அடுத்துளது; இனி வருத்தம் நீங்குவாய்;
அந்தணர்க்கு ஆகும் நாம் அரக்கர்க்கு ஆதுமோ?
சுந்தரத் தனுவலாய்! சொல்லு நீ" என்றான். (4355)

(களைதல் - போக்குதல்; பருவம் - காலம்; பைய - மெல்ல; அடுத்தல் - சேர்தல் \ பொருந்துதல்; ஆதுமோ - ஆகுவோமோ; சுந்தரம் - அழகு; தனு - வில்)

"அழகிய கோதண்டம் என்னும் வில்லைக் கையில் ஏந்தியவனே! விற்பயிற்சியில் மிகுந்த வல்லமை படைத்தவனே! இராமா! பசிய பொன்னாலாகிய வளையல்களை அணிந்த சீதாதேவிக்கு உண்டாகிய தொல்லைகளைப் போக்குகின்ற முன்பனிக்காலம் இதோ மெல்ல வந்து விட்டது; எனவே நீ வருத்தமுற்று இருப்பதைத் தவிர்ப்பாயாக! நீ தண்டக வனத்து முனிவர்க்குத் தந்த உறுதியின் படி அவர்களை வருத்தித் துன்புறுத்தும் அரக்கர்களைக் கொன்று, அறம் தலை நிறுத்தி, அந்தணர்க்கு உதவியாக இருக்க வேண்டிய நாம், இவ்வாறு அரக்கர்களுக்கு உதவி செய்வது போலக் காலம் தாழ்த்திக் கொண்டு, இங்கேயே உட்கார்ந்து கொண்டு வருந்திக் கொண்டிருக்கலாமோ? நீயே சொல்வாயாக!" என்றான் இலக்குவன்.

இங்கே பருவம் என்றது, தொடர்ந்து வரப்போகின்ற, முன்பனிக் காலத்தை என்க. வந்து சேர்ந்தது என்று கூறாமல் வந்து அடுத்துளது என்றதனால் கூதிர்ப் பருவம் முடிய இன்னும் ஓரிரு நாட்களே உள்ளன என்பது புலப்படும். நமது அறிவும் ஆற்றலும், செயல்திறனும் நம்மை அடைக்கலம் அடைந்த தண்டக வனத்து முனிவர்களுக்குத்தான் பயன் படவேண்டுமே அன்றி, அரக்கர்களுக்குப் பயன்படலாமோ? என்று கேட்கிறான் இலக்குவன். "அரக்கர்க்கு ஆதுமோ" என்பது, இவ்வாறு நாம் வருத்தப்பட்டுக்கொண்டு, எந்த முயற்சியும் செய்யாமல் இங்கேயே இருந்து கொண்டிருந்தால், அது அரக்கர்களுக்குச் சாதகமாகத் தானே போகும் என்ற கருத்தால் என்க. சீதைக்கு இடர் களைதல் என்பது இராவண ஆதியர்களை வென்று, கொன்று, சீதையை மீட்டல் என்பதாம். சுந்தரத் தனுவிற்கு அழகு, செம்மையுறச் செலுத்தலும், அதன் வழி அறம் தலைநிறுத்தலும் என்க.

103. கூதிர்ப் பருவம் முடிதல்

உறுதி அ∴தேஎன உணர்ந்த ஊழியான்,
"இறுதி உண்டேகொல் இம்மாரிக்கு?" என்பது ஓர்

தெறுதுயர் உழந்தனன், தேயத்தேய்வு சென்று
அறுதியை அடைந்தது, அப்பருவம் ஆண்டு போய். (4356)

(ஊழியான் - ஊழி அழியினும் அழியாதவன்; தெறு - கொடிய; உழல்தல் - வருந்துதல்; தேய்தல் - மெலிதல்; அறுதி - இறுதி \ முடிவு; ஆண்டு - ஆட்சி செய்து)

இவ்வாறு இலக்குவன் கூறியவற்றைக்கேட்ட, ஊழிக்காலத்தும் அழியாது நிலைத்து நிற்கும் தன்மையை உடைய, திருமாலின் அம்சமாகிய இராமபிரான், தன் தம்பி கூறுவதே நன்மை பயப்பது என்று மனத்தில் கொண்டான்; எனினும் இந்தக் கூதிர்ப்பருவத்திற்கு இன்னும் ஒரு முடிவு வரவில்லையே என்று, ஒரு கொடிய துயரடைந்து மிகவும் வருந்தி மெலிந்து போனான். அவன் உள்ளக் கிடக்கையை உணர்ந்தது போல மாரிக்காலமும் கொஞ்சம் கொஞ்சமாக மழை குறைந்து, தனது அரசாட்சியை முடித்துக் கொண்டு, இறுதியில் மழையே இல்லாது, முன்பனிக்காலம் வந்து சேர்ந்தது.

இங்கே முதல் வரியில் ஊழியான் என்ற கூறி, அடுத்த அடியில் "இறுதி உண்டே கொல் இம்மாரிக்கு" என்றதும் "ஓர் தெறுதுயர் உழந்து தேய" என்றதும் சற்று முரண்பாடாகத் தோன்றும். கடவுள் தன்மை பெற்ற இராமன், தனக்கு உட்பட்ட பருவங்களில் ஒன்றான மழைக்காலம் போகவில்லையே என்று இவ்வாறு வருந்தி, கொடிய துயருற்று மெலிய வேண்டுமோ? எனக் கேட்கத்தோன்றும். இங்கே இராமன் இப்போது மானிட வேடம் தாங்கி வந்திருக்கிறான். இங்கே மனிதப் பண்புகளுக்கு ஏற்ப நடந்து கொள்கிறான் என்பதைக் கற்போருக்கு நினைவு படுத்தவே இவ்வாறு இரண்டு முரண்பட்ட கருத்துக்களையும் கவிஞன் தெரிவிக்கிறான் என்பதை உணர்க. இன்னும் ஒன்று. முன்பு தன் தம்பி இலக்குவன் கூறிய கருத்துக்கு மாறுபட்டு, மாயமான் பின்னால் சென்று தான் அனுபவித்த இன்னல்களை மனத்தில் கொண்டதனால்தான், இப்போது இலக்குவன் கூறியவை நன்மையே பயக்கும் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவனானான் என்பதைக் குறிக்கவே "உறுதி அஃதெனெ உணர்ந்த ஊழியான்" என்றார் என்க. "உழந்தனன் தேய, தேய்வு சென்று அறுதியடைந்தது" என்ற சொல்லாட்சியை நோக்குக. இராமன் தேய்ந்து வருந்துவதால், பருவமும் தேய்ந்து போனது என்று கூறியது ஒரு நயம்.

104. மேகம் வெளுத்துத் தோன்றுதல்

மள்கல்இல் பெருங்கொடை மருவி, மண்ணுளோர்
உள்கிய பொருளெலாம் உதவி, அற்றபோது,
எள்கல்இல் இரவலர்க்கு ஈவது இன்மையால்,
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே. (4357)

(மள்கல்இல் - குறைதல் இல்லாத; மருவுதல் - தழுவுதல் \ மேற்கொள்ளுதல்; உள்கிய - நினைத்த \ பெறக்கருதிய; உதவுதல் - கொடுத்தல்; எள்கல்இல் - இகழ்தல் இல்லாத; இரவலர் - யாசிப்பவர்; வெள்குதல் - வெட்கமடைதல் \ நாணுதல்)

கொடுக்கக் கொடுக்கக் குறைதல் இல்லாத பெரிய கொடைத்தன்மையை மேற்கொண்டு, இவ்வுலகத்தில் உள்ளவர்கள் நினைத்த பொருள்களை யெல்லாம் வாரி வழங்கிய ஒரு புரவலன், கொடுத்துக் கொடுத்துத் தீர்ந்து போன சமயத்தில், தம்மை நாடி வந்து பொருள் கேட்கும் இகழ்தற்குரியவரல்லாத இரவலர்களுக்குக் கொடுக்க இயலாமையால் மிக்க நாணம் கொண்டு உடல் நிறம் மாறுபாடு அடைகின்ற வள்ளல்களைப் போல, நீருண்டு கறுத்திருந்த மேகம், அதனை மழையாகப் பொழிந்து கொடுத்த பிறகு, வெள்ளை நிறம் பெற்று வெளுத்துத் தோன்றியது.

நட்பு, தயை, கொடை என்பன பிறவிக் குணங்கள். அவை பிறவியிலேயே அமைந்து வர வேண்டுவன. எனவேதான் "பெருங்கொடை மருவி" என்றார். "உள்கிய பொருள்" என்பது இரப்பவர் வந்து கேட்பதற்கு முன்பே, தானே அவர் குறிப்பறிந்து, அவர் என்ன நினைக்கிறார் என்பதை அறிந்து கொடுப்பதைக் குறிக்கும். "இரவாமல் ஈந்த இறைவன்" என்பது புறப்பொருள் வெண்பாமாலை. இரவலர்கள் இழிந்தவர்கள் என்று அவர்களை இகழ்ச்சியாகக் கருதாது, அவர்களையும் தம்மைப் போல ஒரு மானிடனாகக் கருதியே உதவி செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கவே "எள்கல்இல் இரவலர்" என்றார். நம்மிடம் வந்து கேட்போர்க்கு, நம்மால் ஒன்றும் கொடுக்க இயலவில்லையென்றால், நமக்கு ஒரு குற்ற உணர்ச்சி ஏற்பட்டு நம் உடலிலும் சிறு மாறுதல்கள் நிகழும். அதைத் தான் "வெளுத்த" என்ற சொல்லால் குறித்தார். நாம் நாணுதலை மட்டும் அடைவோம். ஆனால் சங்க கால வள்ளல்கள் கொடுப்பதற்கு என்று இல்லையென்றால் தம் உயிரையும் மாய்த்துக்கொள்வர் என்று இலக்கியங்கள் பேசுகின்றன.

முன்பு பால காண்டத்திலேயே "உள்ளி, உள்ளவெலாம் உவந்து ஈயும் வள்ளியோரின் வழங்கின மேகமே" என்று கூறியதையும் இங்கு நினைவு கூர்க. "இன்மை உரைத்தார்க்கு அது நிறைக்கலாற்றாக்கால், தன் மெய் துறப்பான்" என்பது கலித்தொகை. "சாதலின் இன்னாதது இல்லை, இனிது அதூஉம் ஈதல் இயையாக்கடை" என்பது குறள் 230. இங்கே ஒரு செய்தி. மகாபாரதத்தில் வேதியர் உருவில் வந்த கண்ணபிரானிடம், கர்ணன் "இல்லையென்று உரைப்போர்க்கு, இல்லையென்று உரையா இதயம் வேண்டும்" என்றுதான் வேண்டினான். ஆனால் கண்ணபிரான் அவனுக்குச் செல்வமும் ஈகையும் நேரே அருளாது, ஈகையும், செல்வமும் எய்துமாறு அருளியதை இங்கே நினைவு கூர்க. செல்வம் இருந்து கொடுத்துக் கொண்டே வந்தால் அது ஒருநாள் தீர்ந்து போகலாம். ஆனால் இங்கே கண்ணன் அருளியது. கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம் என்பதை உணர்க.

105. கூதிர்கால இருள் மறைந்து போதல்

தீவினை, நல்வினை என்னத் தேற்றிய
பேய்வினைப்பொருள்தனை அறிந்து, பெற்றதுஓர்

ஆய்வினை மெய்யுணர்வு அணுக, ஆசுஅறும்
மாயையின் மாய்ந்தது மாரிப் பேர் இருள். (4358)

(தேற்றிய - தெரிவித்த; மாயை - அவிச்சை \ அஞ்ஞானம்; மாய்ந்தது - மறைந்தது; பொருள் - இயல்பு; ஆசு - பற்று)

பாவம் எது, புண்ணியம் எது என்று தெரிவிக்கின்ற நூல்களின், கொடிய தன்மையை அறிந்து கொண்டு, ஓர் ஆசாரியனின் உதவியும் பெற்று, அவ்விரண்டையும் ஆராய்ந்து அறிவதால் கிடைக்கின்ற மெஞ்ஞானம் என்னும் தத்துவ ஞானம் நம்மை வந்து அடைந்தபோதே குற்றமற்ற அஞ்ஞானம் நம்மை விட்டு மறைந்தவிடுவதுபோல முன்பனிக்காலம் என்னும் ஒளி வந்து சேர்கின்ற போது, கூதிர்காலத்திருந்த மழையென்னும் பெரிய இருட்டு மறைந்து போயிற்று.

நூல்களாலும், ஆசாரியனாலும் கற்றுத் தேர்வதால் கைவருகின்ற மெஞ்ஞானம் நம்மை வந்து அடைந்ததும், எவ்வாறு நம்மிடமிருந்த அஞ்ஞானம் விலகிப்போகிறதோ அது போல முன்பனிக்காலம் என்னும் ஒளி மிகுந்த காலம் வந்ததும் கூதிர்காலம் என்னும் இருண்ட மழைக்காலம் மறைந்து போனது என்பது கருத்து.

பொறியைத் தட்டியவுடன் இருள் மறைந்து ஒளி வருவதுபோல், மெஞ் ஞானம் வந்துற்றதும் அஞ்ஞானம் அகன்றது என்பதாம். ஒன்றை முன்னாகவும், மற்றொன்றைப் பின்னாகவும் கூறினாலும், இரண்டும் ஏககாலத்தில், ஒரே சமயத்தில் நிகழ்கின்றன என்பதே பொருந்தும் என்க.

106. இடியும் மின்னலும் இல்லாது போதல்

மூள் அமர் தொலைவுற, முரசு அவிந்தபோல்,
கோள்அமை கணமுகில் குமுறல் ஓவின;
நீள் அடுகணை எனத் துளியும் நீங்கின;
வாள்உறை உற்றென, மறைந்த மின்எலாம். (4359)

(மூள் - மூண்ட; அமர் - போர்; தொலைவுறுதல் - முடிவடைதல்; அவிதல் - அடங்குதல்; கோள் - கொள்ளுதல்; கணம் - கூட்டம்; குமுறல் - முழக்கம்; ஓவின - நீங்கின; அடுதல் - அழித்தல்; துளி - மழை \ மழைத்தாரை)

பகைவருடன் மூண்டெழுந்த போர் ஒரு முடிவுக்கு வரும்பொழுது போர்ப் பறைகள் ஒலிப்பதை நிறுத்திவிடுவது போல, நீரை முகந்து கொள்ளும் தன்மையுடைய மேகங்கள் தாம் இடிஇடித்து முழங்குவதை நீக்கிக் கொண்டன. பகைவரைக் கொல்லும் நீண்ட தன்மையுடைய அம்புகள், போர் முடிந்தபின் செலுத்தப்படாததுபோல் மழைத்தாரையும் விண்ணிலிருந்து பொழியாது நீங்கிற்று. போர் முடிந்ததும் வீரர்கள் தங்கள் வாள்களை உறையிலிட்டு மூடி விடுவதுபோல, மேகங்களிலிருந்த மின்னல்களெல்லாம் ஒளிவீசாது மறைந்து போயின;

கார்காலம் முடிவுற்றதற்கு ஒரு போர் முடிவுற்றதையும், முரசங்களின் ஓசைக்கு இடியின் முழக்கத்தையும், அம்பு மழைக்கு மழைத்தாரைகளையும்,

வாட்படைகளுக்கு மின்னல்களையும், உவமை கூறிய நயம் காண்க. கார்காலம் முடிந்ததும் இடிமுழக்கமும், மழையும், மின்னலும் இல்லாது போயின என்பது கருத்து.

107. **தடுத்த தாள் நெடுந் தடங்கிரிகள் தாழ்வரை**
அடுத்த நீர் ஒழிந்தன; அருவி தூங்கின;
எடுத்த நூல் உத்தரியத்தோடு எய்தி நின்று,
உடுத்த வால் நிறுத்துகில் ஒழிந்த போன்றவே; **(4360)**

(தாள் - அடிப்பகுதி; அடுத்த - தேங்கியிருந்த; வால் - வெண்மைநிறம்; ஒழிதல் - நீக்குதல்; தாழ்வரை - மலையடிவாரம்; உத்தரீயம் - மேலாடை; துகில் - அரையாடை)

எழுந்து நடந்து போவதைத் தடுப்பது போல் அமைந்துள்ள பெரிய நீண்ட மலைகளின் அடிப்பகுதியாகிய அடிவாரங்களின் அருகில் தேங்கியிருந்த நீரெல்லாம் நீங்கி, இப்போது வற்றிப் போய் வறண்டு காணப்பட்டது. ஆனால் மலைமேலிருந்த சுனை மட்டும் சிறிதுசிறிதாக நீரை வெளிவிட்டுக் கொண்டிருந்தது. கார் காலத்தில் மேலே இருக்கின்ற அருவி, ஒரு மனிதன் தோளில் உடுத்தியிருந்த மேலாடைபோலவும், கீழே தேங்கியிருக்கிற தண்ணீர். வெண்மையான அரையாடை போலவும் இருந்தன. இப்போது அந்த அருவியிலிருந்து மட்டும் மெலிதாக, சிறிதாக ஒழுகுகின்ற தண்ணீர், அம்மனிதன், தன் மேலாடையை நீக்கிவிட்டு ஒரு பூணூலை அணிந்து கொண்டது போலத் தோன்றியது.

கீழே அடிவாரத்தில் தேங்கியிருந்த தண்ணீர் வற்றி விட்டதால், அரையாடையையே நீக்கிவிட்டாற்போன்று தோன்றியது. மலைக்குத் தாள் என்பது, தரையில் மறைந்துள்ள வேர்ப்பகுதியைக் குறிக்கும். அது நடக்க இயலாது தடுக்கப்பெற்றிருப்பதால் “தடுத்த தாள்” என்றார்.

108. ஆறுகள் நீரற்று வறண்டு போதல்

மேகம் மாமலைகளின் புறத்து வீழ்தலால்
மாகயாறு யாவையும் வாரியற்றன;
ஆகையால் தகவு இழந்து, அழிவுஇல் நன்பொருள்
போக, ஆறு ஒழுகலான் செல்வம் போன்றவே. **(4361)**

(தகவு - பெருந்தன்மை; வீழ்தல் - நீங்குதல்; மாகம் - ஆகாயம் \ மேலிடம்; வாரி - வெள்ளம்)

கூதிர் காலம் இங்கே நீங்கிப் போனதால், இப்போது, மேகங்கள், அம்மலையின் அப்புறத்தே மழையைப் பொழிகின்றன. எனவே இந்த மலைகளிலிருந்து புறப்படும் ஆறுகள் யாவையும் நீரற்று வறண்டு போயின. இது எதைப்போல இருக்கிறது என்றால், பெருஞ்செல்வம் பெற்றவன், அதனாலேயே தன் பெருந்தன்மையை இழந்து, செருக்குற்று, அழிக்கவியலாத அப்பெரும்

பொருளை, தவறான தீய வழிகளிலேயே ஒழுகி, கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்த்து, இறுதியில் ஒன்றும் இல்லாதது போலத் தோன்றியது.

அற்பர்கள் தான் பெரும் செல்வம் பெற்றால், அதனால் தன் பெருந்தன்மையை இழப்பர். செருக்குறுவர். தீயவழிகளில் செல்வர். அதனால் செல்வம் தேயும். பிறகு அழிந்து போகும் என்பது கண்கூடு. இதற்குச் சரியான எடுத்துக்காட்டு. இராவணன்; இதை மாரீசன் கூற்றாகக் கம்பன் கூறியிருப்பதை முன்பே கண்டோம். "செல்வம் வந்துற்ற காலைத் தெய்வத்தைச் சிறிதும் பேணார்; சொல்வதை அறிந்து சொல்லார்; சுற்றமும் துணையும் நோக்கார்; வல்வினை விளைவும் ஓரார், மண்ணின் மேல் வாழும் மாந்தர்" என்பது வில்லிபாரதம். மற்றொரு எடுத்துக்காட்டு சிலப்பதிகாரக் கோவலன். "சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி, குலம் தரும் வான்பொருள் குன்றத்தொலைந்த, இலம்பாடு நாணுத்தரும்" என்பது சிலப்பதிகாரத்தில் கோவலன் கூற்றாகவே வருவது.

109. சந்திரன் தோன்றி ஒளி வீசுதல்

கடம் திறந்து எழு களிறு அனைய கார்முகில்,
இடம் துறந்து, ஏகலின், பொலிந்தது இந்துவும்;
நடம் திறன் நவில்வுறு, நங்கைமார் முகம்
படம் திறந்து ஒருவலின், பொலியும் பான்மை போல். **(4362)**

(கடம் - மதம்; இந்து - சந்திரன்; படம் - திரைச்சீலை; ஒருவல் - நீக்குதல்; பான்மை - தன்மை; பொலிதல் - தோன்றுதல்; நவிலுதல் - பயிலுதல் \ நடித்தல்)

கன்னம், கபாலம், பீஜம் முதலியவை ஒரே நேரத்தில் திறந்து கொண்டாற்போன்று, மிகுந்த மத நீரை வெளியேற்றி எழுந்து செல்லும் ஆண் யானையைப் போல, கரிய மேகம், தான் இதுகாறும் கவித்து மறைத்துக் கொண்டிருந்த வானத்தைவிட்டு விலகிச் சென்றதால், இது வரை மேகத்தில் மறைந்திருந்த சந்திரன், இப்போது ஒளிவிட்டுப் பிரகாசித்தான். இது எதைப்போல இருந்தது? நடனத்தில் திறமை பெற்றிருந்த அழகிய நடன மாதரின் முகம், திரைச்சீலையை விலக்கி நீக்கியவுடன் எப்படிப் பொலிவோடு அழகு பெற்றுத் தோற்றமளிக்குமோ அவ்வாறு சந்திரன் ஒளிவீசித் திகழ்ந்தான்.

மதநீரைச் சொரிந்து செல்லும் ஆண்களிற்றுக்கு, மழைநீரைப் பொழிந்து விட்டுச் செல்லும் கார்மேகம் உவமை. மேகத் திரை, மறைவிலிருந்து வெளிப்பட்டுத் தோன்றிய சந்திரனின் முகவொளிக்கு, திரைச்சீலை விலக்கப்பட்டதும் தெரியும் நடன மாந்தரின் முகம் உவமை. மேகம் - திரைச்சீலை; சந்திரன் - நடன மாதர் முகம்; வானம் - நடன அரங்கு.

110. குளிர்காற்று வாசம் கொண்டு வீசுதல்

பாசிழை மடந்தையர் பகட்டு வெம்முலை
பூசிய சந்தனம், புழுகு, குங்குமம்,

மூசின முயங்கு சேறு உலர, மொண்டு உற
வீசின நறும்பொடி விண்டு வாடையே. (4363)

(பகடு - பெருமை; வெம் - விரும்பத்தக்க; மூசின - நெருங்கிய; முயங்குதல் - கலத்தல்; சேறு - கலவை; மொண்டு - முகந்து ; பொடி - மகரந்தத்தூள்; பகடு - யானையின் மத்தகம்; விண்டு - மலை; விண்டுவாடை - மலைக்காற்று; விண்டு - வெளிப்படுத்துதலுமாம்)

புதிய பொன்னாலான அணிகலன்களை அணிந்த பெண்டிரின் பெரிய, யானையின் மத்தகம் போன்ற, விரும்பத்தக்க, வெம்மை வாய்ந்த கொங்கைகளில் அப்பிக்கொண்டுள்ள, சந்தனக்குழம்பு, கத்தூரிக்குழம்பு, புழுகுநெய், குங்குமக் குழம்பு ஆகியவை நெருங்கிக் கலந்த கலவைச் சாந்து உலர்ந்து போகும்படி, வாடைக்காற்று, மலர்களிலிருந்து மகரந்தத்தூள்களை மிகுதியாக வெளிப்படுத்தி முகந்து கொண்டு வந்து வீசின.

111. அன்னாங்கள் பறக்கத் தொடங்குதல்

மன்னவன் தலைமகன் வருத்தம் மாற்றுவான்,
நன்னெடும் பருவமும் அணுகிற்று; ஆதலால்,
பொன்னினை நாடிய போதும் என்பபோல்
அன்னமும் திசை திசை அகன்ற விண்ணின்வாய். (4364)

(மன்னவன் - தசரதன்; தலைமகன் - மூத்த மகன்; பொன் - சீதை; நாடிய - தேடுதற்கு; போதும் - போவோம்)

தசரதச் சக்கரவர்த்தியின் முதல் மகனான இராமபிரான் சீதையின் பிரிவாற்றாமையால், படும் துயரத்தை மாற்றி, அவனுக்குத் தேறுதல் கூறுவது போல, நல்ல நீண்ட முன்பனிக்காலமும் வந்து சேர்ந்தது; எனவே நாமும் அழகிய திருமகளின் அம்சமாகிய சீதையைத் தேடிக்கண்டு பிடிக்கப் போவோம் என்று சொல்லுபவை போல அன்னப் பறவைகளும் விண்ணின் வழியாக எல்லாத்திக்குகளிலும் சுதந்திரமாகப் பறந்து சென்றன.

முன்பாடலில், கூதிர்காலத்தில் பெய்த மழையில், குளிர் தாங்காது பறவைகள் சென்று சோலையில் இருந்த மரங்களின் பொந்துகளில் ஒளிந்து கொண்டன என்று கூறிய கவிஞன், இப்போது, காலமாற்றத்தால், அவ் வன்னங்கள் சுதந்திரமாக வெளியே வந்து ஆகாயத்தில் எல்லாத்திசைகளிலும் பறந்து சென்றன என்று கூறும் நயம் காண்க. முன்பு இராமன் காட்டிற்கு ஏகிய போது, பகுத்தறிவற்ற அஃறிணை உயிர்களான ஆவும், ஆவின் கிள்ளை, பூவை, பூசை கன்றும் அழுதன என்று கூறிய கவிஞன், இப்பொழுது பிரிவாற்றாமையால் துயருற்றிருக்கும் போதும் அவனுடைய துக்கத்தில் பங்கு கொள்வது போலச் சீதையைத் தேடிச் செல்லும் வானரக்கூட்டத்தைப்போல, அதற்குமுன்பே நாமும் செல்வோம் என்று கருதி, அன்னங்கள் பறந்து சென்றதாகக் கூறும் கவிஞனின் கற்பனைத் திறனை உணர்க.

112. மயில்கள் ஆடாது ஒடுங்குதல்

தம்சிறை ஒடுக்கின, தழுவும், இன்னல,
நெஞ்சு உறு மம்மரும் நினைப்பும் நீண்டன;
மஞ்சு உறு நெடுமழை பிரிந்த மாமயில்
எஞ்சின; மிதிலை நாட்டு அன்னம் என்னவே; (4365)

(மஞ்சு - மேகங்கள்; மா - சிறந்த; சிறை - சிறகுகள்; தழுவுதல் - பொருந்துதல்; மம்மர் - மயக்கம்; மிதிலை நாட்டு அன்னம் - சீதை; எஞ்சுதல் - சோர்தல் \ மகிழ்ச்சி குறைதல்)

மேகங்கள் நிறைந்திருந்த நீண்ட கார்காலம் அகன்றதால், பெருமையுடைய மயில்கள், தம் சிறகுகளை ஒடுக்கிக் கொண்டன. தாம் துன்பம் தணிந்தனவாயும், உள்ளத்தே மயக்கம் கொண்டனவாயும், இருந்தன, கார்காலத்தில் தாம் துய்த்த இன்பங்களை எண்ணிப் பார்த்ததும், மகிழ்ச்சி சற்று குறைந்து, சோர்ந்து போயின. எதைப் போல? எவ்வாறு இராமனின் பிரிவால் மிதிலை நாட்டைச் சேர்ந்த சீதை தன் உடம்பை ஒடுக்கிக் கொண்டு, துயரமே வடிவாக உள்ளமெல்லாம் மயக்கம் கொண்டு, தான் அயோத்தியில் இராமனுடன் வாழ்ந்த நாட்களை எண்ணிப் பார்த்து சோர்ந்து தவித்துக் கொண்டு இருந்தாளோ அதைப் போல இம் மயில்களும் சோர்ந்து போயின.

முன்பு கார்காலத்தில் மயில்கள் மகிழ்ச்சியுற்றுத் தம் தோகை விரித்து ஆடின என்று கூறிய கவிஞன் இப்பொழுது ஏற்பட்ட கால மாற்றத்தால் அதே மயில்கள் சிறகுகளை ஒடுக்கி, ஆடல் அகற்றி, சோர்ந்து போய், மகிழ்ச்சி குறைந்து இருந்தன என்கின்றான். இதற்கு இவ்வாறே துன்பப்பட்டு உழலும் சீதாதேவியை உவமையாகக் கூறிய, நயமும் காண்க.

113. தெளிந்த நீரும் பிறழ்ந்த மீனும்

வஞ்சனை தீவினை மறந்த மாதவர்
நெஞ்சு எனத் தெளிந்தன நீரம்; நீர்தொறும்
பஞ்சு எனச் சிவக்கும் மென் பாதப் பேதையர்
அஞ்சனக் கண் எனப் பிறழ்ந்த ஆடல் மீன். (4366)

(நீரம் - நீர்நிலைகளிலுள்ள நீர்; அஞ்சனம் - மை; மறந்த - நினையாத)

வஞ்சனைக்குக் காரணமான தீவினைகளைப் பற்றியே அறியாதவர்களான சிறந்த தவத்தை மேற்கொண்டு ஒழுகும் முனிவர்களின் நெஞ்சம் போல, தெளிந்து காணப்பட்டது அங்கு நீர் நிலைகளில் நிறைந்திருந்த நீர். அந்தத் தெளிந்த நீரோடைகளில் எல்லாம் செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப்பெற்ற சிவந்த, மெல்லிய பாதங்களையுடைய பெண்டிரின் மைபூசப்பெற்ற கண்கள் போலப் பிறழ்ந்து ஒளி வீசின ஆடலில் வல்ல மீன்கள்.

தெளிந்த நீர் நிலைக்கு, வஞ்சனையும் தீவினையும் அற்ற சிறந்த மாதவர்களின் நெஞ்சு உவமை, கடலில் பிறழ்ந்து ஒளிவீசும் மீன்களுக்குப்

பெண்டிரின் மை பூசிய கண்கள் உவமை; கார் காலத்திலும், கூதிர் காலத்திலும் பொதுவாக நீர் நிலைகள் கலங்கியிருக்கும் - முன் பனிக் காலத்தில் கலக்கமின்றித் தெளிந்திருக்கும் என்பதை அறிக. அவ்வாறு தெளிந்த நீர்நிலைகளில் துள்ளித் திரியும் மீன்கள் நம் கண்களுக்கும் தெளிவாகப் புலப்படுதல் இயல்பு; எனவே நீர்த் தெளிவு பற்றிக் கூறியதோடு, அதில் சுழன்றோடும் மீன் பற்றியும் கூறினார் என்க. இங்கே உபமேயத்தை உவமையாகக் கூறிய பான்மை நோக்குக. இங்கே பேதையர் என்பது அவற்றிற்கு உரிய பருவத்தைக் குறிக்காது; பொதுவாகப் பெண்டிர் என்று பொருள்படும்.

114. குவிந்த தாமரையும் மலர்ந்த நெட்டி மலரும்

ஊடிய மடந்தையர் வதனம் ஒத்தன,
தாள்தொறும் மலர்ந்தன முதிர்ந்த தாமரை;
கூடினர் துவர் இதழ்க் கோலம் கொண்டன
சேடுஉறு நறுமுகை விரிந்த செங்கிடை; (4367)

(தாள் - நாளம் \ தண்டு; முதிர்தல் - பொலிவிழத்தல்; சேடு - உயர்ச்சி \ அழகு; முகை - மொட்டு \ அரும்புகள்; துவர் - சிவந்த \ பவளம்; கோலம் - அழகு; ஊடிய - பிணங்கிய)

நாளங்களெல்லாம் மலர்ந்து போயிருக்கும் முதிர்ச்சியுற்ற தாமரை மலர் ஒரு பக்கம் காய்ந்திருந்தது. எதைப் போல? தம் கணவருடன் பிணக்குக் கொண்டு சினத்தால் வாடியிருந்த பெண்டிரின் முகத்தைப் போல; அழகு மிக்கதும் நறுமணம் கொண்டதுமான சிவந்த நெட்டிச் செடிகள் அரும்புகள் பூத்துக் குலுங்கின; எதைப்போல? தன் கணவருடன் ஊடல் நீங்கிக் கூடி மகிழ்ந்தபோது தோன்றிய சிவந்த பவளம் போன்ற இதழ்களின் அழகைப் போல.

முதிர்ந்து, ஒரு பக்கம் சாய்ந்து ஒளி குன்றியிருந்த தாமரை மலருக்கு, ஊடிய மடந்தையர் வதனத்தையும், நன்கு அழகாக மலர்ந்திருந்த செங்கிடை மலர்க்கு, கூடினர் துவர் இதழையும் உவமை கூறிய கவிஞரின் கவித்திறன் நோக்குக. பனிக்காலத்தில் தாமரை மலர் பொலிவிழந்துதான் தோன்றும்; அது அதன் இயல்பு. “தாமரை முகங்கள் வாட்டும் தண் பனிக்காலம் தன்னில்” என்பது நைடதம். அதுபோலவே செங்கிடை மலர்கள் நன்கு மலர்ந்து சிவந்து தோன்றும் இயல்புடையன. முன்பு கார்காலத்தில் இதே தாமரை மலர்கள் விருந்து கண்ட உள்ளம் களிக்கும் மங்கையர் முகம் எனப் பொலிந்தன என்று கூறியதை, இங்கு நினைவு கூர்க.

115. தவளை தன் ஒலி அடங்கியிருத்தல்

கல்வியின் திகழ் கணக்காயர் கம்பலைப்
பல்விதச் சிறார் எனப் பகர்வ பல் அரி,
செல் இடத்து அல்லது ஒன்று உரைத்தல் செய்கலா
நல்லறிவாளரின், அவிந்த நா எலாம். (4368)

(கணக்கு - நூல்; ஆயர் - ஆராய்ந்தவர்; கணக்காயர் - ஆசிரியர்; கம்பலை - ஆரவாரம்; அரி - தவளை; செல்லுதல் - பலித்தல்; அவிந்த - அடங்கிய; பகர்தல் - ஒலித்தல்)

கல்வியறிவில் மேம்பட்டுத் திகழும் ஆசிரியரின் கீழ் பேரிரைச்சலுடன் கல்வி கற்கும் பல வகைப்பட்ட ஆரம்பப்பள்ளிச் சிறுவர்களைப் போல, கார்காலத்திலும், கூதிர்காலத்திலும் பேரொலி எழுப்பிக்கொண்டிருந்த தவளைகள், இப்போது, முன்பனிக்காலம் வந்த போது, தனது சொல்பலிக்கும் இடத்திலன்றி, வேறு எங்கும் ஒரு சொல்லும் பேசாது நாவடங்கி இருக்கின்ற பேரறிஞர்களைப் போல எவ்விதச் சத்தமும் இன்றி வாய் அடங்கிப் போய் இருந்தன.

கல்வியறிவில்லாத பலவகைப்பட்ட பேரிரைச்சலுக்கும், பேரறிவாளரின் மௌன நிலைக்கும் ஒரே தவளையை எடுத்துக்காட்டாகக் காட்டிய கவிஞரின் திறன் நோக்குக. மழைக் காலத்தில் எல்லாத் தவளைகளும் ஒன்று கூடிக் கத்துவது ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூறுவதைப் பின்பற்றிக்கூறும் பலவகைப்பட்ட சிறுவர்களின் பேரிரைச்சலுக்கு உவமை. அதே தவளைகள் முன்பனிக்காலம் வந்ததும் மிக்க அறிவு முதிர்ந்த பேரறிவாளர் போல் வாயடங்கி நின்றன என்பதாம். செல்லிடம் என்பது சான்றோர்கள் நிறைந்த சபை என்க.

116. ஆறுகள் கடலில் சென்று கலத்தல்

**செறிபுனல் பூந்துகில் திரைக்கையால் திரைத்து,
உறு துணைக் கால் மடுத்துஓடி, ஓதநீர்
எறுழ்வலிக் கணவனை எய்தி, ஆறுஎலாம்
முறுவலிக்கின்றன போன்ற, முத்துஎலாம். (4369)**

(செறி - நெருங்கிய; திரை - அலைகள்; திரைத்தல் - மடக்குதல் \ சுருக்கிக் கொள்ளுதல்; மடுத்து - பதித்து \ அணைத்து; ஓதம் - கடல்; எறுழ் - வலிமை)

நெருங்கிய நீர் கொண்ட ஆறுகள் எல்லாம், தம்மில் படிந்திருக்கும் மலர்களையே ஆடைகளாகக் கொண்டு அவற்றைத் தம் அலைகள் என்ற கைகளினால் மடக்கிக் கொண்டு அடிப்பகுதியாகிய கடலிடத்து, நீராகிய மிக்க வலிமையுடைய கணவனைச் சென்று சேருவது, பெண்கள், முத்துக்கள் போன்ற பற்களினால் புன்முறுவல் பூப்பது போல் இருக்கிறது.

ஆறுகளில் இயற்கையாக மிதந்து வரும் மலர்களை அவற்றிற்கு ஆடையாகக் கூறுவது கவி மரபு; "புண்ணிய நறுமலராடை போர்த்து கண்நிறை நெடுநீர் சுரந்தனன் அடக்கி" என்பதும் "மருங்குவண்டு சிறந்தார்ப்ப, மணிப்பூவாடை அதுபோர்த்து, கருங்கயற்கண் விழித்தொல்கி, நடந்தாய் வாழி காவேரி!" என்பதும் சிலப்பதிகாரம். எனவே இங்கே "செறுபுனல் பூ" என்றார்; அலைகளைக் கைகளாகக் கூறுவதும் கவி மரபு. "பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் பொன்னரங்கம்" என்பது பெருமாள் திருமொழி. ஆறு உற்பத்தியாகும் இடத்தை தலை என்று கூறுவது போல் ஆறு கடலில் கலக்கும் இடத்தைக் கால் என்கின்றான் கவிஞன். பாவாடை அணிந்து ஓடும்

பெண்கள் கால்கள் தடுக்கி விடாதபடி அப்பாவாடையைச் சற்று தூக்கிப் பிடித்துக் கொண்டு, கடலாகிய கணவனை நோக்கி ஓடின என்ற கற்பனை நயம் காண்க. கணவனைச் சேர்ந்த பெண்கள் முறுவல் செய்து மகிழ்வது போல, இவ்வாறுகளாகிய பெண்களும் கணவனாகிய கடலைச் சேர்ந்ததும், முத்துக்களாகிய புன்முறுவலால் சிரித்து மகிழ்கின்றன என்பது கருத்து. எனவே, ஆறுகளின் கணவனாக நதியைக் கருதி "நதிபதி" என்றும் "சமுத்திரகாமினி" என்றும் கூறுவதும் உண்டு.

117. பாக்கு மரங்கள் முதிர்ந்து பொன்னிறம் அடைதல்

சொல்நிறை கேள்வியின் தொடர்ந்த மாந்தரின்,
இல், நிறப் பசலை உற்றுஇருந்த மாதரின்,
தன் நிறம் பயப்பய நீங்கித் தள்ளரும்
பொன் நிறம் பொருந்தின, பூகத்தாறு எலாம். (4370)

(சொல் - புகழ்; பூகத்தாறு - கமுகின் குலைகள் \ பாக்கு மரக்குலைகள்; பயப்பய - மெல்லமெல்ல; மாந்தர் - தலைவர்; மாதர் - தலைவியர்; தள்ளரும் - இகழ்தற்கரிய)

புகழ் நிறைந்த கேள்வியறிவு பெறும் பொருட்டு, ஆசிரியரை நாடி, அயல் நாட்டிற்குப் பிரிந்து சென்ற தலைவர்களின் மனைவியர், பிரிவாற்றாமையால், தம்முடைய இயற்கை நிறத்தில் இருந்து நீங்கி சிறிதுசிறிதாகப் பசலை நிறம் கொண்ட மேனியைப் பெறுவது போல, பாக்கு மரத்தின் குலைகளில் கூதிர்காலத்தில் பச்சைப் பசேல் என்று இருந்த காய்கள் எல்லாம், முன்பனிக்காலமாகிய இப்போது முதிர்ந்து, பழுத்து இகழ்தற்கரிய பொன்னிறம் பெற்று விளங்கின.

சங்க காலத்தில் தலைவியரை விட்டு நீங்கித் தலைவர்கள் அயல்நாடு செல்லுதல் உண்டு. அது ஆறுவகைப் பிரிவாகும். அவற்றுள் ஒன்று படிப்பிற்காகப் பிரியும் ஓதற்பிரிவு. அது இங்கே குறிக்கப்பட்டது. அத்தகைய பிரிவின்போது, தலைவரைப் பிரிந்த தலைவியர் தன் மேனியின் இயற்கை நிறம் மாறுபட்டுப் பசலை நிறம் பெறுதல் இயல்பு. இதை இங்கே இளமையில் பச்சை நிறம் கொண்டிருந்த பாக்குக் காய்கள் இப்போது முதிர்ந்ததால் பழுத்த நிறமான பொன்னிறமாக மாற்றம் அடைந்ததற்கு உவமித்தார் என்க. பசலை நிறம் என்பது, தலைவரைப் பிரிந்ததனால், தலைவியர்க்கு உடலில் உண்டாகும் நிறவேறுபாடு. பசலை என்பது நிறத்தில் பொன்னைப் போன்றிருக்கும். "பொன்தெளித்து எழுதி அன்ன பூம்புறப் பசலை" என்பது சீவகசிந்தாமணி, இத்தகைய நிறவேறுபாடு, திடும் என்று ஒரே நாளில் ஏற்பட்டுவிடாது. மெதுவாக நாள் ஆக ஆகக் கொஞ்சம் கொஞ்சம் ஆகத் தான் நிகழும். அதைத்தான் "தன்நிறம் பயப்பய நீங்கி" என்றார். இந்த நிறமாற்றமும் புறக்கணிக்கக்கூடியதன்று என்பதால்"தள்ளரும் பொன்நிறம்" என்றார்.

118. முதலைகள் கரையில் தூங்குதல்

பயின்று உடல்குளிர்ப்பவும், பழனம் நீத்து, அவண்
இயன்றன; இளவெயில் ஏய்ந்த மெய்யின;
வயின்தொறும், வயின்தொறும், மடித்த வாயின;
துயின்றன, இடங்கர்மாத் தடங்கள் தோறுமே. (4371)

(இடங்கர்மா - முதலைகள்; பழனம் - பொய்கைகள்; மெய் - உடம்பு; தடம் - கரை; வயின் - இடம்; மடித்த - மூடிக்கொண்ட)

கூதிர்காலத்தில் பொய்கைகளிலேயே தொடர்ந்து மூழ்கி இருந்ததனால் உடல் குளிர்ந்து போன முதலைகள், இப்பொழுது மழைநீங்கி முன்பனிக்காலம் வந்ததனால், கால்வாய்களை விட்டு நீங்கி, அவற்றின் கரைகளில் கிடைத்த இடங்களில் எல்லாம் வாயை மூடிக்கொண்டு, இளஞ்சூரியனின் வெய்யில் ஒளி தன் மேனியிலே படும்படி குளிர் காய்ந்து கொண்டு சுகமாய்த் தூங்கிக் கொண்டிருந்தன.

முதலைகள் தூங்கும்போது வாயை மடித்துக்கொண்டு தூங்கும் என்பது பெறப் படுகிறது. முதலை, இடங்கர், சுரசம் என்பன முதலையின் மறு பெயர்கள் எனக் கொள்க.

119. வஞ்சிக்கொடிகளின் தோற்றம்

கொஞ்சுறு கிளி நெடுங்குதலை கூடின,
அஞ்சிறை அறுபதத்து அளக ஒளிய,
எஞ்சல்இல் குழையன, இடைநுடங்குவ
வஞ்சிகள் பொலிந்தன, மகளிர் மானவே. (4372)

(நெடு - மிகுதி; குதலை - மழலைச்சொல்; அம் - அழகிய; அறுபதம் - ஆறுகால்கள் \ வண்டுகள்; அளகம் - கூந்தல்; ஒளி - ஒழுங்கு \ வரிசை; எஞ்சல்இல் - குறைதலில்லாத; குழை - காதணிகள்; நுடங்குதல் - துவள்தல்; மான - போன்ற)

வஞ்சிக்கொடிகள், மழலைச் சொற்களை மிகுதியாகக் கொஞ்சிப்பேசும் மகளிர் போன்றிருந்தன. அழகிய சிறகுகளையும் ஆறு கால்களையும் உடைய வண்டுகள் அவர்களின் கூந்தல் வரிசையைப் போன்றிருந்தன. குறைதல் இல்லாத காதணிகள், அவற்றின் தளிர்கள் போன்றிருந்தன. பூங்கொம்புகள் அவர்களின் இடையைப் போலத் துவண்டன; எனவே மொத்தத்தில் அவ்வஞ்சிக் கொடிகள் மகளிரைப்போல அழகாகத் திகழ்ந்தன.

கிளியின் கொஞ்சும் மழலை மொழிக்கு, மகளிரின் பேச்சும், வண்டின் வரிசைக்கு மகளிரின் கூந்தலும், பூங்கொம்பின் தளிர்களுக்கு மகளிரின் காதணியும், பூங்கொடியின் நடுப்பகுதிக்கு மகளிரின் இடையும், மொத்தத்தில் வஞ்சிக் கொடிக்கு மகளிர் உவமை.

120. நத்தைகள் சேற்றிலே மூழ்கியிருத்தல்

அளித்தன முத்து இனம் தோற்ப, மான்அனார்,
வெளித்து எதிர் விழிக்கவும் வெள்கி, மேன்மையால்,
ஒளித்தனவாம் என, ஒடுங்கு கண்ணன,
குளித்தன மண்ணிடை, கூனல் நந்து எலாம். (4373)

(கூனல் - வளைந்த முதுகு; நந்து - நத்தைகள்; அளித்தன - ஈன்றன; வெள்கி - நாணி; மேன்மை - பெருந்தன்மை; மண் - சேறு; குளித்தல் - மூழ்குதல்)

கூனி வளைந்த முதுகையுடைய நத்தைகள், தாம் ஈன்றெடுத்த முத்துக்கள், மான் போன்ற விழிகளையுடைய மகளிரின் பற்களுக்குத் தோற்றுப்போனதால், அவர்களின் எதிரிலே வெளிப்பட்டுத் தோன்றவும், அவர்களைப் பார்க்கவும் வெட்கம் கொண்டு, தமது பெருந்தன்மைப் பண்பினால், தம்மை ஒளித்துக் கொள்வது போலத் தம் கண்களைச் சுருக்கிக் கொண்டு சேற்றிலே மூழ்கின.

கூதிர்காலத்தில் வெளிப்பட்டு நிலத்திலே திரியும் நத்தைகள் எல்லாம் முன்பனிக்காலத்திலே சேற்றிலே மூழ்கியிருந்தன என்பது கருத்து. தான் தோற்காவிட்டாலும் தான் ஈன்ற நத்தைகள் தோற்றதனால், அவற்றின் குணத்தைப் பெருந்தன்மை என்று "மேன்மையால்" என்று கூறினார். தான் தோற்காவிட்டாலும் தான் பெற்றெடுத்த மைந்தன் தோற்றான் என்று ஒரு வீரப்பெண் அவன் பாலருந்திய தன் கொங்கைகளை அறுத்துக்கொண்டாள் என்ற ஒரு புறநானூற்றுப் பாடல் இங்கு ஒப்பு நோக்கத் தகும். முத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்று நத்தை. நத்தையின் வயிற்றிலே முத்துப் பிறக்கும் என்ற பழமொழியையும் இங்கு நினைவு கூர்க. முத்துக்கள் பிறக்கும் இடங்களாகக் கீழ்வருவனவற்றை ஒரு பாடல் கூறுகிறது. "சந்திரன், மேகம், சங்கு, சிப்பி, மீன், நத்தை, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, மூங்கில், செந்நெல், பன்றிக்கொம்பு, யானைக்கொம்பு, பசுவின்பல், நாகம், கொக்கு, நங்கையர் கழுத்து" என்பனவாம்.

121. நண்டுகள் வளைக்குள் புகுந்து கொள்ளுதல்

மழை படப்பொதுளிய மருதத் தாமரை
தழைபடப் பேர்இலைப் புரையில் தங்குவ
இழைபடு பெடையொடும் எள்இல் நள்ளிகள்,
புழைஅடைத்து ஒடுங்கின, பொச்சை மாக்கள்போல். (4374)

(பொதுளுதல் - செழித்தல்; புரை - கீழ்புறம்; நள்ளிகள் - நண்டுகள்; எள்இல் - இகழ்ச்சி இல்லாத; இழைபடுதல் - கூடுதல்; புழை - வளை; பொச்சைமாக்கள் - குற்றம் புரிந்தவர்கள்)

கூதிர்காலத்தில், செழித்து வளர்ந்த மருதநிலத்துக்குரிய இகழ்தலில்லாத தாமரை மலரின் பெரிய இலைகளின் அடிப்புறத்தில் தங்கியிருந்த ஆண் வண்டுகள், இப்பொழுது முன்பனிக் காலம் வந்ததால், தான் கூடிப் புணர்ந்த

வண்டுகளுடன், தனது வளையின் வாயிற்கதவை அடைத்து அதனுள் ஒடுங்கிக் கொண்டன. இது எப்படி இருந்தது என்றால், குற்றம் புரிந்தவர்கள், ஒருவருக்கும் தெரியாமல் தாம் தம் வீட்டிற்குள்ளேயே அடங்கி ஒடுங்கி இருத்தல் போல என்கின்றான் கவிஞன்.

மழைக்காலத்தில் தாமரை மலர் மருத நிலத்தில் சிறப்பாகச் செழித்து வளரும் என்பது பெறப்படுகிறது. அத் தாமரை மலரின் பெரிய இலைகளின் அடிப்புறத்தில் வண்டுகள் தங்கியிருக்கும் இயல்பின. இப்பொழுது முன்பனிக்காலம் துவங்கியதால் அவை தாமரை இலையை விட்டு வெளியே வந்து, தனது வளைக்குரிய வாயிற்கதவை மண்ணால் அடைத்துக் கொண்டு, ஒடுங்கி ஒதுங்கியிருந்தன என்பதாம். இதற்குப் பொச்சைமாக்கள் உவமை. பொச்சை மாக்கள் என்பது குற்றம்புரிந்தவர் என்றும் வச்சை மாக்கள் என்பது உலோபிகள் என்றும் பொருள்படும்.

கார்காலப்படலம் நிறைவுற்றது

10. கிட்கிந்தைப் படலம் [140 பாடல்கள்]

கார்காலம் முடிந்ததும், முன்பு இராமனுக்குக் கூறிய உறுதிமொழிப்படி சுக்கிரீவன் சேனைகளுடன் வராததால், இராமன் சினந்து இலக்குவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பி, செய்தி அறிந்து வருமாறு கூறுதலும் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 140 பாடல்களைக் கொண்டது.

இப் படலத்துள், கார்காலம் முடிந்ததும் சுக்கிரீவன் தன் சேனைகளுடன் வராதிருந்தது உணர்ந்து, இராமன் சினம் கொண்டு இலக்குவனைக் கிட்கிந்தைக்கு அனுப்புதல்; இலக்குவன் செல்லுதல்; இலக்குவன் வருகையறிந்த வானரர்கள் அங்கதனுக்குத் தெரிவித்தல்; அங்கதன் நிலைமை உணர்ந்து, சுக்கிரீவனைக் காணச் செல்லுதல்; சுக்கிரீவன் மதுமயக்கத்தில் அந்தப்புரத்துப் பெண்களுடன் களியாட்டத்தில் ஈடுபட்டிருத்தல்; இருந்தும் அங்கதன் கூறிய செய்தியை சுக்கிரீவன் உணர்ந்து கொள்ளாமை; அங்கதன் உடனே அனுமனை அடைந்து செய்தி கூற, இருவரும் தாரையை அடைதல்; குரங்குகள் வாயிலைக் கற்களைக் கொண்டு மூடிவைத்தல்; இலக்குவன் அதைத் தகர்த்து உட்புகுதல்; குரங்குகள் அஞ்சி ஓட, அனுமன் தாரையை, இலக்குவனுக்குச் சமாதானம் செய்யுமாறு கூறுதல்; தாரை, மகளிர் கூட்டத்தோடு சென்று இலக்குவன் எதிர்நிற்றல்; இலக்குவன் மகளிரைப் பார்க்க நாணுதல், தாரை இலக்குவனை அழைத்துப் பேசுதல்; இலக்குவன் சினம்தணிதல்; அனுமன் வருதல்; இலக்குவன் அனுமனை நோக்கி, ''நீயும் எல்லாம் மறந்தனையே!'' என ஆற்றாது கேட்டல்; அனுமன் மறுமொழி கேட்டு இலக்குவன் சீற்றம் அற்று சுக்கிரீவனைக் காணச் செல்லுதல்; அங்கதன் வந்து வணங்கவும் எல்லோரும் சுக்கிரீவன் மாளிகையை அடைதல்; சுக்கிரீவன் தன் நிலைமை மாறி, இலக்குவனை எதிர்கொண்டழைத்தல்; இருவரும் தழுவிக் கொள்ளுதல்; இலக்குவன் அரியணையில் அமராது, கல் தரையில் அமர்தல், விருந்துண்ணாது மறுத்தல், அது கண்டு சுக்கிரீவன் முதலிய எல்லோரும் வருந்துதல்; சுக்கிரீவன், அங்கு வந்து சேரவேண்டிய படைகளை மறுநாள் அழைத்துக் கொண்டு வரும்படி அனுமனுக்குக் கட்டளையிட்டுவிட்டு, தான் இலக்குவனுடனும் அங்கதனுடனும் இராமன் இருப்பிடம் செல்லுதல்; இராமன் திருவடிகளை சுக்கிரீவன் பணிதல்; இருவரும் தழுவிக் கொள்ளுதல்; இராமன் கிட்கிந்தை மக்கள் நலன் பற்றி வினவுதல்; சுக்கிரீவன் தன் பிழையைப் பொறுத்தருள வேண்டுதல்; இராமன்சில உபசாரவார்த்தைகள்கூறி, ''அனுமன்எங்கே?''

என வினவுதல்; ''அவன் பெரும்சேனையுடன் நாளை வருவான்'' என சுக்கிரீவன் பதில் கூறுதல்; சுக்கிரீவனுக்கும் அங்கதனுக்கும் இப்போது விடை கொடுத்து, ''நாளை படையுடன் வருக'' என இராமன் அனுப்பிவைத்தல்; இராமன் இலக்குவனுடன் தங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. கார்காலம் கடந்தும் சுக்கிரீவன் வராமையால், இராமனும், இலக்குவனும் ஆலோசித்தல்

''அன்னகாலம் அகலும் அளவினில்,
முன்னம் வீரன், இளவலை, ''மொய்ம்பினோய்!
சொன்ன எல்லையின் ஊங்கினும் தூங்கினன்;
மன்னன் வந்திலன்; என் செய்தவாறு அரோ?'' (4375)

(முன்னம்-சிங்கம்; மொய்ம்பு-வலிமை; ஊங்கு-மேலும்; தூங்குதல்-இருத்தல்/ தாமதித்தலுமாம்)

அத்தகைய கார்காலம் முடிந்த அளவில், மூத்தவனும், வீரனும், சிங்கம் போன்றவனுமான இராமன், தன்தம்பி இலக்குவனை நோக்கி, ''வலிமையானவனே! நாம் கூறிய கார்கால எல்லையாகிய நான்கு மாதங்கள் கழிந்தும் வாராது, அதற்கு மேலும் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறானே இந்த மன்னனான சுக்கிரீவன்? இவன் என்ன செய்கிறான்?'' என்று கேட்டான்.

தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றாததாலும், காலம் தாழ்த்திய தாலும், செய்நன்றி மறந்ததாலும், சுக்கிரீவன் என்ன செய்து கொண்டிருக் கிறான் என்றான் இராமன் என்பதாம்.

2. ''பெறல் அரும் திருப்பெற்று உதவிப் பெருந்
திறன் நினைந்திலன்; சீர்மையின் தீர்ந்தனன்;
அறம் மறந்தனன், அன்புகிடக்க; நம்
மறன் அறிந்திலன்; வாழ்வின் மயங்கினான். (4376)

(திரு-அரச்செல்வம்; திறன்-நன்றி/தகுதி; சீர்மை-ஒழுக்கம்/ மேன்மை; அறம்-செய்ந்நன்றி; மறன்-மறம்/வீரம்; மயங்குதல்-அமிழ்ந்து கிடத்தல்; தீர்தல்-விட்டு நீங்குதல்.)

''யாவராலும் எளிதில் பெறுதற்கரிய அரசச் செல்வத்தையும், இழந்த மனைவியையும் நம் உதவியால் பெற்ற பெரிய தகுதியை நினைவிற் கொள்ளாது மறந்து விட்டான் போலும்; அவன் தனது நல்லொழுக்கமான மேன்மையிலிருந்து நீங்கிவிட்டான்; அவன் நன்றியறிதல் என்ற தருமத்தை முற்றும் மறந்து போயினான்; அவன் நம்முன் செய்து கொண்ட நட்பு ஒரு புறம் இருக்கட்டும்; நமது வீரத்தையும், போராற்றலையும் அறிய வில்லையே? புதிதாகத் திரும்பக் கிடைத்த மனைவியுடனும், அரசுடனும் இனிதாகச் சுகபோகத்தில் திளைக்கிறான் போலும்!'' பாடல் தொடர்கிறது.

3. இராமன் இலக்குவனைக் கிட்கிந்தைக்குச் சென்றுவரப் பணித்தல்.

''நன்றிகொன்று, அரு நட்போடு நார் அறுத்து
ஒன்றும் மெய்மை சிதைத்து, உரை பொய்த்துளார்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்;
சென்று மற்றுஅவன் சிந்தையைத் தேர்குவாய்.'' (4377)

(கொல்லுதல்-சிதைத்தல்; நார்-அன்பு/பிணிப்பு/பாசம்/கயிறு; ஒன்றுதல்-பொருந்துதல்; மெய்மை-வாய்மை; சிந்தை-மனக்கருத்து; தேர்தல்-ஆராய்ந்து தெரிந்துகொள்ளுதல்)

''நாம் செய்த உதவியை மறந்தான், நாம் நீட்டிய பெறுதற்கரிய நட்புக்கரத்தையும் அறுத்துவிட்டு எல்லோருக்கும் பொருந்துவதான வாய்மையையும் குலைத்துவிட்டான். தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றாதும் தவிர்த்துவிட்டான். எனவே இவ்வளவு குற்றங்களைச் செய்தவனைக் கொன்று தீர்த்தல் கூடக் குற்றத்தின் பாற்படாது. அதைச் செய்வதன் முன், நீ சென்று அவனது உள்ளக் கருத்தினை அறிந்து வருவாயாக!'' என்றான் இராமன்.

''நன்றி மறத்தல்; நட்பைத் துண்டித்தல், வாய்மையைக் குலைத்தல், பொய் பேசுதல் ஆகியவை மன்னிக்கமுடியாத தண்டனைக்குரிய குற்றங்கள். எனவே இவை அனைத்தையும் செய்துள்ள சுக்கிரீவனைக் கொல்லுதல் என்பது கூடக் குற்றமற்ற செயலே. இருப்பினும் அவன் உள்ளபடியே தன் உள்ளம் அறிந்தே இத்தகைய தவறுகளைச் செய்தானா அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இவற்றைச் செய்ய நேர்ந்ததா என்பதை, நீ சென்று அறிந்து வா'' என்றான் இராமன் என்பதாம்.

''நார்'' என்பது கயிறு என்று பொதுப்பொருள் கொண்டு, பாசம், அன்பு, பிணிப்பு என்ற சிறப்புப் பொருளைத் தரும் என்க. ''உரைபொய்த்தல்'' சொன்ன சொற்படி நடவாமையைக் குறிக்கும். குடிமக்களிடம் குற்றம் கண்ட இடத்தில், அதனைத் தண்டித்தல் அரசர்க்குரிய கடமைகளுள் ஒன்று. ''குடிபுறம் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் வடுவன்று; வேந்தன் தொழில்'' என்பது குறள் *549*. எனவே இக்குற்றங்களுக்காகச் சுக்கிரீ வனுக்குக் கொலைத் தண்டனை தருதல் கூடக் குற்றத்தின்பாற்படாது என்பது இராமனின் கருத்து.

4. ''வெம்பு கண்டகர் விண்புக வேர் அறுத்து
இம்பர் நல்லறம் செய்ய எடுத்த விற்
கொம்பும் உண்டு; அரும்கூற்றமும் உண்டு; உங்கள்
அம்பும் உண்டு; என்று, சொல்லு, நம் ஆணையே.'' (4378)

(வெம்புதல்-வெகுளுதல்; கண்டகம்-முள்; கண்டகர்-முள்போன்று கொடியவர்கள்; இம்பர்-இவ்வுலகு; கொம்பு-தடி/தண்டம்; ஆணை-கட்டளை; செய்தல்-நிலை நிறுத்தல்; எடுத்த-கைக்கொண்ட)

''கொடிய முள் போன்றவர்களாகிய அரக்கர்கள், வீரசுவர்க்கம் அடையும்படி, அவர்கள் குலத்தையே வேரோடு அறுத்தெறிந்து, இவ்வுலகத்தில் நல்ல அறத்தை நிலை நிறுத்தும் பொருட்டு, நான் கைக் கொண்டுள்ள இந்த வில்லின் தண்டும் என்னிடம் தான் இன்னும் உள்ளது; அதைத் தவிர யாராலும் தடுத்தற்கரிய இயமனும் இருக்கின்றான். வாலியைக் கொன்ற அம்பும், உங்களைக் கொல்ல இருக்கும் அதே அம்பும் என்கையில்தான் இன்னும் உள்ளது என்பதை நமது கட்டளையாக அவர்களிடத்து எடுத்துச் சொல்லுவாயாக!'' என்றான் இராமன்.

போரில் புறமுதுகிடாது உயிர் துறந்தவர் வீரசுவர்க்கம் அடைவர் என்பது வழக்கு. எனவே ''வெம்பு கண்டகர் விண்புக'' என்றார். இராம அவதாரத்தின் நோக்கமே அரக்கர்களை வேரோடு அறுத்துத் தர்மத்தை நிலைநிறுத்துவதுதான். இங்கே அது குறிக்கப்படுகிறது. ''விற்கொம்பு'' என்பது முன் கரன் தூடணன், விராதன் ஆகிய அரக்கரைக் கொல்லுவதற்கு, தான் மேற்கொண்ட ஒரே அம்பாகிய கோதண்டத்தைக் குறிக்கும் என்க. ''உங்கள் அம்பு'' என்பது, முன்பு உங்கள் வானரத் தலைவராகிய வாலியையும், இப்போது வானரர்களாகிய உங்களையும் கொல்லுவதற்கு நான் கைக்கொண்டிருக்கின்ற ''இராம பாணம்'' என்னும் அம்பும் என்ற விரிந்த பொருள் தரும். இவற்றோடன்றி கூற்றுவனும் தயார் நிலையில் உள்ளான் என்பதையும் இலக்குவன் சென்று சுக்கிரீவனிடம் கூறி எச்சரிக்க வேண்டுமென்பது இராமன் கருத்து.

5. ''நஞ்சம் அன்னவரை நலிந்தால், அது
வஞ்சம் அன்று; மனுவழக்கு; ஆதலால்
அஞ்சில், ஐம்பதில் ஒன்று அறியாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ, நிறுத்துவாய் (4379)

(நலிதல்-தண்டித்தல்/கொல்லுதலுமாம்; வஞ்சம்-கொடுஞ்செயல்; நின்று நிலவுதல்-நிலைபெற்றிருத்தல்/நன்குபதிதல்; நிறுத்தல்- அறிவுறுத்தல்).

நஞ்சு போன்ற கொடியவர்களைத் தண்டித்தாலும், கொன்றாலும், அது ஒரு பெரிய குற்றம் என்றோ கொடுஞ்செயல் என்றோ கருதப்பட மாட்டாது; காரணம் அது மனுதர்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் நீதி நெறியேயாகும்; எனவே தனது ஐந்து வயதில் ஒன்றும் அறியாதது போலவே, இப்போது ஐம்பது வயதுத் தொடக்கத்திலும் ஒன்றும் அறியாமல் நடந்து கொள்பவனான சுக்கிரீவனின் மனத்தில் நன்கு பதியுமாறும், அவை என்றும் நிலைத்து நிற்குமாறும், கூறி வருவாயாக'' என்றான் இராமன்.

''மனு வழக்கு'' என்பது மனு சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் இராஜதருமத்தில் ஒரு பகுதி என்பது பொருள். தவறு செய்பவர்களை மன்னன் தண்டித்தால், அது பயிர்களுக்கு கேடு விளைவிக்கும் களைகளைப் பிடுங்கி எறிதல் போன்றதாகும். அது தவறாகாது என்று தமிழர்

வேதமாகிய குறளும் கூறுகிறது. ''கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல், பைங்கூழ் களைகட்டதனோடு நேர்'' குறள் 550. அத்தகைய கொலையில் கொடியார் யார் என்பதையும் அறிந்துகொள்வோம்''. தீக் கொளுவுவார்; நஞ்சிடுவார்; கருவியில் கொல்வார்; கள்வர்; ஆற்றலைப் பார்; சூறைகொள்வார், பிறன்இல் விழைவார் என்று கூறப்படுவர் என்க. அஞ்சில், ஐம்பதில் என்ற சொற்றொடர்க்குப் பல பொருள்கள் கூறுவர். இங்கே ஐந்து வயதில் இளமைப் பருவத்தில் சுக்கிரீவன் எவ்வாறு இருந்தானோ, அதே போலத்தான் இந்த ஐம்பது வயதிலும் முதுமைப் பருவத்திலும் நடந்து கொள்கிறான். உடல் தான் வளர்ந்து இருக்கிறதே தவிர, மூளையோ, மனமோ போதிய வளர்ச்சியடையவில்லை என்பது கருத்து. ''அஞ்சில் அறியாதார் ஐம்பதிலும் தாம் அறியார்'' ''ஆறில் அறியார் நூறிலும் அறியார்'' என்பதும் மணவாளர் மாமுனிவர் வாக்கு; தக்கது இது தகாதது இது என்று பிரித்தறியும் உணர்வில்லாதிருக்கிறான் என்பதும் கருத்து. ''ஐந்தில் விளையாதது ஐம்பதிலும் வளையாது'' என்பது உலக வழக்கு. ''தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்'' என்பதும் மற்றொரு பழமொழி.

6. ''ஊரும், ஆளும், அரசும், நும் சுற்றமும்
நீரும் ஆளுதிரே எனின் நேர்ந்த நாள்
வாரும், வாரலிராம் எனின், வானரப்
பேரும் மாளும் எனும் பொருள் பேசுவாய்'' (4380)

(ஆள்-ஆளப்படுபவர்/குடிமக்கள்; அரசு-அரசபதவி; நேர்ந்த-நியமிக்கப்பட்ட/உடன்பட்ட; மாள்தல்-இறந்தொழிதல்; பொருள்-உண்மை/கருத்து; பேசுதல்-எடுத்துரைத்தல்)

''உங்கள் தலைநகராகிய கிட்கிந்தையும், உங்கள் குடிமக்களும், உனது அரசுச் செல்வமும், அரச பதவியும் உன்னுடைய சுற்றத்தார், உறவினர்களும், நீயே தொடர்ந்து ஆளப்படவேண்டுமென்றால், முன்பே நியமிக்கப்பட்டு, உன்னால் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த நாளிலேயே புறப்பட்டு வந்துவிடு. இல்லையேல் அவ்வாறு நீ வராவிட்டால் வானரம் என்று பேர் சொல்வதற்குக் கூட ஒரு குரங்கும் இல்லாதபடி, உங்கள் குலம் முழுவதையும் அடியோடு அழித்துவிடுவோம் என்னும் உண்மைக் கருத்தை அவனிடம் எடுத்து சொல்வாயாக'' என்று இராமன் இலக்கு வனிடம் மேலும் கூறினான்.

நேர்ந்த நாள் என்பது சீதையைத் தேடுவதற்காகப் படை கொண்டு வருவதாக சுக்கிரீவன் ஒப்புக்கொண்ட கார்கால முடிவாகிய இந்த நாளைக் குறிக்கும்.

7. ''இன்னம் நாடுதும் இங்கு இவர்க்கும் வலி
துன்னினாரை'', என துணிந்தார் எனின்,
உன்னை வெல்ல, உலகு ஒரு மூன்றினும்,
நின்அலால் பிறர்இன்மை நிகழ்த்துவாய்.'' (4381)

(துன்னுதல்-நிறைந்திருத்தல்; இன்னம்-மேலும்; துணிதல்-நிச்சயித்தல்; நிகழ்த்துதல்-அறிவுறுத்துதல்)

''இராம இலக்குவராகிய நம்மைவிட இன்னும் பேராற்றல் மிக்கவரின் உதவியை நாடிச் செல்வோம் என்று சுக்கிரீவன் முதலானோர் நிச்சயம் செய்திருந்தார்களானால், உன்னை வெல்லுவதற்கு இந்த மூவுலகங்களிலும் உன்னைத் தவிர வேறொருவரும் இல்லை என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளும்படி நன்றாக எடுத்துரைப்பாயாக'' என்றான் இராமன்.

''குரங்குகளின் குணம் இயல்பிலேயே நிலையற்றது. அடிக்கடி மாறும் தன்மை உடையது என்பதை இராமன் நன்கு அறிந்திருந்ததால், ஒருவேளை நம்மைவிட அதிக வலிமை படைத்தவர்களின் கூட்டுறவை, சுக்கிரீவன் முதலானோர் பெற விரும்பி முயற்சி செய்யத் துணிந்தார்கள் என்றால் உன்னை வெல்வதற்கு உன்னைத் தவிர வேறொருவர் இம் மூவுலகங்களிலும் இல்லை என்பதை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைப்பாயாக'' என்கின்றான் இராமன். இராமன் இலக்குவனைப் பாரட்டிப் பேசும் இடங்களில் இதுவும் ஒன்று. இவ்வாறு இலக்குவனின் பேராற்றலைப் பலரும் பலபடப் புகழ்வதை காப்பியத்தில் பரக்கக் காணலாம்.

8. ''நீதி ஆதி நிகழ்த்தினை, நின்று அது
வேதியாத பொழுது, வெகுண்டு, அவண்
சாதியாது அவர் சொல் தரத்தக்கனை;
போதி ஆதி'' என்றான், புகழ்ப் பூணினான். (4382)

(நிகழ்த்துதல்-எடுத்துரைத்தல்; நின்று-நிலைபெற்று; வேதித்தல்-பேதித்தல்/மாறுபடுதல்; சாதித்தல்-கொல்லுதல்/அழித்தல்; சொல்-மறுமொழி; போதி-போவாயாக; பூண்-அணிகலன்)

புகழையே தனக்கு அணிகலனாகக் கொண்டவனான இராமபிரான், இலக்குவனை நோக்கி, ''நீ அங்கே சென்று நீதிநெறியின் வழிப்பட்ட கருத்துக்களைக் கூறுவாயாக; அதைக் கேட்டு அவர்கள் அதன்படி நடக்காது, அதற்குமாறாக நடந்தனர் என்றால், உன்னுடைய இயல்பான கோபத்தால் அவர்களை அங்கேயே கோபித்து அழித்துவிடாமல், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை எனக்கு வந்து கூற வேண்டிய கடமை உனக்கு இருக்கிறது; எனவே இப்பொழுது சென்று வருவாயாக'' என்றான் இராமன்.

''நீதி ஆதி'' என்பது நீதி, நியாயம், தருமம், போன்ற அறவழிகளைக் குறிக்கும். வேதித்தல் என்பது பேதித்தல் என்ற வடசொல்லின் தமிழாக்கம், மாறுபடுதல் என்ற பொருளைத் தரும். இலக்குவனுடைய முன்கோபம் இராமன் நன்கு அறிந்ததே. எனவே ''நின்று நிதானித்து அறிவுரைகளைக் கூறு; அவர்கள் அதற்கு ஒவ்வாது, மாறுபாடு கொள்வார்களேயானால், நீ சினந்து அவர்களுக்கு ஏதும் ஊறு செய்துவிடாதே;

அவர்களுடைய மறுமொழியை என்னிடம் வந்து தெரிவி. பிறகு என்ன செய்யலாம் என்பது பற்றிக் கருதலாம் என நன்கு கூறியனுப்புகிறான் என்பதாம். இராமனை ''மித பாஷி'' என்று கூறுகிறார். வால்மீகி; இராமன் நீ சென்று வருக என்று கூறும் பொழுதே அவர்களைக் கொன்று வருகிறேன் என்று இலக்குவன் கூறியதாகவும் அதைத் தடுத்து இராமன் இவ்வாறு கூறியதாகவும் வான்மீகம் கூறும்.

9. இலக்குவன் புறப்படுதல்

''ஆணை சூடி, அடிதொழுது, ஆண்டு இறை
பாணியாது, படர்வெரிந் பாழ்படாத்
தூணிதூக்கி, தொடுசிலைதொட்டு, அரும்
சேணின் நீங்கினன் சிந்தையுள் நீங்கலான்.'' (4383)

(சூடுதல்-சிரம்மேற்கொள்ளுதல்; இறை-சிறிதும்; பாணித்தல்-தாமதித்தல்; வெரிந்-முதுகு; பாழ்படுதல்-வெறுமை அடைதல்; தூணி-அம்புப்புட்டில்; சிலை-வில்; சேண்-நீண்டவழி)

இராமனது மனத்தினின்றும் சிறிதும் பிரியாத இலக்குவன், அவ்வாறு இராமபிரான் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு, அவனது திருவடிகளை வணங்கி, அவ்விடத்தில் சிறிதும் தாமதிக்காமல், தனது அகன்ற முதுகில், என்றும் குறைவுபடாத அம்பறாப்புட்டிலைத் தாங்கிக் கொண்டு, கடத்தற்கரிய தொலைவில் உள்ள கிட்கிந்தையை நோக்கி, உடலால் பிரிந்து சென்றான்.

இலக்குவனின் உடல்தான் இராமனைவிட்டுப் பிரிந்ததே அன்றி, இராமனுடைய உள்ளம் இலக்குவனைத் தொடர்ந்து சென்றது என்று கூறுதல் இன்னும் சிறப்பாய் அமையும்.

10. ''மாறுநின்ற மரனும், மலைகளும்,
நீறு சென்று நெடுநெறி நீங்கிட,
வேறு சென்றனன்; மேன்மையின் ஓங்கிடும்
ஆறு சென்றவன், ஆணையின் ஏகுவான்.'' (4384)

(மேன்மை-உயர்ச்சி; ஓங்குதல்-நீண்டு செல்லுதல்; மாறு-குறுக்கே/எதிராக; நீறு-பொடி; நெடுநெறி-நெடுந்தொலைவு)

இராமபிரான் கட்டளையால் செல்லும் இலக்குவன், முன்பு தம்மைச் சுக்கிரீவன் அழைத்துச் சென்ற, உயர்ந்தும், நீண்டும் வளைந்து சென்ற வழியில் செல்லாது, இப்போது தான் செல்லும் வழியில் குறுக்கே தனியாக எதிர்ப்பட்ட மரங்களையும், மலைகளையும் தனது வேகத்தால் பொடிப் பொடியாகும்படி செய்து, அவை அங்கிருந்து நெடுந்தொலைவு சென்று விழும்படி, வேறொரு புதிய பாதையை அமைத்துக் கொண்டு சென்றான்.

முன்பு இராம இலக்குவரின் பாதங்கள் நோகுமே என்று சுக்கிரீவனும் அனுமனும் அவர்களை உயர்ந்த, நெடிய வழியில் அழைத்துக் கொண்டு

சென்றார்கள். இப்போது இலக்குவன் விரைவாகவும், மிக்க விசை கொண்டும், சினத்துடனும் செல்கின்றான் ஆதலால் அந்த நெடிய வழியைத் தவிர்த்து, தானே ஒரு குறுக்கு வழி அமைத்து அதில் சென்றான் என்பது கருத்து. அவன் சென்ற வேகத்தில் எதிர்ப்பட்ட மரங்களும் மலைகளும் பொடிப்பொடியாகி வெகுதூரத்தில் சென்று விழுந்தன என்பதாம். மரங்களும் மலைகளுமே இவ்வாறானால் வானரங்கள் என்ன ஆகும் என்பது எச்சப் பொருள்.

11. இலக்குவன் சென்ற வேகம்.

விண் உறத்தொடர் மேருவின் சீர்வரை
மண் உறப்புக்கு அழுந்தின, மாதிரம்;
கண் உறத்தெரிவுற்றது, கட்செவி;
ஒண் நிறக் கழல் சேவடி ஊன்றலால். (4385)

(ஒண்-ஒளி; சீர்-எல்லை; மாதிரம்-மலைகள்; கட்செவி-பாம்பு/ ஆதிசேடன்; தெரிவுற்றது-தோன்றியது/புலனானது.)

ஒளிபொருந்திய நிறத்தையுடைய வீரக்கழலணிந்த, சிவந்த திருவடி களையுடைய இலக்குவன், தன்பாதங்களை ஊன்றி அழுத்தியதால் வானளாவ உயர்ந்திருந்த மலைகள் எல்லாம் மேரு மலையின் சிகரத்தின் எல்லைவரை மண்ணுக்குள் புகுந்து அழுந்தின. எனவே பாதாளத்தில், இவ்வுலகைத்தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேடன் என்னும் பாம்பின் உருவம் நம் கண்களுக்கு நன்றாகத் தெரியலாயிற்று.

இலக்குவன் சென்ற வேகத்தால் மலைகள் எல்லாம் மண்ணுக்குள் புகுந்தன. கட் புலனுக்குத் தெரியாத ஆதிசேடன் கூடக் கண்களுக்குத் தெரியலானான் என்பது கருத்து. இங்கே ''கட்செவி'' என்ற சொல் பாம்பைப் பொதுவாகக் குறித்து, ஆதிசேடனைச் சிறப்பாகக் குறித்தது என்க. பாம்புக்குக் கண்தான் உண்டு; அதற்கு செவி கிடையாது. கண்ணே செவியாகவும் பயன்படுவதால் கட்செவி என்பது பாம்புக்குக் காரணப் பெயர் என்பதறிக.

12. வெம்பு கானிடைப் போகின்ற வேகத்தால்,
உம்பர் தோயும் மாமரத்து ஊடுசெல்
அம்பு போன்றனன், அன்று, அடல் வாலிதன்
தம்பி மேல்செலும் மானவன் தம்பியே (4386)

(அடல்-வலிமை; மானவன்-மனுகுலத்தவன்/பெருமை வாய்ந்தவன் /இராமன்; வெம்பு-வெப்பு/வெப்பம்; உம்பர்-வானுலகம்; அன்று- அப்பொழுது).

அப்பொழுது வலிமையுடைய வாலியின் தம்பியான சுக்கிரீவனைக் காணச் செல்லும், மனுகுலத்தோன்றலும், பெருமைவாய்ந்தவனுமாகிய இராமனின் தம்பியான இலக்குவன், வெப்பம் மிகுந்த காட்டினிடையே

போகின்ற கடுமையான வேகம் எப்படி இருந்தது என்றால் மேலுலகில் படிந்திருக்கும் அளவு உயர்ந்த மாமரங்களின் இடையே ஊடுருவிச் சென்ற இராமபாணத்தின் வேகத்தை ஒத்திருந்தது.

இலக்குவன் சென்ற வேகத்திற்கு, சுக்கிரீவன் வேண்டுகோளால் இராமன் எய்த இராமபாணம் ஏழு மாமரங்களையும் ஒருசேரத் துளைத்துச் சென்ற வேகம் உவமை. இலக்குவன் செல்லும் வேகத்தில், காட்டிலுள்ள மரங்களனைத்தும் முறிந்து சாய்ந்தன என்பது கருத்து.

13. மாடுவென்றி ஓர் மாதிர யானையின்
சேடு சென்று கெடில், ஒருதிக்கின்மா
நாடுகின்றதும் நண்ணிய கால்பிடித்து
ஓடுகின்றதும், ஒத்துளன் ஆயினான். (4387)

(மாடு-பக்கம்; மாதிரம்-திசை; சேடு-இளங்கன்று/இளமை; கெடுதல்-காணாமல்போதல்; கால்-அடிச்சுவடு; நண்ணி-பற்றிக்கொண்டு; மா-யானை)

பக்கத்திலுள்ள ஒரு வெற்றி பொருந்திய திசையானையின் இளங்கன்று வழிதவறிக் காணாமல் போய்விட்டால், மற்றொரு திசையானை அதைத் தேடிச் சென்று, அக்கன்று சென்ற அடிச்சுவட்டைப் பின்பற்றியே ஓடுவது போலவும் தோன்றினான் இலக்குவன்.

வழிதவறிச் சென்ற இளங்கன்று சுக்கிரீவன்; அதைப்பின் பற்றித் தாய் யானையிடம் கொண்டு வந்து சேர்க்கச் செல்லும் மற்றொரு திக்குயானை இலக்குவன் என்பதாம்.

14. இலக்குவன் கிட்கிந்தையை அடைதல்.

உருக்கொள் ஒண்கிரி ஒன்றின் நின்று ஒன்றினைப்
பொருக்க எய்தினன், பொன்ஒளிர் மேனியன்;
அருக்கன், மா உதயத்தின் நின்று அத்தமாம்
பருப்பதத்தினை எய்திய பண்புபோல். (4388)

(அருக்கன்-சூரியன்; மா-சிறந்த; பருப்பதம்-மலை; ஒண்-ஒளிமிக்க; பொருக்க-விரைவாக; அத்தம்-அஸ்தமனம்/மறைதல்; உதயம்- தோன்று தல்)

சூரியன் பெருமைபொருந்திய உதயகிரியிலிருந்து உதித்து அஸ்தமன கிரிக்குச் சென்று மறையும் தன்மையைப்போல, பொன்போன்று ஒளிரும் சுவர்ண வண்ணனாகிய இலக்குவன், நல் உருவமும் ஒளியும் பொருந்திய பிரஸ்ரவனம் என்னும் மலையிலிருந்து, கிட்கிந்தை என்னும் மற்றொரு மலைக்கு வெகு விரைவாகப் போய்ச் சேர்ந்தான்.

உதயகிரியிலிருந்து அஸ்தமனகிரிக்குச் செல்லும் ஒளி வாய்ந்த சூரியன், பிரஸ்ரவன மலையிலிருந்து கிட்கிந்தை மலையைச் சென்று சேரும்

சுவர்ண வண்ணன் இலக்குவனுக்கு உவமை. சூரியன் வலம் வரும்போது உதயகிரியில் தோன்றி அஸ்தமனகிரியில் மறைவதாகக் கூறுவது ஒரு புராணக் குறிப்பு. சூரியன் தங்கு தடையின்றிச் செல்வதுபோல இலக்குவனும் எந்த இடைஞ்சலும் இன்றி விரைவாகப் போய்ச்சேர்ந்தான் என்பது கருத்து.

15. தன்துணைத் தமையன் தனிவாளியின்
சென்று, சேண் உயர் கிட்கிந்தை சேர்ந்தவன்,
குன்றின் நின்று ஒரு குன்றினில் குப்புறும்
பொன் துளங்கு உளைச் சீயமும் போன்றனன். (4389)

(தனி-ஒப்பற்ற; வாளி-அம்பு/இராமபாணம்; குப்புறுதல்-குதித்தல்/ தாவுதல்; சேண்-வான்/தொலைதூரம்; துளங்குதல்-ஒளிர்தல்; உளை-பிடரிமயிர்; சீயம்-சிங்கம்)

தனக்கு ஒப்பற்ற துணைவனும் தமையனுமான இராமனது ஒப்பற்ற அம்பாகிற இராமபாணத்தைப் போன்று விரைவாகவும், தங்குதடையின்றியும், இலக்குத்தப்பாதும் சென்று வானளாவ உயர்ந்த கிட்கிந்தை மலையை அடைந்தவனாகிய இலக்குவன், ஒரு மலையில் இருந்து மற்றொரு மலைக்குத் தாவிச் செல்லும் பொன்நிறம் போன்று ஒளிரும் பிடரி மயிரை உடைய ஆண் சிங்கத்தையும் ஒத்திருந்தான்.

முன்பாடலில் இலக்குவனைச் சூரியனுக்கு உவமித்த கவிஞர், இப்பாடலில் இலக்குவனை இராமபாணத்திற்கும், ஆண்சிங்கத்திற்கும் உவமித்ததை உணர்க. இராமபாணத்தின் பெருமை காப்பியத்தில் பல இடங்களிலும் விவரிக்கப்பட்டதை நினைவு கூர்க. ஆண்சிங்கத்திற்கு மட்டும்தான் பிடரி மயிர் உண்டு என்பதை அறிக. இலக்குவன் விரைவுக்கு இராமபாணமும், முன்பின் பார்த்துச் செல்லும் தன்மைக்கும், வீரம் பெருமித நடை, கம்பீரமான தோற்றம் ஆகியவற்றிற்கு ஆண்சிங்கமும் உவமை என்க.

16. குரங்குகள் அங்கதனுக்கு இலக்குவன் வருகையைத் தெரிவித்தல்

கண்ட வானரம் காலனைக் கண்ட போல்,
மண்டி ஓடின; வாலி மகற்கு, ''அமர்
கொண்ட சீற்றத்து, இளையோன் குறுகினான்.
சண்ட வேகத்தினால்'' என்று சாற்றலும். (4390)

(காலன்-இயமன்; மண்டி-விரைந்து; அமர்-போர்; சீற்றம்- பெருங் கோபம்; சண்ட-மிக்க/கடுமையான; சாற்றல்-கூறுதல்/முறையிடுதல்; குறுகுதல்-நெருங்குதல்) (குளகப்பாடல்)

அவ்வாறு சீற்றத்துடன் வரும் இலக்குவனைக் கண்ட குரங்குகள், தம் உயிரைக் கவர வருகின்ற இயமனையே நேரில் கண்டதுபோல,

ஒன்றின்மீது ஒன்று நெருக்கியடித்துக் கொண்டு அங்கதன் இருப்பிடம் அடைந்து, வாலியின் மகனான அங்கதனிடம் ''போர் மேற்கொண்டது போல் சீற்றத்துடன், கடுமையான வேகத்துடன், இலக்குவன் நம் நகருக்குள் வந்து கொண்டிருக்கிறான்'' என்று முறையிடலும்-பாடல் தொடர்கிறது.

17. அங்கதன், குறிப்புணர்ந்து சுக்கிரீவனை அடைதல்

அன்ன தோன்றலும், ஆண்தொழிலான் வரவு
இன்னது என்று அறிவான், மருங்கு எய்திலான்;
மன்னன் மைந்தன் மனக்கருத்து உட்கொளா,
பொன்னின் வார்கழல் தாதைஇல் போயினான். (4391)

(தோன்றல்-பெருமையில் சிறந்தவன்; ஆண்தொழில்-ஆண்மைப் பண்பு/வீரம்; மருங்கு-அருகில்; உட்கொளா-உட்கொண்டு; இல்- அரண் மனை; வரவு-வந்த நோக்கம்)

அத்தகையை பெருமையை உடையவனான அங்கதன், ஆண்மக்கள் பண்பாகிய வீரம் நிறைந்தவனான இலக்குவனின் வருகையின் நோக்கம் இத்தன்மையானது தான் என்பதை அவன் முகக்குறிப்பாலும், தன் உய்த்துணர்ச்சியாலும் நன்கு அறிந்தவன் ஆதலால் அவன் அருகிலே செல்லாது தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தனான இலக்குவனின் மனக் கருத்தைத் தான் உய்த்துணர்ந்து கொண்டு, பொன்னலாகிய வீரக்கழ லணிந்த தன் சிறிய தந்தையாகிய சுக்கிரீவனின் அரண்மனைக்குச் செல்ல லாயினான்.

ஆண்தொழில் என்பது பொதுவாக வீரத்தைக் குறித்து, இங்கே இலக்கு வனின் போராற்றலைச் சிறப்பாக குறித்தது என்க. அங்கதனின் குறிப்பில் குறிப்புநாடும் தன்மையும், உய்த்துணரும் நுண்ணறிவும் இங்கு பேசப் பட்டன என்க. இலக்குவன் வருகையின் நோக்கத்தை சுக்கிரீவனுக்கு முன்னதாகவே தெரிவிக்கும் பொருட்டு, சுக்கிரீவன் மாளிகைக்குச் சென்றான் என்பதாம்.

18. சுக்கிரீவன் இருந்த நிலை [5பாடல்கள்]

நளன் இயற்றிய நாயகக் கோயிலுள்,
தள, மலர்த்தகைப் பள்ளியில், தாழ்குழல்
இள முலைச்சியர் ஏந்து அடி தைவர,
விளை துயிற்கு விருந்து விரும்புவான். (4392)

(நாயகம்-தலைமை; கோயில்-அரண்மனை; தளம்-இதழ்; பள்ளி-படுக்கை; ஏந்து-சிறந்த; தைவரல்-மெல்லத்தடவுதல்; துயில்-தூக்கம்; தகை-அழகு)

நளன் என்னும் குரங்குச் சிற்பியால் தோற்றுவிக்கப்பட்ட, தலையாய தான அரண்மனையுள் அந்தப்பரத்தில், காம்புகளைக் களைந்து இதழ்கள் மட்டுமே உள்ள மலர்களால் ஆன அழகிய படுக்கையில், நீண்டு தொங்கு கின்ற கூந்தலையும், இளமையான கொங்கைகளையுமுடைய பெண் குரங்குகள், சுக்கிரீவனின் சிறந்த பாதங்களைத் தங்கள் மடிமீது வைத்துக் கொண்டு, மெல்லத் தடவிக் கொடுக்க, அந்தச் சுகம் விளைவிக்கும் தூக்கத்திற்குத் தான் விருந்தாவதை விரும்பியிருந்தான் சுக்கிரீவன்.

நளன் தேவதச்சனாகிய விசுவகர்மாவின் மகன். இவன் வானரச் சிற்பியாய் இருப்பவன். இவன்தான் பின்னர் சேதுபந்தனம் செய்து அணை கட்டியவன் என்பதையும் நினைவிற் கொள்க. சுக்கிரீவன் தலைமைச் செயலகமாகிய அரண்மனை இவனால் கட்டப்பட்டது என்பதாம். பாதங் களை வருடுவதால் இனிய தூக்கம் விளையும் என்பது எல்லோருக்கும் இயல்பே. குரங்குகள் விதிவிலக்கல்ல. ''தென்றலார் அடிவருடச் செழுங் கரும்பு கண்வளரும் திருவையாறே'' என்பது சம்பந்தர்தேவாரம்; ஆட்சி கைக்கு வந்ததும் அந்தப்புரத்தில் மகளிருடன்போகம்துய்த்தான்சுக்கிரீவன் என்பதை இந்த ஐந்து பாடல்களிலும் விவரிக்கிறான் கவிஞன்;

19. தெள்ளியோர் உதவு, அப்பெரும் செல்வமாம்
கள்ளினால், அதிகம் களித்தான்; கதிர்ப்
புள்ளிமால் நெடும் பொன்வரை புக்கது ஓர்
வெள்ளி மால்வரை என்ன விளங்குவான். (4393)

(உதவு-உதவிய/அளிக்கப்பெற்ற; கதிர்-ஒளிக்கற்றை)

தெளிந்த நுண்ணறிவுடையவர்களான இராம இலக்குவர் உதவியால் பெற்ற, அந்த அரசப் பெரும் செல்வம் என்னும் கள்ளைப் பருகியதால், அவர்கள் செய்த உதவியை மறந்து களிப்புற்றிருந்தான் சுக்கிரீவன்; ஒளிக்கற்றைகளைப் புள்ளியாக உடைய நீண்ட பெரிய பொன் நிறமான மேருமலையாகிய அரண்மனையில், ஒரு வெண்ணிறமான வெள்ளி மலையைப் போன்று சுக்கிரீவன் விளங்கினான்.

கள், அதைக் குடிப்போருக்கு மயக்கம் தருதல் போல, இந்த அரசச் செல்வமும், அரண்மனை வாழ்வும் சுக்கிரீவனுக்கு மயக்கத்தைத் தந்தன என்பதாம். பொன்வரை அரண்மனைக்கும், வெள்ளிமலை அதில் உறையும் சுக்கிரீவனுக்கும் உவமை.

20. சிந்துவார்தரு, நறை, தேக்கு, அகில்
சந்தம் மாமயில் சாயலார் தாழ் குழல்
கந்த மாமலர்க் காடுகள் தாவிய
மந்தமாருதம் வந்து உற, வைகுவான். (4394)

(தரு-மரம்; சந்தம்-சந்தனம்; மா-சிறந்த; சுந்தம்-நறுமணம்; மந்த மாருதம்-இளந்தென்றல்/மென்தென்றல்; உற-வீச; சிந்துவாரம்-கருநொச்சிமரம்; தாவிய-தீண்டிப்படிந்த)

கருநொச்சிமரம், நறையென்னும் வாசக்கொடி, தேக்கு, அகில், சந்தனம் ஆகிய மரங்கள்; சிறந்த மயில் போன்ற சாயலையுடைய பெண்களின் நீண்டு தாழ்ந்து தொங்கும் கூந்தல்; அவற்றில் அவர்கள் சூடியுள்ள நறுமணம் மிக்க சிறந்த மலர்க் கூட்டம் இவைகளிலெல்லாம் படிந்து, தழுவி, தீண்டிய இளமையான தென்றல் காற்று, அவனையும் வந்து தழுவ இனிமையாகத் தூங்கி இருந்தான் சுக்கிரீவன்.

மணம் பொருந்திய மரங்கள், கொடிகள், மலர்கள் முதலியவற்றைச் சொன்ன கவிஞன் ''மாமயில் சாயலார் தாழ் குழல்'' என்றதனால் உத்தம சாதிப் பெண்களின் கூந்தலுக்கும் மலர்களாலேயே மணம் உண்டு என்று கூறுவது காண்க. மந்தமாருதத்தை ''சிறுகால் செல்வன்'' என்கிறார் இளங் கோவடிகள்.

21. தித்தியா நின்ற செங்கிடை வாய்ச்சியர்
முத்தவாள் நகை முள்எயிறு ஊறுதேன்,
பித்தும், மாலும், பிறவும் பெருக்கலால்,
மத்தவாரணம் என்ன மயங்குவான். (4395)

(செங்கிடை-செந்நெட்டி; வாள்-ஒளி பொருந்திய; முள்-கூரிய; மால்-மனமயக்கம்; பெருக்கல்-மிகுதிப்படுத்துதல்; மத்த-மதம்கொண்ட; வாரணம்-யானை; தித்தியாநின்ற-தித்திக்கின்ற/இனிக்கின்ற; பித்து-பெரு வேட்கை (பைத்தியம்); ஊறு-ஊறுகின்ற/சுரக்கின்ற)

தித்திக்கின்ற சிவந்த செங்கிடையென்னும் நெட்டிப்பழம் போன்ற வாயையுடைய மகளிரின் முத்துப்போல் ஒளி பொருந்திய புன்முறுவல் பூக்கின்ற, கூரிய பற்களிலிருந்து சுரக்கின்ற தேன் போன்ற அதரபானம், சுக்கிரீவனுக்கு, பெருவேட்கையையும், மயக்கத்தையும் அதுபோன்ற மற்ற தாமச குணங்களாகிய காமம், மதம், மறதி, சோர்வு, துயில் ஆகிய வற்றையும் மிகுதிப் படுத்துவதனால் அவன் மதம் பிடித்த யானைபோல் அறிவிழந்து உறங்கிக் கிடந்தான்.

இங்கே கம்பன் ''எயிறு ஊறுதேன்'' என்பதை வள்ளுவன் ''பாலோடு தேன்கலந்தற்றே பனிமொழி வால் எயிறு ஊறிய நீர்'' என்று கூறுவதை நினைக.

22. மகுட குண்டலம் ஏய் முகமண்டலத்து
உகுநெடுஞ் சுடர்க்கற்றை உலாவலால்,
பகலவன் சுடர்பாய் பனிமால்வரை
தக மலர்ந்து, பொலிந்து தயங்குவான். (4396)

(ஏய்-பொருந்திய; உகுதல்-வீசுதல்; உலாவுதல்-பரவுதல்; பகலவன்-சூரியன்; பாய்தல்-பரவுதல்; தக-ஒப்ப; பொலிந்து-ஒளி மிகுந்து; தயங்குதல்-விளங்குதல்; குண்டலம்-காதணி)

தனது மணிமகுடத்திலிருந்தும், காதணிகளிலிருந்தும் முக மண்டலத்திலிருந்தும் வீசும் நெடிய ஒளிக்கற்றைகள் தன் உடல் முழுவதும் பரவியிருந்ததால், சூரியன் தன் ஒளிக்கிரணங்களைப் பாய்ச்சுதல்போல பனி அடர்ந்த பெரிய இமயமலையை ஒத்து, முகம் மலர்ந்து, உடல் பொலிவுற்று, மேனிமுழுவதும் ஒளிவிளங்கும்படி திகழ்ந்து விளங்கினான், சுக்கிரீவன்.

''பனி மால்வரை'' என்பது எப்போதும் பனிபடர்ந்திருக்கும் இமய மலையைக் குறித்தது. எனவே வெண்மை நிறமுடைய சுக்கிரீவனுக்கு அதுவே உவமையாயிற்று. மலர்தல், பொலிதல், தயங்குதல் என்பன அவனது மிகுதியான மகிழ்ச்சி நிலையினைக் குறிப்பதாகக் கொள்க.

23. அங்கதன், சுக்கிரீவன் துயில் நீக்க முயற்சித்தல்

கிடந்தனன்; கிடந்தானைக் கிடைத்து, இரு
தடங்கை கூப்பினன் தாரை முன்நாள் தந்த
மடங்கல்வீரன்; நல்மாற்றம் விளம்புவான்
தொடங்கினான், அவனைத் துயில் நீக்குவான். (4397)

(தந்த-பெற்றெடுத்த; மடங்கல்-ஆண்சிங்கம்; கிடைத்து-நெருங்கி; விளம்புவான்-கூறும்பொருட்டு; நீக்குதல்-போக்குதல்)

இவ்வாறு துயில் கொண்டு கிடந்தவனாகிய சுக்கிரீவனை, முன்னாளில் மின்னல் கொடி போன்ற தாரை பெற்றெடுத்த ஆண்சிங்கம் போன்ற வீரமுடைய அங்கதன், நெருங்கிச் சென்று தன் பெரிய இரு கைகளையும் குவித்து அஞ்சலி செய்து, அந்தச் சுக்கிரீவனைத் தூக்கத்திலிருந்தும் எழுப்பி, சில நல்ல செய்திகளைக் கூறத் தொடங்கினான்.

பிடரி மயிர் மடங்கப்பெற்றிருத்தலால், மடங்கல் என்பது ஆண் சிங்கத்திற்குக் காரணப் பெயர்.

24. அங்கதன் கூறுதல்

''எந்தை! கேள்; அவ்விராமற்கு இளையவன்
சிந்தையுள் நெடுஞ்சீற்றம், திருமுகம்
தந்துஅளிப்ப, தடுக்கஅரும் வேகத்தன்,
வந்தனன்; உன் மனக் கருத்து யாது?'' என்றான். (4398)

(சீற்றம்-பெருஞ்சினம்; தந்துஅளித்தல்-வெளிப்படுத்திக் காட்டுதல்)

அங்கதன் சுக்கிரீவனை நோக்கி ''தந்தையே! நான் கூறுவதைச் சற்று கேட்டு அருள்வீராக! அந்த இராமனின் தம்பியாகிய இலக்குவன், உள்ளத்தில் மிகுந்த பெருங்கோபத்தோடு, அதைத் தன் அழகிய முகமே வெளிப்படுத்திக் காட்டும்படி, யாராலும் விலக்கமுடியாத கடுமையான வேகத்துடன், இங்கு வந்திருக்கின்றான்; இதில் தங்கள் மனக்கருத்து என்ன?'' என்று கேட்டான்.

அங்கதன் குறிப்பில் குறிப்புணர்பவன் என்பதை மீண்டும் குறிக்கிறான் கவிஞன். இலக்குவன் முகத்தில் தோன்றிய மாற்றங்களைக் கொண்டே, அவன் உள்ளத்தில் கடும் கோபம் கொண்டிருக்கிறான் என்பதையும், அதற்குரிய காரணத்தையும் நன்கு உணர்ந்தவன் அங்கதன் என்றாலும், எந்த மாற்றமும் வேந்தனின் ஒப்புதலின்றி நடக்கக்கூடாது என்ற கொள்கையினால், சுக்கிரீவனின் உள்ளக் கருத்தை விழைகிறான் என்க. ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பது பழமொழி; ''அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்'' என்பதும் ''முகத்தின் முதுக்குறைந்ததுண்டோ, உவப்பினும் காயினும் தான் முந்துறும்'' என்பதும் குறள் 706, 707. ''உள்ளத்தின் உள்ளதை, உரையின் முந்துற, மெள்ளத் தன் முகங்களே விளம்பும்'' என்பது கம்பனின் சொல்லாட்சி.

25. இனைய மாற்றம் இசைத்தனன் என்பது ஓர்
நினைவு இலான், நெடுஞ்செல்வம் நெருக்கவும்,
நனை நறுந்துளி நஞ்சு மயக்கவும்,
தனை உணர்ந்திலன், மெல்லணைத் தங்கினான். (4399)

(மாற்றம்-வார்த்தை; இசைத்தல்-கூறுதல்; ஓர்-ஓர்தல்/உணர்தல்; துளி-திவலை; அணை-படுக்கை; நனை-கள்; நெருக்குதல்-அடர்தல்; மெல்-மெல்லிய/மிருதுவான)

தான் அடைந்த அரசச் செல்வம் என்னும் பெரும் செல்வம் தந்த பெருமையாலும், கள் என்னும் நறுமணமுள்ள திவலையாகிய நஞ்சு தந்த அறிவு மயக்கத்தாலும், அங்கதன் தன் முன் நின்று என்ன கூறினான் என்பதையே அறிந்து உணர்ந்து கொள்ள முடியாத நினைவற்ற, அறிவிழந்த நிலையில் இருந்த சுக்கிரீவன், மெல்லிய மிருதுவான படுக்கையில் இன்னும் படுத்தே இருந்தான்.

நஞ்சும் கள்ளும் அறிவை மயக்கி நிலைகுலையச் செய்யும். இரண்டும் வேறுபட்டதல்ல என்ற வள்ளுவன் ''எஞ்ஞான்றும் நஞ்சுண்பவர் கள்ளுண்பவர்'' என்கிறான். அரச பதவியும், கள்ளும், மோகமும் அவனை நிலைகுலையச் செய்தன என்பதும் அதனால் அவன் அங்கதன் கூறியவை இன்னவென்றே அறியவில்லை என்பதும் கருத்து. பொதுவாக நஞ்சு என்று கூறாது, ''துளி நஞ்சு'' என்று கூறிய திறம் நோக்குக. சிறிய அளவுள்ள கள்ளுக்கும் அறிவை மழுங்கச் செய்யும் பெரிய ஆற்றல் உண்டு. எனவே அது நஞ்சு என்றதை அறிக.

26. அங்கதன் அனுமனை நோக்கிச் செல்லுதல்.

ஆதலால், அவ்வரசு இளங் கோளரி
யாதும் முன்னின்று இயற்றுவது இன்மையால்,
கோதுஇல் சிந்தை அனுமனைக் கூவுவான்,
போதல் மேயினான், போதகமே அனான். (4400)

(போதகம்-இளைய யானைக் கன்று; கோளரி-இளம் சிங்கமுமாம்; கோது-குற்றம்; கூவுதல்-அழைத்தல்; இயற்றுவது-செய்யத்தக்கது)

இவ்வாறு சுக்கிரீவன் அறிவும் உணர்வும் அழிந்து உறங்கிக் கிடந்தமையால், இளவரசனும் இளம் யானையைப் போன்றவனும், இளமையான சிங்கத்தைப் போன்றவனுமான தந்தை இருப்பத்தானே முன்நின்று எந்த முடிவும்எடுக்க இயலாத நிலையில், இனி என்ன செய்வது என்பதைக் கலந்து ஆலோசிப்பதற்காக, அறிவிற் சிறந்த, குற்றமற்ற உள்ளத்தை உடைய அனுமனை அழைப்பதற்காக, அவன் இருக்கும் இடம் நோக்கிச் செல்லலானான்.

போதகம் என்பது இளம் யானையைக் குறித்தது. நடை, வலிமை, பெருமிதம் ஆகியவற்றால் அங்கதனை இளம் யானைக்கும் வலிமை, துணிவு, முன்னும்பின்னும் பார்த்தல் ஆகிய பண்புகளால் அங்கதனை இளம் சிங்கத்திற்கும் உவமை கூறினார் என்க. அரசன் எந்த முடிவையும் எடுக்க இயலாத நிலையில் இருந்தான் என்பதை ''யாதும் முன்னின்று இயற்றுவது இன்மையால்'' என்றார்.

27. அங்கதன், அனுமனுடன், தாரையின் அரண்மனைக்குச் செல்லுதல்.

மந்திரத் தனி மாருதி தன்னொடும்,
வெந்திறல் படை வீரர் விராய்வர,
அந்தரத்தின் வந்து, அன்னை தன் கோயிலை,
இந்திரற்கு மகன் மகன் எய்தினான். (4401)

(மந்திரம்-ஆலோசனை; தனி-ஒப்பற்ற; விராய்-கலந்து/சூழ்ந்து; கோயில்-அரண்மனை/மாளிகை;மாருதி-மருத்தின் மைந்தன்/அனுமன்; அந்தரம்-வெளியே)

இந்திரனின் மகனாகிய வாலியின் மகனாகிய அங்கதன், ஒப்பற்ற ஆலோசனைகள் கூறுவதில் வல்லவனான வாயுவின் மைந்தனான அனுமனுடன், தனது கொடிய வலிமையுள்ள படை வீரர்கள் சூழ்ந்துவர, சுக்கிரீவனின் அரண்மனையினின்றும் வெளியே வந்து தன் தாயாகிய தாரையின் அரண்மனையை அடைந்தான்.

இந்திரற்கு மகன் மகன் என்று அங்கதனின் மூன்று தலைமுறையைக் குறிப்பிட்டுக் கூறியது காண்க. இவ்வாறு முன்பும், பின்னும் கவிஞன் கூறுவது காண்க. மகன்மகன் என்ற ஒரு சொல்லிற்கே ''பேரன்'' என்ற பொருளும் எண்டு என்பதையும் அறிக. முன்பாடலில் அனுமனைக்கண்டு ஆலோசனை கூறும் பொருட்டு அங்கதன் சென்றான் என்று கூறி, இப்பாடலில் அனுமனுடன் தாய் தாரையின் அரண்மனையை அடைந்தான்என்பதால், இடையில் ஒரு பாடலில், அனுமன்அங்கதனுக்குக்கூறிய அறிவுரை இருக்க வேண்டும் எனக் கொள்ளத் தோன்றுகிறது. அவன்கூறிய

ஆலோசனைப்படி அவனுடனும் சேனைகளுடனும் சுக்கிரீவன் அரண்மனையைவிட்டு நீங்கித்தன்தாய்தாரை இருக்கும் அரண்மனையை அடைந்தான் என்பதாம்.

28. தாரை சுக்கிரீவன் செயலை இடித்துரைத்தல்

எய்தி, ''மேல் செயத்தக்கது என்?'' என்றலும்,
''செய்திர், செய்தற்கு அரும்நெடும் தீயன;
நொய்தில் அன்னவை நீக்கவும் நோக்குதிர்;
உய்திர் போலும், உதவி கொன்றீர்?'' எனா. (4402)

(நொய்தில்-விரைவில்; உய்தல்-தப்பிவாழுதல்; உதவி கொல்லுதல்-நன்றி மறத்தல்)

அங்கதன், அனுமன், மற்ற சேனைகள் புடைசூழ, தாரையின் அரண் மனையைஅடைந்து, தாரையைநோக்கி ''இப்பொழுது நாம்என்னசெய்ய வேண்டும்?'' என்று கேட்க, தாரை, அவர்களை நோக்கி, சுக்கிரீவனை மனத்துள் கொண்டு, ''செய்யத்தகாத மிக்க தீமை பயப்பனவாகிய காரியங்களை, எளிதாகவும், விரைவாகவும் செய்து முடித்துவிட்டீர்கள்; அத்தோடன்றி, அதனால் விளையும் கேடுகளையும், போக்குவதற்குரிய வழிகளையும் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்; செய்நன்றி மறந்த பின்னால் உயிர்தப்பி வாழலாம் என்று எண்ணுகிறீர்களோ?'' என்று கேட்டாள்.

''செய்தற்கு அரும் நெடும் தீயன செய்தீர்'' என்பது, இராமனுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின்படி, கார்காலம் முடிந்ததும், படைகளுடன் அவனைச் சென்று சேராமையும்; மதுவும், மங்கையருமே உலகம் என்று, அரசாட்சியில் கவனம் செலுத்தாது மயங்கியும், உறங்கியுமே கிடந்த சுக்கிரீவன் நடவடிக்கைகளைக் குறித்தன என்க. செய்நன்றி மறந்தவர்கள் எப்படியும் உயிர் தப்பிப்பிழைக்க முடியாது என்பது தாரையின் கருத்து. ''எந்நன்றி கொன்றார்க்கும் உண்வுண்டாம்; உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பது குறள்-110. ''அரும் நெடுந்தீயன'' என்ற சொல், தீமைகளுக்குள்எல்லாம்கொடிய தீமையாகிய செய்நன்றி மறத்தல் குறித்தது என்க.

29. மீட்டும் ஒன்று விளம்புகின்றாள் ''படை
கூட்டும் என்று, உமைக் கொற்றவன் கூறிய
நாள் திறம்பின், நும் நாள் திறம்பும் எனக்
கேட்டிலீர்; இனிக் காண்டிர், கிடைத்திரால்.'' (4403)

(கூட்டுதல்-திரட்டி வருதல்; கொற்றவன்-வெற்றி வேந்தன்/இராமன்; நாள்-கால எல்லை; திறம்புதல்-தவறுதல்/கடத்தல்; நாள்- வாழ்நாளு மாம்; கிடைத்தல்-மாட்டிக்கொள்ளுதல்/அகப்பட்டுக் கொள்ளுதல்; காணுதல்-அனுபவித்தல்)

தாரை மேலும் ஒன்று கூறுவாளானாள். ''சேனைகளைத் திரட்டிக் கொண்டு வாருங்கள்''. என்று வெற்றிவேந்தனாகிய இராமன் கூறிய கால எல்லை கடந்துபோனால், உங்கள் வாழ்நாளின் எல்லையும் தீர்ந்து போகும்'' என்று நான் அடிக்கடி உங்களுக்குக் கூறிவந்த அறிவுரை களையும் செவி சாய்த்துக்கேட்கத் தவறினீர்கள். அதனால் ஏற்பட்ட விளைவுகளை இப்பொழுது நீங்கள் அனுபவிக்கப்போகிறீர்கள்; நன்றாகக் குற்றத்தில் சிக்கிக் கொண்டீர்களே?'' என்று கூறி, மேலும் இடித்துரைக் கிறாள் தாரை.

30\. ''வாலியார் உயிர் காலனும் வாங்க, வில்
கோலி, வாலிய செல்வம் கொடுத்தவர்
போலுமால், உம் புறத்து இருப்பார்? இது
சாலுமால், உங்கள் தன்மையினோர்க்கு எலாம்''. (4404)

(கோலி-வளைத்து; வாலிய-பெருமைபொருந்திய; சாலும்- பொருத்த மாகும் புறத்திருத்தல்-புறக்கணித்தல்/அலட்சியப் படுத்துதல்)

''என் ஆருயிர்க் கணவரான வாலியாரின் அருமையான உயிரை இயமன் பறித்துச் செல்லுமாறு, தன் வில்லை வளைத்து அவர் உயிரைப் பறித்த வரும், வாலியாருடைய பெருஞ் செல்வத்தையும் அரசச்செல்வத்தையும் உங்களுக்கு வாங்கிக் கொடுத்தவர்களுமான இராம இலக்குவர், மலையின் அந்தப்புறத்திலே சும்மா இருப்பார்களோ? இவ்வாறு உதவி செய்தவர் களைப் புறக்கணிப்பது என்பது, உங்களைப் போன்ற செய்ந்நன்றி மறந்தவர்களுக்குத்தான் செய்யக்கூடிய பொருத்தமான செயலாகும்.''

''வாலியார்'' என்பது, தாரை வாலியின்மீது கொண்டிருந்த பக்தி, பாசம், அன்பினால் உயர்வாகக் குறிக்கப்பட்ட சொல் என்க. ''வாலியார் வழிபடப் பொருந்தினார்'' என்றே தேவாரமும் கூறுவதை உணர்க. உயிரை இராமனே அம்பு தொடுத்துக் கவர்ந்தான் என்றாலும் உயிரைப் பறிப்பது காலனின் வேலை என்பதால், இராமன் எதிர் நின்று ''காலனும் வாங்க'' என்றார் என்க. முன்பே இராமனை ''வாலி காலன்'' என்றதையும் இங்கு நினைக. ''வாலிய செல்வம்'' என்பது வாலிக்கு உரிமையுடையதான, ஒளி பொருந்திய, மிக்க செல்வம் என்று பொருள் விரிவு கொள்ளும்.

31\. ''தேவி நீங்க, அத்தேவரின் சீரியோன்,
ஆவி நீங்கினன் போல் அயர்வான்; அது
பாவியாது, பருகுதிர் போலும், நும்
காவி நாள் மலர்க் கண்ணியர் காதல் நீர்''. (4405)

(சீரியோன்-சிறந்தமேலோன்; தேவி-மனைவி; ஆவி-உயிர்; அயர்தல்-வருந்துதல்; பாவித்தல்-மனத்தில் கொள்ளுதல்; நாள்-அன்றலர்ந்த/புதிய; காவி-கருங்குவளை மலர்; கண்ணியர்-கண்களை உடையவர்; பருகுதல்-துய்த்து மகிழ்தல்; காதல் நீர்-இன்பநுகர்ச்சி/சிற்றின்பம்)

''தேவர்களிலும் மேம்பட்ட அவ்விராமன், தனது மனைவியைப் பிரிந்ததால், தனது உயிரே பிரிந்தது போல் வருந்திக் கொண்டிருக்கிறான்; அதை நீங்கள் ஒருவரும் கருத்தில் கொள்ளாது, அன்றலர்ந்த புதிய ஒளிமிகுந்த கருங்குவளை மலர்போன்ற கண்களையுடைய உங்கள் மனைவியரோடு இன்பநுகர்ச்சியாகிய சிற்றின்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள் போலும்'' என்று சுக்கிரீவன் செயல்முறை பற்றி இடித்துரைத்தாள் தாரை.

''தேவரின் சீரியோன்'' என்று தன் கணவனைக் கொன்றழித்த இராமனையே, தாரை புகழ்வதை நோக்குக. ''உங்களுக்கு இவ்வாறு வாழ்வும், அரசாட்சியும் பெற்றுத் தந்த இராமன், தன் மனைவியைப் பிரிந்து வாடித் துன்புறுகிறானே என்பதைச் சற்றும் எண்ணிப் பார்க்காமல், நீங்கள் சிற்றின்பத்தில் ஈடுபட்டுக் காலத்தைக் கடத்திவிட்டீர்களே இது சரியா?'' என்று தாரை சுக்கிரீவனை இடித்துரைக்கின்றாள் என்பதாம். சுக்கிரீவன் மூன்று தவறுகளைச் செய்திருந்தான் என்பது புலப்படுத்தப் பட்டது. ஒன்று அவன் செய்ந்நன்றி மறந்தான்; இரண்டு தான் கூறிய கடமையைச் செய்யாது அதிலிருந்து வழுவியவனாகிறான்; மூன்று இப்பொழுது அரசர்களுக்குப் பொருந்தாத சிற்றின்பத்தில் பெரிதும் ஈடுபட்டிருக்கின்றான் என்பதாம்.

32. ''திறம்பினீர்மெய்; சிதைத்தீர் உதவியை;
நிறம்பொலீர்; உங்கள் தீவினை நேர்ந்ததால்,
மறம்செய்வான் உறின், மாளுதிர்; மற்றுஇனிப்
புறம் செய்துஆவது என்?'' என்கின்ற போதின்வாய். (4406)

(மெய்-வாய்மை; திறம்புதல்-பிறழ்தல்/மாறுபடுதல்/தவறுதல்; சிதைத்தல்-அழித்தல்; நிறம்-குணம்; நேர்தல்-நெருங்குதல்; மறம்-வீரம்; உறுதல்-முற்படுதல்; மாள்தல்-இறத்தல்; புறம் செய்தல்-பாதுகாத்துக் கொள்ளுதல்; போதின்வாய்-அந்தச்சமயத்தில்)

''வாய்மையிலிருந்து பிறழ்ந்துவிட்டீர்கள்; அவர்கள் செய்த உதவியை மறந்து போனீர்கள்; உங்கள் குணம்கெட்டுத் தீயவர்களாகிப் பொலிவு குறைந்தீர்கள். உங்கள் பாவச் செயல்கள் பயன்தர நேர்ந்தால், அவர்கள் உங்களை எதிர்த்து வீரத்துடன் போர் செய்ய முறபட்டு வந்தால் நிச்சயம் நீங்கள் அழிந்துபடுவீர்கள்; இனிமேல் நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுவ தாலும் அல்லது வேறுஏதேனும் செய்வதாலும் என்ன பயன் விளைந்து விடப் போகிறது?'' என்று தாரை கூறிக்கொண்டிருக்கும் சமயத்தில் - பாடல் தொடர்கிறது.

சுக்கிரீவன் தான் சொன்ன உறுதிமொழியைக் காப்பாற்றவில்லை; அவ்வாறு தாமதித்ததால் அவர்கள் செய்த உதவியை செய்ந்நன்றியை மறந்தீர்கள்; எனவே நீங்கள் நற்குணம் நீங்கி இழி குணம் அடைந்தீர்கள். இது அவர்களுக்குத் தெரியவந்தால், அதனால் அவர்கள் சினந்து போர் மேற்கொண்டு வந்தால், நீங்கள் அனைவரும் அழியப்போவது நிச்சயம்.

இதைப்பற்றி இதற்கு மேலும் கூறுவதற்கு என்ன இருக்கிறது? என்றாள் தாரை என்பதாம்.

33. குரங்குகள் நுழைவாயிலை அடைத்தல்.

கோள் உறுத்தற்கு அரிய குரங்கினம்,
நீள் எழுத்தொடரும் நெடு வாயிலைத்
தாள் உறுத்தி, தடவரை தந்தன,
மூள் உறுத்தி அடுக்கின, மொய்ம்பினால். (4407)

(கோள்-கைப்பற்றிக்கொள்ளுதல்; எழு-இரும்புக் கம்பங்கள்/ உழலைமரம்; மொய்ம்பு-வலிமை; மூள்-ஊக்கம்; தாள்-தாழ்ப்பாள்)

எளிதில் கைப்பற்றிக் கொள்ள இயலாத உடலமைப்புக் கொண்ட குரங்குக்கூட்டங்கள், நீண்ட இரும்புக் கம்பங்களாலும் உழலை மரங்களாலும் அமைக்கப்பட்டிருக்கின்ற நீண்ட வாயிற் கதவை உட் பக்கமாகத் தாழ்க்கோலிட்டுவிட்டு, அருகே இருந்த மலைபோன்ற பாறை களைக் கொண்டு வந்து, தங்கள் பெரு வலிமையினால் ஊக்கத்தோடு அவற்றை அக் கதவின் மேல் சார்ந்திருக்கும்படி ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிவைத்தன.

சினந்து வரும் இலக்குவன், அரண்மனைக்குள் எளிதில் புகுந்துவிட முடியாத வண்ணம் நீண்ட வாயிற் கதவைத் தாழ்க்கோலிட்டு, உழலை மரம்/இரும்புக் கம்பிகளைக் குறுக்காக வைத்து, பெரும் பாறைகளையும் அடுக்கிவைத்துப் பாதுகாத்தன என்பதாம். உழலை மரம் அல்லது இரும்புக் கம்பங்கள் என்பது, வெளியில் உள்ளவர்கள் கதவினைத் திறந்து உட்புகுந்துவிடமுடியாதபடி, கதவை ஒட்டி உள்வாயிற்படியில் குறுக்கிட்டுத் தடுக்கும்படி அமைக்கப்படும் தடைமரம் என்க.

34. சிக்குறக் கடை சேமித்த செய்கைய;
தொக்குறுத்த மரத்த; துவன்றின;
''புக்கு உறுக்கிப் புடைத்தும்'' என, புறம்
மிக்கு இறுத்தன; வெற்பும் இறுத்தன. (4408)

(சிக்குஉற-உறுதியாக; கடை-புறவாயில்; சேமித்தல்-பாதுகாத்தல்; உறுக்குதல்-உரப்புதல்/அதட்டுதல்; புடைத்தல்-அடித்தல்; துவன்றின-நெருங்கின; தொக்குறுத்தல்-தொகுதியாகப் பறித்தெடுத்தல்; வெற்பு-மலை; இறுத்தல்-உடைத்தல்; புறம்-வாயில்பக்கம்; இறுத்தல்-கூடியிருத்தல்)

இவ்வாறு கோட்டையின் கடைவாயிலை உறுதியாகப் பாதுகாத்துக் கொண்டிருந்த குரங்குகள், ஒருவேளை இலக்குவன் இந்தத் தடையையும் மீறி உள்ளே வந்துவிட்டானானால் அவனைத் தொடர்ந்து நின்று, அதட்டி, அவனை அடித்து விரட்டுவோம் என்று கருதி, பறித்தெடுத்த மரக்

கிளைகளையும், பெயர்த்தெடுத்த மலைபோன்ற பாறைகளையும் கையில் வைத்துக் கொண்டு, கூட்டமாக ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றன.

35. இலக்குவன் காலால் கதவை உதைத்தல்.

''காக்கவோ கருத்து?'' என்று, கதத்தினால்,
பூக்கமூரல் புரவலர் புங்கவன்,
தாக்கணங்கு உறை தாமரைத் தாளினால்,
நூக்கினான் அக்கதவினை நொய்தினின். (4409)

(புங்கவன்-சிறந்தவன்; புரவலர்-அரசர்; கதம்-கோபம்; மூரல்-புன்சிரிப்பு; பூக்க-தோன்ற; தாக்கணங்கு-வெற்றித்திருமகள்; தாள்-பாதம்; நொய்தின்-விரைவில்/எளிதாக; நூக்குதல்-உந்தித் தள்ளுதல்/உதைத்தல்)

அரசர்களில் சிறந்தவனான இலக்குவன், ''என்னை உள்ளே விடாமலும், தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டும் அக் கதவினை அடைத்து வைத்திருக்கிறார்கள் ''போலும்'' என்று கருதி மிக்க சீற்றத்துடன் எழுந்த புன்னகையோடு, வெற்றித் திருமகள் வீற்றிருக்கின்ற செந்தாமரை மலர் போலும் பாதங்களினால் அந்தக் கதவினை மிக எளிதாகவும் விரைவாகவும் உதைத்துத் தள்ளினான்.

தாக்கணங்கு என்பது அறம்செய்வோர்பால் அருளினால் பற்றி யிருக்கும் திருமகள் என்றும் பொருள்படும். போரில் பகைவரைத் தாக்கி வருத்தும் பேராற்றலை வழங்கும் வீரலக்ஷ்மி அல்லது வெற்றித் திருமகள் என்பதும் பொருந்தும். பாதங்களை மிக மென்மையானது என்றும், மதிற் கதவை மிக வன்மையானது என்றும் கூறிய நயம் நோக்குக.

36. கதவு உடைத்தல்

காவல் மாமதிலும், கதவும், கடி
மேவும் வாயில் அடுக்கிய வெற்பொடும்,
தேவு சேவடி தீண்டலும், தீண்டஅரும்
பாவமாம் என, பற்றுஅழிந்து இற்றவால். (4410)

(தேவு-தெய்வம்; தீண்டல்-பொருந்துதல்/அணுகுதல்; பாவம்-தீவினைகள்; கடி-பாதுகாப்பு; பற்று-ஆதாரம்/பற்றுக்கோடு; இற்றது-சிதைந்தது; மா-பெரிய)

தெய்வத்தன்மை வாய்ந்த இறைவனின் சிவந்த செம்மையான திருவடிகள் தம் சென்னியின் மீது பட்டதும், அணுகுதற்கு அரிதான தீவினைகள் அனைத்தும் அகன்றுபோய்விடுவதைப் போல, தெய்வத்தன்மை வாய்ந்த இலக்குவனது மலர்ப் பாதங்கள் பட்டவுடன், காவல் காத்திருந்த சிறந்த பெரிய மதிற்சுவரும், கதவும், கதவிற்குப் பின்னும் பாதுகாப்பிற்காகக் குரங்குகளால் அடுக்கிவைக்கப்பட்டிருந்த பெரும் பாறைகளும், பற்றுக் கோடு இல்லாது சிதைந்து அழிந்து போயின.

இலக்குவன் பாதங்களால் மதிலும், கதவும், பாறைகளும் பற்றுக் கோடின்றி அழிந்து சிதைந்து போனமைக்கு, இறைவனது திருமலர்ப் பாதங்கள் தீண்டிய அளவில் அடியவர்களது மும்மலங்களும் அகன்று, தீவினைகள் முழுவதும் கெட்டு அழிதல் உவமை. முன்பும் இலக்குவன் பாதங்களால் உதைத்து எறியப்பட்ட துந்துபியின் எலும்புக்கூடு சத்தியலோகம் வரை சென்று மீண்டதை இங்கு நினைவு கூர்க.

37. குரங்குகள் அஞ்சி ஓடுதல்.

நொய்தின் நோன் கதவும், முதுவாயிலும்,
செய்த கல் மதிலும், திசை, யோசனை
ஐஇரண்டின் அளவு அடி அற்று உக,
வெய்தின் நின்ற குரங்கும், வெருக்கொள. (4411)

(நோன்-வன்மை; முது-பழமை; ஐஇரண்டு-பத்து; வெய்து-வெகுளி/கோபம்; வெருக்கொளல்-அச்சம் கொள்ளுதல்; உகுதல்-சாய்தல்; நொய்தில்-எளிதில்)

மிக்க வலிமை வாய்ந்த கிட்கிந்தை வாயிற் கதவும் பழமையான வாயிலும், இப்போது குரங்குகளால் கற்களால் அமைக்கப்பட்ட மதிற் சுவரும் இலக்குவன் கொடுத்த உதையால் எல்லாத் திசைகளிலும் பத்து யோசனை அளவு தூரம், முழுவதும் அடியற்று சாய்ந்து சிதறிப் போயின; போர் செய்வதற்காகக் கோபத்துடன் பின்புறத்தே நின்ற குரங்குகள் அச்சத்தால் தவித்துச் செயலற்று நின்றன.

38. பரிய மாமதிலும், படர்வாயிலும்
சரிய வீழ்ந்த; தடித்தின், முடிந்ததலை
நெரிய, நெஞ்சுபிளப்ப, நெடுந்திசை
இரியலுற்றன; இற்றில இன்உயிர். (4412)

(பரிய-அகன்ற; படர்-தொடர்ந்த; தடித்து-இடி/மின்னல்; முடித்தலை-உச்சந்தலை/மதில்களின்சிகரம்; இரியல்-நிலைகெட்டு விரைந்து ஓடுதல்; இறுதல்-அழிதல்; மா-பெரிய/சிறந்த/உயர்ந்த; நெரிதல்-நொறுங்குதல்)

அகன்ற, உயர்ந்த மதில்சுவரும், அதனைத்தொடர்ந்து அமைந்திருந்த வாயிலும், சரிந்து இடிபோலக்கீழே விழுந்ததால், குரங்குகள் தம் உச்சந் தலை நொறுங்கிப்போகுமாறும், நெஞ்சு பிளந்துபோகும்படியும் அலறிக் கொண்டு, நீண்ட திக்குகளிலெல்லாம் நெடுந்தூரம் நிலைகெட்டு விரைந்து ஓடலாயின; எனவே தமது இனிய உயிர் அழியாது பாதுகாத்துக் கொண்டன.

தடித்து என்பது பொதுவாக மின்னலைக் குறிக்கும் என்றாலும் இங்கே மின்னலுடன் தொடர்புடைய இடியைக் குறித்தது என்க. முடித்தலை என்பது அஞ்சியோடிய குரங்குகளின் உச்சந்தலையையும், மதில், வாயில்,

பாறைகள் முதலியன சரிந்து வீழ்ந்தது, என்பது இடி வீழ்தலை ஒத்தும் இருந்தன என்பதாம்.

39. பகரவேயும் அரிது; பரிந்துஎழு
புகர்இல் வானரம் அஞ்சிய பூசலால்,
சிகர மால்வரை சென்று திரிந்துழி
மகர வேலையை ஒத்தது, மாநகர். (4413)

(பரிந்து-வருந்தி; புகர்இல்-குற்றமற்ற; பூசல்-போரொலி; திரிதல்-சுழலுதல்; வேலை-கடல்; பகர்தல்-சொல்லுதல்; மகரம்-சுறா மீன்)

அவ்வாறு மிக்கவேதனையடைந்து நிலைகெட்டு ஓடிய குற்றமற்ற அக்குரங்குகள் அச்சத்தால் அப்பொழுது எழுப்பிய பேரொலி, முன்பு சுறாமீன்களையுடைய பாற்கடலில் மந்தரமலையை நட்டு அது சுற்றிச் சுழன்று கடைந்தபொழுது, அக்கடலிலிருந்த சுறாமீன்கள் பட்ட துன்பத்தையும், எழுப்பிய பேரொலியையும் ஒத்திருந்தது. அக்கிட்கிந்தை நகரில் எழுந்த பேர் ஆர்வத்தைக் கூறுவது என்பது மிகவும் அரிது.

குரங்குகள் அடைந்த துயரம் சொல்லில்அடங்காதது என்பது கருத்து.

40. வானரங்கள் வெருவி, மலைஒரீஇ
கான் ஒருங்குபடர, அக்கார்வரை,
மீன் நெருங்கிய வானகம், மீன்எலாம்
போனபின், பொலிவற்றது போன்றதே. (4414)

(வெருவி-அஞ்சி/பயந்து ஒரீஇ-நீங்கி; படர்தல்-சேர்தல்; கார்-மேகம்; மீன்-நட்சத்திரங்கள்; பொலிவு-அழகு)

இவ்வாறு குரங்குகள் இலக்குவன் வருகைகண்டு அஞ்சி, கிட்கிந்தை மலையைவிட்டு நீங்கி, எல்லாம் ஒன்று சேர்ந்து காட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டதால் அந்தக் கரியமேகம் போன்ற கிட்கிந்தை மலை, நட்சத்திரங்கள் நெருங்கியிருந்த ஆகாயம், அந்த நட்சத்திரங்கள் எல்லாம் மறைந்துபோன பின், எப்படி அழகு அற்று விளங்குமோ, அவ்வாறு பொலிவற்று விளங்கியது.

நிறத்தால் வானரங்களுக்கு நட்சத்திரங்களும், மலைக்கு ஆகாயமும் உவமைகள். குரங்குகள் இல்லாத கிட்கிந்தை மலை, நட்சத்திரங்கள் இல்லாத வானத்தைப் போலப் பொலிவற்று இருந்தது என்பதாம்.

41. அனுமன் நகரத்தினுள் நுழைதல்.

அன்ன காலையின், ஆண்தகை ஆளியும்,
பொன்னின் நல்நகர் வீதியில் புக்கனன்;
சொன்ன தாரையைச் சுற்றினர் நின்றவர்
"என்னசெய்வது? எய்தினன்" என்றனர். (4415)

(ஆண்தகை-ஆடவரிற் சிறந்தோன்; ஆளி-சிங்கம்; சொன்ன-இடித்துரைத்த; பொன்-அழகு)

அப்பொழுது, ஆண்களில் சிறந்தவனும் சிங்கம் போல்பவனு மாகிய இலக்குவன் அழகும் சிறப்பும் மிக்க கிட்கிந்தை நகரத்தின் வீதியில் நுழையலானான். முன்பு கடிந்துரைத்துக் கொண்டிருந்த தாரையைச் சுற்றி நின்ற வானரர்கள் இது கண்டு ''இப்பொழுது இலக்குவன் நகருக்குள் வந்துவிட்டானே. இனி நாம் என்ன செய்வது?'' என்று தாரையிடம் ஆலோசனை கேட்டனர்.

42. அனுமன் ஒரு வழி கூறுதல்

''அனை! எதிர்ந்து இவண் ஆய்வளையாரோடும்
மனையின் வாயில் வழியினை மாற்றினால்,
நினையும் வீரன் அந் நீள் நெறி நோக்கலான்;
வினையம் ஈது'' என்று, அனுமன் விளம்பினான். (4416)

(அனை-அன்னை; ஆய்-ஆராய்ந்த; எதிர்ந்து-எதிரில் சென்று; மாற்றுதல்-தடைசெய்தல்; நினையும்-சிந்திக்கும் ஆற்றல்; வினையம்-உபாயம்/தந்திரம்)

அப்போது, அனுமன் தாரையை நோக்கி ''அன்னையே! தாங்கள், ஆராய்ந்து தெரிந்து எடுக்கப்பட்ட வளையல்களை அணிந்த சில பெண்களுடன், அவன் வரும் வழியில் எதிரில் சென்று அரண்மனையின் வாயிலில் அவனைத் தடுத்துவிட்டால், சிந்தித்து முடிவெடுக்கும் இலக்குவன் பெண்கள் நிற்கின்ற நீண்டவழியில் செல்லுவதை எண்ண மாட்டான். இப்போது நாம் செய்யக்கூடிய தந்திரம் இதுவேயாகும்''. என்றான்.

இலக்குவனின் மென்மைத் தன்மையும், அவன் பெண்கள் பால் கொண்டிருக்கும் பெரும் மதிப்பும் புலப்படுத்தப்பட்டது. பெண்களை நிமிர்ந்து பார்க்காதவன் இலக்குவன். எனவே நீங்கள் ''உங்கள் தோழியரோடு சென்று வாயில் கதவினை அடைத்தாற் போல் நின்றால் அவ்வழி செல்லுவது தவறு என்று எண்ணி, வேறு எண்ணுதல் கூடும் என்றான் என்பதாம். வினையம் என்பது பொதுவாக தந்திரம், சூழ்ச்சி, உபாயம் என்ற பொருளைத் தந்தாலும், அறிவின் துணைகொண்டு, ஆராய்ந்து செயல்படுத்தப்பட வேண்டிய செய்கை என்பது கருத்து.

43. தாரை அவ்வாறே செய்தல்.

''நீரெலாம் அயல் நீங்குமின்; நேர்ந்து, யான்
வீரன் உள்ளம் வினவுவல்'' என்றலும்,
பேர நின்றனர் யாவரும்; போகலாத்
தாரை சென்றனள் தாழ்குழலாரொடும். (4417)

(அயல்-அப்பால்; நீங்குதல்-அகலுதல்; நேர்தல்-எதிரில் செல்லுதல்; உள்ளம்-மனக்கருத்து; பேர-விலகி/அகன்று/ஒதுங்கி; பேர்கலாத-பின்னிடாத)

தாரை, அங்கதன் முதலிய வானர வீரர்களை நோக்கி, ''சரி நீங்களெல்லாம் சற்று அப்பால் அகன்று செல்லுங்கள்; நான் இலக்கு வனிடம் சென்று, அவனது உள்ளக் கருத்தைக்கேட்டு அறிவேன்'' என்றாள்; உடனே எல்லோரும் சற்று ஒதுங்கி நின்றனர்; தனது உறுதியான கொள்கையிலிருந்து பின்வாங்காத பெருமையை உடைய தாரை, நீண்டு தாழ்ந்து தொங்குகின்ற கூந்தலை உடைய தன் தோழிப்பெண்களுடன், இலக்குவனை நோக்கிச் சென்றாள்.

இங்கே தாரை, இலக்குவனை ''வீரன்'' என்று கூறுவது, அவனுடைய பிறன்மனை நோக்கப் பேராண்மையைக் கருதி என்க. ''பேர்கலாத் தாரை'' என்பது தான் கொண்ட கொள்கையில் இருந்து சற்றும் மாறுபடாத இயல்புடைய தாரை என்று பொருள்படும். வீரம் என்பது மறன்இழுக்கா மானம் உடைமை குறித்தது.

44. தாரை இலக்குவனைத் தடுப்பதுபோல் நிற்றல்.

உரைசெய் வானரவீரர் உவந்து உறை
அரசர்வீதி கடந்து, அகன்கோயிலைப்
புரசையானை அன்னான் புகலோடும், அவ்
விரைசெய் வார்குழல் தாரை, விலக்கினாள். (4418)

(புரசை-கழுத்திலிடும் கயிறு; உரை-புகழ்; அகன்-இடம் அகன்ற; கோயில்-அரண்மனை; விரை-நறுமணம்; வார்-நீண்ட; குழல்-கூந்தல்; விலக்குதல்-குறுக்கிடுதல்/தடைசெய்தல்/வழிமறித்தல்)

கழுத்திலிடும் கயிறுடைய யானையைப் போன்ற இலக்குவன், எல்லோராலும் புகழ்ந்து சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற படைத் தலைவர்களான வானர வீரர்கள் மகிழ்ச்சியுடன் தங்கியிருக்கும் இராச வீதியினைக் கடந்து சென்று, சுக்கிரீவன் வாழும் இடமகன்ற அரண் மனையுள் புகுகின்ற சமயத்தில், இயற்கையிலேயே நறுமணம் கமழும் நீண்ட கூந்தலையுடைய தாரை குறுக்கிட்டு, இலக்குவனை வழிமறித்தாள்.

இராசவீதி என்பது படைத்தலைவர்களும் அமைச்சர்களும் வாழும் வீதி என்பது புலப்படுத்தப்பட்டது. இங்கே இலக்குவனைப் புரசையானைக்கு ஒப்பிட்டதற்கு, ஒரு காரணம் இருக்கிறது. கழுத்தில் உள்ள கயிற்றைக் கொண்டுதான், யானையின் மேல் அமர்ந்திருக்கும் பாகனோ, வீரனோ, அதைச் சரியான வழியில் செலுத்த முடியும். அதுபோல இங்கே இராமன், இலக்குவன் என்ற புரசைக் கயிறு செலுத்தும் வழியில் செல்லுபவன் என்பதைக் குறித்தது. ''விரைசெய் வார்குழல்'' என்பதும், கற்புடைய

பெண்களுக்கு இயற்கையிலேயே கூந்தலிலும், மேனியிலும் ஒரு வகை மணமுண்டு என்பதைக் குறிக்க என்க.

45. விலங்கி மெல்லியல், வெள் நகை, வெள்வளை,
இலங்கு நுண்ணிடை, ஏந்து இள மென் முலை,
குலம்கொள் தோகை மகளிர் குழாத்தினால்,
வலம்கொள் வீரன் வருவழி மாற்றினாள். (4419)

(விலங்கி-குறுக்கிட்டு; நகை-பற்கள்; ஏந்து-உயர்ந்த; குலம்-நல்லினம் /நற்குடிப்பிறப்பு; வலம்-வெற்றி; மாற்றுதல்-தடுத்தல்)

அவ்வாறு குறுக்கிட்டு, மென்மையான தன்மையையும், வெள்ளிய பற்களையும், சங்குகளால் ஆகிய வெண்மையான வளையல்களையும், மின்னல் போல் ஒளிர்கின்ற நுட்பமான இடையையும், உயர்ச்சியும், இளமையும் கொண்ட மெல்லிய கொங்கைகளையும், நற்குடியில் பிறந்த மயில்போலும் சாயலையும் உடைய, வானரமகளிரின் கூட்டத்தினால், வெற்றியும் மேன்மையும் பொருந்திய இலக்குவன் வருகின்ற அந்த வீதியின் நீண்ட வழியைத் தாரை தடுத்தாள்.

46. வானர மகளிர் குழுவின் தோற்றம்.

வில்லும் வாளும் அணிதொறும் மின்னிட
மெல் அரிக்குரல் மேகலை ஆர்த்து எழ,
பல்வகைப் புருவக்கொடி பம்பிட
வல்லிஆயம் வலத்தினில் வந்ததே. (4420)

(மின்னிட-ஒளிவிட்டுப்பிரகாசிக்க; எழ-ஒலிக்க; பம்புதல்-செறிந்து தோன்றுதல்/நிரம்பிநிற்றல்; பலம்-வெற்றி; ஆயம்-சேனை/திரள்; அரிக்குரல்-பறைமுழக்கம்; வல்லி-கொடி/மகளிர்; அரி-பரல்கற்களு மாம்)

அம்மகளிர் அணிந்திருக்கின்ற ஆபரணங்கள், விற்படை போலவும், வாட்படைபோலவும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கவும், அவர்கள் காலில் அணிந்துள்ள சிலம்புகளின் உள்ளிருக்கும் பரல்கற்கள் ஒலிசெய்யவும், அவர்கள் இடையில் அணிந்திருக்கும் மேகலை முரசம்போல் ஒலிஎழுப்பவும், பலவகைப்பட்ட கொடிகள் போல அவர்கள் புருவங்கள் விளங்கவும், மகளிரின் சேனைபோன்ற திரள் வந்து, இலக்குவனைச் சுற்றிவளைத்துச் சூழ்ந்து கொண்டது.

47. இலக்குவன் அவர்களைப் பார்க்க அஞ்சுதல்.

ஆர்க்கும் நூபுரங்கள் பேரி, அல்குலாம் தடந்தேர் சுற்ற,
வேற்கண் விற்புருவம் போர்ப்ப, மடந்தையர் மிடைந்த போது
பேர்க்க அரும் சீற்றம்பேர, முகம்பெயர்த்து ஒதுங்கிற்றல்லால்
பார்க்கவும் அஞ்சினான், அப்பருவரை அனைய தோளான். (4421)

(பரு-பருத்த; வரை-மலை; நூபுரம்-கால்சிலம்பு; சுற்ற-சூழ; போர்ப்ப-மறைக்க; மிடைதல்-நெருங்கிவருதல்; பேர்த்தல்-மாற்றுதல்; பேர்தல்-நீங்குதல்; பெயர்த்தல்-திருப்பிக்கொள்ளுதல்; பேரி-பேரிகை/முரசம்/பறை; ஆர்த்தல்-ஒலித்தல்)

அவ்வாறு அவ்வானர மகளிர் கூட்டம், தங்கள் கால்களில் அணிந்திருக்கும் சிலம்பின் ஒலி பேரிகைபோல் ஒலிக்கவும், அவர்கள் அல்குல் பெரிய தேர்களைப் போல் சூழ்ந்து கொள்ளவும் வேற்படை யாகிய கண்களும், விற்படையாகிய புருவங்களும் அவனை வந்து மறைத்துக் கொள்ளவும், தன்னை நெருங்கி வந்த போது, நீக்க முடியாத பெருங்கோபம் கொண்டு வந்த, பருத்த மலை போன்ற தோள்களை யுடையவனான இலக்குவன், இப்பொழுது அக்கோபம் சற்றுத் தணியப் பெற்று, தன்முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு, தன் பின்னால் நிற்கும் அம்மகளிரை ஏறெடுத்துப் பார்ப்பதற்குக் கூட அச்சமுற்று, உள்ளம் கூசி, ஒதுங்கி நின்றான்.

அவன் சற்று ஒதுங்கி நின்று முகத்தைத் திருப்பிக்கொண்டது, தான் கோபம் கொண்டு வந்தது இப் பெண்களின்மேல் அல்ல, என்பதாலும் பிறன்மனை நோக்கப் பேராண்மை கருதியும் என்க. பார்க்கவே கூசினான், அஞ்சினான் என்பதால் அவர்களுடன் பேசுவது என்பது நினைக்க வொண்ணாததாகும் என்பதாம். தன் தாயொத்த சீதையைக் கூட அவன் நேருக்குநேர் பார்த்தவனல்லன். ''கன்றிய சிந்தையினாய், உன் கணவன் உனைக்கைப் பிடித்த அன்று முதல், இன்றளவும், உன்னுடைய அடிபணிந்தே நின்ற பொழுதினும், தாயோய்! நின்மேனி கண்டறியேன் இன்றுதான் உனைக் காணவல்லனோ? என உரைத்தான்'' என்பது உத்தரகாண்டத்தில் இலக்குவன் கூற்று.

48. தாரை கூறத் தொடங்குதல்

தாமரை வதனம் சாய்த்து,
தனு நெடுந் தரையின் ஊன்றி
மாமியர் குழுவில் வந்தானாம்
என, மைந்தன் நிற்ப
பூமியில் அணங்கு அனார்தம்
பொது விடைப்புகுந்து, பொன்தோள்
தூ மன நெடுங்கண் தாரை,
நடுங்குவாள், இனைய சொன்னாள். (4422)

(வதனம்-முகம்; பொன்-அழகிய; அணங்கு-தெய்வப்பெண்; பொதுவிடை-நடுவில்; மைந்தன்-இளையோன்; தனு-வில்; சாய்த்தல்-வளைத்தல்/குனிதல்)

இளையோனாகிய இலக்குவன், தனது தாமரை போன்ற முகம் சற்றுத்தாழ, தலைகுனிந்து, தன்னுடைய பெரிய வில்லைத் தரையில்

ஊன்ற வைத்து, மாமியர்கள் சூழ்ந்துள்ள கூட்டத்தில் வந்த புது மருமகனைப் போல் கூச்சமுற்று நின்றான். அப்பொழுது,அழகிய தோள்களைஉடையவளும், தூய்மையான மாசற்ற உள்ளத்தை யுடையவளும், நீண்ட கண்களையுடையவளுமான தாரை, மண்ணுலகில் வந்து தோன்றிய தேவமகளிர் போன்ற வானரப்பெண்கள் கூட்டத்தின் இடையில் புகுந்து நின்று கொண்டு, சற்று நடுக்கத்துடன், கீழ்க்கண்ட வற்றைக் கூறத் தொடங்கினாள்.

பொதுவாக மாமியர்கள் கூட்டத்தில் அகப்பட்டுக்கொள்ளும் ஒரு புதுமருமகன் கூச்சமும், நாணமும், அச்சமும் கொண்டு தலை குனிந்து நிற்பது இயல்பு; இலக்குவனும் அதற்கு விதிவிலக்கு அல்ல என்பது உணர்த்தப்பட்டது. ''பூமியில் அணங்கு அனார்'' என்பது, வானர மகளிர் நிலவுலகிலேயே பிறந்து வளர்ந்திருந்தாலும், தேவருலகிலிருந்து இறங்கிவந்த தேவ மகளிர்போன்ற அழகு வாய்ந்தவர்என்பதைக் குறித்தது என்க. தாரை நடுங்கியதற்குக் காரணம், தான் என்ன காரணம் சொல்லிச் சாமாளிக்கப்போகிறோம் என்பது ஒன்று, மற்றொன்று வேற்று ஆடவன் முன்னிலையில் நின்று பேச முற்படும் பொழுது இயற்கையிலேயே பெண்களுக்கு ஏற்படுகின்ற ஒருவகை மருட்கை, என்பதாம். அதனால் தான் வானர மகளிரின் கூட்டத்துள் நடுவில் புகுந்து நின்றுகொண்டாள் என்றார்.

49. தாரை இலக்குவனைப் புகழ்ந்து பேசுதல்

''அந்தம்இல் காலம் நோற்ற
 ஆற்றல் உண்டாயின் அன்றி,
இந்திரன் முதலினோர்க்கும்
 எய்தலாம் இயல்பிற்றாமோ?
மைந்த! நின்பாதம்கொண்டு,
 எம் மனை வரப்பெற்று வாழ்ந்தேம்;
உய்ந்தனம்; வினையும் தீர்ந்தேம்;
 உறுதி வேறு இதனின் உண்டோ?'' (4423)

(மைந்து-வலிமை; மைந்தன்-வலிமைமிக்கவீரன்; நோற்றல்-தவம்செய்தல்; எய்தல்-வருகை; உறுதி-நன்மை; அந்தம்-முடிவு)

''வீரனே! அளவற்றகாலம் தவம்புரிந்தாலன்றி நீ உன் திருவடி நோக, எங்கள்மனைக்கு எழுந்தருளியிருப்பது சாத்தியமாகுமோ? நாங்கள்செய்த தவத்தின் பயனால் நீ வரப்பெற்றதால் இப்பிறப்பில் நல்வாழ்வும், மறுமையில் நற்கதியும் பெற்று, எங்கள் தீ வினைகளெல்லாம் நீங்கப் பெற்றோம். இதனைக் காட்டிலும் எங்களுக்கு வேறு நன்மை கிடைக் கற்பாலதோ?'' என்றாள் தாரை.

இங்கே தாரை, ''இந்திரன் முதலினோர்க்கும்'' என்று கூறுவது, அவள் கணவன் வாலி இந்திரனின் அம்சம் என்பதைக் கற்போர்க்கும்,

இலக்குவனுக்கும் நினைவு படுத்தவே என்க. இலக்குவன் போன்ற அரச குமாரர்கள் குரக்கினத்தாரின் இல்லங்களில் திருவடி பதித்தல் என்பது மிக எளிமையாகப் பெறக்கூடிய பேறு அன்று. அதற்கு அளவற்ற காலம் தவம் செய்திருக்க வேண்டும். அவ்வாறு தவம் செய்த இந்திரன் முதலான தேவர்களுக்கும்கூட இத்தகைய நற்பேறு கிட்டவில்லை, ஆனால் தேவர்க்கும் கிடைக்காத பெரும் பேறு எங்களுக்குக் கிட்டியது. எனவே நாங்கள் இம்மையில் நல்வாழ்வும், மறுமையில் நற்கதியும் பெற்றவர் களாவோம்; இதைவிட வேறு நற்பேறு எங்களுக்கு என்ன உண்டு? என்று இலக்குவன் தன் பாதம் நோகத் தங்கள் மனைக்கு எழுந்தருளியதைப் புகழ்ந்து பேசுகிறாள் தாரை என்பதாம். ''நின்பாதம் கொண்டு'' என்பது மற்ற சேனைகளும், பரிவாரங்களும், வாகனங்களும் இல்லாமல், தனியே காட்டு வழியில் திருவடிநோக நடந்து வந்ததைக் குறிக்கும் என்க. இக் கூற்றில் தாரையின் தாயன்பு வெளித் தோன்றுதலை உணர்க.

50. ''வெய்தின் நீ வருதல் நோக்கி வெருவி நின் சேனைவீரர்
செய்திதான் உணர்கிலாது, ''திருஉளம் தெரித்தி'' என்றார்;
ஐய! நீ ஆழி வேந்தன் அடியிணை பிரிகிலாதாய்,
எய்தியது என்னை?'' என்றாள், இசையினும் இனிய சொல்லாள். (4424)

(வெய்து-வெம்மை/கோபம்; வெருவி-அஞ்சி; தெரித்தல்-அறிந்து கூறுதல்; செய்தி-செயல்/ காரணம்)

''வீரனே! நீ மிக்க சீற்றம் கொண்டு வருவதைக் கண்டு, உன்னுடைய வானர வீரர்கள் அச்சம் கொண்டுள்ளனர்; நீ எதற்காக வந்திருக்கிறாய் என்பதை அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் என்னை அணுகி, ''இலக்குவரது உள்ளக் கருத்தை அறிந்து எங்களுக்குத் தெரிவியுங்கள்'' என்று கூறினார்கள். எனவே! மைந்தனே! நீ எப்பொழுதும் ஆணைச் சக்கரத்தை உடைய இராமபிரானின் திருவடிகளை விட்டு இமைப்பொழுதும் பிரியாத இயல்புடையவனாயிற்றே? இப்பொழுது அவனைப் பிரிந்து, நீ மட்டும் தனியாக இங்கு வந்திருப்பதன் காரணம் என்ன?'' என்று கேட்டாள், இசைப்பாட்டைவிட இனிமையான சொற்களைப் பேசும் தாரை.

இங்கே தாரை, வானர வீரர்களை ''நின்சேனை வீரர்'' என்றது நோக்குக. இராம இலக்குவரால் வாலியாரிடமிருந்து பெற்று சுக்கிரீவனுக்கு வழங்கப்பட்ட எழுபது வெள்ளம் சேனை என்பது கருத்து. இப் புகழுரையினால் இலக்குவன் சிறிது சினம் தணிந்தான் என்க.

51. இலக்குவன் தாரையை நோக்குதல்.

''ஆர்கொலோ உரைசெய்தார்?''
என்று அருள்வர, சீற்றம் அஃக
பார்குலாம் முழு வெண் திங்கள்,
பகல்வந்த படிவம் போலும்,

ஏர்குலாம் முகத்தினாளை,
இறைமுகம் எடுத்து நோக்கி,
தார்குலாம் அலங்கல் மார்பன்,
தாயரை நினைந்து நைந்தான். (4425)

(அலங்கல்-அசைதல்/ஒளிவிடுதல்; அஃகல்-குறைதல்/தணிதல்/அகலுதல்; பார்-பூமி; ஏர்-அழகு; குலாம்-விளங்கும்/திகழும்/குலவும்; இறை-சிறிது; எடுத்து-உயர்த்தி/நிமிர்த்தி; நைதல்-வருந்துதல்; வர-தோன்ற/வெளிப்பட)

மலர்மாலைகள் அசைந்தாடி ஒளிவீசும் மார்பினை உடையவனான இலக்குவன், ''இத்தகைய இனிய சொற்களைச் சொன்னவர் யார்?'' என்று பார்க்க வேண்டித் தன் முகத்தைச் சிறிது உயர்த்திப் பார்த்தான். அந்த அளவில் அவன் கோபம் தணிந்தது; அருள் வெளிப்பட்டது. காரணம் அங்கே நின்றது, ஒரு களங்கமற்ற முழு வெண்மதி, நிலத்தில், அதுவும் பகலில் தோன்றினால் எப்படி ஒளி குறைந்து தோன்றுமோ, அதுபோல ஒளி மழுங்கிய முகத்துடன் வாலியின் மனைவியான தாரை, விதவைக் கோலத்தில் தோன்றினாள். அதைக் கண்டதும், இலக்குவன் தன் தாயராகிய சுமித்திரை, கோசலை முதலியோரும் இவ்வாறு தானே கைம்மைக் கோலத்தில் இருப்பார்கள் என்று எண்ணித் தன் மனம் மிகவும் வருந்தினான்.

தார் அலங்கல் என்ற இரண்டு சொற்களும் மாலை என்ற ஒரே பொருளைத் தந்தாலும், தார் என்பது போருக்குரிய அடையாள மாலை என்றும், அலங்கல் என்பது அழகுக்கு அணியப் பெறும் மாலை என்றும் கூர்ந்த பொருள் தரும் என்க. தார், சிகழிகை என்ற சிரமாலை என்றும், அலங்கல் உரமாலை என்றும் கூறுவதுண்டு. ''ஏர்குலாம், முகத்தினாள்'' என்பது இயற்கையிலேயே அழகு பொழியும் முகம் ஒளிமிக்கு விளங்கும். அதே சந்திரன், பகலில், நிலவுலகில் தோன்றினால், தன் இயற்கையான ஒளி மங்கித் தோன்றுமல்லவா? அதைத் தாரையின் இப்போதைய முகத்திற்கு உவமித்த கவிஞனின் கவித்திறம் நோக்குக.

52. தாரையை நோக்கிய இலக்குவன் நிலை.

மங்கல அணியை நீக்கி, மணிஅணிதுறந்து, வாசக்
கொங்குஅலர்கோதை மாற்றி, குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்கு வெம்முலைகள், பூசக்கழுத்தோடு மறையப் போர்த்த,
நங்கையைக் கண்ட வள்ளல், நயனங்கள் பனிப்ப நின்றான். (4426)

(மங்கல அணி-தாலி/மங்கல நாண்/திருமாங்கல்யம்; கொங்கு-தேன்; கோதை-மாலை; சாந்தம்-சந்தனக்குழம்பு; கொட்டா-பூசப்படாத; பொங்கு-பருத்த; பூசம்-பாக்குமரம்/கமுகு; நயனங்கள்-கண்கள்; பனிப்ப-சொரிய/சிந்த)

தன்னுடைய மங்கல நாணையும் நீக்கிவிட்டு, இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பெற்ற மற்ற அணிகலன்களையும் தவிர்த்து, நறுமணம் பொருந்தியதும், தேன் பெருகுவதுமான மலர்மாலைகளையும் அணியாது விடுத்து, குங்குமம், சந்தனம் ஆகிய கலவைகளைத் தன்மார்பில் பூசிக் கொள்ளாது, பருத்த, வெம்மையுடைய கொங்கைகளைத் தன் பாக்குமரம் போன்ற கழுத்தோடு சேர்த்துத் தன் மேலாடையால் மூடிக்கொண்டு தன் எதிரில் வந்து நின்ற தாரையை, கருணை மிகுந்தவனான இலக்குவன் கண்டதும், தாரையின் நிலையை எண்ணியும், தன் தாயரின் நிலையை எண்ணியும் தன் கண்கள் கண்ணீர் சிந்தக் கலங்கி நின்றான்.

பெண்கள் கழுத்துக்கு கமுகை உவமை கூறுவது கவி மரபு, இங்கே ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். மங்கல நாண் அணிதல் பற்றி வான்மீகத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. எனவே அவர் காலத்தில் மங்கல நாண்-தாலி அணிதல் வழக்கில் இல்லை என்பது பெறப்படுகிறது. கம்பன் காலத்தில் தமிழ் நாட்டில் தாலி அணிதல் வழக்கில் இருந்ததால் இவ்வாறு குறிப்பிட்டான் எனக் கொள்ள இடம் இருக்கிறது என்பதை அறிக.

53. இலக்குவன் கூறத்தொடங்குதல்.

''இனையராம் என்னை ஈன்ற,
    இருவரும்'' என்ன வந்த,
நினைவினான், அயர்ப்புச் சென்ற
    நெஞ்சினன், நெடிது நின்றான்,
வினவினாட்கு எதிர்ஒரு மாற்றம்
    விளம்பவும் வேண்டும் என்று, அப்
புனை குழலாட்கு வந்த காரியம்
    புகல்வது ஆனான். (4427)

(இனையர்-இத்தன்மையர்; அயர்ப்பு-தளர்ச்சி; மாற்றம்-மறுமொழி; புனை-அழகிய/அலங்கரிக்கப்பெற்ற; காரியம்-செயல்)

தன்னைப்பெற்றெடுத்த தாயார்களான சுமித்திரையும் கோசலையும் இந்த நிலையில்தானே இருப்பார்கள் என்று மனத்தில் கருதிய இலக்குவன், மனங்கலங்கி, தளர்ச்சியுற்று, திகைப்புற்றுச் சிறிது நேரம் செயலற்று நின்றான்; பின்னர் தன்னிடம் ஒன்றைக் கேட்டவளுக்கு மறுமொழி கூறவேண்டுவது இன்றியமையாதது என்ற எண்ணம் கொண்டு, அந்த அழகிய கூந்தலையுடைய தாரையை நோக்கி, தான் வந்த காரணம் என்ன என்பது பற்றிக் கூறத் தொடங்கினான்.

இங்கே இலக்குவன் ''என்னை ஈன்ற இருவரும்'' என்று கூறுவதை நோக்குக. தான் கைகேயியைத் தன் தாயாகக் கருதாததாலும் கைகேயியை ''இவள்என்தாரம்அல்லள்'' என்றுதசரதன்கூறியதனாலும், கைகேயியைத் தவிர்த்து, மற்ற இருவரையுமே தன் தாயாகக் கருதினான் என்பதைக் கருத்திற்கொள்க. தாரை இப்பொழுது அலங்கரிக்கப்பட்ட கூந்தலுடன்

இருக்கவில்லை, என்றாலும் கூந்தலை மழித்துவிடவும் இல்லை என்பதைக் குறிக்க ''அப்புனைகுழலாள்'' என்று கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக.

54. ''சேனையும் யானும் தேடித்
தேவியைத் தருவென்'' என்று
மானவர்க்கு உரைத்த மாற்றம்,
மறந்தனன் அருக்கன் மைந்தன்;
''ஆனவன் அமைதி வல்லை
அறிக'' என, அருளின், வந்தேன்;
மேல் நிலை அனையான் செய்கை
விளைந்தவா, விளம்புக'' என்றான். (4428)

(அருக்கன்-சூரியன்; மானவர்-மனுகுலத்தோன்றல்; மாற்றம்- உறுதி மொழி; வல்லை-விரைந்து; விளைந்தவா-நடைபெற்றபடி; அமைதி-செயல்பாடின்மை/எண்ணம்; அருள்-கட்டளை)

''நானும் என் படைகளும் உன்தேவியைத் தேடிக் கண்டு பிடித்து உன்னிடம் சேர்ப்போம் என்று மனுகுலத் தோன்றலாகிற இராமபிரானுக்கு உறுதிமொழி கூறிய, சூரியன் மைந்தனான சுக்கிரீவன், அதை மறந்து போய்விட்டான். எனவே, ''அவன் இதுகாறும் செயல்படாது அமைதியாக இருப்பதன் காரணத்தை விரைவில் சென்று அறிந்து வருக'' என்று இராமபிரான் இட்ட கட்டளையினால் நான் இங்கு வந்தேன். மேம்பட்ட அரசியல் நிலை பெற்றவனான சுக்கிரீவன் படைகொண்டுவராது இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறான், என்று எனக்குக் கூறுவாயாக'' என்று இலக்குவன் தாரையை நோக்கிக் கேட்டான்.

55. தாரை மாற்றம் கூறுதல்.

''சீறுவாய் அல்லை ஐய! சிறியவர் தீமைசெய்தால்,
ஆறுவாய் நீ அலால் மற்று ஆர் உளர்? அயர்ந்தான் அல்லன்;
வேறுவேறுஉலகம்எங்கும்தூதரை விடுத்து,அவ்வெல்லை
ஊறுமா நோக்கித் தாழ்த்தான்; உதவிமாறுஉதவி உண்டோ? (4429)

(சீறுதல்-கோபித்தல்; ஆறுதல்-தணிதல்; அயர்த்தல்-மறுத்தல்; ஊறுதல்-வருதல்; தாழ்த்தல்-தாமதித்தல்; மாறு-கைம்மாறு/பிரதிஉதவி; எல்லை-இடம்)

''மைந்தனே! கோபம்கொள்ளாதே; உங்களைவிட எல்லா விதத்திலும் சிறியவர்களான சுக்கிரீவன் முதலியவர்கள் தீங்கு செய்தால் கூட, அதைப்பொறுத்துத் தணிந்து போகும் இயல்புடையவர்கள் உன்னை அல்லாது வேறு யார் இருக்கிறார்கள்? எனினும், சுக்கிரீவன் அவன் தந்த உறுதிமொழியையோ, நீங்கள் அவனுக்குச் செய்த பேருதவியையோ மறக்கவில்லை; உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும், குரங்குச்

சேனைகளை அழைத்துவரத் தனது தூதர்களை அனுப்பி வைத்தருக்கிறான் அவ்விடங்களிலிருந்து வந்து சேரவேண்டிய வானர வீரர்களை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதால்தான் காலதாமதம் ஆகிவிட்டது. நீங்கள் செய்த உதவிக்கு அவன் கைம்மாறு என்று கருதி ஏதேனும் ஓர் உதவி உங்களுக்குச் செய்யமுடியுமோ? நீங்கள் செய்த உதவி கைம்மாறு கருதாத பேருதவியன்றோ?'' என்றாள் தாரை.

''உதவிமாறு உதவி'' என்பது செய்யாமற்செய்த உதவி, கைமாறு கருதா உதவி எனப் பொருள்படும். ''சிறியோர் பெரும் பிழை செய்தனராயின், பெரியோர் அப்பிழை பொறுத்தலரிது'' என்றும் கூறுவது காண்க.

56. ''ஆயிரகோடி தூதர் அரிக்கணம் அழைப்ப, ஆணை
போயினர்; புகுதும் நாளும்புகுந்தது; புகல் புக்கோர்க்குத்
தாயினும் இனிய நீரே தணிதிரால்! தருமம் அஃதால்,
தீயன செய்யார் ஆயின், யாவரே செறுநர் ஆவார்?'' (4430)

(அரிக்கணம்-குரங்குக்கூட்டம்/வானரசேனை; புகுதல்- வந்து சேருதல்; புகல்-சரண்; செறுநர்-தண்டனைக்குரியவர்/தண்டிக்கப்பட வேண்டியவர்)

ஆயிரம் கோடி என்று சொல்லப்படுகின்ற எண்ணற்ற தூதர்கள் குரங்குப்படைகளை அழைத்து வருவதற்காக, சுக்கிரீவன் கட்டளைப்படி, உலகத்தின் பல பகுதிகளுக்கும் சென்றிருக்கின்றனர்; அவர்கள் வந்து சேர வேண்டிய காலமும் நெருங்கிவிட்டது. உங்களைச் சரணடைந்தவர் களைத் தாயினும் மிகுந்த அன்பு பாராட்டிக் காக்கின்றவர்களாகிய நீங்கள், இப்போதும் சீற்றம் தணிய வேண்டும். அதுதான் தருமத்தின் பாற்பட்ட தாகும். ஒருவரும் தீங்கு செய்யவில்லை என்றால், தண்டிக்கப்படுபவர் என்பவர் யார் இருக்கிறார்களா? ஒருவரும் இல்லை'' என்கிறாள் தாரை.

ஆயிரம் கோடி என்பது மிகப்பல என்ற எண்ணுப் பொருளைத் தரும். ''காலம்தாழ்ந்து போய்விட்டது என்ற இந்தச்சிறிய பிழையைத் தவிர வேறு ஏதும் பெரிய தீங்கு செய்துவிடவில்லை. எனவே நீங்கள் எங்களைத் தண்டிப்பது அறமாகாது, மாறாக உங்களைச் சரணடைந்தவர்களை, தாயினும் மேலாகக் காப்பாற்றுவது உங்கள் இயல்பும்கூட. எனவே சீற்றம் தணிவீராக'' என்றாள் தாரை. தங்கள் மனம் அறியப் பிறர்க்குத் தீங்கு செய்யாதவர்களைத் தண்டித்தல் பேரருளாளர்க்குத் தக்க அறமன்று என்பது கருத்து. கூதிர்காலம் முடிந்ததும். அனுமன் சுக்கிரீவனிடம், இராமனுக்குச் செய்து கொடுத்த உறுதிமொழியை நினைவுப்படுத்தி, தூதுவர்களைப் பலபாகங்களுக்கும் அனுப்பிவைத்துவிட்டுத்தான் இன்ப நுகர்ச்சிகளில் ஈடுபட்டிருந்தான் என்று வான்மீகம் கூறும், கம்பன் இதனை முன்னர் கூறாது, இப்போது தாரையின் கூற்றாகக் கூறினான் என்க.

57. "அடைந்தவர்க்கு அபயம் நீவிர்
அருளிய அளவில் செல்வம்
தொடர்ந்து, நும்பணியின் தீர்ந்தால்,
அதுவும் நும் தொழிலேயன்றோ?
மடந்தைதன் பொருட்டால் வந்து, வாள்
அமர்க்களத்து மாண்டு
கிடந்திலர் என்னின், பின்னும்
நிற்குமோ கேண்மை அம்மா?" (4431)

(தீர்தல்-தாமதித்தல்; அடைந்தவர்-சரண்புகுந்தவர்; தொழில்-செயல்; வாள்-கொடிய கேண்மை-நட்பு; அபயம்-பாதுகாப்பு; செல்வம்-அரசபதவி; நிற்றல்-நிறைபெறுதல்)

"உங்களிடம் வந்து அடைக்கலம் என்று சரண் புகுந்தவர்களாகிய சுக்கிரீவன் முதலியோர்க்கு நீங்கள்தான் அளவற்ற பெருஞ்செல்வமாகிய அரசபதவி என்னும் அரசச் செல்வத்தையும் அளித்தீர்கள்; அவன் மனைவியையும் அளித்தீர்கள்; அதைத் தொடர்ந்து அவர்கள் உங்கள் பணியாகிய சீதாதேவியைத் தேடுவதற்காக, வானரப் படைகளைத் திரட்டுதல் என்கின்ற கட்டளையினின்றும் தவறினால், அல்லது, காலந்தாழ்த்தி, போக நுகர்ச்சிகளில் ஈடுபட்டிருந்தால் அதுவும் உங்களால் கிடைத்ததுதானே? எனவே கோபப்படாதீர்கள்; சீதாதேவியைத் தேடும் பொருட்டு, அரக்கர்களுடன் செய்யப்போகின்ற கொடிய போர்க்களத்தில் உங்களுக்காக அவர்கள் உயிரை விடாவிட்டால், பின்னர் நட்பு என்பதற்கு என்ன பொருள்? அது எப்படி நிலைத்து நிற்பதாகக் கொள்ள முடியும்?" என்றாள் தாரை.

சுக்கிரீவன் முதலியவர்க்கு அரசச்செல்வத்தையும், அவன் மனைவியையும் வாலியிடமிருந்து பெற்றுக் கொடுத்தவர்கள் நீங்கள்தானே? அவன் அதை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றான் எனவே இதுவும் நீங்கள் கொடுத்ததுதானே என்று கூறும் தாரை, மேலும் அவர்கள் போர்க்களத்தில் உயிர்கொடுத்தேனும் சீதையை மீட்டுக்கொடுத்து, உங்கள் நட்பைக் காப்பாற்றிக் கொள்வார்கள் என்று உறுதியும் கூறினாள் என்பதாம். தாரை "நயம்பட உரைத்தலை" நோக்குக.

58. "செம்மை சேர் உள்ளத்தீர்கள்
செய்த பேர் உதவி தீரா
வெம்மை சேர் பகையும் மாற்றி,
அரசுவீற்று இருத்திவிட்ட
உம்மையே இகழ்வர் என்னின்,
எளிமையாய் ஒழிவது ஒன்றோ?
இம்மையே வறுமை எய்தி,
எழுமையும் இழப்பர் அன்றே?" (4432)

(செம்மை-அறம்/நடுவு நிலைமை/தருமம்; தீர்தல்-சிதைத்தல்; வெம்மை-கொடுமை; மாற்றுதல்-அழித்தல்; இம்மை-இப்பிறப்பு; எழுமை-ஏழுபிறப்புகள்; இகழ்தல்-புறக்கணித்தல்)

நடுநிலைமையும், அறவழியும் பொருந்திய உள்ளத்தை உடையவர்களாகிய நீங்கள் செய்த பெரிய, அரிய உதவியை மறந்து அது சிதைந்து அழியும்படி, மிகக் கொடுமை பொருந்திய அவனுடைய பகைவனாகிய வாலியையும், அழித்து அவனுக்கு கிட்கிந்தை அரசச் செல்வத்தைப் பெற்றுத் தந்தவர்களாகிய உங்களையே அவர்கள் இகழ்ந்து புறக்கணிப்பார்கள் என்றால், மற்றவர்களால் அவர்கள் ஒழிக்கப்படுவது மிக எளிதல்லவா? அதோடு மட்டுமின்றி, அவர்கள் அவ்வாறு செய்வார்களானால், இப்பிறப்பிற்குரிய செல்வமும் புகழும் அழிந்து, வறுமையும் இகழ்வும் பெற்று, இன்னும் வருகின்ற மற்ற எல்லாப் பிறப்புகளிலும் பெறவேண்டிய நற்கதிகள் அனைத்தையும் இழந்து நரகத்தையும் அடைவரன்றோ?'' என்றாள் தாரை.

''செம்மைசேர் உள்ளத்தீர்'' என்றது இராமஇலக்குவரது நற்குண நலன்களை என்க. வெம்மை சேர்பகை என்றது, யாவராலும் அழிக்க முடியாத ஆற்றல் பெற்ற வாலியைக் குறித்து என்க. எழுமை என்பது இன்னும் வருகின்ற எல்லாப் பிறப்புக்களிலும் என்று பொருள்படும். இறுதியாகச் சுக்கிரீவன் அவ்வாறு செய்நன்றி மறந்தவன் அல்லன் என்று கூறுகிறாள் தாரை என்பது கருத்து.

59. ''ஆண்டபோர் வாலி ஆற்றல்
மாற்றியது அம்பு ஒன்று ஆயின்
வேண்டுமோ துணைவர்? நும்பால்
வில்லினும் மிக்கது உண்டோ?
தேண்டுவார்த் தேடுகின்றீர்
தேவியை; அதனைச் செவ்வே
பூண்டு நின்று உய்தற்பாலார்
நும் கழல் புகுந்துளோரும். (4433)

(மாற்றியது-சிதைத்தது; தேண்டுதல்-தேடுதல்; கழல்-திருவடிகள்; செவ்வே-மிகச்சரியாக; பூண்டு-மேற்கொண்டு; உய்தல்-ஈடேறுதல்/நற்கதி அடைதல்)

''போராற்றல் மிக்க அரசனாகிய வாலியை முன்பு, அழித்தது உங்களுடைய ஒரே இராமபாணம்தான் என்றால், பகைவர்களை அழிக்க உங்களுக்கு வேறு ஒரு துணைவரும் வேண்டுவரோ? உங்களது வில்லைக் காட்டிலும் மேம்பட்ட துணை வேறு ஒன்று உண்டோ? எனவே இப்பொழுது சீதையைத் தேடிக்கண்டுபிடிக்கத்தான் ஆட்களைத் தேடு கின்றீர்கள்; இந்தப்பணியை, உங்கள் திருவடிகளை அடைந்து சரண்புகுந் திருக்கும் இந்தச் சுக்கிரீவன் முதலானோர்கள் தலைமேற்கொண்டு செவ்வனே செய்து முடித்து, நற்கதி அடைய விழைவு கொண்டிருக் கிறார்கள்'' என்றாள் தாரை.

''நீங்கள் கூட்டு ஒருவரும் வேண்டாக் கொற்றவர்; உங்களது பகையை அழிக்க உங்களுக்குத் துணை தேவைப்படவில்லை. அதற்கு உங்கள் அம்பு ஒன்றே போதுமானது. உங்கள் மனைவி சீதாதேவியை எல்லா இடங்களிலும் சென்று தேடிக்கண்டுபிடிக்கும் வலிமைவாய்ந்தவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்; உங்களைச் சரண் அடைந்திருக்கும் சுக்கிரீவன் முதலியோர் அந்தப் பணியைச் செவ்வனே செய்து முடித்து, தாங்கள் நற்கதிஅடையத் தயாராய் இருக்கிறார்கள்'' என்கிறாள் தாரை. சுக்கிரீவன் முதலியோர் குற்றமற்றவர்கள் என்றும், இராமஇலக்குவர்பால் பேரன்பு கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் மீது சினம் கொள்ளக்கூடாது என்றும் கூறி இலக்குவன் சினத்தைத் தணிக்கிறாள் தாரை என்பதாம்.

60. அனுமன் இலக்குவன் அருகில் வருதல்.

என்று அவள் உரைத்த மாற்றம் யாவையும் இனிது கேட்டு,
நன்று உணர் கேள்வியாளன், அருள்வர, நாண் உட்கொண்டான்;
நின்றனன்; நிற்றலோடும், ''நீத்தனன் முனிவு'' என்று உன்னி,
வன்துணை வயிரத் திண்தோன் மாருதி மருங்கின் வந்தான். (4434)

(மாற்றம்-சொல்/பதிலுரை; அருள்-கருணை; முனிவு-கோபம்/வெகுளி; உன்னி/கருதி; மருங்கு-அருகே)

இவ்வாறு தாரை கூறிய சொற்கள் எல்லாவற்றையும், நன்குகேட்ட, கல்வி கேள்விகளில் வல்லவனான இலக்குவன், தான் முன்பு இவர்கள் பால் கொண்ட கோபம் பொருளற்றது என்று எண்ணி வெட்கமடைந்து, இப்போது அவர்கள்மேல் கருணை மிகத் தோன்றுமாறு, செயலற்று நின்றான். அவன் அவ்வாறு நிற்பதைக் கண்ட வலிய வயிரம் பாய்ந்த இரு தோள்களையுடைய அனுமன், ''இலக்குவன் கோபம் தீர்ந்தனன்'' என்று எண்ணி, அவன் அருகில் வந்து நின்றான்.

''நன்று உணர் கேள்வியான்'' என்றது, அனுமன் நவவியாக்ரணப் பண்டிதன் மட்டுமல்லாமல், தூய கேள்வி ஞானமும் நுண்ணறிவும் நிரம்பப்பெற்றவன் என்பதைக்குறிக்க என்க; நாணுதல் என்பது சால்பு, பண்பு முதலிய குணங்களால் உயர்ந்தோர், தம் கருத்திற்கு ஒவ்வாத செயல்களைச் செய்வதில் வெட்கமுடையவராதல் என்ற விரிந்த பொருள் கொள்ளும். மாறாகக்கூறும் மறுமொழி மாற்றம் எனப்படும்.

61. இலக்குவன் அனுமனையும் கேட்டல்.

வந்து அடி வணங்கி நின்ற
மாருதி வதனம் நோக்கி,
''அந்தம் இல் கேள்வி நீயும்,
அயர்த்தனை ஆகும்அன்றே,

முந்திய செய்கை?'' என்றான்; ''முனிவு
இனும் முளைக்கும்'' என்று அங்கு
''எந்தை! கேட்டு அருளுக!
என்னா இயம்பினன், இயம்பவல்லான். (4435)

(அந்தம்இல்-முடிவில்லாத; அயர்த்தல்-மறத்தல்; முனிவு-கோபம்; முளைக்கும்-தோன்றும்)

வந்து தன் பாதங்களை வணங்கி நின்ற அனுமனின் முகத்தை எதிர்நோக்கி, இலக்குவன், ''எல்லையில்லாத நூற்கல்வியும், கேள்விக் கல்வியும் பெற்றவனான நீயும் கூட முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மறந்து விட்டாய் அல்லவா?'' என்று கேட்டான்; அதற்குச் சொல்லின் செல்வனாகிய அனுமன், இவன் இன்னும் சீற்றம் தணியவில்லை; இன்னும் தோன்றும் போலும் என்று எண்ணி ''தந்தை போன்றவனே! நான் கூறுவதைத் தயவு செய்து கேட்டருள்வாயாக'' என்று கீழ்க்கண்டவாறு கூறலானான்.

''அந்தம் இல் கேள்வியான்'' என்பது காப்பியத்தில் பலவிடத்திலும் பேசப்படுதலை நினைவிற்கொள்க. ''முந்திய செய்கை'' என்பது இராமபிரானும் சுக்கிரீவனும் நட்புக் கொண்டபோது, கார்காலம் முடிந்ததும் தம் படையுடன் வருவதும் சீதையைத் தேடித்தருவதும், என்று சுக்கிரீவன் இராமபிரானுக்குத் தந்த உறுதிமொழிகளைக் குறிக்கும். இயம்ப வல்லான் என்பது சொல்லின் செல்வனும், பிறர் கருத்து அறிந்து மாற்றம் கூறும் சொல்வன்மையும் உடைய அனுமனைக் குறித்தது என்க.

62. ''சிதைவு அகல்காதல் தாயை,
தந்தையை, குருவை, தெய்வப்
பதவி அந்தணரை, ஆவை,
பாலரை, பாவைமாரை
வதைபுரிகுநர்க்கும் உண்டாம்
மாற்றலாம் மாற்றம்; மாயா
உதவி கொன்றார்க்கு ஒன்றானும்
ஒழிக்கலாம் உபாயம் உண்டோ.'' (4436)

(சிதைவுஅகல்-குற்றமில்லாத; ஆ-பசு; வதைபுரிதல்-கொலைசெய்தல்; மாற்றம்-கழுவாய்/பரிகாரம்; மாயா-அழியாத; பதவி-உயர்நிலை; மாற்றுதல்-நீக்குதல்; உபாயம்-வழி)

''குற்றமில்லாத அன்புடைய தாய், தந்தை, ஆசான், தெய்வநிலையில் வைத்து எண்ணத்தகும் அந்தணர் என்ற அறவோர், பசு, இளம்குழந்தை, மகளிர், ஆகியோர்களைத் துன்புறுத்திக் கொலை செய்தவர்களுக்குக்கூட, அப்பெரும்பாவத்தைப் போக்குதற்குரிய பரிகாரம் இருக்கிறது. ஆனால் மறக்கவும் அழிக்கவும் முடியாத பேருதவி செய்தவர்களின்பால் நன்றி மறக்கும் செய்கையாகிய செய்ந்நன்றி மறத்தல் என்பதைச் செய்தவர்க்கு,

அதைப் போக்குகின்ற வழி ஏதேனும் இருக்கிறதோ? இல்லை'' என்கிறான் அனுமன்.

தாயின் அன்பு கேடில்லாதது, தூய்மையானது என்பதைக் குறிக்க ''சிதைவுஅகல் காதல்'' என்றான். அந்தணர் என்போர் அறவோர், அவர் தெய்வம் என்ற உயர்நிலையில் வைத்துப் போற்றப் படவேண்டுபவர் என்பதால் ''தெய்வப்பதவி அந்தணர்'' என்றான். பசுவும், இளம் குழந்தைகளும், மகளிரும் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள். எனவே அம் மூவகையினரையும் இணைத்துக் கூறினான் என்க. இத்தகைய கொடிய செயலைச் செய்தவர்களுக்குக்கூட பாவ விமோசனம் உண்டு. ஆனால் செய்ந்நன்றி மறந்தவர்களுக்கு எந்த உபாயமும் இல்லை என்பது அனுமன் கருத்து. ''கரியமாலினும், கண்ணுதலானினும், உரியதாமரைமேலுறைவானினும், விரியும் ஓதம் ஓர் ஐந்தினும். மெய்யினும் பெரியர் அந்தணர்'' என்பது வசிஷ்டரின் கூற்று. ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பது குறள்-110.

63. ''ஐய! நும்மொடும் எங்கள் அரிக்குலத்து அரசனோடும்,
மெய்உறு கேண்மைஆக்கி, மேலைநாள் விளைவது ஆன
செய்கை, என் செய்கையன்றோ? அன்னது சிதையுமாயின்,
உய்வகை எனக்கும் உண்டோ? உணர்வு மாசு உண்டது அன்றோ? (4437)

(ஐயம்-வியப்பு/பெருமையுமாம்; கேண்மை-நட்பு; செய்கை-பணி/ கடமை; சிதைதல்-கெடுதல்; மாசுண்டது-குற்றத்திற்கு உட்படுவது)

''தலைவனே! சூரியகுலத்து உதித்த உங்களுக்கும், எங்கள் வானரகுலத்து அரசனாகிய சுக்கிரீவனுக்கும், உண்மையான நிலைபெற்ற நட்பு உண்டாகுமாறு, முன்பு செய்துவைத்தது நான்தானே? அதுநான் செய்த செய்கைதானே! அத்தகைய நட்புக்கு ஒருகேடு வரும் என்றால், அதிலிருந்து தப்பிப்பிழைக்கும் வழி எனக்கு உண்டோ? இல்லையல்லவா? அதனால் நாங்கள் பெற்ற அறிவும், நல்லுணர்வுகளும் செய்ந்நன்றி மறத்தல் போன்ற குற்றத்துக்கு இலக்காகிப் போகுமல்லவா? ஆகையால் அந்நட்புச் சிதையாமல் நான் காப்பேன்'' என்கிறான் அனுமன்.

''மெய்உறு கேண்மை'' என்பது, நிலைபெற்ற, தொடர்ந்த உண்மையான நட்பு என்பதைக் குறிக்கும். நீர்க்குமிழிபோல் தோன்றி உடனே மறைவதல்லாமல், தாமரைப்பூப்போல் முதலில் விரிந்துபின் கூம்பிப்போகாமல், கோட்டுப் பூப்போல், எப்பொழுதும் மலர்ந்து நிற்கும் உள்ளம் ஒத்த உண்மையான நட்பு என்பதாம். இராம இலக்குவர்க்கும் சுக்கிரீவனுக்கும் இடையே உண்டான நிலைபெற்ற நட்புக்குத் துணையாக நடுவில் நின்ற மூலகாரணன் தானே என்கிறான் அனுமன். எனவே அந்நட்புக்கு இடையூறு நிகழுமாயின் அது தன்னையும் பாதிக்கும் என்று உணர்வு பூர்வமாகப் பேசுகிறான் அனுமன் என்க.

64. ''தேவரும், தவமும் செய்யும் நல்அறத் திறமும், மற்றும்
யாவையும், நீரே என்பது என்வயின் கிடந்தது; எந்தாய்!
ஆவது நிற்க! சேரும் அரண் உண்டோ? அருள் உண்டு அன்றே?
மூவகை உலகும் காக்கும் மொய்ம்பினீர்! முனிவு உண்டானால்? (4438)

(என்வயின்-என்னிடத்தில்/என்னுள்ளத்தில்; மொய்ம்பு-வலிமை; முனிவு-சீற்றம்; அரண்-பாதுகாப்பான இடம்; தேவர்-தெய்வம்)

''என்தந்தை போன்றவனே! நீங்கள்தான் எங்களுக்குத் தெய்வம்; நாங்கள் முற்பிறப்பிலும் இப்பிறப்பிலும் செய்த தவத்தின் பயனாகவும், நல்ல தருமகாரியங்களின் விளைவாகவும், மற்றும் எல்லாமாகவும் நீங்கள்தான் என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து நிற்கிறீர்கள்; இது அவ்வாறே இருக்கட்டும்; இந்த மேல் நடு, கீழ் என்ற மூன்று உலகங்களிலும் வாழும் உயிரினங்களைப் பாதுகாக்கும் வலிமையுடைய நீங்கள் எங்கள்மேல் சீற்றம் கொள்வீர்களானால், நாங்கள் சென்று சேர்வதற்கு உங்கள் கருணையைத் தவிர எங்களுக்கு, வேறு ஒரு பாதுகாப்பான இடம் உண்டோ? இல்லையல்லவா எனவே எங்கள்மீது சீற்றம் கொள்ளாது கருணை கொண்டு சீற்றம் தவிர்க'' என்கிறான் அனுமன்.

உங்களை நான் கண்ட அன்றே நீங்கள் தெய்வீக அவதாரம் என்பதையும், நீங்கள் இங்கு எழுந்தருளி வந்தது நாங்கள் செய்த தவத்தாலும், நல்லறத் திறத்தாலும்தான் என்பதை நான் நன்கு உணர்ந்துகொண்டேன். எனவேதான் இருவருக்கும் நட்புச் செய்து வைத்தேன், இப்போது நீங்கள் சீற்றம் கொண்டாலும், எங்களுக்கு நீங்கள்தான் கதி. எனவே சீற்றம் தவிர்க என்கிறான் அனுமன் என்பதாம். முன்பு ''என்பு எனக்கு உருகுகின்றது; இவர்கின்றது அளவுஇல் காதல்; அன்பினுக்கு அவதியில்லை; அடைவென் கொல் அறிதல் தேற்றேன்'' என்ற அனுமன்கூற்றையும் இங்கு நினைவு கூர்க. நீங்கள் எங்களிடம் சீற்றம் கொண்டால் தப்பிப் பிழைத்துப்போகப் பாதுகாப்பான இடம் எங்களுக்கு வேறு இல்லை. தங்களுடைய பெருங்கருணையேதான் எங்களை ஆட்கொள்ள வேண்டும் என்பது அனுமன் கருத்து. ''எங்குபோய் உய்கேன்? உன் இணையடியே அடையல் அல்லால், எங்கும் போய்க் கரைகாணாது, எறிகடல் வாய் மீண்டேயும், வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே'' என்பது பெருமாள் திருமொழி.

65. ''மறந்திலன் கவியின்வேந்தன், வயப்படை வருவிப்பாரைத்
திறம் திறம் ஏவி, அன்னார் சேர்வது பார்த்துத் தாழ்த்தான்
அறம் துணை நுமக்கு உற்றான் தன் வாய்மை. இன்று அழியுமாகில்,
பிறந்திலன் அன்றே? ஒன்றோ? நரகமும் பிழைப்பது அன்றால்'' (4439)

(வாய்மை-உறுதிமொழி; பிழைப்பது-தப்பிப்பது; கவி-குரங்கு/ வானரம்; வய-வலிமைமிக்க; வருவிப்பார்-தூதர்; திறம்திறம்-எல்லாத்துறைகளிலும்/தொகுதி தொகுதியாக; தாழ்த்தல்-தாமதித்தல்)

''குரங்கினத்தின் தலைவனாகிய சுக்கிரீவன் உங்களுக்குத் தந்த உறுதிமொழியை மறக்கவில்லை; வெற்றியும் வலிமையும் பொருந்திய குரங்குச் சேனையைக் கொண்டு சேர்ப்பவர்களாகிய தூதர்களை எல்லாத் திக்குகளுக்கும் பகுதி பகுதியாகப் பிரித்து அனுப்பி இருக்கிறான்; அவர்கள் வந்து சேர்கின்ற காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறான். அதனால் உங்களிடம் வருவதற்குக் காலம் தாழ்ந்தது. தருமமே உருவாகிய உங்களிடம் நட்புக்கொண்டவனாகிய சுக்கிரீவனின் உறுதிமொழி காப்பாற்றப் படாமல் அழிந்து போகும் என்றால், அவன் இவ்வுலகில் பிறந்தவனாகவே கருதப்படமாட்டான்; இத்தோடுமட்டுமல்ல அவன் மறுபிறவியிலும் நரகம் சென்று சேர்வதில் இருந்து தப்பமுடியாது என்கிறான்'' அனுமன்.

இவ்வுலகில் பிறந்தவர்கள் சத்தியம் தவறாது, வாய்மையைக் காப்பாற்றவேண்டும். அவ்வாறு செய்யார் என்றால் தாங்கள் இவ்வுலகில் பிறப்பெடுத்ததாகவே கருதப்படமாட்டார்கள், அவர்கள் மறுமையிலும் நரகமே எய்துவர் என்பது அனுமன் கருத்து. சுக்கிரீவன் கார்காலம் முடிந்த உடனேயே தன் தளபதியான நளனை அனுப்பி வானரச்சேனைகளைத் தொகுத்துக் கொணருமாறு கட்டளையிட்ட பின்தான் போகங்களில் ஈடுபட்டான் என்று முதல் நூல் வான்மீகமும் கூறும். இவ்வாறே முன்பு தாரை கூறியதையும் நினைவிற் கொள்க.

66. ''உதவாமல் ஒருவன் செய்த உதவிக்குக் கைம்மாறாக,
மதயானை அனைய மைந்த! மற்றும் உண்டாகவற்றோ?
சிதையாத செருவில், அன்னான் முன்சென்று, செறுநர் மார்பில்
உதையானேல், உதையுண்டு ஆவி உலையானேல், உலகில் மன்னோ? (4440)

(மதம்-வலிமை; கைம்மாறு-மாற்றுதவி/பிரதி உபகாரம்; சிதையாத-ஒழியாத; செரு-பெரும்போர்; முன்-முந்தி/முற்பட்டு; செறுநர்-பகைவர்; உலைதல்-மடிதல்; வற்றோ-வல்லவரோ; மைந்தன்-வீரன்; உதைத்தல்-செலுத்துதல்/அழித்தலுமாம்)

''வலிமைசெறிந்த யானை போன்ற வீரனே! தான் ஒருவனுக்கு உதவி செய்யாமல் இருக்க, ஆனால் மற்றொருவன், தான் கேளாமலேயே தனக்கு வந்து உதவி செய்தபோது, அந்த உதவிக்குப் பிரதிஉபகாரமாக, அவன் போர்செய்த்தற்கு எழும்போது, அவனுக்கு முன்னதாகவே முந்திச்சென்று பகைவரின் மார்பில் அம்பு செலுத்தி பகைவனைக் கொல்லவேண்டும்; இது இயலாத போது, பகைவர்களால் அழிக்கப்பெற்று உயிரைப் போக்கிக் கொள்ளவேண்டும்; இவற்றில் எது ஒன்றையும் செய்யாவிட்டால் அவன் இவ்வுலகில் உயிர்பெற்றிருப்பதால் என்னபயன் உண்டாகும்?'' என்கிறான் அனுமன்.

''உதவாமல் ஒருவன் செய்த உதவி'' என்பது ஒருவர் தனக்கு வலிய வந்து செய்த, காரணமில்லாத உதவியைக் குறிக்கும். ''செய்யாமல் செய்த உதவிக்கு இவ்வையகமும் வானகமும் மாற்றல் அரிது'' என்பது குறள்-101.

உதைத்தல் என்பது போர்க்களம் சென்று பகைவருடன் போர் செய்து அவர்களை அழித்தல் என்றும், அம்பு செலுத்துதல் என்றும் இரு பொருளையும் தரும். கைம்மாறு என்பது முன் செய்த உதவிக்குப் பின்னே செய்யப்படும் மாற்று உதவியைக் குறிக்கும். மதயானை என்பது மதம் மிகுந்த யானை என்றும், வலிமை பொருந்திய யானை என்றும் பொருள்படும் ''மதவே மடனும் வலியும் ஆகும்'' என்பது தொல் காப்பியம்.

67. "ஈண்டு இனி நிற்றல் என்பது இனியதோர் இயல்பிற்று அன்றால்;
வேண்டலர் அறிவரேல், நும்கேண்மை தீர் வினையிற்றாமால்;
ஆண்தகை ஆளிமொய்ம்பின் ஐய! நீர்அளித்த செல்வம்
காண்டியால் உன் முன்வந்த கவிக்குலக் கோனோடு" என்றான். (4441)

(ஆளி-ஆண்சிங்கம்; மொய்ம்பு-வலிமை; வேண்டலர்-பகைவர்; தீர்தல்-கெடுதல்; கேண்மை-நட்பு; கோன்-அரசன்; காண்டி-காண்பாயாக)

''ஆண்களுக்குரிய பெருந்தன்மையும்; ஆண்சிங்கம் போன்ற வலிமையும் உடைய தலைவனே! இலக்குவ! நீ இன்னமும் எங்களோடு மாறுபாடு கொண்டவன் போல் இங்கே நின்று கொண்டிருப்பது நமக்கு நன்மை பயப்பதாக அமையாது; இதனை நமது பகைவர்கள் யாரேனும் பார்க்க நேர்ந்தால் அது நம் நட்பு நீங்குவதற்கு உரிய செயலாக முடிந்துவிடும்; எனவே நீங்கள் பெருந்தன்மையுடன் எங்களுக்கு நல்கிய அரசச் செல்வத்தையும் உன்முன் பிறந்தவனும், வானரக்குலத்தலை வனுமாகிய அரசன் சுக்கிரீவனையும் உள்ளே வந்து காண்பாயாக!'' என்றான் அனுமன்.

நீ இங்கு தலைவாயிலில் வரும்போது, வானரர்கள் உன்சீற்றத்தைக் கண்டு அஞ்சித் தம்மைக்காத்துக்கொள்ளவே தலைவாயிலைப் பெருங் கற்கள் கொண்டு மூடினார்களேயன்றி உன்னுடன் போர்செய்யவேண்டும் என்ற பகைமை காரணமாக அல்ல. எனவே நீ பெரும் சீற்றம் கொண்டாய். எனவே நீ இன்னும் இங்கு நின்று கொண்டிருப்பது நல்லதல்ல. பகைவர்கள் யாரேனும் இதைக் காணநேர்ந்தால் நம் நட்பை முறிக்கும் செயல்களில் ஈடுபடக்கூடும். எனவே நீங்கள் தயை கூர்ந்து எங்களுக்கு அளித்த அரசச்செல்வத்தையும், எங்கள் வானர குலத்தலைவனாகிய சுக்கிரீ வனையும் உள்ளே வந்து காண்பீராக'' என்றான் அனுமன்.

68. இலக்குவன் சீற்றம் தணிதல்.

மாருதி மாற்றம் கேட்ட மலைபுரை வயிரத்தோளான்
''தீர்வினை சென்று நின்ற சீற்றத்தான், சிந்தை செய்தான்
ஆரியன் அருளின் தீர்ந்தான் அல்லன்; வந்து அடுத்தசெல்வம்
பேர்வு அரிதாகச் செய்த சிறுமையான்'' என்றும் பெற்றி. (4442)

(புரை-போன்ற; வயிரம்-திண்ணிய; ஆரியன்-மேலோன்; தீர்தல்-நீங்குதல்; அடுத்த-வந்து சேர்ந்த; பெற்றி-தன்மை; சிறுமை-காமம்; அருள்-கட்டளை)

அவ்வாறு கூறிமுடித்த அனுமனின் சொற்களைக் கேட்ட மலை போன்று உறுதியும், திண்மையும்வாய்ந்த தோள்களையுடைய இலக்குவன், நீக்குதற்கரிய கோபத்தினின்றும் சிறிது தணிந்தவனாகி, ''மேலோனான இராமபிரானின் கட்டளையிலிருந்து சுக்கிரீவன் பிறழவில்லை; இதை அவன் மறக்கவில்லை; எனினும் புதிதாகத் தனக்குக் கிடைத்த நீக்குதற்கரிய செல்வக்களிப்பினால் அரசச் செல்வத்தின் சுகபோகத்தை நுகர்ந்ததனால் விளைந்த சிறுமையாகும் இத்தன்மை'' என்று தன் மனத்தில் உய்த்து உணர்ந்து கொண்டான்.

தன்னைஎதிர்பாராது வந்தடைந்தசுகபோகங்கள்அவனைஅதைவிட்டு நீங்காதவாறு, காம நுகர்ச்சியில் அழுத்தி விட்டனவே தவிர, அவன் உண்மையில் இராமபிரானின் கட்டளையை மறக்கவும் இல்லை; அதனின்றும் பிறழவும் இல்லை என்பதை, அனுமனின் மேற்கூறிய மாற்றத்தினாலும், தானாக உய்த்து உணர்ந்தும் கொண்டான் இலக்குவன் என்பதாம்; அளவில் அடங்காத காமநுகர்ச்சி 'சிறுமை' எனப்பட்டது, தாரையும் இதே கருத்துப்படக் கூறியதையும் நினைவிற் கொள்க.

69. இலக்குவன் அனுமனிடம் கூறுதல் [6பாடல்கள்]

அனையது கருதிப் பின்னர்
அரிக் குலத்தவனை நோக்கி,
''நினை ஒரு மாற்றம் இன்னே
நிகழ்த்துவது உளது; நின்பால்
இனையன உரைத்தற்கு ஏற்ற;
எண்ணுதி இவை நீ'' என்னா
வனைகழல் வயிரத்திண்தோள்
மன் இளங்குமரன் சொல்வான். (4443)

(வனை-அலங்கரிக்கப்பெற்ற; அரிக்குலம்-குரங்குக்கூட்டம்; மாற்றம்-சொல்; எண்ணுதல்-சிந்தித்தல்; இன்னே-இப்பொழுதே)

நன்கு அலங்கரிக்கப்பெற்ற வீரக்கழல்களை அணிந்தவனும் உறுதியும் திண்மையும் உடைய தோள்களை உடையவனும், தசரதச்சக்கரவர்த்தியின் அரசிளங்குமாரனுமான இலக்குவன், சுக்கிரீவன் செல்வச்செருக்கால் அறிவு மயங்கிக் களித்திருந்த நிலையையும் அனுமன் கூறியவற்றையும், உய்த்துணர்ந்து பின்னர் குரங்கினத்தவனாகிய அனுமனை நோக்கி, ''உன்னிடம் ஒருவார்த்தை இப்பொழுதே சொல்ல வேண்டியிருக்கிறது; அதைச் சற்று சிந்தித்துப் பார்ப்பாயாக'' என்று கீழ்க்கண்டவாறு கூறத் தொடங்கினான்.

70. ''தேவியைக் குறித்துச் செற்ற சீற்றமும், மானத்தீயும்
ஆவியைக்குறித்து நின்றது ஐயனை; அதனைக்கண்டேன்,
கோஇயல் தருமம் நீங்க, கொடுமையோடு உறவு கூடிப்
பாவியர்க்கு ஏற்ற செய்கை கருதுவென்; பழியும் பாரேன்.(4444)

(ஆவி-உயிர்; ஐயன்-தலைவன்/ இராமன்; குறித்தல்- பற்றிநிற்றல்; கோஇயல்-அரசநீதி)

தன் மனைவி சீதா தேவியை அரக்கனான இராவணன் அபகரித்துச் சென்றதனால் ஏற்பட்ட பகையால் நெருங்கிய கோபமும், அவமானம் என்னும் பெருநெருப்பும், என்தலைவன் இராமனது உயிரைப் பற்றி நிற்கின்றது. நான் அதனை என் கண்களால் காண்கின்றேன்; அரசர்கட்குரிய அரச நீதிகளைக் கூடக் கடந்து கொடியவர்களோடு பழக்கம்கொண்டு, அவர்களுக்கு ஏற்றவாறு வேண்டத்தகாத செய்கைகள் செய்யவும் நான் கருதுகின்றேன். அதைச்செய்வதற்கு நான் வெட்கப்படுவதுமில்லை அஞ்சுவதுமில்லை; அதனால் ஏற்படுகின்ற பழிச்சொல்லைப் பற்றியும் பெரிதாகக் கருதமாட்டேன்'' என்று அனுமனை முதல்படியாக எச்சரிக்கிறான் இலக்குவன்.

மானம் என்பது என்றும்தன் நிலையில் தாழாதிருத்தலும் ஊழ்வினையால் தாழ்வு நேர்ந்தபோது, உயிர்வாழாதிருத்தலும் ஆகும்.

71. ''ஆயினும் என்னை யானே ஆற்றி நின்று, ஆவிஉற்று,
நாயகன் தனையும் தேற்ற நாள் பல கழிந்த; அன்றேல்,
தீயும் இவ்வுலகம் மூன்றும்; தேவரும் வீவர்; ஒன்றோ?
வீயும் நல் அறமும், போகா விதியை யார் விலக்கற்பாலார்?'' (4445)

(ஆற்றி-தணித்துக்கொண்டு; ஆவி-உயிர்; நாயகன்-தலைவன்; தீதல்-எரிதல்; வீசுதல்-இறத்தல்; ஒன்றோ-இதுமட்டுமா; போகா-அழியாத; பாலார்-பான்மையர்/தன்மையர்)

''என்றாலும், என்னுடைய சினத்தை நானே ஒருவாறு தணித்துக் கொண்டு, உயிர்பிழைத்து, என் தலைவன் இராமபிரானையும் தேறுதல் சொல்லி வழிப்படுத்த, இத்தனை நாட்கள் கழிந்து விட்டன; இராமனின் கோபம்தணியாதிருந்தால்; இந்த மூன்று உலகங்களும் எரிந்து சாம்பலாய்ப் போயிருக்கும்; தேவர்களும் இறந்து அழிந்து போயிருப்பார்கள்; இதுமட்டுமா? நல்லறக்கடவுளும் உயிர்போக்கிக் கொண்டிருக்கும்; இவையெல்லாம் நிகழாவண்ணம் நிலைத்திருப்பதற்குக் காரணம் நல் வினைதான்; அதன் வலிமையை விலக்கும் தகுதியுள்ளவராய் யார் இருக்கிறீர்கள்?'' என்றான் இலக்குவன்.

''உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக்கொள்ளும் குணமே குணம்'' என்பது நன்னெறி 8 ''தன்னைத்தான் காக்கின், சினம்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்'' என்பது குறள்-305. விதியின்

வலிமையையும், விதியை யாராலும் வெல்லமுடியாது என்பதையும் காப்பியத்தில் பல இடங்களில் கவிஞன் வலியுறுத்திக் கூறுவதை உணர்க.

72. ''உன்னைக் கண்டு. உன் கோன்தன்னை,
உற்ற இடத்து உதவும் பெற்றி
என்னைக் கண்டனன் போல் கண்டு இங்கு,
இந் நாளிடை நெடிதுவைகி,
தன்னைக்கொண்டு இருந்தே தாழ்த்தான்;
அன்று எனில் தனு ஒன்றாலே,
மின்னைக்கண்ட, அனையாள்தனை,
நாடுதல், விலக்கற்பாற்றோ?'' (4446)

''இராமபிரான் முதன்முதலாக உன்னைக்கண்டான்; உன்சொல் வன்மையும் அறிவாற்றலும் கண்டு, உன்மூலமாக உன் மன்னனாகிய சுக்கிரீவனையும் கண்டு, தேவைப்படுகின்ற சமயத்தில் நீங்கள் உதவுவீர்கள் என்று எதிர்பார்த்துத்தான், என்னை மதிப்பதுபோல் உங்கள் மன்னன் சுக்கிரீவனையும், தன் தம்பியாகக் கருதியிருந்தான். நீங்கள் வந்து விடுவீர்கள் என்று நீண்டநாட்களாக அங்கேயே தங்கியிருந்தான்; தன் உயிரை அரிதின் தாங்கிக்கொண்டே தான் தாமதித்திருந்தான்; இல்லை என்றால், தன் இராமபாணம் ஒன்றினால் மட்டுமே, மின்னலைப்போன்று ஒளிவீசும் சீதையைத் தேடிக் கண்டு பிடிப்பதை, யாராலும், தடுத்திருக்க முடியுமோ?'' என்று, சற்று சினந்து பேசுகிறான் இலக்குவன்.

சுக்கிரீவனுடன் தாங்களாகவே சென்று நட்புக்கொள்ளவில்லை என்பதையும், அனுமன்மூலமாகத்தான் இந்நட்பு மலர்ந்தது என்பதையும், இராமன்சுக்கிரீவனைநண்பனாகமட்டும்கருதாது, இலக்குவனைப்போல் மற்றொரு தம்பியாகத்தான் கருதினான் என்பதையும் அனுமனுக்குத் தெளிவுறுத்துகிறான் இலக்குவன். நாங்கள் கார்காலம் முடிந்தும் கூட, இவ்வளவு நாள் உயிர் தாங்கிக் காத்திருந்தது, நீங்கள் கூறிய உறுதியின்படி, உரிய காலத்தில் வந்து உதவுவீர்கள் என்று கருதியதனால்தானே அன்றி எங்களது வலிமைக் குறைவினால் அன்று; உங்களுக்காகக் காத்திருக்கா விட்டால், நான்கு மாதங்களுக்கு முன்னரே இராமன் தனது இராமபாணம் ஒன்றின் துணை கொண்டே சீதாதேவியினைக் கண்டு மீட்டுக் கொண்டிருக்க முடியும். அதை யாராலும் தடுத்திருக்க முடியாது; என்பது இலக்குவன் கருத்து. நீங்கள் செய்த இந்தக் காலந்தாழ்த்தலானது, இராமபிரான் உங்கள் மேல் கொண்டிருந்த நம்பிக்கையைச் சிதைத்து விட்டது என்பதை அனுமன் மூலமாகத் தெரிவிக்கிறான் என்பதாம்.

73. ''ஒன்றுமோ வானம்? அன்றி உலகமும், பதினால் உள்ள
வென்றி மாக்கடலும், ஏழ் ஏழ் மலை உள்ள என்னவேயாய்
நின்றதுஓர் அண்டத்துள்ளே எனின், அது நெடியதுஒன்றோ?
அன்று நீர்சொன்ன மாற்றம் தாழ்வித்தல் தருமம் அன்றால். (4447)

(ஒன்றுமோ-ஒன்றுமட்டுமோ; அண்டம்-உலக உருண்டை)

''ஆகாயம் ஒன்றுமட்டுமா? பதினான்கு என்று சொல்லப்படுகின்ற உலகங்களும், அவற்றில் உள்ள வெற்றி பொருந்திய ஏழுகடல்களும், அவைகளை அடுத்துள்ள ஏழு மலைகளும் அடங்கி இருக்கின்ற இந்த உலக உருண்டைக்குள்ளே, சீதை எங்கே சிறை வைக்கப்பட்டிருந்தாலும், அதைக் கண்டுபிடித்து அவளை மீட்டு வருவது என்பது எங்களுக்கு ஒரு பெரிய காரியமோ? என்றாலும், முன்பு நீங்கள் உறுதி கூறியபடி சேனைகளுடன் வாராது, இவ்வளவு காலம் தாழ்த்துதல் தங்களுக்கு தகாது; தருமமும் ஆகாது'' என்று எச்சரித்தான் இலக்குவன்.

பதினான்கு உலகங்கள், ஏழுகடல்கள், ஏழுமலைகள் முதலியன பற்றி முன்பே கூறப்பட்டது. இவ்வளவும் அடங்கியது ஒரு அண்டகோளம்; இதுபோல 1008 அண்டங்கள் இருக்கின்றன என்றும், அவற்றை 108 யுகங்கள் சூரபத்மன் ஆண்டு வந்தான் என்றும் சுந்தரபுராணம் கூறுகிறது. ''வென்றி மாக் கடல்'' என்பது உலகம் அழியும் ஊழிக்காலத்தில் முதலில் கடல்தான் பொங்கிஎழுந்து உலகை அழிக்கத்துவங்கும் என்ற ஒரு புராணக் குறிப்பைக் குறித்தது.

74. தாழ்வித்தீர் அல்லீர்; பல்நாள் தருக்கிய அரக்கர்தம்மை
வாழ்வித்தீர்; இமையோர்க்கு இன்னல் வருவித்தீர்; மரபின்தீராக்
கேள்வித்தீயாளர் துன்பம் கிளர்வித்திர்; பாவம் தன்னை
மூள்வித்தீர்; முனியாதானை முனிவித்தீர்! முடிவின் என்றான்'' (4448)

(தருக்கிய-செருக்குற்ற; இமையோர்-தேவர்கள்; தீரா-வழுவாத; தீயாளர்-வேள்வியியற்றும் முனிவர்கள்; கிளர்வித்தல்-மேலும் ஊக்கு வித்தல்; முனிதல்-சிதைதல்; கேள்வி-வேதம்)

''நீங்கள் கார்காலம் முடிந்ததும் படைகளுடன் வராது காலந்தாழ்த்தி யமையால், பல நாட்களாகச் செருக்குற்றுத் திரிந்த அரக்கர்களை நன்கு வாழும்படி செய்திருக்கிறீர்கள்; தேவர்களுக்கு அவர்களால் மேலும் துன்பத்தை வரவழைத்திருக்கிறீர்கள்; வேதநூல் முறையினின்றும் சிறிதும் வழுவாத அந்தணர்களாகிய வேள்வித்தீ ஓம்பும் வேதியர், முனிவர் களுக்கு மிகுந்த இன்னலை ஊக்குவித்திருக்கிறீர்கள்; இதனால் உலகில் பாவங்கள் பெருக வழி செய்திருக்கிறீர்கள்; இறுதியாக, ஒருகாலும் கோபமே கொள்ளும் இயல்பில்லாத, எப்போதும் அமைதியாக இருக்கின்ற என் அண்ணன் இராமனுக்கே கோபம் வரும்படி செய்திருக்கிறீர்கள்'' என்று அவர்களைக் கடுமையாகச் சாடினான் இலக்குவன்.

வானரங்கள் காலந்தாழ்த்தியது மட்டும் ஒரு குற்றமல்ல; அதனால் விளைந்த விளைவுகள் பற்றியும் கூறுகிறான் இலக்குவன்; இவர்கள் காலம் தாழ்த்திருக்காவிட்டால் இவ்வளவு நேரம் அரக்கர்கள் அழிந்து போயிருப்பார்கள். அவர்களால் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் துன்பங்கள் தொடர்ந்து வந்திருக்காது. உலகில் பாவங்கள் பெருகி

யிருக்காது. இறுதியாக இராமன் சினம் கொண்டிருக்கமாட்டான் என்று கூறுகிறான் இலக்குவன்.

75. அனுமன் இலக்குவனைச் சுக்கிரீவனிடம் வரவேண்டுதல்

"தோன்றல் அஃது உரைத்தலோடும், மாருதிதொழுது, தொல்லை
ஆன்றநூல் அறிஞ! போயபொருள் மனத்து அடைப்பாய் அல்லை;
ஏன்றது முடியேம் என்னின், இறத்தும்; இத்திறத்துக்கு எல்லாம்
சான்று இனி அறனே; போந்து உன் தம்முனைச் சார்தி" என்றான் (4449)

(தொல்லை-தொன்றுதொட்டு; பழமையான ஆன்ற-சிறந்த; அடைதல் -கொள்ளுதல்; ஏன்றது-ஏற்றுக்கொண்டது; தம்முன்-தமையன்; சார்தல்-சேர்தல்; தோன்றல்-பெருமைக்கு உரியவன்/ காட்சிக்கு இனியவன்)

பெருமைக்குரியவனும், காட்சிக்கு இனியவனும், மனுகுல மரபில் தோன்றியவனுமான இலக்குவன் இவ்வாறு கூறியதும் அனுமன் அவனை வணங்கி "பழமையான சிறந்த நூல்களைக் கற்றறிந்த இலக்குவ! கடந்து போன நிகழ்ச்சிகளை எல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ளாதே; நாங்கள் ஏற்றுக் கொண்டகாரியத்தைச்செய்ய முடியாது என்று தெரிந்தாலே நாங்கள் எங்கள் உயிரைத் துறந்து விடுவோம். எனவே நீ கவலை கொள்ளாதே, இந்தச் செயல்களுக்கெல்லாம் இனிமேல் தருமதேவதையே சாட்சியாக இருப்பாள்; எனவே இப்பொழுது நீ என்னுடன் வந்து, உன் மூத்தவனாகிய சுக்கிரீவனைக் காண்பாயாக!" என்று அழைத்தான் அனுமன்.

"மனத்து அடைத்தல்" என்பது, மனத்தில் நினைத்துக் கொண்டே இருத்தலைக் குறிக்கும். அதை மறந்து விடவேண்டும் என்பது குறிப்பு. தம்முனை என்பது தமையன் என்ற பொருள்தரும். இராமன் சுக்கிரீவனைத் துணைவன் என்றதனால், இலக்குவனுக்குத் தமையன் முறையினன் என்பதாம். ஏன்றது என்பது சீதாதேவியைத் தேடித் தருவதாகத் தாங்கள் ஒப்புக் கொண்ட காரியம் என்க.

76. இலக்குவன் சினம் தணிந்து செல்லுதல்.

"முன்னும் நீ சொல்லிற்று அன்றோ முயன்றது? முற்றும்காலை
இன்னும் நீ இசைத்த, செய்வான் இசைந்தனம் என்று கூறி,
அன்னதோர் அமைதியான் தன் அருள் சிறிதுஅறிவால் நோக்கி,
பொன்னின் வார் சிலையினானும், மாருதியோடும் போனான். (4450)

(பொன்-அழகு; வார்-நீண்ட; சிலை-வில்; செய்வான்- செய்யும் பொருட்டு; அமைதி-தாமதம்; இசைத்தது-கூறியது; இசைதல்-உடன்படுதல்)

அழகிய, நீண்ட வில்லை ஏந்தியவனான இலக்குவனும், அனுமனை நோக்கி, "முன்பும் நீ கூறியதால்தானே சுக்கிரீவனிடம் நட்புக்கொண்டு, வாலியைப் பொருது விண் ஏற்றினோம்? இப்பொழுது சீதையைத் தேடும் பணி நிறைவுறும் சமயத்தில், இப்பொழுதும் நீ கூறுகின்றபடியே

செய்வதற்கு உடன் படுகிறோம்'' என்று கூறி, காலம் தாழ்த்தும் சுக்கிரீவனின் நிலையைக் காண்பதற்காக, அனுமன் சென்றான்.

77. தாரை அவ்விடம் விட்டு அகன்று செல்லுதல்

அயில்விழி, குமுதச் செவ்வாய்
சிலைநுதல், அன்னப் போக்கின்,
மயில்இயல், கொடித்தேர் அல்குல்,
மணிநகை, திணிவேய் மென்தோள்,
குயில்மொழி, கலசக்கொங்கை
மின்இடை, குமிழ்ஏர் மூக்கின்,
புயல் இயல் கூந்தல் மாதர்
குழாத்தொடும், தாரை போனாள். (4451)

(அயில்-வேற்படை; குமுதம்-செவ்வாம்பல்மலர்/அல்லிமலர்; சிலை -வில்; நுதல்-புருவம்/நெற்றி; போக்கு-நடை; இயல்-சாயல்/மென்மைத் தன்மை; மணி-முத்து; நகை-பற்கள்; வேய்-மூங்கில்; குமிழ்-குமிழமலர்; ஏர்-அழகிய/எடுப்பான; புயல்-முகில்/மேகம்; திணி-வலிய)

தாரை, வேற்படை போன்ற கூரியகண்களும், செவ்வாம்பல் மலர் போன்ற சிவந்த வாயும், வில்லைப் போன்று வளைந்த புருவமும், நெற்றியும் அன்னம் போன்று அசைந்து செல்லும் நடையும், மயில் போன்ற மென்மைத் தன்மை வாய்ந்த சாயலும், கொடிகள் அடர்ந்த தேர்த் தட்டுப் போன்ற அகன்ற அல்குலும், அழகிய முத்துப் போன்ற பற்களும், வலிய மூங்கில் போன்ற மெல்லிய தோள்களும், குயில் போன்ற இனிய சொற்களும், கோபுரத்தில் விளங்கும் கலசம் போன்ற கொங்கைகளும், மின்னலைப் போன்று உண்டோ இல்லையோ என்னும்படியான நுண்ணிய இடையும், குமிழ மலர்போன்ற எடுப்பான அழகிய மூக்கும், கரிய மேகத்தைப் போன்ற அடர்ந்த கூந்தலும் உடைய பெண்கள் கூட்டத்தோடும், அவ்விடம் விட்டு அகன்று, தன் அரண்மனைக்குச் செல்லலானாள்.

உடலின் உறுப்புகள் எல்லாவற்றிற்கும் உவமை கூறிய ஒரு அரிய பாடல் இது. இவை எல்லாவற்றையும் தாரையுடன் கூடவந்த மகளிர்க்கே ஏற்றிக்கூறி, தாரைக்கு எந்த அடை மொழியும் கூறாது விடுத்தது, அவளுடைய கைம்மை நிலை கருதியும் அவள் கற்புநெறி கருதியும் என்க.

78. அங்கதன் இலக்குவன் வருகையைச் சுக்கிரீவனுக்குச் சொல்லச் செல்லுதல்.

வல்ல மந்திரியரோடும்
வாலி காதலனும், மைந்தன்
அல்லி அம் கமலம் அன்ன
அடிபணிந்து, அச்சம் தீர்ந்தான்;

வில்லியும் அவனை நோக்கி,
"விரைவின், என்வரவு வீர!
சொல்லுதி நுந்தைக்கு" என்றான்;
"நன்று" எனத் தொழுது போனான். (4452)

(காதலன்-மைந்தன்; வல்ல-தேர்ந்த; மைந்தன்-வீரன்/இலக்குவன்; அல்லி-அகஇதழ்கள்; அம்-அழகிய; கமலம்-செந்தாமரைமலர்; வில்லி-வில்தொழிலில் வல்லவன்/இலக்குவன்; நுந்தை-உன்தந்தை)

வாலியின் புதல்வனான அங்கதனும், கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற தம் மந்திரிமார்களோடும் வந்து வீரனான இலக்குவனது, அக இதழ்களையுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளைப் பணிந்து, முன்பு தான் கொண்டிருந்த அச்சம் நீங்கப் பெற்றான்; வில்லாற்றலில் தேர்ச்சியுற்ற வல்லவனான இலக்குவனும், அங்கதனை நோக்கி "வீரனே என்னுடைய வருகையைப் பற்றி உன் தந்தையாகிய சுக்கிரீவனுக்கு, விரைவில் சென்று அறிவிப்பாயாக!" என்றான்; அங்கதனும் "நல்லது" என்று கூறி, இலக்குவனை மீண்டும் வணங்கிச் சுக்கிரீவன் அரண்மனை நோக்கிச் செல்லலானான்.

79. அங்கதன் இலக்குவன் சீற்றத்தைச் சுக்கிரீவனுக்குக் கூறுதல்.

போனபின், தாதைகோயில் புக்கு, அவன்பொலம் கொள் பாதம்
தான்உறப்பற்றி, முற்றும் தைவந்து, தடக்கை வீரன்
"மானவர்க்கு இளையோன் வந்து, உன் வாயிலின் புறத்தான்; சீற்றம்
மீன்உயர் வேலை மேலும் பெரிது; இது விளைந்தது; என்றான். (4453)

(தடம்-பெரிய/நீண்ட; பொலம்-பொன்/பொலிவு; தைவருதல்-தடவுதல்; மானவன்-பெருமைக்குரியவன்/மனுகுலத்துதித்தவன்/இராமன்; உயர்-நிரம்பிய; வேலை-கடல்; விளைந்தது-நிகழ்ந்தது; கோயில்-அரண்மனை)

நீண்ட பெரிய கைகளையுடைய வீரனான அங்கதன் இலக்குவனைத் தொழுது அகன்ற பின், நேரே, தன் தந்தையாகிய சுக்கிரீவனது அரண்மனைக்கு வந்து சேர்ந்து, அவனுடைய பொன்போன்ற அழகிய பாதங்களை நன்றாகப் பற்றிக் கொண்டு முழுவதும் தடவிக் கொடுத்துத் துயில் எழுப்பி "மனுகுலத் தோன்றலும் பெருமைக்குரியவனுமாகிய இராமனின் தம்பி இலக்குவன் உன்னுடைய அரண்மனை வாயிலின் புறத்தே வந்து நிற்கிறான்; அவனது சீற்றத்தைப் பார்த்தால், அது மீன்கள் நிறைந்துள்ள கடலினைக் காட்டிலும் மிகப் பெரிதாக இருக்கும் போலிருக்கிறது; இதுதான் நடந்த நிகழ்ச்சி" என்று கூறினான்.

மன்னர்களைத் துயிலெழுப்பும் போது அவர்களது பாதங்களைத் தீண்டித் தடவிக் கொடுத்துத் துயிலெழுப்ப வேண்டும் என்பது ஒரு மரபு.

எல்லையில்லாத கோபத்தை எல்லை காண முடியாத கடலுக்கு உவமிப்பது கவி மரபு. ''தடவும் கயவும் நளியும், பெருமை'' என்பது தொல்காப்பியம்.

80. சுக்கிரீவன் துயிலுணர்ந்து வினவுதல்.

அறிவுற்று, மகளிர் வெள்ளம்
அலமரும் அமலை நோக்கி,
பிரிவுற்ற மயக்கத்தான், முந்து
உற்றது ஓர்பெற்றி ஓரான்;
''செறி பொன் தார் அலங்கல் வீர!
செய்திலம் குற்றம்; நம்மைக்
கறுவுற்ற பொருளுக்கு என்னோ
காரணம் கண்டது?'' என்றான். (4454)

(அலமருதல்-மனம் கலங்குதல்; அமலை-ஆரவாரம்; பிரிவுறுதல்-நீங்கப்பெறுதல்; முந்து-முன்பு; பெற்றி-தன்மை; அலங்கல்-மாலை; கறுவுறுதல்-மிகுந்தகோபம்/வன்மம்; ஓர்தல்-உணர்தல்; வெள்ளம்-கூட்டம்)

அங்கதன் விரைந்து வருவதைக் கண்ட அந்தப்புர மகளிர் கூட்டம் மனக் கலக்கம் கொண்டு எழுப்பிய பேரொலியால், மயக்கம் தீர்ந்த சுக்கிரீவன், தெளிந்த அறிவு வரப் பெற்று, முன்பு அங்கதன் வந்து எழுப்பியதையும், அதன்பின் நடந்த நிகழ்ச்சிகள் எதையும் அறியாதவனாக, அங்கதனை நோக்கி ''நிறைந்த பொன்மாலையையும், மலர் மாலைகளையும் அணிந்த வீரனே! நாம் இராம இலக்குவர் மாட்டு எந்தக் குற்றமும் செய்ய வில்லையே? அப்படி இருந்தும், இப்பொழுது இலக்குவன் மிகச்சினம் கொண்டு வந்திருக்கிறான் என்கிறாயே? அதற்குரிய காரணமாக அவர்கள் நம்மிடம் என்ன குற்றம் கண்டார்கள்?''

''அலமரம், தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி'' என்பது தொல்காப்பியம்.

81. அங்கதன் எல்லாவற்றையும் கூறுதல். [6பாடல்கள்]

''இயைந்த நாள் எந்தை நீ சென்று எய்தலை; செல்வம் எய்தி
வியந்தனை; உதவி கொன்றாய்; மெய்இலை'' என்ன வீங்கி
உயர்ந்தது சீற்றம்; மற்று ஈது உற்றது செய்கை; முற்றும்
நயம் தெரி அனுமன் வேண்ட, நல்கினன், நம்மை இன்னும். (4455)

(இயைந்த-உயரிய/உடன்பட்ட; வியத்தல்-செருக்குறுதல்; உதவி கொல்லுதல்-செய்ந்நன்றி மறத்தல்; நயம்-திறம்/பக்குவம்; தெரிதல்-உணர்தல்; நல்குதல்-அருள்செய்தல்; வீங்கி-மேற்பட்டு)

அங்கதன் சுக்கிரீவனை நோக்கி ''எந்தையே! முன்பு நீ ஒப்புக்கொண்ட படி, கார்காலம் முடிந்ததும் படைகளுடன் சென்று இராமபிரானை

அடையவில்லை; அரசச்செல்வம் கிடைத்ததனால் மிக்கச் செருக்குற்றுக் காலத்தைக் கடத்திவிட்டாய்; அவர்கள் செய்த செய்ந்நன்றியை மறந்தாய்; உண்மையே இல்லாதவனாகப் பொய்யனாக ஆகிவிட்டாய் என்று கருதி, இலக்குவன் மிக்ககோபம் கொண்டு இங்கு வந்தான்; இதுதான் நடந்தது என்றாலும், நன்கு முற்றும் கற்றறிந்த, பக்குவமும் சொல்வன்மையும் உடையவனாகிய நம் அனுமன், இலக்குவனை மன்றாடி வேண்டிக் கொண்டதால் இலக்குவன் சீற்றம் தணிந்து நம்மைக் கொல்லாது உயிருடன் உலவ அருள் செய்திருக்கிறான்; இல்லையேல் நாமும் வானர குலமும் எப்பொழுதோ அழிந்து போயிருப்போம்'' என்றான் அங்கதன்.

''இயைந்த நாள்'' என்பது குறிப்பிட்ட கால எல்லையைக் குறித்தது. ''வியந்தனை'' என்பது களித்துச் செருக்குற்றுச் சுகபோகத்தில் திளைத்ததைக் குறித்தது. ''உதவி கொன்றாய்'' என்பது அவர்கள் செய்த பேருதவிக்குரிய கைம்மாறாகிய செய்ந்நன்றியை மறந்து போனாய் என்பதாம். ''வீங்கி உயர்ந்தது சீற்றம்'' என்பது இலக்குவனின் சீற்றம் மிகுதியைக் குறித்தது. ''முற்றும் நயம்தெரி அனுமன்'' என்பது அவனது கல்வி, கேள்வி, சொல்வன்மை இடமறிந்து பேசும் பக்குவம் முதலிய நற்குணங்கள் அனைத்தையும் குறிக்கும். ''மெய்இலை'' என்பது சொன்ன சொற்படி நடக்காமல் பொய்த்தான் என்பதைக் குறிக்கும். இது, எல்லாவற்றையும் தொகுத்துக் கூறியது, பின்வரும் பாடல்கள் இதனையே விரித்துக் கூறியவை என்க.

82. ''வருகின்ற வேகம் நோக்கி, வானர வீரர், வானைப்
பொருகின்ற நகரவாயில் பொற்கதவு அடைத்து, கற்குன்று
அருகு ஒன்றும் இல்லா வண்ணம் வாங்கினர் அடுக்கி, மற்றும்
தெரிகின்ற சினத்தீபொங்க செருச் செய்வான், செருக்கி நின்றார்.'' (4456)

(பொருகின்ற-ஒத்திருக்கின்ற/உயர்ந்த; பொங்குதல்-மூண்டுஎழுதல்; செரு-போர்; செய்வான்-செய்யும் பொருட்டு; செருக்கி-தருக்குற்று; வேகம்-விரைவு)

''நமது வானர வீரர்கள், இலக்குவன் சீற்றம் கொண்டு வரும் வேகத்தைப் பார்த்து, வானைத் தொடுமளவு உயர்ந்து விளங்கும் நமது கிட்கிந்தை நகர வாயிலின் பொன்னாலாகிய அழகிய கதவுகளைச் சாத்தித் தாழ்ப்பாள் இட்டு, அதன் பின்புறத்தில், அருகில் ஒரு மலைக்குன்று கூட இல்லாதவண்ணம், எல்லாவற்றையும் எடுத்துவந்து, ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கிவைத்து, மேலும் மூண்டு எழுகின்ற கோபம் என்னும் தீ கிளர்ந்தெழ இலக்குவனுடன் போர் செய்யும் பொருட்டு, செருக்குடன் தயாராய் நின்றார்கள்'' என்று அங்கதன் மேலும் கூறுகின்றான்.

வானைப் பொருகின்ற நகரவாயில் என்பது நகரத்தின் சிறப்பைக் குறித்தது என்க. பொற் கதவு என்பது செல்வச் செழிப்பைக் குறித்தது. முன் நிகழ்ந்ததைத் திரும்ப அங்கதன் கூறுவது, சுக்கிரீவன் கொண்ட அச்சத்தைத் தணிப்பதற்காக என்க.

83. ''ஆண்தகை அதனைநோக்கி, அம்மலர்க் கமலத்தாளால்
தீண்டினன்; தீண்டாமுன்னம் தெற்கொடு வடக்கும்தேய
நீண்டகல்மதிலும், கொற்றவாயிலும் நிரைத்த குன்றும்
கீண்டனதகர்ந்து; பின்னைப் பொடியொடும் கெழீஇய அன்றே!'' (4457)

(ஆண்தகை-ஆடவரிற்சிறந்தோன்; அம்-அழகிய; தீண்டுதல்-உதைத்தல்; நிரைத்த-அடுக்கி அமைத்த/வரிசையாகவைத்த; பொடி-துகள்; கீண்டன-உடைந்துபோயின/பிளந்தன; கெழுதல்-கலத்தல்)

ஆடவரிற் சிறந்தவனாகிய இலக்குவன், அவ்வாறு வானர வீரர்கள் அடைத்து வைத்திருந்த கதவைப் பார்த்து, தனது அழகிய செந்தாமரை போலும் கால்களால் சற்றே உதைத்தான். அவன் தொடுவதற்கு முன்பே, அந்தப் பெரிய தெற்குவடக்காக நீண்டிருக்கும் மதில் சுவரும், வெற்றி பொருந்திய பொன் வாயிலும், வானரர்கள் அடுக்கி வைத்திருந்த வரிசையான குன்றுகளும், பிளந்து சிதைவுற்றன. பின்னர் மண்ணில் கலந்து புழுதியோடு புழுதியாகிப் போயின.

தீண்டினன் என்பது தொடுதல், கால்படுதல் என்று பொருள் கொள்ளுமாயினும் இங்கே உதைத்தல் என்ற பொருளையே கொள்ளல் வேண்டும்.

84. ''அந்நிலை கண்ட திண்தோள் அரிக்குலத்து அனிகம் அம்மா!
எந்நிலை நின்றது என்கேன்? யாண்டுபுக்கு ஒளித்ததுஎன்கேன்?
இந்நிலை கண்ட அன்னை, ஏந்துஇழை, ஆயத்தோடு,
மின்நிலை வில்லினானை வழிஎதிர் விலக்கி நின்றாள்.'' (4458)

(அரிக்குலம்-குரங்கினம்; அனிகம்-சேனை/படை; இழை- அணி கலன்கள்; ஆயம்-கூட்டம்; விலக்கி-மறித்து/குறுக்கிட்டு)

''அவ்வாறு நகரமதிலும், குன்றுகளும் பொடிப் பொடியாய் ஆனதைக் கண்ட வலிய தோள்களையுடைய நம் வானர வீரர்களின் சேனை, எந்த நிலை அடைந்தது என்பதைக் குறித்து எப்படிச் சொல்வேன்? அவைகள் எங்கே சென்று தம்மை ஒளித்துக் கொண்டு, உயிர்தப்பிப் பிழைத்தன என்று எப்படிச் சொல்வேன்? இவ்வாறு நம்வானர சேனை நிலைகெட்டு ஓடியதை நேரில் கண்ட என் அன்னை தாரை, ஆபரணங்கள் அணிந்த தனது மகளிர் கூட்டத்தோடு மின்னல் போலும் விற்படைகொண்ட இலக்குவன் வரும் வழியில் எதிர் சென்று, அவனை மறித்துக் குறுக்கே நின்றாள்'' என்கிறான் அங்கதன்.

வானரர்கள் எட்டுத் திசையிலும் விரைந்து ஓடி, மறைந்து உயிர்தப்பினர் என்பதாம்.

85. ''மங்கையர் மேனி நோக்கான்,
மைந்தனும் மனத்துவந்து
பொங்கிய சீற்றம் மாற்றிப்
புகல்கிலன் பொருமி நின்றான்;

நங்கையும் இனிது கூறி'',
நாயக! நடந்தது என்னோ?
எங்கள்பால்? என்னக் கேட்டாள்;
அண்ணலும் இனைய சொன்னான்.'' (4459)

(மைந்தன்-வலிமையுடையவன்/இலக்குவன்; பொருமி-விம்மி; நாயகன்-தலைவன்; அண்ணல்-பெரியோன்/இலக்குவன்; பொங்கிய-ததும்பிநின்ற)

இவ்வாறு தாரை வழிமறித்து நிற்கவும் வீரனானவனும், பிற மகளிரை ஏறெடுத்தும் பார்க்காத பண்பினனுமான, இலக்குவனும், தன் மனத்தில் பொங்கியெழுந்த சீற்றத்தால், ஒன்றும் கூறாதவனாகி விம்மிக்கொண்டு நின்றான்; தாயாகிய தாரையும் அவனை நோக்கி ''தலைமைக் குணம் வாய்ந்தவனே! இராமபிரானைத் தனியே விட்டு எங்களை நோக்கி நின்பாதங்கள் நோவ நடந்து வந்தது என்ன காரணத்தால்?'' என்று வினவினாள்; அதற்குப் பெரியோனாகிய இலக்குவனும் கீழ்வருமாறு கூறினான்.

''மங்கையர் மேனி நோக்கான்'' என்பதும் ''மைந்தன்'' என்பதும் இலக்குவனின் பிறன்மனை நோக்காப் பேராண்மையையும், போராண்மையையும் குறித்தன என்க. அவன் ''மனத்து வந்து பொங்கிய சீற்றம் பற்றிப் புகல்கிலன் பொருமி நின்றான்,'' என்பதற்குக் காரணம், அவன் தாரை வடிவில் தாபத நிலையை அடைந்துள்ள தன் தாயரை நினைத்து நைந்தான் என்பதாம். ஆனால் இது அங்கதனுக்கும், தாரைக்கும், மற்ற வானரர்களுக்கும் தெரியாது என்பதால், அவர்கள் இவ்வாறு கருதினர் என்க. ''நடந்தது'' என்ற ஒரு சொல்லில், இலக்குவன் இராமனை விட்டு ஒருகாலும் பிரியாதவன் என்பதும், அவனைத் தனியே விட்டு, இவன் மட்டும் தனியாக காட்டு, மலை வழியில் தன்கால் நோவ நடந்து வந்ததுஏன்? என்று கேட்டாள் என்பதையும் குறிக்கும். ''பொருமுதல்'' என்பது தான்கூறவந்த கருத்தை வாய்விட்டு வார்த்தைகளால் சொல்ல இயலாதவாறு விம்மி வருந்துதல் என்று பொருள்படும்.

86. ''அது பெரிது அறிந்த அன்னை, அன்னவன் சீற்றம் மாற்றி
விதிமுறை மறந்தான் அல்லன்; வெஞ்சினச் சேனை வெள்ளம்,
கதும் எனக் கொணரும் தூது கல் அதர்ச் செல்ல ஏவி,
எதிர்முறை இருந்தான் என்றாள்; இது இங்கு புகுந்தது'' என்றான். (4460)

(பெரிது-நன்றாக; மாற்றி-தணிவித்து; விதி-கட்டளை; கதும் என-விரைவில்; அதர்-வழி; ஏவி-செலுத்தி; எதிர்முறை-எதிர்பார்த்து; புகுந்தது-நிகழ்ந்தது)

''இலக்குவன் வந்த காரணத்தை நன்கு உணர்ந்த என் தாயாகிய தாரை, அவனது கோபத்தைத் தணிவித்து, அவனிடம் ''எங்கள் மன்னன் சுக்கிரீவன் இராமனுக்குச் செய்து தந்த உறுதிகளை மறக்கவில்லை; கொடிய

கோபத்தையுடைய வானரச்சேனைக்கூட்டங்களைவிரைவாகக்கொண்டு வருவதற்குரிய தூதுவர்களை, கற்கள், மலைகள் நிறைந்த வழியில் போகுமாறு கட்டளையிட்டுவிட்டு, அவர்கள் வருகின்ற நாளை எதிர் நோக்கித்தான் காத்திருக்கிறான்; அதனால்தான் காலம் தாழ்ந்தது'' என்று கூறினாள்; இதுதான் இதுகாறும் இங்கு நடந்த நிகழ்ச்சிகள்'' என்று சுக்கிரீவனிடம் அங்கதன் கூறி முடித்தான்.

''பெரிது அறிதல் என்பது, நன்றாகவும், செம்மையாகவும், தெளிவாகவும் அறிந்து கொள்ளுதலைக் குறிக்கும், ''விதிமுறை'' என்பது உறுதிமொழியையும், அதன்பின் அவன் செய்ய வேண்டிய செயல்பாடுகளையும் உள்ளடக்கியது. காலம் தாழ்ந்ததற்கு காரணம் தூதுவர்கள் மலைகள் நிறைந்த வழியில் சென்று, மீண்டுவர வேண்டும் என்பதால், ''கல் அதர்ச்செல்ல'' என்று தாரை கூறினாள் என்க.

87. சுக்கிரீவன் ''ஏன் எனக்கு முன்பே தெரிவிக்க வில்லை?'' என்று கேட்டல்.

சொற்றலும் அருக்கன் தோன்றல், சொல்லுவான் மண்ணில் விண்ணில்,
''நிற்க உரியார்கள் யாவர் அனையவர் சினத்தின் நேர்ந்தால்?
விற்கு உரியார், இத்தன்மை வெகுளியின், விரைவின் எய்த,
எற்கு உரையாது நீர் இது இயற்றியது என்னை?'' என்றான் (4461)

(அருக்கன்-சூரியன்; தோன்றல்-புதல்வன்; விற்கு-வில்லுக்கு/ வில்தொழிலுக்கு; எற்கு-எனக்கு)

இவ்வாறு சொல்ல வேண்டியன எல்லாவற்றையும் ஒன்றையும் விடாது முறைப்படி அங்கதன் கூறி முடித்ததும், சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவன், ''அந்த இராம இலக்குவர்கள் சினம்கொண்டு எதிர்த்து வந்தால், அவரை எதிரிட்டு நிற்கக் கூடியவர்கள் இம்மண்ணுலகிலும், விண்ணுலகிலும் யார் இருக்கிறார்கள்? வில்வித்தையில் தேர்ச்சி பெற்றவனான இலக்குவன் இவ்வாறு சீற்றம் கொண்டு விரைவாக நம் நகரத்துக்கு வந்திறங்கினான் என்பதை எனக்கு ஏன் முன்பே கூறவில்லை? அவ்வாறு கூறாதது மட்டுமல்ல, இவ்வாறு கற்களை அடுக்கிக் கதவடைத்ததும், போருக்கு ஆயத்தமானதும் ஏன்?'' என்று கேட்டான் சுக்கிரீவன்.

88. அங்கதன் மறுமொழி

உணர்த்தினென் முன்னம்; நீ அஃது
உணர்ந்திலை; உணர்வின் தீர்ந்தாய்;
புணர்ப்பது ஒன்று இன்மை நோக்கி
மாருதிக்கு உரைக்கப் போனேன்;

இணர்த் தொகை ஈன்ற பொன் தார்
எறுழ்வலித் தடந்தோள் எந்தாய்!
கணத்திடை அவனை நீயும்
காணுதல் கருமம் என்றான். (4462)

(இணர்-பூங்கொத்து; எறுழ்வலி-மிக்கவலிமை; உணர்த்துதல்-தெரிவித்தல்; தீர்தல்-மயங்குதல்; புணர்ப்பது-செய்யக்கூடிய வழி; கருமம்-செய்யத்தக்க செயல்; கணத்திடை-விரைவில்)

''பூங்கொத்துக்களின் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அழகிய மலர்மாலையணிந்த, மிக்கவலிமைபடைத்த, பெரிய தோள்களையுடைய என் தந்தையே! இலக்குவன் கிட்கிந்தை நகருக்குள் வருகிறான் என்பதை நான் முன்னமே வந்து, உனக்கு ஒருமுறை தெரிவித்தேன். ஆனால் நீ அதை உணர்ந்து கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. மதுமயக்கத்தாலும், மங்கையர் போகத்தாலும் அறிவு திரிந்து மயங்கி இருந்தாய். எனவே எனக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியாததால், அனுமனிடம் சென்று இச்செய்தியைச் சொல்லப் போய்விட்டேன். நாங்கள் கண்டதோடு அல்லாமல் இலக்குவனை எங்கள் தலைவனாகிய நீயும் உடனே விரைந்து சென்று காண்பதே, இப்பொழுது செய்யக்கூடிய காரியமாகும். என்றான்'' அங்கதன்.

89. தன் குற்றம் கருதி, சுக்கிரீவன் வருந்துதல் [9 பாடல்கள்]

உறவுண்ட சிந்தையானும்
உரைசெய்வான் ''ஒருவர்க்கு இன்னம்
பெறல் உண்டோ, அவரால் ஈண்டு யான்
பெற்ற பேர் உதவி? உற்றது
இறல் உண்டோ? என்னின் தீர்வான்,
இருந்தபேர் இடரையெல்லாம்
நறவு உண்டு மறந்தேன்; காண
நாணுவன் மைந்த!'' என்றான். (4463)

(உறவு-நட்பு; உண்ட-கொண்ட/பிணிக்கப்பட்ட; இறல்-இற்றல்/அழிதல்; தீர்தல்-நீக்கிக் கொள்ளுதல்; நறவு-மது.)

இராமபிரானுடன் நட்புறவு கொண்ட மனத்தையுடைய சுக்கிரீவன் அங்கதனைப் பார்த்துக் கூறலானான்; ''நான் இராம இலக்குவரால் அடைந்த பெரிய உதவி வேறு ஒருவரால் பெறக் கூடியதாகுமா? ஆகாது. நான் அவ்வாறு பெற்ற உதவி அழியும் தன்மை உடையதா? இல்லை; என் உதவியைக் கொண்டு தான் கொண்ட பெரும் துயரத்தை எல்லாம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்த இராமனுக்குத் தக்க சமயத்தில் உதவிசெய்யாமல், இந்த மதுவை அருந்தி மயங்கி, அதனை மறந்தே போனேன். எனவே இப்பொழுது அந்த உத்தமனாகிய இலக்குவனைக் காண்பதற்கு வெட்கப் படுகிறேன்'' என்கிறான் சுக்கிரீவன்.

இராமபிரானால் சுக்கிரீவன் பெற்ற பேருதவி அவன் மனைவி உருமையைத் திரும்பப் பெற்றதும், கிட்கிந்தை அரசைத்திரும்பப் பெற்றதும் மட்டுமன்று. இவை ஒரு காலத்தில் அழியும் தன்மையுடையன. ஆனால் எல்லாம் வல்ல எம்பிரானாகிய திருமாலின் அவதாரமான இராமபிரானின் துணைவன் என்ற நட்புறவு கொண்ட செயலே இவை அனைத்தையும் விட மிகப்பெரிது; என்றும் அழிவில்லாதது. இத்தகைய பேறு வேறு ஒருவராலும் பெற முடியாது. எனவே அதை இழப்பது என்பது அறிவின்மையின் பாற்பட்டதாகும் என்பது சுக்கிரீவன் கருத்து. அத்தகைய பேருதவியைப் பெற்ற யான், அவர்கள் சீதையின் பிரிவால் கொண்ட பெரும் துயரத்தைத் தீர்ப்பதில் ஈடுபடாமல், மதுவுண்டு மயங்கிப்போனேனே என்று தன்னையே நொந்து கொள்கிறான். எனவே இலக்குவனைக் காண்பதற்கு வெட்கப்படுவதாக வேதனையுடன் கூறுகிறான் என்பதாம்.

90. ''ஏயின இது அலால், மற்று
ஏழமைப் பாலது என்னோ?''
''தாய் இவள் மனைவி என்னும்
தெளிவு இன்றேல், தருமம் என் ஆம்?
தீவினை ஐந்தின் ஒன்றுஆம்;
அன்றியும் திருக்கு நீங்கா
மாயையின் மயங்குகின்றாம்;
மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம்!'' (4464)

(ஏயின-நேர்ந்த/உண்டான; ஏழைமை-அறியாமை; தெளிவு-நல்லுணர்வு; தீவினை-பாவங்கள்; திருக்கு-குற்றம்/வஞ்சனை; மயக்கு-மோகம்; மாயை-பொய்மையான வாழ்க்கை)

''இந்த மது பருகும் பழக்கம் மட்டும் என்னிடம் உண்டானதோ? இதைத்தவிர மற்ற ஏதேனும் ஒன்று ஒருவனை அறியாமையின் பாற்புகுத்தி விடுமோ? இதுஒன்றே போதும்; இந்தக் கள் உண்டல் என்னும் பழக்கம் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகும். அதைப் பருகியவர் இவள் மனைவி என்றும், இவள் தாய் என்றும் பகுத்து உணரும் சக்தி அழிந்து, தெளிவில்லாது போவர் என்றால், பின்னர் அறம் என்ற ஒன்று என்னவாகும்? எத்தனை நற்குணங்கள் அவனிடம் இருந்தாலும் இந்த ஒரு தீய குணம் அவனிடம் இருந்தால் அதனால் என்ன நன்மை? தவிரவும், ஏற்கனவே வஞ்சனை என்னும் நீங்காத மாயையில் கிடந்து உழல் கின்றோம். அத்தகைய மயக்கத்தின்மேலும் மோகம் கொண்டுள்ளோம் நாம்'' என்று தன்னைத்தானே நொந்து கூறிக் கொள்கிறான் சுக்கிரீவன்.

''தீவினை ஐந்து'' என்று இங்கு குறிப்பிடப்படுவது உலகியலில் பஞ்சமாபாதங்கள் எனப்படும். அவை கொலை, களவு, பொய், கள், காமம் என்பனவாம். இத்துடன் குரு நிந்தனையையும் இணைத்துக் கூறுவதும்

உண்டு. கள்ளுண்ணாமை பற்றிக் கூற, வள்ளுவர் பத்துப்பாடல்கள் கொண்ட ஒரு அதிகாரமே ஒதுக்கியிருக்கிறார் என்றால் அதன் தீய விளைவுகளை நன்கு உணரலாம். எல்லா இலக்கியங்களும், சமயங்களும் கள்ளுண்ணாமையை வற்புறுத்துகின்றன என்பதும் நோக்குக. இதனால் விளையும் கேடுகள் பற்றி விநாயக புராணம் கூறுவதைக் கேளுங்கள். ''அறிவை அழிக்கும்; அழியா மானம் தனை அழிக்கும்; செறியும் அறிஞர் மதியாத செருக்கை விளைக்கும்; ஈன்றாளும் முனியும் வெறுப்பு மிக விளைக்கும்; முனிவு விளைக்கும்; பகையஞ்சாக் குறிகள் விளைக்கும்; நகை விளைக்கும்; கொள்ளேல் கள்ளுண்டலை மைந்தா'' என்பது விநாயகபுராணம். மாயை என்பது இல்லாததை உள்ளதாகவும் உள்ளதை இல்லாததாகவும், ஒன்றைப் பிறிது ஒன்றாகவும் காட்டி, விபரீத உணர்வை விளைவிக்கும் எனவே அதனைத் ''திருக்கு நீங்கா மாயை'' என்றார் என்க.

91. ''தெளிந்து தீவினையைச் செற்றோர்
பிறிவியின் தீர்வர்'' என்னா,
விளிந்திலா உணர்வினோரும்,
வேதமும் விளம்பவேயும்,
நெளிந்து உறை புழுவை நீக்கி,
நறவு உண்டு நிறைகின்றேனால்;
அளிந்து அகத்து எரியும் தீயை
நெய்யினால் அவிக்கின்றாரின்.'' (4465)

(செறுதல்-களைதல்; தீர்தல்-நீங்குதல்; விளிதல்-கெடுதல்; வேதம்-அறிவுநூல்கள்; அளிந்து-கனிந்து)

''மாயைகளிலிருந்து நீங்கித் தெளிந்த அறிவு பெற்றுத் தீவினைகளைக் களைந்து வெற்றிபெறுபவர், பிறவிப்பிணியினின்றும் நீங்கி வீடு பேறு அடைவர்''. என்று, கெடுதலில்லாத அறிவுடைய தத்துவஞானிகளும், வேதங்களும், கூறுகின்றன; என்றாலும் வீட்டில் கனன்று எரியும் நெருப்பில் நெய்யை ஊற்றி அணைக்க முயல்பவர்களைப் போல, நான் கிண்ணத்தில் நெளிந்து கொண்டிருக்கின்ற புழுக்களைக் கூட வடிகட்டித் தூக்கிஎறிந்து விட்டு, அதே கள்ளை உண்டு. ஒரு பொய்யான மனநிறைவு கொண்டவன்போல் இருக்கின்றேன்''. என்று தன் குடிப்பழக்கத்தின் தீமையினை உணர்ந்து கூறுகிறான் சுக்கிரீவன்.

தெளிந்த அறிவுடையவர்கள் தீவினையைக் களைந்தவராவர். எனவே அவர் வீடுபேறு பெறுவர் என்பது, வேதங்களும், கற்றுணர்ந்த சான்றோர்களும் கூறும் மெய்யுரை; ஆனால், எரிகின்ற நெருப்பில் நெய்யைப் பெய்தால் அது அணையுமோ? அணையாது; மேலும் கொழுந்துவிட்டு எரியும். அதுபோல் நான்கள்குடிக்கும் போது அதில் புழுக்கள்கிடந்தாலும் கூட, அதை நீக்கிவிட்டு அந்தக் கள்ளைக் குடிப்பதில் ஒரு மனநிறைவு காண்கின்றேன். எரிகின்ற தீயை அணைக்கவேண்டுமென்றால், அதில்

தண்ணீரை ஊற்ற வேண்டும், அல்லது மணலைக் கொட்ட வேண்டும். அதுபோல நான் கள்குடிக்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றால் நெளிகின்ற புழுவை மட்டும் எடுத்து எறிவதில் பயனில்லை. அந்தக் கிண்ணத்தையே தூக்கி எறிய வேண்டும்'' என்கிறான் சுக்கிரீவன். ''விளிந்திலா உணர்வினார்'' என்பது தத்துவ ஞானிகளைக் குறிக்கும்.

92. ''தன்னைத் தான் உணரத் தீரும்
தகை அறுபிறவி'' என்பது
என்னத்தான் மறையும் மற்றைத்
துறைகளும் இசைத்த எல்லாம்
முன்னைத் தான் தன்னை ஓரா
முழுப்பிணி அழுக்கின் மேலே,
பின்னைத் தான் பெறுவது அம்மா
நறவு கண்டு திகைக்கும் பித்தோ?'' (4466)

(முழுப்பிணி-முற்றியநோய்; பித்து-மயக்கம்)

''தன்னை யார் என்று தெளிவாகப் புரிந்து கொள்ளும் தன்மை வந்துவிட்டால் இந்தப் பெருமை அற்ற பிறவிப்பிணி நீங்கி விடும் என்றுதான், வேதங்களும், அதன் மற்றைத் துறைகளாகிய வேதாந்தங் களும், சாத்திர நூல்களும் கூறுகின்றன. ஆனால் நானோ, நான் யார் என்பதை அறியாது, முற்றிய பிறவி நோயுடன் கூட அழுக்கு உடம்பையும் கொண்டுள்ளது மட்டுமல்லாமல், அதன் மேலும் இந்தக் கள் உண்ணுதலாகிய மற்றொரு மயக்கமும் கொண்டு இருக்கிறேனே'' என்று இரந்து கூறுகிறான்.

இதனால் தன்னைத்தானே உணரமுடியாதென்பதும், எனவே பிறவிப் பிணி நீங்காது என்பதும் சுக்கிரீவனின் துணிந்த கருத்து என்பதாம். ''தன்னைத்தானே அறிதல்'' என்பது முழுமுதற் பொருளாகிய கடவுளுக்குத் தான் என்றும் அடிமையென்றும், தனக்கு என்று ஒரு உருவம் இல்லை என்பதை உணர்வதுமான மெய்யுணர்வு என்க. இது ஐந்து நிலைகளைக் கொண்டது. இதை ''அர்த்த பஞ்சக ஞானம்'' என்பர் வடநூலார். ''இன்னது தேகம், இதுதேகி, என உணர்ந்தவன் யாவன். அன்னவன் தன்னைத்தானே அறிபவன் ஆகும்'' என்பது, கைவல்ய வாக்கியங்கள். இங்கேசுக்கிரீவன், தன்னைத்தான் உணரவில்லை என்றும், அதன்மேலும் கள்ளுண்டலும் இருப்பதால் தான் இரு குற்றங்கள் செய்தவனாகிறான் என்றும் கூறிக் கொள்ளுகிறான்.

93. ''அளித்தவர், அஞ்சும் நெஞ்சின்
அடைத்தவர், அறிவில் மூழ்கிக்
குளித்தவர், இன்ப துன்பம்
குறைத்தவர், அன்றி வேரி

ஒளித்தவர் உண்டு, மீண்டு,
இவ்வுலகெல்லாம் உணர ஓடிக்,
களித்தவர் எய்தி நின்றகதி
ஒன்று கண்டது உண்டோ?'' (4467)

(அளித்தல்-பாதுகாத்தல்; அஞ்சும்-ஐந்தும்/ஐம்பொறிகளும்; அடைத்தவர்-அடக்கியவர்; வேரி-மது; கதி-நற்கதி/வீடுபேறு)

''தம்மை அடைக்கலம் அடைந்தவரைக் கடைசிவரையிலும் பாது காப்பவர்கள், ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றை மனத்துள் அடக்கியவர்கள். மெய்யுணர்வு பெற்று அதிலேயே மூழ்கித் திளைப்பவர்கள், விருப்பு வெறுப்பின்றி, இன்பம் துன்பம், இரண்டையும் ஒன்றாகக் கருதும் பற்றற்றவர்கள், இவர்கள்தான் வீடுபேறு அடைதற்குத் தகுதி உடையவர்கள். இவர்களைத் தவிர மதுவை, யாருக்கும் தெரியாவண்ணம் மறைத்து வைத்திருந்து உண்டு, அதன் விளைவுகளால் அது உலகம் பூராவும் தெரிந்து கொள்ளும்படி அலைந்து திரிந்து, களிப்புற்றவர்கள் யாராவது, நற்கதி-வீடுபேறு பெற்றவர்களைக் கண்டது உண்டோ?'' என்று கேட்கிறான் சுக்கிரீவன்.

94. ''செற்றதும் பகைஞர், நட்டார் செய்தபோர் உதவிதானும்
கற்றதும், கண் கூடாகக் கண்டதும், கலை வலாளர்
சொற்றதும், மானம் வந்து தொடர்ந்ததும், படர்ந்த துன்பம்
உற்றதும் உணரார் ஆயின், இறுதி வேறு இதனின் உண்டோ?'' (4468)

(செற்றது-தண்டித்தது; சொற்றது-சொன்னது/கூறியது; படர்ந்த-தொடர்ந்த; இறுதி-அழிவு; நட்டார்-நண்பர்கள்;கண்கூடு-பிரத்யட்சம்/அனுபவம்)

''வாலி போன்ற பகைவர்கள் தன்னைத் தண்டித்ததையும், நண்பர்களான இராமஇலக்குவர் தனக்குக் காலத்தாற் செய்த உதவியையும், தான் நேரே நூல்களில் கற்றவற்றையும், கண்கூடாகப் பெற்ற அனுபவ அறிவையும், சாத்திர, கலைநூல்களில் வல்லவர்கள் கூறியவற்றைக் கேட்ட கேள்வி யறிவையும், பெருமைவந்து தம்மை அடைந்ததையும், சிலநேரத்தில் துன்பமும் தொடர்ந்து வந்ததையும், கள்ளுண்ட மயக்கத்தால் ஒருவன் உணர்ந்து கொள்ளவில்லை என்றால், அவனுக்கு இதைவிடப் பெரிய தீங்கினால் இறுதி உண்டாகும் எனபதும் தகுமோ? அவனுக்கு அழிவு இதைவிட வேறு எதனாலும் உண்டாகுமோ?'' என்கிறான் சுக்கிரீவன்.

கள்ளுண்டு மயங்குதலால், நன்மை, தீமை, நண்பர் பகைவர், இன்பம் துன்பம் என்பனவற்றைப் பிரித்தறிய முடியாத தன்மை வந்து விடுகிறது. ஒருவனுக்கு இதைக் காட்டிலும், பகை வேறு ஒன்றும் இல்லை என்பதாம்.

95. ''வஞ்சமும், களவும், பொய்யும்
மயக்கமும், மரபுஇல் கொட்பும்,
தஞ்சம் என்றாரை நீக்கும்
தன்மையும், களிப்பும் தாக்கும்,

கஞ்ச மெல் அணங்கும் தீரும்
கள்ளினால், அருந்தினாரை
நஞ்சமும் கொல்வதல்லால்,
நரகினை நல்காது அன்றே?'' (4469)

(மரபு-முறைமை; கொட்பு-சுழற்சி/கலக்கல்; தஞ்சம்-அடைக்கலம்; களிப்பு-செருக்கு; தாக்குதல்-வருத்துதல்; கஞ்சம்-தாமரைமலர்; தீர்தல்-நீங்குதல்; நஞ்சம்-நஞ்சு/விஷம்)

கள் உண்டவர்களை, வஞ்சனை செய்தலும், களவு செய்தலும், பொய் உரைத்தலும், அறிவு மயங்குதலும், தொன்று தொட்டுவருகின்ற முறைமையில் வழுவுதலும், தன்னையே அடைக்கலம் என்று கருதி வந்தவர்களைக் காக்காது, தவிர்க்கும் தன்மையும், மிகுந்த ஆணவமும், இவை எல்லாம் ஒன்றுசேர்ந்து தாக்கி வருத்தும். இவர்களிடமிருந்து மென்மையான தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியாகிய திருமகளும் நீங்கிப் போய்விடுவாள்; வறியவராகி விடுவர். ஆனால் விஷம் என்பதோ, அதைப் பருகினவரை உடனே கொன்று விடுமேயல்லாது, கள்ளைப் போலத் தொடர்ந்து வந்து நரகத்தினைத் தாராது என்கிறான் சுக்கிரீவன்.

பஞ்சமாபாதகங்களில் நான்கு தீவினைகளான கொலை, களவு, காமம், பொய் முதலியவற்றையெல்லாம், இந்த மற்றொரு பஞ்சமாபாதமாகிய கள்ளுண்டல் ஒன்றே செய்யத்தூண்டும். அதனால் திருமகள் நீங்குவாள், கள்ளுண்பவர் நரகம் சென்றுசேர்வர் அதற்குமாறாக, நஞ்சு உண்பவர்கள் தாம் மட்டும் இறப்பர். உடல் மட்டும் அழியும், அவ்வளவுதான்; அது தொடர்ந்து நரகத்தைத் தராது எனவே நஞ்சைக் காட்டிலும் கள் மிகக் கொடியது என்று நிறுவுகிறான் சுக்கிரீவன். கள், உணர்வினை அழித்து உயிரையும் நரகில் செலுத்தும் என்பதாம்.

96. ''கேட்டனென்'' நறவால் கேடுவரும் எனக்
கிடைத்த அச்சொல்
காட்டிய, அனுமன் நீதிக்
கல்வியால் கடந்த அல்லால்
மீட்டு இனி உரைப்பது என்னே?
விரைவின் வந்து அடைந்த வீரன்
மூட்டிய வெகுளியால், நான்
முடிவதற்கு ஐயம் உண்டோ? (4470)

(நறவு-கள்/மது; கிடைத்த-பொருந்திய; மூட்டுதல்-கிளர்ந்து எழச்செய்தல்; முடிதல்-அழிதல்;கடத்தல்-தப்பி உயிர்வாழ்தல்)

''மது பருகுவதால் தீங்கு விளையும் என்று கற்றறிந்தோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தச் செயல் என் விஷயத்தில் முற்றிலும் சரி என்பதை நன்கு விளக்கி எடுத்துக்காட்டி விட்டது. இதைவிட அதைப்பற்றிச்

சொல்லுவதற்கு வேறு என்ன இருக்கிறது? நான் காலந்தாழ்த்தியதால் பெரும் சீற்றம் கொண்டு விரைந்து வந்த, வீரனாகிய இலக்குவனைத் தக்க சமயத்தில் முன் வந்து தடுத்து நிறுத்தியது அனுமனது சாத்திர வேத நூல் கல்வியறிவுதான், அதனால்தான் நான் இன்று உயிர் பிழைத்திருக் கின்றேன். இல்லையென்றால், அத்தகைய கிளர்ந்தெழுந்த கோபத்தில் வந்த இலக்குவன் கையால் நான் என்றோ அழிந்து போயிருப்பேன். இதில் ஏதும் சந்தேகம் உள்ளதோ?'' என்றான் சுக்கிரீவன்.

கள் குடிப்பதனால் உண்டாகும் கேட்டினைத் தான் பட்டு அறிந்து கொண்டேன் என்றும், இலக்குவனின் கோபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியது நவவியாக்ரண பண்டிதனான அனுமனின் நீதிக்கல்விதான் என்றும் அனுமனைப் பாராட்டுகிறான் சுக்கிரீவன் என்பதாம். அனுமன் தக்க சமயத்தில், தனது நுட்ப அறிவால் இலக்குவன் சீற்றத்தைத் தணித்திருக்காவிட்டால், தான் இதுகாறும் இறுதி கண்டிருப்பது திண்ணம் என்பது சுக்கிரீவன் கருத்து.

97. ''ஐய! நான் அஞ்சினேன், இந் நறவினின் அரிய கேடு;
கையினால் அன்றியேயும், கருதுதுல் கருமம் அன்றால்;
வெய்யதாம் மதுவைஇன்னம் விரும்பினன் என்னின், வீரன்
செய்ய தாமரைகள் அன்ன சேவடி சிதைக்க'' என்றான். (4471)

(கருதுதல்-மனத்தால்நினைத்தல்; வெய்ய-கொடிய; சிதைக்க-அழிக்க; வீரன்-இராமன்; செய்ய-சிவந்த)

சுக்கிரீவன் அங்கதனை நோக்கி ''அன்புடையவனே! இந்தக் கள்ளினால் உண்டாகும் நீக்குதற்கு அரிய தீங்குகளை என் அனுபவத்தில் கண்டதால் நான் அஞ்சுகிறேன். இதனைக் கையினால் தீண்டுதல் மட்டுமல்ல; மனத்தால் நினைத்தலும் செய்யக்கூடிய செயலாகாது. கொடுமை விளைவிக்கக் கூடிய இந்த மதுவை நான் இன்னும் விரும்பிப் பருகுவேன் என்றால் வீரனாகிய இராமபிரானது சிவந்த செந்தாமரை மலர் போன்ற திருவடிகள் என்னை அழிக்கட்டும்'' என்று சூளுரைக்கிறான் சுக்கிரீவன்.

''வெய்யதாம் மது'' என்பதற்குக் கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் மது என்று பொருள்கொண்டோம். வெம் என்ற சொல்லுக்கு விரும்பத்தக்க என்ற ஒரு பொருளும் உண்டு. எனவே மேன் மேலும் விரும்பத்தக்க மது என்றும் பொருள் கொள்ளுதல் பொருந்தும். ''வெம்மை வேண்டல்'' என்பது தொல்காப்பியம் ''வெய்ய'' என்பதற்குக் கடும்புளிப்புடைய என்றும் பொருள் கொள்ளுதல் பொருந்தும். ''தேள்கடுப்பன்ன நாள்படு தேறல்'' என்பது புறநானூறு. தான் இனிமேல் மதுவைத் தொடுவதில்லை என்று இராமபிரான் சாட்சியாக வஞ்சினம் உரைத்தான் சுக்கிரீவன் என்பதாம் ''கருதுதல் கருமம் அன்றால்'' என்பது கள்ளைக் கையால் தொடுவதோடல்லாமல், மனத்தால் நினைப்பதும் தக்கதாகாது என்று பொருள்படும். உள்ளக்களித்தலும், உண்டு மகிழ்தலும் காமத்துக்குத்தான்

உண்டு என்றாலும், இவை இரண்டும் கள் குடிக்கத்தூண்டு கோலாக இருக்கும் என்பதால் கண்டு மகிழ்வதும், உள்ளத்தில் கருதுதலும் தகாது என்றான் என்க.

98. சுக்கிரீவன் அரண்மனை வாயிலில் இலக்குவனை வரவேற்க நிற்றல்.

என்றுகொண்டுஇயம்பி ''அண்ணற்கு
எதிர்கொளற்கு, இயைந்த எல்லாம்
நன்று கொண்டு, இன்னும் நீயே
நணுகு'' என அவனை ஏவி,
தன்துணைத் தேவிமாரும்,
தமரொடும் தழுவ, தானும்
நின்றனன் நெடிய வாயில்
கடைத்தலை, நிறைந்த சீரான். (4472)

(சீர்-சிறப்பு/நற்குணங்கள்; அண்ணல்-தலைவன்; நணுகுதல்-அணுகுதல்; தமர்-சுற்றத்தார்; தழுவ-சூழ்ந்துவர; கடைத்தலை-தலைவாயில்)

என்று இவ்வாறு சொல்லிய, நற்குணங்கள் நிரம்பப் பெற்ற சுக்கிரீவன் அங்கதனை நோக்கி, ''இலக்குவனுக்குத் தக்கனவும், அவனை நம் நாட்டில் எதிர்கொண்டு வரவேற்கத்தக்கனவும்ஆகிய அரசச் சின்னங்கள் எல்லாவற்றையும், குறைவுபடாது, மிகுதியாக எடுத்துக்கொண்டு, இப்போதும் நீயே அவனருகில் சென்று சேர்'' என அங்கதனை அனுப்பிவிட்டு, தனது மனைவி உருமையும், மற்ற துணைத்தேவிமாரும், சுற்றத்தாரும் தன்னைச் சூழ்ந்து நிற்க, தான் தன் அரண்மனையின் தலைவாயிலில், இலக்குனை எதிர்நோக்கிக் காத்து நின்றான்.

அரசச் சின்னங்கள் என்பன கொடி குடை, முரசம் வாத்தியங்கள் முதலாயின என்க. மன்னர்கள் தம் பட்டத்தரசியரோடு, உரிமை மகளிரையும் கொண்டிருத்தல் வழக்கு. எனவே துணைத் தேவிமாரும் என்றார் என்க. கடைவாயிலில் நின்று மற்ற மன்னர்களை வரவேற்பது ஒரு மரபு என்க.

99. கிட்கிந்தை வீதிகளின் அணி நலன்

உரைத்த செஞ்சாந்தும், பூவும், சுண்ணமும், புகையும், ஊழின்
நிரைத்த பொற்குடமும், தீபமாலையும், நிகர்இல்முத்தும்,
குரைத்துஎழு விதானத்தோடு, தொங்கலும், கொடியும், சங்கும்,
இரைத்து இமிழ் முரசும், முற்றும்இயங்கின, வீதிஎல்லாம். (4473)

(உரைத்த-அரைக்கப்பெற்ற; சாந்து-சந்தனக்குழம்பு; சுண்ணம்-நறுமணப் பொடிகள்; ஊழி-முறைமை; நிரை-வரிசை; குடம்- பூரண கும்பம்; மாலை-ஒழுங்கு; குரைத்தல்-ஆரவாரித்தல்; விதானம்- மேற்கட்டி; தொங்கல்-வாசமாலை/பீலிக்குஞ்சம்; இமிழ்தல்- பேரொலி செய்தல்; இயங்கின-சென்றன; கொடி-துவசம்)

இலக்குவனை வரவேற்கும் பொருட்டு, அரைக்கப் பெற்ற சிவந்த சந்தனக்குழம்பு, நறுமணம் மிக்க மலர்கள், வாசனைப் பொடிகள், அகில், சாம்பிராணி முதலிய புகை, முறையாகவும் வரிசையாகவும் வைக்கப்பெற்ற பொன்னாலாகிய பூரணபொற்கலசங்கள், மாலைபோல் வடிவமைக்கப்பட்ட தீப விளக்குகள், ஒப்பற்ற முத்துமாலைகள், ஒலிக்கின்ற மேற்கட்டிகள், மயிற் பீலிக்குஞ்சங்கள், கொடிகள், சங்குகள், ஆரவாரித்து எழுகின்ற முரசங்கள், ஆகிய யாவும், குறைவின்றி, கிட்கிந்தை நகரத் தெருக்களில் எல்லாம் நிறைந்து விளங்கின.

பொதுவாக இது போன்ற மன்னரை வரவேற்கும் போது எட்டு மங்கலங்கள் இருக்க வேண்டும் என்பது மரபு. அவை அஷ்டமங்கலங்கள் எனப்படும். அவை கண்ணாடி, பூர்ணகும்பம், ரிஷபம், வெண்கவரி, தோட்டி, திருமகள் உருவம், ஸ்வஸ்திகம், தீபம் என்பன.

100. தூய திண் பளிங்கின் செய்த சுவர்களில், தலத்தில், சுற்றில்
நாயக மணியிற் செய்த, நனி நெடுந்தூணின் நாப்பண்
சாயை புக்கு உறலால், கண்டோர் அயர்வுற, கைவிலோடும்
ஆயிரம் மைந்தர் வந்தார் உள் எனப் பொலிந்தது அவ்வூர். (4474)

(தலம்-தரை; நாயகம்-தலைமை; நாப்பண்-நடுவில்; சாயை-நிழல்/ பிரதிபிம்பம்; மைந்தர்-வீரர்; அயற்வுறுதல்-வருந்துதல்/ சோர்தல்; நனி-மிக)

கிட்கிந்தை நகரமானது, தூய்மையான, வலிமையான, உறுதியான பளிங்குக் கற்களினால் இழைக்கப்பட்ட மாளிகைச் சுவர்களை உடையது, தரையை உடையது, சுற்றிலும் தலைமைப்பண்பு கொண்ட நவமணிகள் பதிக்கப் பெற்ற, மிகப் பெரிய தூண்களை உடையது. இவற்றின் நடுவில் எல்லாம், இலக்குவனது நிழல் படிந்து விழுவதால், அதனைக் கண்ட கிட்கிந்தை மக்கள், கையில் வில்லை ஏந்திக் கொண்டு ஆயிரக்கணக்கான வீரர்கள் வந்து கொண்டிருக்கின்றனரோ? என்று எண்ணும்படி பொலிவு பெற்று விளங்கியது.

இதே போலக் கண்ணனைக் காணச் சென்ற குசேலர் தன் உருவத்தையே அங்கே பதிக்கப் பெற்றிருந்த கண்ணாடிச் சுவர்களில் கண்டு, அதனைத் தன்சாயை என்று கருதாது, தன்னைப் போலவே எண்ணற்ற வறியவர், கண்ணனைக் காணவந்திருக்கின்றனர் போலும் என்று எண்ணிக் கொண்டார் என்றதும் இங்கு நினைவு கூர்க.

101. இலக்குவன் அங்கதனை வினவுதல்

அங்கதன் பெயர்த்தும் வந்து ஆண்டு அடிதொழுதானை ஐயன்,
"எங்குஇருந்தான் நும்கோமான்?" என்றலும், "எதிர்கோள் எண்ணி,
மங்குல்தோய் கோயில் கொற்றக் கடைத்தலை மருங்கு நின்றான்.
சிங்க ஏறு அனைய வீர! செய்தவச் செல்வன்" என்றான். (4475)

(ஐயன்-வியக்கத்தக்க தலைவன்; பெயர்த்தும்-மீண்டும்; ஆண்டு-அவ்விடத்தில்; கோமான்-மன்னவன் சிங்கஏறு-ஆண்சிங்கம்; எதிர்கோள்-எதிர்கொண்டு வரவேற்றல்; மங்குல்-மேகம்; தோய்தல்-தழுவுதல்; கொற்றம்-வெற்றி; கடைத்தலை-தலைவாயில்)

மீண்டும் அங்குவந்து இலக்குவனின் திருவடிகளைத் தொழுது எழுந்த அங்கதனை நோக்கி, இலக்குவன், ''உன்னுடைய மாமன்னன் சுக்கிரீவன் எங்கு இருக்கிறான்?'' என்று கேட்க, அதற்கு அங்கதன் ''ஆண்சிங்கம் போன்ற ஆற்றலுடைய வீரனே! முற்பிறவியில் தான் செய்த தவத்தின் பயனாய் உங்களது நட்பு என்னும் பெரும் செல்வத்தைப் பெற்றவனான சுக்கிரீவன், உன்னை எதிர்கொண்டு வரவேற்கும் பொருட்டு, மேகம் வந்து தழுவுகின்ற அளவு உயர்ந்த அரண்மனையில், வெற்றியமைந்த தலை வாயிலின் அருகில் உன்னை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறான்'' என்றான்.

இராம இலக்குவரின் நட்பும், அன்பும் கிடைக்கப் பெற்றமைக்கு முற்பிறவியில் சுக்கிரீவன் செய்த தவம்தான் காரணம் என்று இலக்குவனை முகமன் கூறி அடிதொழுகிறான் அங்கதன் என்பதாம்.

102. சுக்கிரீவன் இலக்குவனை எதிர்கொண்டு வரவேற்றல்.

சுண்ணமும் தூசும்வீசி, சூடகத்தொடிக்கைம் மாதர்,
கண்அகன் கவரிக்கற்றை கால்உற, கலைவெண் திங்கள்
விண்உற வளர்ந்தது என்ன, வெண்குடை விளங்க, வீர
வண்ணவில் கரத்தான் முன்னா, கவிக்குலத்து அரசன் வந்தான். (4476)

(தொடி-தோள்வளைகள்; சூடகம்-முன்கை வளையல்; சுண்ணம்-வாசனைப் பொடிகள்; தூசு-ஆடைகள்; கண் அகல்-இடம் அகன்ற; கவரி-வெண்சாமரம்; கற்றை-தொகுதி; கால்-காற்று; கவிக்குலம்-வானர இனம்; வண்ணம்-நிறம்/அழகு)

நறுமணம் மிக்க பல வகைப்பட்ட வாசனைப் பொடிகளையும், பட்டாடைகளையும் தூவிக் கொண்டு, முன் கைவளையல்களும், தோள்வளைகளும் அணிந்த வானரக் குலப்பெண்கள், இடம் அகன்ற வெண் சாமரைத் தொகுதியை வீசிக் கொண்டு வருவதால் காற்று எழவும், பதினாறு கலைகளும் நிரம்பப் பெற்ற வெண்மையான சந்திரன் வானத்தில் பொலிவு பெற்று விளங்குவது போல, வெண்கொற்றக் குடை ஒளி பரப்பி வரவும், ஆண்மையும் வீரமும் பொருந்திய அழகிய நிறம் கொண்ட

வில்லைக் கையில் ஏந்தி வருகின்ற இலக்குவன் எதிரில், வானர குலத் தலைவனாகிய சுக்கிரீவன் வந்தான்.

நறுமணப் பொடிகளையும், தூய பட்டாடைகளையும் மேலே வீசுதல் மகிழ்ச்சியையும், அரச மரியாதையையும் தெரிவிக்கும் அடையாளங்கள் என்க.

103. அருக்கியம் முதலஆய, அருச்சனைக்கு அமைந்த யாவும்
முருக்கு இதழ் மகளிர் ஏந்த, முரசுஇனம் முகிலின் ஆர்ப்ப
இருக்கு இனம் முனிவர்ஓத, இசை திசை அளப்ப, யாணர்த்
திருக்கிளர் செல்வம் நோக்கித் தேவரும் மருளச் சென்றான் (4477)

(முருக்கு-முள்முருக்க மலர்; அருக்கியம்-கைகழுவக் கொடுக்கப்படும் நீர்; அருச்சனை-உபசாரம்/வழிபடுதல்; முகில்-மழை; இருக்கு-ரிக்வேதம்/வேதங்கள்; யாணர்-புதிய/வளமைமிக்க; மருளுதல்-வியத்தல்/திகைத்தல்)

கலியாண முருங்கை மலர் போன்ற சிவந்த இதழ்களையுடைய வானர மகளிர், அருக்கியம் முதலான வழிபடுதற்கு உரிய எல்லாப் பொருள் களையும் தங்கள் கைகளில் ஏந்தி வரவும், பேரிகை முதலான முரசங்கள் இடிமுழக்கம் போல் ஒலிக்கவும், முனிவர்கள் இருக்கு முதலாய வேதங்களை ஓதிக் கொண்டு வரவும், இசைவாணர்கள் இசைக்கும் இசைகளின் ஒலி, திக்குகளின் எல்லைவரை பரவவும், தான் புதிதாகப் பெற்ற வளமையான அரசச் செல்வத்தின் பொலிவினைக் கண்டு தேவர்களும் வியந்து திகைக்குமாறு, சுக்கிரீவன் இலக்குவனை எதிர்கொள்ளச் சென்றான்.

அர்ச்சனைக்கு அமைந்த யாவும் என்பது, மாமன்னர்களையும், பெரியோர்களையும் வரவேற்கும் போது செய்யப்படுகின்ற சோடச உபசாரம் என்று கூறப்படும் பதினாறு வகையிலான உபசாரங்களைக் குறிக்கும். அவை கைகழுவ நீர் தருதல், ஆசனம் அளித்தல், கால் கழுவ நீர் தருதல், ஆடைசார்த்தல், அருந்துவதற்கு நீர் தருதல், முப்புரி நூல் தருதல், சந்தனம் பூசுதல், மலர் சூட்டல்; அக்ஷதை தூவுதல்; நறும்புகை எடுத்தல்; நல்விளக்குக் காட்டுதல்; கற்பூரம் ஏற்றுதல்; அமுது படைத்தல்; அடைக்காய் வெற்றிலை பாக்கு தாம்பூலம் தருதல்; மந்திர மலரால் அர்ச்சித்தல் என்பனவாம். கடவுளுக்குச் செய்யும் சோடச உபசாரம் இதனின்றும் மாறுபட்டது என்பதை நினைவிற் கொள்க.

104. வெம்முலை மகளிர் வெள்ளம் மீன்என விளங்க, விண்ணில்
சும்மைவால் மதியம், குன்றில்தோன்றியது எனவும் தோன்றிச்
செம்மலை எதிர்கோள் எண்ணித் திருவொடு மலர்ந்த செல்வன்,
அம்மலை உதயம் செய்யும் தாதையும் அனையன் ஆனான். (4478)

(மலர்தல்-பொலிவுபெற்றுத் திகழ்தல்; செம்மல்-பெருமையிற் சிறந்தோன்; வெம்-விரும்பத்தக்க; சும்மை-நிறைவு/பாரம்; வால்-

வெள்ளை நிறம்/வெண்மையான; தாதை-தந்தை/சூரியன்; அனையன்-ஒத்தவன்; வெள்ளம்-கூட்டம்)

புதியதான அரசச் செல்வத்தோடு மலர்ச்சியுற்றுத் திகழும் சுக்கிரீவன், பெருமையிற் சிறந்தவனான இலக்குவனை எதிர்கொண்டு வரவேற்கும் பொருட்டு, விரும்பத்தக்க கொங்கைகளையுடைய வானர மகளிரின் கூட்டம் நட்சத்திரங்களைப் போல விளங்கவும், அதன் நடுவில் ஆகாயத்தில் பேரொளியுடன் கூடிய வெண்மையான சந்திரன் அந்தக் கிட்கிந்தை மலையில் வந்து தோன்றியது போன்ற தோற்றத்துடன் தோன்றினான். அதோடு மட்டுமல்ல; அவன் அவ்வாறு தோன்றியது, அவனுடைய தந்தையான சூரியன் உதயகிரியில் தோன்றும் தோற்றத்தையும் ஒக்குமாறு விளங்கினான்.

வானர மகளிர் கூட்டத்தை நட்சத்திரங்களுக்கும், சுக்கிரீவனைச் சந்திரனுக்கும் முதலில் உவமை கூறிய கவிஞன், பின்னர் அதே சுக்கிரீவனைச் சூரியனுக்கும் உவமைப் படுத்திய நயம் காண்க. மகிழ்ச்சியைக் காட்ட, கலைகள் நிரம்பப் பெற்ற சந்திரனையும் தோற்றப் பொலிவைக் காட்டச் சூரியனையும் உவமை கூறும் இடங்கள் தமிழ் இலக்கியங்களில் பல உண்டு. ''ஞாயிற்றன்ன வெந்திறல் ஆண்மையும், திங்கள் அன்ன தண் பெரும் சாயலும்'' என்பது புறநானூறு; ''முந்நீர் நாப்பண் ஞாயிறுபோலவும், பன்மீனாப்பண் திங்கள் போலவும்'' என்பது மதுரைக் காஞ்சி.

105. சுக்கிரீவனைக் கண்டு இலக்குவன் சீற்றம் தணிதல்.

தோற்றிய அரிக்குலத்து அரசை, தோன்றலும்
ஏற்று எதிர் நோக்கினான்; எழுந்தது அவ்வழிச்
சீற்றம்; அங்கு அதுதனை, தெளிந்த சிந்தையால்
ஆற்றினன், தருமத்தின் அமைதி உன்னுவான். (4479)

(தோன்றல்-பெருமை பொருந்தியவன்/தலைவன்; அவ்வழி-அந்நிலை; அமைதி-இயல்பு; உன்னுதல்-எண்ணுதல்; ஆற்றுதல்-தணித்துக் கொள்ளுதல்)

பெருமைவாய்ந்த தலைவனான இலக்குவனும், அங்கு தோன்றிய வானர குலத்து அரசனாகிய சுக்கிரீவனை எதிரே பார்த்ததும் அப்பொழுது சிறிது தணிந்திருந்த சீற்றம் மூண்டெழுந்தது; என்றாலும், அறத்தின் நிலையை நன்கு அறிந்தவனும், தெளிவு பெற்ற மனத்தை உடையவனுமான இலக்குவன் அச் சினத்தைத் தணித்துக் கொண்டான்.

முன்னர் தாரை, அனுமன், அங்கதன் ஆகியவர்களின் பெருமுயற்சியால் இலக்குவன் சீற்றம் தணிந்திருந்தான் என்றாலும், முற்றிலும் நீங்கிவிடவில்லை என்பதும், சுக்கிரீவனைக் கண்டதும் அச்சீற்றம் மீண்டும் எழுந்தது என்பதும், இராமனது கட்டளையையும்,

தருமத்தின் தன்மையையும் அறிந்தவனும், தெளிவான அமைதியான மனத்தை உடையவனுமான இலக்குவன் இப்போது அரிதின் தன் சீற்றத்தைத் தணித்துக் கொண்டான் என்பதும் தெளிவாக்கப்பட்டதை உணர்க. தருமத்தின் அமைதி என்பது, இன்னா செய்தார்க்கும் இனியவேசெய்தல் என்பதாம். ''தேர்த்தின்னா மற்றவர் செய்தக்கால், தாம் அவரைப் பேர்த்தின்னா செய்யாமை நன்று'' என்பது நாலடியார்.

106. இருவரும் அரண்மனையுள் செல்லதல்.

எழுஎன, மலைஎன, எழுந்த தோள்களால்
தழுவினர் இருவரும்; தழுவி, தையலார்
குழுவொடும், வீரர்தம் குழாத்தினோடும், புக்கு,
ஒழிவுஇல் பொற்கோபுரத்து உறையுள் எய்தினார். (4480)

(எழு-இரும்புத் தூண்; எழுந்த-உயர்ந்த; ஒழிவுஇல்-கெடுதல் இல்லாத; உறையுள்-தங்குமிடம்/அரண்மனை)

இரும்புத்துண்போன்றதும், மலைபோன்றதும் உயர்ந்து பூரித்ததுமான, தோள்களால், இலக்குவனும், சுக்கிரீவனும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். அவ்வாறு தழுவிக் கொண்டு, வானரப் பெண்டிர் கூட்டத்தோடும், வானர வீரர் தொகுதியோடும், கெடுதல் இல்லாத பொன்னால் அமைக்கப்பட்ட கோபுரத்தை உடைய அரண்மனைக்குள் உள்ளே சென்றனர்.

எழுவும், மலையும், முறையே, இலக்குவ சுக்கிரீவரது தோள்களுக்கு உவமைகள்.

107. இலக்குவன் சிங்காதனத்தில் அமர மறுத்தல்.

அரியணை அமைந்தது காட்டி ''ஐய! ஈண்டு
இரு'' எனக் கவிக்குலத்து அரசன் ஏவலும்
''திருமகள் தலைமகன் புல்லில் சேர, எற்கு
உரியதோ இஃது?'' என, மனத்தின் உன்னுவான். (4481)

(அரியணை-சிங்காதனம்/சிம்மாசனம்; ஏவல்-வேண்டுதல்; தலைமகன்-நாயகன்; எற்கு-எனக்கு) (குளகப்பாடல்)

குரக்கினத்தரசனாகிய சுக்கிரீவன், அங்கு அமைக்கப்பட்டிருந்த ஒரு நல்ல சிங்காதனத்தை இலக்குவனுக்குக் காட்டி, ''ஐயனே! நீ இதில் அமர்வாயாக! ''என்று வேண்டிக் கொண்டதும், இலக்குவன் எல்லாச் செல்வங்களுக்கும் அதிதேவதையான இலக்குமியின் நாயகனான இராமபிரானே அங்கு புல்லாகிய படுக்கையில் படுத்திருக்கவும், அவனுடைய ஏவல் பணியாளனாகிய எனக்கு இத்தகைய ஒரு சிங்காதனம் தேவையோ?'' என்று தன் மனத்தில் எண்ணி வருந்திக் கொண்டு - பாடல் தொடர்கிறது.

அரியணை என்பது சிங்கம் சுமந்த செழுமணித் தவிசு என்க.

108. ''கல்அணை மனத்தினையுடைக் கைகேசியால்,
எல்அணை மணிமுடி துறந்த எம்பிரான்
புல்அணை வைக, யான் பொன்செய் பூத்தொடர்
மெல்அணை வைகலும் வேண்டுமோ?'' என்றான். (4482)

(எல்-ஒளி; வைகுதல்-தங்கியிருத்தல்; அணை-தவிசு/ஆசனம்; வேண்டுதல்-விரும்பத்தக்கது)

''கல்லைப்போன்ற இறுகிய மனம் படைத்த என் சிற்றன்னை கைகேயியின்சூழ்வினையால்தனக்குரிய, ஒளிபொருந்தியஇரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மகுடத்தைத் துறந்துவிட்டுக் கானகம் புகுந்த என் தலைவனாகிய இராமபிரான், அங்கே புல் ஆசனத்தில் வீற்றிருக்க, அவனுடைய ஏவலாளனான நான்இங்கே பொன்னால் செய்யப்பட்டதும், மலர்களால் அலங்கரிக்கப் பெற்றதுமான மென்மையான சிங்காசனத்தில் அமர்வதும் விரும்பத் தக்கதாகுமோ?'' எனக் கேட்டான்.

தன் சிற்றன்னை கைகேயிபால் கொண்ட சீற்றத்தை இன்னும் இலக்குவன் மறந்தான் இல்லை என்பது பெறப்படுகிறது. ''கல்அணை மனம்'' என்பது, பிறரது துன்பம் கண்டபோது, அன்பினால் இளகும் தன்மையின்றி, கல்போன்று வல் என்றிருக்கும் இயல்பினதாகிய ஈரம் அற்ற உள்ளம் என்று பொருள் விரிவுகொள்ளும் ''கல்லில் வலிய மனத்தேன்'' என்பது தேவாரம்.

109. சுக்கிரீவன் வருந்துதலும் இலக்குவன் தரையில் அமர்தலும்.

என்று அவன் உரைத்தலும், இரவி காதலன்
நின்றனன்; விம்மினன் மலர்க்கண் நீர்உக;
குன்றுஎன உயர்ந்த அக்கோயில் குட்டிம
வன்தலத்து இருந்தனன் மனுவின் கோமகன். (4483)

(இரவி காதலன்-சூரியன் புதல்வன்/சுக்கிரீவன்; விம்முதல்-தேம்பி அழுதல்; கோமகன்-அரசிளங்குமரன்; குன்று-மலை; கோயில்-அரண்மனை; குட்டிமம்-கல்தரை; தலம்-தரை)

என்று இலக்குவன் கூறியதும், அதைக் கேட்ட சூரியன் புதல்வனான சுக்கிரீவன், தனது தாமரை மலர் போன்ற கண்களினின்றும் கண்ணீர் பெருகத் தேம்பி அழுது கொண்டு செயலற்று நின்றான்; மலைபோல உயர்ந்த அந்த அரண்மனையில் அமைக்கப்பட்டிருந்த கல் பரவிய வலியதரையில், மனுக்குலத்தோன்றலும், அரசிளங்குமரனுமாகிய இலக்குவன் அமர்ந்திருந்தான்.

குட்டிமம் என்பது கல் பரப்பிய வலிய தரையைக் குறிக்கும். என்பாரும் உளர். சுக்கிரீவன் கண்ணீர் உகுத்தது இலக்குவன் இராமன் பால் கொண்ட பெருமதிப்பையும், பேரன்பையும் கருதி என்றாலும் கூட, தான் அந்நிலையில் இல்லாது போனோமே என்ற வருத்தத்தாலும் என்க. ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்?'' என்பது குறள்.

110. சுற்றியிருந்தவர்களும் வருந்துதல்.

மைந்தரும், முதியரும், மகளிர்வெள்ளமும்,
அந்தம்இல் நோக்கினர், அழுத கண்ணினர்
இந்தியம் அவித்தவர் என இருந்தனர்;
நொந்தனர்; தளர்ந்தனர்; நுவல்வது ஓர்கிலார். (4484)

(நொந்து-மனம்வெதும்பி; நுவல்வது-சொல்லுவது; இந்தியம்-இந்திரியம்/ஐம்பொறிகள்; அவித்தவர்-அடக்கியவர்; அந்தம்இல்-பொலிவுஇழந்த; நோக்கம்-பார்வை)

இலக்குவன் தரையில் அமர்ந்ததைக் கண்டதும், அங்கு சுற்றி நின்றிருந்த வானர ஆடவர்களும், வயது வந்தோரும், பெண்களின் கூட்டமும், பொலிவிழந்த பார்வை உடையவர்களாய்க் கண்களில் கண்ணீர் பெருக்கி, மனம் வெதும்பி உடல் சோர்ந்து, என்ன கூறுவது என்று எண்ண முடியாதவர்களாகி, ஐம்பொறிகளையும் அடக்கி நிற்கும் முனிவர்களைப் போலச் செயலற்று நின்றிருந்தனர்.

''அந்தமில் நோக்கு'' என்பது அழுத கண்ணை உடையவராய் இருந்ததால் அவர்கள் கண்களில் கண்ணீர் முட்ட, தெளிவற்ற பார்வையுடையவராய் இருந்தனர் என்பதாம்.

111. நீராடி உணவருந்த வேண்டுதல்.

''மஞ்சன விதிமுறை மரபின்ஆடியே,
எஞ்சல்இல் இன்னமுது அருந்தின், யாமெலாம்
உய்ஞ்சனம் இனி'' என அரசு உரைத்தலும்,
அஞ்சன வண்ணனுக்கு அனுசன் கூறுமால். (4485)

(மரபு-முறை; மஞ்சனம்-நீராடுதல்; எஞ்சல்இல்-குறைதல்இல்லாத; உய்ஞ்சனம்-உய்ந்தனம்/நற்கதி பெறுவோம்; அஞ்சனம்-மை; அனுசன்-தம்பி)

கிட்கிந்தை அரசனாகிய சுக்கிரீவன் இலக்குவனை நோக்கி, ''விதிமுறைப்படி நீராடி, சுவையில் குறையில்லாத இனிய உணவை நீ உட்கொண்டால், நாங்களெல்லாம் பெரும்பேறும், நல்வாழ்வும், நற்கதியும் பெற்றவர்களாவோம்'' என்று கூறியதும், மை போன்ற கரிய நிறமுடைய மேனியையுடைய இராமனுக்கு உடன் பிறந்த தம்பியாகிய இலக்குவன், கீழ்க்கண்டவாறு கூறினான்.

மஞ்சனம் என்பது திருமஞ்சனம் என்று, நீராடுதலைக் குறிக்கும். அனுசன் என்பது அனுஜன் என்ற வடசொல்லின் தமிழாக்கம். உடன்பிறந்தான் என்று பொருள்படும். இலக்குவனுக்கு இராமானுஜன் என்ற ஒரு பெயரும் உள்ளதை நினைக. உணவிற்குமுன் நீராடல் வேண்டுமென்பது சாத்திர நூல் விதிமுறை என்பது அறிக.

112. இலக்குவன் மறுத்துரைத்தல்.

''வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
இருத்தும் என்றால், எமக்கு இனியது யாவதோ?
அருத்தி உண்டு ஆயினும், அவலம்தான் தழீஇக்
கருத்து வேறு உற்றபின், அமிழ்தும் கைக்குமால்.'' (4486)

(மீக்கொளல்-நிரம்பி மேலோங்கி நிற்றல்; அருத்தி-விருப்பம்; அவலம்-துயரம்; தழீஇ-தழுவி/மேற்கொண்டு; கைக்கும்-கசக்கும்; இருத்தும்-பிழைத்து உயிரோடு இருத்தல்)

''சீதாதேவியைப் பிரிந்ததனால் ஏற்பட்டிருக்கும் துயரத்தாலும், அவளை இவ்வளவு நாளும் மீட்டுக்கொண்டு வரமுடியாத கையாலாகாத் தன்மையால் ஏற்பட்டிருக்கும் பழிச் சொல்லாலும், எங்கள் வயிறு நிரம்பி மேலோங்கி நிற்கிறது; என்றாலும் நாங்கள் இன்னும் உயிர் வாழ்கிறோம் என்றால், எங்களுக்கு வேறு எதுதான் இனிமை பயப்பதாக அமையும்? உணவு உண்பதற்கு விருப்பம் இருந்தாலும் கூட, துயரம்தான் எங்களைத் தழுவிக் கொண்டிருக்கிறது; அதனால் கருத்து வேறுபாடுகள் அமைந் திருக்கின்றன என்று மன அமைதியில்லாது மனக்கலக்கம் உற்றிருக்கின்ற இந்த நேரத்தில், தேவ அமிர்தம் கூடக் கசக்கத்தானே செய்யும்?'' என்கிறான் இலக்குவன்.

வருத்தமும் பழியும் நிறைந்துள்ள போது உணவில் மனம் விருப்பம் கொள்ளாது என்பதை இலக்குவன் சுக்கிரீவனுக்கு உணர்த்தினான் என்பதாம்.

113. ''மூட்டிய பழி எனும் முருங்கு தீ அவித்து,
ஆட்டினை கங்கைநீர், அரசன் தேவியைக்
காட்டினை எனின், எமைக் கடலின் ஆர் அமிழ்து
ஊட்டினையால்; பிறிது உய்வும் இல்லையால்.'' (4487)

(முருங்குதல்-அழிதல்; கடல்-திருப்பாற்கடல்; ஆர்-அரிய; உய்வு-துன்பம்)

''எங்களது தலைவனாகிய இராமபிரானின் துணைவியாகிய சீதா தேவியைத் தேடிக் கண்டு பிடித்து அவள் இருக்கும் இடத்தை எங்களுக்குக் காட்டிவிட்டாய் என்றால், அதுவே எங்களுக்கு நேர்ந்துள்ள பெரும் பழியை நீக்கி, அழித்தல் குணமுடைய நெருப்பை அணைத்து எங்களைப் புனித கங்கை நீரால் நீராட்டியவனாவாய்; அத்தோடு, திருப்பாற்கடலில்

கடைந்தெடுக்கப்பட்ட அரிய தேவாமிர்தத்தை எங்களுக்கு உண்பித்தவனும் ஆவாய்; இதனால் எங்களுக்கு வேறு எந்தத் துயரமும் இல்லாமல் போய் விடும்'' என்றான் இலக்குவன்.

முன்பாடலில் சுக்கிரீவன் நீராடி உணவு அருந்துக என்று கூறியதற்கு விடையாக இலக்குவன், சீதாதேவியைத் தேடிக் கண்டுபிடித்து விட்டால், அதுவே புனித கங்கையில் நீராடியதற்கும், தேவாமிர்தத்தையே உணவாக உட்கொண்டதற்கும் இணையாகும். என்று கூறினான் என்பதாம். தான் வந்த காரியத்தையும், சுக்கிரீவன் செய்ய வேண்டிய இன்றியமையாகக் கடமையையும் ஒருங்கே குறிப்பாகக் கூறினான் இலக்குவன் என்க.

114. ''பச்சிலை, கிழங்கு, காய், பரமன் நுங்கிய
மிச்சிலே நுகர்வது; வேறு நான் ஒன்றும்
நச்சிலேன்; நச்சினேன்ஆயின், நாய்உண்ட
எச்சிலே அது; இதற்கு ஐயம் இல்லையால்.'' (4488)

(பரமன்-மேலோன்; நுங்கிய-உண்ட/நுகர்ந்த; மிச்சில்-எஞ்சியது/மிச்சமானது; நச்சுதல்-விரும்புதல்; ஐயம்-சந்தேகம்)

''மேலோனாகிய இராமபிரான் உண்ட பச்சை இலையாகிய கீரை, கிழங்கு, காய் இவற்றில் மிச்சமிருப்பதையே நான் உணவாக உட்கொள்வேன்; இவற்றைத் தவிர வேறு எதனையும் நான் விரும்புவதில்லை; அவ்வாறு விரும்புவேனாயின், அது நாய் உண்ட பின் மிஞ்சும் எச்சிலுக்கு ஒப்பாகும்; இதில் எந்த சந்தேகமும் கிடையாது'' என்றான் இலக்குவன்.

இலக்குவன் இராமன் பால் கொண்ட பெருமதிப்பை இப்பாடல் தெளிவாக விளக்குவதை உணர்க. இலக்குவன் இராமனுடன் கானகத்தில் வசித்த பதினான்கு ஆண்டுகளும், உணவும், உறக்கமும் இன்றி இருந்தான் என்றுகம்பர்யுத்தகாண்டத்தில்கூறப்போவதையும்இங்குநினைவுகூர்தல் நன்று. இலக்குவனின் பெருந்தன்மையினையும் உணர்க.

115. ''அன்றியும் ஒன்று உளது ஐய! யான் இனிச்
சென்றனென் கொணர்ந்து அடை திருத்தினால், அது
நுன் துணைச் கோமகன் நுகர்வது, ஆதலான்,
இன்று இறைதாழ்த்தலும் இனிது அன்றாம்'' என்றான். (4489)

(அடை-இலை; இறை-சிறிது நேரம்; தாழ்த்தல்-தாமதித்தல்; திருத்துதல்-நன்கு பக்குவம் செய்தல்/அமைத்தல்; இன்று-இப்பொழுது)

இலக்குவன் சுக்கிரீவனை நோக்கி ''மன்னவனே! இத்தோடு மட்டுமல்ல; நான் உனக்குச் சொல்ல வேண்டுவது இன்னும் ஒன்று இருக்கின்றது; இப்பொழுது நான் திரும்பிச் சென்று இலை, கீரை, முதலியவற்றைக் கொண்டு வந்து, அதை நன்கு பக்குவப்படுத்திக் கொடுத்தால்தான் உன் துணைவனாகிய அரச குமாரனான இராமன்

உண்பான்; எனவே இப்பொழுது இங்கு சிறிது காலம் தாழ்த்தினாலும் இராமன் பசியினால் துன்புறுவான் எனவே அது நல்லதாக அமையாது'' என்றான்.

இலக்குவன் தான் உடனே திரும்பிப்போக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறான் என்பதாம். ரிஷிகள், முனிவர்கள் முதலியோர் சமைக்கப்பட்ட உண்வை அருந்தமாட்டார்கள் என்பதை உணர்க.

116. சுக்கிரீவன் வருந்துதல்.

வானர வேந்தனும் ''இனிதின்வைகுதல்,
மானவர் தலைமகன் இடரின் வைகவே
ஆனது; குரக்கினத்து எமர்கட்கு ஆம்' எனா
மேனிலை அழிந்து உயிர் விம்மினான் அரோ! (4490)

(வைகுதல்-கழித்து இருந்தது; மானவர்-மனுகுலத்து உதித்த இராமன்/ பெருமை பெற்றவன்; எமர்கட்கு-எம் போன்றோர்க்கு)

குரக்கினத்தரசனாகிய சுக்கிரீவனும், இலக்குவனை நோக்கி, ''பெருமைபொருந்தியவனும், மனுகுலத்தில் தோன்றிய சிறந்தவனுமான இராமபிரான் இவ்வாறு துயரத்தில் ஆழ்ந்திருக்க வேண்டிய கட்டாயம் என்னைப் போன்ற குரக்கினத்தாராகிய நாங்கள் செய்த காலதாமதத்தினாலே ஆனதாகும். இது எங்களுக்குப் பொருந்துவதாகும்'' என்று கூறி, உடல் சோர்ந்து, உள்ளமும் உயிரும் வருந்தலானான்.

''மேல்'' என்பது புற உடம்பைக் குறித்தது என்க. தான் மதுவுடனும் மங்கையருடனும் களித்திருந்து செய்த காலதாமதத்தினால்தான் இராமபிரான்இத்தகையதுயரடைய வேண்டியகட்டாயம்நேர்ந்தது என்று உடலும், உள்ளமும் தளர்ந்தான் சுக்கிரீவன் என்பதாம். தான் செய்த குற்றத்தைத் தன் இனத்தின் மேலும் ஏற்றிப் பொதுவாகக் கூறினான் என்க.

117. சுக்கிரீவன், அநுமனிடம் கூறி, விரைந்து ஏழுதல்

எழுந்தனன் பொருக்கென இரவி கான்முளை;
விழுந்த கண்ணீரினன்; வெறுத்த வாழ்வினன்;
அழிந்து அயர் சிந்தையன்; அனுமற்கு ஆண்டு, ஒன்று
மொழிந்தனன்; வரன்முறை போதல் முன்னுவான். (4491)

(இரவி-சூரியன்; கால்-வம்சம்; கான்முளை-வம்சத்தில் தோன்றியவன்/புதல்வன்; பொருக்கென-விரைவாக; அயர்தல்-சோர்தல்; வரன்முறை-மரபுப்படி; முன்னுதல்-எண்ணுதல்/முனைதல்)

சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன், விரைவாக எழுந்தான்; கண்கள் நீர் சொரிய, வாழ்க்கையையே வெறுத்துவிட்டவனாயும், வருந்திச் சோர்கின்ற உள்ளத்தை உடையவனாயும், வரம் தரும் வள்ளலாகிய

இராமபிரானிடம் முறைப்படி செல்லுதற்கு எண்ணி, அங்கு அனுமனை அழைத்து, பின்வருமாறு ஒரு சொல் கூறினான்.

118. சுக்கிரீவன் அனுமனிடம் கூறுதல்.

''போயின தூதரின் புகுதூம் சேனையை
நீ உடன்கொண்டு நெறி வலோய்!'' எனா,
ஏயினன் அனுமனை, ''இருத்தி ஈண்டு'' எனா,
நாயகன் இருந்துழிக் கடிது நண்ணுவான். (4492)

(புகுதும்-வரஇருக்கும்; ஏயினன்-ஏவினன்/கட்டளையிட்டான்; நாயகன்-தலைவன்/இராமன்; கடிது-விரைந்து; நண்ணுதல்-செல்லுதல்; உழி-இடம்)

சுக்கிரீவன் அனுமனை நோக்கி, ''நீதிநெறியிலும், போர்முறையிலும் வல்லவனே! நான் முன்பு கட்டளையிட்டபடி திக்குகளெங்கும் சென்றிருக்கின்ற தூதர்கள், நமது குரங்குச் சேனையுடன் நம்மிடம் வந்து சேரும் வரையில் இங்கேயே தங்கி இருந்து, அவர்கள் வந்தவுடன், அவர்களையும் உடன் அழைதது்க் கொண்டு இராமன் இருக்குமிடம் வந்து சேருவாயாக'' என்று கட்டளையிட்டுவிட்டு, தலைவனாகிய இராமன் இருக்குமிடம் நோக்கி விரைவாகச் செல்லலுற்றான்.

119. சுக்கிரீவன் பரிவாரங்கள் சூழச் செல்லுதல்.

அங்கதன் உடன்செல, அரிகள் முன்செல,
மங்கையர் உள்ளமும், வழியும் பின்செல,
சங்கைஇல் இலக்குவன், தழுவி தம்முன்இல்
செங்கதிரோன் மகன், கடிதிற் சென்றனன். (4493)

(சங்கை-ஐயம்/சந்தேகம்; கடிதில்-விரைவில்; அரி-குரங்குகள்; தம்முன்-தமையன்/இராமன்; இல்-இருக்கும் இடம்)

சிவந்த ஒளிக்கிரணங்களையுடைய சூரியனின் மகனான சுக்கிரீவன், அங்கதன் தன்னைத் தொடர்ந்து வரவும், வானரக்குலத்து வீரர்கள் முன்னே செல்லவும், அவன் அன்பிற்குரிய வானரப் பெண்டிர் மனம் மட்டும் பின்தொடர்ந்து வரவும், கடந்த வழிகளெல்லாம் பின்னிட்டு நிற்கவும், சந்தேகங்கள் நீங்கித் தெளிவான சிந்தையையுடைய இலக்குவனைத் தழுவிக் கொண்டு தன்னுடைய தமையன் என்று கருதப்படுகின்ற இராமன் இருக்குமிடத்திற்கு விரைந்து செல்லலானான்.

120. ஒன்பதினாயிர கோடி ஊகம், தன்
முன்செல, பின்செல, ஞாங்கர் மொய்ப்புஉற
மன்பெரும் கிளைஞரும் மருங்கு சுற்றுஉற
மின்பொரு பூணினான் செல்லும் வேலையில். (4494)

(ஊகம்-யூகம்/வானரங்கள்; ஞாங்கர்-பக்கம்; மொய்த்தல்-நெருங்கிச் செல்லுதல்; கிளைஞர்-சுற்றத்தினர்; மருங்கு-அருகில்; பொரு-ஒத்த; பூண்-அணிகலன்கள்; வேலை-வேளை/சமயம்; மன்-உயர்ந்த) (குளகப்பாடல்)

ஒன்பதினாயிரம் கோடி என்று எண்ணப்படுகின்ற குரங்குப்படையினர், தன்முன்னும், பின்னும் இருபக்கங்களிலும், நெருங்கிச்செல்லவும், சிறந்த அரசப் பெரும் சுற்றத்தினர் தன் அருகில் சூழ்ந்து வரவும், மின்னலை ஒத்த ஒளிபடைத்த ஆபரணங்களை அணிந்த சுக்கிரீவன், இராமபிரான் இருக்குமிடம் நோக்கிச் செல்லும் சமயத்தில் - பாடல் தொடர்கிறது.

இந்த ஒன்பதினாயிரம் கோடி வானரப் படைகள், பின்னால் அனுமனால் கொண்டு வரப்போகின்ற வானரப் படைகளைத் தவிர்த்து என்க. இவைகள் எப்போதும் சுக்கிரீவனுடன் கிட்கிந்தையிலேயே இருந்தவை என்க.

121. படைகள் செல்லும் மாண்பு.

கொடி வனம் மிடைந்தன; குமுறுபேரியின்
இடிவனம் மிடைந்தன; பணிலம் ஏங்கின;
தடிவனம் மிடைந்தன, தயங்கு பூண் ஒளி;
பொடிவனம் எழுந்தன, வானம் போர்த்தவே. (4495)

(வனம்-காடு/மிகுதி/தொகுதி; மிடைதல்-செறிதல்/அடர்ந்து நிறைதல்/நெருங்கி வருதல்; குமுறுதல்-முழங்குதல்; பணிலம்-சங்கு/சங்க வாத்தியங்கள்; ஏங்குதல்-ஒலித்தல்; தயங்கு-விளங்குகின்ற; பூண்-ஆபரணங்கள்; தடி-தடித்/மின்னல்; பொடி-புழுதி/துகள்; போர்த்தல்-மறைத்தல்; பேரி-பேரிகை/முரசமுமாம்)

கொடிகளின் தொகுதி அடர்ந்து நெருங்கிச் சென்றன; ஒலிக்கின்ற முரசங்களின் ஒலி இடியின் ஒலியைவிட மிக்கிருந்தன; சங்கவாத்தியங்கள் முழங்கின; விளங்குகின்ற ஆபரணங்களினின்றும் வீசிய ஒளி, மின்னலின் ஒளியைப் பின்னுறச் செய்தன; படைகள் நடந்து செல்லுவதால் நிலத்தினின்றும் எழுந்த மண் துகளின் பொடி, வானத்துச் சென்று வானத்தையே மறைத்தது; மூடிக்கொண்டது.

படைவீரர்களின் மிகுதியும் கொடி, முரசம், சங்கு, முதலிய அரசச் சின்னங்களின் மிகுதியும் புலப்படுத்தப்பட்டன.

122. பொன்னினின், முத்தினின், புனைமென் தூசினின்,
மின்னின மணியினின், பளிங்கின், வெள்ளியின்,
பின்னின; விசும்பினும்பெரிய; பெட்புறத்
துன்னின சிவிகை; வெண்கவிகை சுற்றின. (4496)

(புனை-அலங்கரிக்கப்பெற்ற; தூசு-ஆடைகள்; மணி-இரத்தினங்கள்; பளிங்கு-படிகக்கற்கள்; பின்னுதல்-பொருத்தி அமைத்தல்; விசும்பு-

ஆகாயம்; சிவிகை-பல்லக்குகள்; பெட்புறல்-விரும்புதல்; துன்னுதல்-நெருங்கிவருதல்; கவிகை-குடைகள்; சுற்றுதல்-சூழ்ந்து வருதல்)

பொன்னாலும், முத்துக்களாலும் அலங்கரிக்கப் பெற்ற மெல்லிய ஆடைகளாலும், மின்னலைப் போன்று ஒளி விடுகின்ற நவரத்தினங் களாலும், பளிங்குக் கற்களாலும், வெள்ளிக் கட்டிகளாலும் நெருக்கி அமைக்கப்பட்ட வேலைப்பாடமைந்த பல்லக்குகள் நெருங்கி வந்தன; ஆகாயத்தையும் மறைக்கும் அளவு விரிந்து, எல்லோராலும் விரும்பப் படுகின்ற வெண் கொற்றக்குடைகளும் சூழ்ந்து வந்தன.

கிட்கிந்தையின் செல்வச் செழிப்புப் புலப்படுத்தப்பட்டது.

123. வீரனுக்கு இளையவன் விளங்கு சேவடி
பாரினில் சேறலின், பரிதி மைந்தனும்,
தாரினின் பொலங்கழல் தழங்க, தாரணித்
தேரினில் சென்றனன்; சிவிகை பின்செல. (4497)

(வீரன்-இராமபிரான்; பார்-நிலம்; பரிதி-சூரியன்; தழங்க-ஒலிக்க; தாரணி-நிலம்; தார்-கிண்கிணிமாலை; சிவிகை-பல்லக்கு; சேறல்-செல்லுதல்)

வீரனாகிய இராமபிரானின் தம்பியாகிய இலக்குவன், தன் ஒளி வீசுகின்ற சிவந்த திருவடிகள் வருந்த, நிலத்தில் நடந்து செல்லுதலால், சூரியன் புதல்வனானசுக்கிரீவனும், தான்அணிந்திருக்கின்ற அசைந்தாடும் கிண்கிணிமாலை போல், பொன்னாலாகிய வீரக்கழல்கள் ஒலியெழுப்ப, தனது பல்லக்கு தன்னைத் தொடர்ந்து பின்னே வர, தான் பூமி என்னும் தேரில் நடந்து சென்றான்.

இலக்குவன் நடந்து செல்லுவதால், தான் பல்லக்கில் வருவது சரியன்று என்று கருதி, தானும் நிலத்தில் நடந்தே வந்தான் சுக்கிரீவன். என்றாலும் அரச மரபிற்கேற்ப, அவன் அமர்ந்து வருவதற்குரிய பல்லக்கு, அவனின்றித் தனியே வறிதே பின்தொடர்ந்து வந்தது என்பதாம். அவன் காலால் தரையில் நடந்து சென்றாலும் கவிஞன் ''தாரணித் தேரினில் சென்றான்'' என்று கூறிய நயம் நோக்குக. இலக்குவனிடம், சுக்கிரீவன் கொண்டிருந்த மதிப்பும், மரியாதையும் புலப்படுத்தப்பட்டது என்க. ஆனால் இலக்குவன், சுக்கிரீவன் இருவரும் பொன்னாலான பல்லக்கில் ஏறிச் சென்றனர் என்று வான்மீகம் கூறும்.

124. எய்தினன் மானவன் இருந்த மால் வரை
நொய்தினின்; சேனை பின்பு ஒழிய, நோன்கழல்
ஐயவில் குமரனும், தானும், அங்கதன்
கை துறந்து அயல் செல, காதல்முன் செல. (4498)

(ஒழிய-நிற்க; கை-அருகு/பக்கம்; துறந்து-நீங்கி; காதல்-பேரன்பு; நோன்-வலிய; ஐய-வியக்கத்தக்க; மானவன்-மனுகுலத்தோன்றல்; மால்வரை-பெரியமலை; நொய்தினின்-விரைவில்)

அவ்வாறு சென்ற சுக்கிரீவன், தனது சேனைப் பரிவாரங்கள் தனக்குப் பின்பு சற்றுத் தள்ளி நிற்கவும், அங்கதன் தன்னைவிட்டு சற்று அப்பால் வரவும், இராமபிரானைப் பார்க்க வேண்டும் என்ற தனது ஆசை முன்னால் செல்லவும், வலிமை மிகுந்த வீரக் கழல் அணிந்தவனும், வியக்கத்தக்க, அழகிய விற்படையைக் கையிலேந்திய இலக்குவனும், தானும் மட்டும், பெருமை பொருந்தியவனும், மனுக்குலத் தோன்றலாகியவனுமான இராமபிரான் தங்கியிருந்த பிரசிரவனம் என்னும் பெரிய மலையை விரைவாகச் சென்றடைந்தான்.

தன்னினும் பெரியோரைப் பார்க்கச் செல்லும் போது ஆடம்பரமாகச் செல்லக்கூடாது என்பதாலும், இராமன் சீதையின் பிரிவால் மிகவும் துயருற்றிருக்கும்போது தான் மகிழ்ச்சி கொண்டு செல்லக்கூடாது என்பதாலும், சுக்கிரீவன் படைகளைப் பின்நிறுத்தி, அங்கதனைக் கூடச் சற்று அப்பால் வரச்சொல்லி, அடக்கமாகத் தான் மட்டும் இலக்குவனுடன், இராமபிரானைக் காணச் சென்றான் என்பதாம். ''காதல் முன் செல'' என்பது, தான் செல்லும் வேகத்தைவிட, இராமபிரானைக் காண வேண்டும் என்று தன் உள்ளத்தெழுந்த ஆசை முன்னே சென்றது என்பதாம். காளத்திமலைமேல் ஏறிய திண்ணப்பனை ''நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏற'' என்கிறார் சேக்கிழார். அது இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

125. சுக்கிரீவன், பரதன் போன்று தோன்றுதல்.

கண்ணிய கணிப்பஅரும் செல்வக் காதல் விட்டு,
அண்ணலை அடிதொழ அணையும் அன்பினால்,
நண்ணிய கவிக்குலத்து அரசன், நாள்தொறும்
புண்ணியன் தொழுகழல் பரதன் போன்றனன். (4499)

(கண்ணிய-கருதுகின்ற; கணிப்பு-அளவிடுதற்கரிய; விட்டு-துறந்து; அணைதல்-வந்து சேருகின்ற; புண்ணியன்-அறத்தின் மூர்த்தி; அண்ணல்-பெரியோன்)

எல்லோராலும் சிறப்புடையதாக மதிக்கப்படுவதும் அளவிடற் கரியதும் ஆன, மிகப் பெரும் செல்வத்தையும் அதில்தோன்றும் ஆசையையும் நீக்கிவிட்டு, பெரியோனாகிய இராமபிரானின் திருவடிகளைத் தொழுது வணங்கவேண்டும் என்ற ஆசையினால், இங்கு வந்து சேர்ந்திருக்கின்ற குரக்கினத்தரசனாகிய சுக்கிரீவன், தினம்தோறும், அறத்தின்மூர்த்தியாகிய இராபிரானின் வீரக் கழல்களையே தொழுது கொண்டு நந்தியம்பதியில் இருக்கின்ற பரதனைப்போன்று விளங்கினான்.

சுக்கிரீவன் இப்பொழுது செல்வ போகங்களைச் சற்று துறந்து வந்திருப்பதால் இவ்வாறு கூறப்பட்டான் என்க. சுக்கிரீவன் இராமன்பால் கொண்ட பக்தி, பரதன் இராமன்மேல் கொண்ட பேரன்பிற்கு ஒப்பாகும் என்கிறான் கவிஞன். அன்பின் நெகிழ்ச்சி, கண்களில் பெருகிய நீர், தான்

ஓர் அரசன் என்னும் ஆதிக்க உணர்வின்றி இராமபிரானுக்கு அடியவன் என்கிற அடக்கம், இத்தகைய குணங்களால் சுக்கிரீவன் பரதனுக்கு ஒப்பிடப்பட்டான் என்க.

126. சுக்கிரீவன் இராமனைத் தொழுதல்

பிறிவுஅரும் தம்பியும் பிரிய, பேர்உலகு
இறுதியில்தான் என இருந்த ஏந்தலை,
அறைமணித் தாரினோடு, ஆரம் பார்தொட,
செறிமலர்ச் சேவடி, முடியின் தீண்டினான். (4500)

(பிறிவு-பிரிவு; உலகு இறுதி-ஊழிமுடிவு; ஏந்தல்-தலைவன்/ இராமன்; அறை-ஒலிக்கின்ற; ஆரம்-முத்துமாலை; முடி-சென்னி; செறி-அடர்ந்த)

எப்போதும் தன்னைவிட்டுப்பிரியாது, உடனுறையும் தன்தம்பியாகிய இலக்குவனும் இப்போது பிரிய நேர்ந்ததால், இப்பெரிய உலகம் ஊழியிறுதிக் காலத்தில் அழியும் போதும், தான் மட்டும் தனியாக இருந்த தலைவனான இராமபிரானை, சுக்கிரீவன், தனது ஒலிக்கின்ற இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற, மார்பிலணிந்த கிண்கிணி மாலைகளும், முத்துமாலைகளும் நிலத்தினைத் தொடும்படியும் இராமபிரானது அடர்ந்த செந்தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிகளை, தன் முடி தீண்டும்படியும் தரையில் விழுந்து வணங்கினான்.

இராமபிரானைப் பிரிதலறியாத தம்பி என்பதால் இலக்குவனை ''பிரிவு அரும் தம்பி'' என்றார் என்க. இப்பொழுது ஏற்பட்ட இந்தத் தனிமை நிலைக்கு, பேரூழிக் காலத்தில் உலகில் எல்லாம் அழிந்துபோக, தான் மட்டும் எஞ்சியிருக்கும் திருமாலின் தனிமை நிலையை உவமித்தார் என்க.

127. இராமபிரான் சுக்கிரீவனைத் தழுவிக்கொள்ளுதல்

தீண்டலும், மார்பிடைத்திருவும் நோவுற,
நீண்டபொன் தடக்கையால், நெடிது புல்லினான்,
மூண்டு எழு வெகுளி போய் ஒளிப்ப, முன்பு போல்
ஈண்டிய கருணை தந்து இருக்கை ஏவியே; (4501)

(நோவுறுதல்-வருந்துதல்; ஒளிப்ப-மறைய; இருக்கை-ஆசனம்; ஏவுதல்-பணித்தல்; நெடிது-இறுக) (குளகப்பாடல்)

அவ்வாறு சுக்கிரீவன் நிலத்தில் விழுந்து தன் திருவடிகளைத் தீண்டித் தொழுததும், தன் மார்பில் உறையும் திருமகள் கூடத் தன் மேனி வருந்தும்படி சுக்கிரீவனைத் தனது நீண்ட அழகிய பெரிய கைகளால், உயிருறத் தழுவிக் கொண்டான்; காலந்தாழ்த்தினானே என்று முன்பு பொங்கியழுந்த கோபமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போக, இப்போது, முன்பு அவனிடம் நட்புக் கொண்ட காலத்தில் உணர்ந்த

பேரருளை அவனுக்குத் தந்து, அமரச்சொல்லி, ஆசனம் தந்து - பாடல் தொடர்கிறது.

''மார்பிடைத் திருவும்நோவுற'' என்பது ஒரு அருமையான சொல்லாட்சி, சுக்கிரீவனைத் தன் நீண்ட பொற்றடக்கையால் நெடிது புல்லியதால், மார்பில் எப்பொழுதும் வீற்றிருக்கும் இலக்குமிகூட மேனி வருத்தமுற்றாள் என்றது ஒரு நயம். ''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா'' என்பது திவ்வியப் பிரபந்தம். தாள் அளவு நீண்ட கை என்பது ஆண்களுக்குரிய உத்தம இலக்கணம். இங்கே ஒரு கருத்து. நாம் எவ்வளவு தவறுகள் செய்திருந்தாலும், அதை உணர்ந்து, திருத்திக் கொண்டு, இறைவன் திருவடிகளைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டால், இறைவன் தான் கொண்ட சினம் மறந்து, கருணைபொழிவான் என்பதை உணர்க. நெடிது புல்லுதல் என்பது நீண்டநேரம், இறுக, உயிர் உறத் தழுவுதல் என்பதைக் குறிக்கும். ஆலிங்கனம் என்பது வடசொல்; குணம் என்னும் குன்றேறி நின்றார்சினம், எனவே ஒரு நொடியில் கருணையாய் மாறியது என்க. இங்கே வந்த கருணை, செயற்கையாக ஏற்படுத்திக் கொண்டகருணை அல்ல என்பதைக் குறிக்க, ''ஈண்டிய கருணை'' என்றார். ஈண்டிய என்பது இயற்கையாகவே உள்ள கருணைப் பண்பைக்குறிக்கும். ''நட்பும், தயையும், கொடையும், பிறவிக் குணம்'' என்பது ஒரு தனிப்பாடல்.

128. இராமன் சுக்கிரீவன் நலம் விசாரித்தல்

அயல் இனிது இருத்தி, நின் அரசும் ஆணையும்
இயல்பினில் இயைந்தவே? இனிதின் வைகுமே
புயல் பொரு தடக்கை நீ புரக்கும் பல் உயிர்?
வெயில் இலதே குடை? என, வினாயினான். (4502)

(அயல்-பக்கத்தில்; இயைதல்-நிகழ்தல்; புயல்-மேகம்; பொரு-போன்ற; புரத்தல்-பாதுகாத்தல்)

தன்னைப் பணிந்த சுக்கிரீவனைத் தன் அருகில் அமரச் செய்து, இராமன் ''உன்னுடைய அரசாட்சியும், ஆணைச் சக்கரமும், நீதி நூல்களில் கூறப்பட்டபடி இயல்பாக, முரண்பாடின்றி நிகழ்கின்றனவா? மேகம் போன்று கைம்மாறு கருதாது உதவி செய்யும் உன்னுடைய பெரிய கைகளினால் காக்கப்படுகின்ற நின் நாட்டு மக்கள் இன்பமாக வாழ்கின்றனரா? உன்னுடைய வெண்கொற்றக்குடை, துன்பம் என்னும் வெம்மை தாராது இன்பம் என்னும் நிழல் தந்து பாதுகாக்கிறதா? என்று விசாரித்தான்.

முன்பாடலில் இராமன் இருக்கை ஏவினான், இராமபிரான் முன், தான் அமர்தல் தகுதியன்று என்று கருதிய சுக்கிரீவன் இருக்கையில் அமராது நின்று கொண்டிருந்தான் என்பது பெறப்படுகிறது. எனவே இப்பொழுது இராமபிரான் அன்பினால் வற்புறுத்தித் தன் அருகில் உள்ள இருக்கையில்

அமர்த்திக் கொண்டான் என்பதும் புலனாகிறது. எந்தவித இடையூறும் இன்றி இயல்பானவாழ்க்கை வாழ்கின்றார்களா நின் குடிமக்கள்? என்றும், உன்னுடைய ஆட்சியில் உன்னால் எந்தத்துன்பமும் இல்லாது இன்பம் பெற்றிருக்கிறார்களா? என்றும் விசாரித்தான் என்பதாம். அரசு என்பது அரசர்க்கு அங்கமாகிய படை, குடி, கோல், அமைச்சு என்பனவற்றைக் குறிக்கும். அரசர்க்குரிய இயல்பானவண்மை, அருள், நீதி, குடியோம்புதல் முதலிய எண் குணங்களால் உன் வெண்கொற்றக் குடை வெம்மை தாராது நிழல் தருகிறதா என்று கேட்டான் என்பதாம். ''உறங்குமாயினும் மன்னவன் தன் ஒளி, கறங்கு தெண்திரை வையகம், காக்குமால்'' என்பது சீவகசிந்தாமணி; ''வேந்தன் உறங்கும்போதும், தன் அருள் ஆணை உலகெங்கும் அறங்குன்றாவாக் காப்பது'' என்பது திருவிளையாடற் புராணம்; ''மாநிலங் காவலன் ஆவான், மன்னுயிர்காக்கும் காலை தான்தனக்கு இடையூறு, தன்னால், தன் பரிசனத்தால், ஊனம் மிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர் தம்மால் ஆனபயம், ஐந்தும், தீர்த்து அறம் காப்பான்'' என்பது ஒரு பழம் பாடல். வெயில் என்பது இங்கே துன்பத்தைக் குறித்தது.

129. சுக்கிரீவன் மறுமொழி

பொருளுடை அவ்வுரை கேட்டபோழ்து, வான்
உருளுடைத் தேரினோன் புதல்வன், ''ஊழியாய்!
இருளுடை உலகினுக்கு இரவிஅன்ன நின்
அருளுடையேற்கு, அவை, அரியவோ?'' என்றான்.(4503)

(உருள்-சக்கரம்; இரவி-சூரியன்)

பொருள் செறிந்த சிறந்த அச்சொற்களைக் கேட்டபோது, ஆகாயத்தில் ஒற்றைச்சக்கரத் தேரைச் செலுத்திச் செல்பவனான சூரியனது புதல்வனான சுக்கிரீவன், இராமபிரானை நோக்கி, ''யுகமுடிவுக்காலத்தும் அழியாது நிலைத்துநின்று உலகத்து உயிரினங்களையெல்லாம் காப்பவனே! புறத்தே இருளால் சூழப்பட்ட இவ்வுலகத்திற்கே ஒளிவிளக்கு என்று கூறப்படுகின்ற சூரியன் போன்ற உன்னுடைய பெருங்கருணை உடைய என்போன்ற அடியவனுக்கு, நீ முன்பு கூறியவையெல்லாம் ஒரு பெரிய அரிய பொருளாகுமோ?'' என்று கேட்டான்.

இராமபிரான் சுக்கிரீவனை நோக்கிக் கேட்ட கேள்விகள் அனைத்தும் பொருள் பொதிந்தவை என்பதை நன்கு உணர்ந்த சுக்கிரீவன், கற்பாந்த காலத்தும் அழியாது உலக உயிர்களைக் காக்கும் இயல்புடைய திருமாலின் அம்சமான இராமபிரானின் அருட்பார்வை தன்வசம் ஆனபின் தனக்கு அரியது ஏதும் இல்லை, எல்லாம் எளியவே என்றான் என்பதாம். இதனால் சுக்கிரீவன் இராமபிரானிடம் கொண்டிருந்த எல்லையற்ற பக்தியும், அவன் அதை நன்கு பயன்படுத்திக் கொண்டு வெளிப்படுத்தும் ஆற்றலும் புலனாவதை அறிக.

130. சுக்கிரீவன் தன் குற்றத்திற்காக வருந்துதல்.

பின்னரும் விளம்புவான், ''பெருமையோய்! நினது
இன்னருள் உதவிய செல்வம் எய்தினேன்;
மன்னவ! நின்பணி மறுத்து வைகி, என்
புன்நிலைக் குரக்குஇயல் புதுக்கினேன்'' என்றான். (4504)

(புன்நிலை-அற்பத்தன்மை; இயல்-குணம்; புதுக்குதல்- மீண்டும் செய்தல்; மறுத்து-மீறி)

மீண்டும் சுக்கிரீவன் இராமபிரானைப் பார்த்து, ''பெருமை உடையவனே! தங்களது கருணைத் திறத்தால்தான் கிட்கிந்தை அரசச் செல்வத்தையும், என் மனைவி உருமையையும் நான் மீண்டும் பெற்றேன்; எனினும் தங்களுடைய வேண்டுகோளை மீறி மறந்து இன்ப வாழ்க்கையில் ஈடுபட்டுக் காலந்தாழ்த்தி எங்களுடைய குரக்கினத்திற்குரிய இழி நிலையாகிய கீழ்ப்பட்ட தன்மையை மீண்டும் செய்துவிட்டேன்'' என்று தன்னைத் தானே பழித்துக் கூறிக் கொள்ளுகிறான் சுக்கிரீவன்.

தான் செய்ந்நன்றி மறந்து, சுகபோகத்தில் திளைத்திருந்ததால் தன்னைப் ''புன்நிலைக் குரக்கு இயல் புதுக்கினேன்''. என்று நொந்து கூறிக் கொள்ளுகிறான் என்பதாம். ''புதுக்குதல்'' என்பது சிதைந்து மறையும் நிலையில் இருப்பதனை, சிதைவுநீக்கி மீளவும் நிலைபெறச் செய்தல் என்று பொருள் விரிவு கொள்ளும்.

131. ''பெருந்திசையனைத்தையும் பிசைந்து நேடினேன்
தரும்தகை அமைந்தும், அத்தன்மை செய்திலேன்;
திருந்திழை திறத்தினால், தெளிந்தசிந்தை நீ
வருந்தினை இருக்க, யான் வாழ்வின் வைகினேன்.'' (4505)

(பிசைந்து-கையால்பற்றி வருத்துதல்/நுணுகி ஆராய்தலுமாம்; நேடுதல்-தேடுதல்; தகை-திறமை; திருந்து-வேலைப்பாடமைந்த/பக்குவப்பட்ட; இழை-ஆபரணங்கள்; வைகுதல்-திளைத்தல்)

''பெரிய தொலைவுள்ள எல்லாத்திசைகளிலும் சென்று நுணுகி ஆராய்ந்து, அரக்கனைத் தேடிக் கண்டுபிடித்துக் கையால் பற்றிவருத்தும் ஆற்றல் என்னிடம் குறைவற அமைந்திருந்தும், நான் அவ்வாறு செய்யாமல் பிழைசெய்துவிட்டேன், வேலைப்பாடு அமைந்த திருத்திய ஆபரணங்கள் அணிந்த சீதாதேவியின் பிரிவினால், எப்போதும் கலங்காத மனம் உடைய தாங்களே, சிறிது கலங்கி வருந்தி இருக்க, அதைச் சிறிதேனும் மனத்திற்கொள்ளாது, சுகபோக வாழ்க்கையில் மூழ்கிக் காலம் தாழ்த்திவிட்டேன்'' என்று வருந்தினான் சுக்கிரீவன்.

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்னும் நான்கு திசைகளும் பெருந்திகைகள் என்றும் வடகிழக்கு, தென்மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு என்பன கோணத் திசைகள் என்றும் கூறுவர், பிசைந்து நேடுதல்

என்பது, நுணுகி ஆராய்ந்து, துருவித் தேடிக் கண்டுபிடித்தலையும், அரக்கன் கிடைத்தால் கைகளால் வலிய இறுகப்பற்றி அவனை வருத்தித் தேடுதலையும் குறிக்கும் என்க.

132. ''இனையன, யானுடை இயல்பும், எண்ணமும்,
நினைவும் என்றால், இனி நின்று யான் செயும்
வினையும், நல் ஆண்மையும், விளம்பவேண்டுமோ?
வனைகழல் வரிசிலை, வள்ளியோய்!'' என்றான். (4506)

(வனை-அழகுறச்செய்யப்பட்ட; வரி-கட்டமைந்த; விளம்புதல்-விரித்துக் கூறுதல்; எண்ணம்-மனநிலை; நினைவு-மனக்கருத்து; இயல்பு-இயற்கைக் குணம்/தன்மை; வினை-தொழில்)

சுக்கிரீவன் இராமபிரானை நோக்கி, ''அழகான வேலைப்பாடமைந்த வீரக்கழல் அணிந்தவனே! கட்டமைந்த விற்படையை உடையவனே! ஈகைக் குணம் படைத்தவனே! இது தான் என்னுடைய இயற்கைக் குணம்; என் மனநிலை; என்மனக்கருத்து என்றால், இனிமேல் நான் உன்னுடன் துணையாக நிலைத்து நின்று உதவி செய்வதற்குரிய தொழிலும், அது ஆற்றுதற்குரிய வீரபராக்கிரமமும் பற்றி நான் உனக்குச் சொல்லவும் வேண்டுமோ?'' என்றான் சுக்கிரீவன்.

தான் காலந்தாழ்த்தியபோது இருந்த மனநிலையைக் கருத்திற் கொண்டு, இப்போது இரங்கிக் கூறுகிறான் என்பதாம். என்றாலும் இப்போது அச்செயலை விரைந்து முடிப்பேன் என்று உறுதியாகக்கூறக் கூட என் நா எழவில்லை என்று வருந்திக் கூறுகிறான் என்க. குரங்கின் இயற்கைக் குணமாகிய மதுவுண்டு களித்ததையும், அதனுடைய எண்ணமான சுகபோகத்திலேயே ஆழ்ந்து கிடந்ததையும், தனக்குச் செய்யாமல் செய்த உதவிக்குக்கைம்மாறு செய்ய வேண்டும் என்றநினைவு இல்லாது காலந்தாழ்த்தியமையையும் ஒருசேரக் கூறினான் என்பதாம். தான் சோம்பியிருந்ததையும், களித்திருந்ததையும் செய்ந்நன்றி மறந்ததையும்தன்குற்றத்தினையும் உணர்ந்து தானேவருந்தி உரைக்கிறான் என்க.

133. இராமபிரான் சுக்கிரீவனைத் தேற்றுதல்.

''திருஉறை மார்பனும், தீர்ந்ததேயும் வந்து
ஒருவ அரும்காலம், உன் உரிமையோர் உரை
தரு வினைத்து ஆகையின், தாழ்விற்று ஆகுமோ?
பரதன் நீ! இனையன பகர்தியோ? என்றான்'' (4507)

(தீர்ந்தது-கழிந்தது; தாழ்விற்று-காலம்தாழ்த்ததாக/இழிவான தன்மையதாக; ஒருவுதல்-நீங்குதல்)

இலக்குமி தன்னைவிட்டு எப்போதும் நீங்காது உறையும் மார்பினை உடைய இராமபிரானும், ''நீங்குதற்கரிய நீண்ட கார்காலமும் ஒருவாறு

நீங்கிப் போயிற்று, நீ உன்னுடைய தூதர்களை எல்லாத் திக்குகளிலும் அனுப்பி, அவர்கள் சொல்லுகின்ற மொழியின்படிதான், சேனைகளை அழைத்து வரவேண்டிய நிர்பந்தத்தில் இருந்தாய்; அது நீயே செய்யக்கூடிய காரியமல்ல. எனவே இதைப்பெரிதாகவோ, தாழ்வான தன்மையாகவோ, காலந்தாழ்த்திவிட்டோமே என்று கருதியோ வருந்தாதே. என் தம்பி பரதனைப்போல் என்னிடம் அன்பு செலுத்துகின்ற நீ, இத்தகைய வார்த்தைகளைக் கூறலாமோ?'' என்று சுக்கிரீவனைத் தேற்றினான் இராமன்.

கார்காலத்தில் மதுவோடும், மங்கையரோடும் சுகபோக வாழ்க்கையில் அழுந்தி இருந்தான் சுக்கிரீவன் என்றாலும், தான் உதவிசெய்வதாகக் கொடுத்த வாக்குறுதியின்படி, தன் தூதர்களைச் சேனைகளைத் திரட்டி வருமாறு திசைகள் தோறும் அனுப்புதலாகிய க்டமையைச் செய்து முடித்திருந்தான் சுக்கிரீவன் என்பதை உணர்ந்த இராமபிரான் சுக்கிரீவன் வருந்தி இரங்கியமைக்கு இவ்வாறு ஆறுதல் கூறி அவனைத் தேற்றினான் என்பதாம். இங்கே இராமபிரானுடைய பரந்த கருணையும், பிறர் குற்றம் கண்ட போதும், தவற்றைப் பொறுத்தருளும் குணமும் நன்கு விளங்கும்.

134. இராமன் அனுமன் பற்றி வினவுதல்

ஆரியன் பின்னரும் ''ஐய! நன்கு உணர்
மாருதி எவ்வழி மருவினான்?'' என
சூரியன் கான்முளை ''தோன்றுமால், அவன்
நீர் இரும் பரவையின் நெடிய சேனையான்.'' (4508)

(ஆரியன்-மேலோன்; மருவுதல்-இருத்தல்; கான்முளை-புதல்வன்; இரும்-பெரிய; பரவை-கடல்; பரந்திருத்தலின் பரவை என்பது கடலுக்குக் காரணப்பெயர் (குளகப்பாடல்)

மேலோனான இராமபிரான் மீண்டும் சுக்கிரீவனைப் பார்த்து, தலைவனே! எல்லாவற்றையும் நன்கு உணர்ந்து அறியும் இயல்புடைய வனான காற்றின் மைந்தனான அனுமன் எங்கே இருக்கிறான்?'' என்று கேட்கவும் சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவனும் அவன் ''நீர் நிறைந்த பெரிய கடல் போன்ற நீண்ட சேனைகளுடன் வந்து சேருவான்'' என்று கூறினான்.

''நன்கு உணர் மாருதி'' என்று இராமபிரான் அனுமனைப் பற்றிக் குறிப்பாகத் தனியாகக் கேட்டது அவன் அனுமனிடத்து எத்தகைய பேரன்பும் மதிப்பும் வைத்திருக்கிறான் என்பதை உணர்த்தும்.

135. ''கோடிஓர் ஆயிரம் குறித்த கோதுஇல் தூதுவர்
ஓடினர் நெடும்படை கொணர்தல் உற்றதால்;
நாள் தரக் குறித்ததும் இன்று; நாளை அவ்
ஆடல் அம்தானையோடு, அவனும் எய்துமால்.'' (4509)

(ஓடுதல்-விரைந்து செல்லுதல்; ஆடல்-வெற்றி; அம்-அழகிய)

''ஓராயிரம் கோடி என்று கணக்கிடப் பட்ட தூதுவர்கள், பெரிய படையைத் திரட்டி வருவதாக விரைந்து சென்றுள்ளார்கள், அவர்கள் வருகையை எதிர்பார்த்து அனுமன் கிட்கிந்தையில் காத்திருக்கிறான். அவர்கள் படைகளைக் கொண்டு வரக் குறித்த கால எல்லையும் வந்து விட்டது. இன்றோ அல்லது நாளையோ, அந்த வலிமையும் வெற்றியும் கொண்ட அழகிய குரங்குப்படையினரோடு அனுமன் வந்து சேருவான்'' என்றான் சுக்கிரீவன்.

இதே செய்தியை முன்பு தாரையும் அனுமனும் இலக்குவனுக்குக் கிட்கிந்தையிலேயே அறிவித்ததை நினைவுகூர்க.

136. ''ஒன்பதினாயிர கோடி உற்றது
நின் பெருமை சேனை; அந்நெடிய சேனைக்கு
நன்கு உறும் அவதி நாள் நாளை; நண்ணிய
பின், செயத்தக்கது பேசற்பாற்று'' என்றான். (4510)

(அவதி-காலஎல்லை)

''இப்பொழுது என்னுடன் ஒன்பதினாயிரம் கோடி என்று சொல்லத்தக்க குரங்குச் சேனைகள் வந்துள்ளன; அவையாவும் உன்னுடைய சேனையே; இன்னும் வரவேண்டிய படைகளுக்குரிய கால எல்லை நாளை ஆகும். எனவே அவையும் சேர்ந்த பிறகு, செய்யத் தக்கனவற்றைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம்'' என்றான் சுக்கிரீவன்.

இராமன் தன்னைப் பரதன் போன்ற தம்பி என்று கூறி அன்பு பாராட்டியிருந்ததாலும், தனது அரசச் செல்வத்தையும், மனைவியையும், மீட்டுக்கொடுத்ததாலும், தான் அவனுக்கு என்றும் அடியவன் என்ற குறிப்பைப் புலப்படுத்தவும், ''நின்பெரும் சேனை'' என்றான் என்க. அத்துடன் கூட அனுமன் இல்லாமல் தான் முடிவெடுக்க ஒண்ணாது என்பதையும் குறிப்பால் தெரிவித்தான் என்பதையும் உணர்க.

137. ''இன்றுபோய் நாளை படையுடன் வா எனச் சுக்கிரீவனை அனுப்புதல்''.

''விரும்பிய இராமனும் வீர நிற்கு இது ஓர்
அரும்பெருள் ஆகுமோ? அமைதி நன்று'' எனா
''பெரும் பகல் இறந்தது பெயர்தி; நின்படை
பொருந்துழி வா'' எனத் தொழுது போயினான். (4511)

(விரும்பிய-விருப்பமுடன் ஏற்றுக்கொண்ட; நிற்கு-நினக்கு/உனக்கு; அமைதி-அடக்கம்; இறந்தது-கழிந்துவிட்டது; பெயர்தல்- மீண்டு செல்லுதல்; பொருந்துழி-ஒன்றுகூடி வந்த பொழுது)

சுக்கிரீவன் மேல் பேரன்பு கொண்டவனும், சுக்கிரீவன் கூறியவற்றை விருப்பத்துடன் கேட்டறிந்தவனுமான இராமபிரான், சுக்கிரீவனை நோக்கி ''வீரனே! உனக்கு இத்தகைய பெரியதோர் படையை ஒருங்கு திரட்டிக்கொண்டு வருதலும், எடுத்தகாரியத்தை முடித்தலும், ஒருபெரிய பொருளாகுமோ?'' உன்னுடைய மன அடக்கம் மிக நன்று என்று கூறிப் பின்னும், ''இப்பொழுது பகலில் பெரும் பகுதி கழிந்து மாலைநேரம் வந்துற்றது. எனவே இங்கிருந்து புறப்பட்டுச் சென்று உன்னுடைய படைகள் எல்லாவற்றையும் திரட்டிக் கொண்டு வரும்போது வருவாயாக!'' என்று விடைகொடுக்க, சுக்கிரீவனும் இராமபிரானைத் தொழுது தனது பாசறைக்குச் சென்றான்.

138. அங்கதனுக்கும் வாழ்த்துக் கூறி அனுப்புதல்

அங்கதற்கு இனியன அருளி, ''ஐய!போய்த்
தங்குதி உந்தையோடு'' என்று! தாமரைச்
செங்கணான், தம்பியும், தானும், சிந்தையின்
மங்கையும், அவ்வழி, அன்று வைகினான். (4512)

(உந்தை-உன்தந்தை/சுக்கிரீவன்; அவ்வழி-அவ்விடத்தில்)

செந்தாமரை மலர் போன்ற சிவந்த கண்களையுடைய இராமபிரானும், தன் அருகில் நின்ற அங்கதனுக்கு இனிய மொழிகள் கூறி, ''அன்பனே! நீயும், உன் தந்தையுடன் சென்று தங்குவாயாக!'' என்று கூறி விடை கொடுத்து அனுப்பிவிட்டு, தன்னுடைய தம்பி இலக்குவனும், எப்போதும் தன் மனத்தைவிட்டு அகலாது நிறைந்திருக்கும் சீதாதேவியும், தானும், அவ்விடத்திலேயே அன்று தங்கியிருந்தான்.

இராமன் சீதை பற்றியே எப்போதும் எண்ணிக் கொண்டே இருந்ததால், ''சிந்தையின் மங்கை எனப்பட்டாள்'' என்க.

139. இலக்குவன் கிட்கிந்தையில் நிகழ்ந்தன கூறுதல்.

சேய்உயர் கீர்த்தியான், ''கதிரின் செம்மல் பால்
போயதும், அவ்வயின் புகுந்த யாவையும்
ஒய்வுறாது உணர்த்து'' என, உணர்த்தினான் அரோ!
வாய்மையா உணர்வுறும் வலிகொள் மொய்ம்பினான் (4513)

(சேய்-நெடுந்தொலைவு; கதிர்-சூரியன்; புகுந்த-நிகழ்ந்த; அவ்வயின்-அவ்விடத்தில்; ஒய்வுறாது-ஒன்றும்விடாது; வாய்மை-மெய்ம்மை; மொய்ம்பு-வலிமை)

நில எல்லையும் கடந்து வானுலகு அளவு உயர்ந்த புகழுடைய இராமபிரான், இலக்குவனை நோக்கி, ''சூரியன் புதல்வனான சுக்கிரீவனிடம் நீ சென்றது முதல், அங்கு நிகழ்ந்தன எல்லாவற்றையும்,

ஒன்றுவிடாமல் எனக்குக் கூறுவாயாக'' என்று கேட்க, மெய்ம்மையும் உள்ள உணர்வும், வலிய உடல் வலிமையும் உடைய இலக்குவன் எல்லாவற்றையும் ஒன்றுவிடாது கூறினான்.

''சேய்உயர் கீர்த்தி'' என்பது வள்ளுவர் கூறும் ''நிலவரை நீள் புகழ்'' என்பது போல என்க.

140. கவிக்கூற்று

அன்று அவண் இறுத்தனர்; அலரி கீழ்த்திசைப்
பொன்திணி நெடுவரை பொலிவு உறாத முன்,
வன்திறல் தூதுவர் கூவ, வானரக்
குன்று உறழ் நெடும்படை, அடைதல் கூறுவாம். (4514)

(இறுத்தல்-தங்கியிருத்தல்; அலரி-சூரியன்; உறழ்-போன்ற; கூவுதல்-அழைத்தல்)

சுக்கிரீவனும், அங்கதனும் விடைபெற்றுச் சென்ற பின்பு, அன்று இரவு, இராம இலக்குவர் இருவரும் அந்த மலையிலேயே தங்கியிருந்தார்கள்; கிழக்குத் திசையில் பொன்மயமான நீண்ட உதயகிரியில் சூரியன் உதித்து விளக்கம் பெறுதற்கு முன்பே, வலிமையும் ஆற்றலும் உடைய குரங்குத் தூதுவர்கள் சென்று அழைத்ததனால், திரண்டு வந்த மலைபோலும் தோற்றமுடைய குரங்குப் படைகள் வந்து சேர்ந்ததை, இப்போது கூறத் தொடங்குவோம்.

அடுத்த படலமாகிய தானைகாண் படலத்திற்குத் தோற்றுவாயாக இப்படலத்தின் இறுதியில் இப்பாடல் கொள்ளப்பட்டது. இது கவிக்கூற்று. இவ்வாறு முதல் படலத்தின் இறுதியில் அடுத்த படலத்தில் என்ன சொல்லப்போகிறோம் என்பதைக் கூறுவது கவிஞனின் பழக்கம் என்பதைக் காப்பியப் போக்கில் காணலாம்.

கிட்கிந்தைப் படலம் நிறைவுற்றது

11. தானை காண் படலம் [39 பாடல்கள்]

சுக்கிரீவன் அணிவகுத்து நிறுத்திய எழுபது கோடி வெள்ள வானரச் சேனையை இராம இலக்குவர் காண்கின்ற பகுதி என விரியும். இது 39 பாடல்களைக் கொண்டது. இது சில சுவடிகளில் ''வானரத் தானை காண் படலம்'' எனவும் குறிக்கப் பெற்றிருக்கிறது. படைகளின் எண்ணிக்கையும், ஆற்றலும் பெரும்பாலும் உயர்வு நவிற்சியாகவே கூறப்படுகிறது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

இப் படலத்துள், சதவலி முதலிய படைத்தலைவர்கள் தத்தம் சேனைகளுடன்வந்து சுக்கிரீவனைப் பணிதல்; அச்சேனைகளின்சிறப்பும் ஆற்றலும்; சுக்கிரீவன் இராமபிரானை அணுகிச் சேனையைக் காண வரவேண்டுதல்; இராமபிரான் சேனையைக் காண்பதற்கு ஒரு மலை உச்சியில் ஏறுதல்; சேனைத் தலைவர்களை மட்டும் அழைத்துக் கொண்டு சுக்கிரீவன் இராமபிரானிடம் வருதல்; சேனைகள் அணிவகுத்து நிற்றல்; படையின் பெருக்கம் குறித்து இராம இலக்குவர் வியந்து பாராட்டுதல்; முதலிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. சதவலி தன் சேனையுடன் வந்து சேருதல்.

ஆனை ஆயிரம் ஆயிரத்து எறுழ்வலி அமைந்த
வானராதிபர் ஆயிரர் உடன்வர, வகுத்த
கூனல்மாக் குரங்கு ஐஇரண்டு ஆயிர கோடித்
தானையோடும், அச்சதவலி என்பவன் சார்ந்தான். (4515)

(ஆயிரம் ஆயிரம்-பத்து லட்சம்; எறுழ்வலி-மிக்க வலிமை; அதிபர்-தலைவர்; ஐயிரண்டு கோடி-பத்தாயிரம் கோடி; கூனல்-வளைந்த உடம்பு; தானை-சேனை; மா-பெரிய; சதவலி என்பது முகத்தில் நூறு மடிப்புகளை உடையவன் என்பது பற்றி வந்த காரணப் பெயர்.)

சதவலி என்பவன், தன்னுடன் பத்துலட்சம் யானையின் வலிமை கொண்ட வானரத் தலைவர்களை அழைத்துக் கொண்டு, முதுகுவளைந்த பெரிய வானரப் படைகள் பத்தாயிரம் கோடியினை அணிவகுத்துக் கொண்டு, சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

அவனுடன் வந்த வானரத் தலைவர் ஒவ்வொருவரும் பத்து லட்சம் யானைகளின் பலம் கொண்டவர்கள் என்பதாம். வான்மீகத்தில் இவன் பெயர் ''சதபலி'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. சுசேடணன் வருதல்.

ஊன்றி மேருவை எடுக்குறும் மிடுக்கினுக்கு உரிய
தேன் தெரிந்து உண்டு தெளிவுறு வானரச் சேனை
ஆன்றபத்து நூறு ஆயிரகோடியோடு அமையத்
தோன்றினான். வந்து, சுசேடணன் எனும் பெயர்த்தோன்றல். (4516)

(எடுத்தல்-பேர்த்தெடுத்தல்; மிடுக்கு-வலிமை; தெரிந்து-ஆராய்ந்து; பத்துநூறுஆயிரம் கோடி-பத்துலட்சம் கோடி; தோன்றல்-சிறந்த வீரன்; ஊன்றி-பறித்து; ஆன்ற-உயர்ந்த; தேன்-கள்/மது)

சுசேடணன் என்னும் சிறந்த வானர வீரன், மேருமலையையே கையை ஊன்றிப் பெயர்த்தெடுக்கும் வலிமை பொருந்தியவரும், மதுவினை ஆராய்ந்து உண்ட பின்னும், மயங்காது, தெளிவாக நிற்கும் உயர்ந்த பத்து லட்சம் கோடி வானரச் சேனையோடு சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

கள்ளை அறியாது உண்ணவில்லை; அறிந்தே பருகினாலும், தன் நிலை தளராது தெளிவாக இருக்கின்ற வானரச் சேனைகள் என, அவற்றின் இயல்புக்கு மாறாகக் கூறியதை நோக்குக. அவன் சேனையில் வந்த ஒவ்வொருவரும் மேருவைப் பறித்தெடுக்கும் ஆற்றலைப் பெற்றவர் என்பதைக் குறிப்பிட்டான் என்க. இந்தச் சுசேடணன், வாலியின் மனைவியாகிய தாரையின் தந்தை என்றும் வருணதேவனுடைய புதல்வன் என்றும் கூறுவர். சுசேடணன் என்ற வட சொல்லுக்கு ''எதிரே தோன்றுகின்றவன்'' என்பது பொருள். தோன்றல் என்பது நல்ல தோற்றமுடையவன் என்று இவனுக்குக் காரணப் பெயர் எனக் கொள்ளலும் பொருந்தும்.

3. தாரன் வருதல்

ஈறுஇல் வேலையை இமைப்புறும் அளவினில் கலக்கிச்
சேறுகாண்குறும் திறல்கெழு வானரச் சேனை
ஆறுஎண்ஆயிர கோடி அது உடன்வர, அமுதம்
மாறுஇலா மொழி உருமையைப் பயந்தவன், வந்தான். (4517)

(மாறு-ஒப்பு; பயந்தவன்-பெற்றெடுத்தவன்; ஈறு-முடிவு; வேலை-கடல்; கெழு-பொருந்தி; ஆறு எண் ஆயிர கோடி-நாற்பத்தி எட்டு ஆயிரம் கோடி)

தேவ அமிர்தமும் இணையாகாத இனிய சொற்களைப் பேசும் சுக்கிரீவனின் மனைவியாகிய உருமையைப் பெற்றெடுத்த தந்தையான தாரன் என்பவன், தன்னுடன், முடிவு காண இயலாத கடலையும் இமைப் பொழுதில் கலக்கிச் சேறாக்கும் வல்லமை பொருந்திய நாற்பத் தெட்டாயிரம் கோடி வானரச் சேனைகளுடன், சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

இவன் படையில் உள்ள ஒவ்வொருவரும் இமைப் பொழுதில் கடலைக் கலக்கிச் சேறாக்கும் ஆற்றல் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இமைப் பொழுது என்பது நொடிப் பொழுது, ஒரு மாத்திரைப் பொழுது என்பதைக் குறிக்கும் ''கண் இமை, கைநொடி அவ்வே மாத்திரை'' என்பது தொல்காப்பியம். உருமையைப் பற்றிக் கூறும் இடங்களில் எல்லாம் கவிஞன், அவள் சொல்லுக்கு அமிழ்தத்தை ஒப்பிடுவதை நோக்குக. உருமையைப் பெற்றெடுத்த தாரன், தேவகுருவாகிய பிரஹஸ்பதியின் புதல்வன் என்றும், சுக்கிரீவனின் அமைச்சர்களுள் ஒருவன் என்றும் கூறுவர்.

4. கேசரி வருதல்

ஐம்பதுஆய நூறாயிர கோடி எண் அமைந்த
மொய்ம்பு மால்வரை புரைநெடு வானரம் மொய்ப்ப
இம்பர் ஞாலத்தும் வானத்தும் எழுதிய சீர்த்தி
நம்பனைத் தந்த, கேசரி கடல் என நடந்தான். (4518)

(இம்பர்ஞாலம்-மண்ணுலகம்; எழுதிய-பொறித்த/நிலைபெற்ற; சீர்த்தி-புகழ்/கீர்த்தி; நம்பன்-அனுமன்; ஐம்பது ஆய நூறு ஆயிர கோடி-ஐம்பது லட்சம் கோடி; எண்-அளவு/தொகை; மால்வரை-பெரியமலைகள்; புரை - ஒத்த; மொய்ம்பு-தோள்; மொய்த்தல்-விரும்பி வருதல்; நம்பன் என்பது விரும்புதற்கு உரியவன் என்ற பொருளில் அனுமனுக்குக் காரணப்பெயர்.)

இந் நிலவுலகத்திலும், வானுலகத்திலும் நிலைத்த புகழ் பெற்ற, எல்லோரும்விரும்புதற்கு உரியவனானஅனுமனைப்பெற்றெடுத்தகேசரி என்னும் வானர வீரன், தன்னோடு, ஐம்பது லட்சம் கோடி என்று அளவு கொண்ட, கயிலைமலை போன்ற பெரிய தோள்களையுடைய வானரப் படைகள் சூழ்ந்து நெருங்கி வர, பெரியகடல் போன்ற தோற்றத்துடன் சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

குரங்குகள் வெண்மை நிற மேனி உடையவர்கள் என்பதால் இங்கே மால் வரை என்பது கயிலாய மலையைக் குறித்தது என்க. நம்பன் என்ற சொல்லுக்குச் சிவபெருமான் என்றும் ஒரு பொருள் உண்டு; எனவே சிவபெருமான் அம்சமான அனுமன் எனினும் பொருந்தும். முன்பு வாயுதேவன் அனுமனின் தந்தை என்றது, அவனது ஸ்பரிசத்தால் பிறந்தவன் அனுமன் என்பதால் என்க. உண்மையிலேயே அஞ்சனாதேவியின் கணவன் கேசரி என்றே நூல்கள் கூறுகின்றன, கேசரிக்கு கடல் தோற்றத்தால் உவமை.

5. தூமிரன் வருதல்

மண்கொள் வாள்எயிற்று ஏனத்தின் வலியன, வயிரத்
திண்கொள் மால்வரை மயிர்ப்புறத்தன எனத்திரண்ட

கண்கொள் ஆயிரங்கோடியின் இரட்டியின் கணித்த,
எண்கின் ஈட்டம் கொண்டு, எறுழ்வலித் தூமிரன் இறுத்தான். (4519)

(எறுழ்வலி-மிக்க வலிமை; எண்கு-கரடி; மண்-பூமி; கொள்-குத்தி எடுத்த; வாள்-ஒளி; எயிறு-பல்/கொம்பு; ஏனம்-வராகம்/பன்றி; வயிரம்-உறுதி; ஆயிரம் கோடியின் இரட்டி-இரண்டாயிரம் கோடி; ஈட்டம்-கூட்டம்; இறுத்தல்-வந்து சேர்தல்; கண்-உடம்பு)

மிக்க வலிமையுடைய தூமிரன் என்னும் வானர வீரன் தன்னுடன், முன்பு திருமால் வராக அவதாரம் எடுத்த போது, இப்பூமியைக் குத்தி எடுத்த ஒளி பொருந்திய பற்களையுடைய வலிமை பெற்றனவாகவும், உறுதி கொண்ட திண்ணிய பெரிய மலையையே தன் மயிர்க் காலில் அடக்கக் கூடிய அளவுக்கு உருண்டு திரண்ட உடம்பை உடையனவாகவும், உள்ள இராண்டாயிரம் கோடி என்று கருதப்பட்ட கரடியின் கூட்டத்தோடு சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

திருமாலின் வராக அவதாரம் முதல் அடியில் குறிக்கப் பெற்றது. அவன் படையில் இருந்த ஒவ்வொரு கரடியும் வராக அவதாரம் எடுத்த திருமாலைப் போன்ற மிக்க வலிமையும் திண்ணிய உடம்பும் கொண்ட கரடிக்கூட்டம் என்பதாம். தூமிரன் கரடித்தலைவனான சாம்பவனின் தம்பி என்பர். பொதுவாக மிகுந்த வலிமையைக் குறிக்க, ஆதிவராகத்தை உவமையாகக் கூறுவதுண்டு.

6. கவாட்சன் வந்து சேர்தல்

முனியுமாம் எனின் அருக்கனை முரண்அற முருக்கும்;
தனிமைதாங்கிய உலகையும் சலம்வரின் குமைக்கும்;
இனிய மாக்குரங்கு ஈர்இரண்டு ஆயிரம்கோடி
அனிகம் முன்வர, ஆன்பெயர்க் கண்ணன் வந்து அடைந்தான். (4520)

(முனிதல்-கோபம் கொள்ளுதல்; அருக்கன்-சூரியன்; முரண்-வலிமை; முருக்குதல்-அழித்தல்; சலம்-பெருங்கோபம்; குமைத்தல்-குத்தி அழித்தல்; ஈர்இரண்டு ஆயிர கோடி-நாலாயிரம் கோடி; அனிகம்-சேனை; கோ-பசு; அட்சம்-கண்; ஆன் பெயர்க் கண்ணன்-கவாட்சன்; அற-கெடும்படி; தனிமை-தனியாகவே; ஆன்-பசு)

கோபம் கொண்டால், சூரியனின் வலிமை கூடக் கெடும்படி அழிக்கும் ஆற்றல் உடையனவும், அடங்காத கோபம் வந்துவிட்டால் தாம் தங்கியிருக்கும் இவ்வுலகத்தைக் தனியாகவே நின்று குத்திக் கிழிக்கும் வல்லமை உடையனவுமான நாலாயிரம் கோடி என்ற கணக்கினதான இனிய பெரிய குரங்குகளின் சேனை, தனக்கு முன்னே செல்ல, கவாட்சன் என்னும் வானர வீரன் சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

முனிதல் என்பது சாதாரணக் கோபத்தையும், சலம் என்பது தணிக்க முடியாத பெருங்கோபத்தையும் குறிக்கும் என்க. அப்படையில் உள்ள

ஒவ்வொரு குரங்கும் சூரியன் வலிமை கெடும்படி அழிக்கும் ஆற்றலும், இவ்வுலகைத் தனியாகவே நின்று குத்திக்கிழிக்கும் ஆற்றலும் உடையன என்பதாம். இவ்வளவு ஆற்றல் இருந்தும் அவை இதுவரை சூரியனையோ இவ்வுலகையோ அழிக்காமல் இருந்ததனால் அவற்றை ''இனியமாக் குரங்கு'' என்றது ஓர் நயம், கோ என்ற சொல் பசுவைக் குறிக்கும் அட்சம் என்ற சொல் கண்ணைக் குறிக்கும். எனவே கோ அட்சம் என்பது கவாட்சி என்று புணர்ந்து கவாட்சன் என்று திரிந்தது. ஆன் பெயர்க் கண்ணன் என்பது கவாட்சன் என்ற வடசொல்லின் தமிழாக்கம். பசுவின் கண் போன்ற கண்களை உடையவன் என்பது பொருள். இவன் கெண்டை முசு, என்னும் ஒருவகைக் குரக்கினத்தின் தலைவன் என்றும் கூறுவர். கெண்டை முசு என்பதைக் கோலாங்கூலம் என்றும் கூறுவர். லாங்கூலம் என்பது வாலைக் குறிக்கும். கோலாங்கூலம் என்பது நீண்ட பெரிய வாலைக்குறிக்கும் என்க.

7. பனசன் வருதல்

தனிவரும் தடங்கிரி எனப் பெரியவன், சலத்தால்
நினையும் நெஞ்சுஇற உரும்என உறுக்குறு நிலையன்,
பனசன் என்பவன், பன்னிரண்டாயிர கோடிப்
புனித வெஞ்சின வானரப் படைகொடு புகுந்தான். (4521)

(தடங்கிரி-பெரியமலை; சலம்-கடும் கோபம்; இற-முரிந்து போகும் படி; உரும்-இடி; உறுக்குதல்-அதட்டுதல்; நிலை-ஆற்றல்/தன்மை; கொடு-கொண்டு; புகுதல்-வந்து சேர்தல்)

தனியாக நடந்து வருகின்ற ஒரு பெரிய மலை போலும், தோற்றத்தை உடையவனும், கோபத்தால் பகைவர்கள் தன்னைப் பற்றி நினைத்தாலே அவர்களின் நெஞ்சம் இற்றுப் போகும்படி, இடி போல அதட்டி அச்சுறுத்தும் ஆற்றலையுடையவனுமான, பனசன் என்னும் படைத் தளபதி, தன்னோடு பன்னிரண்டாயிரம் கோடி என்று கணக்கிடப்பட்ட, தூய, கொடிய கோபம் கொண்ட வானரப் படைகளை உடன் கொண்டு வந்து, சுக்கிரீவனிடம் சேர்ந்தான்.

''புனித வெஞ்சினம்'' என்ற சொல்லாட்சியை நோக்குக. இங்கே புனிதம் என்பது அறநெறிக்கு மாறுபடாத எனப் பொருள்படும். ஒத்த ஆற்றல் உடையவரோடு அன்றி வேறெவரோடும் போர் புரியாத தன்மையைக் குறித்தது. ''வீறின்மையின் விலங்காம் என மதவேழமும் எறியான்; ஏறுண்டவர் நிகராயினும், பிறர்மிச்சில் என்று எறியான்; மாறன்மையின், மறம் வாடும் என்று, இளையாரையும் எறியான்; ஆறன்மையின், முதியாரையும் எறியான், அயில் உழவன்'' என்பது ஒரு அருமையான சீவகசிந்தாமணிப் பாடல். இதனோடு நாம் முன்பு கண்ட ''ஆவும் ஆன் இயல் பார்ப்பன மாக்களும்'' என்ற புற நானூற்றுப் பாடலையும் நினைவு கூர்க.

8. நீலன் வருதல்

இடியும் மாக்கடல் முழக்கமும் வெருக்கொள, இசைக்கும்
முடிவுஇல் பேர்முழக்கு உடையன, விசையன, முரண,
கொடிய கூற்றையும் ஒப்பன, பதிற்றைந்து கோடி
நெடிய வானரப் படை கொண்டு புகுந்தனன் நீலன். (4522)

(வெருக்கொள-அஞ்சுமாறு; இசைக்கும்-ஒலிக்கின்ற; முடிவு-வரம்பு; விசை-வேகம்; முரண்-வலிமை; கூற்று-இயமன்; பதிற்றைந்து-பத்து ஐந்து ஐம்பது கோடி)

இடி ஓசையும், பெரிய கடலின் ஆரவார ஓசையும் அஞ்சி அகன்று போகும்படி கர்ஜிக்கின்ற, எல்லையில்லாத பெரிய பேரோசை உடையனவும், வேகமுடையனவும், வலிமையுடையனவும், கொடியனவும், இயமனை ஒத்ததுமான, ஐம்பதுகோடி நீண்ட குரங்குச் சேனையை உடன் கொண்டு, நீலன் என்னும் தளபதி சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

பத்து+ஐந்து-பதிற்றைந்து=ஐம்பது; நெடிய என்ற சொல்லுக்கு ''நீண்டமுகம் கொண்ட'' என்றும் பொருள் கூறுவர்; நீலன் அக்னியின் புதல்வன். இவன்தான் சுக்கிரீவனின் எல்லாப் படைகளுக்கும் எங்கும் தலைவன்; முதல்தலைவன்; இவன்நீல நிறமேனி கொண்டவன்என்பதால் நீலன் என்பது காரணப் பெயர். வாலியால் துரத்தியடிக்கப்பட்ட சுக்கிரீவனுக்குத் துணையாக நின்ற நால்வருள் இவனும் ஒருவன் என்பது குறிப்பிடத்தக்கது.

9. தரீமுகன் வருதல்

மாகரத்தன, உரத்தன, வலியன, நிலைய
வேகரத்த, வெங்கண் உமிழ் வெயிலன, மலையின்
ஆகரத்தினும் பெரியன, ஆறு ஐந்து கோடி
சாகரத்தொடும், தரீமுகன் என்பவன் சார்ந்தான். (4523)

(மா-பருத்த/பெரிய; கரம்-கைகள் உரம்-மார்பு; வேகரம்-உக்கிரம்/கடுமை; உமிழ்தல்-தெளித்தல்/வெளிப்படுத்துதல்; வெயில்-நெருப்புப் பொறி; ஆகரம்-வடிவம்; ஆறு ஐந்து கோடி-முப்பது கோடி; சாகரம்-கடல்; சகரரால் தோண்டப்பட்டது என்பதால் சாகரம் கடலுக்குக் காரணப் பெயர்; தரீ-மலைக்குகை; முகன்-முகமுடையவன்/வாய்; தரீ முகன்- மலைக் குகை போன்ற முகம்டையவன்.

தரீமுகன் என்னும் வானர வீரன், பெரிய பருத்த கைகளையும் மார்பையும் உடையனவும், பேர் ஆற்றல் பெற்றனவும், நிலையான புத்தி உடையனவும், கடுமை உடையனவும், கொடிய கண்களிலிருந்து தெறிக்கும் தீப் பொறி உடையனவும், மலையின் உருவத்தைக் காட்டிலும்

பெரிய உருவம் கொண்டனவுமாகிய முப்பது கோடி வானரங்கள் அடங்கிய ஒரு படைக் கடலோடும், சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

10. கவயன் வருதல்

இளைத்து வேறுஒரு மாநிலம் வேண்டும் என்று இரங்க,
முளைத்த முப்பதினாயிர கோடியின் முற்றும்
விளைத்த வெஞ்சினத்து அரிஇனம் வெருவுற விழிக்கும்
அளக்கரொடும், அக்கவயன் எனும்பெயரன், வந்து அடைந்தான். (4524)

(மாநிலம்-பெரிய பூமி; முற்றும்-நிரம்பியதும்; முளைத்தல்- தோன்றுதல்; அளக்கர்-கடல்; கயன்-கஜன்/யானை போன்றவன்; அரி-குரங்கு/சிங்கமுமாம்)

தாம் தங்கியிருப்பதற்கு இந்த உலகம் போதாது என்றும், வேறு ஒரு பெரிய பூமி வேண்டும் என்று வருத்தி இரங்குகின்றனவும், தோன்றுகின்ற முப்பதினாயிரம் கோடி என்ற எண்ணிக்கையில் பூமி முழுவதும் பரவியிருப்பனவும், கொடியசினம் மூண்டு எழுந்ததால், அங்கிருக்கின்ற சிங்கக் கூட்டங்களெல்லாம் அஞ்சி ஓடுமாறு வெறித்து விழித்துப் பார்ப்பனவுமான பெரிய கடலோடு, புகழ்பெற்ற கவயன் என்னும் வானர வீரன் சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

முப்பதினாயிரம் கோடி வானரச் சேனைகளும் மிகவும் பருத்தும் பெருத்தும் இருப்பதால் அவை அணிவகுத்துச் செல்லுதற்கு இந்த உலகம் போதாது; இன்னும் ஓர் பெரிய பூமி வேண்டும் என்று கருதுகின்ற குரங்குப்படை என்பதாம். ''படை பெருத்ததால் பார் சிறுத்ததோ'' என்ற சொல்லையும் இங்கு கருதுக. சிங்கங்களையே அஞ்சி ஓடச்செய்யும் பார்வையுடைய வெஞ்சினத்து விழி கொண்டன என்று அவற்றின் ஆற்றல் சிறப்பிக்கப்பட்டதென்க. உலகம் முழுவதும் இருக்கும் மக்கள் தொகையே இப்பொழுது முன்னூறு கோடி அளவைத் தொட்டுக் கொண்டிருக்கும்போது, இங்கே வானரங்கள் முப்பதினாயிரம் கோடி என்று கூறியது உயர்வு நவிற்சி என்க. பொதுவாகச் சேனையை சேனா சமுத்திரம் என்று வடமொழி நூல்கள் கூறும். எனவே கம்பரும் அளக்கர், கடல், சாகரம் என்ற சொற்களைப் பயன்படுத்தினார் என்க.

11. சாம்பவன் வருதல்

ஆயிரத்து அறுநூறு கோடியின் கடைஅமைந்த
பாயிரப் பெரும்படை கொண்டு, பரவையின் திரையின்
தாய், உருத்து உடனேவர, தடநெடு வரையை
ஏய்உருப் புயச் சாம்பன் என்பவனும் வந்து இறுத்தான். (4525)

(ஏய்-ஒத்த; புயம்-தோள்கள்; கடை-வரம்பு; பாயிரம்-விருது/சிறப்பு; பரவை-கடல்; திரை-அலை; தாய்-தாவி; உருத்து-கோபித்து; இறுத்தல்-வந்து சேர்தல்)

பெரிய நீண்ட மலையை ஒத்த வடிவம் கொண்ட தோள்களையுடைய சாம்பவன் கரடிகளுக்குத் தலைவன், தன் பின்னே ஆயிரத்து அறுநூறு கோடி என்று வரம்பு செய்யப்பட்ட சிறப்புடைய பெரிய படை, கடலின் அலைகளைப் போல் சினந்து தாவிக் கொண்டுவர, சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

பாயிரம் என்பது விருது என்றும் பொருள்படும். கடலின் அலைகளை, தாவி வரும் சேனைக்கு உவமை கூறினார். ஜாம்பவான் என்ற வடசொல்லின்திரிபுசாம்பவன்என்பது. அதுசாம்பவான், சாம்பன்எனவும் கூறப்படும். இவன் கரடிகளின் தலைவன். முன் சொன்ன தூமிரன் உடன் பிறந்தவன் எனவும் கூறுவர். இவன் பிரமதேவன் கொட்டாவி விடும்போது, அவன் வாயிலிருந்து கரடி வடிவில் தோன்றியவன் என்றும், திருமால் திரிவிக்கிரம அவதாரம் செய்தபோது, அந்நெடிய உலகளந்த உருவத்தைப் பதினெட்டு முறை வலம்வந்து பறையறிவித்தவன் என்றும் கூறுவர். இவன் காலம் பல கடந்தவன். இவன் வயதை அறுதியிட்டு உரைக்க முடியாது என்பதும் உண்டு.

12. துன்முகன் வருதல்

வகுத்த தாமரை மலர் அயன் ''நிசிசரர் வாழ்நாள்
உகுத்தி நீ'' எனப் பொருவரும் பெருவலி உடையான்,
பகுத்த பத்து நூறாயிரப் பத்தியின் இரட்டி
தொகுத்தகோடி வெம்படைகொண்டு துன்முகன் தொடர்ந்தான். (4526)

(நிசிசரர்-அரக்கர்; உகுத்தல்-ஒழித்தல்; வகுத்த-படைத்த; பொருவரும்-ஒப்பற்ற; பகுத்த-அணிவகுக்கப்பட்ட; பத்துநூறு ஆயிரம்-பத்து லட்சம்; பத்தி-வரிசை; இரட்டி-இரண்டு மடங்கு; அயன்-பிரமதேவன்; வாழ்நாள்-ஆயுள் காலம்/உயிர்; தொடர்தல்-பின்பற்றுதல்; நிசி-இரவு; சரர்-சஞ்சரிப்பவர்; நிசிசரர்-இரவில் சஞ்சரிப்பவர் என்பது அரக்கர்களுக்குக் காரணப் பெயர்.)

தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம தேவன், ''அரக்கர்களின் ஆயுளை அழித்து விடு'' என்று கட்டளையிட்டுப் படைக்கப்பட்ட, யாருக்கும் நிகரில்லாத பெருவலிமை கொண்டவனான துன்முகன் என்பவன், பத்துலட்சத்தின் இரட்டியாகிய இருபது லட்சம் கோடி கொடிய வானர வீரர்களை, வரிசையாக அணி வகுத்துத் திரட்டிக் கொண்டு, பின்பற்றி சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

துன்முகன் என்பது, அழகற்ற, அச்சம் விளைவிக்கும் பயங்கர முகத்தைக் கொண்டவன் என்று பொருள்படும்.

13. துமிந்தன் வருதல்

கோடிகோடி நூறு ஆயிரஎண் எனக் குவிந்த
நீடு வெஞ்சினத்து அரிஇனம் இருபுடை நெருங்க,
மூடும் உம்பரும் இம்பரும் பூழியில் மூழ்க,
தோடு இவர்ந்த தார்க்கிரி புரை துமிந்தனும் தொடர்ந்தான். (4527)

(தோடு-இதழ்கள்; இவர்ந்த-செறிந்த/நிறைந்த; தார்-மலர்மாலை; நீடு-நீண்ட; அரி-குரங்கு; புடை-பக்கம்; மூடும்-கவிந்துள்ள; உம்பர்-ஆகாயம்; பூழி-புழுதி; தொடர்தல்-வந்து சேர்தலுமாம்; இம்பர்-இவ்வுலகம்)

இதழ்கள் நிறைந்த மலர்மாலையணிந்த மலை போன்ற உருவமுடைய துமிந்தன் என்னும் வானர வீரன், தன்னுடன் பல கோடி லட்சக் கணக்காக நிறைந்த, நெடிய, கொடிய கோபம் கொண்ட குரங்குக் கூட்டம் தன் இருபக்கங்களிலும் நெருங்கி வர, அதனால் எழுந்த புழுதி, ஆகாயத்தையும், இவ்வுலகத்தையும் மறைத்துக் கவிழ்த்து விடும்படி, சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

கோடிகோடி நூறு ஆயிரம் என்பது அளவிடற்கரிய என்று மிகுதியைக் குறிக்கும் என்க. துமிந்தன், மயிந்தன் என்பவர்கள் அசுவினித் தேவரின் அம்சமாகத் தோன்றிய வானர வீரர்கள் என்றும், இவர்கள் தான் பின்னால் வீடணன், இராமபிரானிடம் அடைக்கலம் கோரி வரும்பொழுது முதன்முதலில் வீடணனைக் கண்டு இராமபிரானுக்குத் தெரிவித்தவர்கள் என்றும் கூறுவர்.

14. மயிந்தன் வருதல்

இயைந்த பத்துநூறாயிரம் பத்து எனும் கோடி
உயர்ந்த வெஞ்சின வானரப் படையொடும் ஒருங்கே,
சயம் தனக்கு ஒருவடிவு எனத் திறல்கொடு தழைத்த
மயிந்தன், மல் கசகோமுகன் தன்னொடும் வந்தான். (4528)

(சயம்-ஜயம்/ஜெயம்/வெற்றி; திறல்-வலிமை; தழைத்த-வளர்ந்த; மல்-மற்போர்; ஒருங்கே-ஒருசேர; கஜகோமுகன்-கசகோமுகன்/கயகோமுகன்)

வெற்றி என்பது தனக்கே உரியது என்ற ஒரு வடிவம் கொண்டு, மிக்க வலிமையுடன் வளர்ந்த மயிந்தன் என்னும் வானர வீரன், மற்போரில் வல்லவனான கசகோமுகன் என்பவனோடும், பொருந்திய நூறு லட்சம் கோடி என்று கணக்கிட்டுச் சொல்லப்படுகின்ற மிக்க கொடிய கோபம் கொண்ட வானரச் சேனையோடும் ஒருசேர சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

மயிந்தனும், துமிந்தனும், அசுவினித்தேவரின் அம்சமாகத் தோன்றிய வர்கள்.

15. குமுதன் வருதல்

கறங்குபோல்வன, காற்றினும், கூற்றினும் கடிய,
பிறங்கு தெண்திரைக் கடல் புடை பெயர்ந்தெனப் பெயர்வ,
மறம்கொள் வானரம் ஒன்பது கோடி எண் வகுத்த
திறம்கொள், வெஞ்சினப்படை கொடு, குமுதனும் சேர்ந்தான். (4529)

(கறங்கு-காற்றாடி; கூற்று-எமன்; பிறங்கு-விளங்குகின்ற; தெண்-தெளிந்த; பெயர்தல்-இயங்குதல்; மறம்-வீரம்)

குமுதன் எனும் வானர வீரன், காற்றாடி போல் சுழன்று விரைந்து செல்வனவும், காற்றைப் போல வேகமாகச் செல்வனவும், இயமனைப் போலக் கொடியனவும், விளங்குகின்ற தெளிந்த அலைகளையுடைய கடல், இடம்விட்டுப் பெயர்ந்து செல்வதைப் போல இயங்குவனவும், மனவலியும், உடல் வன்மையும் மிகுந்தனவும், கொடிய கோபம் கொண்டனவும், வீரம் மிக்கதுவுமான ஒன்பது கோடி என்று கணக்கிடப்பட்ட வானரப் படையைக் கொண்டு சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

16. பதுமுகன் வருதல்

ஏழின்ஏழு நூறாயிரகோடி என்று இசைந்த
பாழி நல்நெடுந் தோள் கிளர்படை கொண்டு, பரவை
ஊழி பேரினும் உலைவில உலகினில் உயர்ந்த
பூழி விண்புக, பதுமுகன் என்பவன் புகுந்தான். (4530)

(உலைவுஇல-அழிவில்லாத; ஏழின்ஏழு நூறு ஆயிரகோடி-நாற்பத்து ஒன்பது இலட்சம் கோடி/பதினான்கு லட்சம் கோடி; இசைத்த-உரைத்த/ கணக்கிடப்பெற்ற/ பாழி-வலிய; பூழி-புழுதி/மண்துகள்)

பதுமுகன் என்னும் வானர வீரன், ஊழி முடிவுக் காலத்தில் கடல் பெயர்ந்து வந்தாலும், அழிவுறாததும் இவ்வுலகினில் மிக உயர்ந்ததும், நாற்பத்து ஒன்பது கோடி என்று கணக்கிடப்பட்டதும், வலிமை பொருந்திய, நல்ல, பெரிய தோள்களையுடையதும், ஆகிய வானரப் படையைக்கொண்டு, அவை அணிவகுத்து வருதலால், பூமியில் எழுகின்ற புழுதி விண்ணிற் சென்று அடையுமாறு சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

பதுமுகன் கொண்டு வந்த படை ஊழியிறுதிக் காலத்திலும், அழியாது என்பதால் ''*உலகினில் உயர்ந்த உலைவுஇல் படை*'' என்றார் என்க.

17. இடபன் வருதல்

ஏழும் ஏழும் என்று உரைக்கின்ற உலகங்கள் எவையும்
தாழும் காலத்தும், தாழ்விலாத் தடவரைக் குலங்கள்
சூழும் தோற்றத்த, வலிகொள் தொள்ளாயிரக் கோடிப்
பாழி வெம்புயத்து அரியொடும், இடபனும் படர்ந்தான். (4531)

(தாழ்தல்-அழிதல்; குலம்-கூட்டம்; வெம்-விரும்பத்தக்க; பாழி-பெருமை/வலிமை; படர்தல்-அடைதல்)

இடபன் என்னும் வானர வீரன், பதினான்கு என்று சொல்லப்படும் உலகங்கள் எல்லாமும் அழிந்து போகின்ற பிரளய காலத்திலும், அழியாத பெரிய மலைக் கூட்டங்கள் போலும் தோற்றத்தையுடையனவும், வலிமையும் கொண்ட தொள்ளாயிரம் கோடி என்று கணக்கிட்டுச் சொல்லப்படுகின்ற, பெருமை பொருந்திய, விரும்பத்தக்க தோள்களை உடைய குரங்குப்படையொடும் சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்

குரங்குகள் ஒவ்வொன்றும் ஒரு மலையைப் போன்ற தோற்றமுடையனவாய் இருந்தன என்பதாம்.

18. தீர்க்கபாதன், வினதன், சரபன் ஆகியோர் வருதல்.

தீர்க்கபாதனும், வினதனும், சரபனும், திரைக்கும்
மாற்கருங்கடற்கு உயர்ந்துள மைம்முகத்து அனிகம்
ஆர்க்கும் எண்ண அரும் கோடிகொண்டு, அண்டமும் புறமும்
போர்க்கும் பூழியில் மறைதர, முறையினின் புகுந்தார். (4532)

(திரைக்கும்-அலைவீசுகின்ற; மால்-பெரிய; மைம்முகம்-மைபோன்ற கரியமுகம்; அனிகம்-சேனை/படை; போர்க்கும்-மூடிக்கொள்ளும்; பூழி-புழுதி; முறை-வரிசை; அண்டம்-கோளம்/உலகம்)

தீர்க்கபாதன், வினதன், சரபன் என்ற வானர வீரர்கள் அலைவீசுகின்ற பெரிய கரிய கடலுக்கும் மேம்பட்டதாக மை போன்ற கரிய முகத்தை யுடையனவும், ஆரவாரித்துக் கொண்டே வருவனவும், யாராலும் கணக்கிட்டு உரைக்க முடியாத கோடி என்னும் அளவினதாக வானரச் சேனை, அவை வருகின்ற வேகத்தில் எழுகின்ற புழுதியினால் இவ்வுலகத்தின் உள்ளும் புறமும் மறைந்து போகும்படியாக, இம்மூவரும் ஒருவர் பின்ஒருவராகச் சுக்கிரீவனை வந்து சேர்ந்தனர்.

தீர்க்கபாதன் என்பவன் நீண்ட கால்களையுடையவன் என்றும், வினதன் என்பவன் மிகவும் வணக்கமுடையவன் என்றும், சரபன் என்பவன் ஒரு பறவையைப்போன்ற ஆற்றல் பெற்றவன் என்றும் காரணப் பெயர்களாகக் குறிக்கப்படுகின்றன. சரபம் என்பது எட்டுக் கால்களும் சிங்கமுகமும் கொண்டு, பறக்கவும், நடக்கவும் ஆற்றல் பெற்றதாய்ச் சிங்கத்தையும் வெல்லவல்ல ஒரு பறவை என்று கூறுவர். இவன் மேகக் கடவுளின் மைந்தன் என்றும் கூறுவர். குரங்குகளிலேயே மிகக் கருப்பான முகம் கொண்ட குரங்குகளை நாம் இன்றும் கருங்குரங்கு என்று அழைப்பதை நினைவு கூர்க. கருங்குரங்குகள் மிகப்பெரிய வடிவும் நீண்டவாலும் உடையன. இவை வேம்பின் பைந்தழையை விரும்பி உண்ணும் இயல்புடையன.

இதன் பின்னர் சில சுவடிகளில் தூமிரன், கபாடன், ததிமுகன் முதலியோரும் வானரப் படைகளுடன் வந்து சேர்ந்தனர் எனக் கூறப்படுகிறது. எனினும் முதன்மையான சுவடிகளில், இவை இடைச் செருகல் என்று கருதி மிகைப்பாடல்களாகவே கொள்ளப்பட்டிருக் கின்றன.

19. அனுமன் வருதல்

கை அஞ்சு ஆயுதம் உடைய அக்கடவுளைக் காண
மெய் அஞ்சாதன மாதிரம் சிறிது என விரிந்த
வையம் சாய்தரத் திரிதரு வானரசேனை
ஐ அஞ்சு ஆயிரகோடி கொண்டு, அனுமன் வந்து அடைந்தான். (4533)

(அஞ்சு ஆயுதம்-பஞ்சாயுதங்கள்; மாதிரம்-திசைகள்; வையம்-நிலப்பரப்பு; ஐஅஞ்சு ஆயிர கோடி-இருபத்தையாயிரம் கோடி; திரிதருதல்-சுற்றித்திரிதல்/உலாவுதல்; மெய்-உடல்/தேகம்)

தனது கைகளில் ஐந்து ஆயுதங்களைக் கொண்ட திருமாலின் அவதாரமாகிய இராமபிரானைக் காணும் பொருட்டு, உடல் நடுக்கம் கொள்ளாதனவும், தாம் பரந்து விரிந்து வருவதால் உலகத்துத் திசைகள் எல்லாம் குறுகிப் போகும் படியும், இவை வரும் சுமை தாங்காமல் உலகம் ஒரு பக்கமாகச் சாய்ந்தது போலத் தோற்றம் தருவனவும், சுற்றித் திரிந்து வருபவையுமான இருபத்தி ஐந்து ஆயிரம் கோடி வானரப் படைகளுடன், அனுமனும் சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

திருமால் தன்னிடம் கொண்டுள்ள ஐந்து ஆயுதங்கள் சங்கு, சக்கரம். கதை, வில், வேல் என்பன என்க. ''படைபெருத்தலால் பார் சிறுத்தது'' என்பதை ''மாதிரம் சிறிது என விரிந்த'' என்றார். அனு என்ற சொல்லுக்குக் கன்னம், கதுப்பு என்பது பொருள். மன்என்ற சொல் விசேஷம் முடையவன் என்ற பொருளைத் தரும். இளமையில் சூரியனைப் பழம் என்று கருதிக் கடிக்கப் போன அனுமனை, இந்திரன் தனது வச்சிராயுதத்தால் தாக்க, அப்பொழுது அவன் கன்னத்தில் அவ்வாயுதம் பட்டதால் கன்னம் சற்று வீங்கிப் போயிற்று என்பது ஒரு புராணக் குறிப்பு என்று முன்பே கண்டதை இங்கு நினைவு கூர்க.

20. நளன் வருதல்

நொய்தின் கூடிய சேனை நூறாயிரகோடி
எய்த, தேவரும், என்கொலேமுடிவு? என்பது எண்ணி
மையல் சிந்தையால் அந்தகன் மறுக்குற்று மயங்க,
தெய்வத் தச்சன் மெய்த்திரு நெடுங் காதலன், சேர்ந்தான். (4534)

(தெய்வத் தச்சன்-விசுவகர்மா; காதலன்-புதல்வன்; முடிவு-எல்லை; அந்தகன்-இயமன்; மையல்-மதிமயக்கம்; மறுக்குறுதல்-கலக்கம்

கொள்ளுதல்; மயங்குதல்-திகைத்து நிற்றல்; நொய்தின்-விரைவில்; நூறாயிரகோடி-லட்சம் கோடி)

தேவ சிற்பியான விசுவகர்மாவின் உண்மையான அழகிய பெருமை பெற்ற பேரன்புடைய புதல்வனான நளனும், தேவர்கள் எல்லோரும் ''இப்படையின் எல்லைதான் எதுவோ?'' என்று சிந்தித்துக் கொண்டிருக்கவும், மதிமயக்கம் கொண்ட இயமன், மனக்கலக்கம் உற்று செயலற்றுத் திகைத்து நிற்கவும், லட்சம் கோடி என்று சொல்லும் அளவிடற்கரிய வானரப் படையினரை அழைத்துக் கொண்டு விரைவாக சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான்.

அந்தகன் என்பது, உயிருக்கு அந்தத்தை-இறுதியைச் செய்பவன் என்பதால் இயமனுக்குக் காரணப்பெயர். ''மெய்த்திரு நெடுங் காதலன்'' என்பது நளனின் பெருமையையும் உடல் வனப்பையும் குறிக்கும் அடை மொழிகள்என்க. இவன்தன்கையால்எதைநீரில்போட்டாலும்அது மிதக்க வேண்டும் என்ற வரம் பெற்றவன். பின்னர் அவன்தான் சேதுவைக் கட்டிமுடிக்கிறான் என்பதை இங்கு நினைவிற் கொள்க.

21. கும்பன், சங்கன் ஆகியோர் வருதல்

கும்பனும், குலச் சங்கனும் முதலினர், குரங்கின்
தம் பெரும்படைத் தலைவர்கள் தர வந்த தானை,
இம்பர் நின்றவர்க்கு எண்ண அரிது; இராகவன் ஆவத்து
அம்பு எனும் துணைக்கு உரிய; மற்று உரைப்ப அரிது அளவே. (4535)

(குலம்-சிறப்பு; இம்பர்-இவ்வுலகத்தினர்; ஆவம்-தூணி; நின்றவர்-உள்ளவர்கள்; துணை-அளவு)

கும்பன் என்னும் வானர வீரனும், சிறந்த சங்கன் என்னும் வீரனும் குரங்குச்சேனையின்பெரியபடைத்தலைவர்கள்; இவர்கள்கொண்டுவந்த வானர சேனையின் அளவை இவ்வுலகத்தில் உள்ளவர்களால் எண்ணிப் பார்க்கவும் இயலாது. கணக்கிட்டு அளக்கவும் முடியாது. வேண்டு மானால் இராமபிரானது அம்பறாத்தூணியில் உள்ள அம்புகளின் அளவிற்கு ஒப்பிட்டுக் கூறலாம். அதைத் தவிர வேறு ஒன்றிற்கும் ஒப்புக் கூறமுடியாது.

இவ்விரு பெரும் படைத்தலைவர்களும் கொணர்ந்த சேனையை இராமபிரானுடைய அம்பு அறாத் தூணியில் உள்ள அம்புகளுக்கு ஒப்புக் கூறலாம் என்றதனால் அது அளவிடற்கரியது என்பது பெறப்பட்டது. அளவின்மை கூறப்பட்டது.

22. குரங்குப் படையின் சிறப்பு

தோயின், ஆழிஓர் ஏழும் நீர் சுவறி வெண் துகளாம்;
சாயின், அண்டமும் மேருவும் ஒருங்கு உடன் சாயும்;

ஏயின், மண்டலம் எள் இட இடம் இன்றி இரியும்;
காயின், வெங்கனல் கடவுளும் இரவியும் கரியும். (4536)

(தோய்தல்-மூழ்குதல்; சுவறி-வறண்டு/வற்றி; துகள்-புழுதி; அண்டம்-உலக உருண்டை; ஏயின்-சென்றால்/அணிவகுத்து நின்றால்; இரிதல்-நிலைகெடுதல்; காய்தல்-கோபித்தல்; கனல் கடவுள்-அக்னிதேவன்; இரவி-சூரியன்; கரிதல்-வெந்துபோதல்/சாம்பலாகுதல்; மண்டலம்-மண்தலம்/தரைப்பரப்பு)

இங்கு வந்து சேர்ந்துள்ள குரங்குப்படைகள் எல்லாம் மூழ்கினால், ஏழுகடல்கள் என்று சொல்லப்படுகின்ற அவை எல்லாமும் நீர் வற்றிப்போய் வறண்டு வெண் புழுதியாய்ப் போய்விடும்; இவை சற்று ஒரு பக்கமாகச் சாய்ந்தால், இவ்வுலக உருண்டையும் அசையாத மேருமலையும் கூட ஒன்று திரண்டு அதே பக்கமாகச் சாய்ந்துபோகும்; இவை அணிவகுத்து நின்றாலோ, உலாவினாலோ, இந்த நிலப்பரப்பில் எள் போடுவதற்குக் கூட இடம் இல்லாத வகையில் நிலைகெட்டுவிடும்; இவை கோபம் கொண்டு சீறினாலோ, வெப்பமுடைய அக்னி தேவனும், சூரியனும் கூட எரிந்து சாம்பலாய்ப் போய்விடுவர்.

குரங்குச் சேனையின் வலிமையும் ஆற்றலும் கூறப்பட்டது கடல்பரப்பு, உலகப்பரப்பு, நிலப்பரப்பு இவை எதுவும் போதாது என்பதாம்.

23. எண்ணின், நான்முகர் எழுபதினாயிரர்க்கு இயலா;
உண்ணின், அண்டங்கள் ஓர்பிடி உண்ணவும் உதவா;
கண்ணின் நோக்குறின், கண்ணுதலானுக்கும் கதுவா;
மண்ணின் மேல்வந்த வானர சேனையின் வரம்பே. (4537)

(மண்-தரை; வரம்பு-அளவு; நான்முகர்-பிரமன்; கண்ணுதலான்-நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான்; கதுவுதல்-பற்றுதல்)

இச்சேனைகளின் அளவை எண்ணத் தொடங்கினால் நான்கு முகங்களையுடைய பிரமதேவன் போல், எழுபதினாயிரம் பிரமதேவர்கள் ஒருங்கு திரண்டு வந்தாலும் எண்ணி முடிக்க முடியாது; இச்சேனைகள் உணவு உண்ணத் தொடங்கினால், இந்த உலகத்தில் உள்ள உணவுப் பொருள்கள் எல்லாம் சேர்ந்தாலும் இவற்றின் ஒருபிடி உணவுக்குக் கூடப் பற்றாது; கண்களால் பார்த்தே அளவிட வேண்டுமென்றால், நெற்றியில் மூன்றாவது கண்ணையுடைய சிவபெருமானின் மூன்று கண்களுக்கும் கூடப் பற்றும் தன்மையற்றது;

குரங்குச் சேனையின் மிகுதிபற்றியும், அதைச்சாதாரண மனிதர்களால் அளவிட்டுக் கூறமுடியாது என்பதுடன் நான்கு முகங்களையுடைய எழுபதினாயிரம் பிரம தேவர்கள் வந்தாலும் கூடக் கணக்கிட்டு அறிய முடியாது என்பதாம். அதுபோலவே, மூன்று கண்களையுடைய சிவபெருமானின் கண்களுக்கும் பார்த்தல் அரியது என்பதாம்

24. ஒடிக்குமேல் வடமேருவை வேரொடும் ஒடிக்கும்;
இடிக்குமேல், நெடு வானக முகட்டையும் இடிக்கும்,
பிடிக்குமேல், பெருங்காற்றையும், கூற்றையும் பிடிக்கும்;
குடிக்குமேல், கடல் ஏழையும் குடங்கையின் குடிக்கும். (4538)

(வேர்-அடி; கூற்று-இயமன்; குடங்கை-உள்ளங்கை; ஒடித்தல்-முறித்தல்; இடித்தல்-தகர்த்தல்; பிடித்தல்-கைப்பற்றுதல்; குடித்தல்-பருகுதல்)

இந்த வானரப்படை, ஒடிக்கவேண்டும் என்று நினைத்தால் வடக்கிலுள்ள மேருமலையை அடியோடும் முறித்து எறிந்து விடும்; இவை இடிக்கவேண்டும் என்று கருதினால், நீண்ட ஆகாயத்தின் முகட்டையும் கூடத் தகர்த்து எறிந்துவிடும்; இவைபிடிக்க வேண்டும் எண்ணினால், பெரிய காற்றை மட்டுமல்ல, இயமனையும் கூடத் தன் கைகளால் பற்றிக் கொண்டுவிடும்; இவை குடிக்க வேண்டும் என்றுமுடிவு செய்தால் உலகிலுள்ள ஏழுகடலிலுள்ள நீரையும் தம் உள்ளங்கைகளாலேயே முகந்து பருகிவிடும்.

பிறரால் செய்தற்கற்கரிய செயல்களையெல்லாம், இயற்கைக்கு மாறு பட்டதாய் இருப்பினும், இச்சேனை செய்து முடிக்கும் ஆற்றலுடையது என்று சிறப்பித்தவாறாம்.

25. படைத்தலைவர்கள் வருதல்

ஆறு பத்துஏழு கோடியாம் வானரர்க்கு அதிபர்;
கூறு திக்கினுக்கு அப்புறம் குப்புறற்கு உரியார்;
மாறுஇல் கொற்றவன் நினைத்தன முடிக்குறும் வலியார்;
ஊறும்இப்பெரும்சேனை கொண்டு, எளிதின் வந்துற்றார். (4539)

(கூறும்-சிறப்பித்துச் சொல்லப்படும்; குப்புறல்-குதித்தல்; மாறு-ஒப்பு; ஊறுதல்-மேன்மேலும் பெருகுகின்ற; கொற்றவன்-மன்னன் சுக்கிரீவன்; அதிபர்-சேனைத்தலைவர்)

புகழ்ந்துபேசப்படுகின்ற எட்டுத்திக்குகளுக்கு அப்பாலும் தாண்டிக் குதித்துத் தாக்கும் வலிமையுள்ளவர்களும், இணையற்ற தங்கள் மன்னன் சுக்கிரீவன் நினைத்ததை விரைவில் செய்துமுடிக்கும் ஆற்றல் உள்ளவர் களுமாகிய அறுபத்து ஏழுகோடி என்று சொல்லப்படுகின்ற வானரச் சேனைத் தலைவர்கள், மேலும் மேலும் பெருகிவருகின்ற இந்தப் பெரிய குரங்குச் சேனையை எந்த வருத்தமும் இல்லாமல் எளிதாகத் திரட்டிக்கொண்டு வந்து சேர்ந்தனர்.

ஒவ்வொருவர் பெயராகச் சொல்லி, சுமார் இருபத்துஐந்து படைத் தலைவர்களையும் கூறிய கவிஞன், இங்கே அறுபத்துஏழு கோடிப் பேரின் பெயரையும்கூறமுடியாது என்பதால் ஒரேவரியில் தொகுத்துக்கூறிய நயம் காண்க. தன் மன்னவன் மனத்தில் நினைத்ததையே செய்து முடிக்கும்

ஆற்றல் உடையவர் என்றதனால் அவன் சொல்லிய செயலை எவ்வளவு விரைவில் செய்து முடிப்பர் என்பதை நம் ஊகத்திற்கு விட்டுவிடும் கவிஞனின் திறம் நோக்குக. சேனையின் அளவிறந்த ஆற்றலும், அனைவரும் மன்னவனிடம் கொண்டிருந்த பணிவும் ஒருங்கே கூறப் பட்டதைக் கருதுக. வானரப் படைத்தலைவர்கள் அறுபத்துஏழுகோடிப் பேர் என்பதையும் வானரச்சேனையினர் கணக்கிலடங்காத எண்ணற்றவர் என்பதையும் நினைவிற்கொள்க.

26. படைத்தலைவர்கள் சுக்கிரீவனை வணங்குதல்

ஏழுமாகடல் பரப்பினும் பரப்புஎன இசைப்பச்
சூழும் வானரப் படையொடு, அவ்வீரரும் துவன்றி,
''ஆழி மாப்பரித் தேரவன் காதலன் அடிகள்
வாழி! வாழி!'' என்று உரைத்து, அலர் தூவினர் வணங்கி. (4540)

(இசைப்ப-கூறத்தக்க; துவன்றி-நெருங்கிவந்து; ஆழி-சக்கரம்; பரி-குதிரை; காதலன்-புதல்வன்; அலர்-மலர்)

அந்தப்படைத்தலைவர்களும், ஏழு பெரிய சிறந்த கடல்களின் பரப்பைக்காட்டிலும், மிகச்சிறந்தது என்று கண்டோர் கூறும் வண்ணம் சூழ்ந்து நிற்கின்ற குரக்குச் சேனையுடன், நெருங்கிவந்து ''ஒற்றைச் சக்கரத்தையும் சிறந்த ஏழு பச்சைக் குதிரைகளையும் உடைய தேரைக் கொண்டவனான சூரியனின் புதல்வனான சுக்கிரீவனின் திருவடிகள் வாழ்க! வாழ்க!'' என்று புகழ்ந்து, அவன் திருவடிகளில் மலர்களைத் தூவி அருச்சித்து வணங்கினார்கள்.

27. சுக்கிரீவன் சேனையைக் காண வருமாறு இராமபிரானை அழைத்தல்

அனையது ஆகிய சேனை வந்து இறுத்தலும், அருக்கன்
தனையன், நொய்தினின் தயரதன் புதல்வனைச் சார்ந்தான்;
''நினையும் முன்னம் வந்து அடைந்தது நின்பெரும் சேனை;
வினையின் கூற்றுவ! கண்டருள் நீ'' என விளம்ப. (4541)

(இறுத்தல்-சேர்தல்/அடைதல்; அருக்கன்-சூரியன்; நொய்தினின்-விரைவாக; கூற்றுவன்-இயமன்; சார்தல்-சென்றடைதல்)

அத்தகைய தன்மையுடைய குரக்குச் சேனை வந்து அணி வகுத்து நின்றதும், சூரியன் புதல்வனான சுக்கிரீவனும், விரைவாகச் சென்று தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வனான இராமபிரானை அணுகி, ''தீவினை, நல்வினை என்ற இரண்டிற்கும் இயமன் போன்றவனே! நாம் எதிர்பார்த்ததற்கு முன்பே, மிக விரைவில் உன்னுடைய பெருஞ்சேனை வந்து சேர்ந்து விட்டது. அதனைக் காண்பதற்கு வருவீராக!'' என்று கேட்டுக்கொண்டான்.

''நின்பெரும் சேனை'' என்று சுக்கிரீவன், குரக்குப் படையினை இராமனது சேனை என்று கூறிய நட்புரிமை நயம் ஓர்க. ''வினையின் கூற்றுவ!'' என்றது சுக்கிரீவன் இராமபிரான் திருமாலின் அவதாரம்தான் என்று உணர்ந்ததாலும், அவன்தான் நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் வேரறுத்து பரமபதத்தையும் அளிக்கும், பிறப்பறுக்கும் பெம்மான் என்பதை உணர்ந்ததாலும்தான் என்க.

28. இராமன் மலைச்சிகரத்தில் ஏறுதல்

ஐயனும் உவந்து அகம் எனமுகம் மலர்ந்தருளி;
தையலாள் வரக் கண்டனனாம் எனத் தளிர்ப்பான்,
எய்தினான் அங்கு ஓர் நெடுவரைச் சிகரத்தின் இருக்கை;
வெய்யவன் மகன், பெயர்த்தும் அச்சேனையின் மீண்டான். (4542)

(உவந்து-மகிழ்ந்து; அகம்-மனம்/உள்ளம்; தளிர்த்தல்-பூரித்தல்; சிகரம்-உச்சி; வெய்யவன்-சூரியன்; பெயர்த்தும்-மீண்டும்; ஐயன்-அழகன்; மீண்டான்-சென்றுசேர்ந்தான்)

அழகனான இராமபிரானும், அச்சேனைப் பெருக்கத்தைக் கண்டவுடன் உள்ளம் மலர்ந்ததுபோல முகமும் மிக்க மகிழ்ச்சி கொண்டு, அழகிய சீதாதேவியே நேரில் வரக் கண்டவன் போல மிக்கப் பூரிப்படைந்தான். அச்சேனையைக் காணவேண்டி, தான் இருந்த மலையின் அருகில் உள்ள இன்னொரு மலையின் உச்சியின் இடத்தை அடைந்தான். அதற்குள் சூரியனின் மகனான சுக்கிரீவன், அச்சேனை இராமபிரானுக்குத் தக்க மரியாதை தரவேண்டும் என்ற எண்ணத்தில், மீண்டும் அச்சேனையின் அருகு சென்று அடைந்தான்.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பதுபோல் இராமன் உள்ளத்தில் கொண்ட மகிழ்ச்சியை அவன் முகம் பிரதிபலித்தது என்பதாம், இந்தச்சேனைகள்தான் சீதையைத் தேடிக்கண்டு பிடிக்கவேண்டிய முக்கிய கருவி. எனவே இவற்றைக் கண்டதும் சீதையைக் கண்டது போலவே மனக் கிளர்ச்சியுற்றான் என்பதாம். ''தளிர்ப்பான்'' என்ற சொல்லாட்சியும் மிக்க கருத்தாழம் மிக்கது. ஒரு தளிரின் இயல்பைக் கொண்டே, அந்த மொத்த மரத்தின் வளர்ச்சியைக் கூறிவிட முடியும். எனவே இப்பொழுது இவன்முகம் தளிர்த்ததால், இதுவரை கொண்டிருந்த சோகம் மறைந்தது என்பதும், இனிமேல் மகிழ்ச்சி விளையப்போகின்றது என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டன என்க. உயரமான இடத்தில் இருந்து பார்த்தால்தான் நீண்டதூரம் அணி வகுத்து நிற்கின்ற சேனையைப் பார்க்க இயலும் என்பதால் ஒருமலை உச்சிக்குச் சென்றான் என்பதாம். வெய்யவன் என்து வெப்பம் உடைமை பற்றிச் சூரியனுக்குக் காரணப் பெயர்.

**29. சுக்கிரீவன் படைத் தலைவர்களுடன்
இராமனிடம் வருதல்**

அஞ்சொடு ஐ இரண்டு யோசனை அகலத்தது ஆகி,
செஞ் செவே வடதிசை நின்று தென்திசை செல்ல,
எஞ்சல்இல் பெருஞ்சேனையை ''எழுக'' என ஏவி,
வெஞ்சினப் படை வீரரை உடன் கொண்டு மீண்டான். (4543)

(எஞ்சல்இல்-குறைவில்லாத; அஞ்சோடு ஐ இரண்டு-பதினைந்து; ஏவி-கட்டளையிட்டு; செஞ்செவே-நேராக)

சுக்கிரீவன், குறைவில்லாத பெரிய தன் குரக்குச்சேனையைப் பதினைந்து யோசனை அகலமுடையதாக அணிவகுத்து ''நேராக வடக்குத் திசையிலிருந்து தெற்குத் திசைநோக்கிச் செல்ல எழுக'' என்று கட்டளையிட்டுவிட்டு, கொடிய சினம் கொண்ட படைத் தலைவர்களை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு இராமன் இருக்குமிடத்திற்குத் திரும்பி வந்தான்.

ஒரு யோசனை என்பது இன்றையக் கணக்குப்படி 10மைல் அல்லது 16கிலோமீட்டர் எனக்கொள்க. அத்தகைய பெருஞ்சேனை என்பதாம். இராமபிரான் ஒரே இடத்தில் இருந்து படையின் முழுப்பரப்பையும் காணவேண்டும் என்பதற்காகப் படையை அணிவகுத்து இயக்கிச்செல்லச் சொன்னான் என்பதாம். இத்தகைய ஒரு செயலை இன்றும் நாம் அரசியல் பேரணிகளில் காண்பதை நினைவிற்கொள்க. அது தலைவர்க்குப் பணிவு காட்டும் முறை என்பதாம்.

30. சுக்கிரீவன், இராமனுக்குப் படைப்பெருக்கம்காட்டுதல்

மீண்டு, இராமனை அடைந்து ''இகல் வெென்றி வேல்வீர!
காண்டிர்!'' என வரன்முறை தெளிவுறக் காட்டி,
ஆண்டு இருந்தனன்; ஆர்த்து உருத்து எழுந்ததை அன்றே
ஈண்டு சேனை, பால் எறிகடல் நெறி படர்ந்தென்ன. (4544)

(இகல்-மாறுபாடு; காண்டிர்-காண்பீராக; நெறி-வழி; படர்தல்-நடத்தல்; உருத்து-சினம்கொண்டு; எறிதல்-அலைவீசுதல்; ஈண்டு-திரண்டிருக்கின்ற)

சுக்கிரீவன் மீண்டும் இராமனை அடைந்து ''பகைமையில் மாறுபாடு கொண்டவனும், அதில் வெற்றிபெறும்வேற்படையையும் உடைய வீரனே! இப்படைப் பெருக்கத்தைக் காண்பாயாக!'' என்று கூறி, அவற்றினை முறைப்படி தெளிவாகச் சுட்டிக் காட்டி அவனுடன் இருந்தான். அப்பொழுது திரண்டிருந்த சேனை, அலை வீசுகின்ற பாற்கடல் எழுந்து ஒருவழியில் நடந்து செல்லுவதைப்போல முழக்க மிட்டுக் கொண்டு, கோபமும் உடன் கொண்டு, அணிவகுத்துச் சென்றது.

''வரன்முறை தெரிவுறக் காட்டி" என்பது, ஒவ்வொரு சேனையும் எவ்வளவு பேர் கொண்டது, எங்கிருந்து வந்தது, அதன் தலைவர் யார், அவர்கள் ஒவ்வொருவருடைய ஆற்றலும் எத்தகையது என்பதை விபரமாகத் தெளிவுபடுத்தி, என்று பொருள்படும். வெண்ணிற அலைகளையுடைய பாற்கடல் நடந்து செல்வதைப் போன்றிருந்தது என்பதும், அவர்கள் எழுப்பிய ஆரவாரத்திற்குக் கடலின் முழக்கத்தை உவமை கூறியதும் மிகவும் பொருத்தமானது என்பதாம்.

31. படையின் அணிவகுப்பால் புழுதி எழுதல்

எட்டுத்திக்கையும் இருநிலப்பரப்பையும், இமையோர்
வட்ட விண்ணையும், மறி கடல் பரப்பையும் மறைப்பத்
தொட்டுமேல் எழுந்து ஓங்கிய தூளியின் பூழி,
இட்டுச் செம்மிய நிறைகுடம் ஒத்தது இவ்வண்டம். (4545)

(இரு-பெரிய; இமையோர்-தேவர்; மறித்தல்-மடங்கிவீசுதல்; தொடுத்தல்-தழுவிப்படிதல்; தூளி-துகள்; பூழி-புழுதி; அண்டம்-உலகஉருண்டை; செம்மிய-மூடிய/நிரப்பிய; நிறைகுடம்-பூர்ண கும்பமுமாம்)

இந்தப்படைகள் அணிவகுத்துச் சென்றதால் எழுந்த புழுதியானது, உலகத்தின் எட்டுத்திசைகளையும், பெரிய நிலப்பரப்பையும், தேவர்கள் வாழுகின்ற வட்ட வடிவமான விண்ணுலகத்தையும், அலைகள் மடிந்து வீசுகின்ற ஏழுகடல்களையும் மறைக்கவும், அதன்மேல் தழுவிப் படிந்து, மேலோங்கி எழுவதுமான மண் துகளின் புழுதியால் இவ்வுலக உருண்டை, புழுதியால் நிரப்பப்பெற்ற ஒரு பூரண கும்பம்போல் தோற்றமளித்தது.

புழுதியால் நிறைந்த நிறைகுடம், தூளியால் நிரம்பிய உலக உருண்டைக்கு ஒப்பு.

32. படையின் பெருக்கம்

அத்திஒப்பு எனின், அன்னவை உணர்ந்தவர் உளரால்;
வித்தகர்க்கு இனி உரைக்கலாம் உவமை வேறு யாதோ?
பத்து இரட்டி நன் பகல் இரவு ஒருவலர் பார்ப்பார்,
எத்திறத்தினும் நடுவு கண்டிலர் முடிவு எவனோ? (4546)

(அத்தி-கடல்; வித்தகர்-அறிவுடையவர்; பத்துஇரட்டி-இருபது; திறம்-வகை; எவனோ-எப்படியோ; ஒருவுதல்-நீங்குதல்)

இச்சேனையின் மிகுதிக்குக் கடலின் பரப்பை நிகராகக் கூறலாம் என்றால், அந்தக் கடலின் எல்லையைக் கண்டறிந்தவர்கள் இருக்கிறார் கள்; ஆனால் இந்தச் சேனையின் எல்லையைக் கண்டவர் எவரும் இலர். அறிவுடைய புலவர்களுக்கு இதைக்காட்டிலும் கூறத்தக்க உவமை வேறு

ஏதேனும் இருக்கிறதா? எதுவும் இல்லை. இருபது நாட்கள் இரவும் பகலும் இடைவிடாது தொடர்ந்து பார்ப்பவர்களாகிய இராமஇலக்குவர்களால் கூட, எவ்வகையிலும், அச்சேனையின் நடுப்பகுதி வரை கூடக் கண்டு முடிக்க இயலவில்லை என்றால் அதன் எல்லையைக் காண்பது எப்படியோ? காணவே முடியாது.

அத்தி என்பது அப்தி என்று கடலைக் குறிக்கும் வடசொல்லின் திரிபு. ''பத்து இரட்டி'' என்பதற்கு இருபது நாட்கள் என்பது நேர் பொருள் அல்ல, பல நாட்கள் என்பது மறை பொருள், படையின் அளவின்மையைச் சிறப்பித்துக் கூறினார் என்க. கடலின் எல்லையைக் கண்டறிந்தவர்களும் இருக்கிறார்கள் என்று கம்பன் ஒருவன்தான் பேசுகின்றான் என்பதைக் கருதுக.

33. படையின் ஆற்றல் பற்றி இராமஇலக்குவர் உரையாடுதல்

விண்ணின், தீம்புனல் உலகத்தின் நாகரின், வெற்றி
எண்ணின், தான்அலது ஒப்பு இலன் என நின்ற இராமன்,
கண்ணின், சிந்தையின், கல்வியின், ஞானத்தின், கருதி,
அண்ணல் தம்பியை நோக்கினன், உரைசெய்வதானான். (4547)

(எண்ணுதல்-ஆராய்தல்; தீம்புனல்-இனிய நீர்நிறைந்த கடல்; நாகர்-பாதளம்; கருதி-நன்கு ஆராய்ந்து; கல்வி-நூலறிவு; ஞானம்-இயற்கை உணர்வு; அண்ணல்-பெருமையுடையவன்)

வெற்றி என்பதைப் பற்றி நன்கு சிந்தித்தால், தேவர்கள் வாழும் விண்ணுலகத்திலும் இனிய கடலால் சூழப்பெற்ற மனிதர்கள் வாழும் நிலவுலகத்திலும், நாகர்கள் வாழுகின்ற பாதாள லோகத்திலும் தனக்குத்தானே ஒப்பாவான் அல்லது வேறுயாரும் தனக்கு உவமையில்லாதவன் என்று சிறப்புடன் விளங்கும் இராமன், இச்சேனையைத் தன் புறக்கண்களால் பார்த்தான், மனம் என்னும் அகக்கண்களால் சற்று சிந்தித்தான். தான் கற்ற நூல் அறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தான்; தனக்கே இயல்பாய் அமைந்துள்ள மெய்யறிவு கொண்டு ஆராய்ந்து யோசித்துப் பார்த்தான். இவ்வாறெல்லாம் பார்த்தபின்பு, பெருமையுடையவனான தன் தம்பியை நோக்கிக் கீழ்க்கண்டவாறு கூறலானான்.

வெற்றி கொள்வதில் இராமன் மூவுலகத்தும் தனக்கு யாரும் நிகரில்லாதவன் என்பதாம்.

34. அடல்கொண்டு ஓங்கிய சேனைக்கு நாமும் நம்அறிவால்
உடல்கண்டோம்; இனி முடிஉறக்காணும் ஆறு உளதோ?
மடல் கொண்டு ஓங்கிய அலங்கலாய்! மண்ணிடை மாக்கள்
''கடல் கண்டோம்'' என்பர் யாவரே முடிவு உறக் கண்டார்? (4548)

(மடல்-இதழ்; ஓங்கிய-சிறந்துள்ள; அலங்கல்-மலர்மாலை; அடல்-வலிமை; உடல்-நடுவிடம்; முடி-தலை/எல்லை; ஆறு-வகை/வழி; மண்-நிலவுலகம்)

''இதழ்கள் நிறைந்து சிறந்து விளங்கும் மலர் மாலையணிந்தவனே! இலக்குவ! மிக்கவலிமை பெற்று விளங்கும் இச்சேனையை நாமும் நம் அறிவால், அதன் உடலாகிய நடுப் பகுதிவரைதான் காணமுடிந்தது. இதன் முடியை-எல்லையைக் காணுவதற்கு இனிவேறு ஏதேனும் வழி இருக்கிறதா? உலகத்திலுள்ள மக்கள் நாங்கள் கடலைப்பார்த்தோம் என்பார்கள் அவர்கள் கடலின் ஒருபகுதியைத்தான் பார்த்தார்களேயன்றி, கடலின் எல்லையைக் கண்டவர் யார் இருக்கிறார்கள்?'' என்றான் இராமன்.

மாக்கள் என்ற சொல் இங்கே மக்களைக் குறித்தது. கடலின் ஒருபகுதியை மட்டும் பார்த்து விட்டு எவ்வாறு நாங்கள் கடலைக் கண்டோம் என்று கூறுகிறார்களோ, அதுபோல் நாமும் இச்சேனையின் ஒருபகுதியாகிய நடுவிடம் வரைபார்த்துவிட்டு முழுவதும் பார்த்ததாக நிறைவு கொள்ள வேண்டுவதே என்றான் என்பதாம்.

35. ''ஈசன்மேனியை, ஈர்ஐந்து திசைகளை, ஈண்டு இவ்
ஆசுஇல் சேனையை, ஐம்பெரும்பூதத்தை, அறிவை
பேசும் பேச்சினை, சமயங்கள் பிணக்குறும் பிணக்கை,
வாச மாலையாய்! யாவரே முடிவு எண்ண வல்லார்?'' (4549)

(ஈசன்-கடவுள்; பிணக்கு-மாறுபாடு; ஆசு-குற்றம்)

''நறுமணம் பொருந்திய மலர்மாலையை அணிந்தவனே! இலக்குவ! கடவுளின் திரு மேனியையும், பத்துத் திசைகளையும், ஐம்பெரும் பூதங்களையும், மக்களின் அறிவின் திறத்தையும், அவர்கள் பேசுகின்ற பேச்சினையும், மதங்கள் தங்களுக்குள் ஒன்றுடன் ஒன்று கொண்டிருக்கின்ற மாறுபாட்டையும், யாரால் அறிந்து கூறமுடியும்? அவ்வாறு அறிந்து கூறக்கூடிய வல்லமை உடையவர் எவரேனும் இருக்கிறார்களோ? இல்லை. அதுபோல, இந்தக் குற்றமில்லாத சேனையின் அளவையும் யாராலும் முடிவு கண்டு அளந்து இவ்வளவுதான் என்று கூற முடியாது'' என்கிறான் இராமன்.

கடவுளுக்கு என்று ஒருதனி உடலமைப்புக் கிடையாது. அவன் எங்கும் வியாபித்து இருப்பவன். ''சர்வவியாபி'' எனவே அவன் திருமேனியை அளந்து விடமுடியாது; ஐம்பெரும் பூதங்களாகிய நீர், நெருப்பு, விண், மண், காற்று என்பனவும் உலகெங்கும் பரந்திருப்பதால் அவற்றையும் அளவிட்டுக் கூறுதலென்பது அரிது. பத்துத் திசையின் எல்லைகளையும் கண்டறிய முடியாது-விரிந்து பரக்கும் தன்மையுடையன திசைகள்; புதுப்புதுக் கருத்துக்கள் நாள்தோறும் தோன்றுவதால், கல்விக்கு இதுதான் முடிவுஎல்லை என்று யாராலும் கூறமுடியாது. ''கல்விகரையில கற்பவர் நாள்சில''. மக்கள்பேசும் பேச்சு, தொடர்ந்து பேசும் கருத்துடையதாதலின்

அதற்கும் ஒரு முடிவு காணமுடியாது. ஒவ்வொரு சமயத்திலும் மதத்திலும் உள்ள கருத்து வேறுபாடுகள் ஒன்றல்ல இரண்டல்ல அதையும் அளந்து கணக்கிட முடியாது. இவற்றைப்போலவே இச்சேனையின் அளவையும் அளந்து கணக்கிட்டு இவ்வளவுதான் என்று முடிவு கூறமுடியாது'' என்றான் இராமன் என்பதாம்.

36. இலக்குவன் கூறுதல்

''இன்ன சேனையை முடிவுற இருந்து இவண் நோக்கிப்
பின்னைக் காரியம் புரிதுமேல், நாள் பல பெயரும்;
உன்னிச் செய்கைமேல் ஒருப்படல் உறுவதே உறுதி''
என்ன, வீரனைக் கைதொழுது, இளையவன் இயம்பும். (4550)

(இன்ன-இத்தன்மையுடைய; முடிவுற-முழுவதும்; பெயர்தல்-கழிதல்; உன்னி-நினைத்து; ஒருப்படல்-மனம்ஒருமித்தல்; உறுதி-நன்மை)

''இத்தகைய சேனையின் எல்லையை முழுவதும் இங்கு இருந்து நன்கு பார்த்த பின்புதான் நம்முடைய செய்கையாகிய சீதையைத் தேடவேண்டு மென்றால், இந்தச் சேனையைப் பார்த்து முடிப்பதற்குள் பலநாட்கள் கழிந்துவிடும். எனவே இப்பொழுது நாம் செய்ய வேண்டிய காரியத்தை நன்கு எண்ணிப்பார்த்து, அதில் மனம் ஒருமித்து ஈடுபட்டு அதைச்செய்து முடிப்பதே நமக்கு நன்மை பயப்பதாகும்.'' என்று இலக்குவன் இராமனிடம் கூறிக் கைகூப்பி வணங்கினான்.

உன்னிச் செய்தல் என்பது எண்ணித்துணிக கருமம் என்பதன் சுருக்கம்; சேனையின் அளவைக் கணக்கிடுவதை விடுத்து, அச்சேனையைக் கொண்டு மேலே ஆகவேண்டியதைச் சிந்திப்பதே நன்மை பயக்கும் என்றான் இலக்குவன் என்பதாம்.

37. ''யாவது எவ்வுலகத்தினின் ஈங்கு இவர்க்கு இயலாதது
ஆவது; ஆகுவது அரியது ஒன்று உளது எனல் ஆகுமோ?
தேவ! தேவியைத் தேடுவது என்பது சிறிதால்;
பாவம் தோற்றது, தருமமேவென்றது, இப்படையால்.'' (4551)

''தேவனே! இங்கு திரண்டுள்ள வானர சேனைக்கு எந்த உலகத்திலும் எத்தகைய செயலும் இவர்களால் செய்ய முடியாது என்று கூறவே முடியாது; எல்லாச் செயல்களும் எல்லா உலகத்திலும் இவர்களுக்கு எளிமையாக முடியக்கூடியவையே. இவர்களால் செய்யமுடியாது என்று ஒருசெயல் ஏதேனும் இருக்கிறது என்று கூறமுடியுமோ? முடியாது. எனவே இவ்வீரர்களுக்குச் சீதையைத் தேடிக் கண்டு பிடிப்பது என்பது ஒரு எளிமையான, மிக அற்பமான செயல். இப்படையை நாம் பெற்றதால் பாவம் தோற்றுப்போயிற்று என்றும், தருமமே வெற்றிபெறும் என்றும் எண்ணுக'' என்றான் இலக்குவன்.

பாவம் தோற்றது என்பது அரக்கர்கள் அழிவிற்கும், தருமமே வென்றது என்பது சீதாதேவியை மீட்பதற்கும், தண்டகவன முனிவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கும், ஒரு நல்ல அறிகுறி என்பதாம்.

38. ''தரங்க நீர் எழு தாமரை நான்முகன் தந்த
வரம்கொள் பேர் உலகத்தினில், மற்றை மன்னுயிர்கள்,
உரம்கொள் மால்வரை உயிர்படைத்து எழுந்தன ஒக்கும்
குரங்கின்மாப்படைக்கு, உறைஇடப் படைத்தனன்கொல்லாம்?'' (4552)

(தரங்கம்-அலைகள்; எழுதல்-முளைத்தல்; நான்முகன்-பிரமன்; தந்த-படைத்த; வரம்-மேன்மை; மன்-நிலைபெற்ற; உரம்-வலிமை; மா-பெரிய/சிறந்த; படைத்தல்-சிருஷ்டித்தல்)

''அலைகள் வீசுகின்ற நீரையுடைய இடத்தில்தோன்றும் இயல்புடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், மேன்மைபொருந்திய இப்பெரிய உலகத்தில் படைத்த மற்ற நிலைபெற்ற உயிரினங்கள் எல்லாம், இந்த வலிமை படைத்த, ஒவ்வொரு குரங்கும் பெரிய மலை, உயிர் பெற்று எழுந்து வந்ததைப் போன்ற இந்தக் குரங்குப் படைகளின் எண்ணிக்கையை எண்ணும் போது வைக்கின்ற உறையீடு என்பது போலத் தான் படைத்தானோ?'' என்கிறான் இலக்குவன்.

வானரச் சேனையின் மிகுதி கூறப்பட்டது. உறையிடுதல் என்பது, பெரிய அளவுள்ள ஒரு பொருளைக் கணக்கிடும் பொழுது ஒவ்வொரு பொருள் தொகைக்கும் ஒவ்வொன்றாக ஏதேனும் ஒரு சிறுபொருளை வைப்பது என்பதாம். இங்கே திரண்டிருக்கின்ற வானரப்படை என்னும் பெருந்தொகையை எண்ணும்போது, ஒவ்வொரு தொகைக்கும் ஒரு சிறு தொகை பிரமதேவன் படைத்த மற்ற எல்லா உயிரினங்களையும் வைப்பது போல, மற்ற எல்லா உயிரினங்களின் அளவு, இவ்வானரச் சேனையின் அளவைவிட மிகக் குறைந்ததாகும் போலும் என்றான் இலக்குவன் என்க. பிரமன் படைத்த உயிரினங்களிலேயே குரங்குகள் தான் மிகுதி, மற்றைய எல்லா உயிரினங்களும் அவற்றிற்கு உறைபோடக் கூடக் காணாது என்பதாம். ஒவ்வொரு குரங்கும் பெரிய மலைபோன்ற உருவமுடையது என்பதும் கூறப்பட்டது. உறை என்பது பெரிய எண்ணைக் குறிப்பிட அடையாளமாக வைக்கும் சிறு பொருள் என்க.

39. ''ஈண்டு தாழ்க்கின்றதுஎன்? இனி எண்திசை மருங்கும்
தேண்டுவார்களை வல்லயில் செலுத்துவது அல்லால்?
நீண்ட நூல்வலாய்!'' என்றனன் இளையவன்; நெடியோன்
பூண்டதேரவன் காதலற்கு ஒரு மொழி புகலும். (4553)

(நீண்ட-பெரிய/பெருமைவாய்ந்த; மருங்கு-பக்கம்; தேண்டுவார்-தேடுபவர்கள்; வல்லையில்-விரைவாக; தாழ்கின்றது-தாழ்த்துவது; பூண்ட-பூட்டப்பெற்ற; புகல்தல்-சொல்லுதல்; நெடியோன்-உயர்ந்தவன்/பெருமைமிக்கவன்)

''பெருமைவாய்ந்த பெரிய நூல்கள் எல்லாம் கற்றறிந்த வல்லவனே! எட்டுத்திசைகளின் பக்கமெல்லாம், சீதையைத் தேடுவதற்குரியவரான இவ்வானரச் சேனையினரை விரைவில் அனுப்புவதை விட்டு விட்டு, இங்கு உட்கார்ந்து கொண்டு இன்னும் காலம் தாழ்த்துவது எதற்காக?'' என்று இலக்குவன் கேட்டதும் பெருமையிற் சிறந்த, உயர்ந்தவனான இராமபிரான், ஒற்றையாழியை உடைய ஏழுபச்சைக் குதிரைகள் பூட்டப் பெற்ற தேரில் உலவுபவனான சூரியனின் மைந்தனாகிய சுக்கிரீவனுக்கு ஒருவார்த்தை சொல்லலானானன்.

இதுவரைவானரப்படைவந்துசேரவில்லை எனவேகாலந்தாழ்த்தியது சரியானதே. அவை வந்த பின்பும் காலம் தாழ்த்துவது சரியல்ல, விரைவில் செயல்படவேண்டும் என்பது இலக்குவன் கருத்து. இங்கே ''நெடியோன்'' என்றது திரிவிக்ரம அவதாரத்தில் ஓங்கி உலகளந்த உத்தமன் என்று கொள்ளலும் பொருந்தும். சூரியன் ஒருபோதும் ஓய்வெடுத்துக் கொள்ளாதவன். எனவே அவனது தேர் எப்பொழுதும் குதிரைகள் பூட்டப்பட்டுத் தயார்நிலையில் இருக்கும். இதைக்குறிக்கவே ''பூண்ட தேர்'' என்றார் என்க.

தானை காண் படலம் நிறைவுற்றது

12. நாட விட்ட படலம் [73 பாடல்கள்]

தானை கண்டு முடித்த பின்னர், இராமன் கட்டளைப்படி, சுக்கிரீவன், சீதையைத் தேடிக் கண்டு பிடிக்குமாறு, தன் வானரச் சேனைகளை நான்கு திசைகளுக்கும் செல்லவிட்ட நிகழ்ச்சியைக்கூறும் பகுதி எனவிரியும். இது 73 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''நாடலைப் படலம்'' என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

இப்படலத்துள், இச்சேனையின் எண்ணிக்கை பற்றி இராமன் சுக்கிரீவனிடம் கேட்டல்; இனி நடக்க வேண்டுவன பற்றி இருவரும் சிந்தித்தல்; சுக்கிரீவன் அனுமனைப் புகழ்ந்து, அங்கதன், ஜாம்பவான் முதலியோருடன் அனுமனைத் தென்திசைக்கு அனுப்புதல்; மற்ற மூன்று திசைகளுக்கும் படைத்தலைவர்களுடன் வானரச் சேனையை அனுப்புதல்; எல்லாச் சேனைகளுக்கும் அவை போகவேண்டிய வழியையும், ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்து விடவேண்டும் என்ற கட்டளையையும் இடுதல்; இராமன் அனுமனைத் தனியே அழைத்து, சீதையின் அங்க அடையாளங்களைப் பாதாதி கேசம் வரை விவரித்தல்; மேலும் சில அடையாளச் செய்திகளையும் கூறுதல்; பின்னர் தன் மோதிரத்தைத் தந்து அவளிடம் காட்டுமாறு கூறி, விடைகொடுத்து அனுப்புதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராமன் படைஅளவு பற்றி விசாரித்தல்.

''வகையும், மானமும், மாறு எதிர்ந்து ஆற்றுறும்
பகையும் இன்றி, நிரந்து, பரந்து எழு
தகைவுஇல் சேனைக்கு, அவதி அமைந்தது ஓர்
தொகையும் உண்டு கொலோ?'' எனச் சொல்லினான். (4554)

(வகை-பிரிவுகள்; நிரந்து-திரண்டு; தகைவு-தடுத்தல்; அவதி-எல்லை; தொகை-அளவு; மானம்-உடற்பற்று; சொல்லுதல்-வினவுதல்;

''பல தொகுதிகளாகப் பிரிந்தும், தம் உடற்பற்று இன்றியும், தங்களுக்குள் கருத்து மாறுபாடு கொண்டு ஒருவர்க்கொருவர் எதிர்த்தும் போர் புரிந்து கொள்ளும் விரோத மனப்பான்மையும் இல்லாது, திரண்டு, வரிசையாக, விரிந்து அணிவகுத்து நிற்கின்ற, பிறரால் தடுத்தற்கும், அழித்தற்கும் ஏலாத இந்தப் பெரும் சேனைக்கு எல்லை என்று

சொல்லக்கூடிய ஒரு எண்ணிக்கை அளவும் இருக்கிறதோ?'' என்று இராமன் சுக்கிரீவனை நோக்கிக் கேட்டான்.

மானம் என்பது இங்கே செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் இயல்பாகிய உடல் பற்று இன்மையைக் குறித்தது என்க. இப்படையின் அளவை அறிந்துகொள்ள விரும்பினான் இராமன்; காரணம் பல நாட்களாகப் பகலும் இரவும் விடாது தொடர்ந்து பார்த்தும் அவர்களால் நடுப்பகுதி வரைகூடக் காணஇயலவில்லை அல்லவா? எனவே இவ்வாறு கேட்டான் என்பதாம்:

2. சுக்கிரீவன் அளவு கூறுதல்

''ஏற்றவெள்ளம் எழுபதின் இற்ற'' என்று
ஆற்றலாளர் அறிவின் அமைந்தது ஓர்
மாற்றம் உண்டு; அது அல்லது, மற்றும் ஓர்
தோற்றம் என்று, இதற்கு எண்ணும் முன் சொல்லுமோ?''(4555)

(இற்ற-அமைந்துள்ளது; மாற்றம்-சொல்; ஏற்ற-தகுதிபெற்ற)

''இந்தத் தகுதிபெற்ற சேனையின் அளவு எழுபது வெள்ளமாய் அமைந்திருக்கிறது என்று முன்பு கணக்கிடுதலில் வல்லவர்களான அறிஞர்களால் ஆராய்ந்து சொல்லப்பட்ட சொல் ஒன்று உண்டு; அதைத்தான் நம்ப வேண்டும். அதைத்தவிர, இதனுடைய தோற்றத்தை வைத்து, இதை எண்ணிப்பார்த்துக் கூற முடியும் என்று சொல்ல முடியுமோ? முடியாது'' என்றான் சுக்கிரீவன்.

முன்பு ஆராய்ந்து தெளிந்தவர்கள் இதனை எழுபது வெள்ளம் கொண்ட சேனை என்று கூறியிருக்கிறார்கள். இதனை நேராக யாரும் இதுவரை கணக்கிட்டதில்லை; அவ்வாறு கணக்கிடுதலும் இயலாது என்பது சுக்கிரீவனின் மறுமொழி என்க. இது வெறும் மதிப்பீடேயன்றி, சரியாக எண்ணிக் கூறியதல்ல என்பதையும் எண்ணுக. ஆனால் காப்பியப் போக்கில் எல்லா இடங்களிலும் இதன் அளவு எழுபது வெள்ளம் என்றே குறிக்கப்பட்டிருப்பதையும் நினைவிற் கொள்க. உண்மையில் இது எழுபது வெள்ளத்திற்கு மேலும் இருக்க வேண்டும் என்பது சுக்கிரீவனின் குறிப்பு.

3. நீலனை அறிமுகப்படுத்துதல்

''ஆறு பத்து ஏழு கோடி அனீகர்க்கு
ஏறு கொற்றத் தலைவர் இவர்க்கு முன்
கூறு சேனைப் பதி, கொடுங் கூற்றையும்
நீறு செய்திடும் நீலன்'' என்று ஓதினான். (4556)

(கூறு-சொல்லப்படும்; சேனைப்பதி-சேனாதிபதி; நீறு-துகள்; அனிகர்-வானரப் படைத்தலைவர்; ஏறு-சிறந்த)

''இந்த எழுபது வெள்ளம் வானரச்சேனைக்கும் அறுபத்து ஏழு கோடிப் பேர் படைத் தலைவர்கள்; இத்தகைய சிறந்த வெற்றியை உடைய படைத்தலைவர்க்கெல்லாம் முதன்மையாகக் கூறப்படுகின்ற சேனாதிபதி, நீலன் என்பவன்; அவன் மற்றவர் உயிரைக்கவரும் இயல்புடைய இயமனின் உயிரையும் கவர்ந்து, எரித்துச் சாம்பலாக்கும் ஆற்றல் பெற்றவன்''.

4. இனிச் செய்ய வேண்டியது பற்றி இராமன் கூறுதல்

என்று உரைத்த எரி கதிர் மைந்தனை
வென்றி விற்கை இராமன், விருப்பினால்
''நின்று இனிப் பல பேசி என்னோ? நெறி
சென்று இழைப்பன சிந்தனை செய்க'' என்றான். (4557)

(எரிகதிர்-சூரியன்; நெறி-வழிகள்; இழைப்பன-செய்ய வேண்டியன; விருப்பு-அன்பு; நின்று-தாமதித்து.)

எப்போதும் வெற்றியையே விளைவிக்கும் கோதண்டம் என்னும் வில்லைக் கையில் ஏந்திய இராமபிரான், வெப்பம் மிகுந்து சுடுகின்ற கிரணங்களையுடைய சூரியனின் புதல்வனான சுக்கிரீவன், இவ்வாறு கூறியபின், அவனைக் கனிவுடன் நோக்கி, ''இங்கே நின்று இனிமேல் பலவற்றையும் பேசிக் கொண்டு காலம் தாழ்த்துவதால் என்ன பயன் விளையப்போகிறது? எனவே இனி மேலும் செய்ய வேண்டுவனவாகிய, சீதையைத் தேடும் முயற்சியில் ஈடுபடும் வழியினைச் சிந்தனை செய்க'' என்று கூறினான்.

5. சுக்கிரீவன், அனுமனிடம் கூறுதல்

அவனும், அண்ணல் அனுமனை ''ஐய! நீ,
புவனம் மூன்றும், நின் தாதையின் புக்கு உழல்
தவன வேகத்தை ஓர்கிலை; தாழ்த்தனை;
கவன மாக்குரங்கின் செயல் காண்டியோ?'' (4558)

(அண்ணல்-பெருமைபொருந்தியவன்; புவனம்-உலகம்; தாதை-தந்தை; உழல்தல்-திரிதல் தவன-மிக்க; ஓர்தல்-உணர்தல்; கவனம்-வேகம்)

சுக்கிரீவனும், பெருமை பொருந்திய அனுமனை நோக்கி, ''அன்பனே! நீ ஒருவனே மூவுலகங்களிலும் உன் தந்தை வாயு தேவனைப் போலச் சென்று திரிந்து சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கும் மிக்க வேகத்தை உடையவன்; உன்னுடைய ஆற்றலை நீ உணர்ந்தாய் அல்லை; எனவே

கால தாமதம் செய்து இங்கேயே இன்னமும் நின்று கொண்டிருக்கின்றாய்; மற்ற பெரிய வேகமுடைய குரங்குகள் எல்லாம் என்ன செய்யப்போகின்றன என்று காண்பதில் ஆர்வம் கொண்டு நிற்கின்றாயோ?'' என்று கேட்டான் சுக்கிரீவன்.

வாயு தேவனின் புதல்வனாகிய அனுமன், தன் தந்தையைப் போன்றே இம் மூவுலகங்களுக்குள்ளும் புகுந்து சீதையைத் தான் ஒருவன் தனியாகவே தேடிக் கண்டு பிடிக்கும் ஆற்றல் உடையவன் என்பதும், அவன் அவ்வாறு விரைந்து செல்லாதிருப்பது சரியன்று என்பதும் சுக்கிரீவன் கருத்து என்பதாம். இங்கே ஒரு கருத்து, முன்னொரு காலத்தில் இவ்வனுமன், முனிவர்கள் நிறைந்த ஆசிரமத்துள் சென்று அவர்களுக்கு இடையூறுகள் செய்தான் என்றும், இவனுடைய ஆற்றலையும், ஒழுக்கத்தையும், கல்வியறிவையும், தெய்வங்களிடமிருந்து பெற்ற வரங்களையும் அறிந்திருந்த அம்முனிவர்கள், அவனை ஏதும் செய்யாது, இவனுடைய பலத்தை அவன் அறியாமல் போகக் கடவது என்று மட்டும் சபித்து விட்டார்கள் என்றும் ஒரு புராணக் குறிப்புக் கூறுகிறது. அதனால்தான் அனுமன் தன் வலிமையையும், ஆற்றலையும் உணராது இருந்தான் என்பதாம்.

6. ''ஏகி, ஏந்திழை தன்னை, இருந்துழி
நாகம் நாடுக; நானிலம் நாடுக;
போகபூமி புகுந்திட வல்ல நின்
வேகம் ஈண்டு வெளிப்பட வேண்டுமால்.'' (4559)

(ஏந்திழை-அணிகலன்களை அணிந்த சீதை; வழி-இடம்; நாகம்-நாகர் உலகம்/பாதாளம்; நானிலம்-நிலவுலகம்; போகபூமி-சுவர்க்கலோகம்; ஈண்டு-இப்பொழுது;)

சுக்கிரீவன் அனுமனை நோக்கி ''இங்கிருந்து, சென்று அணிகலன்கள் அணிந்தவளாகிய சீதாதேவி இருக்கும் இடத்தை, நாகர்கள் வாழுகின்ற பாதாளலோகத்தில் சென்று தேடுவாயாக. அங்கு இல்லையென்றால் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்று நான்காகப் பகுக்கப்பட்ட மக்கள் வாழுகின்ற, இந்நிலவுலகத்தில் தேடுவாயாக. அங்கும் காணப்படவில்லையென்றால் போக பூமியாக சுவர்க்கலோகம் எனப்படும் தேவர்கள் வாழுகின்ற இடத்திற்கும் உன் வலிமையால் செல்ல முடியும். அந்த வேகத்தை இப்பொழுது இங்கு உள்ள எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டும்; அங்கும் சென்று தேடுக'' என்றான்.

அனுமன் தனக்குள்ள முழு ஆற்றலையும், சீதையைத் தேடுவதில் வெளிப்படுத்த வேண்டும் என்பது சுக்கிரீவன் கருத்து. எனவே மூன்று உலகங்களிலும் சென்று சீதா தேவியைத் தேடிக் கொணர்க என்றான் என்பதாம். போகபூமி என்பது, உயிரினங்கள் செய்த புண்ணியங்களால், அவர்கள் வாழ்வின் முடிவில் சென்று இன்பம் துய்க்கும் சுவர்க்க லோகம்

எனப்படும் என்க. நிலவுலகம் நாம் இயற்ற வேண்டிய கடமைகளை ஆற்ற வேண்டிய இடம் என்பதால் கர்மபூமி என்று வழங்கப்படும்.

7. ''தென்திசைக்கண் இராவணன் சேண் நகர்
என்று இசைக்கின்றது என் அறிவு இன்னணம்;
வன் திசைக்கு இனி, மாருதி நீ அலால்
வென்று, இசைக்கு உரியார் பிறர் வேண்டுமோ?'' (4560)

(சேண்-உயர்ந்த; இன்னணம்-இவ்வண்ணம்; இசைக்கின்றது-சொல்லுகின்றது; வன்-வலிய; இனி-இப்பொழுது; இசை-புகழ்; மாருதம்-காற்று; மாருதி-காற்றின் மைந்தன்/வாயு தேவன் புதல்வன்/அனுமன்; அறிவு-நினைவு)

''தெற்குத்திசையில்தான் இராவணனின் நீண்ட உயர்ந்த இலங்காபுரி இருக்கிறது என்று என்னுடைய அறிவு கூறுகின்றது. அதுதான் எனக்கு நினைவும் கூட. எனவே அந்த வலிய தென் திசைக்குச் செல்லும் ஆற்றல், உன்னிடம் மட்டும் தான் இருக்கிறது. எனவே, அனுமனே! நீ மட்டும், அங்குசென்று, அரக்கரோடு போரிட்டு வெற்றிபெற்று, புகழோடு திரும்பிவருவாய்: இதற்கு உனக்கு வேறு ஒருவர் துணையும் வேண்டுவதோ?'' என்றான் சுக்கிரீவன்.

தென்திசையை வன்திசை என்று கூறியதற்குக் காரணம் அங்கு வலிய அரக்கனாகிய இராவணன் ஆட்சி புரிகிறான் என்பது மட்டும் அன்று. தெற்குத் திசையில் தான், எல்லா உயிரையும் கவரும் இயல்புடைய வன்னெஞ்சனான இயமனும் காவல் காத்து நிற்கிறான் என்பதுவுமாம்.

8. ''வள்ளல் தேவியை வஞ்சித்து வவ்விய
கள்ள வாள் அரக்கன் செலக் கண்டது,
தெள்ளியோய்! அது தென் திசை என்பது ஓர்
உள்ளமும் எனக்கு உண்டு என உன்னுவாய்'' (4561)

(தேவி-மனைவி; வவ்வுதல்-கவர்ந்து செல்லுதல்; உன்னுதல்-கருதுதல்; உள்ளம்-நினைவு/எண்ணம்.)

''தெளிந்த அறிவை உடையவனே! வள்ளல் தன்மை வாய்ந்த நம் இராமபிரானின் மனைவியாகிய சீதாதேவியை மாய வஞ்சனையால் கவர்ந்துசென்ற, அந்தக் கள்ளத்தனம் கொண்ட கொடிய அரக்கனான இராவணன், வான வீதியில் செல்லும் போது நாம் கண்டது அவன் தெற்குத் திசையில் போனதாகத்தான் எனக்கு ஒரு நினைவு இருக்கிறது. இதனையும் நீ மனதில் கொள்வாயாக!'' என்றான் சுக்கிரீவன்.

தனக்கு வாலியிடமிருந்து கிட்கிந்தை அரசையும் தன் மனைவி உருமையையும் மீட்டுத் தந்ததால் இராமனை ''வள்ளல்'' என்றான் சுக்கிரீவன் என்பதாம்; ''கண்டது'' என்பது இங்கு சீதாதேவி அணிகலன்களை ஒரு சேலைத் தலைப்பில் முடிந்து கிழே வீசி

எறிந்ததையும், அதைத் தாங்கள் பிடித்துக் கொண்டதையும் குறிக்கும் என்க. முன்பாடலில் ''அறிவு இசைக்கின்றது'' என்று கூறிய கவிஞன், இப்பாடலில் ''என்பது ஓர் உள்ளமும் எனக்கு உண்டு'' என்று அறிவையும், நினைவையும் ஒருங்கே கூறிய நயம் நோக்குக.

9. ''தாரை மைந்தனும், சாம்பனும், தாம் முதல்
வீரர் யாவரும், மேம்படும் மேன்மையால்,
சேர்க நின்னொடும்; திண்திறல் சேனையும்
பேர்க வெள்ளம் இரண்டொடும் பெற்றியால்'' (4562)

(தாரை மைந்தன்-அங்கதன்; வெற்றி-பெருமை; பேர்க-புறப்படுக;)

சுக்கிரீவன் அனுமனை நோக்கி, தாரையின் புதல்வனாகிய அங்கதனும், கரடிகளின் தலைவனான சாம்பவனும், ஆகிய வீரர்கள் பலரும், மற்றை வீரர்களிலும் இவர்கள் மேம்பட்டு விளங்குவதால் உன்னுடன் சேர்ந்து வரட்டும்; மேலும் மிக்க வலிமையுடைய இரண்டு வெள்ளம் குரங்குப் படையையும் பெருமையுடன் உன்னுடன் அழைத்துக் கொண்டு செல்வாயாக!'' என்றான்.

சாம்பன்-சாம்பவான்-ஜாம்பவன்; இவன் கரடிகளுக்குத் தலைவன். பிரமபுத்திரன்; மிகவும் பழையவன். தொன்று தொட்டு வாழ்ந்து வருபவன். இவன் வயது யாராலும் நிர்ணயிக்க முடியாதது. எனவே ''மேம்படும் மேன்மையால்'' என்றார் என்க. அனுமனோடு அங்கதனும், சாம்பவனும், இரண்டு வெள்ளம் குரங்குச் சேனையும் செல்லுமாறு, சுக்கிரீவன் கட்டளை இட்டான் என்பதாம். இவர்களோடு, சுகோத்திரன், சராரி, சரகுல்மன். கஜன், கவாட்சன், கவயன், சுடேணன், இடபன், மயிந்தன் முதலியோரையும் அனுப்பினான் என்று வான்மீகம் கூறும்.

10. மற்ற திசைகளுக்கும் அனுப்புதல்

''குடதிசைக்கண் சுடேணன்; குபேரன் வாழ்
வடதிசைக்கண் சதவலி; வாசவன்
இடதிசைக்கண் வினதன்; விறல்தரு
படையோடு, உற்றுப் படர்க'' எனப் பன்னினான். (4563)

(குடதிசை-மேற்கு; வாசவன்-இந்திரன்/வசுக்களுக்குத் தலைவன்; இடதிசை-கிழக்கு; விறல்-வெற்றி; உற்று-பொருந்தி; படர்தல்-செல்லுதல்; பன்னுதல்-கூறுதல்)

''மேற்குத்திசையில் சுடேணன் என்னும் படைத்தலைவனும், இந்திரன் வாழ்கின்ற கிழக்குத் திசையில் வினதன் என்னும் படைத்தலைவனும், வெற்றியைத் தருகின்ற இரண்டிரண்டு வெள்ளம் என்று சொல்லப்படு

கின்ற வானரச் சேனைகளோடு பொருந்திச் செல்லுக'' என்று ஒவ்வொரு தலைவரிடமும் தனித்தனியாகச் சொன்னான் சுக்கிரீவன்.

சுடேணன் என்பவனை இடபன் என்றும் அழைப்பர். குபேரன் விச்சிரவசுவின் மூத்த மனைவியின் மகன். பெருநிதியங்களுக்கு அதிபதி. கம்பன் ஒரே பாடலில் கூறிய இக்கருத்தை, வான்மீகி மிக விரிவாகப் பேசுகின்றார். அவர்கள் செல்ல வேண்டிய வழிகளை எல்லாம் கூட மிக விரிவாக விவரிக்கின்றார் வான்மீகி என்பதறிக.

11. ''வெற்றி வானர வெள்ளம் இரண்டொடும்
சுற்றி ஓடித் துருவி, ஒருமதி
முற்றுறாத முன், முற்றுதிர் இவ்விடை;
கொற்ற வாகையினீர்!'' எனக் கூறினான். (4564)

(கொற்றம்-வெற்றி; துருவி-தேடிப்பார்த்து; சுற்றுதல்-திரிதல்; ஓடுதல்-விரைந்து செல்லுதல்; மதி-மாதம்; முற்றுறுதல்-முடிதல்; இடை-இடம்; முற்றுதல்-அடைதல்.)

''வெற்றிக்கே உரிய வாகை மாலையைச் சூடுவதற்குத் தகுதியானவர்களே! நீங்கள் வெற்றி பொருந்திய குரங்குப் படைகள் இரண்டிரண்டு வெள்ளம் சேனைகளை உடன் அழைத்துக் கொண்டு, இம்மூன்று திசைகளிலும் நன்கு விரைந்து சென்று திரிந்து சீதாதேவியைத் தேடிக் கண்டு பிடித்து, ஒருமாதம் நிறைவுறுவதற்கு முன்பாக இவ்விடத்தை வந்து சேர்ந்துவிட வேண்டும்'' என்று கட்டளையிட்டான் சுக்கிரீவன்.

ஒவ்வொரு படைத்தலைவரும் தன்னுடன் இரண்டு வெள்ளம் வானரச் சேனையை அழைத்துச் செல்ல வேண்டும் என்பதும், ஒருமாத காலம் முடிவதற்குள் மூன்று திசைகளிலும் நன்கு துருவித் தேடிப்பார்த்துச் சீதையைக் கொண்டுவந்து இவ்விடத்தில் சேர்ப்பிக்க வேண்டும் என்பதும் சுக்கிரீவனின் கட்டளை என்பதாம். சந்திரனை அடிப்படையாக வைத்தே பருவங்கள் கணக்கிடப் படுவதால் ஒரு மாதத்தை ஒரு மதி என்றார் என்க. ''கொற்றவாகையினீர்'' என்று இப்பொழுதே புகழ்ந்து கூறியது அவர்களை உற்சாகப் படுத்த என்க.

12. தென்திசையில் செல்வோர்க்கு வழி கூறுதல் – [21 பாடல்கள்] விந்தமலை

''ஈண்டு நின்று எழுந்து, ஈர் ஐந்து நூறு எழில்
தூண்டு சோதிக் கொடுமுடி தோன்றலால்,
நீண்ட நேமிகொலாம் என, நேர்தொழ
வேண்டும் விந்த மலையினை மேவுவீர்.'' (4565)

(எழுந்து-புறப்பட்டு; தூண்டுதல்-பெருகுதல், சோதி-ஒளி; ஈர்ஐந்துநூறு-ஆயிரம்; கொடுமுடி-சிகரங்கள்; நேமி-திருமால்; மேவுதல்-சென்று சேர்தல்/அடைதல்; ஈண்டு-இங்கு)

தென்திசை நோக்கிச் செல்ல இருக்கும் வானர வீரர்களைப் பார்த்துச் சுக்கிரீவன், ''நீங்கள் இங்கிருந்து புறப்பட்டு, அழகு மிகுந்து ஒளி வீசுகின்ற ஆயிரம் சிகரங்களையுடைய விந்திய மலையினை முதற் கண் அடையுங்கள். அது ஆயிரம் சிகரங்கள் கொண்டிருப்பது, அது ஆயிரம் முடிகளையுடைய, பெரிய சக்கரப்படையை ஏந்திய திருமாலை, நேர் நின்று தொழ வேண்டும் என்பன போன்ற எண்ணத்தை உங்களுக்கு ஏற்படுத்தும். முதலில் அங்கே சென்றடையுங்கள்'' என்றான்.

ஆயிரம் சிகரங்களையுடைய விந்திய மலைக்கு ஆயிரம் முடிகளையுடைய திருமால் உவமை. ஆயிரம் முடிகளை உடைய திருமாலை ''சகஸ்ர சீர்ஷாபுருஷ'' என்று புருஷஸூக்தம் கூறுவதையும் நினைக. மகாபாரதத்தில் கண்ணபிரான் அர்ஜுனனுக்குத் தன் விஸ்வரூபத்தைக் காட்டும்போது ''தோள்கள் ஆயிரத்தாய், முடிகள் ஆயிரத்தாய், கண்ணி முடிச்சிகரம் ஆயிரத்தாய்'' என்று வருணிக்கப்படுவதையும் ஒப்பு நோக்குக ''நீண்ட நேமி'' என்பது ஓங்கி உலகளந்த உத்தமனது திரிவிக்கிரம அவதாரத் தோற்றத்தைக் குறிக்கும் என்க. இந்த விந்திய மலைதான் சூரியன், சந்திரன் போக்கிற்குத் தடையேற்படுத்தியது என்றும், அதனை அகத்தியர் அடக்கி வைத்தார் என்றும் புராணங்கள் கூறும். திருமால் கையில் கொண்டுள்ள சுதர்சனம் என்னும் சக்கரத்திற்கும் ஆயிரம் ஆரங்கள் உண்டு என்றும் கூறுவர்.

13. நருமதை ஆறு

"தேடி, அவ்வரை தீர்ந்தபின், தேவரும்
ஆடுகின்றது, அறுபதம் ஐந்தினைப்
பாடுகின்றது, பல் மணியால் இருள்
ஓடுகின்ற நருமதை உன்னுவீர்." (4566)

(தீர்தல்-முடிதல்; அறுபதம்-ஆறுகால்களையுடைய வண்டுகள்; ஐந்து-பஞ்சமம் என்னும் சுரம்; உன்னுதல்-நினைத்துச் சேருதல்)

''இவ்வாறு விந்திய மலையில் தேடிப் பார்த்து முடித்த பிறகு, தேவர்களும் விரும்பி வந்து நீராடுகின்றதும், அருவியிலிருந்து அடித்துவரும் மலர்களில் உள்ள தேனைப்பருகியதால் களிப்படைந்து ரீங்காரம் இடும் ஆறுகால்களை உடைய வண்டினங்கள், ஐந்தாவது சுரமான பஞ்சமம் என்ற சுரத்தில் ரீங்காரம் இட்டுப் பாடுவதும், பலவகை நவரத்தினங்களால் தோன்றுகின்ற ஒளியில் இருள் போக்குகின்ற இயல்புடையதுமான நருமதை நதியினைக் கருதி அங்கு சென்று சேருங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

நருமதை என்பது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பாயும் ஒரு நதி. இது ஏழு புண்ணிய நதிகளுள் ஒன்று. இதுபோலக் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பாயும் மற்றொரு நதி தபதி என்பர். இதில் தேவர்கள் நீராடுதலால் தூய்மையும், வண்டுகள் ரீங்காரம் இடுதலால் இனிமைச் சூழலும், நவரத்தினங்களின் ஒளியால் இருள் ஓடிப்போகின்றது என்பதனால் செல்வ வளமும் கொண்டது என்பதும் புலப்படுத்தப்பட்டது என்க. ''அறுபதம் ஐந்தினைப் பாடுகின்றது'' என்ற சொல்நயம் உணர்க.

இசைக்குரிய ஏழு சுவரங்களாவன. சட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், என்பனவாம். இவற்றுள் ஐந்தாவதும் மிக இனியதுமான சுரம் பஞ்சமம் எனப்படும் என்க. ''பல்மணியால் இருள் ஓடுகின்ற நருமதை'' என்ற சொற்றொடரைப் பெரியபுராணத்திலும்காணலாம். பாடல்பகுதி இது. ''மந்திகள்முழையில் வைத்த மணி விளக்கு ஒளிகளாலும், எந்தையார் திருக்காளத்தி மலையினில், இரவு ஒன்றில்லை'' என்பது பெரிய புராணம்.

14. ஏம கூட மலை

''வாம மேகலை வானவர் மங்கையர்
காம ஊசல் களி இசைக் கள்ளினால்
தூம மேனி அசுணம் துயில்வுறும்
ஏம கூடம் எனும் மலை எய்துவீர்.'' (4567)

(வாமம்-அழகு; காமம்-விருப்பு; தூமம்-புகை; ஏமம்-பொன்; கூடம்-சிகரம்)

''அழகிய; மேகலை என்னும் ஆபரணத்தையும், மேலாடையையும் அணிந்த தேவ மகளிர், மிக விருப்புடன் ஊஞ்சல் ஆடும் போது, மதுவின் மயக்கத்தால் மகிழ்ச்சியால் பாடுகின்ற, புகை போன்ற கரிய மேனியையுடைய அசுணம் என்னும் விலங்கு தூங்குவதற்கு இடமான ஏம கூடம் என்னும் மலையை அடைவீர்களாக'' என்றான் சுக்கிரீவன்.

அசுணம் என்பது இசையறியும் ஒரு விலங்கு என்றும் ஒரு பறவையினம் என்றும் கூறுவர். இசைபாடும் பொழுது இது மயங்கி உறங்கும் என்றும் அப்போது இதனைக் கைப்பற்றி விடுவர் என்றும் கூறுவதுண்டு. நல்லிசைக்குத்தான் மயங்கும் என்றும், வல்லிசையைக் கேட்டால் உடனே உயிர்துறக்கும் என்றும் கூறுவது உண்டு. ஏமகூடம் என்பது பொன்நிறமான சிகரங்களையுடைய மலை என்ற பொருளைத் தரும். இது எட்டுக்குல மலைகளுள் ஒன்று.

15. வட பெண்ணை ஆறு

''நொய்தின் அம்மலை நீங்கி, நுமரொடும்
பொய்கையின் கரை பிற்படப் போதிரால்;

செய்ய பெண்ணைக் கரிய பெண்ணைச் சில
வைகல் தேடிக் கடிது வழிக் கொள்வீர்.'' (4568)

(நொய்தின்-விரைவில்; நுமர்-உம் இனத்தவர்; பொய்கை-மடு; செய்ய-சிவந்த; வைகல்-சில நாட்கள்; கடிது-விரைவாக; வழிக் கொள்ளுதல்-புறப்படுதல்)

''அந்த ஏம கூட மலையிலிருந்து விரைவாக அகன்று, உங்கள் வானர வீரர்களுடன் அதையடுத்த தடாகத்தின் கரை பின்னாகும்படி அப்பால் செல்லுங்கள்; அங்கே சிவந்த நிறமுடைய சீதாதேவியை, கரிய நிறமுடைய தெளிந்த நீரையுடைய வட பெண்ணை ஆற்றங்கரையில் சில நாட்கள் தேடிப்பார்த்துவிட்டு, பின்னர் விரைவாகப் புறப்பட்டு, மேலே செல்லுங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

ஏம கூடத்தில் தேவமாதர்கள் நீராடி, ஊஞ்சலாடிப் பாடிக் களித்திருப்பதனால் அங்கே அரக்கனான இராவணன் சீதையைச் சிறைவைத்திருக்க மாட்டான் என்பதாலும், அந்தச் சூழ்நிலையில் குரங்கினங்களாகிய வீரர்கள் இன்பம் துய்க்கத் தங்கிவிடக் கூடாது என்பதாலும், அம்மலையை விட்டு விரைவில் நீங்குமாறு சொல்லுகிறான் சுக்கிரீவன் என்க. ''செய்ய பெண்ணைக் கரிய பெண்ணை'' என்ற முரண் தொடையின் நயம் நோக்குக.

16. தண்டக வனம்

''தாங்கும் ஆர் அகில் தருவளர் சந்தனம்,
வீங்குவேலி விதர்ப்பமும், மெல்லென
நீங்கி, நாடு நெடியன பிற்படத்
தேங்கு வார்புனல் தண்டகம் சேர்திரால்'' (4569)

(ஆர்-அரிய; வீங்கு-பெரிய; நீங்கி-கடந்துசென்று; வார்புனல்-மிக்கநீர்; தேங்குதல்-நிறைந்திருத்தல்)

''நறுமணம் மிகுந்துள்ள அரிய அகில் மரங்களும், ஓங்கி வளர்ந்துள்ள சந்தன மரங்களுமே சுற்றிலும் பருத்த காவல் வேலியாகச் சூழ்ந்திருக்கின்ற விதர்ப்ப நாட்டையும், மெதுவாகக் கடந்து சென்று, பின்னர் வருகின்ற நீண்ட நாடுகளும் பிற்பட்டுப்போக, எப்போதும் தண்ணீர் மிக நிறைந்திருக்கின்ற தண்டகவனம் எனும் சோலையை அடைவீர்களாக'' என்றான் சுக்கிரீவன்.

விதர்ப்ப நாட்டைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருக்கும் காவல் வேலியே நறுமணம் மிகுந்த அகிலாலும், சந்தன மரங்களாலும் ஆனது என்று அந்நாட்டின் வளப்பத்தைச் சிறப்பித்தார் என்க. இப்போது பீகார் என வழங்கப்படும் பகுதியே விதர்ப்ப நாடு என்று முன்பு அழைக்கப்பட்டது என்க. தண்டன் என்பவன் இட்சுவாகு வம்சத்தில் வந்த ஒரு மன்னன். இவன் விதர்ப்ப நாட்டை மதுமந்தம் என்ற நகரைத்

தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தவன். இவனது குருவான சுக்கிராச்சாரியாரின் மகளான அரஜை என்பவளை வலிந்து புணர்ந்து கற்பழித்ததால், குரு, ''ஏழுநாட்களுக்குள் இவனும், இவன் குலமும், இவன் நாடும் மண்ணாகிப் போக'' எனச் சபித்தமையால், இந்த நாடு மண் மழையால் அழிந்து பின்னர் காடாகியது. சில காலங்களுக்குப் பிறகு நீர்வளம் மிகுந்து முனிவர்கள் வந்து தவம் செய்யும் இடமாக ஒரு சோலையாக மாறியது என்பது ஒரு புராணக்குறிப்பு. எனினும் அவன் பெயராலேயே தண்டகஅரண்யம் என்றும், தண்டகவனம் என்றும் வழங்கப்பட்டு வந்தது என்பதாம்.

17. முண்டகத் துறை

''பண்டு அகத்தியன் வைகியதால் பகர்
தண்டகத்தது, தாபதர் தம்மை உள்
கண்டு. அகத்துயர் தீர்வது காண்டிரால்;
முண்டகத்துறை என்று ஒரு மொய் பொழில்.'' (4570)

(மொய்-செறிந்த; பண்டு-முற்காலத்தில்; தாபதர்-தவமுனிவர்கள்; உள்-ஆன்மா; பொழில்-சோலை)

''தாமரை மலர்கள் அடர்த்தியாக இருக்கும் சோலை ஒன்று முண்டகத்துறை என வழங்கப்படும். இது, முற்காலத்தில், அகத்திய முனிவர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் தண்டகாரண்யத்தில் உள்ளது. இங்கு வந்து தவம் செய்யும் முனிவர்கள் தம் ஆன்மாவை தம் உள்ளத்தில் காண்பதற்கும், மனத்துயர், தீர்த்து வைக்கும் இயல்புமானது. அதனையும் கண்டு செல்லுங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

''தம்மை உள் கண்டு'' என்பது, தம்மைக் காண்டலும், பின்னர் தம்முள் உறையும் இறைவனைக் காண்டலுமே தவமாதல் என்பதைக் குறிக்கும் என்க. அந்தத் தண்டக வனத்து உறையும் தவமுனிவர்களைக் கண்டு, உங்கள் மனத்துயரைப் போக்கிக் கொள்ளுங்கள் என்று கூறியதாகக் கூறுவதும் பொருந்தும். ''முண்டகம்'' என்ற சொல் முள்ளைத் தன்னகத்தே கொண்ட எல்லாவற்றிற்கும் பொருந்தும் என்றாலும் சிறப்பாகத் தாமரை மலரைக் குறிக்கும் என்க.

18. ''ஞாலம் நுங்குற. நல் அறத்தோர் பொருள்
போல நின்று பொலிவது பூம்பொழில்;
சீல மங்கையர் வாய் எனத் தீங்கனி
காலம் இன்றிக் கனிவது காண்டிரால்'' (4571)

(நுங்குதல்-உண்ணுதல்; பொலிவது-கனிந்து நிற்பது; சீலம்-ஒழுக்கம்)

''இந்த முண்டகத் துறை என்னும் சோலையானது, நல்ல அறச்சிந்தையுடையவர்கள் ஈட்டிய பொருள் குன்றாதது போலவும்,

உலகத்தார் எல்லோருக்கும் பயன்படுவது போலவும், நன்கு சிறந்து விளங்குவது. நல்ல ஒழுக்கமுடைய பெண்களின் இதழ்கள் போன்று, இனிமையுடைய பழங்களை, கால வரையின்றி எல்லாக் காலத்திலும் கனிவிக்கும் இயல்புடையது. அதனையும் காணுங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

இந்த முண்டகத்துறையில் அடர்ந்திருக்கும் மரங்கள், நல்ல அறச்சிந்தனை உடையவர்களின் பொருள் போல உலகில் உள்ள எல்லோருக்கும் பயன்படும் என்பதாம். ''பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தற்றால், செல்வம் நயனுடையான்கண் படின்'' என்பது குறள் 216. அதுபோலவே, இங்கே பழுத்துத் தொங்குகின்ற பழங்கள் உயர்ந்த பண்புடைய பெண்டிரின் இதழ்கள் போல இனிய சுவை பயப்பன என்பதாம். ''பாலொடு தேன் கலந்தற்றே பனிமொழி வால்எயிறு ஊறிய நீர்'' என்பது குறள் 1121. மேலும் இது ஒரு சில காலத்தில்தான் கனிந்து பழுக்கும் என்பதல்ல. பழுக்க வேண்டாத காலத்திலும் கூடப் பழுத்துத் தொங்கும். எல்லாக் காலத்தும் இனிய பழம் தரும் மரங்கள் என்பதாம். முண்டகத்துறையின் இனிய சூழல் புலப்படுத்தப்பட்டது. கனி போன்ற இதழ் என்பது இயற்கையான உவமை. இங்கே கம்பன் மகளிர் இதழ் போன்ற இனிய கனி என்று மாற்றிச் சொல்லும் நயம் உணர்க.

19. ''நயனம் நன்கு இமையார்; துயிலார் நனி;
அயனம் இல்லை அருக்கனுக்கு அவ்வழி;
சயனமாதர் கலவித் தலைத்தரும்
பயனும் இன்பமும், நீரும் பயக்குமால்'' (4572)

(நயனம்-கண்கள்; நனி-மிகுதி; அருக்கன்-சூரியன்; அயனம்-வழி; சயனம்-படுக்கை; பயன்-மோகம்; நீர்-நீர்மை / தன்மை; பயக்கும்-உண்டாக்கும்).

''அந்த முண்டகத்துறையில் வசிப்பவர்கள் கண்களை நன்கு பொருத்தி இமைக்கவும் மாட்டார்கள்; நன்றாகத் தூங்கவும் மாட்டார்கள்; அங்கே மரங்கள் அடர்ந்து உயர்ந்து செழித்திருப்பதால் சூரியன் செல்லுதற்குக் கூட அங்கே வழி கிடையாது. பெண்டிர் படுக்கையில் தரும் போகத்தையும், மகிழ்ச்சியையும், நீர் வளத்தையும் தன்னகத்தே கொண்டதே இம்முண்டகத்துறை'' என்றான் சுக்கிரீவன்.

இமையா நாட்டமும், துயிலாமையும் தேவர்களுக்கு உரிய இயல்பு. எனவே அங்கு வாழ்பவர்கள் தேவர்களைப் போன்றவர்கள் என்பதும், தேவர்களைப் போலவே சுவர்க்க போகத்தை அனுபவிப்பார்கள் என்பதும், அச்சோலை மிக்க உயர்ந்து செறிந்த மரங்களைக் கொண்டதும், நீர் வளமும் கொண்டது என்பதும் புலப்படுத்தப்பட்டது. சாதாரணமாக ''இமையார்'' என்று கூறாமலும், ''துயிலார்'' என்று கூறாமலும், ''நன்கு இமையார், நனி துயிலார்'' என்று அடைமொழி கொடுத்துக் கூறியதால்,

இவர்கள் உண்மையிலேயே தேவர்கள் அல்லர், அந்த முண்டகத்துறையில் வாழ்வதால் தேவர்க்குரிய பண்பியல்புகளைப் பெற்றிருக்கின்றனர் என்றார் என்க. ''சயனமாதர் கலவித்தலைத் தரும் பயன்'' என்ற சொற்றொடர், ''மடவாரோடும் பொருந்து அணை மேல்வரும் பயன்'' என்ற திருநாவுக்கரசர் தேவாரத்தை நினைவூட்டுவதை உணர்க. போகமும் இன்பமும் இரண்டும் ஒன்றே என்றாலும், போகம் என்பது உடற் சுகத்தையும் இன்பம் என்பது உள்ளச் சுகத்தையும் குறித்தது என்பது நயவுரை.

20. பாண்டுவின் மலை

''ஆண்டு இறந்தபின், அந்தரத்து இந்துவைத்
தீண்டுகின்றது; செங்கதிர்ச் செல்வனும்
ஈண்டு உறைந்து அலது ஏகலம் என்பது,
பாண்டுவின் மலை என்னும் பருப்பதம்.'' (4573)

(இறத்தல்-கடத்தல்; அந்தரம்-விண்/ஆகாயம்; இந்து-சந்திரன்; தீண்டுதல்-தொழுதல்; உறைதல்-தங்குதல்; ஏகுதல்-செல்லுதல்; பருப்பதம்-பர்வதம்,/மலை)

''முண்டகத்துறையைக் கடந்துசென்றால், ஆகாயத்தில் உள்ள சந்திரனைத் தொடும் அளவிற்கு உயர்ந்ததும், சிவந்த கிரணங்களையே செல்வமாக உடையவனுமான சூரியனும், இம்மலை குளிர்ச்சியாகவும், இனிமையாகவும் இருப்பதால், இங்கு சிறிது நேரம் தங்காமல் செல்லமாட்டோம் என்று எண்ணிச் சற்றுநேரம் ஓய்வு எடுத்தபின் தன் பயணத்தைத் தொடரும் இயல்பு உடையதுவுமான பாண்டுமலை என்று ஒரு மலை இருக்கின்றது. அதனைச் சென்று சேருங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

பாண்டுமலையின், உயர்ச்சியும், குளிர்ச்சியும், இனிய சூழலும் புலப்படுத்தப்பட்டன.

21. கோதாவரி ஆறு

''முத்து ஈர்த்து, பொன் திரட்டி, மணி உருட்டி,
முது நீத்தம் முன்றில் ஆயர்
மத்து ஈர்த்து, மரன் ஈர்த்து மலை ஈர்த்து,
மான் ஈர்த்து வருவது; யார்க்கும்
புத்து ஈர்த்திட்டு அலையாமல், புலவர் நாடு
உதவுவது; புனிதமான
அத்தீர்த்தம் அகன் கோதாவரி என்பர்;
அம்மலையின் அருகிற்று அம்மா!'' (4574)

(ஈர்த்தல்-இழுத்துவருதல்/நீக்குதல்; மணி-இரத்தினங்கள்; ஆயர்-இடையர்; முன்றில்-முற்றம்; நீத்தம்-வெள்ளம்; மரன்-மரம் மலை-குன்றுகள் போன்ற கற்கள்; புத்து-''புத்'' என்னும் நரகம்; புலவர் நாடு-தேவருலகம்; அகன்-அகன்ற/விரிந்த; முது-பெரிய, புனிதம்-தூய்மை; மான்-விலங்குகளுமாம்)

''பழமையும் பெருமையும் வாய்ந்த பெரிய வெள்ளம், முத்துகளை இழுத்துக் கொண்டும், பொன்துகள்களைத் திரட்டிக்கொண்டும், நவஇரத்தினங்களை உருட்டிக்கொண்டும், இடையர்களின் முற்றத்தில் இருக்கும் தயிர்கடையும் மத்து, கரையில் இருக்கின்ற மரங்கள், கற்பாறைகள், மான் போன்ற விலங்குகள் முதலியவற்றைப் புரட்டிக்கொண்டும் வரும் இயல்புடையது. இவ்வெள்ளத்தில் மூழ்கி எழுந்தவர் எல்லோரையும் புத் என்ற நரகத்திற்குச் செல்லாதபடி காத்து. வேறு எந்த தானம். தவம் முதலியனவும் செய்வதற்காகத் துன்புற்று அலையாமல் மிக எளிதாகத் தேவருலகமாகிய சுவர்க்கத்திற்குச் செல்ல அனுகூலமாய் இருப்பது; மிகவும்தூய்மையானஅந்தத்தீர்த்தத்தை, விரிந்த கோதாவரி என்று கூறுவர்; அந்தக் கோதாவரி ஆறு, முன்சொன்ன பாண்டுவின் மலைக்கு அருகில் இருக்கின்றது. அங்கு சென்று சேருங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

கோதாவரி வெள்ளம், முத்து, பொன், நவரத்தினங்கள் முதலியவற்றை இழுத்துக் கொண்டுவரும் என்பதால் அந்நதி சார்ந்த இடங்களின் செல்வச்செழிப்பையும், இடையர்களின் முற்றத்தில் இருக்கும் மத்து, மரங்கள், பாறைக்கற்கள், மான் போன்ற விலங்குகள் முதலியவற்றையும் சேர்த்து அடித்துக் கொண்டுவரும் என்பதால், அங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைநிலையையும்அவ்வெள்ளத்தில்மூழ்கியவர்கள்''புத்''என்னும் நரகத்தை அடையமாட்டார்கள், மகப்பேறு பெற்று இன்பம் அடைவர் என்பதனால், அந்நதியின் தெய்வீகத் தன்மையையும் புனிதத்தன்மையையும் வெளிப்படுத்தினார் என்பதாம். ''புத்'' என்பது மகப்பேறற்றோர் அடையும் ஒரு நரகம், எனவேதான் பிள்ளையைப் புத்திரன் என்று அழைக்கிறோம் என்பது அறிக. தந்தையை நரகத்தில் நின்றும் நீக்குபவன் என்ற பொருள்தரும் சொல் புத்திரன் என்பது. ஏழு புண்ணிய நதிகளுள் ஒன்று கோதாவரி. இந்நதி பற்றிக் கம்பர் ஆரண்ய காண்டத்தில் சிறப்பித்ததையும் இங்கு நினைவு கூர்க.

22. சுவண நதி

''அவ்ஆறு கடந்து அப்பால், அறத்துஆறே
எனத்தெளிந்த அருளின் ஆறும்
வெவ்வாறாம் எனக் குளிர்ந்து, வெயில் இயங்கா
வகை இலங்கும் விரி பூஞ்சோலை,

எவ் ஆறும் உறத் துவன்றி, இருள் ஓட
மணி இமைப்பது; இமையோர் வேண்ட,
தெவ் ஆறு முகத்து ஒருவன், தனிக் கிடந்த
சுவணத்தைச் சேர்திர் மாதோ.'' (4575)

(ஆறு-நெறி வழி; வெவ்-வெப்பமுடைய; இயங்குதல்-நுழைதல்; துவன்றி-நெருங்கி; இமைத்தல்-ஒளிவீசுதல்; இமையோர்-தேவர்கள்; கிடத்தல்-தங்கியிருத்தல்; தெவ்-பகைவர்; இலங்குதல்-விளங்குதல்; சுவணம்-சுவர்ணம்/பொன்)

''அந்தக் கோதாவரி ஆற்றைக் கடந்து அப்பால் சென்றால், அறத்தின் நெறி போல மிகத் தெளிவானதும், அருளின் பண்பே மிக வெப்பமுடையதாம் என்று சொல்லும்படி மிக்க குளிர்ச்சி பொருந்திய நீரையுடையதும், வெயிலே உள்ளே நுழைய முடியாதபடி அடர்ந்த மரச்செறிவுகளைக் கொண்டு விளங்கும் அகன்ற பூம்பொழில்களை உடையதும், எல்லாப்பக்கங்களிலும் அதனால் இருள் பரவியிருப்பதால் அதனை ஓட்டும்படி இரத்தினங்கள் ஒளிவீசும் தன்மை உடையதும், தேவர்களின் வேண்டுகொளுக்கு இணங்க, பகைவர்களைக் கொல்லும் தன்மைகொண்ட ஆறுமுகங்களையும் உடைய முருகப் பெருமான் தனியாக நிற்கின்ற பொன்னிறமான நீர் ஓடும் ''சுவர்ணம்'' என்னும் நதியைச் சென்று சேர்வீர்களாக'' என்றான் சுக்கிரீவன்.

சுவர்ண நதியின்நீர்த்தெளிவிற்கு அறத்துஆறையும், தண்மைக்கு அருளின்ஆறையும் உவமித்த கவிஞனின் திறம் நோக்குக, அருள் என்பது கருணையைக் குறிக்கும். கருணை என்பது குளிர்ந்த உள்ளத்தில் தோன்றுவது, சுவர்ண நதியின் நீர்த்தெளிவு, குளிர்ச்சி, முதலியன புலப்படுத்தப்பட்டன. மேலும் பூஞ்சோலையில் படிந்திருக்கும் இருளை ஓட்டும் அளவுக்கு ஒளி படைத்தனவாம், அங்கே ஒளிவிடுகின்ற இரத்தினங்கள்; முருகப் பெருமான் சுவர்ண நதியில் தனித்துநின்ற வரலாற்றினைத் திருமுறுகாற்றுப்படை, கந்தபுராணம், பரிபாடல் ஆகியவை கொண்டு தெளியலாம், இந்த சுவர்ணநதி இப்போது ''சோன்'' என்று வழங்குகிறது என்று கூறுவர்.

23. சந்திரகாந்தம், கொங்கணம், குவிந்தம்.

''சுவணநதி கடந்து அப்பால், சூரியகாந்தகம்
என்னத்தோன்றி, மாதர்
கவண் உமிழ்கல் வெயில் இயங்கும் கன வரையும்
சந்திரகாந்தகமும் காண்டிர்;
அவண் அவை நீத்து ஏகியபின், அகன்நாடு
பல கடந்தால், அனந்தன் என்பான்
உவணபதிக்கு ஒளித்து உறையும் கொங்கணமும்,
குவிந்தமும் சென்று உறுதிர் மாதோ.'' (4576)

(கவண்-கவண்கல்; உமிழ்தல்-வெளிப்படுத்துதல்; அகன்-விரிந்த; அனந்தன்-ஆதிசேஷன்; உவணம்-பறவை; உவணபதி-கருடன்; உறுதல்-அடைதல்)

சுவணநதியைத் தாண்டி அப்பால் சென்றால், அங்கே வேட்டுவமாதர், தினைப்புனம் காக்கும்போது, கிளி முதலியன வாராத வண்ணம் பரணில் அமர்ந்திருந்து கவண் வில்லிருந்து கற்களை வெளியிடுவர். அந்தக்கற்கள் சாதாரணக் கற்களல்ல, மாணிக்கக் கற்கள், அவை சூரியகாந்தக்கல் போல ஒளிவீசும் இயல்புடையன. அங்குள்ள சந்திரகாந்தம் என்னும் பெரிய மலைத் தொடரைக் காணுங்கள்; அவ்விடத்திலிருந்து நீங்கிப் போனால், விரிந்த நாடுகள் பல வரும், அவற்றையும் கடந்துபோனால், ஆதிசேஷன் என்பவன், பறவைகளுக்கு அரசனான கருடனுக்கு பயந்து கொண்டு தன்னை மறைத்துக் கொண்டு வாழும் கொங்கண நாடு வரும்; அவற்றையும் தாண்டி குவிந்தநாடு வரும்; அவற்றைச் சென்று அடையுங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

சந்திரகாந்த மலையில் வாழும் வேடுவர்களின் செல்வச் செழிப்பு புலப்படுத்தப்பட்டது. சூரியகாந்தக்கல் என்பது சூரியன் ஒளிபட்டதும் எரிந்து வெயிலை உமிழும் இயல்புடையது; அதுபோல சந்திரகாந்தக்கற்கள் என்பன சந்திரன் ஒளிபட்டதும் குளிர்ந்த நீரைச் சொரியும் இயல்புடையன என்பது அறிக. உவணம் என்பது அழகிய சிறகுகளையுடைய கருடனைக் குறிக்கும் என்பதாம்; அனந்தன் என்ற சொல் என்றும் அழிவில்லாதவன் என்ற பொருள் தந்து ஆதிசேஷனைக் குறிக்கும், இவன் கொங்கணத்தில் ஒளிந்து கொண்டிருந்த இடம் இப்போது ''சுப்ரமண்யம்'' என வழங்குகிறது என்றும், இன்றும் இங்கு கோயில் புறத்தில் நல்ல பாம்புகள் தாராளமாக ஊர்ந்து செல்லுகின்றன என்றும், எனினும் மக்கள் அச்சமின்றி நடமாடுகிறார்கள் என்றும் கூறுகிறார்கள்.

24. அருந்ததி மலை

''அரன் அதிகன்; உலகு அளந்த அரி அதிகன்;
  என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடைவு அரிய பரிசே போல்
  புகல் அரிய பண்பிற்று ஆமால்;
சுரநதியின் அயலது, வான் தோய் குடுமிச்
  சுடர்த் தொகைய; தொழுதோர்க்கெல்லாம்,
வரன் அதிகம் தருதகைய அருந்ததியாம்
  நெடுமலையை வணங்கி, அப்பால்.'' (4577)

(அரன்-சிவபெருமான்; அதிகன்-உயர்ந்தவன்/சிறந்தவன்; அரி-திருமால்; உரைத்தல்-தர்க்கம் செய்தல், அறிவு-ஞானம்; அடைவு

அரிய-புகுதற்கு இயலாத; பரிசு-தன்மை/இயல்பு; சுரர்-தேவர்; சுரநதி-தேவ கங்கை; அயல்-அருகில்; பண்பு-இயல்பு; சுடர்-ஒளி; குடுமி-சிகரம்/உச்சி; தகைய-தன்மையுடைய; வரன்-வரம்; நெடு-உயர்ந்த; பரகதி-வீடுபேறு; தொகை-தொகுதி/பல)

சிவபெருமான் உயர்ந்தவன், ஓங்கி உலகளந்த உத்தமன் திருமால்தான் உயர்ந்தவன் என்று தங்களுக்குள் வாதிட்டுக்கொண்டு திரியும் மெஞ்ஞானம் அற்றவர்கள் எவ்வாறு வீடுபேற்றினைச் சென்று அடைதல் அரிதாகுமோ, அதுபோல நுழைந்து செல்லுதற்கு மிகவும் அரிதானது இந்த அருந்ததிமலை. அம்மலை ஆகாய கங்கையின் அருகில் இருப்பது. வானளாவிய சிகரத்தை உடையது, ஒளிமிக்க பல சிகரங்களையுடையதும், சூரிய சந்திரர் தங்கும் தன்மை உடையதுமான சிறந்த வரங்களை அளிக்க வல்லதான அத்தகைய அருந்ததி என்னும் பெரிய மலையை நீங்களும் வணங்கி, அப்பால் செல்லுங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

''அரன் அதிகள், உலகளந்த அரி அதிகன் என்று உரைக்கும் அறிவு இலோர்'' என்று கூறுவதால் கவிஞனின் கடவுட் பொதுத் தன்மை, சைவ வைணவ சமரசக் கொள்கை தெற்றென விளங்கும். இத்தகையோர் எவ்வாறு நற்கதிபெற முடியாதோ, அது போல அருந்ததி மலையும் சாதாரணமான எளியவர்களால் சென்று அடைய முடியாத பெருமை உடையது. எனவே நீங்கள் அம்மலைமீது செல்ல முயற்சிக்க வேண்டாம். வணங்கி மட்டும் மேற்செல்லுங்கள் என்கிறான், சுக்கிரீவன் என்பதாம். சுரர் என்பது தேவரைக் குறிக்கும்; சுரநதி என்பது தேவலோகத்தில் ஓடும் ஆகாய கங்கையைக் குறிக்கும் என்க, ''வான் தோய் குடுமி'' என்றதனால் அருந்ததி மலையின் உயர்ச்சி கூறப்பட்டது. அருந்ததி வசிஷ்ட முனிவரின் மனைவி. அருந்ததியின் பெயரைக் கொண்டிருப்பதால் அம்மலையை ''நெடுமலை'' என்று சிறப்பித்தான் என்க, ''அரியும் சிவனும் ஒண்ணு அதை அறியாதார் வாயில் மண்ணு'' என்ற உலகியல் பழமொழியையும் இங்கு நினைவு கூர்க;

25. மரகத மலை

''அஞ்சுவரும் வெஞ்சுரனும், ஆறும், அகன்
பெருஞ்சுனையும், அகில்ஓங்கு ஆரம்
மஞ்சு இவரும் நெடுங்கிரியும், வளநாடும்
பிற்படப்போய், வழி மேல் சென்றால்,
நஞ்சுவரும் மிடற்று அரவுக்கு, அமிழ்து நனி
கொடுத்து, ஆயைக் கலுழன் நண்ணும்
எஞ்சுஇல் மரகதப்பொருப்பை இறைஞ்சி,
அதன் புறம் சார ஏகிர் மாதோ!'' (4578)

(சுரன்-சுரம்/பாலைவனம்; ஆரம்-சந்தனமரங்கள்; மஞ்சு-மேகம்; இவர்தல்-தாழ்தல்/ஊர்தல்; நஞ்சு-விஷம்; மிடறு-கழுத்து/வால்;

அரவு-பாம்பு; நனி-மிகுதியாக; ஆய்-தாய்/தந்தை; கலுழன்-கருடன்; எஞ்சுஇல்-குறைவில்லாத; பொருப்பு-மலை; புறம்-பக்கம்; சார-பொருத்த; ஏகீர்-செல்லுங்கள்; பிற்படப்போய்-கடந்து சென்று;

''எல்லோராலும் அஞ்சப்படுகின்ற கொடிய வெப்பமுடைய பாலைவனங்களையும், அகில், சந்தனம் போன்று ஓங்கி வளர்ந்த மரங்களடர்ந்த காடுகளையும், மேகங்கள் தவழுகின்ற பெரிய மலைகளையும், வளப்பம் பொருந்திய காடுகள் பலவற்றையும் கடந்து சென்றால், அதன்பின் ஒரு வழி தெரியும்; அந்த வழியில் மேலும் சென்றால், விஷத்தைத் தன் வாயில் கொண்டுள்ள வாசுகி போன்ற பாம்புகளுக்கு அமிழ்தத்தை மிகுதியாகக் கொடுத்து, தன் தாயாகிய விநதையை அடிமைத் தளையிலிருந்து மீட்ட கருடன் வாழும் குறைவில்லாத மரகதமலையை அடைவீர்கள், அதை வணங்கி அதன் பக்கத்தில் பொருந்தியிருக்கின்ற வழியில் சென்று சேருங்கள்,'' என்றான் சுக்கிரீவன்.

அருந்ததி மலைக்கும், மரகதமலைக்கும் நடுவில், பாலைவனங்கள், நதிகள், சுனைகள், காடுகள், மலைகள், நாடுகள் முதலிய இருக்கின்றன என்பது பெறப்படுகின்றது.

கருடன்பாம்புகளுக்குஅமிழ்துஅளித்தவரலாறு; -காசிபமுனிவர்க்குப் பல மனைவிகள். அவர்களில் இருவர் விநதை என்பவளும் கத்துரு என்பவளும். விநதையின் மகன் கருடன்; கத்துருவின் மகன்கள் வாசுகி முதலிய எட்டு நாகங்கள். எப்பொழுதும் பாம்புக்கும் கருடனுக்கும் பகை என்பதை இங்கே நினைவு கூர்க. விநதைக்கும் கத்துருவுக்கும் உச்சச்சிரவம் என்னும் இந்திரனது குதிரையின் வாலின் நிறம் பற்றி வாதம் முற்றி, அதில் கத்துருவுக்கு விநதை அடிமையானாள். விநதை அடிமைத்தளையிலிருந்து விடுபடவேண்டுமென்றால் தேவலோகத்தில் உள்ள அமிழ்தத்தை எடுத்து வந்து கருடன், தங்களுக்குத் தரவேண்டும் என்று எட்டு நாகங்களும் ஒரு நிபந்தனை விதித்தன. அதன்படி கருடன் தேவலோகம் சென்று அமிழ்தத்தைக் கொண்டு வந்து வாசுகி முதலிய பாம்புகளிடம் கொடுத்துத் தன் தாய் விநதையை அவர்களின் அடிமைத்தளையினின்றும் விடுவித்தான். ஆனால் பின்னர் இந்தப் பாம்புகள் அந்தத் தேவாமிர்தத்தை தர்ப்பையிலிருந்து நக்கும் போது, அவர்களின் நாக்கு இரண்டாகப் பிளவுபட்டுப் போயிற்று என்பதும் புராண வரலாறு. பாம்பின் நாக்கு இரண்டாய்ப் பிளவுபட்டிருப்பதை இன்றும் நாம் காணலாம். அந்த இடம்தான் இந்த மரகதமலை என்பதாம்.

26. வேங்கடமலை

''வடசொற்கும், தென்சொற்கும் வரம்பிற்றாகி,
நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்,
நல் அறத்துக்கு ஈறாய், வேறு

புடைசுற்றும் துணையின்றிப் புகழ் பொதிந்த
மெய்யேபோல் பூத்து நின்ற,
அடைசுற்றும் தண்சாரல் ஓங்கிய
வேங்கடத்தில் சென்று அடைதிர் மாதோ!'' (4579)

(சொல்-மொழி; வரம்பு-எல்லை; இடை-இடம்; சொற்ற-குறித்த; எல்லை-முடிவு; ஈறு-வரம்பு; புடை-பக்கம்; துணை-உவமை; பொதிந்த-நிறைந்த; மெய்-சத்தியம்/வாய்மை; பூத்து-பொலிந்து/சிறந்து; அடை-தேனடை; சுற்றுதல்-சூழ்ந்து இருத்தல்; தண்-குளிர்ச்சி பொருந்திய; சாரல்-தாழ்வரைகள்; ஓங்கிய-உயர்ந்த)

''வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் எல்லையானதாய், நான்கு வேதங்களும், அதனோடு தொடர்புடைய மற்ற சரித்திர, இதிகாச, புராண நூல்களில் குறித்துச் சொல்லப்பட்டிருக்கின்ற பொருள்களுக்கெல்லாம் மேலான, ஒரு முடிந்த முடிபாகிற பொருளாய், நல்ல சிறந்த தருமச்செயல்கள் ஆற்றுதற்கு ஒரு வரம்பாய், இதற்கு உயர்விலும், புகழிலும் இணை என்று பக்கத்தில் வேறு எதையும் உவமை கூற முடியாததாய், புகழ் நிறைந்ததாய், சத்தியம் ஒளிவிட்டுப் பிரகாசிப்பது போல்பொலிந்து விளங்குகின்றதாய், தேனடைகளால்சூழப்பட்டிருக்கும் குளிர்ச்சி பொருந்திய தாழ்வரைகள் உடையதாய் விளங்கும் உயர்ந்த திருவேங்கட மலையைச் சென்று சேருங்கள்'' என்றான் சுக்கிரீவன்;

வடசொல் என்பது சமஸ்கிருதம் முதலிய வடநாட்டில் பயிலும் மொழிகள்; தென்சொல் என்பது தமிழ் முதலிய தென்னாட்டில் வழக்கிலிருக்கும் மொழிகள். இவை இரண்டு மொழிகளும் கலந்து வழங்கப்படுவதும், இவற்றிற்கு ஒரு எல்லை என்று கூறப்படுவதும் திருவேங்கடம் என்பதாம், ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' என்பது தொல்காப்பியம். ''வேங்கடம் குமரி தீம்புனல். பௌவம் என்று இந்நான்கு எல்லை தமிழ்மொழி வழக்கே'' என்பது சிலப்பதிகாரம். நான்மறை என்பது இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களாம். மற்றை நூல் என்பன வேதத்தின் சாகைகளான வேதாங்கங்களும் வேதங்களின் முடிவுகளான வேதாந்தங்களுமாம். வேதத்தின் ஆறுஅங்கங்கள் வேதாங்கங்கள் எனப்படும் அவை, சங்கம், கற்பம், வியாகரணம், சிட்சை, ஜோதிடம், நிருத்தம் என்பன. புராணங்கள் என்பது பதினெட்டுப் புராணங்களைக் குறிக்கும். இதிகாசம் என்பது இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றைக் குறிக்கும் என்க. வேங்கடம் என்பது வேம்+கடம் என்று பிரிந்து நம்பாவங்கள் எல்லாம் வெந்து எரிந்து போகும் இடம் எனவும்; வெம்+கடம் என்று பிரிந்து விரும்பத்தக்க செல்வம் அழியாது நிற்கும் நிதியம் அளிப்பது எனவும் பொருள் படும். இம்மலை மலைநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டில் முதன்மையானது, கடம்-பாவம்/செல்வம்.

27. இருவினையும், இடைவிடா எவ்வினையும்
இயற்றாதே, இமையோர் ஏத்தும்
திருவினையும், இடுபதம் தேர் சிறுமையையும்
முறை ஒப்பத் தெளிந்து நோக்கி,
"கருவினையது இப்பிறவிக்கு" என்று உணர்ந்து, அங்கு
அது களையும் கடைஇல் ஞானத்து
அருவினையின் பெரும் பகைஞர் ஆண்டு உளர்; ஈண்டு
இருந்தும் அடி வணங்கற் பாலார். (4580)

(ஏத்தும்-போற்றும்; பதம்-பிச்சை/உணவு; தேர்-ஏற்று/விரும்பிச் செல்கின்ற; சிறுமை-வறுமை; கரு-மூலகாரணம்; கடைஇல்- வரம் பில்லாத; ஞானம்-தத்துவ அறிவு; பாலார்-தன்மை உடையவர்கள்; களைதல்-நீக்குதல்)

நல்வினை, தீவினை என்னும் இருவினைகளையும் தொடர்ந்து, இறைவனோடு ஒன்றியிருப்பதை அன்றி வேறு எந்தச் செயலையும் செய்யாமல் இருப்பவர்களும், தேவர்களும் போற்றுகின்ற இந்திர செல்வத்தையும், பிறர் இடுகின்ற பிச்சையாகிய உணவையும் விரும்பி ஏற்றுக்கொள்கிற வறுமையையும், ஒரே விதமாகச் சமமாகத் தெளிவோடு நோக்குபவர்களும், இந்தப் பிறவிக்கு மூலகாரணமே அந்த நல்வினை, தீவினைஎன்ற இரண்டும்தான்என்று தெளிவாக உணர்ந்து, அவற்றை அந்த இடத்திலேயே போக்குதற்குரிய எல்லையற்ற தத்துவ ஞானத்தை உடையவர்களும், நீக்குதற்குரிய அவ்வினைகளை வென்றவர்களாகிய ஞானிகளாகிய வினைப்பகைஞர்கள் அந்தமலையில் வசிக்கின்றனர். அவர்களை நேரில் சென்று வணங்க வேண்டுவது மட்டுமல்ல, அவர்கள் இங்கிருந்தும் கூட திசைநோக்கித் தொழுதற்குரிய பெருந்தன்மையர்கள்" என்றான் சுக்கிரீவன்.

திருவேங்கட மலையில் வாழும் மெஞ்ஞானிகளின் இயல்பு பற்றி விளக்குகிறான். அவர்கள் இறைவனோடு ஒன்றியிருப்பார்களே அன்றி, நல்வினை, தீவினை என்று எந்தக்காரியத்தையும் செய்யமாட்டார்கள். இந்திரனுடைய செல்வமும், இரந்து வாங்கி உண்கின்ற உணவும் அவர்களுக்கு ஒரே தன்மைத்தாகும். ஓடும் பசும் பொன்னும் ஒக்க நோக்கும் இயல்பினர். இப்பிறவிக்குக் காரணம் இவ்விருவினைகளே என்பதை நன்கு உணர்ந்தவர்கள், அதனைப் போக்கும் மெஞ்ஞானம் படைத்தவர்கள் இவ்விருவினைகளின் பயன்களாகிய புண்ணியம், பாவம் என்பனவற்றிற்குப் பகைவர்கள் அவர்கள்; இவர்களை இங்கிருந்தே வணங்குங்கள் என்று சுக்கிரீவன் கூறுகிறான் என்பதாம். வினை என்பது மனம், மொழி, மெய் (மனோ வாக்கு காயம்) என்னும் திரிகாரணங்களால் மக்கள் செய்யும் புண்ணிய பாவங்கள் எனப்படும். இவை ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்தம் என மூவகைப்படும். பிரார்த்தம் என்பது முற்பிறவியில் நாம் செய்த நல், தீவினைகளுக்கு ஏற்ப

இப்பிறவியில் நாம் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள். நாம் இப்பிறவியில் செய்யும் நல் தீவினைகளுக்கு ஏற்ப அடுத்த பிறவியில் அனுபவிக்கப்போகும் இன்பதுன்பங்கள் ஆகாமியம் எனப்படும். எஞ்சியிருக்கிற பிறவிகளில் அனுபவிக்கப்போவது சஞ்சிதம் எனப்படும் என்க.

28. ''தோதகத்துத் தூய் மறையோர் துறையாடும்
நிறை ஆறும், சுருதித் தொல் நூல்
மாதவத்தோர் உறைவிடனும், மழை உறங்கும்
மணித்தடனும், வானமாதர்
கீதம் ஒத்த கின்னரங்கள் இன் நரம்பு
வருடுதொறும் கிளக்கும் ஓதை
போதகத்தின் மழக்கன்றும். புலிப்பறழும்
உறங்கு இடனும் பொருந்திற்று அம்மா!'' (4581)

(தோ தகம் - நல்லஉள்ளம்; சுருதி - வேதம்; தொல் - பழைய; மழை- மேகங்கள்; தடன் - தடம் / தாழ்வரை; கீதம் - இசைப்பாட்டு; கின்னரம் - யாழ்; வருடுதல் - தடவுதல்; கிளத்தல் - எழுதல்; போதகம் - யானை; மழ - இளமையான; பறழ் - குட்டிகள்; ஆடுதல் - முழுகுதல் / நீராடுதல்)

நல்ல உள்ளம் பொருந்திய தூயவரான மறையோதும் அந்தணர்கள் முழுகி நீராடுகின்ற படித்துறை நிறைந்த ஆறுகளும், பழமையான வேதங்களையும் சாத்திரங்களையும் கற்றுணர்ந்த பெருந் தவசிகள் வசிக்கின்ற ஆசிரமங்களும், மேகங்கள் படிகின்ற உயர்வுள்ள இரத்தினம் அமையப் பெற்ற பெரிய மலைகளின் தாழ்வரைகளும், தேவ மகளிர் இசைக்கின்ற இசைப்பாட்டுக்கு ஏற்ப யாழின் இனிமையான நரம்புகளைத் தடவும் தோறும் எழுகின்ற இனிய ஓசையைக் கேட்டு, யானையின் இளமையான கன்றும், புலிக்குட்டியும், தங்கள் பகைமையை மறந்து ஒன்றாக அமைதியாக உறங்குகின்ற இடங்களும் தன்னகத்தே கொண்டது அந்தத் திருவேங்கடமலை'' என்றான் சுக்கிரீவன்.

ஆறுகளும், ஆசிரமங்களும், தாழ்வரைகளும் நிறைந்த இடம் திருவேங்கடமலை என்பதாம். தமக்குள் பகை கொண்ட யானையும் புலியும், தேவமாதர் இசைக்கும் இசைப்பாட்டுக் கேட்டு இனிதாய் உறங்கும் மலை என்பதால் அம்மலையின் அமைதி தவழும் சூழ்நிலை புலப்படுத்தப்பட்டது என்க. போதகம் என்பது பத்து வயது இளம் யானைக்கன்று என்பர். இங்கே ஆறு என்றது பொன்முகலி ஆறு என்று கூறுவர். மறையோர் என்றது இல்வாழ்க்கையில் ஈடுபட்ட வேதமறிந்த விற்பன்னர்களான அந்தணர்களை என்றும், மாதவத்தோர் என்பது, சிறந்த தவத்தைச் செய்கின்ற முனிவர்களை என்றும் பொருள் கொள்ளுதல் பொருந்தும். ''பசுவும் சிசுவும் படப்பளி தானும் இசைவசப்படுமே'' என்பது ஒரு முதுமொழி.

29. தொண்டைநாடு - பொன்னிநதி.

"கோடு உறு மால்வரை அதனைக் குறுகுதிரேல்
உம் நெடிய கொடுமை நீங்கி,
வீடு உறுதிர்; ஆதலினால் விலங்குதிர்!
அப்புறத்து நீர்மேவு தொண்டை
நாடு உறுதிர்; உற்று, அதனை நாடுறுதிர்;
அதன்பின்னை, நளி நீர்ப்பொன்னிச்
சேடு உறு தண்புனல் தெய்வத் திருநதியின்,
இருகரையும் தெரிதிர் மாதோ!". (4582)

(கோடு-சிகரம்; குறுகுதல்-அணுகுதல்; கொடுமை-கொடிய பாவங்கள்; வீடு-முக்தி; விலங்குதல்-விலகுதல்/சொல்லாதிருத்தல்; மேவுதல்-பொருந்துதல்; உறுதல்-அடைதல்; நாடுதல்-தேடுதல்; நளி-பெருமை; நீர்-நீர்மை/தன்மை; பொன்னி-காவிரி; சேடு-சிறப்பு; தெரிதல்-தேடுதல்);

''சிகரங்கள் அமைந்த பெரிய அந்தத் திருவேங்கடமலையை அணுகுவீர்களேயானால், உங்களை நீண்ட காலமாகத் தொடர்ந்து வருகின்ற கொடிய பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெற்று முக்தி அடைவீர்கள்; அதனால் நீங்கள் அங்கு போவதை விலக்குங்கள்; போகாதீர்கள்; அதற்குப் பின்னர்நீர்வளம் பொருந்திய தொண்டைநாட்டை அடையுங்கள்அடைந்து அங்கு சீதாதேவியைத் தேடிப் பாருங்கள், பின்னர், பெருமைத்தன்மை வாய்ந்ததும், சிறப்பானதும், உயர்ந்த தோற்ற முடையதும், குளிர்ச்சி பொருந்திய நீரையுடையதும், தெய்வீகத்தன்மை வாய்க்கப்பெற்றதும், அழகானதுமான காவேரி என்று சொல்லப்படுகின்ற பொன்னி நதியின் இருபக்கங்களிலும், சீதாதேவியைத் தேடிப்பாருங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

திருவேங்கடமலைக்கு ஒரு முறை சென்றாலே உங்களைத் தொடர்ந்து வருத்துகின்ற பாவங்கள்அனைத்தும் தொலைந்து போய் நீங்கள்வீடுபேறு அடைவீர்கள். அவ்வாறு நீங்கள் முக்தி அடைந்து விட்டால் நாம் எடுத்துக் கொண்ட காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்க முடியாது என்றும், மேலும் இராவணன் இத்தகைய புனிதமான இடங்களுக்கெல்லாம் வந்திருக்க மாட்டான். எனவே, நீங்கள் திருவேங்கடமலை மேலே செல்லாமல் அதனை விலக்குவீர்களாக என்றான் சுக்கிரீவன் என்பதாம். ''வெறிகொள் அறை அருவி வேங்கடத்துச் செல்லின், நெறிகொள் வடிவத்தோய்! நீயும் பொறிகட்கு இருள்ஈயும் ஞாலத்து இடர் எல்லாம் நீங்க, அருள் ஈயும் ஆழியவன்'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை. ''செடியாய் வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல் அடியாரும், வானவரும், அரம்பையரும் கிடந்து இயங்கும் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்கேனோ?'' என்பது

குலசேகர ஆழ்வார் பாசுரம். தொண்டைநாடு என்பது இப்பொழுது காஞ்சிபுரமும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் என்க. அது நீர்வளம் மிக்கது என்பதுடன் சான்றோர் பலரைப் பெற்ற நாடு என்பதையும் கருத்திற் கொள்க, நளி என்ற சொல்லுக்குப் பெருமை என்பது பொருள்''. ''தடவும், கயவும், நளியும் பெருமை'' என்பது தொல்காப்பியம். பொன்னி என்பது காவிரிக்குக் காரணப் பெயர். காவிரி நீர் பொன்துகள் செறிந்து பொன் நிறமாகக் காணப்படுவதால் காவிரி பொன்னி என வழங்கப்பட்டது. ''மலைத்தலைய கடற்காவிரி புனல் பரந்து பொன் கொழிக்கும்'' என்பது பட்டினப்பாலை. ஏழு புண்ணிய நதிகளுள் காவிரியும் ஒன்று. மற்றவை கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, குமரி என்பன. ''தெய்வத்திருநதி'' என்பது தன்னிடம் ஒருமுறை மூழ்கி எழுந்தவர்க்கும் பிறவிப்பிணியை ஒழிக்கும் தன்மை வாய்ந்தது என்பதால் என்க.

30. மலைநாடு, பாண்டிநாடு

துறக்கம் உற்றார் மனம் என்னத் துறைகெழு நீர்ச்
சேணாடு புகுந்தார், தொல்லை
மறக்கம் உற்றார் அகம் மலர்ந்து, மறைந்து உறைவர்;
அவ்வழி நீர் வல்லை ஏகி,
உறக்கம் உற்றார் கனவு உற்றார் எனும் உணர்வினோடும்
ஒதுங்கி, மணியார் ஓங்கல்
பிறக்கம் உற்ற மலைநாடு நாடி, அகன்
தமிழ்நாட்டில் பெயர்திர் மாதோ!'' (4583)

(துறை-படித்துறை/இறங்குதுறை; கெழு-பொருந்திய; சோணாடு-சோழநாடு; துறக்கம்-கவர்க்கம்; தொல்லை-பழைய; மறக்கம் உறுதல்-மறந்து போதல்; மறைந்து-வேடம் பூண்டு; உறைதல்-தங்கிவிடுதல்; வல்லை-விரைவாக; ஒதுங்கி-சென்று; ஓங்கல்-மலைகள்; பிறக்கம்-விளக்கம்; அகன்-விரிந்த; பெயர்தல்-திரும்புதல்;)

சுவர்க்கலோகம் அடைந்தவர்களுடைய மனம் எவ்வாறு தெளிவாக இருக்குமோ, அதுபோலத் தெளிவான நீரையுடைய படித்துறைகளை உடைய காவிரியால் செழிப்புற்று விளங்கும் சோழநாட்டிற்குள் செல்லுபவர்கள், தங்களது பழைய உணர்வுகளையெல்லாம் மறந்து விட்டு, மனம் மிக மகிழ்வுற்று, தாமும் அச்சோழநாட்டைச் சேர்ந்தவர் போலவே நடித்துக் கொண்டு, அங்கேயே தங்கிவிடுவார்கள், அத்தகைய மன மகிழ்ச்சியைத் தரும் நாடு சோழநாடு, நீங்கள் அவ்வாறு அங்கேயே தங்கிவிடாமல் தூங்குபவர்கள் தாம் காணும் கனவு கலைந்து எழுந்திருப்பது போல, இந்நினைவுகளை அகற்றி, சீதையைத் தேடுதல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, விரைவாகச்சென்று, நேரே சென்று விடாமல் சற்று மேற்குப்பக்கமாக ஒதுங்கி, நவரத்தினங்களின் ஒளியால் விளக்கம் பெற்றுப்பொலிந்து தோன்றும் மலைகளையுடைய

மலைநாடாகிய சோழ நாட்டிலும் சென்று சீதாதேவியைத் தேடிப் பார்த்துவிட்டுப் பின்னர் அகன்ற செந்தமிழ் மொழி வளர்க்கும் பாண்டிய நாடாகிய செந்தமிழ் நாட்டிற்குத் திரும்பி வாருங்கள் என்றான் சுக்கிரீவன்.

துறக்கம் உற்றாருடைய தெளிவான மனத்திற்கு காவிரியின் தெளிந்த நீர் உவமை. உறங்கியும் கனவு கண்டும் பொழுது கழிப்பவரைப்போல் காலத்தை விரயமாக்காமல் சுறுசுறுப்பாகச் செயல்படவேண்டும் என்பது சுக்கிரீவன் கருத்து. பொதுவாகத் தமிழ்நாடு என்று குறிப்பிட்டிருந்தாலும் இங்கே முச்சங்கங்கள் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டையே அது குறிக்கும் என்க. சோழநாட்டில் ஏற்படும் இன்ப உணர்வைக் கனவு என, பொய் எனக் கருதி மேலே செல்ல வேண்டும் என்பதாம். ''நீல வல்லிருள் நீங்கலும், நீங்கும் அம் மூலம் இல் கனவு'' என்பதும் கம்பரின் பாடலேயாம்.

31. பொருநை நதி, மயேந்திர மலை

''தென் தமிழ்நாட்டு அகன் பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற்றீரேல்,
என்றும் அவன் உறைவிடமாம்; ஆதலினால்
அம்மலையை இடத்திட்டு ஏகிப்
பொன்திணிந்த புனல் பெருகும் பொருநை என்னும்
திருநதி பின்பு ஒழிய, நாகக்
கன்று வளர் தடம் சாரல் மயேந்திரமா
நெடுவரையும், கடலும் காண்டீர்!'' (4584)

(பொதி-பொதியமலை; இடத்திட்டு-இடப்பக்கமாகவிடுத்து; பொன்-அழகு; திணிந்த-நிரம்பிய; பொருநை-தாமிரபரணி; நாகம்-யானை; தட-பெரிய; சாரல்-தாழ்வரை; காண்டீர்-காணுங்கள்);

''தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் இருக்கும் பாண்டிய நாட்டில் உள்ள அகன்ற பொதிய மலையில் வாழ்கின்ற சிறந்த அகத்திய முனிவன் தோற்றுவித்த தமிழ்ச்சங்கங்களை அடைவீர்களானால், அதுதான் எப்பொழுதும் அகத்தியன் வாழ்கின்ற இடமாகும். எனவே அம்மலைக்குச் செல்லாமல் அதனை இடப்பக்கமாக விட்டு, நீங்கள் வலப்பக்கமாகச் சென்று, அழகு நிறைந்த, நீர் பெருக்கெடுத்தோடும் பொருநை என்னும் தாமிரபரணி ஆகிய அழகிய நதியும் பிற்பட்டுப்போக, நீங்கள் முன்னே சென்று, யானைக் கன்றுகள் மிகுதியாக வளர்கின்ற பெரிய தாழ்வரைகள் கொண்ட மயேந்திர மலை என்னும் பெரிய மலையையும் அதையடுத்த தென் பெருங்கடலையும் காணுங்கள்'' என்றான் சுக்கிரீவன்.

மதுரையில் தலைச்சங்கத்தில் அகத்தியரும், சிவபெருமானும் புலவர்களாக இருந்திருக்கிறார்கள் என்றும், அது 549 சான்றோர்களைப் பெற்று இருந்தது என்றும், 4440 ஆண்டுகள் இருந்தது என்றும், இடைச் சங்கம் என்பது 3700 ஆண்டுகள் இருந்தது என்றும், கடைச்சங்கம் 1850

ஆண்டுகள் இருந்தது என்றும் இறையனார் அகப்பொருள் உரை தெரிவிக்கிறது, கடைச்சங்கம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் முடிவுற்றது என்றும், இடைச்சங்கம் கபாடபுரத்தில் அமைந்து செயல்பட்டு வந்தது என்றும் மேலும் அந்நூல் கூறுகின்றது. அகத்தியன் தங்கியிருக்கும் பொதிய மலைக்குச் சென்றால் அதை விட்டுச் செல்ல மனம் வராது என்பதால் அதை இடத்திட்டு வலப்பக்கமாகப் போகச் சொன்னான் சுக்கிரீவன் என்க.

32. இராமன், அனுமனைத் தனியே அழைத்துச் செல்லுதல்

''ஆண்டு கடந்து, அலைஉவரிக்கும் அப்புறத்தும்
ஒருதிங்கள் அவதி ஆகத்
தேண்டி, இவண் வர்துஅடைதிர்; விடைகோடிர்
கடிது'' என்னச் செப்பும் வேலை,
நீண்டவனும், மாருதியை, நிறைஅருளால்
உறநோக்கி, ''நீதிவல்லோய்!
காண்டி எனின், குறிகேட்டி.'' என. வேறு
கொண்டு இருந்து கழறல் உற்றான். (4585)

(ஆண்டு-அவ்விடம்; உவரி-கடல்; அவதி-தவணை/எல்லை/கெடு/காலவரையறை; தேண்டி-தேடி; கோடிர் - கொள்ளுங்கள்; செப்பும்-சொல்லும்; வேலை-சமயம்; நீண்டவன்-இராமன்; உற-நன்கு; குறி-அடையாளம்; கேட்டி-கேட்பாயாக; வேறு-தனியே; கழறல்-சொல்லுதல்; கடிது-விரைவாக)

''அந்த மயேந்திரமலையையும் கடலையும் தாண்டிப்போய், அலைகள் நிறைந்த கடலுக்கு அப்புறத்திலும், ஒரு மாத காலம் தவணை கொண்டு, சீதாதேவியை நன்றாகத் தேடிப் பார்த்த பின்னர் இங்கு வந்து சேருங்கள்; இப்பொழுது விரைந்து விடைபெற்றுக் கொள்ளுங்கள்'' என்று சுக்கிரீவன் வானர வீரர்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஓங்கி உலகளந்த உத்தமனான திருமாலின் அவதாரமான இராமபிரானும், அனுமனை நன்கு தனது அருள் நிறைந்த பார்வையால் உற்றுப்பார்த்து, ''நீதிநெறிகளில் சிறப்புற்றவனே! நீ சீதாதேவியைக் கண்டுபிடித்து விட்டாய் என்றால், இவள்தான் சீதாதேவி என்பதை நீ அறிந்து கொள்ளும் பொருட்டு, அவளுடைய சில அங்க அடையாளங்களைக் கூறுகிறேன்; கேட்பாயாக!'' எனக்கூறி, அவனைத் தனியாக ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று, நிதானமாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறத் தொடங்கினான்.

இராமன் அனுமனைத் தனியே அழைத்துப் போய்க் கூறியது, பிறர் அறியத்தகாதனவும் அறிவிக்க வேண்டி இருந்ததாலும், அவன் மீது கொண்ட அபரிமிதமான நம்பிக்கையாலும், இவனே தனக்கும்

சுக்கிரீவனுக்கும் நட்பு ஏற்பத்திக் கொடுத்தான் என்ற அபிமானத்தாலும், என்க.

33. இராமன் சீதையின் அங்க அடையாளங்களை அனுமனுக்குக் கூறுதல் [34 பாடல்கள்]
பாதங்கள்

பாற்கடல் பிறந்த செய்ய பவளத்தைப் பஞ்சி ஊட்டி,
மேற்பட மதியம் சூட்டி, விரகுற நிரைத்த; வெய்ய;
கால் தகை விரல்கள் ஐய! கமலமும் பிறவும் எல்லாம்,
ஏற்பில என்பதன்றி, இணை அடிக்கு உவமை உண்டோ? (4586)

(செய்ய-சிவந்த; பஞ்சி-செம்பஞ்சுக்குழம்பு; மதியம்-சந்திரன்; விரகு-திறமை; நிரை-வரிசை; வெய்ய-வெம்மை உடையன; தகை-அழகிய; ஐய-வியக்கத்தக்க; அடி-பாதம்; கமலம்-செந்தாமரை மலர்; ஏற்பில-நிகராகாது)

இராமன் அனுமனை நோக்கி, ''அன்பனே! பாற்கடலிலிருந்து பெற்ற சிறந்த சிவந்த பவளத் துண்டங்களுக்கு மேலும் செம்பஞ்சுக் குழம்பைப் பூசி, அதன்மேல் சந்திரர்களையும் பொருந்த அமையுமாறு, திறமையுடன், வரிசையாக வைத்தாலும் அவை வெப்பம் உடையதாக இருக்குமேயன்றி சீதையின் பாதங்கள் போல் தண்மையுடையதாக இருக்காது. அவளுடைய அழகிய கால் விரல்கள் வியக்கத்தக்க சிறப்புடையன. பொதுவாக விரல்களுக்கு உயர்வாக உவமை கூறத் தகுந்த செந்தாமரை மலரின் இதழ்கள் முதலிய எல்லாம், அவளுடைய கால் விரல்களுக்கு ஒப்பாகாது என்பதைத் தவிர, அவளுடைய இரண்டு பாதங்களுக்கும் உவமை கூறக் கூடிய பொருள்கள் உலகில் வேறு ஏதேனும் இருக்கிறதோ? இல்லை'' என்கிறான் இராமன்.

பாற்கடலில் தோன்றிய திருமகளின் அம்சமாகிய சீதைக்குப் பாற்கடலிலேயே தோன்றிய சிவந்த பவளத் துண்டுகள் உவமை. முன்பே நன்கு சிவந்திருக்கும் பவளத் துண்டுகளுக்கு மேலும் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டுவது என்பது அதன் நிறத்தையும், மென்மைத் தன்மையையும் மிகுவிக்க என்க, அந்தப்பாதத்திலுள்ள விரல்களின் மேல் இருக்கும் நகங்களுக்கு, சந்திரர்கள் உவமை. அவ்வாறு பவளத்துண்டங்களின் மேல் சந்திரர்களைத் திறமையாக வரிசைப்படி அமைத்தாலும் அவை வெப்பக் காற்றை வீசுமே தவிர, சீதையின் கால் விரல்கள் போல் தண்மையான குளிர்காற்றை வீசாது என்பதாம், பொதுவாகக் கால் விரல்களுக்குச் செந்தாமரை மலரின் இதழ்களை உவமையாகக் கூறுவது கவி மரபு. இங்கு கமலத்தையும் அனிச்சமலர், மாந்தளிர் போன்றவற்றையும் பிறவும் எல்லாம் என்ற சொல்லால் குறித்தார் என்க. இறுதியாக எதைச் சொன்னாலும் அவளுடைய பாதங்களுக்கும், விரல்களுக்கும் உவமை

சொல்ல வேறு ஒரு பொருளுமே உலகத்தில் இல்லை என்று முடிக்கிறான் கவிஞன். சீதை திருமகளின் அவதாரம். எனவே கடவுளாகக் கொண்டு பாதாதி கேசமாக வருணித்தார் என்க. மானிடர்களைக் கேசாதி பாதமாகவும், கடவுள்களைப் பாதாதி கேசமாகவும் வருணித்தல் என்பது ஒரு முறை. சீவக சிந்தாமணியில் விசயமாதேவியின் அழகைக் கேசாதி பாதமாகத் திருத்தக்க தேவர் வருணிப்பதை நினைவு கூர்க.

34. புற அடிகள்

''நீ மெய்யா உணர்தி ஐய! நிரை வளை மகளிர்க்கெல்லாம்
வாய்மையால் உவமையாக மதியறி புலவர் வைத்த
ஆமையாம் என்ற போதும், அல்லன சொல்லினாலும்,
யாம யாழ் மழலையாள்தன் புறவடிக்கு இழுக்கு மன்னோ!" (4587)

(நிரை-வரிசை; யாமம்-நள்ளிரவு; யாழ்-குறிஞ்சிப்பண்; புறவடி-பாதத்தின் மேற்பகுதி; இழுக்கு-குறைவு)

''அன்பனே! வரிசையாக அணியப்பெற்ற வளையல் களையுடைய பெண்களின் புறவடிகளுக்கு எல்லாம், மதிநுட்பம் நிறைந்த புலவர்கள் உண்மையாக உவமையாகக் கொள்ளுபவை ஆமைதான். அஃதல்லாத சுவடி என்று கூறினாலும், அவையெல்லாம் நள்ளிரவில் மிழற்றப்படும் குறிஞ்சிப்பண் போன்ற மழலைச் சொற்களைப் பேசுகின்ற தெய்வத் தன்மையுள்ள சீதையின் புறவடிகளுக்குக் குறைவாகவே இருக்கும் அன்றோ? இதை நீ உண்மையாகவே அறிந்து கொள்வாய்!'' என்றான் இராமன்.

பொதுவாக மகளிரின் புறவடிகளுக்கு ஆமையையும், புத்தகம் முதலியவற்றையும் உவமையாகக் கூறுவது கவிமரபு. சீதைக்கு அவ்வாறு சொன்னாலும் அது அவளுடைய புறவடிகளின் அழகினுக்கு இழுக்கைத் தருமேயன்றிப் பெருமையைத் தாராது என்பதாம்.

35. கணைக்கால்

''வினைவரால் அரிய கோதைப்
பேதை மென்கணைக்கால் மெய்யே
நினைவரால் அரிய; இன்னும்
நேர்படப் புலவர் போற்றும்
சினைவரால், பகழி ஆவம்,
நெற்சினையேனும் செப்பம்;
எனைவரால் பகரும் ஈட்டம்
யான் உரைத்து இன்பம் என்னோ?'' (4588)

(வினைவர்-ஒப்பனை செய்பவர்; கோதை-கூந்தல்; பேதை-பெண்/ சீதை; மெய்யே-உண்மையே; நேர்படல்-பொருத்தமாகுதல்; வரால்-

வரால் மீன்கள்; பகழி-அம்பு; ஆவம்-தூணி/புட்டில்; சினை- கருக் கொண்டிருத்தல்/சூல்கொண்டிருத்தல்; செப்பம்-சொல்ல மாட்டோம்; ஈட்டம்-கூட்டம்; எனைவரால்-மற்றவர்களால்/எல்லோராலும்; இன்பம்-சிறப்பு; நினைவு-ஊகமுமாம்; நினைவர்-ஊகித்து உணர்பவர்)

''ஓவியம் தீட்டுவோராலும், ஒப்பனை செய்வோராலும் நன்கு தீட்டுதற்கரிய அடர்த்தியான கூந்தலைக் கொண்ட பெண்ணாகிய சீதாதேவியின் மெல்லிய கணைக்கால்களின் அழகை ஊகித்தறிதலும் அரியதாகும். இது உண்மையே. புலவர்களால் கணைக்காலுக்கு ஒப்பாகப் போற்றிக் கூறப்படும் கருக்கொண்ட வரால்மீனும், அம்பறாத் தூணியும், சூல்கொண்ட நெற்பயிரும் இவள் கணைக்காலுக்கு உவமை என்று நான் கூறமாட்டேன். காரணம் எல்லோராலும் கூறப்படும் உவமைக் கூட்டத்தையே நானும் கூறுவதால் அதில் என்ன சிறப்பு இருக்கின்றது? அல்லது அது எனக்கு எத்தகைய இன்பத்தைத் தரும்? எனவே அவற்றை உவமையாகக் கூறுதல் பொருந்தாது'' என்றான் இராமன்.

கணைக்கால் என்பது முழங்கால்களுக்குக் கீழும், பாதத்திற்கு மேலும் உள்ள பகுதி என்க. அது உருவத்தால் வரால் மீன், அம்பறாத் தூணி, நெற்சினை போன்றவற்றைப் போன்றிருக்கும் என்று அறிஞர்கள் கூறுவர். ஆனால் சீதாதேவியின் கணைக்கால்கள் இவற்றிற்கெல்லாம் மேம்பட்ட அழகுடையது. எனவே எல்லோராலும் சொல்லப்படுகின்ற, எல்லாப் பெண்களுக்கும் கூறப்படுகின்ற உவமையை, என் சீதாதேவிக்கும் சொல்வதால் எத்தகைய சிறப்பும், இன்பமும் இருக்கப்போவதில்லை என்பது இராமனின் கருத்து.

36. தொடை

''அரம்பை என்று அளகமாதர் குறங்கினுக்கு அமைந்தஒப்பின்,
வரம்பையும் கடந்தபோது, மற்று உரை வகுக்கல் ஆமோ?
நரம்பையும், அமிழ்தம் நாறும் நறவையும், நல்நீர்ப்பண்ணைக்
கரும்பையும் கடந்தசொல்லாள் கவாற்கு இது கருது கண்டாய். (4589)

(அளகம்-கூந்தல்; குறங்கு-தொடை; அரம்பை-வாழைத்தண்டு; வரம்பு-எல்லை; நறவு-தேன்; பண்ணை-வயல்; கவான்-தொடை; கருதுதல்-சிந்தித்தல் நாறுதல்-தோன்றுதல்; கடத்தல்-மேம்படுதல்; வகுத்தல்-எடுத்துக் கூறுதல்; நரம்பு-வீணை/யாழ்)

''கூந்தல் முன் உச்சி மயிரையுடைய பெண்டிரின் தொடைகளுக்கு, வாழைத்தண்டைத் தொன்று தொட்டு உவமை கூறி வருகின்றனர். சீதையின்தொடைகள்அதனையும்வென்று பேரழகுடன்விளங்கும்போது வேறு எதனையும் உவமையாக எடுத்துக்கூறுதல் இயலுமோ? எனினும் நரம்புகளையுடைய வீணை, யாழின் இசையையும், அமிழ்தம் போன்று நறுமணம் மிகுந்த தேனையும், நல்ல நீர் வளம்மிக்க நன்செய் நிலத்தில் விளைந்த கரும்பின் சாற்றையும் விட மேம்பட்ட இனிய சொற்களை

உடையவளான சீதையின் தொடைக்கு, எது பொருத்தமாகும் என்று நீயே சிந்தித்து அறிந்து கொள்வாயாக!'' என்றான் இராமன்.

இவ்வாறு சீதையின் அங்க அடையாளங்களை இராமன் அனுமனுக்குத் தெரிவித்ததாக துளசிதாசரின் இராமசரித மானஸ் கூறவில்லை என்பது நோக்கத்தக்கது.

37. அல்குல்

''வார் ஆழிக் கலசக் கொங்கை, வஞ்சிபோல் மருங்குலாள் தன்,
தார் ஆழிக் கலைசார் அல்குல், தடங்கடற்கு உவமை; தக்கோய்!
பார் ஆழி பிடரில் தாங்கும் பாந்தளும், பனி வென்று ஓங்கும்
ஓர் அழித்தேரும் ஒவ்வா; உனக்கு நான் உரைப்பது என்னோ?'' (4590)

(தக்கோய்-சிறந்தவனே/தகுதியுடையவனே; வார்-கச்சு; ஆழி-சக்கரவாளப் பறவை/சகோரம்; மருங்குல்-இடை; தார்-ஒழுங்கு; ஆழி-வட்டம்; கலை-ஆடை/மேகலை; பார்-பூமி; பாந்தள்-பாம்பு/ஆதிசேஷன்; ஆழி-சக்கரம்; ஒவ்வா-ஒப்பாகாது; அல்குல்-பிட்டம்)

''தகுதியுடைய சிறப்புமிக்கவனே! கச்சு அணிந்த, சக்கர வாளப்பறவை போன்றதும், பூரணகும்பம் போன்றதுமான கொங்கைகளையும், இளவஞ்சிக்கொடி போன்ற இடையையும் உடைய சீதாதேவியின் கிண்கிணி மாலையணிந்ததும், ஒழுங்கானதும், வட்டவடிவானதுமான மேகலையையும், ஆடைகளையும் சார்ந்து இருக்கின்ற அல்குலுக்கு பெரிய கடலை உவமை சொல்லுவதென்றால், வட்டவடிவமான, கடல் சூழ்ந்துள்ள இவ்வுலகத்தைப் பிடரியில் தாங்கி இருக்கின்ற ஆதிசேஷன் என்னும் பாம்பின் படத்திற்கும், அடர்ந்த பனியை அடக்கி அகற்றி வெற்றி கொண்டு விளங்கும், சூரியனுடைய ஒற்றைச் சக்கரத்தேர்த் தட்டிற்கும் கூட நிகராகக் கூற முடியாது. இதைப்பற்றி உன்னிடம் இன்னும் நான் கூறுவதற்கு என்ன இருக்கிறது?'' என்றான் இராமன்.

பொதுவாகப் பெண்களின் அல்குலுக்குப் பாம்பின் படத்தையும், தேர்த்தட்டையும் உவமை கூறுவது கவி மரபு. இங்கே இராமன், இவ்விரண்டும், சீதையின் அல்குலுக்கு எந்தவிதத்திலும் நிகராகாது என்கிறான் என்க. இவ்வாறு காப்பியத்தலைவியின் அங்க அடையாளங்களை எல்லாம் ஒரு காப்பியத்தலைவன் மற்றொருவரிடம் கூறுவது மிகையாகும் என்று கூறுபவர்களும் உண்டு. என்றாலும் காப்பிய இலக்கணப்படி, காப்பியத்தலைவியின், அல்லது காப்பியத்தலைவனின் சாமுத்திரிகா இலட்சணங்களைக் காப்பியத்தில் கூறிவிட வேண்டும் என்பது ஒரு நியதி. எனவே கம்பன் இந்த இடத்தை அதற்குப் பயன்படுத்திக் கொண்டான் என்க. ஆதிசேஷன் என்னும் பாம்பு தன் ஆயிரம் முடி கொண்ட படத்தால் இவ்வுலகைத் தாங்கி நிற்கிறது என்பது ஒரு புராணக் குறிப்பு. அதை இங்கே ''பாராழி பிடரில் தாங்கும் பாந்தளும்'' என்றான் என்க. ''சகஸ்ர பணாமணி மண்டலம் மண்டிதே'' என்பது சுருதி வாக்கியம்.

38. இடை

''சட்டகம் தன்னை நோக்கி,
யாரையும் சமைக்கத் தக்காள்;
இட்டிடை இருக்கும் தன்மை,
இயம்பக் கேட்டு உணர்தி என்னின்,
கட்டுரைத்து உவமை காட்ட,
கண்பொறி கதுவா; கையில்
தொட்ட எற்கு உணரலாம்; மற்று
உண்டு என்னும் சொல்லும் இல்லை'' (4591)

(சட்டகம்-வடிவழகு; சமைக்க-செய்யத்தக்க; இட்ட-சிறிய; கட்டு உரைத்தல்-உறுதியாகச் சொல்லுதல்; கதுவுதல்-பற்றுதல்; எற்கு-எனக்கு; சட்டகம்-மேல் வரிச்சட்டம்/அச்சு/படிச்சந்தம்/பிரதி.)

''சீதையினுடைய வடிவழகைப் பார்த்தே பிரமன் மற்ற எல்லோருடைய உருவங்களையும் படைக்கத் தொடங்கினான்; அத்தகைய தகுதியுடையவள் சீதை. அவளுடைய சிறிய இடை இருக்கின்றது என்ற உண்மையை, நான் சொல்லி நீ உணரவேண்டும் என்றால் அது இயலாது. காரணம் உறுதியாக உவமையோடு எடுத்துச் சொல்லுவதற்கு உரிய பொருள் ஒன்றும் என்னுடைய கண்ணாகிய பொறி சென்று பற்றவில்லை. உவமையாகச் சொல்லுதற்கு ஒரு பொருளும் எனக்குத் தெரியவில்லை. நான் என் கையால் தொட்டு, உணர்ந்து, பார்க்கலாமே தவிர, இடை என்ற ஒன்று இருக்கிறது என்று கூறுவதற்கே இயலாது.'' என்றான் இராமன்.

பிரமன் இவ்வுலகில் பெண்களைப் படைக்க வேண்டும் என்று கருதினால் சீதையைத் தான் முன்மாதிரியாக வைத்துக் கொண்டு உருவம் செய்வான். அத்தகைய பேரழகு படைத்தவள் சீதை என்பதாம். இவளுக்கும் ஒரு சிறிய இடை இருக்கின்றது என்பதை ஒருவர் சொல்லி ஒருவர் அறிந்து கொள்ள முடியாது காரணம் அது அத்தகைய நுண்ணியது, நூல்போன்றது; அதற்கு ஒரு உவமையைச் சொல்லியும் புரியவைக்க முடியாது. காரணம் அத்தகைய உவமை ஒன்றும் உலகத்தில் இல்லவே இல்லை. நான் அவளைத்தொட்டு, ஸ்பரிசித்து உணர்ந்திருக்கிறேன். எனவே எனக்கு மட்டும் அவளுக்கு இடை இருக்கிறது என்பது தெரியும். மற்றவர்கள் உண்டு என்று சொல்லும் பேச்சுக்கே இடமில்லை என்று அவள் இடையின்மை பற்றியும், அவளுக்கு அவ்வாறு இடை இருந்தால் அதற்கு உவமையின்மை பற்றியும் விதந்து கூறுகிறான் இராமன் என்க.

இதே கருத்தை முன்பு சீதையின் அழகை வருணிக்கும் கோலம் காண் படலத்தில் தோழியர் கூற்றாகவும் இராமன் கூற்றாகவும், பின்னர் சூர்ப்பணகை கூற்றாகவும், இராவணன் உருவெளித் தோற்றத்தின்போது அவன் கூற்றாகவும் கவிஞன் கூறியுள்ளதையும் இங்கு நினைவு கூர்க.

இட்டு இடை என்பது சிறிய இடை என்பதைக் குறிக்கும். அவளுக்கு இடை உண்டு என்பதை அவளைத் தொட்டு உணர்ந்த என்னால் மட்டும்தான் கூறமுடியும். அவளை எடுத்து வளர்த்த செவிலித்தாய் முதலிய ஐந்துவகைத் தாய்மார்கள், ஒரு வேளை அறிந்திருந்தால் உணர்ந்திருக்கக் கூடும் என்றான் என்க. ''உண்டெனத் தமர் மதிப்பர்; நோக்கினார் பிறரெல்லாம் உண்டில்லை என ஐயம்கொளல் அன்றி உணர்வதறிதே,'' என்பது சீவக சிந்தாமணி. இங்கே தமர் என்பது நற்றாய், தவ்வை, செவிலித்தாயரைக் குறிக்கும் எனக்கொள்க.

39. வயிறு

''ஆல்இலை, படிவம் தீட்டும்
ஐய நுண்பலகை, நொய்ய
பால் நிறத்தட்டம், வட்டக்
கண்ணடி, பலவும் இன்ன,
போலும் என்று உரைத்தபோதும்,
புனைந்துரை; பொதுமை பார்க்கின்,
ஏலும் என்று இசைக்கின் ஏலா;
இது வயிற்று இயற்கை; இன்னும்'' (4592)

(ஐய-அழகிய; நுண்-மெல்லிய; நொய்ய-மென்மையுடைய; தட்டம்-தட்டு; ஏலும்-பொருந்தும்; இசைத்தல்-கூறுதல்; இயற்கை-தன்மை/இயல்பு; போலும்-ஒத்திருக்கும்; புனைந்துரை-கட்டுக்கதைகள்/இட்டுக்கட்டிச் சொல்லப்பட்டன).

''பொதுவாக நோக்கினால் பெண்களின் வயிற்றுக்கு, ஆல்இலை, ஓவியம் தீட்டுதற்குரிய அழகிய மெல்லிய சித்திரப்பலகை, மென்மை யான, பால் போன்று வெண்ணிறமான தட்டு, வட்டவடிவமுள்ள கண்ணாடி இன்னும் இவைபோன்ற பலவற்றை உவமையாகப் புலவர்கள் கூறுவார்கள். அவை அனைத்தும் கட்டுக்கதைகளாகும். முன்சொன்ன ஆல்இலை முதலியன சீதையின் வயிற்றின் அமைப்புக்கு உவமையாகப் பொருந்தும் என்று வலிந்து கூறினாலும் அது உவமையாவதற்கே பொருந்தமாட்டாது. இது அவளுடைய திருவயிற்றின் இயல்பு''. மேலும்-பாடல் தொடர்கிறது.

சீதையின் வயிற்றின் அமைப்புக்கு உவமை கூற முடியாது என்பது கருத்து.

40. உந்தி

''சிங்கல் இல் சிறுகூதாளி, நந்தியின் திரட்பூச்சேர்ந்த
பொங்கு பொன் துளைஎன்றாலும், புல்லிது; பொதுமைத்து ஆமால்;
அங்கு அவள் உந்தி ஒக்கும் சுழி எனக் கணித்தது, உண்டால்;
கங்கையை நோக்கிச் சேறி, கடலினும் நெடிது கற்றோய்!'' (4593)

(நெடிது-மிகுதி; உந்தி-தொப்பூழ்; சிங்கல்-கெடுதல்/சுருங்குதல்; திரள்-அடிதிரண்ட/வட்டவடிவமான; நந்தி-நந்தியாவட்டம்பூ; பொங்கு-ஒளி/மிகுந்த; பொன்-பொற்காசு; புல்லிது-அற்பமானது; சுழி-நீர்ச்சுழி; கணித்தல்-எண்ணுதல்;/கருதுதல்; நோக்குதல்- அகக்கண்ணால் பார்த்தல்; கூதாளி-ஒருவகைச் செடி)

''கடலை விடவும் விரிவாகவும், ஆழமாகவும் மிகுதியாகவும் இலக்கணங்களைக் கற்றறிந்தவனே! அனும! சுருங்குதல் இல்லாத சிறுகூதாளி என்னும் செடியின் அடி திரண்ட மலரும், நந்தியா வட்டம் என்று கூறப்படும் செடியில் மலரும் பூவும், ஒளிமிகுந்த மாற்றுயர்ந்த பொன்னாலாகிய காசுகளில் இருக்கின்ற துளையும், இவளுடைய உந்திச்சுழிக்கு ஒப்பாகும் என்று சொன்னால் அது அற்பமானது மட்டுமல்ல. அவை பொதுவாகப் பெண்டிரின் உந்திக்கு உவமை கூறப் படுவதாகும். இவளுடைய உந்திச்சுழிக்கு உவமை கூறவேண்டு மென்றால், நான் கங்கைக் கரைக்குச் சென்றபொழுது, அந்தக் கங்கை நதியில்ஏற்பட்டநீர்ச்சுழியை இவள்உந்திச்சுழிக்குஒப்பிட்டுஅப்பொழுது எண்ணிப்பார்த்தது உண்டு. நீயும் அவளைப் பார்க்கும்போது, கங்கையின் நீர்ச்சுழியை அகக் கண்ணால் நினைவுபடுத்திப் பார்த்துக் கொண்டு சென்று சேர்வாயாக'' என்றான் இராமன்.

கூதாளி என்பது கார்காலத்தில் வளரும் ஒருவகைச் செடி. சீதையின் உந்திச்சுழியும் உவமையிலாப் பேரழகு வாய்ந்தது என்பது கருத்து. இவளுடைய உந்திச்சுழிக்குத்தான் கங்கையின் நீர்ச்சுழி ஒக்கும் என்று கூறினானே தவிர, வேறு ஒன்றும் இவள் உந்தி போல் பேரழகு படைத்தது இல்லை என்றான் என்க. முற்காலத்தில் பொற்காசுகளில் சிறுதொளை இடுவது உண்டு. அது ''தொளைப்பொன்'' என்று வழங்கப்பட்டது. அக்காசுகள் மாற்றுயர்ந்த பொன்னால் செய்யப்பட்டன என்பது அறிக.

41. வயிற்று மடிப்பு

''அல்லி ஊன்றிடும் என்று அஞ்சி,
அரவிந்தம் துறந்தாட்கு, அம்பொன்
வல்லி மூன்று உளவால், கோல
வயிற்றில் மற்று அவையும், மார
வில்லி, மூன்று உலகின் வாழும்
மாதரும் தோற்ற மெய்ம்மை
சொல்லி ஊன்றியவாம் வெற்றி
வரையெனத் தோன்றும் அன்றே!'' (4594)

(அல்லி-அகவிதழ்கள்; ஊன்றுதல்-உறுத்துதல்; அரவிந்தம்- தாமரை மலர்; வல்லி-கொடி/மடிப்புகள்; கோலம்-அழகு; மாரன்- மன்மதன்; வில்லி-வில்வீரன்; ஊன்றியவாம்-உறுதிப்படுத்திய; வரை வரையப்பட்ட எழுத்துக்கள்; மெய்ம்மை-உண்மைச்செய்தி)

தாமரை மலரின் அகஇதழ்கள் தன்பாதங்களில் தைத்து வருத்தும் என்று பயந்து, அந்தத் தாமரை மலரை விட்டு நீங்கி இங்கு வந்தவளான சீதைக்கு, அழகிய பொன் நிறத்தாலான கொடி போன்று மூன்று மடிப்புகள் அவளுடைய அழகிய வயிற்றில் இருக்கின்றன. அந்த மடிப்புகளும் வில்வித்தையில் வல்லவனான வீரன் மன்மதன், இந்த மூன்று உலகங்களிலும் வாழ்கின்ற பெண்கள் எல்லோரும் சீதையின் அழகுக்குத் தோற்றுப் போயினர் என்ற உண்மைச் செய்தியை எல்லோரும் அறியும்படி சொல்லி, அதை உறுதிப்படுத்தி நிலைபெற்று நிற்கச்செய்யும்படி எழுதப் பட்ட இரேகைவரி எனத் தோற்றமளிக்கும். அவற்றையும் காண்பாயாக'' என்றான் இராமன்.

''அல்லி ஊன்றிடும் என்று அஞ்சி'' என்பதால், இலக்குமியாகிய சீதாதேவியின் மெல்லிய பாதங்களின் மென்மைத் தன்மை சிறப்பிக்கப்பட்டது என்க. இதுபோல உத்தம சாதிப் பெண்களுக்கு வயிற்றில் மூன்று மடிப்புக்கள் இருக்கும் என்று வடநூலும் கூறுகிறது. இதைக் ''திரிவிலி'' என்கின்றனர். இதே போன்ற கருத்தமைந்த பாடல் ஒன்று நைடதத்திலும் கிடைக்கிறது. ஒருவர் அடைந்த வெற்றியைக் கல்லில் பொறித்து வைத்தல் பழங்கால மரபு. அதுபோல் சீதையின் அழகு அமைந்த வெற்றியை, அழகுக்குத் தலைவனான மன்மதன் எழுதிவைத்த வெற்றிச் சின்னமாக- வெற்றியின் அறிகுறிக் கோடுகளாக இம்மூன்று மடிப்புகளையும் கொள்ளவேண்டும் என்பதாம்.

42. கொங்கைகள்

''செப்பு என்பேன், கலசம் என்பேன்;
    செவ்விளநீரும் தேர்வேன்;
துப்புஒன்று திரள் சூது என்பேன்;
    சொல்லுவேன் தும்பிக்கொம்பும்;
தப்பு இன்றிப் பகலின் வந்த
    சக்கரவாகம் என்பேன்;
ஒப்பு ஒன்று முலைக்குக் காணேன்;
    பல நினைந்து உலைவேன் இன்னும்;'' (4595)

(செப்பு-மணிச்செப்பு/சிமிழ்; கலசம்-பூரண கும்பம் / பொற்கலசம்; தேர்தல்-ஆராய்தல்; துப்பு-பவளம்; சூது-சொக்கட்டான்காய்; தும்பி-யானை; கொம்பு-தந்தம்; உலைதல்-வருந்துதல்; தும்பிக்கொம்பு-யானையின் இளமருப்பு)

''சீதையின் கொங்கைகளுக்கு உவமையாக இரத்தினங்களால் செய்யப்பட்ட சிமிழைக் கூறலாமோ என்று பார்க்கிறேன். பூரண கும்பமாகிய கலசத்தைக் கூறலாமா? அல்லது சிறந்த இளநீர்க்காய்-தென்னங் குரும்பைக் கூறலாமா என்று ஆராய்ந்து பார்க்கிறேன்; சிவந்த பவளத்தால் கடைந்து எடுத்துச் செய்யப்பட்ட

திரண்ட சொக்கட்டான்காய் என்று கூறலாமா? அல்லது யானையின் இளந்தந்தங்களைக் கூறலாமா? அல்லது தப்பாது பகலில் வெளிப்பட்டுத் தோன்றுகின்ற இணை பிரியாத சக்கரவாகப் பறவைகளுக்கு உவமை கூறலாமா? என்று பார்க்கிறேன். ஆனால் அவளுடைய கொங்கைகளுக்கு ஒப்பாகச் சொல்லக் கூடிய பொருள் உலகில் ஒன்றுமே இல்லை என்பதை இப்போது உணர்கிறேன்; எனினும் இன்னும் பலவாறாக நினைத்துப் பார்த்து வருந்துகிறேன்'' என்றான் இராமன்.

சக்கரவாகம் என்பது சூரியனது கிரணங்களையே உணவாக உட்கொண்டு உயிர்வாழும் இயல்புடைய இணைபிரியாத பறவைகள் எனவே ''பகலின் வந்த சக்கரவாகம்'' என்றார் என்க. இவைகள் எல்லாம் ஒப்பாகாததால் அவளுடைய கொங்கைகளுக்கு அவைகளே உவமைகள் என்பதாம்.

43. தோள்கள்

''கரும்பு கண்டாலும், மாலைக்காம்பு கண்டாலும், ஆலி
அரும்பு கண் தாரை சோர்வது அன்றி, வேறு அறிவது உண்டோ?
சுரும்பு கண்டு ஆலும் கோதை தோள் நினைந்து, உவமை சொல்ல,
இரும்பு கண்டனைய நெஞ்சம் எனக்குஇலை இசைப்பதுஎன்னோ?'' (4596)

(மாலை-ஒழுங்கு; காம்பு-மூங்கில்; சுரும்புகள்-வண்டுகள்; ஆலுதல்-ஆரவாரித்து மொய்த்தல்; கோதை-கூந்தல்; ஆலி-மழைத்துளி; அரும்புதல்-உண்டாதல்; சோர்வது-சொரிவது; அனைய-போன்ற; இசைப்பது-சொல்லுவது; தாரை-கண்ணீர்;)

கரும்பினைக் கண்டாலும், வரிசையாக நிற்கின்ற மூங்கிலைக் கண்டாலும், உடனே சீதையின் தோள்களை நினைத்து என் கண்கள் மழைத்துளி போல, தாரை தாரையாகக் கண்ணீரைச் சொரிகின்றன. அந்த வருத்தத்தில் எனக்கு வேறு எதுவுமே உவமையாகக் கூறத் தெரியவில்லை. வண்டுகள் ஆரவாரித்து மொய்க்கும் கூந்தலையுடைய சீதையின் தோள்களுக்கு உவமை கூறுவதற்கு எனக்கு இரும்பினாலான நெஞ்சம் இருக்க வேண்டும். அது எனக்கு இல்லை; எனவே நான் என்ன கூற முடியும்?'' என்று கேட்கிறான் இராமன்.

பொதுவாகப் பெண்களின் தோள்களுக்குக் கரும்பையும், மூங்கிலையும் உவமைகூறுவது இயல்பு. ஆனால் இவற்றைப் பார்த்தாலே இராமனுக்குப் பிரிவாற்றாமையால் கண்கள் பனித்து விடுகின்றன. எனினும் அவளுடைய மெல்லிய தோள்களுக்கு, இத்தகைய கடினமான கரும்பையும் மூங்கிலையும் உவமை கூற அவனுக்கு வலிய நெஞ்சம் இருக்கவில்லை. எனவே உவமைகூற முடியாமல் தவிக்கிறான் என்பதாம். வலிய கல்நெஞ்சிற்கு இரும்பை உவமையாகக் கூறுவது கவி மரபு. ''இரும்பு தருமனத்தேன்'' என்பது திருவாசகம்.

44. முன்கை

"முன்கையை ஒப்பது ஒன்றும் உண்டு, மூன்று உலகத்துள்ளும்
என்கையே இழுக்கம் அன்றே? இயம்பினும், காந்தள் என்றல்,
வன்கை; யாழ்மணிக்கை என்றல், மற்று ஒன்றை உணர்த்தல் அன்றி
நன்கையாள் தடக்கைக்கு ஆமோ? நலத்தின் மேல் நலம் உண்டாமோ?" (4597)

(என்கையே-என்று சொல்லுதலே; இழுக்கம்-குற்றம்; மணி அழகிய; நன்கை-நல்லொழுக்கமுடைமை; தடம்-வளைவு; நலம்-அழகு; வன்கை-வலியகூற்று; மணிக்கை-முன்னங்கை/மணிக்கட்டு)

"இந்த மூன்று உலகத்துள்ளும், சீதையின் முன்னங்கைகளுக்கு ஒப்பாக ஒரு பொருள் உண்டு என்று கூறுவதே அவற்றிற்கு இழுக்காகும்; அவ்வாறே சொல்வதென்றாலும், எல்லாப் பெண்களின் முன்னங்கைகளுக்கும் உவமையாகப் புலவர்கள் கூறுகின்ற செங்காந்தள் மலரைச் சீதையின் முன்கைகளுக்கு உவமை கூறினால் அதை விட வன்மையானது வேறொன்றில்லை. தவிரவும், மகரயாழின் முனை என்று உவமை கூறினாலும் அது வேறு ஏதோ ஒன்றைக் கூறுவதைப் போல இருக்குமே அன்றி, சீதையின் முன்கைகளுக்கு உவமை கூறியதாக அமையாது. எனவே இங்கே கூறப்பட்ட செங்காந்தள் மலரும், அழகிய மகரயாழின் முனையும் சீதாதேவியின் முன்கைகளுக்கு உவமையாகச் சொல்லப்படும் தரத்ததோ? இதுதான் பேரழகு என்று வரம்பு கட்டி வரையறுத்தபின், அதற்கும் மிஞ்சிய ஓர் அழகு என்பது ஒன்று உண்டோ? என்கிறான் இராமன்.

எனவே சீதையின் முன்கைக்கு உவமை சொல்ல இம்மூவுலகத்திலும் ஒரு பொருளும் இல்லை என்பது கருத்து. மகரயாழின் முனை சிறுத்து வளர்ந்திருத்தலாலும், அவற்றின் முனையில் அமைந்திருக்கும் வார்க் கட்டுகள் பெண்களின் முன்கையில் அணிந்திருக்கும் வளையல் போன்று இருத்தலாலும் யாழ் மணிக்கையை பெண்களின் முன்கைக்கு உவமையாகக் கூறுவது கவிமரபு. செங்காந்தள் மலர் மென்மையாலும், சிவந்த நிறத்தாலும் அழகாலும், வடிவத்தாலும் பெண்களின் கைகளுக்கு உவமை. "தடக்கை" என்ற சொல்லுக்கு இங்கே பெரியகை என்று பொருள் கொள்ளாமல், வளைந்த கை என்று பொருள் கொள்ளப்பட்டது. "தடவென்கிளவி கோட்டமும் செய்யும்" என்பது தொல்காப்பியம்.

45. உள்ளங்கை

"ஏலக்கொண்டு அமைந்த பிண்டி இளந்தளிர்கிடக்க; யாணர்க்
கோலக் கற்பகத்தின் காமர்குழை, நறுங்கமல மென்பூ,
நூலொக்கும் மருங்குலாள் தன் நூபுரம் புலம்பும், கோலக்
காலுக்குத் தொலையும் என்றால், கைக்கு ஒப்பு வைக்கலாமோ?" (4598)

(ஏலம்-அழகு; பிண்டி-அசோகம்; யாணர்-புதிய; கோலம்-அழகு; காமர்-விரும்பத்தக்க; குழை-தளிர்; மருங்குல்-இடை; நூபுரம்-சிலம்பு;

புலம்புதல்-ஒலித்தல்; தொலைதல்-தோற்றுப் போதல்; கிடக்க-ஒருபுறம் இருக்கட்டும்.)

அழகும் நறுமணமும் அமைந்த அசோகமரத்தின் இளமையான தளிர்கள் ஒரு புறம் இருக்கட்டும்; புதியனவான, அழகு மிக்கக் கற்பகமரத்தின் விரும்பத்தக்க தளிர்களும், நறுமணம் மிக்க தாமரைக் கொடியின் மெல்லிய தாமரை மலருமே, நூல் போன்ற இடையை உடைய சீதையின் சிலம்புகள் ஒலிசெய்யும் அழகிய கால்களுக்கு உவமையாகாமல் தோற்றுப்போகும் என்றால், அவைகளை, மேலான கைகளுக்கு உவமையாகக் கொண்டு கூறுவது எங்ஙனம் பொருந்தும்?'' என்கிறான் இராமன்.

எனவே சீதையின் உள்ளங்கைகளுக்கும் உவமையே இல்லை என்பதாம்; தேவலோகத்தில் இருக்கும் கற்பகத்தருவின் இளந்தளிரும், செந்தாமரை மலரும் ஆகிய மிக உயர்ந்த பொருள்களே அவளுடைய கைகளுக்கு உவமையாகாது என்று கூறுகிறபோது அவற்றைவிடத் தாழ்ந்ததான அசோகமரத்தின் தளிர் உவமை என்று கூறுவது எப்படிப் பொருந்தும் என்பதால் ''பிண்டி இளந் தளிர் கிடக்க'' என்று இகழ்வாகக் கூறினான் என்க. உடல் உறுப்புக்களில் தாழ்ந்த கால்களுக்கு இவையிரண்டும் ஒப்பாகாது. தோற்கும் என்கின்றபோது, மேலானதும் உயர்ந்தது மான கைகளுக்கு எவ்வாறு ஒப்பிட்டுக் கூற முடியும்? என்பதாம். அசோகத்தின் இளந்தளிர்; கற்பத்தருவின் குழை, தாமரை மலர் இவைகள் சீதையின் கால்களுக்கே உவமையாகாது என்னும்போது, அவற்றை அவள் கைகளுக்கு உவமையாகக் கூற இயலாது என்றான் என்பதாம்.

46. நகங்கள்

''வெள்ளிய முறுவல், செவ்வாய்
  விளங்கு இழை இளம்பொற் கொம்பின்,
வள்உகிர்க்கு உவமை நம்மால்
  மயர்வு அற வகுக்கல் ஆமோ?
''எள்ளுதிர் நீரே மூக்கை''
  என்று கொண்டு, இவறி, என்றும்
கிள்ளைகள், முருக்கின் பூவைக்
  கிழிக்குமேல், உரைக்கலாமோ? (4599)

(வெள்ளிய-வெண்மையான; முறுவல்-பற்கள்; இழை- அணி கலன்கள்; பொன்-அழகிய; கொம்பு-பூங்கொடி; வள்-கூரிய; உகிர்-நகங்கள்; மயர்வு-மயக்கம்; வகுக்கல்-கூறுதல்; ஆமோ-ஆகுமோ/ இயலுமோ; கிள்ளை-கிளி; முருக்கு-முள்முருங்கை; எள்ளுதல்- இகழ்தல்; இவறுதல்-மறத்தல்/சினத்தல்)

''வெண்மையான பற்களும், சிவந்தவாயும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற அணிகலன்களும் உடைய, இளமையான, அழகிய, பூங்கொடி

போன்ற இடையுடைய சீதையின் கூரிய நகங்களுக்கு, மயக்கமில்லாது, தெளிவாக உவமை கூறுதல் என்பது நம்மைப் போன்றோரால் ஆகக் கூடிய செயலோ? அன்று; கிளிப்பிள்ளைகள், முள் முருங்கை மலரைப் பார்த்து நீங்களே மூக்கை இகழ்கின்றீர்களே என்று எண்ணிக்கொண்டு, சற்றுச்சினந்து, அந்தப்பூவையே கோதிவிடுமானால், அத்தகைய கிளியின் மூக்கைச் சீதையின் கை நகங்களுக்கு உவமையாகக் கூற முடியுமோ?'' என்றான் இராமன்.

பொதுவாகப் பெண்களின் கை நகத்திற்குக் கிளியின் மூக்கை உவமை கூறுதல் மரபு. முள் முருங்கை மலரைப் பெண்களின் வாய்க்கு உவமை கூறுதல் மரபு. எனினும் சீதையின் கைநகத்திற்குக் கிளிமூக்கு ஒப்பாகாது என்பதாம்.

47. கழுத்து

''அங்கையும், அடியும் கண்டால், அரவிந்தம் நினையுமாபோல்,
செங்களி சிதறி, நீலம் செருக்கிய தெய்வ வாள் கண
மங்கை தன் கழுத்தை நோக்கின், வளர் இளங்கமுகும், வாரிச்
சங்கமும், நினைதியாயின், நவை என்று துணிதி, தக்கோய்!'' (4600)

(அரவிந்தம்-தாமரைமலர்; செங்களி-செவ்வரி/சிவந்தஇரேகை; சிதறி-படர்ந்து; செருக்குதல்-மதர்த்தல்; நோக்குதல்-அகக்கண்ணால் காணுதல்; வாரி-கடல்; சங்கம்-சங்கு; நவை-தவறு/குற்றம்; துணிதல்-தெளிதல்; கமுகு-பாக்குமரம்; நீலம்-குவளை மலருமாம்)

''சிறந்த தகுதிகளை உடையவனே! சீதையின் உள்ளங்கையையும் பாதங்களையும் கண்டால், செந்தாமரை மலர் நினைவிற்கு வருதல் போல, செவ்வரி படர்ந்ததும், நீலநிறம் பொருந்தியதும், குவளைமலர் போன்றதும், களித்து மதர்த்ததும், தெய்வீகத்தன்மை பொருந்தியதும், ஒளிமிகுந்ததும், வாள்போன்று கூர்மையானதுமான கண்களை யுடையவளான சீதையின் கழுத்தை நீ பார்த்த பிறகு, ஓங்கி வளரும் இயல்புடைய இளமையானபாக்குமரமும், கடலில் தோன்றுகின்ற சங்கும் உவமையாகும் என்று நினைத்துக் கொள்வாயானால், அது தவறு என்பதை நன்றாகத் தெளிந்து கொள்வாயாக! அவை ஒப்பாக மாட்டா!'' என்றான் இராமன்.

பொதுவாகப் பெண்களின் கழுத்துக்கு உவமையாகக் கூறப்படும் கமுகும், சங்கும், சீதையின் கழுத்திற்கு உவமையாகச் சொல்லப்பட முடியாததாகும். அது அவற்றினும் மேம்பட்டது; அதற்கு உவமையே இல்லை என்பதாம்.

48. வாய் இதழ்

''பவளமும், கிடையும், கொவ்வைப்பழனும், பைங் குமுதப் பூவும்,
துவள்வில இலவம், கோபம், முருக்கு என்று இத்தொடக்கம் சாலத்

தவளம் என்று உரைக்கும் வண்ணம் சிவந்து, தேன்ததும்புமாயின்,
குவளை உண் கண்ணி வண்ணவாய் அது; குறியும் அஃதே!'' (4601)

(கிடை-செங்கிடை/நெட்டி; பழன்-பழம்; துவள்வில-அசைதல் இல்லாத; கோபம்-இந்திரகோபம்/தம்பலப்பூச்சி; தவளம்-வெண்மை; உண்-மைஉண்ட/மைதீட்டப்பெற்ற; வண்ணம்-அழகு; குறி-அடையாளம்; முருக்கு-முள்முருங்கை மலர்/பலாசமலர்; சால-மிகவும்; குமுதம்-செவ்வல்லி மலர்; ததும்புதல்-நிரம்பிவழிதல்;)

நீலோற்பல மலர் போன்ற கரிய மை தீட்டப்பெற்ற கண்ணை உடையவளான சீதையின் அழகிய வாயானது, சிவந்த பவளத்தின் துண்டு, சிவந்தசெங்கிடை என்னும் நெட்டி, சிவந்த கொவ்வைப்பழம், சிவந்த பசுமையான செவ்வல்லிமலர், அசைதல் இல்லாத சிவந்த கல்யாண முருங்கை மலர் என்று இவை முதலாகக் கூறப்படுகின்ற உவமைப் பொருள்கள் எல்லாம் மிகவும் வெண்மையானவை என்று கூறும்படி மிகமிகச்சிவந்து, தேன் நிரம்பப்பெற்றதாய் உள்ள வாயிதழை உடையவள் சீதை. இதுதான் அவளுக்கு ஏற்ற அடையாளமும் ஆகும்'' என்றான் இராமன்.

பவளம், நெட்டி, கொவ்வைக்களி, செவ்வல்லி மலர், இலவம்பூ, இந்திரகோபப்பூச்சி, முள்முருங்கை மலர் என்று இவையெல்லாம் சிவந்த நிறத்தன என்றாலும் சீதையின் வாயின் சிவந்த நிறத்தினை ஒப்பிடும்போது, இவையெல்லாம் வெண்மையான நிறத்தன என்று கூறும்படி தோற்றுப்போகும் என்பதாம். ''இவள்தான் சீதை என்று நீ அறிந்து கொள்ளக்கூடிய அடையாளம், அவளது மிகச்சிறந்த வாயிதழும், அதில் ததும்பி நிற்கின்ற தேனினுமினிய வால் எயிறு ஊறிய நீருமே'' என்றான் இராமன் என்க.

49. ''சிவந்தது ஓர் அமிழ்தம் இல்லை;
தேன்இல்லை; உள என்றாலும்
கவர்ந்தபோது அன்றி, உள்ளம்
நினைப்ப ஓர் களிப்பு நல்கா;
பவர்ந்த வாள் நுதலினாள் தன்
பவள வாய்க்கு உவமை பாவித்து
உவந்தபோது, உவந்த வண்ணம்
உரைத்தபோது, உரைத்தது ஆமோ?'' (4602)

(பவர்ந்த-நெருங்கிய; வாள்-ஒளி; நுதல்-நெற்றி; பாவித்து பாவனை செய்து; கவர்தல்-அள்ளி உட்கொள்ளுதல்)

''சீதையின் வாயிதழைப் போல் சிவந்த நிறம் உடையதான ஒரு தேவாமிர்தம் கிடையாது; காரணம் அமிழ்தம் வெண்ணிறமானது; தேன் சிவந்த நிறம் என்றாலும் சீதையின் வாயிதழ் அளவுக்கு மிகச் சிவந்த நிறமற்றது. எனவே இவைகளைச் சீதையின் வாயிதழுக்கு ஒப்புக்

கூறமுடியாது. அவ்வாறே சிவந்த அமிழ்தமும், தேனும் இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் கூட, அவற்றை நாம் அள்ளிப்பருகும்போதுதான் அவை நமக்கு மகிழ்ச்சியை விளைவிக்கும். ஆனால் சீதையின் வாயிதழோ நாம் உள்ளத்தில் நினைத்த மாத்திரத்திலேயே மகிழ்ச்சியும் களிப்பும் நல்கும் இயல்புடையது. எனவே, நெருங்கிய, ஒளி பொருந்திய நெற்றியை உடைய சீதையின் பவளம்போலச்சிவந்தவாய்க்கு உவமைகூறலாம் என்று பாவனைசெய்து, மகிழ்ச்சியுற்ற போதும், அவ்வாறு மகிழ்ச்சியுற்று வார்த்தையால் கூறும் போதும் நாம் உண்மையாக அவளுடைய வாயிதழின் சிறப்பைக் கூறியது ஆகுமோ! ஆகாது'' என்றான் இராமன்.

''உள்ளக் களித்தலும், காண மகிழ்தலும், கள்ளுக்கு இல்; காமத்திற்கு உண்டு'' என்பது குறள் 1281. ''உள்ளம் நினைப்ப ஓர் களிப்பு நல்கா'' என்ற கம்பன் சொல்லுக்கு அடிப்படை இந்தக் குறள் என்க. ''உவந்தபோது உவந்தவண்ணம் உரைத்தல்'' என்பது நினைத்தபோது தோன்றியபடி, உண்மையை ஆராயாமல் வாய்க்கு வந்தபடி பொருத்தமில்லாது கூறுதல் என்று பொருள் தரும்.

50. பற்கள்

''முல்லையும், முருந்தும், முத்தும்
 முறுவல் என்று உரைத்த போது,
சொல்லையும் அமிழ்தும், பாலும்,
 தேனும் என்று உரைக்கத் தோன்றும்;
அல்லது ஒன்று ஆவது இல்லை;
 அமிழ்திற்கும் உவமை உண்டோ?
வல்லையேல் அறிந்து கோடி
 மாறுஇலா ஆறு சான்றோய்!'' (4603)

(முருந்து-மயிலிறகின் அடிப்பகுதி; முறுவல்-பற்கள்; கோடி-கொள்வாயாக; வல்லையேல்-முடிந்தால்; மாறு-நிகர்/உவமை)

''ஆன்றவிந்து அடங்கிய சான்றோனே! சீதையின் பற்களுக்கு, முல்லை அரும்பும், மயிலிறகின் அடிப்பகுதியும், முத்துக்களும் உவமையாகும் என்று நாம் கூறினால், பின்னர் அவளுடைய இனிய சொற்களையும், அமிழ்து, தேன், பால், என்று அவற்றிற்கு உவமை கூறத்தோன்றும்; இது போல முன்பு சொல்லியதையே உவமை கூறலாமேயன்றிப் புதிதாக வேறு ஒன்றும் உவமையாகக் கூற இயலாது. நம்மால் தேவ அமிர்தத்துக்கு ஒப்பான ஒரு பொருளை உவமை கூற முடியுமோ? அதுபோலத்தான் சீதையின் பற்களுக்கும் உவமை கூற இயலாது. அவ்வாறு நீ வல்லமை மிகுந்தவனானால், நீயே அவள் பற்களுக்கு நிகராக எதனை உவமை கூறலாம் என்னும் வழியை ஊகித்து உணர்ந்து கொள்வாயாக'' என்றான் இராமன்.

முல்லை, முருந்து, முத்து என்பன பொதுவாகப் பெண்களின் பற்களுக்கு உவமை கூறத்தக்கன. எனினும் இவை சீதையின் பற்களுக்கு உவமை கூற ஒவ்வாதன. அவ்வாறு இவற்றையே உவமை கூற வேண்டுமென்றால், பின்னர் அவள் சொற்களுக்குப் பால், தேன், அமிழ்தம் என்று கூறியவற்றையே மீண்டும் கூற வேண்டி வரும். தேவ அமிழ்தத்திற்கு ஏதேனும் உவமை கூற முடியுமோ? முடியாதன்றோ? அது போல அவ்வமிழ்தோடு பிறந்த சீதையின் பற்களுக்கும் உவமை கூற முடியாது. நீ இதில் தேர்ச்சியுள்ளவன் என்றால் நீயே உவமையாகக் கூடிய பொருளை ஊகித்து உணர்ந்து கொள்வாயாக'' என்றான் இராமன் என்பதாம். இவ்வாறு அவள் பற்களுக்கு ஏதேனும் தவறான ஒரு உவமையைச் சொன்னோம் என்றால், அவள் இனிய சொற்களுக்கும் அதே மாதிரியான தவறான உவமையைச் சொன்னவர்கள் ஆகிவிடுவோம் என்பது கருத்து.

51. மூக்கு

''ஓதியும், எள்ளும், தொள்ளைக்
குமிழும் மூக்கு ஒக்கும் என்றால்,
சோதி செய் பொன்னும், மின்னும்,
மணியும் போல், துளங்கித் தோன்றா;
ஏதுவும் இல்லை; வல்லோர்
எழுதுவோர்க்கு எழுத ஒண்ணா
நீதியை நோக்கி, நீயே
நினைதியால் நெடிது காண்பாய்!'' (4604)

(காண்டல்-அறிதல்; ஓதி-பச்சோந்தி; எள்-எள்ளின்பூ; தொள்ளை-துளை; குமிழ்-குமிழம்பூ; சோதி-ஒளி; துலங்குதல்-பொலிதல்/பிரகாசித்தல்; ஏது-காரணம்; நீதி-தன்மை; நோக்குதல்-ஆராய்ந்து பார்த்தல்; நினைதல்-உணர்ந்து கொள்ளுதல்; நெடிது காணல்-தீர்க்கதரிசனம்/தொலைநோக்கு; மின்னும்-ஒளி செய்யும்; மணி-இரத்தினங்கள்)

மிகுதியாகக் கற்றறிந்த, தொலைநோக்குடையவனே! அனும! சீதையின் மூக்கிற்குப் பச்சோந்தியையும், எள்ளின் பூவையும், துளையுள்ள குமிழ மலரையும் உவமையாகச் சொன்னால் அவையெல்லாம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற பொன் போலவும், மின்னலைப் போலவும், இரத்தினங்கள் போலவும் பொலிவுற்று விளங்கித் தோன்ற மாட்டாதன. அவை இனிமேல் அவ்வாறு ஒளிவிடுவதற்கு ஏற்ற காரணமும் ஏதும் இல்லை; ஓவியம் தீட்டுவதில் வல்லவர்களாலேயே சீதையின் மூக்கை உள்ளவாறே எழுத முடியாது என்கின்ற தன்மையை நன்கு ஆராய்ந்து பார்த்து, அதன் அழகை நீயே உணர்ந்து செய்வாயாக!'' என்றான் இராமன்.

பொதுவாகப் பெண்களின் மூக்கிற்குப் பச்சோந்தியையும், எள்ளின் பூவையும், துளையுள்ள குமிழ மலரையும் உருவத்தாலும், வடிவத்தாலும் நிகர் என்று உவமை கூறுவதுண்டு. எனினும் அவற்றிற்கு எல்லாம் சீதையின் மூக்கைப்போலவும், பொன் போலவும், மின்னுகின்ற இரத்தினம் போலவும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தன்மை கிடையாது. எனவே அவற்றை இவள் மூக்கிற்கு உவமை கூறுவது பொருந்தாது. இவள் மூக்கின் அழகை, உள்ளவாறே எழுதும் திறமை, ஓவியம் வல்லார்க்கே அரிதாகும் என்றால், நீயே அதன் வடிவழகையும், ஒளிரும் தன்மையையும் உணர்ந்து கொள்வாயாக!'' என்றான் இராமன். ''மதனற்கும் எழுத வொண்ணாச் சீதை'' என முன்னர்க் கூறியதை இங்கு நினைவு கூர்க.

52. காது

''வள்ளை, கத்திரிகை, வாம மயிர் வினைக் கருவி, என்ன,
பிள்ளைகள் உரைத்த ஒப்பைப் பெரியவர் உரைக்கின், பித்தாம்;
வெள்ளி வெண்தோடு செய்த விழுத்தவம் விளைந்தது என்றே
உள்ளுதி காதை; அல்லால், உவமைக்கும் உவமை உண்டோ?'' (4605)

(வள்ளை-வள்ளை இலை; வாமம்-அழகு; கத்தரிகை-கத்தரிக்கோல்/ மயிர்வினைக் கருவி; பிள்ளைகள்-அறிவு நிரம்பாதவர்கள்; பித்து-பைத்தியம்; விழுத்தவம்-சிறந்த தவம்; உள்ளுதல்-நினைத்தல்);

''பொதுவாகப் பெண்களின் காதுகளுக்கு உவமை கூறக்கூடிய, வள்ளைச்செடியின் இலை, கத்தரிக்கோல், அழகிய மயிரினைத் திருத்தும் கத்தி, என்று இவ்வாறு அறிவிற் குறைந்தோர் சொல்லுகின்ற உவமையைச் சீதையின் காதுகளுக்கும் அவையே ஒப்பு என்று அறிவிற்சிறந்த மேன்மையுடையவர்களும் கூறினால், அது பைத்தியர் சொன்ன சொல்போல் ஆகிவிடும்; அவள் அணிந்திருக்கின்ற வெள்ளியாலாகிய கற்கள் பதித்த வெண்ணிறமான தோடு, முற்பிறவியில் செய்த சிறந்த தவத்தின் காரணமாகத்தான் இப்போது அது காது என்ற உறுப்பாக அமைந்திருக்கிறது என்பதை நீ நினைத்துக்கொள்வாயாக! இல்லா விட்டால், உலகத்திலுள்ள பொருள்களுக்கெல்லாம் உவமை கூறக் கூடிய ஒரு பொருளுக்கே எங்கேனும் ஒரு உவமை கிடைப்பதுண்டோ?'' என்றான் இராமன்.

53. கண்கள்

''பெரியவாய்ப் பரவை ஒவ்வா; பிறிது ஒன்று நினைந்து பேச
அரியவாய். ஒருவர் உள்ளத்து அடங்குவதல்ல; உண்மை
தெரிய, ஆயிரக்கால் நோக்கின் தேவர்க்கும் தேவன் என்னக்
கரியவாய், வெளிய ஆகும் வாள் தடங்கண்கள் அம்மா!'' (4606)

(வெளிய-வெண்மைநிறம்; வாள்-ஒளிவாய்ந்த; பரவை-கடல்; ஆயிரக்கால்-ஆயிரம் முறை)

சீதையின் கண்கள், தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய திருமாலின் நிறம் போலக் கருமையாகவும், அவன் பள்ளிகொண்டிருக்கும் பாற்கடல்போல் வெண்மையாகவும், ஒளிவீசும் பெரிய கண்களாகும்; அவற்றின் உண்மையான தன்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்து ஆயிரம் முறை பார்த்தாலும் அவை கடலின் நீள, அகலத்திற்குக் கூட ஒப்பாகாமல் நீண்டு அகன்று இருக்கும்; வேறு ஒன்றை உவமையாகக் கூறலாம் என்றாலும், அவை ஒருவர் மனத்துக்குள் அடங்கும் தன்மைய அல்ல;

''சீதையின் கண்கள் கடலைவிடப் பெரியன; யார் உள்ளத்திற்குள்ளும் அடங்கும் இயல்பினதல்ல; ஆயிரம் முறை உற்றுப்பார்த்தாலும், அவற்றின்உண்மையானதன்மையை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. அவை திருமாலைப்போல் கரிய நிறமும் பாற்கடல்போல் வெண்மை நிறமும் பொருந்தி ஒளிவீசும் தன்மை வாய்ந்த பெரிய கண்கள்'' என்றான் இராமன் என்பதாம். ''கண்ணிற்கு இயல்பு கசடறக் கிளப்பின், வெண்மை, கருமை, செம்மை, அகலம், நீளம், ஒளி என நிகழ்த்துவர் புலவர்'' என்பது திருக்கோவையார். இவை அனைத்தும் சீதையின்கண்களுக்குப் பொருந்தி வருதல் காண்க. செம்மை இனத்தால் கொள்ளப்பட்டது. திருமாலுக்குக் கருமை, வெண்மை, செம்மை ஆகிய மூன்று நிறங்களும் உண்டு என்பதறிக; ''கரியனாய், வெளியனாய், செய்யனாய்க்காட்டும், காண்டற்கு அரியனாய், எளியனாய், தன் அகத்து உறை அழகனே போல்'' என்று கவிஞர் பின்னர் சுந்தர காண்டத்தில் கூறப்போவதையும் இங்கு நினைவு கூர்க; இனிக் கண்களையே தெய்வத்திற்கு உவமையாக்கிக் கூறுவதும் உண்டு, பெரியது, கரியது, ஒருவர் உள்ளத்து அடங்காதது, ஆயிரம் முறை நோக்கினாலும் அறிந்து கொள்ள முடியாதது என்பது தெய்வத்திற்கும் உரிய தன்மைகள் என்பதையும் அறிக. ''அமிழ்தினின் விளர்த்து, உண் நஞ்சினிற் கருகி, ஐஅரி சிதறி, மைதோய்ந்து'' என்பது நைடதம்.

54. புருவங்கள்

“கேள் ஒக்கின் அன்றி, ஒன்று கிளத்தினால் கீழ்மைத்து ஆமால்;
கோள்ஒக்கும் என்னின் அல்லால், குறி ஒப்பக் கூறிற்று ஆமோ?
வாள்ஒக்கும் வடிக்கணாள் தன் புருவத்துக்கு உவமை வைக்கின்,
தாள்ஒக்க வளைந்து நிற்ப இரண்டு இல்லை, அனங்க சாபம்.” (4607)

(வடி-கூரிய; கேள்-உறவு/இனம்; கீழ்மைத்து-இழிந்தது; கோள்-கொள்கை; குறி-கருத்து; அனங்கன்-மன்மதன்/உருவற்றவன்; சாபம்-வில்; தாள்-முனை/நுனி/தண்டு; கிளத்தல்-சொல்லுதல்; வைத்தல்-பொருந்தக் கூறுதல்)

வாள் போன்று ஒளி பொருந்தியதும், கூரியதுமான கண்களை உடைய சீதையின் புருவங்களுக்கு உவமையாகச் சொல்லலாம் என்றால், ஒன்றுக்கொன்று உறவான அவ்விரு புருவங்களும் ஒன்றுக்கொன்று

உவமையாகும் என்று கூறலாமே அன்றி, வேறு ஏதேனும் ஒரு பொருளை உவமை கூறினால் அது இழிந்த உவமை ஆகிவிடும். அவ்வாறு சொல்வது என் கொள்கைக்கு வேண்டுமென்றால் ஏற்புடையதாக இருக்குமே அன்றி, உலகத்தார் கருத்துக்கு ஒத்ததாகக் கூறியது ஆகுமோ? ஆகாது; சரி, உருவமற்றவனான மன்மதனின் வில்லுக்கு உவமை கூறலாமா என்றால், மன்மதனிடம் இருப்பது ஒரே வில்தான். அதுவும் அவற்றின் இரு முனைகளும் வளைந்து பொருந்துமாறு நிற்கக் கூடியன அல்ல. எனவே இந்த உவமையும் பொருந்தாது'' என்றான் இராமன்.

அவளது, ஒரு புருவம் இன்னொரு புருவத்தை ஒத்திருக்கிறது என்று அவற்றையே உவமையாகச் சொன்னால் அது இழிவு உவமையாகும். அது என் கொள்கையாக இருக்கலாமே அன்றி உலகத்தாரால் ஒப்புக் கொள்ளக்கூடியதாக அமையாது. மன்மதனின் கரும்பு வில்லின் இரு நுனிகளும் வளைந்து பொருந்துமாறு அமைவன அல்ல என்றாலும் அவனிடம் இருப்பது ஒருவில்தான். இரண்டு வில்கள் இல்லை. எனவே இந்த உவமையும் பொருந்தாது என்பதாம். ''சாபமே, சபித்தல், வில்லாம்'' என்பது நிகண்டு;

55. நெற்றி

''நல்நாளும் நளினம் நாணும்
நளிர்அடி நுதலை நாணிப்
பல் நாளும் பன்னி ஆற்றா
மதி எனும் பண்பதாகி,
முன்நாளின் முளை வெண் திங்கள்
முழுநாளும் குறையேஆகி,
எந்நாளும் வளராது என்னின்,
இறையொக்கும் இயல்பிற்றாமால்'' (4608)

(முன்நாள்-முதல்நாள்; நளினம்-தாமரைமலர்; நளிர்-குளிர்ந்த; நுதல்-நெற்றி; பன்னி-பலமுறை; ஆற்றா-இயலாதது; இறை-சிறிது; இயல்பிற்று-தன்மையது; முழுநாள்-பௌர்ணமி/பூரணை)

சந்திரன் முழுமதியன்று விளங்கும் பூரண ஒளியுடனும், ஆனால் பிறைச்சந்திரன் போன்ற குறைந்த வடிவுடனும் விளங்கினால், அதை வேண்டுமானால் சீதையின் நெற்றிக்கு ஓரளவு பொருத்தமான உவமையாகச் சொல்லலாம் என்பதாம். அன்று மலர்ந்த தாமரை மலர் கூட சீதையின் குளிர்ச்சி பொருந்திய திருவடிகளைக் கண்டு வெட்கம் கொள்ளும் என்பதை ''நல்நாளும் நளினம் நாணும் நளிர் அடி'' என்றார் என்க; இது தாமரையின் தவிப்பு; சந்திரன் தான் தன் பதினாறு கலைகளுடன் நிரம்பியிருந்தாலும் சீதையின் நெற்றியின் ஒளிக்கு ஒப்பாக மாட்டோம் என்று பலகாலும் சிந்தித்து, தனது கலைகளை மட்டும் முழுமையாக வைத்துக்கொண்டு, ஆனால் தன் உருவத்தில் மாறாமல், பிறைச்சந்திரன்

போலவே இருக்குமானால் எப்படி இருக்குமோ அந்த வடிவை வேண்டுமானால் ஓரளவு சீதையின் நெற்றிக்கு உவமையாகக் கூறலாம் என்பதாம்.

பிறைச்சந்திரன் ஒருபோதும் வளராமல் அப்படியே நின்றுபோகாது. அது வளர்ந்தே தீரும். அதுதான் இயல்பு. எனவே இது பொருந்தாத உவமை என்பது கருத்து. ஒளியில் பூரண சந்திரனின் தன்மையும், வடிவத்தில் பிறைச்சந்திரனின் தன்மையும் கொண்டதாக இருந்தால் அது எப்படி இருக்குமோ, அது சீதையின் நெற்றிக்கு ஒரு படி உவமையாகும் என்பது திரண்ட கருத்து என்க.

56. அளகம் – நெற்றி முன்மயிர்

''வனைபவர் இல்லை அன்றே வனத்துள் நாம் வந்த பின்னை?
அனையன எனினும், அந்த அழகுக்கு ஓர் அழிவு உண்டாகா;
வினை செயக் குழன்ற அல்ல; விதி செய விளைந்த; நீலம்
புனை மணி அளகம் என்றும் புதுமையாம்; உவமை பூணா'' (4609)

(வனைதல்-அலங்கரித்தல்; அழிவு-குறைவு; வினை-ஒப்பனை; குழன்றன-கரிந்தன/சுருண்டன; விதி-பிரமன்; புனை-அழகு; பூணுதல்-ஏற்றுக்கொள்ளுதல்)

''நாங்கள் கானகத்திற்கு வந்த பின்னர், சீதையின் முன் நெற்றி மயிரை வாரிப்பின்னி அலங்கரிப்பவர் ஒருவரும் இல்லையல்லவா? என்றாலும், அது தனது அழகில் சிறிதும் குறையாது, என்றும் புதுமையுடன் விளங்குவதை நோக்கு; இவை அப்பணிப் பெண்டிர் செய்ததனால் சுருண்டு விளங்குவன அல்ல; இயற்கையாகவே, பிரமதேவன் படைப்பினால் உண்டாகியதே இது; நீல மணி போன்று முன் நெற்றியில் படிந்திருக்கும் இம்மயிற்க்கற்றை அழகு மிகுந்து இன்றும் புதுமையாகவே இருக்கிறது. இதற்கு உவமையாக வேறு எதனையும் கூறுவது பொருந்தாது'' என்றான் இராமன்.

அளகம் என்பது, நெற்றிக்குமேல், முற்பகுதியில் காணப்படும் கூந்தல் பகுதி என்க. குழலுதல் என்பது கருமணல்போல் படிப்படியாய் அமைந்தது போலச் சுருண்டு தோன்றுதல் என்க. விதி என்றது இன்னார்க்கு இன்ன என்று விதிக்கும் படைப்புக் கடவுளாகிய பிரமதேவனை என்க. இயற்கைப் பேரெழில் வாய்ந்த பொருள்கள், என்றும் புதியதாகவே காணப்படும். இவை காணும் தோறும் அதன் மேல் மிக்க விருப்பத்தை உண்டாக்கும். பின்னொரு முறை காணும்படியும் ஆசையைத் தோற்றுவிக்கும் எனவே ''என்றும் புதுமையாம்'' என்றான் என்க.

57. முகம்

''கொண்டலின் குழவி, ஆம்பல், குனிசிலை, வள்ளை, கொற்றக்
கெண்டை, ஒண்தரளம், என்று இக் கேண்மைய கிடந்த, திங்கள்

மண்டலம் வதனம் என்று வைத்தனன் விதியே; நீ அப்
புண்டரீகத்தை உற்றபொழுது, அது பொருந்தி ஓர்வாய்!'' (4610)

(குனி-வளைந்த; சிலை-வில்; கொற்றம்-வெற்றி; ஒண்-ஒளி வாய்ந்த; தரளம்-முத்துக்கள்; கேண்மைய-தொடக்கத்தின் தொடர்புள்ள; கிடந்த-பொருந்திய/அமையப்பெற்ற; விதி-பிரமன்; வதனம்-முகம்; புண்டரீகம்-தாமரை மலர்; ஓர்தல்-நன்றாக அறிதல்; கொண்டலின் குழவி-இளம் பிறை)

''கரிய மேகத்தின் கொழுந்து, செவ்வல்லி மலர், வளைந்த வில், வள்ளைக் கொடியின் இலை, வெற்றி கொள்ளும் கெண்டை மீன், ஒளிவாய்ந்த முத்துக்கள் என இவையும், இவற்றுடன் தொடர்பு கொண்ட குமிழ், கொவ்வை முதலிய அமையப்பெற்ற சந்திர மண்டலம்தான் சீதையின் முகம் என்று பிரமதேவன் படைத்து வைத்திருக்கிறான்; எனினும் நீ அந்தச் செந்தாமரை மலரை நன்கு பார்க்கும் போது, அதன் பொருத்தத்தை நன்கு உணர்ந்து கொள்வாய்'' என்றான் இராமன்.

கொண்டலின் குழவி என்பது கூந்தலுக்கும், செவ்வாம்பல் மலர் என்பது வாய்க்கும், வளைந்த வில் புருவங்களுக்கும், வள்ளை இலை காதுகளுக்கும், கெண்டைமீன்கள் கண்களுக்கும், முத்துக்கள் பற்களுக்கும் முறையே உவமை. இவையெல்லாம் பொருந்த அமைந்த ஒரு சந்திரமண்டலம் உலகில் இருப்பதில்லை. எனவே இது பொருத்த மற்ற உவமை என்பது இராமனின் கருத்து என்பதாம். மொத்த முகத்திற்கும் தாமரைமலர் உவமை என்க, ''கயல் எழுதி, வில் எழுதி, கார் எழுதி, காமன் செயல் எழுதித் தீர்ந்தமுகம், திங்களோ காணீர்!'' என்பது சிலப்பதிகாரம்.

58. கூந்தல்

''காரினைக் கழித்துக்கட்டி, கள்ளினோடு ஆவி ஊட்டி,
பேர் இருள் பிழம்பு தோய்த்து, நெறிவு உறப் பிறங்கு கற்றைச்
சோர்குழல் தொகுதி என்று சும்மை செய்து அனையது அம்மா!
நேர்மையைப் பருமை செய்த நிறை நறும் கூந்தல் நீத்தம்''. (4611)

(நேர்மை-நுண்ணிய; நீத்தம்-தொகுதி; கார்-கரியமேகம்; கள்-தேன்; ஆவி-புகை/அகிற்புகை; நெறிவு-வளைவு/சுருண்ட தன்மை; உற-பொருத்தி; பிறங்குதல்-விளங்குதல்; சோர்தல்-தொங்குதல்; குழல்-கூந்தல்; சும்மை-சுமை/பாரம்; அனையது-போன்றது)

''மெல்லிய, நுண்மையான, மயிரிழைகளை ஒன்றாகச் சேர்த்துப் பருமையாகச் செய்த, நிறைந்த நறுமணம் கமழுகின்ற சீதையின் கூந்தல் தொகுதி, கரிய மேகத்திலுள்ள கழிக்க வேண்டிய பகுதிகளான வெண்மை நிறப்பகுதியைக் கழித்துவிட்டு, கருமையான பகுதிகளை மட்டும் ஒன்று திரட்டிக்கட்டி, அவற்றிற்குத் தேனும் அகிலும் கலந்து நறுமணப் புகையை ஊட்டி, மேலும் கருமையாக்குவதற்காகப் பெரிய இருள்பிழம்பினில்

தோய்த்து எடுத்து, நெறிப்புத்தன்மை ஏற்படுவதற்காக அதை வளைத்து, சுருண்ட கூந்தலாக்கி, விளங்குகின்ற தொகுதிகள் தாழ்ந்து தொங்குகின்ற சுமை என்று சொல்லும்படியாக அமைந்தது என்றான்'' இராமன்.

கூந்தலை மேகத்திற்கு ஒப்பிடுவதால் மேகங்களில் இருக்கும் வெண்மையான பகுதிகளை நீக்கிவிட்டுக் கருமையான பகுதிகளை மட்டும் கரிய மேகம் என்று கூறுவது போல், இவள் கூந்தலில் கருமையான பகுதிகளை மட்டும் ஒன்று திரட்டிக் கட்டி என்பது புலப்பட ''காரினைக் கழித்துக்கட்டி'' என்றார். கட்டுதல் என்பது பனிச்சை, கொண்டை முதலான ஐம்பால் வகையாகக் கட்டுதல் என்பதும் பொருந்தும். நீத்தம் பொதுவாக வெள்ளத் தொகுதியைக் குறிக்கும் இங்கே கூந்தல் தொகுதியைக் குறித்தது என்க.

59. ''புல்லிதழ் கமலத் தெய்வப் பூவிற்கும் உண்டு; பொற்பின்
எல்லையில் மதிக்கும் உண்டாம் களங்கம், என்று உரைக்கும் ஏதம்;
அல்லவும் சிறிது குற்றம் அகன்றில; அன்னம் அன்ன
நல் இயலாளுக்கு எல்லாம் நலன் அன்றிப் பிறிது உண்டாமோ?'' (4612)

(கமலம்-தாமரைப்பூ; புல்லிதழ்-அழகற்ற புறஇதழ்கள்; பொற்பு-அழகு; எல்லை-வரம்பு; ஏதம்-குற்றம்; இயல்-நடை/சாயல்)

''தெய்வீகத்தன்மை வாய்ந்த தாமரைப்பூவிற்கும் கூட அழகற்ற, புறஇதழ்கள் என்ற பகுதியால் குற்றம் உண்டு; அழகிற்கே வரம்பு என்று கூறப்படுகின்ற சந்திரனுக்கும், களங்கம் என்று கூறப்படும் குற்றம் உண்டு. இவையெல்லாம், உலகில் சிறந்தவை என்று கூறப்படும் எல்லாப் பொருள்களுக்கும் சிறிதளவாவது குற்றம்-களங்கம் குறை என்பது இருந்தே தீரும். அவ்வாறு சிறுகுறை கூடஇல்லாத பொருள் இவ்வுலகத்திலேயே கிடையாது. ஆனால் அன்னப் பறவை போன்ற அழகிய நடையை உடைய இச்சீதைக்கு அமைந்த உறுப்புகள் அனைத்தும் நன்மை தரும்; குற்றமற்றவையாகும் குணம் அமைந்தனவேயற்றிக் குற்றம் என்று கூறப்படுவது ஒன்றும் இல்லை'' என்றான் இராமன்.

''பூ எனப்படுவது பொறி வாழ் பூவே'' என்பதனால் தாமரைப்பூ. தெய்வப்பூ எனப்பட்டது. பொறி என்பது திருமகளைக் குறிக்கும். உலகில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் களங்கம் உண்டு என்று, தாமரைப்பூ, சந்திரன் ஆகிய இரண்டு எடுத்துக்காட்டுக்களைக் காட்டிய இராமன், தன்னுடைய மனைவியான சீதைக்கு உடல் உறுப்புகளில் எந்த விதமான குற்றமுமே இல்லை என்றும், எல்லாம் நன்றாகவே அமைந்திருக்கின்றன, என்றும் அனுமனுக்குக் கூறினான் என்பதாம்.

60. உத்தம இலக்கணத்தில் குறைவில்லாதவள் சீதை.

''மங்கையர்க்கு ஓதிவைத்த இலக்கணம், வண்ண வாசப்
பங்கயத்தவட்கும், ஐயா! நிரம்பல; பற்றி நோக்கின்,

செங்கயல் கருங்கண் செவ்வாய்த் தேவரும் வணங்கும் தெய்வக்
கொங்கை அக்குயிலுக்கு ஒன்றும் குறைவிலை; குறியும் அஃதே!" (4613)

(பற்றி-ஆழ்ந்து; ஓதிவைத்தல்-கூறிவைத்தல்; வண்ணம்-அழகு; பங்கயம்-தாமரைமலர்; தேவர்-தேவமகளிர்/அரம்பையர்; குறி-அடையாளம்)

"அன்பனே! ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கின்ற போது பெண்களுக்கு உரிய அங்க இலக்கணங்களைக் கூறும் சாமுத்திரிகா லட்சணம் என்னும் இலக்கணம், அழகிய நறுமணம் கொண்ட செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளிடம் கூட நிரம்பியிருக்கவில்லை; ஆனால் செவ்வரி யோடியதும், கயல்மீன்கள்போன்றதுமானகரிய கண்களும், சிவந்த வாயும் உடைய தேவமகளிர் கூட கைகூப்பி வணங்கத்தக்க தெய்வீகத்தன்மை பொருந்திய கொங்கைகளை உடையவளும், குயிலின் குரல் போன்ற குரலைஉடையவளுமானசீதைக்கு மட்டும் இந்த இலக்கணங்களில் எந்தக் குறையும் கிடையாது. நீ அவளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான அடையாளமும் இதுவேயாகும்" என்றான் இராமன்.

சீதை திருமகளைக் காட்டிலும் சாமுத்திரிகா லட்சணம் நிரம்பப் பெற்றவள் என்பது இராமன் கருத்து; அதில் கூறியுள்ள எல்லா நலன்களும் பெற்றவள் சீதை ஒருத்திதான் என்பதை மேலும் நிறுவுகிறான் என்க. எனவேதான் அவளைத் "தேவரும் வணங்கும் தெய்வக்குயில்" என்றான் என்க.

61. சொல்

"குழல் படைத்து, யாழைச் செய்து, குயிலொடு கிளியும் கூட்டி,
மழலையும் பிறவும் தந்து, வடித்த கைம்மலரின் மேலான்,
இழைபொரும் இடையினாள்தன் இன்சொற்கள் இயையச் செய்தான்;
பிழையிலது உவமை காட்டப் பெற்றிலன்; பெறும்கொல் இன்னும்?" (4614)

(குழல்-புல்லாங்குழல்; கூட்டி-சேர்த்து; வடித்தல்-பழகுதல்; மேலோன்-பிரமன்; இழை-நூல்இழை; பொரும்-ஒத்த; இயைய-அமைய/பொருந்த; பெறுதல்-படைத்தல்)

"புல்லாங்குழல், வீணை, குயில், கிளி, மழலைச் சொற்கள், இது போன்று இனியனவான பலவற்றையும் படைத்துக் கை தேர்ந்த, தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமன், நூலிழையை ஒத்த இடையை யுடைய சீதாதேவியின் இனியசொற்களுக்குப் பொருந்துமாறு இவைகளை முன்பே படைத்துவிட்டான். ஆனால் குற்றமில்லாததொரு உவமையைஅவள்சொல்லுக்குஉவமைகூறக்கூடியஎந்தப்பொருளையும் இதுவரை படைக்கவில்லை. அவ்வாறு படைக்கத் தவறிவிட்டான்; இனிமேலாவது படைப்பானா? படைக்க முடியுமா? என்பது நமக்குத் தெரியவில்லை; எனவே அவளுடைய இனிமையான சொற்களுக்கு

என்ன உவமை கூறி உனக்குப் புரிய வைப்பது என்பது எனக்குத் தெரியவில்லை'' என்றான் இராமன்.

உலகிலேயே இனிமையான ஒலிபடைத்தவை என்று புல்லாங் குழலையும், வீணையையும் சொல்லுகிறோம்! நல்லகுரல் படைத்தன என்று குயிலையும், கிளியையும், எழுத்து நிரம்பாத பொருள் விளங்காத குழந்தைகளின் மழலைச்சொற்களையும் கூறுகின்றோம். இவற்றை யெல்லாம் படைத்து நன்கு கற்றுத் தேர்ந்த பின்தான் பிரமன் சீதையையும், அவளுடைய இனிய சொற்களையும் படைத்தான். எனவே இப்பொழுது அவளுடைய இனிய சொற்களுக்கான உவமையாகக் கூறும்படி, குற்றமில்லாத எந்தப் பொருளையும் பிரமனால் இதுவரை படைக்க முடியவில்லை. இனியாவது படைப்பானா என்பதும் தெரியவில்லை என்றான் இராமன் என்பதாம்.

இங்கே ''பிறவும்'' என்றதனால் அவ் இனிமையோடு தொடர்புடை பாகு, கரும்பு, பால், தேன், பழம் முதலியவற்றையும் கொள்ளுதல் பொருந்தும். ''குயிலும், கரும்பும், செழுந்தேனும், குழலும், யாழும், கொழும்பாகும், அயிலும், அமுதும் சுவை நீத்தமொழி'' என்று முன்பே சீதையின் சொல்லினிமை கூறப்பட்டதை நினைவு கூர்க. ''பனிதமும், பாலும், ஒழுகிய தேனும், ஆரமுதும், குயிலினில் குரலும், கிளியினில் மொழியும், குழலும் யாழும் குழைத்து இழைத்து, மயில் இயல் சாயல், வாள் நுதல் தனக்கு, மலர்அயன் வகுத்ததென் மொழியாள்'' என்பது அரிச்சந்திரபுராணம். மொழியின் இனிமைக்கு எவ்வெவற்றை உவமையாகக் கூறலாம் எனப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது கேளுங்கள். ''நாட்டும் கதலி, நடுக்கரும்பு, மா வருக்கை, காட்டும்குயில், கிள்ளை, கற்கண்டு, வேட்ட அருந்தும் சீனி, சருக்கரை, செந்தேன், அமுதம், பால், குழல், யாழ், ஆன பதினான்கும் மொழிக்காம்'' என்பது இரத்தினச் சுருக்கம். வருக்கை என்பது பலாப்பழத்தைக் குறிக்கும்.

62. ''வான் நின்ற உலகம் மூன்றும்
வரம்பின்றி வளர்ந்தவேனும்,
நா நின்ற சுவை மற்று ஒன்றோ
அமிழ்து அன்றி நல்லது இல்லை;
மீன் நின்ற கண்ணினாள்தன்
மென்மொழிக்கு உவமை வேண்டின்.
தேன் ஒன்றோ? அமிழ்தம் ஒன்றோ?
அவை செவிக்கு இன்பம் செய்யா;'' (4615)

(வளர்தல்-பரவியிருத்தல்; நின்றது-பொருந்தியது; அமிழ்தம்-தேவாமிர்தம்/பாலுமாம்;)

வான், நிலம், பாதாளம் என்று அமைந்திருக்கின்ற இம்மூன்று உலகங்களும், எல்லையில்லாது விரிந்து பரந்திருக்கின்றன என்றாலும்,

இவற்றில் தேடித் தேடிப்பார்த்தாலும், நாவிற் பொருந்திய சுவையளிக்கக்கூடிய பொருள், தேவாமிர்தத்தைக் காட்டிலும் நல்லதாக அமைந்த பொருள், வேறு ஒன்றும் இல்லை; மீன் போன்ற பிறழ்கின்ற கண்களையுடைய சீதையின் மென்மையான, இனிமையான சொற்களுக்கு உவமை கூறவேண்டுமானால், தேனைச் சொல்லலாமா? அல்லது பாலைச் சொல்லலாமா? இவையெல்லாம் ஒரு பொருளா? இவையெல்லாம் நாவிற்கு மட்டும்தான் இன்பம் பயக்குமே அன்றிச் செவிக்கு இன்பம் தாராது. எனவே நாவிற்கும் செவிக்கும் இன்பம் பயக்கும் சீதையின் இனிய சொற்களுக்கு வேறு உவமையே கிடையாது என்றான் என்பதாம்.

63. நடை

''பூவரும் மழலை அன்னம், புனை மடப்பிடி, என்று இன்ன
தேவரும் மருளத்தக்க செலவின எனினும் தேறேன்;
பாவரும் கிழமைத் தொன்மைப் பருணிதர் தொகுத்த, பத்தி
நாவரும் கிளவிச்செவ்வி நடைவரு நடையள் நல்லோய்!'' (4616)

(வருதல்-தங்குதல்; பூ-தாமரைமலர்; மழலை-இளமை; புனை-அழகிய; மடம்-இளமை; பிடி-பெண்யானை; மருளுதல்-வியத்தல்; செலவு-நடை; தேறுதல்-தெளிதல்; பா-செய்யுள்; கிழமை-உரிமை; தொன்மை-பழமையான; பருணிதர்-புலவர்கள்; தொகுத்த-இயற்றிய; பத்தி-வரிசை/ஒழுங்கு; கிளவி-சொற்கள்; செவ்வி-அழகு; நடையள்-நடையையுடையவள்)

''நல்லியல்புகள் கொண்டவனே! அனும! தாமரை மலரில் வாழும் இளமையான மழலைச் சொற்களையுடைய அன்னப்பறவை, அழகிய இளமையான பெண்யானை, என்று கூறப்படும் இவைகள், தேவர்களும் கண்டு வியக்கத்தக்க நடையை உடையன என்றும், அவற்றிற்கு ஒப்பானது சீதையின் நடையும் என்று கூறினாலும் நான் இசைந்து தெளியமாட்டேன். இயல்பாகவே கவிதை இயற்றும் உரிமையுடைய பழமையான புலவர்கள் ஆக்கிய, ஒழுங்கான, நாவில் எழுந்து வருகின்ற இனிய சொற்களை உடைய காப்பியங்களின் ஒப்பற்ற அழகிய நடையை உடையவள் சீதை என்பது எனது துணிபு'' என்றான் இராமன்.

''பொதுவாகப் பெண்களின் நடைக்கு அன்னத்தையும், பெண்யானையையும் உவமை கூறுவது மரபு. என்றாலும் அவை பொருந்தா உவமையாதலால் நான் அவற்றை ஏற்றுக் கொள்ளமாட்டேன். பழமையான அறிவிற்சிறந்த புலவர்கள் இயற்றிய காப்பியங்களில் இழையூடிச் செல்லுகின்ற ஒப்பற்ற நடைக்கு வேண்டுமானால் சீதையின் நடையை உவமையாகக் கூறலாம்'' என்றான் இராமன் என்பதாம். ஒரு காப்பியத்தின் நடைக்கு எவ்வாறு ஈடு இணைகூறமுடியாதோ அவ்வாறே, சீதையின் ஒப்பற்ற நடைக்கு ஈடு இணை கூறமுடியாது என்பதாம். ''பூ'' என்பது தாமரைப்பூவையே குறிக்கும் என்பதை நினைவிற்கொள்க.

''பூவினிற்கு அருங்கலம் பொங்கு தாமரை'' என்பது தேவாரம். காப்பிய நடையைப் பார்க்கும்போது மனம் மகிழ்தல் போல, சீதையின் நடையைக் கண்ணால் காணும்போதே மனம் மகிழ்வுறும் என்பதும் கருத்து என்க.

64. நிறம்

''எந்நிறம் உரைக்கேன்? மாவின் இளநிறம் முதிரும்; மற்றைப்
பொன்நிறம் கருகும்; என்றால் மணி நிறம் உவமை போதா;
மின்நிறம் நாணி எங்கும் வெளிப்படா ஒளிக்கும்; வேண்டின்
தன்நிறம் தானே ஒக்கும்; மலர் நிறம் சமழ்க்கும் அன்றே!'' (4617)

(மணி-மாணிக்கம்; மின்-மின்னலின்; சமழ்த்தல்-நாணுதல்/ வருந்துதலுமாம்/தாழ்தல்)

''சீதையின் மேனி நிறத்திற்கு உவமை கூறவேண்டுமானால், பொதுவாக எல்லாப் பொருள்களின் மேனி நிறத்திற்கும் உவமை கூறக் கூடிய இளமையான மாந்தளிரின் நிறத்தைக் கூறமுடியாது, காரணம், மாந்தளிர் சற்று நேரத்தில் வாடிப் பழுப்பு நிறம் அடைந்து, தன் முதிர்ந்த தோற்றத்தைக் காட்டிவிடும். மேலும் பொன்னின் நிறமோ, இவளுடைய நிறத்திற்கு அருகில் நிற்க முடியாது கறுத்துப்போகும்; என்றால் மாணிக்க மணியின் நிறமோ, இவள் நிறத்திற்குச் சற்றும் ஒத்துவராது. எனவே அதுவும் உவமையாகும் தகுதியை இழந்துவிடுகிறது. மின்னல் நிறத்தைச் சொல்லலாம் என்றால் அது தோன்றியவுடனேயே, பிறருக்கு வெளிக்காட்டிக் கொள்ளாமல் உடனே மறைந்து தன்னை ஒளித்துக் கொள்ளும்; நின்று நிலைத்திருக்காது. தாமரை மலரின் நிறமோ, இவள் நிறத்தைக் கண்டு வருந்தி, தாழ்ந்து, நாணிப்போகும். எனவே நான் என்னவென்று இவள் நிறம் பற்றிச் சொல்லுவேன்? அப்படிச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்றால், அவளுடைய நிறத்திற்கு அவளுடைய நிறமே ஒப்பு; வேறொன்றில்லை'' என்றான் இராமன்.

பொதுவாகப் பெண்களின் மேனி நிறத்திற்கு, மாந்தளிர், பொன், மாணிக்கம், மின்னல், தாமரை மலர் இவற்றை ஒப்புக் கூறுவது கவி மரபு. ஆனால் இராமன் இவற்றில் எதுவும் சீதையின் மேனி நிறத்திற்கு ஒப்பாகாது என்று காரணம் காட்டி மறுத்துரைத்து, இறுதியில் அவளுடைய மேனி நிறத்திற்கு அவளேதான் ஒப்பு என்று நிறுவுகிறான் என்பதாம்.

65. சீதை உவமையற்றவள்.

''மங்கையர் அவளை ஒப்பார் மற்றுளர் அல்லர் என்னும்
சங்கையில், உள்ளம் தானே சான்று எனக்கொண்டு, சான்றோய்!
அங்கு அவள் நிலைமையெல்லாம் அளந்து அறிந்து, அருகுசார்ந்து,
திங்கள் வாள் முகத்தினாட்குச் செப்பு'' எனப் பின்னும்செப்பும். (4618)

(சங்கை-ஐயம்/சந்தேகம்; உள்ளம்-மனம்; செப்புதல்-சொல்லுதல்; பின்னும்-மீண்டும்/மேலும்)

''நற்பண்புகளை உடையவனே! சீதையைப் போன்ற அவளுக்கு ஒப்பான பெண்கள் இவ்வுலகத்தில் யாரும் இல்லை என்று சந்தேகம் கொள்ளாமல், உன் உள்ளத்தையே சான்றாகக் கொண்டு, அங்கு சென்று, அவளின் சரியான நிலைமையெல்லாம் நன்கு அறிந்து, இவ் வருணனையோடு ஒத்திருக்கிறது என்று நீ கருதினால், அவள் அருகில் சென்று, முழுமதி போன்ற முகத்தை உடைய அவளுக்கு, இப்போது நான் கூறப் போவதையும் கூறுக'' என்று மேலும் சில அடையாள நிகழ்ச்சிகளைக் கூறத் தொடங்கினான் இராமன்.

மேற்கூறிய பாடல்களால் சீதையின் அங்க அடையாளங்களை அனுமனுக்குக் கூறிய இராமன், இப்பாடலில் அவள் உவமையற்றவள் என்பதைக் கூறி முடிக்கின்றான் என்க. ''பெண்களில் யாரும் ஒப்பாகாத பேரழகு கொண்டவள் ஒருத்தியைப் பார்த்தால் அவள்தான் சீதை என்று சந்தேகம் இல்லாது, உன் மனத்தையே சாட்சியாகக் கொண்டு அவள் அருகில்சென்று அவள் நிலைமையை அறிந்து, பிறகு பேசத்தொடங்கு'' என்கிறான்இராமன். இவ்வாறேஅனுமன்செயல்படுகிறான்என்பதையும் பின்னால் சுந்தரகாண்டத்தில் கவிஞன் சொல்லப் போவதையும் இங்கே நினைவிற்கொண்டால்தான், இவ்வாறு வருணனை கூறியது தவறல்ல என்றும் பொருத்தமானதே என்றும் கருதத் தோன்றும். எனினும் இத்தகைய வருணனைகள்வான்மீகியால்கூறப்படவில்லை என்பதையும் கருதுக.

66. கன்னிமாடத்தில் கண்டது

''முன்னை நாள் முனியொடும் முதிய நீர் மிதிலைவாய்ச்
சென்னி நீள் மாலையான் வேள்வி காணியச் செல,
அன்னம் ஆடுதுறைக்கு அருகு நின்றாளை, அக்
கன்னி மாடத்திடைக் கண்டதும் கழறுவாய்.'' (4619)

(முதிய-பழமையான; சென்னி-தலை; காணிய-காணும் பொருட்டு; கழறுதல்-சொல்லுதல்)

''முன்னாளில் நான் விசுவாமித்திர முனிவரோடு, பழமையான, நீர் வளம் செழித்த மிதிலை நகரத்தின் எல்லையில், தலையில் நீண்ட மாலையணிந்த சனகமன்னன் இயற்றும் வேள்வியைக் காண்பதற்காகச் செல்லும்போது, அங்கே ஆண் அன்னங்கள் தத்தம் பெடை அன்னங் களோடு மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் துறையின் அருகில், அழகாக நின்று கொண்டிருந்த அந்தச் சீதையை. அந்தக் கன்னிமாடத்தின் உப்பரிகையில், நான் கண்டதையும் அவளுக்கு எடுத்துச் சொல்வாயாக'' என்றான் இராமன்.

மிதிலை நகரத்து வீதிகளில் செல்லும்போது இராமன் சீதையைக் கன்னிமாடத்தின் உப்பரிகையில் கண்டதுதான் முதல் நிகழ்ச்சி. எனவே இதை முதல் அடையாளமாகக் கூறினான் என்க. இக்காட்சிகள் மிக விரிவாகப் பால காண்டத்துள் பேசப்பட்டதை இங்கு நினைவு கூர்க. என்றாலும் இராமனும் சீதையும் திருமணமண்டபத்தில்தான் முதன்முதல் சந்தித்துக் கொள்ளுகிறார்கள் என்று முதல் நூல் கூறும். கம்பன், தமிழ் மரபுப்படி, களவுமணம், கற்பு மணம் இரண்டையும் கூற வேண்டும் என்ற காரணத்தால், இவர்கள் முன்பே ஒருவரை ஒருவர் கண்டு, இதயம் மாறிப்புகுந்தனர் என்று கூறுகிறான் என்பதையும் நினைவிற்கொள்க.

67. ''வில்விறுத்தவன் இராமன் அல்லனேல் உயிர்விடுவேன்'' எனச் சீதை கூறிய நிகழ்ச்சி

"வரை செய் தாள் வில் இறுத்தவன், அம் மாமுனியோடும்
விரவினான் அல்லனேல் விடுவல் யான் உயிர்'' எனக்
கரை செயா வேலையிற் பெரிய கற்பினள் தெரிந்து
உரை செய்தாள்; அஃதுஎலாம் உணர, நீ உரை செய்வாய்! (4620)

(வரை-மலை; செய்-போன்ற; தாள்-தண்டு; இறுத்தல்-ஒடித்தல்; விரகுதல்-உடன் செல்லுதல்/சேர்ந்து செல்லுதல்; வேலை-கடல்)

''கரை செய்ய முடியாத கடலைப் போன்ற பெருமைக்குரிய கற்புடையவளான சீதை, மலை போன்ற தண்டினை உடைய சிவதனுசை முறித்தவன் அந்தச் சிறந்த தெய்வீகத் தன்மை வாய்ந்த விசுவாமித்திர முனிவனோடு உடன் சேர்ந்து வந்தவனாகிய இராமனாக அல்லாது, வேறு ஒருவனாக இருந்தால், நான் என் உயிரை இப்பொழுதே விட்டு விடுவேன்'' என்று, ஆராய்ந்து கூறினாள் சீதை. இவற்றையெல்லாம் அவள் மீண்டும் நன்கு உணரும்படி, அவளுக்கு எடுத்துரைப்பாயாக!'' என்றான் இராமன்.

இராமன் வில்லை முறிப்பதற்கு முன்பே, அவனைக் கன்னி மாடத்தில் நின்று கண்டு, அவனிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தவள் சீதை; எனவே இப்பொழுது வில்லை முறித்தவன், தன் உள்ளத்தையும் உயிரையும் கவர்ந்து சென்றவனாகிய இராமனாக இல்லாது போய் விட்டால், தன் கற்புக்குத் தீங்கு நேர்ந்துவிடும் எனக் கருதலானாள் சீதை என்பதுதான் ''பெரியகற்பினாள் தெரிந்து உரைசெய்தாள்'' எனக் குறிக்கப்பட்டது என்க. தன் உள்ளம் கவர்ந்து சென்றவனையே கணவனாக அப்பொழுதே ஏற்றுக்கொண்டு விட்டவள் சீதை; எனவே இப்பொழுது வில்லை முறித்தவன் அவனல்லாது வேறொருவனாக இருந்தால் தனது கற்புக்கு இழுக்கு நேரும் என்று கருதித் தன் உயிரைவிடவும் துணிந்தாள் சீதை. இது பெருங்கற்பிற்குரிய நிகழ்ச்சியாதலின் இதனையும் இராமன் இரண்டாவது அடையாள நிகழ்ச்சியாகக் கூறினான் என்க.

68. நான் அரச சபையில் கண்ட நிகழ்ச்சி

''சூழிமால் யானையின் துணை மருப்பு இணை எனக்
கேழ் இலா வனமுலைக் கிரி சுமந்து இடைவது ஓர்
ஊழிவான் மின் இளங்கொடியின் வந்தாளை, அன்று
ஆழியான் அரசவைக் கண்டதும் அறைகுவாய்.'' (4621)

(சூழி-முகபடாம்/நெற்றிப்பட்டம்; மால்-மதம்/பெரிய; துணை-இரண்டு; மருப்பு-கொம்பு/தந்தங்கள்; கேழ்-ஒப்பு; வன-அழகிய; இடைவது-ஒதுங்குவது; ஆழியான்-ஆணைச்சக்கரத்தை உடையவன்/சனகன்; அறைதல்-கூறுதல்)

''நெற்றிப்பட்டம் அணிந்த, மதம் கொண்ட, பெரிய யானையின் ஒன்றுக்கொன்று இணையான இரண்டு தந்தங்களுக்கும் ஒப்பாகாதபடி, அழகிய இளங்கொங்கைகள் என்னும் மலையினைத் தாங்கிக்கொண்டு, விண்ணில், மின்னல் என்னும் இளமையான பூங்கொடி ஒன்று ஒதுங்கி வருவதுபோல, ஆணைச்சக்கரத்தை உடைய சனக மன்னனின் சபையில் வந்து சேர்ந்தவளை, முன்பு, நான் பார்த்ததையும் கூறுவாயாக!'' என்றான் இராமன்.

சனகனது அரச சபையில்தான் ஒருவர்மேல் ஒருவர் கொண்ட சந்தேகம் நீங்கப்பெற்றுதாம் மனத்தில் கொண்டவள்தான் இவள் என்று இராமனும், தன்னைக் கவர்ந்து சென்றவர் தான் இவர் என்று சீதையும் நன்கு உறுதிப்படுத்திக் கொண்டனர். எனவே இந்த நிகழ்ச்சி அவர்கள் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சி என்பதால் இதை மூன்றாவது அடையாளமாக இராமன் சொல்லியனுப்பினான் என்க.

69. சீதையும் காடுசெல்லத் துணிந்தது பற்றிக்கூறுதல்

''முன்பு நான் அறிகிலா முனி நெடுங்கானிலே,
''என்பினே போதுவான் நினைதியோ? ஏழை நீ?
இன்பமாய், ஆருயிர்க்கு இனியை ஆயினை! இனித்
துன்பமாய் முடிதியோ?'' என்றதும் சொல்லுவாய்!''. (4622)

(ஏழை-மடமைக்குணம்; முனிதல்-வெறுத்தல்; போதுவான்-செல்லுதற்கு)

''அறியாதவளே! நானே இதுவரை சற்றும் சென்றறியாததும், கொடுமை நிறைந்த, வெறுக்கத்தக்கதுமான நீண்ட காட்டிற்கு, என் பின்னாலேயே, என்னைத் தொடர்ந்து வருவதற்காக எண்ணுகிறாயோ? இதுவரை எனக்கு இல்வாழ்க்கை இன்பம் தந்து, எனது அரிய உயிருக்கு இனியவளாக இருந்த நீ, இப்பொழுது எனக்குத் துன்பம் தந்து தீர்வது என்று முடிவு கட்டிவிட்டாயோ? என்று நான் கடிந்து கூறியதையும் கூறுவாயாக!'' என்றான் இராமன்.

இராமன் இலக்குவனுடன் வனம் புக நேர்ந்தமை குறித்து சீதையிடம் அறிவிக்கச் சென்ற போது, சீதை, தானும் உடன் வருவேன் என்று வற்புறுத்தியபோது, இராமன் ''எனக்கு எல்லையற்ற இடர்தருவாய்'' என்று கடிந்து கூறியதை இங்கு நினைவு கூர்ந்து, அதனைத் தெரிவிக்கிறான். இராமன் சீதையைக் கடிந்துபேசிய முதல் நிகழ்ச்சி இது. எனவே இதை நான்காவது அடையாளமாகக் கூறி அனுப்பினான் என்க. இங்கே கணவனின் இன்ப துன்பங்களில் சரிபாதிப் பகுதி மனைவிக்கும் உண்டு என்று சீதை கூறியதாக வான்மீகம் கூறுகிறது. சீதை தன்னுடன் காட்டுக்குள் வருவதால் தான் துன்பம் அடைதலோடு தனக்கும் மேலும் துன்பம் தருவாள் என்பதை உணர்த்தவே அவ்வாறு கடிந்து கூற வேண்டியதாயிற்று என்க.

70. ''நான் இல்லையென்றால் உனக்கு இன்பமோ?'' என்று சீதை கேட்டது

''ஆனபேர் அரசு இழந்து, அடவி சேர்வாய்; உனக்கு
யான் அலாதன எலாம் இனியவோ? இனி'' எனா
மீன் உலாம் நெடுமலர்க் கண்கள் நீர்விழ, விழுந்து
ஊன் இலா உயிரின் வெந்து, அயர்வதும் உரை செய்வாய்''! (4623)

(அடவி-காடு; இனியவோ-இன்பம் தருவனவோ; உலாம்-பிறழ்தல்; ஊன்-உடம்பு; வெந்து-வாடி; அயர்தல்-சோர்ந்துபோதல்)

''உனக்கு உரிமையுடைய பேரரசினை இழந்து, காட்டுக்குள் செல்பவனே! நான்உன்னுடன்இல்லாவிட்டால்தான்எல்லாப்பொருளும் உனக்கு இன்பம் தருவன ஆகுமோ? நான் ஒருத்தி இருப்பது மட்டும் உனக்குத் துன்பத்தைத் தந்து விடுமோ? என்று என்னைப் பார்த்து ஆற்றாதவளாக, மிகக் கடுமையாகப் பேசிய சீதை, கயல்மீன்கள் பிறழ்கின்றதும், பெரிய தாமரை மலர் போன்றதுமான கண்களிலிருந்து கண்ணீர்பெருக, கீழே விழுந்து, உடம்பில் உயிர்நிற்க மாட்டாதது போலத் தவித்து, உடலும் உள்ளமும் வெதும்பிச் சோர்வுற்றுத் தளர்ந்ததையும் கூறுவாயாக!'' என்றான் இராமன்.

என்னைத் துறந்தபின் எல்லாமே இன்பம்கொலோ? என்று சீதை முன்னர்க் கூறியதை இப்பொழுது நினைவிற்கொண்டு இதையும் ஒரு அடையாளமாகக் கூறினான் என்க. காரணம் இங்குதான் சீதை முதன் முதலாக இராமனிடம் கடுமையாகப் பேசுகிறாள் என்பதால் என்க.

71. ''நகர் நீங்கிய உடனேயே காடு வந்துவிட்டதோ?'' என்று கேட்டது.

''மல்லல் மாநகர் துறந்து ஏகும் நாள், மதி தொடும்
கல்லின் மாமதில் மணிக்கடை கடந்திடுதன் முன்,

''எல்லை தீர்வு அரிய வெங்கானம் யாதோ?'' எனச்
சொல்லினாள்; அஃது எலாம் உணர; நீ சொல்லுவாய்;'' (4624)

(மல்லல்-வளமை; மணி-அழகிய; கடை-வாயில்; யாதோ-எங்கே உள்ளது; தீர்தல்-கடத்தல்)

''நீர்வளமும் நிலவளமும் பொருந்திய சிறந்த அயோத்தி மாநகரை விட்டுக் கானகத்திற்குச் செல்லும்போது, சந்திரனையே தொடுகின்ற அளவுக்கு உயர்ச்சியும், கல்லைப்போல் உறுதியும் கொண்ட சிறந்த மதிற்புறத்தின் அழகிய வாயிலைக் கடப்பதற்கு முன்னரேயே, எல்லையில்லாத அளவுடையதும், கடத்தற்கு மிக அரியதுமான காடு எவ்விடத்தில் உள்ளது? என்று சீதை என்னைக் கேட்டாள்; அவற்றையெல்லாம் இப்பொழுது அவள் நன்கு உணருமாறு அவளிடம் எடுத்துச் சொல்லுவாயாக!'' என்றான் இராமன்.

சீதையின் மென்மைத் தன்மையையும், பேதைமையையும், வெளிப்படுத்தும் நிகழ்ச்சி இது. எனவே இதை நினைவில் கொண்டிருந்த இராமன், இதனையும் ஒரு அடையாளமாகச் சீதையிடம் கூறுமாறு வேண்டிக் கொள்ளுகிறான் என்க. இதே போன்று சிலப்பதிகாரத்திலும், பூம்புகாரைவிட்டு நீங்கிய உடன்கண்ணகி, கோவலனிடம், ''இறுங்கொடி நுசுப்பொடு இனைந்த அடி வருந்தி, நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்து, முதிராக்கிளவியின் முள் எயிறு இலங்க, மதுரை மூதூர் யாது?'' எனக் கேட்டாள் என்பதனையும் ஒப்பு நோக்குக. ''ஒன்பதின் சாண் நடப்பினும், ஒரு காதம் என்று அஞ்சும் மென்பஞ்சிச்சீரடி'' என்பது சீவகசிந்தாமணி; ''கூடகமாடம் கடந்து அறியாத எம் ஆரணங்கே!'' என்பது இறையனார் அகப்பொருள் உரை.

சீதை இவ்வாறு கேட்டதாக முன்னர். நகர் நீங்கு படலத்தில் கூறப்படவில்லை. எனினும் சுந்தர காண்டத்தில் சீதை அனுமனிடம் இவ்வாறு கூறுவது நோக்கத்தக்கது. கம்பன் ஓரிடத்தில் நிகழ்ந்த நிகழ்வை அவ்விடத்திலேயே கூறாது, பிறகு காப்பியத்தில் எங்கேனும் அதனோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் வரும்போது சுட்டிக்காட்டுவதைக் காப்பியத்தில் பல இடங்களிலும் காணலாம். அதில் இதுவும் ஒன்று.

72. இராமன் மோதிரம் கொடுக்க, அனுமன் செல்லுதல்

இனையவாறு உரைசெயா, ''இனிதின் ஏகுதி'' எனா,
வனையும் மாமணி நல்மோதிரம் அளித்து, ''அறிஞ! நின்
வினை எலாம் முடிக!'' எனா, விடைகொடுத்து உதவலும்,
புனையும் வார் கழலினான் அருளொடும் போயினான். (4625)

(வனைதல்-அழகுசெய்தல்; வினை-செயல்; உதவுதல்-அருளுதல்; புனைதல்-கட்டப்படுதல்; வார்-நீண்ட; மோதிரம்-கணையாழியுமாம்)

இவ்வாறு தன் மனத்தில் இருந்த அடையாள நிகழ்ச்சிகளையெல்லாம் இராமன் அனுமனுக்குக்கூறி, ''எந்த இடையூறும் இல்லாது மகிழ்ச்சியுடன் சென்று வருக'' என்று கூறி, மணிகள் பதித்து அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த மோதிரம் ஒன்றையும் அவனிடம் அளித்து, ''அறிவிற் சிறந்தவனே! நீ மேற்கொண்டுள்ள சீதையைத் தேடுதலாகிய முயற்சி எல்லாம் வெற்றியுடன் இனிதாக முடிவுறுக'' என்று விடைகொடுத்தருளியதும், கட்டப்பட்ட நீண்ட வீரக்கழல்களை அணிந்த அனுமனும், இராமபிரானின் அருளாசியுடன் செல்லத் தொடங்கினான்.

இதுவே அவனுக்கு அருளும், வாழ்த்தும், ஆசியும் ஆயிற்று என்பதாம். அத்யாத்ம இராமாயணத்தில் இராமன் அனுமனிடம் கணையாழி தந்து அனுப்பிய செய்தி மட்டும் பேசப்படுகிறது. அங்க அடையாளங்களைக் கூறுவதோ, தம் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதோ அங்கே பேசப்படவில்லை என்பதை அறிக.

73. எல்லோரும் முன் செல்லுதல்

அங்கதக் குரிசிலோடு, அடுசினத்து உழவராம்
வெங்கதத் தலைவரும் விரிகடற் படையொடும்,
பொங்கு வில் தலைவரைத் தொழுது, முன் போயினார்;
செங்கதிர்ச் செல்வனைப் பணிவுறும் சென்னியார். (4626)

(குரிசில்-தலைவன்; அடுதல்-கொல்லுதல்; உழவர்-வீரர்; கதம்-வலிமை; சென்னி-தலை; பொங்கு-சிறந்த; தலைவர்-இராம இலக்குவர்/தளபதியுமாம்; முன்-முற்பட்டு;)

அரசகுமாரனாகிய அங்கதனோடு, பகைவரைக் கொல்லுகின்ற கோபம் கொண்ட வானர வீரர்கள், மிக்கவலிமை கொண்ட படைத்தளபதியான ஜாம்பவான் முதலியோரோடும், அகன்ற கடல்போன்ற இரண்டு வெள்ளம் வானரச் சேனைகளோடும், சிவந்த கிரணங்களைஉடைய சூரியனின் புதல்வனான சுக்கிரீவனை வணங்குகின்ற தலையை உடையவராய், சிறந்த வில் வித்தையில் தேர்ந்தவர்களான இராம இலக்குவரையும் தொழுது, தென்திசை நோக்கி முற்பட்டுச் சென்றனர்.

இங்கே ''உழவர்'' என்றது வீரரை-வானர வீரர்களைக் குறிக்கும். பகைவரின் உடம்பாகிய வயல்களில், தம் படைகளாகிய கலப்பைகளைக் கொண்டு உழுது, வெற்றியாகிய பயிரை விளைவிப்பவர் என்பது விரிந்த பொருள். ''அஞ்சு வருதானை, அமர் என்னும் நீள்வயலுள், வெஞ்சினம் வித்திப், புகழ் விளைக்கும்'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை அருசினத்து உழவர் என்பது சொல்லேர் உழவர், வில்லேர் உழவர், வாள்ஏர் உழவர் என்று முன்பு பயன்படுத்தியது போன்ற ஒரு சொல்லாட்சி என்க.

நாடவிட்ட படலம் நிறைவுற்றது

13. பிலம்புக்கு நீங்கு படலம் [73 பாடல்கள்]

சுக்கிரீவனால் அங்கதன் தலைமையில் தென்திசைக்கு அனுப்பப்பட்ட வானரச் சேனைகள், பல மலைகளைத் தாண்டி, ஒரு பாலைவனத்திற்கு வந்து சேருகின்றன. அங்குள்ள ஒரு குகையில் (பிலத்தில்) சிக்கிக்கொள்கிறார்கள்; அனுமனின் உதவியால் அதனின்றும் நீங்கி, மீண்டு தரைக்கு வருகிறார்கள் என்பது இப்படலத்தின் விரிவான பொருள். பிலத்தில் புகுந்து அரிதின் நீங்கி வெளிவந்ததால் இது 'பிலம்புக்கு நீங்கு படலம்' எனப்பெயர் கொள்வதாயிற்று. இது 73 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் 'பிலம்புகு படலம்' எனவும், இன்னும் சில சுவடிகளில் பிலம் நீங்கு படலம் எனவும் காணப்படுகிறது. பிலம் என்பது நிலத்தின் கீழ் அறை என்ற பொருள் தரும் எனக் கொள்ளலாம். சுரங்கம் என்பதும் பொருந்தும். இந்தப்பிலத்தின் பெயர், ருட்சபிலம் என்று வான்மீகம் கூறுகிறது.

இப்படலத்துள், சுக்கிரீவன் கட்டளைப்படி நான்கு திசைகளுக்கு இரண்டிரண்டு வெள்ளம் என வானரச் சேனைகள் நான்கு படைத்தளபதிகளின் தலைமையில் செல்லுதல்; தென்திசைக்கு அங்கதன் தலைமையில் சென்ற சேனை சென்ற வழிபற்றிய குறிப்புகள்; விந்தமலை, நருமதை ஆறு, ஏமகூடமலை, முதலிய பகுதிகளில் தேடியும் சீதையைக் காணாது வருந்துதல்; பின்னர் அங்கதன், பல குழுக்களாகப் பல பகுதிகளிலும் தேடி, இறுதியில் மயேந்திர மலையில் கூடுவோம் எனக்கூறுதல்; அதன்படி அனைவரும் பகுதிகளாகப் பிரிந்து செல்லுதல்; அனுமன் முதலியவர்கள் ஒரு பாலைவனத்தை அடைதல்; பாலைவனத்தின் வெப்பம் தாங்காது அங்கு தெரிந்த ஒரு பிலத்திற்குள் புகுதல்; பிலம், மக்கள் மிருகங்கள் நடமாட்டம் இன்றி இருட் குகையாய் இருந்ததால் வானர வீரர்கள் அச்சமும் திகைப்பும் கொள்ளுதல்; அனுமன் தன் காதில் அணிந்துள்ள குண்டலத்தின் ஒளியின் உதவியோடு பிலத்துள் முன்னேறிச் சென்று, ஒரு அழகிய நகரைக் காணுதல்; நகரின் நடுவில் சுயம்பிரபை என்று அழைக்கப்படும் தவம் செய்து கொண்டிருக்கும் ஒரு பெண்ணைக் காணுதல்; பிலத்தின் தோற்றத்தையும் அவள் தோற்றத்தையும் கண்டு இவள்தான் சீதையோ என வானர வீரர்கள் ஐயுறுதல்; அனுமன் மறுத்துக் கூறுதல்; சுயம்பிரபை நினைவு வரப்பெற்று அவர்களைப் பற்றி விசாரித்தல்; அவர்கள் தங்களைப் பற்றிக் கூறுதல்; சுயம்பிரபை இராமனைப் பற்றி வினவ, அனுமன் மறுமொழி கூறுதல்; சுயம்பிரபை வானர வீரர்களுக்கு விருந்தளித்த பின், அனுமன் அவள்

வரலாற்றைக் கேட்டறிதல்; அப்பிலத்திலிருந்து தப்பித்துச் செல்வதற்காக, அனுமன் பேருருக் கொண்டு, பிலத்தைப் பிளந்து, மேல் தட்டைக் கடலில் எறிந்து, ஆரவாரித்து ஓங்கி நிற்றல். பிலமும் தரையும் ஒன்றாகிப் போதல்; சுயம்பிரபை நன்றி கூறி விண்ணுலகு செல்லுதல்; வானர வீரர்கள் தொடர்ந்து சென்று ஒரு பொய்கைக் கரையை அடைதல்; சூரியன் மறைதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. சுயம்பிரபையின் வரலாற்றில் வான்மீகிக்கும் கம்பனுக்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுவது இப்படலத்துள் காணப்படும் மாற்றம்.

1. நான்கு பக்கமும் சேனை புறப்பட்டுச் செல்லுதல்

போயினார்; போயபின், புறநெடுந்திசைகள் தோறும்
ஏயினான், இரவி காதலனும்; ஏயின பொருட்கு
ஆயினார் அவரும்; அங்கு அன்ன நாள் அவதியில்
தாயினார் உலகினைத் தகைநெடுந் தானையார். (4627)

(ஏயினான்-செலுத்தினான்; ஆதல்-இசைதல்; தகைதல்-தடுத்தல்; அவதி-எல்லை; தாயினார்-தாவிச் சென்றார்கள்;)

சுக்கிரீவன் கட்டளைப்படி, தென்திசைநோக்கி அங்கதன் தலைமையில் அனுமன், சாம்பவன், முதலான படைவீரர்கள் சென்றார்கள்; அவர்கள் சென்றபின், மற்ற பெருந்திசைகளுள் கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும், இடபன், சதவலி, விநதன் என்ற மூன்று படைத்தலைவர்களின் தலைமையில் அமைந்த வானரச் சேனைக்கும் விடை கொடுத்து அனுப்பினான் சூரியன் மைந்தனான சுக்கிரீவன்; அவ்வாறு அவன் கட்டளைக்குப் பணிந்து அவ்வத் திசைகளில் சென்றவர்கள் எல்லோரும், உலகமே எதிர்த்து வந்தாலும் அதைத் தம் வன்மையால் தடுக்கும் ஆற்றல் பெற்ற அவ்வீரர்கள், சுக்கிரீவன் கொடுத்திருந்த ஒருமாதகால எல்லைக்குள் கொடுத்தகாரியத்தை முடித்துத் திரும்பிவருவதாகக் கூறித் தாவிச் சென்றார்கள்.

2. கவிக்கூற்று

"குன்று இசைத்தன எனக் குவவுத் தோள் வலியினார்,
மின் திசைத்திடும் இடைக் கொடியை நாடினர் விராய்,
வன் திசைப் படரும் ஆறு ஒழிய, வண் தமிழுடைத்
தென்திசைச் சென்றுளார் திறன் எடுத்து உரை செய்வாம்." (4628)

(இசைத்தல்-பொருத்தப்படுதல்; குவவு-திரண்ட; திசைத்தல்-திகைத்தல் பேதுறுதல்; நாடுதல்-தேடுதல்; விராய்-கலந்து; வன்திசை-கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று திசைகள்; படர்தல் - செல்லுதல்; ஆறு-வழி; ஒழிய-தவிர்த்து; வண்மை-வளமை; திறன்-தன்மை;)

''மலைகளையே பொருத்தி வைத்தது போன்ற திரண்ட தோள் வலியுடைய வானர வீரர்கள், மின்னலே கண்டு திகைக்கும் படியான இடையையுடைய பூங்கொடி போன்ற சீதாதேவியைத் தேடிச் செல்லுபவர்கள், கலந்து செல்கின்ற வலிய திசைகளாகிய கிழக்கு, மேற்கு, வடக்கு என்று செல்லுகின்றவர்களின் வழியைத் தவிர்த்து, வளமை பெற்ற தமிழ் மொழி பயிலும் தென் திசையை நோக்கிச் சென்றுள்ளவர்களின் தன்மையை இப்போது கூறத் தொடங்குவோம்'' என்கிறான் கவிஞன். இது கவிக்கூற்று.

சீதாதேவி எடுத்துச் செல்லப்பட்டது தென் திசைதான் என்று ஒருவாறு தீர்மானிக்கப்பட்டதால், மற்ற மூன்று திசைகளையும் வன்திசை என்று கருதி, அதைப் பற்றிக் கூறாது தவிர்த்து, தென்திசையில் சென்றவர்களின் வழி நடைபற்றி விரிவாகக் கூறுவோம் என்கிறான் கவிஞன். இலக்கண, இலக்கிய வளம், சொல்வளம், பொருள்வளம் இனிமை முதலியவற்றில் சிறந்து விளங்குவதால் ''வண்தமிழ்'' என்றான் என்க.

3. விந்திய மலையை அடைதல்

சிந்து ராகத்தோடும் திரள்மணிச்சுடர் செறிந்து,
அந்தி வானத்தின் நின்று அவிர்தலான், அரவினோடு
இந்துயாறு எய்தலான், இறைவன் மாமௌலி நேர்
விந்த நாகத்தின் மாடு எய்தினார் வெய்தினால்; (4629)

(செறிந்து-நெருங்கி; அவிர்தல்-விளங்குதல்; அரவு-பாம்பு; இந்து-சந்திரன்; யாறு-ஆறு கங்கை; இறைவன்-சிவபெருமான்; மௌலி-சடைமுடி; நேர்-நிகர்; நாகம்-மலை; மாடு-பக்கம்; வெய்து-விரைவாக; சிந்துரம்-செந்நிறப்பொடி; ராகம்-நிறம்;)

செந்நிறமான பொடியாகிய சிந்துரமும், திரண்ட மாணிக்கங்களின் ஒளியும் நெருங்கி விளங்குவது போன்று தோன்றுகின்ற செவ்வானத்தைப் போன்று ஒளி வீசுவதாலும், பாம்பு, சந்திரன், கங்கையாறு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டிருப்பதாலும் சிவபெருமானின் சிறந்த பெருமை வாய்ந்த சடைமுடியை ஒத்த விந்தியமலையின் பக்கம், விரைவாகச் சென்று சேர்ந்தார்கள் அவ்வானர வீரர்கள்.

இது சிவபெருமானுக்கும், விந்தியமலைக்கும் ஒப்புக்கூறுகின்ற பாடல், சிவபெருமான் தன் தலையில் பாம்புகளையும், பிறைச் சந்திரனையும், கங்கையையும் பெற்றிருக்கிறான். அதுபோலவே விந்திய மலையும், தன் உச்சியில் நாகங்களைக் கொண்டிருக்கிறது. சந்திரன் அம்மலை உச்சியில்தான் திகழ்கிறான்; நீர் அருவிகளும் அம்மலை உச்சியில் இருக்கின்றன என்பதால் இரண்டும் ஒன்றுக்கொன்று நிகர் என்பதாம். சிவபெருமானது சடைமுடி செந்நிறமும் ஒளியும் உடையது. ''மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே'' என்பது சுந்தரர் தேவாரம்; அதுபோலவே விந்தியமலையும் அந்தி நேரத்தில்

செவ்வானம் காட்டிச் சிவந்த நிறத்தைத் தோற்றுவிக்கும் என்பதாம். ''கங்கையும், மதியும், பாம்பும், கடுக்கையும் முடிமேல் வைத்த அம்கணர்'' என்பது பெரியபுராணம்.

4. அங்கே சீதையைத் தேடுதல்

அந்நெடுங்குன்றமொடு அவிர் மணிச்சிகரமும்
பொன் நெடுங் கொடிமுடிப் புரைகளும், புடைகளும்
நல்நெடுந் தாழ்வரை நாடினார்; நவை இலார்;
பல்நெடுங் காலமாம் என்ன, ஓர் பகல் இடை. (4630)

(நவை-குற்றம்; அவிர்-ஒளிவீசுதல்; கொடிமுடி-மலைஉச்சி; புரை-குகை; நாடுதல்-தேடுதல்; பொன்-அழகு பொன்துகள்.)

குற்றமோ, களங்கமோ இல்லாத அவ்வானர வீரர்கள், அந்த நீண்ட விந்தியமலை; அதில் ஒளி விட்டு விளங்கும் இரத்தினங்கள் நிறைந்த சிகரங்கள்; பொன்துகள் மிக்கதும்அழகியதுமான நீண்ட உச்சி, அதன்மீது இருக்கும் குகைகள், அதன் பக்கங்கள், பெரிய நீண்ட அடிவாரங்கள் ஆகிய எல்லாஇடங்களிலும் தேடினர். பலநீண்டகாலம் தேடியது போல ஒருநாள் முழுதும் தேடி முடித்தனர்.

குரக்குச் சேனை அளவற்றதாதலாலும் மிக்க ஆற்றலுடைய தாதலாலும், ஒருபகல் பொழுது தேடியதே, பலகாலம் தேடியது போல எளியதாயிற்று என்பதாம். பலகாலம் தேட வேண்டிய இடங்களில் எல்லாம் ஒரே நாளில் தேட முடிந்தது என்க.

5. மல்லல் மாஞாலம் ஓர் மறுஉறா வகையின், அச்
சில்அல் ஓதியை இருந்த உறைவிடம் தேடினார்;
புல்லினார் உலகினைப் பொதுஇலா வகையினால்;
எல்லை மா கடல்களே ஆகுமாறு ஏகினார். (4631)

(மல்லல்-வளம்; ஞாலம்-உலகம்; மறு-பழுது/குற்றம்/துன்பம்; சில்-தகட்டணி/தலையில் அணிவது; அல்-இருள்; ஓதி-கூந்தல்; உலகு-இங்கு விந்த மலை; புல்லுதல்-பரவுதல் /சூழ்தல் பொது இலா வகை-பொது அல்லாது சிறப்பான முறை;)

பூமியைச் சுற்றியுள்ள கடல்களே தமக்கு ஒப்பு என்று கூறும் வண்ணம், வானர வீரர்கள் இவ் வளப்பம் மிகுந்த பெரிய சிறந்த உலகத்தில் வாழும் உயிரினங்களுக்கு எந்தவித இடையூறும் துன்பமும் இன்றி, அந்தப் பொன்னாலாகிய தகட்டணியைத் தலையில் அணிந்த, கரிய இருள் போன்ற கூந்தலுடைய சீதையை, அவள் இருக்கின்ற இடம் தேடி அலைந்தனர்; அம்மலையை வேறு எவரும் தொடர்பு கொள்ளாத படி, தாமே சிறப்பாக இருந்து எங்கும் பரவி நின்று, சுற்றிச் சூழ்ந்து கொண்டு தேடிப் பார்த்தார்கள்.

மலையில்ஓரிடம்கூடவிடாது எல்லாஇடத்திலும்தேடினார்என்பதை, ''புல்லினர் உலகினைப் பொது இலா வகையினால்'' என்றார் என்க. பெருந்திரளான வானரப்படைக்குக் கடலை உவமை கூறினார். ''மல்லல் மாஞாலம் ஓர் மறுஉறாவகையில்'' என்பது இந்நிலம் தான். பூமாதேவிதான் சீதையின் தாய் என்பதால் அந்நிலத்திற்கும் எந்த விதத் தீங்கும் ஏற்படாதவாறு தம்பெரும் படை தேடியது என்பதைக் குறிக்கும்.

6. விண்டு போய் இழிவ, மேல் நிமிர்வ, விண்படர்வ, வேர்
உண்ட மாமரனின் அம்மலையின் வாய், உறையும் நீர்
மண்டு பார் அதனின், வாழ் உயிர்கள் அம்மதியினோர்
கண்டிலாதன, அயன் கண்டிலாதன கொலாம்! (4632)

(விண்டு-பிரிந்து/விள்ளச் செய்து/பிளந்து; இழிதல்-கீழே இறங்குதல்; படர்தல்-பறத்தல்; மதி-நல்லறிவு; அயன்-பிரமன்; கண்டிலாதன-படைக்கப்படாதன; மண்டுதல்-நிரம்பப்பெறுதல்; பார்-தரை/இடம்)

அறிவு நிரம்பப் பெற்ற அவ்வானர வீரர்கள், அம்மலையில் தனித்தனியாகப் பிரிந்து போய், கீழே இறங்கியும், மேலே ஏறியும், வானத்தில் தாவிச்சென்றும் தேடினார்கள். வேரினால் நீரை உட்கொள்ளும் இயல்புடைய பெரிய மரங்கள் நிறைந்த இடத்திலும், அம்மலையின் மேலும், நீர் எப்போதும் தங்கியிருக்கின்ற, மிகுதியாக நிரம்பப் பெற்றிருக்கின்ற நீர் நிலை, அங்கே வாழ்கின்ற உயிரினங்கள் அனைத்திலும் அவர்கள் பார்த்தார்கள்; அவர்கள் பார்க்காது விட்டது என்று கூறினால், அவை பிரமனால் உலகில் இன்னும் படைக்கப்படாத உயிரினங்களே ஆகும்.

இச்செய்யுளுக்கே வேறொரு வகையாகவும் பொருள் கூறுதல் பொருந்தும். நிலத்தைப் பிளந்து கொண்டு கீழ் இறங்கிச் செல்லும் இயல்புடைய பாம்புகள் முதலிய ஊர்வன; பூமியின் மேல் திரியும் சிங்கம் முதலான நடப்பன, வானில் பறந்து திரியும் கருடன் முதலான பறப்பன, இவை தவிர, தனது வேரினாலேயே நீரை உட்கொண்டு வளரும் பெரியமரங்கள், அந்த மலையின் பகுதிகள், எப்போதும் நீர் நிரம்பப் பெற்றிருக்கின்ற ஓடைகள், சுனைகள், ஆகிய எல்லா இடங்களிலும் வாழும் உயிரினங்கள் அனைத்தையும் தேடிப்பார்த்தனர். அவர்கள் பார்க்காதது ஏதேனும் இருக்குமென்றால், அவை பிரமதேவன் இதுவரையிலும் தான் படைக்காத உயிரினங்களாகவும், பொருள்களாகவும் தான் இருக்க வேண்டும்.

அந்த மலையில் பிரமனால் படைக்கப்பட்ட சகல ஜீவ ராசிகளையும் கண்டார்கள். ஆனால் சீதையைக் காணவில்லை என்பது கருத்து. பிரமனால் படைக்கப்பட்ட ஏழுவகைப் பிறப்புகளில் மூன்று கூறி, மற்றவற்றை இனம்பற்றிக் கொள்ள வைத்தார் என்க. வேரில் ஊற்றும் தண்ணீரை உட்கொண்டே மரங்கள் வளர்கின்றன, பயன்தருகின்றன என்பதை ''தாள்

உண்ட நீரைத் தலையாலேதான் தருதலால்'' என்ற மூதுரை விளக்குவது காண்க.

7. நருமதை ஆற்றை அடைதல்

ஏகினார் ஓசனை ஏழொடு ஏழு; பார்
சேகரத் தென்திசைக் கடிது செல்கின்றார்;
மேக மாலையினோடும் விரவி, மேதியின்
நாகு சேர் நருமதை ஆறு நண்ணினார். (4633)

(பார்-பூமி; சேகரம்-தலைஅணி/மணிமுடி; கடிது-விரைந்து; மாலை-வரிசை; விரவி-கலந்து; மேதி-பெண் எருமைகள்; நண்ணுதல்-அடைதல்; நாகு-இளம் கன்றுகள்;)

இந்த பூமிக்குச் சிறந்த மணி முடி போலும், தலையணியாகவும் விளங்கும் தென்திசைக் கண் விரைந்து செல்கின்றவர்களாகிய வானர வீரர்கள், விந்தியமலையிலிருந்து பதினான்கு ஓசனை தூரம் சென்று கரிய மேகங்களின் வரிசையோடு கலந்து படிந்திருக்கும் பெண் எருமைகள் பொருந்திய, அகன்ற நருமதையாற்றின் கரையை அடைந்தார்கள்.

ஓசனை என்பது சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் என்று கொள்க. பூமியில் தென்திசைதான் சிறந்த மணிமுடிபோல் விளங்குவது என்று எல்லாக் காப்பியங்களும் பேசுகின்றன. நருமதையாற்றின் நீரைப் பருகி மழை பொழிய மேகங்கள் அதில் படிவது போல, அங்கே பெண் எருமைகள் அம் மேகங்களை ஆண் எருமைகள் என்ற மயக்கத்தில் கருதிப் படிந்தன என்பதாம். பொதுவாக நாகு என்ற சொல் இளங்கன்றுகளைக் குறிக்கும். இங்கே பெண் பாலைக் குறித்தது என்க. போத்து என்பது ஆண்பால் இளக்கன்றுகளைக் குறிக்கும் என்க.

பொதுவாகக் கடல் நீரில் படிந்துதான் மேகங்கள் நீரை உண்டு மழையாகப் பொழியும் என்பர். இங்கே கம்பன் நருமதையாற்றின் பரப்பைச் சிறப்பித்துக் கூற விழைந்து, இங்கேயும் மேகங்கள் படிந் திருக்கிறது என்று கூறுவதைக் கருதுக. ''திசையனைத்தின் பெருமை யெலாம், தென்திசையே வென்றேற'' என்பது பெரியபுராணம். நருமதை நதியும், தபதி நதியும்தான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓடும் நதிகள். எனவே இவற்றை நதம் என்று கூறுவர். மற்றெல்லா நதிகளும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியே ஓடுகின்றன என்பதை நினைவிற் கொள்க.

8. அங்கே சீதையைத் தேடுதல்

அன்னம் ஆடு இடங்களும், அமரர் நாடியர்
துன்னி ஆடு இடங்களும், துறக்கம் மேயவர்
முன்னி ஆடு இடங்களும், சுரும்பு மூசு தேன்
பன்னி ஆடு இடங்களும், பரந்து சுற்றினார். (4634)

(ஆடுதல்-நீராடுதல், திரிதல்/விளையாடுதல்; அமரர் நாடியர்-தேவருலகத்து அரம்பையர்; துன்னி-நெருங்கி; துறக்கம்-சுவர்க்கலோகம்; முன்னி-கருதி; சுரும்புகள்-வண்டுகள்; மூசுதல்-மொய்த்தல்; தேன்-வண்டு; பன்னுதல்-பாடுதல்/ரீங்காரமிடுதல்)

வானர வீரர்கள் அங்கே அன்னம் துள்ளித் திரிந்து விளையாடும் இடங்களிலும், சுவர்க்க லோகத்தில் வாழும் தேவர்கள் அந்நதியின் சிறப்பைக் கருதி, முற்பட்டு வந்து, சஞ்சரிக்கும் இடங்களிலும், சுரும்பு என்னும் வண்டுகளும், தேன் என்னும் வண்டுகளும் மலர்களில் மொய்த்து ரீங்காரமீட்டுத் திரியும் இடங்களிலும், எல்லா இடங்களிலும் பரந்து சூழ்ந்து கொண்டு சென்று, சீதையைத் தேடினார்கள்.

சுரும்பு என்னும் வண்டுகள் எல்லா மலரிலும் சென்று தேன் பருகும் என்றும், தேன் என்னும் சிறந்த வண்டுகள், நறுமணம் உள்ள மலர்களில் மட்டும் தான் சென்று தேன் பருகும் என்றும் கூறுவர். அங்கே சோலைகளும், வாவிகள், பொய்கைகளும், தடாகங்களும் நிறைந் திருந்தன என்பது பெறப்படுகிறது. தேவர்களும், தேவ மகளிரும் இங்கே வந்து நீராடுவர் என்பதனால் நருமதையாற்றின் சிறப்புக் கூறப்பட்டது.

9. பெறல்அரும் தெரிவையை நாடும் பெற்றியார்,
அறல் நறுங் கூந்தலும், அளக வண்டு சூழ்
நிறைநறும் தாமரை முகமும், நித்தில
முறுவலும், காண்பரால், முழுதும் காண்கிலார். (4635)

(தெரிவை-பெண்/சீதை; நாடும்-தேடும்; பெற்றி-தன்மை; அறல்-கருமணல்; சூழ்தல்-மொய்த்தல்; நித்திலம்-முத்துக்கள்; முறுவல்-பற்கள்; அளகம்-கூந்தல்;)

பெறுதற்கு அருமையான சீதாதேவியைத் தேடித்திரியும் தன்மை கொண்ட வானர வீரர்கள், அந்நருமதை நதியின் கருமணலில் சீதையின் நறுமணமுள்ள கூந்தலையும், அங்கே மலர்ந்திருக்கின்ற, வண்டுகள் மொய்க்கின்ற நிறைந்த நறுமணம் கொண்ட தாமரை மலரில் அவளுடைய முகத்தையும், அலைகளால் கொழிக்கப்பட்டுக் கிடக்கின்ற முத்துக்களில் அவளுடைய பற்களையும்தான் கண்டார்களே தவிர, அவளை முழுமையாக ஒரு சேரக் காண முடியவில்லை.

நதியின் கருமணல் சீதையின் கூந்தலுக்கும், தாமரைமலர் அவள் முகத்திற்கும், முத்துக்கள் அவள் பற்களுக்கும் ஒப்பு. அவளை முழுமை யாகக் காணவில்லை; ஆனால் அவளுடைய சில உறுப்புக்களுக்கு உவமை கூறக்கூடிய சில பொருள்களை மட்டும் கண்டார்கள் என்பதாம். தெரிவை என்பது 26 வயது முதல் 31 வயது வரை உள்ள பெண்களைக் குறிக்கும் பருவம்.

10. செருமத யாக்கையர், திருக்கு இல் சிந்தையர்,
தரும தயா இவை தழுவும் தன்மையர்;

பொருமத யானையும் பிடியும் புக்கு உழல்
நருமதை ஆம் எனும் நதியும் நீங்கினார். (4636)

(செரு-போர்; மதம்-வெஞ்சினம்செருக்கு; யாக்கை-உடம்பு; திருக்கு-மாறுபாடு/குற்றம்; தயா-அருள்நெறி; பொரு-போர் செய்தல்; பிடி-பெண்யானை; உழல்தல்-திரிதல்விளையாடுதல்; நீங்குதல்-கடந்து செல்லுதல்;)

போர் புரியும் இயல்பும், செருக்கும் கொண்ட உடலினைக் கொண்டவர்களும், மாறுபாடற்ற குற்றமில்லாத மனத்தை உடையவர்களும், தருமம், அறநெறி, கருணை, ஆகிய குணங்களை இயல்பாகப் பெற்றிருக்கும் தன்மையை உடையவர்களுமான வானர வீரர்கள், போர் புரிவதில் வல்லதும், எக்களிப்புக் கொண்டதுமான ஆண் யானைகளும், பெண் யானைகளும் புகுந்து விளையாடித் திரிகின்ற நருமதை என்று சொல்லப்படும் நதியினைக் கடந்து சென்றனர்.

பொதுவாகக் குரங்குகளின் மனம் ஒரு நிலைப்பட்டு நிற்காது. மாறிக் கொண்டே இருக்கும். சேஷ்டைகள் செய்து கொண்டே இருக்கும். பிறர்க்குத் தீங்கு செய்து கொண்டே இருக்கும். ஆனால் இராமபிரான் காரியமாகச் செல்லும் குரங்குகள் அவ்வாறில்லாமல், அதற்கு மாறுபட்டு, அன்பும், கருணையும் நிறைந்திருந்தன என்று குரங்குச் சேனையின் பெருந்தன்மையைச் சிறப்பித்தார் என்க. ''பொல்லாத மர்க்கட மனமே'' என்பார் தாயுமானவர். மர்க்கடம்-குரங்கு; ஆண் யானைகளும், பெண்யானைகளும் அமிழ்ந்து திரிகின்ற நதி என்றதனால், நருமதையின் அகலத்தையும், ஆழத்தையும் குறிப்பால் பெறவைத்தார் என்க. யாக்கை என்பது, உதிரம் முதலிய ஏழு வகைத் தாதுக்களால் கட்டப்பட்டது என்பதால் உடம்புக்குக் காரணப் பெயர்.

11. ஏமகூடம் அடைதல்

தாம கூடத் திரை தீர்த்த சங்கமாம்,
நாம கூடஅப் பெருந்திசையை நல்கிய,
வாம கூடச் சுடர்மணி வயங்குறும்,
ஏமகூடத் தடங்கிரியை எய்தினார். (4637)

(தாமம்-ஒளி; திரை-அலைகள்; சங்கமம்-கடல்கூட்டுறவு; நாமம்-அச்சம்/புகழ்; வாமம் -அழகு; சுடர்-ஒளி; மணி-மாணிக்கம்; வயங் குறுதல்-விளங்குதல்; கூடம்-சிகரம்/மறைவு/தொகுதி; ஏமம்-பொன்; தீர்த்தம்-ஆறுகள்;)

ஒளி மிகுந்த சிகரத்தையுடையதும், அலைகளையுடைய ஆறுகள் சங்கமிக்கின்றதும், அச்சம் தருகின்றதும், புகழ் மிக்கதுமான மரச் செறிவுகளையுடைய பெரிய திசையினைப் பாதுகாக்கின்றதும், அழகின் தொகுதியாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் இரத்தினங்கள் விளங்கித் திகழும்

பொன்மயமான ஏமகூடம் என்னும் பெரியமலையை, வானர வீரர்கள் அடைந்தார்கள்.

ஏமகூடம் என்பது எட்டுக் குலமலைகளுள் ஒன்று. இது மேருமலைக்கு அப்பால் 9000 யோசனைக்கு மேல் தெற்கில் அமைந்துள்ளது என்று கூறுவர்.

12. மாடுஉறு கிரிகளும், மரனும், மற்றவும்
சூடுஉறு பொன் எனப் பொலிந்து தோன்றுறப்
பாடுஉறு சுடர் ஒளி பரப்புகின்றது;
வீடு உறும் உலகினும் விளங்கும் மெய்யது. (4638)

(மாடு-பக்கம்; மரன்-மரம்; பாடு-பெருமை; வீடு-சுவர்க்கலோகம் பரமபதம்; மெய்-உடம்பு/காட்சி/தோற்றம்; சூடுறுதல்-புடம் போடுதல்;)

அந்த ஏமகூட மலையின் பக்கத்தில் உள்ள மலைகளும், மரங்களும், இன்னும் உள்ள பிற பொருள்கள் அனைத்தும், புடம் போட்டதால் சுடச்சுடரும் பொன் போலப் பொலிந்து தோன்றும்படி, பெருமை பொருந்திய மிக்க ஒளியைப் பரப்புகின்றன; சுவர்க்க லோகத்தைக் காட்டிலும் ஒளிமிகுந்து சிறப்புற்று விளங்கும் தோற்றத்தையுடையது, அந்த ஏமகூட மலை.

ஏமகூட மலை இயற்கையாகவே பொன் நிறம் வாய்ந்தது. இதன் ஒளி, அதன் அருகில் இருக்கும் மலைகள், மரங்கள், மற்ற பொருள்கள் எல்லாவற்றின் மேலும் படுவதால், அவைகளும் புடம் போட்ட, மாற்றுக் குறையாத தங்கம் போல ஒளி விட்டுப் பிரகாசிக்கின்றன என்பதாம். சுவர்க்க லோகத்தைக் காட்டிலும் ஒளி பெற்றுத் திகழ்கின்றது என்பதுவுமாம். சுவர்க்கலோகம் எப்பொழுதும் ஒளியுடன் திகழும் என்பதும், அங்குள்ள பொருள்கள் எல்லாமும் பொன்நிறம் பெற்றுத் திகழும் என்பதும் புராணக் கொள்கை. ''பனிமால் இமயப் பொருப்பு அகம் சேர்ந்த, பொல்லாக் கருங்காக்கையும், பொன் நிறமாயிருக்கும்'' என்பது யாப்பருங்கலக்காரிகை ''பொன் உருள் உரைத்து உரைத்து ஓடி, இருண்ட கல்லையும் தன் நிறமாக்கிய இரதம்'' என்று முன்பு கூறியதையும் நினைவு கூர்க.

13. பறவையும், பல்வகை விலங்கும், பாடுஅமைந்து
உறைவன, கனக நுண் தூளி ஒட்டலால்
நிறைநெடு மேருவைச் சேர்ந்த நீரவாய்ப்
புறம்நெடும் பொன்ஒளி மிளிரும் பொற்பது. (4639)

(உறைவன-தங்குவன; கனகம்-பொன்; தூளி-துகள்; நீர்மை-தன்மை; புறம்-உடம்பு; பாடு-பக்கம்; பொற்பு-பொலிவு; ஒட்டுதல்- படிதல்/பொருந்துதல்;)

அந்த ஏமகூட மலை, தன்னிடத்தில் எப்போதும் தங்கி வாழும் பறவைகளும், பலவகை விலங்குகளும், தன் மீதுள்ள நுண்ணிய பொன் துகள்களை ஒட்டிக் கொள்வதால், நிறைந்த நீண்ட மேருமலையைச் சார்ந்த பொருள்களின் தன்மை போல, தம் உடம்பெல்லாம் மிக்க பொன் ஒளி வீசிப் பொலிவு பெற்றுத் திகழ்கின்றது.

மேருமலை இயற்கையிலேயே பொன் மயமானது. எனவே அதனைச் சார்ந்து இருக்கின்ற பொருள்கள் அனைத்தும் மேருமலையைப் போலவே, பொன் போன்று ஒளி வீசித்திகழும். அதைப்போலவே ஏமகூட மலையிலிருந்து எழும் பொன் துகள்களினால் அதன் மீது எப்போதும் தங்கியிருக்கும் பறவைகளும், விலங்குகளும் கூடத் தங்கள் மேல் நுண்ணிய பொன்துகள்கள் ஒட்டப்பட்டு பொன் மயமாக ஒளிவீசுகின்றன என்பதாம். முன்பாடலில் உயிரில்லாத மலைகளையும், மரங்களையும் மற்றவற்றையும் கூறிய கவிஞன், இப்பாடலில் உயிருள்ளவையான பறவைகளையும், விலங்குகளையும் கூறியதைக் கருதுக.

14. பரவிய கனக நுண் பராகம் பாடுஉற,
எரிசுடர்ச் செம்மணி ஈட்டத்து ஊடு வீழ்
அருவியும், நதிகளும் அலங்கு தீயிடை
உருகுபொன் பாய்வ போன்று ஒழுகுகின்றது. (4640)

(பராகம்-துகள்; எரி-நெருப்பு; ஈட்டம்-கூட்டம்; அலங்குதல்-அசைதல்; இடை-நடுவில்; செம்மணி-மாணிக்கம்;)

விரிந்து பரவுகின்ற பொன்னின் நுண்மையான துகள்கள் பக்கங்களிலெல்லாம் படிய, நெருப்புப் போன்று ஒளிவீசும் மாணிக்கக் கற்களின் கூட்டத்தினோடு கீழே விழுகின்ற அருவிகளும், நதிகளும், அசைந்து வருகின்ற தோற்றம், நெருப்பின் நடுவில், உருகி ஓடுகின்ற பொன் பாய்ந்து வருவது போன்ற தன்மையுடையதாய் இருக்கிறது ஏமகூடமலை.

பொன்துகள்கள் பரவிக் கலந்த நதிகளும், அருவிகளும், தன்னிடத்துள்ள சிவந்த மாணிக்கக்கற்களுடன் கீழே விழுவது, நெருப்பின் நடுவில், உருகும் பொன் பாய்வது போன்றிருக்கிறது என்பதாம். மாணிக்கக்கற்களின் தொகுதி, அசைந்து எரியும் நெருப்பிற்கு உவமை; பொன்துகள் கலந்த அருவியும் நதிகளும் கீழே விழுவது நெருப்பில் உருக்கிய பொன் பாய்வதற்கு உவமை.

15. விஞ்சையர் பாடலும், விசும்பின் வெள்வளைப்
பஞ்சின் மெல் அடியினார் ஆடல் பாணியும்,
குஞ்சர முழக்கமும், குமுறு பேரியின்
மஞ்சு இனம் உரற்றலும், மயங்கு மாண்பது. (4641)

விஞ்சையர்-வித்யாதரர்; விசும்பு-விண்ணுலகம்; பாணி-தாளம்; குஞ்சரம்-யானை; முழக்கம்-பிளிறல் ஒலி; பேரி-முரசம்; மஞ்சு இனம்-

மேகக்கூட்டங்கள்; குமுறுதல்-முழங்குதல்; உரற்றல்-ஒலித்தல்; மாண்பு-சிறப்பு/பெருமை; மயங்குதல்-கலத்தல் மருட்சியடையதலுமாம்;)

அந்த ஏமகூட மலையில் வந்து தங்குகின்ற வித்யாதரர்களின் பாடலின் இசை ஒலியும், விண்ணுலகிலிருந்து வந்திருக்கின்ற வெண்மையான சங்கு வளையல்கள் அணிந்திருக்கின்றவரும், பஞ்சு போன்ற வெண்மையான பாதங்களைப் பெற்றிருப்பவர்களுமான தேவ மகளிர்கள் ஆடலுக்கேற்ற தாளத்தின் ஓசையும், யானைகள் பிளிறுகின்ற ஓசையும், முரசங்கள் முழங்குவது போல் முழங்குகின்ற மேகக் கூட்டங்களின் இடி ஓசையும், இவையெல்லாமும் ஒன்றுடன் ஒன்று கலந்து, மருட்சியை உண்டாக்கும் பெருமைமிகுந்த மலை ஏமகூட மலையாகும்.

''விஞ்சையர் பாடலும், விசும்பின் வெள்வளைப் பஞ்சின் மெல்லடியினர் ஆடல் பாணியும்'' மெல்லிய ஓசையை உடையன; ''குஞ்சர முழக்கமும், குமுறுபேரியின் மஞ்சு இனம் உரற்றலும்'' வன்மையான ஓசையை உடையன; எனவே இவ்விரண்டு வகையான ஓசைளும் ஒன்றொடொன்று கலந்ததால் மருட்சியடைதல் இயற்கை. அத்தகைய பெருமை வாய்ந்தது இந்த ஏமகூடமலை என்பதாம். விலங்குகளில் பெரியதான யானையை மட்டும் கூறியதால் ஏனைய பறவை, விலங்குகளையும் உப லட்சணத்தால் கொள்ளுதல் பொருந்தும்; பாணி என்பது கையினால் தாளம் போடுவதைக் குறிக்கும் என்க.

16. வானரர் இவ்விடமே இராவணன் இடம் என எண்ணுதல்

அனையது நோக்கினார், ''ஆம்; இது ஆம் அயில்
வினையினன் இராவணன் இருக்கும் வெற்பு'' எனும்
நினைவினர், உவந்து உயர்ந்து ஓங்கும் நெஞ்சினர்,
சினம் மிகக் கனல் பொறி சிந்தும் செங்கணார். (4642)

(அயில்-வேல்; வினை-போர்த்தொழில்; வெற்பு-மலை; ஓங்குதல்-பூரித்தல்; கனல்-நெருப்பு;)

அந்த ஏமகூட மலையை நன்கு பார்த்த வானரவீரர்கள், ''இதுதான்கூரிய வேற் படையைக் கொண்டு பகைவர்களை வருத்திப் போர் செய்வதையே தொழிலாகக் கொண்ட இராவணன் ''அரசோச்சும் திரிகூடமலை'' என்று கருதி, சீதையைக் கண்டு விடலாம் என மிக்க மகிழ்ந்து, பூரித்த நெஞ்சு உடையரானார். எனினும் இராவணன் பற்றி எண்ணும் பொழுது கோபம் மிகக் கொண்டு, நெருப்புப்பொறி பறக்கும் சிவந்த கண்களையும் உடையவர்களானார்கள்.

ஏமகூடமலையின் வளர்ப்பத்தையும், உயர்ச்சி முதலியவற்றையும் கண்டு இதுதான் இராவணன் வாழும் திரிகூட மலை போலும் என்று சந்தேகித்தனர். உடனே சீதையைக் கண்டுபிடித்து விடலாம் என்பதால், உவகையால், நெஞ்சு பூரிக்கவும், இராவணன் கொடிய செயலை நினைத்ததால், பெருங்கோபமும் கொண்டு, கண்கள் சிவக்க, நெருப்புப்

பொறி சிந்தினர் என்பதாம். ஒரே காலத்தில் உவகையும் சினமும் கொண்ட இடங்களில் இதுவும் ஒரு இடம் என்க.

17. ''இம்மலை காணுதும் ஏழை மானை, அச்
செம்மலை நீக்குதும் சிந்தைத் தீது'' என
விம்மல் உற்று, உவகையின் விளங்கும் உள்ளத்தார்
அம்மலை ஏறினார், அச்சம் நீங்கினார். (4643)

(ஏழை-பேதை; செம்மல்-இராமன்; தீது-துன்பம்; விம்மல்-பூரித்தல்;)

இந்த மலையில் ஏறி அந்தப் பேதையும், மான்போல் மருண்ட விழியும் கொண்டவளுமான சீதையை எப்படியும் கண்டுபிடித்து, அச்செய்தியை கிட்கிந்தையில் இருக்கும் இராமபிரானுக்குக் கூறி, அவன் உள்ளத்தில் இருக்கும் துன்பத்தைப் போக்குவோம் என்று கருதி, நெஞ்சம் பூரித்து, மகிழ்ச்சியினால் விளங்கும் மனத்தை உடையவர்களாகி, இராவணன் மீதிருந்த அச்சம் நீங்கப்பெற்று அம்மலை மீது ஏறத் தொடங்கினர்.

18. இரிந்தன கரிகளும், யாளி ஈட்டமும்;
விரிந்த கோள் அரிகளும் வெருவி நீங்கின;
திரிந்தனர் எங்கணும், திருவைக் காண்கிலார்;
பரிந்தன சிந்தனை பரிகின்றாம் என. (4644)

(ஈட்டம்-கூட்டம்; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; கோள்-வலிய/ கொல்லும் தன்மையுள்ள; அரி-சிங்கம்; வெருவி-அச்சம்கொண்டு; பரிதல்-வருந்துதல்/விரைதல்; திரு-சீதை; திரிதல்-தேடிப்பார்த்தல்;)

இவ்வாறு குரங்குகள் மலை மீது ஏறிவருவதைப் பார்த்த யானைகளும், யாளிகளின் கூட்டமும் தம் நிலைகெட்டு ஓடின; மலை எங்கும் பரவியிருந்தனவும், விரிந்த முகம் கொண்டனவும், பிறர் உயிரைக் கொல்லும் தன்மையுடையவையுமான வலிய சிங்கங்களும் இவற்றிற்கு அஞ்சி ஓடி ஒதுங்கின; அம்மலை எங்கும் அலைந்து தேடிப்பார்த்தும், இலக்குமியின் அம்சமான சீதாதேவியைக் காண முடியாததால் விரைந்து செல்லும் இயல்புடைய தம் மனங்கள் போல் விரைந்து நீங்கலாயினர்.

யாளி என்பது சிங்கம் போன்ற தோற்றமுடையதாய்த் துதிக்கையுடன் விளங்கும் ஒரு விலங்கு. சீதையை அங்கு காணாததால் மனம் நொந்தவர் களாய், மிக வருந்தி மனோவேகம் போல விரைந்து சென்றனர் என்பதாம். அவர்களின் வேகத்திற்கு அவர்களின் மனங்களே உவமையாயிற்று.

19. ஏமாற்றத்துடன் நழே இறங்குதல்

ஐம்பதிற்று இரட்டி காவதத்தினால் அகன்று,
உம்பரைத் தொடுவது ஒத்து, உயர்வின் ஓங்கிய,
செம்பொன் நல்கிரியை ஓர் பகலில் தேடினார்;
கொம்பினைக் கண்டிலர்; குப்புற்று ஏகினார். (4645)

(இரட்டி-இரண்டு மடங்கு; ஐம்பதிற்று இரட்டி-நூறு; உம்பர்-விண்ணுலகு; கொம்பு-பூங்கொடி; குப்புறுதல்-இறங்குதல்/பாய்தல்; பகல்-ஒருநாள்;)

வானவீரர்கள், நூறு காவதம் அகலமுடையதும், விண்ணுலகத்தையே தொடும் அளவுக்கு உயர்ந்தோங்கியதும், சிவந்த பொன்மயமான அழகிய ஏமகூட மலையில், ஒருநாள் முழுவதும் சீதையைத் தேடி அலைந்தனர். எனினும் பூங்கொடி போன்ற சீதாதேவியைக் கண்டு பிடிக்க முடியாததால், மனம் நொந்து கீழ் இறங்கிச் செல்லலானார்கள்.

ஒரு காவதம் என்பது 10 மைல் அல்லது 16 கிலோ மீட்டர் எனக் கொள்க. பல நாள் தேட வேண்டிய செயலை ஒரே நாளில் செய்து முடித்தனர் என்பதாம்.

20. சேனையைப் பிரித்து அனுப்புதல்.

வெள்ளம் ஓர் இரண்டு என விரிந்த சேனையைத்
''தெள்ளு நீர் உலகெலாம் திரிந்து தேடி, நீர்
எள்ளரும் மயேந்திரத்தில் எம்மில் கூடும்'' என்று
உள்ளினார், உயர் நெடும் ஓங்கல் நீங்கினார்; (4646)

(விரிந்த-பரவியுள்ள; தெள்ளு-தெளிவான; உலகு-தென்திசைப் பகுதி; எள்ளரும்-குற்றமற்ற/இகழ்தற்கரிய; கூடுதல்-சேருதல்; உள்ளுதல்-சங்கேதம் செய்து கொள்ளுதல்; ஓங்கல்-மலை; ஓங்கி உயர்ந்திருத்தல் பற்றி ஓங்கல் என்பது மலைக்குக் காரணப் பெயர்; நீங்குதல்-பிரிந்து செல்லுதல்;)

அங்கதன் முதலான வானரத் தலைவர்கள், இரண்டு வெள்ளம் என்று விரிந்து பரந்திருக்கின்ற வானர வீரர்களை நோக்கி, ''நீங்கள் தெளிந்த நீர்ப்பரப்பை உடைய தென்திசைப்பகுதிகளில் எல்லாம் சுற்றித்திரிந்து, சீதாதேவியைத் தேடிக்கொண்டு, இகழ்தற்கரிய, தென்திசையில் உள்ள மயேந்திர மலையினிடத்தில் எங்களை வந்து சேருங்கள்'' என்று நினைத்து அவர்களுக்கு அவ்வாறே கட்டளையிட்டு, அந்த உயர்ந்த நீண்ட ஏமகூட மலையிலிருந்து இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து சென்றனர்.

இங்கு ''உலகெலாம்'' என்றது தென்திசைப் பகுதியை என்க; ஒரே கூட்டமாகச் சென்று தேடினால் ஒரே மாதத்திற்குள் எல்லா இடங்களிலும் சென்று தேட முடியாது என்பதை எண்ணி, சேனையை இருபிரிவாகப் பிரித்து அனுப்பினான் அங்கதன் என்பதாம். பலபகுதிகளாக, தனித்தனித் தொகுதிகளாகப் பிரித்து அனுப்பினான் என்பதும் பொருந்தும்.

21. அனுமன் முதலியோர் ஒரு பாலைவனத்தை அடைதல்

மாருதி முதலிய வயிரத்தோள், வயப்
போர்கெழு வீரரே குழுமிப் போகின்றார்;
நீர் எனும் பெயரும் அந்நெறியின் நீங்கலால்,
சூரியன் வெருவும் ஓர் சுரத்தைத் துன்னினார். (4647)

(வயிரம்-உறுதி; வய-வெற்றி/வலிய; குழுமி-திரண்டு ஒருங்குகூடி; நெறி-வழி; வெருவுதல்-அஞ்சுதல்; சுரம்-பாலைவனம்; துன்னுதல்-சேர்தல்/அடைதல்;)

அனுமன் முதலான திண்ணிய தோள்களையுடையவரும், வெற்றியே தரும், வலிய போர்த்தொழிலில் நன்கு பழகியவரும் எழுச்சி மிக்கவருமான வீரர்களே இப்போது தனியே பிரிந்து, திரண்டு செல்கிறார்கள்; அவர்கள் போகும் வழியில் ஒரு சிறிதும் நீரேயில்லாத படி அமைந்ததும், பாலைக் கடவுளும் வெம்மை மிகுந்த கிரணங்களை உடையவனுமான கதிரவனே கண்டு அஞ்சத்தக்க ஒரு பாலைவனத்தை அடைந்தார்கள்.

சிறிது கூட நீரையே காண முடியவில்லை என்பதைக் குறிக்க, ''நீர் எனும் பெயரும் அந்நெறியின் நீங்கலால்'' என்றார். பொதுவாகச் சூரியன்தான் வெப்பம் மிகுந்த கிரணங்களை உடையவன், அவன்தான் செழித்த மருதநிலத்தைக் கூடப் பாலை நிலமாக மாற்றிவிடுபவன்; அவன் பாலைநிலத்திற்கே கடவுள்; அத்தகைய சூரியனே அஞ்சத்தக்க பாலைவனம் என்றதனால், பாலைவனத்தின் வெம்மை புலப்படுத்தப் பட்டது. இந்தப் பாலைவனம் முன்பு செழிப்புற்று இருந்ததாகவும், ''கண்டு'' என்ற முனிவன் தன் பதினாறு வயது மகள் இந்நிலத்தில் இறந்து போனதால் சீற்றம் கொண்டு, அவ்விடம் புல் பூண்டு முளைக்கப் பெறாததும், மக்கள் வாழ்வதற்குத் தகுதியற்றதுமான ஒரு பாலைவனமாக ஆகக்கடவது என்று சாபம் கொடுத்ததனால் இவ்வாறு ஆயிற்று என்றும் முதல் நூலாகிய வான்மீகம் கூறுகிறது.

22. பாலைவனத்தின் தன்மை

புள் அடையா; விலங்கு அரிய; புல்லொடும்
கள்ளுடை மரன்இல; கல்லும் தீந்து உகும்;
உள்ளிடை யாவும் நுண் பொடியோடு ஓடிய
வெள்ளிடை அல்லது ஒன்று அரிது அவ்வெஞ்சுரம். (4648)

(அடைதல்-தங்குதல்; கள்-தேன்; மரன்-மரம்; வெள்ளிடை-வெற்றிடம்;)

அந்தக் கொடிய பாலைவனத்தில் பறவைகளும், விலங்குகளும் தங்குவதில்லை; விலங்குகள் காணப்படமாட்டாது; புல்லும், தேன் தருகின்ற மலர்களையுடைய மரங்களும் இருப்பதில்லை; பெரிய கற்களும் கூட வெப்பத்தால் தீய்ந்து பொடியாகிச் சிதறும். உள்ளிடத்தில் இருந்தவை எல்லாம் நுண்ணிய துகள்களாகி ஓடிப்போய் விட்டதால், இப்போது அவை வெற்றிடமாய்க் காட்சியளிக்கிறதே தவிர அங்கே ஒரு பொருளைக் கூடக் காண இயலவில்லை.

ஓரறிவுள்ள புல், பூண்டு முதல் ஐந்தறிவுடைய விலங்குகள் வரை, அங்கு ஒன்றையும் காண முடியவில்லை என்று பாலைவனத்தின் தன்மை கூறினார் என்க.

23. வானரர்கள் அடைந்த துயரம்

நன் புலன் நடுக்குற, உணர்வு நாம் உற,
பொன் பொலி யாக்கைகள் புழுங்கிப் பொங்குவார்;
தென் புலம் தங்கு எரி நரகில் சிந்திய
என்புஇல் பல்லுயிர் என வெம்மை எய்தினார். (4649)

(புலன்-இந்திரியங்கள்/ஐம்பொறிகள்; நாம்-நாமம்அச்சம், யாக்கை-உடம்பு; புழுங்குதல்-வேர்த்தல்; பொங்குதல்-துடித்தல்; புலம்-திசை; சிந்திய-வீழ்ந்த; என்பு-எலும்பு)

வானரர்கள் தம் நல்ல ஐந்து இந்திரியங்களும் நடுக்கமடையவும், அறிவும் அச்சம் கொள்ளும்படியும், பொன்போல் விளங்கும் தங்கள் உடம்புகள் வியர்த்துத் துடிதுடிக்கலானார்கள்; தெற்குத் திசையில் இருக்கின்ற எரியும் தன்மையுள்ள நரகத்தில் விழுந்துபோன, எலும்பற்ற உடல்களையுடைய புழுப்போன்று பல உயிரினங்கள் துடிப்பதைப்போல, வெப்பத்தால் மனக் கொதிப்பும் உடல் கொதிப்பும் அடைந்தனர்.

''புலன்'' என்பது இங்கே பொறிகளைக் குறித்து நின்றது. ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களும் நடுக்கமுற்றன. அறிவு நிலை கலங்கி, உடல் வியர்த்துத் துடிக்கலாயிற்று. தென் திசைக் காவலனான இயமன் இருக்கின்ற நரகத்தில் விழுந்து துடிக்கும் புழுக்கள் போலத் துடித்தார்கள் என்பதாம். வானரர்கள் நெருப்பில் விழுந்த புழுப்போலப் பாலைவனத்தில் அகப்பட்டுக் கொண்டு துடித்தார்கள் என்பது கருத்து. ''என்பில் பல் உயிர்'' என்பது ''என்பிலதனை வெயில் போலக்காயுமே'' என்ற வள்ளுவன் குறளை நினைவூட்டவது காண்க. நரகு என்பது பல அடுக்குகளால் ஆனது. அவரவர் செய்த தீவினை பாவங்களுக்கு ஏற்ப அவை அமையும். தப்தகும்பம், கும்பீபாகம் என்பன அங்குள்ள சில நிலைகள் என்பதறிக. வானரர்கள் வெயிலில் அகப்பட்டுத் துடிப்பது, புழுக்கள் நெருப்பில் வீழ்ந்து துடிப்பதற்கு உவமை.

24. நீட்டிய நாவினர்; நிலத்தில் தீண்டு தோறும்
ஊட்டிய வெம்மையால், உலையும் காலினர்;
காட்டினும் காய்ந்து தம் காயம் தீதலால்
சூட்டு அகல்மேல் ஒரு பொரியின் துள்ளினார். (4650)

(தீண்டுதல்-அடிவைத்தல்; ஊட்டுதல்-தாக்குதல்/தருதல்; உலைதல்-வருந்துதல்; காயம்-உடம்பு; காய்ந்து-வெப்பமடைந்து; அகல்-சட்டி; பொரி-நெற்பொரி; காடு-பாலைவனம்; தீதல்-வெந்துபோதல்; துள்ளுதல்-துடித்தல்; சூட்டகல்-நெருப்புக்கல்; நீட்டிய-தொங்கிய);

அவ்வானர வீரர்கள் நீர் வேட்கையால் தொங்கிய நாவையுடையவராகவும், அவர்கள் பாதங்கள் நிலத்தில் படும் போதெல்லாம் நிலத்தி

லிருந்து தாக்கப்பட்ட வெப்பத்தால் கொப்பளித்துப் போன கால்களை உடையவராகவும் காணப்பட்டனர்; அந்தப் பாலைவனத்தைக் காட்டிலும் தங்கள் உடம்பு மிக்க வெப்பமடைந்து கருகிப் போனதால், சூடு ஏறிய சட்டியில் இருந்து எழுந்து வெளிக் கிளம்புகின்ற நெற்பொரியைப் போலத் துடித்தனர்.

நீர் வேட்கையால் ஏற்பட்ட வறட்சியால் நாக்குகள் தொங்கிப் போதலும், வெப்பம் மிக்க நிலத்தில் கால்கள் பதிவதால், கால்கள் கொப்பளித்துப் போவதும்; இவற்றைத் தாங்க முடியாது உடம்பு துடிதுடித்துப் போவதும் எல்லோருக்கும் ஏற்படும் இயற்கையான மெய்ப்பாடு. வானரர்கள் வெப்பம் தாங்காது துள்ளுவதற்குச் சூடேறிய சட்டியிலிருந்து மேலெழுந்து சிதறும் நெற்பொரி உவமை.

25. பிலம் இருந்த வழியில் செல்லுதல்

ஒதுங்கலாம் நிழல் இறை காண்கிலாது, உயிர்
பிதுங்கலாம் உடலினர், முடிவுஇல் பீழையார்,
பதங்கள் தீப்பருகிடப் பதைக்கின்றார் பல
விதங்களால்; நெடும் பில வழியின் மேவினார். (4651)

(இறை-சிறிதும்; பிதுங்குதல்-வெளியேறுதல்/நீங்குதல்; பீழை-துன்பம்; பதங்கள்-பாதங்கள்; பருகுதல்-தாக்குதல்; தீ-வெப்பம்; மேவுதல்-அடைதல்; பிலம்-குகை/பாதாளம் போன்ற கீழ் அறைபெரிய பொந்து)

வானர வீரர்கள் இந்த வெப்பத்திலிருந்து ஒதுங்கிக் கொள்ளலாம் என்றால் ஒரு சிறிதளவு கூட நிழலைக் காணமுடியாமல், உயிர்துறக்கும் அளவுக்கு உடல் வாடிப் போனவராய், எல்லையற்ற துன்பங்களை அடைவாராயினர்; அவர்களுடைய பாதங்களில் நெருப்புப் போன்று வெப்பம் தாக்குவதால் துடிதுடித்து, இதனின்றும் தப்புவதற்குப் பலவிதங்களையும் எண்ணிப்பார்த்து, முடிவில், ஒரு நீண்ட குகை தெரிந்த வழியை நோக்கிச் செல்லலாயினர்.

அவர்கள் பிலத்தின் வழியே செல்லவேண்டாதவர்களாயினும், இந்தப் பாலைவனத்தின் வெப்பத்திலிருந்து தப்பிப்பதற்காகப் பிலம் இருந்த வழிநோக்கிச் செல்லவேண்டியதாயிற்று என்பதாம்.

26. பிலத்தினுள் புகுதல்.

மீச்செலவு அரிது; இனி விளியின் அல்லது;
தீச்செலவு ஒழியவும் தடுக்கும்; திண் பில
வாய்ச்செலல் நன்று என, மனத்தின் எண்ணினார்;
போய்ச்சில அறிதும் என்று, அதனின் புக்கனர். (4652)

(விளிதல்-இறத்தல்; மீ-மேலே/அப்பால்; செலவு-செல்லுதல்; திண்-வலிய;)

வானரர்கள் இந்தப் பாலைவனத்தில் மேற்கொண்டு சென்றால் நாம் அழிந்து போவோம்; எனவே இந்த வலிய பிலத்தினுள் நுழைந்து செல்லுதல், வெப்பம் மிகுந்த பாலை நிலத்தில் செல்லுதலையாவது ஓரளவு தடுக்கும், அதுவே சரியானது என்று மனத்தில் கருதியும், அங்கு சற்று சென்றுதான் பார்ப்போமே என்று கருதியும் அப்பிலத்தினுள் புகுந்தனர்.

இப்பாலைவனத்தில் இன்னும் சிறிது சென்றாலும் நாமனைவரும் மடிந்து போகவேண்டியதுதான். எனவே இங்கே தென்படுகின்ற நிழலாயிருக்கின்ற, வலிய பிலத்தினுள் சற்று சென்று பார்ப்போம்; இது நமக்குரியவழிஇல்லைஎன்றாலும்,இங்குசீதைஇருக்கிறாளாஎன்பதைப் பார்க்கவும், இந்தப் பாலைவனத்தின் வெப்பத்திலிருந்து நம்மைத் தடுத்துக் கொள்ளவும், இப்பிலத்தினுள் செல்வதே சிறந்தது என்று எண்ணி, அதற்குள் துணிந்து புகுந்தனர் என்பதாம். இப்பிலம் நமக்கு ஒரு புகலிடமே அன்றி இதுவழியல்ல என்பதை நன்கு உணர்ந்திருந்தனர் வானரர் என்பது நன்கு புலப்படுத்தப்படுவதைக் காண்க. எளிதில் கடத்தற்கு அரிதாக இருக்கலாம் இந்தப் பிலம் என்பதால் 'திண்பிலம்' என்றார் என்க.

27. அக்கணத்து அப்பிலத்து அகணி எய்தினார்;
திக்கினோடு உலகுஉறச் செறிந்த தேங்கு இருள்
எக்கிய கதிரவற்கு அஞ்சி, ஏமுறப்
புக்கதே அனையது ஓர் புரை புக்கு எய்தினார். (4653)

(அகணி-உள்ளிடம்/உட்பக்கம்; செறிந்த-நெருங்கியுள்ள; எக்குதல்-வீசுதல்; ஏமம்-பாதுகாப்பு; புரை-குகை;)

அப்பொழுது வானர வீரர்கள் அந்தப் பிலத்தின் உட்பக்கம் சென்று சேர்ந்தனர்; இந்த உலகம் முழுவதிலும், நான்கு திசைகளிலும்; அடர்த்தியாகப் பொருந்தியிருக்கின்ற பேர் இருள், தன்மேல் தாக்கி வீசிய சூரியனின் வெப்பம் மிகுந்த கிரணங்களுக்கு அஞ்சி, தனக்கு ஒரு பாதுகாப்பு வேண்டுமே என்று கருதிப் புகுந்து ஒளித்துக் கொண்டது போன்ற தோற்றமுடைய ஒரு குகைக்குள் சென்று சேர்ந்தனர்.

அந்தப் பிலத்திற்குள் புகுந்தவுடன், அங்கு ஒரு மிக இருண்ட குகை தெரிந்தது, அதில் சென்று சேர்ந்தனர் என்பதாம். அந்தக் குகையின் பேர் இருளை விளக்குவதற்காக, தனக்குப் பகைவனான சூரியனது வெப்பம் மிகுந்த கிரணங்களுக்கு அஞ்சி, உலகத்திலும், நான்கு திசைகளிலும் நிறைந்திருக்கின்ற பேரிருள் எல்லாம் ஒன்று சேர்ந்து அங்கே இருப்பது போன்ற ஒரு தோற்றம் கொண்ட குகையை உவமையாகக் கூறினார் என்க. பிலத்துக்குள் புகும்பொழுது, ஒரு இருள் செறிந்த குகைக்குள் நுழைந்தனர் என்பது கருத்து.

28. புரைக்குள் பட்ட துயரம்

எழுகிலர்; கால் எடுத்து ஏகும் எண்இலர்;
வழி உளதாம் எனும் உணர்வு மாற்றினார்;
இழுகிய நெய் எனும் இருள் பிழம்பினுள்
முழுகிய மெய்யராய், உயிர்ப்பு முட்டினார். (4654)

(கால்-அடி; ஏகுதல்-நடத்தல்; எண்-நோக்கம்/எண்ணம்; இழுகிய-உறைந்து போன; பிழம்பு-தொகுதி; மெய்-உடம்பு; முட்டுதல்-தடுமாறுதல்; உயிர்ப்பு-மூச்சு;)

அவ்வாறு புரைக்குள் புகுந்த வானரர்கள் மேற்செல்லுதற்கு வலிமையற்றவர்களானார்கள்; மற்றும் ஓர் அடி எடுத்து வைத்துச் செல்லும் நோக்கமும் இல்லாதவரானார்கள்; அடிஎடுத்து வைத்தால் மேலே செல்லுதற்குரிய வழி ஏதேனும் இருக்குமா என்று சந்தேக எண்ணம் கொண்டு, முன்பு தாம் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டனர். காரணம், அங்கே இருந்த இருட்பிழம்பு, உறைந்த விழுது போன்று, இறுகிய நெய்யைப் போன்று அவ்வளவு அடர்த்தியாகத் தோன்றியது. அந்த இருளின் தொகுதியுள் தங்கள் உடம்பெல்லாம் முழுகிப் போனதாகத் தோற்றியது; எனவே மூச்சுவிடக்கூட இயலாமல் தடுமாறினார்கள்.

முன்பு இப்பிலத்தினுள் ஏதேனும் வழி இருக்கும் என்ற எண்ணத்தால் அதை அடைந்தார்கள். ஆனால் அங்கே சென்ற பிறகுதான் அங்கு சூழ்ந்திருந்த இருட்பிழம்பின் அடர்த்தியைக் கண்டு மேலேஏதும் செய்ய முடியாதவர்களாகி மூச்சுமுட்டித் தவித்தனர் என்பதாம். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள முடியாத நிலையிலும், தாம் இருக்குமிடத்தையே உணர்ந்து கொள்ள முடியாத நிலையிலும் சிக்கித் தவித்தார்கள் என்க.

29. எல்லோரும் அனுமனை வேண்டுதல்

நின்றனர் செய்வது ஓர் நிலைமை ஓர்கிலர்;
பொன்றினம் யாம் எனப் பொருமு புந்தியார்,
''வன்திறல் மாருதி வல்லையோ எமை
இன்று இது காக்க?'' என்ற இரந்து கூறினார். (4655)

(பொன்றுதல்-இறத்தல்; பொருமுதல்-வருந்துதல்; புந்தி-புத்தி/மனம்; வல்லை-வல்லமை உடைமை; இரந்து-கெஞ்சி வேண்டி; ஓர்தல்-உணர்தல்; இன்று-இப்போது)

இவ்வாறு இருட்பிழம்பு நிறைந்த புரையில் சிக்கிக் கொண்ட வானர வீரர்கள், மேலே என்ன செய்வது என்னும் நிலைமையச் சற்றும் உணராதவர்களாகித் திகைத்து நின்றனர்; ''இன்று நாம் இறந்து போய் விட்டோம்'' என்றே மிக வருத்தும் மனமுடையவராய், அனுமனை நோக்கி, ''மிக்க வலிமை உடைய அனுமனே! இப்போது இந்தத்

துன்பத்தினின்றும் எங்களைக் காக்கும் வல்லமை உடையையோ!'' என்று வேண்டிக் கேட்டுக் கொண்டனர்.

30. அனுமன் ஆறுதல் கூறி, மேற் செல்லுதல்

''உய்வு உறுத்துவென்; மனம் உலையீர்; ஊழின் வால்
மெய் உறப் பற்றுதிர்; விடுகிலீர்'' என,
ஐயன் அக்கணத்தினில் அகலும் நீள் நெறி
கையினில் தடவி, வெங்காலின் ஏகினான். (4656)

(உய்வுறுத்தல்-தப்பிப் பிழைக்க வைத்தல்; உலைதல்-வருந்துதல்; ஊழ்-முறைமை; உற-அழுத்தமாக; வெம்-வேகம்; மெய்-உடம்பு);

அனுமன் மற்ற வானரர்களை நோக்கி, ''உங்களை இப்புரையிலிருந்து பாதுகாப்பாகத் தப்பிப்போகும்படி பிழைக்க வழி செய்வேன்; மனம் வருந்தாதீர்கள்; முறையாக ஒருவர் பின் ஒருவராக என்னுடைய வாலை அழுத்தமாகப் பற்றிக் கொள்ளுங்கள்; விட்டுவிடாதீர்கள்'' என்று கூறியதும் அவர்கள் அவ்வாறு பிடித்துக் கொண்டதும், தலைவனான அனுமனும், அந்த விசாலமான நீண்ட புரை செல்லும் வழியைக் கையால் தடவிப்பார்த்துக் கொண்டே, தனது வேகமுடைய கால்களினால் முன்னேறிச் செல்லலானான்.

இங்கே முதலில் ''பற்றுதிர்'' என்று உடன் பட்டாலும், பின்னர் ''விடுகலீர்'' என்று எதிர்மறையாலும் கூறியதால், அனுமன் எவ்வளவு முன் எச்சரிக்கையாகக் காரியங்கள் ஆற்றுபவன் என்பது புலனாகும் என்க. கம்பனின் ''அகலும் நீள்நெறி'' என்ற சொல்லாட்சியை நோக்குக. இங்கே அகன்ற நீள்நெறி என்றுதானே கூறியிருக்க வேண்டும். அனுமனின் பேராற்றலை விளக்க., இந்நீள்நெறி சிறிது நேரத்தில் அகன்று விடும் என்ற குறிப்பை உள்ளடக்கியது இச்சொல்லாட்சி என்பதை உணர்க. இருட்பிழம்பில் திசை தெரியாது திகைத்து மூச்சுமுட்ட நின்ற வானர வீரர்களுக்கு அனுமன் அபயமளித்தான் என்பதாம்.

31. பன்னிரண்டு யோசனை படர்ந்த மெய்யினன்,
மின்னிரண்டு அனைய குண்டலங்கள் வில்லிட
துன்னிருள் தொலைந்திட, துரிதத்து ஏகினான்;
பொன் நெடுங்கிரி எனப் பொலிந்த தோளினான். (4657)

(குண்டலம்-காதணி; வில்லிடல்-ஒளிவீசுதல்; தொலைதல்-நீங்குதல்; துரிதம்-விரைவு; துன்-அடர்ந்த;)

பொன் மயமான பெரிய மேருமலை போன்று திகழும் தோள்களையுடையவனான அனுமன், பன்னிரண்டு யோசனை அளவு படர்ந்ததாகத் தன் உடம்பைப் பேருரு ஆக்கிக் கொண்டனன்; எனவே குண்டலங்கள் விட்டு விட்டு ஒளிவீசத் தொடங்கின; எனவே அங்கே பரவியிருந்த

அடர்த்தியான இருட்பிழம்பு நீங்கியது. வழி எளிதில் புலப்பட்டது வேகமாக முன்னேறிச் செல்லலாயினான்.

அனுமன் விசுவரூபம் எடுத்த இடங்களில் இதுவும் ஒன்று. புதிய இடமாகையால் எதிர்ப்பட்டோரையும் எதிர்ப்பட்டவற்றையும் அச்சுறுத்தி முன்னேறிச் செல்லவும், பின்பற்றி வரும் வானர வீரர்கள் தன் நீண்டவாலைப் பற்றிக் கொள்ள வேண்டுமென்பதாலும் இப்பேருரு, எடுக்க வேண்டியது அவசியமாயிற்று. அனுமன் தான் நினைக்கும் உருக் கொள்ளும் வரபலம் படைத்தவன் என்பதை நினைவிற் கொள்க. உருவம் பெரியதாகவே, காதுகளில் அணிந்திருந்த குண்டலங்களும் பெரிதாகி, அதிலிருந்து பரவிய ஒளி நன்கு தெரிந்து உதவியது என்பதாம்.

''வேண்டியபோதே வேண்டு உரு எய்தும் வினை வல்லீர்'' என்பது சாம்பவன் கூற்று. ''அணோர்ணீயாம், மகதோ மகியாம்'' என்பது வடமொழி; அனுமன் நிறம் பொன்நிறம்; வடிவு பெரிது. இரண்டும் மேருமலைக்குரிய பண்புகள். ''காஞ்சனாத்ரீ, கமனீயவிக்ரகம்'' என்பது வான்மீகம்.

32. அங்கு ஒரு நகரத்தைக் காணுதல்

கண்டனர் கடிநகர்; கமலத்து ஒண்கதிர்,
மண்தலம் மறைந்து உறைந்தனைய மாண்பது;
விண்தலம் நாண் உற விளங்குகின்றது;
புண்டரீகத்தவள் வதனம் போன்றது. (4658)

(கடி-சிறந்த/விளக்கம்; ஒண்-ஒளிவாய்ந்த; உறைதல்-தங்கியிருத்தல்; மாண்பு-சிறப்பு; புண்டரீகம்-தாமரைமலர்; வதனம்-முகம்; விண்தலம்-சுவர்க்கலோகம்;)

முன்னேறிச் சென்ற வானர வீரர்கள் அங்கே ஒரு சிறந்த விளக்கம் மிக்க நகரத்தைக் கண்டார்கள்; தாமரை மலரை மலரச் செய்யும் ஒள்ளிய கதிர்களை உடைய சூரியன், அங்கு வந்து மறைந்திருப்பது போன்ற சிறப்புடையது அந்நகரம்; விண்ணிலுள்ள சுவர்க்கலோகமே வெட்கப்படும்படி செல்வச் செழிப்பும் கொண்டு விளங்குவது அந்நகரம்; செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் அழகு பொலிந்து விளங்கும் முகத்தைப் போன்று திகழ்வது அந்நகரம்.

அந்த நகரத்தின் பேரொளி, செல்வச் செழிப்பு, பொலிவு ஆகியவற்றிற்கு, சூரியனும், சுவர்க்கலோகமும், திருமகளும் உவமையாகக் கூறப்பட்டன.

33. அந்நகரத்தின் சிறப்பியல்புகள்

கற்பகக் கானது; கமலக் காடது;
பொன்பெரும் கோபுரப் புரிசை புக்கது;

அற்புதம் அமரரும் எய்தலாவது;
சிற்பியாம் மயன் மனம் வருந்திச் செய்தது. (4659)

(கான்-சோலை; காடு-மிகுதி; புரிசை-மதில்; புக்கது-உள்ளிருப்பது; அற்புதம்-வியப்பு; வருந்தி-முயன்று;)

அந்த நகரம் சுவர்க்கலோகத்தில் இருப்பது போன்ற கற்பகத் தருக்கள் கொண்ட சோலைகள் நிரம்பப் பெற்றது; அங்கே தாமரை பூத்த தடாகங்கள் மிகுதியாக விளங்குகின்றன; பொன்னாலாகிய பெரிய கோபுரங்களையும், மதிலையும் தன்னகத்தே கொண்டது; தேவர்கள் கூட இதைக் கண்டு வியப்படையும் தன்மையது; அசுரத் தச்சனான மயனால் தன் மனத்தைப் பல நாள் வருத்திக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டது.

''கற்பகக் கானது'' என்றதால் தேவலோகத்தைப் போன்று பொன் மயமான கற்பக மரச் செறிவு கொண்ட நகரம் என்றும் ''அற்புதம் அமரருள் எய்தலாவது'' என்றதால் அந்தப் பொன்நகரமாகிய தேவலோகத்தை விடவும் சிறப்பும் பெருமையும் பெற்றது என்றும் அறியலாகும். சிறந்த நகரத்துக்குள்ள இலக்கணம் என்று நூல்கள் கூறுவதாகிய, நகரத்தைச் சுற்றிய பெரிய மதிலும், நான்கு திசைகளிலும் நான்கு கோபுரங்களும் அமைந்தது என்பதால் அது சிற்ப சாத்திர முறைப்படி அமைக்கப்பட்டது என்பதும், நான்கு கோபுரங்களுடன் கூடிய மதிலுக்குள் இருப்பது அந்நகரம் என்பதும் அதை அமைத்த அசுரத் தச்சன், தான் நினைத்த மாத்திரத்திலேயே எதையும் நிர்மாணித்து முடிப்பவன் என்றாலும், இந்நகரைநிர்மாணிக்க அவன் பலநாட்கள்தனது மனத்தையும் உடலையும் வருத்திக்கொண்டு மிக முயன்று சிந்தித்து இதைக் கட்டி முடிந்திருக்கிறான் என்றும் கூறுகிறது இப்பாடல். கமலக்காடு என்று கூறியதால் நீர் நிலைகள் நிறைந்த நகரம் என்பது புலப்படுகிறது.

34. இந்திரன் நகரமும் இணையிலாதது;
மந்திர மணியினின், பொன்னின், மண்ணினில்
அந்தரத்து எழுசுடர் அவை இன்று ஆயினும்,
உந்தஅரும் இருள் துரந்து ஒளிர நிற்பது. (4660)

(இந்திரநகரம்-அமராவதி; அந்தரம்-விண்/ஆகாயம்; சுடர்-ஒளி மண்டலங்கள்; உந்த அரும்-போக்குதற்குரிய; மந்திரம்-மாளிகை; துரத்தல் -ஓட்டுதல்போக்குதல்; மணி-மாணிக்கம்இரத்தினம்)

அந்த நகரத்திற்கு இந்திரனது தலைநகராகிய அமராவதியையும் ஒப்புக் கூற முடியாது; விண்ணில் தோன்றும் சூரிய, சந்திரர்கள் அங்கு இல்லாது போனாலும் கூட,அங்கு நிறைந்து அமைந்திருக்கின்ற மாளிகைகளில் பதிக்கப்பட்டிருக்கின்ற நவரத்தினங்களும் பொன்னும் மட்டுமே அப்பிலத்திலுள்ள பேரிருளைப் போக்கி, ஒளிவிளங்கும் படி திகழ்வது.

35. புவிபுகழ் சென்னி பேர்அமலன் தோள்புகழ்க்
கவிகள் தம் மனையெனக் கனகராசியும்
சவியுடைத் தூசும், மென்சாந்தும், மாலையும்
அவிர் இழைக் குப்பையும், அளவிலாதது. (4661)

(புவி-உலகம்/உலகத்தவர்; சென்னி-சோழன்; கனகராசி-பொற் குவியல்; சவி-ஒளி; அவிர்-ஒளிவீசுகின்ற; இழை-அணிகலன்கள்; குப்பை-குவியல்; தூசு-ஆடை. இழைத்துச் செய்யப்படுவது என்பதால் இழை, அணிகலன்களுக்குக் காரணப்பெயர்)

உலகத்தோரால் புகழ்ந்து பேசப்படுகின்ற சோழ மன்னர்களில் ஒருவனான பேரரசனும் குற்றமற்றவனுமான குலோத்துங்க சோழனின் தோள் வலி பற்றிப் புகழ்ந்து கவி பாடிய புலவர்களின் வீடுகள் போல, பொற்குவியலும், ஒளிபொருந்திய பட்டுப் பீதாம்பரங்களும், மென்மையான சந்தனக் கலவையும், நறுமணம் மிக்க மலர் மாலைகளும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற அணிகலன்களின் குவியலும், அளவில்லாது நிறைந்து இருப்பது அந்நகர்.

இங்கே கம்பன் தன்னை ஆதரித்த குலோத்துங்க சோழனை செய்ந் நன்றி மறவாது புகழ்ந்து பேசுகிறான். இதுபோலவே தன்னை இளமை முதல் புரந்து வந்த சடையப்ப வள்ளலையும் ஆயிரம் பாடல்களுக்கு ஒருமுறை காப்பியத்தில் பாடியிருக்கிறான் என்பதையும் நினைவிற் கொள்க. சென்னி என்பது பொதுவாகச் சோழ மன்னர்களைக் குறிக்கும் ஒரு சொல்.

36. பயில் குரல் கிண்கிணி பதத்த பாவையர்
இயல்புடை மைந்தர்கள், இயக்கு இலாமையால்,
துயிலவும், நோக்கவும் துணையது இன்றியே
உயிரிலா ஓவியம் என்ன ஒப்பது: (4662)

(பயிலுதல்-ஒலித்தல்; பதம்-பாதம்; இயக்கு-நடமாட்டம் சஞ்சாரம் / போக்குவரவு; துணை-தகுதி; கிண்கிணி-காலணி/சிலம்பு சதங்கை; இயல்பு-நற்பண்புகள்)

ஒலிக்கின்ற ஓசையை உடைய சதங்கை அணிந்த பாதங்களை உடைய மகளிரும் நற்பண்புகளமைந்த ஆடவர்களும், அந்நகரத்தில் சஞ்சாரம் செய்யாததால் உறங்கவும், விழிக்கவும் ஆகிய தகுதிகள் இல்லாததும், உயிரில்லாததுமாகிய சித்திரம் என்று சொல்லும்படியாக அந்நகரம் விளங்கியது.

அந்நகரம் செல்வச் செழிப்பும், நல்ல காட்சிகளும் பொருந்தி அழகாக விளங்கினாலும், அதை நுகர்ந்து இன்பமுறப் பெண்டிரும் ஆடவரும் இல்லாதிருப்பது ஒரு பெருங்குறை. இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு நல்ல ஓவியன் வரைந்த குற்றமற்ற ஓவியம், உயிரில்லாத ஓவியம் இருப்பது போல இருக்கிறது என்பதாம். கிண்கிணி என்பது சதங்கைக்கு ஒலி பற்றி வந்த காரணப் பெயர். பாவை போன்ற அழகுடைய பெண்டிர்

பாவையர் எனப்பட்டனர். நகரம் உடம்பு என்று கூறினால் அங்குள்ள மக்களை உயிர் என்று கூறலாம்; இங்கே உடம்பு மட்டும்தான் இருக்கிறது, உயிர், மக்கள் நடமாட்டம் இல்லை, எனவே இது உயிரற்ற ஓவியம் போல் இருந்தது என்க. ஓவியம் எவ்வளவு அழகுடையதாய் இருந்தாலும், அதற்கு உயிர் இல்லாமையால் அது சிறப்புப் பெறுவதில்லை. அதுபோலவே இந்நகரமும் மிக்க செல்வச் செழிப்பு உற்றிருந்தாலும், அதை நுகர்வதற்கு மக்கள் இல்லாமையினால் சிறப்புற்றிருக்க வில்லை என்பதாம்.

37. அமிழ்து உறழ் அயினியை அடுத்த உண்டியும்
தமிழ் நிகர், நறவமும், தனித் தண் தேறலும்,
இமிழ் கனிப் பிறக்கமும், பிறவும் இன்னன
கமழ்வுறத் துவன்றிய கணக்கு இல் கொட்பது. (4663)

(உறழ்-ஒத்த; அயினி-சோறு; உண்டி-காய்கறி வகைகள்/உணவுப் பண்டங்கள்; நறவம்-தேன்; தனி-ஒப்பற்ற; தண்-குளிர்ச்சி பொருந்திய; தேறல்-கள்; இமிழ்-இனிய; பிறக்கம்-மாலை/குவியல்; கமழ்தல்-மணம் வீசுதல்; துவன்றிய-நெருங்கியுள்ள; கணக்குஇல்-அளவற்ற; கொட்பு-பெருமை;)

அமிழ்தத்தை ஒத்த சோறும், அதனோடு இயைந்த மற்ற உணவுப் பண்டங்களான காய்கறிவகைகளும், தமிழ்மொழியைப் போன்ற இனிய தேனும், ஒப்பற்ற, குளிர்ச்சி பொருந்திய மதுவகைகளும், இனிய பழத்தின் குவியலும், இதுபோன்ற மற்ற உண்பதற்குரிய எல்லாப் பொருள்களும் மிகுந்த வாசனை வீசும்படியாகவும், அளவற்றதாகவும் நிறைந்துள்ள பெருமை வாய்ந்தது அந்நகரம்.

38. அந்நகரத்துள் எல்லோரும் செல்லுதல்.

கன்னி நெடுமாநகரம் அன்னது எதிர் கண்டார்;
''இந்நகரமாம் இகல் இராவணனது ஊர்'' என்று,
உன்னி உரை ஆடினர், உவந்தனர், வியந்தார்;
பொன்னின் நெடுவாயில் அதன் ஊடு இனிது புக்கார். (4664)

(கன்னி-புதுமை/என்றும் அழியாத; இகல்-பகைமை; உன்னி-எண்ணி; ஊடு-வழியாக;)

அத்தகைய புதுமையான, என்றும் அழியாத, நீண்ட, பெரிய நகரத்தை எதிரில் கண்ட அனுமன் முதலான வானர வீரர்கள் ''இந்த நகரம்தான் நமக்குப் பகைவனான இராவணன் வாழும் ஊர்'' என்று கருதி, தமக்குள் பேசிக்கொண்டு, மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தவர்களாய், பொன்னால் இயன்ற நீண்ட வாயிலின் வழியாக அவ்வூருக்குள் மகிழ்ச்சியுடன் சென்றனர்.

''கன்னி'' என்ற சொல் பொதுவாக அழிவின்மையைக் குறிக்கும் என்றாலும் இங்கே புதுமையைக் குறித்ததென்க. இராவணனது ஊரை இவ்வளவு எளிதிலும், விரைவாகவும் கண்டுபிடித்து விட்டோமே என்பதால் உவகையும், அந்நகரின் செல்வச் செழிப்பையும் நேர்த்தியையும் கண்டு வியப்பும் ஒருங்கே எய்தினர் என்பதாம். யாரும் அறிய முடியாதபடி நிலத்தின் அடியில் இருந்ததாலும் மிக்கப் பொலிவுற்றுத் திகழ்ந்ததாலும் அது இராவணன் ஊராக இருக்கும் என்று கருதினர் வானரர்கள் என்க. பாலைவனத்தில் பட்ட துன்பமும், இருண்ட குகைக்குள் முதலில் புகுந்தபோது பட்ட துன்பமும் நீங்கி, இவ்வொளி மிக்க நகரைக் கண்டதும் மகிழ்ச்சியோடு உள்ளே நுழைந்தனர் என்பதைக் குறிக்க ''இனிது புக்கார்'' என்றார் என்க.

39. அந்நகரத்தில் கண்டவை

புக்க நகரத்து இனிது நாடுதல் புரிந்தார்;
மக்கள் கடை, தேவர்தலை, வானுலகின், வையத்து,
ஒக்க உறைவோர் உருவம் ஓவியம் அலால், மற்று
எக்குறியின் உள்ளவும், எதிர்ந்திலர் திரிந்தார். (4665)

(நாடுதல்-தேடுதல்; தலை-முதல்; கடை-இறுதி; ஒக்க-ஒருங்கே; ஓவியம்-சித்திரம்; குறி-பிறவியோனி/உண்மையான வடிவம்; எதிர்தல்-எதிர்ப்படுதல்/சந்தித்தல்; திரிதல்-அலைதல்)

அந்த நகரத்துக்குள் நுழைந்து, வானர வீரர்கள் சீதாதேவியைத் தேடுவதற்கு நன்கு முனைந்தனர். விண்ணுலகத்தில் உள்ள தேவர்கள் முதல், நிலவுலகத்தில் உள்ள மக்கள் வரை ஒருசேர, ஓவியமாகிய சித்திரத்தில்தான் உயிரற்ற உருவமாய்த் தங்கியிருந்தார்களே அல்லாமல், உண்மையான உயிருள்ள வடிவம் கொண்ட யாரையுமே அவர்கள் எதிர்ப்பட்டுச் சந்திக்கவே இல்லை; எனினும் இந்நிலையில் மேலும் சீதையைத் தேடிச் சுற்றிச் சுற்றி அலைந்தார்கள்.

''தேவர்தலை மக்கள் கடை'' என்றதனால் இடைப்பட்ட நாகர்களும் உபலக்கணத்தால் கொள்ளப்பட வேண்டும். குறி என்பது ''யோனி'' என்ற வடசொல்லின் தமிழாக்கம், இச்சொல்லுக்குப் பிறப்பு என்பது பொருள் ''எக்குறியின் உள்ளவும்'' என்ற, சொற்றடருக்கு எப்பிறவியில் பிறந்த உயிரையும் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். அந்நகரத்தில் உயிருள்ள யாரையும் பார்க்கவில்லை என்பது கருத்து. உலகில் படைக்கப்பட்டிருக்கும்ஜீவராசிகளின்எண்ணிக்கை84லட்சம்என்பதுஒரு புராணக் குறிப்பு.

40. வாவி உள பொய்கைஉள; வாசமலர் நாறும்
காவும் உள; காவி விழியார்கள் மொழி என்னக்
கூவும் இளமென் குயில்கள், பூவை, கிளி, கோலத்
தூவிமட அன்னம் இவை உள்ள சுவடு இல்லை. (4666)

(பொய்கை-தடாகங்கள்; கா-சோலைகள்; காவி- கருங்குவளை மலர் நீலோற்பலமலர்; பூவை-நாகணவாய்ப்பறவை; கோலம்-அழகு; மட- இளமையான; சுவடு-அடையாளம்; தூவி-சிறகு; வாவி- நடைவாவிகள் நீராடும் குளங்கள்)

அங்கே நீராடும் குளங்களான நடைவாவிகள் இருக்கின்றன; மனிதர் களால் ஆக்கப்படாத, இயற்கையாக அமைந்த பொய்கைகள் இருக்கின்றன; நறுமணம் கமழும் மலர்களை உடைய சோலைககள் இருக்கின்றன; ஆனால் நீலோற்பலமலர் போன்ற கண்களை உடைய பெண்களின் மழலை மொழிபோலக் கூவுகின்ற இயல்புடைய இளமையான, மென்மையான குயில்கள், நாகணவாய்ப்பறவைகள், கிளிகள், அழகிய சிறகுகளைக் கொண்ட இளமையான அன்னங்கள் முதலியன இருந்தவைகளுக்கான எந்த அடையாளமுமே அங்கு காணப்படவில்லை.

குளங்கள், தடாகங்கள், சோலைகள் முதலியவை நன்கு அழகாக இருந்தும் அதில் விளையாடும் இயல்புடைய குயில்கள், நாகண வாய்ப்புட்கள், கிளிகள், அன்னங்கள் ஆகியவை அங்கே இல்லை என்பதை விட, அவைகள் இருந்ததற்கான சிறு அடையாளம் கூட இல்லை என்பது அந்த நகரம் மனித, உயிரின வாசனையே அற்றதாகத் திகழ்ந்தது என்பதைக் குறிக்க என்க.

41. வானரர்கள் திகைத்து நிற்றல்

ஆய நகரத்தின் இயல்பு உள் உற அறிந்தார்;
''மாயை கொல்!'' எனக்கருதி, மற்றும் நினைவுற்றார்;
''தீய பிலனுள் பிறவி சென்ற இது அன்றோ
தூயது துறக்கம்?'' என நெஞ்சு துணிவுற்றார். (4667)

(நினைவுறுதல்-சிந்தித்தல்; சென்ற-நீங்கின; துறக்கம்-வீடுபேறு / சுவர்க்கம்; துணிவு-உறுதி;)

அத்தன்மையான நகரத்தின் தன்மைகளை இவர்கள் உள்ளே புகுந்தபின்தான் அறிந்து கொண்டார்கள். அதை நோக்கியதும் இது என்ன மாயத் தோற்றமோ? என்று மயங்கிச் சந்தேகம் கொண்டனர்; பிறகு வேறு வகையாகவும் சிந்திக்கலானார்கள். நாம் இந்தத் தீயதான பிலத்தினுள் நுழைந்த போதே நம் பிறவிகள் நம்மை விட்டு நீங்கின போல் உணர்ந்தோம்; ஆனால் இதுதானோ தூய்மையான சுவர்க்கம் என்பது? என்று மனம் துணிந்தார்கள்; மனத்தில் இதுதான் சுவர்க்க லோகம் என்று உறுதியாய் நம்பலானார்கள்.

உள்ளேநுழைந்தவுடன் இது மாயமோ என்ற சந்தேகம் வந்தது. பின்னர் பிலத்தினுள் புகுந்து இறங்கி வந்ததனால் பாதலத்திற்கு வந்து விட்டோமோ? என்று வேறு வகையாகச் சிந்திக்கலானார்கள். ஆனால் அங்கிருந்த சுகபோகங்களை மீண்டும் கண்டவுடன் நாம் தூய

சுவர்க்கலோகத்துக்குத்தான் வந்துவிட்டோம் என்று மன உறுதியுடன் நம்பலானார்கள் என்பதாம். பெரும்பாலும் எல்லாவற்றையும் துறந்த துறவிகளாலேயே அடையப் பெறுதலின் சுவர்க்கம், துறக்கம் எனப்பட்டது என்க.

42. இறந்திலம்; இதற்கு உரியது எண்ணியிலம்; ஏதும்
மறந்திலம்; அயிர்ப்பினோடு இமைப்பு உளம்; மயக்கம்
பிறந்தவர் செயற்கு உரிய செய்த பிழை இன்றால்;
திறம் தெரிவது என்? என இசைத்தனர், திகைத்தனர். (4668)

(அயிர்ப்பு-ஐயம்; பிறத்தல்-தோன்றுதல்; திறம்-தன்மை; தெரிவது-ஆராய்வது;)

''நாம் சுவர்க்கலோகத்தை அடைந்து விட்டோம் என்றால் நாம் உயிர் நீங்கியிருக்க வேண்டுமே? ஆனால் நாம் உயிர் இழக்காது, நம் குரங்கு உடம்போடும் உயிரோடும் இருக்கிறோமே? எனவே நாம் சுவர்க்கம் அடையவில்லை; அவ்வாறு இச்சுவர்க்கலோகத்தை அடைவதற்கு உரியதான புண்ணியச் செயல்களை நாம் எண்ணிப் பார்த்தது கூட இல்லை; நாம் சீதையைத் தேடத்தான் இங்கு வந்திருக்கிறோம் என்பதை மறக்கவும் இல்லை. இவையெல்லாம் ஒன்றும் நடவாததால் நாம் சுவர்க்க லோகத்தை அடையவில்லை. மேலும் நமக்குச் சந்தேகங்கள் இருக்கின்றன; நம் இமைகள் துடிக்கின்றன. இவைகளெல்லாம் தேவர்கள் என்று சொல்லப்படுகின்ற சுவர்க்கலோகத்தவர்களுக்கு இல்லாது இருக்க வேண்டுமே? எனவே நாம் சுவர்க்கத்தை அடையவில்லை; மயக்கம் தோன்றியவர்கள் செய்வதற்குரியதான மயங்கிய செயல்களைச் செய்த தான குற்றமும் நம்மிடம் இல்லை; எனவே இதன் தன்மையை எவ்வாறு ஆராய்ந்து தெரிந்து கொள்வது?'' என்று தமக்குள் பேசிக் கொண்டு, மேற்கொண்டு என்ன செய்வது என்பதறியாது திகைத்து நின்றனர்.

43. சாம்பவான் அஞ்சிக் கூறுதல்

சாம்பன் அவன் ஒன்று உரை செய்வான், ''எழு சலத்தால்,
காம்பு அனைய தோளியை, ஒளித்த படு கள்வன்,
நாம் புக அமைத்த பொறி நன்று; முடிவு இன்றால்;
ஏம்பல் இனி, மேலை விதியால் முடியும்'' என்றான். (4669)

(சலம்-வஞ்சனை; காம்பு-மூங்கில்; படு-பெரிய; பொறி-இயந்திரம் சூழ்ச்சி/வலை/படுகுழி; விதி-ஊழ்; மேலை-முன்னைய; ஏம்பல்-மகிழ்ச்சி/வருத்தம்; ஒளித்த-அபகரித்/தமறைத்து வைத்த;)

சாம்பவன் என்ற கரடிகளுக்கு அரசன், வானர வீரர்களை நோக்கி, ஒரு செய்தி சொல்லத் தொடங்கினான்; இயற்கையாகத் தன்னிடம் அமைந்த வஞ்சனையால், இளமையான மூங்கிலைப் போன்ற தோள்களை உடையவளான சீதாதேவியைக் கவர்ந்து கொண்டு சென்று ஒளித்து

வைத்திருப்பவனான பெருங்கள்வன் இராவணன், அவனைத் தேடி வருகின்ற நம்மைப் போன்றவர்கள் அகப்பட்டுச் சிக்கிக் கொள்வதற்கென்றே அமைந்தது போன்றிருக்கிறது இந்தப் பிலம். இது அவன் தந்திரமாக விரித்த வலை. மிக நன்றாக இருக்கிறது. நாம் இதில் நன்றாகச் சிக்கிக் கொண்டோம். இனி நமக்கு உய்வில்லை. நாம் படப்போகின்ற துன்பத்திற்கு ஒரு அளவே இருக்காது. நாம் இனிமேல் மகிழ்ச்சி அடையப் போகிறோமோ, துன்பத்தில் உழலப் போகிறோமோ அது நாம் முற்காலத்தில் செய்த ஊழ்வினையைப் பொறுத்துத்தான் அமையும்'' என்று தானும் அஞ்சி மற்றவர்களையும் அச்சுறுத்தினான்.

''படுகள்வன்'' என்ற உலகியல் சொல்லைக் கம்பன் கையாண்டிருக்கும் பாணியை நோக்குக.

44. அனுமன் ஆறுதல் கூறுதல்

''இன்று பிலன் ஈது இடையின் ஏற அரிது எனின், பார்
தின்று, சகரர்க்கு அதிகம் ஆகி, நனி சேறும்;
அன்று அதுஎனின், வஞ்சனை அரக்கரை, அடங்கக்
கொன்று எழுதும் அஞ்சல்'' என மாருதி கொதித்தான். (4670)

(இடையின்-நடுவே; பார்-பூமி; சேறும்-சேர்தும்சேர்வோம்; நனி-எளிதாக; அடங்க-முழுவதும்; கொதித்தல்-மனம் வெந்து கூறுதல்; தின்று-தோண்டி/அகழ்ந்து)

''இப்பொழுது இந்தப் பிலத்தின் நடுவில் ஏறிச்சென்று தப்புவது என்பது மிகக் கடினமானது, முடியாது என்றால், நிலத்தைத் தோண்டிக் கடலை உண்டாக்கிய சகரபுத்திரர்களை விட மிக வல்லமை உடையவர்களாகி, மேற்புறமாக ஏறி, எளிதில் சென்று சேர்ந்து விடலாம்; அது அவ்வாறு முடியாது என்றால், வஞ்சனை செய்து நம்மை அகப்படுத்திய அரக்கர்கள் குலம் முழுவதையும் கொன்று விட்டு மேலே எழுந்து செல்வோம் பயப்படாதீர்கள்'' என்றுஅனுமன் மனம் வெந்து கூறினான்.

சகரர் கடல் தோண்டிய வரலாறு முன்பு நாம் பாலகாண்டத்தில் கண்டதை இங்கு நினைவு கூர்க. நமக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று சகரபுத்திரர்களைப் போல், பூமியைக் குடைந்து தோண்டி, மேற்புறமாக ஏறித் தப்பித்துச் செல்வது; இரண்டு அது இயலாவிட்டால், இந்த வஞ்சனையைச்செய்த அரக்கர்களைக் கொன்று தப்பித்துச்செல்வது. எனவே நமக்குத் தப்பிக்க இரண்டு வழிகள் இருப்பதால் பயப்படாதீர்கள் என்று அனுமன் ஆறுதல் கூறினான் என்பதாம்.

45. அந்நகரின் நடுவில் சுயம்பிரபையைக் காணுதல்

மற்றவரும் மற்று அது மனக்கொள வலித்தார்;
உற்றனர் புரத்தின் இடை; ஒண்சுடரின் உள் ஓர்

நற்றவம் அனைத்தும் உரு நண்ணி, ஒளி பெற்ற
கற்றை விரி பொன் சடையினாளை எதிர் கண்டார். (4671)

(புரம்-நகரம்; இடை-நடு இடம்; ஒண்-ஒளி பொருந்திய; சுடர்-மிக்க ஒளி; பொன்-அழகிய; எதிர்-கண்முன்னே; வலித்தல்-துணிதல்)

அவ்வாறு அனுமன் கூறிய சொற்களுக்கு, சாம்பவன் முதலான எல்லா வானரவீரர்களும் சரியென்று உடன்பட்டு, உறுதி கொண்டு, மேற்செல்லும் வலிமை பெற்றவர்களானார்கள். மேலே சென்று அந்நகரத்தின் நடு இடத்தை அடைந்தனர். அந்த ஒளி பொருந்திய நகரத்தின் நடுவில், ஒப்பற்ற தவம் அனைத்தும் ஓர் பெண் உருப்பெற்றுக் கொண்டு வந்தது போல அமர்ந்திருந்த, மிக்க ஒளி பொருந்திய, கற்றையானதும், விரிந்ததும், அழகியதும், பொன் போன்றதுமான சடையினை உடைய ''சுயம்பிரபை'' என்னும் ஒரு தவத்தவளைத் தம் கண்ணெதிரில் கண்டார்கள்.

''மனக்கொளல்'' என்பது இசைதல், உடன்படுதல் என்ற பொருளைத் தரும். சுயம்பிரபை என்று அப்பெயருக்கேற்ப, அந்த மாதரசியின் வடிவைச் சுற்றி ஒரு ஒளி வட்டம் காணப்பட்டது என்க. எதிர்கண்டார் என்பது கண்முன்னே உண்மையாகவே கண்டார்கள், இது மாயத் தோற்றமல்ல என்பதை உறுதிப்படுத்தும் சொற்றொடர் என்க.

46. சுயம்பிரபையின் தோற்றம்

மருங்கு அலச வற்கலை வரிந்து, வரிவாளம்
பொரும், கலசம் ஒக்கும், முலை மாசு புடை பூசப்
பெருங்கலை மதித் திருமுகத்த, பிறழ் செங்கேழ்க்
கருக்கயல்களின் பிறழ் கண், மூக்கின் நுதி காண. (4672)

(வாளம்-சக்கரவாளப் பறவை; அலச-வருந்துமாறு; மருங்குல்-இடை; வற்கலை-மரவுரி; வரிந்து-அணிதல்/இறுக்கிக் கட்டி; மாசு-புழுதி; பூச-படிய; செங்கேழ்-சிவந்த நிறம்; நுதி-நுனி; காணுதல்-நோக்குதல்; வரி-இரேகை; புடை-உடம்பின்புறம்;) (குளகப்பாடல்)

அங்கே வீற்றிருந்த சுயம்பிரபை என்னும் மாதரசி, தன் இடை வருந்துமாறு மரவுரியை இறுக்கக் கட்டியிருந்தாள்; இரேகைகள் உடைய சக்கரவாளம் என்னும் பறவையை ஒத்து இணையாகவும் பூரண பொற் கலசங்களை ஒத்தவையுமான அவளுடைய கொங்கைகளின் மேலும், உடம்பின் புறத்திலும் புழுதி படிந்திருந்தது. பெருமையுடைய பதினாறு கலைகளும் நிரம்பிய பூரண சந்திரனைப் போன்று அவள் முகம் பொலிவுற்றுத் திகழ்ந்தது. பிறழ்கின்ற இயல்புடையதும், சிவந்த வரிகளுடைய கரிய கண்களையுடையுதுமான கெண்டை மீன்கள் போன்ற அவளுடைய இரண்டு கண்களும் அசையாமல், தனது மூக்கின் நுனியையே நோக்கிக் கொண்டிருந்தன.

வற்கலை என்பது பூர்சம் என்னும் மரத்திலிருந்து உரித்து எடுக்கப்படும் மெல்லிய பட்டையான ஆடை; வாளம் என்பது சக்கரவாளப் பறவை எனப்படும். இது சக்கரவாகம் எனவும் வழங்கப்பட்டது. இது எப்பொழுதும் ஆண், பெண் என இரட்டையாகவே காணப்படும், அதனாலும் இவை உருண்டை வடிவம் உடையதனாலும், பெண்களின் கொங்கைகளுக்கு இவற்றை உவமை கூறுவது கவிமரபு. இரண்டு கண்களும் ஒரு சேரத் தனது மூக்கின் நுனியை இடைவிடாது நோக்கிக் கொண்டிருப்பதுதான் தியானத்தில் இருப்பவர்கள் மனம் ஒருமைப்படுவதற்காகச் செய்யும் செயல் என்பர். நீண்ட நாட்களாக ஒரே இடத்தில் தவத்தில் அமர்ந்திருந்ததாலும், நீராடாது இருந்ததாலும் அவள் உடல் முழுதும் தூசு படந்திருந்தது என்பது கருத்து. மூக்கின் நுனி என்பது ''நாச்யாக்ரம்'' என்ற வடசொல்லின் தமிழாக்கம்.

47. தேர்அனைய அல்குல், செறி திண் கதலி செப்பும்
ஊருவின் ஒடுங்குற ஒடுக்கி, உற ஒல்கும்
நேர் இடை சலிப்பு அற நிறுத்தி, நிகர் கொங்கைப்
பாரம் உள் ஒடுங்குற, உயிர்ப்பு இடை பரிப்ப. (4673)

(கதலி-வாழைத்தண்டு; ஊரு-தொடை; ஒடுங்குதல்-அடங்குதல்; உற-மிகவும்; ஒல்குதல்-துள்ளுதல்; நேர்-நுண்ணிய; சலித்தல்-அசைதல்; உயிர்ப்பு-மூச்சு; பரிதல்-தாங்கி நிற்றல்; இடை-நடுநாடி/கழுமுனை) (குளகப்பாடல்)

தேர்த்தட்டுப் போன்ற அகன்ற அல்குலையும், ஒன்றோடொன்று நெருங்கிய, வலிய, வாழைத்தண்டுகள் என்று கூறத்தக்க தொடைகளையும், ஒடுங்கிப் போகுமாறு ஒடுக்கிக் கொண்டும், மிக்க அசைகின்ற இயல்புடைய நுண்ணிய இடை சற்றும் அசையாமல் ஒருப்பட நிறுத்தியும், மதர்த்தெழுகின்ற கொங்கைச் சுமையினையும் உள்ளே அடக்கியும், மூச்சுக் காற்றை நடுநாடியாகிய சுழுமுனையில் தாங்கியிருக்குமாறு செய்தும், - பாடல் தொடர்கிறது.

இடை என்பது நடு நாடியாகிய கழுமுனையைக் குறித்தது. நம்மைப்போல் மூச்சுக் காற்றை ஏற்றி இறக்காமல் நடுநாடியில் நிறுத்தி வைத்துக்கொண்டிருந்தாள்என்க. இதனையோகமுறையில் ''வளிநிலை'' என்பர். வளிகாற்றுமூச்சுக்காற்று. ஏனைய முறைகள், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இரேசகம், பூரகம், கும்பகம் என்பன. உயிர்ப்பு இடை பரித்தல் என்பது மூச்சுக்காற்றைத் தாங்கி நிற்கும்படி செய்தல்-கட்டிவைத்தல். இது ''சுவாச பந்தனம்'' என வடமொழியில் வழங்கப்படும். இதனால் இடை அசையாமலும், கொங்கைகள் உள் அடங்கியும் இருக்கும் என்பதாம். இங்கு குறிக்கப்பட்டிருக்கின்ற வளிநிலை பிராணாயாமம் எனப்படும்.

48. தாமரை மலர்க்கு உவமை சால்வுறு தளிர்க் கை,
பூமருவு பொன் செறி குறங்கிடை பொருந்த,

காமம் முதல் உற்ற பகை கால் தளர, ஆசை
நாமம் அழிய, புலனும் நல்அறிவு புல்ல. (4674)

(பூ - அழகு; மருவுதல் - பொருந்துதல்; குறங்கு - தொடைகள்/கால்; தளர்தல் - நிலையின்றி ஒழிதல்; நாமம் - பெயர்; புலன் - ஐம்பொறிகள்; புல்ல - பொருந்த; சால்பு - சிறப்பு/பெருமை; நல்லறிவு - மெய்யுணர்வு;) (குளகப்பாடல்)

தாமரை மலருக்கு ஒப்புச் சொல்லும் சிறப்பும் பெருமையும் உடைய, தளிர் போன்ற மென்மையான கைகள், அழகு நிரம்பிய பொன் போன்ற, ஒன்றொடொன்று இணைந்த தொடைகளின்மேல் பொருந்தி இருக்கவும், காமம் முதலாகிய ஆறுவகையான உட்பகைகள் நிலையின்றி ஒழியவும், ஆசை என்னும் குணம் தன் பெயரே இல்லாது அழிந்து போகவும், ஐந்து பொறிகளும் தீயவழியிற் செல்லாது மெய்யுணர்வோடு பொருந்தி நிற்கவும். - பாடல் தொடர்கிறது.

தாமரை மலரினும் சிறந்த கை என்பது ''தாமரை மலர்க்கு உவமை சால்வுறு தளிர்க்கை'' எனப்பட்டது என்க. சுயம்பிரபை தன் கைகள் இரண்டையும், இரண்டு தொடைகளிலும் வைத்துக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தாள் என்பது கருத்து. உட்பகை ஆறு, அவை காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் (பொறாமை) என்பன. இவை எல்லாவற்றிற்கும் மூலகாரணம் ஆசை என்பதை ''அவாஎன்ப எல்லா உயிர்க்கும், எஞ்ஞான்றும், தவா அப்பிறப்பீனும் வித்து'' என்கிறான் வள்ளுவன். குறள் 361. ஆசை என்பது பிறப்பிலேயே மனிதன் பெறுகின்ற விதை என்பதையறிக. ஐம்பொறிகளும் தீ நெறி செல்லாது மெய்நெறி நின்று ஒழுகுதல் என்பது, கண் அவனைக் கண்டும், காது அவனைக் கேட்டும், வாய் அவனை வாழ்த்தியும் ஞானநெறிக்குத் துணையாய் நிற்பது குறித்தது.

''வாயும் நிற்ப, மனம் நின்ற மனந்தான் நிற்பப், பொறி நின்று பாய, பொறிகள் நிற்ப இடர்படு புண்புலன்கள் நின்றனவால்; ஆயபுலன்கள் நின்றமையால் அகிலம் தோன்றாது, உள்ளத்தே, தூய, பரமானந்த, பரஞ்சோதி தோன்றக் கண்டிருந்தார்'' என்பது பிரபுலிங்க லீலை ''பொய், கொலை, களவே, காமம், பொருள்நசை, இவ்வகை ஐந்தும் அடங்கியது இயமம்'', என்பது ''காமம் முதல் உற்றபகை கால் தளர'' என்பதனால் பெறப்பட்டது; ''பொறி உணர்வெல்லாம் புலத்தின் வழாமல், ஒரு வழிப்படுவது, தொகை நிலைப் புறனே'' என்பது ''புலனும் நல்லறிவு புல்ல'' என்பதனால் பெறப்பட்டது. இதுவே பிரத்தியாகாரம் எனப்படுகிறது.

49. நெறிந்து, நிமிர்கற்றை நிறை ஓதி, நெடுநீலம்
செறிந்து, சடை உற்றது தவத்தின் நெறி செல்ல,
பறிந்து வினை பற்று அற, மனப்பெரிய பாசம்,
பிறிந்து பெயர, கருணை கண்வழி பிறங்க. (4675)

(கற்றை-தொகுதி; நீலம்-கருமை; தலம்-தரை; பிறிந்து-பிரிந்து; பிறங்குதல்-விளங்குதல்; ஓதி-கூந்தல்; பாசம்-கயிறு/கட்டு) (குளகப் பாடல்)

சுயம்பிரபையின், நெறிப்புற்று, சுருண்டு, நிமிர்ந்து, தொகுதியாக விளங்கும் நிறைந்த கூந்தல், நீண்ட கரிய நிறம் உற்று, திரண்டு சடையைப் போல் பூமியில் விழுந்து புரண்டு கொண்டு இருக்கவும், நல்வினை தீவினைகள் யாவும் விரைந்து விலகி ஓடவும், மனத்தில் உள்ள பெரிய பாசம் என்னும் கட்டு, தன்னைவிட்டு நீங்கிப் போகவும், கருணையாகிய கண்ணோட்டம்-அருள், தன் கண் வழியே பொங்கி வழியவும் - பாடல் தொடர்கிறது.

சுயம்பிரபையின் நீண்ட கரிய கூந்தல் சடையாக மாறி நிலத்தில் விழுந்து புரண்டு கொண்டிருக்கிறது என்பதனால் அவள் தவம் செய்துகொண்டிருக்கின்ற காலம் புலப்படுத்தப்பட்டது. தொடர்ந்த, இடையறாத தவத்தினால் எல்லா வினைகளும் நில்லாது ஓடி விடும் என்பது ''ஞான யோகத்தின்முன் கன்ம வினைகள் தீ முன்னர்ப் பஞ்சு போலாகும்'' என்பதைக் குறித்தது. ''ஞானாக்னி, தக்ககர்மானாம்'' என்பது கீதை. பாசம் என்பது நம்மிடம் தொடர்புடையாரிடத்துக் கொள்ளும் பற்று - இதை நீக்குதல் அவ்வளவு எளிதல்ல. எனவேதான் அதைப் ''பெரியபாசம்'' என்றார் என்க.

50. வானரர்கள் சுயம்பிரபையை சீதையோ? என ஐயுறுதல்.

இருந்தனள்; இருந்தவளை எய்தினர், இறைஞ்சா,
அருந்ததி எனத் தகைய சீதை அவள் ஆகப்
பரிந்தனர்; பதைத்தனர்; பணித்த குறி, பண்பின்
தெரிந்து உணர்தி மற்றுஇவள்கொல்தேவி? எனலோடும். (4676)

(பரிதல்-அன்பு கொள்ளுதல்; பணித்த-குறித்த; குறி-அடையாளங்கள்; தெரிதல்-ஆராய்தல்; இறைஞ்சா-இறைஞ்சி /வணங்கி) (குளகப்பாடல்)

அவ்வாறு வீற்றிருந்த சுயம்பிரபையை, வானர வீரர்கள் நெருங்கிச் சென்று வணங்கினர்; அருந்ததி என்று சொல்லத்தக்க கற்பிற் சிறந்த சீதை இவளாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதி அவள் பால் அன்பு கொண்டனர். நெஞ்சம் பதை பதைத்தனர்; அனுமனை நோக்கி ''இராமபிரான் குறிப்பிட்ட அடையாளங்களை உடைய தேவி சீதை இவள்தானா? நன்கு ஆராய்ந்து கூறுவாயாக'' என்று கேட்டனர்.

முன்பே அந்தக் குகையின் செல்வச் செழிப்பைக் கண்டு அதுதான் இராவணன் இருக்குமிடம்; அங்குதான் அவன் சீதையை ஒளித்து வைத்திருப்பான் என்று எண்ணினர். அதற்கேற்ப இப்பொழுது இங்கே இளமையும் வனப்பும் மிக்க ஒரு பெண் தவக்கோலம் பூண்டு அமர்ந்து இருப்பதைக்கண்டதும் வானர வீரர்கள் இவள் சீதையாகத்தான் இருப்பாள் என்றுகருதினர். எனினும் அவளுடைய அங்க அடையாளங்களை இராமன்

அனுமனுக்கு மட்டும்தான் கூறியிருந்தான். எனவே அனுமனைச் சற்று ஆராய்ந்து கூறுமாறு கேட்டுக் கொண்டனர் என்பதாம். அருந்ததி வசிஷ்டரின் மனைவி. கற்புக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்படுபவள்.

51. அனுமன் மறுத்துக் கூறுதல்

''எக்குறியொடு, எக்குணம் எடுத்து, இவண் உரைக்கேன்?
இக்குறியுடைக் கொடி இராமன் மனையாளோ?
அக்குவடம், முத்தமணி, ஆரம் அதன் நேர் நின்று
ஒக்கும் எனின் ஒக்கும்'' என மாருதி உரைத்தான். (4677)

(குறி-அடையாளம்; அக்குவடம்-சங்குமணி மாலை/எலும்பு மாலையுமாம்; முத்துமணி ஆரம்-முத்துமாலை;)

''எந்த உறுப்பின் அடையாளத்தை, எந்தக் குணங்களை நான் எடுத்துக் கூறுவேன்? இந்த அடையாளங்களை உடைய கொடி போன்றவளான சுயம்பிரபை, இராமனது மனைவியான சீதாதேவி ஆகி விடுவாளோ? ஆகமாட்டாள். எலும்பினால் ஆகிய மாலையும், முத்துக்களாலும் நவரத்தினங்களாலும் ஆன மாலையும் ஒன்றுக்கொன்று ஒப்பாகும் என்றால், இவளும் சீதைக்கு ஒப்பாவாள்'' என்று கூறினான்.

சீதைக்கு, சுயம்பிரபை ஒப்பாகவே மாட்டாள் என்பது அனுமன் கருத்து. ''இராமன் கூறிய எந்த உறுப்பு இலக்கணங்களோ, எந்த குணங்களோ சுயம்பிரபை பால் இல்லை. எனவே இவள் சீதை இல்லை'' என்று அனுமன் நிறுவுகிறான். அதற்கு எலும்பு அல்லது சங்கு மணிகளாலான மாலையும், முத்துக்களால் ஆன மாலையும் ஒன்றாகி விடுமோ என்று ஒரு உவமையையும் காட்டி மறுத்துரைக்கிறான் என்பதாம். சங்குமணி மாலையும் முத்துமணி மாலையும் நிறத்தால் வேண்டுமென்றால் ஒன்றாய் இருப்பதுபோல் தோற்றம் அளிக்கலாம். ஆனால் முத்து, சங்கைக் காட்டிலும் மேம்பட்டது என்பதை உணரவேண்டும் என்கிறான் அனுமன். எலும்பு மாலைக்கும் முத்துமாலைக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ அத்தகைய வேறுபாடு இவ்விருவரிடமும் உண்டு என்கிறான் அனுமன்.

52. சுயம்பிரபை வானரர்களை வினவுதல்

அன்ன பொழுதின் கண், அவ்வணங்கும் அறிவுற்றாள்;
''முன், அனையர் சேறல் முறையன்று'' என முனிந்தாள்;
''துன்னரிய பொன் நகரியின் உறைவீர் அல்லீர்;
என்ன வரவு? யாவர்? உரை செய்க,'' என இசைத்தாள். (4678)

(அணங்கு-தேவமாது; சேறல்-சேர்தல்/வருதல்; முனிதல்-சினத்தல்; துன்னரிய-நெருங்குதற்கரிய; அறிவுறுதல்-தன்நினைவு வரப்பெறுதல்)

அப்பொழுது, அந்தத் தேவமாதாகிய சுயம்பிரபையும் இவர்கள் பேச்சு அரவத்தால், தியானம் நீங்கப்பெற்றுத் தன் உணர்வு வரப்பெற்றாள்;

தனியாகத் தவம் செய்து கொண்டிருக்கின்ற ஒரு பெண்ணின் எதிரில், இத்தனை எண்ணிக்கை மிகுந்த ஆடவர்கள் வந்து நிற்றல் தகாத செயலாகும் என்றும் சீற்றமுற்றாள்; ''யாவரும் எளிதில் அடைவதற்கு அரிதான இந்தப் பொன்மயமான நகரத்தில் வசிப்பவர்கள் அல்லர் நீங்கள்; அப்படியானால் இங்கு நீங்கள் வந்ததன் காரணம் என்ன? எவ்வாறு வந்தீர்கள்? நீங்கள் யார்? உடனே கூறுங்கள்'' என்றாள் சுயம்பிரபை.

இங்கே முதல்நூல் வான்மீகம் வேறுபடுகிறது. இவர்களைக் கண்ட சுயம்பிரபை முதலில் வியப்பும், மகிழ்வும் கொண்டதாகவும், சுயம்பிரபையை முதியவளாகவும் கூறுகிறது வான்மீகம்.

53. வானரர்கள் மறுமொழி

''வேதனை அரக்கர் ஒரு மாயை விளைவித்தார்;
சீதையை ஒளித்தனர்; மறைத்த புரை தேர்வுற்று
ஏதம்இல் அறத்துறை நிறுத்திய இராமன்
தூதர்; உலகில் திரிதும்'' என்னும் உரை சொன்னார். (4679)

(ஏதம் இல்-குற்றமற்ற; மாயை-வஞ்சனை; புரை-மறைவான இடம்; தேர்வுறுதல்-தெரிந்து கொள்ளுதல்; வேதனை-துன்பம்;)

''குற்றமற்ற தரும நெறிகளை நிலை நிறுத்த வந்திருக்கின்றவனாகிய இராமபிரானின் தூதுவர்கள் நாங்கள். உலகிலுள்ளோர்க்குத் துன்பத்தைத் தருவதையே தொழிலாகக் கொண்ட அரக்கர்கள் ஒரு வஞ்சனைக் செயலைச் செய்து, இராமபிரானின் மனைவியாகிய சீதாதேவியைக் கவர்ந்து சென்று எங்கோ ஒளித்து வைத்திருக்கின்றனர். அவ்வாறு அவர்கள் மறைத்து வைத்திருக்கின்ற இரகசியமான இடங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு இவ்வுலகெங்கும் தேடித் திரிகின்றோம்''என்று வானரர்கள் கூறினர்.

முன்பு ''நீங்கள் யாவர் இங்கு வந்ததன் காரணம் என்ன?'' என்று கேட்ட சுயம்பிரபைக்கு, வானரர்கள் தக்க மறுமொழி கூறினார்கள் என்பதாம். நாங்கள் இராமனின் தூதுவர்கள்; சீதையைத் தேடி அலைந்து திரிந்து, இங்கும் வந்திருக்கிறோம் என்பது அவர்கள் மறுமொழி. இதனால் இவர்களால் அவளுக்கு எந்தத் தீங்கும் நேராது என்பது குறிக்கப்பட்டது என்க. இந்த மறுமொழியை அனுமனே கூறியதாக வான்மீகம் கூறுகிறது.

54. சுயம்பிரபை மகிழ்தல்

என்றலும், இருந்தவள் எழுந்தனள்; இரங்கிக்
குன்று அனையது ஆகியதோர் பேருவகை கொண்டாள்;
''நன்று வரவு ஆக; நடனம் புரிவல்;'' என்னா
நின்றனள்; நெடுங்கண் இணை நீர் கலுழி கொள்ள. (4680)

(இரங்கி-அன்புகொண்டு; இணை-இரண்டு; கலுழி-கண்ணீர்;)

என்று வானரவீரர்கள் கூறியதும், அமர்ந்திருந்தவளும், பெரிய தவசியுமான சுயம்பிரபை, அவர்களுக்குப் பெருமை தரும் நிமித்தம் எழுந்து நின்று, அவ்வானர வீரர்கள்பால் அன்புமிகக் கொண்டு, மலைபோலும் உறுதியான, நிலைபெற்ற, பெருமகிழ்ச்சி கொண்டாள். ''உங்கள் வரவு நல்வரவாகட்டும்; இதனையறிந்து நான் ஆனந்தக் கூத்தாடுவேன்'' என்று கூறி, தனது நீண்ட இரண்டு கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் வெள்ளமாகப் பெருக நின்றாள்.

உவகையாகிய அருவ உணர்ச்சிக்கு, மலையாகிய உருவத்தை உவமையாகக் கூறியிருப்பது, வேறு எந்த இலக்கியத்திலும் காணப்படாத உவமை. அவளுடைய பேருவகையைக் குறிக்கக் கம்பன் சிறப்பாக, புதிதாகக் கையாண்ட உவமை என்க. தனக்குச் சாப நீக்கத்திற்கு உரிய காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்ததால் சுயம்பிரபை ஆனந்தக் கூத்தாடி, ஆனந்தக் கண்ணீர் உகுத்து நின்றாள் என்பதாம்.

55. சுயம்பிரபை இராமன் பற்றி வினவுதல்

''எவ்வுழை இருந்தனன் இராமன்?'' என, யாணர்ச்
செவ்வுழை நெடுங்கண் அவள் செப்பிடுதலோடும்,
அவ்வுழை நிகழ்ந்ததனை ஆதியினோடு அந்தம்,
வெவ்விழைவு இல் சிந்தை, நெடுமாருதி விரித்தான். (4681)

(உழை-இடம்; யாணர்-வளமை/புதுமை; உழை-மான்; வெவ்-கொடுமையான; விழைவு-அவா/ஆசை; உழை-பக்கம்; ஆதி-முதல்; அந்தம்-கடைசி; செப்பிடுதல்-வினவுதல்; செவ்-அழகிய; நெடு-பெருமை;)

''இப்போது இராமன் எங்கே இருக்கிறான்?'' என்று, புதுமையும் வளமையும், சிவந்த இரேகைகள் கொண்ட மான்போன்ற நீண்ட கண்களை யுடைய சுயம்பிரபை வினவியதும், கொடுமையான அவா என்னும் குணம் சிறிதும் இல்லாத சிந்தையை உடைய, நெடியவனும், பெருமையுடைய வனுமான அனுமன், அங்கே இராமன்பால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும், ஒன்றுவிடாமல் முதலிலிருந்து கடைசிவரை, விரிவாகக் கூறினான்.

''உழை'' என்ற ஒரே சொல் இடம், மான், பக்கம் என்ற பொருள்களில் பயன்படுத்தப்பட்டமை காண்க. அனுமன் அவா என்னும் குணத்தை வேரோடு அறுத்தவன் என்பது புலப்பட ''வெவ்விழைவு இல் சிந்தை நெடுமாருதி'' என்றார் என்க. ''நெடுமாருதி'' என்பது நினைத்தபோது விசுவரூபம். எடுக்கும் ஆற்றல் பெற்றவன் என்பதையும், வானரங் களிடையே நெடியவன் என்பதையும், மிகப்பெருமை வாய்ந்தவன் என்பதையும் குறிக்கும் ஒரே சொல் என்பதை உணர்க. வெவ்விழைவு என்பது விருப்பு வெறுப்பு என்ற இரண்டுமில்லாத சமநிலை என்பதையும் குறிக்கும் என்க.

56. சுயம்பிரபை அவர்களுக்கு விருந்தளித்தல்

கேட்டு அவளும், ''என்னுடைய கேடுஇல் தவம் இன்னே
காட்டியது வீடு'' என விரும்பி, நனிகால் நீர்
ஆட்டி, அமிழ்து அன்ன சுவை இன்அடிசில் அன்போடு
ஊட்டி, மனன் உள் குளிர, இன்னுரை உரைத்தாள். (4682)

(கேடு-கெடுதல்; இன்னே-இப்பொழுதே; வீடு-விடுதலை; அடிசில்-உணவு; ஊட்டி-உண்பித்து; உள்குளிர-மனம்மகிழ; கால்நீர் ஆட்டுதல்-பாத்தியம்செய்தல்;)

அவ்வாறு அனுமன், இராமபிரான் பக்கம் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விரிவாகக் கூறக் கேட்ட சுயம்பிரபை, ''நான் மேற்கொண்ட கெடுதல் இல்லாத நற்றவத்தின் பயன் இப்பொழுதுதான் கிடைக்கப் பெற்றேன்; எனக்குத் தண்டனையிலிருந்து விடுதலை கிடைத்து விட்டது'' என்று தனக்குள் மிக மகிழ்ந்து, அவர்களை அன்புடன் வரவேற்று, கால் கழுவ நீர்தந்து நீராட்டி கால்களை நன்றாகக் கழுவிப் பூசித்து, தேவாமிர்தம் போன்ற அறுசுவை உணவை அன்போடு உண்பித்து அவர்கள் மனம் குளிர்ச்சி அடையும்படி சில நல்ல இனிய வார்த்தைகளைக் கூறலானாள்.

''கால் நீராட்டுதல்'' என்பது விருந்தினரை வரவேற்கும் முறைகளுள் ஒன்று. அவர்கள் தாமே கால்களைக் கழுவிக் கொள்ள நீர் அளித்தல், இது பாத்தியம் எனப்படும் அவர்கள் காலைத் தானே கழுவி நீராட்டுதல் என்பது மற்றொன்று; அவர்கள் காலைக் கழுவிப் பூசித்தல் என்பது மற்றொன்று. சுயம்பிரபை மிக்க மகிழ்ச்சியுற்றிருந்தாள் என்பதால் இதில் எல்லா வகையான நீராட்டலையும் செய்தாள் எனக் கொள்ள இடமிருப்பதை உணர்க. அன்புடன் உண்ணச் செய்தலை ஊட்டுதல் என்று கூறுவது உண்டு. அன்பை ஏழாவது சுவையாகக் கொண்டு, இவ்வாறு கூறுதல் பொருந்தும் என்க. விருந்தோம்பல் பற்றி வள்ளுவன், விருந்தினரைச் சேய்மையில் காணும்பொழுதே இன்முகம் காட்டவேண்டும் என்றும், நெருங்கி வந்த போது, இன்சொல் பேச வேண்டும் என்றும், உணவு படைக்கும்போது, கனிவுடன் இனிது நன்றாற்ற வேண்டும் என்றும் கூறுகிறான். மொத்தத்தில் விருந்தினர்களைத் தெய்வமாய்ப் பேண வேண்டும் என்பது அக்கால வழக்கு என்பதை அறிக.

57. சுயம்பிரபை தன் வரலாறு கூறுதல் [10 பாடல்கள்]

மாருதியும். மற்று அவள் மலர்ச்சரண் வணங்கி,
யார் இந்நகர்க்கு இறைவர்? யாது நின் இயற்பேர்?
பார்புகழ் தவத்தினை! பணித்தருள்க,! என்றான்;
சோர் குழலும், மற்று அவனோடு உற்றபடி சொன்னாள். (4683)

(சரண்-பாதங்கள்; இறைவர்-தலைவர்; பணித்தல்-சொல்லுதல்; சோர்தல்-தாழ்ந்துதொங்குதல்; குழல்-கூந்தல்; உற்றபடி-நடந்தபடியே;)

அனுமனும்சுயம்பிரபையினுடையதாமரைமலர்போன்றபாதங்களை வணங்கி, ''உலகத்தார் புகழும் பெருந்தவத்தினைச் செய்பவளே! இந்த நகரத்திற்குத் தலைவர் யார்? உன்னுடைய இயற்கையான பெயர் என்ன? என்பதைக் கூறியருள்வாயாக!'' என்றதும், நிலத்தில் தாழ்ந்து தொங்குகின்ற சடையை உடையவளாகிய சுயம்பிரபையும், அனுமனிடம், நிகழ்ந்தவற்றை அப்படியே கூறத் தொடங்கினாள்.

58. நூன்முகம் நுனித்த நெறி நூறுவர, நொய்தா
மேல்முகம் நிமிர்த்து, வெயில் காலொடு விழுங்கா,
மான்முக நலத்தவன், மயன் செய்த தவத்தால்
நான்முகன் அளித்துளது, இம்மாநகரம், நல்லோய்! (4684)

(நூன்முகம்-சிற்பநூல்/யோகநூல்; நுனித்த-நுட்பமான; நொய்தா-எளிதாக; நலம்-இயல்பு; கால்-காற்று; விழுங்கா-விழுங்கிஉண்டு; நான்முகன்-பிரமன்;)

''நற்பண்புகளை உடையவனே! மயன் அகரச் சிற்பி, மான் போன்ற முகத்தைக் கொண்டவன்; அவன் தனக்கு யோக, சிற்ப நூல்களின், நுண்மையான பகுதிகள் எல்லாம் எளிதாகக் கை வரப்பெற வேண்டும் என்று பிரமனை நோக்கி, தன் முகத்தை மேல் நோக்கி நிமிர்த்தி, சூரியனின் கிரணங்களையும், காற்றையுமே உணவாக உட்கொண்டு கடுமையாகச் செய்த தவத்தினால், மனம் மகிழ்ந்த நான்முகனாகிய பிரமதேவன், இந்நகரத்தை மயனுக்கு வரமாக அளித்தான். அத்தகைய சிறப்புப் பெற்றது இந்நகரம்'' என்றாள் சுயம்பிரபை.

''நூன்முகம்'' என்பது யோக நூலையும் சிற்ப சாத்திரங்களையும் குறிக்கும் என்க; நூறு என்பது பல என்னும் பொருளில் எல்லாத் துறைகளையும் என்று பொருள்படும்; நொய்தா என்பது எளிதாக என்றாலும், நினைத்த மாத்திரத்தில், நினைத்தபடி, எண்ணிய, எண்ணியாங்கு செய்து முடிக்கும் திறனைக் குறித்தது என்க. மேல்முகம் நிமிர்த்து என்பது, பொதுவாக யோகம் செய்பவர்கள் முகத்தை மிக நன்றாக மேலே தூக்கியிருக்கும்படி நிறுத்திக் கொள்வார்கள். இது ''ஊர்த்துவமுகம்'' எனப்படும். அது, சமயங்களில் மானின் முகம் போலவும் தோற்றம் தரும். அதையே இங்கே குறிக்கிறான் கவிஞன் எனக் கொள்க. கடும் தவம் செய்பவர்கள் உணவை ஒழித்து, வெறும் வெயிலையும் காற்றையுமே உணவாக உட்கொள்ளுவர் என்பது மரபு. மயனும் அவ்வாறு கடுமையாகத் தவம் இயற்றினான் என்பதாம். அதனால் மகிழ்ச்சியுற்ற பிரமன் இந்த நகரத்தை அவனுக்கு வரமாக அளித்தான். அதனால் இந்த நகரம் உண்டாயிற்று என்பதாம்.

59. ''அன்னது இது; தானவன் அரம்பையருள், ஆங்குஓர்
நல்நுதலினாள் முலை நயந்தனன்; அந் நல்லாள்
என் உயிர் அனாள்; அவளை, யான், அவள் இரப்ப
பொன்னுலகில் நின்று, ஒளிர் பிலத்திடைப் புணர்த்தேன்'' (4685)

(தானவன்-அசுரன்/மயன்; அரம்பையர்-தேவமாதர்; நுதல்-நெற்றி; இரப்ப-வேண்ட; பொன்னுலகு-இந்திரலோகம்; புணர்தல்-சேர்தல்;)

''அத்தகைய பிலம் இது; இதை அமைத்த அந்த அசுரத் தச்சனான மயன், தேவலோக மாதர்களான அரம்பையருள், நல்ல நெற்றியைப் பெற்ற ஒருத்தியான ஏமை என்பவளை இன்பம் நுகர விழைந்தான். அந்த நற்குணங்கள் அமையப் பெற்றவள் என்னுடைய உயிர் போன்ற தோழியாவாள்; அவள் என்னை மன்றாடிக் கேட்டுக் கொள்ள, அவளை நான் பொன்மயமான இந்திரலோகத்திலிருந்து ஒளிவீசுகின்ற இந்தப் பிலத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தேன்'' என்றாள் சுயம்பிரபை.

''தானவன்'' என்பது, காசியப முனிவரின் மனைவியருள் ஒருத்தியான தனு என்பவள் வழி வந்தவன் என்று பொருள்படும். தானவர் என்பவர் அரக்கர் இனத்தைச் சேர்ந்தவர் என்க. அரம்பையர் என்பது, தேவ லோகத்தில் உள்ள அரம்பை முதலான நடனமாதர் என்பதைக் குறிக்கும்; முலை நயந்தனன் என்பது உடல் நுகர்ச்சியை விரும்பினான் என்ற பொருள்பட நிற்கும். நல்நுதலினாள் ஹேமை என்றும், இந்தப் பிலம் ருட்சபிலம் என்றும் முதல் நூல் கூறும். ஹேமம் என்றால் பொன் என்பது பொருள். அது ஏமை எனத் தமிழாக்கப்பட்டிருப்பதை அறிக. தலைவியின் கூடலைப் பெற விரும்பும் தலைவன், அவள் தோழியை அணுகி இரந்து வேண்டித் தூதாக அனுப்புதலை சங்க இலக்கிய அகத்துறை நூல்களில் பரக்கக் காணலாம்.

60. ''புணர்ந்து அவளும் அன்னவனும், அன்றில் விழை போகத்து,
உணர்த்திலர், நெடும்பகல் இம்மாநகர் உறைந்தார்;
கணங்குழையினாளோடு, உயர்காதல் ஒருவாது உற்று,
இணங்கிவரு பாசமுடையேன், உடன் இருந்தேன்.'' (4686)

(போகம்-இன்பம்; பகல்-காலம்; கணம்-திரண்ட; ஒருவாது-நீங்காது;)

ஏமை என்ற அந்த அரம்பையும், மயன் என்னும் தச்சனும் இருவரும் அன்றிற் பறவையைப்போல் இணை பிரியாது கூடிப்புணர்ந்து, இன்பம் துய்த்துக் காலம் கழிவதையே உணராதவர்களாகி, இந்தச் சிறந்த நகரத்தில் நீண்ட காலம் தங்கி வரலானார்கள்; திரண்ட காதணியையணிந்த அந்த ஏமையோடு நான் கொண்டிருந்த அன்பு சற்றும் நீங்காது பொருந்தியிருக்க, அவளிடம் மிக்க பாசம் கொண்டவளாகிய நானும், அவளைவிட்டுப் பிரிய மனமில்லாமல் அவள் கூடவே இங்கேயே தங்கி இருந்துவிட்டேன்'' என்றாள் சுயம்பிரபை.

இணைபிரியாத கூடலுக்கு அன்றிற் பறவையை உவமை கூறுவது கவி மரபு; காதலர்க்குக் காலம் போவதே தெரியாது. உணர மாட்டார்கள். ''காலையும், பகலும், கையறுமாலையும், ஊர்துஞ்சுயாமமும், விடியலும் என்று இப்பொழுது இடைதெரியில் பொய்யே காமம்'' என்பது குறுந்தொகை. தான் ஏமையிடம் கொண்டிருந்த அன்பை எத்தனை

அடைமொழிகளால் தெரிவிக்கிறாள் பாருங்கள் சுயம்பிரபை. உயர்காதல்; ஒருவாத காதல்; உற்ற காதல்; இணங்கி வருகாதல்; பாசம் உடையேன் என்று கூறுவதை நோக்குக. உயர்காதல் என்பது காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்ட இன்பத்தினாலான நட்பு என்பதைக் குறிக்கும்.

61. ''இருந்து, பலநாள் கழியும் எல்லையினில், நல்லோய்!
திருந்து இழையை நாடி வரு தேவர்இறை, சீறி,
பெருந் திறலினானை, உயிர் உண்டு, ''பிழை'' என்று அம்
முருந்து நிகர் மூரல் நகையாளையும், முனிந்தான்''. (4687)

(இழை-அணிகலன்கள்; நாடி-தேடி; தேவர்இறை-தேவர் தலைவன்/தேவேந்திரன்; முருந்து-மயில் இறகின் அடி; மூரல்-பற்கள்)

''நற்பண்புகளை உடையவனே! இவ்வாறு அவர்கள் இருவரும் இந்நகரத்தில் பலகாலமாக இன்பம் துய்த்து வரும் சமயத்தில் திருத்தப் பட்ட அழகிய அணிகலன்களை அணிந்தவளான ஏமையைத் தேவ லோகத்தில் நீண்டநாட்களாகக் காணாததால், அவளைத் தேடிக் கொண்டு வந்த தேவர் தலைவனான இந்திரன், அவள் இங்கு மயனுடன் கூடி இருப்பதைக் கண்டு, மிகக் கோபம் கொண்டு, மிகப்பெரும் ஆற்றல் வாய்ந்த மயனைக் கொன்று, மயிலிறகின் அடிக்குருத்துப் போன்ற பற்களையும், மாறாத புன்னகையையும் கொண்டவளான அந்த ஏமை என்ற, தேவ மகளையும், ''நீ செய்தது தவறு என்று சினந்து கூறினான்.'' என்றாள் சுயம்பிரபை.

''உயிர் உண்டு'' என்பது உயிரைப்பறித்து, கொன்று என்று பொருள் படும். ''உண்டற்கு உரியதல்லாப் பொருள்ள உண்டது போலக் கூறலும் ஆமே'' என்பது தொல்காப்பியம். மயிலின் சிறகின் அடிக் குருத்தைப் பெண்களின் பற்களுக்கு உவமை கூறுவது கவிமரபு. இந்திரன் ஏமையைக் கொல்லாது, வெகுண்டு கூறியது அவளுடைய வல்லமையின்மை அறிந்து என்க. சினந்து கொண்டது, மயனின் இச்சைக்கு இணங்கியதற்கும், உடனே அவனை விட்டு அகன்று தேவலோகம் வந்து சேராமைக்கும் என்க.

62. ''முனிந்து அவளை. ''உற்ற செயல் முற்றும் மொழிக'' என்ன,
கனிந்த துவர் வாய் அவளும் என்னை, ''இவள் கண்ணாய்
வனைந்து முடிவுற்றது'' என, மன்னனும் இது எல்லாம்
நினைந்து, ''இவண் இருத்தி நகர்க்காவல் நின்னது'' என்றான். (4688)

(கனிந்த-முதிர்ந்த; துவர்-பவழம்; மன்னன்-இந்திரன்; கண்ணால்-சாட்சியாக/காட்டாக/கண்சாடையினால்; வனைதல்-ஒன்று சேர்த்தல் / தொடுத்தல்)

''அவ்வாறு அவளைக் கோபித்துக் கொண்ட இந்திரன் அவளை நோக்கி'', ''இங்கு நடந்த செயல்கள் யாவற்றையும் எனக்குக் கூறுக'' என்று

கேட்க, நன்கு முதிர்ந்த பவழம் போன்ற சிவந்த வாயையுடையவளான ஏமையும், என்னைச் சுட்டிக்காட்டி, இவள் சேர்த்து வைத்ததால் - இவள் சாட்சியாகத்தான் இவ்வளவும் நடந்து முடிந்தது'' என்று கூற, தேவேந்திரனும் நடந்தனவற்றையெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்து, என்னை நோக்கி, ''நீ இங்கேயே தனியாக இருப்பாயாக; இனிமேல் இந்நகரத்தின் காவற்பணி உன்னைச் சேர்ந்ததாகும்'' என்று கூறினான்'' என்றாள் சுயம்பிரபை.

''கண்ணால்'' என்பது இவள்தான் மூலமுதற் காரணம் என்பதைக் குறிக்கும். கண்சாடையால் காட்டினாள் என்றும் பொருள் கூறுவதுண்டு. ''நகரைக்காவல்காத்துக்கொண்டு தனியாக இரு'' என்று இந்திரன்கூறியது, சுயம்பிரபைக்குத் தந்த தண்டனை என்க. மயனோடு தன்னைச் சேர்த்தவள் இச்சுயம்பிரபையே என்ற உண்மையை இந்திரனுக்குத் தெரிவித்தாள் ஏமை என்க. தன் தோழியை நேராகக் குற்றம் சாட்டமுடியாது. எனவே கண்சாடையால் கூறினாள் என்பதும் பொருந்தும்.

63. ''என்றலும், வணங்கி, ''இருள் ஏகும் நெறி எந்நாள்?
ஒன்று உரை, எனக்கு முடிவு'' என்று உரை செயாமுன்,
''வன்திறல் அவ்வானரம் இராமன் அருள் வந்தால்,
அன்று முடிவாகும் இடர்'' என்று, அவன் அகன்றான். (4689)

(இருள்-துன்பம்; ஏகுதல்-நீங்குதல்; அருள்-கட்டளை;)

''என்று இந்திரன் எனக்குக் கட்டளையிட்டதும், நான் அவனை வணங்கி, இந்தத்துன்பம்நீங்கும்வழி எப்பொழுது, அதற்கு ஒரு முடிவைக் கூறுவாயாக'' என்று கேட்டு முடிக்கும் முன்பே, இந்திரன், ''வலிமையும் திறமையும் உடைய இராம தூதர்களான வானரர்கள் இராமன் அருளாலும், கட்டளையாலும் இங்கு வந்து என்று சேர்வார்களோ அன்று உன்னுடைய இந்தத்துன்பம்தீரும் என்று சாப நீக்கத்திற்குரிய வழிகூறி அவ்விடம் விட்டு அகன்று தன் நகர்க்குச் சென்றான்''.

வன்மை என்பது உடல் வலிமையையும், திறல் என்பது அறிவையும் மனவலிமையையும் குறிக்கும் என்க.

64. ''உண்ண உள; பூச உள; சூட உள; ஒன்றோ?
வண்ண மணி ஆடை உள; மற்றும் உள; பெற்றேன்;
அண்ணல்! அவை விட்டு, உமை அடைந்திடுதல் வேண்டி,
எண்ண அரிய பல்பகல் இருந்தவம் இழைத்தேன்''. (4690)

(அண்ணல்-பெருமையுடையவன்; ஒன்றோ-மட்டுமா; வண்ணம்-நிறம்; மணி-அழகு; இரும்-பெரிய; இழைத்தல்-செய்தல்; அடைதல்-காணுதல்; பல்பகல்-நெடுங்காலம்;)

''பெருமை உடையவனே! எனக்கு இந்நகரத்தில், உண்பதற்குரிய கனி, கிழங்கு, காய் வகைகள் எல்லாம் கிடைக்கின்றன. பூசிக்கொள்வதற்குச்

சந்தனக் கலவை முதலியன உள்ளன; தலையில் சூடிக்கொள்ளுவதற்கு நறுமணம் மிக்க மலர் மாலைகள் இருக்கின்றன. இவை மட்டுமா? நல்ல நிறமுடைய அழகிய பட்டாடைகள் நிறைய இருக்கின்றன; மற்றும் எனக்குத் தேவைக்கு அதிகமான எல்லாப் பொருள்களும் நான் பெற்றிருக்கிறேன். ஆனால் இவை எவற்றையும் துய்க்காது, எல்லாப் பற்றுகளையும் அகற்றிவிட்டு, உங்கள் வரவை எதிர்நோக்கி, உங்களைக் காணும் பொருட்டே, யாராலும் எண்ணிப் பார்ப்பதற்கும் அரியதான பெரிய தவத்தைப் பல காலமாகச் செய்து வருகிறேன்'' என்றாள் சுயம்பிரபை.

தனக்கு விடுதலை, இராமதூதர்களான வானரர்களின் வருகையைப் பொறுத்தே இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்தவள் சுயம்பிரபை. எனவே அனுமனைக் கண்டதும் தன் மனத்தில் இருந்ததைக் கூறிவிட்டாள் என்பதாம். அங்கிருந்து விடுதலையாகி விண்ணுலகு விரைவில் செல்லவேண்டுமென்பதே அவள் தவத்தின் நோக்கம். அது இப்போது நிறைவேறப் போகிறது என்பதை அறிக.

65. ''ஐ இருபது ஓசனை அமைந்த பிலம் ஐயா!
மெய்உளது; மேல் உலகம் ஏகும் நெறி காணேன்;
உய்யும் நெறி உண்டு உதவுவீர் எனின்; உபாயம்
செய்யும் வகை, சிந்தையில் நினைத்திர் சிறிது'' என்றாள். (4691)

(ஐஇருபது-நூறு; மெய்-உண்மையாக; உபாயம்-தந்திரம்சூழ்ச்சி; உய்தல்-பிழைத்தல்/ஈடேறுதல்)

''தலைவனே! இந்த பிலத்துவாரம் நூறு யோசனை பரப்பளவு கொண்டது. இது உண்மை; இது இருள் படர்ந்திருப்பதாலும், மிக நீண்டிருப்பதாலும், மேல் உலகத்திற்குச் செல்லும் வழி எனக்குப் புலப்படவில்லை; ஆனால் இதனின்றும் தப்பித்துப், பிழைத்து ஈடேறும் வழி இருக்கிறது. அதற்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்; அதற்கான தந்திரம் ஒன்றைச்செய்யும் வகையை உங்கள் மனத்தில் சற்று சிந்தியுங்கள்'' என்று எல்லா வானரர்களையும் கேட்டுக் கொண்டாள் சுயம்பிரபை.

ஓசனை என்பது 10 மைல் அல்லது 16 கிலோ மீட்டர் என்பதாம். நான்கு காதம் கொண்டது என்றும், காதம் என்பது ஏழரை நாழிகைத் தொலைவு என்றும், முப்பதுகல் தொலைவு என்றும் பலவாறாகக் கூறுகிறார்கள்.

66. அனுமன் மறுமொழி

அன்னது சுயம்பிரபை கூற, அனுமனும்
மன்னுபுலன் வென்று வரும் மாதுஅவள் மலர்த்தாள்
சென்னியின் வணங்கி, ''நனி வானவர்கள் சேரும்
பொன்னுலகம் ஈகுவல் நினக்கு,'' எனப் புகன்றான். (4692)

(மன்னு-நிலைபெற்ற; புலன்-பொறிகள்/இந்திரியங்கள்; சென்னி-தலை; ஈகுதல்கொடுத்தல்/வழிகாட்டுதல்;)

அவ்வாறு சுயம்பிரபை கூறவும், அது கேட்ட அனுமன் நிலைபெற்ற ஐம்பொறிகளையும் அடக்கி, வென்று திகழும் பெண்ணாகிய சுயம் பிரபையின் தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தலையால் வணங்கி, ''தேவர்கள் மிகுதியாகக் கூடி இருக்கும் பொன்மயமான சுவர்க்க லோகத்திற்கு நீ செல்லும் வழியினை நான் காட்டுவேன்'' என்று கூறினான்.

சுயம்பிரபை என்ற சொல் இயல்பாகவே, தானாகவே, சுயமாகவே, ஒளிமிகுந்து திகழ்பவள் என்று பொருள்படும் சொல். எல்லாம் கற்றுணர்ந்த நவவியாக்ரண பண்டிதனான அனுமனே, சுயம்பிரபையைத் தலைதாழ்த்தி வணங்கினான் என்றால் சுயம்பிரபையின் பெருமையை உணர்ந்து கொள்க. ஈகுவல் என்பது கொடுத்தல் என்று பொருள்பட்டாலும், இங்கே வழி காட்டுவேன் என்ற அளவில் நின்றது என்பதை நினைவிற் கொள்க. சுயம்பிரபை மேரு ஸாவர்ணியின் மகள். இவளை முதிர்ந்த வயதுடையவளாக வான்மீகம் கூறுகிறது. கம்பன் இளமையும் வனப்பும் மிக்கவள்; தவத்தில் சிறந்தவள் என்கிறான்.

67. வானரர்களும் அவ்வாறே வேண்டுதல்

''முழைத்தலை இருட்கடலின் மூழ்கி முடிவேமைப்
பிழைத்து உயிர் உயிர்க்க அருள்செய்த பெரியோனே!
இழைத்தி செயலாய வினை'' என்றனர்; இரந்தார்;
வழுத்த அரிய மாருதியும் அன்னது வலிப்பான். (4693)

(முழை-பிலம்/குகை; முடிதல்-இறத்தல்; உயிர்த்தல்-மூச்சுவிடுதல்; இழைத்தல்-செய்தல்; வினை-செயல்; இரத்தல்-வேண்டுதல்; வழுத்தல்-வாழ்த்துதல்/புகழ்தல்; வலித்தல்-உறுதி கொள்ளுதல்)

''இந்தப் பிலத்துவாரத்தில் பரவியிருந்த கடல் போன்ற பேர் இருளில் மூழ்கி, இறந்துபோகும் நிலையை அடைந்திருந்த எங்களைப் பேருருக் கொண்டு பிழைப்பித்து, உயிர் மூச்சு விடுமளவுக்குப் பெருங்கருணை புரிந்து பெருமை படைத்தவனே! இப்பொழுது நாம் தப்பிப் பிழைப் பதற்கும், சுயம்பிரபை நற்கதியடைவதற்கும் உரியதான செயலைச் செய்ய முற்படுவாயாக'' என்று மற்ற வானரர்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டனர். சொல்லுதற்கரிய புகழுடைய அனுமனும், அதைச் செய்வது என்று தன்மனத்தில் உறுதி பூண்டான்.

பேர்இருளைக் கடலாக உருவகம் செய்தார். வலித்தல் என்பது உறுதி கொள்ளுதல் என்பதோடு, உடன்பட்டு இசைதல் என்ற பொருளையும் தரும்.

68. ''நடுங்கன்மின்'' எனும் சொலை நவின்று, நகை நாற
மடங்கலின் எழுந்து, மழை ஏற அரிய வானத்து

ஒடுங்கல் இல் பிலம் தலை திறந்து உலகொடு ஒன்ற
நெடுங்கைகள் பெயர்த்து, நெடுவான் உற நிமிர்ந்தான். (4694)

(நாற-தோன்ற; மடங்கல்-ஆண்சிங்கம்; மழை-மேகம்; தலை-மேலிடம்; பெயர்த்தல்-மேலே உயர்த்துதல்; நிமிர்தல்-பேருருக் கொள்ளுதல்; பிடரி மயிர் மடங்கப் பெற்றிருப்பதால் மடங்கல் சிங்கத்திற்குக் காரணப் பெயர்.)

அனுமன் மற்ற வானர வீரர்களை நோக்கி, ''அஞ்சாதீர்கள்'' என்ற சொல்லைச் சொல்லி புன்முறுவல் தோன்ற, ஆண் சிங்கம் போன்று எழுந்து, மேகங்களும் செல்லுதற்கு அரிய வான மண்டலத்தில் குறுகல் இல்லாத பிலத்துவாரத்தின் தலைப்பக்கமானது திறந்து கொண்டு வெளியுலகத்தோடு பொருந்தி நிற்குமாறு, தனது நீண்ட கைகளை உயர்த்தி, நீண்ட ஆகாயமளவு பரவுமாறு பேருருக் கொண்டான்.

''நடுங்கன்மின்'' என்பது அஞ்சாதீர்கள் என்று அபயமளிப்பதைக் குறிக்கும். தான் பேருருக்கொண்டு தன் உயர்ந்த கைகளை உயர்த்தியதால், அப்பிலத்துவாரத்தை அடைத்துக் கொண்டிருந்த மேலிடமான மண் மேட்டுப் பகுதி இடிந்து சிதறி, வானுலகமும், பூவுலகமும் ஒன்றே என ஆகும்படி செய்தான் என்பதாம். இதனால் எளிதில் வெளிப்பட்டு தப்பித்துப் போகும் வாய்ப்பு உண்டாகியது என்க.

69\. எருத்து உயர் சுடர்ப்புயம் இரண்டும் எயிறு என்ன,
மருத்துமகன் இப் படி இடந்து, உற வளர்ந்தான்;
கருத்து நிமிர் கண்ணின் எதிர் கண்டவர் கலங்க
உருத்து உலகு எடுத்த கருமாவினையும் ஒத்தான். (4695)

(மருத்து-மருத்/வாயு; எருத்து-பிடரி; சுடர்-ஒளிமிக்க; எயிறு-கோரப்பற்கள்; இடந்து-தகர்த்து/இடித்து; கருமா-கரிய விலங்குவராகம் பன்றி; நிமிர்தல்-ஊன்றுதல்; உருத்து-உருவம் கொண்டு; புயம்-இங்கே கரங்கள்;)

வாயுதேவனின் மகனாகிய அனுமன், தன் பிடரியில் இருந்து உயர்ந்து ஒளிமிக்கு விளங்கும் தனது இரண்டு கரங்களுமே தந்தங்கள் போல, பிலத்துவாரத்தின் மேற்பகுதியைத் தகர்த்து பிலத்தின் தலைப்பகுதியைத் தன்கையில் கொண்டு, பேருருக் கொண்டிருந்த தோற்றம், எதிரில் நின்று கருத்துடன் ஊன்றிக் கவனிப்பவர்கள் கலங்குமாறு இருந்தது. இந்தத் தோற்றம், முன்பு, இரணியாக்கன் மீது மிக்க சினம் கொண்டு, அவன் பாதலத்துக்கு அடியில் மறைத்து வைத்திருந்த பூமியைத் திருமால் கரிய பன்றி அவதாரம் எடுத்து அவனிடமிருந்து மீட்டு தனது இரண்டு கோரத் தந்தப் பற்களால் பூமியைக் குத்தித் தூக்கிக் கொண்டு எழுந்து நின்றதை ஒத்திருந்தது.

இந்த அனுமனின் பேருருவுக்குத் திருமாலின் வராகவதாரம் உவமை; வராகத்தின் கோரப்பற்களுக்கு அனுமனின் சுடர்மிகு இரண்டு

தோள்களையும்-கைகளையும்-உவமை கூறினார். கருத்து நிமிர்தல் என்பது மனம் கண் சென்ற வழியில் ஊன்றி நிற்றலைக் குறிக்கும்.

70. மா வடிவுடைக் கமல நான்முகன் வகுக்கும்
தூ வடிவுடைச் சுடர் கொள் விண்தலை தொளைக்கும்
மூ அடி குறித்து, முறை ஈர் அடி முடித்தான்
பூ வடிவுடைப் பொருவு இல் சேவடி புரைத்தான். (4696)

(மா-சிறந்த; வகுத்தல்-படைத்தல்; வடிவு-தோற்றம்; சுடர்-சூரியன் சந்திரன்/அக்னி; தலை-மேல் சிகடு; பூ-அழகிய; பொருவுஇல்-ஒப்பில்லாத; புரைதல்-ஒத்திருத்தல்;)

சிறந்த தோற்றப் பொலிவுடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனாகிய பிரமதேவன்படைத்த, தூயவடிவு கொண்டதானசூரியன், சந்திரன், அக்னி, முதலிய சுடர்களைத் தன்னிடம் கொண்டுள்ள ஆகாயத்தைத் தொளைத்துக் கொண்டு பிலத்துவாரத்தின் மேலிடத்தைக் கையில் உயரத்தில் பிடித்துக் கொண்டு நின்ற அனுமனின் தோற்றம், முன்பு, மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்று அடி மண்ணை வேண்டி, முறையாக ஓரடியால் இந்நிலவுலகத்தையும், மற்றோரடியால் விண்ணுலகத்தையும் அளந்து முடித்த ஒப்பற்ற சிவந்த திருமாலின் திருவடிகளின் தோற்றத்தை ஒத்து விளங்கியது.

அனுமன் பேருருக்கொண்டு பிலத்தின் மேலிடத்தைக் கைகளில் உயர்த்திப்பிடித்துக்கொண்டிருந்த தோற்றம், முன்பு திருமால் திரிவிக்கிரம அவதாரத்தில் மண்ணுலகிலும் விண்ணலுகிலும் ஈரடிகளைப் பரப்பி நின்ற தோற்றத்தைப் போன்றிருந்தது என்பதாம். முன்பாடலில் திருமாலின் வராக அவதாரத்தை ஒப்பிட்ட கவிஞன், இப்பாடலில் அனுமனின் தோற்றத்திற்குத் திருமாலின் திரிவிக்கிரம அவதாரத்தை ஒப்பிட்டான் என்க. போல, புரைய, ஒப்ப, உறழ, ஒக்க, நேர என்பன உவம உருபுகள்.

71. பிலத்தின் மேற்பகுதியை அனுமன் கடலில் எறிதல்

ஏழ் இருபது ஓசனை இடந்து, படியின் மேல்
ஊழ் உற எழுந்ததனை, உம்பரும் ஒடுங்க,
பாழி நெடுவன் பிலனுள் நின்று, படர் மேல்பால்
ஆழியில் எறிந்து, அனுமன் மேகம் என ஆர்த்தான். (4697)

(ஏழ் இருபது-நுற்றி நாற்பது; இடந்து-தகர்த்து/பெயர்த்து படி-பூமி; உம்பர்-தேவர்கள்; பாழி-பெருமை; ஆழி-கடல்; ஆர்த்தல் - ஆரவாரித்தல்; ஒடுங்குதல்-அஞ்சி நடுங்குதல்; ஊழி-முறைமை)

அனுமன் நூற்றி நாற்பது யோசனை தூரம் அந்தப் பிலத்தைத் தகர்த்து, பூமியின்மேல் முறையாக வட்டமாக எழுந்து வந்து, அந்த பிலத்தின்மேல்

தட்டை, தேவர்களும் அஞ்சி நடுங்கும்படி, பெருமையுடைய, நீண்ட, வலிய அந்தப்பிலத்தின் மேல் நின்று கொண்டே, பரந்த கடலின் மேற்புறத்தில் தூக்கி வீசி எறிந்து, மேகம் போல ஆரவாரம் செய்து நின்றான்.

தேவர்கள் அஞ்சி நடுங்கியது, அனுமன் அப்பிலத்தின் மேல் தட்டைத் தூக்கி வீசி எறிந்ததால் வானத்திலுள்ள அது, தங்கள் மேல் விழுந்து தங்களுக்கு ஏதும் தீங்கு நேருமோ என்று அஞ்சி என்க.

72. சுயம்பிரபை சுவர்க்கம் சேருதல்

இன்றும் அது மேல்கடல் இயக்குஇல் பிலதீவா
நின்று நிலைபெற்றுளது; நீள் நுதலியோடும்
குன்று புரை தோளவர் எழுந்து நெறி கொண்டார்;
பொன்திணி விசும்பினிடை நன்னுதலி போனாள். (4698)

(நுதல்-நெற்றி; நெறி-வழி; விசும்பு-விண்ணுலகு; இயக்குஇல்-நடமாட்டம் இல்லாத; எழுந்து-வெளியேறி)

அன்று அனுமன் மேற்குக் கடலில் வீசியெறிந்த அப்பில நகரத்தின் மேல் தட்டு, இன்றும் மனிதர்கள் வாழாத மனிதர் நடமாட்டம் இல்லாத ஒரு தீவாக ''பிலத்தீவு'' என்ற பெயருடன் நின்று நிலைபெற்றிருக்கிறது. பின்னர் நீண்ட நெற்றியையுடைய சுயம்பிரபையோடு, மலைபோன்ற உறுதியான தோள்களை உடைய வானரர்களும் வெளியேறித் தாம் செல்லவேண்டிய வழியை மேற்கொண்டனர்; நல்ல நெற்றியை உடைய சுயம்பிரபையும், பொன்னால் அமைக்கப்பட்ட விண்ணுலகத்திற்குச் செல்லலுற்றாள்.

வானரர்கள் நெறிகொண்டார் என்பது சீதையைத் தேடுவதற்குரிய வழியில் சென்றனர் என்றும் பொருள் தரும். இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. வானரர்கள்தான் சுயம்பிரபையை அப்பிலத்தினின்று தங்களை வெளியேற்ற உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும், சுயம்பிரபை தன் தவ வலிமையால் அவர்கள் விழிகளை மூடிக் கொள்ளுமாறு கூறி, ஒரே வினாடியில் பிலத்தினின்றும் வெளிக் கொணர்ந்தார் என்றும் கூறுகிறது. சுயம்பிரபைக்கும் சேர்த்து அனுமனே உதவினான் எனக் கம்பன் மாற்றம் செய்திருக்கிறான் என்க.

73. வானரர் பொய்கை அடைதலும், சூரியன் மறைதலும்

மாருதி வலித்தகைமை பேசி, மறவோரும்
பாரிடை நடந்து, பகல் எல்லை படரப்போய்,
நீருடைய பொய்கையினின் நீள்கரை அடைந்தார்;
தேருடைய நெடுந்தகையும், மேலை மலை சென்றான். (4699)

(தகைமை-பெருமை; பார்-தரை/பூமி; மறவோர்-வீரர்;)

வானர வீரர்கள், தங்களை அப்பிலத்தினின்றும் வெளியேற்றிக் கொண்டுவந்த அனுமனின் ஆற்றலின் பெருமையைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டே, அன்று ஓர் நாள் முழுதும் தரையிலேயே நடந்து சென்று, நீர் நிறைந்த ஒரு பொய்கையின் பெரிய கரையை அடைந்தார்கள்; அப்பொழுது ஒற்றைச் சக்கரத் தேரை உடைய பெருமைக்குரியவனான சூரியனும், மேற்கு மலையாகிய அத்தமனகிரி சென்றடைந்தான். சூரியன் மறைந்தான்; இரவுப் பொழுதாயிற்று.

தங்களுடன், சுயம்பிரபையும் விண்ணுலகு செல்வதற்குக் காரணமாகவும் அமைந்ததால் அனுமனின் ஆற்றலைப் புகழ்ந்து பேசினர் என்பதாம். சூரியன் உதயகிரியில் உதிப்பதாகவும், அத்தமனகிரியில் மறைவதாகவும் கூறுவது கவிமரபு.

பிலம்புக்கு நீங்கு படலம் நிறைவுற்றது

14. ஆறுசெல் படலம் [54 பாடல்கள்]

ஆறு என்ற சொல்லுக்கு வழி என்று பொருள். பிலத்திலிருந்து வெளிப்பட்ட அங்கதன், அனுமன் முதலிய வானர வீரர்கள், சுக்கிரீவன் சுட்டிக் காட்டியபடி, சீதையைத் தேடித் தென்திசையில், மேலே செல்லும் வழி பற்றிக் கூறும் பகுதி என விரியும். இது 54 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''ஆற்றுப்படலம்'' எனவும் இன்னும் சில சுவடிகளில் ''வழி நடைப் படலம்'' எனவும் ''கோதாவரிப் படலம்'' எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இப் படலத்துள், பொய்கைக் கரையை அடைந்த வானரர்கள் அன்று இரவுப் பொழுதை அங்கு கழித்தல்; துமிரன் என்ற அப்பொய்கையைக் காவல் காப்பவனாகிய அசுரன் வந்து அங்கதன் மார்பில் அறைதல்; அங்கதன் தானும் அவனைத் தாக்குதல்; அசுரன் அலறிக் கீழே வீழ்ந்து இறத்தல்; அலறல் கேட்டு அனுமன் முதலியோர் விழித்துக் கொண்டு, என்ன நடந்தது என அறிய முற்படுதல்; சாம்பவன் தான் இவ்வசுரனை அறிவேன் என்று கூறி அவன் வரலாற்றைச் சொல்லுதல்; மறுநாள் வழி நடந்து, பெண்ணையாறு, தசநவநாடு, விதர்ப்பநாடு, தண்டகவனம், முண்டகத்துறை, பாண்டுமலை, கோதவரியாற்றங்கரை, சுவணகத்துறை, குவிந்த தேசம், அருந்ததி மலை, மரகதமலை, முதலிய இடங்களில் சீதா தேவியைத் தேடியும் காணாமல் திருவேங்கட மலையை அடைதல்; திருவேங்கட மலையின் தனிச்சிறப்பு; தொண்டைநாட்டின் வளம்; சோழநாட்டின் வளம், மலை மண்டலம் கடந்து, பாண்டிநாடு அடைதல்; பாண்டிநாட்டின்தனிச்சிறப்பு; பின்மயேந்திரமலையை அடைதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. வான்மீகி கூறாத திருவேங்கடமலை, தொண்டைநாடு, ஆகிய இரண்டு இடங்களையும் வானரர்கள் தேடிய இடங்களுள் சேர்த்திருக்கிறார். கம்பர் என்பது கருதத்தக்கது.

1. வானரர்கள் பொய்கையில் துயில்தல்.

கண்டார், பொய்கைக்கண் அகல்நல் நீர்க்கரை; காமுற்று
உண்டார் தேனும், ஒண்கனி, காயும்; ஒரு சூழல்
கொண்டார் அன்றே இன்துயில்; கொண்ட குறி உன்னித்
தண்டா வென்றித் தானவன் வந்தான் தகவு இல்லான். (4700)

(கண்அகல்-அகன்ற; ஒண்-நல்லவளமையான; காமுற்று-விரும்பி; சூழல்-இடம்; குறி-அடையாளம்; தண்டா-தடைபடாத குறையாத; தகவு-தகுதி; தானவன்-அசுரன்/துமிரன்)

இடம் அகன்ற பொய்கைக் கரையில், மிக்க நல்ல நீர்க்கரையைக் கண்டனர் வானரர்கள், அதை மிக்க விரும்பி அங்கு கிடைத்த தேன், நல்லபழங்கள், காய்கள் முதலியவற்றைச் சாப்பிட்டார்கள்; நீர் அருந்தினார்கள்; ஒரு நல்ல இனிய சூழல் உள்ள இடத்தில் உறக்கம் கொண்டார்கள்; இதனை உணர்ந்த, நற்பண்பில்லாதவனும், குறையாத, தடைபடாத வெற்றியுடையவனுமானதுமிரன் என்னும் ஓர் அசுரன் அங்கு வந்து சேர்ந்தான்.

2. துமிரன் தோற்றம்

மலையே போல்வான்; மாகடல் ஒப்பான்; மறம் முற்றக்
கொலையே செய்வான்; கூற்றை நிகர்ப்பான்; கொடுமைக்கு ஓர்
நிலையே போல்வான்; நீர்மை இலாதான்; நிமிர் திங்கள்
கலையே போலும் கால எயிற்றான்; கனல் கண்ணான். (4701)

(மறம்-கொடுமை/தீவினை; கூற்று-இயமன்; நிலை-நிலைக்களன்/ இருப்பிடம்; நீர்மை-நல்லியல்புகள்; நிமிர்-வளர்த்த; கலை-கோடு; காலம்-நஞ்சு/காளம்; எயிறு-கோரப்பற்கள்; கனல்-நெருப்பு);

அந்தத் துமிரன் என்னும் அசுரன், மலை போன்ற சலியாத உறுதியும், பெரியகடல் போன்ற பரந்த உருவமும் உடையவன்; கொடுமை முதிர்ச்சியுற்றுக் கொலைத் தொழிலும் புரிபவன்; எனவே இயமனை ஒத்தவன்; கொடிய காரியங்களுக்கெல்லாம் ஓர் நிலைக் களன் போன்றவன்; நற்குணங்களே இல்லாதவன்; நன்கு வளர்ந்த சந்திரனின் பிறைக் கோடு போன்ற வெண்மையான, வளைந்த பாதியான, கோரப்பற்களை உடையவன்; நெருப்புப் போல் காந்துகின்ற கண்களை உடையவன்.

மலை, கடல், காற்று, நெருப்பு இவையெல்லாம் துமிரனுக்கு உருவத்தாலும், இயல்புகளாலும் உவமைகள்;

3. கருவி மாமழை, கைகள் தாவி, மீது
உருவி, மேனி சென்று உலவி, ஒற்றலால்
பொருஇல் மாரிமேல் ஒழுகு பொற்பினால்,
அருவி பாய்தரும் குன்றமே அனான். (4702)

(மழை-மேகம்; தாவி-கடந்து; உலவி-சஞ்சரித்து; ஒற்றுதல்-படிதல்; பொருஇல்-ஒப்பற்ற; பொற்பு-தன்மை; குன்றம்-மலை; கருவி- தொகுதி/ கூட்டம்/முதற்காரணம்)

உயர்ந்த இவ்வுலகம் இயங்குவதற்கு மூல முதற்காரணமான, மேகத்தின் கூட்டம் இவனது கைகளில் தாவி உடல் மீது படிந்து செல்லும்;

மேனிமீது ஊடுருவிச் சென்று உலாவும்; அவன் தோள்கள் மீது படியும்; ஒப்பற்ற மழை நீர் இவன் மேல் விழுந்து வழியும்; இந்தத் தன்மைகளால் இவன் அருவி ஊற்றெடுத்துப் பாயும் மலையைப் போன்றவனாவான்.

மலையில் மேகங்கள் தாவுதலும், ஊடுருவதலும், உலாவுதலும், படிதலும், மழைநீர் ஒழுகுதலும், அருவி நீர் பாய்தலும் இயல்பல்லவா? அது போல் இவன் மேனியும் அவ்வளவு உயரமானது; அங்கும் இந்நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெறுகின்றன. எனவே இவனது உருவம் மலையைப் போன்றது என்பதாம்.

4. வானவர்க்கும் மற்று அவர் வலிக்கு நேர்
தானவர்க்குமே அரிய தன்மையான்;
ஆனவர்க்கல்லால், அவனோடு ஆட, வேறு
ஏனவர்க்கும் ஒன்று எண்ண ஒண்ணுமோ? (4703)

(வானவர்-தேவர்கள்; வலி-ஆற்றல்; நேர்-நிகர்; தானவர்-அசுரர்கள்; ஆட-போர்புரிய; ஏனவர்-எத்தன்மையுடையவர்/பிறர்; ஒன்று-சிறிதும்; ஒண்ணுமோ-முடியுமோ;)

தேவர்களுக்கும், அவர்களோடு ஒத்த வலிமையுடைய அசுரர் களுக்குமே வெல்லுவதற்கரிய தன்மையை உடையவன்; அப்படிப் பட்டவர்களாலே அல்லாது, அவனோடு போர்புரிந்து வெற்றிபெற வேறு எத்தன்மையரான பிறராலும் முடியும் என்று சிறிதும் சிந்திக்க முடியுமோ? முடியாது.

தேவர்களும், அசுரர்களுமே அவனைப் போரிட்டு வெல்ல முடியாது என்றால், மற்ற வீரரைப் பற்றி எண்ணிப்பார்க்கவும் முடியுமோ? என்பதனால் அவனுடைய போராற்றல் சிறப்பிக்கப்பட்டது என்பதாம்.

5. அசுரன் வானரர்களை வந்து அடைதல்

பிறங்கு பங்கியான், பெயரும் பெட்பினில்,
கறங்கு போன்றுளான், பிசையும் கையினான்,
அறம்கொள் சிந்தையார் நெறிசெல் ஆய்வினால்,
உறங்குவாரை, வந்து ஒல்லை எய்தினான். (4704)

(பிறங்குதல்-விளங்குதல்; பங்கி-செம்பட்டை மயிர்; பெயர்தல்-இடம் மாறுதல்; பெட்பு-தன்மை; கறங்கு-காற்றாடி; ஆய்வு-இளைப்பு; ஒல்லை-விரைந்து);

ஒளி வீசுகின்ற செம்பட்டைத் தலை மயிரை உடையவனும், தான் நகர்ந்து நடந்து செல்லும் தன்மையில் காற்றாடிபோல் சுழல்பவனும், கோபத்தினால் எப்போதும் கைகளைப் பிசைந்து கொண்டிருப்பவனுமான அவ்வசுரன், தரும சிந்தனையையே உடையவர்களும், வழி நடந்து வந்த களைப்பால் அயர்ந்து உறங்குகின்றவர்களுமாகிய வானரவீரர்கள் படுத்து இருக்கும் இடத்திற்கு விரைவாக வந்து சேர்ந்தான்.

''பிசையும் கை'' என்பது கொலை புரியும் தன்மை உடையவர்களுக்கு இயல்பாக ஏற்படும் ஒரு மெய்ப்பாடு என்க. அறநெறி ஒன்றையே தம் சிந்தையில் எப்போதும் கொண்டு விளங்குபவர்கள் என்பதால் வானர வீரர்கள் ''அறம்கொள் சிந்தையார்'' எனச் சிறப்பிக்கப் பெற்றனர்.

6. அசுரன் அங்கதன் மார்பில் குத்துதல்

''பொய்கை என்னது என்று உணர்ந்தும், புல்லியோர்
எய்தினார்கள் யார்? இதுஎனோ?'' எனா,
ஐயன் அங்கதன் அலங்கல் மார்பினில்
கையின் மோதினான்; காலனே அனான். (4705)

(காலன்-இயமன்; புல்லியோர்-அற்பர்கள்; அலங்கல்- மாலை/ விளக்கம் மிக்க; மோதுதல்-தாக்குதல்/அறைதல்; ஐயன்- தலைவன்);

இயமனைப் போன்று கொல்லும் தன்மையுடையவனான அவ்வசுரன் துமிரன், ''இந்தப் பொய்கை எனக்கு உரியது என்று எல்லோரும் அறிந்திருந்தும், இங்கு வந்து தங்கி இருக்கும் அற்பமான இவர்கள் யார்? என்ன இது? வியப்பாய் இருக்கிறதே?'' என்று கூறிக்கொண்டே, அந்தக் கூட்டத்தின் தலைவன் போல் விளங்கிய மலர்மாலை அணிந்தவனும், விளக்கம் மிக்க மார்பினையுடையவனுமான அங்கதன் மார்பின்மேல் தன் கைகளினால் அறைந்து தாக்கினான்.

அசைந்தாடும் இயல்பு பற்றி அலங்கல் என்பது மாலைக்குக் காரணப் பெயர்; உயிர்களின் ஆயுட்காலத்தைக் கணக்கிட்டுக் கவர்பவன் என்பதால் காலன் என்பது இயமனுக்குக் காரணப்பெயர்.

7. அங்கதன் திருப்பி அடிக்க, துமிரன் இறத்தல்

''மற்று அம்மைந்தனும் உறக்கம் மாறினான்;
இற்று இவன்கொலாம் இலங்கைவேந்து'' எனா
எற்றினானை நேர் எற்றினான்; அவன்
முற்றினான் இகற்கு ஆதி மூர்த்தியான். (4706)

(மாறுதல்-நீங்குதல்; இற்று-இத்தன்மை; எற்றுதல்-அறைதல் / தாக்குதல்; அந்தம்-முடிவு; முற்றுதல்-இறந்து போதல்; மைந்து-வலிமை; இகல்-போர்; ஆதிமூர்த்தி-முதன்மையானவன் /மூலவடிவம்;)

அதனால், அந்த வலிமை மிக்கவனான அங்கதனும் தூக்கம் நீங்கப் பெற்று எழுந்து, ''இவன்தான் இலங்கை வேந்தனாகிய இராவணன் போலும்'' என்று மனத்துள் எண்ணி, தன்னைத் தாக்கிய அவ்வசுரனைத் தானும் நேராக எதிர்த்துத் தாக்கினான்; அதனால் போர்த்தொழிலுக்கே முதன்மையானவனும், மூலவடிவானவனுமான அந்தத் துமிரன் என்னும் அசுரன் இறந்து வீழ்ந்தான்.

8. துமிரன் அலறலும், வானரர்கள் எழுதலும்

இடியுண்டு ஆங்கு ஓர் ஒங்கல் இற்றது ஒத்து,
அடியுண்டான் தளர்ந்து அலறி வீழ்தலும்,
தொடியின் தோள் விசைத்து எழுந்து சுற்றினார்
பிடியுண்டார் எனத் துயிலும் பெற்றியார். (4707)

(ஓங்கல்-மலை; உண்டு-தாக்கப்பட்டு; இற்றல்-அழிதல் /தளர்ந்து விழுதல்; பெற்றி-தன்மை; பிடிஉண்டார்-பேய் பிடிக்கப்பட்டவர்; விசைத்து-ஆட்டிக் கொண்டு; சுற்றுதல்-சூழ்ந்துகொள்ளுதல்; தொடி-தோள்வளை; பிடி-பேய்);

அங்கே ஒரு மலை இடியினால் தாக்கப்பட்டுத் தகர்ந்து விழுந்தது போல், அங்கதனால் அறையப்பட்ட அவ்வசுரன் துமிரன் சோர்வுற்று, வாய்விட்டு அலறிக்கொண்டு, தரையில் வீழ்ந்ததும், பேயின் பிடியில் அகப்பட்டுக் கொண்டவர்கள் போல், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மற்ற வானரர்கள் எல்லோரும், தங்கள் தோள்வளைகளை வீசிக்கொண்டு எழுந்து வந்து, அங்கதனையும் அவ்வசுரனையும் சூழ்ந்து கொண்டனர்.

முன்பு துமிரனை மலையே போல்வான் என்று கூறியதற்கு ஏற்ப, இப்பொழுது அவன் தாக்குண்டு கீழே விழுந்ததுபோதும், ''ஓர் ஓங்கல் இற்றது'' என்று அதே மலையை உவமை கூறிய நயம் நோக்குக. அங்கதன் தாக்குதலுக்கு இடி உவமை; கீழே விழுந்த அசுரனுக்கு மலை உவமை; இவ்விருவரும் அறைந்துகொண்ட ஓசையினாலும், அசுரன் வாய்விட்டு அலறிய ஓசையினாலும், ஆழ்ந்த தூக்கத்திலிருந்த வானரர்கள் விழித்துக் கொண்டனர் என்பதாம்.

9. அனுமன் ''இவன் யார்?'' எனக் கேட்டல்.

''யார்கொலாம் இவன்? இழைத்தது என்?'' எனா,
தாரை சேயினைத் தனி வினாயினான்,
மாருதேயன்; மற்று அவனும் ''வாய்மைசால்
ஆரியா! தெரிந்து அறிகிலேன்'' என்றான். (4708)

(மாருதேயன்-காற்றின் மகனான அனுமன்; சேய்-மகன்; இழைத்தது-செய்தது; ஆரியன்-பெரியோன்; தனி-குறிப்பிட்டு)

காற்றின் மைந்தனான அனுமன், தாரையின் மைந்தனான அங்கதனை நோக்கி, இறந்து கிடந்த அசுரன் துமிரனைச் சுட்டிக் காட்டி, ''இவன் யார்? இவன் என்ன செய்தான்?'' என்று கேட்டான்; அங்கதன் ''சத்தியம் நிறைந்த தூயவனே! இவனைப் பற்றி நான் சிறிதும் அறிந்தேனில்லை'' என்றான்.

10. சாம்பவன் துமிரன் பற்றிக் கூறுதல்

''யான் இவன்தனைத் தெரிய எண்ணினேன்;
தூ நிவந்த வேல் துமிரன் என்னும்

பேரான்; இவ் ஆழ்புனல் பொய்கை ஆளும்
ஓர் தானவன்.'' எனச் சாம்பவன் சாற்றினான். (4709)

(தூ-ஊன்/மாமிசம்; தானவன்-அசுரன்; நிவந்த-விளங்குகின்ற; தெரிய எண்ணுதல்-நன்கு சிந்தித்துப் பார்த்தல்; சாற்றுதல்-கூறுதல்; ஆளுதல்-காவல் செய்தல்);

சாம்பவன் என்னும் கரடிகளுக்குத் தலைவன், ''நான் இவன் யாரென்று நன்கு யோசித்து நினைவுபடுத்திப் பார்த்தேன். இவன் பகைவர்களில் மாமிசம் விளங்குகின்ற வேற்படையையுடைய துமிரன் என்னும் பெயருடைய அசுரன் ஆவான். இந்த ஆழ்ந்த நீரையுடைய பொய்கையைக் காவல் செய்து வருபவன்'' என்று கூறினான்.

திருமாலின் திருவிக்கிரம அவதார காலத்தில் அச்செய்தியைப் பறையறிந்து அறிவிக்க பூமியை எல்லாம் பலமுறை சுற்றியவன்; பல ஊழிக்காலம் கண்ட பெரியோன் சாம்பவன். பெருவாழ்நாள் உடையவன். உலகில் அவன் அறியாதன எதுவும் இல்லை;

11. சீதையைத் தேடிப்புறப்படுதல்.

''வேறும் எய்துவார் உளர்கொலாம்?'' எனா,
தேறி, இன்துயில் செலவு தீர்ந்துளார்,
வீறு செஞ்சுடர்க்கடவுள் வேலைவாய்
நாற, நாள்மலர்ப் பெண்ணை நாடுவார். (4710)

(தேறி-நீங்கி; செலவு-வழிநடத்தல்; தீர்ந்த-தவிர்த்திருந்த; வீறு-பெருமை/தனிப்பொலிவு; வேலை-கடல்; நாற-தோன்ற; நாள்-புதிய அன்றலர்ந்த)

இவன் போல வேறு சில அசுரர்களும் வரக்கூடுமோ? என்று தங்களுக்குள் எண்ணி, இனிய தூக்கத்திலிருந்து நீங்கி, எழுந்து, சற்றுத் தெளிவடைந்து, இதுவரை சீதையைத் தேடிச் செல்லும் வழிப் பயணத்தைத் தவிர்த்திருந்தவர்களான வானர வீரர்கள் தனிப்பெருமை வாய்ந்து, பொலிவு பெற்று விளங்கும் சிவந்த ஒளிக் கிரணங்களையுடைய சூரியன், கிழக்குக் கடலின் மீது தோன்றவும், அன்றலர்ந்த மலர் போன்ற, புதிய தாமரை மலர் போன்ற திருமகளின் அம்சமாகிய சீதாதேவியைத் தேடிக் கொண்டு, பெண்ணையாற்றின் வழியை நோக்கிச் செல்லலானார்கள்.

துமிரன் போன்று வேறு சில அவுணர்களும் வந்து தங்களைத் தாக்கக் கூடும் என்று சந்தேகம் கொண்டு, சற்று நேரம் அங்கேயே இருந்து பார்த்து விட்டு, ஒருவரும் வாராததாலும், சூரியன் உதிக்கத்தொடங்கி விட்டதாலும், விட்டிருந்த பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டார்கள் என்பதாம்.

12. பெண்ணையாற்றை அடைதல்

புள்நை வெம்முலைப் புளினம் ஏய் தடத்து
உண்ண ஆம்பல் இன்னமுதம் ஊறு வாய்
வண்ண வெண்நகைத் தரள வாள்முகப்
பெண்ணை நண்ணினார். பெண்ணை நாடுவார். (4711)

(புள்-சக்கரவாளப்பறைவ; நைதல்-வருந்துதல்; வெம்-விரும்பத்தக்க; புளினம்-மணற்குன்று; தடம்-நீர்நிலைகள்; ஆம்பல்-குமுதமலர்; வண்ணம்-அழகு; நகை-பற்கள்; தரளம்-முத்து; வாள்-ஒளிபொருந்திய; நண்ணினார்-அடைந்தனர்; ஏய்-ஒத்த);

சீதாதேவி என்னும் பெண்ணைத் தேடிக்கொண்டு சென்றவர்களான வானரவீரர்கள், சக்கரவாளப் பறவையே, தான், பெண்டிரின் விரும்பத்தக்க கொங்கைகளுக்கு ஒப்பாக முடியவில்லையே என்று தன்னைத் தாழ்த்திக்கொண்டு வருந்துவது போல் அமைந்த மணற்குன்றுகளும், நீர்நிலைகளில் உண்ணுதற்குரிய இனிய தேவாமிர்தம் ஊறுவது போன்ற வாயினை உடைய குமுத மலர்களும், அழகிய வெண்மையான பற்கள் போன்ற முத்துக்களும், தாமரை மலர் போன்ற ஒளி வாய்ந்த முகமும் உடைய பெண்ணாகிய பெண்ணை நதியை அடைந்தனர்.

பெண்ணை நதியிலிருந்த மணற்குன்றுகளுக்கு பெண்களின் கொங்கைகளையும், அங்கே இருந்த செவ்வாம்பல் மலர்களுக்கு அமிழ்தூறும் பெண்களின் பற்களையும், அங்கே மலர்ந்திருந்த தாமரை மலர்களுக்குப் பெண்களின் முகத்தையும் உருவமாகக் கொண்டு, மொத்தத்தில் பெண்ணை நதியை ஒரு பெண்ணாக உருவகித்தார் என்க. ''பெண்ணை நண்ணினார் பெண்ணை நாடினார்'' என்பது ஒருநயமான சொல்லாட்சி. பெண்களின் கொங்கைகளுக்குச் சக்கரவாளப் பறவையை உவமை கூறுதல் கவி மரபு. காப்பியத்தில் முன்பும் பல இடங்களில் நாம் கண்டதேயாகும்.

13. எல்லா இடத்திலும் சீதையைத் தேடுதல்.

துறையும், தோகை நின்று ஆடு சூழலும்,
குறையும், சோலையும், குளிர்ந்த சாரல் நீர்ச்
சிறையும், தெள்ளு பூந்தடமும், தெண் பளிக்கு
அறையும், தேடினார், அறிவின் நீடினார். (4712)

(நீடுதல்-மிகுதல்; சூழல்-இடம்; சிறை-தேக்கம்; தடம்-வாவி தோகை-மயில்; குறை-ஆற்றிடைக்குறை/திட்டு)

அறிவில் மேம்பட்டு விளங்கும் அவ்வானர வீரர்கள் ஆற்றில் இறங்கிக் குளிக்கும் நீர்ப்படித்துறைகளிலும், மயில்கள் தோகை விரித்தாடி நிற்கின்ற இடங்களிலும், ஆற்றிடைத் திட்டுக்களிலும், அதனையடுத்த சோலை களிலும், குளிர்ச்சி பொருந்திய காற்று வீசும் பங்கங்களிலிருந்த

நீர்த்தேக்கங்களிலும், தெளிந்த பூஞ்சோலைகளிலும், தெளிவான பளிங்கு அறைகளிலும், சீதாதேவியைத் தேடினார்கள்.

14. பெண்ணையாற்றங்கரையில் எல்லோரும் தங்குதல்

அணி கொழித்து வந்து, எவரும் ஆடினார்
பிணி கொழித்து, வெம்பிறவி வேரின் வன்
துணி கொழித்து, அரும் சுழிகள் தோறும், நன்
மணி கொழிப்பதன் கரையின் வைகினார். (4713)

(அணி-அழகு; கொழித்தல்-மிகுதல்/ஒதுக்குதல்/வீசுதல் போக்குதல்; பிணி-நோய்; துணி-துன்பங்கள்; மணி-இரத்தினங்கள்; வைகுதல்-தங்குதல்; வேர்-மூலகாரணம்);

அழகிய அலைகள் ஓயாது வீசிக்கொண்டிருப்பதும், தன்னிடத்தே எத்தகைய பாவியர் வந்து நீராடி முழுகினாலும் அவர்களுடைய நோய்களை நீக்கும் இயல்புடையதும், கொடியபிறவி என்னும் நோய்க்கு மூலகாரணமான கொடிய நல்வினை தீவினை ஆகியவைகளைத் துண்டங்களாக்கி ஒதுக்குவதும், தன்னிடத்தே உள்ள அருமையான சுழிகளில் எல்லாம், நல்ல நவஇரத்தினங்களைத் திரட்டி வீசிக்கொண்டு வருவதுமான, பெண்ணையாற்றின் ஒருகரையில், வானர வீரர்கள் தங்கினார்கள்.

''கொழித்து'' என்ற ஒரே சொல் பலபொருள்களில் கையாளப் பட்டிருக்கும் நயம் நோக்குக. இந்தப் பெண்ணை நதியை வட பெண்ணை என்பர்; ''உத்தர பிநாகினி'' என்பது வடசொல், இதில் மூழ்குபவர் களுடைய பிறவிப் பிணியை நீக்கி, முக்தி என்னும் நற்கதி அடையச் செய்யும் புனிதமான புண்ணியநதி என்பதாம்.

15. தசநவ நாடு அடைதல்

ஆடு பெண்ணை நீர் ஆறும் ஏறினார்;
காடு நண்ணினார்; மலை கடத்துளார்;
வீடு நண்ணினார் என, வீசும் நீர்
நாடு நண்ணினார்; நவையின் நண்ணலார். (4714)

(நவை-குற்றம்தீநெறி; நண்ணுதல்-செல்லுதல்/அடைதல்; ஏறுதல்-தாண்டுதல்; வீடு-விட்டுலகு/முக்தி/மோட்சம்; ஆடுதல்-நீராடுதல் / முழுகுதல்; வீசுதல்-அலைபாய்தல்);

குற்றம் என்று சொல்லப்படுகின்ற தீயவழியில் செல்லாதவர்களான வானர வீரர்கள், எல்லோரும் வந்து நீராடுகின்ற பெண்ணையாற்றின் கரையைக் கடந்து போயினர்; பல காடுகளை அடைந்தனர்; மலைகளைக் கடந்தனர்; மோட்சஉலகையே அடைந்தாற்போன்று, அலைகள்வீசுகின்ற நீர்வளம் மிக்க தசநவநாடு என்னும் நாட்டை அடைந்தனர்.

பல ஆறுகள், காடுகள், மலைகள் ஆகியவற்றைக் கடந்து, தசநவ நாட்டை அடைந்த வானரர்களுக்கு, பலவகைப் பட்ட பிறப்புகளையும் அனுபவித்து வீட்டுலகு எய்தியவர் உவமையாகக் கூறப்பட்டனர். தசநவநாடு மோட்ச உலகம் போல எல்லாவற்றிலும் சிறந்து விளங்குவது என்பதாம்

16. விதர்ப்ப நாடு அடைதல்

தசநவப்பெயர்ச் சரள சண்பகத்து
அசன அப்புலத்து அகணி நாடு ஓரிஇ,
உசநவப்பெயர் கவி உதித்த பேர்
இசை விதர்ப்பநாடு எளிதின் எய்தினார். (4715)

(சரளம்-அழகு; ஓரிஇ-நீங்கி/கடந்து; இசை-புகழ்; உதித்த-தோன்றிய; அசனம்-உணவுப்பொருள்;புலம்-நிலம்; அகணி-மருதநிலம்/உள்ளிடம்; கவி-சுக்கிரன்; உசநவன்-பார்க்கவன்);

அவ்வானர வீரர்கள் இனிமையான அழகிய சண்பக மரங்களையும், உணவளிக்கக் கூடிய, வளம் நிறைந்த, நிலங்களை உடைய மருத நிலத்தைச்சார்ந்த தசநவம் என்னும் பெயர் கொண்ட அந்த நாட்டை விட்டு நீங்கி, உசநஸ்-உசநவம் என்னும் பெயர் கொண்ட, பார்க்கவன், சுக்கிரன் தோன்றிய பெருமை வாய்ந்த, புகழ் படைத்த விதர்ப்ப நாட்டை எளிதாகச் சென்று சேர்ந்தார்கள்.

தசநவம் என்பது ''தசார்ணவம்'' என்ற வட சொல்லின் தமிழாக்கம்; ''உசநவன்'' என்பது உசநஸ் என்ற வடசொல்லின் தமிழாக்கம். அசுரகுருவான சுக்கிராச்சாரியாரும், நவக்கிரகங்களில் ஒன்றான சுக்கிரனும் பிறந்த நாடு விதர்ப்ப நாடு என்பது அறிக.

17. முனிவரின் வடிவுகொண்டு தேடுதல்.

வைதருப்ப மண்டலனில் வந்து புக்கு,
எய்து அருப்பம் அத்தனையும் எய்தினார்;
பெய்தருப்பை, நூல் பிறழும் மேனியார்,
செய் தவத்துளார் வடிவின் தேடினார். (4716)

(வைதருப்பம்-விதர்ப்பம்; மண்டலம்-நாடு; அருப்பம்- ஊர்கள்/ அரண்கள்; பெய்-அணிந்துள்ள; பிறழ்தல்-விளங்குதல்; நூல்-முப்புரிநூல் பூணூல்)

அவ்வாறு அவ்வானர வீரர்கள் விதர்ப்ப நாட்டில் வந்து நுழைந்து, அங்குள்ள எல்லா ஊர்களையும் எளிதில் அடைந்து தேடினர்; தருப்பைப் புல்லைக் கையில் கொண்டுள்ளவரும், முப்புரிநூல் உடலில் விளங்குகின்றவரும், அரிய தவத்தைச் செய்கின்றவர்களுமாகிய, முனிவர்களின் வேடத்தில், அங்கு சீதையைத் தேடினார்கள்.

மக்கள் நிறைந்திருக்கின்ற ஊரில் மக்களுள் ஒருவராகவே அமைந்து தேடுதல் எளிதாகும், ஐயத்திற்கு இடமாகாது என்பதால் முனிவர் வேடம் கொண்டனர் என்க. இதனையே அந்தண மாணவர் வடிவம் கொண்டு தேடினர் என்று கூறுவாரும் உளர். ''செய்தவத்துளார்'' என்று கவிஞன் கூறுவதால் மாணவர் உருவம் பொருந்தாதது உணர்க. அந்தணர், முனிவர் ஆகிய வேடங்கள் கொண்டு தேடினர் என்பது பொருத்தமாதல் காண்க. தருப்பை என்பது தருப்பைப்புல்லால் திரிக்கப்பட்ட ஒரு கயிறு. இது முஞ்சி எனவும் வழங்கப்படும். அங்குள்ள ஒரு ஊரையும் விடாது தேடினர் என்பதை வலியுறுத்த, ''எய்த அருப்பம் அத்தனையும் எய்தினார்'' என்றார் என்க.

18. தண்டகவனம் அடைதல்

அன்ன தன்மையால் அறிஞர் நாடி, அச்
செந்நெல் வேலி சூழ் திருநல்நாடு ஒரிஇ
தன்னை எண்ணும் அத்தகை புகுந்துளார்
துன்னு தண்டகம் கடிது துன்னினார். (4717)

(அறிஞர்-அறிவாளிகள்; நாடி-தேடி; ஒரிஇ-நீங்கி; கடிது-விரைந்து; துன்னுதல்-நெருங்குதல்/அடைதல்; எண்ணுதல்-இடைவிடாது நினைத்தல்; புகுந்துளார்-தங்கி வசித்திருத்தல்; தண்டகம்-தண்டகவனம்; வேலி-வயல்; தன்னை-ஆத்ம சொரூபத்தை)

அறிவாளிகளான வானரவீரர்கள், அவ்வாறு முனிவர் வேடம் கொண்டு சீதையைத் தேடிப் பார்த்தும் காணாமையால், அந்தச் சிறந்த நெற்பயிர்களால் சூழப்பட்ட வயல்களை உடைய, இலக்குமி விளங்குகின்ற அழகிய நல்ல நாடாகிய விதர்ப்ப நாட்டை விட்டு நீங்கி, தான் என்னும் அகந்தையை நீக்கி, ஆன்ம சொரூபத்தையே சதாசர்வகாலமும் இடைவிடாது தொடர்ந்து தியானித்துக் கொண்டிருக்கும் தகுதியுள்ள முனிவர்கள் தங்கி வசித்து வரும் தண்டகாரண்யம் என்னும் தண்டகவனத்தை விரைவாக வந்து அடைந்தார்கள்.

விதர்ப்ப நாட்டின் நீர், நில, செல்வ வளங்களை ''செந்நெல்வேலி சூழ்திரு நல் நாடு'' என்று பல அடைமொழிகள் கொடுத்துக் கூறிய நயம் நோக்குக. ''தன்னை எண்ணுவது'' என்பது ''அகம் பிரம்ம அஸ்மி'' என்னும் மகாவாக்கியத்தைக் குறிக்கும். இது சீவாத்மா ஆகிய தன்னிலேயே பரமாத்வாகிய பிரம்மன் வீற்றிருக்கிறான் என்று உணர்கின்ற ஆத்மஞான நிலை என்பதாம். தண்டகம் என்பது, இட்சுவாகு வம்சத்துள் ஒருவனான தண்டகன் என்னும் அரசன், தீ நெறியுட் புகுந்ததால் நாடு கடத்தப்பட்டு, இவ்விடத்தில் வந்து இருந்தபொழுது, இங்கும் சில தீச்செயல்கள் புரிந்ததால் சுக்கிராச்சாரியாரால் சாபம் கொடுக்கப்பட்டு, பாலை நிலை எய்திய இந்நாடு. பின்னர் பலமுனிவர்கள் இங்குவந்து தவம் இயற்றியதால் மீண்டும் சோலைவனம் ஆகியது என்பது ஒரு புராணக்

குறிப்பு; இங்குதான் இராம இலக்குவர், சீதையுடன் வனவாசத்தில் சுமார் பத்தாண்டு காலம் தங்கி இருந்தனர் என்பதையும் நினைவிற் கொள்க.

19. முண்டகத்துறையை அடைதல்.

உண்டு அகத்துளார் உறையும் ஐம்பொறிக்
கண்டகர்க்கு அரும்காலன் ஆயினார்,
தண்டகத்தையும் தடவி ஏகினார்;
முண்டகத்துறை கடிது முற்றினார். (4718)

(உண்டு-நுகர்ந்து; உறைதல்-வசித்தல்; பொறி-இந்திரியங்கள்; கண்டகர்-தீயவர்/கொடியவர்; காலன்-இயமன்; தடவி-தேடிதுருவி; கடிது-விரைந்து; முற்றுதல்-அடைதல்; கண்டகம்-முள்; முண்டகம்-தாமரை மலர்);

நம் உடலுக்குள்ளேயே இருந்துகொண்டு, ஐந்து பொறிகளால் உண்டாகிற புலன்களை நுகர்ந்து கொண்டு திரியும், முள்போன்ற கொடியவர்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுக்கும், அருமையான இயமன் என்று கூறத்தக்கவர்களான முனிவர்கள் வசிக்கின்ற தண்டகவனத்திலும் நன்கு துருவித்தேடிப் பார்த்து, அங்கும் சீதையைக் காணாமையால், மேற்சென்று, தாமரை மலர்கள் நிறையப் பெற்ற, தடாகங்கள் நிறைந்த செழித்த முண்டகத்துறை என்னும் இடத்தை விரைந்து சென்று சேர்ந்தனர் அவ்வானர வீரர்கள்.

நம் ஐம்பொறிகளையும் தீநெறியிலே செலுத்தும் இயல்புடையன ஐம்புலன்கள். இவை உட்பகைகள். எனவே அவற்றை முள்போன்ற கொடியவர்-கண்டகர் என்றார். அவ்வைம் பொறிகளையும் அடக்கி, இன்பநுகர்ச்சிகளை ஒதுக்கி, இறைவன் பால் எந்நேரமும் தியானிக்கும் நிலை கொண்ட முனிவர்களை இயமன் போன்றவர் - ஜிதேந்திரியர் என்றார் என்க. முண்டகத்துறை என்ற இடம் ஒன்று இருப்பதாகவே வான்மீகம் கூறவில்லை. தண்டகவனத்திற்குப் பின் நேராகப் பாண்டு மலையை அடைந்ததாகவே வான்மீகம் கூறுகிறது. முண்டகத்துறை என்பது கம்பனின் கற்பனைப் படைப்பு என்க.

20. முண்டகத்துறையின் சிறப்பு

அள்ளல் நீர்எலாம், அமரர் மாதரார்
கொள்ளை மாமுலைக் கலவை, கோதையில்
கள்ளும் நாறலின் கமல வேலி வாழ்
புள்ளும் மீன் உணா; புலவு தீர்தலால். (4719)

(அள்ளல்-சேறு; கொள்ளை-மிகுதியாக; கோதை-மாலை; கள்-தேன்; நாறல்-நறுமணம்; புலவு-புலால்நாற்றம்; தீர்தல்-நீங்குதல்; கமலவேலி-முண்டகத்துறை; புள்-பறவைகள்);

அந்தத் தாமரைத் தடாகத்தில் நிறைந்துள்ள சேற்றுடன் கூடிய தண்ணீர் எல்லாம், தேவமகளிர் வந்து குளிப்பதால் அவர்கள் தம் கொங்கைகளில் பூசியிருந்த மிகுதியான சந்தனக் கலவை கரைவதாலும், தங்கள் கூந்தலில் சூட்டியிருந்த கற்பகம் போன்ற மலர்களில் இருந்து ஒழுகிய தேன் கலந்ததாலும், நறுமணமும் இனிய சுவையும் வாய்க்கப் பெற்றன. எனவே தாமரைத் தடாகத்தில் வாழ்கின்ற மீன்களும், தங்களுக்கு இயல்பான புலால் நாற்றம் நீங்கப் பெற்றுச் சந்தன மணமும், தேனின் சுவையும் பெற்றவையாயின. இயல்பிலேயே புலால் நாற்றமுடைய மீன்களையே பற்றி உண்ணும் நீர்வாழ் பறவைகளான நாரை போன்றவை, இப்போது மீன்கள் புலால் நாற்றம் கொண்டவையாக இல்லாதிருப்பதால், அவற்றைப் பற்றி உண்ணமாட்டவாயின.

''குரும்பை மென்முலையார் ஆட, கூந்தலின் நறவம் தோய்ந்த இரும்புனல்ஆறுபாய, வெறிதிரைசுருட்டும்தெண்ணீர்க்கருங்கடல்புலவு நீங்கி, நறுமணம் கமழும்'' என்பது நைடதம். புலால் நாற்றமுடைய மீன்களையே உண்ணும் நீர்வாழ் பறவைகள், நறுமணம் உள்ளவற்றை உண்ணமாட்டாது என்பது புலனாகிறது.

21. குஞ்சரம் குடைந்து ஒழுகு கொட்பதால்,
''விஞ்சை மன்னர்பால், விரக மங்கைமார்
நஞ்சு, வீணையின் நடத்து பாடலால்,
அஞ்சுவார் கண்நீர் அருவி ஆறு அரோ?'' (4720)

(விஞ்சையர்-வித்தியாதரர்; விரகம்-பிரிவாற்றாமை; நஞ்சு- நைந்து/ மெலிந்து; நடத்தல்-எழுதல்உண்டாகுதல்; குஞ்சரம்- யானைகள்; குடைதல்-முழுகுதல்; ஒழுகுதல்-நடத்தல்; கொட்பு-தன்மை)

காமநூல்களை நன்கு கற்றுத் தேர்ந்த வித்தியாதர வேந்தர்களிடத்துத் தாம் கொண்ட காம வெப்பத்தால், வித்தியாதர மகளிர், மிகவும் மனம் நொந்து, மற்றவர்கள் வீணையைக் கொண்டு இசைக்கும் இசைப் பாடலைக் கேட்டு அச்சமடைந்து கண்ணீர் பெருக்குவார்கள். அது அருவி போலும், ஆறுபோலும் பெருகிவழிந்து ஓடும். அந்தக் கண்ணீர் ஆறுகள், யானைகள் கூட நன்கு அமிழ்ந்து முழுகி நடக்கும் ஆழம் உடையன வாகும்.

வித்தியாதரமன்னர்களின்பிரிவாற்றாமையால்காமவெப்பம்கொண்டு உடலும் உள்ளமும் மெலிந்து நொந்துபோயிருக்கும் வித்தியாதர மகளிருக்கு, அங்குள்ள மகளிர் வீணைகொண்டு பாடும் இசைப்பாடல் மேலும் அச்சத்தை விளைவித்து அவர்கள் கண்களிலிருந்து அருவிபோல் கண்ணீரைப் பெருகச் செய்யும்; அந்த ஆற்றில் பெரிய யானைகள் கூட நன்கு அமிழ்ந்து முழுகித், திளைத்து நீராடும் என்பதால், அந்த மகளிரின் துக்கத்தையும், கண்ணீர்ப் பெருக்கையும் மிகுதியாகச் சிறப்பித்தான் என்பதாம். வீணை இசை காமத்தை மிகுவாக்கும், விஷம் போல் வருத்தும் என்பது அறிக.

22. கமுக வார் நெடும் கனக ஊசலில்
குமுத வாயினார், குயிலை ஏசுவார்;
சமுக வாளியும், தனுவும் வாள் முகத்து
அமுத பாடலார், மருவி ஆடுவார். (4721)

(குமுதம்-செவ்வாம்பல் மலர்/செவ்வல்லி மலர்; ஏசுதல்-பழித்தல்; சமூகம்-கூட்டம்; வாளி-அம்பு; தனு-வில்; கமுகம்-பாக்குமரம்; வார்-கட்டப்பெற்ற; கனகம்-பொன்; ஊசல்-ஊஞ்சல்; மருவி-பொருந்தியிருத்தல்);

செவ்வாம்பல் போன்ற சிவந்த வாயுடையவர்களும், தன் குரலினிமையில் குயிலைப் பழிக்கின்றவர்களும், கூட்டமான அம்புகள் போன்ற கண்களும், வில் போன்ற புருவமும், ஒளிபொருந்திய முகமும் உடையவரும், தேவாமிர்தம் போல் இனிமையாகப் பாடுகின்றவர்களும் ஆகிய மகளிர், பாக்குமரத்தில் கட்டப்பட்டுள்ள நீண்ட பொன்னாலாகிய ஊஞ்சலில் பொருந்தி இருந்து ஆடி மகிழ்வார்கள்.

முண்டகத்துறையில் உள்ள பெண்களின் முக அழகு, குரல் இனிமை, செவ்வச்செழிப்பு முதலியனவிளக்கப்பட்டன. ''கரும்பு உருவம் பொரும் புருவம்'' என்பது திருவரங்கக் கலம்பகம். அந்த இடத்தின் அமைதியான சூழ்நிலையும் உரைக்கப்பட்டது என்க.

23. முண்டகத்துறையை விட்டு நீங்குதல்

இனைய ஆய ஒண்துறையை எய்தினார்,
நினையும் வேலைவாய், நெடுது தேடுவார்;
வினைய வார்குழல் திருவை மேவலார்,
புனையும் நோயினார், கடிது போயினார். (4722)

(இனைய-இத்தகைய; ஒண்-சிறந்த; வினைய-வேலைப்பாடமைந்த; வார்-நீண்ட; மேவலார்-காணப்பெறாதவர்; கடிது-விரைந்து; புனைதல்-மேற்கொள்ளுதல்; நோய்-துயரம்; வேலை-வேளை;)

இத்தகையதான சிறந்த முண்டகத்துறையை அடைந்த வானர வீரர்கள், நினைத்த அளவிலேயே வெகுதூரம் தேடக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள், வேலைப்பாடமைந்த, அலங்கரிக்கப்பட்ட, நீண்ட கூந்தலை உடைய இலக்குமி போன்ற சீதாதேவியைக் காணப்பெறாமையால், துயர் மேற்கொண்டு, அங்கிருந்து விரைவாக நீங்கிச் சென்றனர்.

கூந்தல், முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள் என ஐந்து வகையாக முடிக்கப்படுவதால் ''வினைய வார் குழல்'' என்றார் என்க. இதனால் கூந்தலுக்கு ஐம்பால் என்ற ஒரு சொல்லும் உண்டு என்பது அறிக.

24. பாண்டு மலையை அடைதல்

நீண்ட மேனியான் நெடிய தாளின் நின்று
ஈண்டு கங்கை வந்து இழிவது என்னலாம்,
பாண்டு அம்மலைப் படர் விசும்பினைத்
தீண்டுகின்ற தண்சிகரம் எய்தினார். (4723)

(நீண்ட - ஓங்கிய; நெடிய-நீண்ட; தாள்-திருவடிகள்; ஈண்டுதல்-விரைதல்; இழிவது-இறங்குவது; அம்-அழகிய; படர்-பரவிய; விசும்பு-ஆகாயம்; தண்-குளிர்ந்த);

ஓங்கி உலகளந்த உத்தமனான திருமாலின் நீண்ட திருவடிகளிலிருந்து விரைந்து பெருகி வந்த ஆகாய கங்கை, இங்கே தான் வந்து இறங்கியதோ என்று தோற்றம் தருப் படியான, பாண்டு என்னும் அந்த அழகிய மலையில் படர்ந்திருக்கும், ஆகாயமளாவ உயர்ந்திருக்கும், குளிர்ச்சி பொருந்திய சிகரத்தை, அவ்வானர வீரர்கள் அடைந்தனர்.

திருவிக்கிரம அவதாரத்தில் தன் இரு திருவடிகளால் இவ்வுலகையும், விண்ணுலகையும் அளந்த திருமாலின் மேலோங்கிய திருப்பாதத்தை, நான்முகன் சத்தியலோகத்தில் தன் கமண்டலத்திலிருந்த தீர்த்தத்தால் கழுவி அபிஷேகம் செய்தான்; அந்த நீர்தான் ஆகாய கங்கையாகப் பெருகி வந்தது என்பது ஒரு புராண வரலாறு. இப்போது மிக உயர்ந்து வெண்மையாகத் தோற்றமளிக்கின்ற இந்த பாண்டு மலையின் சிகரம், அந்த வெள்ளிய ஆகாய கங்கை வந்து இறங்கிய இடம் இதுதானோ என்று காண்பவர்களைத் திகைக்க வைத்தது என்பதாம். முன்பு பாலகாண்டத்தில் அகலிகைப் படலத்தில் விசுவாமித்திரர் கூறும் கங்கை நதியின் வரலாறு வேறாக இருப்பதை இங்கு நினைவு கூர்க.

25. பாண்டுமலையின் தோற்றம்

இருள் உறுத்து மீது எழுந்த தெள் நிலா
மருள் உறுத்து, வண் சுடர் வழங்கலால்,
அருள் உறுத்திலா அடல் அரக்கன் மேல்
உருள் உறுத்த திண் கயிலை ஒத்ததால். (4724)

(உறுத்து-கோபித்து; பதிதல்-அழுத்துதல்; தெள்-தெளிந்த; மருள் உறுத்தல்-மயங்கும்படி செய்தல்; வண்சுடர்-மிக்கஒளி; அரக்கன்-இராவணன்; திண்-வலிய; உருளுதல்-அழிதல்; அடல்-வலிய);

உலகில் பரவியுள்ள இருட்டை ஒழித்து, வானத்தின் மீது தோன்றுகின்ற தெளிந்த சந்திரனையும் மயக்கம் கொள்ளுமாறு மிக்க ஒளியைப் பரப்புகின்ற இந்தப் பாண்டுமலை, அருள் என்பதே சிறிதும் நெஞ்சில் கொள்ளாத, வலிய அரக்கனான இராவணன், நிலத்தில் புரண்டு அழுமாறு அழுத்திய வலிமைமிக்க கயிலை மலையை ஒத்திருந்தது.

பாண்டுமலை வெண்மை நிறமாய் இருந்ததால் அது பனி படர்ந்த கயிலாய மலையைப் போன்று இருந்தது என்றார். அந்த வெண்மை நிறம் பாண்டு மலைக்கு எப்படி வந்தது என்றால் தெளிந்த நிலா, இருளை ஒட்டிவிட்டு மேலெழுந்து சென்று மிக்க ஒளியை வீசுவதால் வந்தது என்பதாம்.

ஒறுத்தல் என்ற ஒரே சொல், பல பொருள்களைத் தந்து நின்றமை நோக்குக. உத்தர காண்டத்தில் திக்கு விசயப்படலத்தில், இராவணன், குபேரனை வென்று அவனது புஷ்பக விமானத்தை அபகரித்துக் கொண்டு செல்லும் வழியில், கயிலைமலை குறுக்கிட்டுத் தடுத்தது. தடுத்ததற்குக் காரணம் புரியாமல் திகைத்த இராவணனிடம் சிவகண நாதரான நந்திதேவர் ''இது சிவபெருமான் வீற்றிருக்கும் மலை; எனவே இங்கு நுழைந்து செல்ல முடியாது; வேறு வழியாகச் செல்லவும்'' என்று வேண்டிக் கொண்டார். அரக்கனான இராவணன் அதைச் செவியுறாது, கயிலாய மலையைப் பெயர்த்து அப்பால் வைத்துவிட்டுச் செல்லுவேன் என்று ஆணவமாக அதைப் பெயர்க்க முற்பட்டான். கயிலாய மலை சிறிது அசைவதை உணர்ந்த பார்வதி தேவி, இறைவனை இது பற்றிக் கேட்க, இறைவன் தனது பாதத்தின் கட்டை விரலைச் சற்று அழுத்தினான். அம்மலையின் அடியில் தன்கைகள் அகப்பட்டுக் கொள்ள அலறினான் இராவணன்; பின்னர் சிவபெருமானை மகிழ்விக்க வேண்டி சாமவேதத்தைத் தன் நரம்புகளையே வீணையாகக் கொண்டு பாடி, இறைவனை மகிழ்வித்து, வாளும் வாழ்நாளும் பெற்றான் என்பது ஒரு புராணக் குறிப்பு. இந்நிகழ்ச்சியைத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தமது தேவாரத் திருப்பதிகங்களில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்லுகிறார்கள் என்பதும் இங்கு நினைவு கூரத் தரும்.

26. அங்கே சீதையைக் காணாது வருந்துதல்

விண்உற நிவந்த சோதி வெள்ளியம் குன்றம் மேவிக்
கண்உற நோக்கல் உற்றார்; களிஉறக் கனிந்த காமர்
பண்உறு கிளவிச் செவ்வாய்ச் படைஉறு நோக்கினாளை,
எண்உறு திறத்தும் காணார், இடர்உறும் மனத்தர் எய்த்தார். (4725)

(நிவந்த-ஓங்கிய; வெள்ளிய-வெண்ணிறமான; அம்-அழகிய; வெள்ளியங்குன்றம்-பாண்டுமலை; மேவி-அடைந்து; கண்உற-நன்கு; நோக்கல்-தேடுதல்; கனிந்த-முதிர்ந்த; காமர்-அழகிய; பண்-இசை; கிளவி-சொற்கள்; படை-வேற்படை/கண்; எண்உறுதல்-நினைத்தல்; திறம்-வழி; எய்த்தல்-தளர்வுறுதல்);

வானளாவ உயர்ந்தோங்கிய, ஒளிபெற்றுத் திகழ்கின்ற, வெண்மையான, அழகிய அந்தப் பாண்டு மலையினை அடைந்து நன்கு அலசித் தேடிப் பார்க்கத் தொடங்கினர்; என்றாலும், கேட்பவர்கள் மகிழ்ச்சி அடையும் வண்ணம், எல்லோரும் விரும்பும்படி பாட்டிசை

போன்ற இனிய சொற்களைப் பேசும் சிவந்த வாயினை உடையவளும், வேற்படை போன்று கூரிய ஒளிவாய்ந்த கண்களை உடையவளுமான சீதாதேவியை, தாம் நினைத்த இடங்களில் எல்லாம் தேடிப்பார்த்தும், காண இயலாதவர்களாய், மனம் மிகவும் வருத்தமுற்றுத் தளர்ந்தனர் வானர வீரர்கள்.

27. கோதாவரி ஆற்றை அடைதல்

ஊதைபோல் விசையின் வெம்கண் உழுவைபோல் வயவர், ஓங்கல்
ஆதியை அகன்று செல்வார்; அரக்கனால் வஞ்சிப்புண்ட
சீதை போகின்றாள் கூந்தல் வழீஇ வந்து, புவனம் சேர்ந்த
கோதை போல் கிடந்த கோதாவரியினைக் குறுகிச் சென்றார் (4726)

(வெம்-கொடிய; வெங்கண்-அஞ்சாமை; உழுவை-புலி; வயவர்-வீரர்; ஊதை-காற்று; விசை-விரைவு; ஓங்கல்-மலை; ஆதி-முதன்மை; புவனம்-பூமி; கோதை-மாலை; குறுகுதல்-கிட்டுதல்; வழீஇ-வழுவி / நழுவி)

காற்றுப்போல் வேகமானவரும், கொடிய கண்களையுடைய அஞ்சாமை மிக்க புலியைப் போன்றவருமான வெற்றி வீரர்களான வானர வீரர்கள், மலைகளுள் முதன்மையான பாண்டுமலையின் அடிவாரத்தினின்றும் அகன்று செல்லலாயினர்; பின்னர் அவர்கள், அரக்கன் இராவணனால் வஞ்சனையால் கவர்ந்து செல்லப்பட்ட சீதையின் கூந்தலிலிருந்து நழுவி பூமியில்விழுந்த ஒரு மலர்மாலை போல் ஓடிக் கொண்டு கிடந்த, கோதாவரி என்னும் ஆற்றினை நெருங்கிச் சென்றனர்.

கோதாவரி ஆறு, சீதை கழுத்தில் அணிந்திருந்த மலர்மாலைக்கு ஒப்பு; மலையின் மேல் இருந்து கீழே நோக்குபவர்களுக்கு, ஆறு செல்லும் அழகு வெண்மையான ஒரு மலர்மாலை கிடப்பது போல் தோன்றுவது இயற்கை.

28. கோதாவரி ஆற்றின் சிறப்புத் தோற்றம்

எழுகின்ற திரையிற்று ஆகி, இழிகின்ற மணி நீர்யாறு,
தொழுகின்ற சனகன், வேள்வி தொடங்கிய சுருதிச் சொல்லால்,
உழுகின்ற பொழுதின் ஈன்ற ஒரு மகட்கு இரங்கி, ஞாலம்
அழுகின்ற கலுழி மாரியாம் எனப் பொலிந்தது அன்றே! (4727)

(எழுகின்ற-உயர்ந்து வீசுகின்ற; திரை-அலைகள்; இழிதல்-செல்லுதல்; மணி-அழகிய/தெளிந்த; சுருதிச் சொல்-வேத மந்திரங்கள் ஒருமகள்-சீதை; ஞாலம்-பூமிதேவி/நிலமகள்; கலுழி-கண்ணீர்; பொலிதல்-விளங்குதல்; இரங்கி-வருந்தி);

உயர்ந்து மேலெழும்பி வீசுகின்ற அலைகளை உடையதும், மேலிருந்து கீழே இறங்கி வருவதும், முத்துப்போல் அழகிய தெளிந்த நீரை உடையதுமான கோதாவரி ஆற்றின் நீரோட்டம், யோகியர்கள், பெரியோர்

முனிவர்களாலும் வணங்கத்தக்க ஞானியாகிய சனகமன்னன், மிதிலையில் வேள்வி செய்யும் பொருட்டு, வேதமந்திரங்களை உச்சரித்துக்கொண்டு, கலப்பையால் நிலத்தை உழத் தொடங்கியபோது, அந்தப் பூமிதேவி பெற்றெடுத்த சீதை, இப்பொழுது இராவணனால் கவரப்பட்டுச்சென்றதை எண்ணி வருந்தி அவளுடைய தாயாகிய நிலமகள் அழுகின்ற கண்ணீர்ப் பெருக்கைப் போல் விளங்குகிறது.

சீதையின் தற்போதைய நிலையைக் கண்டு நிலமகள் வடித்த கண்ணீரே கோதவரியாய்ப் பெருக்கெடுத்து ஓடுகிறது என்பது கருத்து. சனகன் நிலத்தை உழத்தொடங்கியபோது கலப்பையின் படைச்சாலில் நிலத்திலிருந்து சீதை கண்டெடுக்கப்பட்டாள் என்பது பால காண்டத்தில் நாம் முன்பு கண்டதேயாகும். முன்பு இராம இலக்குவரும், சீதையும் வனம்புக நேர்ந்ததை எண்ணி, கோதாவரி ஆறு அழுவதைப் போன்றிருந்தது என்று கூறியதையும் இங்கு நினைவு கூர்க. இதே போல் சிலப்பதிகாரத்திலும், கண்ணகிக்கு ஏற்படப்போகும் துயரத்தை அறிந்தவள் போல் வைகையாறு அழுதது என்று கூறுவதையும் நினைவிற் கொள்க. ''வையை என்னும் பொய்யாக் குலக்கொடி. தையற்கு உறுவது தான் அறிந்தனள்போல், புண்ணிய நறுமலர் ஆடைபோர்த்துக் கண்நிறை நெடு நீர் கரந்தனள் அடக்கி'' என்பது சிலப்பதிகாரம். சீதா என்னும் வடசொல்லுக்கு உழுபடைச்சால் என்பது பொருள். சீதை என்பது சீதாவின் தமிழாக்கம்.

29. ஆசுஇல் பேருலகில், காண்போர் அளவை நூல் எனலுமாகிக்
காசொடு கனகம் தூவிக் கவின் உறக் கிடந்த கானயாறு,
ஏசில்போர் அரக்கன் மார்பின் இடைபறித்து, எருவை வேந்தன்
வீசிய வடக மீக்கோள் ஈதுஎன விளங்கிற்று அன்றே. (4728)

(காசு-மணி/இரத்தினம்; கனகம்-பொன்; கவின்-அழகு; ஆசுஇல்-குற்றமற்ற; ஏசுதல்-பழித்தல்; எருவை-கழுகு; மீக்கோள்-போர்வை; கான்-நறுமணம்; வடகம்-வடம்/இரத்தின ஆரம்);

நவரத்தினங்களோடு, பொன்னையும் தன் அலைகளால் வாரி வீசிக் கொண்டு, அழகாகக் காட்டுவழியில் ஓடுகின்ற, நறுமணம் மிக்க, கோதாவரியாறு, குற்றமற்ற இந்நிலவுலகில் பார்ப்பவர்கள் அதனை அளப்பதற்குப் பயன்படுத்தும் ஒரு அளவை நூல் போல் நீண்டு காட்சியளிப்பது போலவும், பழிப்பிற்கு இடமில்லாத போர்த்தொழில் வல்லமையுடைய அரக்கனாகிய இராவணனின் மார்பிலிருந்து, கழுகுகளின் அரசனான சடாயு, பறித்து வீசியெறிந்த, மார்பின் மீது அணிந்திருந்த நவரத்தின மாலை போலவும் திகழ்ந்து விளங்கியது.

கோதாவரி ஆறு, இந்நிலவுலகையே அளப்பதற்குரிய ஒரு அளவை நூல்போல் நீண்டும், இராவணனின் மார்பில் கிடந்த சடாயுவினால் பறித்தெறியப்பட்ட நவரத்தின மாலை போல் ஒளிமிகுந்தும் விளங்கியது என்பதாம். அளவை நூல் என்பதற்குத் தர்க்க சாஸ்திரம் என்றும், வடகம்

மீக்கோள் என்பதற்கு மார்பிலணியும் ஒருவகை மேலாடை எனவும் பொருள் கூறுவதும் உண்டு.

30. சுவணகத்துறையை அடைதல்

அந்நதி முழுதும் நாடி, ஆய்வளை மயிலை, யாண்டும்
சந்நிதி உற்றிலாதார், நெடிது பின் தவிரச் சென்றார்;
''இன்னதீது, இலாததீது'' என்று யாவையும் எண்ணும் கோளார்,
சொன்ன தீவினைகள் தீர்க்கும் சுவணகத் துறையில் புக்கார். (4729)

(எண்ணுதல்-ஆராய்தல்; கோள்-அறிவாற்றல்; ஆய்-சிறந்த தெரிந்தெடுக்கப்பட்ட; சந்நிதி-எதிர்ப்படுதல்; தீர்த்தல்-போக்குதல்; தீவினை-பாவம்; சுவணம்-சோணைநதி;)

இதுநல்லது, இதுதீயது என்றும், இங்கு உள்ளது, இங்கு இல்லாதது என்றும், எல்லாவற்றையும் பகுத்தறியும் அறிவாற்றல் பெற்ற கொள்கை யையுடைய வானர வீரர்கள், அந்த கோதாவரி ஆற்றின் கரைகள் முழுதும் தேடிப்பார்த்தும், தெரிந்தெடுக்கப்பட்ட வளையல்கள் அணிந்தவளும், மயில் போன்ற சாயலை உடையவளுமான சீதையை எங்கும் எதிரில் காணப்பெறாதவர்களாய், நீண்டதூரம் முன்நோக்கிச் செல்லலாயினர்; சுக்கிரீவன் குறிப்பிட்டுச் சொன்னதும், நூல்களிற் கூறப்பட்டதுமான பாவங்கள் அனைத்தையும், தம்மில் படிந்தார்க்குப் போக்கியருளும் சுவணகம் என்னும் ஆற்றின் கரையை அடைந்தார்கள்.

சந்நிதி என்பது ஸன்னிதி என்ற வடசொல்லின் தமிழாக்கம், சுவணகம் என்பது சுவணம் என்றும், சோணை என்றும் வழங்கப்பெறும்.

31. குலிந்த தேசத்தையும் விட்டு நீங்குதல்

சுரும்பொடு, தேனும் வண்டும், அன்னமும், துவன்று, புள்ளும்,
கரும்போடு, செந்நெல் காடும், கமல வாவிகளும் மல்கிப்
பெரும்புனல் மருதம் சூழ்ந்த கிடக்கை, பின் கிடக்கச் சென்றார்;
குரும்பை நீர் முரஞ்சும் சோலைக் குலிந்தமும் புறத்துக் கொண்டார். (4730)

(சுரும்பு-தும்பிகள்; தேன்-தேனீக்கள்; துவன்று-நெருங்கி; புள்-பறவைகள்; காடு-கழனி/வயல்; வாவி-தடாகம்; மல்கி-மிகுந்து; கிடக்கை- நிலப்பரப்பு; குரும்பை-இளநீர்; முரஞ்சுதல்-நிறைதல்; புறத்தல்- கடத்தல்);

பொன் வண்டுகள், தேன்வண்டுகள் கருவண்டுகள், அன்னப் பறவைகள் ஆகியன நிறைந்திருப்பதும், நாரை, கொக்கு போன்ற ஏனைய பறவைகளும், கருப்பஞ் சோலைகளும், நல்ல சிவந்த சம்பா நெற்பயிர் விளைந்த கழனிகளும், தாமரைத் தடாகங்களும் நிறைந்து விளங்குவனவும், பெரிய நீர்த்தேக்கங்கள் நிறைந்த நீர்வளம் மிக்கதுமான, மருதநிலம்சூழ்ந்த நிலப்பரப்பெல்லாம்தம் பின்னால்கிடக்க, முன்னேறிச்

சென்றார்கள் வானர வீரர்கள். இளநீர் நிறைந்த தென்னஞ்சோலைகளை உடைய குவிந்த தேசத்தையும் கடந்து சென்றார்கள்.

ஞிமிறு, வண்டு, தேன், தும்பி, கரும்பு என்பனவெல்லாம் வண்டின் வகைகள். மருத நிலத்தின் வளம் சிறப்பிக்கப்பட்ட ஒரு பாடல் இது. குரும்பை என்பது, தென்னை, பனை முதலியவற்றின் இளங்காய்களைக் குறிக்கும். குவிந்தநாடு என்பது இப்பொழுது கேரள நாட்டின் வடக்கே மேற்குக்கரையை அடுத்துள்ளது என்பர்; முன்பு ஐம்பத்தாறு தேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த நாடுகளில் இதுவும் ஒன்று. இது குவிந்தம் எனவும் வழங்கப்பெறும். வயலும் வயல் சார்ந்த இடங்களும் மருதம் எனப்படும்.

32. கொங்கணநாடு கடந்து அருந்ததி மலையை அடைதல்.

கொங்கணம் ஏழும் நீங்கிக் குடகடல் தரளக் குப்பைச்
சங்குஅணி பானல், நெய்தல், தண்புனல் தவிர, ஏகித்
தங்களின் கொழுந்து சுற்றும் சிமய நீள்கோட்டுத் தேவர்
அங்கைகள் கூப்ப நின்ற அருந்ததிக்கு அருகர் ஆனார். (4731)

குடகடல்- அரபிக்கடல் /மேலைக்கடல்; தரளக்குப்பை- முத்துக் குவியல்; பானல்-கருங்குவளை மலர்; திங்களின் கொழுந்து- இளநிலா; சுற்றும்-தவழும்; சிமயம்-சிகரம்; கோடு-கொடுமுடி; அருகர் ஆதல்- அணுகுதல்; தவிரஏகி-நீங்கிச்சென்று; நீள்-உயர்ந்த);

வானரவீரர்கள், ஏழுபிரிவுகளைக் கொண்ட கொங்கண நாட்டையும் கடந்து சென்று, மேலைக் கடலில் உள்ள, முத்துக் குவியல், சங்குகள், அழகிய கருங்குவளைமலர்கள், நெய்தற்பூக்கள், குளிர்ந்த நீர்ப் பரப்புடைய நெய்தல் நிலப்பரப்பு முதலியவற்றையும் தாண்டிச் சென்று, சந்திரனின் நுனியாகிய பிறைச் சந்திரன் தழுவி நிற்கும் சிகரமும், உயர்ந்த கொடுமுடிகள் உடையதும், தேவர்களும் தம் கரதலங்கள் குவித்து வணங்கத்தக்க பெருமையுடையதுமான அருந்ததி என்னும் மலைக்கு அருகில் வந்து சேர்ந்தனர்.

குடகடல் என்பது இப்பொழுது அரபிக்கடலைக் குறிக்கும் என்க. கொங்கணம் என்பது இப்போது மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள வடகன்னட மாவட்டத்தைக் குறிக்கும். இது கொண்கானம் எனவும் வழங்கப்பெறும். அருந்ததி மலை இப்போதைய மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகும்.

33. அருந்ததி மலை, மரகதமலை கடந்து, திருவேங்கட மலையை அடைதல்.

அருந்ததிக்கு அருகு சென்று, ஆண்டு அழகினுக்குஅழகு செய்தாள்
இருந்த திக்கு உணர்ந்திலாதார், ஏகினார்; இடையர் மாதர்
பெருந்ததிக்கு அருந்தேன் மாறும் மரகதப் பெருங்குன்று எய்தி,
இருந்து, அதில் தீர்ந்து சென்றார், வேங்கடத்து இறுத்த எல்லை. (4732)

(திக்கு-திசை/இடம்; ததி-தயிர்; மாறு-பாண்டமாற்று; இருந்து-தங்கி; தீர்ந்து-நீங்கி; இறுத்தல்-தங்குதல்; எல்லை-சமயம்; இடையர்-ஆயர்குலப் பெண்கள்); (குளகப்பாடல்)

அந்த அருந்ததி மலைக்கு அருகில் சென்ற வானரர்கள், அங்கு, அழகுக்கே பேரழகு செய்பவளான சீதாதேவி இருக்கின்ற இடம் தெரியப் பெறதவர்களாகி மேலே சென்றனர். ஆயர்குலப் பெண்டிர் தம்மிடம் மிகுதியாகவுள்ள சிறப்பான தயிருக்குப் பண்ட மாற்றாக, அருமையான தேனைப் பெறுகின்ற மரகதமலை என்னும் பெரியமலையை அடைந்து, அங்கு தங்கியிருந்து, அங்கும் சீதை காணப்படாமையால், அங்கிருந்தும் நீங்கிச்சென்றனர். பின்னர்தமிழ்நாட்டின்வடஎல்லைஎன்றுவரையறுத்துச் சொல்லப்பட்டதான திருவேங்கடமலையை அடைந்து அங்கே தங்கியிருந்த பொழுது - பாடல் தொடர்கிறது.

''அழகினுக்கு அழகு செய்தாள்'' என்பது முன்பே பால காண்டத்தில் கூறப்பட்டிருப்பதை நினைவுகூர்க. தயிருக்குத் தேனைப் பண்டமாற்றாகப் பெறுவர் என்றதனால் குறிஞ்சி, முல்லை நிலங்களின் திணைவளம் கூறப்பட்டது என்க. ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' என்றும், ''குணகடல், குமரி, குடகம், வேங்கடம் எனும் நான்கு எல்லையின் இருந்தமிழ்கடல்'' என்றும் நன்னூல் கூறுவதை இங்கு நினைவிற் கொள்க.

34. திருவேங்கட மலையின் சிறப்பு.

முனைவரும், மறைவலோரும், முந்தைநாள் சிந்தை மூண்ட
வினைவரும் நெறியை மாற்றும் மெய்யுணர்வோரும், விண்ணோர்
எனைவரும், அமரர் மாதர் யாவரும், சித்தர் என்போர்
அனைவரும், அருவி நல்நீர் நாளும் வந்து ஆடுகின்றார். (4733)

(மறை-வேதம்; முந்தைநாள்-பண்டு; மூண்ட-விளைந்த; நெறி-வழி; மாற்றுதல்-அடைத்தல்; மெய்உணர்வோர்-தத்துவஞானியர்; முனைவர்-முனிவர்/ரிஷிகள்; எனைவரும்-எல்லோரும்);

அந்தத் திருவேங்கட மலையில், முனிவர்களும், வேதத்தில் வல்லவர்களான அந்தணர்களும், முற்காலத்தில் மனத்தால் மேலிட்டுச் செய்த தீவினைகளால் இப்பிறப்பில் தொடர்ந்து வருகின்ற நரகமாகிய வழியை நல்நெறிக்குத் திருப்பவல்ல ஆற்றல்படைத்த தத்துவ ஞானிகளும், விண்ணுலகத்துத் தேவர்கள் எல்லோரும், தேவமகளிர் யாவரும், சித்தர்கள் என்று புகழ்ந்து சொல்லப்படுகின்ற அனைவரும், இம்மலையில் உள்ள அருவிகளில் ஓடும் நல்ல புனிதமான புண்ணிய தீர்த்தங்களில் நாள்தோறும் வந்து நீராடிச் செல்கிறார்கள்.

திருவேங்கடத்திலுள்ள மலைகளில் இருக்கும் அருவிகளில் இவ்வுலகத்தோர் மட்டுமின்றி விண்ணுலகத்தவரும் தினம்தோறும் வந்து

நீராடிச் செல்கின்றனர் என்பது கருத்து. சித்தர் என்போர் பதினெட்டுத் தேவ சாதியினருள் ஒரு பிரிவினர் என்பதாம். திருவேங்கட மலையில் இருக்கும் அருவிகள் ஆகாச கங்கை, குமாரதாரை, பாபவிநாச நீர்வீழ்ச்சி, கோனேரி, பாண்வதீர்த்தம், தும்புரு தீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம் என்பனவாம்.

35. பெய்த ஐம்பொறியும் பெருங்காமமும்
வைத வெம்சொல்லின், மங்கையர் வாள்கணின்
எய்த வஞ்சக வாளியும், எண் அறச்
செய்தவம் பல செய்குநர் தேவரால். (4734)

(பெய்த-அமைக்கப்பட்ட/தோற்றுவிக்கப்பட்ட; காமம்-ஆசை; வெம்சொல்-சாபச்சொல்; வஞ்சகம்-ஏமாற்றும் இயல்புள்ள; எண்-வலிமை; அற-அழியுமாறு);

இறைவனால் படைக்கப்பட்ட பொழுதே உடம்பில் அமைக்கப்பட்ட மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும், அதனால் விளைகின்ற பெரிய ஆசையையும், முனிவர்கள்சபித்துச்சொன்ன கொடிய சாபச்சொற்களையும், பெண்களின் ஒளிமிகுந்த, கூரிய, கொல்லும் தன்மையுள்ளகண்களால் செலுத்தப்பட்ட ஏமாற்றும் இயல்புள்ள பார்வை என்னும் அம்பையும், அவ்வவற்றின் வலிமை குன்றி அழியுமாறு, வெற்றி கொண்டு, செய்தற்கரியதான பெருந்தவங்களைத் தேவர்கள் செய்து கொண்டிருக்கும் பெருமை பெற்றது இத்திருவேங்கடமலை.

இம்மலையில் தேவர்கள் பெருந்தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். எதற்கு? உட்பகையாகிய காமம், வெகுளி, மயக்கம் என்பனவற்றை அழிக்கவும், புறப்பகைகளாகிய முனிவர்களின் சாபம் முதலியவற்றின் வலிமை அழியப் பெறவும் தவம் செய்கிறார்கள் என்பதாம். ஐம்பொறிகளால் விளையும் காமம் என்னும் ஆசை, பொதுவாக யாராலும் அடக்குதற்கு அரியது; அதனால் அதைப் ''பெருங்காமம்'' என்றார் என்க. வைதல் என்பது சபித்தல் என்று பொருள்படும். மகளிரின் காமப் பார்வையை ''வஞ்சக வாளி'' என்று கூறிய நயம் நோக்குக.

36. வலம் கொள் நேமி மழைநிற வானவன்
அலங்கு தாள் இணை தாங்கிய அம்மலை,
விலங்கும் வீடு உறுகின்றன; மெய்ந்நெறிப்
புலம் கொள்வார்கட்கு அனையது பொய்க்குமோ? (4735)

(நேமி-சக்கரப்படை; மழை-மேகம்; வானவன்-தேவன்; அலங்கு-விளக்கமுள்ள; இணை-இரண்டு; வீடு-மோட்சம்; புலம்-அறிவு; பொய்த்தல்-தவறுதல்; விலங்கு-மிருகங்கள்;)

வெற்றியையே தரும் சுதர்சனம் என்னும் சக்கராயுதத்தை வலக்கையில் ஏந்தி நிற்கின்ற, நீருண்ட மேகம் போன்றுகரிய நிறமுள்ள தேவதேவனான திருவேங்கடவனின், ஒளி வீசி விளங்குகின்ற இரண்டு திருவடிகளையும்

தாங்கி நிற்கின்ற அத்திருவேங்கடமலையில் (திருப்பதியில்) வாழ்கின்ற மிருகங்களும் கூட வீடுபேறாகிய மோட்ச லோகத்தை அடைகின்றன; என்றால் உண்மையான தவநெறியில் நின்று ஒழுகும் அறிவு சான்ற முனிவர்கள், யோகியர், தத்துவஞானிகள் முதலானோர்க்கு அம்மோட்ச உலகம் கிட்டாது தவறிப்போய் விடுமோ? ஒரு நாளும் தவறாது. நிச்சயம் கிட்டும்.

''மெய்ந் நெறிப்புலம்'' என்பது மெஞ்ஞானத்தைக் குறிக்கும் என்க. பொய்க்குமோ என்பது பொய்க்காது என்ற பொருளைத் தருதலையும் உணர்க. திருவேங்கடவன் வலக்கையில் சக்கரம் கொண்டவன் என்பது, ''வலக்கை ஆழி. இடக்கை சங்கம் இவையுடை மால் வண்ணன்'' என்ற திருவாய் மொழியால் அறியலாம். இறைவன் திருவடிகளைப் பற்றுதலே வீடுபேறடைதற்குச் சிறந்த வழி என்பது ''பிரபத்தி மார்க்கம்'' எனப்படும். திருப்பதி வீடுபேறளிக்கும் தன்மையுடையது என்பதை ''திருவேங்கடம் நங்கட்கு சமன்கொள் வீடுதரும் தடங்குன்றமே'' என்ற திருவாய் மொழியாலும் அறியலாம். இதனையே முன்பு சுக்கிரீவன் வானரர்களுக்குச் சொல்லியதையும் இங்கு நினைவு கூர்க. குலசேகர ஆழ்வார் ''கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே'' என்றும், இறுதியில், ''எம்பெருமான் பொன்மலையில் ஏதேனும் ஆவேனே'' என்றும் உருகிப் பாடுவதையும் நோக்குக. ''செடியாய் வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசலிலே, அடியாரும், வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்கேனோ'' என்பதும் குலசேகராழ்வார் பாசுரம்.

37. வானரர்கள் அங்குள்ள முனிவர்களை வணங்குதல்

ஆயகுன்றினை எய்தி, அருந்தவம்
மேய செல்வரை மேயினர்; மெய்ந்நெறி
நாயகன்தனை நாளும் வணங்கிய
தூய நன்மலர்ப் பாதங்கள் சூடினார். (4736)

(மேய-மேற்கொண்ட; மேவுதல்-அடைதல்; நாயகன்-இறைவன்; சூடுதல்-சிரமேற்கொண்டு வணங்குதல்;)

அத்தன்மையதான அத்திருவேங்கடமலையை அவ்வானர வீரர்கள் அடைந்து, அங்கு செய்தற்கரிய பெருந்தவம் இயற்றி வாழ்ந்திருக்கின்ற அருட்செல்வர்களை அடைந்தனராய், உண்மையான வீடுபேற்றிற்குத் தலைவனான திருவேங்கடவனைத் தினமும் தொழுது வழிபடும் பரிசுத்தமானவர்களான அம்முனிவர்களது நல்ல தாமரைமலர் போன்ற திருவடிகளைத் தலைமேற்கொண்டு வணங்கினர்.

அடியவர்களை வணங்கியதால் எம்பெருமானையும் வணங்கியதாகக் கொள்ளல் வேண்டும். மெய்நெறி நாயகன் என்பது வீடுபேற்றிற்குரிய வழியை-உபாயத்தைத் தரும் தலைவன் என்று பொருள் தரும்.

38. தொண்டை நாட்டை அடைதல்

சூடி, ஆண்டு, அச் சுரிகுழல் தோகையைத்
தேடி, வார்புனல் தெண்திரைத் தொண்டைநல்
நாடு நண்ணுகின்றார், மறை நாவலர்
வேடம் மேயினர், வேண்டு உரு மேவுவார். (4737)

(சுரிகுழல்-சுருண்ட கூந்தல்; தோகை-மயில்; தெண்திரை-தெளிந்த அலைகள்; வேடம்-உருவம்; வார்-மிக்க);

அவ்வாறு அப்பெரியோர்களின்திருவடிகளைத்தன் சிரமேற்கொண்டு, அங்கு சுருண்ட கூந்தலையும், மயில் போன்ற சாயலையும் உடைய சீதா தேவியைத் தேடிப் பார்த்து, அங்கும் காண இயலாமையால், வேண்டும் போது வேண்டும் வடிவம் கொள்ளும் ஆற்றல் பெற்ற அவ்வானர வீரர்கள் இப்பொழுது வேதம் வல்லவரும், சொல் வன்மையுள்ளவருமான அந்தணர் வடிவம் கொண்டு, நீர்வளம் மிக்க தொண்டைநாட்டை அடைந்தனர்.

''தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து'' என்பது பழமொழி.

39. தொண்டை நாட்டின் பெருமை

குன்று சூழ்ந்த கடத்தொடும், கோவலர்
முன்றில் சூழ்ந்த படப்பையும், மொய் புனல்
சென்று சூழ்ந்த கிடக்கையும், தெண்திரை
மன்று சூழ்ந்த பரப்பும், மருங்கெலாம். (4738)

(மருங்கு-பக்கம்; கடம்-குறுங்காடு/பாலைவனம்; கோவலர்- ஆயர்/ இடையர்; முன்றில்-வீட்டின் முன்புறம்; படப்பை-தோட்டம் /சோலை; மொய்-நிறைந்த; கிடக்கை-வயல்; தெண்-தெளிந்த; மன்று-வெள்ளிடை/ வெற்றிடம்);

அத்தொண்டை நாட்டின் பக்கங்களிலெல்லாம், மலை சூழ்ந்த குறுங்காடுகள் நிறைந்த பாலைவனப்பகுதியும், இடையர்களின் வீட்டின் முன்புறம் சூழ்ந்திருக்கின்ற செந்நெல் வயல் பகுதியும், தெள்ளிய அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட வெள்ளிடைப்பகுதியும், நிறைந்து விளங்குகின்றன.

குன்று என்பதால் குறிஞ்சியும், கடம் என்பதால் பாலையும், படப்பை என்பதால் முல்லையும், கிடக்கை என்பதால் மருதமும் இங்கு

குறிக்கப்பெற்றன. எனவே தொண்டை நாடு, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்துவகை நிலங்களாலும் சூழப்பட்டது என்பது பெறப்படுகின்றது. கடம், படப்பை, கிடக்கை, பரப்பு என்பன எல்லாம் ஒவ்வொருவகை நிலப்பகுதியைக் குறித்தன என்க. ''கோவலர்'' என்பது கோபலர் என்ற வடசொல்லின் தமிழாக்கம். பசுக்களை மேய்த்துப் பாதுகாப்பவர் என்ற பொருளில் ஆடவர்களுக்குக் காரணப்பெயர்.

40. சூல் அடிப் பலவின் சுளை தூங்குதேன்
கோல் அடிப்ப, வெரீஇ குல மள்ளர் ஏர்ச்
சால் அடித்தரும் சாலியின் வெண்முளை
தோல்அடிக் கிளை அன்னம் துவைப்பன. (4739)

(சூல்-கரு; அடி-வேர்; பலவு-பலாப்பழம்; வெரீஇ-வெருவி /அஞ்சி; சாலி-செந்நெல்; துவைத்தல்-மிதித்தல்; மள்ளர்-மருதநிலத்து உழவர்கள்; கிளை-கூட்டம்);

மருதநிலத்தைச் சேர்ந்த உழவர் குலத்தைச் சேர்ந்த உழவர்கள் தமது தாற்றுக் கோல் கொண்டு எருதுகளை, அடித்துச் செலுத்த, அதைக் கண்ட, பாதங்களில் தோல் போன்ற விரல்களை இணைக்கும் பகுதியைக் கொண்ட அன்னப்பறவையின் கூட்டங்கள் அச்சம் கொண்டு, கர்ப்பத்தை வேரில் கொண்டுள்ள பலாப்பழத்தின் சுளையிலிருந்து ஒழுகுகின்ற தேன் பாய்வதால் நன்கு முளைவிட்டு வளர்ந்திருக்கின்ற உயர்தரச் செந்நெல்லின் வெள்ளிய முளைகளை மிதித்துக் கொண்டு சென்று உழக்கி, நாசப்படுத்துவனவாகும்.

'சூல் அடிப்பலவு' என்பது வேரில் பழுத்த பலா என்பதாகும். கோல் என்பது மாட்டை அடித்துச் செலுத்தப் பயன்படும். தாற்றுக்கோல்; சால் என்பது உயர்ந்த நெல் வகையினைக் குறிக்கும். தோல் அடி என்பது அன்னங்கள் அவற்றின் கால்கள் நீரில் மிதந்து செல்லுவதற்கு ஏற்றாற்போல் கால் விரல்களை இணைத்து அமைந்திருக்கும் தோல்பகுதியைக் குறித்தது.

41. செருகு உறும் கணில், தேம் குவளைக் குலம்
அருகு உறங்கும் வயல் மருங்கு; ஆய்ச்சியர்
இரு குறங்கும் பிறங்கின வாழையில்
குருகு உறங்கும்; குயிலும் துயிலுமால். (4740)

(தேம்-தேன்/இனிய; செருகுதல்-உள் ஒடுங்குதல்; குறங்கு-தொடை; குருகு-நாரை; ஆய்ச்சியர்-உழத்தியர்; அருகு-வரப்பு; உறங்குதல்-தங்குதல்; பிறங்குதல்-ஒத்திருத்தல்/விளங்குதல்);

அந்த வயல்களின் வரப்புகளில், பகலில் குவிந்து கிடக்கும் குவளை மலர்களின் கூட்டம், உறக்கத்தாலும் மயக்கத்தாலும் செருகி உள் ஒடுங்கிய கண்களையுடைய உழத்தியர் போலத் தோற்றம் அளிக்கும். அவ்வுழத்தியர்களின் அழகிய இரண்டு தொடைகள் போல விளங்கும்

வாழை மரங்களில் நாரைகள் உறங்கும்; குயில்களும் உறங்கிக் கொண்டிருக்கும்.

அவ்வுழத்தியர்களின் கண்களுக்குக் குவளைமலரையும், தொடை களுக்கு வாழை மரத்தையும் உவமித்தார் என்க.

42. தெருவின் ஆர்ப்புறும் பல்லியம், தேர், மயில்
கருவி மாமழை என்று களிப்பு உறா;
பொருநர் தண்ணுமைக்கு அன்னமும் போகலா,
மருவினார்க்கு மயக்கம் உண்டாம் கொலோ? (4741)

(ஆர்ப்புறுதல்-முழங்குதல்; பல்லியம்-பலவகை வாத்தியங்கள்; தேர்தல்-நன்கு அறிதல்; கருவி-தொகுதி; மழை-மேகம்; பொருநர்-ஏர்க்களம் பாடுவோர்/கூத்தாடுவோர்; தண்ணுமை-மத்தளம்; மருவுதல்-பழகுதல்);

தொண்டை நாட்டின் தெருக்களில் முழங்குகின்ற பலவகை வாத்தியங்களின் மிக்க ஓசையைக் கேட்டு, நன்கு உணர்ந்த மயில்கள், அவை மேகத் தொகுதியின் பெரிய இடி முழக்கம் என்று கருதி மிக்க மகிழ்ச்சியடையமாட்டா; அதுபோல, கூத்தாடுவோர்கள் இசைக்கின்ற மத்தள ஒலியைக் கேட்டு, அன்னங்கள் அஞ்சி விலகிப் போக மாட்டா; நன்கு கலந்து பழகியவர்களுக்கு இதனால் ஒருவகை மயக்கமோ அச்சமோ ஏற்படுமோ? ஏற்படாது.

பொதுவாக இடிமுழக்கத்தைக் கேட்டு மயில்கள் களிப்புற்றுத் தோகை விரித்தாடும், அன்னங்கள் அஞ்சி ஓடி ஒளிந்து கொள்ளும். இது இயற்கை; ஆனால் தொண்டைநாட்டின் தெருக்களில் எப்பொழுதும் பலவகை வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருப்பதாலும், கூத்தாடுவோர் மத்தள ஓசையை இடைவிடாது எழுப்பிக் கொண்டிருப்பதாலும், அவை இடியின் முழக்கம் என்று நினைத்து மயில்கள் மகிழாது, அன்னங்கள் மயங்கி அஞ்சாது என்பதாம். தொண்டை நாட்டில் எப்பொழுதும் இன்பம் தரும் மங்கல வாத்தியங்கள் முழங்கிக் கொண்டே இருக்கும் என்று சிறப்பித்தார் என்க. பொருநர் என்பவர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர் என இருவகைப்படுவர்; ஒன்றைக் கேட்டுப் பழகிய பின்னர், அவ்வொலிக்கு யாரும் மகிழ்வது இல்லை, அஞ்சுவதும் இல்லை என்பதும் இதற்குப் பழக்கமே காரணம் என்பதும் பெறப்பட்டது. பனங்காட்டு நரி, சலசலப்புக்கு அஞ்சாது என்னும் பழமொழியை நினைவூட்டும் பாடல் இது. பல் இயம் என்பது பலவகை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக் கருவி என்பவற்றைக் குறிக்கும்.

43. தேரை வன்தலைத் தெங்கிளம் பாளையை
நாரை என்று இளங் கெண்டை நடுங்குவ;
தாரை வன்தலைத் தண் இள ஆம்பலைச்
சேரை என்று புலம்புவ தேரையே. (4742)

(வன்-வலிய; தெங்கு-தென்னை; நாரை-கொக்கு; இளமை-சிறியது; தாரை-கூர்மை; வன்தலை-வலிய நுனி; தண்-குளிர்ச்சி; சேரை-சாரைப்பாம்பு; புலம்புதல்-நடுங்குதல்; தேரை-தவளை; ஆம்பல்-அல்லி அரும்புகள்);

குவிந்து நீண்ட வலிய நுனியையுடைய தேர்களைப் போலத் தோற்றமளிக்கும் தென்னையின் இளமையான விரிந்த தென்னம் பாளையை, வெள்ளை நிறக் கொக்கு என்று இளமையான கெண்டை மீன் குஞ்சுகள், அவை தம்மைத் தாக்கி வருத்தித் தின்னவருகின்றன என்று கருதி அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும்; அது போல நீண்ட, கரிய வலிய நுனியை உடைய குளிர்ந்த மென்மையான அரும்புகளைக் கொண்ட செவ்வல்லிக் கொடியினை, அதனைப் பிடித்துத் தின்னவரும் சாரைப்பாம்பு என்று கருதி அஞ்சி, தவளைகள் நடுங்கி வாய்விட்டுக் கதறிக் கொண்டிருக்கும்.

தென்னைமரத்திலிருக்கும் விரியாத வெண்மையான பாளை, நாரையைப் போலவும், ஆம்பல் அரும்பு கொண்ட கொடி, சாரைப்பாம்பைப் போலவும் தோற்றமளிக்கும் என்பதாம். இதனால் தொண்டை நாட்டின் நீர்வளம், நிலவளம், பொழில்வளம், ஆகியன கூறப்பட்டன. தெங்கின் இளம்பாளையை நாரை என்று கெண்டை மீன்கள் கருதுவது இயல்பு.

44. நள்ளி வாங்கு கடை இள நவ்வியர்
வெள்ளி வால்வளை வீசிய வெண்மணி
புள்ளி நாரைச் சினை பொரியாத என்று
உள்ளி, ஆமை முதுகின் உடைப்பரால்! (4743)

(நள்ளி-பெண்நண்டு; வாங்குதல்-பிடித்தல்; நவ்வி-மான்; வால்-வெண்மை நிறமுடைய; வளை-சங்குகள்; வீசிய-ஈன்ற; மணி-முத்துக்கள்; உள்ளி-நினைத்து; கடைசியர்-மருதநில மகளிர்; சினை-முட்டை)

வயல்களில் பெண் நண்டுகளைப் பிடிக்கின்ற இளமையான மான் போன்ற கண்களையுடைய மருதநில உழத்தியர், மிக்க வெண்மையான முத்துக்களை, புள்ளிகள் கொண்ட கொக்குகளின் பொரிக்கப்படாத முட்டைகள் என்று நினைத்து, அவற்றைத் தாம் உண்பதற்காக வலிய ஓடுகொண்ட ஆமையின் முதுகில் உடைக்க முற்படுவர்.

நள்ளி என்பது பெண் நண்டு; அலவன் என்பது ஆண் நண்டு. நண்டு பிடிக்கப் போகின்றவர்கள் கையில் வெள்ளிய முத்துக்கள் கிடைக்கும் என்றதால் கொக்குகளின் முட்டைகள் போல அவ்வளவு முத்துக்கள் வயல்களில் கொட்டிக் கிடக்கின்றன என்று தொண்டை நாட்டின் செல்வச் செழிப்பு புலப்படுத்தப்பட்டது.

45. சேட்டு இளங்கடுவன் சிறு புன் கையின்
கோட்ட தேம் பலவின் கனிக் கூன் சுளை

தோட்டு அமைந்த பொதும்பரில் தூங்குதேன்
ஈட்டம் என்னச் சென்று ஈ இனம் மொய்ப்பன. (4744)

(சேடு-இளமை; கடுவன்-ஆண் குரங்கு; புன்-சிறிய; கோடு-கிளை; தேம்-இனிய; கூன்-குடம்; தொடுதல்-தோண்டியெடுத்தல்; பொதும்பர்-பொந்துகுழி; தூங்குதல்-தொங்குதல்; இனம்-கூட்டம்; ஈட்டம்-கூடு);

மிகவும் இளமையான ஆண் குரங்கு ஒன்று கிளைகளிலிருந்து இனிய பலாப்பழத்தின் வளைந்த சுளைகளைத் தோண்டியெடுத்துத் தனது சிறிய கையில் வைத்திருக்க, அதனைச் சோலைகளில் தொங்குகின்ற தேன் கூடு என்று கருதி ஈக்களின் கூட்டம் மொய்க்கலாயின.

ஆண் குரங்குகள் கையில் வைத்திருந்த பலாச் சுளையிலிருந்து வழிகின்ற தேனைக்கண்ட ஈக்கூட்டங்கள், அது தேன்கூடுதான் என்று கருதி அதை மொய்த்துக் கொண்டன என்பதாம். பலாப்பழம் குடம் போன்று வளைந்திருப்பதால் அதைக் ''குடக்கனி'' என்றும் வழங்குவதுண்டு; குரங்குகள் தோண்டி எடுத்தமையால் ஏற்பட்ட குழிகளிலிருந்து தேன்வழிவதால் அதைத் தேன் கூடு என்று கருதி ஈக்கள் மொய்க்கலாயின என்பதும் பொருந்தும்.

46. சோழ நாடு அடைதல்

அன்ன தண்டக நாடு கடந்து, அகன்
பொன்னி நாடு பொருஇலர் எய்தினர்;
செந்நெலும், கரும்பும், கமுகும் செறிந்து
இன்னல் செய்யும் நெறி அரிது ஏகுவார். (4745)

(பொருஇலர்-ஒப்பற்றவர்; அகன்-பரந்த; பொன்னி நாடு-காவிரி நாடு; செறிந்து-அடர்ந்து; நெறி-வழி; அரிது-வருந்தி; தண்டகநாடு-தொண்டைநாடு);

ஒப்பற்றவர்களான வானர வீரர்கள், அத்தகைய தொண்டை நாட்டைக் கடந்து, அகன்ற காவிரி நதி பாயும் சோழ நாட்டை அடைந்தனர். அங்கே சிவப்புச் சம்பா நெல்லும், கரும்பும், பாக்கு மரங்களும் அடர்த்தியாக வளர்ந்திருப்பதால் அங்கே போவோர் வருவோர்க்கு எல்லாம் துன்பம் செய்கின்ற வழிகளில் மிகவும் சிரமப்பட்டுச் செல்லலானார்கள்.

வழியில் எல்லாம் நெல்லும். நெல்லிலிருந்து அரிந்த தாள்களும், கரும்புகளும், கரும்பு வெட்டப்பட்டதால் உண்டான அதன் தூறும், பாக்கும் அவற்றினின்று உதிர்ந்து கிடக்கும் பழங்களும் நிறைந்து வழியெல்லாம் கிடந்து, நடந்து செல்பவர்களின், கால்களுக்குத் துன்பம்தந்து துன்புறுத்துவதால் இன்னல் செய்யும் நெறி என்றார். இதனால் சோழநாட்டின் வளம் சிறப்பிக்கப்பட்டது என்பதாம். அதில் நடப்பது மிகவும் அருமையானது என்பதால் ''அரிது ஏகினார்'' என்றார். இந்த மூன்று பயிர்களும் அடர்த்தியாக வளர்ந்திருப்பதால் வழியை

அடைத்துக் கொண்டு தடை செய்து துன்புறுத்தும் என்று கூறுவதும் பொருந்தும்.

47. சோழ நாட்டின் வளம்

கொடிறு தாங்கிய வாய்க் குழு நாரை வாழ்
தடறு தாங்கிய கூன் இளந்தாழையின்
மிடறு தாங்கும் விருப்புடைத் தீங்கனி
இடறுவார்; நறுந்தேனின் இழுக்குவார். (4746)

(கொடிறு-கதுப்பு/குறடு; தடறு-நீர்ச்சுனைகள்; தாங்குதல்-வளர்தல்; கூன்-வளைந்த; தாழை-தென்னை; மிடறு-கழுத்து; இடறுதல்-வருந்துதல்; இழுக்குதல்-வழுக்குதல்);

குறடு போன்று எதையும் எளிதில் விடாது பற்றிக்கொள்ளும் அமைப்பை உடைய வாய்களை உடைய நாரைக் கூட்டங்கள் வாழ்கின்ற நீர்க்கரைகளில் வளர்ந்து நிற்கின்ற, வளைந்த இளமையான தென்னை மரங்களின் கழுத்துப்பாகத்தில் தொங்கிக் கொண்டிருப்பதும், எல்லோராலும் விரும்பப்படுவதும், இனிமையானதுமான தேங்காய்கள்-தெங்கம் பழங்கள் தாமாகவே முற்றிக் கீழே விழுந்து கிடக்கும். அவ்வழியில் செல்லும் வானர வீரர்கள் அவற்றால் இடறி விடப்பட்டு தடுக்கி விழுவார்கள்; அங்கு பாய்ந்து ஓடும் இனிய தேன் பெருக்கில் வழுக்கி விழுவார்கள்.

சோழ நாட்டின் வளம் பேசப்பட்டது என்க.

48. குழுவு மீன்வளர் குட்டம் எனக்கொளா
எழுவு பாடல் இமிழ் கருப்பேந்திரத்து
ஒழுகு சாறு அகன் கூனையில் ஊழ்முறை
முழுகி, நீர்க்கருங்காக்கை முளைக்குமே. (4747)

(கருப்பேந்திரம்-கருப்பு இயந்திரம்/கரும்பாலை; குழுவும்-திரளும்; குட்டம்-மடு/சிறியநீர்நிலை/குளம்; கொளா-கொண்டு/எண்ணி; ஊழ் முறை-வரிசையாக; இமிழ்தல்-ஒலித்தல்; கூன்-பாத்திரம்; முளைத்தல்-மேற்கிளம்புதல்);

கரும்பாலையில் கரும்பு பிழியும்போது எழுகின்ற ஒலி, பாடல் ஒலிபோல் ஒலிக்கும்; அதனின்று வழிகின்ற கருப்பஞ் சாற்றை ஒரு வாயகன்ற பெரிய பாத்திரத்தில் பிடித்து வைத்திருப்பார்கள். அதை மீன்கள் கூட்டமாக வாழ்கின்ற, குளம் என்று மயங்கி, கரிய நிறமுள்ள நீர்க்காக்கைகள் அதனுள் வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக முழுகி, அது மீன் வாழும் குளம் அல்ல என்று உணர்ந்து, பின் மேலெழுந்து, ஏமாற்றத்தோடு பறந்து போகும்.

கருப்பஞ்சாறு பிழிந்து வைக்கப்பட்டிருக்கின்ற கூனை என்னும் பாத்திரத்தை, மீன்கள் திரளாக வாழும் நீர்க்குளம் என்று தவறாகக் கருதி, நீர்க்காக்கைகள் அதனுள் ஒன்றன் பின் ஒன்றாக மூழ்கி எழும் என்பதாம். இந்த நீர்க்காக்கைகள் கரண்டம் எனவும் அழைக்கப்பெறும்; சோழ நாட்டின் நிலவளம் சிறப்பிக்கப்பட்டது.

49. பூ நெருங்கிய புள் உறு சோலைகள்
தேன் ஒருங்கு சொரிதலின் தேர்வு இல
மீன் நெருங்குறும் வெள்ளம் என, வெரீஇ
வானரங்கள், மரங்களின் வைகுமால். (4748)

(வானரங்கள்-குரங்குகள்; புள்-பறவைகள்/வண்டுகள் தேர்வுஇல-தெளியமுடியாமல்; வைகுதல்-தங்கியிருத்தல்; வெரீஇ-வெருவி/அஞ்சி);

மலர்கள் நெருங்கிப் பூத்திருப்பதால் அதில் வண்டுகள் அமர்ந்து தேன் பருகும். அங்கு நிறைந்திருக்கும் தேன் மிகுதியைச் சரியாகத் தெரிந்து கொள்ள இயலாமல், சோலையில் வாழும் குரங்குகள், இது மீன்கள் நெருங்கி வாழ்கின்ற வெள்ளப்பெருக்கு என்று தவறாகக் கருதி, அச்சம் கொண்டு, கீழிறங்கி வாராது, மரங்களிலேயே தங்கி இருக்கும்.

சோழ நாட்டின் பொழில் வளம் சிறப்பிக்கப்பட்டது. குரங்குகளுக்கு வெள்ளப் பெருக்கு அச்சத்தை விளைவிக்கக் கூடியது என்பது பெறப்படுகிறது.

50. தாறு நாறுவ வாழைகள்; தாழையின்
சோறு நாறுவ; தூங்குறும் மாங்கனி
நாறு நாறுவ; நாறு வளர்க்குறும்
சேறு நாறுவ செங்கழுநீர் அரோ! (4749)

(தாறு-குலைகள்; நாறுதல்-தோன்றுதல்/விளங்குதல்/மணம்வீசுதல்; தாழை-தாழம்பூ/தாழைமடல்; சோறு-உள்ளீடு; நாறு-நெல்நாற்றுக்கள்; தூங்குறும்-தொங்குகின்ற;)

வாழை மரங்கள் குலை தள்ளியிருக்கும், அவற்றின் அருகிலிருக்கும் தாழை மடலின் உள்ளீட்டின் நாற்றுக்கள் மணத்தைப்பெற்றிருக்கும்; அருகில் தொங்குகின்ற மாங்கனிகளின் மணம் நெல் நாற்றுக்களின் மணம் பெற்றிருக்கும்; அந்த நெல் வளர்வதற்குத் துணை புரியும் சேற்றுப்பகுதி, அவ்வரப்பில் செழித்துள்ள செங்கழுநீர்மலரின் மணத்தைப் பெற்றிருக்கும்.

''நாறுதல்'' என்ற ஒரு சொல் பலபொருள்களில் கையாளப் பட்டிருப்பதை நோக்குக. வாழைத்தாறு தாழையின் மணமும்; நெல் நாற்றுக்கள் மாங்கனியின் மணமும், நிலத்தின் சேறு செங்கழுநீர்மலரின் மணமும் பெற்று விளங்கும் செழிப்புடையது சோழநாடு என்பதாம்.

51. மலை நாடும் கடந்து பாண்டிய நாடு அடைதல்

அனைய பொன்னி அகன்புனல் நாடு ஒரிஇ,
மனையின் மாட்சி குலாம் மலை மண்டலம்
வினையின் நீங்கிய பண்பினர், மேயினார்
இனிய தென்தமிழ் நாடு சென்று எய்தினார். (4750)

(பண்பு-தன்மை;ஒரீஇ-ஒருவி/நீங்கி; மனை-இல்லறவாழ்வு; குலாம்-குலாவும்/விளங்கும்; மலை மண்டலம்-மலைநாடு/சேரநாடு; தென்மொழிநாடு-பாண்டியநாடு);

தீவினைகளின் பயனாகிய பாவங்களினின்று நீங்கிய தன்மையுடையவர்களும், நற்பண்புகள் மிக்கவருமான வானர வீரர்கள், அத்தகைய காவிரி பாயும் விரிந்த சோழ நாட்டை விட்டு நீங்கி, இல்லறச் சிறப்புகள் மிகுந்து விளங்கும் மலைகள் நிறைந்த மலையாள தேசம் என்னும் சேரநாட்டை அடைந்து, அங்கும் சீதையைக் காணப்பெறாமையால், இனிமையான தமிழ் பேசப்படும் தமிழ்நாட்டின் தென்பகுதியான பாண்டிய நாட்டை வந்து அடைந்தனர்.

சேரநாட்டை ''மனையின் மாட்சி குலாம் மலை மண்டலம்'' என்று மிகவும் தனிப் படக் கூறிய நயம் நோக்குக. அங்கு இல்லங்கள் என்று தனிச்சிறப்புடன் விளங்கும் இடங்களைக் குறித்ததாகவும் கொள்ளலாம். வானர வீரர்கள் இராமபிரான் பொருட்டு செயல் மேற் கொண்டிருக்கிறார்கள் என்பதால் ''வினையின் நீங்கிய பண்பினர்'' எனச் சிறப்பிக்கப்பட்டனர் என்க. மூன்று தமிழ்ச் சங்கங்கள் நிறுவித் தமிழை வளர்த்த காரணத்தால் ''இனிய தென்தமிழ் நாடு'' எனப் பாண்டிய நாடு சிறப்பிக்கப்பட்டது. சோழ நாட்டைப் ''புனல் நாடு என்று காவிரியைச் சிறப்பித்த பாங்கும் உணர்க. சேர நாட்டவர் இல்லற ஒழுக்கத்தில் தவறாது நடப்பவர் என்பதால் ''மனையின் மாட்சிகுலாம் மலை மண்டலம்'' என்றார் என்க.

52. பாண்டிய நாட்டின் பெருமை

அத்திருத்தகு நாட்டினை, அண்டர் நாடு
ஒத்திருக்கும் என்றால் உரை ஒக்குமோ?
எத்திறத்தினும், ஏழ்உலகும், புகழ்
முத்தும், முத்தமிழும் தந்து, முற்றலால். (4751)

(திருத்தகு-செல்வமேம்பாடு; அண்டர்நாடு-தேவருலகம்/ பொன்னுலகம்; ஒக்குமோ-பொருந்துமோ; முற்றுதல்- நிறைவுடையதாதல்; உரை-புகழ்);

அந்தச் செல்வ வளம் மிக்க பாண்டிய நாட்டை, தேவர்கள் வாழும் சுவர்க்கலோகத்திற்கு உவமையாகச் சொன்னால் அந்தப் புகழுரை ஒப்பானதாகுமோ? ஆகாது; காரணம், எந்த விதத்தில் பார்த்தாலும், ஏழு

உலகங்களிலும் வாழ்கின்றவர்களும் புகழ்ந்து பாராட்டுகின்ற முத்தினங்களையும், இயல், இசை, நாடகம் என்று மூன்று தமிழையும் இவ்வுலகுக்கே கொடுத்து சிறப்புப் பெற்றது அல்லவா பாண்டிய நாடு? எனவே அந்த ஒப்புமை நிறைவுடையதானது அல்ல.

''திருத்தகு நாடு'' என்று பாண்டிய நாட்டின் செல்வ மேம்பாட்டினைச் சிறப்பித்தார்; தேவர்கள் வாழும் நாட்டில் ஒரே ஒரு அமிழ்தம்தான் இருக்கும். ஆனால் பாண்டிய நாட்டில் இயல், இசை, நாடகம், என்னும் மூன்று அமிழ்தங்களும் கிடைக்கும் என்பதால், பாண்டிய நாடு தேவருலகத்திலும் சிறப்பு மிக்கது என்பதாம். ஏழ் உலகு என்பது கீழ் ஏழு உலகங்களையும் மேல் ஏழு உலகங்களையும் உட்கொண்டதாம் என்க. மேல் ஏழு உலகங்கள் - பூலோகம், புவலோகம், சுவலோகம், மகலோகம், கனலோகம், தவலோகம், சத்தியலோகம் என்பன. கீழ் ஏழு உலகங்கள்-அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம் என்பன.

53. அங்கும் சீதையைக் காணாது வருந்துதல்

என்ற தென்தமிழ் நாட்டினை எங்கணும்
சென்று, நாடித் திரிந்து, திருந்தினார்,
பொன்றுவாரில் பொருந்தினர் போயினார்
துன்று அல் ஓதியைக் கண்டிலர், துன்பினார். (4752)

(துன்று-செறிந்த; அல்-இருள்; ஓதி-கூந்தல்; பொன்றுதல்-இறத்தல்; திருந்தினர்-ஒழுக்கத்தில் சிறந்தவர்);

ஒழுக்கத்தில் சிறந்து விளங்குபவர்களாகிய வானரவீரர்கள், இவ்வாறு சிறப்பித்துச் சொல்லப்பட்ட பாண்டிய நாட்டில் எல்லா இடங்களிலும் சீதையைத் தேடித் திரிந்தனர்; அடர்ந்த இருள் போன்ற கரிய கூந்தலை உடைய சீதாதேவியை எங்கும் காணப் பெறாதவராயும், பாண்டிய நாட்டிற்கு அப்பால் தேடுவதற்கு ஏதும் நாடு இல்லாததாலும், வெறும் கடற்பரப்பே இருந்ததாலும், ஊக்கம் குறைந்து, வருந்தி உள்ளமும் உடலும் சோர்ந்து, இறக்கும் நிலையை எய்தியவர்களாய் செயலற்றுச் செல்லலானார்கள்.

54. மயேந்திர மலையில் கூடுதல்

வன்திசை களிறு அன்ன, மயேந்திரக்
குன்று இசைத்தது வல்லையில் கூடினார்,
தென்திசைக் கடல் சீகர மாருதம்
நின்று இசைக்கும் நெடுநெறி நீங்கினார். (4753)

(சீகரம்-நீர்த்திவலை; மாருதம்-காற்று; வல்லையில்-விரைந்து; இசைத்தல்-ஒலித்தல்);

சோர்வுற்ற வானர வீரர்கள் தெற்குத் திசையில் உள்ள கடல் நீர்த்துளிகளிலிருந்து எழும் காற்றின் ஓசை இடைவிடாது ஒலிக்கின்ற தென்தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்து, நீண்ட வழியில் நீங்கிப்போய், வலிய தெற்குத் திசையைக் காவல் புரியும் வாமனம் என்னும் யானை போன்று விளங்கும் மயேந்திரமலை என்ற, சுக்கிரீவன் குறிப்பிட்டுக்கூறிய மலையை, விரைவிற் சென்று அடைந்தனர்.

மயேந்திரமலை தென்திசைக்காவல் யானையான வாமனத்திற்கு ஒப்பு.

ஆறு செல்படலம் நிறைவுற்றது

15. சம்பாதிப் படலம் [63 பாடல்கள்]

''சம்பாதி'' என்ற சொல்லுக்கு ''நன்றாகப் பறப்பவன்'' என்பது பொருள். சம்பாதி அருணனின் மைந்தன்; சடாயுவின் அண்ணன், அருணன் கதிரவனின் தேர்ச்சாரதி. கழுகுகளின் அரசன் சம்பாதி. இவனுடைய செய்திகளைக் கூறும் பகுதி எனவிரியும். இது 63 பாடல்களைக் கொண்டது.

இப்படலத்துள், வானர வீரர்கள் மயேந்திர மலையில் ஒன்று கூடுதல்; சீதையை இதுவரை கண்டுபிடிக்காதது பற்றி வானரர்கள் வருந்துதல்; இந்தச் செய்தியை எப்படி சுக்கிரீவனுக்கும், இராமனுக்கும் தெரிவிப்பது எனத் திகைத்தல்; அங்கதன், தான் இந்தச் செய்தியுடன் சுக்கிரீவனைக் காண முடியாதென்றும், தான் இங்கேயே உயிர் துறத்தலே சாலும் என்றும் கூறுதல்; அதை மறுத்துச் சாம்பவன், இளவரசர் உயிர்துறத்தல் தக்கதன்று, என்று கூறுதல்; ஒவ்வொருவரும் ஒவ்வொன்று கூற, அனுமன் எல்லாவற்றையும் மறுத்து, ''இன்னும் நாம் உலகங்கள் எல்லாவற்றிலும் தேடவில்லை; தேட வேண்டிய இடங்கள் இன்னும் இருக்கின்றன. அங்கேயும் சென்று தேடுவோம். அங்கேயும் கிடைக்கவில்லையென்றால், இறுதியில் சடாயுவைப் போல் உயிர் துறத்தலே தக்கது'' என்று கூறுதல்; இவர்கள் உரையாடலில், தன் தமையன் சடாயுவின் பெயர் இடம் பெற்றதைக் கேட்ட, அருகிலிருந்த சம்பாதி விரைந்து அங்கு வந்து சேர்தல். அவனைக் கண்டு வானரர்கள் அஞ்சி ஓடுதல்; அனுமனும் முதலில் இவன்தான் இராவணன் போலும் என்று சந்தேகித்தல், பின்னர் அவன் உருவத்தையும் தோற்றத்தையும் நன்கு கண்டு, தன்முடிவை மாற்றிக் கொள்ளுதல்; சம்பாதி, ''சடாயுவைக் கொன்றவர் யார்?'' எனக் கேட்டலும், ''நீ உன்னைப் பற்றித் தெளிவாகச் சொன்னால், நானும் சடாயு பற்றிச் சொல்வேன்'' என்று அனுமன் கூறுதல்; சம்பாதி தன் வரலாற்றைக் கூறுதல்; அனுமன் ''சடாயு, இராவணனால் கொல்லப்பட்டான்'' என்று தெரிவித்தல்; சம்பாதி புலம்புதல்; அனுமன் தேற்றுதல்; சம்பாதி தேறி ''நிகழ்ந்தது என்ன?'' என்று கேட்க, அனுமன் எல்லா நிகழ்ச்சிகளையும் கூறுதல்; சம்பாதி, சடாயு இராமபிரான் பொருட்டு உயிர் துறந்தமைக்காக மகிழ்ந்து, பின்னர் அவனுக்கு நீர்க்கடன் கழித்தல்; சம்பாதி தனக்கு இறகுகள் முளைக்குமாறு, இராமநாமத்தை எல்லோரையும் தொடர்ந்து கூறச் சொல்லுதல்; அவ்வாறு அவர்கள் சொல்லக் கொஞ்சம் கொஞ்சமாக அவனது இறக்கைகள் முளைத்து, வளர்ந்து, பரவி, முன் இருந்த நிலையை அடைதல்; வானர வீரர்கள் அனைவரும் இராமநாமத்தின் பெருமையை உணர்ந்து வியப்பும்,

திகைப்பும் அடைதல்; இப்பொழுது சம்பாதி தன் முன்னைய வரலாற்றை உரைத்தல்; இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு சென்றதைத் தான் கண்டதாகவும், அவன் இலங்கை நோக்கிச் சென்று, அங்கே சீதையைச் சிறை வைத்திருப்பதாகவும் கூறுதல்; பின்னர் சம்பாதி வானரரிடம் விடை பெற்று விண்ணில் பறந்து செல்லுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

1. வானர வீரர்கள் தெற்கே கடலைக் காணுதல்

மழைத்த விண்ணகம் என முழங்கி, வான் உற
இழைத்த வெண்திரைக் கரம் எடுத்து, ''இலங்கையாள்
உழைத்தடம் கண்ணி'' என்று உரைத்திட்டு, ஊழின் வந்து
அழைப்பதே கடுக்கும் அவ்ஆழி நோக்கினார். (4754)

(இழைத்த-பரப்பிய; உழை-மான்; ஊழின்-முறையாக; கடுத்தல்-ஒத்திருத்தல்; ஆழி-கடல்; மழை-மேகம்);

நீருண்ட கரிய மேகம், மழைபெய்வதற்குத் தயார் நிலையில் உள்ள போது, விண்ணில் எழும் இடி முழக்கம் போல, வானளாவ உயர்ந்து நீண்ட தனது வெள்ளிய அலைகள் என்னும் கைகளை நீட்டி, ''மான் போன்ற மருண்ட பார்வையுள்ள கண்களையுடைய சீதை இலங்கையில்தான் இருக்கிறாள், வாருங்கள்'' என்று வானரர்களிடம் முறையே வந்து கூறி அழைப்பது போல் தோன்றும் அந்தத் தெற்குக் கடலைக் கண்டனர் அவ்வானர வீரர்கள்.

கடலின் அலைகளை அவற்றின் கைகளாகவும், ஊர், நதி, நாடு, புவி போன்றவற்றை பெண்பாலாகவும், மானின் கண்களைப் பெண்களின் கண்களுக்கு உவமித்துக் கூறுவதும் கவி மரபு. எனவேதான் இங்கே ''வெண்திரைக்கரம்'' என்றும்; ''இலங்கையாள்'' என்றும் கூறுகின்றார் என்க. ''பொன்னி திரைக் கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணியை'' என்பது பெருமாள் திருமொழி: இதே போன்று மூவரும் மிதிலைக்குள் புகும் போது, மதிலில் இருந்த கொடிகள் ''சீதை இங்கு மிதிலையில் தான் இருக்கிறாள், வாருங்கள்'' என்று அழைப்பது போல் இருந்தது என்று கூறியதை நினைவு கூர்க. ''மையறு மலரின் நீங்கி, யான் செய்த மாதவத்தின் வந்து, செய்யவள் இருந்தாள் என்று, செழுமணிக் கொடிகள் என்னும் கைகளை நீட்டி, அந்தக் கடிநகர்க் கமலச் செங்கண் ஐயனை, ஒல்லைவா என்று அழைப்பது போன்றதம்மா!'' என்பது பாடல் பகுதி. இதுபோலவே, சிலப்பதிகாரத்திலும், கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரை எல்லையை அடையும் போதும் அங்கு நிறைந்திருந்த கொடிகள் அவர்களை வரவேற்றன என்பதையும் ஒப்பிட்டு நோக்குக.

2. ஏமகூடத்தில் பிரிந்த வானரரும் இங்கு வந்து சேர்தல்

விரிந்து, "நீர்எண் திசை மேவி, நாடினீர்,
பொருந்திர் மயேந்திரத்து" என்று போக்கிய
அருந்துணைக் கவிகளாம் அளவுஇல் சேனையும்
பெருந்திரைக் கடல் எனப் பெயர்த்தும் கூடிற்றே. (4755)

(மேவுதல்-பரவிச்செல்லுதல்; நாடுதல்-தேடுதல்; பொருந்துதல்-கூடுதல்/சேருதல்; போக்கிய-பிரித்து அனுப்பப்பட்ட; கவிகள்-குரங்குப் படையினர்; பெயர்த்தும்-மீண்டும்; அளவுஇல்-கணக்கற்ற);

முன்பு ஏமகூடத்தில் அங்கதனால், "நீங்கள் எட்டுத்திசைகளிலும் சென்று பரந்து, எல்லா இடங்களிலும் தேடியபின், மயேந்திர மலையினிடத்தில் வந்து சேருங்கள்" என்று பிரித்து அனுப்பப்பட்ட அருமையான துணைவர்கள் போன்ற குரங்குகளின் கணக்கற்ற படை வீரர்களும், பெரிய அலைகளைக் கொண்ட கடல் என்று சொல்லும்படியாக, மீண்டும் வந்து ஒன்று சேர்ந்தனர்.

3. ஒருவராலும் சீதையைக் கண்டுபிடிக்க முடியவில்லையே என வருந்துதல்

யாவரும் அவ்வயின் எளிதின் எய்தினார்;
பூவரு புரிகுழல் பொருஇல் கற்புடைத்
தேவியைக் காண்கிலர்; செய்வது ஓர்கிலார்;
நாஉறக் குழறிட நவில்கின்றார் அரோ! (4756)

(அவ்வயின்-அவ்விடத்தில்; வருதல்-தங்குதல்; புரி-பின்னப்பட்ட; பொருஇல்-ஒப்பற்ற; ஓர்தல்-அறிதல்; உற-மிகவும்; நவில்தல்-பேசுதல்);

முன்பு பிரிந்து சென்ற எல்லோரும் இப்போது மயேந்திர மலையினிடத்தில் வந்து ஒன்று கூடினர். செந்தாமரை மலரில் வீற்றிருப்பவளும், மலரணிந்திருப்பவளும் பூமிதேவி ஈன்றெடுத்தவளும், பின்னப்பட்ட கூந்தலையுடையவளும், ஒப்பற்ற கற்பினைஉடையவளுமானசீதாதேவியைக்காணமுடியாதவர்களாகவும், இப்போது என்ன செய்வது என்பது பற்றித் தீர்மானிக்க முடியாதவர்களாகவும், நாக்கு மிகவும் குழறும் வண்ணம் நடுக்கமுற்றுத் தங்களுக்குள் ஏதேதோ பேசிக்கொண்டார்கள்.

4. தமக்குள் வருந்திக் கூறிக் கொள்ளுதல்.

"அற்றது சொன்ன நாள் அவதி; காட்சியும்
உற்றிலம்; இராகவன் உயிரும் பொன்றுமால்;
கொற்றவன் ஆணையும் குறித்து நின்றனம்;
இற்றது நம் செயல் இனி" என்று எண்ணினார். (4757)

(அவதி-எல்லை; அற்றது-முடிந்தது; கொற்றவன்-மன்னன்; குறித்து-கருத்தில் கொண்டு; நிற்றல்-தேடுதல்; இற்றது-தீர்ந்தது; எண்ணுதல்-ஆலோசித்தல்/சிந்தித்தல்);

''நமது மன்னன் கூறிய கால எல்லையும் முடிந்து போயிற்று; இதுவரை சீதையையும் நாம் காணவில்லை; இச்செய்தியை அறிந்தால் இராமனும் உயிரிழந்து விடுவான்; நம் மன்னனாகிய சுக்கிரீவனது கட்டளையையும் கருத்தில் கொண்டு செயல்பட்டோம்!. இனிமேல் நம்மால் செய்யக்கூடியது எதுவும் இல்லை'' என்று தமக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தனர் அவ்வானர வீரர்கள்.

''கொற்றவன் ஆணை'' என்பது, முப்பது நாட்களுக்குள் கண்டுபிடிக்க முடியாவிட்டால், தமக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பது பற்றியது. எங்கும் காணாமையால் இனிமேல் என்ன செய்வது என்று திகைத்தனர் என்பதாம்.

5. என்ன செய்யலாம் என்று ஆலோசித்தல்

''அருந்தவம் புரிதுமோ? அன்னது அன்று எனின்,
மருந்து அரு நெடுங்கடு உண்டு மாய்துமோ?
திருந்தியது யாது? அது செய்து தீர்தும்'' என்று
இருந்தனர், தம் உயிர்க்கு இறுதி எண்ணுவார். (4758)

(இறுதி-அழிவு; மருந்து-மாற்று; கடு-நஞ்சு; மாய்தல்-இறத்தல்; திருந்தியது-சிறந்தது/குற்றமற்றது; தீர்தல்-முடித்தல்; இருத்தல்-தங்குதல்);

தாம் எங்கு தேடியும் சீதையைக் கண்டுபிடிக்க முடியாததாலும், இச்செய்தியைக் கிட்கிந்தைக்குச் சென்று சுக்கிரீவனிடம் கூறினாலும் தங்களுக்கு உயிரிழத்தலாகிய தண்டனை உறுதி என்பதாலும், கிட்கிந்தைக்குச் செல்லாமல், ''இங்கேயே வடக்கிருந்து அரிய தவத்தைச் செய்து உயிரைவிட்டு விடுவோமா? அது சரியாக இல்லாது என்றால், மாற்று மருந்தே இல்லாத, அருமையான, கொடிய நஞ்சை உட்கொண்டு இறந்து விடுவோமா? இவ்விரண்டில் எது சிறந்தது? எது குற்றமற்றதோ அதை விரைவில் செய்து முடிப்போம்'' என்று யோசனை செய்து கொண்டு, சிறிது நேரம் அம்மலையிலேயே இருந்தனர் அவ்வானர வீரர்கள்.

அருந்தவம் என்பது வடக்கிருந்து உயிர்விடுதல், உண்ணாநோன்பு மேற்கொண்டு, இறைவனையே நினைந்து, வேறு செயலற்று, தருப்பை மீது அமர்ந்திருந்தால், உயிர்தானே போய்விடும். இது வடக்கிருத்தல் எனப்படும். இராமபிரானின் பொருட்டுத் தேடிச் சென்றும், தம்மால் கண்டுவர முடியவில்லையே என்ற ஆதங்கத்தால், தாம் இனி உயிர் வாழ்தலில் பயனில்லை என்று கருதி, உயிர்விடத் துணிந்தனர் என்பதும் பொருந்தும்.

6. அங்கதன் கூறுதல்

கரை பொருகடல் அயல் கனக மால் வரை
நிரை துவன்றிய என, நெடிது இருந்தவர்க்கு,
''உரை செயும் பொருள் உளது'' என உணர்த்தினான்,
அரசிளங் கோளரி, அயரும் சிந்தையான். (4759)

(பொருதல்-மோதுதல்; அயல்-பக்கம்; கனகம்-பொன்; கனகமால் வரை-மேருமலை; நிரை-வரிசை; துவன்றுதல்-நெருங்குதல்; நெடிது-மிகுதியாகப் பரவி; அயர்தல்-சோர்வுறுதல்; கோளரி-வலிய சிங்கம்; உணர்த்துதல்-தெரிவித்தல்);

அரசிளங்குமரனும், வலிய சிங்கம் போன்ற ஆற்றலுடையவனுமான அங்கதன், தளர்ந்த மனத்தையுடையவனாய், கரையை வந்து மோதுகின்ற அலைகளையுடைய தென்கடலுக்கு அருகில், பொன்மயமான மேரு மலையை வரிசையாக வந்து நெருங்கி நின்றது போலத் தோன்றும், நீண்ட மிகுதியான வானர வீரர்களுக்கு ''நான் உங்களுக்குக் கூறவேண்டிய செய்தி ஒன்று உள்ளது'' என்று கூறத் தொடங்கினான்.

கனகமால்வரை-பொன் மயமான பெரிய மேருமலை என்று பொருள் தந்தாலும், அது வானரர்கள் நிறத்திற்குப் பொருந்தாது, காரணம் வானரங்கள் வெண்ணிறமானவை. எனவே இது உருவத்திற்கு உரைத்த உவமை எனக் கொள்க.

7\. ''நாடி நாம் கொணருதும், நளினத்தாளை, வான்
மூடிய உலகினை முற்றும் முட்டி'' என்று
ஆடவர் திலகனுக்கு அன்பினர் எனப்
பாடவம் விளம்பினம்; பழியின் மூழ்கினம்!''. (4760)

(நளினம்-தாமரை மலர்; பாடவம்-வல்லமை/வீண்பெருமை; முட்டி-பரவிச்சென்று/எதிரிட்டுச் சென்று; பழி-நிந்தனை; ஆடவர் திலகன்-புருஷோத்தமன்; மூழ்குதல்-உள்ளாதல்);

''தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் அம்சமான சீதாதேவியை, இந்த வானம் கவிந்த உலகத்தில் எல்லா இடத்திலும் தேடிச் சென்று, அவளிடமிருந்து ஏதாவது ஒரு செய்தியை உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பிப்போம்'' என்று, ஆண்களிற் சிறந்தவனாகிய இராமபிரானிடம், மிக்கஅன்பு கொண்டவர்போல நாம்வீண்வாய்ப்பெருமை கொண்டோம். இப்பொழுது அவளைக் காணாமலும், அவள்பற்றிய எந்தச் செய்தியும் அறியாமலும், வீண் பழிப்புக்கு ஆளாகி விட்டோம்'' என்று அங்கதன் வானரர்களை நோக்கிக் கூறினான்.

அவர்களுக்கு இடப்பட்ட கட்டளை, சீதை பற்றிய செய்தியைக் கொணர்தலே அன்றிச் சீதையையே கொணர்தல் அல்ல என்பதை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். திலகம் நெற்றிக்கு விளக்கம் அளிப்பது

போல, இராமன் ஆடவர் இனத்திற்கே விளக்கம் அளித்தான் என்பதால் ''ஆடவர் திலகன்'' என்றார் எனக.

8. ''செய்தும்'' என்று அமைந்தது, செய்து தீர்ந்திலம்;
நொய்து சென்று, உற்றது நுவலகிற்றிலம்;
''எய்தும் வந்து'' என்பது, ஓர் இறையும் கண்டிலம்;
''உய்தும் என்றால், இது ஓர் உரிமைத்து ஆகுமோ?'' (4761)

(அமைந்த-இசைந்த/உடன்பட்ட/ஏற்றுக்கொண்ட; தீர்தல்-முடித்தல்; நொய்து-விரைந்து; நுவல்தல்-கூறுதல்; இறையும்-சிறிதும்; உய்தல்-பிழைத்திருத்தல்; உற்றது-நிகழ்ந்தது);

''நாங்கள் செய்து விடுவோம்'' என்று நாம் ஏற்றுக்கொண்ட செயலாகிய சீதையைத் தேடுதலை, நாம் செய்து முடிக்கவில்லை; குறித்த காலத்திற்குள் ஏதேனும் தகவல் கிடைக்குமா என்றால் அதுவும் கிடைக்க இல்லை; நாம் விரைவாகச் சென்று அந்நிகழ்ச்சிகளை அவர்களுக்கு எடுத்துக் கூறும் ஆற்றலும் இல்லாமற் போனோம்; தவணை கடந்தாலும், அக்காரியம் எளிதில் கைகூடும் என்று சொல்வதற்கும் ஒரு சிறிதும் இடம் இல்லாது போயிற்று; இந்நிலையில், நாம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அது நாம் மேற்கொண்ட நட்புக்குத் தகுதியான காரியம் ஆகுமா? ஆகாது'' என்கிறான் அங்கதன்.

செய்து முடிக்கவில்லை என்பது இறந்தகாலம்; இதைச்சென்று சொல்ல முடியவில்லை என்பது நிகழ்காலம்; இனிமேலாவது காரியம் கைகூடுமா என்பது தெரியவும் இல்லை என்பது எதிர்காலம்; எனவே இனி நாம் உயிர் வாழ்தலில் பயனில்லை என்கிறான் அங்கதன் என்பதாம்.

9. தான் இறந்து போவதாக அங்கதன் கூறுதல்

''எந்தையும் முனியும்; எம்இறை இராமனும்
சிந்தனை வருந்தும்; அச்செய்கை காண்குறேன்;
நுந்துவென் உயிரினை; நுணங்கு கேள்வியீர்!
புந்தியில் உற்றது புகல்திராம்'' என்றான். (4762)

(நுணங்கு-நுணுகிய/நுட்பமான; முனிதல்-சினத்தல்; இறை-தலைவன்; நுந்துதல்-உயிர் தள்ளுதல்/விடுதல்; புந்தி-மனம்/அறிவு; புகல்தல்-கூறுதல்; சிந்தனை-மனம்);

''குறித்த காலத்திற்குள், குறித்த செயலைச் செய்து முடிக்காமலும், அது பற்றிய செய்திகளை அனுப்பாமலும் இவ்வளவு நாள் சுற்றித் திரிந்த நாம், இப்பொழுது வெறுங்கையுடன் கிட்கிந்தைக்குச் சென்றால், என் தந்தை யாகிய சுக்கிரீவன் கோபித்துக் கொள்வான்; நம்முடைய தலைவனான இராமனும் மனம் வருத்தம் கொள்வான். அந்த நிகழ்ச்சிகளை என் கண்களால் காணும் ஆற்றல் என்னிடம் இப்போது இல்லை; எனவே நான் என் உயிரை வலுவில் போக்கிக் கொள்வது என்று தீர்மானித்திருக்கிறேன்;

நுட்பமான கல்வி கேள்வி அறிவுடையவர்களே! நீங்கள் உங்கள் மனத்தில் பட்டதையும், அறிவில் தோன்றுவதையும் ஆராய்ந்து கூறுவீர்களாக!'' என்றான் அங்கதன்.

''நுந்துவென்'' என்பது உயிரைத் தானே வலிதிற் போக்கிக் கொள்ளுதலைக் குறிக்கும். அந்தத் தீர்மானத்திற்குத் தள்ளப்பட்டிருக் கிறான் அங்கதன் என்பதைக் குறிக்கவே ''நுந்துதல்'' என்ற சொல்லை இங்கே கவிஞன் பயன்படுத்தியிருக்கிறான் என்க. இங்கே வான்மீகம், அங்கதன் சுக்கிரீவன் தன்னிடம் அன்பும், பாசமும் அற்றவன் என்றும், வஞ்சகச்செயலுடையவன் என்றும் அவனை வெறுத்தும், பழித்தும் கூறியதாகக் கூறும், ஆனால் கம்பன் இருவரையும் உயர்ந்த நிலையிலேயே வைத்துப் பேசியிருப்பது உணர்க.

10. சாம்பவன் கூறுதல்.

''விழுமியது உரைத்தனை; விசயம் வீற்றிருந்து,
எழுவொடும் மலையொடும் இகலும் தோளினாய்!
அழுதுமோ இருந்து? நம் அன்பு பாழ்படத்
தொழுதுமோ சென்று?'' எனச் சாம்பன் சொல்லினான். (4763)

(விசயம்-விஜயம்/வெற்றித்திருமகள்; எழு-தூண்; இகல்-மாறுபாடு; விழுமியது-சிறந்தது);

''வெற்றித் திருமகள் நிலைபெற்று வீற்றிருப்பதும், தூண் போன்ற வலிமையுடையதும், மலை போன்று அசையாததுமான தோள்களையுடையவனே! அங்கத! மிகச் சிறந்ததையே உரைத்தாய்; நீ இறந்துவிட்டாய் என்றால், நாங்கள் இங்கே இருந்து கொண்டு, உன் இழப்பிற்காக அழுது கொண்டிருப்போமா? அல்லது நமது அன்புத்தன்மை சீர்குலையும்படி, கிட்கிந்தை சென்று நீ இறந்து போனாய் என்று சுக்கிரீவனிடமும் இராமனிடமும் சொல்லி அவர்களை வணங்கிக் கொண்டிருப்போமா?'' என்று சாம்பவான் மேலும் கீழ்க்கண்டவாறு கூறினான்.

விசயம் என்பது வெற்றி என்ற பொருள் தந்து, வெற்றித்திருமகளாகிய விஜயலட்சுமியைக் குறித்தது என்க. ''எழுவொடும் மலையொடும் இகலும்தோள்'' என்பது, தூணையும், மலையையும்காட்டிலும்மேம்பட்ட வலிய தோள் என்பதைக் குறிக்கும். இங்கிருந்து அழுதலும் ஆகாது, அங்கு போய்த் தொழுதலும் ஆகாது என்பது கருத்து. என்றால் நீ உயிர் விடக் கூடாது என்கிறான் சாம்பவன் என்பதாம். நீ உயிர் துறந்தால், நாங்களும் உடனே உயிர் விடுவோமேயன்றி இங்கிருந்து அழுதுகொண்டிருக்கவும் மாட்டோம், அங்கு சென்று செய்தியைக் கூறித் தொழவும் மாட்டோம் என்று கூறுவதும் பொருந்தும்.

11. ''மீண்டு இனி ஒன்று நாம் விளம்ப மிக்கது என்?
மாண்டுறுவது நலம் என மதித்தனம்;
ஆண்தகை அரசிளங்குமர! அன்னது
வேண்டலின், நின் உயிர்க்கு உறுதி வேண்டுமால்.'' (4764)

(ஆண்தகை-வீரத்தன்மை; விளம்ப-கூற; மிக்கது-சிறந்தது; மாண்டுறுவது-இறந்துபடுவது; மதித்தல்-துணிதல்; உறுதி- அழிவின்மை);

சாம்பவன் அங்கதனை நோக்கி, ''ஆண்களிற் சிறந்த வீரத்தன்மை கொண்ட, இளவரசனே! அங்கத! நாங்கள் இனிமேல் கிட்கிந்தைக்குத் திரும்பச் சென்று சிறப்பாகக் கூறுவதற்கு என்ன இருக்கிறது? எனவே நாங்கள் இங்கேயே இறந்து விடுதலே நன்மை பயக்கும் என்று துணிந்து விட்டோம். நாங்கள் அவ்வாறு விரும்புவதால், இளவரசனாகிய நீ உயிர் துறக்காது, ''வாழ்ந்திருத்தலாகிய உறுதி எங்களுக்கு வேண்டும்'' என்கிறான் சாம்பவன்.

சாம்பவன் தாங்கள் எல்லோரும் இங்கேயே இறந்துவிடுதலும், அரசிளங்குமரனாகிய அங்கதன் மட்டும் உயிருடன் மீண்டு சென்று செய்தி கூறுதலுமே தக்கது என்று கூறினான் என்பதாம். இளவரசனாக இருப்பதால், அங்கதன் உயிர் வாழ்தல் கிட்கிந்தை அரசுக்கு இன்றியமையாதது என்பது சாம்பவன் கருத்து.

12. அங்கதன் மீண்டும் மறுத்துரைத்தல்

என்று அவன் உரைத்தலும், இருந்த வாலி சேய்,
''குன்று உறழ்ந்த என வளர் குவவுத் தோளினீர்!
பொன்றி நீர் மடிய, யான் போவனேல், அது
நன்றதோ? உலகமும் நயக்கற் பாலதோ?'' (4765)

(உறழ்-ஒத்த; குவவு-திரண்ட; பொன்றுதல்-இறத்தல்; நயக்கற்பாலது-விரும்பும் தன்மை உடையது);

என்று சாம்பவன் கூறியதும், அதனைக் கேட்டுக் கொண்டிருந்த வாலியின் மகனான அங்கதன், ''மலைபோலும் வளர்ந்த, திரண்ட தோள்களை உடையவர்களே! நீங்கள் எல்லோரும் மடிந்து போகவும், நான் மட்டும் தனியே கிட்கிந்தைக்கு உயிருடன் திரும்பிச் சென்றேனானால் அது நன்றாயிருக்குமோ? இவ்வுலகில் உள்ள சான்றோர்களுக்கும் அது விரும்பும் தன்மையாய் அமையுமோ? நன்றாகச் சிந்தனை செய்யுங்கள்'' என்றான்.

உலகம் என்பது உலகத்திலுள்ள சான்றோர்களையே குறிக்கும்.

13. ''சான்றவர் பழி உரைக்கு அஞ்சி, தன் உயிர்
போன்றவர் மடிதர, போந்துளான் என
ஆன்றபேர் உலகுளோர் அறைதல் முன்னம், யான்
வான் தொடர்குவேன்'' என, மறித்தும் கூறுவான். (4766)

(மடிதர-இறந்துபட; போந்துளான்-வந்துள்ளான்; ஆன்ற-உயர்ந்த/நிறைந்த; அறைதல்-கூறுதல்; தொடர்குதல்-அடைதல்; மறித்தும்-மீண்டும்);

''உலகத்தில் உள்ள பெரியவர்களின் பழிப்புரைக்குப் பயந்து கொண்டு, தன் உயிர் போன்ற சாம்பவன் முதலான வானர வீரர்கள் அனைவரும் உயிரிழக்க, இவன் மட்டும் சிறிதும் அச்சம் கொள்ளாது உயிருடன் திரும்பி வந்திருக்கிறானே'' என்று, உயர்ந்த பெரிய உலகத்திலுள்ளவர்கள் கூறுவதற்கு முன்பே, நான் என் உயிரை மாய்த்துக் கொண்டு வானுலகம் புகுவேன்'' என்று மீண்டும் மறுத்துரைத்தான் அங்கதன்.

இராம காரியத்தால் இறந்தவர், வானுலகம் செல்வர் என்ற கருத்துக் கொண்டு ''வான் தொடர்குவென்'' என்றான் என்க.

14. பின் விளைவுகளையும் எண்ணிக் கூறுதல்.

''எல்லை நம் இறுதி ஆய்க்கும், எந்தைக்கும் யாவரேனும்
சொல்லவும் கூடும்; கேட்டால் துஞ்சவும் அடுக்கும்; கண்ட
வில்லியும், இளையகோவும் வீவது திண்ணம்; அச்சொல்
மல்லர் நீர் அயோத்தி புக்கால் வாழ்வரோ பரதன் மற்றோர்?'' (4767)

(எல்லை-முடிவு; இறுதி-இறப்பு; துஞ்சுதல்-இறத்தல்; அடுக்கும்-நேரும்; வில்லி-இராமன்; இளையகோ-இலக்குவன்; வீவது-இறப்பது; மல்லல்-வளப்பம்; ஆய்-தாய்; புக்கால்-புகுந்தால்/எட்டினால்);

''நாம் இங்கு இறந்து போய் விட்டோம் என்கிற நம் முடிவுச்செய்தியை, இங்குள்ள யாரேனும் என்னுடைய தாயாகிய தாரைக்கும், எனது சிறிய தந்தையாகிய சுக்கிரீவ மன்னனுக்கும் போய்ச் சொல்லுதல் கூடும்; அது கேட்டால் உடனே அவர்கள் இறந்து போகவும் கூடும்; அதனை நேரில் காண்கிற வில்வீரனான இராமனும், அவன் தம்பியான இலக்குவனும் உயிரிழப்பது உறுதி; அந்தச் செய்தி, நீர்வளம் உடைய அயோத்தி நகரைச் சென்றடைந்தால், பரதனும் மற்றவர்களும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பார்களோ?'' என்று கேட்டான் அங்கதன்.

துஞ்சுதல் என்பது சாதல் என்பதன் மங்கல வழக்கு; நாம் இங்கு இறந்து போனால், நம்மைச் சார்ந்தவர் அனைவரும் இறந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது; எனவே அதைச் செய்தல் தக்கதன்று என்பது அங்கதன் கருத்து. அயோத்தி என்பது பகைவரால் வென்று அடைய முடியாத நகரம் என்னும் பொருளுடைய சொல். பரதன் என்பது எல்லாப் பாரத்தையும் தாங்கும் பொறுமையும், வலிமையும் உடையவன் என்று பொருள் படும்.

15. ''பரதனும், பின் உளோனும், பயந்து எடுத்தவரும், ஊரும்
சரதமே முடிவர்; கெட்டேன்; சனகி என்று உலகம் சாற்றும்
விரத மாதவத்தின் மிக்க விளக்கினால், உலகத்து யார்க்கும்
கரை தெரிவு இலாத துன்பம் விளைந்தவா'' எனக் கலுழ்ந்தான் (4768)

(பின்னுளோன்-சத்துருக்கனன்; பயந்து-பெற்றெடுத்து; ஊர்-அயோத்தி; சரதம்-மெய்/சத்தியம்; விரதம்-நோன்பு; கரை-எல்லை; தெரிவு இலா-காணமுடியாத; கலுழ்தல்-கண்ணீர் சிந்துதல்/அழுதல்; முடிவு-இறந்து போதல்; சாற்றுதல்-பாராட்டுதல்);

மேலும் அங்கதன், ''பரதனும், அவன் பின் பிறந்தவனாகிய தம்பி சத்துருக்கனனும், இவர்கள் நால்வரையும் பெற்றெடுத்து வளர்த்த கோசலை, சுமித்திரை, கைகேயி ஆகிய மூன்று தாய்மார்களும், அயோத்தி நகர மக்களும், இச்செய்தி கேட்டால் நிச்சயமாக, உயிர் விடுவர். இது சத்தியம்; அந்தோ! சானகி என்று உலகத்தரால் பாராட்டப்படுபவளும், நோன்பு கொண்டிருப்பவளும்; சிறந்த தவத்தை உடையவளும், குடும்பத்திற்கு விளக்குப் போன்று திகழ்பவளுமான சீதையினால், இவ்வுலகத்தில் உள்ள எல்லோருக்கும், எல்லையற்ற துன்பம் உண்டாகி விட்டதே?'' என்று கலங்கிக் கண்ணீர் சிந்தினான் அங்கதன்.

ஊர் என்பது அயோத்தி என்று பொருள் தந்து, அவ்வூர் மக்களைக் குறிக்கும். கெட்டேன் என்பதை இரக்கக் குறிப்பாகக் கொள்ளுதல் பொருந்தும்;

16. சாம்பவன் மீண்டும் வேண்டுதல்

பொருப்பு உறழ் வயிரத் திண்தோள்,
பொருசினத்து ஆளி போல்வான்,
தரிப்பு இலாது உரைத்த மாற்றம்,
தடுப்ப அரும் தகைத்தது ஆய
நெருப்பையே விளைத்த போல,
நெஞ்சமும் மறுகக் கேட்டு,
விருப்பினால் அவனை நோக்கி,
விளம்பினன் எண்கின் வேந்தன். (4769)

(பொருப்பு-மலை; உறழ்-போன்ற; வயிரம்-உறுதி; பொருதல்-போர்புரிதல்/மோதுதல்/தாக்குதல்; ஆளி-சிங்கம்; தரித்தல்-பொறுத்துக் கொள்ளுதல்; தகைமைத்து-தன்மையது; விளைத்தல்-மூட்டுதல்; மறுகுதல்-கலங்குதல்/தத்தளித்தல்/வருந்துதல்; எண்கு-கரடி; விருப்பு-அன்பு; மாற்றம்-பதில்);

மலையைப்போன்ற உறுதிவாய்ந்த வலிய தோள்களையுடையவனும், போர்புரிதற்குரிய சினத்தையுடைய சிங்கம்போல்பவனுமாகிய அங்கதன், பொறுக்கமாட்டாமல் கூறிய இந்தச் சொற்களை, தடுத்தற்கரிய நெருப்பையே மூட்டியதுபோல, உள்ளம் கலங்கக் கேட்ட கரடிகளின் அரசனான சாம்பவன், மிக்க அறிவு கொண்டு, அங்கதனை நோக்கிக் கீழ்க்கண்டவாறு கூறலானான்.

17. ''நீயும் நின் தாதையும் நீங்க, நின்குலத்
தாயம் வந்தவர்க்கு ஒரு தனையர் இல்லையால்;
ஆயது கருதினம்; அன்னது அன்று எனின்,
நாயகர் இறுதியும் நவிலற்பாலதோ?'' (4770)

(தாயம்-உரிமை; வந்தவர்-தோன்றியவர்; நீங்க-தவிர; தனையர்-புதல்வர்; நாயகர்-தலைவர்; இறுதி-முடிவு; நவிலுதல்-சொல்லுதல்);

''உன்னையும் உன் தந்தையையும் தவிர, உங்கள் குலமரபுக்கு உரியவரான வாரிசு பெறக்கூடிய புதல்வர்கள் வேறு யாரும் இல்லை; எனவே தான் நீ உயிர் துறக்கக் கூடாது என்று கருதி, நீ சுக்கிரீவனைச் சென்று சேர வேண்டும் என்று கூறினோம்; அவ்வாறு இல்லாவிட்டால்; தலைவர்களின் இறுதி முடிவைப் பற்றி நம்மால் பேசவும் முடியாமோ?'' என்றான் சாம்பவன்.

18. ''ஏகு நீ; அவ்வழி எய்தி; இவ்வழித்
தோகையைக் கண்டிலா வகையும் சொல்லி எம்
சாகையும் உணர்த்துதி; தவிர்தி சோகம்; போர்
வாகையாய்!'' என்றனன் வரம்புஇல் ஆற்றலான். (4771)

(வரம்புஇல்-எல்லையற்ற; வாகை-வெற்றிமாலை; ஏகுதி-செல்வாயாக; தோகை-மயில்; சாகை-சாக்காடு/இறப்பு);

எல்லையற்ற ஆற்றல் கொண்ட சாம்பவன், அங்கதனை நோக்கி, ''போர்புரிந்து வெற்றிமாலை சூடும் ஆற்றல் பெற்றவனே! நீ இங்கிருந்து திரும்பிச் செல்; இராம, சுக்கிரீவரை அடைந்து, இங்கு எங்கும் மயில் போன்ற சாயலை உடைய சீதாதேவியைக் காண முடியாத தன்மையையும் அவர்களுக்குக் கூறி, எங்களுடைய மரணச் செய்தியையும் தெரிவிப்பாயாக; நீ வருத்தத்தைத் தவிர்ப்பாயாக!'' என்றான்.

19. அனுமன் இடைமறித்துக் கூறுதல்.

அவன் அவை உரைத்த பின், அனுமன் செப்புவான்;
''புவனம் மூன்றிலும் ஒரு புடையில் புக்கிலம்;
கவனம் மாண்டவர் எனக் கருத்து இலர் எனத்
தவன வேகத்தினீர்! சலித்திரோ?'' என்றான். (4772)

(தவனம்-சூரியன்; புவனம்-உலகம்; புடை-சிறை இடம்/புறம்/பக்கம்; கவனம்-வேகம்; கருத்து-விவேகம்; சலித்தல்-சோர்வடைதல்/வெறுப்படைதல்; மாண்டது-நீங்கியது);

அவ்வாறு சாம்பவன் கூறிய பிறகு, அனுமன் கீழ்க்கண்டவாறு கூறலானான். ''சூரியன் போன்ற வேகத்தை உடையவர்களே! நாம் இம் மூவுலகங்களிலும் ஒரு பக்கத்தில் கூட முழுவதுமாக இன்னும் புகுந்து தேடிப் பார்க்கவில்லை; அதற்குள்ளாகவே வேகம் குறைந்தவர்

போலவும், விவேகமும், கண்டுபிடிக்கும் எண்ணமும் அற்றவர்கள் போலவும் பேசி வெறுப்புற்றுச்சோர்வடைவீர்களோ?'' என்றான்.

புடை என்பது மற்றும் உள்ள பக்கங்களைக் குறித்தது. உங்களிடம் எல்லா ஆற்றலும், வலிமையும் இருந்தும், இன்னும் தேடவேண்டிய இடங்கள் மிகுதியாக இருந்தும், அதற்குள் நீங்கள் இவ்வாறு சோர்வுறுதல் தக்கதன்று என்று அனுமன் இடித்துரைக்கத் தொடங்கினான் என்பதாம்.

20. பின்னரும் கூறுவான், ''பிலத்தில், வானத்தில்
பொன்வரைக் குடுமியில் புறத்துள், அண்டத்துள்
நன்னுதல் தேவியைக் காண்டும் நாம் எனில்,
சொன்ன நாள் அவதியை இறைவன் சொல்லுமோ?'' (4773)

(பிலம்-பாதாளம்; பொன்வரை-மேருமலை; குடுமி-சிகரம்; புறத்து-அப்பால்; நுதல்-நெற்றி; அவதி-எல்லை; சொல்லுதல்-வற்புறுத்துதல்; இறைவன்-தலைவன் (சுக்கிரீவன்);

மேலும், அனுமன் வானர வீரர்களை நோக்கி, ''பாதாளத்திலும், விண்ணுலகத்திலும், பொன்மயமான மேருமலையின் உச்சியிலும், இவ்வுலகத்துக்கப்பாலுள்ள பிற அண்டங்களிலும், தேடி நல்ல நெற்றியை உடைய சீதாதேவியை நாம் கண்டுபிடித்துவிட்டோம் என்றால், நம் தலைவனாகிய சுக்கிரீவன், தான் முன்பு விதித்த கால எல்லையாகிய முப்பது நாட்களை வற்புறுத்திக் கூறி, குற்றம் கூறுவானோ? மாட்டான்.'' என்றான்.

மூவுலகத்திலும் எஞ்சியிருக்கின்ற இடங்களில் எல்லாம் தேடிச் சீதா தேவியைக் கண்டுபிடித்து விட்டால் நம் அரசன் நம்மைப் பாராட்டுவாரே அன்றி, காலக் கெடு கடந்து ஏன் வந்தீர்கள்?'' என்று அதை ஒரு குற்றமாகக் கருதி, நம்மைத்தண்டிக்கமாட்டார். செயல்தான்முக்கியமேதவிரக்காலம் அல்ல என்று மீண்டும் கூறினான் என்பதாம். எனவே நாம் மேலும் சீதாதேவியைத் தேடிக் கொண்டு மற்ற இடங்களுக்குச் செல்வதே இப்பொழுது நாம் செய்யக் கூடியது என்றான் என்க. ஒரு அண்டத்துள் மூவுலகமும் அடங்கும். இது போல எண்ணற்ற அண்டங்கள் உள்ளன என்பது ஒரு புராணக் குறிப்பு; சூரபத்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆட்சி புரிந்தான் என்று கந்தபுராணம் கூறுகிறது.

21. ''நாடுதலே நலம் இன்னும் நாடி, அத்
தோடு அலர் குழலி தன் துயரில் சென்று, அமர்
வீடிய சடாயுவைப் போல் வீடுதல்,
பாடவம் அல்லது பழியிற்றாம்'' என்றான். (4774)

(நாடுதல்-தேடுதல்; தோடு-மலர்; அலர்தல்-விரிதல்; குழல்-கூந்தல்; அமர்-போர்; வீடுதல்-இறத்தல்; பாடவம்-பெருமை; பழி-நிந்தனை);

''நாம் இன்னும் அவளைத் தேடுதலே நன்மை பயப்பதாகும்; அவ்வாறே தேடி, அந்த இதழ்கள் விரிந்த மலர்களை அணிந்த கூந்தலையுடைய சீதாதேவியின் துயரத்தைக் கண்டு, இராவணனுடன் போர் செய்ய எதிர்த்துச் சென்று மடிந்த சடாயுவைப் போல நாமும் அவளைத் தேடும் செயலில் உயிர்விடுதலே பெருமை உடையதாகும்; அவ்வாறின்றி இப்பொழுதே வீணே உயிர்விடுதல் என்பது பழிப்புக்கே இடமாகும்'' என்றான் அனுமன்.

ஒரு புனிதமான செயலில் ஈடுபட்டு அதனால் உயிர்விட நேர்ந்தால் அது பெருமையுடையதாகும்; அது அல்லாது, அச்செயலில் தோல்வி நேரும் என்று நாமே கருதிக் கொண்டு உயிரை விடுதல் என்பது இகழ்ச்சிக்கும், பழிப்புக்கும் உரிய செயலாகும் என்று அறிவுறுத்தினான் அனுமன் என்பதாம்.

22. சம்பாதி வானர வீரர்கள் அருகில் வருதல்

என்றலும், கேட்டனன் எருவை வேந்தன்; தன்
பின், துணையாகிய பிழைப்புஇல் வாய்மையான்
பொன்றினன் என்ற சொல்; புலம்பும் நெஞ்சினான்,
குன்றுஎன நடந்து, அவர்க் குறுகல் மேயினான். (4775)

(எருவை-கழுகு; பிழைப்புஇல்-தவறாத; துணை-சகோதரன்; பொன்றுதல்-இறத்தல்; புலம்புதல்-வருந்துதல்; குறுகுதல்-நெருங்குதல்);

என்று இவ்வாறு அனுமன் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த கழுகுகளின் தலைவனான சம்பாதி, தனக்குப் பின் பிறந்தானாகிய இளைய சகோதரனும், குற்றமற்றவனும், வாய்மை பேசுபவனுமாகிய சடாயு, இறந்துவிட்டான் என்ற சொற்களைக் கேட்டு, மிக்க வருந்தும் மனத்தையுடையவனாய், மேலும் அவன் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளும் வண்ணம், ஒரு மலை நடந்து வருவது போல நடந்து வந்து, அவ்வானர வீரர்கள் இருக்குமிடத்தை எய்தினான்.

தன் சிறகுகள் அழியப் பெற்றதனால் பறக்கும் சக்தியில்லாததால் சம்பாதி தன் கால்களால் நடந்து வரவேண்டியதாயிற்று. அவன் நடந்து வந்தது, ஒரு மலை, கால் கொண்டு நடந்து வந்தது போல் இருந்தது என்றது ஒரு நயம்.

23. சம்பாதியின் நிலை

முறையுடை எம்பியார் முடிந்தவாறு எனாப்
பறையிடும் நெஞ்சினன் பதைக்கும் மேனியன்,
இறையுடைக் குலிசவேல் எறிதலால், முனம்
சிறை அறு மலை எனச் செல்லும் செய்கையான். (4776)

(முறை-நீதிமுறை/ஒழுக்கம்; முடிந்தது-இறந்தது; பதைத்தல் நடுங்குதல்; இறை-இந்திரன்; குலிசம்-வச்சிராயுதம்; எறிதல்-வெட்டுதல்; சிறை-சிறகுகள்);

நீதிநெறி வழுவாத ஒழுக்கம் உடைய தன் தம்பியான சடாயு இறந்து பட்டது எவ்வாறு என்று அறியும் கருத்தால், பறையடிப்பது போல் துடிக்கின்ற உள்ளத்தோடும், நடுங்கும் உடம்புடனும், சம்பாதி, தலைவனாகிய இந்திரன் தனது வச்சிராயுதத்தைக் கொண்டு வெட்டியதால், முன்பு தம் சிறகுகள் அறுபட்டிருந்த மலை போல, இப்பொழுது நலிந்த சிறகுகளைக் கொண்டு நடந்து வந்தான்.

முற்காலத்தில் மலைகள் எல்லாம் சிறகுகள் பெற்றுத் தாம் நினைத்த இடத்திற்குப் பறந்து செல்லும் ஆற்றல் பெற்று இருந்தன. இதனால் பெருங்கேடுற்று உயிரினங்கள் மிக்க வருந்தியதால், இந்திரன் தன் வச்சிரப் படை கொண்டு எல்லா மலையினது இறக்கைகளையும் அறுத்தெறிந்து, அவைகளை இயங்கவிடாது, ஓரிடத்திலேயே அசையாது இருக்கச் செய்து விட்டான் என்பது ஒரு புராணக் குறிப்பு; இதனாலேயே இந்திரனுக்குச் ''சயிலகோபன்'' என்பதும் ஒரு பெயர். இதனையே ''சிறைஅறுமலை'' என இங்கு குறித்தார் என்க.

24. ''மிடல்உடை எம்பியை வீட்டும் வெஞ்சினப்
படை உளர் ஆயினார் பாரில் யார்?'' எனா,
உடலினை இழிந்து போய், உவரி நீர் உகக்
கடலினைப் புரையுறும் அருவிக் கண்ணினான். (4777)

(மிடல்-ஆற்றல்/வலிமை; வீட்டும்-கொல்லும்; வெம்-கொடிய; பார்-உலகு; புரை-ஒத்த; படை-ஆயுதம்; உவரிநீர்-உப்புநீர்/கண்ணீர்); (குளகப்பாடல்)

''மிக்க வலிமையுடைய என் தம்பியான சடாயுவை இறக்கும்படி செய்த கொடிய சினம் கொண்ட ஆயுதங்களைக் கொண்டவர் இவ்வுலகில் யார் இருக்கின்றார்கள்?'' என்று சந்தேகம் கொண்டு, தன் உடலினின்று வழிந்தோடும் உப்பு நீராகிய கண்ணீர் சிந்தக் கடலினைப் போல கண்ணீர் அருவியாய்ப் பெருகும் கண்களையுடைவனான சம்பாதி - பாடல் தொடர்கிறது.

சாதாரண மனிதர்களால் சடாயுவை அழிக்க முடியாது என்பதும், உலகில் உள்ள யாராலும் சடாயுவை இறக்கும் படி செய்ய முடியாதென்பதும் அத்தகைய பேராற்றல் வாய்ந்தவன் சடாயு என்பதும் சம்பாதிக்கும் தெரியும். இருந்தும், இப்பொழுது சடாயு போரில் மாற்றான் ஒருவனால் அழிக்கப்பட்டான் என்று அனுமன் கூறக் கேட்டவுடன், தன் கண்களிலிருந்து அருவியாய்க் கண்ணீரைப் பெருக்கினான் என்பதாம்.

25. உழும் கதிர் மணி அணி உமிழும் மின்னினான்;
மழுங்கிய நெடுங்கணின், வழங்கும் மாரியான்;

புழுங்குவான், அழுங்கினான்; புடவி மீதினில்
முழங்கி வந்து இழிவது ஓர் முகிலும் போல்கின்றான். (4778)

(உழும்-ஊடுருவிப் பாயும்/சாணைபிடித்தலுமாம்/ஒளி தீட்டப் பெற்ற; கதிர்-கிரணங்கள்; மணி-இரத்தினங்கள்; உமிழ்தல்-வெளியிடுதல்; மின்-ஒளி; புடவி-பூமி; இழிவது-இறங்குவது; முகில்- மேகம்; மழுங்கிய-ஒளிகுன்றிய; மாரி-நீர்ப்பெருக்கு);

ஊடுருவிப்பாயும் கிரணங்களை உடையவனும், இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அணிகலன்கள் வெளியிடும் மின்னலைப் போன்று ஒளி விடுபவனும், இப்போது முதிர்ந்த வயதினால் ஒளிகுன்றிய கண்களையுடையவனுமான சம்பாதி, தன் பெரிய கண்களினின்றும் கண்ணீரைப் பெரிய நீர்ப்பெருக்குப் போல் சொரிபவனும், அழுது, வெதும்பி வருந்துபவனும், இப்பூமியின் மேல் முழக்கம் செய்துகொண்டு ஒரு மேகம் இறங்கி வருவது போன்றவனுமாகிய சம்பாதி - பாடல் தொடர்கிறது.

இங்கே சம்பாதியை ஒளிமிகுந்த மின்னலுக்கும், மழைபொழியும் மேகத்திற்கும் உவமை கூறிய நயம் காண்க. கழுகுகளுக்கு இப்போதும் கழுத்தைச் சுற்றி வெண்ணிறம் போன்ற ஒரு அமைப்பு இருப்பதைக் காணலாம். இதைத்தான், ''உழுங்கதிர் மணியை உமிழும் மின்னினான்'' என்றார் என்க.

26. வள்ளியும், மரங்களும், மலையும் மண்உறத்
தெள்ளும் நுண் பொடிபடக் கடிது செல்கின்றான்;
தள்ளு வன்கால் பொரத் தரணியில் தவழ்
வெள்ளி அம் பெருமலை பொருவும் மேனியான். (4779)

(வள்ளி-வல்லி/கொடிகள்; உற-அழுந்த; பொடி-புழுதி; தள்ளுதல்-சாய்த்தல்; தரணி-பூமி; கால்-காற்று; பொர-தாக்க; தவழ்தல்-இடம்பெயர்ந்து செல்லுதல்; பொருவும்-ஒக்கும்);

கொடிகளும், பலவகைப்பட்ட மரங்களும், மலையும் கூட மண்ணோடு மண்ணாக அழுந்திப் போகும்படியும், அவை தெள்ளிய நுண்மையான புழுதியாகிப் போகும்படியும் விரைந்து நடந்து வருபவனும், அசையும், அசையாப் பொருள்கள் எல்லாவற்றையும் உந்தித் தள்ளிச் சாய்க்கின்ற ஆற்றல் வாய்ந்தவனும், வலிய காற்றுத் தாக்குவதால், பூமியில் இடம்பெயர்ந்து செல்லுகின்ற வெள்ளிய அழகிய பெரிய கயிலாய மலையை ஒத்த மேனியை உடையவனும்-பாடல் தொடர்கிறது.

சம்பாதியின் விரைவினாலும், வேகத்தினாலும் அவன் உடல் பாரத்தினாலும் அவன் வரும் வழியில் உள்ள கொடிகளும், மரங்களும் கீழே அழுந்திப் போயின; மலைகள் பொடிப் பொடியாகிப் போயின;

அவன் வருகின்ற தோற்றம் கயிலாய மலைக்குக் கால் முளைத்து, பூமியில் நடந்து வருவதைப் போன்றிருக்கிறது என்று கூறியது ஒரு நயம்.

27. சம்பாதியைக் கண்ட அனுமன் நிலை

எயிதினன்; இருந்தவர் இரியல் போயினார்;
ஐயன் அம் மாருதி, அழலும் கண்ணினான்,
''கைதவ! நிசிசர! கள்ள வேடத்தை!
உய்திகொல் இனி?'' என உருத்து, முன் நின்றான். (4780)

(இரியல்-அஞ்சி ஓடுதல்; ஐயன்-உயர்ந்தோன்; அழல்-நெருப்பு; கைதவம்-வஞ்சனை; நிசிசரர்-அரக்கர்; உய்தல்-பிழைத்தல்; முன்-எதிர்; உருத்தல்-கோபித்தல்; கள்ளம்-பொய்மை/திருட்டு);

சம்பாதி அவ்வானர வீரர்கள் இருந்த இடத்தை வந்து எய்தினான்; அவனைக் கண்டதும் எல்லா வானர வீரர்களும் அஞ்சி நிலை கெட்டு ஓடி ஒளிந்தனர்; பெரியோனான அழகிய அனுமன் மட்டும் நெருப்புப் பொறி பறக்கின்ற கண்களை உடையவனாய், அவனை நோக்கி, ''வஞ்சகனே! அரக்கனே! பொய்யான வேடம் பூண்டு வந்திருப்பவனே! இங்கிருந்து நீ தப்பிப் போய் விடுவாயோ?'' என்று கோபித்துக் கொண்டு அவன் எதிரில் வந்து நின்றான்.

''நிசிசரர்'' என்பது இரவில் சஞ்சரிப்பவர் என்று அரக்கருக்குக் காரணப் பெயர்; எல்லோரும் சம்பாதியின் உருவத்தைப் பார்த்து ஒரு அரக்கன் என்று அஞ்சி ஓடினர்; அனுமன் மட்டும் அவனை இராவணன் எனக் கருதி, ''நீ மாறுவேடத்தில் இருந்தாலும் இனிமேல் தப்பிப் போக முடியாது'' என்றான் என்பதாம்.

28. அனுமன் சம்பாதியை உள்ளபடி அறிதல்

''வெம்கதம் வீசிய மனத்தன்; விம்மலன்;
பொங்கிய சோரி நீர்பொழியும் கண்ணினன்;
சங்கையில் சழக்கு இலன்,'' என்னும் தன்மையை
இங்கித வகையினால் எய்த நோக்கினான். (4781)

(வெம்-கொடிய; வீசிய-போக்கிய; விம்முதல்-பொருமுதல்; சோரி நீர்-இரத்தக் கண்ணீர்; சழக்கு-குற்றம்; சங்கை-சந்தேகம்; நோக்குதல்-ஆராய்ந்து அறிதல்; இங்கிதவகை-குறிப்பால் உணர்தல்; பொங்கிய-மேற்கிளம்புகின்ற; எய்த-ஊன்றி);

அங்கு வந்து சேர்ந்த சம்பாதியைக் கண்ட அனுமன், ''இவன் கொடிய சினத்தை நீங்கிய மனத்தையுடையவனாகவும், துக்கத்தால் பொருமுகின்றவனாகவும், மேற்கிளம்பி வழிகின்ற இரத்தக் கண்ணீரைப் பொழியும் கண்களை உடையவனாகவும் தோன்றுகிறான். எனவே இவன் சந்தேகத்திற்கு இடமின்றிக் குற்றமற்றவனாகவே தெரிகின்றான்'' என்று

அவன் இயல்புகளைத் தன்னுடைய குறிப்பறிந்து உணரும் தன்மையிலேயே கண்டுகொண்டு, அவனை மேலும் ஊன்றிப் பார்த்தான்.

சீற்றம் இல்லாமல் இருக்கிறான்; மனம் வெதும்பிப் பொருமுகின்றான்; துக்கத்தால் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீர் பொங்கி வழிகிறது. இவை எல்லாம் அரக்கர் இயல்பினவல்ல. எனவே இவன் அரக்கனல்லன்; குற்றமற்றவன் என்பது சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிகிறது என்று அனுமன் தன் குறிப்பால் குறிப்பறியும் தன்மையால் உணர்ந்து தெளிந்து கொண்டான் என்பதாம்.

29. ''சடாயுவைக் கொன்றவன் யார்?'' எனச் சம்பாதி வினவுதல்

நோக்கினன் நின்றனன்; நுணங்கு கேள்வியான்
வாக்கினால் ஒரு மொழி வழங்குறாத முன்,
''தாக்க அரும் சடாயுவைத் தருக்கினால் உயிர்
நீக்கினர் யார்? அது நிரப்புவீர்!'' என்றான். (4782)

(நுணங்கு-நுட்பமான; வாக்கு-வாய்; வழங்குதல்-சொல்லுதல்; தருக்கு-வலிமை; நிரப்புதல்-விரித்துச் சொல்லுதல்);

சம்பாதியினை ஊன்ற நோக்கிக் கொண்டு நின்றிருந்தவனாகிய, நுட்பமான கல்வி கேள்வியறிவுடைய அனுமன், தன் வாய்திறந்து ஒரு சொல் கூறுவதற்கு முன்பே, சம்பாதி அனுமனை நோக்கி, ''யாராலும் எதிர்த்துத்தாக்க முடியாத பேராற்றலுடைய சடாயுவைத் தனது வலிமையால் அவன் உயிரைப் போக்கியவர் யார்? அதனை எனக்கு விரிவாகத் தெரிவிப்பீராக!'' என்று கேட்டான்.

30. அனுமன் சம்பாதியை ''யார்?'' என வினவுதல்

''உன்னை நீ உள்ளவாறு உரைப்பின், உற்றது
பின்னை யான் நிரப்புதல் பிழையின்றாகுமால்;''
என்ன, மாருதி எதிர், எருவை வேந்தனும்,
தன்னையாம் தன்மையைச் சாற்றல் மேயினான். (4783)

(பிழைப்பு-தவறு; எதிர்-முன்; எருவை-கழுகு; தன்மை-முறை; சாற்றல்-சொல்லுதல்;)

அனுமன் சம்பாதியை நோக்கி, ''நீ உன்னைப் பற்றிய செய்திகளை ஒளிவுமறைவு இல்லாது உள்ளபடியே கூறினால், நானும் சடாயுவுக்கு நிகழ்ந்தவற்றைப் பின்னர் கூறுதல் தவறற்றதாகும்'' என்று கூற, அனுமன் எதிரில் நின்ற கழுகு அரசனான சம்பாதியும், தான் இன்னான் என்னும் தன்மையைக் கூறத் தொடங்கினான்.

31. சம்பாதி தன்னைப் பற்றிக் கூறுதல்

''மின் பிறந்தால் என விளங்கு எயிற்றினாய்!
என் பிறந்தார்க்கு இடை எய்தலாத? என்
பின் பிறந்தான் துணை பிரிந்த பேதையேன்
முன் பிறந்தேன்'' என முடியக் கூறினான். (4784)

(பிறத்தல்-தோன்றுதல்; எயிறு-பற்கள்; பின்பிறந்தான்-தம்பி; பேதை-ஏழை/எளியவன்; முடிய-முழுவதும்; துணை-சகோதரன்; இடைதல்-சோர்தல்);

''மின்னல்தோன்றினாற்போல ஒளிவிளங்கும்பற்களைஉடையவனே! உடன்பிறந்தார்க்கு ஒரு துன்பம் எய்தினால் அதனால் சோர்வுறாதவர்களும் இருக்கிறார்களோ? எனக்குப் பின்பிறந்தவனாகிய என் தம்பி சடாயுவைப் பிரிந்த எளியவனாகிய நான், அவனுக்கு முன் பிறந்த தமையன் ஆவேன்'' என்று முழுவதும் கூறினான்.

சடாயு என் தம்பி, நான் அவன் அண்ணன், மூத்தவனாகிய நான் உயிருடன் இருக்க, இளையவனான அவன் உயிர்துறந்தானே என்ற இரக்கக் குறிப்பால் தன்னை ''துணை பிரிந்த பேதையேன்'' எனக் கூறிக் கொண்டான் என்க.

32. அனுமன் சடாயு எவ்வாறு இறந்தான் என்பது பற்றிக் கூறுதல்

''கூறிய வாசகம் கேட்ட கோதிலான்,
ஊறிய துன்பத்தின் உவரி உள் புகா,
ஏறினன், உணர்த்தினன், இகல் இராவணன்
வீறிய வாள் இடை விளிந்த ஆறு எலாம். (4785)

(வாசகம்-சொற்கள்; கோது-குற்றம்; ஊறிய-பெருகிய; உவரி-கடல்; புகா-புக்கு/புகுந்து; வீறு-பெருமை; விளிந்தது-இறந்தது; உணர்த்தல்-அறிவித்தல்; இகல்-போர்);

அவ்வாறு சம்பாதி கூறிய சொற்களைக் கேட்ட குற்றமற்றவனான அனுமன், மிக்குப் பெருகிய துயர்க் கடலுள் தானும் மூழ்கினான்; அதிலிருந்து ஒருவாறு தேறிக் கரையேறி, இராவணனுடன் பகைகொண்டு செய்த போரில், அவனுடைய பெருமையிற் சிறந்த வாளினால் சடாயு இறந்து போனான் என்ற வரலாற்றையெல்லாம் கூறினான்.

''வீறியவாள்'' என்பது, வேறொன்றிற்கு இல்லாத பெருமையுடைய வாள் என்று பொருள்படும். இந்தவாள், இராவணனுக்குச் சிவபெருமானால் அளிக்கப்பட்ட ''சந்திரகாசம்'' என்னும் வாள் ஆகும். எனவே அதற்கு மேம்பட்ட வாள் ஒன்று உலகிலேயே இல்லை என்பது குறிப்பு.

33. சம்பாதி மயக்கமுற்று விழுதல்

அவ்வுரை கேட்டலும், அசனி ஏற்றினால்
தவ்விய கிரி எனத் தரையின் வீழ்ந்தனன்;
வெவ்வுயிரா உயிர் பதைப்ப விம்மினான்;
இவ்வுரை, இவ்வுரை எடுத்து இயம்பினான். (4786)

(அசனி-இடி; தவ்வுதல்-நிலை தவறுதல்/சிதைவுறுதல்; அசனிஏறு-பேரிடி; வெவ்வுயிர்ப்பு-பெருமூச்சு; பதைக்க-துடிக்க; எடுத்து-உரத்து);

அவ்வாறு அனுமன் கூறியதைக் கேட்டவுடன், பேரிடியினால் நிலைகுலைந்து சிதைவுற்ற ஒரு மலைபோலப் பூமியில் விழுந்தான் சம்பாதி. வெப்பப்பெருமூச்சுவிட்டு, உயிர்துடிக்க, வருந்தித்தேம்பினான்; கீழ்வரும் சொற்களைத் திரும்பத் திரும்ப உரத்த குரலில் கூறிப் புலம்பலானான்.

எதிலும் சிறந்ததை ''ஏறு'' எனக் கூறுவதுண்டு; இங்கே இடியின் மிக்க கொடுமையை விளக்க ''அசனியேறு'' என்றார் என்க. தரையில் வீழ்தல், வெப்பப் பெருமூச்சு விடுதல், உயிரும், உடலும் நடுங்குதல், விம்முதல், புலம்புதல் ஆகியவை மிகுந்த துயரத்தின் மெய் வெளிப்பாடு. ''எடுத்து இயம்புதல்'' என்பது உரக்கக்கூறிப் புலம்புவதைக் குறிக்கும்.

34. சம்பாதி புலம்புதல்

''இளையா நீள் சிறகு இன்றி வெந்து, உகத்
தளை ஆனேன்; உயிர்போதல் தக்கதால்;
வளையா நேமியன் வன்மை சால் வலிக்கு
இளையானே! இது என்ன மாயமோ?'' (4787)

(வளையா-கெடாத; நேமி-சக்கரம்/தேர்; இளையா-சளைத்து/இளைத்து; தளை-சிறை/தடை);

''இளையவனே! முன்பு நாம் இருவரும் சூரியனை நெருங்கிச் சென்றபோது, சூரியனின் மிகுந்த வெப்பத்தால் என்னுடைய இரண்டு சிறகுகளும்வெந்துபோயின. எனவேநான்விரும்பிய இடத்திற்குப்பறந்து செல்ல முடியாதபடி சிறையில் அகப்பட்டுக் கொண்டதுபோல் தடைப்பட்டுக் கிடந்தேன். எனவே ஒன்றுக்கும் பயனில்லாதவனான முதியவனான என்னுடைய உயிர்போதலே தக்கதாகும். ஆனால் எதிலும் குறைவுபடாத, ஆணைச் சக்கரத்தை உடைய தசரதச் சக்கரவர்த்தியின் பேராற்றலுக்கு எந்த விதத்திலும் குறைவுபட்டுப் போகாத நீ, இறந்து போனது என்ன மாயமோ? தெரியவில்லையே!'' என்று புலம்பினான் சம்பாதி.

சம்பாதியின்நீள்சிறகு வெந்துபோனதைப் பற்றிப் பின்னால்கூறுவான் சம்பாதி. ஒன்றுக்கும் பயனற்றவனாய் மூலையில் முடங்கிக் கிடந்த மூத்தவனான நான் இறந்து போவதே சரியானதாயிருக்கவும், எல்லா

வகையிலும் இவ்வுலகில் இருக்கத் தகுதி உடைய, இளையவனான நீ, என்னை முந்திக் கொண்டு இறந்து போனாயே! இது என்ன அதிசயம்? என்று வியந்தான் சம்பாதி என்பதாம்.

35. ''மலரோன் நின்றுளன்; மண்ணும் விண்ணும் உண்டு;
உலையா நீடு அறம் இன்னும் உண்டு அரோ;
நிலைஆர் கற்பமும் நின்றது; இன்று நீ
இலையானாய்; இது என்ன தன்மையோ?'' (4788)

(மலரோன்-பிரமன்; உலையா-அழியாத/கெடாத; நிலைஆர்-நிலைபெற்ற; தன்மை-முறை; கற்பம்-யுகம் போலக் கால அளவில் ஒரு பேரெல்லை/பிரமகற்பம்);

''திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றியவனான பிரமன் என்றும் அழியாத உயிரோடு இருக்கிறான்; மண்ணுலகமும், விண்ணுலகமும் நிலைத்து நிற்கின்றன; என்றும் அழிதல் இல்லாத, பெருமை பெற்ற தருமம் இன்னும் நிலைத்து இருக்கிறது; நிலைபெற்ற பிரம கற்பமும் இன்னும் முடியாது, சென்று கொண்டிருக்கிறது. ஆனால் நீ மட்டும் இன்றைக்கு இல்லாது போய் விட்டாய்; இது என்ன முறையோ?'' என்று புலம்பினான் சம்பாதி.

பிரமன், மண், விண், அறம், கற்பம், ஆகிய இவை எல்லாமும் அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றாவது அழிந்து போயிருந்தால், நீ இறந்து போனதில் பொருள் இருக்கிறது. இவை எல்லாம் அழியாது நிலைத்து நிற்கும் போது, இவற்றுடன் ஒர சேர வைத்து எண்ணப்படத் தகுதி உள்ளவனான, நீண்டஊழிக் காலம் வரை நிலைத்து வாழ வேண்டியவனான நீ இறந்து போனது என்பது முறையற்றது என்பது சம்பாதியின் கருத்து.

36. ''உடனே அண்டம் இரண்டும் முந்து உயிர்த்து
இடும் அந்நாள் வந்து, இருவேமும் உளோம், எனை
விட, நீயே தனிச்சென்ற வீரமும்,
கடனோ, வெம் கலுழற்கும் மேன்மையாய்!'' (4789)

(மேன்மை-மேம்பாடு; அண்டம்-முட்டைகள்; உயிர்த்திடுதல்-தோற்றுவித்தல்; கடன்-முறை; முந்து-முற்காலத்தில்; கலுழன்-கருடன்);

''நம் குலத்தலைவனான கருடனுக்கும் மேம்பட்ட வலிமை உடையவனே! முன்பு நம் தாயிடம் உண்டாகிய இரண்டு முட்டைகளிலிருந்து நாம் இருவரும் ஒருவர் பின் ஒருவராக இப்பூமியில் பிறந்து, அன்று முதல் ஒன்றாகவே வாழ்ந்து வந்தோம். இப்போது என்னை விட்டுவிட்டு, நீ மட்டும் தனியாக வீர மரணம் எய்தியது முறையோ?'' என்று புலம்பினான் சம்பாதி.

அருணன் இவ்வருவரின் தந்தை, அரம்பை இவ்வருவரின் தாய். அரம்பை இறைவனருளால் இரண்டு முட்டைகளைத் தோற்றுவித்தாள்.

அவ்வாறு அம்முட்டையினின்றும் ஒருவர்பின் ஒருவராக உடன் பிறந்தவர்கள்சம்பாதியும்ஜடாயுவும்என்பது ஒருபுராணக்குறிப்பு. இங்கே ஒரு கருத்து. உயிர்கள் நான்கு இடங்களிலிருந்தான் தோன்றுகின்றன. அவை விதை, வியர்வை, முட்டை, கருப்பை என்பன. விதையிலிருந்து மரம்செடி, கொடிகளும், வியர்வையில் இருந்து புழு முதலியனவும், முட்டையிலிருந்து பறவைகள் முதலியனவும், கருப்பையிலிருந்து மனிதரும் விலங்குகளும் பிறக்கின்றன என்பதை அறிக.

37. ''ஒன்றா மூன்று உலகத்து உளோரையும்
வென்றான் என்னினும், வீர! நிற்கு நேர்
நின்றானே அவ் அரக்கன்! நின்னையும்
கொன்றானே! இது என்ன கொள்கையோ?'' (4790)

(ஒன்றா-கீழ்ப்படியாத/மாறுபட்ட/பொருந்தாத; நேர்-முன்/எதிர்த்து; கொள்கை-நிகழ்ச்சி / விபரீத நிகழ்ச்சி / விசித்திரம்);

''வீரனே! தனக்குக் கீழ்ப்படியாத, மாறுபட்ட, தன் கொள்கைகளுடன் ஒத்துவராத பகைவர்களையும் இம்மூன்று உலகத்துள் உள்ளோரையும், அவன் வென்றான் என்றால் அது நம்பத் தகுந்தது; என்றாலும் அவனை விட வல்லமை மிகுந்த உன்னை, உனக்கு நேர் எதிர்த்து நின்றானே? அது எப்படிச் சாத்தியமாயிற்று? எதிர்த்து நின்று போர் செய்ததோடு மட்டுமல்ல, உன்னைக்கொன்றும்போட்டிருக்கிறானே? இது என்னமிக்க விந்தையாக இருக்கிறது?'' என்று ஐயமும் வியப்பும் தோன்ற இரங்கிப் புலம்பினான் சம்பாதி.

இராவணன் என்று அவன் பெயரைச் சொல்லக் கூடக் கூசியவனாய், ''அவ்வரக்கன்'' என்று கூறியதை நோக்குக. இராவணனை விட ஜடாயு வல்லவன் என்பதும், இராவணன் ஜடாயுவை வென்றான் என்பதும், கொன்றான் என்பதும் நம்பத் தகுந்ததாக இல்லை; ஆதலால் சம்பாதி இவ்வாறு வியந்தான் என்பதாம். இராவணனும் தன் உடமைகளை எல்லாம் இழந்தபின், இறுதியில் சிவபெருமான் தந்த ''சந்திரகாசம்'' என்ற வாளைப் பயன்படுத்தித்தான் சடாயுவை வெல்லவும், கொல்லவும் முடிந்தது என்பதை இங்கு நினைவிற் கொள்க.

38. அனுமன் சம்பாதியைத் தேற்றுதல்.

என்று என்று இரங்கி ஏங்கி, இன்னலால்
பொன்றும் தன்மை புகுந்த போது, அவற்கு
ஒன்றும் சொல்கொடு உணர்ச்சி நல்கினான்,
வன்திண் தோள் வரை அன்ன மாருதி. (4791)

(இன்னல்-துன்பம்; பொன்றுதல்-இறந்துபடுதல்; தன்மை-நிலை வரை-மலை; ஒன்றும் சொல்-ஏற்றசொற்கள்; உணர்ச்சிநல்குதல்-தெளிவித்தல்; ஏங்குதல்-அழுதல்; இரங்குதல்-மனம்அழிதல்);

இவ்வாறு சம்பாதி மீண்டும் மீண்டும் அழுது மனம்அழிந்து, தம்பியின் பிரிவால் ஏற்பட்ட துயரத்தால், தானும் இறக்கின்ற நிலையை எய்தியபோது, வலிய, திண்ணிய, மலைபோன்ற உறுதியான தோள்களை உடைய அனுமன், சம்பாதிக்கு, அந்தச் சமயத்திற்குத் தேவையான, ஏற்ற சொற்களைக் கூறி, அவனுக்குத் தேறுதல் கூறித் தெளிவித்தான்.

''ஒன்றும் சொல்'' என்பது, அனுமன் சொல்லின் செல்வன் ஆதலின், சொல்லத்தகுந்த, சொல்ல வேண்டிய சொற்களைக் கூறித் தேற்றினான் என்பதாம்.

39. சம்பாதி, ''சடாயு ஏன் இராவணனோடு போர் செய்தான்?'' என்று வினவுதல்.

தேற்ற, தேறியிருந்த செங்கணான்,
''கூற்று ஒப்பான், கொலைவாள் அரக்கனோடு
ஏற்றுப் போர் செய்தது என் நிமித்து?'' என
காற்றின் சேய், அது கட்டுரைக்குமால். (4792)

(ஏற்று-எதிர்த்து; நிமித்தம்-காரணம்; கட்டுரை-வரலாறு; கூற்று-இயமன்);

அவ்வாறு அனுமன் கூறிய தேறுதல் மொழிகளால் தெளிவு பெற்றிருந்த, சிவந்த கண்களை உடைய சம்பாதி, ''இயமனைப் போன்ற வலிமையுடைய சடாயு, கொலையையே தொழிலாகக் கொண்ட வாட்படையை உடைய அவ்வரக்கனான இராவணனோடு எதிர்த்து நின்று போர் செய்ததற்கு என்ன காரணம்?'' என்று கேட்க, வாயு தேவனின் மகனான அனுமன், கீழ்க்கண்ட வரலாற்றைக் கூறலானான்.

''செங்கணான்'' என்பது தம்பியின் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தால் கலங்கியிருந்த சிவந்த கண்களை என்க.

40. அனுமன் விளக்கிக் கூறுதல்

''எம்கோமான் அவ் இராமன் இல்உளாள்,
செங்கோலான் மகள், சீதை, செவ்வியாள்,
வெங்கோல் வஞ்சன் விளைத்த மாயையால்,
தம் கோனைப் பிரிவுற்ற தன்மையாள்.'' (4793)

(கோமான்-தலைவன்; இல்உளாள்-மனையாள்/மனைவி; செவ்வியாள்-நற்குணங்களையுடையவள்; வெங்கோல்-கொடுமையான அரசாட்சி; கோன்-தலைவன்; தன்மை-நிலை; மாயை-சூது)

''எங்கள் தலைவனாகிய அந்த இராமபிரானது மனைவியானவளும், நீதிநெறி தவறாத செங்கோல் ஆட்சி புரியும் சனக மன்னனது மகளும், சிறந்த நல்லிலக்கணங்கள் பொருந்தப் பெற்றவளுமான, சீதாதேவி, கொடிய அரசாட்சி செய்து வரும் இலங்கை மன்னனும், வஞ்சக எண்ணம்

கொண்டவனுமாகிய, இராவணன் மேற்கொண்ட ஒரு சூழ்ச்சிச் செயலினால், தன்னுடைய நாயகனைப் பிரிந்திருக்கின்ற நிலையை உடையவ்வள் ஆனாள்.''

முன்னால் சனக மன்னனின் செங்கோலைக் கூறி, பின்னால் இராவணனின் வெங்கோல் பற்றிக் கூறிய நயம் காண்க. மாயை என்பது, மாய மானை அனுப்பியதையும், தானே தவ வேடம் பூண்டு வந்து ஏமாற்றிய வஞ்சனை மிகுந்த சூழ்ச்சியையும் குறிக்கும்.

41. ''கொண்டு ஏகும் கொலைவாள் அரக்கனைக்
கண்டான் உம்பி; அறம் கடக்கலான்,
"வண்டு ஆர் கோதையை வைத்து நீங்கு" எனா,
திண் தேரானொடு எதிர்ந்து சீறினான்". (4794)

(உம்பி-உன்தம்பி; ஆர்த்தல்-மொய்த்தல்; கோதை-கூந்தல்; கடத்தல்-தவறுதல்);

''தருமநெறியினின்றும் பிறழாதவனாகிய உன்னுடைய தம்பியான சடாயு, சீதாதேவியைக் கவர்ந்து கொண்டு வான்வழியே செல்லும் கொலைத்தொழிலை உடைய வாட்படையை ஏந்திய அவ்வரக்கனான இராவணனைக் கண்டு விட்டான்; கண்டதும், ''வண்டுகள் நிறைந்து மொய்க்கின்ற கூந்தலை உடைய சீதாதேவியை என்னிடம் விட்டு விட்டு அப்பால் செல்'' என்று, வலிய தேரையுடைய இராவணனோடு எதிர் சென்று எதிர்த்துச் சீற்றம் கொண்டான்.

இராவணனைக் ''கொலைவான்அரக்கன்'' என்றும், சடாயுவை ''அறம் கடக்கலான்'' என்றும் சீதையை ''வண்டார் கோதை'' என்றும் கூறிய நயம் நோக்குக.

42. ''சீறி, தீயவன் ஏறு தேரையும்
கீறி, தோள்கள் கிழித்து, அழித்த பின்,
தேறி, தேவர்கள் தேவன் தெய்வவாள்
வீற, பொன்றினன் மெய்ம்மையோன்" என்றான். (4795)

(சீறி-சினந்து; கீறி-சிதைத்து; தேறி-தெளிந்து; வீற-எறிய; பொன்றுதல்-இறந்துபடுதல்);

''அவ்வாறு சடாயு மிக்கச் சினமுற்று, கொடியவனான இராவணன் ஏறி வந்த தேரையும் பிளந்து, சிதைத்து, அவனுடைய இருபது தோள்களையும் குத்திக்கிழித்து, அவனுடைய வலிமையை அழித்தான். அதன்பின், அந்தத் தாக்குதலிலிருந்து ஒருவழியாக விடுபட்டுத் தேறிய இராவணன், தேவதேவனான சிவபெருமான் தனக்கு அளித்த தெய்வத்தன்மை பொருந்திய ''சந்திரகாசம்'' என்னும் வாட்படையைச் சாடாயு மீது வீசி எறிந்தான்; அதனால் தான் உன் தம்பியும், உண்மையே பேசுபவனுமான சடாயு உயிர் துறந்தான்'' என்றான் அனுமன்.

சடாயு தன் மூக்கினாலும், நகங்களினாலும், சிறகுகளினாலும், இராவணனைக் கொத்தி, குத்தி, கிழித்து, அடித்து எதிர்த்துப் போரிட்டான் என்பதாம். சந்திரகாசம் என்ற வாட்படை அவ்வரக்கனிடம் இல்லாதிருந்தால், சடாயு உயிர் துறந்திருக்கமாட்டான் என்ற தொனியும் பாடலில் தென் படுவதை உணர்க.

இங்கே ஒரு செய்தி. சடாயுவைக் கவிஞன் ''மெய்ம்மையோன்'' என்று கூறுவதில் ஒரு நயம் இருக்கிறது. சடாயுவும் இராவணனும் போர்புரியும் போது, சடாயுவின் உயிர்நிலை அவனது சிறகுகளில் உள்ளது என்பதை அவன் மூலமாகவே அறிந்து கொண்டான் இராவணன் என்றும், ஆனால் இராவணன்தன்உயிர்நிலைதன்கட்டைவிரலில்இருக்கிறதுஎன்றுபொய் கூறி, சடாயுவை வென்றுவிட்டான் என்றும் ஒரு செவிவழிச்செய்தி பரவலாகப் பேசப்படுவதுண்டு. இச்செய்தி கம்பனிலோ, வான்மீகத் திலோ, அத்யாத்ம இராமயாணத்திலோ கூறப்படவில்லை. எனினும், திருஞான சம்பந்தர், சடாயுவைப் பற்றிப் பாடும் புள்ளிருக்குவேளூர் தேவாரத் திருப்பதிகத்தில் சடாயுவை உண்மை கூறியவனாகப் புகழ்ந்து பாடுகிறார். பாடல் இது ''மெய்சொல்லா இராவணனை, மேல் ஓடி, ஈடு அழித்துப் பொய் சொல்லாது உயிர் போனான் புள்ளிருக்கு வேளூரே'' என்பது. இதனால் மேற்கூறிய கருத்து உறுதிப்படுவது காண்க. இதனாலேயே கவிஞன் இங்கு சடாயுவை ''மெய்ம்மையோன்'' என்று புகழ்ந்து பாராட்டிக் கூறினான் என்க. தேவர்களுக்கெல்லாம் தேவன் சிவபெருமான். எனவேதான் அவன் மகாதேவன் என்று அழைக்கப் படுகிறான் என்பதை இங்கு நினைவு கூர்க.

43. சம்பாதி மகிழ்ந்து பாராட்டுதல்

விளித்தான் அன்னது கேட்டு, ''மெய்ம்மையோய்!
தெளித்து ஆடத்தகு தீர்த்தன் மாட்டு உயிர்
அளித்தானே! அது நன்று! நன்று!'' எனாக்
களித்தான் வாரி கலுழ்ந்த கண்ணினான். (4796)

(விளித்தல்-சொல்லுதல்; வாரி-கடல்; தீர்த்தன்-தூயவன்; மாட்டு-பொருட்டு; தெளித்தல்-தெளிவித்தல்);

அவ்வாறு அனுமன் சொன்னவற்றைக் கேட்டு, சம்பாதி அனுமனை நோக்கி, ''உண்மை நெறியில் ஒழுகுபவனே! உலகத்தவரை அஞ்ஞானத்திலிருந்து தெளிவிப்பவனும், பூசனை செய்யத் தகுந்தவனும் ஆகிய தூயவனாகிய இராமபிரான் பொருட்டு என்தம்பி தன் உயிரை இழந்திருக்கிறான் என்றால் அது நன்று;'' மிக்க நன்று; என மனம் மகிழ்ந்து, கடல்போல் கண்ணீர்ப்பெருக்கை உகுப்பவன் ஆனான் சம்பாதி.

தன்தம்பி,தூயவனானஇராமபிரான்பொருட்டேஉயிரிழந்திருக்கிறான் என்பதை அறிந்த சம்பாதி, மனம்மிக மகிழ்ந்து உவகைக் கண்ணீர்

பெருக்கலானான் என்பதாம். அவ்வாறு செய்தது அவன் செய்த பெரும்பேறு என்று எண்ணி மகிழ்ந்தான் என்பதாம்.

44. ''பைந்தார் எங்கள் இராமன் பத்தினி
செந்தாள் வஞ்சி திறத்து இறந்தவன்
மைந்துஆர் எம்பி, வரம்புஇல் சீர்த்தியோடு
உய்ந்தான் அல்லது உலந்தது உண்மையோ!'' (4797)

(பைம்-பசிய; தார்-மாலை; திறத்து-பொருட்டு/காரணமாக; மைந்து-வலிமை; ஆர்-நிறைந்த; வரம்புஇல்-எல்லையற்ற; உய்தல்-உயிர் வாழ்ந்திருத்தல்; சீர்த்தி-புகழ்/புகழுடம்பு; உலந்தது-உயிர் அழிந்தது);

''பசுமையான, என்றும் வாடாத மலர் மாலையணிந்த எங்கள் இராமபிரானின் மனைவியாகியவளும், சிறந்த திருவடிகளை-யுடையவளும் வஞ்சிக்கொடி போன்றவளுமான சீதாதேவியின் காரணமாக உயிரிழந்தவனாகிய வலிமை பொருந்திய என் தம்பி சடாயு, எல்லையற்ற புகழுடன், இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்றுதான் கூறலாமேயன்றி, அவன் இறந்துவிட்டான் என்று கூறுவதும் உண்மைப் பொருளாகுமோ? ஆகாது''. என்றான் சம்பாதி.

சீர்த்தி, கீர்த்தியை விடவும் மேம்பட்டது. சீதையின் பொருட்டு உயிர் துறந்ததனால் அவன் பூத உடலைத்தான் இழந்தானே அன்றி என்றும் அழியாத புகழுடம்பு எய்தினான் என்று கூறுவதே உண்மைப் பொருளாகும் என்றான் என்பதாம்.

45. ''அறம் அன்னானுடன், எம்பி, அன்பினோடு
உறவு உன்னா, உயிர் ஒன்ற ஒவினான்;
பெற ஒண்ணாதது ஓர் பேறு பெற்றவற்கு
இறவு என்னாம்? இதின் இன்பம் யாவதோ?'' (4798)

(எம்பி-என்தம்பி; உன்னா-உன்னி/எண்ணி; ஒன்றுதல்-இரண்டறக் கலத்தல்; ஓவுதல்-நீக்குதல்; இறவு-இறப்பு; அறம்-அறக்கடவுள்);

''என்னுடைய தம்பியான சடாயு, அறத்தின் மூர்த்தியாகிய இராமபிரானுடன் மிகுந்த அன்பு கொண்டு, தந்தை, மக்கள் என்ற உறவு கொண்டாடி, அவன் பொருட்டு, இவ்வுலகை விட்டு நீங்கினான். இத்தகைய, யாரும் எளிதில் பெற முடியாத ஒப்பற்ற பெரும்பேறு பெற்ற சடாயுவுக்கு இறப்பு என்பது எந்த இழப்பைத் தந்துவிடும்? எந்தத் தீங்கைச் செய்து விடும்? இதைக்காட்டிலும் இன்பம் என்பது வேறு ஏதேனும் இருக்கிறதா? இல்லை'' என்று கூறுகிறான் சம்பாதி.

தருமமே ஓர் வடிவு கொண்டு வந்தது போன்று திகழ்பவன் இராமபிரான் என்று காப்பியத்தில் பல இடங்களிலும் கவிஞர் கூறுவதை நினைவிற்கொள்க. அன்புடன் கூடிய உறவு என்பது, தசரதன் சடாயு நட்பு முதல், இப்பொழுது சடாயுவைத் தமது தந்தையாக எண்ணிப்பழகிய

இராம இலக்குவரும், இராம இலக்குவரைத் தனது மக்களாகவே எண்ணிப் பழகிய சடாயுவும், இருவரும் ஒருவர்பால் ஒருவர் கொண்ட பாசத்தையும், நட்பினையும் குறிக்கும் என்க.

46. சம்பாதி, சடாயுவுக்கு நீர்க்கடன் செய்தல்

என்று என்று ஏங்கி இரங்கி, ஈர்ம்புனல்
சென்று, அங்கு ஆடுதல் செய்து, தீர்ந்தபின்,
வன்திண் தோள்வலி மாறு இலாதவன்,
துன்றும் தார் அவர்க்கு, இன்ன சொல்லினான். (4799)

(ஈர்ம்புனல்-குளிர்ந்த நீர்; ஆடுதல்-மூழ்குதல்; தீர்தல்-முடித்தல்; மாறு-ஒப்பு; துன்றும்-நெருங்கிய);

என்று இவ்வாறு பலவாறாகப் புலம்பி அழுது, குளிர்ச்சி பொருந்திய நீரிடத்திற்குச் சென்று, அதில் மூழ்கி நீராடி, சடாயுவிற்குரிய நீர்க்கடன்களையெல்லாம் செய்து முடித்தபின், வலிய, திண்ணிய, தோளாற்றலில் ஒப்பற்றவனான சம்பாதி, அடர்த்தியான மாலைகள் அணிந்த வானர வீரர்களிடம் கீழ்க்கண்டவாறு கூறலானான்.

47. ''வாழ்வித்தீர் எனை; மைந்தர்! வந்து, நீர்
ஆழ்வித்தீர் அலீர் துன்ப ஆழி வாய்க்
கேள்வித் தீவினை கீறினீர்; இருள்
போழ்வித்தீர்; உரை பொய்யின் நீங்கினீர்.'' (4800)

(கீறுதல்-அறுத்தல்; இருள்-அறியாமை; போழ்தல்-பிளத்தல்; மைந்து-வலிமை; கேள்வி-நூல்; ஆழி-கடல்);

''வலிமையுடையவர்களே! பொய்யென்னும் உரையினின்றும் நீங்கியவர்களே! உண்மையே பேசுபவர்களே! நீங்கள், நான் இருக்கும் இடம் வந்து, கேள்வியறிவினால் அறியப்படும் பாவச்செயல்களை அறுத்து எறிந்தீர்கள்; அறியாமையாகிய இருட்டைப் பிளந்து அழித்தீர்கள்; என் தம்பி இறந்துவிட்டான் என்ற துயரச் செய்தியைக் கூறி என்னைத் துயரக் கடலில் மூழ்கடித்து விட்டதாக எண்ணாதீர்கள்; நீங்கள் உண்மையிலேயே எனக்கு நல்லதொரு வாழ்வு அமைத்துக் கொடுத்திருக்கிறீர்கள்!'' என்றான் சம்பாதி.

தான் துயரக்கடலில் ஆழ்ந்திருந்தாலும், சம்பாதி இவ்வாறு ஏன் சொல்லுகிறான் என்பதைப் பின்வரும் பாடல்கள் விளக்கும். காரணம். இவ்வானரர்களால்தான், இவன் இழந்த இறக்கைகள் மீண்டும் முளைக்கும் என்பது அவன்பெற்ற சாப விமோசனம். அதை மனத்திற்கொண்டே இவ்வாறு கூறினான் என்க. கீறுதல் என்பது ஒரு பொருளை அடியோடு அழித்து விடாமல் மேலாகப் பிளந்து அதிலுள்ள தீயனவற்றை மட்டும் நீக்குதல்; பிளத்தல் என்பது ஒரு பொருளைப் பல கூறுகளாகப் பிளந்து அப்புறப்படுத்துதல்.

48. ''எல்லீரும் அவ் இராம நாமமே
சொல்லீர்! சொல்ல, எனக்கு ஓர் சோர்வு இலா
நல் ஈரப் பயன் நண்ணும்; நல்லசொல்
வல்லீர்! வாய்மை வளர்க்கும் மாண்பினீர்!'' (4801)

(சோர்வு-பிழைபாடு/தாழ்வு; ஈரம்-அன்பு/திருவருள்; நண்ணும்-கிட்டும்; எல்லீரும்-அனைவரும்);

''நல்ல இனிமையான சொற்களையே சொல்லும் வல்லமை பெற்றவர்களே! உண்மையையே மேலும் மேலும் வளர்க்கின்ற மாட்சிமை உடையவர்களே! நீங்கள் அனைவரும் அந்த ''இராம'' நாமத்தையே சொல்லிக் கொண்டிருங்கள்; நீங்கள் அவ்வாறு சொல்லிக் கொண்டே இருந்தீர்கள் என்றால், எனக்கு ஒரு தாழ்வில்லாத ஒப்பற்ற நல்ல, திருவருளின் பயன் வந்து அடையும்.

இராமநாமத்தின் பெருமை பேசப்படுகின்றது. இவ்வாறு சம்பாதி இராமநாமத்தையே உச்சரிக்கச் சொன்னதாகவும், அவர்கள் உச்சரித்ததாகவும் வான்மீகத்தில் கூறப்படவில்லை. இது கம்பனின் கற்பனையே. இதனால் கம்பனுக்கு இராமபிரானிடம் இருந்த பக்தி உணர்வும், கற்போருக்கு இதை எடுத்துக் காட்டவேண்டும் என்ற நோக்கமும் உள்ளது என்பது புலப்படுகிறது.

49. வானரர் இராம நாமம் கூறலும், சம்பாதிக்கு இறக்கைகள் வளர்தலும்

என்றான்; ''அன்னது காண்டும் யாம்'' எனா,
நின்றார்; நின்றுழி, நீலமேனியான்
நன்றாம் நாமம் நவின்று நல்கினார்;
வன் தோளான் சிறை வானம் தாயவே. (4802)

(காண்டும்-காண்போம்; நன்றாம்-நன்மைகள் விளையும்; நல்குதல்-அருளுதல்; நவில்தல்-சொல்லுதல்; சிறை-சிறகுகள்; தாய-தாவ);

என்று சம்பாதி கூறினான். ''அந்தக் காரியத்தை நாங்களும் பார்க்கிறோம்'' என்று கூறி வானர வீரர்கள், தாங்கள் நின்றிருந்த இடத்திலேயே நின்று கொண்டு, நீல நிறமுடைய உடம்பை உடையவனான இராமபிரானின், நன்மைதரும் திருநாமத்தை உச்சரித்து உதவியருளினார்கள், அதனால் வலிய சிறகுகளான தோள்களை உடைய சம்பாதியின் இறக்கைகள் வானத்தைத் தொடும் அளவிற்கு முளைத்து வளர்ந்தன.

''நன்றாம் நாமம்'' என்பது, திருமாலின் ஆயிரம் நாமங்களுள் சிறந்ததான ராம நாமம் என்பதாம். இதையே பரமேஸ்வரன், பார்வதிக்குத் ''தாரக மந்திரம்'' என்று கூறினான் என்பர். ''சகஸ்ர நாம தத்துல்யம், ஸ்ரீ ராம நாம வரானனே'' என்பது நம்மை நற்கதியில் ஏற்றும் உயரிய தாரக மந்திரம் என்க.

50. சிறை பெற்றான், திகழ்கின்ற மேனியான்
முறை பெற்றாம் உலகு எங்கும் மூடினான்
நிறைபெற்று, ஆவி நெருப்பு உயிர்க்கும் வாள்
உறை பெற்றால் எனலாம் உறுப்பினான். (4803)

(ஆவி-புகை; உறுப்பு-இங்கே மூக்கு/அங்கங்கள்; திகழ்தல்-ஒளிவிடுதல்; நிறை-வலிமை; மூடுதல்-மறைத்தல்; உயிர்த்தல்-பெருமூச்சுவிடுதல்);

புகையோடும் நெருப்பையும் சேர்த்துப் பெருமூச்சுவிடும் ஒரு வாள் இருந்து, அதற்கு ஒரு உறையும் கிடைத்தால் எப்படியிருக்குமோ, அத்தகைய மூக்கினைக் கொண்ட சம்பாதி, இப்போது ஒளிவிட்டுத் திகழும் உடம்பினை உடையவனாய், வரிசையாக அமைக்கப் பெற்ற எல்லா உலகங்களையும் தனது வளர்ந்த சிறகுகளால் மூடும் அளவிற்கு வலிமை பெற்று, தனது எரிந்துபோன இரு சிறகுகளும் மீண்டும் முளைத்து வளரும்படி ஆனான்.

முன்பு தன் தம்பி இறந்தது கேட்டதாலும், தான் சிறகுகள் இழந்திருந்தமையாலும், துன்பக் கடலில் ஆழ்ந்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த சம்பாதி, இப்போது வானர வீரர்கள் இராம நாமத்தைக் கூறவும், தன் சிறகுகள் முளைக்கப்பெற்றதால், ஒளிவிட்டுத் திகழும் உடலையும், வலிமையையும் பெற்று, இவ்வுலகம் முழுவதையும் மூடும் வண்ணம் வானளாவத் தாவிய சிறகுகளைப் பெற்றான் என்பதாம்.

51. வானரர்கள் வியத்தல்.

தெருண்டான் மெய்ப்பெயர் செப்பலோடும், வந்து
உருண்டான் உற்ற பயத்தை உன்னினார்,
மருண்டார்; வானவர் கோனை வாழ்த்தினார்;
வெருண்டார்; சிந்தை வியந்து விம்முவார். (4804)

(தெருண்டான்-தெளிவடைந்த உத்தமன்/இராமன்; பயம்-பயன்; வெருளுதல்-அச்சப்படுதல்; கோன்-தலைவர்; மருளுதல்-திகைத்தல்; மெய்ப்பெயர்-அழியாப் பெயர்/தாரகமந்திரம்);

ஞானியர்களால் பரம்பொருள் என்று கருதப்படும் தெளிந்த மனமுடையவனான இராமபிரானின் என்றும் அழியாப் பெயரும், தாரகமந்திரமுமாகிய பெயரை, வானரர்கள் எல்லோரும் ஒன்று கூடி உச்சரித்த அளவிலேயே, முன்பு சிறகு இல்லாமையினால் தம்மிடம் உருண்டே வந்தவனான சடாயு அடைந்த பெரும் பயனை எண்ணினார்கள்; மிகுந்த திகைப்புற்றனர்; மனத்தில் வியப்பு மிக்கடைந்து பூரிக்கலானார்கள்; அச்சமும் கொண்டனர்; தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய திருமாலின் அவதாரமாகிய இராமபிரானைத் தொழுது வாழ்த்தலானார்கள்.

''தெருண்டான்'' என்பது உயர்ந்தோர்கள், சான்றோர்கள், ஞானியர்கள், வேதியர்கள் முதலியோரால் எல்லா நற்குணங்களும் வாய்க்கப்பட்டவன் என்று தெளிவாகக் கருதப்பட்டவனாகிய இராமபிரானைக் குறிக்கும். ''மெய்ப்பெயர்'' என்பது என்றும் அழியாத ''இராம'' நாமத்தைக் குறிக்கும். வானரர்கள் மருட்சியுற்றனர்; அச்சம் உற்றனர்; வியப்புற்றனர்; பூரித்தனர்; ''இராம'' என்ற இரண்டு எழுத்திற்கு உள்ள மகிமையைக் கருதிப்பார்த்து பூரிப்பும், வியப்பும் உற்றனர்; இரு சிறகுகளும் முளைக்கக் கண்ட வானரர்கள் சிறிது மருட்சியும் அச்சமும் கொண்டனர் என்பதாம்.

52. சம்பாதி வரலாற்றை வானரர்கள் கேட்டல்

அன்னானைக் கடிது அஞ்சலித்து, ''நீ
முன்னாள் உற்றது முற்றும் ஓது'' எனச்
சொன்னார்; சொற்றது சிந்தை தோய்வுறத்
தன்னால் உற்றது தான் விளம்புவான். (4805)

(கடிது-விரைந்து; அஞ்சலித்து-வணங்கி; முற்றும்-முழுவதும்; சொற்றது-கூறியது; தோய்வுற-பதிய);

அவ்வாறு தாம் கூறிய இராமநாமத்தால் இரு சிறகுகளும் வளரப்பெற்றவனான சம்பாதியை விரைந்து, கைகூப்பித்தொழுது, ''நீ உன்னுடைய வாழ்க்கையில் முற்காலத்தில் நிகழ்ந்தவை அனைத்தையும் கூறுவாயாக!'' என்று வேண்டிக் கொண்டனர் வானரவீரர்கள்; அவர்கள் சொன்னவற்றைத் தன் மனத்தில் நன்கு பதியவைத்துக் கொண்ட சம்பாதி, தனக்கு முன்னாளில் தம் சிறகுகள் கரிந்து போன வரலாற்றைக் கூறத் தொடங்கினான்.

''அஞ்சலித்தல்'' என்பது கைகளைக் கூப்பித் தொழுதலைக் குறிக்கும். அவர்களுக்கு இராம நாமத்தின் பெருமையை நன்கு தெரியப் படுத்தியதாலும், இராமபிரானது திருவருளை முற்றும் பெற்றவன் சம்பாதி என்று அவர்கள் நன்கு உணர்ந்ததாலும், பல கற்பங்கள் கண்டு வயதில் முதிர்ச்சியடைந்தவன் ஆதலாலும், வானரர்கள் சம்பாதியைக் கைகூப்பித் தொழுது வேண்டிக் கொண்டனர் என்பதாம்.

53. சம்பாதி தன் வரலாறு கூறுதல்.

''தாய் எனத் தகைய நண்பீர்! சம்பாதி, சடாயு என்பேம்
சேய்ஒளிச் சேண்செல் நோக்கின் கழுகினுக்கு அரசு செய்வேம்
பாய்திரைப் பரவை ஞாலம் படர் இருள் பருகும் பண்பின்
ஆய்கதிர்க் கடவுள்தேர் ஊர் அருணனுக்கு அமைந்த மைந்தர். (4806)

(தகைய-தகுதியுடைய; பாய்-தாவுகின்ற; பரவை-கடல்; ஞாலம்-உலகம்; பருகுதல்-போக்குதல்; பண்பு-இயல்பு; கதிர்-சூரியன்; ஊர்தல்-

செலுத்துதல்; சேய்-சிவந்த; சேண்-நெடுந்தூரம்; செல்லுதல்-நோக்குதல்);

சம்பாதி வானர வீரர்களை நோக்கி, ''அன்பில் தாய் என்று கூறுதற்குத் தகுதி வாய்ந்த நண்பர்களே! சம்பாதி, சடாயு என்ற நாங்கள் இருவரும் சகோதரர்கள்; சிவந்த ஒளி பொருந்தியதும், பெருந்தூரம் பார்க்கின்ற இயல்புடைய கண்களையுடையதுமான கழுகு இனத்திற்கு அரசர்களாக இருந்து வந்தோம். தாவுகின்ற அலைகளையுடைய கடலை எல்லையாக உடைய இவ்வுலகத்தைச் சூழ்ந்துள்ள இருட்டினைப் போக்கும் தன்மை வாய்ந்த சிறந்த கிரணங்களையுடைய சூரியனின் தெய்வத்தன்மை வாய்ந்த தேரினைச் செலுத்துகின்ற சாரதியாகிய அருணன் என்பவனுக்குப் பிறந்த புதல்வர்கள் நாங்கள்''.

தனக்குத்தக்க சமயத்தில், தாயினும் சிறந்த உதவி செய்ததால், வானரவீரர்களைச் சம்பாதி ''தாய் எனத்தகைய நண்பீர்'' என்று அழைத்தான், சூரியனின் தேர்ச்சாரதி அருணன்; இவன் காசியபருக்கு விநதையின் மூலம் தோன்றியவன். கருடனுக்குத் தமையன். இவனுக்கு இடைக்குக் கீழ் உறப்புகள் ஏதும் இல்லை என்று கூறுவர். எனவே இவன் சம்பாதி என வழங்கப்பட்டான்.

54. ''ஆய் உயர் உம்பர் நாடு காண்டும் என்று அறிவு தள்ள,
மீஉயர் விசும்பின் ஊடு மேக்கு உறச்செல்லும் வேலை,
காய்கதிர்க் கடவுள் தேரைக் கண்ணுற்றேம்; கண்ணுறாமுன்,
தீயையும் தீய்க்கும் தெய்வச் செங்கதிர்ச் செல்வன் சீறி'' (4807)

(உம்பர்நாடு-தேவருலகம்; தள்ள-செலுத்த; மீ-மிகஉயர்ந்த; விசும்பு-வானம்; காய்தல்-வெதும்புதல்; ஊடு-இடையே; மேக்கு-மேன்மேலே); (குளகப்பாடல்)

''நானும் சம்பாதியும், தேவர்கள் வாழ்கின்ற மிக உயர்ந்த தேவலோகத்தைக் கண்டு வருவோம் என்று அறிவினால் உந்தப்பெற்று, மிக உயர்ந்த ஆகாயத்தினிடையே மேலே மேலே சென்று சூரிய மண்டலத்தில் செல்லுகின்ற சமயம்; வெதுப்புகின்ற கிரணங்களை உடைய, கடவுள் தன்மை வாய்ந்த, சூரியனது ஒற்றைச் சக்கரத் தேரைக் கண்டு விட்டோம்; நாங்கள் அதை நன்கு பார்ப்பதற்குள், தீயையும் தன் சுடுகின்ற கிரணங்களால் எரிக்கும் வல்லமை வாய்ந்த தெய்வத்தன்மை கொண்ட சிவந்த கிரணங்களையுடைய சூரியன், எங்கள் மீது மிக்க கோபம் கொண்டு- பாடல் தொடர்கிறது.

சம்பாதி, சடாயு இருவரும் மிக உயரப் பறக்கும் ஆற்றல் பெற்றவர்கள். எனவே அவர்களுக்குத் தேவலோகத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. எனவே அறிவினால் உந்தப்பட்ட அவர்கள் அச் செயலை மேற்கொண்டனர் என்பதாம். கதிரவன் ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட ஒற்றையாழித் தேரில் உலகை வலம் வந்து கொண்டிருக்கிறான் என்பது புராண வரலாறு.

55. ''முந்திய எம்பி மேனி முருங்கு அழல் முடுகும் வேலை,
''எந்தை! நீ காத்தி!'' என்றான்; யான் இருசிறையும் ஏந்தி
வந்தனென்; மறைத்தலோடும் மற்று அவன் மறையப் போனான்;
வெந்து, மெய் இறகு தீந்து, விழுந்தனென்; விளிகிலாதேன்.'' (4808)

(முந்திய-முன்னே சென்ற; எம்பி-என்தம்பி; முருங்குதல்-தகித்தல்; அழல்-நெருப்பு; முடுகுதல்-விரைதல்; தீந்து-தீய்ந்துகரிந்து; விளிதல்-சாதல்);

''என்னை முந்திக் கொண்டு, எனக்கு முன்பு சென்ற என் தம்பி சடாயுவின் உடல், சூரிய வெப்பம் அனல்போல் தகித்ததால் ''தந்தையே! என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று சடாயு கதறினான்; எனவே அவனை முந்திக் கொண்டு, அவனுக்கு மேலே என்னுடைய இரண்டு இறக்கைகளையும் நன்கு விரித்துக் கொண்டு பறந்து சென்றேன். அவன் சூரியனின் வெப்பத்திலிருந்து தப்பி என் சிறகுகளில் மறைந்து கொண்டு சற்றுக் கீழே பறக்கலானான்; ஆனால் நானோ சூரிய வெப்பத்தால் தாக்கப்பட்டு, என் உடம்பும், சிறகுகளும் கரிந்து போகக் கீழே தரையில் விழுந்து விட்டேன். ஆனால் இறந்து போகவில்லை''.

தமையன் தந்தைக்குச் சமமானவன் என்பதால் எந்தை என விளித்தான் சடாயு என்க.

56. ''மண்ணிடை விழுந்த என்னை, வானிடை வயங்கும் வள்ளல்
கண்ணிடை நோக்கி உற்ற கருணையான் ''சனகன் காதல்
பெண்ணிடையீட்டின் வந்த வானரர், இராமன் பேரை
எண்ணிடை உற்ற காலத்து, இறகு பெற்று எழுதி'' என்றான்.'' (4809)

(மண்-நிலம்; காதல்-அன்பு; இடையீடு-துன்பம்; எண்ணுதல்-பலமுறை சொல்லுதல்; இடை-இடம்);

அவ்வாறு தரையில் விழுந்த என்னை, வானத்தில் விளங்குகின்ற வள்ளல் தன்மை பெற்ற சூரியன், நான் விழுந்ததை உற்று நோக்கி, என்மீது மிக்கப் பரிவு கொண்டு, ''சனக மன்னனின் அன்புடைய புதல்வியான சீதைக்கு நேர்ந்த இடையூறின் காரணமாக, வானர வீரர்கள் வந்து, இராமனது திருப்பெயரை மனத்திற்கொண்டு உச்சரிக்கும்போது, நீ உன் இரு சிறகுகளும் பெற்று எழுந்திருப்பாயாக'' என்று அருள் செய்தான்'' என்றான் சம்பாதி.

சூரியன் உலகையே வாழ்விப்பவன் என்பதால் ''வள்ளல்'' எனப்பட்டான்; ''எண்ணுதல்'' என்பது எல்லோரும் ஒரேகாலத்தில் ஒன்று சேர்ந்து உச்சரித்தல் என்பதாம்.

57. ''எம்பியும் இடரில் வீழ்ந்தான் ஏயது மறுக்க அஞ்சி,
அம்பரத்து இயங்கும் யாணர்க் கழுகினுக்கு அரசன் ஆனான்;
நம்பிமீர்! ஈதுஎம் தன்மை! நீர் இவண் நடந்தவாற்றை
உம்பரும் உவக்கத்தக்கீர்! உணர்த்துமின் உணர'' என்றான். (4810)

(நம்பி-ஆடவரில் சிறந்தோன்; ஏயது-ஏவியபணி; அம்பரம்-வானம்; நடந்த-இங்கு வந்த);

''ஆடவர்களில் சிறந்தவர்களே! தேவர்களும் விரும்பத் தக்கவர்களே! அதனால் என் தம்பியும் எனக்கு நேர்ந்த இத்தன்மை கண்டு மிக்க துயரில் ஆழ்ந்தான். எனவே நான் ஏவிய கட்டளையை ஏற்பதற்கு அச்சமுற்று, வானத்தில் சஞ்சரிக்கின்ற வலிமை மிகுந்த கழுகுகளுக்கெல்லாம் அரசனாக ஆயினான்; இதுதான் என்னுடைய வரலாறு; நீங்கள் இங்கு வந்து சேர்ந்த தன்மையை நான் உணர்ந்து கொள்ளும் வண்ணம் கூறுவீராக'' என்றான் சம்பாதி.

58. வானரர்கள் தாம் வந்தது பற்றிக் கூறுதல்

என்றலும், இராமன் தன்னை ஏத்தினர் இறைஞ்சி ''எந்தாய்!
புன்தொழில் அரக்கன், மற்று அத்தேவியைக் கொண்டு போந்தான்
தென்திசை என்ன உன்னித் தேடி நாம் வருதும் என்றார்
''நன்று; நீர் வருந்தல் வேண்டா; நான் அது நவில்வென்'' என்றான். (4811)

(புன்-இழிவு; உன்னி-நினைத்து; நவில்தல்-சொல்லுதல்);

என்று சம்பாதி கூறி முடித்ததும், அவனுக்கு மீண்டும் வாழ்வு தந்த இராமபிரானைத் திசைநோக்கிக் கைதொழுது வணங்கி சம்பாதியை நோக்கி, ''எம் தந்தையைப் போன்றவரே! இழிதொழிலைக் கொண்டவனாகிய இராவணன் என்னும் அரக்கன், அந்த இராமபிரானுடைய மனைவியாகிய சீதாதேவியைக் கவர்ந்து கொண்டு தென்திசைப் பக்கம்தான் சென்றிருக்கிறான் என்று கருதி அவனைத் தேடிக் கொண்டு இங்கு வந்து சேர்ந்திருக்கிறோம்'' என்றனர்; அது கேட்ட சம்பாதி ''நல்லது: வருந்தாதீர்கள்! இது பற்றி எனக்குத் தெரிந்ததை நான் உங்களுக்குக் கூறுகிறேன்'' என்று கீழ்வருவனவற்றைக் கூறலானான்.

பிறன் மனை நயத்தலையே தொழிலாகக் கொண்டவன் இராவணன். எனவே அவனைப் ''புன்தொழில் அரக்கன்'' என்றார் என்க.

59. சம்பாதி சீதை பற்றிக் கூறுதல்

''பாகு ஒன்று குதலையாளைப் பாதக அரக்கன், பற்றிப்
போகின்ற பொழுது கண்டேன்; புக்கனன் இலங்கை; புக்கு
வேகின்ற உள்ளத்தாளை வெம் சிறையகத்து வைத்தான்;
ஏகுமின்; காண்டிர், ஆங்கே இருந்தனள் இறைவி இன்னும்.'' (4812)

(ஒன்று-போன்ற; குதலை-மழலைமொழி; பாதகன்-பாவி; பற்றி-கவர்ந்து; வேகுதல்-கொதித்தல்; சிறை-காவல்; இறைவி-தலைவி); (குளகப்பாடல்)

''வெல்லப்பாகு போன்ற இனிமையான, மழலைச் சொற்களைப் பேசுகின்ற சீதாதேவியை, பாவியான அரக்கன் இராவணன், கவர்ந்து

கொண்டு செல்லும் போது, நான் பார்த்தேன்; அவன் இலங்கைக்குள் சென்றான்; அங்கு சென்று, கொதிக்கின்ற நெஞ்சை உடையவளான சீதாதேவியை, கொடிய சிறையில் காவலில் வைத்துள்ளான்; அவள் இன்னும் அங்குதான் இருக்கிறாள். நீங்கள் விரைவில் செல்லுங்கள்; அவளை அங்கு காண்பீர்கள்'' என்றான் சம்பாதி.

குதலை என்பது மழலைச் சொல்லையே குறிக்கும். என்றாலும் இங்கே பொதுவாகப் பெண்கள் பேசுகின்ற இனிமையான சொற்களைக் குறித்தது என்க. இறைவி என்பது தெய்வத் தன்மை உடைய தலைவி என்னும் பொருள்படுதல் உணர்க.

60. ஓசனை ஒரு நூறு உண்டால், ஒலி கடல் இலங்கை அவ்வூர்;
''பாச வெம் கரத்துக் கூற்றும், கட்புலம் பரப்ப அஞ்சும்;
நீசன் அவ்வரக்கன் சீற்றம் நெருப்புக்கும் நெருப்பு; நீங்கள்
ஏசறு குணத்தீர்! சேறல் எப்பரிசு இயைவது?'' என்றான். (4813)

(ஏசுஅறு-குற்றமற்ற; பாசம்-பாசக்கயிறு/ஆயுதம்; கட்புலம் பரப்புதல்-நோக்குதல்; நீசன்-இழிந்தவன்; பரிசு-விதம்/தன்மை; கூற்று-இயமன்);

''ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட இலங்கை மாநகரம் இங்கிருந்து சுமார் நூறு யோசனை தூரம் உள்ளது; தன் கையில் கொடிய பாசக் கயிற்றை ஆயுதமாகக் கொண்டுள்ள இயமன் கூட அந்நகரை ஏறிட்டுப்பார்க்க அஞ்சுவான்; இழிந்தவனான அரக்கனாகிய இராவணனின் சீற்றமோ நெருப்பையே சுட்டெரிக்க வல்ல ஒரு நெருப்புப் போன்றதாகும். நீங்களோ குற்றமற்ற நற்குணங்களையுடையவராய் இருக்கிறீர்கள்; அங்கு எப்படிப் போய்ச்சேரப் போகிறீர்கள்? உங்களுக்கு அது எவ்வாறு இயலும்?'' என்று கேட்டான் சம்பாதி.

ஒரு யோசனை என்பது 10 மைல் அல்லது 16 கிலோ மீட்டரைக் குறிக்கும் என்க. இயமன் உயிரைப் பற்றுவதற்குத் தன்கையில் கொண்டுள்ள ஆயுதம் ''பாசம்'' என்னும் பாசக்கயிறு என்க. ஏறிட்டுப்பார்த்தல், நோக்குதல் என்ற பொருள் கொண்ட ''கட்புலம் பரப்பல்'' என்ற சொல்லாட்சியின் அருமை நோக்குக. அதைப்போலவே அவனது சீற்றத்திற்கு உவமை கூறிய கவிஞன் ''நெருப்புக்கும் நெருப்பு'' என்று கூறியதை உணர்க; நீங்கள் இலங்கை செல்லமுடியாது என்று கூறாமல், செல்லுவது கடினம், முயன்றால் முடியும் என்று குறிப்பாகக் கூறுவதையும் காண்க.

61. இலங்கையின் காவல் பற்றிக் கூறுதல்

''நான்முகத்து ஒருவன்; மற்றை நாரி பாகத்து ஓர் அண்ணல்;
பால்முகப் பரவைப் பள்ளிப் பாம்பணைப் பரமன்; என்றாலும்,
காலனுக்கேயும் சேறல் அரிது; இது காவல் தன்மை;
மேல் உமக்கு உறுவது எண்ணிச் செல்லுமின்; விளிவு இல்நாளிர்!'' (4814)

(விளிவு-அழிவு/கேடு; ஒருவன்-ஒப்பற்றவன்; நாரி-பெண் / உமாதேவி; பரவை-கடல்; கால்-காற்று; அண்ணல்-பெருமையிற் சிறந்தோன்; பள்ளி-துயில்);

''அழிதல் இல்லாத வாழ்நாட்களை உடையவர்களே! நான்கு முகங்களை உடைய ஒப்பற்றவனான பிரமதேவன், மற்றும், பெண்ணாகிய உமாதேவியைத் தனது இடப்பாகத்தில் கொண்டுள்ள பெருமைக்குரியோனான சிவபெருமான், பாலையே தன்னிடத்து நீராகக் கொண்டுள்ள பாற்கடலில், ஆதிசேஷனாகிய பாம்பினைத் தனது படுக்கையாகக் கொண்டு யோகநித்திரை கொள்ளும் திருமால், இவர் மூவர் என்றாலும், ஏன் இயமன் என்றாலும் கூட இலங்கை நகருக்குள் சென்று சேர்தல் என்பது மிக அரிதானது. இதுதான் இலங்கை நகரத்தின் காவல் நிலை. இதை நன்கு மனத்துட்கொண்டு, மேலே உங்களுக்கு ஏற்பட இருக்கின்ற சில இடையூறுகளையும், தடைகளையும் ஆராய்ந்து பார்த்து, அதற்குத் தக்கவாறு அங்கே செல்ல முற்படுங்கள்'' என்றான் சம்பாதி.

மும்மூர்த்திகளும், இயமனும் கூட எளிதில் செல்ல முடியாத கட்டுக் காவல் உடையது இலங்கை மாநகரம் என்றும், எங்கும் எளிதில் புகுந்துவிடக்கூடிய இயமனுக்குக் கூடப் புகமுடியாதது என்பதும், அங்கே செல்லும்போது பல இடையூறுகளும், துன்பங்களும் ஏற்படும் என்பதும், அவற்றையெல்லாம் முன்னரே நன்கு எண்ணிப்பார்த்து அங்கே செல்வதற்கு முற்பட வேண்டும் என்பதும், வானர வீரர்களுக்கு, சம்பாதி தரும் எச்சரிக்கை. இங்கே வானர வீரர்கள் இராம கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்பதால், அவர்களுக்கு அழிவில்லாத வாழ்நாள் உண்டு என்பதை ''விளிவு இல் நாளிர்'' என்று குறித்தான் என்க.

62. ''எல்லீரும் சேறல் என்பது எளிதன்று அவ்விலங்கை மூதூர்;
வல்லீரேல், ஒருவர் ஏகி, மறைந்து அவண் ஒழுகி, வாய்மைச்
சொல்லீரே துயரை நீக்கி, தோகையைத் தெருட்டி, மீள்திர்;
அல்லீரேல், என்சொல் தேறி உணர்த்துமின் அழகற்கு'' அம்மா! (4815)

(ஒழுகுதல்-சஞ்சரித்தல்; தெருட்டி-தெளிவித்து; மீள்திர்-திரும்புவீர்; தேறி-தெளிந்து; அழகன்-இராமன்; மூதூர்-பழமையான நகரம்);

''உண்மையான சொற்களையே பேசுபவர்களே! நீங்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து, அந்தப் பழமையான சிறந்த நகரமாகிய இலங்கைக்குள் செல்லுவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல; நீங்கள் சிறந்த ஆற்லுடையவர்கள் என்றால், ஒரே ஒருவர் மட்டும் தனியாகச் சென்று, அங்கு, மாறுவேடத்தில், மறைந்திருந்து அலைந்து திரிந்து, மயில் போலும் சாயலை உடைய சீதையைக் கண்டுபிடித்து, இராமபிரான் கூறிய உண்மையான செய்திகளை எடுத்துச் சொல்லி, அவளைத் தெளிவித்து அவளுடைய துயரத்தைப் போக்கித் திரும்பி வாருங்கள்; அவ்வாறு செய்ய முடியவில்லை என்றால், தயவு செய்து நான் உங்களுக்குக் கூறியதான, ''சீதை இலங்கையில் இராவணனின் காவலில் இருக்கிறாள்'' என்ற

செய்தியை, அழகனான இராமனுக்குத் தவறாமல் தெரிவித்து விடுங்கள்'' என்றான் சம்பாதி.

63. சம்பாதி அவர்களை விட்டுச் செல்லுதல்

''காக்குநர் இன்மையால், அக்கழுகினம் முழுதும் கன்றிச்
சேக்கை விட்டு இரியல் போகித் தெருமரும்; அதனைத் தீர்க்கப்
போக்கு எனக்கு அடுத்த; நண்பீர்! நல்லது புரிமின்!'' என்னா,
மேக்கு உற விசையின் சென்றான் சிறையினால் விசும்பு போர்ப்பான். (4816)

(சிறை-சிறகுகள்; விசும்பு-ஆகாயம்; போர்த்தல்-மறைத்தல்; கன்றி-வருந்தி; சேக்கை-இருப்பிடம்கூடுகள்; இரியல்போதல்- அஞ்சி யோடுதல்; தெருமரல்-கலக்கமடைதல்; போக்கு-செல்லுதல்; அடுத்த-நேர்ந்தது; மேக்குஉற-மிகவும்; விசையின்-வேகமாக);

''நண்பர்களே! பாதுகாப்பதற்குத் தகுந்த தலைமை இல்லாததால், அந்தக் கழுகுக்கூட்டங்கள் அனைத்தும் மிக்க வருந்தி, தத்தம் இருப்பிட மாகிய கூடுகளைவிட்டு, நிலைகெட்டுத் தடுமாறி அஞ்சியோடிக் கலக்க முற்றிருக்கும். காரணம் சடாயு இறந்து போய்விட்டான்; எனவே அவர்களின் துன்பத்தைத் தீர்க்க வேண்டியதால் அங்கு செல்லவேண்டிய கடமை எனக்கு இப்பொழுது நேர்ந்துள்ளது. எனவே, நான் கூறிய இரண்டு செயல்களுள் எது நல்லது என்று உங்களுக்குத் தோன்றுகிறதோ அதைச் செய்யுங்கள்'' என்று கூறி, மிகவும் வேகமாகக் செல்லலுற்றான் சம்பாதி.

சடாயு இறந்து போய்விட்டதால் தங்கள் கழுகினத்தைக் காப்பாற்றுவதற்கு இப்பொழுது யாரும் இல்லை. எனவே அவர்கள்தங்கள் இருப்பிடங்களைவிட்டு, வருந்தி, அஞ்சிக்கலங்கிப் போய் இருப்பார்கள். அவர்கள் துன்பத்தைப் போக்குவது எனது கடமையாக நேர்ந்துள்ளது. எனவே நான் விரைந்து செல்லுகிறேன். நான் கூறிய இரண்டு செயல்களுள் எது உங்களுக்கு நன்மை பயக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களோ அதனைச் செய்வீர்களாக என்று கூறித் தன் சிறகுகள் வானத்தை மறைக்குமாறு விரித்து, வேகமாகச் சென்றான் சம்பாதி என்பதாம்.

சம்பாதிப் படலம் நிறைவுற்றது

16. மயேந்திரப்படலம் [29 பாடல்கள்]

சீதையைத் தேடி தென்திசைக்குப் பிரிந்து சென்ற வானர வீரர்கள் அனைவரும் மயேந்திர மலையில் ஒன்று கூடிய பின்னர், அங்கு நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி என விரியும். இது 29 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''மகேந்திரப்படலம்'' எனவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இப்படலத்துள், மயேந்திர மலையில் ஒன்று கூடிய வானரர் சம்பாதியின்கூற்றுப்படி, இலங்கைக்குச்செல்லக்கடலைக்கடப்பவர்யார் எனத் தங்களுக்குள் பேசிக் கொள்ளுதல்; நீலன், அங்கதன், சாம்பவன் முதலியோர்தம்மால்கடலைக்கடக்கஇயலாது என்றுதம்இயலாமையைத் தெரிவித்தல்; சாம்பவன் அங்கதனிடமும் மற்றவர்களிடமும் அனுமனே கடலைக் கடக்கும் ஆற்றல் பெற்றவன் என்று கூறுதல்; சாம்பவன் அனுமனிடம் அவனது ஆண்மையையும், ஆற்றலையும் எடுத்துக்காட்டிப் பாராட்டிப் பேசுதல்; அதைக் கேட்ட பின்பு, அனுமன் கடல் கடக்க ஒப்புக் கொள்ளுதல்; அனுமன் வானர வீரர்களிடம் விடைபெற்றுக் கொண்டு மயேந்திர மலையின் உச்சிக்குச் செல்லுதல்; கடலைத்தாவும் பொருட்டுப் பேருருக்கொண்டு மலையின் மீது அனுமன் நிற்றல்; ஆகிய செய்திகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. வானர வீரர்கள் தமக்குள் பேசிக்கொள்ளுதல்.

'பொய்யுரை செய்யான் புள் அரசு என்றே புகலுற்றார்;
கையுறை நெல்லித் தன்மையின் எல்லாம் கரை கண்டாம்;
உய்உரை பெற்றாம்; நல்லவை எல்லாம் உற எண்ணிச்
செய்யுமின் ஒன்றோ செய்வகை, நொய்தின் செய வல்லீர்' (4817)

(புள்-பறவைகள்/கழுகுகள்; நொய்தின்-எளிதில்/விரைவில்; உய்-உயிர் பிழைத்திருத்தல்; உற-நன்றாக);

'பறவைகளாகிய கழுகளுக்கு அரசனான சம்பாதி, பொய்யான வார்த்தைகளைப் பேசமாட்டான்; அவன் கூறியவை அனைத்தும் உண்மையே என்று துணிந்த சில வானர வீரர்கள், மற்ற வானர வீரர்களைப் பார்த்து, 'உள்ளங்கையில் இருக்கும் நெல்லிக்கனிபோல, சீதை இருக்கும் ஊர், இடம், நிலைமை பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டு விட்டோம். சம்பாதி நாம் உயிர் பிழைத்திருப்பதற்குரிய வழியைச் சொல்லி விட்டான்;

எனவே அவ்வழி இரண்டில், நமக்கு மிகவும் நன்மை பயப்பது எது என்பதை மிக நன்றாக ஆலோசித்து, ஏதேனும் ஒன்றைச் செய்ய வேண்டும்; எந்தச் செயலைச் செய்வதானாலும் விரைவாகவும், எளிதாகவும் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர்களான நாம், இதனையும் அவ்வாறே செய்து முடித்தல் வேண்டும்'. என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

'புள்ளரசு' என்பது பொதுவாகக் கருடாழ்வாரையே குறிக்கும் என்றாலும் இங்கே சம்பாதியைக் குறித்தது என்க. ''கையுறை நெல்லி'' என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்பதன் சுருக்கம். மேல் தோற்றத்தைக் கொண்டு, உள்ளிருக்கும் விபரம் அனைத்தையும் தெளிவாக முடிவு செய்வதற்குப் பொதுவாகக் கூறப்படும் ஒரு உவமை. நெல்லிக்கனியின் உருவம்; கொட்டை, வரிகள், சதைப்பற்று முதலியன வெளியிலேயே நமக்குத் தெளிவாய்த் தெரிகின்றன என்பதால் இதனை உவமையாகக் கூறுவது வழக்கம். சம்பாதியைக் காண்பதற்கு முன்பு. வானர வீரர் அனைவரும், தம் முயற்சியில் தோல்வி கண்டதாக எண்ணி, உயிர்விடத் துணிந்திருந்தனர். இப்போது சம்பாதி அவர்களுக்கு உயிர்பிழைக்கும் வழியைக் கூறியிருக்கிறான் என்பது 'உய்உரை பெற்றாம்' என்பதால் பெறப்படுகிறது.

2. 'சூரியன் வெற்றிக் காதலனோடும், சுடர்விற்கை
ஆரியனைச் சென்றே தொழுது, உற்றது அறைகிற்பின்
சீரியது அன்று; தேடுதல் கொற்றச் செயல் அம்மா!
வாரி கடப்போர் யாவர் எனத் தம் வலி சொல்வார்' (4818)

(சுடர்-ஒளி; ஆரியன்-சிறந்தவன் /இராமன்; காதலன்-புதல்வன் / சுக்கிரீவன்; அறைதல்-கூறுதல்; சீரியது-சிறப்புடையது; கொற்றம்-வீரம்; வாரி-கடல்);

'வெற்றி பொருந்திய சூரியனின் அன்புப் புதல்வனாகிய சுக்கிரீவனிடமும், ஒளி வீசுகின்ற வில்லைக் கையில் ஏந்தியுள்ள சிறந்தவனான இராமனிடமும் சென்று வணங்கி, சம்பாதி கூறியதான சீதை இலங்கையில் இராவணனின் சிறையில் இருக்கிறாள்' என்று கூறிவிட்டால் கூட, நம் கடமை முடிந்ததாகக் கொள்ளலாம். ஆனால் அது சிறப்புடையது அன்று. இவ்வளவு உண்மைகள் நமக்குத் தெரிந்த பின்பு, நாமே இலங்கைக்குச் சென்று சீதையைத் தேடி வருதல்தான் வெற்றியுடைய வீரச்செயலாகும். எனவே நமக்குள் இந்த கடலைக் கடக்கும் ஆற்றல் பெற்றவர் யார் இருக்கிறார்கள்?' என்று தமக்குள் கேட்டுக் கொண்டு, ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றல் பற்றி உரைக்கத் தொடங்கினார்கள்.

தாம் சம்பாதியிடம் கேட்ட செய்தியைப் போய்ச் சொல்லுவதைக் காட்டிலும், இலங்கைக்குச் சென்று, மீண்டு அங்கே காணுகின்ற

செய்தியைக் கூறுவதே வெற்றியும், வீரமும் பொருந்திய செயலாகும் என்று சில வானர வீரர்கள் கருதினர் என்பதாம்.

3. 'மாள வலித்தேம்; என்றும் இம் மாளா வசையோடும்
மீளவும் உற்றேம்; அன்னவை தீரும் வெளி பெற்றேம்;
காள நிறத்தோடு ஒப்பவர் மாய, கடல் தாவுற்று
ஆளும் நலத்தீர்! ஆளுமின் எம் ஆர்உயிர் அம்மா!' (4819)

(மாள-இறக்க; வலித்தல்-துணிதல்; வசை-பழி; வெளி-நல்வழி; காளம்-நஞ்சு; மாய-அழிய; தாவுதல்-கடத்தல்; ஆளுதல்-காத்தல்; நலம்-சிறப்பு; ஆர்-சிறந்த; மாளா-அழியாத).

தம்மால் கடல் கடந்து செல்ல இயலாது என்று உணர்ந்த சில வானர வீரர்கள், மற்ற தகுதி உடையவர்களை நோக்கி, ''முன்பு, காலம் கடந்து விட்டமையாலும், சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க இயலவில்லை என்பதாலும் நாம் நம் உயிரைப் போக்கிக் கொள்ளத் துணிந்தோம்; பின்னர், ஒரு போதும் அழியாத இந்தப் பழிச்சொல்லோடு திரும்பவும் கிட்கிந்தை சென்று, உள்ளதைக் கூறிவிடுவோம் என்றும் தீர்மானித்தோம். ஆனால் இதற்கிடையில், சம்பாதியைக் கண்டு, இவ்விரண்டு நிலையினின்றும் நீங்கப் பெற்றவராய், அவன் கூறிய சொற்களால் ஒரு நல்ல வழியைத் தெரிந்து கொண்டோம்; ''எங்களைக் காக்கின்ற சிறப்புப் பெற்றவர்களே! தயவு செய்து நஞ்சு போன்ற கரிய நிறத்தவரான அரக்கர்கள் அழிந்து போகும்படி, இந்தக் கடலைத் தாவிச்சென்று, எங்களது அருமையான உயிரைக் காப்பாற்றியருள்வீராக''! என்றனர் மற்ற வானர வீரர்கள்.

முன்பு எல்லோரும் மாண்டுவிடுவது என்றும், பின்பு சீதை கிடைக்கவில்லை என்பதைச் சொல்வதற்காக கிட்கிந்தை மீண்டு சென்று பழியை ஏற்றுக்கொள்வது என்றும், இருவகையாகவும் தீர்மானித்தனர். ஆனால் சம்பாதியைக் கண்டு, அவன் மூலம் சீதை இருக்குமிடத்தைச் சரியாகத் தெரிந்த பின்னர், கிட்கிந்தைக்குத் திரும்பிச் செல்வதோ, உயிரைப் போக்கிக் கொள்வதோ சரியன்று என்று கருதி, இப்பொழுது இந்தக் கடலைத் தாண்டிச் சென்று விடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். இவர்களில் யார் கடலைத் தாண்டிச் செல்லும் ஆற்றல் பெற்றவர் என்பதை இப்பொழுது விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய வல்லமை படைத்தவர்கள் மற்ற வானர வீரர்களுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டினர் என்பது கருத்து.

4. சாம்பவன் கூறுதல்

''வேதம் அனைத்தும் தேர்தர எட்டா ஒரு மெய்யன்
பூதலம் முற்றும் ஓர்அடி வைத்துப் பொலி போழ்து, யான்
மாதிரம் எட்டும் சூழ் பறை வைத்தே வர, மேரு
மோத, இளைத்தே-தாள் உலைவு உற்றேன், விறல் மொய்ம்பீர்!''
(4820)

(விறல்-வலிமை; மொய்ம்பு-தோள்கள்; தேர்தருதல்-தேடுதல்; ஒரு-ஒப்பற்ற; பூதலம்-பூமி; பொலிதல்-விளங்குதல்; மாதிரம்-திசைகள்; இளைத்து-வலிசெய்து; உலைவுறுதல்-வருந்துதல்; சூழ்தல்-சுற்றுதல்; தாள்-கால்கள்);

சாம்பவன் மற்ற வானர வீரர்களை நோக்கி, ''வலிமையுடைய தோள்களை உடையவர்களே! வேதங்கள் எல்லாவற்றாலும் தேடியும், காணமுடியாத, எவற்றிற்கும் அகப்படாத எல்லோருக்கும் எட்டாததான ஒப்பற்ற உருவத்தை உடையவனான திருமால், வாமனனாய் மாவலியிடம் சென்று திரிவிக்கிரமனாய் விசுவரூபம் எடுத்து, இப்பூமி முழுவதையும் தனது ஒரே திருவடியால் அளந்து நின்று விளங்கிய பொழுது, அச் செய்தியினை, நான் இந்த உலகத்தின் எட்டுத்திக்குகளிலும் வலமாகப் பலமுறை சுற்றிச் சென்று பறையறிவித்தேன். அவ்வாறு இறைவனின் திருவடிகளைத் தரிசித்துக் கொண்டே வரும் போது, மேருமலை என்னைத் தாக்கியதால், நான் இளைப்புற்றேன்; என்னுடைய காலில் ஒரு சிறு ஊனம் ஏற்பட்டு வலியழிந்து வருந்தியிருக்கிறேன்,'' - பாடல் தொடர்கிறது.

நான்மறைக்குள் அகப்படாது, எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவன் திருமால் என்பது கருத்து. திருமாலின் திருவிக்கிரம அவதாரத்தின் போது அச்செய்தியை உலகெங்கும் பறையறிவித்தவன் சாம்பவன் என்பது ஒரு புராணக் குறிப்பு; அவ்வாறு அவன் பறையறிவித்துக் கொண்டு வரும்போது மேருமலையில் சென்று மோதிக் கொண்டான் என்றும், அதனால் அவன் காலில் சிறு ஊனம் ஏற்பட்டு, வலிகுன்றி இளைத்திருந்தான் என்பதும் பெறப்பட்டது.

5. ''ஆதலின் இப் பேர் ஆர்கலி குப்புற்று அகழ் இஞ்சி
மீது கடந்து, அத்தீயவர் உட்கும் வினையோடும்
சீதை தனைத் தேர்ந்து, இங்கு உடன் மீளும் திறன் இன்று'' என்று
ஓதி இறுத்தான், நாலு முகத்தான் உதவுற்றான். (4821)

(ஆர்கலி-கடல்; குப்புறுதல்-தாவுதல்; இஞ்சி-மதில்கள்; உட்குதல்-அஞ்சுதல்; தேர்ந்து-தேடிக் கண்டுபிடித்து; நாலுமுகத்தான்-நான்முகன்/பிரமன்; உதவுதல்-அருளுதல்; ஓதுதல்-சொல்லுதல்; இறுத்தல்-முடித்தல்; தீயவர்-கொடியோர்/அரக்கர்கள்; மிகுதியான ஒலியை உடையது என்பதால் ஆர்கலி என்பது கடலுக்குக் காரணப்பெயர்.)

''எனவே இந்தப் பெரிய கடலைத்தாண்டிச்சென்று இலங்கை மாநகரின் அகழிகளையும் மதில்களையும் கடந்து சென்று, அந்தக் கொடியவர்களான அரக்கர்கள் அஞ்சும்படியான செயல்களைச் செய்து, சீதையைத் தேடிக் கண்டுபிடித்து, இங்கு உடனே திரும்பி வருகின்ற ஆற்றல் என்னிடம் இப்போது இல்லை'' என்று, நான் முகனாகிய பிரமதேவனின் அருளைப் பெற்றவனான சாம்பவன் கூறி முடித்தான்.

நான்முகனாகிய பிரமதேவனின் புதல்வன் சாம்பவன், எனவே ''நாலுமுகத்தான் உதவுற்றான்'' என்றார் என்க.

6. நீலனும், அங்கதனும் கூறுதல்.

நீலன் முதல் பேர், போர்கெழு கொற்ற நெடுவீரர்
சால உரைத்தார், வாரி கடக்கும் தகவின்மை;
''வேலை கடப்பென் மீள மிடுக்கு இன்று'' என விட்டான்
வாலி அளிக்கும் வீர வயப்போர் வசையில்லான். (4822)

(நெடு-சிறந்த; வாரி-கடல்; சால-தெளிவாக; அளித்தல்-பெறுதல்/ஈன்றெடுத்தல்; வய-வெற்றி; வசை-பழி; வேலை-கடல்; மிடுக்கு-வலிமை; கெழு-சிறந்த; விட்டான்-உரைத்தான்)

நீலன் முதலான பெயருடைய, போரில் சிறந்தவரும், வெற்றியே பெறுபவருமான சிறந்த, பெரிய வானரர்கள், தம்மால் கடலைக் கடந்து செல்லும் தகுதியில்லாமையை மிகவும் விரிவாகவும் தனித்தனியாகவும் எடுத்து உரைத்தனர்; வாலி ஈன்றெடுத்தவனும், வீரமும், வெற்றியும் கொண்டு போர் செய்பவனும், குற்றமற்றவனுமான அங்கதன், ''நான் இக்கடலைக் கடந்து இலங்கைக்குச் சென்று விடுவேன்; ஆனால் செய்தியைச் சொல்லித் திரும்பி வருவதற்கு எனக்கு வலிமை இல்லாது போய்விடும்'' என்று கூறி முடித்தான்.

நீலன் வானரப் படைகள் எல்லாவற்றிற்கும் தளபதி. இவன்தான் ஆரம்பகாலத்தில் சுக்கிரீவனுக்குத் துணையாக இருந்த அனுமனுடன் உடன் இருந்த நான்கு பேரில் ஒருவன், என்பதை நினைவு கூர்க.

7. சாம்பவன் மீண்டும் கூறுதல்.

''யாம் இனி இப்போது ஆர்இடர் துய்த்து, இங்கு இனியாரைப்
போம் என வைப்போம்? என்பது புன்மை; புகழ் அன்றே;
கோ முதல்வர்க்கு ஏறு ஆகிய கொற்றக் குமரா! நம்
நாமம் நிறுத்திப் பேர் இசை வைக்கும் நவை இல்லோன்.'' (4823)

(ஏறு-சிங்கம்; கோமுதல்வர்-வானரத் தலைவர்கள்; கொற்றக் குமரன்-அங்கதன்; இனி-இப்பொழுது; ஆர்இடர்-பெரும் துன்பம்; துய்த்தல்-அனுபவித்தல்; புன்மை-இழிவு; நாமம்-பெயர்; நிறுத்தல்-நிலைபெறச் செய்தல்; இசை-புகழ்; வைத்தல்-உண்டாக்குதல்; நவை-குற்றம்) (குளகப்பாடல்)

''குரக்கினத் தலைவர்க்கெல்லாம் சிங்கம் போன்றவனும், வெற்றி வீரனுமாகிய அரசிளங்குமரனே! அங்கத! நாம் இப்பொழுது இந்தப் பெருந்துன்பத்தை அனுபவித்துக் கொண்டு, இக்கடலைக் கடந்து இலங்கைக்கு யாரைப் போக வைப்போம்? என்று எண்ணிக் கொண்டிருப்பது மிகவும் இழிவானது; அது புகழ்ச்சிக்குரியதன்று பழிப்புக்கு இடமாகும். எனவே, நமது பெயரை நிலை நிறுத்தி, நமக்குப் பெரும் புகழை உண்டாக்கக் கூடிய வல்லமை பெற்றவனும் சிறிதும் குற்றமற்றவனுமான - பாடல் தொடர்கிறது.

அங்கதனைநோக்கிச்சாம்பவன், ''அத்தகைய பேராற்றல் படைத்தவன் நம்மில் அனுமன் மட்டுமே என்று கூறத் தொடங்குகிறான்.

8. ''ஆரியன் முன்னர்ப் போதுற உற்ற அதனானும்
காரியம் எண்ணிச் சோர்வு அற முற்றும் கடனானும்,
மாருதி ஒப்பார் வேறு இலை'' என்னா, அயன் மைந்தன்,
சீரியன் மல்தோள் ஆண்மை விரிப்பான், இவை செப்பும்.(4824)

(ஆரியன்-உயர்ந்தோன்இராமன்; போதல்-செல்லுதல்; கடன்-கடமை; அயன்-பிரமன்; சீரியன்-சிறந்தவன்; மல்-மற்போர்; ஆண்மை-வீரம்; விரிப்பான்-தெரிவிக்கும் பொருட்டு; செப்புதல்-கூறுதல்);

''உயர்ந்தோனாகிய இராமபிரான் முன்னால் அஞ்சாது சென்று, அவனுக்கும் நம் தலைவன் சுக்கிரீவனுக்கும் நட்புச் செய்வித்த செயலாலும், எடுத்த ஒரு காரியத்தை நன்கு ஆராய்ந்து, பின் அதைத் தளர்ச்சியின்றி முழுவதும் திறம்படச் செய்து முடிக்கும் கடமை உணர்ச்சியுடைமையாலும், நம்மில் அனுமனுக்கு நிகரானவர் வேறு யாரும் இல்லை''என்று பிரமனின் புதல்வனாகிய சாம்பவன் சிறந்தவனாகிய அனுமனின் மற்போர் புரியும் தோள் ஆற்றலையும் வீரத்தன்மையையும் எல்லோரும் தெரிந்து கொள்ளும் வண்ணம், கீழ்க்கண்டவாறு கூறலானான்.

முதன்முதலில் இராம இலக்குவர் ருசிய மூகமலையை நெருங்கிய போது, சுக்கிரீவன் முதலியோர் அஞ்சி ஓடிச் சென்று குகைகளில் ஒளித்துக் கொள்ள, அனுமன் மட்டுமே சிறிதும் அஞ்சாது மாறுவேடம் கொண்டு இராமபிரானை அணுகி, நன்மதிப்பைப் பெற்று, தம் தலைவர் சுக்கிரீவனுக்கும் இராமபிரானுக்கும் இடையே அசைக்க முடியாத ஒரு நட்பினைஏற்படுத்தினான்என்பதுஇங்குசாம்பவனால்பாராட்டப்பட்டது என்க. அனுமன், தான் எந்த ஒரு காரியத்தையும் எண்ணிச் செய்பவன் என்பதும், துணிந்த காரியத்தைச் சோர்வுறாது, திறம்பட, முழுவதும் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவன் என்பதும், அவ்வாறு முடிப்பதைத் தனது கடமையாகக் கொண்டவன் என்பதும் சாம்பவன் கருத்து.

9. சாம்பவன் அனுமன் ஆற்றல் பற்றித் தெரிவித்தல்.

''மேலை விரிஞ்சன் வீயினும், வீயா மிகை நாளிர்;
நூலை நயந்து நுண்ணிது உணர்ந்தீர் நுவல்தக்கீர்;
காலனும் அஞ்சும் காய்சின மொய்ம்பீர்; கடன் நின்றீர்;
ஆலம் நுகர்ந்தானாம் என, வெம்போர் அடாகிற்பீர்'' (4825)

(விரிஞ்சன்-பிரமன்; வீதல்-இறத்தல்; மிகை-மிகுந்த; நாள்-ஆயுள்/ வாழ்நாள் நயந்து-விரும்பி; நுண்ணிது-நுட்பமாக; நுவல்தல்-சொல்லுதல்; காலன்-இயமன்; காய்-கடிய; மொய்ம்பு-உடல்வலிமை;

கடன்-கடமை; ஆலம்-நஞ்சு; அடர்தல்-அழித்தல்; மேலை-மேம்பட்ட/ மேன்மையுடைய);

யாவரினும் மேம்பட்டவனும் மேன்மையானவனுமான பிரம தேவனே இறந்து அழிந்தாலும், அழிவில்லாத மிகுந்த வாழ்நாளை யுடையவர் நீர்; இலக்கணங்களோடு நில்லாது, சரித்தர நூல்களையும் விரும்பி நுட்பமாகக் கற்றுணர்ந்தவர்; அதனைத் தக்க சமயத்தில் எடுத்துரைக்கும் சொல்வன்மையும் பெற்றவர் நீர்; ஆலகால விஷத்தைப் பருகியவனான சிவபெருமான் என்று சொல்லும்படி, கொடிய போரை மேற்கொண்டு, எல்லோரையும் அழிக்கும் வல்லமையும் பெற்றவர் நீர் - பாடல் தொடர்கின்றது.

அனுமனின் சிரஞ்சீவித் தன்மையை இங்கே குறிப்பிடுகிறான் சாம்பவன்; அனுமனுக்கு அழியாத வாழ்நாளை வரத்தால் ஈந்தவர்கள் வருணன், இயமன், சிவபெருமான், பிரமன், மற்ற தேவர்கள், முனிவர்கள், மறையவர்கள் முதலியோர் என்பது உத்தரகாண்டம் அனுமப் படலம். அனுமன் நவவியாகிரணப் பண்டிதன் மட்டுமல்ல. மற்றுமுள்ள சாத்திர நூல்களையும் விரும்பி, நுட்பமாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றவன் என்பதும், சொல்வன்மை மிக்கவன் என்பதும் இங்கு கூறப்பட்டது என்க. அனுமன் சிவபெருமானின் கூறாக அவதரித்திருக்கிறான் என்பதும், சிவபெருமானுடன் ஒப்பிடும் அளவிற்கு ஆற்றல் பெற்றவன் என்பதும் காப்பியத்தில் பரக்கக் காணலாம். இங்கே ஒரு கருத்து. ஒரு முனிவரின் சாபத்தால் அனுமன் தனது திறமையும் ஆற்றலையும் அறியாதவனாய் இருக்கிறான் என்பது ஒரு புராணக் குறிப்பு. அதனைச் சாம்பவன் வெளிக்கொணர்ந்து, அனுமன் தன் உள்பொதிந்து கிடக்கின்ற ஆற்றலை அறியும்படி செய்கிறான் என்று இங்கு புலப்படுத்தப்படுகிறது.

10. ''வெப்புறு செந்தீ, நீர், வளியாலும் விளியாதிர்;
செப்புறு தெய்வப் பல்படையாலும் சிதையாதிர்;
ஒப்பு உறின், ஒப்பார் நும்அலது இல்லீர்; ஒருகாலே
குப்புறின், அண்டத்து அப்புறமேயும் குதிகொள்வீர்.'' (4826)

(வளி-காற்று; விளிதல்-இறத்தல்; படை-ஆயுதங்கள்/ படைக் கலன்கள்; சிதைதல்-அழிதல்; ஒப்பு-உவமை; குப்புறுதல்-குதித்தல்; ஒருகால்-ஒரேபாய்ச்சல்);

''வெப்பம் பொருந்திய சிவந்த தீயினாலும், நீரினாலும், காற்றினாலும் கூட நீர் அழிக்கப்பட முடியாதவர்; பிறரால் புகழ்ந்து பேசப்படுகின்ற தெய்வத்தன்மையுடைய படைக்கருவிகளாலும் சிதைக்கப்பட முடியாதவர் நீர்; உங்களுக்குஉவமை கூற வேண்டுமென்றால், உங்களைத் தவிர வேறு யாரையும் உவமை கூற இயலாது, அத்தகைய ஈடு இணையற்றவர் நீர்; ஒரு முறை தாண்ட வேண்டும் என்று கருதினால், இவ்வுலகத்துக்கு அப்பாலுள்ள அண்ட கோளத்துக்கு அப்புறத்தும் தாண்டும் வல்லமை பெற்றவர் நீர்'' - பாடல் தொடர்கிறது.

ஐந்து பூதங்களில் மூன்றைக் கூறியதால் மற்ற இரண்டான விண், மண் முதலியனவும் உபலக்கணத்தால் கொள்ளப்படும். அனுமன் இளமைப் பருவத்தில் சூரியனை, ஒரு கனிந்த பழம் என்று கருதி அவனைப் பிடிக்க, அவன் அருகில் சென்றான். இதனைக் கண்ணுற்ற இந்திரன், அனுமனைத் தனது வச்சிராயுதத்தால் சிறிது தாக்கினான். எனவே அனுமனது கன்னம் சற்றுச் சிதைவுற்றது. எனவே தான் அனுமன் என்பது அவனுக்குக் காரணப் பெயர். அனு என்பது கன்னத்தைக் குறிக்கும்.

தன் மகனைத் தேவேந்திரன் தாக்கியதால், வாயுபகவான் சற்று நேரம் இயக்கம் இன்றி இருக்கலானான். உலகம் ஸ்தம்பித்தது. இதனையறிந்த தேவர்களும், சிவனும் பிரமனும் வாயு தேவனை அணுகி, அவனை மகிழ்விக்கும் பொருட்டு, அவன் மகனான அனுமனுக்குத் தங்களது படைக்கலங்களால் எந்தச் சிதைவும், உயிருக்கு எந்த அழிவும் ஏற்படாது என்றும் வரம் வழங்கினர். இதனைத்தான் ''செப்புறு தெய்வப் பல்படையாலும்சிதையாதிர்'' என்றான்என்க. இதுவும்உத்தரகாண்டத்தில்அனுமப் படலத்தில் பேசப்பட்டிருக்கிறது.

11. ''நல்லவும் ஒன்றோ, தீயவும் நாடி, நவை தீரச்
சொல்லவும் வல்லீர்; காரியம் நீரே துணிகிற்பீர்;
வெல்லவும் வல்லீர்; மீளவும் வல்லீர்; மிடல் உண்டேல்,
கொல்லவும் வல்லீர்; தோள்வலி என்றும் குறையாதீர்!'' (4827)

(ஒன்றோ-மட்டுமோ; நாடி-ஆராய்ந்து; நவை-குற்றம்; வல்லீர்-திறமுடையீர்; துணிதல்-தீர்மானித்தல்/முடித்தலுமாம்; மிடல்- எதிர்ப்பு/ வலிமை);

''எந்தச் செயலைப் பற்றியும், அதிலுள்ள நல்லனவற்றை மட்டும் ஆராயாது, தீயவற்றையும் கண்டறிந்து, அத்தீமைகளிலுள்ள குற்றங்களை நீக்க, நல்ல அறிவுரைகளைக் கூறும் சொல்வன்மை பெற்றவர் நீர்; எடுத்த காரியத்தை, வேறு ஒருவர் துணையின்றி, தனியாகவே தீர்மானம் செய்து, அதைச் செயல்படுத்துவதிலும் வல்லவர் நீர்; இலங்கை சென்று அரக்கர்களை, பகைவர்களை வென்றுவரும் ஆற்றலும் பெற்றவர் நீர்; ஏதேனும் வலிய எதிர்ப்புத் தோன்றினாலும், பகைவர்களை அழித்து ஒழிக்கவும் தயங்கமாட்டீர். அத்தகைய வல்லமை பெற்றவர் நீர்; இதனால் தங்களது தோள் வலிமை சற்றும் குறைவுபடாது; மாறாக மேலும் வலிவு பெறும் ஆற்றலும் உடையவர் நீர் - பாடல் தொடர்கிறது.

12. ''மேரு கிரிக்கும் மீது உற நிற்கும் பெரு மெய்யீர்;
மாரி துளிக்கும் தாரை இடுக்கும் வர வல்லீர்;
பாரை எடுக்கும் நோன்மை வலத்தீர்; பழி அற்றீர்;
சூரியனைச் சென்று, ஒண் கையகத்தும் தொட வல்லீர்,''(4828)

(நிற்றல்-வளர்தல்; பெருமெய்-பேருரு; மாரி-மேகம்; தாரை-நீர்த்துளிகள்; துளித்தல்-சிந்துதல்/சொரிதல்; இடுக்கு-இடைவெளி; பார்-பூமி; நோன்மை-வலிமை; ஒண்-அழகிய/ஒளிபொருந்திய);

''மேருமலைக்கும் மேலோங்கி வளரும் பெரிய உருவத்தை உடையவர் நீங்கள்; அதே சமயம், மேகம் பொழிகின்ற மழைத்துளிக்கு நடுவிலும் புகுந்து வரக்கூடிய சிற்றுருவம் எடுக்கும் ஆற்றலும் பெற்றவர்; இந்த பூமியையே தோண்டி எடுக்கும் மிக்க வலிமை பெற்றவர்; யாராலும் எந்தப் பழிச் சொல்லுக்கும் இலக்கானவர் அல்லர்; இளவயதிலேயே சூரியனை அருகில் சென்று, உங்களுடைய ஒளிபொருந்திய, அழகிய கைகளாலேயே தொட்டுப் பார்க்கும் வல்லமையும் பெற்றவர் நீர்'' - பாடல் தொடர்கிறது.

அனுமன் ஒரே சமயத்தில் ''பேருரு'' எடுக்கும் ஆற்றலும், அணுவைப் போல மிகச்சிற்றுரு எடுக்கும் ஆற்றலும் பெற்றவன் என்பதாம். ''அனுமன் வளர்ச்சி பெரு மேருவினில் பெரியனாம்; சிறியதாய் ஒடுக்கும் எனின் மேனி அற்ப அணுவானதில் சிறியனாம்'' என்பது உத்தரகாண்டம் அனுமப்படலம். ''சூரியனைச் சென்று ஒண்கையகத்தும் தொட வல்லீர்'' என்பது முன்னரே விளக்கப்பட்டதை நினைவு கூர்க. கம்பரே பின்னர், ''புகை புகா வாயிலும் புகுவான்'' என்பார். இந்த இரண்டு தன்மைகளும் யோக சித்திகளுள் அடங்கும். இவை முறையே மகிமா, அணிமா என்று வழங்கப்பெறும்.

13. ''அறிந்து, திறத்து ஆறு எண்ணி, அறத்து ஆறு அழியாமை
மறிந்து உருள, போர் வாலியை வெல்லும் மதி வல்லீர்;
பொறிந்து இமையோர்கோன் வச்சிரபாணம் புக மூழ்க,
எறிந்துழி, இற்று ஓர் புன் மயிரேனும் இழவாதீர்,'' (4829)

(அழிதல்-தவறுதல்; ஆறு-வழிவகைகள்; மறித்தல்-இறத்தல்; உருளுதல்-விழுதல்; மதி-அறிவு; பாணம்-படை; இற்று-அறுபட்டு);

''தருமத்தின் வழிவகைகள் சிதைவுறாது, நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்து பார்த்து, போரில் வல்லவனான வாலி இறந்து தரையில் புரளும்படி செய்த, அறிவும் வல்லமையும் உடையவர் நீர்; தீப்பொறி பறக்க, தேவர்களின் அரசனான தேவேந்திரன், தங்கள் வால் மீது, தனது வச்சிராயுதத்தைச் செலுத்திய போதும், ஒரு சிறு மயிர் கூட அறுபட்டு இழக்காதவரும் ஆவீர் நீர் - பாடல் தொடர்கிறது.

இராமபிரான் வாலியை மறைந்திருந்து கொல்லுதற்கும், சுக்கிரீவன் கிட்கிந்தையின் மணிமுடி சூட்டிக்கொள்ளுவதற்கும் அனுமனின் அறநெறி தவறாத அறிவாற்றலே காரணம் என்பதும், இந்திரன் வச்சிராயுதத்தால் அனுமனைத் தாக்க முயன்ற போதும் ஒரு மயிர் கூட இழக்காமல் இருந்ததும் அவனது ஆற்றலைப் புலப்படுத்தும் என்பதும் சாம்பவனின் கருத்து.

14. ''போர்முன் எதிர்ந்தால் மூவுலகேனும் பொருளாகா;
ஓர்வுஇல் வலம்கொண்டு ஒல்கல்இல் வீரத்து உயர்தோளிர்;
பாருலகு எங்கும் பேரிருள் சீக்கும் பகலோன்முன்
தேர்முன் நடந்தே ஆரிய நூலும் தெரிவுற்றீர்,'' (4830)

(ஓர்வுஅல்-உணர்தற்கரிய; வலம்-வலி; ஒல்கல்இல்-குறையாத; சீக்கும்-ஒழிக்கும்; பகலோன்-சூரியன்; ஆரியநூல்-வடமொழி நூல்கள்; தெரிவுறுதல்-கற்றறிதல்);

இந்த மூன்று உலகங்களில் உள்ளோர் அனைவரும் ஒன்று சேர்ந்து உங்களை எதிர்த்துப் போரிட வந்தாலும், அவர்கள் உங்கள் வலிமைக்கு எதிரே ஒரு பொருட்டாக மதிக்கப்பட மாட்டார்கள்; பிறரால் உணர்தற்கரிய பெருவலி கொண்டு, குறையாத வீரமுடைய சிறந்த தோள்களை உடையவர் நீர்; இந்தப்பூமியில் எல்லா இடத்தும் வியாபித்திருக்கின்ற பெரிய இருட்டைப் போக்குகின்ற சூரியன் முன்னால், அவனது ஒற்றையாழித் தேரின் எதிரில் நடந்து சென்று வடமொழி நூல்களான எல்லா இலக்கணங்களையும் கற்று உணர்ந்தவர் நீர் - பாடல் தொடர்கிறது.

அனுமன் சூரியனிடம் இலக்கணங்கள் கற்க விரும்பி அவனை அணுகினான்; சூரியன், தான் இடைவிடாது இவ்வுலகைச் சுற்றி வரவேண்டிய கடமை இருப்பதால், தான் ஓரிடத்திலிருந்து அவனுக்கு கற்பித்துத் தர இயலாது எனத் தன் இயலாமையை வெளிப்படுத்த, அனுமன் சூரியனுடைய ஒற்றையாழித் தேரின் எதிர் முகமாக, நடந்து சென்றே ஒன்பது வகை இலக்கணங்களையும் முழுதும் கற்றுணர்ந்து ''நவ வியாக்ரணப் பண்டிதன்'' ஆனான் என்பது உத்தர காண்டத்து அனுமப் படலத்துச் செய்தி ''வேதம்ஒரு நாலுடன், விளங்கிய சட்அங்கமும், விரிந்தகலையும், ஓத, நிலவீதிமிசை, ஏழுபரி பூண் அருணன் ஊர, விரை தேர் மீது செலும், வெங்கதிரவன் தன்னொடு, அயிந்திரவியாகரணமும் ஓதி, ஒரு நாளினில் உணர்ந்தனன் இம்மாருதி'' என்பது பாடல்.

15. ''நீதியின் நின்றீர்; வாய்மை அமைந்தீர்; நினைவானும்
மாதர் நலம் பேணாது வளர்ந்தீர்; மறையெல்லாம்
ஓதி உணர்ந்தீர்; ஊழி கடந்தீர்; உலகு ஈனும்
ஆதி அயன்தானே என, யாதும் அறைகின்றீர்.'' (4831)

(மாதர் நலம் -மகளிர் இன்பம்; நினைவு-மனம்; பேணுதல்-எண்ணுதல்/விரும்புதல்; மறை-வேதங்கள்; ஊழி-ஆயுட்காலம்/ கற்பகாலம்; ஈனுதல்-படைத்தல்/உண்டாக்குதல்; அறைதல்-சொல்லுதல்; ஆதி-முதல்);

''நீதிநெறிகளைத் தவறாது கடைப்பிடிக்கும் வாழ்க்கையினை உடையீர்; உண்மை தவிர வேறொன்றைப் பேசாத தன்மை படைத்தீர்; மகளிர் இன்பத்தை நினைத்துக் கூடப்பார்க்காது உம் வாழ்க்கையைப் பிரம்மச்சாரியாகவே கழித்துக் கொண்டிருக்கிறீர்; வேதங்கள் அனைத்தையும் கற்று, உணர்ந்து அவற்றின் வழி நிற்கின்றீர்; கற்பகாலத்தையும் கடந்த, இறப்பே இல்லாத ஆயுட் காலத்தை உடைய சிரஞ்சீவியாக இருக்கின்றீர்; உலகத்தையே படைப்பவனான முதற்கடவுளான பிரமதேவன் என்று கூறும் சிறப்புடையவராய் இருக்கின்றீர்'' - பாடல் தொடர்கிறது.

அனுமன் நீதிமான்; வாய்மையே பேசுபவன்; பிரமச்சாரி, வேத சாஸ்திரங்களில் வல்லவன்; சிரஞ்சீவி; அடுத்த பிரம்ம பட்டத்திற்குத் தகுதியுடைவன் என்பதைச் சாம்பவன் குறிப்பிட்டு அனுமனின் உள்ளாற்றலை அவனுக்கும், மற்றோருக்கும் தெரியப்படுத்துகிறான் என்பதாம். அனுமன் அடுத்த பிரம்மப் பட்டத்திற்கு உரியவன் என்பதை ''வன்னிசகாய! நின்மைந்தன், வையத்தோர்க்கும், வானோர்க்கும், இன்னல் செய்யும் இராவணன் தன் இலங்கை நகரை எரியூட்டி, மன்னன் இராமன் மனம் உவப்ப, வயவாள் அரக்கர் குலம் அறுத்துப் பின்னை அவன்தன் பேரருளால், ''பிரமபதமும்'' பெறும் என்றான்''. என்று பிரம்மனே வாயுதேவனிடம் கூறிய உத்தரகாண்டம் அனுமப்படலப் பாடலால் அறியலாம். ''நினைவானும்'' என்று கூறியது, சொல்லாலும், செயலாலும் என்பதை உள்ளடக்கியது என்க.

இங்கே ஒரு செய்தி. ஒரு நாள் என்பது 60 நாழிகை கொண்டது. நாம் அறிந்ததே. இந்த ஒரு நாளையே சிறு கூறுகள்ாகப் பிரிக்கலாம். அவை காஷ்டை, கணம், கலை, முகூர்த்தம் அல்லது நாழிகை எனப்படும். பின்னர் 15 நாள் கொண்டது 1 பட்சம் என்பதும், 2 பட்சம் (சுக்ல, கிருஷ்ண) கொண்டது 1 மாதம் என்பதும், 2 மாதம் கொண்டது 1 ருது (பருவம்) என்பதும், 3ருது கொண்டது 1 அயனம் என்பதும், 2 அயனம் ஒரு ஆண்டு என்பதும் நாம் அறிந்ததே. இது ஒரு மானுட ஆண்டு, இது தேவர்களுக்கு ஒரே ஒரு நாள் என்று கணக்கிடப்படும். 360 மானுட வருடம் கொண்டது தேவர்களுக்கு ஒரு ஆண்டாகும். எத்தனை மானுட வருடம் கொண்டது ஒரு யுகம் என்றால் மலைத்துப் போய்விடுவோம். பொதுவாக 4 யுகங்கள் உண்டென்பது நமக்குத் தெரியும். அவை கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன. கிருதயுகம் 4800 தேவ ஆண்டுகள்கொண்டது. திரேதாயுகம் 3600 தேவ ஆண்டுகளைக் கொண்டது. துவாபரயுகம் 2400 தேவ ஆண்டுகளைக் கொண்டது. கலியுகம் 1200 தேவ ஆண்டுகளைக் கொண்டது. மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். 1 தேவ ஆண்டு என்பது 360 மானுட ஆண்டுகளைக் கொண்டது என்றால் ஒவ்வொரு யுகமும் முறையே 17,28,000, 12,96,000, 8,64,000, 4,32,000 மானுட ஆண்டுகளையும் கொண்டன என்பது அறிக. 12000 தேவ ஆண்டுகள் கொண்டதை ஒரு சதுர்யுகம் என்றும், இதுபோல 1000 சதுர்யுகம் கொண்டது பிரமனுக்கு ஒரு பகல் என்றும், எனவே 2000 சதுரயுகம் கொண்டது பிரமனுக்கு ஒரு நாள் என்றும் ஒரு புராணக் குறிப்புக் கூறுகிறது. இவ்வாறு பிரமனுக்கு 100 ஆண்டுகள் ஆயுட்காலம் என்றும் இதனையே ஒரு கற்பம் என்றும் கூறுகிறார்கள்.

16. ''அண்ணல் அமைந்தாற்கு அன்பு சிறந்தீர்; அதனானே
கண்ணி உணர்ந்தீர் கருமம்; நுமக்கே கடன் என்னத்
திண்ணிது அமைந்தீர்; செய்து முடிப்பீர்; சிதைவு இன்றால்;
புண்ணியம் ஒன்றே என்றும் நிலைக்கும் பொருள் கொண்ணீர்.'' (4832)

(அண்ணல்-பெருமையுடையோன்/இராமன்; கருமம்-செயல்/வினை; கண்ணி-ஆராய்ந்து; சிதைவு-குறைவு; கொள்ளுதல்-கருதுதல்; புண்ணியம்-நல்வினைப்பயன்);

''பெருமையிற் சிறந்தவனான இராமபிரானிடத்துச் சிறந்த பக்தி பூண்டுள்ளீர்; அதனால் சீதையைத் தேடும் பணியை நன்கு ஆராய்ந்து தெரிந்து கொண்டு, அது உமக்கே உரிய கடமை என்று உறுதியாகக் கருதலானீர்; அக்காரியத்தினை நிச்சயமாக எந்தக் குறையுமின்றிச் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தீர்; புண்ணியம் ஒன்றுதான் என்றைக்கும் அழியாமல் நிலைத்து நிற்கும் பொருள் என்று நன்கு மனத்துட் கொண்டுள்ளீர்;'' - பாடல் தொடர்கிறது.

17. ''அடங்கவும் வல்லீர் காலம் அது அன்றேல்; அமர் வந்தால்
மடங்கல் முனிந்தாலன்ன வலத்தீர்;மதி நாடித்
தொடங்கியது ஒன்றோ? முற்றும் முடிக்கும் தொழிலல்லால்
இடம்கெட வெவ்வாய் ஊறு கிடைத்தால் இடையாதீர்'' (4833)

(அமர்-போர்; மடங்கல்-ஆண்சிங்கம்; முனிதல்-சீறியெழுதல்; மதி-அறிவு; நாடுதல்-ஆராய்தல்; வெவ்வாய்-கொடிய; ஊறு-தடங்கல்கள்; கிடைத்தல்-நேர்தல்; இடைதல்-பின்வாங்குதல்);

''ஒரு காரியத்தைச் செய்வதற்கு ஏற்ற காலம் இல்லை என்று தெரிந்தால், அக்காரியத்தைச் செய்யாது அடங்கி இருக்கவும் செய்வீர்; அதைப் போல போர் என்று வந்து விட்டால் ஆண்சிங்கம் போலச் சீறி எழுந்து போர் செய்யும் வலிமை படைத்தவராவீர்; நன்கு ஆராய்ந்து ஒன்றைச் செய்வது என்று முடிவு செய்து, தொடங்கிவிட்டால், அதை மட்டுமல்லாது, அதனோடு தொடர்புடைய எல்லாச் செயல்களையும் குறைவற, நிறைவாகச் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றுள்ளீர்; இடையில் ஏதேனும் கொடிய தடங்கல்கள் ஏற்பட்டாலும் அதற்காக அஞ்சி, எடுத்த காரியத்தினின்றும்பின் வாங்காது முற்பட்டுச் செயல்புரியும் ஆற்றல் வாய்ந்தவராவீர்''! பாடல் தொடர்கிறது.

18. ''ஈண்டிய கொற்றத்து இந்திரன் என்பான் முதல், யாரும்
பூண்டு நடக்கும் நல்நெறியாலும், பொறையாலும்
பாண்டிதர் நீரே; பார்த்து இனிது உய்க்கும்படி வல்லீர்;
வேண்டியபோதே வேண்டுவ எய்தும் வினைவல்லீ'' (4834)

(கொற்றம்-வெற்றி; பூண்டு-மேற்கொண்டு; பாண்டிதர்-பண்டிதர் / தேர்ச்சி பெற்றவர்; பார்த்தல்-சிந்தித்தல்);

''மிக்க வெற்றியை உடைய இந்திரன் முதல் எல்லோரும் உங்களுடைய நல்லொழுக்கத்தையும், பொறுமைக் குணத்தையும் கடைப்பிடித்து நடக்கும்படியாவும் அமைந்தவர் நீர்; கல்வி கேள்விகளிலும் மிக்க தேர்ச்சி பெற்றவர் நீர்; எதையும் நன்கு சிந்தித்துப் பார்த்து, அவற்றை மகிழ்ச்சியாக

முடிவடையும்படி செய்யும் ஆற்றல் மிக்கவர் நீர்; வேண்டியவற்றையெல்லாம் வேண்டிய போது பெற்றுக் கொள்ளும் தவ ஆற்றல் பெற்றவர் நீர்; வேண்டும்பொழுது வேண்டிய உருவம் எடுத்துக் கொள்ளும் ஆற்றலும் பெற்றவர் நீர்''- பாடல் தொடர்கிறது.

இங்கே நான்காம் அடியில் ''வேண்டியபோதே வேண்டுவ எய்தும் வினை வல்லீர்'' என்பதற்கு வேண்டும் நேரத்தில் வேண்டுவன எல்லாவற்றையும் பெறக்கூடிய ஆற்றல் பெற்றவர் என்றும், வேண்டுரு என்று கொண்டு, வேண்டிய நேரத்தில் வேண்டிய உருவம் கொள்ளும் ஆற்றல் படைத்தவர் என்றும் பொருள் கொள்ளலாம். எனில் இராம இலக்குவர் முன் ருசியமூக பருவதத்தில் பிரமசாரி வேடமும், பின்பு விசுவரூபம் கொண்டு நின்றதும், அசோகவனத்தில் சீதாதேவியின் முன் பேருருக்கொண்டதும், கடல் தாவிப்போகும் போது அங்கார தாரையின் உடலில் புகுந்து செல்லும் போது சிற்றுருக் கொண்டதும் நினைவு கூரத்தகும்.

19. ''ஏகுமின்; ஏகி, எம் உயிர் நல்கி, இசை கொள்ளீர்;
ஓகை கொணர்ந்து, உம் மன்னையும் உய்யும்படி செய்யீர்;
சாகரம் முற்றும் தாவிடும் நீர், இக்கடல் தாவும்
வேகம் அமைந்தீர்,'' என்று விரிஞ்சன் மகன் விட்டான். (4835)

(சாகரம்-கடல்; வேகம்-வலிமை; இசை-புகழ்; ஓகை-உவகை/ மகிழ்ச்சி; உய்தல்-உயிர்பிழைத்தல்; விரிஞ்சன்-பிரமன்; விட்டான்- கூறி முடித்தான்);

''உலகில் உள்ள எல்லாக்கடல்களையும் எளிதில் கடக்கக்கூடிய ஆற்றல் பெற்றவரான நீர், இந்தச் சிறியகடலைத் தாண்டும் வலிமையும் பெற்றுள்ளீர்; எனவே நீர் விரைவாகச் செல்லுவீர்; சென்று, உயிர்போகின்ற நிலையில் இருக்கின்ற எங்கள் உயிரையும் காப்பாற்றிப் பெரும்புகழ் கொள்ளுவீராக; இலங்கை சென்று, சீதை கற்பு நெறி தவறாமலும், உயிருடனும் இருக்கிறாள் என்னும் மகிழ்ச்சி மிக்க செய்தியைக் கொண்டு வந்து, உன்னுடைய மன்னனாகிய இராமன், சுக்கிரீவன் ஆகிய எல்லோரையும் பிழைக்கும்படி செய்வீராக!'' என்று பிரமதேவனின் மகனான சாம்பவன் கூறிமுடித்தான்.

அனுமன் கடல் கடந்து இலங்கை சென்று சீதை பற்றிய நற்செய்தியைக் கொணர்வானானால், வானர வீரர்களாகிய தாங்களும், இராம இலக்குவரும், சுக்கிரீவனும், மற்றும் எல்லாத் தேவர்களும், சீதையும் துன்பத்திலிருந்தும் விடுபடுவர். எனவே நீ மிக்க புகழ் அடைவாய் எனவே விரைவாகச் செல்வாயாக! என்றான் சாம்பவன் என்பது கருத்து. மற்றும் கடல்தாவும் செயல் அனுமனுக்கு மிக எளிது என்பதும் புலப்படுத்தப்பட்டது.

20. அனுமன் கூறத் தொடங்குதல்

சாம்பன் இயம்ப, தாழ் வதனத் தாமரை நாப்பண்
ஆம்பல் விரிந்தாலன்ன சிரிப்பன், அறிவாளன்
கூம்பலொடும் சேர்க் கைக் கமலத்தன், குலம் எல்லாம்
ஏம்பல் வர, தன் சிந்தை தெரிப்பான் இவை சொன்னான். (4836)

(தாழ்வதனம்-இறங்கியமுகம்; நாப்பண்-நடுவில்; விரிதல்-மலர்தல்; கூம்பல்-குவிதல்/கூப்புதல்; ஏம்பல்-மகிழ்ச்சி; சிந்தை-மனக்கருத்து; தெரிப்பான்-தெரிவிக்கும் பொருட்டு);

இவ்வாறு சாம்பன் அனுமனைப் புகழ்ந்து கூறி முடிக்கவும், அதுவரையிலும் தாழ்ந்திருந்த முகத்தை உடையவனான அறிவிற் சிறந்த அனுமன், தாமரை மலரின் நடுவில் செவ்வாம்பல் மலர் மலர்ந்தது போன்று புன்முறுவல் செய்து, தனது தாமரைக் கைகளைக் குவித்து வணங்கி, தனது வானர குல வீரர்கள் அனைவரும் மகிழும்படி, தனது கருத்தைத் தெரிவிப்பவனாய், கீழ்வருவனவற்றைக் கூறலானான்.

''தாழ்வதனம்'' என்பது ஒரு அருமையான சொல்லாட்சி. அறிவிற் சிறந்த பெரியோர்கள், தம்மை மற்றவர் புகழ்ந்து பாராட்டும் போது தலை தாழ்த்தி நிற்பது இயல்பு. அந்த இயல்பை ''தாழ் வதனத் தாமரை'' என்று கவிஞன் கூறிய நயம் நோக்குக. சாம்பன் புகழ்ந்தபோது, அனுமன் வெட்கத்தால் தலை குனிந்து சாய்ந்திருந்தான் என்பதாம். புகழ்ச்சியால் பெருமிதமோ, இறுமாப்போ கொள்ளாது, அடக்கம் கொண்டு தலை சாய்ந்திருந்தமை, அவன் தற்புகழ்ச்சியை விரும்பாதவன் என்பதை வெளிப்படுத்தியது என்க.

21. அனுமன் உடன்பட்டுக் கூறுதல்

''நீயிரே நினைவின் முன்னே, நெடுந்திரைப் பரவை ஏழும்
தாய், உலகனைத்தும் வென்று, தையலைத் தருதற்கு ஒத்தீர்;
போய் இது புரிதி! என்று புலமை தீர் புன்மை காண்டற்கு
ஏயினீர் என்னின், என்னின் பிறந்தவர் யாவர் இன்னும்?'' (4837)

(நெடு-பெரிய; தையல்-பெண்/சீதை; புரிதி-செய்வீராக; புலமை-அறிவு; புன்மை-இழிவு; ஏய்தல்-ஏவுதல்/கட்டளையிடுதல்; தாய்-தாவி/கடந்து சென்று; ஒத்தல்-தகுதியுடையதாதல்; திரை-அலை; பரவை-கடல்);

''நினைப்பதற்கு முன்பே, நீங்களே பெரிய அலைகளையுடைய ஏழுகடல்களையும் தாண்டிச் சென்று, உலகிலுள்ளார் அனைவரையும் வென்று, சீதாதேவியை மீட்டுக் கொண்டு வருவதற்கு உரிய தகுதியைப் படைத்திருந்தும், ''நீ போய் இக்காரியத்தைச் செய்து முடித்து வருக'' என்று என்னை நோக்கிக் கூறியதால், என்னுடைய அறிவற்ற இழிநிலையைக் காண்பதற்கு இது ஒரு வாய்ப்பாகும் என்று நீங்கள் கட்டளையிட்டால்,

என்னைவிடப் பெரும்பேறு பெற்றவர்கள் இவ்வுலகில் இன்னும் யார் பிறந்திருக்கிறார்கள்? யாரும் இல்லை'' என்கிறான் அனுமன்.

தன்னை விட எல்லாவித ஆற்றலும் பொருந்திய சாம்பவன், மற்றும் பல வானர வீரர்கள் இருக்கும்போது, தன்னை இக்காரியத்தைச் செய்து முடித்து வரும்படி ஏவினார்கள் என்றால், அது, தான் பெற்ற பேறு என்று அடக்கமாய்க் கருதுகிறான் அனுமன் என்பதாம். ''புலமை தீர் புன்மை'' என்பது அனுமனின் பணிவையும் அடக்கத்தையும் குறிக்கும் என்க.

22. ''இலங்கையை இடந்து வேரோடு இவ்வயின் தருக'' என்றாலும்
''விலங்கினர் தம்மையெல்லாம், வேரோடும் விளிய நூறிப்
பொலங்குழை மயிலைக் கொண்டு போது'' எனப் புகன்றிட்டாலும்,
கலங்கலீர்! உரைத்த மாற்றம் முடிக்குவல் கடிது, காண்டிர்!''
(4838)

(இடந்து-பெயர்த்தெடுத்து; இவ்வயின்-இவ்விடம்; தருதல்-கொண்டு வருதல்; விலங்குதல்-தடுத்தல்/எதிர்த்தல்; விளிதல்-அழிதல்; நூறுதல்-ஒழித்தல்; பொலம்-பொன்;குழை-காதணி; போது-போதி/வருவாயாக; கடிது-விரைவில்);

''இலங்கை மாநகரையே பெயர்த்தெடுத்து இவ்விடம் கொண்டு வருக'' என்று நீங்கள் சொன்னாலும் என்னைத் தடுத்து எதிர்க்கும் அரக்கர்களையெல்லாம் வேரோடும் அழித்து ஒழித்து, பொன்னலாகிய காதணியை அணிந்துள்ளவளும், மயில் போன்ற சாயலையுடைய வளுமான சீதாதேவியை இங்கே கொண்டுவருக, என்று கூறினாலும் நீங்கள் கூறியபடியே முடித்து விடுவேன் அதை நீங்கள் விரைவாகக் காண்பீர்கள் எனவே கலங்காதீர்கள்'' என்றான் அனுமன்.

''நூறுதல்'' என்பது பொடிப் பொடியாக்குதல் என்றும் ''வேரோடு'' என்பது குலத்தோடு என்றும் பொருள்படும்.

23. ''ஓசனை ஒன்று நூறும் உள்அடி உள்ளதாக
ஈசன் மண் அளந்தது ஏய்ப்ப, இருங்கடல் இனிது தாவி,
வாசவன் முதலோர் வந்து மலையினும், இலங்கை வாழும்
நீசரையெல்லாம் நூறி, நினைத்தது முடிப்பல்; பின்னும்'' (4839)

(ஈசன்-திருமால்; மண்-உலகம்; ஏய்ப்ப-போன்று; உள்ளடி-உள்ளங்கால்; உள்ளதாக-அடங்கும்படியாக; இரும்-பெரிய; இனிது-எளிதாக; மலைதல்-போர்செய்தல்; நீசர்-கீழோர்; நூறி-அழித்து; பின்னும்-மற்றும் ஓமலும்; வாசவன்-இந்திரன்); (குளகப்பாடல்)

''திருமால் திருவிக்கிரம அவதாரத்தில் ஓரடியால் பூவுலகையே அளந்தது போல, நானும் இந்த நூறு யோசனை பரப்புள்ள பெரிய கடலை என்னுடைய உள்ளங்காலுக்குள் அடங்கும்படியாகச் செய்து, தாண்டிச் சென்று, அங்கே இலங்கையில் இந்திரன் முதலானோர் யாரேனும்

அரக்கர்களுக்குத் துணையாக வந்து என்னை எதிர்த்துப் போரிட்டாலும், இலங்கையில் வாழ்கின்ற இழிவான குணமுடைய கீழோர்களான அரக்கர்களையெல்லாம் அழித்து, நான் நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்து முடிப்பேன்; மேலும்''- பாடல் தொடர்கிறது.

ஓசனை என்பது *10* மைல் தொலைவு அல்லது *16* கிலோமீட்டர் தொலைவு; இங்கே நூறு யோசனை என்பது மயேந்திர மலையிலிருந்து இலங்கை சுமார் 1600 கிலோமீட்டர் தூரம் உள்ளது என்பது தெரிகிறது.

24. ''முற்றும் நீர் உலகம் முற்றும் விழுங்குவான் முழங்கி, முந்நீர்
உற்றதே எனினும், அண்டம் உடைந்துபோய் உயர்ந்ததேனும்
இற்றை நும் அருளும், எம்கோன் ஏவலும், இரண்டு பாலும்
கற்றைவார் சிறைகளாகக் கலுழனின் கடப்பல், காண்டிர்!'' (4840)

(முற்றுதல்-சூழ்ந்திருத்தல்; முந்நீர்-கடல்; இற்றை-இப்பொழுது; கோன்-தலைவன்இராமன்; கற்றை-தொகுதி; சிறைகள்-சிறகுகள்; இறக்கைகள்; வார்-நீண்ட; கலுழன்-கருடன்; உறுதல்-பொங்கி எழுதல்; பால்-பக்கம்/புறம்; விழுங்குவான்-விழுங்கும் பொருட்டு)

''நீரால் முற்றிலும் சூழப்பட்டிருக்கும் இவ்வுலகம் முழுவதையும் விழுங்கும் பொருட்டு, ஒலித்துக் கொண்டு, கடல் பொங்கியெழுந்து வந்தாலும், இவ்வண்ட கோளமே உடைந்து போய், வானில் உயர்ந்து நின்றாலும் நான் சிறிதும் கலங்காமல் இங்கு உங்களுடைய கருணையும், என்னுடைய தலைவனாகிய இராமபிரானின் கட்டளையும், எனக்கு இரண்டு பக்கமும் தொகுதியான நீண்ட சிறகுகளாய் அமைய, கருடனைப் போல், நான் இக்கடலைத் தாண்டிச் செல்வேன்; அதனை நீங்கள் காண்பீராக!'' என்றான் அனுமன்

உலகில் மூன்று பகுதி கடலால் சூழப்பட்டது; எனவே ''முற்றும் நீர் உலகம் முற்றும்'' என்றான் என்க. கருடனுக்கு இரண்டு இறக்கைகள் இருப்பது போல், உங்களுடைய நல்லாசிகளும், என் தலைவனாகிய இராமபிரானின் கட்டளையும் எனக்கு இரண்டு இறக்கைகளாக அமையும் என்று, சிறிய திருவடியாகிய அனுமன், பெரிய திருவடியாகிய கலுழனைத் தன்னுடன் ஒப்பிட்டுக் கொண்டது ஒரு நயம். எத்தகைய இடையூறு நேர்ந்தாலும் எடுத்த காரியத்தை இனிதாய், எளிதாய், முடித்துத் திரும்புவேன் என்பது கருத்து.

25. ''ஈண்டு இனிது உறைமின்! யானே எறிகடல் இலங்கை எய்தி
மீண்டு இவண் வருதல்காறும்; விடை தம்மின், விரைவின்'' என்னா,
''ஆண்டு அவர் உவந்து வாழ்த்த அலர்மழை அமரர் தூவ
சேண் தொடர் சிமயத் தெய்வ மயேந்திரத்து உம்பர் சென்றான். (4841)

(எறிதல்-வீசுதல்; இனிது-கவலையின்றி/மகிழ்ச்சியில்; தம்மின்-தாருங்கள்; அலர்-மலர்; சேண்-மிகஉயரம்; சிமயம்-உச்சி; உம்பர்-மேலிடம்);

''அலை வீசுகின்ற இக்கடலைக் கடந்து போய், இலங்கையை அடைந்து நான் இங்கே திரும்பி வரும்வரையில் நீங்கள் அனைவரும் இங்கேயே தங்கியிருங்கள்; எனக்கு இப்பொழுது விடை தாருங்கள்'' என்று கூறவும், அப்பொழுது வானர வீரர்கள் அனைவரும் மிக மகிழ்ந்து வாழ்த்துக் கூறவும், தேவர்கள் மலர்மழை பொழியவும், வானாளவிய சிகரங்களை உடைய தெய்வத் தன்மை வாய்ந்த மயேந்திர மலையில் ஏறி அதன் உச்சியை அடைந்தான் அனுமன்.

26. பொருஅரு வேலை தாவும் புந்தியான், புவனம் தாய
பெருவடிவு உயர்ந்த மாயோன், மேக்குஉறப் பெயர்ந்த தாள்போல்,
உருஅறி வடிவின் உம்பர் ஓங்கினன்; உவமையாலும்
திருவடி என்னும் தன்மை, யாவர்க்கும் தெரிய நின்றான். (4842)

(பொருஅரு-ஒப்பற்ற; புந்தி-எண்ணம்; புவனம்-உலகம்/மூவுலகு; தாய-தாவி/அளப்பதற்காக; மாயோன்-திருமால்; மேக்கு-மேலிடம்; தாள்-திருவடி; தெரிதல்-புலனாதல்; உம்பர்-வான்; பெருவடிவு-பேருரு/விசுவரூபம்);

ஒப்பற்ற அக்கடலைத் தாண்டிச் செல்வது ஒன்றையே எண்ணமாகக் கொண்ட அனுமன், முன்பு திருவிக்கிரம அவதாரத்தில் இம்மூவுலகையும் தாவி அளப்பதற்காகப் பேருருக் கொண்டு உயர்ந்த திருமாலின், மேலே எடுத்து வைத்த திருவடியைப் போல, தனது பேருரு எல்லோர்க்கும் புலனாகும்படி வானளாவ உயர்ந்தான்; முன்பு பெயரளவில் சொல்லிய சிறிய திருவடி என்னும் சொல் இப்போது உவமையாகவும் சொல்லத் தக்கது என்று சொல்லும்படி, எல்லோரும் தெரிந்து கொள்ளும் வண்ணம் உயர்ந்து நின்றான்.

திருமாலுக்கு வாகனமாகிய கருடனைப் பெரிய திருவடி என்பது போல, இப்பொழுது மனித அவதாரம் எடுத்து வந்திருக்கிற இராமபிராமனுக்குத் தான் வாகனமாக இருப்பேன் என்பதைக் காட்டும் வண்ணம் அனுமன் சிறிய திருவடி எனப்பட்டான் என்பதாம்.

27. பார் நிழல் பரப்பும் பொன் தேர் வெயில்கதிர்ப்பரிதி மைந்தன்
போர் நிழல் பரப்பும் மேலோர் புகழ்என, உலகம் புக்குத்
தார்நிழல் பரப்பும் தோளான், தடங்கடல் தாவா முன்னம்
நீர் நிழல் உவரிதாவி, இலங்கை மேல் செல்ல நின்றான். (4843)

(பார்-பூமி; நிழல்-சாயைஒளி; பொன்-அழகு; பரிதி-சூரியன்; தார்-மாலை; பரப்புதல்-அணிந்துகொள்ளுதல்; தடம்-பெரிய; உவரி-கடல்);

இப்பூமி முழுவதும் ஒளியைப் பரப்புபவனும், அழகிய தேரை உடையவனும், வெப்பமான கிரணங்களை உடையவனுமான சூரியனது வழித்தோன்றலான இராமனின் போரின் சாயையைப் பரப்புகின்ற, மேலோரது புகழைப்போல் மாலையணிந்த தோள்களையுடைய

அனுமன், பெரிய கடலைத் தாண்டுவதற்கு முன்னரே, அக்கடலின் நீரில் படிந்துள்ள அனுமனின் பெரிய நிழல் உருவம், அக்கடலைத் தாண்டி இலங்கையிலும் தெரியுமாறு மயேந்திர மலையின் உச்சியில் நின்றான். இது எப்படி இருக்கிறது என்றால் போர் புரிபவர்களின் புகழ், உலகம் எங்கும் சென்று சேர்வது போலிருக்கிறது.

அனுமன் கடலைத் தாவும் முன்பாகவே, அவனது நிழல் கடலைத் தாண்டி இலங்கையிலும் தெரியலானது என்பதாம்.

28. அனுமன் தோற்றம்.

பகுவாய மடங்கல் வைகும் படர்வரை முழுதும் மூழ்க,
உருவாய விடம்கொள் நாகத்து ஒத்தவால் சுற்றி, ஊழின்
நெகுவாய சிகர கோடி நெரிவன தெரிய நின்றான்;
மக ஆமை முதுகில் தோன்றும் மந்தரம் எனலும் ஆனான். (4844)

(பகு-பிளந்த; மடங்கல்-ஆண் சிங்கம்; படர்-பெரிய; மூழ்க- அழுந்த; உகுதல்-கக்குதல்; கோடி-பல; நெரிதல்-நொறுங்குதல்; விடம் விஷம்/ நஞ்சு; மிக-பெரிய; ஊழின்-வரிசையாக; நெகுதல்-சிதைந்து போதல்; தெரிய-பலரும் காணும்படி);

திறந்த வாயைக் கொண்டிருக்கும் ஆண் சிங்கங்கள் நிறைந்து வாழ்கின்ற, பரந்த பெரிய மயேந்திர மலை முழுவதும் அனுமனின் பாரம் தாங்காமல் மண்ணுக்குள் அழுந்தி மூழ்கிப் போகவும், வரிசையாக விளங்குகின்ற அதன் பலசிகரங்கள் நொறுங்கிப் போகும்படியும், நஞ்சைக் கக்கும் வாயை உடைய பாம்பைப் போன்று தன் வாலை உடம்பு முழுதும் சுற்றிக் கொண்டு, அனுமன் மயேந்திர மலையில் எல்லோரும் காணும்படி நின்ற தோற்றம், முன்பு கூர்ம அவதாரத்தின் போது பாற்கடலில் திருமால் பெரிய ஆமை வடிவம் கொண்டு கீழே உலகத்தைத் தாங்கி நிற்கவும், அதன் முதுகின் மேல் நிறுத்தியிருந்த மத்தாகிய மந்தர மலையைப் போன்றும் தோற்றமளித்தது.

திருமாலின் கூர்மாவதாரம் குறிக்கப்பெற்றது. கூர்மம் மயேந்திர மலை; அனுமன் மந்தர மலை; வாசுகி-பாம்பின் வால் என்பன உவமைகள். மயேந்திர மலையும் ஆமை போல் அழுந்தி அடங்கிப் போயிற்று என்பதாம். இப்போதும் இம்மயேந்திர மலை தெற்குக் கடற்கரையில் தரைமட்டமான பாறையாகத் தான் விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

29. மின் நெடுங் கொண்டல் தாளின் வீக்கிய கழலின் ஆர்ப்ப,
தன் நெடுந்தோற்றம், வானோர் கட்புலத்து எல்லை தாவ
வல்நெடும் சிகர கோடி மயேந்திரம், அண்டம் தாங்கும்
பொன் நெடும் தூணின் பாதசிலை எனப் பொலிந்து நின்றான். (4845)

(கொண்டல்-மேகங்கள்; வீக்கிய-கட்டப்பட்ட; ஆர்ப்ப-ஒலிக்க; கட்புலம்-கண் பார்வை; தாவ-கடந்து செல்ல; அண்டம்-உலகம்/உலக உருண்டை; பாதம்-அடி; சிலை-கல்; வானோர்-தேவர்கள்; பாதசிலை-அடிவாரம்);

மின்னல்களைக் கொண்டுள்ள பெரிய மேகமானது, தன் கால்களில் கட்டியிருக்கும் வீரக் கழல்போல் ஆரவாரம் செய்யவும், தனது நீண்ட பெரிய விசுவரூபம் தேவர்களின் கண்பார்வைக்கும் அப்பால் செல்லவும், இவ் உலக உருண்டையைத் தாங்கிக் கொண்டிருக்கும் பொன்மயமான பெரிய தூணாக விளங்கும் மேருமலை போலவும், திகழ்ந்து நின்றான் அனுமன். வலிய, நீண்ட, பெரிய, பல சிகரங்களைக் கொண்ட மயேந்திர மலை அதன் தாழ்வாரத்தில் இருக்கும் அந்தத் தூணின் சிறிய கல் போன்றும் விளங்கியது.

அனுமன் பாதங்களில் கட்டிய வீரக்கழலின் ஒலி, மேகங்களின் இடி முழக்கத்திற்கு உவமை; மயேந்திர மலையின் சிகரங்கள் மேருமலையின் தாழ்வாரத்திற்கு உவமை; மயேந்திர மலையில் நிற்கும் அனுமன், இவ்வுலகைத் தாங்கி நிற்கும் மேருமலைக்கு உவமை; மேருமலை இவ்வுலகத்தின் நடுவில் நின்று இவ்வண்டத்தைத் தாங்கி நிற்கும் தூண் போலச் செயல்படுகிறது என்பது புராணக் கொள்கை. அனுமனும் இவ்வுலகத்தைத் தாங்கும் தூண் போல நின்றான் என்பதாம்.

மயேந்திரப் படலம் நிறைவுற்றது

கிட்கிந்தா காண்டம் முற்றுப்பெற்றது

செய்யுள் முதற்குறிப்பு அகராதி



ஆசிரியர் பழனியப்பன் சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரில் பாரம்பரியமிக்க ப.அ.ப. குடும்பத்தில் பிறந்தவர். உயர்நிலைக் கல்வியை மயிலாடுதுறை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் முடித்தவர். உயர்நிலைக் கல்வியின் போதே தமிழில் மிக்க ஆர்வம் கொண்டவர். தஞ்சை மாவட்டத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பேச்சுப் போட்டிகளில் முதன்மை நிலைவகித்துப் பரிசுகள் வாங்கியவர். மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியிலும் திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியிலும் B.Com பட்டப்படிப்பை முடித்தவர். இவர் பேராசிரியர் திரு. இரா. இராதாகிருஷ்ணன் அவர்களிடம் தமிழ் பயின்றவர். இந்த ஒன்றே இவர் கம்பராமாயணத்திற்கு உரை எழுதத் தகுதியானவர் என்று சான்று பகரும். மயிலாடுதுறையிலும் திருச்சிராப்பள்ளியிலும் தங்கியிருந்து கல்லூரிப் படிப்பைத் தொடரும்போது புலவர் திரு. கீரன் அவர்களுடன் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அவருடைய தொடர் சொற்பொழிவுகளைக் குறிப்பு எடுத்துத் தன்னைத் தயார் செய்து கொண்டவர். கல்லூரி நாட்களிலும் மாவட்ட அளவில் நிகழ்ந்த தமிழ்க் கட்டுரை, கவிதை, சொற்பொழிவுப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றவர். நாட்டுடமையாக்கப்பட்ட பாங்க் ஆப் பரோடாவில் 1965 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை பல பதவிகளில் பணியாற்றியவர். இவர் இந்த வங்கியின் நாமக்கல் கிளையில் பணியாற்றும்போதுதான் அனுமன் அருளால் கம்பராமாயணத்திற்கு உரை எழுத எண்ணம் கொண்டார். நான்கு, ஐந்து ஆண்டுகளின் கடுமையான உழைப்பு தான் இன்று உங்கள் கைகளில் உரை நூலாகத் தவழ்கிறது.